கவியோகி சுத்தானந்த பாரதியார் அருளிய

பாரத சக்தி மகா காவியம்

(ஐந்து காண்டங்களும் நிறைவான அருட்பெரு நூல்)

1987

புது யுக நிலையம்

புதுச்சேரி

BHARATA SHAKTI

(The Epic of God-men)

BY

YOGI SHUDDHANANDA BHARATI

(The First Complete Edition)

12-5-1948

All rights belong to the Author

LIBRA
1510 2
TIRUPATI

PUDU YUGA NILAYAM

PONDICHERRY

PRICE RUPEES FIFTEEN

விலை ரூபா: பதினைந்து

பதிப்புரை

இன்று கவியோகி **சுத்தானந்த பாரதியாரின்** பிறந்த நாள். இது அவர் வாழ்விற் சிறந்த நாள். ஸ்ரீ அன்னை அருளால் அவரது ஆயுட் காவியமான **பாரத சக்தி மகா காவியம்** நிறைவாக வெளிவந்து விளங்குகிறது.

பாரத சக்தி, கவிக்குக் கவி; கலைக்குக் கலை; வாழ்விற்கு வழி காட்டும் சாதன வேதம்; புதிய உலகில், புதிய பூரண வாழ்வைத் தரும் அமரானந்த ஊற்று; இனிய, எளிய, ஆவேச நடையில் வரிக்கு வரி தெய்வச் சுவை நிரம்பிய கலைக்கோயில். இதுவே உலகின் உள்ளம், மனித சமுதாயத்தின் உண்மை வரலாறு, மனிதான்மாவின் தெய்வ விளக்கம்.

காவிரி முக்கொம்பில் எழுந்த இக் காவியம், ஐயர் குருகுலத்தில் மலர்ச்சி பெற்று, ஸ்ரீ அரவிந்தாசிரம மோனத் தவத்தில் கனிந்து, உயிர்க்குலமான இறைவனுக்கு அர்ப்பண மாகிறது. வான்மீகி, வியாசர், கம்பர், ஓமர், தாந்தே, மில்தன் போன்ற மகா கவிகளுக்குப் பின் எழுந்த இந்த மகா காவியம், இயல்—இசை—நாடகம் ஆகிய முத்தமிழுக்கும் அணிகல னாகும். இதைப் பண்ணுடன் இசைக் கருவிகளும் இணைந்து பாடிக் கேட்டால், உள்ளம் உருகும்; வாழ்க்கையில் புதிய மெருகு ஏறும்; மனிதனிடம் உள்ள அசுரத் தன்மைகள் ஒழிந்து, தெய்வ சக்திகள் கிளர்ந்திலங்கும்.

சுத்தானந்தர், தமது வாழ்வையே யோகக் கனலில் உருக்கி வார்த்து, பாரத சக்தியாக உலகிற்கு அளிக்கிறார். அவரே இதற்குத் தனி யிலக்கணமும் செய்திருக்கிறார்.

இந்த மாபெரு நூலை மிக விரைவில் அச்சிட்டுதவிய ஸ்ரீ அரவிந்தாசிரம அச்சகத்திற்கு நன்றி, நன்றி. இந்த நூல் நிறைவாக வெளிவந்து சுத்தானந்தர் வாழ்க்கை உய்தி பெறச் செய்த ஸ்ரீ அரவிந்த சக்தி யன்னைக்கு வணக்கம்.

இந்தக் காவியத்தைப்பயன்படுத்தி, இதன் உள்ளத் துடிப்பை, ஒவ்வோர் உள்ளத்திலும் துடிக்கச்செய்யும் அன்பருக்கு வணக்கம்.

பாரத சக்தியே சுத்தானந்தர் வாழ்வின் நினைவுக் கோயில்; இந்த அருட்கலைக் கோயிலில் உலகெல்லாம் உள்ளொன்றி வாழலாம்; வருக ! ஓம் சுத்த சக்தி !

30, சித்திரை—சர்வதாரி
புதன் கிழமை
12—5—1948

புது யுக நிலையம்

பொருள் அடக்கம்

எண்	பொருள்	பக்கம்
	பதிப்புரை	iii
	ஆசி மொழிகள்	1
	பாரத சக்தி மலர்ச்சி	3

1. சித்தி காண்டம்

	சித்தி காண்டம் கதைக் குறிப்பு	6
1.	மங்கல வாழ்த்துப் படலம்	11
2.	சிருட்டிப் படலம்	13
3.	அருட் குலப் படலம்	18
4.	புண்ணிய பூமிப் படலம்	23
5.	சித்தி நகரப் படலம்	25
6.	சத்தியன் அரசியற் படலம்	29
7.	தியானக் காட்சிப் படலம்	32
8.	முனியுரைப் படலம்	34
9.	சுத்த ஜனனப் படலம்	36
10.	திருநாமப் படலம்	38
11.	குழந்தைப் படலம்	41
12.	குருகுலப் படலம்	43
13.	பொருமைப் படலம்	45
14.	புறப்பாட்டுப் படலம்	48
15.	யாத்திரைப் படலம்	51
16.	வீர சிவாஜிப் படலம்	56
17.	பஞ்சவடிப் படலம்	67
18.	இராமாயணப் படலம்	71
19.	ஒற்றுக்கேள்விப் படலம்	85
20.	இராம தாஸ் படலம்	89
21.	கலி சினந்த படலம்	97
22.	பஞ்சவடிப் போர் வென்ற படலம்	99
23.	அபயமளித்த படலம்	107
24.	அரசவைப் படலம்	119
25.	வரவேற்புப் படலம்	122

2. கௌரி காண்டம்

எண்		பக்கம்
	கௌரி காண்டம் கதைக் குறிப்பு	129
1.	ஆலோசனைப் படலம்	130
2.	சுத்த ஜயந்திப் படலம்	135
3.	கௌரி குலப் படலம்	144
4.	சம்மதப் படலம்	152
5.	கௌரி காதற் படலம்	157
6.	இராமகிருஷ்ணப் படலம்	163
7.	விவேகானந்தப் படலம்	176
8.	ஊர் மகிழ் படலம்	182
9.	இல்லற வொழுக்கப் படலம்	185
10.	திருமணப் படலம்	195
11.	வாழ்க்கைப் படலம்	208
12.	சிந்தனைப் படலம்	211
13.	மாயா மானஸப் படலம்	215
14.	பட்டாபிஷேகப் படலம்	220
15.	சுத்த வாசகப் படலம்	226
16.	நன்றி யுரைத்த படலம்	230
17.	கண்ணன் படலம்	233
18.	மகாபாரதப் படலம்	240
19.	பகவத் கீதைப் படலம்	246
20.	பொய்வேடப் படலம்	257
21.	கார்த்திகைப் படலம்	260
22.	போலித் துறவிகள் படலம்	265
23.	புரட்சிப் படலம்	270
24.	போர்ச்சபைப் படலம்	274
25.	பகதூர் படலம்	277
26.	சத்தியன் உறுதிப் படலம்	280
27.	குருகோவிந்தப் படலம்	283
28.	படை யெழுந்த படலம்	295
29.	மாயன் வதைப் படலம்	299
30.	பிரதாப சிங்கப் படலம்	301
31.	போரணிந்த படலம்	310
32.	கலி கலங்கிய படலம்	315
33.	உறுதிப் படலம்	319
34.	இறுதிப் படலம்	325
35.	வெற்றிப் படலம்	329
36.	கௌரி விலாசப் படலம்	333

3. சாதன காண்டம்

எண் பக்கம்

சாதன காண்டம் கதைக் குறிப்பு 338
1. கருணைப் படலம் 339
2. சாசனப் படலம் 344
3. துறவுப் படலம் 349
4. காமபுரிப் படலம் 353
5. புத்த ஜோதிப் படலம் 362
6. புத்த தருமப் படலம் 381
7. மகாவீரப் படலம் 386
8. ஜைன தருமப் படலம் 394
9. கிறிஸ்து ஜோதிப் படலம் 399
10. பைபிள் படலம் 416
11. நபிநாயகப் படலம் 422
12. அல்குரான் படலம் 441
13. குரு நானகப் படலம் 446
14. கிரந்த ஸாகெபுப் படலம் 456
15. ஜரதுஷ்டிரப் படலம் 461
16. வேதபுரிப் படலம் 468
17. வேத சாரப் படலம் 478
18. சிவகிரிப் படலம் 488
19. ஞானோபதேசப் படலம் 492
20. தியான சித்திப் படலம் 501
21. சாந்தன் வந்த படலம் 510
22. அருண ஜோதிப் படலம் 513
23. புது யோகிப் படலம் 519
24. இமாலயப் படலம் 522
25. சுத்த நிலையப் படலம் 528
26. சாதனப் படலம் 538

4. தானவ காண்டம்

தானவ காண்டம் கதைக் குறிப்பு 548
1. போகர் வரவுப் படலம் 549
2. சாமளப் படலம் 551
3. கடற் படலம் 555
4. சீகரப் படலம் 558
5. தானவர் தோன்றிய படலம் 562
6. மாவலி எழுந்த படலம் 569

எண் பக்கம்

7. நிசாசரப் படலம் 571
8. மாவலி இசைந்த படலம் 576
9. அந்தரங்கப் படலம் 580
10. அசுராலோசனைப் படலம் 585
11. போகசாலைப் படலம் 596
12. சக்தி விருப்பப் படலம் 600
13. வெள்ளி நீதிப் படலம் 605
14. கலை வழிப் படலம் 611
15. யாழிசைப் படலம் 615
16. கலைக்கோயிற் படலம் 620
17. சங்கப் படலம் 627
18. ஆத்திரப் படலம் 631
19. தெய்வ வாதப் படலம் 635
20. மகா முனிப் படலம் 646
21. குண்டலகேசிப் படலம் 651
22. வளையாபதிப் படலம் 657
23. தண்டனைப் படலம் 694
24. கிளர்ச்சிப் படலம் 699
25. சக்தி யெழுந்த படலம் 703
26. இடி முழக்கப் படலம் 712
27. சங்கத்திற்கு நலமுரைத்த படலம் 720
28. சீகரன் மகிழ்ந்த படலம் 724

5. சுத்த சக்தி காண்டம்

சுத்த சக்தி காண்டம் கதைக் குறிப்பு 728
காப்பு 730
1. புதுநாட் படலம் 731
2. போற்றிப் படலம் 736
3. கலி மீண்ட படலம் 740
4. தூமகேதுப் படலம் 746
5. போராடிய படலம் 751
6. சக்தி விஜயப் படலம் 759
7. யோக சித்தி எழுந்த படலம் 763
8. யோக சித்திப் படலம் 766
9. அகண்ட சாதனப் படலம் 793
10. மஹாத்ம விஜயப் படலம் 810
11. திருத் தொண்டர் படலம் 836
12. விழித்தெழுந்த படலம் 848
13. தூமகேது திகைத்த படலம் 855

பாரத சக்தி மகா காவியம்

எண்		பக்கம்
14.	மோகி யிறுதிப் படலம்	862
15.	கலி பணிந்த படலம்	865
16.	புது மலர்ச்சிப் படலம்	875
17.	மாவலி வீழ்ச்சிப் படலம்	883
18.	சத்தியன் வென்ற படலம்	888
19.	சுத்த மங்களப் படலம்	894
20.	சுத்த விஜயப் படலம்	898
21.	சுத்த வாணிப் படலம்	902



ஆசி மொழிகள்

(வீரக் கலை விளக்கு வ. வே. சு. ஐயர்)

உலகச் சரித்திரம் தோன்றியுள்ள நாட்களுக்கு முற்காலந் தொடங்கி நேற்றுவரையில் வீரவாழ்க்கைக்கும், கல்விக்கும், ஞானத்திற்கும் தாயகமாக இருந்து வந்திருக்கிற பாரதநாட்டின் புகழ், எல்லையில்லாத கடல். இக் கடலில் நீந்துவதற்குப் போதிய ஆற்றல் படைத்தவர் **ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்** அவர்கள் என்று நாம் இங்கு துணிந்து கூறுவோம். இவர், தம்து வாழ்வையே தவத்திற்கு நிலைக்களமாக்கிய பரமயோகி. இவர், அத்யாத்ம வாழ்க்கை வாழ்ந்துகொண்டு, அத்யாத்ம ரகசியங்களைப் பரிசீலனை செய்து அனுஷ்டித்து வருகிறார்; பாரத தேசத்தின் பழைய சரித்திரத்தையும் புதிய சரித்திரத்தையும் ஆர்வத்தோடு, பக்தியோடு, சிரத்தையோடு ஊன்றிப் படித்திருக்கிறார்; தமிழில் பல நூல்கள் எழுதி யுதவியிருக்கிறார். தமிழ்க் குருகுலத்திலும் **பால பாரதி**யிலும் ஸ்தானம் வகித்துக்கொண்டு, இத்தகைய அரிய நூலை இவர் தொடர்ந்து எழுதுவதற்கு ஆற்றலும் நேரமும் படைத்திருப்பது, இவருடைய தேசு நிறைந்த பிரமசரியத்தினுலும், யோகவாழ்வினுலுமே யாகும். தமிழ்நாட்டுஅறிஞரும் ரசிகரும், இந்நூலிற் பொதிந்துள்ள அமுதச்சுவையை நுகர்ந்து பார்த்து இன்புற வேண்டும்.

காசிவாசி நண்பர் **ஸ்ரீ. பா. ஆதிமூர்த்திப்** புலவர் இக்காவியத்தைப் பற்றி ஐயருக்கு எழுதிக் கேட்டிருந்தார். ஐயர், அவருக்கு எழுதிய கடிதத்தில், இவ்வாறு குறிப்பிட்டார்:

ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் அவர்கள், ரிஷிவாழ்வு வாழும் ஓர் அற்புதமான வரகவி; **கவியோகி**! அவர் வாக்கு, தவத்தினுல் பழுத்துக் கனிந்ததென்றே சொல்லவேண்டும். உலக மகா காவியங்களையும், வீரர் வரலாறுகளையும், பல நாட்டுச் சரித்திரங்களையும், (முக்கியமாக, பாரத தேசச் சரித்திரத்தையும்) இவர் கருத்துடன் படித்திருக்கிறார். சிறு வயது முதலே இவருக்குக் கவிதா சக்தி வளர்ந்து வந்திருக்கிறது. முற்கால மகாகவிகள், இராமாயணம், பாரதம், பாகவதம், இலியாது போன்ற பெரிய காவியங்களை எப்படிச் செய்தார்கள் என்பதை, நாம் சுத்தானந்தர் வாழ்வினின்று தெரிந்துகொள்ள முடிகிறது.

கவிக்குயில் நல்ல காவியம் என்றார் ;
வீர விளக்கு விரும்பிக் கேட்டு
மகாகா வியமென வாழ்த்திப் புகழ்ந்தார்,
மகரிஷி கதையை மகிழ்வுறச் செவித்தார்.
நவயுக யோகி நன்றிது வென்றார்........
புதுவையில் மீண்டும் புதுக்கி யெழுதி,
என்னை யாளும் இறைவன் அருளால்,
அன்னை சக்தியின் அன்புத் துணையால்,
இப்பெருங் காப்பியம் இலகுவ துலகே.
எனதியா னென்னும் இறுமாப் பாலே
ஆசைத் தின்வால், ஆணவக் கொதிப்பால்,
போட்டி பொறாமையால், பொய்நடை பலவால்,
மனங்கெடு மாந்தர் இனங்கெடு மதியால்,
ஆயுதக் கிடங்கில் ஆயுளைப் போக்கியே,
குத்துவெட் டுகளிற் கொலைநட மாடி,
இரத்தவெள் ளத்தில் இன்னுயி ரிழப்பதும்,
அணுவெடி வீசும் அரக்க ராவதும்,
ஆக்கம் போலே அழிவதும் ஒழிய,
மனத்தைத் திருத்தி, இனத்தைத் திருத்தி,
காமம் வெகுளி கலக்கமில் லாது,
உள்ளங் களிக்க, உலகஞ் செழிக்க,
எல்லா உயிர்க்கும் இறைவன் ஒருவனே
எல்லா உடலும் இறைவனா லயமே..
என்னும் சமரஸம் இதயத் துடிப்பாய்,
அகப்புறத் தூய்மையும் அஞ்சா உரிமையும்,
அமரத் தன்மையும் அடைந்துநீ டூழி
வாழும் வகையை வழங்கும் சக்தியே—
பரமயோ கந்தரும் பாரத சக்தியாம்.
பாரத நாட்டுப் பூரண யோகிகள்
தவத்தால் விளக்கிய சக்தியை இன்று
மீண்டுந் தூண்டி, வேதச் சுவையும்,
தெய்வத் தன்மையும் சிறக்க வேண்டினேன்.
தீர்க்க தரிசிகள் பார்க்க நினைத்த
விண்ணர சாட்சியை மண்மிசை நாட்டும்
சாதனம் வகுத்துச் சத்திய சுத்த
சக்தி சாந்தாதி முத்தர் முயற்சியால்,
புதுயுக வுலகம் பொலிவுற நாட்டி,
ஒன்றே கடவுள் ஒன்றுசுத் தான்மா,
ஒன்றே உலகுயிர் ஒன்றே வான்போல்—

என்று விளக்கி எங்கும் இன்பமே
காணத் துடிக்குமிக் காவியங் கற்றோர்
எண்ணிய புண்ணிய மெய்திடு வாரே.
சத்திய சுத்தர் சத்தி யுடனே
யோகசங் கத்தால் உலகைத் திருத்தி,
மாவலி கலியர் வாள்வலி யொடுக்கி,
அசுர பலத்தை அமைதியாய் வீழ்த்தி,
அருளர சாட்சியை அவனியில் ஊன்றி,
மானிடரை அதி மனிதர்க ளாக்கி
மாதரைச் சக்தி மண்டல மாக்கி,
சுத்தான்ம சித்தர் சுடர்பெறுஞ் சங்கமே
உலகவாழ் வாக நிலவச் செய்யும்.
பாரத சக்தியென் ஆருயி ராகவே
பாரின் உள்ளமே பருவுட லாகவே
வானுள மட்டும் யானு மிருந்தே,
கவியுருக் கொண்ட கனவுக ளாலே
உலகிற் பணிசெய ஓம்சுத்த சக்தி
அருளுக வெற்றி ஆகுக நலமே !
இதனை ஓதி இன்ப மடைந்தேன்
இவ்வுல கடைக யான்பெறு மின்பமே.

எத்தி சையிலும், எந்தெந்த நேரத்தும்,
சித்த மூன்றிச் செயலை நடத்திடும்
சுத்த சக்தி அருட்சுடர் என்றனை
வைத்த வாறு வளர்வதென் வாழ்க்கையே.

கனக்கு நூல்பல கற்றுத் தெளிந்தே
மனக்கு நல்ல மகிழ்வினை நல்கி
எனக்குக் கற்க இலக்கியஞ் செய்தேன் ;
உனக்கு மின்ப முதவு முலகே !

நூற்பயன்

வீரமும், சுத்த சக்தி விளக்கமும், ஆத்ம ஞான
தீரமும், கல்வி செல்வத் திருக்களும் பெருகி யோங்கும்;
பூரண சித்தி யெய்திப் பொலிந்திடும் அமர வாழ்க்கை-
பாரத சக்தி தன்னைப் பயிலுக உலக மெல்லாம்!

—சுத்தானந்த பாரதி

பாரத சக்தி மகா காவியம்

முதலாவது

சித்தி காண்டம்

(கதைக் குறிப்பு)

இறைவன் புதிய உலகைப் படைக்க விரும்புகிறான்; ஊழி வெள்ளத்தால் பழைய உலகை முற்றிலும் அழித்துத் தானே தானாகத் துரிய சமாதியில் விளங்குகிறான். பராசக்தி விழித் தெழுந்து, புதிய உலகையும், புதிய மாந்தரையும் படைக்கத் தூண்டுகிறாள். சக்தி வீணையில் இறைவன் இச்சைப்படி ஓங்காரம் முழங்குகிறது; அணுக்கள் சுழல்கின்றன; ஐம்பூதங்கள், தன் மாத்திரைகள் எல்லாம் தோன்றுகின்றன. அவை, பல சுடர்களா கவும், கோளங்களாகவும் பரவிச் சுழல்கின்றன. கதிரவன், கடல் மழை, ஆறு, காடு, பயிர், உயிர்க்குலங்கள்—இவை முறையே தோன்றுகின்றன. இறைவனும் சக்தியும் இமாலயத்தில் வீற்றி ருந்து, அதற்குத் தெற்கே புண்ணிய பூமியை உண்டாக்குகின்ற னர்; அதில் **மனு-மதி** என்னும் புதிய ஆணையும் பெண்ணை யும் உண்டாக்கி, அவர்கள் மூலம் மனித மரபை வளர்க்கின்றனர். மனிதரில் அந்தக்கரண சுத்தி யுள்ளவர்கள் அமர வாழ்க்கை வாழுகின்றனர்; அஃதில்லாதவர் அசுரர்களாகி, இடர் செய்கின் றனர். இருதன்மையருக்கும் போர் நடக்கிறது. அசுரரை வென்று **பரதன்** அருட்குலத்தைத் தோற்றுவிக்கிறான். அவன் வழி வந்த அருட்பெரியாரை அருட்குலப் படலத்திற் காண்க. இறுதியில் சத் தியராஜன் எழுந்து, **சித்திமா**நகரில் சத்திய ராஜ்யத்தை நாட்டு கிறான். அவன் மனைவி இந்திரை, குரு பாரத முனிவர், மந்திரி சித்திமான், படைத்தலைவன் விஜயன்—எல்லாரும் தீரர்கள்; உலக நலமே போற்றி வாழ்பவர்கள்.

சத்திய ராஜனுக்கு நெடுநாள் பிள்ளை யில்லாதிருந்து, தவப் பயனால் **சுத்தன்** என்னும் தெய்வ மைந்தன் பிறக்கிறான். 'இரா மன், கண்ணன், புத்தர், மகாவீரர், ஏசுநாதர், மஹாத்மா போன்ற தெய்வாம்சம் பெற்ற மகான் அவன்' என்று பாரத முனிவரும் பெரியாரும் கண்டு வணங்குகின்றனர். சுத்தன் குழந்தைப் பருவத்திலேயே அற்புதமான அருளாற்றலை விளக்கு

கிறான். அவனுக்குப் பாரத முனிவரே தமது குருகுலத்தில் யோகம், கலை, அரசியல், போர்த்திறல், சாத்திரம் எல்லாம் பயிற்றி, அவனது அருளறிவையும் தூண்டுகிறார். கல்வி முடிந்ததும் தந்தை, சுத்தனை நாட்டைச் சுற்றிப்பார்த்து உலகானுபவம் பெற மந்திரியுடன் அனுப்புகிறான். இருவரும் யாத்திரைசெய்து, அரசர் நீதி, பெரியார் வாழ்க்கை, பொதுஜனங்களின் நிலைமை எல்லாம் பார்க்கின்றனர். சுத்தனை மன்னரும் குடிகளும் மகிழ்வுடன் வரவேற்கின்றனர். தமிழகம், ஆந்திரம், கொங்கணம், கன்னடம், வங்கம், காசி, கோசலம், பாஞ்சாலம், சிந்து, இராஜபுதனம் எல்லாம் பார்த்துக்கொண்டு, சுத்தன் மகாராஷ்டிரத்தைச் சுற்றிப்பார்த்து வியக்கிறான் ; இராயசிங்கக் கோட்டையில் சிவாஜி சரித்திரம் சித்திமான் சொல்லக் கேட்கிறான். அச் சமயம் கலியன் அழைப்பு வருகிறது.

கலியன், சத்தியன் தம்பிதான் ; ஆனால், மகா அசத்தியன், அசுரன், பாதகன், பேராசைப் பதர். அண்ணனுக்குப் பிறகு, தானே **சித்தி**யைக் கைப்பற்றித் தனது கலியரசை நாடெங்கும் நாட்ட அவன் மனப்பால் குடித்தான். சுத்தனுக்கு அவன் கொடிய பகைவனானான் ; அவனைக் கொல்லச் சூழ்ச்சி செய்தான் ; பலிக்கவில்லை. சித்தியைக் கைப்பற்றவும் போதிய படையில்லை. துயரில் மூழ்கிய அவனை, மனைவி **மோகி** தேற்றினாள். மோகி, அழகான அரக்கி. அரக்கர் வாழும் இரகசியத் தீவாகிய **தானவ**த்தை ஆளும் மாவலியின் தங்கையே அவள். அரக்கரிடம் பற்றுமிகுந்த கலியன் அவளை மணந்து அவள் கைப்பாவையானான். "என் அண்ணன் படைகளைக் கொண்டுவந்து, சித்தியைக் கைப்பற்றுகிறேன்" என்று அவள் தானவம் சென்றாள் ; அரக்கர் சிலரை அழைத்து வந்தாள். அவர்கள் கலியன் படைகளுக்கு அசுர வித்தைகளையும், புதிய கொடிய ஆயுத வித்தைகளையும் பயிற்றினார்கள். கலியன் பெரிய படை சேர்த்துச் சித்தியைத் தாக்கத் தயாரானான் ; இதனிடையே, சுத்தனைக் கலிநகருக்கு அழைப்பது ; வரும் வழியில் தாக்கிக் கொல்வது ; அல்லது, கலி நகரிலேயே தந்திரமாகச் சிறையிலிட்டுக் கொல்வது என அவன் பலமான ஏற்பாடுகளைச் செய்தான். கலியன் சூழ்ச்சியை அறிந்த சித்திமான், அவனழைப்பிற்குத் தந்திரமாகப் பதில் அனுப்பினான் ; தன் ஒற்றரை விடுத்துக் கலிநகர் நடப்பை அறிந்துவரச் செய்தான் ; சுத்தனை மிகவுங் கவனமாகக் காத்து வந்தான்.

ஸ்ரீராம நவமி யன்று சுத்தனும் சித்திமானும் மாரத வீரர் வழி நடத்தப் **பஞ்சவடி**க்கு வருகின்றனர். அங்கே முனிவர் இரு

வரையும் வரவேற்றுபசரிக்கின்றனர். பஞ்சவடியின் இயற்கை யழகும், தவப் பொலிவும், முனிவரின் புனிதக் காட்சியும் சுத்தனுக்கு இன்பமளிக்கின்றன. முனிவரைப் பார்த்து ஆசி பெற்று, நல்லுரை சொல்லிக்கொண்டே இருவரும் **சாந்த முனிவர்** ஆசிரமத்துக்கு வருகின்றனர். முனிவர் அதிதிகளை வரவேற்று நன்மொழி கூறி, உபசரித்து, கனிவிருந் தளிக்கிறார்.

பஞ்சவடி, முன்னே இராவணன் ஆண்ட இடம்; சூர்ப்பணகையும் கரதூஷணாதிகளும் இருந்த இடம். அங்கே முதலில் தனது கொடியை ஊன்றித் தவமுனிவ ரெல்லாரையும் தனது நாத்திக மதத்திற்கு மாற்றிக் கலியரசை நாட்டவேண்டுமென்பது கலியன் கருத்து. அவனால் தாங்கள் படும் பாட்டை முனிவர் சொல்லுகிறார். சுத்தன் முனிவருக்கு எக் கேடும் வராதபடி காப்பதாக வாக்களிக்கிறான். சாந்த முனிவரின் அன்புச் செல்வி **கௌரியே** அதிதிகளை இனிமையாக உபசரிக்கிறாள். அவளைக் கண்டதுமே சுத்தனுக்கு ஒரு புனிதக் காதல் பிறக்கிறது; அப்படியே அக் கன்னிக்கும். அன்று ஸ்ரீராம நவமி யாதலால், முனிவர் இராமாயணத்தை இனிய விருத்தங்களாகப் பாடி விரிவுரை சொல்லி, 'அசுரர்களை ஸ்ரீ ராமன் போல அழித்து, தருமத்தை நிலைநாட்ட வேண்டும்' என்று முடிக்கிறார். சுத்தன் இராமபக்தரான இராமதாஸ் முனிவர் சரிதமும் அருளும்படி கேட்கிறான். முனிவர் மறுநாள் சொல்லுவதாக விடை கொடுக்கிறார்.

சுத்தனும் சித்திமானும் தபோவனத்தில் உலாவி, அமைதி பெற்றுத் தமது இடத்திற்குச் சென்றதும், கலிநகர் சென்ற ஒற்றர் ஓடிவந்து, திடுக்கிடும்படியான செய்திகளைச் சொல்லுகின்றனர்: "கலியன் சுத்தனைச் சிறையிட்டுச் சேனைகொண்டு சித்தியை முற்றுகைபோடவே சூழ்ச்சி செய்கிறான். நாளையே பெரிய அசுரப் படையை இங்கே விடுத்து அட்டூழியம் செய்யப்போகிறான்" என ஒற்றர் சொல்லுகின்றனர். சித்திமான் பக்கத்திலிருக்கும் சிற்றரசருக்கு அவசர ஓலை விட்டுச் சேனை யனுப்பச் சொல்லுகிறான். சுத்தன், "வரட்டும் கலியன் படை! ஒரு கை பார்க்கிறேன்" என்று வீரமுடன் பேசுகிறான்.

மறுநாள் இருவரும் காலைக் கடன்களை முடித்து, சாந்தாசிரமம் செல்கின்றனர். கௌரி யாழ் மீட்ட, சாந்த முனிவர் இனிய குரலால் இராமதாஸர் வரலாற்றைச் சொல்லுகிறார். கருத்துடன் கேட்டுக்கொண்டிருந்த சுத்தனுக்கு ஒரு புதிய வீரம் பிறக்கிறது. தனது மனத்திலுள்ள கவலை, ஒற்றுச் செய்தி, கலியன் பொல்லாங்கு ஆகிய எல்லாவற்றையும் முனிவரிடம் சொல்லி, சிவாஜி

போலும் இராமன்போலும் பகைவரை எதிர்த்துப் போர் புரிய முனிவர் ஆசியை வேண்டுகிறான். அரக்கரை வீழ்த்தி அறத்தை நாட்ட வந்த தூயனை, முனிவர் ஆசீர்வதிக்கிறார். அச் சமயமே கலியன் அசுரப் படை பஞ்சவடியிற் புகுந்து, மரங்களை ஒடித்து, பர்ணசாலைகளில் தீ வைத்து, முனிவரை அடித்து மிரட்டிக் கொடுமை செய்கிறது. **வேகன்** என்ற அசுரன் ஆசிரமங்களில் உள்ள பெண்களைத் தூக்கிச்செல்ல முயல்கிறான். முனிவர் அபய மிட்டு அலறுகின்றனர். அதேசமயம் சித்திமான் எதிர்பார்த்த படைகளும் வருகின்றன. சித்திமான் காட்டில் அரக்கருடன் போர் புரியச் செல்கிறான். சுத்தன் முனிவர் ஆசிரமத்தை அணுகும் அரக்கரை வீழ்த்துகிறான் ; கவனமாக முனிவரை ஒரு மலைக்குகைக்கு அனுப்புகிறான். வேகன் முதலிய அரக்கர்கள் பர்ணசாலைகளைச் சுட்டெரித்து முனிவர் சிலரைத் துரத்திப் பிடிக்கின்றனர். சுத்தன் அவர்களைப் பொருது வீழ்த்துகிறான். வேகன் பர்ணசாலையில் புகுந்து கௌரியைத் தூக்க முயல்கிறான். சுத்தன் அவனை ஒரே குத்தில் வீழ்த்துகிறான். அவன் மடியில் ஒரு கடிதம் இருந்தது : " கலியன் ஆணை ; வேகன் படை வேகமாகச் செல்க ! பஞ்சவடி முனிவரை யெல்லாம் சிறைப் பிடிக்க வேண்டும். சுத்தனையும் சித்திமானையும் கைதியாக்கி விலங்கு போட்டு இரகசியமாகக் கொண்டு வரவேண்டும். பெண்களை யெல்லாம் இங்கே கொண்டு வந்து, நம்மவர் அடிமைகளாக்க வேண்டும். பஞ்சவடிப் பர்ணசாலைகளைச் சுட்டெரித்து அங்கே நமக்கு உல்லாச மாளிகைகள் கட்ட வேண்டும்; யோகவனம் போகவன மாகவேண்டும்!" என்று அக்கடிதத்தில் எழுதி யிருந்தது. கலியன் சூழ்ச்சி மண்ணானது. போர் ஒழிந்தது. வெற்றி முரசொலிக்கிறது. குகைகளில் ஒளிந்த முனிவரும் பத்தினிகளும் வருகின்றனர் ; சுத்தனை ஆசீர்வதிக்கின்றனர். சாந்த முனிவர் இனிவரும் உலக நிலையை விளக்கிச் சுத்தனே உலக ரட்சகன் எனக் காட்டுகிறார். சுத்தன் ஆவேச மொழி புகன்று அபய மளிக்கிறான். முனிவர் இனிப் பஞ்சவடியில் இருக்க முடியாது என்கின்றனர். சுத்தன் பஞ்சவடியில் ஒரு பெரிய படையை வைத்து, சாந்தரையும் கௌரியையும், முனிவரையும் அழைத்துக்கொண்டு சித்தி நகருக்கு வருகிறான். சித்தி நகரில் குதூகலமான ஊர்வலம் நடக்கிறது. சத்திய ராஜன் தன் மகனை அன்புடன் வரவேற்று மகிழ்கிறான். சுத்தன் தான் கண்டவை, கேட்டவை, கலி நகர் அட்டூழியங்கள் ஆகிய எல்லாவற்றையும் சொல்லி, உலகில் அதர்மம் தலை தூக்குகிறது, தருமத்தை நிலைநாட்டிப் பல தியாகங்கள் செய்யவேண்டி யிருக்கும் என்று நீண்ட சிந்தையில் ஆழ்கிறான். ஒற்றரால் கலி நகரிலும், நாட்டி

லும் நடப்பதை அறிந்து, சத்தியனும் வருங்காலத்தைப் பற்றிய சிந்தனையில் ஆழ்கிறான்.

பாரத சக்தியின் ஐந்து காண்டங்களும் மனித வாழ்வின் ஐந்து நிலைகளைக் குறிக்கும்: முதலாவது **சித்தி காண்டம்**, மனிதன் இயற்கையாக சத்தியநெறி பற்றி வாழ்ந்த சத்திய நிலையைக் குறிக்கும். இரண்டாவது **கௌரி காண்டம்** உலகின் இருவிகாரங்களுடன் மனிதன் வீரப் போர் புரிந்து, வீர மனிதனாக விளங்கும் நிலையைக் குறிக்கும். மூன்றாவது **சாதனக் காண்டம்**, உலகப் போரால் அலுத்த மனிதான்மா துறவை நாடி, பல மதங்களில் பரமசாந்தத்தைத் தேடுகிறது. நான்காவது **தானவக் காண்டத்தில்**, மதத்தாலும் அமைதி கிடைக்காமல், உலகின் குண தொந்த விகாரங்களுடன் மோதி, அசுரக் கொடுமைகளைப் பொறுமையால் வெல்ல முயன்று அயர்கிறது. கலைகளாலும் அமைதி கிடைக்கவில்லை. ஐந்தாவது **சுத்த சக்திக் காண்டத்தில்**, பரம பரிசுத்த யோகிகள் பாரத சக்தி யென்னும் சுத்தான்ம சக்தியைப் பரப்பி, சாதகக் கூட்டங்களைப் பூரணமாக்கி, உலகில் அமைதி நாட்ட அனுப்புகின்றனர். அவர்களாலேதான் உலகம் அசுரக் கொடுமை தீர்ந்து, தெய்வத் தன்மையும் அருளாட்சியும் பெற்ற ஒரு தேவ ஜாதியாக வாழ்கிறது!

உ

பாரத சக்தி மகா காவியம்

முதலாவது

சித்தி காண்டம்

1. மங்கல வாழ்த்துப் படலம்

*வெற்றி கொட்டுக ! விம்முக பேரின்பம் !
சுற்றி ஞானச் சுடரொளி வீசுக !
முற்ற றிவன் முதல்வன் அருளையே
பற்றி வாழப் பயின்றதிப் பாரெலாம் !

அம்மை யப்பன், அருட்பெருஞ் சோதியான்,
எம்மை யாளும் இறைவன், குருபரன் ;
தம்மைத் தந்தவர் தாபந் தணிப்பவன் ;
செம்ம லரடி யைத்தினஞ் சேவிப்பாம்.

எல்லை யற்றநல் லின்னுயி ருள்ளமே
தில்லை யாகத் திருநடஞ் செய்பவன் ;
இல்லை யென்பவ ருள்ளு மிருப்பவன் ;
சொல்லைத் தூண்டித் துலக்குக வெற்றியே !

இத்த லத்தொழில் எல்லா மியக்கியே,
அத்தன் ஆணையி னால்விளை யாடுவாள் ;
சுத்த சக்தி யருட்சுட ரேற்றுக—
நித்த மிக்கவி நின்று நிலவவே !

மீட்டுவாய் உயிர் வீணையைப் பண்ணுடன் ;
ஊட்டுவாய் உயர் வோங்குங் கலையின்பம்,
காட்டுவாய் வழி காசினி யெங்குமே
நாட்ட வுன்னிசை நற்றமிழ் வாணியே !

* இசைக் குறிப்பு : *மங்கல வாழ்த்துப் பாடல்கள் கலி விருத்தம் துள்ளலிசை ; திருக்குறுந் தொகை போல, ஆதி தாளத்தில் நாட்டை, நாதநாமக்கிரியை, பியாகு, காபி—ராகங்களில் பாடலாம். தன்ன, தன்னன தன்னன தானன—சந்தம்.*

திங்கள் கண்ட திரைகடல் போலவும்,
பொங்குங் காலையிற் புள்ளிசை போலவும்,
மங்கலஞ் சொல் வசந்தத்தைப் போலவும்,
கங்கை போலுங் கவியருள் வாணியே !

உன்னை யோதி யுருகுவ தல்லது,
பின்னை யேதும் அறிகிலன் பிள்ளையான் ;
அன்னை யேயமு தேயென தாவியை,
மன்னு மங்கல மாகவி யாக்குவாய் !

ஊழின் கூத்து முடிந்ததும், ஓர்பகல்,
வீழும் பொய்யுடல் வீழினும், உன்புகழ்
சூழும் சுத்த சுயங்கவி யாயென்றும்
வாழ இன்ற வரமருள் சக்தியே.

என்பெ யரை மறக்கினும் இப்புவி,
உன்பெ யரை யுருகி நினைத்திடத்
தன்பெ யரைத் தழைக்க விளக்கிடும்,
அன்பு மாகவி யையருள் அன்னையே !

சிலை,அ ருட்கவி சித்திரம், கூத்திசைக்
கலைகள் தெய்வக் கருத்துடன் ஆடிடும்,
மலையி னுச்சியில் என்மனம் ஆடிடத்
தலைவி யேயருள் தாரக சக்தியே !

வள்ளல் வானில், மலைவனக் காட்சியில்,
துள்ளு மாற்றினிற் சூழும் இயற்கையில்,
அள்ளி யள்ளி யளித்திடும் பாட்டையென்
உள்ளப் பொய்கையில் ஊற்றி யருளுவாய் !

கடலைக் காற்றைக் கதிர்வளர் வானத்தை,
இடம கன்ற புவியை, யியற்கையை,
உடலை, யென்னுள் உயிரைப் படைத்தவுன்
வடிவைப் பாட வரமருள் சக்தியே !

பூவி லுன்னருள் பூத்த புலவர்செய்
பாவி லூறிப் பழுத்த கவிதையென்
நாவி லூறிட நல்வரந் தந்தருள்,
ஆவி போர்த்தெனுள் ஆடும் பரமனே.

தோற்றித் தோற்றித் துகளற நாளுமே
மாற்றி மாற்றி மனிதரின் வாழ்வைமுன்
னேற்றி யேற்றி யியற்றுமுன் ஆடலைப்
போற்றி சக்தி, புகன்றரு ளென்னுளே !

வித்து வான்கள் விரும்பியுன் னன்பினை
முத்து முத்தெனச் சூட்டினர் முத்தமிழ் ;
புத்த லர்தொடுத் தேனுனைப் பூசிக்கப்
பித்த னேன்சிறு பிள்ளைத் துணிவினுல். 60

வீரர் வீறது ; வித்தகர் சித்தது ;
தீரர் யோகத் திறனது ; மானிடர்
பூர ணம்பெறும் புண்ணியத் தீயது ;
தார கம்அது பாரத சக்தியே !

தூய்ய யோகந் துலங்கிடும் வாழ்விலே,
வைய கத்தினில் வானர சோங்கிடும்,
தெய்வ மானிடச் சங்கஞ் செழித்திடும்,
செய்ய பாரத சத்தியின் சித்தியால்.

பொலிக பூரணம் ! பொங்குக வெற்றியே !
பொலிக நல்ல புதுயுக வாழ்க்கையே !
பொலிக புண்ணிய பாரத பூமியே !
பொலிக மங்கலம் பூவுயிர் யாவிற்கும் ! 72

2. சிருட்டிப் படலம்

அன்னை அருளிய காட்சி

*எங்கு வந்ததிப் பூவுயிர் ? எப்படி ? எதனுல் ?
எங்குச் செல்வதிப் படைப்பணி ? இதன்முடி பென்னே?
இங்கு வந்துவந் தியங்கிடும் வாழ்க்கையின் பண்பை,
நன்கெ னக்கருள் என்று நான் சக்தியை நயந்தேன்.

உலகை ஓமெனு மந்திரத் தாலுயிர்ப் பித்தாள்,
அலகி லாவிளை யாட்டுடை யாள்பர சக்தி,
நிலைபெற் றென்னுளத் தேநிறைந் தருள்விழி திறந்தே
இலகு வித்தமெய்க் காட்சியை யியம்புகின் றேனுல்.

---

*இசைக் குறிப்பு:—*சிருட்டிப் படலம், அருட் குலப் படலம், கலி நிலைத்துறை. ஐஞ்சீர், நான்கு அடிகளாய் நடப்பதுகலித்துறை. இதன் சந்தம், தன்ன தானன தானன தன்னன தனனு. இதை மூன்றடித் தாளத்தில் பூர்வீகல்யாணி ராகத்திற் பாடுக !*

புது யுக நினைப்பு

வான மாதியைம் பொருளினம் வகுத்தவை தொகுத்தும்,
ஈன லாதியைந் தொழில்களைச் சக்தியால் இயற்றி,
மான வர்முதல் எழுவகைத் தோற்றமு மகிழ,
ஞான நாடகம் புரிபவன் ஞாலநா யகனே.

ஆக்கும் போதய னாகவும், ஆருல குயிரைக்
காக்கும் போதரி யாகவும், கடைவெள்ளத் தாலே
நீக்கும் போதர னாகவு நிலவுவன் அருளால் ;
பூக்கும் போதுறப் புதுயுகம் புலர்கென நினைத்தான்.

ஊழி வெள்ளம்

கடக டத்திடத் திசையெலாங் காற்றுடன் கதிரோன்
படப டத்திட வுருத்திரன் காளியைப் பணித்தான்.
தடத டத்திடி தாவிடத் தண்கடல் பொங்கி
மடம டத்துயி ருலகினை வாரியுண் டதுவே !

பஞ்ச பூதங்கள் பிரிந்தன ; பண்டுல கனைத்தும்,
எஞ்ச லின்றியாங் கிரிந்தது ; பரந்தது வெறுமை.
செஞ்செ யல்புரி திறங்களைக் கரந்துளே நீடு
துஞ்சி னான்பர மாத்மனுந் துரியமா முடிமேல் !

அகம கிழ்வினால் உலகினை ஆக்குவான், காப்பான் ;
உகமு டிந்திட வுருத்திர லீலைகள் புரிவான் ;
இகப ரந்தனி லெவையுமா யிருப்பவன், ஒருவன்,
சுகம வன்பதந் துதிப்பதே தொழிலெனக் கொள்வாம்

மூலசக்தி விழித்தல்

ஏழு தோற்றமாய்ப் பிறந்திறந் துலகினி லியங்கி,
வாழு மன்னுயிர்க் குலத்தினை வளர்த்திடு மிறைவி
ஆழு றக்கம்விட் டெழுந்தெலாம் அழிந்ததை யறிந்து,
பாழு றக்கம்விட் டெழுப்பினள் பரமனைப் பரிந்தே !

“உள்ள வாறுதன் அறிவினால் உலகெலாம் இன்ப
வெள்ள மாய், உயிர்க் குயிரென விளங்கிடும் பொருளே,
விள்ள ருந்தனிக் கருணையே, விலகரும் அன்பு
வள்ள லே,என தாடலை வகுத்திடும் பரனே” !

“ஒருவ னேபல பான்மையாய் ஒளியுடன் கதிர்போல்
மருவு மென்வயின், வானுல காடலை வைத்தாய் ;
அருவு மாகுவை, ஆண்பெண்ணும் அகிலத்தை யாளும்
உருவு மாகுவை யுன்னியல் பறியுமா றுளதோ” ?

''விதங்க ளைப்புவி யணிகளை, வியன்களை, வினையைப்
பதங்க ளைப்பரி ணமத்தின் படிகளைப் பயனை,
இதங்க ளைப்பல மதங்களை இயல்புற வகுப்பாய்,
கதங்க ளைந்தினிப் புதுப்புவி கண்டருள் புரிவாய் '' !

"அளவி லாவுயி ராலயம், அருவினை யரங்கம்,
வளமி லாதுணர் வொலியுரு, சுவைமணம் வறண்டே,
தெளிவி லாதொரு சூனிய மானதே.....! திகைத்தேன்.
உளவி டத்தினில் உள்ளவா றுலகெலா மாவாய்'' !

பரமன்

"நன்கு நன்றினி துன்றிரு நயமொழி யுவந்தேன் .
மங்க ளச்சிவ சக்தியே, சின்மய வடிவே !
பொங்கு முத்தொழில் இனிப்புது வுலகினிற் பொலியும்.
எங்கு மென்மய மாகநீ கோயில்கொண் டிருப்பாய் ! ''

"உன்னு டன்உறங் கியபுவி யுன்னுடன் விழிக்கும் ;
என்ன லந்தரும் இச்சையை யேவினேன் இதன்பால்.
மன்னு மங்கல யாழினில் ஓமிசை வழங்காய் !
பொன்னெ ளிர்புது யுகப்புவி பொலிந்திடக் காண்பாய் !''

"ஓமெ னுந்திரு மந்திரம் உலகினை யாக்கும் ;
ஓமெ னுந்திரு வொலியதே உயர்மறைப் பொருளாம் ;
ஓமெ னும்பர நாதமே உண்மையின் பறிவாம்.
ஓமெ னுந்தமி ழிசையினை யுளமகிழ்ந் திசைப்பாய் ! ''

சக்தி யாழ் மீட்டல்

"நின்று சாட்சியாய்ப் பணித்தெனை யனைத்திலு நிறைவாய்
என்று மென்செயற் கிறைவனே, ஏகநா யகனே,
நன்று மீட்டுகின் றேனிந்த நலங்கிளர் நாதம்,''
என்று மீட்டினள் ஏழிசைப் பயன்களை யிணைத்தே.

பாழி டத்தினிற் பரந்ததோர் பம்பர வியக்கம் ;
யாழி சைதரும் அகரத்தால் அம்பரம் விழிக்க,
வாழி சைதரும் உகரத்தால் வளர்தரும் அணுக்கள்
சூழி சைதரும் மகரத்தாற் சுழன்றன விரைந்தே.

நாதம் உண்டுள நாரணன் எழுந்தணு நிறைந்தான் ;
வேத மார்த்தனன் விழித்தெழுந் தவன்வயின் பிரமன்.
பூத வாதிகள் பொம்மென வொலிமடுத் தெழுந்த,
சோதி பூத்தது, சுடர்மணிக் கணங்களும் பூத்த.

வெளி நிறைந்தது ; சக்தியால் வேகமாம் அணுவிற்
களி நிறைந்தது ; கதிரிடுஞ் சுடர்களிற் கனலின்
சுழி நிறைந்தது ; கடலுண்டு சொரியும்வா னமுதின்
அளி நிறைந்தது ; புதியநல் லழகெங்கு நிறைந்தே !

வல்லி யற்கையின் வளமைகள் வளர்ந்திட நாளும்,
சொல்லொ ணாப்புதுத் தோற்றங்க ளுதித்தன தொடர்ந்தே;
கல்லெ ழுந்தது ; மலைநதி கனிமரக் காடு
புல்லெ ழுந்தது புசிப்புக ளெழுந்தன செழித்தே.

புண்ணிய பூமி தோன்றுதல்

மண்ண ளாவிய மாண்பணி மகுடம்போல் எழுந்து,
விண்ண ளாவிய வெள்ளிமால் வரைமிசை யிருந்தே,
கண்ண ளாவிய தென்புறங் கவினுறக் காட்டிப்
பண்ண ளாவிய செஞ்சொலாள், பகவனுக் கிசைத்தாள்.

சக்தி

“ ஆதி யேநம தரியணை யாகுமிம் மலைமுன்,
மேதி னிக்கொரு ஞானமா விளக்கென மிளிரும்
சோதி நாடொன்று தோற்றுவாய் சொக்கழ காகத்
தீதி லாத்தவம் பொலிந்திடத் தேவர்போற் றிடவே ! ”

பரமன்

“ நன்றி சைத்தனை நலந்தரு ஞாலநா யகியே
என்றி சைத்தருள் இறைவனும் உவகைமீ தெழுந்தே,
தன்றி ருத்தவக் கதிரினைத் தளர்வறப் பரப்பி,
வென்றி சைத்திடும் வியன்பெறு நாட்டினைப் படைத்தான் ! ”

“ பாரெ திர்பர தேவியே பச்சைவிண் ணகத்தைச்
சீரெ லாம்வளர் திவ்வியச் செல்வநா டிதுவே,
பாரெ லாம்புகழ் பாரத சக்திநின் றருளிரும்
பூர ணம்பெறும் **புண்ணிய பூமி** யென் றிசைப்போம் ! ”

“ நாய கம்பெறு மிதன்மிசை நல்லன யாவுந்
தாய கம்பெறும் ; தாரக மாகிய தருமம்
தோய கம்இது ; துலங்குக துகளற நாளும்
வாய கங்கடந் தோங்கிடும் வாய்மையைப் போலே !”

ஆக்கும் ஆற்றலை முற்றிலும் காட்டினான் அயனும் ;
காக்கும் ஆற்றலைக் கண்ணெனக் கருணைமால் வகித்தான்;
பாக்கி யங்களை மிகமிகப் பரவிடப் புரிந்து,
நோக்கி னாள்சிவை பரமனை நூதனந் தோன்ற.

சக்தி

" இச்ச கத்தையென் இன்பவீ டாக்கினை இறைவா ;
உச்ச நல்லறி வாற்றலும், உன்னரு ளுணர்வும்,
மெச்சும் ஆத்தும சக்தியும் விளங்குமா னிடத்தைச்
சச்சி தானந்த வத்துவே, சகத்தினிற் படைப்பாய் ! "

பரமன்

" என்னி லாண்மைநல் லறிவுடன் வீறுபெற் றெழுக !
உன்னிற் பெண்மைநல் லன்புடன் அழகுறப் பொலிக !
இன்னி தின்இரு திறங்களும் இணைந்துநீ டூழி
மன்னு மங்கல மானிட மரபெனத் திகழ்க ! "

பூத யாக்கையிற் பொறிபுலன் கரணங்கள் பொருந்தி,
நாத விந்துக லாதியாம் ஆத்தும நாதன்,
போத மாகவுட் புகுந்துயிர் வாழ்வினை யியக்க
ஏதமில் திருக் கோலங்கள் இரண்டெழுந் தனவே !

சக்தி

" நனிதி கழ்மனு மதிஎனும் தளிரணிச் செல்வீர்,
புனித மாகிய மனையறம் பொலிவுறப் பொருந்தி,
இனித றம்பொரு ளின்பம்வீ டிசைவுறச் செழித்தே
மனித மாமர போங்கிட வாழிநீர் மாதோ ! " 120

மாச கல்மனு மதிகளை வாழ்த்திமா தேவி,
பாச மேவிய நகையுடன் சிவன்முகம் பார்த்து,
" நேச, மானிடர் நிலையினி யென் " னெனக் கேட்டாள்.
ஈச னும்பரி ணமத்தின் இயல்பினை யுரைத்தான் :

பரமன்

" ஈசன் யான்வளர் மானிடம், எனையறி யாது,
பாச முற்றிடிற் பவவினை பற்றிநீ டலையும்.
நேச மென்னிடை நிலைத்திடின், அருளுணர் வோங்கிப்
பாச நீங்கிடும் பதியினைக் கூடிடும் பசுவே. "

" முக்கு ணம்பெறு மாயையின் முடிவறு வலையிற்
புக்கு மானிடர் இருவினைப் போர்களை விளைப்பார் ;
பக்கு வம்பெறு ஞானிகள் பதைப்பறப் பார்த்தே
எக்கு ணத்திலுந் தோய்வுறார் ; என்னிலே இருப்பார். " 132

3. அருட் குலப் படலம்

காபி—முத்தாளம்

பரதன்

பஞ்ச பூதமும் பரிதியு மதியிளங் கதிருந்
துஞ்சி டாக்குண தொந்தமும் வளர்த்திடும் புவியில்,
செஞ்செ யல்புரி மானிடத் தேவரும் செழித்தார் ;
வெஞ்செ யல்புரி அரக்கரும் பெருத்தனர் விரைந்தே.

கரவுந் தீமையும், கடுஞ்சினப் போர்களும் விளைக்கும்
அரவும் வேங்கையும் போன்றவெவ் வரக்கரை யெதிர்த்தே,
விரவு வீரமும் தவமுங்கொண் டெளிதினில் வென்முன்—
பரத னென்பவன் மனுக்குலப் பரிதியாம் அவனே.

அருட்குலம்

திருக் குணத்தினர் அரசெனத் தேர்ந்திசை கூற,
இருட் குலத்தினை இகல்கெட வென்றமெய் வீரன்,
உருக்கொண் டேயறம் ஓங்கிட மீண்டுமிவ் வுலகில்,
அருட் குலத்தினை ஆக்கினன் ; அதன்புக ழிசைப்பாம்.

தெய்வக் கற்பகஞ் செழுமலர் கொழுங்கனி தழைத்தே,
வைய கத்தினுக் களித்திடும் வகையினைப் போலே,
துய்ய நல்லருட் குலந்தருஞ் சுடர்பெறு மைந்தர்,
செய்ய வாழ்வினுற் செகத்தினிற் இனியன செய்தார்.

இனிய வாய்மையும், வீரமும், எழில்பெறுந் திருவும்,
முனிவர் போற்றிடு ஞானமு, முதற்குண வளமும்,
புனித வாழ்க்கையும், புலமையும், பொதுநலப் பணியும்,
மனித ராகிய தேவரின் மாண்பிவை யாமே !

புலனை வென்றவர் புவிமிசை அமரராய்ப் பொலிவார் ;
நிலனை வென்றவர் நீதிநன் னிருபராய்த் திகழ்வார் ;
* இலனை வென்றவர், மனைதரும் இன்பமோங் குவர் ; தன்
னலனை வென்றவர் பொதுநல நண்பராய் வாழ்வார்.

நாக ரிகத்தினிற் சிறந்தனர் நறுங்கலைச் செல்வர் ;
வாகை யோங்கிய வலியதிண் புயத்தினர் ; நாளும்
ஈகை யின்பமும், சிவந்துலங் கிதயமும் படைத்தார்
பாகி னந்தமிழ் போன்றனர் பண்பினு லவரே.

செங்கண் மாலுயிர் காத்திடச் சிறப்புடன் அயனும்,
அங்கண் மாநிலத் தாருயி ரணிகளை வகுக்க,
துங்க மாஞ்சக்தி சிவனருட் சுடரினில் வளர்ந்த
மங்க லத்திரு மரபினர் கிளையினை யறிவாம்.

நிலவு ருண்டையைப் போலவே நிலையிலா அரசும்,
பலகு லம்பறித் தாண்டிடும் பாக்கியப் பணயம்,
வலியர் கைவழி வழிந்துசெல் வழக்குடை யாட்சி,
பொலியு மோர்புறஞ் சகடைபோற் போகுமோர் புறமே.

வீர மோங்கிய செந்தமிழ் விரிநில வேந்தர்,
ஆரி யர்மதி யிரவியர், அங்கியர், சிங்கர்,
மோரி யர்புத்தர் கிறித்துவர் முகம்மதி யர்கள்,
மார தர்முதல் மிகப்பலர் வழிவழி புரந்தார்.

சிங்க மோங்கிய நெஞ்சினர், செருபடைத் தலைவர்,
வங்க மோங்கிய வாணிகர், தொழில்வளத் தாலே
தங்க மோங்கிய தருகையர், தமிழ்க்கலை முழங்கும்
சங்க மோங்கிய தென்னவர் மன்னவர் தாமே.

தண்மை யோங்கிய குடையினர் ; தானையிற் சிறந்தார் ;
வண்மை யோங்கிய செல்வர்கள் பொன்னிநல் வளவர்,
திண்மை யோங்கிய புயத்தினர் சேரநாட் டரசர் ;
உண்மை யோங்கிய புகழினுக் குடையவ ரிவரே.

அமரர் உய்ந்திட நஞ்சினை அமுதென நயந்தே,
எமனை யெற்றி,மன் மதனையும் எரித்தவன் அடியார்,
விமல மாலடி யார்—இவர் பாடிய வேதத்
தமர மோங்கிடுந் தண்டமிழ் நாட்டினுக் கிணையோ ?

கடவுள் உள்ளமும், கலைகளுங், கதைகளுங், கவியும்,
கடவு ளாடலைத் தாங்கிய கவின்பெருந் தலமும்,
கடவுட் காதலும், வீரமும், கற்புமோங் கியதாம்
கடவு ளாலய மாகிய கனிதமி ழகமே !

பிரகலாதன்

நஞ்சும் வேழமு நாத்திகக் கொடுமையுங் கொண்டே
அஞ்சு வெஞ்சினக் கனகன்செய் இடர்களை அஞ்சான்
தஞ்ச மென்றரி நாமமே தளர்வறப் புகன்றான்
பிஞ்சி ளம்பிரக லாதனின் பெருமையைப் புகல்வாம்.

இராமபிரான்

வேத வேள்வியும், வரங்களும், வேந்தெனுஞ் செருக்கும்,
மாத ராசையால் இழந்தனன் மதியிலி யரக்கன்
பாத கத்தலை பத்தையும், ஒருகணை யாலே
தீத றக்கொய்த தீரனும் இராமனைப் பணிவாம்.

இராமன், இலக்குமணன், சீதை

யார்தம் அன்னைகை அரணியம் பணிவுடன் ஏற்ருர்,
யார்த லைவனை அத்தனை அன்புறத் தொடர்ந்தார்,
யார்இ மைப்பறு பணியுடன் அண்ணலைக் காத்தார்,
யார்இ ராமனும் சீதையும், இளவலும் அனையார் ?

பரதன்

அண்ண லற்றமன் னரசினை அரசெனப் புரவான்
புண்ணியன் றிருப் பாதுகை பூமுடி யணிந்தான் ;
மண்ணி னின்பத்தை மதித்திலன் ; வாய்மையன் பினையே
கண்ணிற் போற்றிய பரதனைக் கருத்தினி லணிவாம்.

அனுமான்

ஆசை மாக்கடல் கடந்தனன் ; அச்சுதன் பணிக்கே
ஓசை மாக்கடல் கடந்தனன் ; அரக்கரை யொறுக்கப்
பூசன் மாக்கடல் கடந்தனன் ; பொருவரு வீரா
வேச மாக்கட லானவன் வெற்றிமா ருதியே !

கண்ணன்

ஊதினுன் குழல் உயிர்களின் உளத்தினைக் கவர்ந்தான் ;
கோதி லார்தமைக் காத்தனன்; கொடியரைக் குமைத்தான்;
ஆதி பாரத மாக்கினுன் ; அறம்வளர் கண்ணன்,
ஓதினுன் அருட் கீதையை உலகமின் புறவே !

பாண்டவர்

சூதி ஞற்புவி கவர்ந்தனன் ; சொற்கட வாத
கோதை நற்றுயில் உரிந்தனன் மதியிலாக் கொடியோன் ;
பாத கத்துயர் அனைத்தையும் பரிவினுற் பொறுத்தார்—
மாத வன்பத மலர்தொழும் பாண்டவர் வாழ்க !

விசயன்

நல்ல றம்பொறை தாங்கிய தருமனுக் கிளையோன்,
கொல்ல றங்கிளர் கும்பலைக் குமைத்திடக் கண்ணன்
சொல்ல றத்துடன், சிவனருள் சுடர்க்கணை தாங்கும்
வில்ல றத்தினன், விசயனின் வீரத்தைப் புகழ்வாம்.

பெண் சக்தி

தணலும் கற்பினுற் சானகி யிலங்கையைச் சுட்டாள் ;
குணமி லார்கெடத் திரௌபதி குறுநகை புரிந்தாள் ;
அணங்கு பார்வதி, தவத்தினுல் அரனுட னமர்ந்தாள் ;
வணங்கு வோம்இவர் மலரடி 'சக்தி ஓம்' எனவே.

புத்த பகவான்

பேதைச்செல்வத்தைப் பிணியெனத்துறந்து, மெய்த்தவமார்
மேதைச் செல்வத்தை மேதினிக் கினிதுறத் தந்தான்,
போதிச் செல்வனும் புத்தனைச், சித்தனை, ஞானச்
சோதிச் செல்வனைத் தொழுதவர் பதங்களைத் தொழுவாம்.

மகாவீர பகவான்

பற்ற றுத்தவன் * பத்தறம் போற்றிய பகவன்,
முற்றும் அன்புரு வானவன், அஹிம்ஸையின் முதல்வன்,
குற்ற மற்றசற் குணநிதி, அதிமகா வீரன்
பொற்றி ருப்பதம் போற்றினுர் புண்ணியம் புகழ்வாம். 100

அசோகன்

புத்தர் பொன்மொழி புவியெலாம் பரவிட நின்றுன் ;
கத்தி யின்றிநற் கருணையால் உயிர்களைக் காத்தான் ;
குப்த மூரியன் குலமணி, அசோகனைப் போலே
இத்த லத்தினிற் சனகன்பின் யாவரே யிருந்தார் ?

புகழ் பெற்ற அரசர்

புஷ்ய மித்திரன், சதகர்ணி, புகழ்பெறுங் கனிஷ்கன்,
விஷ்ணு வர்த்தனன், விக்கிர மாதித்தன், சிமுகன்,
ஹர்ஷன், ஆதித்தன், கிருட்டின தேவன், சுவர்ண
வர்ஷத் தாற்கவி வளர்த்தநம் போஜன்வா ழியவே !

---

* *தூய்மை, வாய்மை, தவம், தியாகம், அடக்கம், நேர்மை, சீர்மை, ஈகை, அன்பு, அருள்*

சித்தாந்தப் பெரியார்

"அன்பெ னும்சிவம், அன்பினுல், அன்பருக் கறிவாம் ;
இன்ப மேயது, தில்லையாம் இதயத்தில் வளரும் ;
துன்பப் பற்றினைத் துடைத்தருட் சுடர்வழி சேர்மின் !"
என்பர் தூயசித் தாந்தத்தின் இணையறு பெரியார். "

திருவடியார்

உப்பும் அப்பும்போற் சிவத்துடன் ஒன்றிய தூயர்,
அப்பர் சம்பந்தர் சுந்தரர் வாதவூ ரடிகள்
ஒப்பு மெய்கண்டார், மந்திரம் உரைத்தமா மூலர்,
செப்பு மின் இவர் திருப்பெயர் சென்மமுய்ந் திடவே !

வாய் மனங்கடந் தருள்வழி வாய்ந்திடும் பொருளே
தோய ருட்சுடர் வள்ளலார், துறவிவெண் காடர்,
தாயு மானமா முனிவர்தந் தமிழெலாம் அமிழ்தம் ;
தூய காதலோ டருந்துமின் பொருந்துமின் சுகமே ! 120

" பத்தி செய்குமின் ! பதமலர் பற்றிவீ டடைமின் !
முத்தி யின்முதல் வன்ஹரி முகுந்த"னென் றேதும்
மத்து வர்உடை யவர்நிமை, மாதவ னன்பர்,
நித்த மும்நம துளமிசை நிலவுக மாதோ !

ஆதி சங்கரர்

" சாதி யற்றது ; சமரசச் சுடரது ; தருக்க
வாத மற்றது ; மோனத்தில் வளரும்சுத் தான்மா
போத மானது ; பொருளது நீ" யெனப் புகலும்
ஆதி சங்கரன் அறிவினுல் ஐக்கியம் அடைவோம்.

ஜாரதுஷ்ட்ரன், கிருஸ்து, முஹம்மது நபி

மிக்க வுள்ளன்போ 'டிறைவனை மேவுமின்' என்ற
சொக்கத் தூயனும் ஜராதுஷ் டிரன் ; சிலு வையிலே
திக்கெ லாந்தொழுந் தியாகத்தீ யெனவளர் கிறிஸ்து ;
மக்க மாநகர் நபிமணி வாழிய மாதோ !

மகான்கள்

தீர ராகிய நானகன், கோவிந்த சிங்கன்,
வீர ராமதாஸ் விரும்புசி வாஜி,ராம்மோஹன்,
ஆரி யர்க்குயி ரான தயானந்தன், ஞான
வாரி யாம்குரு பரமஹம் ஸன்புகழ் வாழ்க !

சத்திய ராஜன்

இனைய வீரரும் இறைவரும் பகவரும் இலகும்
புனிதமாம் அருட் குலத்தினில் இறுதியாய்ப் பூத்தான்—
தனையொவ் வாத்திரு மிகுந்தவன் சத்தியன் என்போன்
இனிய வன்வள நாட்டினை இசைத்திடு வோமால்.

4. புண்ணிய பூமிப் படலம்

*வீரரின் அன்னை, ஞான விளக்கொளி பரவு கின்ற
பாரினுக் கன்னை, பொன்செய் பசுவளத் திருவின் ஓங்கும்
சீரினுக் கன்னை, செங்கோற் செழிப்பினுக் கன்னை, யோக
பூரணர்க் கன்னை, எங்கள் புண்ணிய பூமி வாழ்க !

வரையெலா முனிவர் கூட்டம் ; வனமெலாங் குருகுலங்கள்
திரையெலாம் கப்பலோட்டம்; திசையெலாம் திருவின் காட்சி;
கரையெலாம் செல்வக் குப்பை; கவின்மலர், கனிகு லுங்குந்
தரையெலாம் அமுத வாரி தழைத்துயிர் வளர்க்கு நாடே !

வெய்யிலு மழையுங் காற்றும் விரும்பிய வளமை நல்கச்
செய்யவள் உலாவுஞ் சோலை ; செழுமலர்த் தேனை யுண்டு
மையரி யினங்கள் ஊத, மருதயாழ் முழங்கக் கண்ணன்
கைவளர் முரளி பாடக் கலைநடம் புரியு நாடே !

† இருதொடர் கடலோ ரத்தில் இலகுகன் னியை வணங்கப்
பருவதப் படிக ளேறிப் பனிவரை வீற்றி ருந்தே,
குருசிவ சக்தி யிந்தக் குவலயக் கோயி லெங்கும்
அருளர சாட்சி செய்யும் அரியணை போன்ற நாடே !

திருநதி, ‡விமலை க்ருஷ்ணை, பொன்னி, பெண், வைகைதாம்ர
பருணிகி ழக்கே ; மேற்கே பாய்ந்திடும் சிந்து தப்தி,
நருமதை வளர்க்கும் பச்சை நல்வளத் திருவி னோங்கும்
மருதயாழ் கேட்டுக் கோக்கள் மடிசொரிந்துலாவு மன்றே !

ஆறணி வெளிகள் ; செங்கால் அன்னங்கள் ஆடும் பொய்கை ;
சோறணி பழனம், தெய்வச் சுடரணி திருத்த லங்கள் ;
வீறணி பிரம சாரி விரிகலை பயிலுஞ் சாலை ;
பாரணிக் கழகு செய்து பயனுற விளங்கு நாடே !

---

* *அறுசீர் ஆசிரிய விருத்தம்.* **பண்** *இந்தோளம்.* **சந்தம்** *தானன தனன தான, தனதன தனன தான. கல்யாணி.*

† *மேற்கு, கிழக்குத் தொடர்மலை* ‡ *கோதாவரி*

தத்தை, சிச்சிலி, குயில்கள், சாதகம், கருடன், பூவை,
முத்தமிழ் பயிலும் ஓசை ; மோகனக் குழலும் யாழும்
மத்தளந் தழுவும் ஓசை ; மங்களக் கருவி யோசை ;
வித்தகர் அருட்பா ஓசை விண்ணெட்டப் பண்செய் நாடே !

ஓங்குறு தொழில்க ளோசை, ஓவெனும் கடைக ளோசை,
ஆங்குறு வணிகர் செல்வம் அளந்துபை கட்டும் ஓசை ;
நீங்கறு வண்மை யாளர் நீடிசை பெருகும் ஓசை ;
பாங்குறு விழாக்க ளோசை பரவைபோல் ஒலிக்கு நாடே !

பொன்னெலார் வயல்கள் ஓங்கிப் பூந்திருப் பொழில்கள் ஓங்கித்
தென்னை, மா, பனசம், வாழை,செங்கரும் போங்கி யெங்கும்
கன்னலுந் தேனும், பாலுங் கனிரச வளமு மோங்கி
அன்னம்பா லிக்கு நாட்டின் அழகெலாம் அமுத வூற்றே !

பாரத சமுதாயம்

வேதமும் வாழ்வும் ஒன்றும் ; வீரமும் அறமும் ஒன்றும் ;
காதலும் கற்பும் ஒன்றும்; கண்ணுடன் கருணை யொன்றும்;
போதமும் குணமும் ஒன்றும்; புதுமையும் பண்டும் ஒன்றும்;
நீதியும் அருளும் ஒன்றும் நெறியினிற் பெரிய நாடே !

ஊகமுங் கலையுங் கல்வி யொழுக்கமும், பரமா னந்தத்
தாகமுந் தவமும், வீரத் தணலுற முயலும் வெற்றி
வேகமு முடைய தீரர், விரிநில முதவு கின்ற
போகமுந் துய்ப்பர்; யோகப் பொருளினைப் பொருந்திவாழ்வார்.

புலன்களில் அடக்க மிக்கார் ; புந்தியிற் றெளிவு மிக்கார் ;
உளங்களில் அன்பு மிக்கார் ; உயிர்க்கெலாம் அருளே மிக்கார்.
வளங்களில் வண்மை மிக்கார் ; வாழ்க்கையில் அழகு மிக்கார் !
நலங்களில் இறைவ னுக்கே நன்றிசெய் தொண்ட ரன்னோர்.

ஈதலில் இன்பங் கண்டார் ; இன்பத்திற் கடவுள் கண்டார் ;
மாதரில் அன்னை கண்டார் ; மண்ணிடை விண்ணைக் கண்டார் ;
காதலிற் கலையைக் கண்டார்; கலையினில் வாழ்வைக் கண்டார்;
சாதலும் பிறப்பு மில்லாத் தம்மையே கண்டார் மாதோ !

வெண்மதி, மரைகள் பூத்து, வீங்கிரு கனிக ளேந்தி,
ஒண்கொடி மின்ன லேறி, மயிலென உலாய தன்னூர் ;
மண்ணில மோங்க வந்த மங்கலத் திருவின் மாதர்
கண்ணொளிர் தெய்வக்கற்பின் கனலினைவணங்கு வோமால்

மலைதரு வளங்க ளீவார் ; மருதநல் வளங்கள் ஏற்பார் ;
அலைதரு வளங்க ளீவார் ; அரியகான் வளங்க ளேற்பார் ;
கலைதரு வளங்க ளீவார், காசினிப் புகழை யேற்பார் ;
நிலைதரு ஞான மொன்றி நிகரென வாழுந் தூயர்.

உரிமையைப் பறிப்போ ரில்லை; உரிமையை யிழப்போ ரில்லை ;
சிறுமைக ளிழைப்போ ரில்லை; சீர்மையைத் துறப்போ ரில்லை;
வறுமையை யழைப்போரில்லை; தொழிலினை மறப்போரில்லை;
திறமைசால் அறிவும் வீறுந் திருவுட னேங்கு நாடே.

இரப்பவர் இல்லை. ' இல்லை ' என்பவ ரில்லை ; உள்ளங்
கரப்பவ ரில்லை ; பேதங் காண்பவ ரில்லை ; அன்பைத்
துறப்பவ ரில்லை. வஞ்சர் தொல்லையும் இல்லை. தன்னை
மறப்பவ ரில்லை. உண்மை மறுப்பவ ரில்லை மாதோ !

தருமத்தால் வெற்றி ; யோக சாதன மாகச் செய்யுங்
கருமத்தால் வெற்றி; செஞ்சொற் கவிகளால் வெற்றி; ஆன்ம
வொருமையால்வெற்றிஅன்பின்உள்ளத்தால்வெற்றிதெய்வப்
பெருமையால் வெற்றி யோங்கிப் பிறங்கிய திந்த நாடே !

வீரரின் உயிரே, ஆன்ம வெற்றியின் விளக்கே, இந்தப்
பாரினுக் கெல்லா ஞானப் பரிதியே, சுருதித் தாயே !
தீரர்கள் போற்றி செய்யத் தேவர்கள் வாழ்த் தெடுக்கப்
பூரண யோக சக்தி யாகநீ பொலிக மாதோ !

காசினிக் கெல்லாந் தெய்வக் கதிரொளிக் கனலை நன்று
வீசிநீ வாழ்க, மண்ணில் விண்ணர சிலகச் செய்வாய்.
மாசிலாத் தேவ மாந்தர் மரபினைப் பெற்ற தாயே,
ஆசிதா வுனது சீர்த்தி யணிகவி பொலிய வென்றும் !

5. சித்தி நகரப் படலம்

*அத்தகை நாட்டுடை அரசன், அன்பர்கோன்,
சத்தியன் விளங்கிய தரும பீடமாம்,
சித்திமா நகரணிச் சிறப்பைப் பாடிட
முத்தமிழ் வாணியை முன்னு வாமரோ !

---

* *இப் படலம் கலிவிருத்தங்களா லானது ; துள்ளிசை.*
சந்தம் : *தன்னன, தானன, தனன, தானன. இந்தி சௌபாயி போலப் பாடலாம், ஆதி தாளம்.*
ராகம் : *பியாகு, தோடி, கல்யாணி. வேறிடங்களில் வரும் இதே வகை விருத்தங்களையும் இவ்வாறே பாடுக.*

மண்டல மடந்தையின் மதிமு கங்கொலோ ?
விண்டலத் தேவர்கள் விளங்கும் வீடிதோ ?
பண்ணொடு புதுமையும் பயிலும் தாயகம்
தெண்டிரை முரசதிர் சித்தி மாநகர் !

பூமகள் வாசமோ ? புகழின் வாகையோ ?
நாமகள் வீணையோ ? நாட்டின் உள்ளமோ !
பாமணம், பூமணம் பருகுந் தென்றலில்
ஓமொளிக் கொடிவளர்ந் தோங்கு மாநகர்.

கவினெலாந் திரண்டிதன் காட்சி யானதோ ?
தவமெலாந் திரண்டிதன் தரும மானதோ ?
சிவமெலாந் திரண்டிதன் செல்வ மானதோ ?
புவியெலாந் திரண்டிதன் புகழைப் போற்றுமால் !

புனல்வளம், பயிர்வளம், பொங்கு பூவளம்,
இனமணித் திரள்வளம், இலகு பொன்வளம்,
மனைவளம், மாசறு மைந்த ரின்வளம்,
வினைவளங் கலைவளம் விளங்கு மாநகர். 20

சுந்தர மலர்வனஞ் சொரியுந் தேன்மழை.
சிந்துரக் கனிவளஞ் செழிக்கப் பாயுமால் ;
அந்தரம் வியப்பவோர் அமுதப் பச்சைவான்
பந்தலிட் டிந்நகர் பரவு மாங்கொலோ ?

அம்புவி தனைவளர் அன்னை போலவே,
பம்புநல் அருவிகள் பயிர்வ ளர்த்திடும்
நம்புமெய் யடியவர் நாளும் ஓங்கவே,
சம்புவின் அருளெனத் தழைக்கும் வான்மழை !

நதியொலி, புள்ளொலி, நல்ல பாட்டொலி,
கதிமிகு தொழிலொலி, கல்வி நல்கொலி,
விதியையும் வென்றிடும் வீரர் பாயொலி
மதிமிகு கலையொலி மல்கு மெங்குமே.

* ஐந்தினை ஆளுவர் அந்தண் வீரர்கள் ;
† ஐந்திணை யாளுவர் ஆண்மை வீரர்கள் ;
‡ ஐந்தறங் காப்பரில் லறத்தின் வீரர்கள் ;
|| ஐந்தொழி லாளியின் அன்பு வீரரே !

---

* ஐம்புலன்கள் † மருதம், குறிஞ்சி, நெய்தல், பாலை, முல்லை
‡ யோகம், அறிவு வளர்ச்சி, தொழில் முயற்சி, வீர வளர்ச்சி, பொது நலம்.
|| ஆக்கி, அளித்து, நீக்கி, மறைத்து, அருளும் கடவுள்

அறமெனும் பூமியில் அன்பை நாட்டுவார் ;
உரமெனப் பொருளின்பம் ஊற்றிப் போற்றுவார் ;
குறைவறும் அருண்மலர் குலுங்க முத்திசேர்
நிறைகனி யுண்டவர் நீடு வாழ்வரே !

உண்டியிற் றூயவர், ஊனைக் கள்ளினைக்
கண்டிலர், கனவிலும் காமத் தாற்பிறர்
பெண்டிரை நயந்திலர், பெரிய நோக்கங்கள்
கொண்டவர் வண்டெனக் கூடி வாழுவார்.

அறந்தரும் இன்பமே யின்ப மானவர்;
திறம்பல படைத்தவர் தெய்வத் தீயினால்,
பிறர்துயர் துடைத்திடப் பிரியங் கொள்ளுவார்.
பிறர்நலந் தமதெனப் பேணும் பெட்பினர்.

திண்ணிய தோளினர் ; சித்தம் வென்றவர் ;
புண்ணிய வினையினர் ; புன்மை யற்றவர் ;
மண்ணியல் வாழ்விலு மகிழ்வர் ; சாதனம்
பண்ணிய யோகத்தின் பயனு மெய்துவார்.

நித்தியங் கல்வியும், ஆன்ம நேயமும்,
பத்தியுங், காதலும், பணிவும் போற்றுவார்
சத்தியின் கனலெனத் தருமந் தாங்குவார் ;
பத்தினிப் பெண்டிரின் பாதம் போற்றுவோம் !

சேயிழைக் கிம்மியும் சிறுமை நேர்ந்திடின்,
ஆயிரம் வாட்கரம் ஆர்த் தெழுந்திடும்.
நாயகர் சக்தியை நாற்பங் காக்கிடும்,
தூயவர் கற்பினைத் தொழுது போற்றுவாம் !

மற்புய வீரரின், மன்னர் நீதியின்,
சொற்பொழி புலவரின், சூழ மைச்சரின்,
பொற்புறு செல்வரின் புனித மாதரார்
கற்பெழில் அந்நிலக் காவ லாவதே.

தீரரை அமைத்திடுந் தெய்வச் சிற்பிகள்,
வீரரை யாக்கிடும் வீறு கொண்டவர்,
காரினும் கதிரினுங் கருணை மிக்கவர்
பாரிலே தவவொளி பரவும் அந்தணர்.

மஞ்சணை மணிக்கொடி யாடு மாளிகை,
கொஞ்சிளம் பூவையர் கோட்டி யாழுடன்,
அஞ்சலில் வீரரின் அதிச யக்கதை
பிஞ்சிளம் பிள்ளைகள் பேசப் பேசுவார்.

கார்வரை பொடிபடுங் கனத்த தோளினர் ;
தேர், பரி, கரிசமர் தேர்ந்த சூரர்கள்,
மார்புடைத் தெண்டிசை அதிர மற்செய்வார் ;
‘ யார்நிகர் இவர்க் ’ கெனப் பகைவர் அஞ்சவே !

வேலையும் வடிவினில் வென்ற நல்லிளங்
காளையர், கருத்துற நோக்குங் காதலால்
வாளையங் கண்ணினர் மனதை நல்குவார் ;
கோளையு நாளையுங் குறிப்பர் யாவரே ?

கந்தனும், வள்ளியும் போன்ற காதலர்,
சந்தமும் பொருளும்போற் சார்ந்து வாழுவர்.
இந்திர போகமும், இறைவன் யோகமும்
வந்திவர் வாழ்வினில் வளர்வ தாகுமே.

சுந்தர மாளிகை, சுடர்பொன் முத்தணி
அந்தமில் விருந்தணி, யாவுங் கண்டிங்கே
இந்திரன் உலகமும் இலச்சை கொண்டன்றே
அந்தரத் திரையிடை அவிழ்த்த தேகொலோ ?

கொடைகளு மணங்களுங் கொட்டு மேளமும்,
படைகளின் கதிகளும், பவனிக் காட்சியும்,
அடலரி வீரரின் அணிவி ழாக்களும்,
நடைகளுங் கலைகளு நல்வி ருந்தரோ !

அருந்தவ நிலையங்கள், அறஞ்செய் சாலைகள்,
பெருங்கலை நிலையங்கள், பெண்டிர் சங்கங்கள்,
மருந்தளி நிலையங்கள், மணஞ்செய் மாடங்கள்,
விருந்தளி நிலையங்கள் விளங்கு மெங்குமே !

பயிர்வளம், பசுவளம், பண்ட மாற்றுடன்
உயிர்வளம் பெருகிட வுழைக்கும் வாணிகர்,
இயல்வளம் செயல்வளம் ஏற்றிக் கப்பலில்
அயர்வறக் கடல்கடந் தம்பொன் செய்வரே !

சிலம்பணி யிசைத்திடத் திருந டஞ்செயும்.
பொலங்கொளப் பொன்மணி கிண்கி ணென்றிடும்.
நலங்கெழு சரக்கினம் நாகம் ஊர்ந்திடும்.
கலங்கெழு கடலெனக் கனைக்கும் ஆவணம்.

வேளாளர் பெருமை

மன்னுயிர்க் குயிர்தரும் பயிர் வளங்களைப்
பொன்னினும் போற்றுவர், புவியை ஊட்டுவார்.
மன்னவர் மதித்திட மாண்புற் றோங்கினர்
இன்னிய உழவரின் ஏரைப் போற்றுவாம் !

சாத்திரக் கூச்சலும் சமயச் சண்டையும்
கோத்திரப் பொய்களுங் கொள்வ தில்லையால்,
சூத்திரர் பிராமணர் என்னுஞ் சொல்லிலை ;
ஆத்தும நேயத்தால் அனைத்தும் ஒன்றரோ !

விலகறு மெய்வழி விரும்பிச் செல்லுவார்
' வில ' கென யாரையும் வெம்மை செய்திடார்.
உலகுயர் ஆலயம் ; உயிரின் கூட்டமே
இலகுயர் கடவுளென் றிதயத் தெண்ணுவார்.

இனியநல் லிசையினில் எழுத்தின் கூட்டம்போல்,
தனிவினை தாங்கியும் சங்க மாகவே
மனிதர்கள் வாழ்ந்தனர். பலா மரத்திலே
கனிவளர் பான்மையைக் கண்டுள் ளொன்றியே. 120

கண்ணிலத் தாய்அருட் கைகள் அன்னவர்,
எண்ணறு தொழிலினர், இதயம் ஒன்றுளார்.
புண்ணியர் கண்ணியர் ; பொறுமை நோயிலார்.
திண்ணியர் ஆத்தும தீர ராவரே.

பழரசந் தேனுடன் கலந்த பான்மையோ !
குழலுடன் வீணையும் குலவும் இன்பமோ !
அழகிளம் பெண்மையும், அறிவின் ஆண்மையும்
பழகிடும் பண்பினைப் பகர லாகுமோ ?

மண்ணக மிலையிது விண்ணை மானுமால் ;
விண்ணிலை விண்ணையும் வென்ற வாழ்க்கையால்.
புண்ணிய நதியணி பொன்னின் மாநகர்
கண்ணெனக் காத்தவன் அரசைக் காண்பமால். 132

6. சத்தியன் அரசியற் படலம்

'ஆதி மன்னர் அமர்ந்த அரியணை
சோதி சுந்தரி யிந்திரை தன்னுடன்
பாதி தாங்கிடப் பாருயிர் தன்னதாய்
நீதி தாங்கி நிலவினன் சத்தியன்.

---

* கலி விருத்தம்:— *கல்யாணி ராகம்-ஆதி தாளம்; சந்தம்: தான தன்ன—தனந்த—தனதன.*

† செங்கதிர் முகத்தான் ; ஞானத் தீக்கனல் விழியான் ; கோடி
சிங்கத்தை வென்ற வீரத் திண்ணிய புயத்தான் ; ஈகை
தங்குநீள் கரத்தான்; சாலத் தயைமிகும் உளத்தான்; வெற்றி
பொங்குயர் புகழான்; மக்கள் போற்றிடு மன்னன் மாதோ !

அன்பரி யணையாய், ஓங்கும் அறமதே செங்கோ லாக,
மன்பதை யுள்ளம் போற்று மாட்சியே மகுட மாக
நண்பருட் குடையாய், நாட்டு நன்மையே நாட்ட மாகப்
பண்புடன் அரசு செய்தான் பழுதிலா வாய்மை யானோன்.

பொறையிலே **தருமன்** ; வீரப் போரிலே **விசயன்** ; ஞான
நிறைவிலே **சனகன்**; செய்ய நெறியிலே **அசோகன்**; ஆட்சி
முறையிலே**பொற்கை**; நல்லமுயற்சியில் **வளவன்** அன்னோன்
இறைமைசேர்திறமை தன்னில் **இந்திரன்** போன்றோன் மாதோ!

கல்வியிற்பெரியான்; பொங்குங்கருணையில்வானைப்போன்றோன்;
செல்வியின் இருக்கை யாவான்; சீர்த்தியில் இராமன் போன்றோன்;
அல்லலிற் கைகொ டுக்கும் அன்பினில் அன்னை போன்றோன் !
பல்லுயிர் உலகம் வாழ விளங்கிடும் பரிதி யன்னோன் ! 20

குடிகளிற் குடியே யாவான் கோக்களிற் கோவே யாவான் ;
அடியவர்க் கடியா னுவான் ; அற்றவர்க் கரும்பொன்னுவான்
கொடியவர் கால னுவான் ; குவலயத் தோழ னுவான் ;
முடிவிலா வுயிரின் உள்ளம், உளத்துடிப் பானுன் மாதோ !

அன்னவன் காதல் அன்னம், அமுதவாய்க் குமுதச் செங்கண்,
மின்னிடை, அருணச் சோதி மிளிர் தரும், அழகுத் தெய்வம்,
மன்னறத் துணைவி, நல்ல மனையறத் துணைவி, 'எங்கள்
அன்னை' யென் றுலகம் போற்றும் அருங்குணச் செல்விமாதோ

பாலுடன் தேன்க லந்த பான்மையர், வாய்மை யாளர்
நாலுடன் ஐந்தும் போற்றி, நல்லன செய்தார் ; அன்னோர்,
வேலுடன் வெல்லும் வெற்றி யதனினும், விரும்பி அன்புக்
கோலுடன் கொண்ட வெற்றி குடிகளுக் கினிய தன்றே.

கற்றறி புலவர், காலங் கணக்கிடங் கருவி, செய்கை
முற்றறிந் தொற்ற றிந்து முடிபுரை சூழ்ச்சி யாளர்,
விற்றறி யார்தம் வாழ்வை, வீணுரை யறிகி லாதார்,
சுற்றுல கியல்ப றிந்து தொண்டுசெய் யமைச்சர் மாதோ !

---

† *அறுசீர் விருத்தம்—கல்யாணி ராகம்; சந்தம்: தன்னன தனன தான தானன தனன தான.*

வடுவறு காட்சி யாளர், மனத்தினைக் கரவார், நல்ல
விடுதலை வீரர், நாளும் பொதுநல விரதம் பூண்டார்,
கெடுதலைச் செய்யார், யாரும் கீழென நினையார் ; உண்மை
நடுநிலை யாளர் ; வேந்து நம்பிய தொண்டர் மாதோ !

முந்தர சேத்தும் ஆசான் பாரத முனிவ னுவான்.
மந்திரத் தலைவன் வாய்மை வடிவெனும் சித்தி மானும்
வெந்திறற் சேனை முற்றும் விஜயனே நடத்தி வென்றான்.
தந்தனன் சுமதி கல்வி. சதுரனுந் தொழில் வளர்த்தான்.

வங்கர், கோசலர், பாஞ்சாலர், மாரதர், அரச புத்ரர்,
அங்கர், கூர்ச் சரர்,கலிங்கர், ஆந்திரர், தமிழர், சேரர்,
சிங்கர்,கன் னடர், நேப் பாளர், சிந்தியர், சோளர், சீனர்,
தங்கிடத் தனது நீழல் சத்தியன் அரசு செய்தான்.

பலகிளை யாறு பாய்ந்து பயிர்களை வளர்ப்பதே போல்,
உலகுயிர் வளர்க்கும் அன்னோன் ஓங்கிய செங்கோ லாட்சி.
இலகிடும் இரவி தன்னிற் கதிர்க்கணம் இணைந்த தொப்ப
நிலமொழி யாளர் நீதி நிருபனைப் பொருந்தி வாழ்ந்தார்.

ஒன்னலர், கள்வர், மாக்கள் ஒருதுயர் இழைத்தி டாமல்,
இன்னிய பரிச னத்தார் இதமுடன் பணிகள் செய்ய,
தன்னுயிர் பெருக்கி, மாந்தர் தம்முயிர்க் குயிராய் வைத்து,
மன்னனுந் தொண்ட னாக மன்னுயிர்ப் பணிகள் செய்தான்.

பூவினுக் கமுத மீயப் புயல்அலை முகப்ப தேபோல்,
தேவையி னளவு செல்வர் திறைகளை யேற்றுப் போற்றிக்
காவலும், சுகமும், சீரும், கல்வியும், தொழிலும் ஓங்க
மேவுயிர் உடலைப் போலே வேந்தனும் வேந்து செய்தான்.

கற்றவர் சொல்லைக் கேட்டுக் கடன்முறை செய்யு மன்னன்,
ஒற்றரால் அறிந்துத் தானே உருக்கரந் தேகிக் கண்டும்,
குற்றமுங் குணமுந் தேர்ந்தே குறைகளை யுடனே போக்கி
உற்றவர்க் குதவி செய்தான் உலகினுக் கினிய னானன்.

குருகுலக் குமரர் கல்வி, கொற்றமெய் வீரர் வீரம்,
திருவுடை அந்த ணாளர் செம்மை, நன் மாதர் கற்பு,
பெருகுவே ளாளர் சேமம், வணிகரின் செல்வம் ஓங்கத்
தருமமே பொருள்கொடுக்கத்தழைத்தது மன்னன் செங்கோல்.

ஆவியும், உடலும், உள்ளும், அறம், பொருள், இன்பமாகத்
தேவியல் வாழ்வை நோக்கிச் செழித்திடும் சமுதா யத்தைக்
கோவியல் வழுவா தாண்ட கொற்றவன் கதையைச் சொல்ல
நாவினி லிருந்து வாணி நல்குக கவிதை வெள்ளம்.

7. தியானக் காட்சிப் படலம்

சத்தியன்

தேவி சக்தியின் அருளினுற் சிந்தையி லுதித்து,
நாவி லோடிய நற்கவி வெள்ளம்போற் செழித்த,
காவி லோடிய வோடையிற் கனி நகை புரிந்தான்
பூவி லாருயிர் வளர்த்திடும் புண்ணியக் கதிரோன் !

ஞால சுந்தரி நாண்மல ரணியுடன் பொலிந்தாள்
கோல மாதவன் குழலெனக் கொஞ்சிட வசந்தம்,
காலை பூத்தது ; கமலங்கள் பூத்தன ; மன்னன்
வேலை பூத்தது ; விழித்தது வினையுடல் வாழ்வே !

புனித மாதவர் உளமெனத் தெளிபுன லாடி,
இனிய புத்தணி யணிந்துநல் லியற்கையின் வனப்பில்,
பனிம லர்நகும் பசுங்குடி லமர்ந்துநங் கோமான்
கனிம னங்கசிந் துருகிடக் கடவுளை நினைத்தான் :

"வான கத்தில் வளர்ந்திடுஞ் சோதி நீ !
தேன ளாவு மலரிற் சிரிப்பு நீ,
நானென் றுள்ள நடு, மழை மின்னென
மோன மாக நடஞ்செயு மூர்த்தியே !"

"மலைய ருவிவ ளர்வதுன் மாமறை ;
கலைய ருவிவ ளர்வதுன் கற்பனை ;
அலையி லாடுவ துன்பர மானந்தம் ;
தலைவ னேயருள் பாலிக்குந் தந்தையே !"

"உலக மெல்லாம் ஒருகுல மாகவே
கலக மின்றி யுனைக்கலந் தோங்குக !
நலிக தீவினை ; நல்லன யாவுமே
பொலிக வுன்னருள் போற்றி, இறைவனே !"

இந்திரை

இன்னவா றிறைஞ் சும்புவி வேந்தனை,
மன்ன ரசிவணங்கிட மங்கலப்
புன்ன கைபொலி யப்புனி தத்திரு
மின்ன மின்ன மிளிர்ந்து நெருங்கினுள்.

மயில்க ளாடின ; மாங்கனி வாயிளங்
குயில்கள் பாடின ; கொஞ்சின கிள்ளைகள்.
பயிலும் பூவைகள் பாய்ந்தன ; பச்சிளம்
வெயிலு கந்து விலங்கினந் துள்ளின,

அன்னக் கூட்டம் அணிநடை கற்றுற,
வன்ன மானினம் வாட்கண் வியந்திட,
பொன்வண் டூதிடப் பூமுகங் கண்டதும்,
மென்கை தொட்டதும் பன்மலர் மேவிட.

இந்திரை, சத்தியன்

கொடிக ளோடிக் குளிர்பசும் பந்தலில்,
அடிகள் வைத்தனள் அன்புடன் இந்திரை ;
“படியை யாளும் பராசக்தி யன்னையின்
வடிவமே” யென மன்னவன் போற்றினான்.

அருமை யாகும் உயிரதி னின்னிய
வுரிமை நாதனை யொண்சுடர்க் கற்பினாள்,
ஒருமை யன்புடன் போற்றி யுளமிசை,
திருவ டியில் அருச்சனை செய்தனள்.

காதல் வாழ்விற் கடவுளைக் கண்டிடும்,
ஓத ரியவு யர்தவ யோகத்தின்
சாத கர்சிவ சக்தியென் றோரணை
மீத மர்ந்து தியானத்தின் மேவினார்.

பத்தி யோங்கிடப் பார்வையுள் ளோங்கிடச்
சித்த மூன்றித் தியானம் நிலைத்திடச்
சுத்த சக்திச் சுடரை வணங்கினார்
நித்த நித்த நினைத்தது கூடவே.

இதய மொன்றினர் : இன்னுயிர் ஒன்றினர் ;
மதியு மொன்றினர் உச்சி மரைமிசை,
பதியை யொன்றினர் பாய்கடல் வெள்ளத்தை
நதிக ளொன்றிய நன்மையைப் போலவே.

அந்த வேளை யிறைவனிவ் வன்பரின்
சிந்தை யாகுந் திருக்குறிப் பீந்தனன் ;
இந்தி ரையுள் இலங்குமக் காட்சியை
முந்து வேந்து முகத்தினிற் கண்டனன்.

“என்னுயிர்க்கமுதே, கற்பின் எழில்பெறும் அழகே, இன்றுன்
பொன்முகம் பூரிக் கின்ற பொருளுரை” ! யென்ன வேந்தன்
“ மன்னவா ! மனத்தி னுள்ளே மங்கலக் காட்சி கண்டேன் ;
உன்னரும் உவகை யாலே யுதித்ததப் பூரிப்” பென்றாள்.”

'' பங்கய முகமும், அன்பு பாய்ந்தொளிர் மனமும் பூத்த
மங்கலக் காட்சி யென்ன வென்'' னென வினவ மன்னன்,
செங்கதிர் முகத்தை நோக்கித் தேன்மொழி தேர்ந்து, நெஞ்சிற்
பொங்கிய மகிழ்வின் ஊற்று வாய்வழி பொழியச் சொன்னாள் :

'' நானெனும் உணர் வொடுங்கி, நாதமும் ஒடுங்கி, யாழ்ந்த
மோனத்தி லெனுட்புகுந்த முச்சுடர்ப்பொலிவென்சொல்வேன்!
ஞானத்தி னெல்லை கண்டேன் ; ஞாலத்தி லெங்கு மின்ப
வானத்தின்அரசைக் கண்டேன்; மகிழ்வினுக்கெல்லைகாணேன்!

'' பொம்மென வுலக மெல்லாம் போரிருள் படரக் கண்டேன் ;
வெம்மன வரக்கர் கூட்டம் வீறிட்டுப் பொருதக் கண்டேன் ;
செம்மையாந் தருமத் தாயின் சிந்தனை முகத்தைக் கண்டேன்;
'அம்ம' வென் றஞ்சி நின்றேன். அகன்றதக் கொடிய காட்சி !

'' மலர்தலைக் காலை சாந்த மகிழ்வுறக் கதிர்கள் வீசிப்
புலர்சுட ரொன்று கண்டேன் ; புதுயுகம் பிறக்கக் கண்டேன்.
பலர்தவம் புரிந்த நல்ல பயனிதென் றுளத்திற் கொண்டேன்
உலகைக்கண் விழித்துக்கண்டேன், உம்முகத்துவகைகண்டேன். 80

'' ஈதென தருமைக் காட்சி'' யென்னுமுன், மன்ன னுங்கே,
காதலின் கனியைக் கண்டேன் ; கடவுளின்கருணை கண்டேன்;
பூதலம் வாழக் கண்டேன் ; புதல்வனை யினிது கண்டேன் ;
ஆதலி னருளால் இன்றென் அகக்குறை யகன்ற''தென்றான்.

''மாசிலா மணியே, சித்தி மரபினை வாழ வைத்த
தேசுலாங் கொடியே, கற்புத் தெய்வமே, திருவே, வாடா
வாசநாண் மலரே, யுன்றன் மங்கலக் காட்சி யாலே
காசினிக் கமுத மாகுங் கனியொன்று பழுத்த'' தென்றான் 88

8. முனியுரைப் படலம்

பாரத முனிவர்

இமயமுஞ் சிறிய தென்றே யேறிடப் புயங்கள் விம்மிக்
கலமக்கண் ணிரண்டு மின்பக் கதிர்களால் விரிய, உள்ளம்
விமலனை யெண்ணி யெண்ணி வியந்திடும் அந்த வேளை,
சமதம சித்தி பெற்ற தவமுனி வரனும் வந்தான்.

மலையின் மாண்பினன், மடங்கலின் மொய்ம்பினன்; ஆன்மக்
கலையின் ஆழியான் ; ஞானமாக் கனல்விரி கண்ணன் ;
நிலவு செங்கதிர் மேனியான் ; நீளுயர் மின்னல்
உலவு கின்றதை யொத்தனன், உத்தம முனிவன்,

சிறக டித்தன ; தீங்குர லார்த்தன ; மீது
நறும லர்களை யுதிர்த்தன நளிர்வனப் புட்கள்.
உறுக வென்றன கன்றுகள் உயர்வுறத் துள்ளி,
நிறைத வத்தினர் உயிர்க்கெலா நேயரே யன்றே !

அருமுனி வரவு கண்டாங் கரசனும் அரசி யாரும்
வருகவென் றுவகை கூறி, மணித்தவி சிருத்தி, வாசத்
திருமலர் தூவிப் போற்றிச் சேவடி பணிந்து நின்றார் ;
குருமுனி மனங்கு ளிர்ந்து நன்மொழி கூறி னானல் ;

முனிவர்

"ஆன்றநல் லறமுஞ் சீரும் அருளொடு பொருளு மோங்கி,
வான்றகு புகழ் சிறக்க, வையகம் புரந்து வாழ்வீர் !
கோன்றகு முறைசெய் யுங்கள் குலமுட னுலகும் வாழத்
தோன்றலைப் பெறுவீர் இன்பத் தூயனின் கருணை யாலே !"

சத்தியன், இந்திரை

"எனைத்தும் உன் அருளால்" என்றே இந்திரை கண்ட காட்சி
அனைத்தையும்அரசன்சொல்லிஅதன்பொருள் இயம்பக்கேட்டான்.
இனித்தமென் முறுவல் பூத்து, மனங்குவிந் திருந்து சற்றே,
தனித்தவக் கொழுந்திவ் வாறு சாற்றினான் சாந்த மாக :—

முனிவர்

"நல்லதுந் தீயதும் நட்பும் வெம்பகைத்
தொல்லையும் தொடர்ந்துறுந் தொல்பெ ரும்புவி ;
அல்லல்செய் அரக்கரிங்(கு) அமரத் தன்மையைக்
கொல்படை கொண்டினிக் கொடுமை செய்வரால்."

வீரியச் செருக்கினால் வெய்ய செய்திடும்
போரியல் அரக்கராம் பொய் யிருள்கெடச்
சூரியன் போலருட் சோதி மைந்தனுன்
பேரியற் குலத்தினிற் பிறங்கு வானரோ !

மாற்றுவன் பழையன ; மற்று நூதனந்
தோற்றுவன் ; புதுயுகந் துலக்கி யாளுவான் ;
வேற்றுமைச் சமர்களை வேரொ டெற்றுவான் ;
போற்றுவன் புண்ணிய பூமி யின்புகழ் !

"இதுபொரு ளிந்திரை காட்சிக் கா" மெனப்
பொதுமறை முனிவரன் புகலக் கேட்டதும்,
புதுமகிழ் வெய்தினர் ; போற்றி செய்தனர் ;
முதுதவன் பதமலர் வணங்கி முன்னின்றார்.

"முனிவனே போற்றி, ஜீவன் முத்தனே, யுலகிற் கெல்லாம்
இனியனே போற்றி, யெங்கள் இறைவனே போற்றி" யென்று
பனிமலர் சொரிந்து பாதம் பணிந்தவுள் ளன்ப ருக்குப்
புனிதநல் லாசி கூறிப் போயினன் புரையி லாதான்.

என்னுடை மரபும் இந்த வுலகமும் இனிது வாழப்
பொன்னெளிர் புனித மைந்தன் பொலிவனென் றுவகை பூத்து
மன்னவன் அறங்கள் செய்தான்; மகிழ்ந்தனர்குடிகளெல்லாம்.
தன்னிக ரற்றோன் வந்த கதையினிச் சாற்று வோமால். 48

9. சுத்த ஜனனப் படலம்

*இலங்கு செய்யவள் போன்றநல் லிந்திரை,
விளங்கு வெண்கலை வாணியை யொத்தனள்
பளிங்குக் கூட்டிற் பகலவன் போலொளி
துலங்கு சேயைச் சுமந்த திருவினால்.

மூன்று காலமு முற்ற வுணர்ந்தனள் ;
ஆன்ற வேதப் பொருளறிந் தோதினள்—
சான்ற மாதவர் சாற்றிடும் பூரணத்
தோன்றல் வந்து துலங்கிய மாண்பினால்.

மூல சக்தியின் முத்து முகமெனக்
காலை வாணகை காட்டி யெழுந்தது.
சோலை மாருதஞ் சோதி யுதயத்தை
ஞால மெங்கு நவின்றதந் நாளிலே.

முழவும், பாடலும், வீரர் முரசமும்,
குழலும் வீணையுங் கொஞ்சிளஞ் சேய்களின்
மழலையும் சுப மங்கல வேதமும்,
எழுமி னென்றிசை பொங்கின வெங்குமே.

பூக்கள் ளுண்டு புலம்பின வண்டினம் ;
பாக்க ளுண்டு பறந்தன புள்ளினம் ;
கோக்கள் பொங்குங் குடமுலை கொட்டின ;
மாக்க ளெல்லாம் புதுமகிழ் வெய்தின. 20

*கலி விருத்தம்—*துள்ளலிசை ; சந்தம் : தனன தானன தானன தானன ; சாப்பு தாளம் ; பிலகரி, அசாவேரி ராகங்கள்*

பத்தி ஞானம் பரிவரு ளீகையால்
ஒத்தி யல்பினில் ஒன்றினர் மாந்தர்கள் ;
சத்திய யுகம் வந்ததென் றுத்தமச்
சித்தர் செப்பினர் சேம வுரைகளே.

வெற்பி னூற்றிற் படிந்திள வேனிலின்
பொற்ப ணிந்த புதுமலர் கொய்துடன்,
கற்ப ரசிக ணவனைக் கண்டுபின்
இற்பு குந்ததும் இன்பமொன் றெய்தினுள்.

பொன்னின் காலையிற் பூத்த பரிதிபோல்,
உன்னு முள்ளத் தொளிர்தவத் தீயைப்போல்,
அன்னை தாங்கும் அருட்சுடர்ச் சோதியான்,
மின்ன லென்ன மிளிர்ந்து பிறந்தனன்.

பாடி ஞர்திருப் பாவையர் பாசுரம் ;
ஆடி ஞர்பர மானந்தங் கொண்டவர் ;
ஓடிஞர் உரைத் தார் அர சன்வரக்
கூடி ஞர் ; சுப வேளைகொண் டாடிஞர்.

சத்தியன்

*விரைந்துதன் குலமொளிர் விளக்கை வேந்தனுங்
கரந்தனி லேந்திஞன் ; களிசி றந்தனன்,
சிரந்தனை மோந்தனன் ; செல்வ முத்திட்டான் ;
கரந்தனைக் கொஞ்சினன் ; காதல் விம்மிஞன். 40

" பொங்குக பூவினிற் புனித ஞட்சியே ;
மங்குக தீவினை, மறைக வெம்பகை ;
தங்குக சத்திய தரும " மென்றுவான்
மங்கல துந்துமி வழங்கிற் றெங்குமே.

வசையறு வரதனும் வந்த வாசகம்
திசைதிசை பரவலுஞ் செய்ய நல்லவர்
விசைபெற வந்தனர், வேந்தைக் கண்டனர்
இசைகளைப் பொழிந்தனர் இறைவன் வாழ்கென.

பாரத முனிவர்

மலர்விழி, மலர்முகம் மலர்ந்த புன்னகை,
மலர்க்கரம் மலர்ப்பதம் மலரின் மேனியால்
இலகிடும் புனிதனை இனிய மாமுனி
உலகள வுவகையி னுவந்து போற்றினன்.

* **சௌபாயி** *போல்* ; *ஆதி தாளம்* ; *பியாகு, நாட்டைக் குறிஞ்சி ராகங்கள்* ; **சந்தம்** : *தன்னன, தானன, தனன தானன.*

"கண்ணினில் அறிவொளி கனலும் கண்ணனே,
எண்ணரு மாதவர் ஏத்துந் தீரனே,
மண்ணக வாழ்வினில் வாய்க்கப் பெற்றவர்
புண்ணியம் புண்ணிய" மென்று போற்றினன்.

ஓடினர், உரைத்தனர் ; உரைத்த யாவர்க்கும்
சூடினர் மாலைகள் ; சுகந்தம் பூசினர் ;
கூடினர் ; அரியநன் கொடைக ளீந்தனர் ;
நாடிய பொருளெலா நயந்த தென்றனர்.

பாலொடு, நெய்தயிர், பாய சங்களும்,
கூலமுங் கனிகளுங் கொம்புத் தேன்களும்,
ஏலுநர் ஈபவர் இருவர் கைகளுஞ்
சாலவுந் தழைத்திடத் தருமஞ் செய்தனர்.

கேட்டவர் கேட்டவர் கிளர்ச்சி கொண்டு,தம்
வீட்டிலே மகக்கனி விளைந்த தாமெனக்
காட்டின ரானந்தக் கண்ண ருவியே
பாட்டுடன் அணிபெறப் பவனி வந்தனர்.

''மங்கல மாகுக மாந்தர் வாழ்வெலாம் !
பொங்குக பொன்மழை ! புலமை யோங்குக !
நங்குறை தீர்ந்தநாள் !'' என்று மன்னவன்,
எங்கணுந் தானங்கள் இனிது செய்தனன்.

10. திரு நாமப் படலம்

*செய்கடன் செய்முறை செய்து மன்னனுந்
துய்யநற் பெயரினைச் சூட்ட வேண்டியே,
பொய்யறு புலவர்கள் பொருந்தும் ஆலயம்
தெய்வநற் சந்நிதி திகழ நின்றனன்.

பொன்னிடை யரதனம் பூத்த தென்னவே,
அன்னைகை விளங்கிடும் அமுதச் சேயினை,
உன்னத முனிவரும், உலகு போற்றிடும்
மன்னரும், வீரரும் வாழ்த்தி நின்றனர்.

இம்பரும் உம்பரும் இனிது வாழவே
அம்பல நடஞ்செயும் அருளி றைவனை
என்புநெக் குருகிடும் இதயக் காதலால்,
அன்பர்நன் மலர்சொரிந் தடிப ணிந்தனர்.

---

*சுருட்டி. ராகம், ஆதி தாளம்.

அன்பர்

" வானெனப் ,புவியென, வடிவு கொண்டுலாம்
ஊனென, வுயிரென, வுயிரு ளேவளர்
நானென நடுநிலை நின்ற சாட்சியே,
தானென நிலவிடுந் தனி முதல்வனே ! "

" ஊட்டியும், உறக்கியும், உலக நாடகம்
ஆட்டியும், பிறவியின் அனலிற் பொன்னென
வாட்டியும், உயிரினை மாச றுத்தொளி
காட்டியும் அருளுவை கருணை வள்ளலே ! "

சத்தியன்

" உனதரு ளிச்சையே உலகக் கோயிலில்
இனிதுற வுயிர்க்கெலாம் இன்ப மோங்கவே,
எனதருஞ் சேயினை யேற்றுப் போற் " றெனப்
பனிமலர் தூவினன் பாரின் மன்னனே.

முனிவர்

கருத்திலுங் கண்ணிலுங் களிது லங்கிடத்
திருத்தகு சேயினைச் செங்கை யேந்தியே,
நிருத்தங்க ளாடிடு நிமலன் பாதத்தில்
இருத்தினன் முனிவரன் இசைமு ழங்கவே.

சத்தியன்

" அயர்வறு தவக்கனல் அருளும் யோகியே,
உயர்குல விளக்கினுக் குவந்த சீர்பெறும்
பெயரினை யிதுவெனப் பேசி யாள் " கென
வியனுறு முனிவனை வேந்து நோக்கினன்.

முனிவர்

" சித்தியின் மரபொளி, திருவி ளேங்கிடும்
சத்தியன்-இந்திரை தந்த நல்லொளி,
அத்தனின் அருளொளி, ஆத்மச் சோதிபோல்,
' சுத்த ' னென் றுலகெலாம் துலங்கி வாழ்கவே."

" சுத்தமே கடவுளின் சொரூபம் ; ஆத்தும
சுத்தமே கடவுளைத் துலக்குஞ் சோதியாம் ;
சுத்தமே சுகமெனச் சொல்வர் ; ஆதலால்
சுத்தனே யிவனெனச் சொல்லு வாமரோ ! "

எல்லையில் அருந்தவன் ஈதி யம்பலும்,
பல்லிய முழங்கின, பரந்த தீம்புகை ;
மல்லிகை சண்பக மாரி பெய்தன ;
நல்லிசை முழங்கின ஞால மெங்குமே !

அன்பர்

மன்னவன் மகிழ்வுற மக்கள் யாவரும்,
" தன்னிக ரற்றதோர் தருமக் காவலா,
உன்குல மொன்றல ; வுலகில் வாழ்ந்திடும்
இன்னுயிர்க் கின்பமே இவ " னென் றேதினர்.

தவ முனிவர்கள்

" வானர சாட்சியிம் மாநி லம்பெறும் ;
ஈனவெவ் விருட்பகை யின்மை யாகிடும் ;
ஞானமா ஞாயிறு போலும் இன்னவன்,
வான் புகழ் வாழ் " கென முனிவர் வாழ்த்தினர்.

வாழிய சத்தியன் ! வாழி யிந்திரை !
வாழிய வையகம் வாழ வந்தசேய் !
வீழிய தானவர் ; விளங்கு நல்லருள்
சூழிய வுலகெலாம் சுத்த மங்களம் !

சோதிடர்

நாளொடு கோளையு நன்கு பார்த்தவர்,
" வாளொடு வென்றவர் வெற்றி வெற்றியோ ?
தாளொடு மூறிடுந் தவத்தின் சக்தியால்
ஆளுவன் உலகெலாம் அமரச் சே " யென்றார்.

" பொன்னினும் அரியது புதனென் றேதுவார் ;
மின்னிய மீன்களில் மூலம் மேலென்பார்
கன்னிகை மேலென்பார் கணித்த ராசியில்
இன்னவன் பிறவியின் ஏற்ற மென்சொல்வோம் !

" ஆவணி மூலத்தில் அவத ரித்தவன்
பூவணி யாகவே பொலிவன் ; புண்ணியர்
நாவணி யெனத்திரு நாம மோதுவார் ;
பாவணி புலவர்கள் இவனைப் பாடுவார்."

சத்தியன்

பெரியவர் இனையவை பேசக் கேட்டலும்,
அரியபே ரின்பம்வந் தடைந்த தாமென,
வரையறப் பொன்மழை வழங்கித் தானங்கள்
புரிந்தனன் உலகினைப் புரக்குந் தந்தையே.

கவிதையுங் கல்வியுங் கலையும் வீரமும்,
நவையறு தொழில்களு நாளு மோங்கவே,
அவரவர்க் கேற்றவை யள்ளி யீந்தனன்
தவம்பெறு மைந்தனைத் தந்த தந்தையே. 76

11. குழந்தைப் படலம்

*கண்ணே, மணியே, கனகக் கிளியே, கனியே, செம்
பொன்னே, புகழின் பொலிவே, புனிதத் தவமீன்ற,
விண்ணே, யமுதின் விளைவே, யழகே, யிசையாழின்
பண்ணே, யருளின் பயனே, வியனே, பகவானே!

சத்திக் கனியே, சாந்தக் கனியே தவமோங்கும்
சித்திக் கனியே, செல்வக் கனியே, செகசீவன்
முத்திக் கனியே, முருகார் திருவே, ஒருமுத்தம்!
சுத்தக் கனியே, சோதிக் கனியே, சுகவாழ்வே!

இன்னன தீஞ்சொல் ஏந்தி யிளஞ்சேய் இனிதான
புன்னகை பொங்கும் போதுள மெல்லாம் புளகிக்கும்;
அன்னை 'கை வீசம் மா' வென வீசும் அழகாக;
தன்னிணை யில்லா இன்பம் வளர்சேய் தருமின்பம்!

அம்புலி கூவும்; அம்மையப் பாவென் றழகாகப்
பம்பி நடக்கும்; பைங்கிளி போலத் தமிழ்பேசும்;
பொன்பொலி காலை பூத்து வசந்தம் அசைபூவின்
கொம்பொடு கொஞ்சும்; கன்றுகள் பின்னே குதித்தோடும்.

பன்மணி மாலை மின்னொளி பாயப் பரியாடும்;
கிண்கிணி கொஞ்சப் பந்தை யுருட்டும்; கிளர்புள்ளின்
பண்க ளிசைக்கும்; பச்சை மயில்போல் நடமாடும்;
கண்மணி நோக்கிக் "கண்ணனிதோ பார்" எனப்பொங்கும்.

செங்கதிர் காணப் பொங்கி நகைத்துச் செயவென்னும்;
திங்களை யன்புத் தீங்கனி யென்னுந்; திசையெட்டுந்
தங்க வியற்கைத் தாயெழில் காணும்; தனி நின்றே
"எங்குமென் அன்னை எங்குமென் அப்பன்" எனஓதும்.

---

*கலி நிலைத்துறை. சந்தம்: *தன்னத் தனனா தனனத் தனனா தனதானா; அல்லது தன்னன தானா தந்தன தனனா தனதானா, ஆதி தாளம்; நாட்டை, மோகனம்—ராகங்கள்.*

இந்திரை சொல்லும் இன்கதை கேட்கும் ; இருகையால்
மந்திர மென்று மத்தை யலைக்கும் ; மறுராமச்
சந்திரன் என்று வில்லை வளைக்கும் ; சகசாம
சுந்தர னென்றுப் பூங்குழ லூதுந் துவர்வாயால்.

பூமியை நீவும் ; பூங்குடி லாக்கும் ; பொதுவான
சாமியை நாட்டும் ; தண்மலர் தூவும் ; சிவசக்தி
ஓமென வோதும் ; உற்ற துணைவர் மகிழ்வெய்தத்
தேமது ரச்செஞ் சொற்கதை சொல்லுந் திருவோங்கும் !

தேரணி யாக்கித் தோழரோ டாடுந் திருநாளால்
ஊரணி யாக்கும், கொட்டு முழக்கும், உலகாளுந்
தோரணை காட்டும் ; துட்ட ரடங்க நலமெல்லாம்
பூரண மாகப் போற்று மிளஞ்சேய் புகழோங்க !

வீரன் இருந்தான், வீரன் எழுந்தான், கரம்வீசி
வீரன் விரைந்தான், வீரன் மொழிந்தான், விறலோங்கும்
வீரன் வளர்ந்தான், வீரன் உயர்ந்தான் ; இனியெய்தும்
வீரன் பொலிந்தான் வீரமணிச் சேய்விளையாட்டில். 40

* பாரினுக் காருயிர் போன்றநம் பாலனைச்
சீரிளஞ் செல்வனைச் செஞ்சுடர் வண்ணனை,
நேரினிற் கண்டவர் நெஞ்சமின் புற்றனர்
காரினைப் பைம்பயிர் கண்டதைப் போலவே.

" முத்து தா, மொஞ்சியுண், மோகனக் கண்ணனே,
சித்தனே, சித்தியின் செல்வனே, செம்மலே,
எத்தனை இன்ப " மென் றேந்திழை மாதரார்
மெத்தெனக் கொஞ்சுவார் மென்முலை விம்மவே.

புண்ணியப் போதனைப் போற்றிடாப் போதெலாம்
விண்ணவர் வாழுறு வெற்றுநா ளென்பரால் ;
கண்மணிப் பிள்ளையைக் காதலாற் கண்டவன்
எண்ணமே யாயினர் இந்நிலத் தோரெலாம்.

மூன்றுகா லந்தனை முற்றவுங் கற்றநல்
ஆன்றவர் போற்றிடும் அற்புதச் சுத்தனை
வான்றருஞ் சோதியை வையகத் தாருயிர்
போன்றுநே சித்துளம் பொங்கினர்.....விந்தையென் ?

---

* கலி விருத்தம், சந்தம்: தானன, தானன, தன்னன தானன
ஆதி தாளம். காபி செஞ்சுருட்டி, கமாஸ் இராகங்கள்.

அணிகளைச் சூட்டுவார் ; அன்புபா ராட்டுவார்,
பணிகளைக் காட்டுவார் ; ' பார்புகழ் வீரமா
மணிகளைப் போல நீ வாழ் ' கெனப் பேசுவார் ;
துணிவருள் சூரனைச் சுத்தனிற் காணுவார்.

அரியசெஞ் சொல்லுடன் ஆடலும் பாடலும்,
உரியநற் செய்கையும் ஓங்குயர் தன்மையும்,
பெரியனைப் பேசிடும் பிள்ளையுங் கற்றிடத்
தெரிவுயர் குருகுலஞ் சேர்ந்ததைச் செப்புவாம்.

12. குருகுலப் படலம்

அளந்தநல் ஆயுளும், அறமும், ஆற்றலும்,
தெளிந்தநல் லறிவுடன் சீர்பெற் றோங்கவும்,
உளந்தனைப் பயிற்றவும், உயிரைப் போற்றவும்
இளந்திரு வயதினிற் கல்வி யீதலே.

சத்தியன்

உன்னதப் புலமையோ டுதித்த தெய்வச்சேய்
துன்னறி வொளியினைத் தூண்டி வேண்டிய,
மன்னறம் பயின்றிட வாய்மை வேந்தனுந்
தன்னிக ரற்றமெய்த் தவனை நோக்கினன்.

" கற்பது கற்றுநின் றறத்தைக் காத்திடப்
பொற்புறு குருகுலம் பொருந்தி வாழ் " கென்றே
அற்புத மைந்தனை யளிக்க, மாதவன்
" கற்பகங் கனி " கெனக் களிப்போ டேற்றனன்.

இந்திரை

" செழுந்தவச் செல்வனே தீர னாகிநீ,
எழுஞ்சுடர் வனப்புடன் இலகு ஞானமும்,
பொழிந்திடு வானெனப் புகழும், ஈகையும்,
தழைந்தினி தோங் " கெனத் தாய்மொ ழிந்தனள்.

சத்தியன்

" அறிவுடன் ஆண்மையும், அருளும் இன்பமும்,
அறம்பொருட் செழிப்புடன், ஆத்ம ஞானமும்,
பொறிபுல னடக்கமும், புனித வாழ்க்கையும்
திறமுடன் பெறுகநீ, தெய்வ மைந்தனே !"

" குருவர னேமுது குரவர் போன்றவன் ;
குருமனை யேயினிக் கொற்ற மாளிகை ;
குருவடி யேநலங் கொடுக்குங் கற்பகம்
குருவருள் பெறுகநங் குலம் விளங்கவே !"

" உத்தமக் குருவடி யுள்ளங் கொண்டு நீ
பத்தியும் பணிகளும் பரிந்து போற்றியே,
வித்தக ஞகியென் குலவி ளக்கென
நித்திய மோங்குக நிமலச் செல்வனே !"

" கண்ணெனுங் கல்வியைக் காக்கும் மாணவர்,
உண்ணலும் உறங்கலும் உடை யணிதலும்,
எண்ணலும் இயற்றலும் இயம்பல் யாவினும்,
உண்மையும் தூய்மையும் ஒளிர வாழ்வரே !"

" சீரிய முனிவரன் செய்யு நன்மையால்,
வீரமும் சக்தியும், வேந்தர்க் காகிய
காரிய வெற்றியும் கல்வி கேள்வியும்
பூரண வாழ்க்கையும் பொலிக, செல்வனே !"

சுத்தன்

இன்னன விளம்பித் தாதை இனிதுற மகனை நோக்கச்
சென்னியிற் கரங் குவித்துச் சேவடி தொழுது மைந்தன்,
"சொன்னநன் மதியைப் போற்றித் துகளறக் கல்வி கற்றுப்
பன்னிரண்டாண்டெடன் ஆசான்பணித்திறம்பயில்வ" னென்றான். 40

"தருதிர்நல் லாசி" யென்று தாள்பணி சேயைப் பெற்றோர்
"வரதநீ வாழ்க" வென்று வளர்த்தகை யால் அணைத்தே,
குருபர னிடங் கொடுத்தார் ; குணநிதி முனிவ னங்கே
"பெருகு மானந்த" மென்னப் பிள்ளையை நடத்திச் சென்றான்.

வாத்தியம் பல முழங்க, வாழ்த்துக்கள் ஒலிக்க, வேத
சாத்திரம் பல முழங்க, தமிழ்மறை முழங்கத் தெய்வத்
தீத்திகழ் முனிவன் கோயில் சிறப்புறச் சென்றெல் லாரும்
பூத்தருள் பொலிக ! வென்று புதல்வனை விடுத்து வந்தார்.

அன்புந் தெய்வமும், அருளுடன் அழகணி யறிவும்
நன்புங் கொண்டொளிர் நவையறு குருகுல மதனில்
இன்ப மாகுநல் இயற்கையின் மடிமிசை வளர்ந்தான்
மன்ப தைகளைக் காத்திடும் மங்கலப் புதல்வன்.

திருந்து செந்தமிழ், ஆரியம், ஆங்கிலம், இந்தி
பெருந் தொகையினர் பேசிடும் பிறசில மொழிகள்,
வருந்திக் கற்றனன் ; வாணியின் வரம்பெறு புலவர்
விருந்தெனப் புகழ் வியன்கவிக் கலையிலுந் தேர்ந்தான்.

வேந்தர்க் காகிடும் வீரமும் போருடன் பொருளும்,
சாந்தர்க் காகிடும் யோகமுந் தருமமும் தவமும்,
தேர்ந்த நீதிசெய் முறைமையுந் திருவுறப் பயின்றான்—
வாய்ந்த சுத்தசன் மார்க்கத்தின் வாய்மையே யானான்.

கவியுங் கானமும் கணக்குடன் அறிவுநூல் வகையும்,
புவியில் அற்புதம் புரிந்திடும் பொறிகளின் அமைப்பும்,
செவியுங் கண்களுஞ் சிந்தையுந் திருந்திடக் கற்றான்
தவமுங் கல்வியுந் தந்தநன் முனிவரன் அருளால்.

வையம் ஓங்கிட வந்தவன் வளர்பிறை போலே
தெய்வ ஞானமும் உலகியல் அறிவுடன் சிறக்க,
துய்ய சாதன வாழ்க்கையுஞ் சுருதியும் அளித்த
செய்ய மாதவன் சேவையே சேவையிற் சிறப்பாம்.

ஓங்கு மாமலை ஓமெனும் அருவியும், அன்னம்
தூங்கு தாமரை வாவியும், தோகையுங் குயிலும்
நீங்கு றுப்பசுஞ் சோலையும், நீலவான் பொலிவும்,
ஊங்கு யர்கலை தூண்டின வுத்தம னுளத்தே.

சோதி மாதவன் சுடர்பெறும் அறிவினைத் தூண்ட,
நீதி மந்திரி யினிவரு நிருபனை யமைக்க,
ஆதி சக்தியின் அருளொளி யாகிய மைந்தன்
மேதினிக் கொரு வரமணி விளக்கென மிளிர்ந்தான்.

அன்பர் வாழ்த்தி "யிவ் வதிசய மைந்தனு லுலகம்
இன்ப மாகு" மென் றிசைத்தனர் ; இன்னொரு புறத்தில்,
வன்பகை செய்யும் வலியவன் ஒருவனும் எழுந்தான் ;
துன்பமே வடி வாமவன் சூழ்ச்சியை யறிவாம்.

13. பொறுமைப் படலம்

நன்மையுந் தீமையு நட்புஞ் சண்டையும்,
புன்மையும் பெருமையும், புகழும் வீழ்ச்சியும்,
இன்மையும் உண்மையும் இருவ கைமனத்
தன்மையின் பரிசெனச் சாற்று வாமரோ !

நல்லது நினைத்திடின் நன்மை யாகிடும் ;
அல்லது நினைத்திடின் அல்ல லாகிடும் ;
இல்லதும் உள்ளதும், இம்மை யம்மையும்,
செல்வதும் வருவதும் நினைப்பின் செய்கையே.

கலியன்

பழிப்பறு புகழ்பெறும் பரத நாட்டிலே,
செழிப்பறு சித்தியின் சீர்த்தி யாவையும்
அழிப்பனென் றெழுந்தனன் அகந்தை கொண்டொரு
முழுப்பதர் கலியனும் மோகி கேள்வனே.

விடந்தரு நோயென, வேந்தன் சத்தியன்
உடன்பிறந் தானவ னுடன்பொ றுமையும்
இடர்செயுந் தீமையும் இகலும் வெம்மையும்
படர்ந்தன புதருடன் பாம்பு மென்னவே.

கலியன் பொறுமை

வாளெனப் பாய்வது ; வஞ்சந் தீர்த்திட
நீளெரி புகுந்தென நெஞ்சில் வேவது ;
கோளினு லுயிர்ப்பது ; கொடுமை செய்துபின்,
ஆளினை யுண்பது பொறுமை யாகுமே.

திசைதொறும் அண்ணலின் சீர்த்தி கேட்டுளம்
பிசைதுயர் கொண்டவன், பிள்ளை சுத்தனின்
இசையினைக் கேட்டதும் எரி மிகுந்தனன் ;
விசையினில் இவர்களை வீழ்த்த வெண்ணினன்.

வலிகொளும் சித்தியின் மரபைக் கண்டதும்,
கிலிகொளு நெஞ்சினன், கேடு சூழவே
புலிகொளும் புதரெனப் பொல்லர் வாழ்த்திடும்
கலிநகர் கண்டனன் காலன் அஞ்சவே.

இந்திர சாலங்கள் இருட்பொய் வித்தைகள்,
மந்திர மாயங்கள் மாறு பாடுசெய்
தந்திரச் சூதெலாந் தரும நீதியைத்
தொந்தரை செய்தன ; துணிந்து வீழ்ந்தவே.

இணைகரும் பூனையின் எரி விழிகளும்,
பணியுடன் காகமும், பச்சை யோந்தியும்
பிணங்களின் மூளையும் பெண்க ருக்களும்,
புணைகரு மைசெயப் புகுந்துந் தோற்றனன்.

" கருவினைக் கலைத்திடக் கருவினை செய்தேன்
உருவினைக் குலைத்திட, வுளத்தை மாற்றிடப்
பெருநிணப் பேய்களை ஏவினே னந்த
ஒருவனைச் சிறுவனை உம்ப ரேற்றவே. "

" ஆளத்தான் உலகினை அண்ண லுக்குப்பின்
நீளத்தான் கருதிய நெஞ்சம் புண்ணுற்றேன் ;
மூலத்தான் வந்தனன், மூன்று லோகமும்
வாழத்தான் வாழ்ந்தனன் ; வயிறு வேகுமே ! "

" தேனெனப் பேசிய தீய சூனியர்,
ஊன்மது வுண்டவன் உயிரை யுண்கிலார் ;
யானினி யென்செய்வேன் ; அடவிப் பேய்க்குலம்
ஏனெனை யேளனம் செய்த ! வஞ்சமே ! "

மோகி

புயலெழு மனத்தினன் புன்வ லைப்படுங்
கயலெனத் துடித்ததைக் கண்டு, நீள்விழி
மயலெழ வீசித்தன் மாய வித்தையாற்
செயம்பெறு மோகியும் சிரித்து வந்தனள்.

கொஞ்சுமென் மொழிசொலிக் குமுதக் கைகளால்,
துஞ்சறு விழிகளைத் துடைத்து நோக்கிடும்,
அஞ்சன விழியளை யணைத்துத் தன்மனம்
சஞ்சலக் கலியனுஞ் சாற்றி னன்கொலோ.

கலியன்

" அரியணை யிருந்துநான் சித்தி யாண்டிடும்
உரிமையை யிழந்தனன் ஒருவன் வந்ததால் ;
பெரியசிந் தனையெலாம் பேச வாயிலேன்..........!
பரிந்தெனக் கிதமொழி பகர வல்லையோ ? "

மோகி

நோயுறு கலியிவை நுவல, மோகியும்
" ஓயுக கவலைகள் ; உலகை வென்றிடப்
பாயுறும் அரக்கரின் படையைத் தூண்டுவேன் ;
ஏயெனு முன்னுன திச்சை யா"மென்றாள்.

" ஏனினி யோசனை ; யெவனை யஞ்சினை
யானவன் அழியவென் அண்ணல் மாவலி
சேனையைத் தூண்டிடச் செல்கின்றே னின்றே
தானவத் தீ"வெனச் சபதஞ் சாற்றினள்.

கலியன்

“ கவலேயும் ஒழிந்தது ; கனவு மெய்த்தது;
புவனமுங் கிடைத்ததுன் பொன்சொ லால் ; இனி
எவருமென் னிகரிலே ” என்று விம்மினுன்
அவஞ்செயும் தீயருக் கரச னுயினுன்.

மோகி

“ வருகுது சித்தியை வீழ்த்தும் வன்படை !
பெருகுதுன் புக” ழெனப் பெரிய பாதகி,
வெருவுறு மரக்கரை விளேத்த தானவம்
இருமுழு மதியுடன் ஏகி னுள்கொலோ.

கலியன்

நகையினே யுதட்டிலு, நஞ்சை நெஞ்சிலும்,
பகையினேச் செயலிலும், பரிவை நாவிலும்,
வகையுறக் கலியனும் வைத்து, நாட்டிலே
மிகையுறு பிரிவினே விரைவிற் செய்தனன். 80

பதரெனும் பதகனின் பழியி னுல்வினே
அதர்மங்க ளனைத்தையும் அறியு முன்னரே,
கதிர்மணி போல்வளர் கடவுட் சுத்தனின்
புதியநல் வாழ்வினேப் புகலு வாமரோ. 84

14. புறப்பாட்டுப் படலம்

மூன்று காலமு முற்றறி சித்தன்பால்,
ஆன்ற ஞானம் அனேத்தையுங் கற்றபின்
சான்ற வர்சொலச் சத்திய சுத்தனும்
தோன்று லகை யறிந்திடத் துன்னினுன்.

ஏட்டிலே யிசை யெத்தனே கற்கினும்,
பாட்டி லாதவர், பண்செய் கருவியில்
மீட்டி லாதவர் வித்துவ ராவரோ ?
ஆட்டி லாதவர் ஆடுந ராவரோ ?

சுற்று ணர்ந்திரு தோற்ற வுலகினே
முற்று ணர்ந்ததன் முக்குண நாடகம்
இற்றெ னத்தெளிந் தார் இயல் பாகவே
கற்று ணர்ந்த கலேக்கட லாவரே,

சத்தியன்

ஆத லால் “ என் அரசிளஞ் செல்வனும்
ஓத லால்வரு ஞானம் உரம்பெற
நீதி யாட்சி நிலவுநன் ருடெலாம்
போத” லென்று புகன்றனன் சத்தியன்.

“ புத்தி மான்,புவி யாளுங் கலையினில்
எத்தி சையும் இசைபெற்ற மந்திரி
சித்தி மானுடன் செல்வகை செல்”லெனச்
சத்தி யனுந் தனயனை யேவினுன்.

அன்ன செய்தி யறிந்து மகிழ்ந்துடன்
முன்னர் தூது விடுத்து மகிபரும்,
மன்னர் மன்னனின் மன்னிளஞ் செல்வனை
இன்ன நாள்வர வேற்பமென் றேதினுர்.

பூக்குங் காலைப் புதுமலர் தூவியே,
காக்கும் அன்புக் கடவுளை யேத்தியே
வாக்கு மிக்க வரமுனி வாழ்த்துகள்
ஊக்க வுள்ள முவந்தனன் கோமகன்.

ஆனை, தேர்,கு திரையணி சேரவே,
சேனை வீரர் “ செயசெய ” வென்னவே,
வானை யெட்டக் கொடிகள் வளரவே,
மோனை முத்தமிழ் போன்முர சார்த்தவே.

படையின் மின்னலும் பார்விழி மின்னலும்,
உடையின் மின்னலும், ஊர்தியின் மின்னலும்,
குடைசெய் வானங் குலாவிடு மின்னென
நடையின் மின்னலு நல்லணி மின்னலே.

முக மலர்களு, முல்லை விரிந்தென
நகை மலர்களு, நற்கரந் தூவுபல்
வகை மலர்களும் வானத்து நாண்மலர்,
தொகை மிகுத்திங்கு தோன்றுவ போன்றவே.

மார் நெருங்கின ; மார்பணி நன்மணி
தார் நெருங்கின ; தண்மலர்க் கூந்தலாங்
கார் நெருங்கின ; காலு நெருங்கின ;
ஊர் நெருங்கின ஒருட லாகவே.

பாண்டி லோசையும், பாவலர் பாடும்பல்
லாண்டி னேசையும், ஆசிக ளோசையும்,
தூண்டு மாமதி தோன்றக் கடல்மிசை
நீண்ட வோசையைப் போல நிகழ்ந்தவே.

இரணம்வீசிக் கிளர்ந்தெழும் சூரியன்
அருணத் தேரில் அமர்ந்தது போலவே,
திருவ ணிந்தபொற் றேர்மிசை ஏறியே
கருணை மாமுகங் காட்டினன் கண்ணனே.

விழிகண் டார்அருள் விண்ணொளி கண்டனர் ;
பொழிமு றுவலைக் கண்டவர் பொன்கண்டார் ;
செழிமு கத்தைக்கண் டார்திரு வேகண்டார்
அழகை முற்றும் அளந்தவர் யாவரே !

பொது விழியினுற் புண்ணியர் எங்குமே
அதுவென் றேயுணர் ஆதிப் பிரமத்தை,
மத விழியர் மதிப்பது போலவே,
" இதுவி துவழ " கென்றனர் மாந்தரே.

கந்தன், கோகுலக் கண்ண னிவனென்றார்,
இந்தி ரனும் இணையிலை யென்றனர்.
சிந்தை யெப்படி யப்படிச் சித்திரம்
தந்த தந்தத் திருவுருத் தன்மையே.

உடைநெ கிழ்தலும், உள்ளம் வெதும்பலும்,
கடையர் காமக் குறிகளும் இன்றியே,
நடையு யர்சுத்த ஞாயிறைக் கண்டவர்
மடமை நீங்கி மதிப்பொலி வெய்தினர்.

ஆசை மாமல ராமெனக் கண்டவர்
பூசை மாமல ரேபொலி யக்கண்டார்.
வேசை நெஞ்சும் விலைமயக் கற்றது ;
தேசை வீசிடுந் தெய்விகக் காட்சியால்.

" சென்ற தேசங்க ளில்வர வேற்றிடும்
வென்றி வேந்தர் புதல்வியர் யாரிவன்
மன்றல் மாலை யணிந்து மகிழ்வரோ ! "
என்று மட்டும் இயம்பினர் மாதரே.

நோக்கும் ஒற்றர்முன் னேக்கிட, நுண்ணறி
வாக்கு வல்ல புலவர் உடன்வரக்
காக்கும் வீரக் கனற்படை சூழத்தேர்
ஊக்க மாகமுன் ஊர்ந்தது காலம்போல்.

புதனும் பூரணச் சந்திர னும்என
மதிய மைச்சுடன் மன்மக னுஞ்செலும்
பதிக ளைப்பலர் பேசினர் ; நாமுமக்
கதியைப் பின்பற்றிக் காண்பன காண்பமால் !

15. யாத்திரைப் படலம்

வரவேற்புகளின் வருணனை

*கொட்டுவார் முரசினங் குதிகடலைப் போலவே,
எட்டுத்திக்கும் வெற்றிவெற்றி யென்றிசை முழங்கவே,
திட்டமாகச் சிற்றரசர் தேர்கரி பரியுடன்,
வட்டவெண் குடைநிழற்ற வாழிபாடி வந்தனர்.

"வருகமன்னர் கோமகன், வருகசித்தி மந்திரி,
வருகசக்தி மாமரபின் வான்சுடர் மணியெனஅ,
உருகுகாத லோடுமன் னுயிர்களுள்ளம் பொங்கியே
பெருகுமன்பு டன்வரும், பிரானைமுன்சென் றேற்றனர்.

மண்ணில்வான மீனினம் வயங்குகின்ற வாறுபோல்,
எண்ணிலா மணித்திரள், இருள்பருகி வில்லிட,
விண்ணுலாங் கதிர்க்கொடி பிடித்தவேந்தன் மைந்தனைப்
பண்ணுலாஞ் சிறப்புடன் பவனிசெய்து பார்த்தனர்.

மாடமாளி கைமிசை, மணிக்கொடிகள் 'வா'வெனும்
ஏடவிழ் இனமலர் இடைவிடாது கொட்டிடும்,
கூடச்சாள ரத்திலே கொழுமதிகள் பூத்திடும்,
தேடரிய செல்வனுந் தெருவில்வந்த போதிலே.

நாடினர் குமுதவாய் நகைகுலுங்கு மாத ரார் ;
கூடினர் மயிலெனக் குயிலெனக் குழலெனப்
பாடினர் பல்லாண்டுகள், பரதநூன் முறைப்படி
ஆடினர் அணியிழை யரம்பையும் வியக்கவே.

தோரணக் கலையெலாந் துலங்குகின்ற வாயிலில்,
வாரணங்கள், வாத்தியங்கள் வாழ்த்த ஓமொலியுடன்,
பூரணக் கலசமேந்திப் பூவையர்முன் செல்லவே,
ஆரணங்க ளோதிச்செல்வர் ஆண்டகையை யேற்றனர்.

" ஞானஞாயி றேயருள் நடம்புரியும் ஆழியே,
வானமுதம் போலுயிர்க்கு வாழ்வளிக்கும் வள்ளலே,
தீனர்செல்வ மே !"யெனத் திருவுடைய மன்னவர்,
கோனருள் குமரனைத்தங் கோயிலுட்கொண் டேகினர்.

அரியணையில் ஏற்றினர், அரசியற் சிறப்பெலாம்
வரிசையாகக் கூறினர் ; வழங்கினர் பரிசுகள்.
விரிகடல் பருகத்தாழும் வெண்முகிலைப் போலவே,
வரதனும் பணிந்துவாங்கி மன்னுயிர்க் குதவி னன்.

---

* இசைக் குறிப்பு :—*எழு சீர் ஆசிரிய விருத்தம் ; செஞ்சுருட்டி ராகம்.* சந்தம் : *தான தான தான தான தான தான தானனா.*

தேனும்பாலுந் தீஞ்சுவைக் கனிகளும் பலவகை
யானநல் லடிசிலும், அமுதனார் அளித்தனர்.
தீனர்,செல்வர் யாவரும் செறிந்துடன் அருந்திடத்
தானுமவ் விருந்தருந்தி னான்சம ரசச்சுடர்.

இளங்கதிர் முகத்தனை, யிருமலர் விழியனை,
உளங்கவர் குணத்தனை, உயர்வரைப் புயத்தனைக்
களங்கமற்ற கல்வியிற் கரையிலாக் கடலனை,
விளங்கருட் புலவனை விளம்புவா யினிக்குமே.

காணுங்கண்கள் இன்னுமின்னுங் கண்டுகண் டுவக்கவே,
ஆணும்பெண்மை வேட்குநல் லழகனை நினைத்ததும்,
பூணிலங்குங் கொங்கைமாதர் பொங்குகாதல் வெள்ளத்தால்,
நாணவேலி போக்கினார், நவில்வதென்ன விந்தையே ?

கொண்டைநாண் மலர்சொரியக் கொங்கைவிம்மிப் போர்செயத்
தொண்டை வாய்க் கிளியனார் துடியிடை துவளவே,
தண்டையஞ் சிலம்பொலிக்கத் தாவிவந்து சுத்தனைக்
கண்டது மியம்பொணாக் கனவுலகி லாழ்ந்தனர்.

தேர்ந்தெடுத்த சிற்பிகள் செதுக்கிய சிலையனார்,
கூர்ந்தவாள் விழிகளாற் குரிசிலைப் பருகியே,
பேர்ந்திடாது நின்றனர் ; பிராணொருவ னேயுடல்
சோர்ந்திடா வுயிரெனத் துடித்தன னவருளே.

வான், கடல் மலை,நதி, யியற்கையின் வனப்புகள்,
மேனியா யமைந்த தன்ன வீரனைமுன் கண்டதும்,
கான்மலர், தளிர்,கனி மதிகலந்த பொற்பினார்,
ஊன்கலந்த வுள்ளுயிர் இவன்ஒருவ னென்றனர்.

தோகை,கோகி லங்கிளி தொகுத்தசுந்த ராங்கிகள்,
தாகமாகப் பார்த்திருந்த சக்தி மைந்தன் வந்ததும்,
மேகமார்பி னைப்பிளக்கும் வேகமின்ன லென்னவே,
மோகமார்பி னின்றொளிர் முறுவலள்ளி வீசினார்.

அல்லிமார்பைக் கொஞ்சிடும் அமுதவெண் ணிலாவினைப்
புல்லியாடுந் தென்றலைப் பொறாமை கொண்டு நோக்குவார் ;
மல்லிகையில் ஊதுகின்ற வண்டைத்தூ தனுப்புவார்,
மெல்லிதழ் குவிந்தபூ விழித்திருக்க வேண்டுவார்.

வில்லினைக் குனித்திரண்டு வேல்விழிகள் வீசியே,
சொல்லிலாது மாந்தரைத்தம் சொக்கிலே பிடித்திடும்,
மெல்லியர் வலைகளில் விழாதடக்கி, ஐந்தினை
வெல்லு மாண்மை கொண்டவீர தீரன்வாழ்க வாழ்கவே !

பன்மணி யணிகளெங்கும் பத்திபத்தி யாகவே,
மின்னலிட்டுக் கண்பறிக்கும் வேந்தர்மாளி கைகளின்
பொன்னுயிர்த்த போகபோக்கி யத்திற்புந்தி விட்டிடான் ;
இன்னொரு புறத்திலேதன் எண்ணமூன்றிப் பார்த்தனன்.

பொன்னரசர் கோயிலீயும் போகவாழ்வை வேண்டிலன்.
மன்னர்தங் குமரிகள் வருந்துவேட்கை தீர்க்கிலன்.
கன்னியர்கள் வீசுகின்ற கண்வலையுங் காண்கிலன்,
மன்னுயிர்த் துடிப்பையே மனத்துடிப்பி லேந்தினன்.

கொற்றவாழ்வி னுச்சியிற் குலாவுமின்பம் வேண்டிலான்,
நெற்றிவேர்வை சொட்டச்சொட்ட நீடுழைக்கும் ஏழைகள்
வற்றிக்கஞ்சி யின்றிவாடும் வன்கொடிய காட்சியைச்
சுற்றியெங்குங் கண்டவர் துயர் கெட வுதவினன்.

செல்வர்தந்த செல்வமெல்லாந் தேசதேச மாகவே,
கல்வியுந் தொழிலுமோங்கக் கைநிரம்ப நல்கினன்.
நல்லதொண்டர் செய்பொது நலம்வளர வூக்கினன்,
எல்லையில்லாத் துன்பமிந்த நாட்டிலேனென் றெண்ணுவான்.

வண்மையும் வளமையும் வளருகின்ற நாட்டிலே,
உண்மையும்உள் ளன்புமெங்கு மோங்குயர்பொன் னாட்டிலே
கண்ணினீர் பெருகிடுங் கவலைமேக மேனென்பான்
புண்ணிய வமைச்சுடனிப் பூவியல்பை நோக்குவான்.

ஆதிமன்னர் வாழ்வுமின் றரியணை யிருந்திடும்
நீதிமன்னர் மாட்சியும், நிகரிலாச் செயல்களும்,
தீதினைத் தகர்த்தவர் செருக்களஞ் செயித்ததும்,
ஓதினன் உளங்கைநெல்லி போலுணர்ந்த சித்திமான்.

செல்வச்சேயை மார்பிலூட்டுந் தெய்வத்தாயைப் போலவே,
பல்வளந் தழுவிப்பாய்ந்து பாரை யூட்டும் ஆறுகள்,
சொல்லரசர் பாடியன்புத் தொண்டுசெய் திருத்தலம்,
தொல்வளஞ் சுமந்தமா மலைக டோறுஞ் சென்றனர்.

செஞ்சி,சென்னை, தஞ்சை,மா மதுரை,கேர ளம்,முனை,
கஞ்சி,காசி, கல்கத்தா, கயா,அயோத்தி, சீநகர்,
பஞ்சவடி, ஹம்பி, பம்பை, பாலைவீரர் பட்டினம்,
எஞ்சுபல் லிடங்களு மிருந்திருந்து சென்றனர்.

சென்றசென்ற வூர்களிற் சிறந்தகாட்சிச் சாலைகள்,
குன்றிடா தறிவினைக் கொடுக்குங்கல்விச் சாலைகள்,
வென்றமா முனிவர்தீரர் வீரர்தம்மைக் கண்டனர்,
தொன்றுதொட்ட வாழ்க்கையும் துளக்குறக்கண் டேங்கினர்.

கல்வளர் குறிஞ்சியும், கடிய பாலையும்,
புல்வளர் முல்லையும், பொங்கு நல்வளம்
மல்கிய மருதமும், வங்கக் கூட்டங்கள்
பல்கிய நெய்தலும் பார்த்துச் சென்றனர்.

தமிழ் நாடு

முத்திறை தென்றிரை முத்த மிட்டிடும் ;
சித்தரின் மலைதருந் தேன ருவிகள் ;
பத்தரின் பாடலைப் பறவை பாடிடும்
முத்தமிழ் நாட்டினை முந்து கண்டனர்.

" வருகநங் கோமகன் ! வருக சித்திமான் !
வருகநல் வர"வென வரிசை கொண்டெதிர்,
தருகைநீள் செம்மலாந் தமிழர் நாடனும்,
முருகிள மன்புடன் முன்வந் தேற்றனன்.

சுத்தன் தமிழ் நாட்டைப் புகழ்கிறான்

" எந்தையின் கண்ணெனு மினிய நாடிதே,
செந்தமிழ் இசைமலி தெய்வ நாடிதே ;
சொந்தநம் வீடிது ; சுதந்த ரத்துடன்
வந்தனம், உவந்தனம், வரம்பி லின்பமே.

" வள்ளுவர் பொதுமறை, கம்பன் வான்கவி,
ஒள்ளிய யோகியர் உரைத்த வாசகம்,
தெள்ளிய திருமுறை, திருவ ருட்கவி,
உள்ளத்திற் கமுதென வூறு நாடிதே.

" குரைகடல் உண்டதோர் குமரிக் கண்டத்தின்
கரையறு கலைத்திரள் கரைந்த பின்னரும்,
அரியநல் லறிஞர்செய் யருங்க லைத்திரள்
வரையெனக் குவிந்திசை வளரு நாடிதே !

கடற்படை நிலப்படை கணக்கி லாதது ;
மடைதிறந் ததுவென வாணி கத்திரு
வுடையது ; வண்மையி லுயர்ந்த சீர்த்தியே
இடைவிடா திதன்புகழ் இயம்பு மாமரோ !

" உலகெலாம் ஒருகுல மாகு மன்பொளி
நிலவிடுஞ் சமரச நிலைய மிந்நிலம்.
நலமுயர் அருட்பெருஞ் சோதி நாதர்கள்,
இலகிடுந் தவக்கனல் ஏறு நாடிதே."

" கண்ணிய மாகவென் றந்தை காத்திடும்,
புண்ணிய பூமியின் புனிதச் சோலையாம் ;
எண்ணினும் இயம்பினும் இதயம் இன்புறப்
பண்ணிடுந் தமிழகப் பண்பு வாழ்கவே."

இவ்வகை போற்றிடும் இளவல் சுத்தனைச்
செவ்விய செந்தமிழ்ச் செல்வர் கோமகன்,
திவ்விய விருந்துகள் செய்து கோயிலில்,
ஒவ்விய சிறப்புடன் உபச ரித்தனன்.

உயிர்களுக் குயிரென வுலவும் ஒன்றைப்போற்
பயிர்களுக் குயிரெனப் பாயுங் காவிரி
வயல்வளம், வருணிநல் வைகைப் பொன்வளம்,
உயர்மலை வளங்களும் உபச ரித்தவே.

கேரளம்

ஆர்த்தெழும் அருவிகள், அடர்ந்த தென்னைகள்
கூர்த்தெழுங் கார்வரை குலவுங் கேரளம் ;
வேர்த்திட வுழைத்திடும் வீரர் சேரமான்
சீர்த்திகள் கண்டனன் சித்திச் செல்வனே.

கன்னடம்

பொன்னியின் மாலையைப் பூண்ட பொன்னிலம் ;
இன்னிற மலர்கனி யிலகு மின்பவிண் ;
பன்னலத் தொழில்வளம் பரவி யோங்கிடுங்
கன்னடங் காட்டிய கனிவிற் பூரித்தான்.

ஆந்திரம்

மானத்தை யுயிரினு மதிக்கு மல்லர்கள்,
நானென, நாடென நன்மை தேடுவார்.
தேனிசை தவழ்ந்திடுந் தெலுங்கு பேசுவார்,
கோனிசை கேட்டுளங் குளிர்ந்து சென்றனன்.

வங்க நாடு

கங்கையாழ் இசைப்பது ; கலைசி றந்தது ;
பொங்கிய ஞானமும் புகழு மிக்கது ;
மங்கலப் புதுயுக வசந்தச் சோலையாம்,
வங்கத்தின் வரையறு வரங்கள் கண்டனன்.

காசி நாடு

பாசவெவ் வலைகளைப் பறித் தெறிந்திடும்
மாசறு புலவர்கள், வடமொழிக் கலை
பேசிடும் புலவர்கள் பெருமை செய்திடுங்
காசியிற் சங்கரன் கழல் பணிந்தனன்.

கோசல நாடு

ஓம்என ஓதிடும் வேதத் தென்றலில்,
பூம்பயி ராடிடும் புனிதக் கோசலம்,
தீம்பழச் சுவையெனுந் தெய்வ நூல்களை
ஓம்பிடுந் திறமைகண் டுள்ளம் பூரித்தான்.

பாஞ்சால நாடு

திண்ணிய வுடலினர், சிங்க நெஞ்சினர்,
எண்ணிய வினைகளை யியற்றும் வீரர்கள்,
புண்ணியச் சிந்துவின் புனலுண் டோங்கிடுங்
கண்ணிய மைந்தரைக் கண்ணிற் கண்டனன்.

இராஜபுதனம்

சிங்கத்தைக் குகையினிற் செகுக்கும் வீரர்கள்,
அங்கியின் குலத்தினர், அரச புத்திரர்,
பொங்கிய போர்ப்புகழ் புகலக் கேட்டனன்—
செங்கதிர்க் கொடியுயர் சித்தி வீரனே.

மகாராஷ்டிரம்

இவ்வகை நாடெலாம் இனிது கண்டபின்,
செவ்விய கேள்வியின் செல்வன் சித்திமான்,
ஒவ்வரும் புகழுடை யுலக வீரனும்
திவ்விய சிவாஜியின் தேச மீதென்றான்.

அத்தகை வீரனின் அற்புதக் கதை
எத்தகை யுளத்திற்கும் இனிமை யாகிடும்;
சித்தியின் அமைச்சனே செப்பிக் கேட்டிட
மெத்தவும் விரும்பினன் வீரக் காளையே.

மாரத நகர்களை வலம்வந் தானபின்,
தாரணி வீரனின் சடலந் துஞ்சிய
ஊரினுக் குற்றதும், உரைக்க லுற்றனன்
தீரனும் சித்திமான் சிவாஜி காதையே.

16. வீர சிவாஜிப் படலம்

வீரர் போற்றிடும் வீர சிகாமணி
பார தத்தின் பழுதறு காவலன் ;
மார தக்குல மன்னன் சிவாஜியின்
சார மான சரித்திரங் கேட்டியால் :

வீர சக்தியின் மார்பென விளங்கு*ம ராட்டின்
ஆர மானது ; பழம்புகழ் அணிந்தது ; தூய
பார தத்திருத் தாய்புனை பதக்கமே போன்ற
ஊர தன்பெயர் பூநகர் உரைப்பதற் கினிதே.

இந்த வூரினில் ஷஹஜியென் றியம்பிடும் அமைச்சன்
சிந்தை தூய †ஜீஜாவுடன் சிவநெறி வாழ்ந்தான் ;
அந்த வந்தணர் அருந்தவக் கனிபழுத் ததுபோல்,
வந்து தோன்றினன் வரம்பெறு வீரசி வாஜி.

நாரி யர்க்கணி யாகிய நன்னலத் தாயும்
ஆரி யச்சுட ராகிய தன்மக னுணர
வீரர் வீரமுஞ் சோற்றுடன் மிசைந்திட வூட்டித்
" தீர ருயிரு " வென்றனள் ; சிவாஜியு மிருந்தான்.

காண்ட தேவெனும் காட்சியான் காதலால் அமைந்தே,
வேண்டு போர்க்கலை வீரமாக் குரிசிலுக் கீந்தே,
தூண்டி யுட்சுடர், துகளறு சிற்பியைப் போலே,
ஆண்ட கைதனை யற்புதப் பொலிவுட னமைத்தான். 20

கால நிலை

அந்த நாளினில், அறமிழந் தாற்றலு மிழந்தே,
பந்த முற்றிடர் தவித்தனள் பாரத தேவி ;
சொந்த நாட்டினிற் சுதந்தரம் நாட்டுவ னென்றே,
சிந்தை கொண்டிளஞ் சிங்கம்போ லெழுந்தனன் சிவாஜி.

உலகம் யாவையுந் தாங்கிடும் ஒருபரம் பொருளை,
நலமெ லாந்தரும் அருட்பெருஞ் சோதியை நம்பார் ;
பலம தஞ்சொலி யொருவர்மற் றொருவரைப் பகைத்தே,
கலகக் காடெனச் செய்தனர் கண்ணிலா ருலகை.

ஒத்த மானிடர், ஒளிவளி நீர்நில வளமை
ஒத்த மைந்தவர், ஒருயிர்ச் சக்தியால் உயிர்ப்பார்,
ஒத்து வாழ்ந்திடும் உணர்விலார், உண்மையொன் றறியார் ;
சத்த மாமதச் சந்தையிற் றலைதிரிந் தலைவார்.

என்ன தேயெனக் கேயெனும் ஆணவத்தாலே
சொன்ன தேசொலிச் சுத்தசத் தியப்பொரு ளறியார் ;
மன்னு ஞாலத்தில் அருட்பெரு மங்கல வாழ்வை
இன்ன தீயவர் தடுப்பரே இன்னமும் அந்தோ !

* மகராஷ்ட்ர தேசத்தின்

† ஜீ ஜா என்றால் தாய்—நம்மவர் தாயாரம்மாள் என்பதே மராட்டியில் 'ஜீ ஜா பாய்'' எனப்படுகிறது.

இத்த கைமத வெறிகளும் இடர்களுங் காமப்
பித்த லேத்திடும் பிழைகளும், பேயர்வெங் கொலேயும்,
சத்து ருக்களின் சங்கடத் தீமையுங் கண்டே,
உத்தமர் உளங் கொதித்தனர் உய்வகை யறியார்.

பயமு றுத்திடும் பாதக வெறியெழுந் தெறியும் ;
புயலி லேயிருட் சுழியிலே, புகலது காணுர்,
இயம்பொ ணுதிடர்க் கடலினில் எளியவர் தவித்தார்.
செயப் படாங்கொளும் வங்கம்போல் வந்தனன் சிவாஜி !

உண்ணும் ஊணினே, உயிர்த்திடும் உயிர்ப்பினே, உரையை,
எண்ணும் எண்ணத்தை, இயற்றிடும் பணிகளே யெல்லாம்,
கண்ணி னும்அரி தாகிய கற்பக நாட்டின்
புண்ணி யப்பயன் வாழவே பூசனே புரிந்தான்.

“ இச்சை யால்உல காடலே யியற்றிடும் பரமா,
நச்சி ருட்பகை நலித்திட, நரகினுங் கொடிய
கொச்சை வாழ்விந்த நாட்டினிற் குலவிட லாமோ ?
அச்ச மற்றநல் லமரவாழ் வருள்புரி ” யென்பான்.

“ பாரில் யாவரும் பரம்பொருட் பங்கெனப் பகரும்,
பார தாத்தும தருமமே பரவிட வேண்டும்.
போரி டர்களேப் போரினுல் ஒழித்திட வேண்டும்,
வீரத் தீயெனக் கருளுவாய் வெற்றிநா யகனே !”

சொல்லுஞ் சொல்லினேச் செயலினிற் காட்டிடத் துணிந்தே,
மல்லர் சேனையைப் பயிற்றினுன் மாரதச் சிங்கம் ;
பொல்ல வர்தமைப் பூண்டுடன் போக்கிடக் கருதி,
நல்ல வர்தமை நாடொறுங் காத்திட நயந்தே.

மாரன்போல் அழகி னுனே, மடங்கல்போல் நெஞ்சினுனே,
கார்வரைப் புயத்தி னுனேக் காலனும் வெருவுகின்ற
வீரவாட் கரத்தி னுனே, வெற்றிக்கு வெற்றி செல்லுந்
தீரனேக் கண்ட பேர்கள் சிவக்கன லுருவே கண்டார்.

கல்லுடைத் தோளேக் கண்டார் கலங்கறு வீர ராணுர்.
சொல்லுடைத் திறத்தைக் கேட்டார் சொல்லறப் பணிந்து நின்றுர்.
வில்லுடைத் திறத்தைக் கண்டார் வில்லரா யெழுந்து வந்தார்;
மல்லுடைத் திறத்தைக் கண்டார் மல்லராய் முன்சென் றுரே !

கண்டவர் கருத்தை முற்றுங் காந்தம்போற் கவரும் வீரன்,
கொண்டதே கொள்கை யென்றுர்,குறித்ததே கடமை யென்றுர்.
பண்டறம் பிழைக்க, ஞான பாரதம் பிழைக்க வின்னேன்
விண்டதே வேத மென்றுர்.....“ வெல்கநீ ! வாழ்க ” வென்றுர்.

அலையெறி கடலைப் போலே, ஆர்த்தெழும் படையி ருந்தென்?
மலையெனப்பொருளும்வேண்டும்.வயிறன்றோ உயிரைத்தாங்கும்?
" நிலைபெறத் தரும மிங்கே, நீணிதி யரு " ளென் றன்பன்
தலைவிப வானி யன்னைத் தாள்பணிந் திறைஞ்சி னனே :—

" ஒன்னலர் கொடுமை போக்கி, ஒற்றுமை யாக நாடு,
தன்னறம் போற்றி வாழத் தருமவீ ரரைநீ தந்தாய்.
அன்னவர் உண்டு டுத்தே, ஆண்டகைப் பணிகள் செய்யப்
பொன்னருள் புரிவாய் தாயே,போற்றியுன் சரணம்பூண்டேன்.

" சத்திய சீலர் வாழச் சநாதன தருமம் வாழ,
பத்தினிப் பெண்டிர் வாழப் பசுவளம் வாழ வேண்டி,
இத்தினம் எழுந்து நின்றேன் ; இறைவியுன் னருளி னலே ;
உத்தமர்க் குணவு தாராய், உலகினை யூட்டுந் தாயே !"

பூரண சக்தி யன்னை புதல்வனுக் கருள் புரிந்தாள் :
தாரணிக் கோட்டைக் குள்ளே தங்கமாப் புதையல் கண்டான்.
"பாரணி யருளே, யுன்றன் பரிவினுற் பிழைத்தே" னென்று,
போரணி வகுக்க நின்றன் புவியெலாம் புகழும் வீரன்.

ஆவியும் உடலும் போலே யாட்களும் பொன்னும் வந்து
மேவிய வுடனே வீரன், மேவலர் அணுக வொண்ணுக்
காவல்க ளமைத்தான் ; கல்லாற் கட்டினன் அரண்கள்; சக்திக்
கோவில்கள் அமைத்தான் ;வீரப் பயிற்சிகள் கொடுத்தான் மாதோ !

வீரப் பேச்சு

கூட்டினன் சேனை ராஜ சிங்கமாக் கோட்டைக் குள்ளே ;
காட்டினன் காலம் வேண்டுங் கடமையும் இடமும் ; வாளை
நீட்டினன் ; "பவானி, சண்டி, பைரவி போற்றி " யென்றே
பாட்டுகள் முழங்கச் செய்தான் ; பயனுரை கூறினு னே.

" இறைவியின் அருளினல், எழுந்த வீரர்காள்,
பொறைகெட வருந்திடும் புண்ணி யத்தினைக்
குறையறக் காத்திடக் கொண்ட கொள்கையை
நிறைவுறப் போற்றிட நேரம் வந்ததால்."

" வேங்கைபோல் அதருமம், வேதத் தேனுவைத்
தீங்குறு கைகளாற் செகுக்கக் கண்டுமே,
ஓங்கிய மாமலை யொத்த தோளினர்
தூங்கினர் என்கிற சொல்லைக் கேட்பமோ ?"

" கோவில்கள் யாவையுங் கொள்ளை போகையில்,
ஆவினம் படுகொலை யாகும் போதினில்,
பூவையர் மானமும் புண்பட் டேங்கையில்,
பாவியர் தீமையைப் பார்த்தி ருப்பதோ ?"

" செல்லுமின், அதர்மத்தைச் செகுமின், வெம்மையைக்
கொல்லுமின், அறத்தினைக் குலவ நாட்டுமின்,
சொல்லுமின் " சுதந்தர சக்தி ஓம் " என்றே,
வெல்லுமின் பகைவரை வீர ராமன்போல்........!"

சூரன் இன்னவை சொல்லி நடத்தலும்,
" பாரின் சக்தி பவானிக்கு ஜே " யென்றே,
மார தப்பெரு மல்லர்கள் பீஜபூர்
ஊர்க ளிற்கொடி யூன்றினர் வெற்றியால்.

சுல்தான்

அந்த வூர்களை யாளுஞ்சுல் தானுக்குத்
தந்தை ஷாஜி தகவுடை மந்திரி.
சொந்த மைந்தனைச் சொல்லி யடக்கென,
மந்தி ரியைப் பணித்தனன் மன்னனே.

தந்தை

" நான் அமைச்சு நடத்திடும் பீஜபூர்,
கோனுக் கேபல குற்ற மிழைத்தனை !
ஏன் எனக்கு மகனென வந்தனை ?
மானம் போனதுன் மர்க்கடச் சேட்டையால்."

" நஞ்சர் என்னினு நாட்டினை யாளுவோர்
தஞ்ச மென்றடி தாழ்ந்தவர் கட்டளை,
செஞ்சொல் வேத மெனச்செய லேமதி !
அஞ்சத் தக்கதை யஞ்சிடத் தக்கதே !"

" வரம்பை மீறினை வாலிபத் தெம்பினால்,
நிரம்ப வுஞ்செருக் குற்று நிமிர்ந்தனை ;
பரம்ப ரையர சைப்பதம் பார்த்தனை !
வரம்பெற் றோர்க்கும் வணக்கம் அழகன்றோ ?"

" பழிப்பு றுஞ்செயல் செய்தனை மைந்தவென்
பிழைப்பி னுக்குப் பெருந்துய ராயினை ;
அழைப்பன் மன்னன் ; அடக்கமாய்ப் பே" செனப்
பழுத்த தந்தை பயலை வெருட்டினன்.

சிவாஜியின் வீரவுரை

" மாதரைக் கெடுத்திட் டேனோ? மன்னறம் பிழைத்திட் டேனோ?
பாதகக் கள்ளுண் டேனோ ? பசுக்களைக் கொலைசெய் தேனோ?
கோதறு முனிவர் வாழுங் கோயிலைக் கொளுத்தி னேனோ ?
யாதிடர் செய்தேன் ஐயயா"வென மைந்தன் சொல்வான்.

" இந்தநம் புனித நாட்டின் இரத்தத்தை வடித்த வர்க்கும்,
விந்தையாய்ப் பரிந்து பேசி, விடுதலை செத்து, நீசெய்
மந்திரி வேலை யன்றோ மானத்தைக் குலைப்ப தையா...!
தந்திர வேசைக் காளாய்த் தாயினை மறப்ப துண்டோ ?"

" வருந்திய தனது தாயை வருத்திடும் இரத்தக் கையால்
விருந்தினை யுண்டு, நாளை விற்பதும் ஆண்மை யாமோ ?
திருந்திட வேண்டும் நீயே, தீரர்முன் தலைநி மிர்ந்தே
இருந்திடவேண்டின்என்போல் இருந்திடவேண்டு" மென்றான்.

"தந்தைசொல் எனது தாய்க்குத் தருவது பெருமையாயின்,
மந்திர மென்னக் கொள்வேன்...மற்றது சிறுமை யாயின்,
பந்தனை தருவ தாயின், பதரெனத் தள்ளி, வீரச்
சிந்தனை செயலிற் காட்டிச் செயக்கொடி பிடிப்பே"னென்றான்.

" உடலைநீ தந்த துண்மை. உடலினுள் எரியும் வீரச்
சுடரைநான் பெற்றேன், அன்னை சூலிபவானி தந்தாள் ;
இடர்தரு மிகலை வீட்டி யினிதறம் போற்றி யெங்கும்
படர்துடைத் தாளு வேனிப் பாரத நாட்டை" யென்றான்.

" அறத்தினைக் காத்த ராமன் அவதரித் திருந்த நாட்டில்,
கரத்தினைக் கட்டி வாழேன், கருமவீ ரத்திற் கென்றே,
வரத்தினைப் பெற்ற வீர மாருதி போல வெற்றிச்
சிரத்தினையுயர்த்தியேநான் சிங்கம்போல் நடப்பே"னென்றான்.160

"நானுரை மொழியில்உண்மை நன்மையொன் றுள்ளதாயின்,
ஏனெனும் எதிர்ப்பில் லாமல், இதயத்தில் உனக்கு நாட்டின்
மானமே துடிப்ப தாயின், மந்திரி வேலை விட்டென்
சேனைசெய் தேச சேவை செய்வதே கடமை !" யென்றான்.

கட்டறு வீர மைந்தன் கருத்தினை யறிந்த தந்தை
விட்டவன் போக்கிற் சென்றான்...விடுதலை மனத்தி னுக்கும்
வட்டவான் மழையி னுக்கும், மதிவளர் அலைக ளுக்கும்
சட்ட திட்டங்கள் செய்வார் சகத்தினி லில்லை யன்றோ ?

முதல் வெற்றி

தூண்டு வீரத் துடிப்பை யடக்கிலான்,
மீண்டும் ஊர்களை வென்றுதன் சேனையால்,
ஆண்டு தன்கொடி யாடிடச் செய்தனன்,
ஈண்டு சுல்தா னெரிசின மேறவே !

மல்லரால் இந்த மல்லனை வெல்வலி
யில்ல ளுகி, யிணங்கவும் இல்லனாய்,
தில்லி மன்னன் செவியுறச் செய்தனன்,
தொல்லை செய்யத் துணிந்தவன் மாற்றமே.

" கள்ள மாகக் கரந்து மலைகளில்,
மெள்ள வந்து மிடற்றினைப் பற்றுவான்,
கொள்ளை யிட்டுக் கொலைசெயுங் கூற்றிவன் !
சள்ளை சொல்லிற் சரித்திர மாகுமே !"

" ஒடுக்க வேண்டு முடனிவன் கொட்டத்தை ;
தொடுக்க வேண்டுஞ் சமர் " எனச் சொல்லவே,
திடுக்கெனச் சினந் தேதில்லி மன்னவன்
கொடுத்த னன்ஒரு கோபக் கனற்படை.

அறமும் ஆண்மையும் அன்பும் பொருந்திய
திறமை கொண்ட திருவினன் ஓர்பகல்,
இறைவி தன்னை யிறைஞ்சிடும் போதினிற்,
பறை முழக்கொலி பாய்ந்தது காதிலே.

" எந்தை யேஅஃப்சுல் கான்எனும் வெய்யவன்
வந்த னன்வழி யெங்கும் இரத்தமே
சிந்தி னன் ; உமைச் சிக்கெனப் பற்றிட
முந்தி னுன்" என ஒற்றன் மொழிந்தனன்.

கொல்ல வந்தவன் குட்டறி ஒற்றரும்,
புல்லை விற்பவர் போல்உள வாய்ந்தனர்.
வெல்ல வோர்வழி கண்டுநம் வீரனும்
மல்ல ராங்கு மறைக வென் றேவினுன்.

மாசி லாத மராதிய மாமணி,
வீசி வாளை விரைந்திடும் போதிலே,
" நேச மாய்நினை நேரினிற் கண்டிடும்
ஆசை யேன் " என் றழைத்தனன் அஃப்சுலே !

எப்ப டையுமில் லாமல் எதிர்ந்திடும்,
அஃப்சுல் கானை யறிந்தநம், வீரனும்
" குப்பெ னப்பற்றிக் கொன்றிடும் சூழ்ச்சியைத்
தப்ப நானுந் தயார்" எனச் சென்றனன்.

"எடுத்தனன் இரத்தக் கூர்வாள், இடுக்கினன் புலி நகத்தை
அடுத்தனன் குறித்த சூழல், அன்பிலான் மோசங் கண்டே,
பிடித்தனன் வயிற்றைக் கீறிப் பிளந்தனன், பகையை முற்றும்
முடித்தனன், பொருளை வாரி முதல்விக்கு நிவேதித் தானே.

" ஒன்னலர் வஞ்சத் தீமை ஒழிந்தது, முதற்போர் வென்றேம்!
உன்னடிக் கொப்ப ளித்தோம் உதவிய பொருளை முற்றும்.
மன்னறம் வாழ, நாடு மங்கலம் பொலிந்து வாழ
அன்னையே வீரசக்திக் கனலெமக் கருளு வாயே !"

"பேச வந்த பெரும்படை யாளனை
மோச மாக முடித்தவன் சேனையை
நாச மாக்குவம் நா" மென ஷா, பிடி
மீசை யைமிடுக் காக முறுக்கினான்.

கொள்ளி போலக் கொதித்திட வெஞ்சினம்,
வெள்ள மாப்படை கொண்டு விரைந்தனன்.
துள்ளி வந்த துருக்கர் படையினை
அள்ளி வீசி யழித்தனன் வீரனே !

" சூரி யனையெச் சூறை யணைத்திடும்
வீரிய னிவன், வெல்லற் கரியவன் ;
போரி லாதன்பு பூண்பது நன்" றெனக்
கோரி னான்அதில் ஷாகுண மாகவே.

" தேசத் திற்கும் அறத்திற்குந் தீமைசெய்
நாச காலர் நலிந்திட வேயிவன்
ஆசை கொண்டவன், அன்றி யிஸ்லாமியர்
நேசங் கொண்டவன் ; நேர்மை தவறிலான்."

" இவன் படையில் இஸ்லாமியர் உள்ளனர்,
அவர்க ளுக்குக் குரானும் அளிக்கிறான் !
தவறி வந்த தனியிள மாதரை
அவர வர்க்குரி யாரிடஞ் சேர்க்கிறான் !

" இத்த கையவன்" என்றுதன் ஒற்றர்கள்
ஒத்தி யம்பினர்; உண்மை யறிந்ததும்,
வைத்த வெம்பகை மாறி அதிலனும்
உத்த மனுக் குறுதுணை யாயினான்.

தந்தை யுள்ளந் தழைத்துத் தழுவினான் ;
முந்து கொண்ட முனிவை முனிந்தனன்.
சிந்தை பூத்து"நற் செல்வநீ வாழ்"கெனத்
தந்த னன்மன தாரத்தன் ஆசியை.

தந்தை யுந்தந்தை யாக மொழிந்தனன் ;
மைந்த னும்மைந்த னாக வணங்கினான் ;
" நிந்தை யற்ற நெறியி லொழுகுமுன்
சந்த திக்கினிச் சாவிலை " என்றனன்.

தில்லி பாதுஷா

சுற்றி யெங்குந் துணிந்தமர் செய்தவன்
சிற்ற ரசரைச் சேவகங் கொண்டொரு
முற்ற ரசை முடிவற நாட்டினான் ;
வெற்றி கண்டு வெருவினன் பாதுஷா !

அடங்கி லான்அர சாட்சியிந் நாட்டிலே
இடம் விரிந்து பரவிய தெங்குமே ;
உடனித் தீதை யொடுக்குவ தேமுதற்
கடமை யென்னக் கருதினன் பாதுஷா......

சொற்ற வாயுஞ் சுடும்; அவன் பேரிசை
கற்ற நெஞ்சுங் கனலென வெந்திடும் ;
மற்று ரைப்பதென் ? மாரதச் சிங்கத்தால்
அற்று றக்கம் அமைதி யிழந்தனன் !

" பரவை போலப் படைத்திரள் கொண்டென்றன்
அரசைத் தான்பற்றி யாளத் துணிந்தவன்,
சிரசைக் கொய்" கெனச் சேட்டனை யேவினான் ;
முரசு விம்ம முடுக்கினன் சேனையை........

இறைவன் கட்டளை யேந்திய வெம்படை
கறைகொள் மேகங் கலித்தெழு மின்னெனப்
பறை முழக்கிப் பறந்தது ; பூநகர்,
சிறை பிடித்துச் செகுத்திடச் செம்மலை.......

சேட்டாகானை வெல்லல்

சினங்கொதி புலியி னம்போற் சேட்டன்பூ நகர் புகுந்து,
கனம்பெறு போர் முறுக்கக் கரந்துள சூழல் கண்டே,
மனந்திடங் கொண்டெ தழுந்த மாரதச் சிங்கம் அந்நாள்,
புனைந்தொரு புதிய வேடம், பூனைபோற் புலியை வென்றான்.

கூற்றுலாம் பகைவன் சூழல், குறட்டைவிட் டுறங்கும் போது,
நீற்றுருப் பூனை போல நெருங்கியோர் சாதுக் கூட்டம்,
காற்றெனப் புகுந்த துள்ளே...கனலெனச் சீறிக் கொல்ல,
வேற்றவர் குடல் கலங்கி வெருட்சிகொண் டோடி னாரே !

சேட்டனுஞ் சென்ன லேறித் திடுமெனக் குதித்த போது,
போட்டதோர் வலியவெவ்வாள் ; பொருக்கென வுயிரையேந்தி,
வீட்டினின் "றையோ" வென்றே விரல் இழந் திவன் எடுத்த
ஓட்டம்போய் தில்லி சுல்தான் உலைந்திட நின்ற தன்றே...

ஆக்ராச் சிறை தப்பல்

வெல்லுஞ் சேனையை வென்று முடித்தனன்,
கொல்லுஞ் சூழ்ச்சியைக் கொன்று முடித்தனன்.
இல்லை சாந்த மில்லாவழி யென்றந்தத்
தில்லிபன் அழைத் தான்சிவன் சென்றனன்.

அஞ்சறு வீரன் கண்டான் அரசனை ஆக்கிராவில் ;
துஞ்சறு சமயப் பற்றுந் துகளறும் எளிய வாழ்வும்,
மிஞ்சிய பாது ஷாவை வியந்தனன். பாதுஷாவும்,
நெஞ்சுரங் கொண்டான் செய்கை நேரிய தெனவுணர்ந்தான்.

நிறையுடன் இரண்டு பேரு நேசமா யிருக்கு நாளில்,
இறைவனும் வஞ்சர் சொல்லை யேற்றுநம் வீரர் ஏற்றைச்
சிறைசெய்தான் ; சிவாஜி வீட்டிற் “ சிவசக்தி காக்க ” வென்றே
முறையிட்டான் மோசஞ் செய்த மோசரைத் தப்பவேண்டி...
“ தருமத்தை நிலை நிறுத்தத் தாரக மாக முன்னோர்
நிருமித்த வழி நடந்தேன் ; நிறைவுநா ளின்னுங் காணேன்.
கருமத்தை முடிக்க வேயிக் கட்டினை யுதறிச் செல்லும்
மருமத்தை விளக்கிக் காவாய், மாசிவ சக்தி தாயே !”

ஆயிர மின்னல் போலே அன்னைவந் தபய மீந்தாள் !
போயது துயரம் ! சூழ்ச்சி பொலிந்ததும், அறிந்த வீரன்,
நோயெனப் படுக்க, நண்பர் நூறுபேர் சிகிச்சை செய்தார்....
வாயிலுந் திறந்தார் தந்தை மகனொடுந் தப்பு தற்கே......

விட்டது நோயென் றார்கள். வீரனைத் தில்லி மன்னன்
மட்டறு மகிழ்ச்சி காட்டிப் பார்த்தனன் ; மராட வீரன்,
“ இட்டமித் திரருக் கெல்லாம் விருந்துகள் இடுவேன் ”என்றான்...
கட்டளை யேற்ற தோழர் கனவிருந் தாக்கி னாரே.....

நேசர்க்குப் பண்ட மென்றே நெடியபல் கூடை சென்ற !
வேசையர் நடனக் கூத்தில் வெறிகொண்டார் காவலாட்கள் !
வாசலைக் கடந்து சென்ற வலியதோர் கூடை யென்னே !
தோசையென் றிருந்தார் மற்றோர் ; சூரனும் விடுபட் டானே!

மூக்கினில் விரலை வைத்தான் முகலவர் கோனும் ; வாயிற்
காக்குநர் தமையொ றுத்தான் ; காற்றினும் வேக மாக,
ஊக்கினன் ஒற்றர் தம்மை ; ஒருலட்சம் வராக னென்று
வாக்களித் தானவ் வீரன் சிரத்துடன் வருவா ருக்கே !...

*வாசியி லேறிய வன்றிறல் வீரன்,
ஓசனை நான்குற ஓர்வனம் புக்குப்
பாச மறுத்த பரங்களைக் கூடிக்
காசி யடைந்தனன் காவி யுடுத்தே.
ஐம்பொறி வென்ற வருண்முனி போலே,
கைம்மலர் தன்னிலோர் கப்பறை தாங்கி,
பொம்மக தேவவென் றையம் புகுந்தே,
செம்மல் சிவாஜி திரிந்தனன் சுற்றி.

* கலி விருத்தம்; மோகன ராகம்; ஆதி தாளம்

அறிந்தவர் போற்றி யறிந்தது சொல்லார்,
துறந்தவ னென்று பகைவர் துறப்பார்,
செறிந்து பிடிக்க வருஞ்சில தெவ்வர்
மறைந்தவன் போகிற மாய மறியார்.
தான்வரத் தானம் வழங்கு மனைவி,
தான்வரக் கண்டு தழைத்தன ளின்பம்,
கோன்வரக் கண்டு குளிர்ந்தது நாடு,
பூநகர் மீண்டு புரந்தனன் வீரன்.

சத்திரபதி

வெருவிய பாது ஷாவும், வீரனை வெல்லொ ணுமல்,
உருவிய சூழ்ச்சி வாளை உறையிலிட் டுண்மை யான
பெருமைகள் பேசி, மன்னர் பிரானெனும் பட்டஞ் சூட்டித்
திருவுடன் சுதேசங் காக்கச் செய்தனன் சேம மாக......

செருவினி லனுமான் வாழ்க, தீமையைச் செற்றேன் வாழ்க,
அருமருந் தனைய நண்பன், அரனருட் சக்தி மைந்தன்,
தருமத்தைக் காத்த தீரன், சத்திர பதிவாழ் கென்றே
திருமுடி சூட்டினர்சு தேசத்தார் கேச ரிக்கே.

கடமைக்குயிர் தருசேனையுங் கலங்காமன வுரனும்
திடபக்தியுஞ் செயல்வெற்றியுந் திருவோங்கிய புகழும்,
இடமேவிய வரசும்மிக வினிதாகிய குணமும்,
உடையான்உல கெக்காலமும் ஓதும்அதி மனிதன்.

அடிமைத்துய ரிருள்போக்கிடும் ஆண்மைச்சுட ரானன்.
இடருக்கெதிர் இடர்செய்துபே ரிடர்தீர்த்தினி தீந்தோன்,
வடநாட்டிலுந் தென்னாட்டிலும் கொடிநாட்டிய மன்னன்
இடிமின்புய லுடன்மாமழை யெனவேவினை புரிந்தோன்.

மக்களுக் கினிய தந்தை, மன்னவர் மன்னன், உள்ளப்
பக்குவ ஞானிகட்குப் பண்புள தொண்ட னானன்,
அக்கிர மங்கள் செய்யும் அரக்கனின் கால னானன்
சக்கர நெறிநின் றார்க்குத் தருமமே யானன் மாதோ !

தாயினுக் கினிய பிள்ளை, தந்தைக்குப் புகழைத் தந்தோன்,
நேயருக் கினிய நேயன், நிகரிலா வுலக வீரன்,
தூயனி ராம தாஸன் சொல்மொழி கேட்கு மன்பன்,
ஆயுளை யெல்லாந் தேச சேவைக்கே யளித்தான் மாதோ !

" இனையசி வாஜி மன்னன் வணங்கிய இராம தாசின்,
புனிதமாக் கதைசொல்"லென்று புனிதனுங் கேட்க,நல்லோன்
" இனிதினி துனது கேள்வி ; ஏகுவோம் ஐந்தால் ஆங்கே
முனிவரின் வாக்கி னலே முனிவரைக் கேட்போ" மென்முன்.

வாளினில் வீரன், போரில் வாகைகள் அணிந்த வீரன்,
தோளினில் அறஞ்சு மந்த துகளறு வீரன் ; பூமி
ஆளுறு வீரன், யோக பலத்தினுல் அடக்கித் தம்மை
ஆளுறும் வீர ருக்கே அன்புறு வீர னுனன்....

அத்தகை சிவாஜி யாக்கை அடங்கிய ராயக்கோட்டை
இத்ததி காணப்பெற்றேம் இதயத்தில் வீர மூற,
சத்திய தருமத்திற்கே தம்முயிர் வழங்கு இன்ற
உத்தம வீர ரிந்த வுலகுள மட்டும் வாழ்க ! 360

மாசறு வீரன் வாழ்வை மனமுறப் பருகிச் சுத்தன்
" பேசரும்பெருமைபெற்றபிரான்கதை செவியிற்கொண்டேன்
காசினி யனைத்து மிந்தக் கதையினுல் வீர சக்தி
ஆசியைப் பெற்று வெற்றி யடைந்திடு முண்மை" யென்றான்.

இன்ன சொல்லி முடித்திடு மெல்லையில்,
" என்ன கர்க்கண் இளமன் வரு" கெனக்
கன்ம மனக்கலி யன்கடி தந்தந்தே
முன்னின் றன்முக மூடிய தூதனே.....

இடமு நாளும் இசைந்திடின் உன்னகர்
உடன் வருவ துறுதியென் றன்புடன்,
விடை யெழுதி விடுத்ததும், சித்திமான்
கடிதின் ஒற்றரைக் காண்மினென் றேவினுன். 372

17. பஞ்சவடிப் படலம்

வேதங்கள் அனைத்தும் ஒன்றாய் விளம்பிடும் உண்மையான
ஆதிசுத் தான்மன் யானென் றறிந்திடத் தியான மோனச்
சாதனஞ் செய்து, முற்றிச் சகசநிட் டையில் விளங்கு
மாதவர் வாழும் பஞ்ச வடியினைப் புனிதன் கண்டான்.

உரையினுக் கரிய ஞானி யுளமென மலையும், ஆர்வக்
கரைபுரண் டோடுந் தெய்வக் கவியென விமலை யாறும்.
விரைமலர், கனியுங் காயும் விளைபசு வனப்பு மோங்கி
வரையறு தவத்திற் கேற்ற தண்டக வனமுங் கண்டான்.

வானமு மலையும் ஊட்டி வளர்த்திட, வளர்ந்து சென்றே,
நானிலப் பயிர்கள் ஓங்க, நல்லுயிர்க் குலஞ்செ ழிக்கத்
தானமாய்த் தன்னை நல்கித் தரத்தரத் தழைத்துப் பொங்குந்
தேனினு மினிய கோதா வரியெனுந் தெய்வ யாறே.

அரன்பொது மன்றில் ஆடும் ஆனந்தக் கூத்தைப் போலும்,
பரமனைப் பரவு கின்ற பக்தர்பா மாலை போலும்,
துரியரின் வீணை தண்டந் தொனிக்குமோங் காரம் போலும்,
விரியலைக் கரங்கள் வீசி விரைந்தது விமலை யாறே.

தாய்முலைப் பாலைப் போன்ற தளிரிளம் பயிரை யூட்டிக்
காய்கனி தானி யங்கள் கணக்கற விளைத்து நல்கித்
தேயத்தின் பசியை நீக்கித் திருவருண் முனிவ ருக்குத்
தூயநல் லுதவி செய்யுஞ் சுதந்தர வள்ள லாறே.

தீங்கனி ரசமும், வாச மலர்வனஞ் செழித்த தேனும்
தாங்கிடும் அமுத வெள்ளம், தங்கமும் பசிய சீரும்
ஓங்கிடு மிதன் பரப்பில் உலவிடு மனத்தி னுக்கு
நீங்கிடுங் கவலை, சாந்த விடுதலை நிலவு மம்மா !

பாருயிர் அறஞ்செ ழிக்கப் பாய்ந்திடும் விமலை யாறு,
கார்வரைக் கல்லு ருட்டிக் கான்மரம் பறித்து மோதிப்
போரலை விம்மப் போந்து பொருகடல் கலக்கு நீரால்,
வார்சிலை இராம னேவும் வானரப் படையை மானும்.

வரைகளிற் பொருளின் மாண்பும்,வனங்களிற் கலையின் மாண்பும்
திரையெழுந் தோடும் ஆற்றிற் செவ்விய சொல்லின் மாண்பும்
கரையிலா வுயிரின் போக்கிற் கலந்திடும் பண்புங் கொண்டே
உரைமிகும் ஐந்தால் வேத வுருவென விளங்கிற் றம்மா !

போட்டிபொ றாமை கோபம் போர்,செருக் கோங்கி நெஞ்சை
வாட்டிடும் உலகை நீத்து, வஞ்சமில் நதியும், புள்ளும்,
பாட்டிசை வனத்திற் பாலும் பழங்களுந் துய்த்து மேலோர்,
நாட்டிசை யோங்க நல்ல கலைகளை நல்கி னாரே !

திருவுறு மாந்த ருக்குச் செந்நெறி யிலகக் காட்டிப்
பருவநன் மழையைப் போலப் பயன்மிக விளைத்து, நாளுந்
தருமமுங் கலையுந் தந்த தபோவன முனிவ ருள்ளம்
உருவுகொண் டொழுக்க முள்ள வுலகென விரிந்த தம்மா !

இத்தகை வனத்தி னூடே, யியற்கையின் அழகிற் சொக்கி,
சித்திமான் அரிய காட்சி திசைதொறு மினிது காட்ட,
சத்திய மைந்த னுக்குச் சாதுக்கள் வரவு கூற,
சுத்தனும் வணக்க மாக முனிவரைத் தொழுது சென்றான்.

எழிலுறும் இயற்கை யன்னை, யினமலர் நகை குலுங்க,
கழிபெரும் உவகை தூண்டக் கானமா வரவு கூற,
பொழிலுறு கனியு திர்த்துப் புள்ளினந் தென்ற லோடும்
வழிநடைப் பாட்டொ லிக்க வரதனும் வழிந டந்தான்.

மாரத வீரர் முன்னே வழியினைத் துலக்கிச் செல்லத்
தேர்பரி கரிகள் சூழத் திருநெறி முனிவர் கூடி
ஆரணங் கூறி வாழ்த்தி, யமைதியாங் குடிலில் ஏற்கப்
பாரணங் கீன்ற தூய பாக்கியன் இனிது சென்றான்.

சாந்த முனிவர் ஆசிரமம்

கலகலப் பாகப் புட்கள் கனிவிருந் துண்டு பாடிக்
குலம்வளர் குஞ்சைக் கொஞ்சிக் கூடுகள் கட்டி வாழும் ;
கலையினங் கட்டி லாத கன்றினத் துடனே யாடும்,
இலையினக் குடில்கள் காணும் சோலையொன் றெதிரே கண்டான்

ஆலுடன் வேம்பும் கூடி யாக்கிய நிழலிற் காணும்
வேலுடன் அமைந்த கூரை வீட்டினுள் வீற்றி ருக்கும்,
சால்புடை அந்த ணாளன் சாந்தமா முனிவன் ; அன்னோன்
கால்படு துசி யாமோ கணக்கிலா நூற்கு நூமே !

உளங்குளிர் காட்சி யாளன், ஒருமையி லூன்றி நாளும்,
வளங்கொளுந்தவத்தின்மிக்கோன், வாய்மையே வடிவமானோன்,
விளம்பர மெதுவு மின்றி வியன்செயல் பலவுஞ் செய்தோன்,
இளம்பொலி வுடைய மூத்தோன் இருடிகட் கிறைவ னாவான்.

முன்ரகு ராமன் பின்னே இராமதா சனைய சித்தர்,
மன்னிநின் றரிய தூய மாதவம் புரிந்த சூழல்.
இன்னவன் வாழு மிந்த நிலயமே யென்னின் வேறு
பன்னுவ தென்னே யென்று பழுதிலார் பரிந்து சொன்னார்.

"பாக்கியம் பழுத்த" தென்னப் பகரவும் புனித னங்கே,
ஊக்கிய வுவகை யோடும், உத்தமச் சீடர் ஏற்றார்.
நோக்குயர் முனிவன் முன்னே, நுவலரு மின்ப வெள்ளந்
தேக்குறத் தொழுது நின்றான், சித்தரி னுள்ளந் தேர்ந்தான்.

சுத்தன்

''உலகெலாங் கோயி லாகி, உயிரெலா மேனி யாகிப்
பலபல தோற்ற மெல்லாந் தன்னருட் பான்மை யாகி,
அலைமனம் அடங்கி நிற்கும், அமைதியில் ஒருமை யாகி
நிலைபெய ராத வுண்மை நேயனே போற்றி போற்றி !''

''ஆய்வுறுங் கலைக ளெல்லாம் அருக்கன்முன்மீன்கள்என்னத்
தேய்வுறச் சுடரும் ஞானச் செங்கதிர்ப் பிழம்பே ! என்றன்
வாய்மனங் கடந்த மோன வானமே ! தானே தானாய்த்
தோய்வுற வுலகில் ஐந்து தொழில்புரி யருளே போற்றி !''

சாந்த முனிவன்

மாசிலான் போற்றிட மகிழ்ந்து மாமுனி
"காசினிக் கருட்சுடர் காட்ட வந்தனே,
தேசுற வாழ்கநீ தெய்வ மைந்த" வென்
ருசிகள் கூறினன், அன்பு பொங்கியே !

"வந்தனே தசரத ராமன் வந்தநாள் ;
சிந்தனைக் கினிய நீ ; செகத்தின் மிக்கநீ,
முந்தவன் கார்முகம் முடித்த செய்கையை
இந்தநாள் யோகத்தால் இயற்றுவாய்" என்றான்.

"கலியனென் றொருபெருங் காதகப் பதர்,
அலகறும் அரக்கரை அதர்ம வீரரைப்
புலிநரிக் கூட்டம்போற் புகுத்தி யிங்குமே
கலகங்கள் செய்வதைக் காணுவா" யென்றான்.

"செருக்குடன் பீரங்கித் திமிரும் கொண்டவன்,
உருக்கினல் உலகினை வெல்லும் உள்ளத்தான் ;
கறுக்கொண்டு மாந்தரைக் கருவ றுத்திட
உருக்கொண்ட மாவலிக் குடந்தை யானவன்."

"இன்றுநீ யிலகிடு மிவ்வி டத்திலே,
அன்றிருந் தரக்கரை யழித்த ராகவன்,
ஒன்றியுன் னுளத்தினில் ஊன்றி நல்லறம்,
வென்றிட வருள்"கென விரதன் கூறினன்.

முனியுரை வாசகம் முற்றுங் கேட்டு,நம்
இனியனும் இனிவரும் வினையை யெண்ணியே
"கனிதவ முற்றிய கரும வீரனுய்ப்
புனிதவுன் னுசியாற் பொலிவன்" என்றனன்.

"தூண்டிய கருமமுந் துணிந்த தைச்செய
வேண்டிய தருமமும் விளங்க வூக்கிடும்
மாண்டகு ராமனின் மாண மெய்க்கதை
ஈண்டெனக் கிசைத்திடின் இனிய தா" மென்றான்.

"அன்னதே யின்றெனக் கமைந்த பாக்கியம் ;
மன்னனும் அமைச்சனு மனமு வந்துடன்
என்னுடை யெளியநல் விருந்தை யேற்" கெனும்
முன்னரே யொருதிரு முகம்வந் தேற்றதால்.

கௌரி

மங்கலப் புன்னகை மலர்ந்த பொன்முகம்,
பங்கய வேல்விழி, பவள மூரல்வாய்,
பொங்கிள மயில், குயில், அன்னம் போன்றவள்
புங்கவன் அருளினிற் பொலியுங் கௌரியே.

நீண்டநாள் அறிந்தவன் போல நின்மலன்
காண்டலுங் கருத்தினைக் கவர்ந்த கண்ணினாள்,
ஈண்டிய வுவகையள், இனிய தேனுபோல்
வேண்டிய வேண்டுமுன் விரும்பி யீந்தனள். 120

முக்கனி யமுதினை, முதிர்ப ருப்பினைப்
பக்குவ மாக்கிய பச்சி லைகளை
அக்கணங் கறந்தநல் லாவின் பாலினை
இக்குவின் சாற்றுடன் இனிது தந்தனள்.

அமுதளி யமுதினை யமுது செய்தவர்,
குமுதநாண் மலர்நகை கொண்டு சென்றதும்,
அமைதியாய் அவரவர் அலுவல் ஆனபின்
சமரச முனிவனைச் சார்ந்து கேட்டனர். 128

18. இராமாயணப் படலம்

கதைதரு முனிவன், செஞ்சொற் கவிக்கலை தந்த கம்பன்,
விதவித நீதி சொல்லும் வித்தகத் துளசி தாசன்,
மதிமிகு புலவர், நாட்டு மக்களெல் லாரும் போற்றித்
துதிமிகும் இராம நாமம் சொல்லுவார் வெல்லு வாரே.

நிலமகள் இயற்றி வந்த நீண்டபுண் ணியங்க ளெல்லாம்,
நலமுறு மிராம னென்னு நாமத்தால் அவதரித்து,
கலகமுங் காமநோயுங் கடுந்தவச் செருக்கும் பூண்டார்
பலமதை நலித்த றத்தைப் பாலித்த சரிதை கேளீர் !

இராவணன்

செவ்விய கேள்வியாளன், சிவனிடம் வரங்கள் பெற்றோன்,
ஒவ்வருந் தவத்தின் மிக்கான், உயர்மலை பெயர்க்க வல்லான்,
அவ்வியம் காமங் கோபம் அகந்தையின் வடிவ மானான்,
இவ்வுல கதிர வைத்த இராவணன், இலங்கைக் கோமான்.

கைகசி விச்சிர வசுவைக் காமுற
எய்திய மூத்தவன், இவன்பின் வந்தவர்—
மெய்ம்மனக் கும்பகன், விரகச் சூர்ப்பணை
செய்யவி பீடணன் சிறந்த சிந்தையான்,

குணத்திலுந் தவத்திலுங் கொடிய கொள்கையர்,
நிணத்திமிர் பிடித்தவர் நிருத ராயினர்
இணக்கமும் வணக்கமு மெய்தி, யிந்நிலந்
துணுக்குறக் கிளர்ந்தனன் சூழ்ச்சி மிக்கவன்.

கலைமிகக் கற்றவன், சாம கானனும் ;
தலையினைத் தந்தும்வெந் தவமி யற்றினேன் ;
மலையினைச் சிலைசெய்த மங்கை பாகன்பால்,
அலைவறு மாயுளும் வாளும் ஆர்ந்தனன்.

தேவரு மாந்தருஞ் செய்ய தூயரும்,
யாவரும் வெருவிடத் திக்கின் யானையும்
சோவுறத் துன்பமே துணிந்து செய்தனன்,
தாவுறு மனத்தினைத் தடுக்க லாற்றிலான்.

வன்பகை விளைப்பதும், ஒருவன் வாழவே
மன்பதை பதைத்திட வதைகள் செய்வதும்,
அன்பதை யறிந்தர சாள வேண்டிலார்
புன்பகை நெஞ்சினிற் போந்த போரன்றோ ?

நீதியும் இரக்கமும் நேர்மை யும்இலா,
வேதியன், வேதத்தை விளம்பக் கற்றவன்,
பூதல மெங்குமே புகழ்கண் டின்புற
வாதனை யாகிய வழியைப் பற்றினன்.

கடக்கரும் இலங்கையைப் பாது காத்தபின்,
வடக்குறு தண்டக வனம் வரைக்குமே
அடக்குறு முறைகளுக் கடிமை செய்தனன்,
விடக்கரும் பாம்பெனும் வெய்யர் சேனையால்.

காற்றிற்குங் கடலுக்குங் ககன ராசிக்குங்
கூற்றிற்குங் கட்டளை குறிக்க முன்னின்றான்,
நாற்றிசை மனிதரை நரரென் றெள்ளினன்,
போற்றிய பொருவலி யரக்கர் போற்றவே.

கோபத்தைப் பெருக்கிய கொடிய வாழ்வினல்,
ஆபத்தைப் பெருக்கினன் ; ஆன்ற சான்றவர்
சாபத்தைப் பெருக்கினன் ; சதைச்செ ருக்கினற்
பாபத்தைப் பெருக்கினன், பகைபெ ருக்கினன்.

அதஞ்செயும் அரக்கனை யடக்கி வீழ்த்திட
நிதந்தவ முனிவரு நிகரில் வீரரும்,
கதந்தர வெழுந்தனர் ; கனலைப் போல்வளர்
சுதந்தர வுணர்ச்சியுந் தோல்வி காணுமோ ?

இடருறு முலகெலாம் " இனிச்செ யலிலோம்
கடவுளே வந்தெமைக் காப்ப துன்பரம்,
விடுதலை விடுதலை " என்று வீறிட்ட
கடுமையே கார்முகங் காட்டி வந்ததால்.

இராமன் இளமை

மன்னுயிர் நன்மையே மகுடந் தாங்கிடுந்
தன்னுயிர் நலமெனுந் தசரதப் பெயர்
மன்னவன் மரபொளிர் மைந்தர் நால்வருள்,
முன்னவன் இராமனக் கருணை மூர்த்தியாம்.

ஈன்றனள் இராமனை யினிய கோசலை ;
ஈன்றனள் பரதனை யிளமென் கைகசி ;
ஈன்றனள் சுமித்திரை இலக்கு வனுடன்
சான்றவர் போற்றிடச் சத்து ருக்னனை.

குவலயம் வருந்திய கொடிய துன்பங்கள்,
கவலைகள் யாவையும் கதிர்முன் வெண்பனித்
திவலைக ளாயின. சேம மேயினி
நவிலுவ மென்றனர் நல்ல வீரரே.

வன்றவன் வரமுனி, வன்பு லன்களை
வென்றவன், ஆத்தும வீரன், யோகத்தில்
ஒன்றிய வசிட்டனே, உயர்ந்த கல்வியை
நன்றிளஞ் சிறுவர்க்கு நல்கி னனரோ.

அன்றிளம் இராமன்கை அம்பும் வில்லுமாய்
நின்றதைக் கண்டவர், " நிருதர் யாவரும்
பொன்றினர்.........பூமகள் புண்ணி யங்களே
வென்றன " என்றனர், வென்றி வீரனுல்.

முனிவன் வேள்வி நிறைவேற்றல்

அருங்கலை யகலமும், அறிவின் ஆழமும்,
ஒருங்குயர் ஒழுக்கமும், ஓங்கு மைந்தரைப்
பெருங்களிப் பெழுந்திடப் பேணுந் தந்தைபால்,
வரந்தரு கௌசிகன் வந்து நின்றனன்.

" அன்புடன் மக்களை யாளுங் காவலா,
வன்பகை யரக்கரென் மகங் கலைக்கின்றுர்.
உன்முதற் செல்வனை யுதவு வாயுடன்,
என்வினை வென்றிடும் " என்று சாற்றினுன்.

" கண்ணினும் உயிரினும் காதல் செய்மணி
வண்ணனை யொருகணம் பிரிந்து வாழ்கிலேன்.
எண்ணிய கருமத்தை இயற்ற நானுளேன் ;
திண்ணமி தென்றனன் " திகைத்த தந்தையே.

கேட்டதே கேட்டிடக் கேடில் மாமுனி,
வாட்டத்தைத் தவிர்த்திட வசிட்டன் மெய்யுரை,
கோட்டமில் மனத்தனுய்க் கொண்டல் வண்ணனைக்
காட்டக முனிவனின் காப்பி லீந்தனன்.

பிரிவறு தம்பியும் பின்றெ டர்ந்திட,
நரிபுலிக் காட்டிடை நடக்கு மெல்லையில்,
கரிபொரு தாடகி, கண்ட மூவரை
எரிபசிக் கடைப்பனென் றெதிர்ந்து சீறினுள்.

" கொல் " எனக் குருமுனி, கொடியள் மார்பிலே
சொல்என இராமனின் சுடுச ரம்புக,
நல்லருள் கூடிட நலியுந் தீமைபோல்,
பொல்லவள் வீழ்ந்தனள் புழுதி மண்ணிலே.

" பின்னுறும் பேரிசை பெருகுஞ் செய்கையை
முன்னுற விளக்கினே, மூரி வில்லனே,
என்னுடை யாசிகள் ஏற் " கென் றேமுனி
தன்னுடை மந்திரக் கணையுந் தந்தனன்.

வீழ்த்திச்சு பாகுவை விரிக டலிலே,
ஆழ்த்திமா ரீசனை அம்பின் வேகத்தால்,
காத்தனர் இருவருங் கண்ணி மையென
வாழ்த்திடு முனிவரன் வளர்த்த வேள்வியை.

மகத்தினை முடித்தபின், மனதிற் பற்றறச்
சகத்தினைத் தாங்கிடுஞ் சனகன், " என்னகர்
அகத்தியம் வருக " வென் றழைக்க, மாமுனி
உகப்புடன் செல்வரை யுடன்கொண் டேகினுன்.

அகலிகை சாபம் தீர்த்தல்

செல்வழி, செம்மலின் சேவ டித்திறன்
கல்லினின் றகலிகை யுயிர்க்கக் கண்டதால்...
தொல்முனி-சாபத்தைத் துடைத்த தேவனை
நல்லணங் கிவ்வகை நவின்று போற்றினுள் :

" விண்ணர சிந்திரன் வேட்கை கொண்டதால்,
பெண்ணறம் பிழைத்தனன். பேதை செய்கையைக்
கண்ணுறு கௌதமக் கணவன் சாபத்தால்
மண்ணினிற் கல்லென மாறி நின்றனன்.

" கார்மணி வண்ணனே, கருணைக் கண்ணனே,
பார்தொழும் வள்ளலே, பதும பாதத்தின்
ஓர்துகள் பட்டிட வுயிர்த் தெழுந்தனன்
தீர்வதென் பாபமும் ; திருந்தி வாழ்கின்றேன்...."

இல்லறத் திருவினை யில்லஞ் சேர்த்ததும்,
செல்வரும், தவமுனி செப்புங் காதையால்,
ஒல்லையிற் றெருலைகடந் தூயர் மணிக்கொடி
நல்வர வேற்றிடு மிதிலை நண்ணினுர்.

சீதாராமர் திருமணம்

சகத்தினை யறிந்தவன் ; சகச ஞானமாம்
சுகத்தினை யறிந்தவன் ; சுடரும் பேரின்பம்
இகத்தினில் அரியணை யிருந்த தன்னவன் ;
மகத்தினிற் பெரியவன் சனக மன்னனே.

ஆயவன் முகமலர் அன்பு கூறிடத்
தூயனைக் குமரரைத் துதிகள் சொல்லியே
ஏயநன் முறையினில் ஏற்று, நட்பினுல்
நாயமா யறிவன நன்ற றிந்தனன்.

" நல்லறம் பெருகிடும், ஞால மின்புறும்
இல்லறம் பெருகுமென் இளமென் சீதைக்கும்—
வல்லநீள் வில்லொன்றை வளைக்க வல்லையேல்,
தொல்பெரும் அயோத்தியின் சோதி மைந்தனே !

இட்டமி " தென்றிடச் சனகன், ஏறுபோல்
சட்டெனத் தாவியி ராமன் வில்லினைப்
பொட்டென வளைத்தனன் ; கணையைப் பூட்டுமுன்
பட்டென முறிந்ததப் பண்டை வில்லுமே !

வீரரும் வேந்தரும் வியந்து போற்றியித்
தீரனே யமைந்தவன் சீதைக் கென்றனர்.
வார்முர சியம்பின ; மணவி ழாவணி
ஊரெங்கும் விளங்கின ; உளங்கள் பூரித்த.

கேட்டதுந் தசரதன் கிளர்ந்து பொங்கிக்கொண்
டாட்டமும் பாட்டமும் அணியுஞ் சூழ்ந்திட
நாட்டுடன் மிதிலையை நண்ணிச் சீதையை
வேட்டிடும் வீரனை " மெய்ய, வாழ் " கென்றுன்.

ஆரழ தனைத்துங் கூட்டி அருளமு துடனே வேதா
வாரிசத் திருவின்மிக்க வடிவினை யமைத்த தன்னுள்,
பூரண மதியு, மானும், பொன்னிள மயிலும் போன்றுள்,
தீரனுக் கேற்ற கற்புத் தீபமே யனையாள் சீதை.

வாய்மையுந் திருவும், வீர வடிவுகொண் டறத்தைக் காக்கத்
தாயுளம் பூண்டு வந்த தசரத ராமன், அன்பர்
நேயன், அதருமக் காட்டை நீறுசெய் கனலே யன்னான்,
மாயிரு ஞாலம் தெய்வ மணியென வணங்குந் தீரன்.

கண்களாற் கண்ட போதே, காதலாற் கருத்தொன் றான,
பெண்சக்தி வீர ராமன் இருவரும் பிரியா தொன்றிப்
புண்ணிய யோகம் போகம் பொருந்திய காட்சி போன்றார்
மண்ணுல கெல்லாம் வாழ்த்தி மங்களங் கூற மாதோ !

இவ்வணந் தம்பி மாரும் இல்லற மேற்ற பின்பு
திவ்வியக் கோலங் கொண்டு திரும்புழி, பரசுராமர்
வெவ்விய செருக்கை ராமன் வீழ்த்திட, வெற்றியோங்கிச்
செவ்விய நகரஞ் சேர்ந்து, சேமமாய் வசித்தார் சின்னாள்.

இராமன் துறவு

யாக்கையும் அதனைச் சுற்றும் யாவையும் குமுறுங் காலத்
தீக்கிரை யாகுமென்று தெரிந்தறம் புரிந்த தந்தை,
வாக்குயர் அமைச்சர் ஒப்ப, மணிமுடி மகனுக் கீந்து,
நோக்குயர் யோகஞ் செய்ய நோக்கினான் பிறவி தீர.

நீடுலாம் அரச நீதி நெறியினை வசிட்டன் சொல்ல,
நாடெலாம் இராம னாரு நாளெதிர் பார்த்து வந்து,
வீடெலாம் விருந்து செய்ய, வீதிகள் அலங்க ரிக்க,
கேடெலாங் கொண்டு வந்தாள் கெடுமனக் கூனி யந்தோ!

வாட்டிய பொறாமைத் தீயைக் கைகசி மனத்தில் மெல்ல
மூட்டி " நீ தசர தன்பால் முன்னிரு வரங்கள் பெற்றாய் ;
நாட்டையுன் மகனே யாள நம்பியும் பதினான் காண்டு
காட்டினை யாளச் செய்வாய் கணவனைத் தூண்டி" என்றாள்.

சாகசத் தாலே யன்புத் தலைவனை வசப்ப டுத்திக்
கேகயி வரத்தைப் பெற்றாள் ; இராமனுங் கேட்கச் சொன்னாள் ;
சோகமுற் றயர்ந்த தந்தை சொற்படி காடு செல்லத்
தாகமுற் றெழுந்தான்; வீரத் தம்பியுஞ் சினந்தெ ழுந்தான்.

இலக்குமணன்

" பெண்மொழி கேட்டுத் தந்தை பிதற்றினான். எதிர்த்து நிற்கும்
விண்ணையும் வீழ்த்தி யுன்னை வேந்தனாய்க் காண்பல் யானே;
அண்ணனீ யாள வேண்டும் ; அரணியம் செல்ல வொட்டேன்.
எண்ண நீ மாற்றி " டென்றான் இலக்குவன் அலக்க ணுற்றே.

இராமன்

" நல்லதே சொன்னுன் எந்தை. நல்லதே செய்தாள் எந்தாய்.
நல்லதே விளையு மின்று நாடிகந் தடவி சென்ருல் ;
அல்லலைப் போக்குந் தூய தவப்பய னுகும் ; இந்த
வில்லிற்கு மினிதே தம்பீ ! வெகுளலை " யென்ருன் வீரன்.

' நானுனைப் பிரியே ' னென்று நடந்தனன் இளவல் பின்னே,
' நானுடல் உயிர் நீ ' யென்றே நடந்தனள் சீதை முன்னே ;
ஏனையோர் மனதை யாற்றி, இடர்க்கண்ணீ ராற்றைத் தாண்டி,
மோனஓங் காரம் போலே மூவருங் கானஞ் சென்ருர்.

இழந்தனர் மக்க ளின்பம், இழந்த தயோத்தி சாந்தம்,
இழந்தனன் இறைவன்ஆவி இத்ததி; பரதன் வந்தே,
இழந்தனன் பொறுமை ; அண்ணல் ஏகிய வழியே சென்ருன்.
இழந்தனள் இடர்கட் கெல்லாம் இறைவிகை கேசி யெல்லாம். 200

பரதன் விரதம்

பத்தியும் பணிவு மிக்க குகன்விடும் படகி லேறி,
முத்திறை கங்கை தாண்டி, மூவரும் வனம் புகுந்தே,
சித்திர கூடந் தன்னிற் சிந்தையற் றிருக்கும் போது,
சத்தியப் பரதன் வந்து சரண்புகுந் தினைய சொன்னுன் :—

" அன்னையென் றென்னைப் பெற்ருள், அறிவிலி யாசைப் பேயே ;
என்னுயிர்க் கின்னல் செய்தாள் ; என்னுயிர் தன்னின் மிக்க
உன்னுயிர்க் கின்னல் செய்தாள் ; உன்னிடை யுயிராந் தந்தை
தன்னுயிர் பிரித்தாள் ; இன்று தருமமும் கலங்கும் அண்ணு !

அரசினை யாளவாராய் அண்ணலே; காட்டி லேயுன்
மரவுரிக் கோலங் காணேன். மனதுசற் றிளகா யாகில்,
விரதம்பூண் டிளவ லோடுன் பணிசெய விருப்ப" மென்னும்
பரதனைத் தேற்றி நம்பி பரிவுட னினைய சொன்னுன்:

" கோதிலாய், தந்தைசென்ருர், கொடியனேன் பெயரைக் கூவி ;
மாதவஞ் செய்தோர் சொல்லை மறுவறக் கடைப் பிடித்தே
போதரு வேன யோத்தி ; புரிதிநீ யரசெ"ன் றீந்த
பாதுகை சிரத்தி லேந்திப் பரதனுந் திரும்பி னுனே.

அண்ணலின் பாத ரட்சை யரியணை வகிக்க நாளும்,
கண்ணுகு நீரி னுலே கழுவிநாண் மலர்சொ ரிந்தே.
புண்ணியப் பரதன் நந்தி கிராமத்தில் விரதம் பூண்டு,
மண்ணறங் காத்து மன்னன் வரவினைப் பார்த்தி ருந்தான். 220

பஞ்சவடி செல்லல்

வற்கலை யணிந்த தூயர், வனம்வனந் திரிந்து, யோக
நற்கலை யணிந்த சித்தர் நல்வர வேற்றுப் போற்ற,
முற்கலைத் தமிழளித்த முனி,மொழி யுடனே தந்த
பற்பல பகழி தாங்கிப் பஞ்சமா வடிய மர்ந்தார்.

பூரண யோகஞ் செய்யும் புண்ணிய முனிவர் கூடிப்
"பூரியர்,அரக்கர் செய்யுங் கொடுமையைப் பொறுக்க மாட்டோம்
கார்நிகர் கருணை வள்ளால் காப்பதுன் பாரம்" என்ன,
வீரனும் வில்லு யர்த்தி விளம்பினன் அபய வாக்கே!

"திண்புய முண்டு; வீரத் தினவுறு வில்லும் உண்டு;
பண்புறு சொல்லு முண்டு; பழுதறு தரும முண்டு;
தண்புவி வாழத் தீய தறுகணர் வீழக் காலம்
அண்மையில் வந்த தாலே அஞ்சலிர்; அபய மீந்தேன்!

"வேதத்தைப் படித்தோ ரேனும், வேள்விகள் செய்தோ ரேனும்,
பூதலம் வென்றோ ரேனும், புகழ்பல படைத்தோ ரேனும்,
நீதியுங் கற்பு மில்லா நீசரை நீறு செய்தும்
வேதனை தீர்ப்பேன் இந்த விரதமென் சரித" மென்றான்.

எண்டிசை யெதிரொ லிக்க வியம்பிய சபதங் கேட்ட
தண்டக வனத்தி லுள்ள தவமுனி வோர்க ளெல்லாம்,
"பண்டறங் காக்க வந்த பகவநீ வாழ்க! வீரக்
கொண்டலேவாழ்க! உன்னாற் குறையிலோம்" என்று சொன்னார்.
240

சூர்ப்பணகை

கண்ணிலாக் காம நோயே காதகக் குல மழிக்கப்
பெண்ணுருத் தாங்கிச் சூர்ப்ப ணகையெனும் பெயரும் பூண்டு
மண்ணிடைப் பிறருக் கான மாதரை யன்னை யென்றே
யெண்ணுறு மிராமன் முன்னே யிளநகை புரிந்த தம்மா!

காவியப் புலவர் செய்யுங் கற்பனை கடந்த தீரன்,
ஓவியப் புலவர் காணு வுட்புற வழகன் மேலே,
ஆவலாய் வந்தாள். ஆசை அவலமாய்ப் போகச் சீதா
தேவியைக் கொல்ல வெய்ய தீவிழி பார்த்து நின்றாள்.

வம்புசெய் யரக்கி மாயம் வார்த்தையால் அடங்கா தென்றே
தம்பி,மூக் கறுத்தே யோட்டித் தமயனின் மானங் காத்தான்;
வெம்பிய மூளி மீண்டும் வெங்கர தூட ணாதிக்
கும்பலைத் தூண்டி விட்டாள்; கோதண்ட விருந்திற் கம்மா!

பொம்மெனப் பொருத தீயர் பொடிபட முடித்தான் வீரன் ,
இம்மெனச் சினந்த ரக்கி யிலங்கைசென் றண்ணன் முன்னே,
விம்மினுள்; விளைந்த தெல்லாம் விளம்பினுள்; " அந்த வீரச்
செம்மலென் கணவ ளுகச் சீதையைக் கொள்வா "யென்றுள்.

" பூதலம் போற்றுகின்ற பூவையர் திருக்க ளெல்லாம்
சீதையாய்ப் போந்த தந்தச் சித்திரத் தெழுத வொண்ணு
மாதினைக் கொணர்ந்தாயாகில்,வாழ்ந்துபோம் இலங்கை" யென்று
போதனை புரிந்தாள்; அண்ணன் புத்தியுங் கெட்ட தம்மா !

" மலைபெயர் வீரன், யானம் மாதினைப் பெயர்க்க வல்லேன்
கலைதெளி புலவன், அன்னுள் காதலைப் பெறவும் வல்லேன் ;
இலையொரு தடையிங் கென்னை யெதிர்ப்பவ ரில்லை " யென்றே
தலைகிறு கிறுக்குங் காமத் தணலெழ விரைந்து சென்றுன்.

மாய மான்

பிறகுறும்போரையெண்ணுன் பெண்மையின்சிறப்பை யெண்ணுன்
உறவுள தங்கை நாசி யுரைத்திடும் கருத்தை யெண்ணுன்,
அறமறு காம நோயால், அறிவிழந் தரக்க னுள்ளம்
பிறமனை புகுந்த போதே பிடித்தது சனிய னம்மா !

மானத்தை யுதறியே, விமானத்தி லேகி, மாய
மானைவிட் டதைத்து ரத்தி, மான்விழி மனுளன் ஏகத்
தானெரு துறவி வேடந் தரித்தொரு நொடியி லிங்கே
சானகி தனைக் கொணர்ந்து, சாந்தமா யிருக்கச் சென்றுன்.

வந்தது, சீதை நெஞ்சைக் கவர்ந்தது மாய மானும் ;
பிந்துறு சூழ்ச்சிநோக்காள், "பிடித்ததைத்தருக" வென்றுள்.
தந்திர மானுந் தாவித் தாவிமுன் னேட, ராமன்
பந்தெனத் தாவிச் சென்று பாணம்விட் டதனைக் கொன்றுன்

நெடுநெறி யிழுத்துச் சென்றே, யிளவலை நீளக் கூவிச்
சடுதியி லிறந்த மானின் சத்தங் கேட்டுலைந்த சீதை
" கெடுதலே வந்த தாங்கே கேள்வனே கூவுகின்றுன் ;
கடுகிடு கொழுந்த " வென்றே கட்டளை யிட்டா ளம்மா !

இராவண சந்நியாசி

சினமுங் காமமும் சேர்ந்து கலகஞ்செய்
மனமறைத் தொரு மாயத் துறவியும்,
தனிமை கண்டு, சனகியை யண்மிமுன்
இனிமை பேசி யிராவணங் காட்டினுன்.

சாமி யென்றுப சாரஞ்செய் தாயினைக்
காம ராட்சசன் கையுடன் அள்ளியே
பூமி யஞ்சிடப் பூவை புரண்டழ,
நாம வேலை யிலங்கையை நாடினன்.

வீர நண்பன் சடாயு " விடேன் " எனப்
பார் மகளை விடுவிக்கப் பாய்ந்தனன் ;
ஓரி ரத்தத் துளியுள மட்டிலும்
போர் கொடுத்துப் புகழினைத் தாங்கினன்.

இராமன் சோகம்

தாவு மான்விழத் தம்பியும் வந்ததும்,
தீவி னையெனச் சீதை மறைளனும்,
காவ லற்ற குடிலைக் கடுகினன்.
" ஆவி போயது வே!"யென் றலறினன்.

கானின மரங்காள், செய்ய கனியுண்டு பாடும் புட்காள்,
மானிளம் பிணைகாள், மஞ்ஞை வளர்மலை யருவி யீரே,
வான்சுடர் மணிகாள், உங்கள் வனப்பினும் வனப்பு மிக்க,
தேன்மலர்த் திருவென் சீதை சேர்திசை யறிகிலீரோ ?

ஓடினன், அங்கு மிங்கும் உயிரனை யாளைக் கூவித்
தேடினன் ; உயிரொ டுங்குஞ் சடாயுவாற் செய்தி கேட்டு,
வாடினன் ; அள்ள வந்த கவந்தனை மடித்தான் ; அன்பு
கூடிய சபரி காட்ட வானரர் குன்றஞ் சேர்ந்தான்.

வானர வீரர்

மலைவளர் மல்லர், வீர வானரர் ; சுயேச்சை மிக்கார் ;
கொலைவளர் கொடுங்கோ லுக்குக் கூற்றனர்; அரக்கர் வாழும்
அலைவளர் இலங்கைக் கோமான் அஞ்சிடும் ஆண்மை யாளர்,
நிலையறம் வாழவாழு நெறியினிற் சிறந்தார் மன்னே !

சுக்கிரீவனுக்கு முடி சூட்டல்

மதிமிகு பலவான் வீர மாருதி யெம்பி ரானைத்
துதியுடன் வணங்கி, "யெங்கோன் சுக்கிரீ வனுக்கு மூத்தோன் ;
கொதிமன வாலி, செய்யுங் கொடுமைகள் தாங்கோ " மென்னக்
கதிதரும் வள்ளல் "அன்பீர், சுதந்தரங் காண்பீர் " என்றான்.

தாரத்தைக் கவர்ந்து, தம்பி தலையையுங் கொய்ய வேயாங்
காரத்தைக் காட்டிப் போர்செய் கடுமன வாலி தன்னை,
வீரத்தைத் தீட்டி, யம்பால் வீழ்த்திச்சுக் ரீவ னுக்கே
காரொத்த கருணை நாதன் கனமுடி சூட்டி னனே.

நன்றியும் நடையு மிக்க நண்பனும் சுக்கி ரீவன்,
வென்றிசெய் யிராம னாணை விருப்புடன் சிரமே லேற்று,
வன்றிறல் கொண்ட வீர வானரப் படையை விட்டான் ;
தென்றிசைஅனுமான் சென்றான் சீதையைத் தேட மாதோ !

இராம தூதன்

ஆழியான் ஆழி பெற்றே ஆழியை யனுமன் றாண்டி
ஊழ்வினை சூழி லங்கை யூரெலாந் தேடித் தேடி,
பாழ்மன வரக்கன் சோலை பத்தினித் தெய்வங் கண்டு,
"வாழியி ராம" னென்றோர் மரத்திடை மறைந்தி ருந்தான்.

துரும்பே !

பாவியர் பயமுறுத்தப் பதியினை யெண்ணி யெண்ணி,
ஆவிசோர்ந் துடலி ளைத்தே யங்கணீர் பெருகி வாடுந்
தேவியை யந்த வேளைத் திருவிலி யரக்கன் பார்த்தே
நாவினா லிரந்து, பின்னே நடந்ததை யனுமன் கண்டான்.

"வெள்ளிமா மலையெடுத்தேன், வேழங்க ளெட்டும்வென்றேன்,
தெள்ளிய மறைகள் கற்றேன், தேவரை யேவல் கொண்டேன் ;
வெள்ளநீ ருலகை யாளும் வேந்தன்யான் ; எனைக்கண் பாராய் !
அள்ளியென் சிரத்தே வைத்துன் அழகினுக் கடிமை செய்வேன்."

விண்ணொட்டப்புகழ்ந்துதன்னைவேட்கைகொண் டிறைஞ்சு வோனைக்
கண்ணொட்டக் காணாள் ; பின்னே கதுமெனத் திரும்பிக் கையால்
மண்ணொட்டுந் துரும்பெடுத்து வீசித்தன் மனத்தில் வேகும்
புண்ணொட்டும் சொல்லைச்சொல்லிப் "போ" வென்றாள் புனிதசக்தி.

"சீதையே சித்தம் வைப்பாய்" என்றினுந் தீயன் காமப்
போதையி லுளறி நின்றான். பூமகள் துரும்பைப் பார்த்தே,
"சீதையை யன்றுன் சீரும் தேசமும் சாம்ப ராகும்
தீதனைத் திருடி வந்தாய், திருவிலி போபோ" வென்றாள்

"புண்ணியன் அற்றம் பார்த்துப் பொய்த்துற வேந்தி யென்னை
மண்ணுடன் பெயர்த்து வந்து மார்தட்டிப் பேசுகின்றாய்.
விண்கதிர் மலர்த்தும் பூவை மின்மினி மலர்த்த லுண்டோ ?
பெண்மையின்பெருமைகாண்பாய்ஆண்மையின் பெருமையில்லாய்.

பத்தினி யினைய சொல்லப் பதகனும் "திங்க ளொன்றில்
சித்தம்வைத்திலையேல், உன்னைச்செறுவ"னென்றுருவி நீண்ட
கத்தியைக் காட்டிச் சென்றான். கலங்கிய கற்புத் தெய்வம்,
அத்ததி இராம நாமம் கேட்டனள் ! அனுமன் வந்தான் !

ஆழி கண்ட தேவி !

" அன்னையே இராம தூதன், அனுமன்யான், காண வந்தேன்
உன்னையே யெண்ணி யெம்மான் உளந்துடித் துருகு கின்றான் ;
அன்னவன் ஆழி கொள்வாய். அறிந்ததும் உனது சூழல்,
அன்னரே யரக்கர் வீழ்ந்துன் அருந்தவம் பலிக்கும்" என்றான்.

ஆழியைக் கண்ட தேவி ,அங்கணில், அகத்தில் ஒற்றி
" வாழியெம் பெருமான் ! வீர மாருதி வாழ்க !" வென்றாள்.
மூழ்கிய கவலை யற்று, நகை மலர் முகத்தைக் காட்டி,
ஆழியான் செய்தி கேட்டுத் தன்னிலை யறியச் சொன்னாள்.

" நாதனை வாழ்த்திச் சூளா மணியினை நல்கி, யின்னும்
மாதமொன் றுயிர் வகிப்பேன் வருகையை நோக்கி, உண்மை
ஓதுதி" யென்றுசொன்னாள்;"உணர்ந்தனன்உரைப்பே"னென்று,
சீதையை வணங்கி யந்தத் தீரனும் விடைபெற்றானே.

இராவணா !

வருகின்ற போரின் வெம்மை வஞ்சகர் அறிய.....வீரன்,
அருநிழற் சோலை முற்றும் அழித்தனன் ; பகையழித்தான்.
வெருவுற நாக பாசம் வீசிமா ருதியைக் கட்டிச்
செருவலி யரக்கன் முன்னே யிந்திர சித்தன் சென்றான்.

எரிவிழி யாலே நோக்கி, இடியெனச் சிரித்த ரக்கன்
வரிசையாய்த் தனது சீரும் வலிமையும் வரமுஞ் சொல்லி,
" அரியகா வழித்தாய்; என்றன் அரக்கரைச் செற்றாய்; நீயார் ?
தெரிவுறச் சொல்வா" யென்னத் தீரனுங் கூறி னானே !

" வெய்யமா தவம் புரிந்தும், வேதவேள் விகளைச் செய்தும்,
கையினால் மலை பெயர்த்தும், கண்ணுதல் வரங்கள் பெற்றும்,
வையமும் வானு மஞ்ச வன்கொடுங் கோல் பிடித்தும்,
ஐயநீ காமத் தாலே யனைத்தையு மிழந்தா யன்றோ ! "

" வன்றவம் புரிந்துங்கெட்டாய், வாழ்ந்திட விருப்ப மென்னில்,
இன்றுநீ தேவி தன்னை யிராமன்முன் சேர்த் திரந்து,
நன்றவன் சரண்பு குந்து, நாரியர் ஆசை விட்டு
வென்றகங் காரந் தன்னை வேதிய னாவா " யென்றான்.

" ஆரடா புத்தி சொன்னாய், அறிவிலிக் குரங்கே !" யென்று
பேரிடி முழக்கஞ் செய்து, " பின்புறந் தீக்கொ ளுத்தி,
ஊரைவிட் டிவனை முன்னே ஓட்டுமின் ! வருக ஓர்கை
போரினிற்காண்பேன்அந்தப்புகழ்பெறுநரனை"என்றான்.

கண்டேன்! கண்டேன்!

கொளுத்திய தீயால் ஊரைக் கொளுத்திவந் துலக மெல்லாம்
களித்திடக் " கண்டேன்கண்டேன் கற்பினுக்கணியை !" யென்றே
துளித்தருட் கண்ணீர் பெய்து, தூயமெய் வீரத் தூதன்,
அளித்தொளி மணியை, அண்ணல் அருளினைப் பருகி நின்றான்.

சீதைசெய் தவமுஞ் சொல்லுந் தெளிவுறச் சொல்லி, யின்னும்
"மாதமொன் றதனில் அந்த மமதைகொள் அரக்கர் வீழப்
பூதலத் தறமுங் கற்பும் வீரமும் பொலியச் செய்வோம் ;
ஆதலின் எழுக சேனை " யென்றனன் அன்பு வீரன்.

இலங்கைப் போர்

ஆண்டகை யனுமன், சாம்பன், அங்கதன், சுக்கி ரீவன் ;
ஈண்டிய சேனை வெள்ளம் இரைகடல் அணையொன் றிட்டுத்
தாண்டிடச் சீதை நாதன் தம்பியோ டிலங்கை சேர்ந்தான்,
மூண்டது கொடிய வெம்போர் ; முடிந்தது, தீயர் கூட்டம்.

மந்திரத் தலைவர் தம்மை மனப்படி நடத்தி யாளுந்
தந்திர மன்றி, வேறு தருமமொன் றறிகி லாதான் ;
முந்துகும்பகர்ணன் சொன்னமுதுமொழி கொள்ளான் ; பின்னே
சிந்தனை தூய தம்பி வீடணன் செஞ்சொல் ஏலான்.

அறமனை யானைத் தேடி, வீடணன் அடைந் தரக்கர்
மறவினை யெல்லாஞ் சொன்னான். மாண்புறு வீர வள்ளல்,
திறமுள தூதுவிட்டுந் தேர்கிலான் அரக்கன் ; காம
மறலியாட் கொண்ட பின்பு மந்திரம் பலிப்ப துண்டோ ?

எழுந்தது ராம சேனை. எறிதிரைக் கடலைப் போலே,
எழுந்தது போர் முழக்கி இராவணன் அசுரச் சேனை......
கொழுந்தெரி கணைகள் பாய்ந்து கொன்றன கூற்றைப்போலே.
விழுந்தனர் அரக்கர். " நீதி வெல் "கெனத் தருமம் ஆர்க்க !

பட்டனர் தலைமை வீரர், பட்டனன் கும்ப கர்ணன்.
பட்டனன் அதிகாயன்பின் பட்டனன் பாசன், அந்தோ,
பட்டனன் பெரும்போர் செய்து படைமிகு மேகநாதன்
பட்டது மூல சேனை ; பட்டினும் உணரான் வெய்யோன்.

" தொடுத்தபோர் நிறுத்தேன் ; அந்தத் தோகையுஞ் சிரிப்பாள்"
என்றே
எடுத்தனன் சக்தி பெற்ற படைக்கலம் ; " இராமன் வீழப்
படுத்ததும், எனதே யந்தப் பத்தினி " யென்று சொல்லி
விடுத்தனன் அம்பு மாரி ; விதியுடன் போர்பு ரிந்தான்.

கைகளின் குப்பை, மேலே கால்களின் குப்பை, விண்ட
மெய்களின் குப்பை, வீரன் வெட்டிய தலையின் குப்பை ;
வெய்யவெங் கணையின் குப்பை, மீதொரு குப்பை யாகப்
பொய்யுடல் வீழக் காற்றுப் போனது, வீணன் ஆவி !

வெற்றி முழக்கம்

ஆர்த்தன வெற்றிச் சங்கம் ! ஆர்த்தனர் தேவர் கூடி !
ஆர்த்ததிவ் வுலக மெல்லாம், ஆயிரம் புகழி யம்பி !
ஆர்த்தனர் "ஜயராம்" என்றே வானரர் ; அனுமான் சென்றே
போர்த்தொழில் வென்ற செய்திதாயிடம் புகன்றான் அன்றே.

சோபனம்

" வென்றதி ராம னம்புன் விரதத்தீ சுட்ட வெய்யோர்
பொன்றினர், புகழுனக்கே, பூமக ளேயுன் கற்பு
நின்றது ; தரும மிங்கு நிலைத்தது ; நல்ல காலம்
துன்றிய துலகுக் கெல்லாம்; சோபனஞ் சொல்ல வந்தேன்."

" நிலமகள் கண்ணீர் சோர, நிறைதவர் புண்ணீர் சோரக்
கலைமகள் வெட்கக் காமன் கணையினுற் கண்ணி ழந்தே,
குலமகள் உனைக்க வர்ந்தான், கொத்துடன் குலம ழிந்தான்.
நலமிலாக் கொடுமை செய்தார், யாவரே நன்று வாழ்ந்தார் ?"

" மூக்கினை யிழந்த மூளி மூட்டிய காம வெந்தீ
தாக்கிய தலையு நெஞ்சுந் தரையினில் உருண்ட காட்சி
நோக்கிடாய், கணவனன்றி நோக்குவே றில்லாத் தாயே !
வாக்கினுல் இராமன் சொன்ன வாய்மையும் பலித்ததம்மா ."

"கதந்தரும் அரக்க ராலே கவலைகொள் மாந்தர்க் கெல்லாம்
சுதந்தரம் அளிக்க வில்லுஞ் சொல்லுங்கொண் டவதரித்தான்;
மதந்தரும் அரக்கன் மார்பை மண்புழு வுண்ணச் செய்தான் ;
இதந்தரும் தரும மன்னன் இராகவன் வாழ்க மாதோ ! "

விரதம் பலித்தது

பத்தினித் தெய்வங் கேட்டுப் பரமவா னந்த மெய்திச்
" சத்திய வீரன் எம்மான் சரத்தினுல், உலக மஞ்சுந்
தொத்துநோய் ஒழிந்த தென்றன் சோகமோ டசோகின் கீழே,
மெய்த்தவம்புரிந்ததாலே பெண்மையும் விளங்கிற் " றென்றாள்.

" சிந்தையிற் பெரியை ; வீரச் செய்கையிற் பெரியை; ஓங்கும்
புந்தியிற் பெரியை ; கற்ற புலவரிற் பெரியை ; ஈங்கு
வந்தனை கடலைத் தாண்டி வரதனின் ஆழி கொண்டு
தந்தனை ; தந்த போதே தருமமும் வென்ற"தென்றாள்.

" உண்மையே வயிர வாளாய், உறுதியும் அன்புங் கொண்ட
திண்மையே திரண்ட தோளாய்த் தீரமே படையாய்ச் செய்ய
வண்மையே நெஞ்சாய், நல்ல தருமமே வாளி யாகிக்
கண்ணிலங் காத்த கண்ணன் கண்மணி போன்றாய் வாழி !"

" துயர்படர் காட்டை யெல்லாந் தூருடன் சுட்டெ ரித்தே
உயர்நல மோங்க வள்ளல் உயர்த்திய கொடிபி டித்தாய்.
அயர்வற இராம நாம மாகிடும் அமுதால் இன்பப்
பயிரினை வளர்த்தாய் ; தூய பண்பநீ வாழி" யென்றாள்.

இராம பட்டாபிஷேகம்

தீயினுந் தூய ளென்றே தெரிந்திட விளக்கி, அன்பர்
நாயகன் கற்பின் மிக்க நாயகி தன்னை யேற்றான் ;
பாய்கடல் இலங்கை யாட்சி வீடணன் பங்கென் றீந்து,
தாய்நகர் அயோத்தி சார மானத்திற் றாவிச் சென்றான்.

பாதுகை வணங்கி யண்ணல் வரவினைப் பார்த்தி ருக்கும்
சாதுவாம் பரதன் வந்து, தழுவினன் ! கண்ணீர் சோர்ந்தான் ;
ஓதரு முவகை பொங்கி, ஊரினர் ஒன்று கூடி,
" மூதுல காள வாராய் முடிபுனைந்" தென்று சொன்னார். 460

ஊரணி செய்து மக்கள் உளமகிழ் வெய்த நன்னாள்,
ஆரண முழங்க, ராமன் அரியணை யேறி, யோக
பூரணன் வசிட்டன் சூட்டும் பொன்முடி தாங்கி யிந்தத்
தாரணி வாழத் தூய தருமத்தைப் போற்றி னானே.

வாழிய இராமன் வீரம், வாழிய சீதை கற்பு,
வாழிய இளவல் சேவை, வாழிய பரதன் அன்பு,
வாழிய அனுமன் ஆற்றல், வாழிய குகன் வணக்கம்,
வாழிய உலக மெல்லாம் அறநெறி வாழ்க மாதோ ! 468

19. ஒற்றுக்கேள்விப் படலம்

அருவியுங் குருவியும் அந்தி மாமலர்,
மருவிய வசந்தமு மகர வீணையும்,
சுருதியிற் கலந்திடத் தூய காதையைப்
பருகினர் அமுதெனப் பக்தர் யாவரும்.

பொய்ப்பொருண் மயக்கினைப் போக்கி, யிவ்வகை
மெய்ப்பொரு ளுணர்முனி வேந்தர் ஞானத்தைத்
துய்த்தினி திருந்திடத் தூயன் வேண்டினான்.
அத்தகை அமைதியை அளித்த தக்கதை.

பண்புடை முனிவனைப் பணிந்து தூயவன்,
" இன்பத்தி லின்பமாம் இராம நாமத்தில்
அன்புடைத் தாஸரின் அரிய மாக்கதை
உன்புது வாக்கினால் உரைத்தி" யென்றனன்.

" காலையிற் கடன்முறை கழிந்தபின், அதே
வேலை"யென் றருளவும் விரத மாமுனி
மாலையின் கடன்முறை செய்து மன்னவன்,
சோலையில் அமைச்சுடன் சுற்றி வந்தனன்.

ஒற்றுரை

அத்ததி கலிநகர் அடைந்த ஒற்றர்கள்,
" இத்ததி யமைச்சனும், இளைய மன்னனும்
சித்திமா நகருக்குத் திரும்பிச் செல்வதே
உத்தமம் " என்றுரைத் துயிர்ப்பு வீங்கினர் !

எய்திய ஒற்றரை யிருத்திச் சித்திமான்,
செய்தியை முற்றிலுந் தெரியக் கேட்டனன் ;
கைதவக் கலிநகர் கண்ட காட்சியைப்
பொய்தவிர் ஒற்றரும் புகன்று நின்றனர்.

சத்தியன் ஆட்சிக்குந் தரும வாழ்விற்கும்,
சுத்தனின் உயிருக்குந் துகளில் வீரர்வாழ்
சித்தியின் பெருமைக்கும் தேச நன்மைக்குங்
கத்தியைத் தீட்டினான் கலிய ரக்கனே.

நாவினால் அழைத்தந்த நஞ்ச நெஞ்சினன்,
கோவிளங் குமரனைக் கொடுமைக் கோட்டத்திற்
காவல்வைத் திடநெடுங் கனவு கண்டனன்,
ஆவினை வாவெனும் அரியைப் போன்றவன்.

குடியரும், பதகரும், கொலையும் அஞ்சிடும்
கொடியரும், குலங்கெடு காமக் கூத்தரும்,
தடியருந் திருடருஞ் சண்டைப் பூதத்தின்
அடியருங் கூடினால் அமைதி நிற்குமோ ?

திருந்திய மனமிலாச் சிறுமை வேந்தரும்
பொருந்தினர் சிலருமப் பொய்யன் பக்கமே,
பெரும்படை கூடிய பேயர், இப்புவி
வருந்திட வெறிகொண்டு வாழ்கின் றுரையா !

வலிகொளும் படைக்கல வரிசை கண்டதுங்
இலிகொளுந் தருமமும் ; கேடு சூழ்ந்திடுங்
கலிகொளும் அந்நகர் கயவர் கூடிய
புலிகொளும் புதரெனப் புகுந்து கண்டனம்.

அணிமணி யாடைகள் சுற்றி விற்றிடும்
வணிகரைப் போலவும், வரும்பொ ருள்சொலும்
கணிகளைப் போலவும், கலிந கரெலாந்
துணிவுடன் கண்டனந் துரித மாகவே.

கரியெனப் பெருத்தவர், கண்கள் சேந்தவர்
எரிகொளு நெஞ்சினர், எமனைப் போன்றவர்,
நரியினும் வஞ்சகர்—எந்த நாட்டினர்
தெரிகிலம்—அங்கவர் திரியக் கண்டனம்.

கழுகெனப் புலியெனக் கரிய பாம்பெனக்
கொழுவன விலங்கெனக் கூடி மாந்தரை
விழுங்கிடும் போர்வெறி விம்முந் தீயரால்
அழுங்குரல் கேட்டனம் அண்டை நாடெலாம்.

" தருமமுந் தெய்வமுந் தவமும் தூயநற்
கருமமும் பத்தியும், கருணையும், பர
குருவடி சேவையும், குவிந்த யோகியின்
ஒருமையும் பேடிகள் உளறும் பொய்" யென்பார்.

இளவர சிவ்வன மிருக்குஞ் செய்தியும்
உளவினு லறிந்தனர். ஊறு செய்குவார்.
களவியற் பாதகர் கண்ப டாமலே
வளநகர் செல்வது மாண்பென் றோதினுர்.

சுத்தன் கவலை

சேர்ந்த வாழ்வுஞ் சிறந்த வலிமையுந்
தேர்ந்த பாரத தேசத்தி லேகலி
சார்ந்து செய்திடுஞ் சங்கட வெவ்வினை
ஓர்ந்து சுத்தனும் உள்ளங் கலங்கினுன்.

வாயில் வாய்மையும், வாழ்வினில் மெய்ம்மையும்,
நேய வுள்ளத்தில் உண்மையு நின்றிடுந்
தேயத்தில், அன்புத் தெய்வம் உலாவிடுங்
கோயிலிற் பகை கொட்ட மடிப்பதோ ?

தீரர் எத்தனை, தேவர்கள் எத்தனை,
வீரர் எத்தனை, வேந்தர்கள் எத்தனை,
வாரம் வைத்து வளர்த்த தருமத்தைக்
கோர ராட்சச மாயை குலைப்பதோ ?

சித்திமான் துணிவு

கன்னக் கையுடன் கண்குவித் " தின்றினி
என்ன செய்வ" மென் றேங்கி யிளம்பிரான்
தன்னுள் ஆழ்ந்த சமயம் அமைச்சனும்
" இன்னலே யெதிர்ப் போ" மென் றெழுந்தனன்.

" ஒற்றர் ஏகுமின், ஒல்லேயிற் சொல்லியே
சுற்றி யெங்கணுஞ் சூழ்ந்தறங் காத்திடுஞ்
சிற்ற ரசரின் சேனேயை நாளேயே
உற்றிடுஞ் சமர்க் குற்றிடச் செய்குமின்."

" வருக தீமன வஞ்சகர் ; வந்து போர்
தருக ; நல்ல தபோதனர் அஞ்சவே
அருகு செல்க ; அழிக அவர்தலே
திருகுவோ" மெனச் செப்பினன் சித்திமான் !

சுத்தன் துணிவு

ஈன்ற தாயின் இசைவளர் சுத்தனும்,
" ஆன்ற மாதவர் ஆசிகள் பூத்திட,
தோன்று போரிலத் துட்டரை மாருதி
போன்று நொய்யப் புடைப்ப" மென் றுரர்த்தனன்.

வீரங் கூறி விழிப்புந் துயிலுமாய்க்
காரி ராவைக் கழித்திரு சிலரும்
நீரி லாடி, நியமங்கள் செய்ததும்,
பூரணன் வளர் பூம்பொழி லேகினுர்.

காலேக் கோர்புதுக் காந்த மளித்திடும்,
சில மாதவர், செங்கதி ரின்றெடர்
போல மர்ந்துளப் பூசை புரிந்தனர் ;
ஞாலந் தெய்வ நலம்பெற நாளுமே.

ஊது வண்டுடன் ஓது மறைகளும்
போதெென நகை பூத்த முகங்களும்
காதுங் கண்ணுங் களிக்க விளங்கிடும்,
சாது சங்கத்தைக் கண்டனன் சுத்தனே.

காணக் காணக் கடவுட் பெரியரை
மாண மாண்புறு மானிட வாழ்க்கையே !
பூணப் பூணப் புனிதர் மலரடி,
ஆணவங் குறை யும்அரு ளோங்குமே.

சித்தர் கூட்டத்தைச் சேவித்துச் சேவித்துத்
தத்துவப் பொருள் சாற்றிடக் கொண்டுளம்,
சித்திமானுடன் சுத்தனுஞ் சேர்ந்தனர்
முத்தி வேந்தன் விளங்கிய முன்றிலே.

புகையுஞ் சாந்துடன் பூவு மணந்திட,
பகவன் மேலருட் பாட்டு முழங்கிட,
மகர யாழுடன் கௌரி வயங்கிடச்
சுகமு னிவன் கதையைத் தொடங்கினன்.

வணங்கிப் புன்னகை மாமலர் பெற்றதும்,
குணங்க ளோங்கிடுங் குன்றனை யான்முன்னே,
இணங்கி நெஞ்சம் இருவருங் கேட்டனர்.
உணர்வு தூண்டிடும் உத்தமன் காதையே.

20. இராமதாஸ் படலம்

தெள்ளிய ஞானமுந் தெய்வ பக்தியும்,
ஒள்ளிய ஒழுக்கமும், ஓங்குந் தூயவர்
விள்ளரும் பெருமையை விளம்பப் பேரின்ப
வள்ளலின் கருணையை வழுத்து வாமரோ !

நல்லன கூடிடும் ; ஞான மோங்கிடும் ;
அல்லன விலகிடும் ; அறங்கள் ஓங்குமே ;
இல்லதும் உள்ளதும், இனிது தேர்தவச்
செல்வரின் சேவைகள் செய்யும் அன்பர்க்கே !

பொன்னுடன் பொன்னிறப் பொலிவு போலவும்,
விண்ணுடன் விரவிய மேகம் போலவும்,
கண்ணுடன் கதிர்தருங் காட்சி போலவும்,
புண்ணிய ருடனருட் பொலிவும் பொங்குமே.

பன்னருங் கேள்வியின் பயனைக் காட்டிலும்,
தன்னுடல் வெறுத்திடுந் தவத்தைக் காட்டிலும்,
என்னதி யானெனும் இயைபில் மாதவர்
முன்னிலை யிருப்பது முத்தி யாகுமே.

பொய்ம்மன வேற்றுமைப் போரி னுற்கெடும்
வையக மாந்தர்க்கு வழியை நாட்டியும்,
வெய்யவர் வெம்மையை வென்றும், உண்மையாற்
செய்வன செய்தவர் செய்ய சிலரே !

சாதுக்கள் சங்கமே சாந்த மீந்திடும் ;
சாதுக்கள் வாசகம் சகல ஞானமாம் ;
சாதுக்கள் சந்நிதி சக்தி யீந்திடும் ;
சாதுக்கள் வாழிய, தரும தீபம்போல் !

புண்ணிய பாரத பூமி யெங்குமே,
பண்ணவர், மாசறு பக்தர் சங்கமே !
திண்மக ராட்டிரஞ் செழித்த பக்தரை
எண்ணிநம் கதையினை யினிது சொல்லுவாம் :

* புரந்தர விடலனின் புனித பக்தராம்,
நிரந்தர ஞானியும், நிவிர்த்தி தேவரும்,
அறந்தரும் ஏகரும், அன்பு நாமரும்,
மறைந்தபின் இருசுடர் மணிகள் வந்தனர் !

" சாதியும் வேடமுந் தருக்க வாதமும்,
பேதமும் பொய்ம்மனப் பிழையு மின்றியே,
ஓதுமின் அரியை" யென் றுரைத்த ராமனின்
கீதங்க ளீவது கேடி லின்பமே.

பக்தது காவருட் பாடல் கேட்டதும்,
சத்திர பதிக்குப சாந்தம் வந்தது ;
முத்தனி ராமதாஸ் முனிவன் காட்சியால்
சக்தியும் வீரமும் தழைத்த தென்னுவாம்.

தேசமுந் தருமமுஞ் செழிக்க வீரத்தீ
வீசிய சிவாஜியின் விமல சற்குரு,
மாசறு மாதவன் இராம தாஸனின்
ஆசறு கதையினை யன்பிற் கேண்மினோ !

பம்புகோ தாவரி பாயு நாட்டிலே,
சம்பகம் எனப்பெயர் சாற்றும் ஊரிலே,
நம்பனைப் போற்றிடு நவமி நாளிலே,
அன்பன்இ ராமதாஸ் அவத ரித்ததே.

ஆரணம் ஓதிடும் அந்தண் செல்வர்கள்,
சூரிய ரேணுகர் தூய பெற்றவர் ;
நாரண னெனப்பெயர் நல்கி, நம்பியைப்
பூரணக் கலைபெறப் போற்றி வந்தனர்.

சூரிய வணக்கத் தாலே, தூயசிந் தனையி னாலே,
ஆரிய வேதத் தாலே, அனுமனின் அருளி னாலே,
தாரக ஜபத்தால், இராம தாஸெனும் பெயரும் பெற்ற
தீரனுக் கின்றோர் நல்ல திருமணஞ் செய்யா நின்றார்.

கானமுங் களிப்பு மோங்கும் கடிமண முடிக்கச் 'சாவ
தான'மென்றுசான்சொல்லத் தப்பினேன்பிழைத்தேனென்றோர்
ஞானவீ றெழுந்து தாவி, நதியினை நீந்திச் சென்று,
மோனியாய்த் தவங்கள் செய்து, முத்தியைஅன்பன்கண்டான்.

கனிகிழங் குண்டு, வேறு கவலைக ளனைத்தும் போக்கித்
தனிமலைக் குகை யிருந்து, சபதப தியானஞ் செய்து,
மனதினை யடக்கி வென்று, மமதையை வேரின் மாய்த்து,
புனிதசுத் தான்ம சித்தி பொருந்திய மகான்கள் வாழ்க!

சமநிலை கண்ட சித்தன் சகத்தினை வெறுத்திடாமல்,
தமநிலை நீங்கி யின்பந் தழைத்திடக் கருணை பூத்தான் ;
அமங்கலி அன்ன பூர்ணை அன்பனுக் காவி நல்கி
சுமங்கலி யாக நல்ல சுதருடன் வாழச் செய்தான் !

மூர்த்தியுந் தலமுங் கண்டு முறையுறப் பரத நாட்டைப்
பார்த்துநாற் றிசையும் பக்தி பரவசக் கனல் பரப்பி,
வார்த்தைசொல் குருவைத் தேடும் மாணவர்க் குபதே சித்துத்
தீர்த்தனும் கிருஷ்ணு பாயு மகூலியிற் சென்றி ருந்தான்.

இல்லற ஞானி யாகி, இசைதரு புலவ னாகி,
நல்லறத் தொண்டனாகி நாரண னருளைப் பாடும்,
சொல்லர சான துக்கா ராமனுந் தொழுது போற்றி
எல்லையி லின்பமே யிராமதா செனப்பு கழ்ந்தான்.

சிவாஜி வருதல்

பத்தியு ஞானமும் பழுத்த தூயவன்,
அத்தினம் அருந்தவ மளித்த திவ்விய
சத்தியைப் பொழிந்தொரு தரும வீரனுள்,
சத்திய வாழ்வினைத் தாங்க முன்வந்தான்.

வருந்திடும் அன்னையின் வருத்தந் தீர்க்கவே,
மருந்தென விளங்கிய மராட வீரனும்,
அருந்தவன் புகழினை அறிந்து நாடினான் ;
இரும்பினைக் காந்தம்போல் இதய மீர்க்கவே !

" எனதுடல் பொருளுயிர் எவையும் உன்னதே ;
உனதரு ளேயென துலகும் வாழ்க்கையும் ;
மனதுறு பசியினை மாற்ற மாதவக்
கனியென வந்தனே, கடவு ளேசரண்."

" தன்னலந் துறந்தனை ; தவத்தின் மேன்மையால்
இன்னுயிர்க் கருளினை இன்ப மெங்குமே !
உன்னிகர் குருவினை யுடைய பேறுடை
என்னிகர் யா" ரென இறைவன் ஏத்தினுன் !

ஆவலாய் வந்துதன் அடி வணங்கிய
கோவினைக் கோமுனி குளிர நோக்கியே,
" மேவினை யென்பணி வென்ற " தென்றவன்
ஆவியிற் பெய்தனன் அருளி னூற்றலே.

ஏகுமின் னுடன்கலந் திணைந்து கூடிடும்
ஆகுமின் போன்றநல் லருந்த வக்கனல்
வேகமாய்ப் பாய்ந்துநம் வீர வேந்தனுக்
காகிய சக்திக ளனைத்து மீந்ததால்.

கொடியபொன் னுசையைக் குமைத்த மாமுனி,
அடியவன் அன்புடன் அளித்த பொற்குவை,
தொடவிலை ; துயர்கெடச் சுற்றும் வாழ்ந்தனன் ;
இடையருக் கீந்தனன், அருளின் ஈகையான் !

" அன்னையின் அன்புடை யண்ணலே, யென்றன்
பொன்னகர் புண்ணியம் பொலிய வாழ்" கென
மன்னவன் அழைத்திட, மாத வச்சுடர்,
" என்னிலை யேயெனக் கின்ப " மென்றனன் !

"குருதுணை, குருதுணை, குருதுணை" யெனு,
இருமலர்ப் பாதத்தை இறைஞ்சி வீரனும்,
மருவினன் வளநகர், மறுவிலான் மொழி
அருளினல் வெற்றிகள் அடைந்து பூரித்தான் !

ஆர்வமுற் றரசன் ஓர்நாள் அருட்பெருங் குருவைத் தேடிக்
கார்வனக் குகையில் நோயாற் கலக்கமுற் றிருக்கக் கண்டான்.
" ஓர்மருந் துண்டு ; வேங்கைப் பா" லென வுரைக்கக் கேட்டு,
வீரவா ளெடுத்து மின்போல் விரைந்தனன் அடவிக்குள்ளே.

சேய்களைப் பிடித்தான், சிங்கம் ; தீயெழ வுருமிப் பாய்ந்த
தாய்ப்புலி தனையடக்கித் தடையறப் பால்கொண் டீந்து,
நோயினைத் துடைத்தான்; அந்தநுவலரும் அன்பைப் போற்றித்
தூயவன் ''வாய்மைவீரத்தொண்டநீவாழ்க" வென்றுன்.

குருவினைப் பணிந்து வேண்டிக் கொற்றவன் பரலி தன்னில்,
திருமடங் கோயில் கட்டிச் செய்யநல் லடியா ரோடும்
அருகினில் இருத்தி, நாளும் அவனடி தொழுது வந்தான் ;
பொருளுடன்அருளு மோங்கும்புண்ணியப் பொலிவு பெற்றுன்!

இலகிடத் தருமமெங்கும், இகற்படை செய்யுந் தீய
கொலைகளை வொழிய நல்ல குலமகள் கற்பு வாழ,
நிலைபெறு வீர நீதி நெறியினை யிலகக் காட்டிப்
பலவகை யுதவி செய்தான் பரிவுள குருவு மாங்கே.

அலைமனம் அடக்கி யாளும் அருந்தவ யோகி போன்றே
நலிபகை அடக்கி யாண்டு, நானிலம் புகழை நாட்டி
மலையெனச் சிறந்த வீரன், மாண்புறு சத்ரா ராவில்
நிலைபெறு நாளிற் கண்ட நிகழ்ச்சியை விளம்புவோமே.

மாதவச் செல்வன் ஊரில் மதுகரி பிச்சை யேற்று,
மேதகு வேந்தன் கோயில் மேவலும், பரம பக்தன்
பாதமா மலரில் வீழ்ந்து, " பகவானே அரசு முற்றும்,
ஏதெனக் குரிய தெல்லாம் உனதெ"ன எழுதிப் போட்டான் !

" உய்வித்தாய் என்னை; யென்றன்உடல் பொருள் உயிருனக்கே.
ஐயநீ ஐய மேற்றல் அழகிலை ; அரச னாக
வையகம் புரப்பாய்" என்று வணங்கியே வேந்தன் சொல்ல,
"மெய்யநின்அரசையாளமேற்கொண்டேன் என்றான்ஞானி" 140

" விட்டது பார " மென்று விடுதலை வீர னாங்கே,
பட்டணத் தெருக்கள் சுற்றிப் பகவனோ டிரந்து வந்தான் ;
இட்டசோ றுண்டு, பின்னர், " இறைவநீ யாள்க ; யானுன்
கட்டளை செய்யுந் தொண்டன்; கட்டற வாழ்வே" னென்றான் !

போற்றிமெய்த் துறவை,யாசான் புன்னகை பூத்து, "நீயே
நாற்றிசை யுலகை நன்று நடத்திடத் தகுவை ; நீடு
நோற்றனன் உனக்கே ; நாட்டு நோவினைத் தீர்க்க, வாளின்
ஆற்றலைப் பெற்றாய், என்றன் அன்ப நீ அரசாள்" என்றான் !

சாதுவின் மொழியைக் கேட்டுச் சரண்புகு சீடன், அன்னோன்
பாதுகை பீடமேற்றிப் பறந்திடக் காவிச் சண்டா,
மூதுரை போற்றி, யாள முனைந்தனன் ; அவனுக் கின்னும்
கோதறு போதந் தன்னைக் குறித்தனன் குரவனாங்கே !

இரமதாஸ் போதம்

மாரதச் சுடரே, பாரத மணியே,
வீரருக் கரசே, பாரினுக் கொளியே,
சாது சங்கம் சாந்தமாய் வாழ,
வேத தருமம் விளங்கிட நாட்டில்,
அறந்தாங் கிடவே பிறந்தாய் நீயே !
துறந்தாய் நன்னலம் ; சிறந்தாய் பொதுநலம் ;

போற்றும் உலகை ஆற்றல் மிகுந்தாய்.
நோற்ற சக்தியை ஊற்றினே னுன்னுள் ;
ஊழ்வலி யாலே யுலைந்தநா டுய்யத்
தோள்வலி வேண்டும் ; வாள்வலி வேண்டும்.
மருத்துவன் போலே, மாநில வுயிரை
வருத்தும் புண்களை அறுத்தெறி வீரா !
பேடிகள் போலே ஓடி யொளியும்
பீடைப் பழக்கம் பிறகிட் டொழிக ;
போர்முர சார்த்ததும் புயங்கள் விம்ம
வீரவா ளேந்தி விடுதலை முழக்குக !
சிங்கம் போலே, தீயிற் சுட்ட
தங்கம் போலே தியாகிகள் வேண்டும்,
புலியெனக் கேட்டதும் கிலிபிடித் தோடும்
அலிப்பதர் வேண்டோம், ஆண்மை வளர்கவே !
சத்திய யுகத்திற் சாந்தம் பலிக்கும்,
இத்ததி கலியெமன் இடர்செயுங் காலை,
அறச்சமர் புரியும் ஆட்பலம் வேண்டும்.
திறமை வேண்டும் தீமை தீரவே.
பெண்டிர் கற்பும், பெரியார் தவமும்,
தொண்டர் நலமும், தூயநல் லறமும்,
ஆக்களும், சேய்களும், அமைதியாய் வாழக்
கோக்கள் புயவலி வீக்குதல் கடனே.
மெத்தப் பயந்து வீரங் குன்றிச்
செத்தநாட் டிற்குச் சீவ னளிப்பாய்.
குனிதலை நிமிர்ந்து, கொடுங்கோல் குமைய
மனிதர் மனிதராய் வாழ்ந்திடச் செய்வாய் !
கருத்தில் வீரக் கனலைத் தூண்டாய்,
திருத்திக் கோழையைத் தீர னாக்குவாய் !
கரிபரி யிரதம் காலாட் படையுடன்
உரிமையைக் காக்கப் பெருமையோ டெழுவாய் !
தோல்வி யென்பது துணிந்தவர்க் கில்லை.
சால்புடை யோர்க்குத் தளர்வுமிங் கில்லை.
கடற்படை தன்னைக் கண்ணெனக் காப்பாய்.
உடற்கமை பயிற்சியை உயிரெனப் போற்றுவாய்.
சோனியுஞ் சொத்தையுஞ் சொள்ளையும் வேண்டாம் !
மானங் காக்கும் மாண்புளோர் வருக !
அருச்சுனன் பீமன் அனுமான் போலவே
திருத்தகு வீர தீரரை வேண்டுவோம் ;
சிக்கனம் போற்றித் தேசம் வாழவே

பக்குவ மான பணிகள் புரிவோம் ;
இணங்கும் பிறரை இணங்கி யேற்போம்.
குணங்கும் மாந்தர் கோணலை நிமிர்த்துவோம் !
அறவோர் அனைவரும் உறவோ ராவர்,
அறிஞர் அனைவரும் ஆதரம் பெறுவார் ;
புல்லியல் அதர்மப் புதர்களை நீக்கி
நல்லியற் சோலை நாட்டுதல் கடனே.
மறத்திமிர் கொண்டு மாந்தரை வருத்தும்
அறப்பகை யாளரே ஆவர் நம் பகைவர்.
நேர்மையும் பண்பும், சீர்மையும் போற்றுங்
கூர்மதி யாளர்நங் கூடப் பிறந்தோர்.
அருளும் பொருளும், அன்பும், கல்வித்
திருவும், கலையும், சீரிய தொழிலும்,
உள்ளொற் றுமையும், உலகொற் றுமையும்,
தெள்ளிய ஒழுக்கமும், ஒள்ளிய நினைவும்,
பயிரின் வளமும், பசுவின் வளமும்,
உயிரின் வளமும் ஓங்கிச் செழிக்கவே !
கருத்திற் கடவுளுங் கையிற் செயலும்
இருத்திமன் னுயிர்க்கெலாம் இன்பமே செய்வாய் !
அருளும் பொருளும் ஆனதே வாழ்க்கை,
திருவும் அறிவுஞ் சேர்ந்தே செயலாம்,
அரசுந் தவமும் அமைந்ததே செங்கோல்,
பரமும் இகமும் படைத்ததே இன்பம் ;
திண்மையே சக்தி, உண்மையே வெற்றி,
பெண்மையும் ஆண்மையும் பேணுக வுண்மை ;
மாசறு வீரா....தேசுறும் அன்பா,
நேசருக் கினியாய் நிகரிலா நிருபா,
துறவுக் கொடியைத் தூக்கிப் பிடித்தே
அறநெறி போற்றி, அறிஞரைக் கேட்டுக்
காலங் கருதிக் கடமையைக் காத்து
ஞாலங் கருதி நலமெலாஞ் செய்து,
"ஸ்ரீராம், ஜெயராம், ஜெயஜெய ராம்" எனும்
தாரக மந்திரச் சக்தியைப் பெருக்கி,
சத்திர பதியாய்ச் சத்தியச் சுடராய்,
இத்தல மெல்லாம் இசைத்திட வாழ்கவே !

சிவாஜி

ஆணை தாங்கி அவனியை ஆளுவேன்,
காண நின்ற கருணைக் கடவுளே !
ஆணவப் பகை யற்றது நின்கழல்
பூணப் பெற்றனன் பூரண மெய்தினேன்.

அறிவு தந்தநின் அன்பருள் இன்றியான்
சிற இழந்த சிறுகிளி போலுவேன் ;
மறலி யஞ்சுநின் மாணடி பற்றினேன் ;
இறைவ, வேறெனக் கோர்கதி யில்லையே !

என்றி றைஞ்சி யிறைவன் அருள்வழி,
நின்று நீதி நிலவ நிருபனும்
நன்று நாட்டிடை நல்லறம் பாலித்தே
வென்றி வீர விளக்கென் றிலங்கினன் !

எண்ணு மெண்ணங்கள் எண்ணலுஞ் செய்து நீள்
புண்ணி யப்புகழ் பொங்கப் புனிதனும்,
மண்ணின் வாழ்வுதன் மாதவச் சித்தியால்
விண்ணின் மிக்கு விளங்க விளங்கினன் !

அன்பு வீரன் அரனடி சேர்ந்தபின்,
தன்பு விப்பணி தாழ்வறச் செய்தபின்,
புன்பு லாற்பொறை போக்கிப் புனிதனும்
இன்ப விண்ணி லிருக்கக் கருதினன்.

சீரடியார் புடைசூழச் சித்த னோர்நாள்,
"சிறையுடலை யுதறியான் செல்வே னின்றே ;
ஆருயிருக் குயிராம்சுத் தான்மா யானே,
அழிவின்றி அடியாருள் இருப்பேன் காணீர் !
பாருலகிற் பிறந்தபயன் பரம னன்பே ;
பயன்கருதாப் பொதுநலமே பயில்வீ" ரென்றான்.
ஆர்வமுடன் "ஹரஹர" வென் றனலாய், மின்னாய்,
அருட்சோதி தனிற்கூடி யதுவே யானன் !

எண்ணரிய வினையுடலம் எடுத்த மாந்தர்
இருவினைதீர் இறைவனையே யெண்ணி யன்பு
பண்ணிடுக ; பாருக்கு நலமே செய்க ;
பரிதியினை வான்மழையைப் பார்த்துப் பார்த்தே
புண்ணியங்கள் போற்றிடுக தீமை போக !
பூவுடனே மணம்போலும் புவியைப் பார்க்கும்
கண்ணுடனே கதிர்போலும் உயிர் கலந்த
கடவுளருள் காப்பாற்றும் கருணையாலே !

கனிதமி ழின்பமென்னக் கௌரி யாழ் இசைந்துக் கொஞ்ச,
முனிசொலும் பொருளும் வாக்கும் முழுமனம் உருகக் கேட்டு,
நனியினி தென்று சுத்தன், நயஞ்சொலிப் பணிந்த பின்னர்
மனமுறு கவலை தன்னை மாதவன் அறியச் சொன்னான்.

பொறிகளை வென்ற மேலோன், " புனிதவுன் கவலை முற்றும்
அறிகுவேன்; உண்மை; நாட்டில் அதரும மோங்குங் காலம் ;
வெறிகொளும் கலியன் சேனை, வேங்கையின் கூட்டம் போலே
அறநெறி முனிவர் செய்யும் அருந்தவங் கலைக்கு மையா !"

" பாரத நாடு பெற்ற பலமெலாம் ஆத்ம சக்தி ;
வேரது ; இளையும் பூவும், வீரமும் அறமு மாகும்.
சீருடன் மூன்றும் பேணும் சித்தரை யழிக்க முன்னே
போருடன் வருகின் றுனைப் புல்லனை வீழ்த்த வந்தாய்." 280

இவ்வகை முனிவன் சொல்லி, " இன்னமும் " என்றபோதே
வெவ்வெறிக்குரல்கள்கேட்டார், 'வேந்தபோர், போர் போர்'என்றே
திவ்விய முனிவர் ஆர்த்தார், தீக்கொழுந் துயரக் கண்டார் !
அவ்விடம் அமைச்சன் வேண்டும் அணிபடை யெழுந்த தம்மா!

சாந்தனின் ஆசி பெற்றுச் சடிதியிற் சென்று, சுத்தன்
பாந்தளும் புலியும் போலப் படையுடன் சீறி யாங்கே,
போந்தவெம் பகைவர் கூட்டம் பொடிபடப் பொருதுவென்று
வேந்தறங் காத்த தன்மை விளங்குற விளம்புவோமால். 288

21. கலி சினந்த படலம்

*பற்று தீக்கொரு பஞ்செனச் சித்திமான்
ஒற்றர் மூலம் அனுப்பிய ஓலையிற்
குற்றங் கண்டு கொதித்த கலியனைச்
சுற்றி நின்ற கொடியருந் தூண்டினர்.

கலியன்

" ஆசை சொல்லி யழைத்தும் வரானந்த
மீசை யில்லா விடலைச் சிறுபயல்.
மோச மான முடங்க லனுப்பினன்.
மாச மர்த்தன் மதிமிகு மந்திரி."

" எனை மதிக்கிலர் ; என்னுடை யாட்பலந்
தனை மதிக்கிலர் ; சங்கட மானபோர்
முனை யிலேயிவர் மூளையைப் பேர்க்கிறேன் "
என முறுக்கினன் மீசை யிருபுறம்.

---

*கலிவிருத்தம்: *இராகம் மோகனம்; தாளம் ஆதி; சந்தம் தனன தானன தன்னன தானன.*

கலி-வீரர்

கேட்ட வெய்யர் கிளர்ச்சிகொண் “ டின்றுநம்
தோட்டி னவைத் துடைத்ததுன் சீற்றமே ;
காட்டை நீவிக் கலிக்கொடி விண்ணொட்ட
நாட்டு வோ”மென நாப்பறை கொட்டினர்.

சேனை யில்லை......சிவசிவ வென்றுள
ஞானப் பித்தர், நமதொலி கேட்டதும்,
மோன மாக முழையிற் பதுங்குவார்
தான மாகவுந் தந்து வனத்தையே.

“ மன மடக்குவர்; மாதரை அஞ்சுவார்.
வன முறையும் வறட்டுத் துறவிகள்,
இனிதிங் கைம்பொறி யின்பத்தி லூன்றியே
சனம் பெருக்கிடிற் சேனைக்கு நன்றரோ ?

வேகன்

வேக னென்றொரு வேங்கை யனையவன்,
மோக மேவடி வானவன், முன்னின்று,
“ யோகப் பித்தர் ஒழிக வுலகிலே ;
போக வாழ்வு பொலி”கெனக் கூவினன்.

“ தாடி வைத்துந் தவமெனக் கண்களை
மூடி நின்ற முனிவரின் மோசமே,
நீட ரசு செலுத்து நிருதரை
நாட ழித்து நலித்ததைக் கண்டனம் !”

“ ஆண்மை கொண்டும், அலியென வாழுமிவ்
வீண்ம னிதர் விரதக் குடில்களிற்
காணும் இன்னிய காரிகை யாரின்பம்
பூணுவோம் குலம் பொங்கித் தழைக்கவே !

கலியன்

“ சரிச வா”சனத் தானவர், துள்ளினர் !
“ அரிவை யாருடன் அந்தண் முனிவரைத்
துரித மாகவே தொத்தடி மைசெய்து,
பெரிய மன்னரின் பிள்ளையைப் பற்றுவீர்.”

என்று வெங்கலி, ஏறுஞ் செருக்கினல்,
“ இன்று செவ்வா யிராகுவின் காலமே
நன்று ; நாத்திகச் செங்கொடி நாட்டுவீர் !
வென்றி வாளினுக்கே”யென வீறிட்டான்.

" கதியி லாத கருணை முனிவரை,
மதி யமைச்சனை, மன்னவன் மைந்தனை,
எதிர் பகைவரை எற்றி யெறிந்துநம்
புதிய கொள்கை புகட்டக் கொணருவோம்."

" காட்டில் வாழுங் கனியுண வாளரை,
ஈட்டி யின்றி எளிதினில் வெல்லலாம்.
போட்டி போடும் புரவலன் சேனையை,
வாட்ட வேண்டும் வலிமிகு சேனையே."

" வேகன், வெய்யன், வெறியன், அகம்பரன்,
போக கேது, புலியன், முதலினோர்,
மேக மின்னென வாட்கணம் வீசியே,
போக வேண்டுமிப் பூமி யதிரவே."

இடி முரசம் இயம்பின ; செந்நிறக்
கொடி பறந்தன ; கோபக் கலித்திரள்
படி நடுங்கிடப் பாய்ந்தது ; பட்டிகள்
பொடிபடப் படை போகும் வழியெலாம்.

கலை யழித்தனர் ; கற்பை யழித்தனர் ;
கொலை புரிந்தனர் ; கொள்ளை யடித்தனர் ;
தலை தெறிக்கத் தருமம் அழித்தனர்
கலியன் ஏவிய கள்ளக் கயவரே !

" குருதி கக்கக் கொடுங்கொலை செய்குவோம்,
நிருதர் யாம் ; எதிர் நில்லன்மின் " என்றவர்,
அருகில் வந்த தனைத்தும் அழிவுறப்
பொருது பஞ்ச வடியிற் புகுந்தனர்.

22. பஞ்சவடிப் போர் வென்ற படலம்

ஈச னேதுணை யென்னு முனிவரை
ஏசி, வீட்டில் எரியினை மூட்டினர் ;
பூசை மாமலர் பொங்கும் பொழில்களை
நாசஞ் செய்தனர், நாத்திகத் தீயரே.

" பாப புண்ணியம் பார்த்திடு வீ"ரென்றார்.
சாப மிட்டனர் சாது முனிவரர் ;
கோப வெங்கனல் கொட்டு மரக்கரைத்
தூபம் போட்டினுந் தூண்டின மெய்யுரை.

தாக்கினார், தகர்த்தார், தவத்தை அவம்
ஆக்கினார் ; அழித் தார்அரு ளாளரை ;
வாய்க்கு வந்ததெல் லாஞ்சொல்லி வைதனர் ;
பேய்க்கு ணத்தினர் செய்கையைப் பேசவோ ?

பெண்ணி னத்தின் பெருமை யறிகிலார் ;
கண்ணிற் காமக் கனலுற நோக்கினார்.
புண்ணியர் உயிர் போம்வரைப் போர்தர
எண்ணிக் கச்சை யிறுக்கிமுன் னின்றனர்.

மற மனத்தர் மதுவெறி யேறிச்செந்
நிற முகத்தர், நிலைகுலைந் தோடவே,
அற மனத்தர், அருந்தவத் தால்வருந்
திறமை காட்டினர் ; தெய்வத்தைக் கூவினார்.

ஓச்சிக் காலை யுயர்த்தினர் ஆசனம் ;
மூச்ச டக்கினர் ; முத்திரை வைத்தனர்,
பேச்ச டக்கிப் பெருஞ்சபஞ் செய்தனர்,
ஆச்சி யத்தை யனலெழ வார்த்தனர்.

கூற்று தைத்த சிவனடி கும்பிட்டார்,
போற்றி ராமனைப் பூசித் தெழுந்தனர்.
தூற்ற ரக்கருந் தூயரைக் கண்டதும்,
ஆற்றல் குன்றி அதிர்ச்சியொன் றெய்தினார்.

ஊக்கி யுட்கனல், யோக முனிவரர்,
தாக்கு முன்பு தயாநிதி யாகியே,
நீக்க மற்று நினைத்திடும் அன்பரைக்
காக்குந் தெய்வக் கருணையைச் சிந்தித்தார்.

“துங்க மான துரிய முனிவரர்,
சங்க மின்று தவிக்குதித் தீயரால்,
எங்கு நீ”யென் றியம்பிடு மெல்லையில்
இங்கி தோவென் றிடிமுர சார்த்ததால்.

ஆனை, தேர், பரி, ஆயுதந் தாங்கிய
சேனை கொண்டுநந் தீரன் அமைச்சுடன்
சோனை யம்பு சொரிந்து கலிநகர்த்
தானை யஞ்சிடத் தாவி வளைத்தனன்.

வாழி மெய்யறம் ! வாழிய சித்திபன் !
வீழி பொய்யர், விடுதலை வாழ்கென,
சூழு மந்தணர் தூவ மலர்மழை,
ஆழி போலச் சயமுர சார்த்ததால்.

சித்திமான்

துய்ய நீநற் றுணைசெய் முனிவரை
வெய்யர் தீண்ட விடாதிவ் விடத்திலே ;
ஐய நான்சென் றமரிற் பகைவரை
நொய்ய வாட்டி நொருக்கி வருகின்றேன்.

என்ற மைச்சன், இமைக்குமுன் னேகியே
நன்ற ரக்கர் நலியப் புடைத்தனர் ;
ஒன்று கூடிய ஒன்னலர் இன்னவன்,
" கொன்று போடுவன் கூ " வென ஓடினர்.

இடி விழுந்த மரமென் றிகலவர்
கொடி விழுந்தது....கோதறு மேனியில்
அடி விழுந்தது....கோவென் றலறியே
படி விழுந்ததப் பாதகர் சேனையே....

ஆய்ந்து மீண்டும் அரக்கர் கொடும்படை
பாய்ந்து நேசப் படையினைத் தாக்கியே,
தேய்ந்து தேய்ந்து திறலற்றுப் பின்னுறச்
சாய்ந்து சாவின் விருந்தென லாயதே.... 60

எறிந்து கற்கள் எரிமலை போலவே,
செறிந்து மோதிடுந் தீயர் பெரும்படை
அறைந்து வீழ்த்தி யழுத்திய பின்னரும்,
குறைந்து மீளவுங் கூடி யெதிர்த்ததால்.

வெருகும் பாம்பும்வெவ் வேங்கையு மென்னவே
பெருகி வந்த பிசாசர் படையினை,
அருகு வந்ததும் ஆறென வுண்டது
செருவிற் சிங்கத்தைச் செற்ற செயப்படை.

காடு மேடுங் கலங்கிச் சிலர் பின்னே
ஓடு கின்றனர், ஓய்ந்து சரண்புக
நாடு கின்றனர், நாமென் செருக்கினுற்
சாடு கின்றனர் தானவர் சிற்சிலர்.

வேகன் முனிவரைப் பொருதுதல்

இத்ததி யிவ னைவிடுத் திவ்விடம்
கத்து வேதமுங் காவியுங் கொண்டுழல்
சொத்தை மாந்தர் சுவர்க்க மடைந்திட
மொத்து வோமென ஓடினன் வேகனே.

கொழுத்த பாவிகள் கூடி வருமுன்பே,
வழுத்தி சுத்தன், வரைக்குகை யொன்றினில்,
பழுத்த பண்ணவ ரைப்பதுக் கிப்பகை
அழுத்து மெல்லை யணிபடை கூட்டினன்.

சுத்தன்

வருகின் றுரென ஒற்றர் வழுத்தலும்,
அருமை வீரரை யாண்டகை நோக்கியே,
"கரும வீரர்க் குரிய கடமையைப்
பெருமை யாகச்செய் வோ"மெனப் பேசினன் :

நாட்டின் சேமமும் ஞாலத்தின் சேமமும்,
வீட்டின் சேமமும், வீரரின் சேமமே !
ஓட்டி வெம்பகை, அன்பை யுறுதியாய்
நாட்டி யின்று நலஞ்செய வம்மினே.

வீரர்

வெற்றி யோங்குக ! வெம்பகை வீழுக,
ஒற்று மைசெழித் தோங்குக மேதினி !
நற்ற வங்களு ஞானமு மோங்கிடக்
கொற்ற வன்கொடிக் காவி கொடுப்பமால் !

வீர ரிவ்வகை வீறிட் டெழுந்ததும்,
காரு மின்னுங் கடும்புயல் வேகமும்,
சேர்வ தென்னத் திரள்பெறுந் தானவர்,
போர் முழக்கம் பொலியப் புகுந்தனர்.

கலியரக்கர்

இவ்வு லகெலாம் எங்கள் உலகமே,
இவ்வ ரசெலாம் எங்க ளுரிமையே,
எவ்வு யிர்களும் எங்க ளடிமையே,
எவ்வ மின்றி யிணங்கிடின் உய்குவீர்.

திண்ணெ னப்பகை செப்பலு மிவ்வகை
விண்ண திர்ந்தது, மெல்லுயி ரஞ்சின ;
புண்ணியன் ஒரு புன்னகை பூத்தெதிர்
நண்ணி வேகனைக் கண்டு நவின்றனன்.

சுத்தன்

உலக வாழ்க்கை உலகினர்க் கல்லது,
கலக வஞ்சக் கயவருக் காகுமோ ?
உலகி லுள்ள வுயிர்கள் இறைவனார்
இலகு கோயில் இதற்கெதி ரில்லையே.

வேகன்

கொட்டடா பறை கோயிலுஞ் சாமியும்,
எட்டுத் திக்கிலும் இல்லை ; யிப் பொய்யினை
வெட்ட டாவென வேகன் விளம்புமுன்
முட்டி மோதி முனைந்தது வன்படை.

''வெம்மை யேயுயிர்ப் பாம்வெறி யீருமைச்
செம்மை யாக்குது " மென்றுநந் தீரனும்,
பொம்மெ னப்படை யேவிப் பொருதனன்,
விம்ம கந்தை விழுந்துமண் ணுகவே.

நீவரும் ஆணவ நெஞ்சரின் ஆவியைச்
சிவரத் தீயுமிழ் செஞ்சின வாளினுற்
கவருஞ் சுத்தன் கதியினைக் கண்டதும்
அவல மாகிக்கை யஞ்சினன் வேகனே.

விட்டி லென்ன விதிர்த்து மறைந்துபின்,
துட்டர் சேனை துணுக்கெனத் தோன்றியே,
வெட்டும் தந்திர வேகமுந் தோற்றபின்,
எட்டி நின்றிறு மாப்புகள் பேசிற்றுல்.

வேகன்

ஊறு செய்யும் உரிமைகொள் எங்களை
ஊறு செய்தனை யின்றுனை நாளையே
கூறு செய்துன் குலத்தினை வேரற
நீறு செய்து நெடுங்கொடி நாட்டுவோம்.

சுத்தன்

திருட்ட ரக்கர் இனையன செப்பலும்,
அருட்டுணை பெறும் ஐயன் அமைதியாய்,
"மருட்டு மாயத்தைக் கண்டு மயங்கிலோம்,
இருட்டிற் காதவன் அஞ்சுவ தில்"லென்றுன்.

வேகன் தாக்குதல்

"எமை யிருட்டென் றிகழ்ந்தனை" யென் றுடன்,
அமைதி யற்றவர், ஆணவப் பேயினர்,
தமை யிழந்து சமர்செயத் தாவினுர் ;
நமனு மங்கு நகைத்தெதிர் தாவினுன்.

வாவு வாசியி லேறிவந் தேஅறை
கூவு வேகன் குலைகுலைந் தோடவே,
ஏவி யம்பை யெதிர்த்தமர் செய்தனன்.
பூவினில் இணை யற்ற புனிதனே.

முரசு கொம்பு முர்டு தடாரிகள்,
"அரசுடன் அறம் வாழி" யென் றுர்த்தன !
பரசு, சூலம், பகழி பறந்தன !
சிரசுங் கைகளுஞ் சிந்தின மண்ணிலே.

கூற்ற லைக்குங் கொடியவர் வெம்புயற்
காற்ற லைக்குங் கலமெனப் போர்முனை
தோற்று வீழ்ந்து, தொகைதொகை யாகவே
ஆற்றலை புகுந் தாழி கலந்தனர்.

ஆண்முன் ஆண்மை யழிந்தவெவ் வேகனும்,
நாண மற்று நகார மடித்தினும்,
மாண மாதவ மங்கலப் பெண்டிரைக்
காண வந்தனன் காமச் செருக்கினால்.

வேகன் பெண்களிடம் கூறுதல்

காய்த்திடும் பருவத்தைக் காட்டு மூலையில்,
மாய்த்திட லாகுமோ, மலர்க்கண் பாவையீர்,
சேய்த்திரள் இன்பமுஞ் சீருஞ் செல்வமும்,
வாய்த்துநல் வாழ்வினை வாழ வாருங்கள்.

தாடியு மீசையுந் தண்டுங் காவியும்,
வாடிய மேனியும், வாழ்வை யஞ்சியே
ஓடிடுந் துறவையும் ஒருங்கு கொண்டுழல்,
பேடியர் காதலைப் பெற்றென் பெற்றதே?

தேனினும் அமுதினுந் தீஞ்சொற் கிள்ளையீர்,
மானினும் மயிலினும், மணிப்பு றுவினும்,
மீனினும் அழகுடை மெல்லி ளந்தளிர்
மேனியீர், மேனியின் பயனை வேண்டுவீர்.

வலிவுட னிளமையும் வாய்ந்த நங்கையீர்
அலிகளைப் போலிங்கே அழித லின்றியே,
கலிநகர் வாருங்கள், காத லின்பத்தை,
நலிவறப் பருகிட வாழு நாளெல்லாம்.

யோகினிகள் வேகனை முனிதல்

வேகனிவ் வகைசொலி வேட்கை யோடுற,
யோகமே வாழ்வெனும் யுவதி மாரெலாம்,
ஏகமாய்ச் சூலத்தை யெடுத் தெதிர்த்துடன்
"மோகமே போ" வென முனிந்து தள்ளினர்.

தோற்றனே ஆண்டகை சுத்தனு ரிடம் ;
ஆற்றலைப் பெண்டிர்முன் அரங்கி லேற்றினே.
கூற்றுனைக் கூவுது கொடிய னேபுயற்
காற்றெளிர் கதிரினேக் கலக்க லாகுமோ ?

வேகன் படை

"இணங்கிடா தெம்மையும் எதிர்த்து நின்றிடும்,
அணங்குகாள், உம்மையாம் அள்ளிச் செல்லுவோம்.
கணந்தனில் உங்களைக் கலிபு ரத்திலே
மணம்புரிந் தெம்முடன் வாழக் காணுவோம்."

"தூக்குங்கள்" என்றதுந் துட்ட ராக்ஷஸர்,
மேக்குவி கையுடன் மெல்லி டையினர்,
"காக்கவா கடவுளே" யென்று கத்தினுர்
"தாக்குங்கள் "என்றெரு தானை வந்ததால்.

கட்டழ கரசியாங் கௌரி தேவியைத்
துட்டவெவ் வேகனே தூக்கிச் சென்றிடத்
தொட்டனன், ஆங்குநம் சுத்தன் வேலினுற்
பட்டனன் முருகன்முன் சூர பத்மன்போல்.

சித்திமான் வெற்றி கூறல்

எஞ்சிய பகைவரும் இறைஞ்சிச் சுத்தனைத்
தஞ்சமென் றடைந்துயிர் தப்பி வாழ்ந்தனர்.
அஞ்சறு படையுடன் அமைச்சன் வந்து "நம்
வெஞ்சமர் முடிந்தது வெற்றி" யென்றனர்.

வேகன் இறுதி மொழிகள்

குற்றுயிர் துடித்திடுங் கொடிய வேகனும்
முற்றிலுஞ் செருக்கற முதல்வன் பாதத்தைப்
பற்றினன் பணிந்தனன், "பகவ உன்கையாற்
செற்றிடப் பெற்றனன் சிறியன்" என்றனன்.

"பிழைபொறுத் தருளுவாய் பெரிய வென்மன
முழையினிற் பதுங்கிய மூட மோகங்கள்
இழைகொடுஞ் செய்கையால் இறக்கின் றேனையா,
மழையினுங் கருணைசெய் மன்ன கேட்டியால்.

தானவத் தீவினிற் சனித்த தானவன்,
ஞானமும் பத்தியு நன்ன டக்கையும்,
ஈனமென் றிகழ்ந்தவன், எந்த நாளுமே,
நானெனுஞ் செருக்குற நடந்த பாவியான்.

மங்கையர் கற்பினே, மனிதர் வாழ்வினே,
புங்கவர் தவத்தினேப் புவிய றத்தினேப்
பங்கஞ்செய் பணியொன்றே பணிய தாகினேன் ;
இங்கதை யியற்றிடக் கலியன் ஏவினுன்.

மோகியாம் அரக்கியின் மோகங் கொள்கலி,
போகமும் யோகமும் பொருந்திப் புண்ணிய
நாகரி கம்வளர் நல்ல நாட்டினே
வேகமாய்த் தனக்கென வெல்ல வேட்டனன்.

சித்தியை மரபுடன் சிதைத்துத் துன்மதி
வைத்தது சட்டமென் றுள வையகம்,
இத்ததி பெரும்படை கூட்டி எம்மையும்,
சுத்தனேக் கொல்லெனத் தூண்டி விட்டனன்.

கொடியவன், கொடுஞ்செயல் குறித்து வந்துள்
அடியவ ருகியே ஆவி நீங்கினேன்.
முடிவுரை முடிந்ததென் மூச்சு நின்றதும்,
மடியினேப் பா" ரென வேகன் மாய்ந்தனன். 220

சுத்தன்

வெவ்விய வாழ்வினே விட்டுச் சாகையிற்
செவ்விய சிந்தனே செய்து தப்பினுய் ;
இவ்வள வியற்றிய திறைவனே யெனத்
திவ்விய கோமகன் செப்பி னுனரோ.

மடியினேப் பார்த்திட மடக்கு வாளுடன்
கடிதமொன் றிருந்தது—கலியன் ஆணேயே.
படியெனச் சித்திமான் படித்து நெஞ்சகந்
துடிதுடித் ததன்பொருள் சொல்லு வானரோ .

கலினுன் ஆணேக் கடிதம்

பஞ்ச வடியிலே, பசுப்போல் வாழும்,
துஞ்சா முனிவரை வெஞ்சிறைப் பிடிமின்,
அரிவையர் தம்மை அள்ளி வாருமின்,
உரியவர் நாமே உலகினுக் கென்றே,
ஆங்கே சுத்தனும் அமைச்சனும் உணர
ஓங்கி யுரைமின் ! ஒளிந்தொளிந் தேகிச்
சமயம் பார்த்துச் சத்தியன் மகனே
எமபுர மேற்றி, சுத்தனும் அமைச்சனே
நம்புறந் திருப்ப நயமாய் முயலுமின் ;
சம்பம் பேசிற் சாகத் தீட்டுமின் ;

அங்கே போர்வினை யானதும் படைகள்
இங்கே வருகவே இரண்டு நாளில் ;
சித்தியைச் சூழ்வோம், தீயினுற் செயிப்போம்.
கத்தி முனையிற் கலியர சோங்குமே !

வெருவுரு கலியனின் விருப்பங் கண்டுளம்,
மருகினர் " பின்னந்த மடைய ருர்தலை
திருகுவம் " என்றனர் சேனை வீரர்கள்
உருகினன் சுத்தனும் உலகை யெண்ணியே !

அத்ததி முனிவரர், ஆசி கூறியே,
பத்தினி மாருடன் பரிந்து வந்தனர்.
இத்தினம் வெற்றியி னின்பந் தந்தநம்
சுத்தனைத் துதித்ததைச் சொல்லு வாமரோ !

23. அபயமளித்த படலம்

உருகிய செம்பைப் போலே, உள்ளமு முகமு மாகி,
வெருவுறு மரக்கர் தீதை வெகுண்டது செக்கர் வானம் ;
பொருவினில் வென்ற சுத்தன் புண்ணியம் புரிந்த தெண்ணித்
திருவுறு திங்கள் காட்டிச் செயநகை புரிந்த தன்றே !

புள்ளினம் பாடவில்லை ; பூவின மணக்கவில்லை ;
கிள்ளைகள் கொஞ்ச வில்லை ; கிளர்மறை யொலியு மில்லை ;
தெள்ளிய நதியுங் காற்றுந் திங்களோ டுரைப்ப தொன்றே.
வில்லரு மோனக் காடு விரிச்செனக் கிடந்த தம்மா !

புயல், எரி மலை, பூ கம்பம் போலெழும் பொய்யர் வெம்போர்
இயல்பெறுஞ்சாந்தவாழ்வின் இசைநரம்பறுத்துப் பொல்லாத்
துயர்பல செய்து, காட்டைச் சாம்பராய்த் தூவிச் சென்ற
பயங்கரக் காட்சி கண்டு பதைத்தது முனிவ ருள்ளம்.

சோலையை யழித்துத் தூய தவச்சுடர் துலங்கும் பர்ண
சாலையை அழித்துச் சென்ற சண்டமா ருதத்தை யெண்ணி,
மாலையுந் திகைத்த தந்த மலைகளுந் திகைத்து நின்ற;
காலையில், வேத கானம் பாழினைக் கலைத்த தம்மா !

முனிவர்

இவ்வுல கெல்லாம் இறைவவுன் உறையுள்,
எங்கெங்கும் உயிர்க்குயிர் நீயே !
எவ்வகைப் பொருளும், இறைவநின் பொருளே,
ஈந்துதுய்த் தருட்பணி புரிந்தே,

வவ்விடா தொருவர் பொருளைமற் றொருவர்
 வழங்கிநா ளுண்டுகள் வாழ்க !
திவ்விய வுண்மைப் பொன்முகங் காட்டித்
 திருவருள் புரியருட் சுடரே !

இருந்தவா றிருந்தே, இயங்கிடும் பொருளே,
 ஏகம், அநேகமாய் வளர்ந்தாய் ;
அருந்துணை நீயே, அகந்தொறும் கனல்சுத்
 தாத்துமத் தெய்வமே, உன்னைத்
திருந்துநல் லறிஞர், யாவுமாய்த் தெளிந்தே
 திகைத்திடார் பகைத்திடார் ; அன்பே
பொருந்தியெந் நாளும் சுதந்தர ராகப்
 பொலிகுவர் பூரண வொளியே !

எப்பொருள் அறிந்தார் அறிந்தவர் ஆவார்,
 எப்பொரு ளாளர் இன் புறுவார்,
எப்பொருள் இரவு பகலென்ப தின்றி,
 இறப்பையும் பிறப்பையும் வென்றே,
சிற்பர வொளியாய், அமரவாழ் வருளுந்
 தேன்விளை ஞானவூற் றாமோ
அப்பொருள் உண்மை யறிவினுக் கென்னை
 அக்கினிக் கடவுளே நடத்தாய்.

முனிவர்

என்று வேத மிசைத்து முனிவரர்,
இன்று தங்கள் இடர்களைப் போக்கியே
நன்று செய்த நலம்பெறு நம்பியின்
வென்றி தன்னை வியந்துளம் பூரித்தார்.

பார திரப் பலம்வளர்த் தெங்குமே
போர திரப் புரிந்து மதங்கொண்ட
சூர பத்மனைச் சுட்ட முருகனே,
வீர சுத்தனாய் வேகனை வீழ்த்தினான்.

செருக்கு மிஞ்சித் திமிர்கொண்ட பாவிகள்,
உருக்கு போன்ற வுளத்தர் கலிநமர்
பெருக்கு சேனை யினும் பெரும் பேயென
நெருக்கி நம்மை நலிக்க நினைக்குமால்.

தருமந் தாங்குந் தவமுனி வோர்களே
கருமந் தாங்கும் உலகினர் காப்பென்ற
மருமங் கண்டுநம் வாழ்வை யொடுக்கவே
வருமத் தியரின் வாட்படை நாளையே.

தன்ன லஞ்சுய சாதி மதத்திமிர்,
பொன்மண் ணாசை, புவியெம தென்கிற
மன்னர் செய்யு மதிகெடு போர்வினை,
இன்னல் செய்யு மினியுல கெங்குமே.

எல்லை யற்ற துயர்செய் யிகற்படை
சொல்லை மீறித் தொகைதொகை யாகவே,
தொல்லை செய்யத் தொடருமுன் ஓர்வழி,
ஒல்லை காண உளங்குவிந் தெண்ணுவோம்.

அலைகள் மோதி யலைக்குங் கலமென
நிலை குலைந்திடு நீதி தருமத்தை
உலைவி லாவழி யுய்த்தருள் பாலிப்பாய்
தலைவ, சுத்த தயாபர மூர்த்தியே.

சுத்த முக்த சுதந்தர சக்தியால்,
சத்தி யச்சுடர் தந்தெமை யாண்டிட
இத்த தியிங் கெழுந்தருள் செய்கநாம்
நித்தியந் தொழு நின்மல தேவனே.

அன்று சூரனை வேல்கொண் டழித்தவன்,
என்று மன்பர்க் கிதஞ்செய் சிவக்கனல்,
ஒன்று பட்டநம் உள்ளத்திற் கூடியே
இன்று நல்கும் இனிதின் அபயமே.

அந்தண் மாதவர் அன்புள நன்றியால்,
அந்தி வண்ணன் அனல்வடி வாகிய
செந்தி லாண்டவன் சீர்வடி வைக்குக
மந்தி ரஞ்சொலி வாழ்த்தி வணங்கினர்.

குக மந்திரம்

கதிநீ, மதிநீ, கதிர்வேல் முருகா,
துதிசெய் யடியார் துணை நீ யரசே,
விதிசெய் வினையும் விலகப் புரிவாய்,
புதிதா கியவாழ் வருள்புங் கவனே !

சத்திக் கனலே, சமர்செய் பகையைக்
குத்திக் குமுறும் கொதிவேற் கரனே,
தொத்தித் துயர்செய் பிணியைக் களைவாய்
பத்தர்க் கருளும் பரமன் மகனே.

பவபந் தனைசிந் துக!பற் றறுக !
தவசா தனைசித் திதழைத் தொளிர்க !
கவலை, கதிர்முன் பனிபோல் ஒழிக !
சிவஷண் முகஓம் செறுவேல் முருகா !

அருளார் முகமும், அடியார்க் கபயம்
தருபொற் கரமும், தணலார் விழியும்,
கருணைப் பொலிவும், கனிவாய் நகையும்,
திருமார் பழகுந் திகழும் முருகா !

சிதையா துதியா னம்நிலைத் திடவே,
பதையா துமனம் பணிவா இடவே,
இதயத்தி லெழுந்து பொலிந் திடுவாய்,
உதயக் கிரிபோல் ஒளியார் முருகா !

தாயிற் பெரிதான தயா பரனே,
நேயர்க் குபசாந்த நிகே தனனே,
காயத் திரியின் கருவே குகஓம்,
தேயச் சுடரே, சிவஷண் முகனே.

அன்பர்க் கெளிதாய் வருவாய், அபயம் !
நம்பன் அருளும் நலமார் கனலே,
உன்பொற் பதமென் னுளமூன் றிடவே
எம்பால் வருவாய் குருவா யிறைவா.

இரவும் பகலும் இதயத் துணையே
பரவும் அறிவும் பணியுந் தருவாய்,
புரியுந் தொழில் பூசனையா இடவே
பரிவுற் றருள்வாய் பரிபூ ரணனே.

பண்ணின் ஒலியே, பரிதிக் கொளியே,
கண்ணின் மணியே, கனியின் சுவையே,
மண்ணின் வளமே, மலரின் மணமே,
விண்ணின் விரிவே, அறிவின் விளைவே.

*பழிசெய் யசுரர் பயபந்த மிலா
வழிகாட் டியதிண் வடிவேல் முருகா,
அழியா தொளிரும் அமரக் கனலைப்
பொழியென் உயிரிற் பொலிஓம் குகனே.

நேய மூன்றி நினைத்துத் துதித்துளே
கோயில் கொண்ட குகைக்கன லொன்றியே,
தூயர் தூயனைச் சுற்றித் தியானித்தார்,
வாய கத்தைக் கடந்த மவுனராய்.

---

*இசைக் குறிப்பு: இராகம்–காபி–தாளம்–ஆதி;
தனனா தனனா தனனா தனனா; கலிவிருத்தம்

செய்ய மாதவச் சித்தருள் ளேவளர்
தெய்வ குண்டலித் தீயெழுந் திப்புவி
உய்ய வந்த ஒருவனுள் ளேவளர்
துய்ய சோதிச் சுடரிற் கலந்ததே.

பொறிய டங்கி மனத்திற் பொருந்திட,
நெறிநின் றம்மனம் நெஞ்சி லடங்கிட,
அறிவி லேயஃ தடங்கச்சுத் தானந்தச்
செறிவி லேயொரு சித்தி மலர்ந்ததால்.

காந்த மின்பொறி காட்டுங் கனலென
ஏந்து மாதவர் இன்பக் கனலிலே,
நீந்தி யுள்ள நிலையினை யோதினர் ;
சாந்த மாமுனி சாற்றிய சாற்றுவாம்.

சாந்த முனிவன் இனி வரும் உலக நிகழ்ச்சிகளைக் கூறுதல்

இலங்கு மாதவ மேந்திடுஞ் சித்தர்காள்,
கலங்கி டாது கடமை புரிகுவோம் ;
நலங் கிளர்ந்திடும் ; தீமை நலிந்திடும் ;
துலங்கு மின்பம் ; தொலைந்திடுந் துன்பமே.

தொத்துறு மனத்தின் பாசந் துடைத்தொரு கவலை யின்றி
முத்தியில் உலவி யிந்த முதுவனம் வசித்து வந்தோம் ;
இத்ததி யுலகுக் கெல்லாம் இடரென முளைத்த தீயர்
கத்தியைச் சுழற்றி வந்து நம்மையுங் கலக்கி விட்டார்.

அத்தகை அரக்கர் வாழ்வை யழித்தொழித் தமர வாழ்வை
இத்தல மாந்தர்க் கெல்லாம் இயன்றிடச் செய்ய வந்த
சித்தனிங் கொருவன் உள்ளான், செருவிலு மிணையி லாதான்,
சுத்தனென் றறியத் தக்க சுடரொளிக் குமரன் வாழ்க !

தந்திர மெல்லாம் வல்ல சதுரனும் அறிஞன், சித்தி
மந்திரி யுடனே யின்று மாதவர் குலத்தைக் காத்தான் ;
இந்தவாள் வீர னுள்ளே இன்றுநந் தவத்தை வார்த்தோம்.
சந்ததம் அறமும் அன்புந் தழைத்திட வுலக மெல்லாம் !

கதந்தரும் அரக்கர் சேனை, கடலெனச் சூழ்ந்து நாட்டின்
சுதந்தர வாழ்வைச் சின்னாள் சிதைத்திடும்; துயர்கள்ஓங்கும்;
பதந்தருங் கரும ஞான பக்தியோ கங்கள் போற்றி
இதந்தரும் பெரியோர் வாழ்க்கை இடர்ப்படும் பகைவர்போரால்.

தானமுந் தவமுங் குன்றும் ; தருமமுந் தயவும், பெண்கள்
மானமுங் கற்புங் குன்றும் ; மானிடர் விலங்கு போலே,
ஞானசூ னியராய் வாழ்வார்; நல்லதைச் சொல்லிக் கேளார் ;
வானமும் பொய்க்கும்; எங்கும்வறுமையுமிருளுஞ்சேரும்.

பொறுமையிற் கழுதை யாகிப் பொருமையிற் பாம்பே யாகிச்
சிறுமையிற் புழுப்போ லாகித் தீமையிற் புலிக ளாகி,
வறுமையிற் பாலையாகி, வஞ்சத்தில் நரிக ளாகி
வெறுமையுற் றீன வாழ்வை விரும்புவோர் பலரு மாவார்.

பாருயிர்க் குயிர தாகிப் பலப்பல பான்மை யான
ஓருயர் பொருளை யெண்ணார் ; உள்ளதும் உடலே யென்பார்,
ஆருயிர் ஆண்பெண் சேர்க்கை யளிப்பதென் றறிவு சொல்வார்,
காருகு மழையுஞ் செய்வோம் கதிரையும் படைப்போமென்பார்.

ஆத்திக வேத மெல்லாம் அனலிட்டுப் பொசுக்கு மென்பார்,
நாத்திக வாதம் பேசி, நாத்தடிப் பேறக் கற்றார்,
சாத்திரச் சண்டை கோடி சாதியு மதமுஞ் செய்யும்
ஆத்திரச் சண்டை கோடி அடிமைநா டெங்கு மாமே.

குருவினைத் தூற்று வார்கள் ; கோயிலை யிடிப்பார் ; மாதர்
கருவினைக் கரைப்பார், தீய காமத்தாற் கண்ணி ழப்பார்,
பொருவினை செய்ய வெய்ய பொறிகளைக் குவிப்பார், நாட்டுத்
திருவினைக் கொள்ளை கொள்வார் தீவினை யரக்கர் மாதோ !

தன்னலப் புலிக ளாகித் தம்மவர் கொழுக்க வேண்டி,
இன்னொரு நாட ழிப்பார், இகல்வெறி மதமே பூண்பார் ;
சொன்னதைக் காவார் ; மற்றோர் சுதந்தர ராகப் பாரார் ;
மன்னர சில்லார் நல்ல மக்களி னரசி லாரே.

பூசிய முகமும் போலிப் பற்களும் பொய்ம் மினுக்கும்,
வேசையின் நடையும், கண்ணும் வீணகங் காரப் பேச்சும்,
ஆசையைக் காட்டி யாளை அம்பல மாக்கு நட்பும்,
மோசமாய் வலுக்கு மிந்த மோகநா கரிகத் தம்மா !

பணத்திமிர் கொண்டோ ராலே, ஏழைகள் பாடு பட்டும்
உணத்தகு சோறில்லாமல், பசியினால் உயிர்து டிப்பார்,
நிணத்திமிர் கொண்ட ரக்கர் நீள்சமர் பெருக்கி யெங்கும்
பிணத்தினைக் குவிப்பார் ; மோகப் பேய்பிடித் தாடுவாரே.

பஞ்சமுங் கள்வுங் கொள்ளைப் படைகளின் ஊழிக் கூத்தும்,
வெஞ்சமர்க் கொலையும், எங்கும் விடுதலைப் புரட்சிப் போரும்,
அஞ்சிடும் அரசர் வீழ்வும், அரசியற் சூது வாதும்
செஞ்செவே லென்ன மாற்றும் பசுவளச் செகத்தை யம்மா !

நெறியுடன் நெறிகள் மோதி, நிலத்துடன் நிலங்கள் மோதி,
வெறியுடன் வெறிகள் மோதி, வெடியுடன் வெடிகள் மோதி,
பொறியுடன் பொறிகள் மோதிப் புயலுடன் புயல்கள் மோதி,
அறிவிழந் தவலமாகி அழியுமிவ் வரக்கர் ஆட்சி.

அத்ததி அமைதி யென்றே அலறுவார் உலக மாந்தர்,
தத்தம தாற்ற லாலே தருமத்தை நாட்ட மாட்டார்,
புத்திவந் திறைவா நீயே புகலெனப் புலம்பு வார்கள் ;
இத்ததி சுத்த னென்னும் இரவிவந் தருளு மம்மா.

வெறிபிடித் தலையும் கால வினைகளை மறந்தே, யோக
நெறிபிடித் தொழுகிச் சுத்த ஞாயிறு நிலவுகின்ற
குறிகொண்டு சுத்த சங்கங் கூட்டிநாம் வாழ வேண்டும்
அறிவரு ளாற்ற லெல்லாம் அதற்கென வழங்கி நாளும்.

இங்கினித் தவயோ கங்கள் இயற்றிட வசதி யில்லை ;
வெங்குலக் கலியர் நாளை விரைந்துவந் திடும்பை செய்வார்.
நங்குலம் இமய மீது நலமுறக் கூடி வாழ்ந்து,
மங்கல மைந்த னுக்கே மாண்புறத் தொண்டு செய்க !

சாந்தனிவ் வாறு பேசச் " சரியது சரி " யென் றுத்தம
வேந்தர்கள் ஆமோதித்து, விமலனை நோக்கி னார்கள்.
ஏந்தலும் வணக்கஞ் சொல்லி, முனிவரின் இதயந் தன்னைக்
காந்தமின் சாரம் போலக் கவர்ந்திடும் வார்த்தை சொன்னான்:

சுத்தன் திருவாக்கு

ஓம் என வேதம் ஓதிடும் பொருளைத்
தாம் எனத் தெளிந்த தவமுனி வோர்காள்,
மனத்தை வென்ற மாசிலா வீரர்காள்,
சினத்தை வென்ற தீரர்காள், வணக்கம் !
காமம் வெகுளி கலக்க மின்றி,
தாமதம் ராசதம் சத்துவ மாகிய
முக்குணங் கடந்த முத்தர்காள் வணக்கம் !
சிக்கற வாழும் சித்தர்காள் வணக்கம் !
மின்விளக் கணியில் விளங்கொரு சுடர்போல்,
பன்மதத் துள்ளும் பரம்பொருள் ஒன்றெனத்
தேர்ந்து சமரசந் தெளிந்த காட்சியீர்,
சேர்ந்து வாழுந் திறமை யறிவீர்,
அருணச் சாந்தமும் ஆத்தும சக்தியும்,
கருணை யுள்ளமுங் காட்டி யுலகெலாம்,
இன்புற நோற்கும் அன்புச் சுடர்காள் !
பன்மையில் ஒருமையே பார்க்கும் யோகிகாள்,
இருவினைக் கட்டை யெற்றி யெறிந்து,
செருவினை யில்லாக் குருமர புடையீர் !
சூரியன் போலத் துலங்குஞ் சாட்சியாய்ப்
பார்வினை யாட்டைப் பார்க்கும் புலவீர்,

இயற்கை யுலகில் இறைவனைக் கண்டு
மயக்கற வுள்ளே வாழுந் துறவீர்,
நீண்ட தவக்கனல் ஈண்டெனுள் ஊற்றி
ஆண்டுகொண் டருளிய மாண்டகு பெரியீர்,
இன்றே யென்னை நன்றுநான் அறிந்தேன் ;
இன்றே யென்கடன் இன்னதென் றறிந்தேன்,
இன்றே யிறைவன் என்னுள் எழுந்து,
நன்றே செய்திறல் ஒன்றை யளித்தான்.
இனியென் பேச்செல்லாம் இறைவன் பேச்சே,
இனியென் செயலெலாம் இறைவன் செயலே.
நானென் பதுவும், நாடென் பதுவும்,
ஊனென்பதுவும், உயிரென் பதுவும்,
எல்லாம் அவனே, என்னையா ளுடைய
வல்லா னுனக்கே வணக்கம் வணக்கம் !
அவனே புகலென் றடைந்த முனிவர்காள்,
அவனே நமக்கினி அருள்வழி காட்டுவான்.
எப்படி இறைவன் எங்கே யுய்ப்பான்,
அப்படி யவன்வழி அடியேன் செல்வேன்.
அவ்வழி நீவிர் அஞ்சா தடைமின்,
செவ்வழி யதுவே, தீதறு நல்லீர் !
சாதுவா யிருந்து தவம்வளர் உமக்கும்,
தீது செய்யச் செருபடை கொண்டு,
செற்ற கயவரைத் தெய்வமே யின்று
நிற்கு நிலையற நீக்கிய தறிவீர்.
கொன்றுயிர் குடிக்குங் கொடியரை யெதிர்த்து,
நின்றது நாமே ; வென்றது தெய்வம்
நடந்தது நடந்தது ; நடப்பதைப் பேசுவோம்.
கடந்திட வேண்டுங் காடுகள் பலவாம் ;
சுயநலக் கலியர் தொடங்கிய நாடகம்,
பயங்கரப் படலமாய்ப் படரும் உலகெலாம்.
இரத்தச் சுருள்கள் இறுமாந் தவிழும் ;
உரத்த படைவலி உலகை நடுக்கும்.
மண்ணிலுங் கடலிலும், விண்ணிலும் அரக்கர்
எண்ணவும் அஞ்சும் இகல்வினைப் பார்கள்.
சத்திய மறிந்த சாந்த முனிவர்,
இத்தினஞ் சொன்னவை யெல்லாம் நிகழும் ;
நமது புண்ணிய நாட்டு மக்களும்
தமது தருமந் தவிர்ந்து வீழ்வார்.
சாதி சமய சாத்திர கோத்திர

வாதமும் புத்தி பேதமும் பொறாமையும்
புயலெனக் கிளம்பும் போர்முர சதுத்தே ;
அயலவர் நாட்டை அபக்கெனை விழுங்குவர்.
நிறத்திமிர், நிலத்திமிர், மறத்திமிர் வலுத்தே,
அறத்தினைப் பழிக்கும் அழிவினை புரியும்.
ஒற்றுமை யென்றே உதட்டமி மானம்
வெற்றுரை பேசும், வேற்றுமை பெருகும் ;
உட்சினம் வைத்தே உறவுகள் பகட்டும்.
கட்சிகள் பெருகிக் கலகக் காடாம்.
பயிற்று துள்ளம் பாழ்படு மாந்தர்
வயிற்றுப் பலியாய் வாழ்வை வழங்குவார்.
ஒருவர் சோற்றை ஒருவர் கெடுப்பார் ;
ஒருவர் சொத்தை ஒருவர் திருடுவார் ;
ஒருவர் உரிமையை ஒருவர் அடைவார்
ஒருவர் வாழ்வை ஒருவர் கெடுப்பார்.
காயிதப் போரும் கருணையில் லாமல்
ஆயுதப் போரும், அரசியற் சூதும்,
சாதிப் போரும், சமயப் போரும்,
வேதப் போரும், வேலைப் போரும்,
வீட்டுப் போரும், வீதிப் போரும்,
நாட்டுப் போரும், ஞாலப் போரும்,
இரக்கமில் லாமல், உறக்கமில் லாமல்,
அரக்கர் செய்யும் அசுரப் போராம்.
எங்கும் புரட்சி, எங்கும் போர்ப்புயல்,
எங்கும் வறுமை, எங்கும் கொள்ளை,
எங்கும் கொலைகள், எங்கும் பயங்கரம்
எங்கும் புண்ணீர், எங்கும் கண்ணீர்
நினைக்க நினைக்க நெஞ்சம் நடுங்கும்,
அனைத்தும் அரக்கர் அழிச்சாட் டியங்களே.
இத்தகைத் துன்பம் ஏனெனக் கேண்மின் :—
பித்துப் பிடித்த பேய்மனத் தாலே,
புத்தி கெட்டுச் சத்தான் மாதரும்
சக்தி கெட்டுச் சமரஸங் கெட்டு,
நாசஞ் செய்யும் நானெனை தென்னும்
பாசஞ் சுற்றிப் பண்பினை யிழந்து,
கட்டுக் கடங்காக் காட்டு மிராண்டிகள்,
கொட்ட மடிப்பார் குவலய மெங்குமே.
உயிர்வதை யாலே யுண்டு கொழுப்பார்,
உயிர்க்கொலை யாலே யுலகை யெல்லாம்

கொலைக்கள மாக்கிக் கொற்றவர் யாமெனத்
தலைதலை கிளம்பித் தடியர சியற்றுவார்.
வேகப் படைகள், வீண்வெறி பிடித்த
மோகப் படைகள் முன்முன் சென்று
முடியர சுகளைக் குடியர சாக்கும் ;
குடியர சுகளைக் கொலையர சாக்கும்.
ஆழிப் புயல்போல் ஆட்சிகள் கிளம்பி
ஊழிப் புயலாய்ச் சூழுமிவ் வுலகை !
மனத்தைப் பிடித்த தினவுந் தனித்தனி
இனத்தைப் பிடித்த கனத்த செருக்கும்,
படர்தரும் பஞ்சமா பாதகக் கூத்தும்
இடர்தரும் போரும் இயற்கை பொருமல்,
ஆண்டவ னிடத்தில் அலறிய பயனாய்,
ஈண்டவன் புரியும் இரண சிகிச்சையே.
புன்மை வரினும், புகழே வரினும்,
நன்மைக் கென்றே நடப்பார் மேலோர்.
குண்டுபீ ரங்கி கொண்டுபோர் புரிவோர்
குண்டுபீ ரங்கி கொண்டே யழிவார்.
வாள்வீச் சினையோர் வாள்வீச் செதிர்க்கும்,
தோள்வரை தனையோர் தோள்வரை தாக்கும்.
தாக்கித் தாக்கித் தகர்த்துத் தகர்ந்தே
ஊக்கமாய் இடர்கள் ஒழிந்து போகும்.
புயலும் இடியும் பூகம் பங்களும்,
இயற்கையி னெழுந்தே யியங்குதல் போல,
நகார மடித்து நானெனக் கிளம்பும்,
விகார மனத்தில் விளைவன போர்கள்,
மனிதனைப் பிடித்த மமதை நோயை
இனிதுறக் கெடுக்கவே இவையெலாங் கிளரும்.
பண்டைக் கசண்டுகள் பாழ்பட் டொழியும் ;
சண்டைக் கப்புறம் சகத்திற் கெல்லாம்
புதிய வாழ்வைப் பொலிவுற நாட்டவே
அதிமனி தர்கள் அருளுடன் வருவார்.
இருள்வழி யேகி யிடர்ப்படும் உலகம்,
அருள்வழிச் சென்றே அமைதி பெறுமே ;
அறிவுந் திருவும், அன்பும், வீரமும்,
அறமுந் தவமும், ஆத்தும சக்தியும்,
உள்ளொற் றுமையும், உலகொற் றுமையும்,
கள்ள மற்ற கருணை யொழுக்கமும்,
இறைவனோ டிணையும் இயற்கை யின்பமும்,

குறைகளை வென்ற நிறைகுணப் பண்பும்,
தாக சோக மோகங் கடந்தே,
யோகமும் சுத்த போகமும் பொலியும்.
தெய்வ வாழ்வைத் திருவரு ளாலே
வையக மீது வளமுற நாட்டலே
கடமை நமக்காம் ; கால சக்தி,
நடத்து கின்ற நாடகந் தன்னில்,
வரையிலாக் காட்சிகள் வளர்ந்து செல்லும் ;
திரையை யுயர்த்தித் திருவரு ளிச்சை
மணி யடித்ததும், மாதவக் கனலுடன்
அணியணி யாகப் பணிசெய வருவோம்.
அப்போ திறைவன் அன்பரை நடத்துவான் ;
இப்போ ததனை யியம்புதல் அரிதாம்.
கால சக்கரம் கடவுளை நோக்கும்
காலமே நமது காலம தாகும்.
அதுவரை நாமெலாம் அடக்க மாகப்
பொதுநலம் புரியப் பூரண சக்தியை
வளர்ப்போம் ; இமாலய வரைமிசை யிருந்தே.
உளப்போர் வென்ற உண்மை வீரர்காள் !
அவம்புரி யரக்கர் ஆற்றலை வீழ்த்தத்
தவம்புரி நெறியே சக்தி யளிப்பதாம்.
செல்வீர் முனிவர்காள், சிவகை லைக்கு.
வெல்வீர் உங்கள் விருப்ப மெல்லாம்
புரியத் தக்கன புரிந்தபின், யானும்
உரியகா லத்தில் உம்மிடம் வருவேன்.
சித்தி நகரைச் சீரழித் திடவே
இத்ததிக் கலியன் இறுமாந் தெழுந்தான்.
என்னைக் கொல்லவும், எந்தையைக் கொல்லவும்,
அன்னையை யழிக்கவும் ஆத்திரங் கொண்டான்.
வெறிமிகு படையால் வெஞ்சமர் தொடுப்பான்.
முறியடித் தவனை, முன்னே யெனது
நாட்டையும் வீட்டையும் நலமுற நாட்டிச்
சேட்டை செய்யும் தீயரை யொடுக்கி,
என்னிடம் உயிர்வைத் திருக்கும் தந்தையை,
இன்னிய பணியால் இன்ப முறுத்தியே,
எந்தாய் இந்திரை இசைந்தெனக் காணை
தந்ததும் இமாலயஞ் சார்வேன், முனிவீர் !
கடமை பெரிது ; காலமோ சிறிது.
கடவுள் அளித்த காலந் தன்னை

அவனை யறியவும், அருட்பணி புரியவும்,
தவக்கள னாக்கித் தழைப்போம் ; பெரியீர்,
கத்தியைத் திட்டும் கலியொழிந் தினிய
சத்திய யுகமே தழைக்கத் தழைப்போம்.
சுத்தன் சித்தன், சுதந்தரப் பெருமான்,
அத்தன், எம்மை யாண்டவன் அருளால்,
அவன்பெயர் தாங்கும் அடியேன் கொண்ட
நவம்பெறு கொள்கை நலம்பெற நாளும்
சிவம்பெறு நல்லீர், தெய்வப் புலவீர்,
தவம்பெறு சித்தி தந்தருள் வீரே.
அக்கா லத்தின் அரக்கரைக் காட்டிலும்
இக்கா லத்தின் அரக்கர் வலியரே ;
கல்வியும், கணக்கும், கலையும், தொழிலும்
செல்வச் செழிப்பும் தீரமும் வேண்டும்.
உடையணி வேண்டும், உலகம் மதிக்கும்
படையணி வேண்டும், பயன்பெறு தவத்தால்
ஆத்தும சக்தி யடைந்திட வேண்டும்.
தீத்திரள் போலே சிற்சக்தி வேண்டும்.
இராமனும் சிவாஜியும் இராம தாஸனும்,
ஒரேதிரு மேனியில் ஒன்றிட வேண்டும்.
பத்தியுங் கருமமும் பரம ஞானமும்,
முத்தியும் வீர முயற்சியும் சேர்ந்த
புதிய வாழ்வு பொலிந்திட வேண்டும்.
முதிய ஞானமும், முன்னேற்ற வீறும்,
சாந்தமும், சிவமும், சச்சிதா னந்தமும்,
சேர்ந்த வாழ்வே தெய்விக வாழ்வாம்.
பக்குவ மறிந்து பரமன் அருளால்
இக்கருத் தென்னுள் இலகிய தின்றே.
நாட்டி னியல்பை நயமுற வெனக்குக்
காட்டியின் றெழுந்த கலியர் போரில்
முன்சென் றிகலை முடித்த சித்திமான்
என்குல மந்திரி யிசைபெற வாழ்க !
சாரமாங் கதைகளும் சாத்திர நுட்பமும்,
பாரி னியல்பும் பரிந்தெனக் கருளி,
தீரமும், பக்தியும் திருவுறத் தூண்டிய
பூரண சாந்தன் பொன்னடி போற்றி !
என்னைப் பயிற்றுவ தினியவன் கடனே.
முன்இனிச் செல்வோம் முனிவர் கணங்காள் !
சித்தியிற் செய்வன செய்தபின் கருதிய
மெய்த்தவம் புரிவீர் மேதினி வாழவே !

சித்தி செல்லல்

கேட்டனர் முனிவர் சுத்தன் கிளத்திய உண்மை யெல்லாம்,
"வாட்டமொன் றில்லை யிந்த வரம்பெற்ற வேந்த ஞலே ;
நாட்டிடர் நீங்கு" மென்ருர். நாமினி இந்த வீரன்
காட்டிய வழியைப் பற்றிக் காணுவோம் இன்ப மென்ருர்.

கொண்டநங் கொள்கை வென்றே குருகுலங் காண்போ மிங்கே
தண்டக வனத்தி லின்றெந் தானைகள் பயில்க வென்றே,
அண்டிய முனிவரோடும் அமைச்சொடுந் தேரி லேறிப்
பண்டிசை முழங்கச் சுத்தன் சித்தியைப் பார்க்கப் போனன்.

துயரிடர்க் காட்டை யெல்லாந் தூள்பட நூறி, வாழ்வின்
உயர் நல மோங்க, நானி யுலகினில் யோகசித்திப்
பயிர்செழித் தோங்கத் தீயர் பந்தனை நீங்க வேண்டி,
அயர்வறத் தொண்டு செய்யும் அருந்தவ முனிவர் வாழ்க ! 460

ஆழிசூழ் உலக மெல்லாம் அறநெறி யோங்கி நன்மை
சூழுக ! சுத்த ஜோதி, துலங்குக ! மாந்த ரெல்லாம்
தோழமை பூண்டு வீர சுதந்தர ராக நீடு
வாழிய வென்றெல் லாரும் வளநக ரடைந்தார் மாதோ ! 464

24. அரசவைப் படலம்

துங்க மாமலை தவழ்ந்திடுந் தரளவெண் மதிபோல்,
துங்க வெண்குடை துலங்கரி யணைமிசை யரசன்,
இங்கி லங்கிடும் இந்திரன் எனக்கொலு விருந்தான் ;
மங்க லத்திரு வரசியும் இருந்திட மருங்கே !

சித்தி மாநகர்ச் செல்வரும் புலவருஞ் செறிய
முத்தர் போற்றிடும் பாரத முனியரு கிருக்க,
வித்தகர் புகழ் அமைச்சுடன் வேந்தவை யிருந்தான்,
சத்தியன், புவி தாங்கிடுந் தருமமே யன்னன்.

கடவுள் வணக்கம்

மகர யாழ்குழல் மத்தளந் தழுவிடக் கலையின்
சிகர மேறிய திருவருட் சிந்தைகொள் புலவர்,
அகர மென்னவே அகிலத்திற் காதியாம் பொருளை,
"பகவ னேசுப மருளே" னப் பரவினர் பணிந்தே.

ஆதி சக்தியை, அகண்டசிற் சக்தியை, ஞான
ஜோதி சக்தியைச் சுதந்தர சக்தியை, ஐந்து
பூத சக்தியைப் பரப்பிநீள் புவியினில் ஆடும்
வேத வுட்பொரு ளாகிய விமலனே போற்றி !

பொங்கு நல்லறப் புகழுடன் புனிதமெய் வாழ்வும்,
சிங்க நெஞ்சமும், வீரமும், சிரமுயர் நடையும்,
துங்க மாதவர் ஆசியும், தொல்புவி வாழ்த்தும்,
எங்க ளுக்கினி தீந்தருள் இறைவனே போற்றி !

பல்லி யங்களு முழங்கின, பலகலைப் புலவர்
வல்ல பங்களை வளமுற விளக்கியே தக்க
செல்வ மெய்தினர், செய்வன செய்திட வாங்கே,
சொல்லி லாச்சுறு சுறுப்புணர் வெழுந்தது துடித்தே.

கால் அமர்ந்தது. கண்ணிய மன்னவை அனைத்தும்,
சீல வாணகை திகழுறச் செங்கண்ணுல் அளந்தே,
கோல மாமுகம் குலந்தரும் பெருமையாற் குலுங்க,
ஞால மன்னனும் அமைச்சரை விளித்தனன் நயந்தே.

மன்னுயிர்க் குயி ராகிய மன்னவன் அருளால்,
அன்னவன் பணி யாகவே அறச்செங்கோல் பிடித்தேன்.
என்னை என்னர சாட்சியை யினிதுற மதிக்கும்
தன்மையீர், பொது நன்மையைத் தாங்கிடுந் தகையீர் !

தக்க கல்வியும், ஒழுக்கமும், தகுந்தநற் ருெழிலும்,
பக்குவப் பயிர் வளமையும், பண்புள திருவும்,
சிக்க லற்றவொற் றுமையுடன் செறிந்துநம் அருமை
மக்கள் யாவரும் வாழ்வகை வாழுவ தறிவோம்.

மந்திரி

வணக்கம் வேந்தநல் வளமையும், வீரமும் அன்பும்,
குணக்க மற்றநற் கொள்கையுங் கல்வியுந் தொழிலும்,
பிணக்க மற்றுள ஒருமையும், பிரிவறு திருவும்,
இணக்க முற்றுன தின்னுயிர்க் குடிகளங் கிருப்பார்.

தாயுந் தந்தையுந் தமயனு நீயென மதிப்பார் ;
கோயி லாகவுன் குடைநிழ லரசையே குறிப்பார் ;
நேய ராகவுன் னிசையொளி நிலவிட வாழுந்
தூயரே யுனைத் துதித்திடுந் தொண்டராங் குடிகள்.

சத்தியன்

இனிது நும்முரை. என்னருங் குடிகளின் சேமம்,
எனது சேமமென் றியன்றதை இயற்றினன் இயல்பாய்.
தனது நோயினைத் தவிர்ப்பது போலவே, மக்கள்
மனது ளேமறை குறையையு மாற்றிட முயன்றேன்.

உண்ணும் போதிலும், உறங்கிடும் போதிலும், பூசை
பண்ணும் போதிலும், பாரத நாட்டுடை நலமே
எண்ணு கின்றனன் ; இறைவனை யிறைஞ்சிநிற் கின்றேன்.
கண்ணுங் காவலு மாயிதைக் காக்கின்றேன்.......அறிவீர்.

இவ்வகை யிமை யிரண்டென நாட்டினைக் காத்தும்,
ஒவ்வறுஞ் சிலர் உட்பகை யெழுந்ததின் றுண்மை,
அவ்வியந் தரும் அரக்கரின் றகங்கரித் தாங்கே
தெவ்வினை தொடர்ந் தாரதைத் தெரிகிலார் யாரே ?

கற்ற கல்வியோ டனுபவங் கண்டிட வேண்டி,
இற்றை நாளினில் இளவர சிப்பெரு நாட்டைச்
சுற்றித் தண்டகம் வந்ததும், சூழ்ந்தவெம் போரைப்
பற்றி யொற்றர்கள் பகர்ந்ததைப் பழுதற வறிந்தோம்.

ஒரு மகன், என துயிரினும் அரியவன், என்பின்
வரு மகன், இந்த வையத்திற் கினியன வெல்லாந்
தரு மகன், இன்று தருமப்போர் தருவதை யெண்ணிப்
பெருமை கொண்டனன் பெற்றதன் பயனையும் பெற்றேன்.

புத்திமான், புவி போற்றிடும் புலமையிற் சிறந்த
சித்தி மானுடன் சென்றதே வென்றதாம் ; எனினும்,
இத்தினம் இகல் வலுத்ததென் றியம்பினர் ஒற்றர் ;
சுத்த னுக்கொரு படையணி துரிதமாய் விடுவோம் !

விஜயன்

போரெப் போதெனப் புயத்தின வெடுத்தநம் படைகள்,
நேரிப் போதவண் சென்றிட நின்றுள தென்றே,
வீரப் போர்வர விம்மிடும் விஜயனு மாங்கே
நேரப் பேசுழி நீண்முர சார்த்ததைக் கேட்டார்.

என்ன வென்னுமுன், வெற்றியென் றெதிர்ந்தநற் றூதர்
"மன்ன வுன்மகன் மந்திரி யுடன்வரு கின்றான்.
அன்ன வன்முனி கணங்களின் ஆசிசூழ்ந் துற்றான்.
முன்ன ருன்னடி பணிந்திட முந்துவா" னென்றார்.

வந்த னன்மகன் வாகைகள் சுமந்தென, மன்னன்
கொந்த ளித்திடும் உவகையாற் குதித்தெழுந் தோடி,
முந்தி யான்வர வேற்றிட முனிகணத் துடனே ;
அந்த வேளையிற் சித்திமான் அரசன்முன் வந்தான்.

"வருக " வென்றுதன் மந்திரிக் கிழவனே ஏற்க,
உருகு மன்புடன் வந்தனம் உரைத்துநல் லமைச்சன்,
பெருமை பெற்றதிவ் வுலகமுன் பிள்ளையால் ; அவனே
இருவ ரும்அர சவையினில் ஏற்பமென் றுரைத்தான்.
"அதுவென் பாக்கிய " மென்றதும் அரசனு மாங்கே,
பொது சனக்கடல் " சயசய புனித " வென் றுரர்க்க,
சதும றைமுனி வர்துதி சாற்றிடச் சுத்தன்
புதிய வேளென முதியபொற் கோயிலுட் புகுந்தான். 88

25. வரவேற்புப் படலம்

கரை புரண்ட கடலென் றரசவை,
உரை யுயர்த்தி, " யுலகினைக் காத்திடுந்
துரை வருக,நம் சுத்தன் வரு" கென்றே,
நிரை யுடன்வர வேற்றிட நின்றதால்.

மந்திரிகள் வரவேற்பு

''வருக சக்தி குலந்தரு மாணிக்கம்,
வருக எங்கள் வரம்பெறு கோமகன்,
பொருந ராழிப் புறங்கண்ட புண்ணியன்
வருக " வென்றனர் மந்திரி மாரெல்லாம்.

சத்தியன், இந்திரை

"அரிய வெற்றி யடைந்தனை அன்பநீ
பெரிய ராசிகள் பெற்றனை ; பேசுதற்
குரிய உன்புகழ் ஓங்குக மைந்தனே
விரிக திரென மேதினி யெங்குமே !"

சத்தியின் குலம் சந்ததம் வாழ்ந்திடச்
சித்தி யின்புகழ் சீர்பெற வந்தனை
சுத்த வீரச் சுடர்மணி வா வென்றே
முத்த மிட்டனர் பெற்றவர் முன்வந்தே.

பாரத முனிவன்

மங்கல மைந்தநீ வருக, மாண்புடன்
உங்குல மோங்கிட ஒளிர்க பானுபோல்,
பொங்குக உன்புகழ் பூவு லகெலாம்,
தங்கிநன் றோங்கிடுந் தரும தீபம்போல். 20

இவ்வகை குமரனை யேற்றுப் பாரதன்,
செவ்விய முனிவரைச் சேவித் "தெம்பதி,
துவ்விய தானதுந் தூய சங்கத்தால் ;
திவ்விய சித்தர்காள் சேர்க " வென்றனன்.

அவரவர் அவரவர் இடத்த மர்ந்ததும்,
தவமுனிக் கணத்தினை வணங்கிச் சத்தியன்
அவைநிகழ் மணியினை யடிக்கச் சொல்லித்தன்
தவிசினில் அமர்ந்தனன் தருமம் போலவே !

படையணி வீரர் போற்றப் பண்புள வமைச்சர் போற்ற
நடையணி குலுங்கு மாதர் நல்லிசை யுடனே போற்றக்
கொடையணி செல்வர் போற்றக் கொற்றவை போற்ற வெற்றிச்
சுடர்மணிச் சீயம் போலச் சுத்தனும் எழுந்தான் மாதோ !

சுத்தனை உபசரித்தல்

நண்ணிய மகனைத் தங்க நவமணித் தவிசில் ஏற்றிப்
பண்மலர் சொரிய, வேதப் பாடல்க ளாலே போற்றி,
" உண்மையில் உதித்த தூய ஒளிமணி வாழ்க !" வென்றே
தண்மலர் சொரிந்தார் அந்தச் சத்தியச் சபையி லுள்ளோர்.

எல்லாரும்

ஆவியாய் உலகைத் தாங்கும் அறத்தினைக் காத்தாய் வாழ்க !
பாவியர் போரைப் போராற் பாழ்படப் படுத்தாய் வாழ்க !
தீவினை தீர வந்த திவ்விய வீர வாழ்க !
நாவினுக் கினிய சுத்த நாமவுன் சீர்த்தி வாழ்க !

சுத்தன்

புன்னகை பூத்த பொன்முகங் காட்டிப்
புனிதனுங் கனிமொழி தேர்ந்தே,
" அன்னையே வணக்கம் தந்தையே வணக்கம்,
அருட்பெருஞ் சித்தரே வணக்கம்,
மன்னுயிர் வடிவாய் உலகினில் ஆடும்
மங்கல சக்தியே வணக்கம்,
என்னுயிர் வாழ்வும் செயல்களும் உமது
கருயணால் இயன்ற " தென் றுரைத்தான்.

கனிப்பொறை வணக்குங் கற்பகக் கிளைபோல்,
கற்றநல் வணக்கமே காட்டித்
தனிச்செருக் கின்றிச் சாற்றினன் கேளீர் ;
தகைபெருஞ் சித்திமா னுடனே,
வனத்துறை முனிவர் ஆசியின் றுணையால்
வலிபடை யரக்கரை நலித்தேன்.
எனக்கென வாழ்க்கை யில்லையிங் கினிமேல்
என்னையே யிறைவனுக் கீந்தேன்.

இன்றுல கியல்பைக் கண்டனன் சுற்றி,
இனிவரு நாளையுங் கண்டேன் ;
தென்றிசைக் கோமான் செய்வினை யாட்டைத்
திசைதிசை காணுவ தல்லால்,
நன்றுறு வினைகள் எவற்றையுங் காணேன் ;
ஞாலத்திற் கிதுசுப வேளை
அன்றெனத் தெரிந்தேன் ; கலிதரும் அரக்கர்
ஆட்டமே காட்டிடு முலகே !

கஞ்சியே தேடிக் காரிகை யாரின்
கலவியே சுகமென நாடி,
வஞ்சமே புரிந்து, வாய்மையை யிழந்து,
வறுமையே வரவரச் சுமந்து,
நஞ்சமே யுண்ட பஞ்சரக் கிளிபோல்
நாளுமே நலிகின்றார் உலகோர் ;
அஞ்சினேன் இவரை. ஆண்டவா வுன்றன்
அருளுற வேயெனக் கருளாய்.

உயிர்க்கொலை புரிவார், கொலையுண வுண்பார்.
உலகினை யுலைத்திடக் கொதிப்பார் ;
அயர்விலாப் பொன்பெண் ஆசைக ளாலே,
அதர்மமே கடனெனப் புரிவார்,
பயிர்களை யரிக்கும் விடப்புழுப் போன்றார்,
பாரினில் எளியரை நலிப்பார்.
கயவரின் உறவைக் கனவிலுங் கருதேன்,
கடவுளே யுன்னுற வருளாய் !

பட்சிக ளிடையே கூட்டுற வுண்டு !
பாரினர் ஓரினம் பேசிக்
கட்சிவேற் றுமையாற் கலகங்கள் செய்வார் ;
காக்கைபோற் கூடியே கலைவார்.
உட்சினம் வைத்தே உதட்டினிற் சிரிப்பார் ;
ஊரினுக் குழைப்பது போலே
குட்சியை நிரப்புங் கும்பலைக் கூடேன்
குலவுக நின்னரு ளுறவே.

கொள்ளிபோல் விழியார் ; பிறர்குடி கெடுப்பார் ;
குத்திரங் கோள்பொய்யே யுரைப்பார்.
கள்ளினைக் குடிப்பார், கற்பினை யழிப்பார் ;
காலத்தைச் சூதினில் இழப்பார்,

வெள்ளியின் வலையில் வீழ்ந் (து) அதஞ் செய்வார் ;
விதவிதக் கொடுமைகள் இழைப்பார் ;
உள்ளினும் உள்ளம் சுடும்உற வணுகேன் ;
உள்ளவா வுன்னுற வருளாய்.

இவ்வகை யிறைவனை யிறைஞ்சி நாடினேன்.
உய்வகை யவனரு ளன்றி யுள்ளதோ,
எவ்வகை யவனுளம் ஏவு கின்றதோ,
அவ்வகை நடப்பதென் அறம தாகுமே. 100

என்னுயிர் வீணையை யிறைவன் மீட்டிட,
மன்னுயிர்க் கதனிசை மகிழ்வு கூடுமால்,
இன்னிய நண்பர்காள், இசைந்து நம்புங்கள் ;
அன்னவன் அருளுமை ஆத ரிப்பதே.

முதற்சமர் முடிந்ததென் றுவகை கொள்ளலீர் ;
அதர்மமே தொழிலெனும் அரக்கர் நாளையே,
கொதிசினப் படைகளைக் கொண்டு, சித்தியின்
மதிலினை வளைத்திட வருவ தாகுமே.

ஆயினும் அஞ்சலிர் அன்பு நேயர்காள்,
பேயினுங் கொடியவர் பிறகிட் டோடவே
போயினும் படையுடன் போர்செய் யென்றுளே
நாயகன் கட்டளை நாட்டி விட்டனன்.

ஆதலால் இனிவரும் அமர்க்க ளத்திலும்
கோதறு வீரரைக் கூட்டிச் சித்தியைத்
தீதறக் காப்பதென் செய்ய நற்கடன்
மேதகு கேள்வியீர் விருப்ப மோதுமின் !

மறந்தரு பகைவரை மாற்றி வெற்றிகொள்
அறந்தரு தூயவன் ஆர்த்த வாசகம்,
சிறந்தவுள் ளுணர்ச்சியைத் தூண்டச் சீரவை
பிறந்தது பரந்தது பெரிய மோனமே.

சத்தியன்

போர்த்த மோன வியப்பினைப் போக்கியே,
சீர்த்தி யோங்கிய செல்வன் முகத்தினைப்
பார்த்துப் பார்த்துப் பரவச மாகிய,
கீர்த்தி வேந்தன் எழுந்து கிளத்தினன் :

வேந்த வையில் விளங்கும் அறிஞர்காள்,
மாந்த ருக்கினி மாறிய காலமே
போந்த தென்று புனித னுரைத்தது,
நாந் தடையற நம்பிடும் உண்மையே.

உடன் பிறந்துடன் உண்டு வளர்ந்தவன்,
கடன் மறந்த கலியனும், மோகியால்,
விடங் கலந்த விரோதியென் றாயினான்,
மடங்க லந்த மனத்திமி ரென்னையே !

கண்ண யர்ந்துங் கடமை மறக்கிலார்
புண்ணி யப்புவி போற்றும் புரவலர் ;
எண்ணி நன்மை யியற்றிட லேயவர்
மண்ணு டல்பெறு மாண்பெனக் கொண்டனர்.

மிக்க மேலவர் செஞ்சொலை மேற்கொண்டே,
தக்க தாற்றித் தருமஞ் செலுத்தினேன்,
இக்கொ டியவன் இன்றென தாட்சியும்
பக்கு விட்டிடப் பாதகஞ் செய்கிறான்.

ஒற்றர் மூலம் உளவறிந் தன்னவன்
பற்றுந் தீய வழிகளைப் பார்த்தனன் ;
மற்றுஞ் சொல்லை வளர்ப்பதி லென்பயன்,
சிற்றிற் பாம்பினைச் செற்றிட லேகடன்.

குடிக ளின்பமே கொள்கையென் றாடுமென்
கொடியின் மீதக் கொடியவன் ஏவிடும்
இடி விழுமுன் எதிர்த்து நொருக்கிடக்
கடிய வேகப் படையெழக் காண்பமால்.

உருகும் ஈயத்தை ஊற்றிய தென்னவே,
குரு முனிவர் குடில்களைத் தாக்கிய,
வெருவு செய்தி விழுந்ததும், சுத்தனே
செருவெல் வானெனச் சிந்தித் திருந்தனன்.

புலி நகரெனப் புல்லர்கள் கூடிய
கலி நகரக் கடும்பகை செய்படை
கிலி பிடித்துரங் கெட்டுப்பின் னோடிட
வலிய சேனை வளைகநங் கோட்டையே.

படைத் தலைவன் விசயன் பணியிது ;
கடையர் கூடுங் கலிநகர் ஏகியே,
நடை முறைகளை ஒற்றர் நவிலுக ;
இடையி லின்னொன் றியம்பிடக் கேண்மினோ.

சிற்ற ரசர் சிலரின் உதவியைப்
பெற்ற னன்கலிப் பேயென் றறிகிறேன் ;
ஒற்றர் சென்றவ் வுளவையுங் காணுமின் ;
கற்ற மந்திரி யின்கருத் தோதுக.

நாடு சுற்றி யறிந்து நலமுற
வீடு வந்தநம் வித்தகச் சித்திமான்,
நீடு வாழுறு நீதி யரசினை
நாடு மாந்தர் நிலையை நவில்கவே.

சித்திமான்

சாதி பேதமி லாது சகலரும்,
மேதி னிக்கு விளக்கெனத் தோன்றியே,
நீதி காக்கு நிருபனென் றுன்னையே
ஓதி யுள்ளங் குளிருவர் உண்மையே.

தந்தை நீயவர் தாயுன் னரசியே.
பந்து வர்க்கமிப் பாரத நாடெலாம் ;
இந்த நல்லுணர் வெங்கும் இருந்தெமை
வந்த னத்துட னேவர வேற்றதால்.

நிறை மனத்தின ரான நிருபர்கள்,
இறைவனு முனை யெண்ணிப் பணிந்தனர் ;
பொறை மனத்தர் பொதுசன நேயரும்;
குறை மனத்தன் கொடிய கலியனே.

சாத சோகனும் சந்திர குப்தனும்,
ஆதி பாண்டி யரசரும் போலவே,
நீதி செய்யு நிருபவுன் னுட்டிலே
பேதஞ் செய்யப் பிறந்தனன் பேயனே.

ஆருக்கும் பய மற்ற துரோகியிப்
பாருக் கேயிடர் செய்யும் படைகொண்டான் ;
சீருக் கெல்லாஞ் சிறந்த நம் சித்தியின்
வேருக்கே விடம் வார்க்க விழைந்தனன்.

நற்ற வரை நலிக்கச் செயலிலான்.
ஒற்று மையை உலேக்க வுழைக்கின்றுன்.
இற்றை நாட்டில் இவன்யம தூதர்கள்,
புற்ற ரவெனப் பூந்து கரந்துளார்.

சுத்தன் சொன்ன சுடர்மொழி புண்மையே,
சத்தியன் சொல் சமர்வினை தக்கதே.
ஒத்த நெஞ்சுடன் ஓங்கிய வீறுடன்,
சத்து ருவைத் தகர்த்திட நிற்பமால்.

அமைச்ச னிம்மொழி பேசி யமர்ந்ததும்,
இமைத்த லின்றி யிருந்த சபைக்குநல்
அமைதி வாக்கை யருள்கென மன்னவன்,
சமதை கொண்ட முனிவரர் சாற்றினுர். 200

முனிவர்

வீரர்கள் பெருக ; நாடு விடுதலை பெறுக ; ஞான
தீரர்கள் பெருக ; தெய்வ ஜீவனம் பெருக ; நாளும்
போர்மத வெறிக ளின்றிப் புதுயுகம் பொலிக வெற்றி.
பாரத சக்தி ஜோதி பரவுக வுலக மெல்லாம் !

முனிவ ராசி முடிந்ததுஞ் சத்தியன்
இனிவி னைகள் இயற்ற வெழுந்தனன் ;
புனிதன் பொன்முகப் புன்னகை கண்டுநன்
மனவு றுதிகொள் மன்ற மெழுந்ததால் ! 208

பாரத சக்தி
முதலாவது சித்தி காண்டம்
முற்றிற்று

பாரத சக்தி மகா காவியம்

இரண்டாவது

கௌரி காண்டம்

(கதைக் குறிப்பு)

[இந்த **இரண்டாவது கௌரி காண்டத்தில்** சுத்தன் கௌரியை மணம் புரிகிறான். சத்திய ராஜன் அவனுக்கு முடிசூட்டித் தனது முதுமையை யோகத்தில் கழிக்கிறான்; தருமப் பிரசாரமும் செய்கிறான். கலியன் அசுரப்படைகளுடன் சூழ்ச்சி செய்து, பெரிய போருக்குப் படை சேர்க்கிறான். சில போலித் துறவிகளைத் "தாந்திரிக சாதகர்" என்று அனுப்பிக் கலியன் சித்தி நகரில் கலகத்தைத் தூண்டுகிறான். அக் கலகமே போராக வளர்கிறது. போரில் ஓர் ஆபத்தில் கௌரி அதரும அரக்கர்களைக் கொன்று, நாயகனைக் காத்துத் தானும் குண்டு பட்டு இறக்கிறாள். சுத்தன் சித்திக்கோட்டையை முற்றுகையிட்ட கலிப்படையைமுறியடிக்கிறான்; கலியனும் கைதியாகிறான்; பிறகு மன்னிப்புக் கேட்டுத் தப்பிச் செல்கிறான். இதற்குள் பழுத்தவீரனான சத்தியக்கிழவன், பஞ்சவடி சேனையைக் கொண்டு கலிநகரைப் பற்றி, அங்கே தானவரின் இரகசியங்களையெல்லாம் அறிந்துகொள்கிறான். கலியன் தனது நகரவாசலில் அடிவைத்ததும், கைதியாகி மோகியுடன் சிறைப்படுகிறான். மோகி ஒரு தந்திரத்தால் அவனுடன் தப்பி ஊரைத் தாண்டுகிறாள். அங்கே தானவ விமானம் வந்து இருவரையும் ஏற்றித் தானவம் செல்கிறது. இதைக்கேட்ட சத்தியன், கலிநகரை ஆள ஒரு வீரனை வைத்து, தானே தானவரையும் துரத்திக்கொண்டு மரகதத்தீவிற்குக் கப்பல் நடத்துகிறான். அவன் கதை தானவ காண்டத்தில் வரும். இங்கே சுத்தன் கௌரி தேவி வீழ்ந்த இடத்திலே பெரிய பந்தல் எழுப்பி, வெற்றி கொண்டாடுகிறான். பிறகு அதே இடத்திலே, "**கௌரி விலாஸம்**" என்ற பல்கலைக் கழகம் நாட்டுகிறான். சுத்தனுள் ஒரு மாறுதல் உண்டாகிறது]

பாரத சக்தி மகா காவியம்

இரண்டாவது
கௌரி காண்டம்

1. ஆலோசனைப் படலம்

காப்பு

மங்கல முனிவர் வாழ்த்தக் கௌரியை மணந்து சுத்தன்,
தங்குல காளும்போது, தாக்கிய கலியை வீழ்த்திப்
பொங்கிய வெற்றி கொண்டு பொலிந்தநற் கதையைச் சொல்லத்
திங்களை யணிந்த சக்தி சிவனருள் புரிக மாதோ !

சத்தியன் பேச்சு

வையகந் தகழி யாக, மன்னுயிர் இன்ப வாழ்வே
நெய்யதாய்த் தரும நீதி நீண்டுயர் திரிய தாக,
மெய்யர சாட்சி யென்னும் விளக்கொளி துலக்கு கின்ற
செய்யவன்,அமைச்சர்முன்னேசிந்தையைத்தெளியச்சொன்னான்:

மனதுறு சாட்சி யாகக் கடவுளை மதித்து, நாளும்
எனதுறு துணையாய் நீதி யியம்பியென் அரசபாரம்,
இனிதுறச் செய்யும் செஞ்சொற் செல்வர்காள், எனது மைந்தன்
புனிதனுக் கரசை யீந்தோர் புதுவினை புரிய வேட்டேன்...

உலகுடை நிலையும், இந்த உடலுடை நிலையும், எங்குங்
கலகமும் பிரிவுந் தூண்டுங் கலிநகர் நிலையும் கண்டேன் ;
இலகுயர் மைந்தன் ஆட்சி யேந்திடுந் திறமுங் கண்டேன் ;
நலமுயர் பணியொன் றுற்ற நாடினேன், வாடி னேனே !

புண்ணுறு பிறவியும், போரும் போட்டியும்,
எண்ணறு கவலையும் எழுந்து கூத்திடும்
*நுண்ணிய தடத்தினை நுனித்து நோக்கினேன்.
மண்ணுல காண்டயான், மனத்தை யாள்வனே.

---

*சூக்ஷ்ம சரீரம்

இனச்சமர் வருவதும், இகல்செய் ஆசையால்,
தனச்சமர் வருவதும், தன்ன லத்தினால்,
சினச்சமர் வருவதுஞ் சிந்தை செய்திடின்,
மனச்சமர் அல்லது மற்றொன் றில்லையே.

சொல்லெழு போர்களும், சொல்லை விஞ்சிய
வில்லெழு போர்களும், வெடித்து மேலெழும்
புல்லிய பொறாமையின் போர்க ளன்றிவே
றில்லையென் றுறுதியாய் இயம்ப லாமரோ ?

வேற்றுமை விளைப்பதும், வினைகெ டுப்பதும்,
ஆற்றலைத் தேய்ப்பதும், அடிமை செய்வதும்,
போற்றிய நன்மையைப் பொருது வீழ்த்தலும்,
கூற்றினுங் கொடுமனக் குற்ற மேகொலாம்.

மனத்தினைத் திருத்தலே வாழு மாந்தரின்
இனத்தினைத் திருத்தலாம் ; இருவி காரமாம்
மனத்தினை வெல்லலே மதியை வெல்வதாம் ;
எனத்தகும் உண்மையை இன்று கண்டனன்....

ஆதலால் சுத்தனுக் கமைந்த கன்னியை,
வேதசம் மதப்படி விவாகஞ் செய்தபின்,
நீதிநன் முறைப்படி நிருப னாக்கியே
மேதினிக் கருட்பணி மேவ வேண்டினேன். 40

மறவழி கலியினை மடக்க வேண்டிய
திறமுள சேனையுஞ் சித்த மாக்கினேன்.
அறிவழி மாந்தரின் அகந்தி ருந்தவே,
அறவழி நலஞ்செயும் ஆர்வ மோங்கினேன்.

சீர்பெறுஞ் சத்திய சீலர் தம்முடன்
ஊர்தொறும் ஊர்தொறும், உரை நடத்தியும்,
கார்மழை யெனப்பொதுக் கடமை காத்துமே,
பார்மனந் திருத்திடிற் பயனுண் டாமரோ !

குடிநலம் ஓங்கிடக் கொற்றம் ஓங்கிடப்
படிநலம் ஓங்கிடப் பரிதி யோங்கிடுங்
கொடிநலம் ஓங்கிடக் கோன்மை யோங்கவே,
துடிமனந் தூய்மைகொள் சூழ்ச்சி செய்வனால்...

புறமுள பகைவரைப் புறங்கண் டேன்;மகன்
அறமுயர் அரியணை யமர்க சித்தியில் ;
மறவினை தூண்டிடும் மனப் பகைவரைத்
திறமுடன் வென்றிடுந் தொண்டு செய்வனால்.

பேரிடர் செய்திடும் பேயர் சூழ்ச்சியால்,
சீரிய தருமங்கள் சிதைந்த தீமையை,
ஓர்கணந் தாங்கிலேன் ; உரைத்த உண்மையைக்
காரிய மாக்கிடக் கருத்தைச் சொன்மினே !

சித்திமான்

என்றலும் சித்திமான் இறைஞ்சி யோதுவான்;
மன்றலைச் செய்துநன் மகனை ஆளென்றே
சென்றிட லின்றியிச் சித்தி மாநகர்
நின்றுன தருட்பணி நிறையச் செய்யலாம்.

துதிமிகு முனிவருந் துதிசெய் தூயவன்,
மதிமிகு புலவரு மதிக்குங் கேள்வியான் ;
நதியென மழையென நன்மை செய்குவான்,
அதிசயப் புதல்வனுன் அன்பிற் பூத்தனன்.

எக்குல மக்களும் இனிய சுத்தனால்
மிக்கவு நலமென விரும்பி நிற்கின்றார்.
தக்கவன், உன்குலத் தருமந் தாங்கிடப்
பக்குவ மானவன் பழுதில் வீரனே.

சொன்னன சொன்னன தொண்டிற் காட்டுவான்
மன்னுயிர் தன்னுயிர் என்னு மாண்பினன் ;
பொன்னினு மாசறு பொலன்கொள் சிந்தையான்
புன்னகை போதுமிப் பூவை வெல்லவே.

மந்திரிகள்

சித்தி மானிவை செப்பி யமர்ந்ததும்,
புத்தி மான்கள், புலவர், அமைச்சர்கள்,
சத்திமான் பலவான், சயவான் என்றே
சுத்தன் மெய்ப்புகழ் சொல்லி மகிழ்ந்தனர்.

உறுதி யான மனமுடல் உள்ளவன் ;
உறுதி யான உரைசொலிச் செய்பவன்,
உறுதி யான உளத்தன் ; அறிவினால்
உறுதி யாக வுலகினைக் காப்பவன்.

நடை சிறந்தவன், ஞானஞ் சிறந்தவன் ;
கொடை சிறந்தவன் கொள்கை சிறந்தவன்,
படை சிறந்தவன், பாரிற் சிறந்தவன்,
அடைப வர்க்கப யந்தரும் ஆண்டகை !

முதிய உள்ளறி வோடு, முன்னேறிடும்
புதிய நற்கலை போற்றிடும் வித்தகன் ;
மதிமி குந்தநின் மைந்தனை எத்தனை
துதிசெய் தாலு மிகையெனத் தோன்றுமோ ?

மருளு மாந்தர் மனத்துயர்க் காதியாம்
இருளைப் போக்கும் இரவியைப் போன்றவன்,
கருணை வள்ளல் கருத்திற் கினியவன்
அருண ஜோதி யழகன் குழகனே.

எமதி யாமென் றெழுந்திடர் செய்திடும்
சமய, சாதி, சடங்குக ளின்றியே,
அமையும் அன்பை அகத்தில் விளக்கிடும்
சமர சச்சுடர் சத்திய புத்திரன்.

பாட்டுங் கூத்தும் பரதமும் சிற்பமும்,
தீட்டும் ஓவிய மும்சிறப் பாகவே
நாட்டுக் கின்னிய நற்கவிச் செல்வமும்,
ஏட்டுச் செல்வத்தோ டெய்திச் சிறந்தவன்.

சினம சூயை, செருக்கு, பொறாமைகள்
கனவி லும்கரு தாத கருத்தினன் ;
மன மொழி செயல் மாசறக் காப்பவன்
புனிதன் புண்ணியன், பூரணச் சித்தனே.

தரும தேவதை போலத் தயையுளான்,
கரும யோகி, கடவுள் செயலெனும்
அருமை யுள்ளமோ டன்பின் பணிபுரி
திருவி னன்அச் சுதந்தர தீரனே.

துன்புற் றோர்படுந் துன்பந் துடைப்பவன்,
இன்புற் றோருடன் இன்புறு நெஞ்சினன்,
அன்புற் றோருடன் அன்புற் றிருப்பவன்,
உன்பு தல்வன் உலகி லிணையிலான்.

கண்ணினும் அரிய மைந்தன் பெருமையைக் கற்ற நல்லார்,
எண்ணிய படியே யிவ்வா றியம்பிடக் கேட்ட தந்தை,
தண்முகி லிசையைக் கேட்டுத் தாவிடு மயிலே போன்றுன்
உண்மையே பேசி னீரென் றுள்ளூற வுவகை கொண்டான்

தனயனைப் புகழ்ந்ததெல்லாந் தந்தைக்கும் பொருந்துமென்றே
அனைவரும் கூறி மேலே ஆவன பேசிப், பின்பு
மனைவியைத் தேர்ந்து நம்பி மணவினை முடிந்தே, பட்டம்-
புனைவினை ; பின்பு, காலப் போக்கினை யறிவோ மென்றார்

சத்தியன்

பாண்டியன் வங்கன் அங்கன் பார்த்திபர் பலரும் வந்து
வேண்டிநிற் கின்றார் தத்தம் விருப்பங்கள் கூறி நாளும்;
காண்டகு திருவினுரைக் காண்கிலான் சுத்தன் ; இங்கே
ஈண்டிய முனிவர் கூட்டம் இனிதெனப் போற்று கின்றான்.

ஞானியாய்ப் பேசுகின்றான், ஞானியாய்க் காணு கின்றான் ;
ஞானியர் கூட்டமன்றி, ஞாலத்தி னுறவைப் பேணுன்.
ஏனெனக் கேட்டால், இன்பம் இதுவென்றுள் ளடங்கிக்கற்ற
மோனமே காட்டு கின்றான்—எனக்கென முளைத்த மைந்தன்.

தெள்ளத்தன் னறிவு ணர்ந்த தெய்வமாப் புதல்வன், காமக்
கள்ளத்தைக் கடிந்த தீரன், கடுந்தவ முனிவர் நேயன்,
உள்ளத்தைக் கடவுட் கீந்தான், உயர்வரைத் தோளை, சேனை
வெள்ளத்தாற் கலியை வீழ்த்தும் வீரத்திற் கீந்தான் மாதோ !

சூரியன் போன்ற தூய சுடர்மணிப் புதல்வன், மாதர்
மூரல்வாய் முத்தம் வேண்டான் ; மோகமார் மனத்தைப் பற்ற
வாரிச விழிகள் வீசும் வலைகளை அறுத்தெ றிந்தான்.
காரிகை யமைந்திட் டாலுங் கருத்தமைந் திணங்கு வானே?

அன்னவன் மனதிற் கிந்நாள் அமைந்தநல் அன்னம்யாரோ ?
என்னிரு விழிக ளாலே இளவர சவளை ஏற்று
நன்மணம் புரியக் காணு நல்லநாள் எந்த நாளோ ?
பொன்முடி யந்த நாளே புனைந்தவன் ஆளு நாளாம்.

சித்திமான்

இந்தநன் னுளை நீயும் இன்புறக் காண்பாய், மன்னு
சிந்தையேன்? ஆணுண்டாயின்செகத்திலோர்பெண்ணும்உண்டாம்
எந்தமா முனியை நம்பி இந்தநாள் இறைஞ்சு கின்றான்
அந்தமா முனியே உன்றன் ஆசையைத் தீர்த்து வைப்பான்.

பெருமைசால் வீரச் செம்மல் பிறந்தநன் னுளில், ஐய
அருமைசால் வேந்தர் தங்கள் அணியிழை மகளிரோடும்
வருக;நல் லழகை முன்னே வரதனுங் காண்க, கண்கள்
தருகுறிப் பறிந்து, பின்னே தக்கன செய்வ தாமே-

என்றுநல் லமைச்சன் கூறி யமர்ந்ததும் இறைவ னுங்கே,
நன்றுநன் றந்த நல்ல நாளணி விரைந்து செய்தே
ஒன்றுக உலகி லுள்ள திருவெலாம் ஒருங்கே, என்றான்.
மன்றுமவ் வாணை யேற்று, மனமுவந் தெழுந்த தன்றே.

2. சுத்த ஐயந்திப் படலம்

உள்ளம் பொங்கியே உதயப் பொன் முகம்
வெள்ளிப் புன்னகை வீசி நின்றது ;
புள்ளி னந்திருப் புகழ்ச்சி பாடின ;
கள்ளு குத்தன காவின் பூக்களே.

சீத மேதினி சிலிர்த் தெழுந்தது ;
பூதம் யாவையும் உவகை பூத்தன,
நாத நல்லுயிர் நயந்த வாழ்வெலாம்
காத லாகிய கவிதை யானதே.

அண்ணல் வந்தநாள், அருள் பிறந்தசெங்
கண்ணன் வந்தநாள், கனக மாமணி
வண்ணன் வந்தநாள், வரதன் வந்தநாள்
புண்ணி யந்தரும் புனித நாளிதே.

அழகன் வந்தநாள், அமுதன் வந்தநாள்
விழவு நாளிதே, வெற்றி நாளிதே ;
பழனங் கான்மலை பாலை நெய்தலார்
முழவு கொட்டியே முழங்கு நாளிதே.

வையம் யாவையும் வாழ்வின் மாபயன்
எய்த வேண்டுநல் லின்ப நாளிதே
பொய்யி ருட்பகை பொன்று நாளிதே.
துய்யன் மெய்யொளி துலங்கு நாளிதே.

முல்லை மல்லிகை முளரி செவ்வந்தி
அல்லி, சண்பகம் அரம்பை மாபலா,
வில்வம், பச்சிலை, விளவு, மாதுளை,
புல்லிப் பூமணம் பொங்கும் வானமே.

குழலும் வீணையும், குயிலுங் கிள்ளையும்
முழவும் மங்கல முரசுஞ் சங்கமும்,
அழகி னாடலும், அமுத கீதமும்,
பழகு நல்லிசை பயிலு நாளிதே.

கண்க ளிப்புறுங் காட்சி வேண்டுவோர்,
பண்கள் வேண்டுவோர், பரதம் வேண்டுவோர்
எண்கொ ளாக்கலை யின்பம் வேண்டுவோர்
விண்கொள் சித்தியின் வீதி சேர்மினே...

பல நிறங்களும், பல மணங்களும்,
பல சுவைகளும், பல்லி யங்களும்,
பல கவின்களும் பவனி யின்பமும்,
புலவர் சொற்களும் பொங்கு மெங்குமே.

நவ மணித்திரள் நகை யணித்திரள்,
நவ மணிந்தொளிர் நகர வீதிகள்
சிவ மணிந்திடுந் திருவின் காட்சிகள்,
அவனி வாழ்வினை அழகு செய்தவே.

மன்னர் வந்தனர் மன்னி ளந்திருக்
கன்னி மாரொளி காந்த மின்னென
வன்ன மாமயில் வனமெனப் பசும்
பொன்ன ணித்திரள் பொலிய வந்தனர்.

சாணை யேறிய சாதி மாமணிப்
பூணு லாவிடும் பூங்கொம் பன்னவர்,
நாணு லாவிடும் நயனப் புன்னகை
பூணு மாடவர் பொங்கிப் பூரித்தார்.

முருகி ளந்திரு முகங்கள் பங்கயம் ;
கரும லர்களின் காடு கண்களே ;
உருகு புன்னகை ஒளிரு மல்லிகை ;
பெருகு கார்புகை பேதையார் குழல்.

விடமும் வேலும்போல் விழியின் பார்வையே ;
இடை வருந்தவே ஏந்து பொன்மணிக்
குடங்கள் போன்றன கொங்கை ; வாழுயிர்ப்
படங்கள் போன்றன பாவைக் கூட்டமே.

சிந்தை பொங்கிடச் செய முழக்கியே
முந்து மன்னவன் முதல மைச்சுடன்
சந்தமார் புகழ் சாற்றித் தன்னகர்
வந்த மக்களை வருக வென்றனன்.

அவரவர் நிலைக் கமைந்த மாளிகை ;
அவரவர் சுவைக் கமைந்த நல்லுணு ;
அவரவர் மகிழ் ஆடல் பாடல்கள் ;
அவர்மன மறிந் தரச னீந்தனன்.

வரவு செய்தவர் மனங்கள் இன்புறப்
பரவு மின்னிசைப் பா விருந்துகள் ;
விரவு மந்நகர் விழவு மேவலால்
இரவு மில்லையே பகலு மில்லையே.

பொன்னின் வார்சிலை போன்ற பொற்பினார்
வன்ன மாமலர் வனத்து லாவினார் ;
அன்னக் கூட்டம்போல் அருவி யாடினார் ;
மின்ன லேயென வீடு சேர்ந்தனர்.

மானி னேக்கினார் மாழை மாமணி
மீனி ராசிபோல் மிளிரச் சூடியே,
வான மாதர்போல் வரிசை யாகவே
ஞானக் கோயிலை நாடி வந்தனர்.

தேர்ந்த நல்லணி திகழ நாற்றிசை,
வேந்தர் வெல்படை வீரர் சூழவே,
சாந்த மந்திரஞ் சார்ந்து மெய்த்தவர்
காந்த சக்தியிற் கலந்தி ருந்தனர்.

சுத்தாலயம்

வச்சி ரம்வயி டூரியம், மாதுளைப் பதுமம்
பச்சை நீலஞ்செம் பவளந்தென் பாண்டிமுத் துடனே,
மெச்சி டுங்குயில் விழியென மிளிர்ந்திடுங் கெம்பும்,
வச்சி ழைத்தமா மணிதரு மந்திரம் இதுவே.

எண்ணில் வேந்தரும், வீரரும், இறைஞ்சிய கோயில்,
புண்ணி யர்தவப் பொலிவுறும் புனிதமாங் கோயில்,
கண்ணிற் கண்மணி யெனவுளங் கலந்துறை கடவுள்,
எண்ணிப் பேரின்ப மெய்திடற் கினியமந் திரமே.

பெயரி னேடுருப் பேதமொன் றின்றியன் பான
உயிரி னுக்குயி ராகிய ஒருபரம் பொருளை,
இயலு மெய்யினில் இயங்கிடும் இறைவனை யடைய
முயலுந் தூயநன் முனிவரர் முத்திவீ டிதுவே.

காவ லற்றிடும் புலன்வழி கட்டிலா தென்றுந்
தாவிச் சாந்தத்தைத் தடுத்திடு மனத்தினைத் தடுக்க,
மேவி யுள்விழித் திருக்கின்ற விமலரி னடுவே
கோவுடன் இளங் குரிசிலுங் கொலுவிருந் தனனே.

சுத்தன்

மன்னர், மாதவர் மந்திரர், மாதர், நன் மக்கள்
முன்னர் ,தூயவன் முழுமுதற் கடவுளை யிறைஞ்சி,
“ அன்னை, தந்தையீர், அந்தணீர், ஆருயிர்க் குடிகாள்,
இன்னர் செய்தகும் பணிகளை யியம்புவேன் ” என்றான்.

இறந்த நாளெலாம் இறந்தன ; இனிவரு நாளில்
சிறந்த நற்பணி செய்திடத் திடமனங் கொள்வோம்.
அறந்தெ ளிந்துகொண் டுயிர்களுக் கன்புசெய்திடுவோம்.
பிறந்த நாளினிற் பிறவியின் பெருமையைப் பெறுவோம்.

நன்னி னைவுடன் கூடியே நல்லன புரிமின்
புன்மை சூதுபொ ருமையைப் புரையெனத் தவிர்மின் ;
அன்ன தானங்கள் செய்குமின் ; அருங்கலை வளர்மின் ;
மன்ன ருட்கடர் இறைவனின் வளமையை நினைமின்.

பாரி லேகலி யரக்கர்கள் பாரத தரும
வேரி லேவிட மிட்டனர் ; வேகமாய் அவரைப்
போரி லேபுறங் கண்டிடப் புண்ணிய வீரர்
நேரி லேயணி வகுத்தின்று நின்றிடு வீரே.

ஊர்வ லங்களும், உடலினைப் புகழ்ந்திடும் பேச்சும்
போர்மு ழக்கமும் விருந்துண்டு பிரிந்திடும் விழவும் ;
ஓர்பயனிலை ; உள்ளத்தினில் ஒருவனை நினைந்து,
பார்நலம் பெறும் பணிகளே பணியெனப் புரிவோம்.

எம்ம தத்திற்குஞ் சம்மத மாகிடும் இயலை ;
நம்ம னத்தினில் உறுதியாய் நாட்டுதற் கேற்ற
நிம்மதி தருந் தோத்திரம் நிகழுக வென்றே
அம்ம காசபை யமர்ந்தனன் அரசிளம் பெருமான். 120

தீதறு சுத்தன் சொன்ன தீஞ்சுவை மொழிகள் கேட்டே
கோதறு முனிவர் நல்ல கொள்கையென் றுவகை பூத்தே
மேதினி வாழத் தூயன் வெற்றிகள் சிறக்க வென்றே
ஆதிமெய்ப் பொருளின் ஜோதி யருளினை வேண்டி னரே.

அருவுரு வாகி யெங்கும் அருளினால் ஆடல் செய்தே
குருபர னாகி, எம்மைக் கோதறுத் தாளும் வள்ளல்,
ஒருவனை முனிவர் பாட உள்ளுணர்ந் துணர்ந்து சுத்தன்,
பருவுட லுலகுக் கப்பாற் பார்வையை நாட்டி னானே.

புனிதர் வேதம்

எங்கிருந் துலகமெல்லாம் உலகுயிர்க் குலங்க ளெல்லாம்,
இங்குவந் திருந்து சென்றே, எதனுளே இறுதி யாமோ...
தங்குமப் பொருளே ஞான தாரக மாகும் ; அன்பு
பொங்குளத் தாலே அந்தப் பொருளினைப் பூசிப் போமால்.

பொருள் வணக்கம்

ஓமெனப் பெரியார் ஓதிடும் பொருளை,
நாமரூ பாதி நாடகங் கடந்த
மெய்யறி வின்பமாய் விளங்கும் பொருளை,
உய்வழி காட்டும் உயர்பரம் பொருளை,
இருந்த வாறே இயல்பா யிருந்தும்,
பொருந்து சக்தியாற் புரிவினை யூக்கி,
வானாய், வளியாய், வளர்தீ நீர்நிலம்,
தானாய்க் காலந் தருசுட ராகி,
கடலாய்க் காராய், கார்தரு பயிராய்,
உடலாய், உயிராய், உயிர்க்குயி ராகி,
சக்தியாய்ச் சீவனிற் சதாசிவ மாகி
முத்தி யளிக்கு முழுமுத லாகி,
எங்குங் கண்ணாய், எங்குங் காதாய்,
கங்குல் பகலறக் கருணை சுரக்கும்,
அருவாய், உருவாய்க், குருவாய்த் திருவாய்,
அருட்பெருஞ் சோதி ஆண்டவ னாகி,
இதய நடுவே இலிங்கா காரமாய்
உதயச் சுடர்போல் ஒளிரும் பொருளை,
மதியறி விற்கு மறைந்து, முதிர்ந்த
பதியறி வாளர் பார்க்கும் பொருளை,
எவ்வகை மாந்தர் எப்படி வணங்கினும்,
அவ்வகை மாந்தர் அன்பினுக் கேற்ற
பதந்தரும் பொருளை, பரம சுத்த
சுதந்தரப் பொருளை, இதந்தரும் பொருளை,
கலைகள் உரைத்த கற்பனை கடந்த,
நிலையில் விளங்கு நிர்க்குணப் பொருளை,
சிற்பரா சக்தி சின்மயக் கதிரால்
அற்புத வுலகை ஆட்டிடும் அருளை...
தன்னுளே தானாய்த் தற்பர சிவமாய்,
என்னுளே யானாய் எவற்றுளும் அதுவாய்,
இருக்க இருந்தே, இயக்க வியங்கியே,
உரைக்க உரைத்தே, உரைகடந் துள்ளே
உணர உணர்ந்தே, உணரன் பாலே
புணரப் புணர்ந்தே, போத சொரூபமாய்,
அங்கிங் கெனாமல் எங்கே யிருப்பினும்,
இங்கெனைப் பிரியா திருக்கும் பொருளை,
வேண்டு மென்னும் விருப்பமு மின்றி,

வேண்டா மென்னும் வெறுப்பு மின்றிப்
பரிதி போலே பார்ப்பா னாகிச்
சுருதி யாகத் துலங்கு மந் திரமாய்,
காற்றைப் போலே கட்டிலாத் துறவாய்,
கூற்று நடுங்குங் குண்டலிக் கனலாய்,
கற்பன கற்றுக் கருத்துறக் கருதிச்
சொற்பனங் கடந்த சூட்சுமந் தேடி,
உடலை மடக்கிக் குடலைக் குலுக்கி,
அடயோ கங்கள் அயரா தியற்றி,
மூச்சைக் கட்டிப் பேச்சைக் கட்டி,
ஆச்சிய தாரைபோல் ஆராய்ந் துள்ளே,
சிந்தை நிலைக்கத் தியானஞ் செய்து,
மந்திரஞ் செபித்து, மனத்தை யடக்கி,
ஆசையா ணவங்களின் அல்ல லறுத்தே,
பேசாச் சமாதியிற் பேரின்ப முண்ணும்,
அருளறி வாளர், அகநிலை கடந்தே
பொருளிது வென்னும் பூரண ஜோதியை—
ஒருமை யுடனே உரைகடந் துணரும்
பெருமையே பிறப்பின் பெரும்பய னாகும்...
அத்தகைப் பெருமை யடைந்தது வான
சுத்த யோக சக்திமான் வாழ்க !
முக்குணப் போர்செய் முன்னிலை யுலகிற்
பக்குவ மாகச் சிக்கற வாழ்ந்தே,
செய்வன தேர்ந்து, திருவரு ளாலே
பெய்மழை போன்றே செய்பவன் வாழ்கவே !
கதிரவன் வரவே, காரிருள் அகலும்,
பதுமம் விரியும், பனித்திரள் கரையும்,
சிறகை யடித்துப் பறவைகள் பாடும்,
கறவைகள் கறக்கும் ; கண்விழித் தெழுந்தே,
கரும வுலகம் கதிபெற நடக்கும்,
இருவினைப் பயன்கள் எண்ணில கிளரும்...
சத்தமில் லாத சாட்சியா யுலகைச்
சித்தரிக் கின்ற செங்கதிர் போன்றே,
சுற்றுல கத்தின் சூட்சும மறிந்தே,
பற்றறு சாட்சியாய்ப் பணித்திறம் பயின்று,
சாந்தக் கடலும், சக்திக் கதிரும்,
காந்தக் கனலும், ககனமின் சாரமும்,
கார்மழை போலக் கருணையுங் கொண்டு,
பார்நல மோங்கப் பலநலம் புரியும்,

பொன்னூர் மேனிப் புனிதன் வாழ்கவே !
மன்னறங் காத்து மக்களைப் பேணும்,
வேந்தன் வாழ்க ! வெற்றி வேற்கை,
ஏந்துஞ் செங்கோல் இறைவன் வாழ்கவே !
நினைத்த நலத்தை நிறைவேற் றிடவே,
வினைத்திட் பமுடன் மனத்திட் பமுற
உள்ளன் புடனே ஒற்றுமைத் திறனும்,
ஒள்ளிய நடையும் தெள்ளிய மதியும்
ஆத்தும சக்தியும், அஞ்சா வீரமும்,
பூத்த மலரெனப் புன்னகை யுடனே,
இடர்கள் எதிரே எத்தனை வரினும்,
திடவை ராக்கியத் துடனே தாங்கும்,
சகன சக்தியும், சத்திய வீறும்,
இகலை நடுக்கும் தகவுடை யாற்றலும்,
கலிப்படை கலங்கப் புலிப்படை போலச்
சலிப்படை யாத சமர்செய் வீரமும்,
அரக்கக் களைகளை அறுத்து, நலங்களே
சிறக்க நாட்டுந் தீரமுங் கொண்டான்.
புண்ணிய பூமி விண்ணர சடைய,
நண்ணிய பெருமான், நரரை நாரணர்
ஆக்கிட வல்லான், அதர்மப் பதர்களைப்
போக்கிட வல்ல புனிதன் வாழ்கவே !
சுத்த மூர்த்தியின் சக்திக் கதிராய்ச்
சித்தியி லுதித்த செங்கதிர் வாழ்கவே !...

தூயவர் வேத மோதித் தூபதீ பங்கள் காட்டி,
ஏயநற் கடன்முறைகள் இனிதுறச் செய்து போற்றி,
நாயக மைந்த னுக்கு நலம்பல வேண்டி னூர்கள்,
ஆயது முடிந்த பின்னர் அனைவரும் விருந்துண்டாரே....

வசந்த மாளிகைக் காட்சி

வாசநாண் மலரில் ஊறி வண்டுணுந் தேனைப் போலும்,
மாசிலாத் தேவர் உண்டு மகிழ்ந்திடும் அமுதம் போலும்,
ஈசனைக் கலந்த நெஞ்சில் இனிக்கும்பே ரின்பம் போலும்,
போசன மிருந்த தந்தப் புண்ணியன் பிறந்த நாளே !

நாச்சுவை யருந்திப் பன்னீர் நனைத்தசந் தனங்கள் பூசிப்
பூச்செறி மாலை சூடிப் புனிதனைப் போற்றி செய்து,
பேச்சுகள் பலநிகழ்த்திப் பெருந்தகைப் புலவர் தந்த
பாச்சுவை யருந்தி மக்கள் பரவச மடைந்தார் மாதோ !

பல்லிசை முழங்க வேத பாரகர் ஆசி கூற,
மெல்லிளங் கன்னி யர்தம் விரலொடு குரலுங் கூட்டி,
நல்லிசை வழங்க, மன்னர் ஞாலத்தில் அரிய தாகச்
சொல்லிடும் பொருள்கள் ஏந்திச் சூழ்ந்திடச்சுத்தன் வந்தான்.

அலைவளர் மணிக ளெல்லாம் அடுக்கடுக் காக வைத்துக்
கலைவளர் அழகை யெல்லாங் காட்டிடும் பளிங்கு வீட்டில்,
சிலைவளர் தோளி னானைச் சேர்த்தரி யணையி லேற்றி,
மலைவளர் அருவி போன்று மங்கல வாழ்த்தொ லித்தார்...

தேன ளாவிய தென்றலி லே, புகழ்
வான ளாவிப் பறக்கு மணிக்கொடி
தான ளாவிய தாரணி மாளிகை
கோன ளாவிக் கொலுவி லிருந்தனன்.

மந்தி ரிகள் மருங்கி லமர்ந்திட,
வந்த வேந்தர் மணித்தவி சேற்றிட,
சுந்த ரிகள் சுடர்மலர்க் கொம்புபோல்
தந்த மாசனந் தாங்கி யிருந்தனர்.

குழலி சைத்தன கோடிக் குயிலென ;
முழவொ லித்தன முகிலின் கணமென ;
அழகின் ஆடலும் பாடலும் ஒல்எனும்
விழவு மாளிகை விண்ணக ரொத்ததே.

நகர ஜோதி நடமிடும் அச்சபை
சிகர ஜோதி யெனத்திகழ் செம்மலும்,
சகல நாதமுந் தாங்கி நடத்திடும்,
அகரம் போலங் கமர்ந்தனன் சாந்தமாய்.

வேக மான விகாரங்கள் சூழினும்
ஏகமான இதயத்தி லூன்றியே,
சோக மோகச் சுழலினிற் சிக்கிடாத்
தேகி போலுமத் தீரன் இருந்தனன்.

மண்ணின் வாழ்வினை மங்கலஞ் செய்திடும்,
பண்மொ ழியினர், பச்சை மயிலனார்,
தண்ம லர்க்குழல் தாங்கு மதியனார்,
கண்ம லர்கள் ஒருவனைக் கண்டவே

பரிசு வழங்கல்

ஒருதனிக் காதலில் உள்ளம் பற்றியே
இருபது நூறுநல் லிளங் கயல்விழி,
அருணனைப் பார்த்திடும் அம்பு யங்கள்போல்,
முருகனைக் கண்டுள மோக மீறின.

தனப்பொறை விம்மிடச் சஞ்ச லித்திடும்
மனப்பொறை விம்மிட, மலர்க்கொம் பன்னவர்,
எனக்கிவன் எனக்கென இருகண் ணம்பினைக்
குனித்திரு புருவமுங் குறித்து வீசினர்.

மன்னவன் மன்னிள மைந்தன் வாழ்கெனாஅ
முன்னர்தம் பரிசினை முறையின் வைத்ததும்,
கன்னியர் நாணுடன் கலந்த பொன்னொளிர்
புன்னகையுடன் மணிப் பூவுந் தந்தனர்.

அமரரின் அமுதுடன் ஆசைத் தீயுடன்
கமலமும் குமுதமுங் கயலுங் கூடிய
விமரிசை மாதரின் விழிகள், சுத்தனின்
அமைதியை யறிந்ததும், அஞ்சிச் சென்றவே.

திருமிகு கன்னியர் சேனை, கோமகன்
தருமிகு பரிசினைத் தாங்கிச் செல்வதை
அருகிருந் தமைச்சுடன் அரசுங் கண்டுளங்
கருகினன், காதலின் குறிப்பைக் காணிலான்.

பொறிபுல னடக்கிய புலவர் கண்ணையும்,
பறிகணை வேல்விழி படைத்த பாவையர்
முறைமுறை முகமுகம் பார்த்து முன்னின்றும்,
அறிகிலர் இவன்மனம் ஆசை தூண்டவே !

காதலர் கண்கள்

இறுதியில் வந்த கன்னி ஏகலும், மன்னன் ஏங்கி,
உறுதியை யிழந்த போது, புதியநல் உயிரைப் போல,
முறுவலே முகமதாக, மூலத் தீச் சுடரைப் போன்ற
மறுவறு சாந்தன் பேணு மான்விழி யெதிரே நின்றாள்.

பெண்ணொடு பெண்ணளாவிப் பெருமைகள் பேசும் சுத்தன்
எண்ணமும் விழியும் உள்ளே யிருந்தனன். கௌரி வந்தாள்.
திண்ணென மின்சா ரத்தீ தெறிப்பது போலு ணர்ந்தான்,
கண்ணொடு கண்ண ளாவிக் கருத்துறக் கலந்த தம்மா !

அவனையே கண்ட கௌரி, அவனையே யெங்குங் கண்டாள்;
அவளையே கண்ட சுத்தன், அவளையே யெங்குங் கண்டான்;
இவனுக்கே அவள் பிறந்தாள் அவளுக்கே இவன் பிறந்தான்,
சிவனுக்கே உமை பிறந்தாள் என்றனன் சித்தி மானே !

பருவுட லிரண்டி னுள்ளே பற்றிய வுயிரொன் றாகி,
உருகிடுங் காதலர் தம் உளத்தினை உணர்ந்து மன்னன்
பருகிடும் ஆர்வத்தோடு பங்கய விழி பனிப்ப
ஒருநொடி பார்த்தான், "இந்த உலகினி உய்ந்த" தென்றான்.

கதிரிடுங் கமலக் கண்கள், கணையெனக் கூர்ந்த பார்வை,
மதிவளர் வதனம், செவ்வாய், மழையென மதர்த்த கூந்தல் ;
முதியமுத் துருளும் வேய்த்தோள், மோகனக் கனவு தோற்றும்
புதியமின் னழகு வீசும் பூங்கொடி யாங்கே சென்றாள்.

எழுந்தனன் மன்னவன் இசை முழங்கவே,
தொழுந்திரு முனிவரர் தூவ நன்மலர்,
எழுந்தனன் சுத்தனும் ஏறு போலவே ;
ஒழுங்குறச் சபையினர் ஊர்ந்து சென்றனர்.

நயம்பெறு செவிவிழி நாவி ருந்துடன்,
சயசய சயவெனத் தழைத்த பாட்டுடன்,
வியன்பெற நடந்தது விமலன் வந்தநாள்
பயனினிப் பழுத்திடும் பகலைப் பார்ப்பமால்.

3. கௌரி குலப் படலம்

சத்தியன்

நகைவிரி நாணச் செவ்வாய், நாட்டிய கடைக்கண் பார்வை,
முகைவிரி காதல் காட்ட, முனிமகள் சுத்த னுக்குத்
தகையுறு மனைவியாகத் தக்கவள் என்று தேர்ந்து
வகையுற மன்னர் மன்னன் இந்திரை மகிழச் சொன்னான் :—

"மங்கலச் செய்தி கேளாய்..மங்கையர் மணியே, அன்று
சங்கரன் மணந்து கொண்ட தவத்திரு மகளே போன்று,
நங்குல மைந்த னுக்கு நற்றவக் கௌரி வந்தாள்,
பொங்கிய காதல் உள்ளம் பொருந்திய பொலிவைக் கண்டேன்.

மன்னவர் வந்து, தங்கண் மணியென வளர்த்த நல்ல
கன்னியர் தமையே சுத்தன் கடிமணம் புரிக என்றார்..
என்னினும் அவரைப் பாரான். இதயத்தில் அந்தக் கௌரி
தன்னையே நினைந்தாள் சித்தி மரபினித் தழைக்க வந்தோன் !

போதரி விழிகள் கூடிப் புதுமனம் பொருந்தி யுள்ளே
ஓதரும் உவகை தூண்டி, இருவரும் ஒருவ ராகி,
ஆதியிற் பிரிந்தார் மீண்டும் அணியுறக் கலந்ததே போல்,
காதலிற் கலந்தா ருக்கே இல்லறங் களிப்ப தாமே.

தக்கவர் தம்மைக் கொண்டுந் தகுமுறை சோதித் தன்னோர்
பக்குவக் காத லெல்லாம் பளிச்செனக் கண்டேன் ; இன்று
மிக்கவுன் மனம றிந்தால், கௌரிக்கு நமது வீடே
புக்ககம் ஆகும்" என்றான் புன்னகை பூத்த வாயான்.

இந்திரை

தன்னுணர் முனியை நாளுந் தரிசனஞ் செய்யும் போது,
மின்னுயிர் வல்லி தன்னை மெத்தநான் அறிந்த துண்மை ;
என்னினும் அவளைப் பற்றி முனிவன்பால் இனிது கேட்ட
பின்னரே முடிவு செய்யப் பெறுவது நலம தாமே..

மனத்திற்குப் பிடித்த போதே மணவினை சிறப்பாம் ; என்னின்
இனத்திற்கும் பிடித்து விட்டால் இன்னமுஞ் சிறப்ப தாமே.
சனத்திற்கும், அமைச்ச ருக்கும் சார்ந்தசிற் றரச ருக்கும்,
அனைத்திற்கும் இனிதாம்' என்றாள் அரசனுக்கறிவு போன்றாள்.

சத்தியன் சாந்த முனிவரை அழைத்து வருதல்

நலமது வென்று வேந்தன் ஞானவா னந்த னுன,
குலகுரு வுடனே சென்று சாந்தனைக் கூட்டி வந்து,
நிலவுயர் பீட மேற்றி, நிகழ்ந்தவை யனைத்துஞ் சொல்லி,
இலகுறு கௌரி காதை யியம்பிட வேண்டி னனே..

சாந்த முனிவன் சொன்ன, கௌரி சரித்திரம்

நும்பெருங் கருத்தினை நுவலு முன்னரே,
அன்புள காதலர் ஆர்வம் ஓர்ந்தனன்,
என்பெருஞ் செல்வியின் இயல்பைக் கேட்டபின்
இன்பமே யெய்திடும். எண்ணங் கூடுமே.

திருமாவளவன்

அமிழ்தினும் இனிய தமிழ்மொழி வளரும்
தென்னாட் டினிலே முன்னாட் செழித்த
சேர சோழர் செம்பியர் மூவரும்
ஓர்குல மாகவே உலகினை யாண்டார்.
அத்தகை வேந்தருள் இத்தலம் புகழும்
திருமா வளவனின் சீர்த்திகள் கேளீர் :
இளஞ்சேட் சென்னி யீன்ற கரிகால்
வளவன் இளமையில் வஞ்சப் பகைவரின்
கூற்றிற் கொடிய கொலைவாள் துரத்த
மாறுவே டத்துடன் மறைந்து மறைந்தே
ஊர்தொறும் சுற்றி உலகையும் அறிந்தே,
வீறு பெருக்கி, வியன்பெரும் படையும்
சேர்த்துக் கருவூர் சேமமா யிருந்தான்.
மன்னனைத் தேர்கென மக்கள் விடுத்த
உறையூர் யானை உற்றவன் கழுத்தில்
மாலை சூட்டி வணங்கிடக் கண்டோர்,

இவனே கோமான் என்று மகிழ்ந்து,
பொன்முடி சூட்ட நன்னகர் கொணர்ந்தார்.
புல்லிய வஞ்சப் பொறாமைப் பகைவர்
ஒல்லெனத் தாக்கி ஒழியெனக் கடுஞ்சிறை
இட்டுத் தீயிட் டெரித்திடத் துணிந்தார்.....
அஞ்சா வளவன் அனற்சிறை தப்பி,
பிடர்த்தலை என்னும் பீடுடை மாமனுல்
படைத்திறல் கூட்டிப் பகைவரை ஒருங்கே
போரில் வீழ்த்திப் புலிக்கொடி நாட்டி,
ஊரெலாம் போற்ற உறையூர் ஆண்டான்.
அறிவுந் திருவும் அன்பும் வீரமும்
வழுவா நெறியும் வாய்மையுங் கொண்டு
மன்னுயிர்க் குடலாய் மன்னற வுயிராய்,
* ஆயமுங் † குழுவும் அரசரும் சூழத்
தேயம் புரந்தான் சீரிய கோவே.
கடற்படை நிலப்படை கணக்கறக் கூட்டி,
அடக்கிப் பகைவரை அரசை விரித்தான்.
செருசெரு வென்றே தினவெடுத் தலையும்
பொருமத மறவப் புலிகளைக் கொண்டே,
வாளுறு சேரனை, வலிமிகு குறும்பரை,
வேளிரைக் கோயில்—வெண்ணியில் வீழ்த்திச்
செந்தீப் பறக்கும் சினவா ளுடனே
நாகரை வடுகரை நானில வேந்தரை
வேகமா யடக்கி, வீரத் திருவுறத்
தென்னா டெல்லாந் தன்னா டாக்கிய
பின்னே வடக்கே பெரும்படை நடாத்தி,
வச்சிரம் அவந்தி மகதம் வணக்கி,
உச்சப் பனிமலை உயரச் சென்றே
புலிக்கொடி தன்னைப் பொலிவுறத் தீட்டி
நலிவிலாத் தமிழிசை நாட்டினன் இவனே.
வங்கப் போரிற் சிங்களம் வென்றான்
பொங்கும் பொருளாற் பொதுநலஞ் செய்தான்.
பழம்பதி புகாரிற் பட்டினங் கட்டி
வளம்பெறக் கப்பல் வாணிகஞ் செய்தான்.

---

* எண்பெரும் ஆயம்: *அமைச்சர், கருமாதிகாரர், சுற்றம், கடை காப்பாளர், நகர மக்கள், படைத் தலைவர், குதிரை வீரர், யானை வீரர்,*

† ஐம்பெருங் குழு : *அமைச்சர், புரோகிதர், படைத்தலைவர், தூதர், சாரணர்.*

காவிரி யணையாற் பூவளஞ் செய்தான்
நாவாய் நடத்தி நன்னிதி குவித்தான்.
சோனகர் யவனர் சீனகர் ஆனோர்
கோனகர் வணிகர் கொழுத்திடச் செழித்தார்.
கழகங் கண்டு கல்வியை வளர்த்துப்
பழகிய புலவர் பாடலும் பெற்றான்.
உருத்திரங் கண்ணனார் உரைத்த * பாலையும்
திருத்தகு கண்ணியார் செப்பிய † படையும்
புவிக்கிவன் புகழைப் புகலுவ தாமே.
கவிக்கினி தாகிய கரிகால் வளவன்
சொல்லறத் துடனே வில்லறந் தாங்கி,
இல்லறந் தனிலும் இன்ப மிகுந்தான்.
புதல்வர் நால்வர் புதல்வி யொருத்தி
மதிமிகப் பொலியத் துதிமிக வாழ்ந்தார்.

செங்குட்டுவன்

அருமைப் புதல்வி ஆதி மந்தியும்
பெருங்கலைச் செல்வி, விரும்பிய காதலால்,
பாட்டும் பரதமும் பயின்ற சேரன்
ஆட்ட னத்தியின் அரசியா னாளே.
சேர சோழர் சேர்ந்துவாழ்ந் தாரே.
தமிழர் சிங்கம் இமய வரம்பன்
நற்சோணை யுடனே நல்லறந் தாங்கி,
இருபெரு மக்களை ஈன்றான்.. ஒருவன்
செருநர் அஞ்சும் செங்குட் டுவனே.
இளந்திரு மைந்தன் இளங்கோ முனிவன்,
நலங்கெழு சிலப்பதி கார நவின்றோன்.
புவியர சவனே ; கவியர சிவனே.
கவியர சிசைத்த கதையினைக் கேளீர் :

கண்ணகி காதை

சீர்பெறும் புகாரிற் செல்வக் கோவலன்,
பார்மிகப் போற்றும் பத்தினி கண்ணகி
தன்னுடன் இல்லறந் தாங்குநன் னாளில்,
பண்ணுடன் பரதமும் பயில்விலை மாதாம்
மாதவி யழகில் மயங்கி, மணந்த
காதலி தன்னைக் கண்பா ராமல்,
சிற்றின் பத்திற் சிந்தை யிழந்தே,
பொற்றிரள் போக்கிப் புலனழிந் தானே..

* பட்டினப் பாலை
† முடத் தாமக் கண்ணியாரின் பொருநராற்றுப் படை.

களவுறு காமக் கணிகையின் வஞ்ச
உளமறிந் தவனை உதறித் தள்ளிப்
பொற்புறு மனையிற் புகுந்து கோவலன்
அற்புதக் கற்பின் அணங்கைப் புகழ்ந்து
" மாசறு திருவே, வேசை மயக்கால்,
ஏசுறு நடையால் எல்லாம் இழந்தேன்...
வறுமை யுற்றேன். மதுரைக் கேகிச்
சிறுமை தீரச் செல்வ வாணிகம்
புரியக் கருதினேன் தருக நல்விடை,
அரிய கற்பின் அரசி " என்றான்..
கண்ணகி வந்து கணவனை வணங்கி,
" எண்ணிய கருமம் இயற்றிடத் துணையாய்
வருகிறேன் யானும் மணிப்பொற் சிலம்பைத்
தருகிறேன் விற்றுத் தழைப்போ " மென்றாள்.
" அதுசரி " யென்றே ஆங்கவர் நடந்து,
மதுரைக் கேகி, மாதரி குடிலில்
தேவி யிருக்கவோர் சிலம்பை விற்க,
மேவினான் மதுரை வீதியிற் கோவலன்.
சிலம்பைக் கண்டோர் திருட்டுத் தட்டான்,
நிலம்புகழ் செழியன் இலம்புகுந் " தரசே,
பாண்டிமா தேவியின் பரல்மிகு சிலம்பை
வேண்டித் திருடி விற்க வந்துள,
கள்ளனைப் பிடித்தேன் கையுங் களவுமாய்;
உள்ளமெப் படியோ உரைத்தது செய்வேன்..."
என்னலும் பாண்டியன் ஏதோ நினைப்பாய்க்
" கொன்று கள்வனைக் கொணர்க சிலம்" பெனக்
காவலர் பணிந்தார்; கோவலன் மாண்டான் !
தேவிகண் ணகியும் சென்றாள் கொலைக்களம்,
கண்ணீ ருகுத்தாள்; காய்சினம் பொங்க
மண்ணாள் பாண்டியன் மனையிற் புகுந்தாள்.
உண்மை யுரைத்தாள் ; உள்ளவோர் சிலம்பைக்
கிண்ணென வுடைத்தாள் கிளரும் அரதனப்
பரலையும் பாண்டிமா பத்தினி சிலம்புள்
தரள மிருப்பதுந் தனித்தனி காட்டி,
" காணாய் ! எனது கணவன் கள்ளனா ?
வீணாய்க் கொன்றாய் மாணா வேந்தே "
என்றுகர்ச் சித்தாள் ; மன்றம் அதிரவே !..
ஒன்றுந் தோன்றா நின்ற பாண்டியன்
" யானோ வேந்தன் ! யானே கள்வன் !..
ஏனோ கொன்றேன் ஏழையை " என்று

தரையில் உருண்டு தன்னுயிர் நீத்தான்.
அரைநொடி தன்னில் அரசியும் இறந்தாள்.
கற்புக் கனலைக் கண்ணகி ஏவி,
நற்பதி மதுரையை நாச மாக்கி,
வீரா வேசமாய் விரைந்து நடந்தே,
சேரநா டேகித் திருச்செங் குன்றில்
பத்தினிக் குரிய முத்திபெற் றுளே..
இத்திருக் கதையை இளங்கோ வடிகள்
சிலப்பதி காரச் செய்யுளாய்க் கோத்தே
உலப்பறு காலம் ஒளிரவைத் தாரே.
சேரன் இமாலயஞ் சென்றுகற் கொணர்ந்து,
வீரபத் தினிக்கு வியன்பெறுங் கோயில்
கட்டிச் சிலையை நட்டு வணங்கினுன்.
எட்டுத் திசையும் இசைமுழங் கிடவே !
மாதவி கேட்டாள் மகளுடன் துறந்தாள்—
காதலைப் பகவன் கழலடி வைத்தே...

இளஞ்செழியன்

இசைநெடுஞ் செழியன் இறந்ததும் அவன்மகன்
திசையெலாம் புகழும் சேயிளஞ் செழியன்
அரியணை வகித்தான் ; அவன்பின் வந்தவன் 180
எரிசினப் படையுடன் எதிர்த்த பகைவரைத்
தலையா லங்கான் சமரில் அழித்தே,
கலைபெறு புலவர் கவியிசைத் தோதவே
அடும்பகை முடிந்ததும் அமைதியை நாட்டி
நெடும் புகழ் செழியனுய் நீடு வாழ்ந் தானே !
சேர சோழச் செழியர் சேர்ந்தே
வீரத் தமிழகம் விரைவுட னமைத்தார்.
திருமணக் கலப்பால் ஒருகுல வுணர்ச்சி
பெருகிட நாளும் பீடுற வாழ்ந்தார்.
சேர சோழத் திருமர புதித்த
நாரியை மணந்தான் வீரபாண் டியனே..

மாணிக்கவாசகர்

அவன்வழி வந்தார் அளப்பறு வீரர்.
அவருள் வரகுணன் ஆற்றலிற் பெரியான்..

இவனே
வாதவூ ரடிகளை மந்திரி யாக்கிப்
போதிய நிதியுடன் போர்ப்பரி வாங்கத்

தொண்டிக் கனுப்பினன் ; பண்டைப் பயனுல்,
தொண்டிபோம் வழியே, தூயமெய்க் குருவை
மந்திரி யடைந்து மணிவா சராய்ச்
சிந்தனை யெல்லாம் சிவமய மாகித்
துறவறம் பூண்டு, தொகையறு நிதியை
அறவினை யுடனே ஆலயப் பணியும்,
செய்து மன்னன் சினத்திற் காளாய்
வெய்துய ரடைந்ததும், வெஞ்சிறைப் பட்டதும்,
நரிபரி யாகியும், பரிநரி யாகியும்,
கரையுடை வைகை கதங்கொண் டுரை
உண்ணப் புகுந்ததும், ஊரார் அனைவரும்
மண்ணைக் கொட்டி மன்னவன் ஆணையால்
கரைகட் டியதும் ; அரனருள் ஆங்கே
விரைந்தொரு கூலியாய் விளையா டியதும்
வன்னிபிட் டிற்கு மண்சுமந் தவனே
தென்னன் பிரம்பால் தீட்டப் பெற்றதும்,
அந்தப் பிரம்படி அரசன்மேற் பட்டதும்,
பிந்தக் கூலி பிடிமண் போட்டு
மறைந்ததும், வைகை வடிந்ததும் கண்டே
இறைவன் செயலை இனிதுணர் பாண்டியன்
சிவனடி யாரைச் சிறைவிடு வித்ததும்,
அவனையே பாடி அருள்மணி வாசகர்,
சிதம்பர சோதியைத் திருவாச கப்பொருள்
இஃதெனக் காட்டி இறையொளி கலந்ததும்..
தெரிந்த கதையே..திருவா சகரின்
அறிந்த சீடன் அரசன் வரகுணன்.

மாறவர்மன் மரபு

மன்னிள மைந்தன் மாற வர்மனே.
அன்னவன் மனையை அறவே துறந்தான்.
வீர மைந்தன் விக்கிர மனுக்குப்
பாரி னியல்பும் பரசிவ நேசமும்
சொல்லி, “ மகனே, இல்லறந் தாங்கி,
நல்லியல் மைந்தர் வல்லவ ரானதும்,
அவனிச் செல்வம் அவர்க்கே தந்து,
சிவனடிச் செல்வமே சேரத் தவஞ்செய்.
வழிவழி யாய்மணி வாசகம் போற்றி.
அழியுட லுக்குள் அழியாப் பொருளையே
பற்றியுன் மரபு பற்றற வாழ்”கெனச்

சொற்றபின் அருட்பெருஞ் சோதியை நாடினன்...
தலைமுறைக் கொருவர் தவவினை பூண்டே,
அலைமன மடக்கி, யருள்வழி நின்றார்.
எந்தை சிவமணி அந்த வாறே
தந்தெனக் கெல்லாந் தவஞ்செய் தாரே.

சாந்த முனிவன் வரலாறு

நானென் மகனே நாட்டியென் னிடத்தில்,
ஊனங் கடந்த ஒருவனை நினைந்தேன்.
இந்தக் காலம் வந்தது கலகம்.
நந்தமிழ் நாடு நலிந்தது நாளுமே.
போட்டி பொறாமைப் புல்லர் எழுந்து,
நாட்டைப் பிறர்க்குக் காட்டிக் கொடுத்தார்.
அன்னியர் நாட்டில் ஆக்கம் பெற்றார்.
என்னவர் அனைவரும் இகலிலே மாண்டார்.
என்மகள் பார்வதி பெண்மக வீன்று,
மின்னென மறைந்தாள்..இன்னலைத் தாண்டி
அப்பெண் மகவை அன்புடன் காத்தேன்...
இப்போ தென்னுடன் இருப்பவள் அவளே...
கலகக் காட்டைக் கடந்துபஞ் சவடியில்,
இலகுமா தவரிடை இவள்வளர்ந் தாளே !

கௌரியின் பெருமை

இவளே கௌரி இவளென் குலமகள்..
இவளே தமிழகம் ஈன்றநல் லரசி..
சிவனுக் கேமலைச் சிகரமீ தமர்ந்து
தவங்கள் புரிந்த சக்தியே போன்றாள்.
சுடச்சுட நோற்ற சுடர்மணிப் பாவை
வடிவழ குடனே வரத்தால் வந்த
அருளழ குடையாள் ; ஆண்டவன் அன்பே
பொருளெனப் போற்றும் போத முடையாள் ;
தாரா யோகமும், சாத்திர ஞானமும்,
பூரண சக்தியும், பொலிவுறுங் கற்பினாள்.
அண்டையி லிருப்பினும், அருட்கன லேறும்
குண்டலி சக்திக் கொழுந்தே யனையாள்.
காவியக் கலையும் ஓவியக் கலையும்
ஆவியை உருக்கும் அமுதயாழ்க் கலையும்,
வேதக் கலையும், விரிதமிழ்க் கலையும்,
மாதவக் கலையும் மாசறப் பயின்றாள்.
தூவினைப் பெரியார் தொண்டுகள் செய்தாள் ;

தீவினை யாளரைத் தீபோற் காய்வாள்.
வீரருக் குரிய போர்க்கலை யறிந்தாள் ;
தீரருக் குரிய செய்கையுந் துணிந்தாள்.
இளகிய மனத்தினள் ; ஈகையிற் சிறந்தாள்,
பழகிய நற்குணப் பாவை யிவளே..
கண்ணுக் கினியாள் கருத்திற் கினியாள்,
பண்ணுக் கினியாள், பணிகளுக் கினியாள்,
சொல்லறங் காக்கும் நல்லறச் செல்வி,
இல்லற மறிந்த கல்வியும் பெற்றாள்.
தொல்பெருந் தமிழகந் தோற்றிய வீரச்
செல்வி யிவளே, செந்திரு வனையாள்.
சித்திமா மரபின் செங்கதி ரான
சுத்தனுக் கிவளே சத்தியா வாளே.
கண்டதுங் காதல் கொண்டனர் இருவரும்,
பண்டை நாளிற் பழகிப் பிரிந்தவர்.
இருவரும் உண்மையில் ஒருவரே யாவார்.
அருக்கனுங் கதிரும் அனையார் இவரே..
சீரிய கௌரியின் பேரியல் பனைத்தும்
நேரிலே காண்பீர் ; நிகழ்த்துவ திவையே..
இப்பெரு மணாளர் இல்லற வாழ்வால்
ஒப்பறு நலங்கள் உலகினுக் காமே..

இவ்வகை முனிவன் சொல்லக் கேட்டதும் இன்புற் றுங்கே,
எவ்வகை யானும் கௌரி எங்குடிக் கேற்ற கன்னி,
நவ்விளங் குமரனுக்கு நலம்பெறுந் துணைவி யாவாள்.
செவ்விய திரும ணத்தைச் செய்குவோம் என்றான் வேந்தே..

இந்திரை மனமு வந்தாள், உறவினர் இனிதே யென்றார் ;
தந்திரக் கிழவர் சென்னி யசைத்தனர் ; சனங்க ளெல்லாம்,
வந்தது சேம மென்றார் ; நாடெலாம் வாழ்த்தொ லிக்கத்
துந்துமி முழங்கக் காண்போம் சுத்தகல் யாண நாளே !

4. சம்மதப் படலம்

அனைவரின் விருப்பமும் அறிந்த சத்தியன்,
தனயனின் விருப்பமுந் தான் அறிந்திட,
*முனிவரர் இருவரின் முன்னும் சுத்தனை
வினவினன் சம்மதம் விதியின் வண்ணமே.

* *பாரத முனிவர், சாந்த முனிவர்*

சத்தியன்

நன்மன வுலகெலா நவிலு நாயக,
கன்மனக் கலியனின் காலன் போன்றவா,
என்மர பொளியென எழுந்த ஞாயிறே,
உன்மன முவந்திடுஞ் செயலொன் றுன்னினேன்..

முந்தையர் முறைப்படி முனிவர் சொற்படி,
மந்திரர் மனப்படி, மரபு வாழவோர்
செந்திரு மகளினைத் திரும ணஞ்செய
வந்தது மங்கல வசந்த நாளிதோ !

ஞானமுங் கல்வியு நல்லொ ழுக்கமும்,
வானெனக் கருணையும், வனப்புங் கொண்டவள்,
தேனென இனித்திடுந் தீஞ்சொற் கிஞ்சுகம்..
மானென மயிலென வளரு மேனியாள்..

வீரமு நீதியும் விரிந்த கல்வியும்,
ஆரமு தக்கவி யணியுங் கொண்டொளிர்,
சேரருஞ் சோழருஞ் செழிய ரும்வந்த
தீரரின் குலத்தினள் தெய்வக் கற்பினாள்.. 20

வரகுண பாண்டியன் இளைய மாமகன்
மரபினில் வழிவழி வந்த மாதவன்
கரம்வளர் கற்பகம் ; கடவுண் மாக்கலைச்
சிரம்வளர் பூரண யோகச் செல்வியே.

தென்னகம், சிங்களம், தீவு கள்பல
தன்னகங் கொண்டதோர் தமிழ கத்திலே,
இன்னியல் நீதியை இலக நாட்டிய
மன்னவர் மரபினை வாழ வைத்தவள்.

* நால்வரை வணங்கிய நல்ல தொண்டர்கள்,
† மூலரைக் கண்டவர் முனிவர் ஆசியைச்
சாலவும் பெற்றவர் தவம் பயின்றவர்,
சீலரிச் செந்தமிழ்த் திருவின் முன்னவர்.

அறிவினிற் சிறந்தவள் அருள்சி றந்தவள்,
நெறியினிற் சிறந்தவள் ; நேய மிக்கவள்,
பொறிபுல னடங்கிய யோகி போன்றவள்,
அறமகள் உனக்கென வமைந்தி ருக்கின்றாள்..

******மாணிக்கவாசகர், அப்பர், சுந்தரர், சம்பந்தர்.*

† *திருமூலர்*

கண்கவர் சுந்தரி, கற்புத் தீயனுள்,
பண்கனி ரசம்பொழி பவள வாயினுள்
தண்முகில் மார்பிடைத் தாவு மின்னனுள்.
எண்ணுதற் கினியவள் இணையி லாதவள்..

அவ்வியல் அணங்குனக் கமைந்த தேநலம்.
திவ்விய மைந்தனே செஞ்சொற் கொண்டலே,
இவ்வகை யுன்மனம் இசைந்து நிற்குமேற்
செவ்விய திருமணஞ் செய்த லாகுமே..

அரிய தந்தை யறியத்தன் உள்ளத்தை,
விரிய லர்முகம் வேல்விழி நாட்டவே,
உரிய மைந்தன் உரைகளைத் தேர்ந்துடன்
பிரிய மாகப் பிழையறப் பேசினுன்:-

சுத்தன்

வணக்கம் என்னை வளர்த்தநல் ஐயனே !
கணக்க றிந்து கனிந்துரை செய்தனை..
மணக்க வேண்டும் வயதிலுன் சொற்படி
இணக்கம் வேண்டுவ தென்கட னுகுமே.

புரிந்து நன்மணம் பூமியைத் தாங்கயான்,
பிரிந்து நீயதைப் பேரின்ப வாழ்வினிற்
பரிந்து மெய்யருள் பற்றிப் பணிசெய்வாய்..
தெரிந்த துன்மனந் தெய்விகத் தந்தையே..

தந்தை சொல்லுந் தமிழிளங் கன்னிகை
எந்த வாறும் இனியவள் என்னினும்,
சொந்த மாகவுன் சுத்தனுக் கேதனைத்
* தந்தவள் எனிற் சம்மத மாகுமே..

ஒருத்தி அன்னவ ளேயென் னுயிர்த்துணை
ஒருத்தி யன்னவ் ளேயென துள்ளமாம்.
ஒருத்தி யேயென் னுலகமும் வாழ்வுமாம்.
ஒருத்தி கௌரி யெனக்குறு சக்தியே.

எவளென் முற்பவத் தென்னெ டிணைந்தவள்,
எவளென் ஆர்வங்கள் எல்லாந் தெரிந்தவள்,
எவளென் உள்ளத்தி லேயிடங் கொண்டவள்,
அவளென் வாழ்வின் அருந்துணை யாவளே..

---

* *தன்னையே தந்த கௌரி*

பிறக்கும் போதும் எனக்கெனத் தோன்றினாள்.
இறக்கும் போதும் எனக்குயிர் ஈகுவாள்..
சிறக்கும் போதென் சிறப்பிற் கணிசெய்வாள்.
துறக்கும் போதுந் துறவினைத் தூண்டுவாள்.

பொன்னியே யவள் பூமுக நோக்கிடின்,
மின்னலே யந்த மென்மலர்ப் புன்னகை;
அன்னமே நடை ; ஆரமு தேமொழி ;
சொன்ன மேயவ ளின்சுடர் மேனியே....

கண்ணில் யோகக் கனலுகுங் கண்மையாள்,
பண்ணில் வேதப் பயனுறும் பாட்டினாள்,
எண்ணின் என்னுயிர் இன்புறும் அன்பினள்
பெண்ணின் சக்தி பிறங்கிடும் பெண்மையாள்.

கண்டதும் எனுட் காதல் பொழிந்தனள்,
விண்ட முல்லை முறுவலை வீசியே,
உண்டி யீந்தனள், என்மன முண்டனள்,
குண்ட லிக்கன லேறுங் கொழுந்தனாள்..

இமைய வெற்பில் இறைவனுக் கேதவம்,
அமைய நோற்றவள் ; அன்பினிற் கூடிய
உமையைப் போன்ற ஒருவளென் கண்களின்
இமையுங் காட்சியும் இன்பமும் போன்றவள்.

தந்தை கூறுந் தளிரிளஞ் செல்வியென்
சிந்தை கொண்ட திருமக ளேயெனின்
எந்தை சொல்லுக் கிரண்டிலை ; அன்னவள்
அந்தண் சாந்தன் அளித்த கவுரியே.

சத்தியன்

செவிகுளிர் வார்த்தை சொன்னாய் செல்வனே உன்ம னத்தில்
எவளைநீ காத லித்தாய் அவளையே யியம்பு கின்றேன்..
தவமுனி மகிழ்ந்தான்; உன்னைத் தந்ததாய் மகிழ்ந்தாள்; ஐய
சிவனுடன் உமையும் போலக் கௌரியைச் சேர்ந்து வாழ்வாய் !

சத்திமான் சாந்தன், செல்வி சங்கரி தந்த செல்வி,
பத்தினிக் குணங்க ளெல்லாம் பழுதறப் பழுத்த பாவை,
உத்தமி உனக்கே வந்தாள் ; உடலுடன் உயிரும் போலச்
சுத்தநீ வாழ்வாய் அந்தச் சுபமணி மகிழ நன்றே..

சுத்தன்

சித்திரத் தெழுதொ ணாத செழுந்திரு மகளைக் கூடிப்
புத்தமு தனைய போகம் புசிப்பதென் இன்பம் ; என்னின்
இத்ததி கடமை யொன்றென் எதிரினில் எதிர்ந்த தையே
அத்தை யான் முடித்தா லன்றி ஆறுதல் அடைவ தாமோ ?

உலகெலாங் கலிய ரக்கர் உயிர்களை நடுக்கி யாண்டு,
கலகமே வாழ்வாய்த் தீய கருமமே வளர்க்கின் றுரே..
நலமெலாந் தேய்ந்த திந்த நாட்டிலும் பேய ரக்கர்
கொலைநடம் புரிகின் றுரக் கொடுமையை யறிகு வோமால்..

உரைக்கொணுத் துன்ப மேவி, உலகெனைக் கூவு தம்மா..
அரைக்கணம் பூமி தேவி அழுகையைத் தாங்க மாட்டேன்..
இரக்கமென் உயிரை உந்தி யிழுத்தது தந்தாய்..தீய
அரக்கரை முடித்த பின்பே அணங்கினை மணந்து வாழ்வேன்..

தொல்லைசெய் அதர்மக் காட்டைத் தூருடன் அறுத்துத் தள்ளி,
இல்லையென் றிகலை நூறி, இத்திரு நாட்டி லெங்கும்
நல்லறஞ் செழிக்க நாட்டி, நானிலம் வாழ்த்த நாளே
இல்லறம் புகுவேன் ; எந்தாய், இதுவென திச்சை யாமே..

தேசமே எனக்கிப்போது தெய்வமும் வாழ்வு மாகும் ;
மாசறு பிரமசாரி யாகவே மாதா சேவை
தேசுறச் செய்துவெற்றித் திருக்கொடி நாட்டி யுன்றன்
ஆசியைப் பெற்ற பின்பே அடுத்தது முயலு வேனுல்..

தீதகக் கலினுன் இந்தச் சித்தியை நோக்கு கின்றுன்..
பாதகப் பகையைத் தீட்டிப் பழுதுறப் பிரித்து நாட்டைச்
சூதரின் கூட மாக்கிச் சூழ்ச்சிசெய் தரசர் தம்மை
மோதவிட் டிடையிற் கொள்ளை யடித்திட முளைத்து விட்டான்..

அத்தகைக் கொடியோன் போரில் அடியொடுஞ் சாய்ந்த பின்பே,
எத்தகை யாரும் இங்கே இன்புற லாகு மன்றே !
சித்தியின் பெருமை நாட்டிக் கலியனின் சிறுமை காட்டி
அத்தின மேயுன் இச்சை அழகுற முடிப்பேன் எந்தாய் !

சாந்த முனிவன்

மைந்தன் இவ்வகை மொழிதலும் மன்னவ னுங்கே
நைந்த சிந்தைய னுகவே " நலமெது " வென்றே
ஐந்த டக்கிய முனிவனின் அருண்முகம் பார்த்தான் ;
பைந்த மிழ்முனி பழுதறு நலத்தினைப் பகர்ந்தான்.

சாந்தன்

அற்புதம் உனது சிந்தை..அற்புதம்உனது வாழ்க்கை !
கற்பகக் கொம்ப னுளைக் கடிமணம் புரிவ தாலே
நற்பலன் பெருகும் ஐய, நானதற் கிசைந்த தெல்லாம்
பொற்புறச் செய்வேன்என்றுன்பொலிதவக்காந்தம்போன்றுன்..

தேகத்தால் அனுப விக்குஞ் சிறியசிற் றின்ப மென்னே !
யோகத்தால் அனுப விக்கும் உள்ளின்ப வெள்ள மொன்றே
போகத்திற் சுத்த போகம் ; அப்பெரும் போகந் தன்னை
தாகத்தால் உண்ணு மட்டுந் தருவளுன் சக்தி கௌரி !.. 140

சுத்த னேசுப காரியந் தொடங்குக வுடனே..
எத்தகை யிடருங் கெடும் ; இனியவுன் விரதம்.
சத்தியம் பலிக்கும் ; கலி சாய்ந்திடும் அதற்கே
உத்த மப்பெருந் துணைவியாய் உற்றனள் கௌரி..

பெருத்த காதலிற் பேரின்பம் பெருகிடக் காணும்
ஒருத்தி, கௌரியின் உள்ளத்தைக் கொள்ளைகொண் டவனே,
திருத்த மாகவுன் கருத்தினைத் திட்டியங் கனுப்பாய் ;
பொருத்த மாம்விடை பொலிவுறக் கிடைத்திடும் உடனே.

நாளை நல்லநாள் நாண்மலர்ச் சோலையில் வீரக்
காளையே, வந்து கௌரியைக் கலந்துகொண் டுனது
மூளையே யவள் மூளையென் றறிந்தநீ நல்ல
வேளையே மண வினைநிறை வேறிட விரும்பாய் !..

என்ற லும்“ இனி தினி ”தென இணங்கினன் புனிதன் ;
“ நன்று நன்”றென மன்னனு நகைமுகம் பொலிந்தான்..
ஒன்றி யுள்ளமும் உள்ளமும் உறுதிகள் பூண்டு
மன்ற லுக்கிசைந் தெழுந்ததை மகிழ்வுறக் காண்போம்.. 156

5. கௌரி காதற் படலம்

காதல்

காதல் வாழிய ! காதலர் வாழிய !
காத லின்பக் கனல்வள மோங்குக !
காதலே யிந்தக் காணுயிர் வாழ்க்கையாம்.
காத லின்றியிக் காசினி யில்லையே !

விண் சுரந்து, விளைகனி தானியம்
மண் சுரந்துயிர் உண்டு வளர்வதும்,
பண் சுரந்து பறவைகள் ஆடலும்,
கண் சுரந்து கனிந்திடுங் காதலால்..

கண் கனிந்து கருத்தை யுணர்த்திடும்,
உண் கனியென் றுதடு நகைத்திடும்,
பண் கனிந்து பலகலை தந்திடும்,
விண் கனிந்த சுகமும் விளைக்குமே..

வான் சுடர்களும், வன்ன வசந்தமும்,
கான் மலர்களுங் காதற் கடிதமே !
மான், மயில்கிளி ,மாங்கனி வாய்க்குயில்,
தேன்வண் டன்னந் திருமிகு தூதரே !

சோதி ஞானச் சுடரென நம்பியை
நாத சக்தியென் றன்புறு நங்கையைக்,
கோதி லாது குலாவித் தியானித்தால்,
காத லுங்கட வுட்கன லாகுமே !

கௌரியின் காதல்

விண்ண முதென மெத்தவும் இன்னியற்
பெண்ண முதம் புனிதப் பிரானையே,
கண்ணை நெஞ்சைக் கவர்ந்த சிவனென்றே,
பண்ணு டன்பரிந் தேத்திப் பணிந்தனள்.

இருளைப் போக்கும் இரவியைப் போலவே,
அருளைத் தூண்டிடும் அன்புள நெஞ்சிலே,
தெருளைக் கொண்ட சிவசக்திக் காதலின்
பொருளைக் கண்டனள் புண்ணியக் கௌரியே !

மாத வனை மனத்தில் உயிரென
ஓதி ஒன்றி யுணர்ந்த நிமையுடன்,
கோதை, மீரை யிராதையுங் கொண்டதோர்
காதல் கௌரியின் காதல் விளக்கமே.

மண்ண கத்தினில் வாழுயிர் யாவிலும்,
விண்ண கத்தில் விளங்குஞ் சுடரிலும்,
கண்ண கத்திலுங் காதல் ஒருவனை
எண்ணி யெண்ணி யிதயந் துடித்தனள்.

பொன்னைக் காணின் புனிதன் உடலென்பாள்,
மின்னைக் காணின் மிளிர்நகை யென்னுவாள்.
தன்னைக் காணின் அவனெனச் சாற்றுவாள்,
கன்னி, தூயனைக் கண்ட கவுரியே

மலை யருவி மணாளன் இசை யென்பாள்,
அலை கடலவ் வருட்கட லென்னுவாள்.
கலை மதியிரவி யவன் கண்ணென்பாள்.
தலை சிறந்த தனிப்பெருங் காதலால்,

வான வட்டம் வளைத்த உலகெல்லாம்
ஞான நாயகன் ஆலயம் என்னுவாள்.
மோனக் குன்றவன் உள்ளத்தில் ஊன்றியே
தியான மோனச் சிவமெனச் சாற்றுவாள்.

பாடு வோர்கள் அவன்புகழ் பாடுமின்,
ஆடு வோர்சுத்த ஓமென்றிங் காடுமின்.
தேடுந் தொண்டரெந் தெய்வத்தைத் தேடுமின்,
கூடும் இன்ப நலமெனக் கூறுவாள்.

குளிர்மதி சுடுவ தில்லை ; குமுதமும் பழிப்ப தில்லை ;
நளிர்வனத் தென்றல் மேனி நைந்திடத் துளைப்ப தில்லை ;
களிமிகுங் கடவுட் காதல் கண்டவர் இயற்கைக் குள்ளே
ஒளிமிகும் உயிரின் வள்ளல் ஒருவனைக் கலந்து வாழ்வார்.

கௌரி தேவி காலை அருவியாடிச் சுத்தனை நினைத்தல்

தென்றலை உபசரித்துத் தேன்மண மூட்டுஞ் சோலை,
அன்றில்கள் கொஞ்சுஞ் சோலை, அருவியில் ஆடிக் கௌரி,
பொன்றிருக் கதிர்கள் வீசிப் பூத்திடும் அருணன் உள்ளம்,
தன்றிரு வுள்ள மான தலைவனைத் தியானித் தாளே ! 60

காண்இயற் காட்சி யெல்லாம் காதலா வுனது கோயில்,
பேண்உயிர் உள்ள மெல்லாம் பெருமநின் சந்நி தானம் ;
நாண் மலர் அனைத்தும் அன்பு நாதன் பூ சனையா மென்றே
மாண் உயிர் வாழ்வுனக்கே மகிழ்வுற நிவேதிக் கின்றேன் !

நாவினுக் கரிதாம் ஆர்வ நயனநீர் பெய்து, நீண்ட
காவியக் கனவில் நட்டுக் காதலை வளர்த்தேன்..அன்புப்
பூவினைக் காணு வேனே ? புனிதவுன் சித்தம் யாதோ ?
ஓவியத் தெழுதொ ணாத ஒருவனே ஒப்பி லானே !

அளவிலா உள்ளந் தன்னில் ஆறென ஊறும் ஆசை,
வளமுலை விம்மப் பாய்ந்து, வளர்ந்ததுன் உணர்வி னாலே..
களவிலாக் கன்னி யாசைக் கடலினைக் காணு வாயோ ?
எளியவர்க் கிரங்கி நாளும் இனியன புரியும் வேந்தே !

வேலையாய் விம்மி யாடும் வெண்ணிலாப் போல வந்தாய்.
சோலைவாய்க் குயில்க ளுக்குள் சொரூபத்தைப் பாடு கின்றேன்.
மாலைவாய் வசந்தத் திற்கென் மங்கல யாழி சைப்பேன் !
காலைவாய்ப் புட்க ளுக்கென் கனவுறு கதைகள் சொல்வேன் !

முல்லையின் முறுவல் வீசி மோகத்தீ யூட்டு கின்றாய்.
சில்லெனத் தென்ற லேறித் திசை திசை பவனி செல்வாய் !
எல்லையில் வானத் துன்றன் இச்சையை எழுதிக் காட்டிச்
சொல்லற வந்து வந்தென் சோகத்தைத் தூண்டு கின்றாய் ! 8

கறவொலி கேட்டுப் புட்கள் கண்விழித் திசைக்கு நாட்டில்,
மறவொலி யரக்கர் மாய வடிகளை தொடுத்த வீரா !
அறவொளி வீசுந் தூய அருள்விளை யாடல் செய்வாய்..
மறையொலி அமுத வாயா ! என்னுயிர் மணியே போற்றி !

என்பணி யெதுவு மில்லை..என்னைநான் உனக்கே தந்தேன்..
உன்பணிக் காளாய் இந்த உலகினிற் பிறந்தேன் ஐயா..
அன்பணி துரையே, என்றன் ஆருயிர்க் குயிரே, யுன்றன்
வன்பணி புரிந்தே வாழும் வாழ்வெனக் கருளு வாயே !

நாயகா உன்னைக் கோடி ஞாயிறுய்க் கண்ட போதே,
போயது கவலை மாறிப் புதுநலப் பிறவி பெற்றேன்..
ஆயுளும், யானும், எந்தை அருளிய சக்தி யாவும்,
நேயனே தூயனே ஓம்...! நின்னதே நினக்கே தந்தேன் !

சுத்தன் கடிதம்

இவ்வகை யாகக் கௌரி இறைவனை யெண்ணி யெண்ணி,
நவ்விளங் கொங்கை விம்மி, “ நாத ஓ நாத ” வென்றே
செவ்வரிக் கண்ப னிப்பத் தேன்மலர் சேர்த்து வந்தாள்.
அவ்விடம், தோழி அன்புக் கடிதமொன் றளித்தாள் மாதோ !

ஆவலாய்ப் படித்தாள் கௌரி ; * ஆழியைக் கண்ட சீதா
தேவியே யானுள் ; மார்பிற் சிரத்தினில் வைத்து மீண்டும்
காவியங் கண்ணீர் வாரக் காதலன் கடிதந் தன்னைப்
பூவினுல் அருச்சித் தன்பு பொலிவுறப் படித்தாள் மாதோ !100

‘‘அன்புக் கிளியே, ஆர்வக் குயிலே,
நின்புது வாழ்க்கை நிலவுக நன்றே !
ஆன்மக் காதலின் பான்மை யறிந்த
மான்விழிப் பாவாய், தேன்மொழிச் செல்வீ,
புதனே நமக்குறு புதுமண நாளாம்.
அதன்முன் என்மனம் அறியக் கேளாய் !
பூமியில் ஆண்பெண் பொருந்திய வாழ்வு
காமிகள் வாழ்வினும் கருத்துயர் வாழ்வாம்.
ஆதி சக்திதன் ஆடல் வளரவே
காதல் என்னும் கனலைப் பரப்பினுள்.
இயற்கைக் காதல் இன்பமே யாகும்.
மயக்குங் காமம் மனத்தைக் கலக்கும்.
அடர்வனத் தீயும், அடங்காப் புலியும்,
இடர்தரும் பாம்பும், கடற்புய லும்போல்,
சீறுங் காமச் சிக்கினில் வீழாப்
பேறுபெற் றோரே பெரியவ ராவார் ;

* கணையாழியை அனுமான் தரக் கண்ட சீதை.

இருவி காரம் பெருகிய வுலகில்
திருவி காரராய் நிலவுவார் அவரே !
பிணவுடற் போகம் கணமிருந் தகலும் ;
மணவினை யென்பது மன்னுயிர்க் கலப்பே.
இரண்டு கம்பிகள் இணைந்துமின் சாரம்
திரண்டு பரவுந் திறமே போல,
ஆணின் அறிவும், பெண்ணின் அன்பும்,
பேணிக் கலந்து பெருவாழ் வாகும்.
ஆணிற் பெண்ணும் பெண்ணிலே ஆணும்
பூணிற் பொன்போற் பொருந்துவ தாமே.
ஆணுட் சிவமும், பெண்ணுட் சக்தியும்
காணும் போதே காதல் இனிதாம்.
தேகங் கடந்த தேகியிற் கூடும்
யோகமே வாழ்வின் உட்பொரு ளாமே !
யோக வுணர்வில் ஏகமாங் காதலர்
சோக மோகச் சுழியிற் சிக்கார்.
உதயக் கதிர்போல் இதயக் குகையில்
வதியும் தூய வாய்மையே நாமாம்.
அதுவே சக்தி யாகிய பெண்மை.
அதுவே சுத்த மாகிய ஆண்மை.
அதுவே யானும், அதுவே நீயும்.
அதுவே விகார மற்ற சாட்சியாம்.
உலகுயிர்க் குலங்கள் ஒருயிர்ப் பான்மையே.
பலபல தோற்றம் பலவாம் ஒருமையே !
இந்த வுண்மை இனிதுநீ யறிவாய் ;
அந்தவுள் ளுண்மையில் அன்புடன் கூடி,
எடுத்த கருமம் முடித்த பிறகே,
அடுத்த கருமம் பிடித்து முயல்வோம்.
பஞ்ச வடியிற் படையுடன் வந்த
வஞ்சக் கலியன் வருவான் மீண்டும் ;
நாடெலாம் பாவக் காடெனச் செய்தான்
கேடெலாந் தீரக் கிளரமர் புரிவோம்..
இருளை விலக்கி இறைவன் சக்தியாம்
அருளைத் துலக்கி, அறத்தை நாட்டி—
என்னுயிர்ப் பணியை இயற்றும் வரையில்
அன்னை சக்திநீ அருந்தவத் துணைவியே..
என்பதை முன்பே யியம்பு கின்றேனே ;
சுத்தனுக் குன்மனந் துலக் கிடுவாயே.

கௌரியின் பதில்

உள்ளம் பொங்கி உரைகடந் தன்பு
வெள்ளம் பெருக விமலனைப் போற்றிக்
கலையிலக் காக நிலைபொரு ளதனை
மலையிலக் காக மனங்கடந் துணர்ந்து,
"சுத்த ஓம்" என்றே தொழுதுதன் கொள்கையும்
இத்தகைத் தென்றே எழுதினாள் கௌரி....

"என்னுயிர்க் குயிரே, என்விழிக் கொளியே !
உன்மனம் ஒன்றே என்மன மாகும்,
ஊடும் பாவும் கூடியே ஆடை ;
பீடுறும் ஆண்பெண், பிழையறக் கூடி,
ஈருட லுக்கும் ஒருயி ராகி,
பாரும், வளரும் பயிரும் போலே,
இகமும் பரமும் இணைந்திட வாழ்வதே
சுகமாம் ; அதுவே சுத்தான்ம வாழ்வாம்.
ஆண்பெண் உறவை ஆன்ம வுறவாய்
மாண்புறச் செய்ய வழியும் அறிவேன்..
வேதாக மத்தின் சாதனத் தாலே
ஆதார சக்தியை மீதேற்ற வல்லேன்..
கண்ணனும் ராதையும் பண்ணிய யோக
உண்மை யறிவேன் ; ஒளிர விளக்குவேன்.
ஆதலால் இருவரும் ஆன்மிய வுறவால்,
பேதமில் லாத பெருவாழ் வடைவமே.

எண்ணுவ துன்றன் எண்ணம் ; இயற்றுவ துன்றன் இச்சை ;
பண்ணுவ துனது நல்ல பணிகளே...பலன்க ளெல்லாம்
நண்ணுவ துனக்கே, ஐயா ! நானுடல்; ஆவி நீயே
கண்ணுளே காணுங் கண்ணா, கவுரியின் கருத்தி தாமே !

சுத்தனும் வந்து கண்டான் ; சொல்லற நகைத்தான் மெல்ல
இத்ததி சாந்தன் வந்தே இருவரின் உளமும் போற்றி,
மெத்தவும் ஆசி கூறி, மேதினி யனைத்தி னுக்கும்
உத்தம வுறவைக் காட்டி " ஓங்குக நீவிர்" என்றான்..

மூவரும் ஆங்கே தியான மோனத்தில் மூழ்கி நின்று,
சிவமும் பரமும் ஒன்றித் திளைத்தபின், சுத்தன் "இந்தப்
பூவிலே ஆன்ம நேயம் பூரணம் பெற்று வாழ்ந்த
தேவரு முண்டோ? வென்னத் திருமுனி யருளு வானே.

6. இராமகிருஷ்ணப் படலம்

[சாந்த முனிவர், இராமகிருஷ்ண பரம ஹம்ஸரின் தூய வாழ்வையும், அவர் அருளால் விவேகானந்தர் செய்த அரிய பணிகளையும் விளக்குகிறார்.]

காப்பு

பத்திச் சுடரோங்கிப் பற்றற்ற வாழ்வோங்கிச்
சத்திச் சுடரோங்கிச் சண்டியருட்—சித்தனும்,
சாரதா நாதன் ஐயபரம ஹம்ஸனவன்
பாரதான் மாவெனவே பார்..

கல்லாத கல்விவளர் கடலே யானான்
  கலங்காத காளியருட் செல்வன் ; சித்தி
எல்லாமும் வல்லவனும்..இயற்கை யாக
  எம்மதமும் சம்மதமாய் ஏற்றுக் கொள்ளும்
சொல்லாளன், சொற்கடந்த பெருமை யாளன் ;
  சுத்தான்ம நேயத்தின் சுடரே யானோன் ;
எல்லாமாம் பரம்பொருளை யெங்குங் கண்டோன் ;
  இராமகிருஷ்ண பரமஹம்ஸன் இருதாள் போற்றி !

கால நிலை

நமது புண்ணிய நாடொரு காலத்தில்,
அமைதி கெட்டுள் ளறிவை யிழந்தது.
சமய வாதச் சமர்க்கள மானது—
மமதை பேசிய மாய மயக்கினால்.

கஞ்சிக் கல்வியும் அன்னியக் கல்வியே..
அஞ்சிச் செய்வினை அன்னியர் சேவகம் ;
நெஞ்சி லான்ம நிறைவு வறண்டதும்
பஞ்சை யாயினர் பாரத தேசத்தார்..

சிறந்த மேலவர் செப்பிய நன்னெறி,
மறந்த னர்பிற மாயைக் கடிமையாய்,
அறந் துறந்தனர் ; ஆத்தும சக்தியாந்
திறஞ் சிதைந்தனர் திவ்விய நாட்டினர்..

பொய் மினுக்குடன் போலி நடைகளும்
மெய்ய றிவை விழுங்கிட, மானிடர்..
வெய்ய துன்புற்ற வேளையில் வந்தனன்,
துய்ய ஹம்ஸன் அருட்சுடர் போலவே..

பிறப்பு

பூமியின் முலைப்பால் போன்று பொங்கிடும் இமயக் கங்கை,
ஓமென வுயிர் செழிக்க ஓடிடும் வங்க நாட்டில்,
காமரு புக்கூர்என்ற கண்களித் திலகும் ஊரில்,
காமமி லாத ஞானக் கதிர்மணி உதித்தான் மாதோ !

வரநதி போன்ற தூயர், எளியவர், வாய்மைச் செல்வர்,
பரமனிற் சித்தம் வைத்த பத்தராம் குட்டி ராமும்,
சரள சுபாவ முள்ள சந்திர மணியும் செய்த
விரதநற் பயனால், இந்த முனிக்கனி விளைந்த தம்மா !

பால பரமஹம்ஸர்

சிந்தனை தூயன், செய்யுஞ் செய்கையிற் றூயன், வாக்கில்,
அந்தரங் கத்திற் றூயன், அன்பினிற் றூயன், அன்னோன் ;
சந்ததம் ஹரிநா மத்தைச் சாற்றியே ஆடிப் பாடும்,
விந்தையைக் கண்டு நல்லோர் வியந்திட வளர்ந்தா னம்மா !

மாலடி மனதை வைத்தான் ; வாக்கினைத் திருநா மத்தில் ;
சாலவும் விளையாட் டெல்லாம் சரிதைநா டகத்தில் வைத்தான்,
சீலமெய் யன்பர் நேயஞ் செய்வதிற் சித்தம் வைத்தான்..
ஞாலத்தின் கோல மெல்லாம் ஞானமாய்க் கண்ட சேயே !

கண்ணனை நடிக்கும் போது கண்ணனே யாவான் ; நெற்றிக்
கண்ணனை நடிக்கும் போது கயிலையஞ் சிவனைப் போல்வான்.
பெண்ணென நடிக்கும் போது பெண்மணி ராதை யாவான்..
மண்ணுல கெல்லாம் ஈசன் மயமெனக் கண்ட சேயே !

அஞ்சறு மனத்தான், மற்றோர் அரட்டினுக் கிணங்க மாட்டான்.
பிஞ்சிளஞ் சொற்க ளாலே பெரியவே தாந்தம் பேசி,
நெஞ்சினை அள்ளும் தெய்வக் கதைகளை நீளச் சொல்வான்..
அஞ்சிலே ஐம்ப தாண்டின் அறிவினை விளக்கி னானே !

துறவிகள் வரவைக் காணத் துறுதுறுத் தோடிச் செல்வான் ;
உறவுகொண் டவரைப் போலே உடையணிந் தன்னை முன்னே,
"ஹர ஹர" வென்று நிற்பான்..ஆனந்த நடனஞ் செய்வான்..
வரமிகு ஞானி, ஆடும் வயதிலே விளங்கி னானே !

இயற்கைக் கல்வி

பிள்ளைக்குப் பூணூற் போட்டுப் பெற்றவர் கல்வி கற்கப்
பள்ளிக்குச் செலவி டுத்தார்..பளிச்செனப் பிரம்பினாலே
சுள்ளடி வாங்கி ஏட்டுச் சுவடியைப் பாடம் பண்ணும்
சள்ளையை வெறுத்தான் ; சீவ சகபர வுண்மை கண்டோன்

கலைமிகு புலவர் வாதங் கண்டுகண் டனங்கள் செய்வான் ;
உலையெனப் பொரியுஞ் சொல்லை உமியென ஊதித் தள்ளி,
மலையென மாண்பு மிக்க வாய்மையைத் தெளிவித் தென்றும்
நிலைபெறும் கடவுட் கல்வி இதுவென நினைக்கச் செய்வான்..

"காலட்சே பத்தி னுக்குக் காலரை சம்பா திக்க
நாலெழுத் தறியாப் பிள்ளை நமக்கென்ன பயனும்" என்றே..
ஓலமிட் டண்ணன் வாவென் றுடனழைத் தேகி, அந்தக்
காலத்தில் அவனே வைத்த கல்கத்தாப் பள்ளி சேர்த்தான்.

"ஈட்டுதற் கென்றே கற்கும் இழிமனக் கஞ்சிக் கல்வி,
ஏட்டினைத் துளைக்குங் கல்வி, எனக்கினி எதற்கே". யென்று
மூட்டையைக் கட்டி வைத்து, முன்செய்த படியே பிள்ளை
ஆட்டமும் பாட்டும் அன்பும் ஆர்வமுங் கொண்டே நின்றான்..

செல்வரின் மனையிற் பூஜை செய்குவான் ; பாடி யாடி
நல்லறக் கதைகள் சொல்லி, நாழிகை கழித்து வந்து,
மெல்லவோர் புத்த கத்தை மெல்லுவான் கருத்தே யின்றி ;
தொல்லையி தென்று மூத்தோன் சுடுமொழி கூறுவானே..

அண்ணல் ராமகுமார்

துடிப்பினை யடக்கிப் பாடஞ் சுறுசுறுப் பாய்க்கல் லாது
தடிப்பது நன்று யில்லை..தம்பிநீ உறுதி சொல்லாய்..
படிப்பதுன் விருப்பா ?..சும்மா பள்ளிக்கு வருவ தாக
நடிப்பதுன் விருப்பா தெய்வ நாமமுன் விருப்பமொன்றே ? 80

தம்பி கதாதரன் (இராமகிருஷ்ணர்)

அண்ணா சற்றே அன்புடன் கேளாய் ;
உண்மையே சொல்வேன்..உலகியற் கல்வி
வேண்டேன் எனது விருப்ப மெல்லாம்
ஆண்டவன் அறிவே.. அருளே.. அன்பே !
புத்தகச் சுமையாற் சித்தந் தெளியுமா ?
தத்துவப் பொருளைத் தருக்கந் தருமா ?
கண்டா லன்றே காசியின் புண்ணியம்..
உண்டா லன்றே உட்பசி தீரும்.
கனியை எண்ணினால் இனிமை தெரியுமா ?
கனியைச் சுவைப்பதே இனிமை தருவதாம்..
உண்ணுமுன் கூச்சல் உணும்போ துண்டோ ?
பண்ணுந் தருக்கம் பார்த்தபின் உண்டோ ?
பண்டிதக் கூச்சல் பரமனைத் தருமோ ?
உண்டிக் கேயவர் ஓலம் வைப்பார்.
பிணத்தையே நோக்கும் பிராந்து பறந்தும்;

பணத்தையே நோக்கும் பண்டிதக் கழுகு.
பழையபஞ் சாங்கம் மழையைச் சொட்டுமோ ?
விழைவுறு புத்தகம் விவேக மளிக்குமோ ?
கூவெனுஞ் சந்தைக் கூச்சலென் விளங்கும் ..?
ஓவெனுந் தொலையில் ; உறினே தெளிவாம்..
சுட்ட தோசை சுரீரென் னாதே..
எட்டிய பக்குவம் ஏடுபே சாதே..
அருந்தும் தேனீ ஆர்ப்பது முண்டோ ?
பொருந்தும் ஞானி பொருபொருப் பானோ ?
தியாகி யாவதே கீதா சாரம்.
விவேகி யாவதே வேதாந்த சாரம்..
பாகவ தத்தைப் பலமுறை படித்தும்
மோகம் விடாத மூடனாற் பயனென் ?
கண்டதைக் கற்றுக் கடமட வென்னேன்..
உண்டோர் உண்மை ; உள்ளறிந் துரைப்பேன்..
அதுவே ஆன்மா..அதுவே அனைத்தும்
பொதுவாம் அதுவே பொருளெனக் காமே..
என்று தம்பி எதிர்த்தறி வுறுத்த,
ஒன்றுந் தோன்றா நின்றான் அண்ணனே !..
“ இப்படிப் பேசி எழுத்தறி யாதான்
எப்படிப் பிழைப்பான் ” என்றனர் தமரே !

தக்ஷிணேஸ்வரம் காளி கோயிலில்

இத்ததி தக்கிணேசம் இரசமணி ராணி “ ஐய
சக்தி ஓம் காளிக்கே நான் சமைத்தநல் ஆல யத்தே,
நித்திய பூசை செய்ய நீர்வர வேண்டு ” மென்ன
உத்தமத் தம்பி யோடும் அண்ணலும் உடனே சென்றான்.

சலசலத் தோடுங் கங்கைக் கருகிலே அந்தி சந்தி
கலகல வென்னப் புட்கள் கனியுண்டு பாடுங் காவில்,
பொலிவுட னமைந்த கோயிற் பூசையில் ஞானத் தம்பி,
உலகையே மறந்தான் ; சக்தி உருவையே நினைந்தான் மாதோ .

நானெனும் உணர்வே யின்றி, நானிலப் பற்றே யின்றி,
தானென வுள்ளந் தோறுந் தன்னையே காட்டி நிற்கும்,
ஞானவா னந்த ஜோதி ஞாயிறின் கதிரே யாகி
மோனத்தின் விளக்க மான மூலசக் தியை நினைந்தான் !..

மூத்தவன் இறந்த பின்னர், பூசனை முழுதுந் தானே
தித்தகும் ஆர்வம் பொங்கச் செய்தனன் ; செய்த கூத்தைப்
பார்த்தவர் அதிச யித்துப் “ பைத்தியம் ” என்றே சொன்னார்..
ஆர்த்தனை யறிந்த செல்வர் இருவரே யாகி னாரே...

மாண்புறு ராணி, நல்ல மாப்பிள்ளை மதுர நாதர்,
நாண்மலர் போன்ற தூய நல்லபூ சாரி வாழ்விற்
காண்புதுக் கோல மெல்லாம் காளியின் விளையாட் டென்று
வீண்பழி மறுத்து, வேண்டும் உதவிகள் விரும்பிச் செய்தார்..

கான்மலர் மாலை சூட்டிக் கையினுல் அட்ட சோற்றைத்
தேன்மலர் தூவித் “ தாயே திருவமு துண்”ணென் ருர்ப்பான்.
ஊனுயி ரில்லாக் கல்லென் றுன்னிடான் ; உலகை யெல்லாம்
ஈன்றளித் தாளும் சக்தி இதுவென நம்பி ஞனே..

முறையீடு

“ உருவென உள்ள தாயே.. ஓம் ஜய காளி சக்தி..
ஒருமொழி பேசாய்.. அம்மா உனக்கு நான் பிள்ளை யன்ரு !
இருளிலும் பகலும் உன்னை இதயத்திற் கூவு கின்றேன் ;
வருமொழி சொல்லா தேனே மௌனமா யிருப்ப தென்னே!

“கண்ணெலாம், கண்ணிற் காணுங் காட்சிக ளெல்லாம், பாடும்
பண்ணெலாம், பாட்டளிக்கும் பயனெல்லாம், பாரி லுள்ள
பெண்ணெல்லாம்,பெண்ணுளத்தின் பெட்பெல்லாம்இடம்விரிந்த
விண்ணெல்லாம் தாயே..நீயே வீரிமா தங்கி காளீ !

திங்களாய் நிலாவு கின்ருய் ; தினகர ஜோதி யாகி,
மங்களப் பகல ளிப்பாய், மீனணி வான மாகி,
எங்குமே பரவி நிற்பாய் ; இமாலய முடியி னின்று
கங்கையாய் ஓடி வந்து, கருணையாய்ப் பயிர்வ ளர்ப்பாய்.

காரிருள் உடுத்துக் கோடிக் கனல்மணி மலர ணிந்து,
வீரிநீ மின்ன கைத்து, மெல்லிய தென்றல் வீசிப்
பாரெனுங் குழந்தை தன்னைப் படுத்துநன் றுறங்கச் செய்வாய் ;
ஆர்வமே பற்றிக் கூவும் அடியனுக் கருள்வ தென்ரு ?

தந்திரம் அறியேன் ; யோக சாதனம் அறியேன் ; வேத
மந்திரம் அறியேன் ; பொல்லா மமதையு மறியே னம்மா !
இந்தக்கல் லுருவி லேநீ இலகிடும் உண்மை தன்னை
முந்துநான் அறிவேன் ; பிள்ளை முன்வரக் கூசு வாயோ ?

எங்குமுன் கண்கள் கண்டேன் ; என்னிலை காணு தேனே ?
எங்குமுன் செவிகள் கண்டேன் ; என்முறை கேளா தேனே ?
எங்குமுன் ஒலியைக் கேட்டேன் ; எனக்கொரு மொழியிலாயோ?
எங்குமுன் கருணை கண்டேன் ; எனக்குநீ யிரங்கா தேனே ?

நேசித்துத் தைல தாரை நிகரவே உனைநி னைத்துப்
பூசித்துத் தெண்ட னிட்டுப் புண்ணியப் புகழே பாடி ,
ஆசித்தேன் அருளை; அம்மா அம்மலும் காளீ, காளீ !
வாசித்துக் காணு ஞான வாரியே போற்றி, போற்றி !

உருகினன் இராம க்ருஷ்ணன், உருவிலே திருவைக் காணக்
கருதினன்..கவலை கொண்டு, காளியின் அடியிற் கண்ணீர்
பெருகினன், பிள்ளை போலப் பேசினன், உறக்க மின்றி
" வருதிநீ வருதி " யென்று வாயைவிட் டலறி னனே..

சக்தி சாக்ஷாத்காரம்

தன்னினை வகன்றான் ; காலந் தன்னையு மறந்தான் ; சக்தி
அன்னைஓம் அன்னை யென்றே அழுதழு தயர்ந்தான் ; ஓர்நாள்
"இன்னநா ளுனைக்காட் டாயேல், இனியுயிர் பிழைக்க மாட்டேன்
உன்னடி எனதி ரத்தம் ஊற்றுவே" னென்றெ ழுந்தான்.

"ஒன்றுநீ யுண்டு ; சக்தி..ஒளிந்தினும் விளையா டாதே..
நன்றுனைக் காணு வாழ்வு நரகவாழ் வதனை வேண்டேன்..
இன்றுநீ இரங்கா விட்டால், இதேஅரி வாளால் என்னைக்
கொன்றுநான்பலிகொடுப்பேன்.. இதோபலிகொடுத்துவிட்டேன்!"

வாளினைக்கழுத்தில்வைத்தான்;அழுத்துமுன் மயக்கங்கண்டான்.
"காளி ஓம் சக்தி, கோடிக் கதிரொளிக் கனலை வீசி
நீளதிர் மின்னலென்ன நின்மல யோகி நெஞ்சம்
ஆளவே புகுந்து கோயில் அமர்ந்தனள் உலகு வாழ."

சுற்றிலுஞ் ஜோதி மின்னல்.. சுடர்க்கடல் குளித்தெ ழுந்து,
" பெற்றனன் பெற்றேன் உன்னைப் பெருந்திருக் கருணை யாலே
உற்றெனுட் கோயில் கொண்டாய், ஓம் சக்தி ஓம் ஓம் " என்றே
முற்றுணர் பரம ஹம்ஸன் முத்தனுய் எழுந்து நின்றான்.

"எத்திசையும் உன்முகமே யிலகக் கண்டேன்.
எப்பொருளும் உன்மயமே யென்னக் கண்டேன்.
சித்தமிசை உன்ஞான தீபங் கண்டேன்..
சிவசக பரமான ஒன்றைக் கண்டேன்.
சத்தியமே யென்வாக்கில் வளரக் கண்டேன்.
சர்வமத சமரஸமாம் பொருளைக் கண்டேன்..
சுத்தசுதந் தரசக்தி சொரூப மான
சுயம்சச்சி தானந்தச் சுடர்கண் டேனே !

ஊனுட லுள்ளே சக்தி புகுந்ததும் உயிரின் வாழ்க்கை
ஏன்வந்த தெனத்தெ ளிந்தான்..இருவினை யுலக மெல்லாம்
ஆன்மகோ டிகளைச் சூழும் இருளினை யகற்றி, ஞானத்
தேன்பொழிந் திதயத் தாகந் தீர்த்திட வேண்டி னனே..

முன்னிலும் சாதனங்கள் முதிர்ந்தன; பரம ஹம்ஸன்
அன்னையின் அருளின் மூழ்கி, ஐக்கியப் பட்டு ணர்ந்து,
நன்மலர் தனக்கே தூவி " நான்சக்தி " யென்பான் ; பூனை
தன்னையும் " அம்மா " வென்று தளிகையை யூட்டு வானே !

இருளடர் சோலை யொன்றில், இரவெல்லாம் ஐந்தா லின்கீழ்
அருளினை நினைந்து நிற்பான் ஆடையு நூலு நீப்பான்..
பொருளறி யாத சுற்றம் பொக்கெனச் சிரித்துப் பித்தம்
பெருகிய தினிமேற் பேயாம் எனப்புறம் பேசினரே..

பெண்பொரு ளாசை கொண்ட பேய்மத மாயப் பித்தர்
திண்புறத் துறந்த தூய தேவரைப் பித்த ரென்பார். .
பண்புறு கங்கை கண்டும், பன்றிக்குச் சேறே நன்றும்..
புண்பொருக் குண்ணும் ஈக்குப் பூமது சுவைப்ப துண்டோ ?

திருமணம்

கண்டனள் பெற்ற தாயும்..கடிமணஞ் செய்தாற் பிள்ளை
கொண்டவே தாந்தப் பித்தம் குறைந்திடும் என்று தேர்ந்தே,
பெண்டிரை வைத்தி ருக்கும் பெற்றவர் தம்மைக் கேட்டாள்..
" ஒண்டொடி இவளே"யென்று காட்டினன் உரிய மைந்தன்..

"சீரமர் ஜயராம் பட்டி தன்னிலே செழித்த நல்லாள்,
காரமர் கருணைச் செல்வி, கருவிலே திருவைக் கண்ட
சாரதா தேவி யென்னுந் தளிரிளம் பாவை யேயென்
தார"மென் றுரைத்தான்; அந்தத் தையலேஅமைந்தா ளம்மா!
220

சமத்துவ சாதனம்

திருமண மான பின்பே திரும்பிய பரம ஹம்ஸன்
ஒருமன வுறுதி நாட்டி யோகத்தில் ஈடு பட்டான்..
அருகிருந் ததனைக் கண்டார் ஆயிர மடங்கா யின்னும்
பெருகிய தந்தோ ஞானப் பித்தெனச் சிரித்தார் மாதோ !

" அன்னைஓம் சக்தி"யென்றே ,அரிவையர் காலில் வீழ்வான்
பொன்னைமண் ணென்று நீரிற் போட்டுப்போ மாயை யென்பான்
மின்னுயர் சரிகைச் சால்வை மதிக்கிலான் மிதித்து நீப்பான்.
தன்னுயர் சாதி நூலுந் தாங்கிலான் சமதை பெற்றான்..

ஒருக்குலம் உலக மாந்தர் என்பதை உணர்ந்தே முற்றும்,
திருக்குலச் சேரி புக்கு, தெருக்களைச் சுத்தம் செய்வான்..
கருக்குண மான பாசம் கழன்றிவ்வா றிருக்கும் சித்தன்
இருக்கையை நாடி யோர்நாள் எழுந்தனள் அந்தண் மாதே..

பைரவி பிராம்மணி

பண்புள ஞானச் செல்வி பைரவி யென்னும் பேராள்,
எண்படி யோக மெல்லாம் எளிதினிற் பெற்ற நல்லாள் ;
விண்சுடர் போன்ற தூய விரதனைக் கண்ட போதே..
நண்புரை கூறி " நீயே நான்கண்ட கண்ணன் " என்றாள்.

"சத்திஓம்" எனவ ணங்கித் தாயிடம் பிள்ளை போலே,
" பித்தனென் றென்னை மற்றோர் பேசுவார் " என்றான் யோகி..
அத்திரு நங்கை " நீயே அவதரித் துலகைக் காக்கும்
சித்தன்; யான் தாந்தி ரீகச் சித்திகள் ஈவேன் " என்றாள்..

"பெண்ணுடன் பழகல் காமப் பிழையினைப் பெருக்கு மென்றே
உண்மைநன் றறியா மாந்தர் உரைப்பரவ் வுரைபொய் யாமே..
கண்மனந் தூய தானால், காமப்பேய் எட்டி நிற்கும்..
பெண்ணிடம் யோக சக்தி யின்பமே பெறுவ தாமே.."

என்றதுங் " குழந்தை போலே, என்னைநீ நடத்தாய் " என்ற
வன்றவக் கதிரைச் சக்தி மைந்தனென் றினிது போற்றித்
தன்றிரு யோக சக்தித் துணையினைப் பெய்து நாளும்,
"வென்றனை தாந்திரீகம் விளைபயன் உனக்கே " யென்றாள்..

சாதனப் பயனுங் கண்டு சாத்திரப் பயனுங் கண்ட
வேதியர் முன்னே யோக வித்தகி " பரம ஹம்ஸன்,
தீதினின் றுலகைக் காக்கத் திருவவ தரித்த கண்ணன்
போதசத் குருவே " யென்று போற்றினாள் புலவர் போற்ற.

" தத்துவ ஞான மின்றித் தனித்தனி யகந்தை மீறிச்
சத்திய சன்மார்க் கத்தைத் தவறியின் றுலகு மாயப்
பித்தமே பிடித்துச் செய்யும் பிழைகளைத் தீர்க்க வந்தான்..
இத்ததி இந்தக் கண்ணன் " என்றனர் அறிந்த மேலோர்.

தோதாபுரி

சக்தி யோகத்தின் சாதனம் யாவிலும்
சித்தி பெற்றவன், சின்மயத் தாயிடம்,
அத்து வைதச் சமாதி யளித்திடும்
வத்துவைப் பெற வேண்டி வணங்கினான்..

தன்னைத் தந்து சரண்புகு தூயவர்
என்ன வேண்டினும் ஈயும் பராம்பிகை,
தன்னைக் கண்டதோர் தத்துவ ஞானியை
முன்னி ருத்தினள் முத்திப் பிழம்பெற..

கட்டி லாதவன், காற்றினைப் போன்றவன்,
நெட்டை வைரச் சிலையினை நேர்பவன்
நிட்டை நின்று நிலைத்த தோதாபுரி..
அட்டமா சித்தி மான்அவ தூதனே.

தூய ஞானத் துறவி பராசக்தி
சேயைக் கண்டு திகைத்து, மகிழ்ந்துடன்,
வாய்மை யின்பறி வான சொரூபத்தை
நீய றிந்திட நிட்டை பயிலென்றான்..

சத்தி கட்டளை தாங்கித் தனயனும்,
சுத்த மான துறவற மேந்தியே,
வத்து ஞான வரத்தினைப் பெற்றனன்..
அத்து வைதத் துறவியின் அன்பினால்..

கரும பந்தங் கழற்றி யெறிந்தனன்.
இருமை யற்றதன் இன்பப் பொருளிலே
ஒருமை யுற்றந்த உண்மைக் குருவினால்
நிருவி கற்ப சமாதி நிலைத்தனன்.

பத்து மாதம் பயிற்சி யளித்தபின்,
சித்தன், உத்தமச் சீடனின் சீடனாய்ச்
சத்தி தத்துவந் தானறிந் தேகினான்..
பத்தி யோகி பழுத்தனன் ஞானியாய்..

ஆறு மாதம் சமாதி யமர்ந்தபின்,
ஊறுஞ் சைதன்ய ஊற்றைப் பெருக்கியே,
வேறு வேறு சமயம் வியன்பெறக்
கூறு மொன்றைக் குறித்துள் ளுணர்ந்தனன்.

மதானுபவம்

கிருத்துசன் மார்க்கஞ் சென்றான்; கிருத்துவின் காட்சி பெற்றான்.
திருத்தகு குரானைப் போற்றித் தீனிஸ்லாம் சித்தி பெற்றான்..
பொருத்தமாம்பெண்வேடத்தில்,இராதையைப்போன்றான்;அன்பு
நிருத்தமே செய்யும் போது நிமையென நிலவி னானே.

சாரதா பூஜை

ஆய்வுறு மதங்க ளெல்லாம் அறிந்தபின் மனைவி தானுந்
தாயெனக் கண்டான் ; அன்னை சாரதா தேவி, காளி
கோயிலுக் குற்று, நாதன் யோகத்திற் குலவித் தானுந்
தூயவ ளாகி, அன்புத் தொண்டுகள் செய்து வந்தாள்.

பெற்றதன் பெண்ணுக் கோர்தாய் பிரியமாய் அனுப வங்கள்
கற்றளித் திடுவ தேபோல், கடவுளங் கல்வி யெல்லாம்
பற்றறப் புகட்டி நாதன் பக்குவப் படுத்திச் சக்தி
உற்றெழச் செய்து, தேவி நீயென உபாசித் தானே !

" மாதரில் அன்னை கண்டு, வணங்கிடுந் தூய நேயா,
கோதறுத் தென்னை யாண்டு கொண்டனை ; குருவுந் தாயும்
நாதனும் உலகும் செல்வ நலங்களு நீயே ; உன்றன்
பாதமே மோட்ச மென்றாள் " பத்தினித் தெய்வ மாங்கே..

புண்ணியா போற்றி ! யோக பூரண னந்தா போற்றி !
மண்ணினைப் பொன்னை நீத்த மாசிலாத் துறவி போற்றி !
பெண்ணினில் அன்னை கண்ட பெரியனே, எனது ஞானக்
கண்ணனே போற்றி ! கண்ணின் கதிரொளி யானும் போற்றி !

பிடித்தனை யென்க ரத்தைப் பெற்றனன் புதிய வாழ்க்கை.
படித்ததெல் லாமுன் சித்தப் படிசெயும் பணிவே யெந்தாய் !
தடித்தகா மாதிப் பேய்கள், சங்கடஞ் செய்யா துன்றன்
அடித்திரு மலரை நெஞ்சில் அனுதினம் வழிபட் டேனே !

அடக்கரும் புலனை வென்றாய்..அருந்தவ முனிவர் தேவர்
கடக்கரும் வெய்ய காமக் கடலினைக் கடந்தாய் ; உன்னைத்
தொடத்தகுந் தூய தன்மை தொண்டுடன் அளித்தாய்; ஞானப்
படகென வந்து நானும் பவக்கடல் கடக்கச் செய்தாய் !

வென்றனை மனத்தை ; அன்பு வெறியெழத் தாயைக் கூவி
நன்றவள் அருளைப் பெற்றாய் ; ஞானமா மழைபொழிந்தாய்..
குன்றொளிர் விளக்கே, காளி கோயிலின் குருவே, பாரில்
என்றுமுன் சக்தி யோங்கி யிலகுக புதிய வாழ்வே !

பரமஹம்ஸர் வணக்கம்

இத்தகை அன்பு செய்யும் இனியநன் மனைவி தன்னை,
முத்தனும் பரம ஹம்ஸன், முன்அவ தரித்து நிற்கும்
சத்திதாய் என்று வாசச் சந்தனம், பூக்கள் கொண்டு
பத்தியாய்ப் பூசை செய்து, பரமவா னந்த னுனன் !

மாதவம் நீயே; சொல்லு மந்திரம் நீயே ; யோக
சாதனம் நீயே; தெய்வ சக்தியு நீயே; ஆத்ம
போதமு நீயே; சுத்த போகமு நீயே; ஜோதி
நாதமு நீயே; உன்னை நம்பினேன் ஞானத் தாயே !

தேவியே வணக்கம் ; மூலத் தீயைமே லேற்றி யென்றன்
ஆவியே ரின்பத் தேனை அருந்திடச் செய்யும் வீறு
மேவிய சுத்த சக்தி வெள்ளமே, கள்ள மின்றிப்
பூவடி மலரைப் பற்றித் தியானித்தேன் புனித வாழ்வே !

ஆலயத் திருக்கு மன்னை, அடியனைப் பெற்ற அன்னை,
ஞாலத்தில் ஆடும் அன்னை, ஞானத்தைத் தூண்டும் அன்னை,
காலத்தை யாளும் அன்னை, கருணைபூத் தன்பே யான
கோலத்தைக் கொண்டு யோக சித்தியைக் கொடுத்தா ளின்றே !

தீயநெஞ் சுடனே தீண்டத் தீமையே யாகும் ; என்றுந்
தூயநெஞ் சுடனே மாதைத் தொழத்தொழத் தூய்மை யாகும்.
பேய்மதக் காமம் போற்றிற் பேயெனத் துயரஞ் செய்யும் ;
தாயெனத் தியானஞ் செய்யச் சச்சிதா னந்த மாமே !

தாரத்தைத் தியான யோக தாரையென் ருக்கி மூலா
தாரத்தீ உச்சிக் கேற்றி ஆனந்த ஞான வள்ளல்,
காரொத்த மடமை நீங்கிக் காசினி வாழ ஞான
தீரத்தி னாலே நாளுந் திருவுப தேசஞ் செய்தான்..

உபதேசம்

வாருங்கள் விரைந்து ஞான மைந்தர்காள் ! அருட் பணிக்குச்
சேருங்கள் ! கவலை தீரத் திவ்விய மருந்திங் குண்டு..
வாருங்கள் அன்புச் சேய்காள்! வாரியென் அறிவுத் தேனைத்
தாருங்கள் உலகிற் கென்றே சக்திமான் அழைத்தான் மாதோ !

வந்தனர் அழைப்பைக் கேட்டு மஹா சக்தி அருளே யிங்கு
தந்த மெய்ப் புதல்வர் அன்புத் தங்கமே யாம்வி வேகா
னந்தர், பிரம்மா னந்தர், சாரதா னந்தர் இன்னோர் ;
மந்திர வாக்கினாலே மஹாகுரு வுபதே சித்தான் :

தாயின் அன்பும், சேயின் எளிமையும்,
பூவின் மகிழ்வும் புலரியின் அமைதியும்,
நீர்க்குட நங்கை நேரிய நினைவும்,
பார்க்கிறை யான பரமா தருவாய் !..
ஒருமின் சக்தி உலப்பறு விளக்காம் ;
ஒருபர சக்தியே உயிர்க்குயி ராமே—
மண்ணொன் றேயாம் ; மட்குடம் பலவாம் ;
பொன்னொன் றேயாம் ; பொற்கலன் பலவாம்.
உலையா உயிர்களும், உலகும், வாழ்வும்,
அலையும் கடலும் அனைத்தென் றறிவாய்.
பட்டணம் சேரப் பாதை பலவாம்,
உட்பொருள் ஒன்றை உறுவழி பலவாம்.
பகல்நட் சத்திரம் பார்வைக் கில்லை.
அகத்திரைக் கில்லை ஆண்டவன் காட்சியே.
எண்ணெ யின்றேல் எரிவிளக் கென்னும் ?
மண்ணுயிர் ஈசனை மறந்தால் என்னும் ?
ஒன்றிலாச் சுன்னம் ஒருமதிப் பாமோ ?
இன்றேல் இறைவன் இகசுக மென்னே ?
அரசன் பிரதிநிதி அனுப்பி யாளுவான்,
ஆண்டவன் குருவை அனுப்பிக் காப்பான்.
உண்டார்க் கேகற் கண்டு சுவைக்கும் ;
கண்டா ருக்கே கடவு ளின்பமாம்.
தேன்மலர் தேடித் தேனீ வருமே;
ஞானியைத் தேடி நல்லோர் வருவரே.

தூணைப் பிடித்துச் சுற்றும் பிள்ளைபோல்,
மாணிறை பற்றி மண்ணகத் தாடு.
பலாப்பிசின் எண்ணெய்ப் பதத்திலொட் டாது,
உலகிருள் இறைவனை உன்னிலொட் டாதே.
தொளையெண் ணாதே ; தோசையை உண்ணு;
சளசளக் காதே ; சாதனம் பண்ணு..
பக்கிரி கேட்பதோர் பைசாப் பிச்சை ;
பாச்சா கேட்பது பலபைப் பிச்சை.
கரியினை நாய்கள் கண்டு குரைப்பதே
பெரியரை உலகோர் பரிகா சிப்பதாம்.
கணவனும் சுற்றமும் கணித்து நடக்கும்
மணமகள் போலே மதங்களைப் போற்று.
யானைகண் டோமெனும் அந்தகர் போலே,
தானே தனதே எனத்தருக் காடேல்.
நீரிலே படகு படகிலே நீரோ ?
பாரிலே ஞானி ஞானியுட் பாரோ ?
வீசுங் காற்றில் விசிறி வேண்டுமோ ?
தேசுறு பொன்னைத் தேய்க்க வேண்டுமோ ?
அடங்கிய ஞானி சடங்குகள் வேண்டான்.
ஆழ வெட்டினால் அகப்படும் ஊற்று.
மேகப் பற்றுபோல் தேகப் பற்றும்
சொரியச் சுகமாம் பின்னே துயராம்.
பேரா சைக்கிவ் வூர்கா ணாது ;
பாரா சைக்குப் பணங் காணாதே.
பாலில் வெண்ணெயும், தயிரில் வெண்ணெயும்,
போல்வர் பாசரும் பற்றறு புலவரும்.
விழித்த வீட்டிலே திருடன் மேவான் ;
விழித்த மனதில் விழைவு வராது.
தூண்டு கோலும் துருத்தியும் போலே
சான்றவர் நேசம் சக்தியை வளர்க்கும்.
உரிக்க உரிக்க உள்ளி தோலே ;
விரிக்க விரிக்க வெறுமையே மாயம்.
மின்மினி யைவிட மீன்கள் ; சந்திரன்;
மீன்களைக் காட்டிலும் சூரியன் வெளிச்சம்
திங்களைக் காட்டிலும் பொங்கிடும் ஒளியே..
எங்கள தேயென் றிறுமாக் காதீர்.
கடிக்கா விடினும் காரமாய்ச் சீறினால்
அடிக்குத் தப்பலாம் அஞ்சும் பாம்பே !
தாயார் அழைக்கத் தாவி வந்திடும்

சேய்போல் ஈசனைச் சேர ஓடிவா !
இளைய மூங்கிலே வளைவ தெளிதாம்,
முதுவேய் வளைத்தால் முறிந்து போகும்..
இளங்கிளி தனக்கே உளங்குளிர் பேச்சாம்.
அதுபோல் இளமையில் அறிவுநன் றேறும்.
இரசக்கண் ணாடி நிசமுகங் காட்டும்,
வசமுள தூய மனம்அருள் காட்டும்.
உள்ளே தேடி உள்ளதைக் கண்டால்,
உள்ளமும் அதுவே, உலகமும் அதுவே..
உன்னை நீயறி, உன்னையே பற்று
பின்னே உலகைப் பிழையிலா தறிவாய்...

இன்னியற் கதைக ளாலும், எளிதறி உவமை யாலும்,
நன்னய மொழிக ளாலும் நகைச்சுவை ததும்பப் பேசி,
தன்னுளே ஞான சக்தி தந்ததை அளந்த ளந்தே
மன்னுயி ருலகுக் கீந்தான் மகாதவ யோக சித்தன்..

சேய்களுந் தெரிந்து கொள்ளுந் தெளிவுடன் எளிதாய்ப் பேசி ;
வாய்மனங் கடந்த சுத்த வத்துவின் இயல்பு காட்டி,
நோய்மன மடக்கி, யந்த நுண்பொரு ளறியச் செய்து,
சேய்களைப் பரம ஞான தீரர்க ளாக்கி னனே..

“ வேதமே வடிவங் கொண்டு விரும்பிநாம் உய்ய வேண்டிப்
போதனை செய்த” தென்பார் ; “ புதுமையாய்ப் பழைய ஞானம்
ஈதலில் இவன்போ லில்லை ” என்னுவார், சீடர் “ அன்புச்
சோதியே சுடரே” யென்று தொழுதடி பணிந்து நிற்பார்.

பேய்மதக் காமக் கள்வர், பித்தர்கள், குடியர் ஆன்ம
நேயத்தை யறியார், தெய்வ நிந்தைசெய் அகந்தை யாளர்,
தாயினுங் கருணை மிக்க தயாபரன் அன்பி னாலே,
தூயவ ராகி யுண்மைத் தொண்டுகள் செய்தா ரம்மா !

ஆறுகள் எல்லாஞ் சேரும் அலைகடல் போலே பிரம்மம்
வேறுவே றுகத் தோன்றும் விரிமத மதிலே சேரும்;
நீருடன் பனியைப் போல நிர்க்குண சகுண பேதம்..
நாருடன் மணிபோ லேநா னவகை யுலக மாமே !

உள்ளிபோல் உலகம் ; ஆடி உறுதுகள் போலு மாயை
கிள்ளைபோல் நெஞ்சம் ; ஈசன் கிளர்ந்தெழுங் கற்ப கம்போல்
உள்ளுற வூன்றி ஆசா பாசத்தை உதறித் தள்ளிக்
கள்ளமில் அன்பு செய்வார் கடவுளைக் காணுவாரே

7. விவேகானந்தப் படலம்

இல்லறத் துறவி யாகும் இந்தமா முனியின் சீடர்
பல்லருள் மணிகளுள்ளே நரேந்திரன் பரிதி போல்வான்..
எல்லையில் இசைகள் பெற்றான் என்றலும் சுத்தன் ஆங்கே
"சொல்லுக எந்தாய் அந்தச் சுடர்மணி சரிதை" யென்றான்..

கங்கையணி சிவனருளால் கல்கத்தா தத்தர்குல மணியாய் வந்த
வங்கமணி, நல்லடியார் சங்கமணி, வரம்பெற்ற வேத ஞானச்
சிங்கமணி, பரம ஹம்ஸச் சீடர்மணி, நவபார தத்தின் வீரத்
தங்கமணி யானவிவேகானந்தத் தவமணியைச்சிந்தைசெய்வாம்!.

பாரின்பக் கலைபயின்றும் படர்கவலைக் கடல்கடக்கும் படகிலானய்ப்
" பேரின்பப் பெருக்கான பிரமத்தை நேராகப் பிறங்கக் காட்டி,
யாரின்பமளித்திடுவார் "எனயாங்கும்பரபரப்பாய் அலைந்தலைந்து,
நேரின்பப்பொருள்கண்டநிறையின்பஹம்ஸனடிநின்றான்மாதோ!

" அருவான கடவுளைநீர் அறிவீரோ? காட்டியெனக் கருளுவீரோ?
திருவாரும்பெரியாரே?"எனக்கேட்குந்தீரனைமுன் கண்டு,"ஞானக்
கருவான கடவுளைநான்கண்ணாரக்காண்கின்றேன்;காட்டவல்லேன்;
உருவான திருவருளால்உணர்வாம்"என்றுரைத்தானவ்வுண்மை
கண்டோன்.

" தண்ணீரில் மூழ்கியவன் மூச்சுக்குத் தவிப்பதுபோல் ஆர்வங்
கொண்டே
கண்ணீரில் நீந்தியருட் கரைசேரக் காதலுறும் அன்ப ருள்ளம்
கண்ணாடி போலாகி மனவாக்கைக் கடந்ததொரு கடவுள்காட்டும் ;
உண்ணாடிப்பா"ரென்றுள்ளுணர்வெழுப்பிப்பரமகுரு வுதவினனே
20

கல்லெல்லாம்பிரமமயம்காடெல்லாம்பிரமமயம்;கண்ணாற்காணும்
புல்லெல்லாம் பூவெல்லாம் பூச்சிபுழு விலங்கெல்லாம் புமான்க
ளெல்லாம்,
சொல்லெல்லாம், செயலெல்லாம்,சொற்கடந்த நினைப்பெல்லாம்,
சொரூபமான
எல்லெல்லாம் பிரமமயம்எங்கெங்கும்பிரமமயம் என்றான்சீடன்!

பணியாலும் தவத்தாலுந் தியானத்தின் பயனாலும் பக்தியாலும்
தணியாத பேரின்பத் தாகத்தைத் தணித்தான்ம சித்திபெற்ற,
மணியான நரேந்திரனை மாசற்ற குருநாதன் தனது சக்திக்
கணியாக்கி, அன்பாக்கி, அருளூற்றி ஆனந்த னாக்கினனே !

வழக்கறிஞ ராந்தந்தை மரணத்தின்பின்குடும்பவருத்தத்தாலே,
உழக்குற்றுப்பசிகவலைஅமைதியினைஉண்ணும்போதருமைச்சீடன்,
"இழக்குற்ற ஒளியென்னக் கிளர்ந்தகுரு தேவாவென் கேடு தீரப்
பழக்குற்ற உன்வாக்காற் பரசக்தி பரிந்தருளவேண்"டென்றனே!

"இவ்வாறு கேட்குமியல்பெனக்கில்லை நீயேகேள்"என்னஹம்ஸன்
முவ்வாறு ஐயகாளி சந்நிதியில் முழந்தாளைப் பணிந்து தன்னை
எவ்வாறுவறுமையிடர் செய்கிறதென்றியம்பிடவுமியலா ஞானச்
செவ்வாயி னின்றந்தச் சிந்தனையேவரவில்லைசெய்ததென்னே!—

"அன்பினை மிகவுந் தாராய் ! அறிவொளி தூண்டி மாயத்
துன்பினைத் தீராய் ; சக்தி, சுதந்தரச் செல்வ மீவாய் !
இன்பத்தி லின்பமாகும் இடையருத் தியான மீவாய் ;
உன்பர மென்று வாழும் உறுதியை நல்கு வாயே !"

என்னையா னறிந்து மண்ணில் இலகுயிர்க் குயிராய் நிற்கும்
உன்னையா னறிந்துன் னுடல் உலகையா னறிந்துன் சக்தி
தன்னையான் அடைந்துன் இச்சை தாங்கிடுந் தொண்ட னாகி
மன்னுயிர்க் குதவி செய்யும் வாழ்வைநீ யருளு வாயே !

கற்பக நிழலைச் சார்ந்தும், காஞ்சிரங் காய்கேட் பாரோ ?
அற்பமாங் கீரை வேண்டி அரசனை யிறைஞ்சு வாரோ ?
கற்பனைச் செல்வம் வேண்டிக் கடவுளைத் தொடரு வாரோ
சிற்பரஞ் சோதி யின்பஞ் செறிந்திட நோற்குந் தூயர் ?..

உட்கினேன் வறுமையாலே என்னினும், உன்னை வேண்ட
வெட்கினேன்; குடும்ப மெல்லாம் விடுத்தனன் உனக்கே யென்று
மட்பொருள் வெறுத்த ஞான மணியினைப் பார்த்து நாதன்
"நட்புள தெய்வத் தொண்டர் நலிந்திட மாட்டார் " என்றான்.

"மற்றென்றும் வேண்டேன்உன் மனமே என்றன்
மனமாகி வாழ்ந்திடவே மனது வைத்தேன்.
பற்றென்றும் வேண்டேனிப் பாரில் வந்த
பயனெல்லாம் பரம்பொருளை யறிந்து தூய
நற்றெண்டும், நல்லடியார் உறவும் என்றே
நானறிந்து கொண்டேனிந் நாளில் ஐயா,
முற்றின்பப் பெருக்கே, யென் மோகந் தீர
முன்னிற்குங் குருவேயுன் னிருதாள் போற்றி !....."

என்றி றைஞ்சிடும் அன்பன் இதயத்தில்,
வன்ற வக்குரு சக்தியை வார்த்"தினி
ஒன்று மேகுறை யில்லை விவேகத்தால்
வென்று லகை விளங்"கெனக் கூறினான்..

மஹா சமாதி

முத்தி பெற்ற முனிவரன் மெய்த்தவர்
சித்தி பெற்ற திருத்தலஞ் சுற்றினான் ;
பத்தி பற்றிடப் பாடினன் ஆடினான்.
சக்தி பற்றிடச் சாதனம் ஓதினான்.

தாக மென்றவர் தாகந் தணித்தனன் ;
மேகம் போலவே மெய்யரு ளூற்றினான்.
தேகந் தன்னை மறந்திடுந் தீமையால்,
வேக மாகப் பிணியும் விளைந்ததே..

தொண்டர் தாகந் துடைத்திடும் பேரன்புக்
கொண்ட லான குருவின் உடலுக்கே
கண்ட மாலை கடுமையாய் வந்ததைக்
கண்ட சீடர் கலங்கித் தவித்தனர்.

கருத்து முற்றுங் கடவுளுக் கீந்தவன்
மருத்து வன்கடு வாளுறக் கீறினும்
வருத்த மின்றி, வருபவர் யாவர்க்குந்
திருத்த மாகிய செம்மொழி செப்புவான்.

தன்ன தன்புத் தவமணி மைந்தரை
முன்னி றுத்தி"என் சக்தியுன் மூலமே..
மன்னு லகு மகிழப் பணி செயும்..
மின்னுட லினி வீழு"மென் றோதினான்..

தார மாகிய சாரதைக் கோர்பகல்
ஈர அன்புடன் " என்றவ சக்தியே..
கோர நோயுடல் கொண்டுமண் ணாயினேன் ?
நேரி லுன்னுள் நிலைத்திருப் பே"னென்றான்..

" நம்பு ; நல்ல நரேந்திரச் செல்வனே..
என்பு தோலுடல் இன்றிறந் தாலுமே..
உன்பொன் னுள்ளத்தில் ஊற்றியென் சக்தியை
அன்ப ருக்கருள் செய்குவல் யா"னென்றான்..

தனி யிருத்தித் தனிப்பெருஞ் சீடனை
" இனி யென் சக்தி யிருப்பதுன் னுள் "ளென
நனி யதனை முழுவது நல்கியே..
" புனித, பூமியில் அற்புதஞ் செய் " யென்றான்..

பெற்றவர் பேணாக் காதல் பேணிய ஞானத் தந்தை..
நற்றவச் சீட ருக்குத் தன்னையே நல்கி, " மீண்டும்
உற்றிந்த உலகைக் காப்பேன் ஓம்சக்தி, காளி " யென்றே..
பற்றிய தேகந் தன்னைப் பற்றற உதறிச் சென்றான்..

" தத்துவ விதையை நட்டுச் சமரசக் கங்கை பாய்ச்சி,
சக்தியின் ஊட்டந் தந்து, தன்னலக் களையை வாங்கி,
நித்தியம் அன்பு பூத்து, நின்மல ஞான மான
முத்தியைப் பழுக்க வைத்த முதல்வனே போற்றி போற்றி !

சூழ்மத நதிக ளுண்ட தூயமெய்க் கடலே போற்றி !
ஆழ்ந்துளே அறிவின் முத்தை அள்ளிநீ யளித்தாய் போற்றி !
ஊழ்வினைப் பாச மெல்லாம் உதறிய முத்தா போற்றி !
வாழ்க நீ, அன்பு வள்ளால் வரகுரு நாதா ! போற்றி !"

ஆசியைப் பெற்ற சீடர் அன்பினுல் உருகி யாங்கே
காசிபூர் மயானந் தன்னிற் கடன்முறை நடத்தி, வந்து
மாசிலான் என்பின்மேற்ச மாதியொன் றமைத்து, நாளும்
பூசித்தார், பாரநாகூர் வீட்டிலப் புனித ரேற்றை.

அடியவர் இராமக்ருஷ்ண சங்கமொன் றமைத்து நாளும்,
மிடிதுயர் பொறுத்து ஞான மேன்மைக்கே தியானஞ் செய்து,
கடியவை ராக்கி யத்தாற் கலங்கறு பக்தி செய்து,
துடிமன மடக்கித் தூய துறவறஞ் சாதித் தாரே !

குமரி முனையில் தியானம்

தலைமைவைத் தன்பர் சங்கம் தவசித்தி யடையச் செய்து,
தலமுயர் பரத நாட்டைத் தனியனுய்ச் சுற்றிப் பார்த்து,
மலையினு மாண்பு மிக்க மாசிலா விவேகா னந்தன்
அலைகடற் குமரி முன்னே தியானத்தில் ஆழ்ந்தான் மாதோ! 120

பாரின்பப் பசுஞ்செல்வப் பயனளிக்கும் பாரதமே, பரமஞானப்
பேரின்ப கனிபழுக்கும்பெரியதவப்பொழிலேயுன்முகத்திலேநான்
ஓரின்பங் காணுமல் வறுமையிருளேகண்டென்உளந்துடித்தேன்!
நேரின்ப ஒளிதுலக்கி நின்பெருமைநிலைநாட்ட நினைக்கின் றேனே!

துணிவான துறவளிக்குஞ் சுதந்தரத்தைஉனதுசுடர்தூண்டுகின்ற
பணிவான திருப்பணிக்குப்பரிவாக நிவேதித்தேன்;பாசமெல்லாம்
அணியாகச் சூட்டியுன தன்பான அருளாசி யடைந்த போதே,
தணியாத மனத்தாகந் தணிந்தெனது சன்மசா பல்ய மாமே !

உருவாக வந்தென்னை உய்வித்த ஒப்பில்லாக் கருணை யாளன்,
குருநாதன் அருளாலே குமரித்தாய் முன்கொண்ட விரதம்வெற்றி
தருமுண்மை ; கடல்கடந்து தனம்பொழியு வெண்ணுடு சார்ந்து செல்வத்
திருமொண்டு வந்துனது குறைதீரச் செயல்புரியுந் திட்ப மீவாய்.

சிக்காகோ செல்லல்

சிந்தித்த செயல்கூடச் சிக்காகோ சர்வமத சங்கஞ் செல்லச்
செந்தமிழர் மணிகளுடன் சேதுபதி மஹராசன் செல்வ மீந்தான்.
வந்தித்துச் சாரதையைப் பாரதியை வீரமுனி வங்க மேறி..
சொந்தத்தாய் புகழோங்கச் சுகபோகத் தொழிலோங்கு நாடு சேர்ந்தான்.

"கடல்கடந் துற்றேன் உன்றன் கருணையாற் கடமை காக்கத்
திடமுள துணைநீ யன்புத் தெய்வமே, அனாதை யிங்கே
இடமிலேன், பணமு மில்லேன் அறிமுகம் எவரும் இல்லேன்..
அடியனை நடத்தாய் தேவா அனைத்துமுன் பாரம்" என்றான்

செல்வர்வாழ் சிக்காக் கோவில் செல்வர்கள் இனிது கூட்டும்,
பல்மதச் சங்க மேடை பாரதத் துறவி யேறத்
தொல்லைகள் முளைத்த தெல்லாம் திருவருள் துணையினாலே,
வெல்ல ஓர் †மாது வந்தாள் விவேகனும் வெற்றி கொண்டான்..

சர்வமத சபைப் பிரசங்கம்

சீரதிருந் திருச்சபையில் வேதாந்தச் சிங்கமன்று பொழிந்த செஞ்சொல்,
ஆரமுதக் கடல்போலே அவையதிரக் கரமதிர "ஹாஹா" வென்றே
பேரதிரப் புகழதிரச் சமரஸத்தின் பண்பதிரப் பெருமை பெற்றே,
ஊரதிரப் பாரதத்தின் ஒளியதிர, உலகதிர ஓங்கிற் றன்றே !

சலநிதியி லேநதிகள்சலசலத்துப்பாய்ந்தெல்லாஞ் சமதையாகும்,
உலகமதமெல்லாமும் உள்ளுண்மை ஒன்றினிலே ஒன்றிநிற்கும்
இலகுபொதுப்பொருளுக்குச் சாதியிலையினமில்லை இதனைஎண்ணிக்
கலகமற ஒருகுலமாய்க் கலந்தினிதுகருத்தொன்றிவாழுவோமே.

மெத்தவுல காயதத்தின் மினுக்கினிலே மோகித்த மேலைநாடாம்
வித்தமிகும் அமெரிக்கா, யுத்தமிகும்ஐரோப்பா வியக்கவெங்கும்,
அத்துவிதப் பொருள்காட்டி அருள்காட்டி, ஆன்மசுதந் தரத்தை நாட்டி,
சுத்தமிகு வெள்ளன்பர் தொடரவே தாய்நாட்டின் கரையைத் தொட்டான் !
புதுமையிதுபுதுமையெனப்புலவோர்கள்போற்றிசெயச்சேதுநாடன்
இதுபெரிய சம்பவமென் றெழுப்பியதோர் வெற்றித்தூண் முன்னே நின்று
முதுகடலைக் கடந்தொலித்த முனிஞான முரசென்னும் விவேகானந்தன்,
பொதுநலஞ்செய் யோகத்தைப் புரிந்திடவே பாரதரை அழைத்தான் மாதோ !

பாம்பனில் விவேகானந்தர் பிரசங்கம்

"பாரதத் தாயே ஞானப் பரிதியே எழுந்து நின்றுன்
பூரணக் கதிரை யெங்கும் புண்ணியம் பொலிய வீசாய் !
காரிருள் இன்றிக் கட்டுங் கவலையும் இன்றித் தெய்வ
வீரரின் அரசி யேயுன் வெற்றியால் உலகம் வாழ்க !

† Mrs. George Hale

இமயம்போல் எழுந்து நில்லாய் ! இணையிலாத் தாயே போற்றி,
சமயங்கள் அனைத்தும் ஆனாய், சாத்திரம் எல்லாந் தந்தாய்.
எமனையும் வெல்ல வல்லாய், இனியிந்த உலகுக் கெல்லாம்,
அமரவாழ் வருள வாராய் ஆத்தும சக்தி நீயே..

மண்மிசை யுனது மக்கள், வறுமையால் மடமை நோயால்,
புண்ணுழன் றடிமைத் தீயிற் புழுவெனத் துடிக்க லாமோ ?
உண்ணநல் லுணவு தாராய், உயர்நலக் கல்வி தாராய் !
கண்ணினீர் பெருகு மம்மா கதியிலார் தம்மைக் கண்டால் !

தங்குயிர் உலக மெல்லாம் தாமெனக் கண்ட மேலோர்
உங்களுக் குள்ளே யுள்ள உண்மையே கடவுள் என்றார்.
இங்கினிச் சண்டை வேண்டாம். இந்தியர் ஆத்ம ஞானச்
சிங்கம்போல் எழுந்து வாரீர் பொதுஜன சேவை செய்வோம் !

உடலினை உறுதி செய்வீர் ! உருக்கெனத் தசைவ ளர்ப்பீர் !
கடமையைக் காப்பீர், கஞ்சிக் கலயமும் அறிவும் ஏந்தி,
மடமையும் பசியுந் தீர்ப்பீர். மாண்புற வுழைப்பீர் ; நாளும்
திடமனங் கொண்டு வீர தீரராய் வாழ்வீர் மாதோ !

அன்னநல் லுபதே சங்கள் அருளிவி வேகா னந்தன்,
சென்னையில் மடம மைத்துச் சீடரை மிகவுங் கூட்டித்
தன்னறி வுடனே சேவா தருமமும் உணர்த்தி ஹம்ஸன்
பொன்னடி பணிந்தான் வாழும் புண்ணியப் பலனு மீந்தே..

"ஒன்றுநீ யுண்மை யென்னில் ஒளிந்தினி யாடல் ஏனோ,
இன்றுனைக் காட்டேல் வாளால் என்னையே பலிகொ டுப்பேன்,
என்றுளத் தார்வம் பொங்கி இறைவியைக் கதறிக் கண்ட
வன்றவக்கொழுந்தே,என்றன்வணக்கத்தை யுனக்கே தந்தேன்!

"என்செயல் எதுவும் இல்லை. ஏழையேன் உனது மைந்தன்,
உன்செயல் புரிய வந்தேன் ; பலனெல்லாம் உனக்கே எந்தாய் !
இன்சொலோ டாசி கூறி அனுப்பினை என்னை அன்னை..
நின்னருள் போற்றி தேவி, சாரதா நிமல சக்தி !

தன்னைத்தா னறிந்து பொங்கும் சச்சிதா னந்த ஊற்றில்
என்னைத்தான் ஆட்டி, உன்னை என்னுளே வைத்தாய் போற்றி!
பொன்னைத்தான்மதியாய் தெய்வப்பொருளையேமதித்தாய்எங்கள்
அன்னையப் பனுமாய் வந்தாய் அருட்குரு நாதா போற்றி !"

உலகெலாம் குருவை ஓத ஓய்வறு தொண்டு செய்தே,
பலபல சங்கங் கண்டு, பாரிசை மிகச்சு மந்தே,
நலமுள குருவ ழைக்க நலியுடற் சுமையை நீத்துப்
பொலிவுறும் ஆத்மா வாகப் போயினன் அறிவா னந்தன்!

இத்தகைப் பெருமை யெல்லாம் இராமகி ருட்டி னன்செய்
சத்திசா தனத்தால் வந்த தன்மையை அறியக் காட்டி
முத்திமா முனிவன் சாந்தன், அதுசெயு முறையுங் கூறி,
அத்தின வுபதேசத்தை அத்துடன் முடித்தான் மன்னே !

"சத்திய ஞானுனந்த வெள்ளமாய்த் தழைத்தென் மீது
நித்தியக் கருணை பூண்ட நிமலசத் குருவே போற்றி,
இத்தினஞ் சொன்ன தெல்லாம் என்னுயிர்க் கின்ப" மென்றே
சுத்தனும் கௌரி தாதை துணையடி பணிந்து சென்றான்.. 208

8. ஊர் மகிழ் படலம்

சத்தியன்

"வெள்ளமும் விளைநிலப் பயிரும் போலவே,
உள்ளமும், உள்ளமும் ஒன்று கூடியே,
அள்ளமு தளித்திடும் அன்பு வாழ்க்கையைத்
தெள்ளுற வளர்ப்பது தெய்வக் காதலே !

எங்குல வுயிரெனும் இரவி மைந்தனின்,
மங்கல நாளிது.. மகிழ்மின் யாவரும் !
தங்கருத் தொன்றிய தகுதி யாளர்கள்,
பொங்குநற் புதுமணம் புரிந்து வாழ்மினே !

ஒருதனி மைந்தனுள் ளுவக்குஞ் சீரிய
திருமண நாளிது சிறக்க வேண்டியே,
இருபதி னுயிரம் இல்லம் நல்கினேன்..
பொருளற மின்பமும் பொருந்தி வாழவே..

சித்திமான்

நன்மண ஓலைகள் பறந்த நாடெலாம்..
பொன்னகர் பொலிந்தது போகநாடென
இன்னிசை எழுந்தன ; ஈகை யோங்கின.
மன்னுயிர் வளம்பெற மகிழு நாளிதே !

பாரத முனிவர்

பக்குவப் பயிருக்குப் பருவ மாரிபோல்,
சுக்கிரன் புதன்குரு சூரியன் மிளிர்,
மிக்கநல் ஓரையில் மேவும் இல்லறம்,
மக்களுக் கினிதெனும் வாய்மை காண்பமால். 20

சத்தியன்

இல்லற வீரருக் கினிமை யாகிடும்
நல்லறத் தொழில்பல நாட்டு நாளிதே..
செல்வத்தைப் பயன்பெறச் செய்யு நாளிதே..
அல்லலைத் தீர்த்திடும் அமுத நாளிதே..

ஈதலின் பொருளையும், ஈகை யோங்கிய
காதலின் பொருளையும், காதலோங்கிய
மாதரின் பொருளையும், மாதர் சக்தியால்
ஆதகும் பொருளையும் அறிஞர் கூறுமின் !

வண்மையும் உண்மையும் வாய்ந்த மன்னவன்,
கண்ணெனு மைந்தனின் கடிம ணத்திலே,
எண்ணறு நல்வினை யியற்ற நின்றனன்..
கண்ணிய அமைச்சவை கைகொ டுக்கவே !

மறவினைப் பாம்பென மறைந்து சீறிடும்,
உறவுள கலிஞனின் ஒற்றுஞ் சூழ்ச்சியும்
புறமதில் வரம்பிலும் புகாது சேனையைத்
திறமுற வைத்தனன் சித்தி மந்திரி.

"தங்குல கோங்குக ! தருமம் ஓங்குக !
நங்குல மோங்குக ! நன்மை யோங்குக !
பொங்குக ஐயம் ! அருள் பொலிகவே !" யென
மங்கள பேரிகை மழையி னார்த்ததே !

உளங்குளிர் செய்தியைக் கேட்டவ் வூரினர்
கிளர்ந்தெழுந் திறைவனின் கீர்த்தி யோதியே,
இளந்திரு வரசனுக் கின்ப மோங்கவே,
வளம்பெறு கோயிலில் வணக்கஞ் செய்தனர்.

மனைதொறு மணவினை வந்த தேயெனப்
பனைகளை நட்டனர் பந்தல் வேய்ந்தனர்.
புனைமல ரணிமிகப் பொலியக் கோத்தனர்,
நனைமலர்க் கொம்புகள் செழிக்க நாட்டினர்.

சீரணி நன்னகர்த் தெருக்க ளெங்குமே
தோரணங் கட்டினர் கொடி துலக்கினர்.
பூரண கும்பங்கள் பொலிய வைத்தனர் ;
வாரண முலவினர் வரிசை யாகவே !

அதிர்முர சொலியுடன் அடிமிதித்துப் போர்க்
குதிரைகள், மண்ணிலங் குலுங்கத் தாவின..
மதில்களைச் சுற்றிலு மல்லர் நின்றனர்
சதிவினை வாடையுஞ் சார்ந்தி டாமலே..

நீதிநன் னிருபனை நிமலர் வாழ்த்தினர்,
வேதங்கள் அவரவர் விதி முறைப்படி
ஓதினர் ; சமரஸ வுள்ளங் கொண்டவர்,
வீதியில் வித்தகர் சொல் விளக்கினர்.

அருவியைப் போலிசை யார்த்து மன்னவர்,
பெருகிய பரிசனஞ் சூழப் பெட்புடன்,
அருமணித் திரளுடன் அணுகி வந்தனர்,
வருகவென் றேற்றிட மன்னர் மன்னனே.

வங்களர், கேரளர், வடுகர், கன்னடர்,
*அங்கியர், மாரதர், அங்கர், கூர்ச்சரர்,
‡சிங்கர்செந் தமிழர்கள் சித்தி மாபுரந்
தங்கினர் ஒருகுலத் தனய ரென்னவே !

சாதியுஞ் சமயமுஞ் சாத்தி ரங்களின்
பேதமும் பிறகிடப் பிறந்த யாவரும்,
தீதறும் பொதுநலச் சேவை தன்னிலே,
கோதற ஒன்றெனுங் கொள்கை பற்றினர்.

வகைவகை நடையுடை வாய்ந்த நாட்டினர்,
வகைவகை மொழியினர், மனமொத் தன்பினுல்,
வகைவகை யாகிய வரிசை யேந்தியே,
தொகை தொகை யாகவே தோன்றி னர்கொலோ !

வந்தவர் வந்தவர் மனம கிழ்ந்திடச்
சிந்தையிற் களிமிகு சித்தி நண்பர்கள்,
" வந்தனம், வரு"கென வரவு கூறித்தம்
சுந்தர மாளிகை துலங்க ஏற்றனர்.

சமபந்தி விருந்துகள், சந்தப் பூச்சுகள்,
கமகம கமவெனுங் கதம்ப மாலைகள்,
அமரரும் விரும்பிடும் அமுத கானங்கள்,
விமரிசை நடனங்கள் வீடு தோறுமே !

பைந்தமிழ்ச் செல்வர்கள், பாசங் கொண்டுதம்
சொந்தமாம் குலக்கொடி,—சுத்த கௌரியை
வந்தனை யன்புடன் வாழ்த்திப் போற்றியே
ஐந்தமிழ் வளங்களை அன்பி னீந்தனர்.

---

* *ராஜபுத்திரர், அக்கினிகுல வீரர்*

‡ *சீக்கியர்*

நவமணி வில்லிட ,நயன ராசிகள்
அவனியின் அழகினை அதிச யித்திடத்
" தவம்பெற்ற தவமணி சாந்த கௌரியும்
சிவம்பெற்ற சுத்தனுந் திகழ்க நீ"டென்றுர்..

முறைமுறை அவரவர் முந்து வந்துதம்
இறைவனை இளந்திரு வேந்தை ஏத்தியே
நிறைநலங் கூறினர் ; நீள் வரிசையாய்க்
குறையறு செல்வங்கள் குவித்து நின்றனர்.

விண்ணகம் இதுவென விளங்கும் பான்மையாய்க்
கண்ணகங் களித்திடக் கவின்செய் நன்னகர்,
எண்ணறு மின்பமுற் றிருக்கும் இந்தநாள்,
பண்ணவன் இல்லறம் பகரத் தோன்றினன்..

அலையெனக் கூடிய அன்பர் கூட்டமும்,
தலைபெறு சுத்தனுஞ் சார்ந்து கேட்கவே,
நிலைபெறும் இல்லற நெறியைச் செப்பினன்
கலைபெறு மன்றினிற் கனலு மாமுனி.

9. இல்லற வொழுக்கப் படலம்

(பாரத முனிவர் இல்லறம் எப்படி நடத்துவது என்பதைச் சொல்லுதல்)

இல்லறம்

இல்லற மாகும் இயலறஞ் சொல்ல
நல்லவாக் கருளுக தில்லைச் சிவனே !
அன்புறு பெண்ணும் அறிவொளிர் ஆணும்
பண்புறக் கூடிப் பழுதற வாழும்
இல்லற வாழ்வே இப்புவி வாழ்வாம்.
இல்லற மின்றி இல்லையிப் புவியே !

மனை

அகில மெல்லாம் ஆண்பெண் குடித்தனம்,
மனிதன் அன்பு மனைவியைப் பொருந்தி,
மக்களாய் விரிந்து, மன்னுயிர் அளாவி,
விளைநிலஞ் செழிக்கக் கிளைவிரி ஆறுபோல்,
பலதுறைப் பணியாற் பாரினுக் குதவிப்
பாருயிர் வடிவாம் பரமனை நாடி,
மாண்புறச் செய்வது மனைவாழ் வாமே.
வீட்டின் விரிவே நாட்டின் விரிவாம்.

காதல்

ஊடும் பாவும் ஆடையா வதுபோல்,
காத லிருவர் கண்ணுங் கருத்தும்
கூடி வாழவே வீடு வாழுமே !
ஆதி சக்தி, அகிலம் வளரவே
காத லென்கிற கனலைத் தந்தாள்.
இயற்கைக் காதல் இன்பமே யாகும்.
மயக்குங் காமம் மனப்புய லாமே.
உள்ளுயிர்க் கலப்பின் உணர்வே காதலாம்.
அந்தக் காதல் ஆண்டவ னிடத்தில்
அமைந்து நின்றால் அருளின்ப மாமே.
மாணிக்க வாசகர் மாசறு காதலைச்
சிவனிடம் வைத்துச் சிவமய மானார்.
ஆண்டாள் காதலை அரங்க னிடமே
வைத்தவன் அருளை வாரி யணைந்தாள்.
இரண்டு கம்பிகள் இணைந்துமின் சாரந்
திரண்டு பரவுந் திறமே போல
ஆணின் அறிவும் அரிவையின் அன்பும்
பேணிக் கலந்து பெருகிய காதலால்,
அறம்பொரு ளின்பம் அடைவ தாகுமே.
ஆணிற் பெண்ணும் பெண்ணில் ஆணும்
பூணிற் பொன்போற் பொருந்துவ தாமே.

சதிபதி தத்துவம்

ஆணுட் சிவமும் பெண்ணுட் சக்தியும்
காணும் போதே காதல் இனிதாம்.
தேகங் கடந்த தேகியிற் கூடும்
யோகமே வாழ்வின் உட்பொரு ளாமே.
இதயக் குகையில் உதயக் கதிர்போல்
வதியும் தூய வாய்மையே நாமாம்.
அதுவே சக்தி யாகிய பெண்மை ;
அதுவே சுத்தமாம் ஆண்மையென் றறிவீர்.
உயிருக் கதுவே உள்ளுயி ராமே.
பயிருக் கதுவே பசப்பு மாமே !
உலகுயிர் அந்த ஒருயிர்ப் பன்மையே.
பலபல தோற்றம் பலவாம் ஒருமையே.
இந்த வுண்மையைச் சிந்தனை செய்தால்,
ஆண்பெண் ணுறவே ஆன்ம நேயமாம்.
ஆன்ம நேயம் அருட்கலப் பாமே.

பாரும் வளரும் பயிரும் போலே,
இருவரைக் காதல் இணைப்ப தாகுமே.
ஒருவரை ஒருவர் மருவிய காதலால்
இருவரும் பூரணம் எய்திட லாமே.
இவ்வுள் ளுண்மை இருவரும் அறிந்தால்,
பெண்ஆண் உறவு பெருமை பெறுமே.
ஆணுக் குப்பெண் அடிமை யில்லை ;
ஆணும் பெண்ணிற் கடிமை இல்லையே.
இருவரும் காதலால் ஒருவரே யாவார்.
இருவரின் ஒருமையே இல்லற வுண்மை.
இருவரின் இன்பமே இல்லறப் பெருக்கம்.
வள்ளுவர்க் கமைந்த வாசுகி போலே,
காந்திக் கமைந்த கஸ்தூரி போலே,
அருந்ததி வசிட்டருக் கமைந்தது போலே,
பரம ஹம்ஸரின் பத்தினி போலே,
காதலுங் கற்பும் கடவு ளுணர்வும்
பொதுநலப் பணியும் பொருந்திய வாழ்வே
சதிபதி யோக சாதன மாமே..

பெண்மையின் பெருமை

ஆணைப் பூரண மாக்கும் அருளே
உண்மைப் பெண்ணென் றுரைத்திட லாமே.
மாதெனக் காண்பது மகாசக்தி விளக்கம்,
அவளே வீட்டின் அரசியா வாளே
அவளே வாழ்வின் ஆனந்த மாமே.
அழகின் காந்தம், அன்பின் வசீகரம்,
சித்தங் குளிர முத்துத் திருநகை,
மயிலெனச் சாயல், குயிலெனப் பாட்டு,
கிளியெனப் பேச்சு, கிளர்ச்சி கொள்ளும்
அமுதச் செஞ்சொல் அளவிலாப் பொறுமை,
கணவனைப் பேணும் கற்பின் அற்புதம்,
அகமலர் மகிழ முகமலர்ப் பொலிவு,
கருத்தைப் பேசுங் கண்மலர்ப் பார்வை,
கவலை தீர்க்குங் கனிவாய் முத்தம்..
புலனுடன் மனமும் பூரித் துவக்கும்
அகப்புறப் புணர்ச்சி, ஆர்வங் கொண்ட
குழந்தைக ளாலே குலம்வளர் மாட்சி,
உரிய மணாளனைப் பிரியா நேயம்,
பெற்ற மக்களைப் பேணுங் கருணை—
ஆஹா, பெண்ணின் அருமையென் சொல்வேன் ! !

இல்லாள்

இல்லாள் வீட்டின் இலக்குமி யாவாள்.
வீட்டைத் தினமும் கூட்டி மெழுகி,
கோலம் போட்டுக் கொய்மலர் வைத்து,
பாத்திரம் பண்டம் பதவிசாய் அடுக்கி,
குறித்த இடத்திற் குறித்ததை வைத்து
ஆத்திரப் படாமல் அமைதி யாகத்
தேய்ப்பன தேய்த்துத் தோய்ப்பன தோய்த்தே,
உலர்த்துவ துலர்த்தி உடம்பை வளைத்து
வீட்டுக் காரியம் வியனுறச் செய்து,
குடங்குட மாக நடைநீர் சுமந்து
தீயை மூட்டித் திருத்துவ திருத்தி,
மூன்று வேளை முறையாய்ச் சமைத்து,
மக்களுங் கணவனு மகிழ்ந்திட ஊட்டுங்
காம தேனுவே கற்புள பெண்ணும்.
வெளியில் அலைந்து வேலை செய்து
சம்பா திக்கும் தன்னுயிர்த் தலைவனை,
அன்பாய்ப் போற்றி அருந்துயர் மாற்றி,
மனங் கனிந்த மங்கல வுரையால்
உள்ளந் தன்னை உருக்கும் பாட்டால்,
அழகு கொஞ்சும் அன்ன நடையால்,
நாணம் பூத்த நகைமுக நோக்கால்,
திருவிளக் கேற்றித் திரியைத் தூண்டி,
மனையின் வாழ்வு மங்கல மாகவே
சேய்களுங் கணவனுஞ் சேம முறவே,
கற்பகக் கையாற் கடவுளை வணங்கும்
உத்தமத் துணைவி பத்தினித் தெய்வமே.
மணாளனைத் தேடி வந்த விருந்தை
அறுசுவை யூட்டி அகமகிழ் விப்பாள் ;
வரவிற் கேற்ற வகைசெல விட்டுப்
பக்குவ மான சிக்கனம் பேணி,
மந்திரி போலத் தந்திர முரைப்பாள்.
இல்லறஞ் செழிக்க நல்லது செய்வாள்.
இல்லை என்னும் ஏழைக் கீவாள்.
பரிவு கொண்டு பசிப்பிணி தீர்ப்பாள்.
உற்றார் உறவினர் உடம்பு படுத்தால்,
பதறிச் சென்று பச்சிலை கொணர்ந்து,
கஷாயந் தந்து கட்டிக் காத்துத்
தொண்டு செய்வாள் ; அண்டையி லிருந்தே,

வருத்தந் தீர்க்கும் மருந்தே யாவாள்,
உயிராங் கணவனின் உடலாம் அவளே.
குறிப்பறிந் தொழுகுங் குலமக ளான
பெண்ணின் பெருமையைப் பேசப் போமோ !
மண்ணுக் கேற்ற மரத்தைப் போலப்
பெண்ணுக் கேற்ற பெருமையாம் வீடே.

ஆணின் பெருமை

ஆணின் பெருமை அளவில தாமே..
இல்லா ளுடனே இணங்கி வீட்டை
நடத்து கின்ற நாயகன் அவனே.
வாழ்வுப் பயிரின் வளநீர் அவனே.
வீட்டறங் காக்கும் வீரன் அவனே.
அகங்கோ ணுது முகங்கோ ணுது,
செய்கடன் அறிந்து செய்முறை செய்து,
சமய மறிந்து சாற்றுவ சாற்றி
ஊருக் குதவும் ஒருதொழி லாலே,
உண்ண வுடுக்க உழைத்துக் கொணர்ந்து,
மனைவி மக்களை மனமுறப் பேணி,
இன்முகங் காட்டி, இனியன சொல்லி
மனக்கசப் பின்றி மாண்புற நடந்து,
இங்கித மறிந்து நன்கட னுற்றி,
காத லெல்லாங் கருத்துற வைத்து,
கனவிலும் பிறமனை கருதா துள்ளம்
கொண்ட மனைவியே குலசக்தி யாகப்
போற்றுந் தீரனே புருஷனு வானே.
கற்பை இருவருங் காத்தல் கடனே.
ஒருமனை யுடனே திருவுற வாழ்ந்து,
காம வெறியைக் கட்டுப் படுத்தி,
சிவ சக்தியைத் திண்புறக் காத்து
மனப் பொருத்தமும் தினப் பொருத்தமும்,
வீரியத் தெம்பும், விரும்பு மிருவர்
உடலின் உறுதியும் உள்ளக் கிளர்ச்சியும்
இடமுங் காலமும் இயல்பு மறிந்தே
நடப்பது நன்மை நயப்பது வாமே.
மகப்பேறு வேண்டி உகப்புடன் கூடி
மற்ற நாளிலே மாதா சக்திபோல்
வாழ்க்கைத் துணைவியை மதித்தலே மாண்பாம்.
நல்ல நாலைந்து செல்வர் வந்ததும்,

காதலை யெல்லாம் கடவு ளிடமே
பொருந்த வைத்துத் திருந்தித் திருந்தி,
காமத் தைச்சிவ காமமாய் மாற்றுக !
இல்லறப் பயனை எய்திய காதலர்
பிறவிப் பயனைப் பெறுதலுந் தகவே.
மக்களை யடைந்த மானிடப் பிறவி,
கடவுளை யடையக் கருதலுங் கடனே.
ஒருவரை யொருவர் திருவுறத் திருத்தி,
இருவரும் பூரணம் எய்தலே வாழ்வாம்.
ஒருவரை யொருவர் உண்விழை வன்றே ;
ஒருவரை யொருவர் உயர்த்தலே வாழ்வாம்.

மக்களை வளர்த்தல்

மக்களே மனையின் மங்கல விளக்காம்.
மகவிலா வீடு மலரிலா மரமே.
வித்தும் நிலமும் வீறுபெற் றுலே,
முத்துக் கனிகள் முளைப்ப தாமே.
நாதவிந் துக்களைச் சேதமாக் காமல்,
காதலுங் கற்புந் தீதறக் காத்து,
தனதுயிர் மனையைத் தானென வுணர்ந்து,
நிறைமுறை யான நேசம் பேணி,
உணவும் நினைவும் உறக்கமும் காத்து,
நல்லுட லெய்தி நன்மணங் காத்துப்
பிணிதுயர் கவலை பெருஞ்சின மில்லாச்
சாந்த வேளையிற் சதிபதி யானோர்,
இராமன் கண்ணன் இராச ராசன்
விசயன் சிவாஜி மீரா கோதை
கம்பன் வள்ளுவன் காளி தாஸன்
இனைய மகான்களை இதயத் தெண்ணின்
சீரிய மக்கட் செல்வமுண் டாமே.
மக்களை நல்ல வழியில் வளர்த்துத்
தக்கவ ராக்குதல் தந்தைதாய் கடனே.
இற்றைக் குழந்தை இனிவரும் மனிதன்,
தாயையுஞ் சேயையும் நோயறக் காத்தல்
பண்புறு நாட்டுப் பணியது வாமே.
தாய்ப்பா லூட்டித் தக்க வயதில்
நல்லுண வூட்டி, நனிவினை யாட்டி.
உடலைத் திருத்தி, உடையைத் திருத்திச்
சிறுசிறு கதைகளாற் சிந்தனை யுயர்த்தி,

இயற்கை யழகில் இன்புறச் செய்து,
பிரம சரிய விரதங் காத்துக்
காலம் போற்றுங் கல்வியைக் கற்றே
சீல முள்ள தீரராய் வாழப்
பிள்ளை வளர்ப்பது பெற்றோர் கடனே.

குடும்ப ஒற்றுமை

மனமும் குணமும் மாறு படாமல்,
ஒன்றிய குலமே வென்றி யளிக்கும்.
இசையுடன் சுருதி இணைவது போலே,
குழலும் உயிர்ப்பும் குலாவிய தொப்பவே,
பூவழ குடனே பூமணம் போலே,
உள்ளமும் உள்ளமும் உருகிக் குழைந்து,
செருக்கிலா நடையும் சினமிலா வுணர்வும்,
கடுப்பிலா முகமும், கனிந்த முறுவலும்
கரவாத் தெளிவும், மறவா நினைவும்
அசடறு பேச்சும், கசடறு நேயமும்,
காரியத் திறனும், கருத்தும் கவனமும்
சிறுமை யில்லாச் சீரிய தன்மையும்
வறுமை யில்லா வளமும் வண்மையும்
அழியா முயற்சியும், அறிவுப் பயிற்சியும்,
தொழிலால் வந்த தூயநல் லுணவை
விருந்துடன் பகுத்தே அருந்திடும் இன்பமும்,
ஆருயிர்க் கருணையும், அன்பும், அறமும்
பாருயர் பொதுநலப் பணியும் பண்பும்
அருங்கலைப் பயிற்சியும், அறிவுப் பயிற்சியும்
அன்புப் பயிற்சியும் அருளுடன் போற்றி,
ஒவ்வொரு மூச்சையும் செவ்விய வேலையில்
உய்க்குந் திறனும், உட்புறத் தூய்மையும்,
கொண்ட வாழ்வே குலத்திற் கினிதாம்.
சண்டைச் சரவே சாரா தாங்கே.
பொழுதெலாம் பொன்னும் புனிதவாழ் வதுவே
இன்ப துன்பமாம் இல்லறத் தீயில்
பட்டுப் பட்டுப் பழுதை விலக்கிச்
சுட்டுப் பட்ட சுடர்ப்பொன் போலே
அன்புயிர் உருகி அமைதி சேருமே.
தன்னலச் செருக்கே இன்ன லாகுமே.
உண்மைத் தியாகமே ஒற்றுமை யாக்கும்.
ஒற்றுமை யிருந்தால் வெற்றிமேல் வெற்றியாம்.

நாட்கடன்

திவ்விய ஜீவன சித்தி பெறவே
ஒவ்வொரு நாளும் உயர்த்துக வாழ்வை.
நாட்குறிப் பெழுதல் நல்ல பழக்கமாம்.
அறுமணி நேரம் அயர்ந்து, காலை
நான்கு மணிக்கே நலமுட னெழுந்து
உடலும் குடலும் உடன் சுத்தி செய்தே
மாவேல் ஆலால் மாதுளம் பூவால்
பல்லை விளக்கிப் பத்து விழுங்கு,
நன்னீர் அருந்தி நல்ல காற்றில்
மூச்சை யிழுத்து முறையாய் விட்டு,
உடலைப் பயிற்றிக் குடலைப் பயிற்றி
சுற்ற மெல்லாம் சுத்தஞ் செய்து,
மனைமக் களுடன் வட்டமா யமர்ந்து
பெரியார் அருட்பா பிரியமாய்ப் பாடி,
இறைவனைத் தொழுதபின் இனமலர் கொய்து,
தேய்ப்பன தோய்ப்பன திருவுறச் செய்து,
புதுப்புன லாடிப் புத்துடை யணிந்து,
மனதை யடக்கி வாழ்வை உயர்த்தும்
அனுட்டா னங்களை அமைதியாய்ச் செய்து,
மனைவியும் கணவனு மக்களோ டமர்ந்து,
ஜெபமா லையிலே திருப்பெயர் ஜெபித்து,
திவ்விய ஜோதியைத் தியானஞ் செய்து,
கதிரை வணங்கிக் கடவு ளுணர்வுடன்
அருட்பெரி யாரின் அமுதவாக் கருந்தி,
பசிக்குத் தூய பண்ட மருந்திச்
சுறுசுறுப் பாகத் தொடங்குக நாளே.
ஒவ்வொரு மனிதனும் உழைத்தே யுண்க.
கோடித் தொழில்கள் குவலயந் தருமே.
உணவிற் காறு மணிப்பொழு துழைப்பைச்
செலவிட வாழ்வு செழிப்ப தாமே.
மாலை ஐந்தரை மணிக்கு வெளியே
ஒன்றரை மைல்கள் உலாவி வரலாம்.
வியர்க்க வியர்க்க விளையாடி வரலாம்.
தேக சுத்தம் செய்து கொண்டு,
தியானம் செய்து திருவிளக் கேற்றி
இனிய பண்ணுடன் இறைவனைப் போற்றுக.
பிறகு நல்ல பெரியார் நூல்களைப்
படித்து, விளக்கிப் பயனை யறிகவே.

பத்து மணிக்குப் பள்ளி கொள்கவே.
தானியம் பருப்பு தயிர்பால் காய்கறி
கடலை தேங்காய் கனிவகை தேர்ந்தே
சுசிருசி யாகப் பசிக்குத் தருக !
பட்சம் ஒருநாள் பட்டினி போடுக !
மாம்பழ மாயினும் மலம்வைத் துண்ணேல் !
ஐம்பூ தத்தால் அமைந்தது மேனி.
ஐந்து பூதமே அதற்கு மருந்தாம்.
மாசறு மனமே தேசுறும் உடலாம்.
மனமுட லுறுதியே வாழ்விற் கின்பம்.
வள்ளுவர் காட்டிய வழியிது வாமே.
இன்னும் பொதுவிதி இயம்புவேன் கேளீர்.

பொது விதிகள்

உள்ளந் தோறும் உள்ள பொருளே
அவன் அவள் நான்நீ அதுவென லாமே.
உள்ளறி வுடனே உலகப் பணிசெய்.
உள்ள மெப்படி அப்படி உலகம்.
அறவழி சென்றால் அச்சமே யில்லை.
உண்மையே அறத்தின் உயிர்நிலை யாகும்.
அறத்தால் வருவதே அகமகிழ் வாகும்.
பிறப்பினும் ஒழுக்கமே சிறப்புடைத் தாகும்.
அடங்கி நடத்தலே அறிவிற் கழகாம்.
நாணுவ நாணிப் பேணுவ பேணுக.
நன்றிசெய் தாரை என்றுமே மறவேல்.
நடுநிலை யாளர் கெடுவதே யில்லை.
தீமையே புரிவார் செழிப்பது மிலையே.
நல்லது பொல்லது நாவின் வருமே.
இன்சொல் லாலே வன்சொல் மாற்றுக.
புறங்கூ றாதே ; பொறாமைப் படாதே ;
பயனில் லாத பதரைத் தள்ளு.
முன்பின் னறிந்து நன்மொழி பேசு.
உலகைத் திருத்துமுன் உன்னையே திருத்து.
இனத்தைக் கெடுக்கும் சினத்தைக் கொல்லு.
மனச்சாட் சிக்கு மாறுசெய் யாதே.
புலா லுண்பது புண்ணை யுண்பதாம்.
கொல்லா விரதமே கொள்கையிற் பெரிதாம்.
கள்ளும் சூதும் களவும் பொய்யும்
விலைப்பெண் முயக்கும் கொலைசெயும் வாழ்வை.
கோள்சினம் பொறாமை குடியைக் கெடுக்கும்.

தீயவர் உறவு நோயினுங் கொடிதாம்.
புல்லறி வாளர் சொல்வழி செல்லேல் !
அறிவுடை யாரே திருவுடை யாராம்.
மாசறு நல்லார் நேசமே இனிதாம்.
பெரியார் நேயம் பெருமைப் படுத்தும்.
அன்பால் ஆளை அறிந்துகொண் டிணங்கு.
அருட்பெரு மானின் திருவடி பற்று.
கற்றுக் கேட்டுக் கருதிநின் றொழுகு.
முயன்று முயன்று முடிந்ததைச் செய்கவே.
உழைத்துப் பிழைத்தே ஊருக் குதவு.
பயிரைப் பேணி உயிரைப் பேணுக.
உண்ண வுடுக்க உரிய தொழில்செய்.
பிச்சை கேட்பவன் பெருமை யிழப்பான்.
சோம்பலை விரட்டு ; சுறுசுறுப் பாயிரு.
ஆழ முயன்றால் ஆகாத தில்லை.
உறுதியும் உழைப்பும் இறுதியில் வெல்லும்.
பாட்டின் பயனைப் பங்குவைத் துண்ணு.
ஈந்த வாழ்வே இன்ப வாழ்வாம்.
ஈயாச் செல்வம் இன்னொரு நோயாம்.
மழையைப் போல மன்னுயிர்க் குதவு.
சுற்றத் துடனே பற்றுத லாயிரு.
கண்ணோட் டத்துடன் கனிவுரை பேசு.
பசிக்கே உண்டால் பலநோய் தீரும்.
நாடும் வீடும் பீடுற வாழு.
கொடுங்கோ லொழித்துச் செங்கோல் நாட்டு.
நடுக்குங் கொடுங்கோல் படக்கென் றொழியும்.
ஒவ்வொரு நாளும் உலகறிந் தொழுகு.
தாங்கிய நல்வினை தூங்கா தியற்று.
ஆகுந் தொழிலை ஆராய்ந் தாற்று,
காலமும் இடமும் கருதி வினைசெய்.
தகுதி நோக்கித் தருவதைத் தருக.
பலித்த மட்டும் பயனுள வினைசெய்.
தைரியத் தாலே சாவையும் சாடு.
வீரம் வீரம் வீரம் வேண்டும் !
பகைவர் அஞ்சப் பலத்தைப் பெருக்கு.
பண்பிலாப் பகைவர் நண்பரே யாகார்.
அரம்போல் உட்பகை ஆக்கந் தேய்க்கும்.
காலன் வரினும் கவலைப் படாதே.
ஆழி யென்றால் அலையு மிருக்கும்.

பார்வாழ் வென்றுற் போரும் இருக்கும்.
பொல்லரை ஒழிக்கப் போர்க்கலை வேண்டும்.
மானங் காத்தலே மனிதத் தன்மை.
உள்ள மட்டில் உலகம் உள்ளதே.
உலகம் பொய்யென உறங்கா தெழுந்திரு,
சுயநல மின்றிப் பொதுநலங் கருதி,
மனத்துற வுடனே மக்களுக் குதவி,
உள்ளுயிர் போலே உலகுயிர் கருதி,
உள்ளின் விரிவே உலகென் றுணர்ந்தே
உள்ளம் ஆன்ம வுறையுளென் றறிந்தே,
உள்ளப் போர்வையே உடலென் றெண்ணி
சுத்தான்ம நேயத் தொடர்புடன் எல்லாம்
இயல்புற வாழ்ந்தால் இன்புற லாமே.

மண்ணுயிர்க் குலங்கள் சுத்த சக்தியின் மக்கள் என்றே
எண்ணுமின் ; அறமும் அன்பும் இயற்றிடப் பொருளைச் சேர்மின்
கண்ணினம் எனவே காதற் கருத்தினில் ஒன்று கூடிப்
பெண்ணினப் பெருமை ஆணின் பெருமையாற் பொலிக வாழ்!

அளப்பறுங் கலைகட் கெல்லாம் அளவுகோ லான ஞானி
விளக்கிய பொருளை நல்ல விளக்கொளி யென்னக் கொண்டே,
துளக்கறு சிந்தை கொண்ட சுத்தகௌ ரியரும் ஆங்கே
உளக்கருத் தொன்றி யவ்வா றெழுகிட விரதம் பூண்டார்.. 373

10. திருமணப் படலம்

மணவறை

ஞால மின்புற நல்லவர் இன்புறக்
காலம் இன்புறக் கௌரியும் சுத்தனும்,
சீலம் போற்றுந் திருமண நாள்கொண்ட
கோலங் கண்டு குளிர்ந்தன கண்களே !

தேயங் கொண்ட திருக்களெல் லாங்கலைக்
கோயில் என்னக் குலாவு மணவறை,
தூய கற்புந் துகளறு வீரமும்,
நேயங் கொண்டு நிலாவிய தொத்தனர்.

வன்னச் சிற்பி வனைந்த மணவறை,
பொன்னிற் பூத்துப் பொலிமணி யாலன்று ;
கன்னி கௌரி கனியிளம் பொற்பிலே
மின்னிப் பூத்தெழில் வீசி மிளிர்ந்ததே !

பண்ணு மைந்த பனுவலின் இன்னியற்
கண்ண மைந்த கவினுறு மண்டபம்,
திண்ண மைந்தநந் தீரனுக் கேற்றதோர்
பெண்ண மைந்த பெருமையைப் பேசிற்ருல்.

வேந்தர் வீரர், வியன்கலை வாணர்கள்,
சாந்தர் மேவுந் தரளப்பொன் மண்டபம்,
ஏந்தல் சுத்தன் இளந்திரு வீசிடுங்
காந்த மேவிக் கவர்ச்சி யளித்ததால்.

கள்ள மற்ற கலைவளர் நெஞ்சினைக்
கொள்ளை கொள்ளுங் கொழுமணி மண்டபம் ;
வள்ளல் சுத்தன் மணத்திருக் கோலத்தால்
விள்ள ரியவிண் ணின்பத்தை வென்றதே !

தேனைச் சுற்றிய தீங்குரல் வண்டெனக்
கானைச் சுற்றிக் கவின்செய் மலரெனக்
கோனைக் கோனின் குமரனைக் *கூர்விழி
மானைச் சுற்றி வளர்ந்ததம் மாசபை.

மாசி லாத மதியிர வியெனத்
தேசு லாவுந் திருமண வாளரை
ஆசையால் அளக்கும் விழி, அல்லியும்
வாச மாமரை வன்னமும் போன்றதே.

பொன் னழகுடன் பூத்தது ஞாயிறு.
பொன் னழகு பொலிந்தது வையகம்.
பொன் னழகு புதுமணப் பந்தலில் !
பொன் னழகு பொலங்கொள் உடலெலாம் !

இயலற மெனும் இல்லற வாழ்க்கையின்
பயனும் பண்பும் பழுதறச் சொல்லிடும்
வியனி சைகளை வித்தகர் பாடினுர்.
இயலி சையுடன் கூத்து மியங்கவே.

தங்க யாழ்குழல் சல்லரி மத்தளம்,
பொங்கு நாதசு ரம்பொழி நல்லிசை
மங்கல முரசம் மணி யோசையால்
எங்கு மின்பத் தரங்கம் எழுந்ததே.

"நல்ல வேளை யிது"வென நான்மறை
வல்ல பாரத மாமுனி சாற்றினுன்.
ஒல்லென் றேும்சுத்த ஓம்சக்தி ஓம்என
எல்லை யற்ற குரல்கள் எழுந்தவே.

*கௌரி

மின்னைக் கூட்டி வியன்பெறச் செய்தநல்
அன்னங் கிள்ளை, அணிமயில் அன்னவர்,
இன்னி சைக்குயில் என்னப்பல் லாண்டுடன்
முன்வைத் தார்முளை யோங்கிய பாலிகை.

தோரம் ஆரந் தொகைதொகை யாகவே,
தார கைக்கணம் போலத் தழைத்திடும்,
சீர ணிந்த திருமண வேதிமுன்
பூரணக் குடம் பொற்புற வைத்தனர்.

தட்டுத் தட்டாய்த் தளிரிளம் பாவையர்,
அட்ட மங்கலம் ஆர்வமோ டேந்தியே,
வட்ட வேதிகை மாணுற வைத்தனர்..
எட்டுத் திக்கிலும் இன்பஞ் சிலிர்க்கவே !

மணாளர் திரு

கானவளர் மானினள் கார் குழலினாள்,
மீன்வளர் விழியினள், மின்னி டையினள்,
தேன்வளர் மொழியினள், தெய்வக் கற்பினாள்,
வான்வளர் மதிமுகக் கௌரி வாழ்கவே !

கற்பனைக் கவிகளுக் கரிய காட்சியான்,
சிற்பர மேசனைச் சிந்தை செய்பவன்
கற்பகக் கையினான் கருணை யாழியான்
அற்புத வீரமும், அருளு மோங்கினான்.

வாய்மையும் திரமும் வடிவு கொண்டவன்
தாயினும் அன்பினான்; தருண மாமழை
ஏயநல் லுலகிற்கே தன்னை யீந்தவன் ;
சேயினும் தெள்ளிய உள்ளங் கொண்டவன்.

மணிவரைத் தோளினான் ; வைர வாளினான் ;
அணியினு மணிமிகும் அருள ழகினான் ;
தணிவறு மொய்ம்பினான், சக்தி ஜோதியான்
மணமகன் வாழிய சுத்த மன்னனே !

நவமணித் திரளுக்கு நகை யளித்திடும்,
தவமணிச் செல்வரைச் சபையு ளாரெலாம்,
"அவளுடை யழகிற்கும் இவன ழகிற்கும்
எவளவு பொருத்த"மென் றிசைத்து வாழ்த்தினர்.

ஓரையும் உள்ளமும் ஒத்த வேளையில்,
ஆரணம் ஓதினர் அறிந்த மேலவர் ;
பாரத முனிவரன் பரனை யெண்ணியே
சீரிய கடன்முறை செய்ய லுற்றனன்.

(இதுமுதல் கலியாணச் சடங்குகளும் அவற்றிற்குரிய மந்திரங்களும் விளக்கப்படும்.)

மணவறை வாழ்த்து

இகபர சுகமெய்தி இல்லற வளமோங்கித்
தகவுறு தம்பதிகள் சந்ததம் வாழியவே!
நறுமண வறைசேர்ந்த நலங்கிளர் தம்பதிகள்,
அறம்பொருள் அழகின்பம் அளவற ஓங்குகவே..

பகலுடன் கதிர்போலே, பாலுறு சுவைபோலே
அகநகு காதலர்கள் அமுதென வாழியவே..
மணவினை நிறைவேறி மங்கலம் பொங்கிடவே
கணபதி சிவகௌரி கழலிணை பணிவோமே !

திருவிளக்கெடுத்தல்

சந்தனங் குங்குமம் சாத்திப் பூவைத்தே,
சந்ததி தழைத்தவர் தங்கத் தீபங்கள்,
இந்திரை யுடன்வர இன்னி சையுடன்,
இந்திர தனுநிற மேந்தத் தூண்டினர்.

''மங்கள வள மோங்க, மணமகர் குலமோங்கப்
பொங்குக நல்''மென்றே பொன்விளக் கேற்றிடுவோம்..
இருளிட ரச்சமெலாம், ஏகிட வேகமுடன்,
அருளொளி தனிற் கூடி அன்பர்கள் வாழியவே !

விண்ணமு தளியாலே விளைபயிர் நிலம்போலே,
கண்கருத் தொன்றியநம் காதலர் வாழியவே
பொருள்செழித் துலகுதரும் போகமெ லாஞ்செழித்தே,
திருமனை வாழியவே தினகர சுபவொளிபோல் !

வழிபாடு

சுத்த சதாசிவனைத் துரிய பரம்பொருளை
சக்தி மஹேச்வரியை ஐயமுறப் போற்றிடுவோம்..
புதுமலர் அணி சூட்டிப் பொதுநடப் பெருமானை
வதுவரர் நலமோங்க வாழ்த்தி வணங்கிடுவோம்.

நிவேதனம்

மணவறை தனிலன்பர் வகைவகை யாய்வைத்த
அணிமணி யாவையுமே அருளிறை யேற்றருள்க !
மஞ்சளுங் குங்குமமும், மலர்கனி, சந்தனமும்,
பஞ்ச வமிருதமும், பால்தயிர் நெய்வகையும்,

வெற்றிலை பாக்குடனே விதவித வாசனையும்,
முற்றிய தேங்காயும், முளைநவ தானியமும்,
அறுசுவை யுண்டிகளும், அடுக்கிய வரிசைகளும்,
இறைவ நிவேதனமாய் ஏற்றருள் ஏற்றருளே !
பாத்திர வகையேற்றுப் பரமவுன் கிருபைக்குப்
பாத்திர மாக்கியருள் பாலி தயாநிதியே !
உடலுயிர் மனமுள்ளம், உடைமைகள் யாவையுமே
கடவுளே யேற்றருளிக் காத்தெமை யாளுவையே !

*புண்ணிய நீர் தெளித்தல்

உலகைக் குறிக்கவே இலையை விரிப்போம்
யாக்கையை வளர்க்கும் அரிசி பரப்புவோம்..
இதயங் குறிக்கப் பதுமம் செய்வோம்,
அதன்மேற் கலசமாம் அருளை நாட்டுவோம்.
மங்கல வாழ்வாம் மாங்கொத் திடுவோம்.
சிவத்தைக் குறிக்கும் தேங்காய் வைப்போம்
சந்தனங் குங்குமம் சாத்தித் தொழுவோம்,
கங்கை யமுனை காவிரி கிருட்டினை
சிந்துகோ தாவரி நருமதை சேர்ந்த
புண்ணியப் புனல்போல் பொங்குந் திருவருள்,
மனமுயி ருடலின் மாசினை நீக்கி,
வாழ்வுப் பயிரை வளமுறுத் துகவே,
புனிதன் பெயர்சொலிப் புண்ணிய நீரைத்
தெளிப்போம் அருளிற் குளிப்போம் யாமே !

அமுதுண்ணல்

பாலுந் தேனும் பழமும் பருகி,
பாலுறு நெய்போற் பசுவினிற் கலந்த
அமுதனை நினைப்போம் ; ஆருயிர் வாழ்வை
அமுதமே யாக்கும் அருளை வேண்டுவோம்..

---

* நவதானியங்கள் நவக்கிரகங்களைக் குறிக்கும். கோதுமை சூரியன், நெல் சந்திரன், துவரை செவ்வாய், பயறு புதன், கடலை வியாழன், மொச்சை வெள்ளி, எள்ளு சனி, உழுந்து இராகு. விசாலமான இலைகளைப் போட்டு, இத் தானியங்களைத் தாமரை வடிவமாக அதன் மேல் அழகாகப் பரப்புக; அதன் மேல் நீர்க்கலசம் வைத்துக் கலசத்தின் மேல் மாவிலை, அதன் மேல் மஞ்சள் தடவிய தேங்காய் வைத்து, கலசத்திற்குச் சந்தனம் குங்குமம் இடுக.

நவக்கிரக வணக்கம்

நவக்கி ரகங்களை நலமுற வணங்குவோம்.
சூரியன் அருட்பெருஞ் ஜோதியைப் பொழிகவே !
சந்திரன் மகிழ்ச்சி தந்தருள் புரிகவே.
செவ்வாய் வீரத் திருவெமக் கருள்கவே !
புதன் எம் அறிவைப் பொலிவுறத் தூண்டுக !
வீறுந் திருவும் வியாழன் அருள்கவே !
சுக்கிரன் அருளுக சுகபோ கங்கள்.
சனியெமக் கருளுக மனம்வெல் யோகமே.
இருளை விழுங்குக இராகுகே துக்கள் !
வானச் சுடராய் வயங்கு மிறைவன்
ஞானச் சுடரை நல்குக வெமக்கே !

† தீ வளர்த்தல்

துங்கநன் மனையறந் துலங்க வேண்டியே
கங்கணங் கட்டிக் கடமை யறிந்து,
குலமரம் பூத்துக் கொழுங்கனி குலுங்க,
நலமுறப் பாலிகை வலமுற வணங்கினோம்.
சோபனம் பெரியார் சொல்லிக் கொடுத்த
கூறை யணிந்து, கோடியு டுத்தே,
இருவரும் அன்பால் ஒருமனப் பட்டே,
திருக்கரம் பற்றித் திருவலம் வந்துன்
முன்னே யமர்ந்தோம் மூலக் கனலே,
சக்திச் சுடரே, சாந்தச் சுடரே
பக்தருக் கருளும் பாவனத் தீயே !
தாமத மாயை தன்னை விலக்கிச்
சேமந் தருவாய் சிவச்சுட ரொளியே !
அருட்பெருங் கனலே, ஆருயிர்க் கனலே,
இருட்டினை விரட்டும் இரவிக் கனலே,
நீயே சாட்சியாய், நிறையுடன் இருவரும்,
தூயநல் லான்ம நேயரே யாகி
இல்லற விரதம் ஏற்றோம் காவாய்,
நல்லற வீரர் வல்லமை யாவாய் !
தேயம் வாழுந் திருப்பணி செய்வோம்..
ஆயுளும் ஆற்றலும் அளிப்பாய் போற்றி!
அருளும் பொருளும் ஆக்குவாய் போற்றி!

---

† ஆறிதழ்த் தாமரை வடிவாகக் கோலம் போட்டு, நடுவே ஓம குண்டம் வைத்துச் சமித்துக்களால் ஓமம் செய்தல்.

மருளும் மதியை மாற்றுவாய் போற்றி.
துன்பந் துடைத்துத் துயரை விலக்கி
இன்பம் பெருக்கும் எழிலே போற்றி.
உள்ளன் புடனே உன்னை வணங்கினேம்.
தெள்ளிய கருணை வெள்ளமாய் வருவாய்
மரபு விளங்கநன் மக்களைத் தருவாய்
உழைத்த செல்வமும் ,உழைக்கும் ஆற்றலும்,
உலகிற் கினிதாம் உத்தமத் தொழிலும்,
வந்ததைப் பகுத்துணும் சிந்தையும் அருளாய்
சீர்மை யருளாய், நேர்மை யருளாய்.
அயரா முயற்சியும், அமைதி யுள்ளமும்,
கட்டுங் கவலையும் அற்ற மனமும்,
வீரிய பலமும், வெற்றித் திறனும்,
மங்கல வாழ்வும் எங்களுக் கருள்வாய்.
ஆவிக் குயிராம் தேவனில் வாழும்
தேவ ஜீவனத் திருவெமக் கருளாய்.
உலக மெல்லாம் ஒருகுல மாக
அருள்வழி வாழும் ஆன்ம நேயராய்,
யோகமும் சுத்த போகமுங் கொண்ட
பூரண ராய்நர நாரண ராக
சாந்தமும், சிவமும், சக்தியும், பத்தியும்,
அழகும், அணியும், அமைந்து வாழவே,
நாங்கள் வாழ்ந்து நற்பணி புரியும்,
களிப்பைத் தருவாய் கடவுட் கனலே !
எங்கள் மனைக்கு மங்கள மருளாய்,
கடமையைக் காக்கக் கருத்தும் கவனமும்,
உடல்மனத் திட்பமும், உறுதியுந் தருவாய்.
கற்புடன் இருவரும் கண்ணுடன் மணிபோல்,
சேர்ந்து வாழுந் திறமையைத் தருவாய்,
ஒருவரை ஒருவர் உயர்த்திட வருளாய்..
பாரெலாம் பரவிய பராபரக் கனலே,
சித்தி யளிக்கும் சின்மயச் சுடரே,
அரக்கரை யழிக்கும் உருத்திரக் கனலே,
அமரவாழ் வளிக்கும், அருந்தவக் கனலே,
முருகவே ளாக முளைத்த கனலே,
குமுறிமே லேறுங் குண்டலிக் கனலே,
போற்றி போற்றியுன் புண்ணிய மேனி
ஓம்சு வாகஓம், ஓம்சுபம் எனவே !

ஓமெனத் தீயினைச் சுற்றி உத்தமர்,
சேமமாய் வாழ்கெனச் செஞ்சொல் ஆர்த்திட
மாமுனி மகளுடன் மாசில் சுத்தனும்,
கோமளத் திருக்கரங் கோத்து நின்றனர்.

ஏகமாய் இகபர மிணைந்த காட்சியோ !
போகமும் யோகமும் பொருந்தும் பண்பிதோ !
தேகமும் தேகியும் போலச் சேர்ந்துமை
பாகனைப் போன்றனர் பரிதி போன்றனர்.

அற்புத மணமகன் அம்பொன் மாலையைக்
கற்பிளம் பாவையின் கழுத்திற் சூட்டுமுன்,
சிற்பர மாத்மனைத் தியானம் செய்துதன்
இற்புகு பத்தினிக் கினைய சொல்லினன்.

திருமண வுறுதி—சுத்தன்

அக்கினி முன்பும், ஆன்றோர் முன்பும்,
பெற்றோர் முன்பும், உற்றோர் முன்பும்,
உறுதி கூறி உயிரெனக் காப்பேன்..
வாழ்க்கைத் துணையாய் வரிக்கிறேன் உன்னை..
மனதை யறிந்தே மணவினை புரிந்தேன்.
இல்லறத் தேரை இருவரும் நடத்தி,
நல்லறங் காத்து நலமுற வாழ்வோம்.
பொன்னுங் கலனும் பூவும் மணமும்,
கண்ணுங் கண்ணுங் கலந்தது போலே,
ஒன்று பட்டோம் என்றும் பிரியோம்.
நீயென் உலகம், நீயென் உடலம்,
நானுன் வாழ்க்கை, நானுன் உயிரே.
உன்னலம் என்னலம், என்னலம், உன்னலம் ;
உனக்குறு துயரம் எனக்குறு துயராம்.
பெண்மையிற் சிறந்த உண்மைத் துணைவீ,
ஆண்மைக் கேற்ற கேண்மை யுடனே,
மானே, உனது மானங் காப்பேன்.
உடல்மனங் களிக்கக் கடமையைச் செய்வேன்.
நீயென் சக்தி, நானுன் சிவமே.
ஆத்தும நேயம் பூத்துக் கனிந்து,
குடும்பந் தழைக்கக் குவலயந் தழைக்க,
அறம்பொரு ளின்பமும் அருளும் பெருக,
ஒன்றாய் இல்லற யோகம் புரிவோம்..
வென்றித் திருவே வீட்டிற் கரசியே..

சுத்த சக்தியாம் அர்த்தநா ரீசனை,
மனதில் எண்ணி மணமாலை சூட்டினேன்..
மங்கல மாகுக நங்குல வாழ்வே !..

மணமகள் (மாலை சூட்டி)

இருபா லுள்ளும் ஒருதா னுகும்,
இறைவா இன்ப நிறைவெமக் கருளாய் !
இவரே என்னுயிர் இன்புறுங் கணவர்.
இவரென் வாழ்க்கை இவரென் னவரே !
இவரே ஆனுடல் ஏந்திய நானும்.
இவரென் இறைவர் நானவர் இயற்கை.
இவரே என்றன் இதயத் துடிப்பாம்.
என்னுளம் இவர்மனை. இவருளம் என்மனை.
என்முச் செல்லாம் இவர்பணிக் கீந்தேன்.
வடமீன் போன்ற திடமன துடனே,
கற்பைக் காத்துக் கண்கருத் தொன்றி,
யோகத் துணைவியாய், போகத் துணைவியாய்,
அவர்குலம் பெருகவே அவர்மன மகிழவே,
வாழ்விலும் தாழ்விலும் வாழ்க்கைப் போரிலும்,
இணைபிரி யாமல் என்றும் வாழ்வேன்..
அக்கினி சாட்சி, ஆன்றோர் சாட்சி !
என்னை வளர்த்த முன்னோர் சாட்சி ;
ஆயுள் மலர்களை அன்பு மாலையாய்த்
தொடுத்திவர் மார்பிலே சூட்டுகின் றேனே !
எனையிவர்க் கீந்தேன்..இறைவா போற்றியே !

பெரியார் வாழ்த்து

நீடுவா ழியரோ நீடுவா ழியரோ !
பீடுறு நம்பியும் பெட்புறு நங்கையும்,
கண்ணிரண் டென்னக் கருத்துறக் கலந்து,
புண்ணிய யோகமும் போகமும் பொலிய,
அன்பும், அறமும், அருளும் பெருகிப்
பண்பும் பயனும் பழுத்தினி தோங்கி,
இகபர சுகங்கள் எல்லாம் எய்தி,
மங்கல மாக வாழ்க வாழ்கவே !
நங்குல நன்மை நாளும் பெருகவே !

பாரத முனிவர்

பண்ணுடன் சுருதி போலப் பகலுடன் கதிரே போலத்
தண்பயிர், அதனைத் தாங்குந் தரையையும் போலக் காணுங்
கண்ணுடன் மணியும் போலக் கௌரியும் சுத்த னும்
எண்ணுறு நலங்க ளெல்லாம் எய்திநீ டூழி வாழ்க !

சாந்த முனிவன்

உள்ளமே தில்லையாக, உயிர்தொறு நடனஞ் செய்யும்,
வள்ளலின் கருணை யாலே வளமையும் இளமை யின்பும்,
தெள்ளறி வாற்றல் யாவுந் திருவுடன் பெருகி நாளும்,
வள்ளியு முருக னும்போல் வதுவரர் வாழ்க மாதோ !

எல்லாரும்

நன்று வாழுக நன்மனை யறத்தினுக் குயிராய்
நின்று வாழுக ! நிலவுல குயிர்களின் அன்பை
வென்று வாழுக ! பொதுநலம் விளங்கிட நீடு
மன்று ளானருள் ஓங்கிட மணாளர்வா ழியவே !

இந்திரை, பெண்மணிகள் ஆலத்தி யெடுத்து

பொலிக பொலிக புதுமண வாழ்க்கை..
நலிக தீமை, நன்மையே வளர்க !
அழிக துன்பம் அமுத கங்கைபோல்
பொழிகபே ரின்பம் பொங்குக சுபமே !..

சத்தியன்

அருமை நாட்டீர், அரியீர், பெரியீர்..
என்னுயிர்ச் செல்வன், இத்திரு நாட்டின்
மன்னுயிர் நாளை வாழ்த்திடு மன்னவன்,
சித்தி மரபின் சிரோமணி யான
சுத்தன் எங்கள் சுடர்பெறு மைந்தன்,
சாந்த முனிவன் தவத்திற் பழுத்துப்
பழந்தமிழ் மரபின் பாக்கியக் கனியாம்
கௌரியை ,மாசறு கற்புச் செல்வியை
அறிவும் திருவும் அருளும் பெற்ற
பெண்மைக் கனியை உண்மைக் காதலால்,
அரசியாய்ப் பெற்றான்..ஆண்டவன் அருளால்..
இனியுல கிற்கெலாம் இன்பமே யாகும்.
இவ்வுல கெல்லாம் இன்பவீ டாமே;
மன்னுயிர்த் தொண்டே இன்னுயிர் வாழ்வாம்.
என்னுங் கொள்கை இருவருங் கொண்டார்.
உத்தம முனிவர் உரைத்தநல் லாசியும்,
அரசர் வாழ்த்தும் அமைச்சர் வாழ்த்தும்,
பெற்றோர் வாழ்த்தும் பெற்றதம் பதிகள்,
எனக்கு விடுதலை யீந்தென் செங்கோல்
ஏந்துந் திருநாள் இதோவரும் புதனும்..
ஆதலின் அரசரும், அன்பரும், அறிஞரும்,

அணிநகர்க் கணியாய் அதுவரை யிருந்தே
சுடர்நேமி தாங்குஞ் சுத்தகௌ ரியரை,
ஆசீர் வதித்தே அருள்புரி வீரே !

சத்திய னுரைத்த மாற்றம் "சரிசரி" யென்று மற்றோர்,
மெத்தவும் ஆமோ தித்து, விரிமலர் தூவித் தூவி
"சுத்தமா மன்னன் வாழ்க ! சுந்தரக் கௌரி வாழ்க !
இத்தினம்போலேஇன்பம்என்றுமேபொலிக "! வென்றார்..

சித்திமான்

வன்மனக் கலியர் மாய வலையணு காத வண்ணம்,
நன்மண வைப வத்தை நாமின்று கண்ட வாறே..
மன்னுயிர்க் கினிமை செய்ய வதுவரர் அடுத்த வாரம்
பொன்னுறு மகுடந் தாங்கிப் பொலிகநீ டூழி மாதோ !

திருமணவழகு

வாயுரை கடந்தது மனங்க டந்ததே.
ஆயிரம் விழிகட்கும் அரிய காட்சியாம்,—
தூயனும் கௌரியும் துலங்குஞ் செவ்வியில்
கோயில்கொண் டழகெலாங் கொலுவி ருந்தவே.

மலையெனக் குவிந்தநல் லாசி மாமலர் !
மலையெனப் பரிசுகள் வரிசை யாகவே !
கலைகளின் விளக்கமும் கான வெள்ளத்தின்
அலைகளும் அழகுடை அமுதக் காட்சியே !

"சோபனம் சோபனம் சோபனம்" என
நாபதி னாயிரம் நன்றி சைத்திட,
தூபமுந் தீபமுந் துலங்கும் பந்தலில்
பூபதி மகிழ்ந்திடப் புனிதர் ஆடினார்..

நலங்கு

கானக் குயிலார் கனகங்குழை மாதர்
தேனிசை பாடத் திருமண நல்லார்,
மானிணை போல மயிலிணை போல,
நானம் பூசி நலங்குவைத் தாரே !

கூவிக் கூவி நெஞ்ச மான குயிலிழைக்கு துன்னையே..
தாவித் தாவி ஆர்வவெள்ளந் தழுவுதுன்றன் ஆவியை..
இன்ப மான வாசத் தென்றல் இனியதூது சொல்லுமே..
அன்புக் கூட்டிற் கிஞ்சுகமுன் ஆசைபற்றிப் பேசுமே.
வாரும் வாரும் பூசு கின்றேன் வாரிவாரிச் சந்தனம்..

தாரும்தாரும் தாமரைக்கை தாருமோர் மலர்நகை..
செங்குழம்பு தீட்டுகின்றேன் சேவடி மலரிலே..
மங்கல மலர்முடித்து வாசநீர் தெளிக்கின்றேன்..
செண்டுகட்டி யாடுவேன்.. சிரித்தமா முகத்தினைக்
கண்டுகண் குளிர்ந்தியாழிற் காதலின்பம் பாடுவேன்..

பூச்செண்டாடல்

கண்டார் உள்ளங் களிகூத் தாடச்
செண்டாடினரே திருமண வாளர்..

தேன்மலர்கள் கொய்துகொய்து செண்டுகட்டி யாடுவோம்.
வான்மலர்க ளூடுசெல்லும் வாண்மதி முகத்தியே.

வந்து வந்து செல்லு கின்ற வாழ்க்கை மின்னைப் போலேவே..
உந்தி உந்திப் பந்தடிப்போம்—உள்ள மின்ப மோங்கவே !
எற்றியெற்றிச் சுற்றிடும் இருவினைக் கவலையை,
வெற்றிவெற்றி யென்றுவேக மாகப்பந் தடிப்பமே !
பாம்பின்மேல் நடம்புரிந்த பங்கயத் திருவடி
தாங்கி, அச்சம் நீங்கித் தாவித் தாவிப்பந் தடிப்பமே !
செம்பொன்அம்ப லத்தில்ஆடுஞ் சிவநாதன் பாதத்தை
நம்பிநம்பி யாடுவோம் நமச்சிவாய ஓமென்றே !
சித்திமன்னர் வெல்கெனத் திசைகள் ஆர்க்கஆர்க்கவே..
சுத்தசக்தி சக்தியென்று சொல்லிப்பந் தடிப்பமே..

திருவூஞ்சலாடல்

தேனாகி ஆனந்தத் தெளிவு மாகித்
திருத்தொண்டர் துணையான தெய்வ மாகித்
தானாகித் தன்மயமே எவையு மாகிச்
சக்தியுடன் சிவபெருமான் ஆடி ரூஞ்சல்..

வானாகி வளியாகி, ஒளியு மாகி,
வாழுயிருக் குயிராகி, வளமையாகி,
ஆனந்த நடனசபா பதியு மாகி,
அமிர்தவல்லி யோடுசிவன் ஆடி ரூஞ்சல்..

அன்புறுதி யென்கின்ற கால்கள் நாட்டி,
ஆர்வமெனும் சங்கிலிகள் அமையப் பூட்டி,
இன்பமிகு தியானமெனும் பலகை நீட்டி,
இதயேசன் எங்களுடன் ஆடி ரூஞ்சல்..

பெண்ணாகி ஆணாகிப் பிரபஞ்ச மாகிப்
பேசரிய துரியபர பிரம மாகி,—
கண்ணாகிக் கதிராகிக் காட்சி யாகிக்
கதியாகும் அருட்சோதி ஆடி ரூஞ்சல்..

எத்திக்கும் அருளாட்சி இலகி வாழ்க !..
  எந்தாயின் இசையோங்கி யென்றும் வாழ்க !
தித்திக்குந் திருநாமச் செல்வம் வாழ்க !
  தீயகலி யச்சமறத் தேசம் வாழ்க !

பத்தர்செயும் அருட்பணியின் பயன்கள் வாழ்க !
  பரிசுத்த சன்மார்க்கப் பண்பு வாழ்க !
நித்தியமாம் அருளாட்சி நிலவி வாழ்க...
  நீடூழி சுத்தசக்தி ஆடி ரூஞ்சல்..

சித்திரத் தெழுதொ ணாத செழுந்திரு மதி முகத்தாள்,
முத்துருள் பவள வாயாள், முதல்வன்பால் உயிரை முற்றும்
வைத்தவள் அன்பே யான வடிவினள், கமலக் கண்ணாள்,
பத்தினித் தெய்வம் சுத்த பரமனின் அருளால் வாழ்க !

"நலமெலாம் உருவெடுத்த ஞாயிறு போன்ற செல்வன்,
நிலமெலாம் வளம்பெற் றோங்க நிருதரைச் செற்ற வீரன்,
அலகிலாத் திறமை சான்றான், அருளினாற் பிறந்த வள்ளல்,
பொலிக நம் சுத்த"னென்றே பூமழை பொழிந்த தம்மா !

பல்கிய வுவகை எங்கும் பரவிடக் கற்று நின்ற
நல்லவர் வாழ்த்தெ டுக்க, நாதசா கரத்தி னூடே,
செல்லுமா னந்தத் தோணி யிரண்டென வதுவ ரர்கள், 400
மல்லிகை ரோஜா மேவு மலரணை சென்றார் மாதோ !

மன்றினுக் கினிது கூறி, மன்னவர் மன்னன் ஆங்கே
பொன்றிணிப் பரிசில் ஈந்து, பொதுநலம் பலவும் போற்றி,
நன்றிகள் யாங்கு மேற்று, நன்மண மான தென்றே
வென்றிகொள் முரச மார்க்க வியன்மகிழ் வெய்தி னானே !

பொம்மெனக் கீத மெங்கும் ! புதுப்புது விளையாட் டெங்கும் !
கொம்மையந் திருவின் மிக்கார் குடமுலை குலுங்கத் தாவிக்
கும்மிகள் அடித்தார் ! நல்ல குரலுடன் விரலுஞ் சேர
ஜிம்மென வீணை மீட்டித் தேனிசை யளித்தார் மாதோ !

பகவனை அன்பு செய்யும் பாகவ தோத்த மர்கள்,
இகபர சுகங்க ளீயும் இல்லறக் கற்பின் மிக்க
பகவதி கௌரி, சீதா, பத்மினி, திரு, சாவித்ரி
குகனுடன் வள்ளி காதை குயிலெனப் பாடினாரே !

வாசுகி கற்பின் செல்வி, வள்ளுவர் மனை யொழுக்கம்,
தேசுறு குறளின் மாண்பு தெளிவுறச் சாந்தன் ஆங்கே
பேசிடக் கேட்டா ரெல்லாம் பெரும்பய னடைந்தோ மென்றார்...
மாசறு கதைக ளாலே மணவினை முடிந்த தம்மா ! 417

11. வாழ்க்கைப் படலம்

பொய்யறு மனத்தைப் போலே புண்ணிய நதியின் பாங்கர்,
துய்யவெண் சலவைக் கல்லால் சுடருறச் சமைத்த வீடு..
மொய்ம்மலர்ச் சோலை தன்னை முத்தமிட் டாடுந் தென்றல்,
பையவந் தினிது வீசும் பரிமள வசந்த வீடே..

பலமுயர் தென்னை,வாழை, நாரத்தை, பலா,மா, பாக்கு
நலமுயர் வில்வம் வேம்பு நாவல்சண் பகங்க டம்பு
புலமுயர் பசும்ப யிர்கள் பூஞ்செடி வகைசெ ழித்துத்
தலமுயர் சித்தி பூமி தாங்கிய *ஐயவீ டம்மா !

ஒவ்விய வாசல் கூடம் உள்ளறை, முற்றம் ; ஓங்கும்
செவ்விய மாடி யெல்லாம் சிற்பநூல் அறிந்த மேலோர்
இவ்வகை இன்ன தாயின் இதுசுப வீடாம் என்றே
அவ்வகை யமைந்த கோயில்—அழகின திருக்கை யம்மா !

எத்திசை நோக்கி னாலும், இனமணி யுடன்செம் பொன்போல்,
பத்திசேர் பூக்கள் காணும்; பழங்களின் செழுமை காணும்.
சுத்தகௌ ரியரைக் கூவுஞ் சுதந்தரப் புட்கள் காணும்;
சித்திரப் பவன மெல்லாந் திருநட மாடக் காணும்.

கொடுவெயிற் காலந் தன்னிற் குளுகுளு வென்றி ருக்கும்
கடும்பனி மழைக்கா லத்திற் கதகத வென்றி ருக்கும் ;
நெடும்பக லிரவு மாங்கே நித்திய வசந்த மாகும் ;
தொடும்பரு வங்க ளாறுஞ் சுகத்தையே விளைக்கு மன்றே..

முத்தணி வானில் இன்பம், முழுமதி நிலவில் இன்பம்,
பத்தரை மாற்றுப் பொன்போற் பளிச்சிடும் பரிதி யின்பம்.
புத்தலர் நகையில் இன்பம், புள்ளிசை யின்பம்..இங்கே
எத்திசை நோக்கி னாலும் இன்பமே காண லாமே..

மலைநிமிர் மாண்பில் இன்பம் ; வளநதிப் பாட்டில் இன்பம் ;
இலையடர் கானி லின்பம் ; இளமையின் வனப்பில் இன்பம்..
கலைப்பெறுஞ் † சலவை காட்டுங் கனவினில் அழகின் இன்பம்..
நிலைபெறு முலகை யின்ப நிலையமென் றிலக்கு மம்மா !

இத்தகை யின்ப வீட்டின் இன்னுளத் துடிப்பே யாகி,
முத்தியே பரமபோக உடல்கொண்ட முறையைப் போலே,
பத்தினி யுடனே சுத்தன் பண்ணுடன் பனுவல் போலே
சத்தியும் சிவனும் போலே தவத்திரு வாழ்க்கை சேர்ந்தான்.

மனங்கொண்ட மாண்பி னாலே, மங்கலக் காதற் செல்வர்
தினங்கொண்ட விரத மேவுந் தீங்கலை வாழ்வை நோக்கிக்
கனங்கொண்ட கரும்பு வில்லுங் கணைகளுந் தளர விட்டே,
அனங்கனும் திகைத்து நின்றான்..முனிவரும் அதிச யித்தார் !

---

* மனை நூலிற் சொல்லப் பெற்ற உயர்ந்த அழகும் சிறப்புச் செல்வமும் உடைய வீடு.

† சலவைக்கல் மாளிகை.

ஈருடல் இயற்கை யாலே எய்தினும் இரண்டு பேரும்,
ஓருயிர், ஓரன் போங்கும், ஒருமையிற் கலந்து நாளும்,
பாருயர் பணிகள் செய்து, பகவனைப் பத்தி செய்து,
வேருடன் கிளையும் போல விரிந்தநல் வாழ்க்கை சேர்ந்தார்.

சேவகர் ஏவல் செய்யச் சேடியர் பணிந்து நிற்கப்
பாவலர் துதிகள் ஓதப் பாடகர் இசைக்க, நல்ல
நாவலர் செவிகள் கொள்ளும் நாவிருந் தருத்தத் தூயர்
சீவனம் சிவபோ கத்தின் சிகரவிண் போன்ற தம்மா !

பண்ணமை யாழும் பாட்டும் பரதமும், கூத்தும் சூழப்
பெண்ணின முறுவல் சூழப் பெருஞ்சுவை விருந்து சூழக்
கண்ணினைக் கவரு கின்ற காட்சிக ளெல்லாஞ் சூழப்
புண்ணிய வசந்தம் போலப் பொலிந்ததப் புனிதர் வாழ்வே !

மானினத் துடனே செல்லு மான்மத மணமே போலும்,
தேன்மது வண்டி னுள்ளே சிலம்புமோங் காரம் போலும்,
கான்மலர் சூடுங் காலைக் கனிமுகச் சாந்தம் போலும்,
வான்சுதை யினிமை போலும் வளர்ந்தது மாசில் வாழ்வே!

பனிமலர்க் காலை அன்னார் பங்கய விழியை நோக்கும் ;
கனிமுக அருணன், அன்னார் கடவுளைத் தியானஞ் செய்து,
புனிதநாண் மலர் சொரிந்து பூசனை செய்யக் காணும் ;
இனியநல் லிசை யருந்தி இரவித்தேர் நடக்கு மன்றே.

மரபுள கடன்கள் செய்து மலர்கனி கொண்டு தூயர்,
அரியமெய்த் தவரை நாடி அடிபணிந் தமர்ந்து, ஞான
விரிவுரை கேட்டு வந்து, வேகமாய்த் தேச சேவை
புரிகுவர் பலனை யீசன் பொன்னடிக் கென்று தந்தே !

உடலினை உழைப்பில் வாட்டி, உயிர்க்கனல் பெருக்கி, நாளும்,
சுடர் விடப் பசித்த போது சுசிருசி யாக வுண்பார் ;
படபடப் பின்றி நல்ல பயனுறப் பேசு வார்கள் ;
இடம்பொழு தறிந்து செய்யுஞ் செய்கையை யினிது செய்வார்.

இன்னுண வருந்தும் போதும், இரவினில் உறங்கும் போதும்,
தன்னறம் பயிலும் போதும் , தனித்திருந் தெண்ணும் போதும்
உன்னதப் பொருளின் போக்கை, உலகுயிர் பெறுநல் வாழ்வை
மன்னுயிர்ச் சேமந் தன்னை மறந்திலார் ; துறந்தி லாரே !

தந்தைதாய், குருமார், சாந்த மாமுனி, தம்மைச் சேர்ந்த
பந்துவர்க் கங்கள் போற்றப் பகலிர வின்றித் தூயர்
சிந்தையைச் சிவத்தில் வைத்துச் செய்தகு செய்கை யெல்லாம்
அந்தரங் கத்தில் அன்பும் ஆர்வமுங் கொண்டு செய்தார் !

அவள் விழி யவனுட் காணும், அவன்விழி யவளுட் பார்க்கும்.
அவன் மனம் அவளுட் பேசும்,அவள் மனம்அவனுள் எண்ணும்
அவன் செயல் அவளைப்போற்றும், அவள் சக்திஅவனைத்தூண்டும்
தவஞ்செய்த தழலிற் கூடுஞ் சதிபதி வாழ்வி தம்மா !

வெய்யிலில் ஆடுவார்கள் வீழ்புனல் மூழ்கு வார்கள் ;
கொய்மலர் மாலைசூடிக் குளிர்வன முலாவு வார்கள் ;
துய்யனைத் தியானிப் பார்கள் ; சுற்றிடும் சித்தந் தன்னைப்
பையவுள் ளடக்கி யோகம் பயிலுவார் துயிலு முன்னே..

உடலினில் உறுதி கொண்டார்; உள்ளத்தில் உறுதி கொண்டார் ;
கடமையைக் காக்கும் போது கருத்தினில் உறுதி கொண்டார் ;
இடம்பொரு ளேவல் கண்டே எதனையும் இயற்ற வல்லார் ;
தொடங்கியசெயல்களெல்லாம் தொடர்ந்துவெல் லுறுதிகண்டார்.

“கண்ணினுள் மணியே, முத்தே, காதலி னுயிரே, இன்பப்
பண்ணினு மினிய சொல்லாய் ! பருகிடத் தெவிட்டாத் தேனே !
விண்ணவர் அமுதே” யென்று வியப்புறப் போற்றிச் சுத்தன்
பெண்ணினுக் குள்ளே யுள்ள சக்தியைப் பெருமை செய்வான்..

“ என்னுயிர் குயிரு நீயே..என்விழிக் கிரவி நீயே..
மன்னவா, நெஞ்சி லுள்ள மாசிலாப் பொருளு நீயே..
என்னவா, எனது வாழ்வின் இகபர சுகமே” என்று
தன்னவன் மகிழக் கௌரி சாற்றுவாள், போற்று வாளே..

பாலுடன் தேனும் போலப் பண்புடன் கலந்த தூயர்
வேலனும் வள்ளி யும்போல், வீறுபெற் றிலகி நாளும்,
சீலமுந் திருவும் சக்தித் தீக்கன லொளியும் ஓங்கி
ஞாலமும் வானும் போலே நலம்பெறத் துலங்கி னரே..

திறமிகு சுத்தன் இந்தத் தேசத்தை யாள வேண்டி
அறமிகு செங்கோ லாட்சி அரசன்பால், அமைச்ச ரின்பால்,
மறுவறக் கற்றான் ; போரின் மாகலை தேர்ந்த வீரன்,
விறன்மிகு விஜய னோடு வெல்படை நடத்தி னானே..

வலைவிரித் தெங்கும் ஒற்றர் வஞ்சகக் கலகந் தூண்ட,
தலைதெறித் தாடு கின்ற தாமத வரக்க னானோன்,
நிலையழி கலிஞன், ஆன்றோர் நீதியைக் குண்டு வீசிக்
கொலைசெயுங்கொள்ளைநோய்போற்கொழுத்ததைவழுத்துவானே.

நச்சராப் போன்ற நெஞ்சன், நல்லதை வெறுக்குந் தீயன்
பச்சைமோ கினிபி டித்த பாதகன் காமக் கள்ளன்,
துச்சமாங் கலியன் செய்யுஞ் சூழ்ச்சியைத் துகளே யாக்கும்
இச்சையே கொண்டு சுத்தன் இணையிலாப் படைகள் சேர்த்தான்.

போர்க்களம் புகுந்த வீரர் புண்களை யாற்ற வேண்டி,
ஆரமு தூட்ட வேண்டி, ஆபத்து வந்த வேளை,
திரவாள் பிடிக்க வேண்டித் திருவையர் படையோன் றுக்கித்
தாரத்தின் கடமை செய்தாள் சமர்க்கலை யறிந்த கௌரி ! 112

12. சிந்தனைப் படலம்

இருவரும் இவ்வகை இனிது வாழுநாள்,
திருமுடி சூட்டிடுந் தினமும் வந்ததால்,
வருபொறுப் பனைத்தையு மனதி லெண்ணியே
துருவுறு சிந்தையிற் சுத்தன் ஆழ்ந்தனன்..

அத்ததி கௌரியும் அணி யிளங்கிளி
ஒத்தநல் லுரையுடன் ஓடி வந்தனள்..
சுத்தனின் சோர்வினைத் துருவிக் கேட்டனள்
எத்தகைத் துயரையும் போக்கும் இன்சொலாள் !

சுத்தன்

கண்ணே ஞானக் கட்டிக் கரும்பே,
சாந்தன் வளர்த்த தத்துவக் கிளியே,
வரமென வந்த வாழ்க்கைத் துணையே,
இலகுயிர் உடலின் இயல்பை நினைத்தேன்..
மனித வாழ்வின் மயக்கை நினைத்தேன்.
எனக்கொரு குறையிலை என்பர் உலகோர் ;
மன்னருக் குரிய உன்னதச் செல்வம்,
மரபினுக் குரித்தாம் அரசியற் பெருமை,
பிறப்பினுல் வந்த சிறப்புகள் ஆயிரம்,
அரியணைச் செல்வம், அழகிய மாளிகை,
அஞ்சிப் பணியும் ஆயிரம் ஆட்கள்,
கட்டிக் காத்துக் கைதொழும் தொண்டர்,
தங்க ரேக்கும், சத்துள பொருளும்,
மல்கி மணக்கும் பல்வகை விருந்துகள்,
செவியை யெங்கே திருப்பினும் புகழ்ச்சி,
பழுத்த கவிகளின் பாராட் டுரைகள் ;
இந்திரன் சந்திரன் இறைவன் என்றெனைப்
புராணம் பாடியும் புகழ்பவர் உண்டு.
விலையில் லாத கலைகளின் இன்பம்..
குழலும் வீணையும் குயிலும் கொஞ்சக்
கீதம் பாடிக் கிளர்ச்சி யுடனே
ஆடு கின்றுர் அரம்பை மாதரே ;
உருவை எழுதி ஓவியர் மகிழ்வார் ;

சிலையிற் செதுக்கிச் சிற்பிகள் புகழ்வார்.
அணிமணி பூட்டி யழகு செய்தே,
பிணமாம் உடலைப் பெருமை செய்து,
கண்ணனே ராமனே கந்தனே வென்றே
போற்று கின்றார் நாற்றிசை மாந்தர்.
இவையெலாம் என்னை ஏளனம் செயுமே !...
கற்பன கேட்பன கற்றேன் கேட்டேன் !
நன்னூல் ஆய்ந்தேன் பன்னூல் படித்தேன்..
எனினும் அறிவை எட்ட வில்லையே !
அரியணை என்னை அழைக்கும் போதே,
போரின் முரசும் பொங்கி முழங்குமே.
ஆபத் தில்லாப் பூபதி யாரே ?
அரசென் றாலே அமர்க்களம் பலவே..
கனத்த கவலையே கனத்த மகுடமாம்.
தலையில் அதனைத் தாங்கிய வுடனே,
பொறுப்புகள் எத்தனை, வெறுப்புகள் எத்தனை,
செருக்குக ளெத்தனை, செருக்கள மெத்தனை,
பொய்ப்புகழ் எத்தனை, பொறாமை யெத்தனை,
எதிர்ப்புகள் எத்தனை, ஏமாற்ற மெத்தனை,
வலைகள் எத்தனை கொலைகள் எத்தனை,
முகத்துதி யாளர் மோசமெத் தனையோ!
எனக்கே யின்னும் இன்பங் காணேன் ;
என்னுட் குறைகள் எண்ணா யிரங்கள்..
மன்னுயிர்க் கெல்லா மனக்குறை நீக்கியே
பசிபிணி யின்றிப் பாவமு மின்றி
அகமகிழ் விக்கும் அரசொன் றெதுவே ?
கொலைக்கள மில்லாக் கொற்றநா டுண்டோ ?
வாட்படை யில்லா வளநா டுண்டோ ?
ஒற்றினம் இல்லாக் கொற்றனும் உண்டோ ?
எளியரைத் திருடா வலியரு முண்டோ ?
எனதியா னென்றே இறுமாந் துலகில்,
அயலார் தம்மை அடிமை கொண்டே
பேச்சிலும் எழுத்திலும் மூச்சிலும் அடக்கு
முறைகளைப் புகுத்திக் குறைகளைப் பெருக்கி,
மனிதான் மாவை மாய்க்குங் கொடுமை
எங்குங் காண்கிறோம் !..எத்தனை காலமாய்
உயர்ந்த நீதி ஒளிர்ந்த பாரதம்
இருளில் வருந்தும் இன்னலைக் கண்டோம்.
கண்ணால் உலகைக் கண்டேன் மானே !

கவலை முகத்திற் கண்ணீர் கண்டேன்..
வான்மழை பொழிய மாநிலம் விளைய,
நாடெலாம் வளமை நல்கிடும் போது,
பட்டினி கிடக்கும் பஞ்சைகள் இருப்பதேன் ?
வயிறா டாமல் மாளிகைச் சுகத்தில்
புரளு கின்றார் போகச் செல்வர்..
உழைத்துழைத் தோடாய்ப் பிழைப்பிற் கின்றி,
அரைவயிற் றிற்கும் ஆதர வின்றி,
ஏங்கித் தவிக்கும் ஏழைகள் மிகுவதேன் ?
மானம் விற்கும் மாதர் மலிவதேன் ?
பிச்சைப் படைகள் பெருகுவ தேனோ ?
வறுமையாற் புலவர் வருந்தலு மேனோ ?
பாலுந் தேனும் பழமும் பொழியும்,
பசுவள நாட்டிற் பட்டினி ஏனோ ?
புண்ணிய வேதம் பூத்தநன் னாட்டில்
பஞ்சமா பாதகம் படர்வதும் ஏனோ ?
கொலைகள வின்றிக் கொடுமைக ளின்றி,
நடுநிலை யாக நாட்டு வளத்தை
அனைவ ருக்கும் அளந்து கொடுத்தே
இடம்ப மின்றி எளிமை பூண்டு,
கொடுவரி போன்ற கடுவரி யின்றி,
உழைப்பும் தகுந்த பிழைப்புந் தந்தே,
வறுமை தீர்த்து மடமை நீங்கக்
கல்வி பரப்பிக் கைத்தொழில் பெருக்கி,
நாட்டாள ரெல்லாம் பாட்டாள ராக
ஆன்மநே யத்தில் அனைவரும் வாழ,
ஊரார் உண்டபின் உண்டு மகிழும்
சீரார் வேந்தன் செகத்தினில் உண்டோ ?
அடக்கு முறையிலா அரசொன் றுளதோ ?
குருதி தோயாக் கோலொன் றுளதோ ?
பயமில் லாத பல்லக் குண்டோ ?
சினவா ளில்லாச் செழுமுடி யுண்டோ ?
அமரில் லாத அரியணை யுண்டோ ?
மண்ணா காத மண்ணர சுண்டோ ?
ஒருநாள் ஒழியா உடலும் உண்டோ ?
எப்படிப் போற்றினும் எவ்வகை காத்தும்,
எல்லாம் ஒருநாள் இல்லையென் றாமே !
உண்மை யறிந்தேன் ! உண்மை யறிந்தேன் !..
பொய்யை விலக்கி மெய்யைப் போற்றி,

ஆத்தும சாந்தம் அடைவதென் கடனே..
இவ்வுல காளும் எந்தையைக் காட்டிலும்,
சாந்த முனிவன் சாந்த வாழ்க்கையே
இன்ப மென்பதை எதிரெதிர் கண்டேன்..
அணிமணிப் பாவாய், ஆருயிர்த் துணைவீ..
நாளையே யிந்த வேளையே நானும்
பொன்முடி சூடிப் புவியைத் தாங்க,
முன்னே நிற்பேன் ; முதுகடல் போலே—
செயசெய முழக்கம் செய்வார் பெரியார் ;
ஆட்டமும் பாட்டமும் அளவறப் பெருகும்.
அடுத்த நாளே.. ஹாஹா பெரும்போர் !
கொள்ளை நோய்போல், கூற்றின் படைபோல்..
கலியன் ஊரைக் கௌவிட வருவான்..
பொழுது முழுதும் போர்க்களம், போர்க்களம் !
வீரக் கொலைகள் ! வீடுகள் கொள்ளை !
தீயின் ஆடல் ! தேசம் நாசம் !
பஞ்சம், பாவம், பட்டினி, கண்ணீர்..
சாவின் வேட்டை, சங்கடம், சங்கடம் !
இவையே போரின் இன்னற் காட்சியாம்..
இரத்தக் காட்சி யென்முன் காணுதே..
சித்தியைச் சுற்றிச் செந்நீ ரோடை..
காண்கிறேன்..அந்தோ..கவலை, கவலை !..
பாம்பும் புலியும் பார்த்தால் அஞ்சுவோம்..
மனித மனத்தில் மமதைப் புலியும்
பொறாமைப் பாம்பும் புகுந்துல கத்தைக்
கொலைக்கா டாக்கும் கொடுமையென் சொல்வேன் !..
மனது திருந்திடில் இனமுந் திருந்தும்,
அகப்போர் ஒழிந்தால் சகப்போர் ஒழியும்.
உள்ளந் திருந்திடில் உலகுந் திருந்தும்..
திருந்துவ தெப்படி ?..மருந்ததற் கென்னே ?
மருந்தா..மகுடமா ?..விருந்தா விரதமா ?..
அரசா, துறவா ? அறியேன் கண்ணே..
வாழ்வின் புதிரெனை மயக்குது பெண்ணே !

* * *

இவ்வா றேங்கும் இறைவனைத் தேற்றி,
ஞானக் கிளிமொழி நவில்கின் றனளே :

13. மாயா மானஸப் படலம்

இதற்கோ கலக்கம் என்னுயிர்க் குயிரே !..
வாழ்க்கை யென்னும் வலிய புதிரை
அவிழ்க்கும் வகையை அனுபவித் தறிந்த
மாயா மானஸர் மாகதை கேளாய்.
இதய புரியின் இறைவ னாகிய
மானஸ ராஜன் வாழ்க்கையின் போக்கை
எண்ணி யெண்ணிக் கண்ணீர் வடித்தான்..
காமம் வெகுளி கலக்க மாகிய
தாமத வரக்கர் சாந்த மழித்துப்
புரட்சி செய்து பொய்யிருள் பரப்பி..
அறிவைக் கெடுக்கும் அக்கிர மத்தைக்
கண்டு மன்னன் கலங்கி யழுது..
வாழ்வே துன்பம், வலியத் துறந்து
காட்டிற் கோடலே கடமை யென்று
மாயை என்னும் மனைவியை விட்டு,
சித்தா ரண்யம் சேர்ந்தொரு குடிலில்
கண்ணை மூடிக் கடுந்தவ முயன்றான்...
வீரக் கோமான் விரக்தியைக் கண்டு..
பகைவர் நாட்டைப் படையெடுத் தாரே..
அரசி தானே அரியணை வகித்துப்
பெரும்படை கொண்டு பிறகிடப் பகைவர்
வீரப் போரில் வெற்றி பெற்று
மானங் காத்தாள் மாயா தேவியே !
புறப்பகை வென்றதும், பொருளுணர் மாயை
கணவனைத் திருத்தக் கருத்துடன் எழுந்தாள்..
சித்த வனத்திற் சிறுகுடி லமர்ந்து
மானஸ ராஜன் மனப்போர் புரிந்தான்.
உடலை வெறுத்தால் உள்ளம் அடங்கும்,
பட்டினி போட்டால் பத்தும் அடங்கும்..
என்று மானஸன் எல்லாம் உதறிக்
கட்டையை நீட்டிக் கல்லிற் படுத்தான்..
சித்தப் புயல்கள் சீறி யடித்தன..
பசியும் பிணியும் பாய்ந்து கௌவின..
"வாழ்வையும் அறியேன்..வனத்தை யடைந்தும்
துறவையும் அறியேன் முறையோ" வென்று
கதறும் போது களிநகை பூத்த
அழகிளந் துறவி ஆங்கே வந்தான்..

"வாராய் ! துறவின் வகையைச் சொல்லாய்.."
என்று மானஸன் ஏங்கி யழுதான்.
"விட்டலே துற" வென விளம்பினான் முனிவன்.
"விட்டேன் ஆடை, விட்டேன் ஓட்டை,
விட்டேன் தண்டு, விட்டேன் குடிலை"
என்று மானஸன் எல்லாம் எரித்து
ஆற்றிற் சாம்பலை அள்ளிப் போட்டு
முத்தி பெற்றேன் சித்தன்யா னென்றே
எண்ணி ஒருகணம் கண்ணை மூடினான்.
ஆஹா மனப்புயல் அடித்தது மீண்டும் !..
" இன்னுமென் செய்வேன்..இளந்திரு முனியே"
என்று கதறினான் ஏங்கிய மானஸன்..
" விட்டலே துற " வென விளம்பினான் முனியே.
" இருந்த குடிலையும் எரித்து விட்டேன்..
இன்னும் பாக்கி இவ்வூன் குடிலே..
அதையும் நதியில் ஆழ்த்தி விடுகிறேன் ..."
என்றடி வைத்தான்..எதோ பின்னே
நின்று தடுக்க நினைவற நின்றான்..
பிறகு தைரியம் பிறந்து தாவி
இன்றுன் சுமையை எறிந்தேன் உடலே !
என்று வெள்ளம் இழுத்திடச் சென்றான் !
ஐயோ தெய்வமே.. ஆருயிர் காவாய்...
கூக்குரல் எழுந்தது மூக்கினீர் ஏறவே !
ஆற்றுடன் போரிட் டலறினான் பாவி !
முனிவன் குதித்து, முடியைப் பற்றிக்
கரையிற் சேர்த்துக் காத்தான் ஆளை..
" துறவினி வருமோ ?..சுதந்தரம் வருமோ ?.."
என்று புலம்பும் ஏழையை நோக்கி
"ஏனிக் கவலை ? இயம்பாய் யார் நீ ?..
உன்கதை யறிந்தபின் ஓதுவேன் வழி"யென
இளமுனி கேட்டவே, " இதய புரியின்
அரசன் மானஸன் யானே ; வாழ்வின்
தொந்த விகாரத் தொல்லையைத் தாங்கேன்.
புரட்சிப் புயலைப் பொறுக்க மாட்டேன்..
துன்பமே கண்டு துறந்திவண் வந்தேன்.
இன்ப விடுதலை எய்தவே முயன்றேன்..
இன்னுந் துன்பமே என்விதி முனியே ;
நாட்டைத் துறந்தேன் ; வீட்டை விட்டேன்,
குடிலை விட்டேன் கோவணம் விட்டேன் ...

உடம்பையும் விட்டேன்..உயிர்விடப் போனேன்..
துறக்கும் வழியைத் துலக்காய் '' என்றான்..
''விட்டலே துற''வென விளம்பினன் முனிவன்..
'' எதையினி விடுவேன்.. எளியேன் ஐயா..
மனது நிலைக்க வழியுங் காணேன்...
வறட்டுத் துறவால் வருபயன் காணேன்''
என்று மானஸன் இரங்கும் போது..
இளமுனி நன்றாய் உளந்திறந் துரைத்தான் :—
''விட்ட லென்பது வீட்டை யன்று,
நாட்டை யன்று நல்லுட லன்றே..
ஆணவப் பாசம் அறவே விட்டலே..
மனப்பற் றறுத்தலே மாசிலாத் துறவாம்.
ஆளுக் குள்ளே அமரன் உள்ளான்.
அவன்சுத் தாத்மன் அறிவே யானோன்—
அவனே மனிதன், அவனே தேவன்—
அவன்அவள் நீநான் அவைஅது வெல்லாம்.
உடலவன் பூணும் உடையே யாகும்.
உயிரும் அன்னோன் உயிர்ப்பே யாகும்.
ஐம்பொறி புலன்கள் அவனுணர் கருவியாம்.
அந்தக் கரணம் மந்திரி போலாம்.
அவனே புருடன், அவனுறை வீடே
இயற்கை யுடல்மன மெல்லா மாமே.
தனுவொரு விளக்குத் தண்டு போலாம்.
உள்ளம் தகழியாம் ; உணர்வே நெய்யாம்.
சுத்தான் மாவே நித்தியச் சுடராம்.
உயிர்த்திரி மேலே உணர்வுண் டொளிரும்
சுத்த ஜோதியே சத்தியப் பொருளாம்.
அதனைச் சார்ந்தே அனைத்தும் மெய்யாம்.
துய்யதன் வீடே மெய்யெனப் படுமே..
மெய்களின் வீடே மேதினி யாமே.
உள்ள மட்டும் உலகுடல் உண்டாம்.
உள்ளறி வுடனே உடலுல கத்தைத்
தெள்ளத் தெரிந்து திருவுற வாழ்ந்தால்,
மானிட வாழ்வு மங்கல மாமே..
பளிங்காற் பார்த்தாற் பலநிறங் காண்பபோல்,
மனத்தால் நோக்கின் மண்ணியல் பலவாம்.
முக்குண தொந்தச் சிக்கலில் லாமல்,
நல்லது வரினும் பொல்லது வரினும்,
சமதை யுடனே தாங்கிவென் றடங்கி

அகமும் புறமும் ஆனந்த மாகிப்
பிறவிப் பயனைப் பெற்றிட லாமே.
மண்ணில் லாது மலர்கனி யுண்டோ ?
பெண்ணில் லாமற் பேரா னுண்டோ ?
கண்ணில் லாமற் காட்சியு முண்டோ ?
உடலில் லாமல் உயிர்வாழ் வுண்டோ ?
குடிலில் லாமற் குடித்தன முண்டோ ?
அகத்திற் குப்புறம் ஆதார மாகும்.
தரையே நீரைத் தாங்குவ தொப்பவே
உள்ள பொருளை உடையது புறமாம்.
அகம்புறக் கலப்பே இகவாழ் வாமே.
உள்ளுணர் வுடனே உலகைக் கண்டால்,
எப்பொருள் யாதோ அப்பொருள் உலகாம்
சகவாழ் வென்பது சாதன நிலயம்.
உள்ள நிலத்தை உழவுசெய் யாது,
சும்மா போட்டுச் சோம்பி யிருந்தால்,
பிழைப்பு நடக்குமா ? உழைப்பி னாலே
பயிர்விளை வித்தால் உயிர்களுக் குதவும்.
அதுபோல், காணும் அகில வுலகையும்,
அநித்தியம் என்றுநாம் அசட்டை செய்தால்,
பெருநிலப் பயனைப் பெறுமல் இழப்போம்.
ஊனுடல் பொய்யென் றுதறி வெறுத்தால்,
உடலின் பயனை அடைந்திட மாட்டோம்.
மகவுநோ யுற்றுல் மருந்தால் ஆற்றி,
அன்புடன் கொஞ்சும் அன்னையே போலே,
மனநோய் தீர்த்து வாழ்க்கையைப் போற்றி
வாழ்வாங்கு வாழலே வாய்மை நெறியாம்.
கவலை மனத்தின் கலக்கமே யாகும்.
அகந்தை மனத்தின் அழுக்கே யாகும்.
இயற்கை யான்மா இன்ப மயமாம்.
அகில வாழ்வாம் அகநா டகத்தில்,
ஒவ்வொரு வர்க்கும் ஒவ்விய வேடம்.
இயற்கை யாகவே இருப்பதைக் காணீர்..
இயல்பாம் வேடம் இயல்பாய் நடித்தே,
இயல்பா யிருந்தால் இன்புற லாமே !
இறந்ததைப் பற்றி வருந்தியென் பயனோ ?
உள்ள மட்டிலும் உள்ளதைக் கொண்டு
தன்னிலை கண்டு முன்னிலை யுலகம்
சிவமய மான திருக்கோயி லென்றே,

அருட்பணி செய்வோம்..அதனால் ஆன்மா
விசால மாகும், விகாரம் ஒழியும்.
அறிந்த சனகன் அரியணை யமர்ந்து
புரிந்த செயலைப் புரிவது நலமே.
ஆருல கெல்லாம் அனுபவச் சாலை.
நமக்கியல் பான நலங்களைச் செய்து,
பலனை ஈசன் பதத்தில் வைத்து,
வழிபா டாக வாழ்வை வாழ்வோம்....."
என்னும் இளமுனி இன்சொலைப் பருகி..
" மாயா, கண்ணே நீயும் இப்படி
உபதேசித்தாய்..உண்மை இதுவே..
காற்றும் பாரும், கதிரும் கடலும்,
இயல்பாய்க் கடமையை இயற்றுவ தொப்பவே..
நமக்கேற் பட்ட நல்ல கடமையை
அகந்தை யின்றி ஆண்டவன் பூசையாய்
உள்ள மட்டும் உண்மையாய்ச் செய்தால்..
மற்றவை இறைவன் மனப்படி நடக்கும்..
விட்டேன் எனது விநோதத் துறவை..
மனத்துற வுடனே மன்னறம் புரிவேன்..
மாயா என்னை மன்னிப் பாயா..."
என்று மானஸன் எழுந்து நிற்கையில்
காஷா யத்தைக் களுக்கென் றுதறி..
இளமுனி..மாயையாய் இலகிநின் றாளே !
ஒருவரை யொருவர் உள்ளறிந் திருவரும்
இதய புரிசென் றினிதர சேந்தி
இகபர சுகங்கள் எய்திவாழ்ந் தாரே !

சுத்தன்

கண்ணே நல்ல கதையி னாலே
உண்மைப் பொருளை உணர்த்தினை வாழி !
சித்தந் தெளிந்தது.. தேசப் பணியே
தெய்வப் பணியெனச் செய்வோம் வாராய் !
தந்தை தந்த தங்க முடியைத்
தரிப்போம் ..அரியணை யிருப்போம்... எனினும்
வறுமை மடமை வஞ்சக் கலியன்
கொடுமை நீங்கிக் குவலயம் வாழவே
அள்ளி யளிப்போம் ஆருயிர் வாழ்வை..
அத்தகை வாழ்விற் கமைந்த சக்தியே !

கௌரி

ஏற்போம் பொன்முடி இருவரும் ஒன்ருய்,
நாட்டுப் பணிக்கே நம்முயி ரீவோம்..
எங்கே சுத்தன் அங்கே கௌரி..
ஒவ்வொரு மூச்சும் திவ்விய சேவை..
யோகங் கலந்து தியாகம் புரிவோம்.
உடலும், இரத்தமும், உயிரும் உமக்கே..
அமைதி தன்னிலும், அமர்க்கள நடுவும்
உம்முட னிருப்பேன்.. உயிருடன் உடல்போல்.
அன்புப் பணியில் ஆருடல் போயினும்..
ஆத்தும சுத்தியால், அருந்தவச் சக்தியால்.
அருவா யுதவுவேன்.. உருவொன் றேந்தியும்
வருவேன் வெற்றி தருவேன் உமக்கே !
உருவாய் அருவாய் உமக்கென வாழ்வதே
இன்ப மனைத்திலும் இன்பமா வதுவே.
"என்மன மாவதும் உன்மன"மென்றே
சுத்த னுங்கே சொல்லும் பொழுதே,
"வாழ்க வாழ்க.. வரம்பெறு காதலர்..
அன்புக் காதலர் ஆருயிர்க் காதலர்;
உங்கள் வாழ்வால் உலகம் வாழ்"கெனப்
பாரத முனியுடன் பார்த்திபன் வந்தான்.
இருவரும் பெரியார் இணையடி வணங்கித்
தத்தம துள்ளஞ் சாற்றிய பின்னர்,
" நாளை யுனக்கு நளிர்முடித் திருநாள்..
இன்றுனக் கினியவை இயம்பக் கேளாய்.."
என்றலுந் "தந்தை, இச்சை புரி"கென..
வணக்க முடனே மகனுந் தொடர்ந்தான்.
பாரத முனியும் பாராள் வேந்தும்
மன்னுயிர் காக்கும் மன்னறந் தன்னை
இனிவரும் வேந்தனுக் கியம்பினர்; அதனை
நாளைக் .. காலை நாட்டார் முன்னே
சுத்த ராஜன் சுடர் முடி சூடிப்
பேசிய பேச்சிற் பேசிடு வோமே !

14. பட்டாபிஷேகப் படலம்

அங்க திர்க்கொடி ஆனந்தத் தென்றலிற்
பொங்கி யாடிப் புகழ்பெறுஞ் சித்தியில்,
மங்க லக்கதிர் மாண்புற வீசியே,
செங்கதிர் தருஞ் செல்வன் எழுந்தனன்..

தன்னைத் தாங்குந் தருமக் கொடியினைப்
பொன்னைத் தாங்கும் புதுநகை வீசியே..
உன்னைத் தாங்கிடும் உத்தமன் வாழ்கென
வன்னக் காலை மகிழ்வுற் றெழுந்ததால்..

விண் விழித்தது ; வேக வினைப்புவி
கண் விழித்தது ; காற்றுக் குழலினிற்
பண் விழித்தது ; பாண்வண் டிசைத்திடத்
தண் டலைமலர் தாங்கி விழித்ததால்.

" இறைவன் வெல்"கென் றியம்பி இனிமையாய்ப்
பறவைக் கூட்டமும் பாடிக் களித்தன.
கறவை மாடுகள் கட்டறத் துள்ளின ;
நறவை யூற்றின நாண்மலர்க் கூட்டமே !

பரம சுந்தரி பார்வதி பூமகள்,
வரம ருள்கலை வாணி யிலக்குமி,
அரம களிரும் ஆர்கலி போலவே
குரவை யாடினர் கொங்கை குலுங்கவே.

அரசன் வாழ்கென் றரிய கவிகளின்
குரலி சைத்த ; குழலுடன் வீணையும்
சரள நல்லிசை தந்தன; மங்கல
முரசொ லித்தன மூரி முழக்கொடே.

அணிகள் ஆடும் அழகிய சித்தியின்
மணிகள் ஆடின ; மந்திர மார்த்தன;
வணிகச் செல்வமும் வாட்படை வீரமும்,
பணிக ளேந்திப் பரபரத் தாடின.

அவனி மாந்தர் அரசனைப் போற்றியே
பவனி வந்து பஜனைகள் செய்தனர் ;
தவம் பலித்தது சத்தியம் வென்றது,
நவயு கச்சுடர் நாடிய தென்றனர்.

திரும்பு மெத்திசை சித்தியை நோக்கினும்,
மருங்கெ லா,மனை வாயில்க ளெங்குமே
கரும்பு வாழை, கமுகிள நீர் பனை
அரும்பு பூக்கள் அணிநகை செய்தவே !

பொன்னும் பூவும் பொலிமணி யாரமும்,
மின்னி வில்லிடு மெல்லிடை மாதரார்,
அன்னங் கிள்ளை யணிமயில் கற்பகம்
என்ன மங்கலம் ஏந்தி நடந்தனர்.

வீறு மிக்க விறலணி வீரர்கள்,
நூறு நுண்கலை நுட்பம் விளங்கிடும்
பேறு மிக்க பெருந்திருத் தாங்கியே,
ஏறு போலத் தலைநிமிர்ந் தேகினர்.

தேரில்,முத்துச் சிவிகையில் ஏறியே
பாரின் மன்னர் பரிசுடன் வந்தனர்,
வீரர் யானையில் வேகப் புரவியில்,
பேர ருவிப் பெருக்கெனப் போந்தனர்.

திருமுடி மண்டபம்

மன்னன் வாழ்கென வாழ்த்தி யனைவரும்,
பொன்னின் மாமணி மண்டபம் புக்கதும்,
அன்னன் னருக் கமைந்த நிலையிலே
அன்னன் னர்முறை யாக வமர்ந்தனர்.

வச்சி ரத்தின் வளைவுகள் ஏந்திய
பச்சை நீலம் பவள மிழைத்ததூண்,
மெச்சு நற்கலை மேவிய பொற்சுவர்
உச்ச மாமணி ஓங்குயர் கோயிலே.

கோம ணிச்சபை கொண்ட அரியணை,
தூம ணிகள் சுடரவிண் மீனென,
மாம யில்வடி வாகி, மனங்கவர்
தாம ரைத்தவி சேந்திய தானமே. 60

பரத னர்முதற் பாரத மன்னவர்
அரத னமுடி தாங்கி யறத்தினை
விரத மாக வியனுறக் காத்ததிச்
சரத மாகிய தங்கத் தவிசிலே..

முதுந லத்தையும் முன்னுல கந்தரும்
புதுந லத்தையும் பொன்னெனப் போற்றிய
சதுரர் ஆண்டு தழைத்த பழம்பெரும்
பொதுந லப்புகழ் பூண்ட தவிசிதே.

தரும தேவதை தாங்கும் அரியணை,
கரும வீரர்கள் காத்தசிங் காதனம்.
திருவி னோங்கிய தீரர் உயிர்தரப்
பெருமை கொள்பலி பீடமி தென்னுவாம்..

இத்தகை யிசை யேறிய பீடத்தில்,
சத்தியன் கரந் தாங்குசெங் கோலையே
சுத்த னேந்திச் சுடர்முடி சூடிட
ஒத்த வேளைவந் துற்றது காண்மினோ !

சுத்த கௌரியர் எழுந்தருளல்

மங்கல மறைக ளோத, வாத்தியம் பலமு ழங்கப்
பொங்கிய உவகை தூண்டப் புண்ணியப் புனலில் ஆடி,
தங்கமு மணியும் பட்டுந் தாமமும் அணிந்து சுத்தன்
மங்கல மனைவி யோடு மரகதத் தேரில் வந்தான்..

கற்பனை கடந்த வீரக் கதிர்மணி யழகன் றன்னைக்
கற்பகப் பூங்கொம் பேந்துங் கனகமா மயில னாள,
"அற்புதம்", என்று போற்றி ஆடவர் மலர்சொ ரிந்தார்.
கற்புள மாதர் பாடி ஆலத்தி காட்டி னாரே !

பொங்கிய உவகை பூத்த பொதுஜனம் வாழ்த்தெ டுக்கத்
திங்களார் கடலைப் போலச் செயசெய முழக்க மோங்க,
மங்கல வாத்தி யங்கள் வழங்கிநல் வரவு கூறச்
சங்கின முழங்கச் சுத்த கௌரியர் சபைக்கு வந்தார்.

அரசன் கோலங் கண்டு சபை மகிழ்வுறுதல்

சுடர்பெறு மைந்தன் கோலங் கண்டதுந் தூய பெற்றோர்..
உடல் சிலிர்த் துவகைகூற உளமெலாம் பேரின் பத்தின்
கடல்மடை திறந்து பாயக் கண்மலர் களிதேன் சிந்தப்
படபடத் தன்பு பொங்கும் பரவசங் கொண்டார் மாதோ !

சத்தியன் மகனை அணைத்து வரவேற்றல்

துங்கமா மலையைப் போலே தோளுயர்ந் துவகை விம்மத்
தங்கமாப் புதல்வன் றன்னைச் சத்தியன் மகிழ்ந்து போற்றி,
"நங்குல மணியே, சித்தி நாயகா வாழ்க !" வென்றே
செங்கையா லணைத்து வீரச் செல்வன்மார் பணைந்தான் மாதோ!

அரியணை வகித்தல்

தாயினை வணங்கித் தந்தை தாளினைப் பணிந்து, தன்னைச்
சேயென வளர்நல் லாசான் சேவடி பணிந்து, மற்றும்
நேயங்கொள் சித்தி மானை நீதியிற் சிறந்தார் தம்மைத்
தூயனுந் துணைவி யோடு தொழுதணை யேறி னானே..

வேந்தர் மாலை சூட்டல்

குஞ்சர நடையினனும் குலவன்ன நடையி னாளும்
அஞ்சுடர் மணிகள் வீசும் அரியணை யேறும் போதே,
நெஞ்சுயர் ஆர்வம் விம்ம நீண்மலர் மாரி பெய்து,
செஞ்சுடர் மாலை சூட்டி, ஜெய ஜெய வென்றார் வேந்தர் !..

"ஒவ்விய வேளை" யென்று பாரத முனிவன் ஓதத்
திவ்விய கீத மார்க்கத் தேவரும் ஆசி கூற,
செவ்வரி படர்ந்த கண்ணன் சித்தியை ஆண்ட மன்னன்,
அவ்வவை அடங்கிக் கேட்க ஆர்வங்கொண் டினைய சொன்னான்..

சத்தியன்

தங்குயிர்க் குலத்திற் கெல்லாந் தயாபர மூர்த்தி யாகி,
எங்குல தெய்வமாகி, இப்புவிக் கோயி லுக்கு,
மங்கலப் பணிகள் செய்ய மதித்தெம்மை அருளி னூட்டும்
துங்க மாம் சுத்த சக்தி துணை நலம் போற்று வோமே !..

புண்ணிய பூமி மக்காள், புலவர்காள், அமைச்சர் காளென்
வெண்மதிக் குடைக்கீழ் ஓங்கும் வேந்தர்காள், சாந்தச் செல்வீர்,
திண்மன வூழியர்காள், சித்தியின் செங்கோ லாட்சி,
எண்பதாண் டுகளாய்த் தாங்கி இயல்புற நீதி காத்தேன்..

திருவரு ளாலே இந்தத் திவ்விய மைந்தன் வந்தான் ;
குருவருள் பெற்றுன் செய்ய குணமலை யான தூயன்.
பொருவறு வீரன் ; இந்தப் புண்ணிய பூமி வாழுந்
தருமமே யனையான் ; ஞான சாகரன் கௌரி நாதன் !..

நாசஞ்செய் கலியை வீழ்த்தி நாட்டிடப் புதுயு கத்தைத்
தேசஞ்செய் தவத்தால் வந்தோன்..சித்தியின் சிகர ஜோதி.
நேசஞ்செய் அன்ப ருக்கு நிகரிலாத் துணைவன் ; செல்வி
வாசஞ்செய் மார்பன்; அன்னேன் மன்னவன் ஆவான் இன்றே.

எண்ணமுஞ் செயலுஞ் சொல்லும் ஈகையும் அருளும் இந்த
மண்ணில மாந்தர் வாழ மாசிலாப் பணிக ளாக
நண்ணிய கரும வீரன், ஞானத்திற் பெரிய தீரன்,
புண்ணியக் குரிசில் உங்கள் புரவல னுனன் மாதோ !

கதந்தரும் அரக்கர் சேனை காடெனச் சூழ்ந்த போதும்,
மதந்தரு மவர்செ ருக்கை வாளினுல் வெட்டிச் சாய்ப்பான்..
இதந்தரும் தவத்தி னுலும் இரத்தத்தைச் சிந்திடாமற்
சுதந்தரந் தருவான் கௌரி காந்தனும் சுத்த வேந்தன்..

இந்திரன் போன்ற தீரன், இவனுக்கென் இறுதி நாளில்,
முந்தையர் வழியே வந்த முடியுடன் கொடியுங் கோலுந்
தந்தனன் ; பொதுஜ னத்தின் சம்மதம் அதுவே யாகும்,
மந்திரக் கிழவ ரெல்லாம் மதித்தநன் முடிபி தாமே..

முன்செய்த தீர்மா னத்தின் முறைப்படி மகனை இன்றே
மன்செய்து நானும் என்றன் மனைவியு மகிழ்வோம் என்றே
பொன்செய்த மகுடஞ் செங்கோல் பொலிகதிர்க் கொடியுந்தந்து
மின்செய்த முறுவல் காட்டி முனிவனை விரும்பிப்பார்த்தான்.

முடி சூட்டல்

நாரத முனிவன் ஆங்கே பரிசுத்தக் கைக ளாலே,
பூரண மகுடம் வாங்கிப் புண்ணிய மலர் சொரிந்து,
ஆரணம் ஓதி, ஈசன் அருளினைப் போற்றி செய்து,
பேரணி மன்றி லுள்ள பெரியவர் ஆசி பெற்றான்.

அலைகடல் போல வேத கீதங்கள் ஆர்க்க, ஆர்க்க,
வில்லிலா மணிப திந்து வியனுறப் புலவர் பொன்னின்
கல்லெலாந் துலங்கச் செய்த கவின்முடி கௌரி சுத்தன்
தலையினிற் சூட்டி ஆசான் 'சயசய' முழக்கஞ் செய்தான்..

கொழுமணி நிலவ நாப்பண், கோகினூர் வைரம் வைத்த
செழுமணி மகுடந் தாங்குஞ் செம்மலைப் பார்த்துப் பார்த்து,
முழுமன முவகை தூண்ட முறைமுறை அமைச்சர், மன்னர்
தொழுதனர் "சுத்த ராஜன் சுபமுற வாழ்க" வென்றே..

ஆழிசூழ் உலக மெல்லாம் அன்புடன் அறமும் ஓங்கத்
தோழமை கொண்டு மாந்தர் சுதந்தரந் தழைத்து வாழ,
வாழிய சுத்த ராஜன் வாழிய கௌரி ராணி,
வாழிய சித்தி மன்னர் வழிவழி வாழ்க மாதோ !

ஆசிகள்

தண்மலர் பொழிந்தன ; தரள மாலைகள்
எண்ணில பொழிந்தன ; இசைபொ ழிந்தன.
கண்மலர் பொழிந்தன ; களிது ளக்குறப்
பண்மலர் பொழிந்தன பாலுந் தேனும்போல் !.. 160

வெல்கநம் வேந்தென வீரர் ஆர்த்தனர்,
நல்லிசைப் பாவலர் நன்றி சைத்தனர் ;
செல்வரும் அரசருந் திரைக ளீந்தனர் ;
பல்வகைத் தானங்கள் பரந்த வெங்குமே !

பொதுஜன மகிழ்வுரை

இல்லற மறிந்தவன் ; இனிய வாழ்வுசேர்
நல்லற மறிந்தவன் ; நாட்டை யாண்டிடுந்
தொல்லற மறிந்தவன் ; சூரன் வீரன்;செஞ்
சொல்லற மறிந்தவன் சுத்தன் வாழ்கவே !

காலத்தை யறிந்தவன் ; காலம் வேண்டிய
கோலத்தை யறிந்தவன் ; குறைகள் போக்கியே
ஞாலத்தைத் திருத்திடு ஞான வீரனும்
மாலொத்த கருணையம் மன்னன் வாழ்கவே !

நவையறு கேள்வியன், நல்ல நூல்களின்
சுவைகளைத் துய்த்தவன், சொல்லைச் செய்பவன்.
அவைகளுக் கணிகல மான பண்டிதன் ;
புவியினும் பரவிய புத்தி மிக்கவன்.

அருந்தவச் செல்வரின் ஆசி பெற்றவன் ;
பெருந்தவ முயன்றவன் ; பிறருந் தானெனுந்
திருந்திய சிந்தையன் ; தேச சேவையே
பொருந்திய தவமெனப் புரியுந் தீரனே.

வெங்குல வரக்கரை வீழ்த்தி வென்றவன் ;
சிங்கத்தின் வீரமும் சித்தர் உள்ளமும்,
பொங்கிய பூரணப் புலவன் ; இன்னவன்
எங்களுக் கரசெனின் இன்ப மென்சொல்வோம்..

இவைபொது ஜனங்களின் இதய வாக்கென
நவையறு மந்திரர் நவிலக் கேட்டதும்,
அவையினில் உள்ளவர் அகம கிழ்ந்தனர் ;
அவரவர் திருமுடி யடைந்த தொப்பவே !

15. சுத்த வாசகப் படலம்

மூரி போன்று முழங்கு சபையினர்
ஆர வாரம் அடங்கி அமர்ந்ததும்,
சூரியச் சுடர் போலநம் சுத்தனும்
சீரிய பல செப்ப வெழுந்தனன்..

எல்லாம் வல்லவன் இறைவன் ஒருவனே.
எல்லா வுலகும் இறைவன் ஆலயமே..
உயிர்க்குலம் இறைவன் உடலென லாமே.
அவனை முற்றிலும் அடைக்கலம் புகுந்து,
தந்தையுந் தாயுந் தந்தநல் லரசை,
அந்தண் முனிவர் ஆசியைப் பெற்று,
மந்திரிக் கிழவர், மகிதல மக்கள்,
சம்மதம் பெற்றுச் சான்றோர் நாட்டும்
அறவழி நாட்டை ஆளப் புகுந்தேன்.
ஆட்சி யென்பது மாட்சிமை கொண்ட
பொதுநலத் தொண்டெனப் புகலுவ தாமே.
அரசன் வருவான், அரசன் போவான்,
அரசும் குடியும் அறமும் நிலையாம்.
என்னுயிர் மக்காள், என்னர சாட்சியில்
மன்னன் பொதுஜன மனமே யாகும்.

நெருங்கிரு நன்றென நீண்ட தோளால்,
எந்தை தாங்கி யிசைபெறும் அரசில்,
இன்னும் இன்னும் இன்புற நீங்கள்,
செங்கோல் செலுத்தலே சிறப்பெனக் காமே.
அறிவிற் சிறந்தீர், அன்பிற் சிறந்தீர்,
பெரியீர், உங்கள் உரிமையை மதித்தே
நாடே எனது வீடென மதித்தே,
நிறைநல மோங்க முறைவகுத் தாளும்,
ஆர்வங் கொண்டேன், அருந்துணை தருவீர்.
கள்ளுங் களவும், கற்பின் அழிவும்,
கொலைவளர் ஊனும் விலைமகள் வாழ்வும்,
சாதிப் பித்தமும், சமய வெறிகளும்,
இடம்பக் கூத்தும், இரணியச் செருக்கும்,
அடிமைத் தனமும் கொடிய வறுமையும்,
மடமைப் பிணியும், மாற்றார் தொல்லையும்,
வஞ்ச நரிகளின் இலஞ்ச வலையும்,
இந்த நாட்டில் இல்லா தாக்குவேன்.
அன்புப் பெருக்கால், ஆன்மநே யத்தால்,
ஒற்றுமை யோங்கி ஒருகுல மாகவே
மக்களெல் லாரும் வாழச் செய்வேன்.
ஒற்றுமை நாட்டின் உயிரே யாமே !
கல்வி யறிவே கண்ணென லாமே.
எண்ணும் எழுத்தும், இவ்வுல கறிவும்,
ஒருகைத் தொழிலும் ஒவ்வொரு வர்க்கும்,
இறுமாய் உதவுதல் என்முதற் கடனே.
அவரவர் புலமையை அளவறத் தூண்டி,
கலைகளைப் போற்றிப் புலவரைப் போற்றி,
உலகெலாம் ஞான ஒளிபெறச் செய்வேன்.
ஒவ்வொரு கையும் உழைத்தே உண்ண
வேலை வகுப்பேன், வேலையின் பயனை
அவரவர் முறைப்படி அனுபவிப் பாரே.
எனது குடைக்கீழ் எந்த உயிரும்,
பட்டினி கிடக்கப் பாரேன், கேளேன்.
உலக மக்கள் உண்டதன் பிறகே
மணிய டித்ததும் மன்னன் உண்பான்.
உலக மக்கள் உடுத்த நாளே
ஆடைகள் வாங்கி அரசன் அணிவான்.
பிச்சைப் பிழைப்பும் கொச்சை நினைவும்
அச்சப் பேயும், அடிமை விலங்கும்,

மனிதனை மனிதன் மதியாச் செருக்கும்,
ஒருவர் உணவை ஒருவர் பறித்தலும்,
நோவினைச் செய்யும் தீவினை யாமே..
குடிகளின் இன்பமே கொற்றவன் இன்பம்,
குடிபடுந் துன்பமே கோவுறுந் துயராம்.
சுயநலம் வஞ்சச் சூழ்ச்சிக் கிடமாம்.
அடக்கு முறைகள் ஆத்திரங் கிளப்பும்.
பொய்கோள் பொறாமை புரட்சியைக் கிளப்பும்,
குடிகளின் உள்ளக் குறைகளை யறிந்தே,
கையென உதவிக் கண்ணென மதித்து,
நடுநிலை யாட்சி நடுவதென் கடனே.
அன்பே அரசின் ஆணிவே ராகும்.
வாளினும் அன்பே வலிமை யுடையதாம்.
ஆருயிர் வாழ்க்கை அன்பே யானால்,
கலியன் இருக்கக் காரண மேனோ ?
அன்பிலாக் கொடியரின் ஆணவச் செருக்கே,
அருளிலாத் தீயரின் ஆசைப் பிணியே,
இகலாய்ப் பெருகி இன்னல் செயுமே.
அன்பே ஆக்கம், அன்பே நோக்கம்.
அன்பே என்றன் ஆயுத மாமே.
மன்னுயி ருடலே என்னுயி ருடலாம்.
எந்த வேளையும், எந்த வுயிரும்,
மணியை யடித்தால், மன்னன் விரைந்து
வழக்கைக் கேட்டு வருத்தந் தீர்ப்பான்.
அமைச்ச ருடனே ஆராய்ந் துடனே,
குறையைக் களைவான் ; குலமுறை யிதுவே.
சிறியரென் றெவரையுஞ் சிறுமை செய்யான் ;
பெரியார் சொல்லைப் பேணி நடப்பான்
களைகளை யெல்லாங் களைந்து, செழுமைப்
பயனே மிகுந்த பயிர்களை வளர்ப்பான்.
மாற்றார் மனதை மாற்றப் பார்ப்பான்,
கூற்றே யாகிற் கூற்றெனப் புடைப்பான்.
புதர்ப்புலி போன்று பொல்லன செய்யும்
அதர்மப் பேய்களை அழிக்கக் கூசான்.
மனிதனைத் தேவனாய் மாற்றுங் குணங்களை
வளர்த்தலே இந்த மன்னவன் கருத்தாம்.
காட்டு விலங்கினுங் கடைக்குணக் கலியரை
வேரோ டழித்தலே வீரர் கடமையாம்.
குடிலிற் புகுந்த கொடுவிடப் பாம்பைத்

தடவிக் கொடுக்கும் தயவினை வேண்டேன்..
நச்சுப் பார்வை நலித்திடலே கடனும்..
பாம்பினுந் தேளினும் பாயும் புலியினும்
கொடியவரைப் புடைத்துக் குவலய மாந்தர்
பயமற வாழவே படைத்திறல் சேர்த்தேன்.
இதோ நம் பகைவன் அதர்ம வெறியன்
அசுரப் படையுடன் அமர்க்களஞ் செய்வான்;
ஆயுதப் படைகள் ஆயிரந் திரட்டி
எதிரியை வீழ்த்தி இந்தநந் நாட்டில்,
அன்பும் அறமும், அருளான்ம வாழ்வும்
பண்புட னோங்கப் பணிபுரி தற்கே
தருமக் கொடியைத் தாங்குகின் றேனே..
முன்னோர் தந்த பொன்னார் கொடியிது
தந்தை யளித்த தருமக் கொடியிது ;
விண்சுடர் பொலியும் வெற்றிக் கொடியிது ;
கணக்கறு வீரர் காத்த கொடியிது ;
மன்னுயிர்க் கின்பமே வழங்குங் கொடியிது ;
அறத்தைத் தாங்கும் அருட்கொடி யிதனை
மங்கல மான மணிக்கொடி யிதனை,
சக்தி மிகுந்த சக்கரக் கொடியை,
புண்ணிய பூமி புகழ்பெற நாட்டிக்
கண்விழித் திருந்து காவல் புரிவோம்.
இந்தக் கொடிக்கீழ் இருக்கும் மக்கள்
எல்லா நலமும் எய்தி வாழவே,
கடமை காக்கக் காவல னானேன்..
ஈன்றோர் மனமும், சான்றோர் மனமும்,
மக்கள் மனமு மிக்கவு மகிழச்
செங்கோல் செலுத்தித் தேசப் பணிசெய,
சுத்த ஓம் சக்தி துணைதந் தருள்கவே !

பண்கெழு வேந்தன் பேச்சைப் பருகிடத் தெவிட்டா மன்றம்,
கண்களே யிமைக்க வில்லை.. காதுகள் சலிக்க வில்லை..
விண்கதிர் செலுத்துங் காலப் புரவியும் விரைய வில்லை..
திண்ணுயிர்ச் சிலைகள் போன்று திகழ்ந்தது மகிழ்ந்த தம்மா !

ஏனினிப் பகைவர் கொட்டம், ஏனினிச் சாதி பேதம்,
ஏனினி அதர்மக் கொள்ளை.. எவரையார் அடிமை யென்பார் ?..
ஊனுயிர் உலவுங் கோயில், உள்ளது கடவு ளொன்றே..
மானிடம் அமர வாழ்க்கை வாய்ந்ததிம் மன்ன னாலே..

அச்சமொன் றில்லை ; எம்முன் அன்பென வந்த மன்னன்,
இச்சையைப் புரிவோம்.. இங்கே ஏழைகள் யாரு மில்லை ;
நச்சிடும் பந்த மில்லை ; நரகெனுஞ் சிறுமை யில்லை..
உச்சமாம் அறிவி னோங்கி உலகெலாம் வாழு வோமே !..
துயர்களை யழித்தான் மக்கள் சுகமுறத் தரும வெற்றி
உயர்வுறக் கருணை யாலே உயர்த்திய கொடியைப் போற்றி
அயர்வறத் தொண்டு செய்வோம்..அன்பினால் எந்த நாளும்
சயசய சுத்த வென்றே சபையினர் எழுந்தா ரம்மா !

நாளெலாம் விருந்தே; அந்த நாளெலாந் தான மாரி ;
நாளெலாம் ஆடல் பாடல் அரங்கமே.. சுத்தன் ஆண்ட
நாளெலாந் தரும தேவி நகைமுகம் பொலிந்தாள் ; வீரர்
தோளெலாம் வாகை மாலை சுமந்தன வெற்றி யோங்கி..

வாழ்கநம் சுத்த ராஜன். வாழிய சுத்த ராஜ்யம்..
வீழ்கவெம் பகைக்கு லங்கள், வெற்றியே நாளும் ஓங்கி
வாழ்கநந் தீரர் கூட்டம்..வரம்பிலாக் கடவுள் போலே
வாழ்கசுத் தான்ம நேயச் சுடரொளி வைய மெல்லாம் !..

16. நன்றி யுரைத்த படலம்

வந்த காரிய மானதும் வரமுனிக் கணங்கள்,
பந்த மற்றவர், தவவினை பயின்றிட வேண்டி,
நந்தி யாதிய நாதர்கள் ஆதியி லிருந்த
கந்தரந் திகழ் இமாலயக் கான்செல வுவந்தார்.

சங்க மோங்கிய முனிவரர் தலைவனும் சாந்தன்,
இங்கு சத்தியன் இந்திரை யிடம்விடை பெற்றே,
மங்க லம்பெறு மனையென மாநிலம் வகிக்கும்
துங்கச் செல்வியும் சுத்தனா நலமுறச் சொல்வான் :—

அருமைச் செல்வியே, அருட்பெருந் தூயநல் லரசே,
திரும ணத்துடன் செயமுடி புனைந்ததுங் கண்டேன்;
இருவ ருக்குமென் ஆசிகள் ஈந்தினி யிமயம்
மருவி மாதவந் தொடருவேன் மாணவ ருடனே.

சொன்ன சொல்லினைத் துகளறச் செயலிலே துலக்கி,
மன்னர் மன்னவ மாண்புறு சுத்தநின் னாட்சி
இன்னு யிர்க்கெலா மினிதென வியம்பலு மிகையே—
அன்னை தந்தையர் அன்பினுக் குரையள வாமோ ?

உனது நன்மையே உயிரெனக் காத்துனைப் பிரியாள்
எனது செல்வியின் இச்சைகள் பலித்தன வினிதே ;
மனது கூடிய மங்கல மனையறம் புரிந்து,
புனித கௌரியர் வாழ்வதும் புலனுறக் கண்டேன்.

கன்னி நன்றெனக் காசினி வாழ்வினி லிணைந்தே
பண்ணு டன்கூடி யொளவளர் பான்மையைப் பார்த்தேன்.
பெண்ணும் ஆணும் பெருமையைப் பேசிடக் கண்டேன்.
எண்ண மோங்கிய சிலர்காள், இசைபெற வாழ்வீர் !

தரைசெ ழித்திடுந் தண்முகில் வழங்கிடத் தயனன்
திரை முகப்பது போலவே நிறையிறை சேர்த்து,
வரையி லாத்தொழில் வளர்த்துவெவ் வறுமையைத் தீர்த்தே
கரையி லாக்கலை பரப்பிடுங் கருத்தையுங் கண்டேன்.

கல்வி யூட்டினை, கருத்துடன் கைத்தொழி லீந்தாய் ;
நல்ல வீரரின் செம்மைய நாட்டினை ; மாந்தர்
சொல்லுஞ் செய்கையுந் தொடர்புறத் துலங்கிடச் செய்தாய் ;
இல்ல றத்தினை யியல்புற வளர்த்தனை யிசையோய் !

புலவர் கல்வியைப் போலவே பூவையர் கற்பைப்
பொலிவு றுத்திடப் போற்றினை ; புனிதசன் மார்க்கம்
இலகச் செய்தனை ; இன்னுயிர் உன்னுயி ரெனவே
நலம்பெற் றோங்கிட நாட்டினுக் குதவினை நல்லோய் !

அச்ச மற்றனர் ; அதர்மத்தை வெறுத்தனர் ; அறிவின்
உச்ச முற்றனர், ஊருக்கு வாழ்ந்திட வுவந்தார் ;
துச்ச மாகிய கலியினைத் துகைத்திடத் துணிந்தார் ;
பட்ச மாகநீ பணிசெயும் பாரத வீரர்.

கள்ள மற்றனர் ; கரந்தெழு புரட்சிக ளற்றார் ;
உள்ள முன்னுடன் ஒன்றினர் உன்னுயிர் மக்கள் ;
அள்ளு மன்புடன் ஆண்மையும் கொண்டுன தரசை
முள்ள கற்றிநன் முனைசெழித் தோங்கிட முயன்றார்.

உண்மை யாத்தும நேயத்தில் ஒன்றிய வுலகும்,
வண்மை மிக்கநல் வளம்பெறு மன்னன்செங் கோலும்,
ஒண்மை மிக்கநல் லொழுக்கமும், வீரமும் ஓங்கும்
திண்மை யானவுன் னாட்சியைத் தேவரு மதிப்பார்.

வன்றவத் தொழில் வாய்ந்தவென் மாண்பினைக் காத்தாய்,
என்றவத் திருக் கௌரியை அரசியாய் ஏற்றாய்;
இன்றிம் மாநில மினிதுற வாழ்வெலாம் ஈந்தாய் ;
நன்றி நன்றியெந் நாளுநல் லறந்தரு நண்பா !

இற்றை நாளினுன் னாட்சியால் இன்புறும் உலகைக்
கற்றையங் கதிர்ச் செல்வனைக் கௌவிடும் இருள்போல்,
சுற்றி வெங்கலி சூழ்ந்திடச் சூழ்வதை யறிவாய் ;
பிற்றை நாளுறு பெருஞ்செயல் பேசிய தறிவாய்.

அந்த நாளினுக் காகிய நன்மைகள் அனைத்தும்,
வந்த மைந்திட மாதவக் கனலினை வளர்க்க,
முந்தென் மாணவ முனிவரை யிமாலய முடிக்கே
இந்த நல்லநாள் அழைத்துடன் ஏகிடு வேனுல்.

பதியின் சக்தியைப் பதின்மடங் காக்கியென் பாவை
மதி மிகுந்தநின் மனைக்குறு மங்கலந் தருக !
நதி வளஞ்செயு நிலத்தினைப் போலவே நாட்டைத்
துதி மிகுந்தொளிர் நீதியே சூழுக நிறைவே !

சுந்தன்

முன்னரே செய்த முடிபிது முனிவருக் கரசே,
உன்னருஞ் செயலாக்கத்திற் கெதிரெதும் உரையேன்.
என்னினும் எமக் கித்ததி சக்தியீந் துயர்த்தும்
உன்னரும் உப தேசத்தை உளமுவந் துரைப்பாய் !

சாந்தன்

என்று சுத்தனுங் கௌரியும் வணக்கமோ டிசைக்க:
"நன்று நன்றுரை நன்றியோ டுரைக்குதுங் கேளாய்.
அன்று கண்டதும் ஆரிய ராமனை யறிந்தாய் ;
இன்று கண்ணனைக் கீதையை யினிதுநீ யறிவாய்..

கண்ணன் வாழ்க்கையும் கீதையுங் காசினிக் கெல்லாம்
திண்ண மாநலஞ் செய்திடுந் தீரவாழ் வளிக்கும் ;
உண்மை யன்பரும் வீரரும் உம்முடன் கேட்கும்
வண்ணஞ் செய்"கென வரமுனி வழுத்தினு னுங்கே....

சித்த மென்றுடன் சித்தியின் கோமுடிச் செல்வன்,
உத்தமன் உப தேசத்தை ஊரெலாங் கேட்கச்
சுத்த மாகிய சூழலைச் சுடர்பெற வமைத்தான்
மெத்தவும் ஒலி பெருக்கிடும் விசைகளு மிணைத்தே.

வீரர் வித்தகர் வேந்தர்கள் விரும்பிய சனங்கள்
பூரணத் தவ முனிவரின் பொன்னுரை பருகப்
பேர வாவுடன் பேச்சற வமர்ந்தனர் ; அரசன்
ஆரஞ் சூட்டினன் ; சாந்தனும் அருண்மொழி பூத்தான்

சுத்த கௌரியின் சுருதியாழ் சொல்லிசை தழுவ,
மத்தளஞ் சுர கெத்துடன் மழலைபோற் கொஞ்ச,
பத்தர் பேரின்பம் பருகிடப் பாவனக் கண்ணன்
உத்தமச் சரி தத்தினை முனிவரன் உரைத்தான்.

17. கண்ணன் படலம்

தேனொடு பாலுங் கண்டுந் தீங்கனி ரசமுங் கூட்டி,
வானவர் அமுதும் பெய்து, வானிலாத் தென்றல் வீச
மேனகை யரம்பை மாதர் மென்கர முதவ, நாளும்
பானஞ்செய் சுகமும் தெய்வ பக்தியின் சுகம தாமோ ?

மகவினைத் தந்தை கூவ மரமெலாம் "ஏன்ஏன்" என்ன
அகண்டப்ர மைக்கி யத்தில் அதுமய மாக வாழ்ந்த,
சுகமுனி பரிட்சித் திற்குச் சொல்லிய கண்ணன் காதை,
தகவுடன் கேட்டார் உள்ளஞ் சச்சிதா னந்த மாமே !

வெய்யவா ளரக்கர் மீண்டும் வேந்தரென் றுருவந் தாங்கிப்
பொய் சினங் காமம் வஞ்சம், போர்மத வெறிக ளேறித்
தெய்வநிந் தனைகள் செய்து, சேனையின் பலத்தி னாலே
வையக மாந்த ரஞ்சி வருந்திடக் கொடுமை செய்தார் !

எங்குமே அசுர மாயம் ! எங்குமே போராட் டங்கள் !
எங்குமே இரத்த வெள்ளம் ! எளியரின் கூக்கு ரல்கள் !
சங்கடந் தாங்கி டாத சகமெனுங் காம தேனு
மங்கல நாத னுக்கு மனத்துயர் கூவிற் றம்மா !

மண்ணிலும் வாழ யோக மாயையால் அவதரித்துப்
புண்ணியங் காத்துத் தீய புல்லுரு விகளைப் போக்கி,
எண்ணரு மன்பர்க் கின்பம் ஈந்தவன் உலகம் போற்றும்
கண்ணனும் ; அவன் செயல்கள் கரும்பினு மினிப்பதாமே !

முதுகுல மாகி, நல்ல முறையுடன் கடவுள் போற்றும்
யதுகுல மதனைச் சூர சேனனும் இனிய மன்னன்
மதுரையில் ஆண்டான் ; அன்னோன்மகன்வசுதேவன் என்பான்;
புதுமணப் பவனி வந்தான் புனிதத் தேவகியோ டாங்கே !

போசர்கோன் உக்ர சேனன் புதல்வனும் கொடிய கஞ்சன்,
ஆசையாய் வதுவ ரர்கள் அமர்ந்ததே ரோட்டும் போது,
"மாசறு கம்ஸா வுன்னை மணமகள் எட்டாஞ் சேயே
நாசஞ்செய்வா"னென் றங்கோர் நாதமொன் றெழுந்த தம்மா!

"பிறக்குமுன், பகைவன் தாயைப் பிளந்துயிர் குடிப்பேன்" என்று
கறுக்கொண்டு வாளை வீசுங் கம்ஸனைத் தடுத்துத் தேவன்,
வெறுக்கொண்ட கொலையேன்?சேயைவிடுவனுன்னிடமேயென்ன
மறுக்கொண்ட மனது மாறி, மாநகர் வந்து சேர்ந்தான் .

தேவகி மகனை யெண்ணித் திகைப்பினால் அரக்க னாகித்
தாவிச்சென் றரசைப் பற்றித் தந்தையைக் கொடுமை செய்து,
தேவனைத் தேவி தன்னைச் சிறையினி லடைத்தன் னாரின்
ஆவியின் அரிய சேய்கள் அறுவரைக் கொலைசெய் தானே.

உற்றனை ராங்க ருப்பம் உரோகிணி வயிற்றிற் கேகி,
மற்றது பலராம் என்னு மாண்புறு மதலை யாக ;
அற்றைநாள் யசோதை யென்னும் ஆயர்கோன் மனைவி தானும்
பெற்றனள் மாயை யான பெண்மக வருளி னாலே.

பூவெலாம் உவகை பொங்கப் புண்ணியர் உளஞ்சி லிர்க்கத்
தேவர்கள் ஆசி கூறத் திருவிலி யரக்கர் சோரத்
தேவகி எட்டாஞ் சேயைத் திவ்வியக் கருவு யிர்த்துக்
காவலின் கடவுளைத்தன் கைகுவித் திறைஞ்சி னாளே :—

"உண்மையே உருவ மாகி, உண்மையே உள்ள மாகி,
உண்மையர் உண்மை யாலே உண்மையாய் உணரப் பெற்றாய்
உண்மையே போற்றி வாழும் உன்னடி யாருக் கென்றும்
உண்மையே வெல்லு மென்னும் உறுதியை யளித்த மெய்யா !

வெம்மையே செய்வா ருள்ளும் விற்றிருந் தவரை மாற்றி,
நன்மையே செய்யு நண்பா, நானெனு மகந்தை யின்றித்
தம்மையே தந்த வர்க்குத் தன்னையே தந்த வள்ளால்,
மும்மையா முலகுக் கெல்லா முதலிடை கடையு மானாய்..

கண்ணினிற் காண்பாய் நீயே ; காணுல கெல்லா நீயே,
எண்ணுறு புத்தி தன்னில் இலகுறு மறிவு நீயே ;
மண்ணுயிர்க் குயிராய் வாழு மன்னுயிர் இறைவா நீசெய்
தண்ணரு ளாலே துன்பச் சங்கிலி நீங்கி டாதோ ?

மானிட வாழ்வில் வீசும் வலியவெங் கவலை யெல்லாம்,
ஊனுட லிடமாய்க் கொண்ட உன்னைநன் றறிந்த போதே
பானுவைக் கதிரின் முன்னே பனியென நீங்கு மன்றே ;
ஏனினுந் துயர மெம்மை இடர்செய்வ தெம்பி ரானே ?

யாதவர் குலத்தி னுக்கே எமனென முளைத்த கஞ்சன்,
வேதனை பொறுக்க மாட்டோம் ; வேறொரு துணையுங் காணோம்
கோதிலார் துயரந் தீர்க்குங் குணமணிக் குன்றே போற்றி !
சோதனை வேண்டா மின்னுந் தூயரைக் காக்க வாராய் !

நெஞ்சகங் கோயில் கொண்ட நிமலனே, நெடிய மாலே,
வஞ்சமொன் றறியோம் ; இந்த வன்சிறை வந்த தேனோ ?
தஞ்சமென் றடைந்தோ முன்னை ; விடுதலை தருவாய் ; நாங்கள்
அஞ்சிடா துனக்கே யாளாய் வாழச்செய் அருளின் வேந்தே !"

இன்னவா றிறைஞ்சும் அன்பர் எதிரிலே விஷ்ணு தோன்றி,
"அன்னையே அச்சமில்லை; விடுதலை யளிப்பேன் ; யானே
உன்னிடைப் பிறப்பேன் ; எந்தை உடனெடுத் தெசோதை பக்கம்
என்னைவிட் டவள்பெண் சேயை இங்குகொண் டுய்க்க"வென்றான்.

"நல்லவர் தம்மைக் காக்க, நாத்திகச் செருக்கர் வீழத்
தொல்லறஞ் சிறக்கப் பாவந் தொலைந்திட, மனித ஜாதி
கொல்பகை யின்றி, பச்சக் கொடுமைக ளின்றி ஒன்றி,
மல்கிடச் செய்வே" னென்று மங்கலத் தாயுட் புக்கான்.

நானில வுயிர்சி லிர்க்க நன்மழை மேகஞ் சூழும்
வானகம் வாழ்த்தத் தாயார் வருந்திய வருத்தந் தீர,
மோனநள் ளிரவில், யோக முத்த நட் சோதி போன்று,
ஞானபே ரந் தாங்கி நந்திருக் கண்ணன் வந்தான் !

தாயுடன் சொன்ன வாறே தந்தையுங் கவன மாகச்
சேயுடன் சிறையைத் தப்பித் திருவருள் வழியே காட்ட
ஆயர்பா டியில் யசோதை யருகில் வைத் தவ்ளுள் ஈன்ற
மாயையா மகளை யேந்தி வந்துடன் சிறையிற் புக்கான் !

உற்றனன் கஞ்சன் காலை ; உலையெனச் சினமு யிர்த்துப்
பெற்றவர் நடுநடுங்கப் பெண்மக வதனைப் பேய்போற்
பற்றினன் ; கல்லில் மோதிப் படுகொலை செய்யப் பார்த்தான் ;
மற்றது மாய மாகி வானொலி கேட்ட தம்மா :—

"அருக்கனைக் கோப மூச்சால் அணைத்திட முடிந்திட் டாலும்,
உருக்கிறுற் பிளந்து காற்றை ஒய்வுறச் செய்திட் டாலும்,
செருக்குறு வெறியா,நீயும் என்னையுஞ் சிதைப்பாய் கொல்லோ?
சுருக்கென உன்னைக் கொல்வோன் சுகமுற வளர்கின் றனே!

அறிவிலாய் அறிதி" யென்றுங் கற்புத மாயை செல்ல,
வெறிபிடித் தரக்கன் அந்தோ விடலாஞ் சிசுவைப் பற்றி,
மறலிபோற் கொல்லச் செய்தான் ; மாதவன் வளரு கின்ற
நெறியுள கோகு லத்தும் நிருதரை ஏவி னனே !..

வாத வன்மைகொள் வஞ்ச வரக்கரின்
ஆது லத்தைத் தன் ஆடலிற் போக்கியே,
கோகு லத்திற் குழந்தை வளர்ந்தனன்
யோகி புள்ளமர் யோகக் கனலென.

தீய வஞ்சத் திருட்டுப் பிசாசுகள்,
சேயைப் பற்றிச் சிதைத்துயி ருண்டிட
நோயைப் போல நுழைந்துள் ளறிஞர்முன்
மாயை போல மறைந்துமண் ணனவே !

விம்மு வெய்ய விடமுலைப் பூதகி
"அம்ம" பாலென் றளித்தனள் ; பாலனும்
அம்ம தங்கொள் அலகையின் ஆவியும்
இம்மெனக் குடித் தெக்களித் தாடினன்.

வண்டி, போலுருள் வஞ்சச் சகடனைத்
தண்ட விரடி தாக்கித் தகர்த்தனன் ;
அண்டிச் சூறையாய் அள்ளு மரக்கனைப்
பிண்ட மாகப் பிடித்தனன் பிள்ளையே !

ஆடு வானவன் ஆடலைப் போலவே
சாடு வானவன் சள்ளை யரக்கரை ;
பாடு வானவன் பாட்டுக் குழலுடன்
காடு மேடெலாங் கன்றுடன் சுற்றுவான்.

பூத்த மாமலர் போன்ற முகத்திரு;
தித்த ணலவன் செவ்விதட் புன்னகை
நீத்த முண்டு நிறைந்த முகில்வணம் ;
கோத்த முத்தவன் கொஞ்சுங் கிளிமொழி.

கண்ணன் ஞானக் கதிரொளி வீசினன் !
கண்ணன் உள்ளங் கவர்ந்தனன் காந்தம்போல் ;
கண்ணன் காட்சி களிதருங் காட்சியாம் ;
கண்ணன் காதல் கடவுளின் காதலே.

கருதியபோதுகண்ணெதிர்வந்து காரியக்கள்ளனாய் மறைவான்
மருவிய தோழர் மகிழ்ந்திடப் புகுந்து,மனைதொறுஞ்சேட்டைகள் செய்வான் ;
துறுதுறுப் படக்கத் தாயொரு காலை, தும்புடன் உரலினிற் கட்ட,
மருதிடைத் தவழ்ந்தாங் கிருவருக் கின்ப வான்பெறும் விடுதலை யளித்தான் !

கன்றென வந்த நிருதனை வீசிக் கனிகளையுதிர்த்தனன்கண்ணன்
தின்றிட வந்த நாரையைப் பிளந்தான் சினத்துடன் விழுங்கிய பாம்பைக்
கொன்றுயிர் குடித்தான்; காளிந்திப் பாம்பின் கொடுவிட முடிமிசை குதித்தான்;
பொன்றுறக் காளை யரக்கனைக் கொம்பாற் பொடித்தனன் கோகுலங் காத்தான்!

அழகிளங் கோபி மார்களின்உயிராய்ஆனந்தலீலைகள் புரிந்தான்;
குழலிசை யாலே யவருளங் கொள்ளை கொண்டுகூத் தாடுவான் குழந்தை;
பழகிய தோழர் பரவச முறவே, பயனுறுகுறும்புகள்பயில்வான்;
செழிதிருபிருந்தாவனமுயிர்அன்புத்தெய்வமாம்யாதவர் திலகன்

வாள்விழி மாதர் மனமவனிடமே;வஞ்சமில்இடையர்நெஞ்சவனே
கேள்வனு மவனே ; கடவுளு மவனே ;கிருட்டினு, கேசவாளென்று
நாளுமெய் யன்பர் நாமசா தனஞ்செய் நாரணநம்பியு மவனே ;
வேள்வியு மவனே ; விரதமு மவனே; வேதத்தின் உட்பொருள்
அவனே ! 140

இடையர்கள் வழக்கப் படியொருநாளில்இந்திரவிழவணிசெய்தே,
படையமு தெல்லாம்படைக்குமுன்கண்ணன் பசுக்களுக்கிந்தனன்;
மகவான்
கடைவெளம் போன்றுங் கிடிமழை கொட்டிக் கடுஞ்சினப்
பகையினைக் காட்டக்
குடையென பிடித்துக் கோவளர் மலையை, மாதவன் கோகுலங்
காத்தான்.

காடடர் முல்லை நிலத்திலே கன்று பசுக்களைக்காத்திடுஞ்சிறுவன்;
வேடமேபூண்டவிஷ்ணுவேஅன்பர்வேட்கையைத்தீர்த்திடவந்தாய்!
ஆடலாய்க் கோடி அதிசயங் காட்டி ஆருயி ருலகினை ஆண்டாய் !
பாடலார் குழலால்இயற்கையும்உலகும்பரவசமெய்திடச்செய்தாய்.

மானிடவாழ்க்கைமடுவிடமாகும்மமதையாம்பாம்பினை அடக்காய்;
மேனியெலாமுன் வீடெனக் கொண்டுவிரும்பிய படிவிளையாடாய்;
நானெனு மனத்தைநலியமெய்ஞானநடம்புரிதிருவருளிறைவா;
ஊனுயி ருள்ளே உயிர்த்திடும் உயிரே, உன்னையே சரண்புகுந்
தொழிந்தோம்.

இவ்வகை வணங்கி இந்திரனுதி இறைவரு மனிதரு மாங்கே,
உய்வகை கண்டு மகிழ்ந்திடக்கண்ணன்உலவிடுநாட்களிற்கம்ஸன்,
எவ்வகை யேனும் இவனுயிர் வாங்குமுயற்சியில்ஈடுபட்டழிந்தும்,
வெவ்விய பொறுமை விடந்தலைக் கேறி வேறொரு தந்திரம்
பயின்றான்.

அனலுடன் புகையும் போலே அச்சமும் பகையுங் கொண்டு
சினமிகு கஞ்சன் வஞ்சன் சேயினைக் கொல்லக் கேசி
யெனுமொரு புரவிதன்னை ஏவினன் ; அதனு யிர்ப்பைத்
தனதிளங் கையாற் போக்கித்தழைத்தனன்அரக்கர்காலன். 160

அந்தவோ செய்வ தென்னென் றறிகிலேன் ; அரக்கர் தம்மை
விந்தையாய்க் கொன்றான்ஐயோ;வீண்செயல்செய்துதோற்றேன்;
இந்தக் கோபாலன், பாலன், இனியுயி ருடனி ருந்தால்
வந்தது மோசம் என்றன் உயிரையும் வாங்கு வானுல்....

தொல்லையுற் றிவ்வா றந்தத் துகளுறு சூழ்ச்சி யாளன்,
"வில்லுடை வேள்வி செய்வோம் ; விரைவினில் ஆயர் பாடி
செல்லந்த நந்த கோபன் சேயினை அழைத்த தாகச்
சொல்லி நீ கொண்டா" வென்று தூதனை யனுப்பி னுனல்.

அக்குரு ரன்எனும்அவ் வன்புடைத் தூதன் வந்து,
மிக்கவும் பணிந்து போற்றி வேந்தனின் செய்தி சொன்னான் ;
அக்கணங் கண்ணன் அண்ணன் பலனுடன் ஆலோ சித்துத்
தக்கநல் வேளை பார்த்துத் தனுமகங் காணச் சென்றான்.

பேயெனு மாமனின் பெரிய சூழ்ச்சிசெய்
ஆயிரம் இடர்களை அறிந்து தாண்டியே
தாயுடை விலங்கினைத் தகர்க்கக் கண்ணனும்
போயினன் மதுரமா புரிக்குள் வேகமாய் !

சுந்தர மாலைகள் சுதாமன் ஈந்தனன் ;
சந்தனந் தந்தனள் சாந்தக் கூனியும் ;
அந்தமாம் அணிமணி யணிந்து வீதியில்,
வந்தனர் பலவனும் வாசு தேவனும்.

வஞ்சமில் அன்பர்கள் வரவு கூறிடத்
தஞ்சமீந் தன்பரைத் தாங்குங் கேசவன்,
நெஞ்சினிற் கடும்பகை நெருப்பை யேவளர்
கஞ்சனின் மாளிகை கடிதி னேகினான்.

காற்றலை கடலெனக் கர்ச்சித் தேயெதிர்,
கூற்றெனக் குவலயக் குஞ்ச ரம்வர,
சீற்றங்கொள் யதுகுலச் சிங்கம் பாய்ந்துதன்
ஆற்றலாற் கொன்றதன் ஆவி யுண்டனன்.

முட்டிகன் என்றொரு முண்டன் சாடினான் ;
பட்டெனக் குத்தியே பலவன் வீழ்த்தினான் ;
சட்டெனச் சாணுரன் சவதங் கூறினான்
பொட்டெனக் கேசவன் பொருதி வென்றனன்.

வெல்லொணாச் சிறுவனை வீழ்த்திப் பிய்த்துயிர்
கொல்லுவேன் பாரெனக் கோபத் தீயெழப்
பல்லுறு மதமலை மானக் கஞ்சனும்
பல்லிய முழங்கிடப் பாய்ந்து பற்றினான்.

பற்றினன் கண்ணனும் பதகன் மேனியைச்
சுற்றியே தொடையொடுஞ் சுழற்றி வீசினான் ;
மற்றிற முற்றிட மார்பிற் குத்தினான் ;
அற்றதப் பாவியின் ஆவி யாங்கனே !

"விடுதலை ! விடுதலை ! வீரக் கண்ணனாற்
கொடுமைகள் ஒழிந்தன" வென்று கோதிலார்
சடசட வெனக்கரஞ் சத்த மிட்டனர் ;
மடமட வெனமலர் மாரி பெய்யவே !

சிறைகளைத் திறந்தனன் ; செய்ய பெற்றவர்
துறைகளைத் தீர்த்தனன் ; கொற்ற மாதவன் ;
இறைமையை உக்கிர சேனர்க் கீந்தனன் ;
மறைவளர் மதுரையின் வாழ்த்தொ லிக்கவே !

திருவுறச் செய்வன செய்து நம்பிரான்,
அருளறி வாற்றல்கள் யாவு மேவியும்,
பொருளறி சாந்திபன் புனிதச் சீடனுக்
குருகுலக் கல்வியுங் கொண்டு தேறினன்.

தக்க காலத்திற் பொதுசனந் தலைவனென் றேற்க
மிக்க மாதவர் வாழ்த்திட, விளங்கிடத் தருமம்
சக்க ரத்துடன் சமநெறி தாங்கிய கண்ணன்
மக்களுக் கருள் புரிந்திட மதுரையைப் புரந்தான்.

ஈண்டு போர்செய் இராக்கத ராம்சரா சந்தன்
சீண்டு தீநர காசுரன் பாணன்வெஞ் செறுவில்
மாண்டு மண்ணுறச் செய்தபின் வலிமிகு கண்ணன்
மீண்டும் வைசிசு பாலனும் மீண்டனை வதைத்தான்.

தன்னையே யருட் காதலிற் கரைத்துளந் தவித்த
கன்னி யாம்உருக் குமணியைக் கருத்துற மணந்து,
பின்னும் சத்திய பாமையைப் பிரியமோ டிணைந்து,
மன்னன் மாதவன் மறுவறு மனையறங் காத்தான்.

புல்லு ருவி யரக்கரைப் பூண்டுடன்
கெல்லி யபின் இருட்டினன் இப்பெருந்
தொல்லு லகிற் புதுயுகந் தோற்றிட
வல்ல சீர்பணி வாய்மையி னாற்றினன்.

திருமி குந்த துவரைத் திருப்பெயர்
பெருகு நன்னகர் செய்தெம் பிரானங்கே
பொருளும் பேரின்பப் போகமு ஞானமும்
அருளு மோங்கும் அறத்தினை நாட்டினன்.

வான ளாவிய மாமணி மாடங்கள்,
தேன ளாவுஞ் செழுமலர்ச் சோலைகள்,
ஞான மோங்கிய நற்றவச் சாலைகள்,
கோநகர் கண் குளிர்ந்திடக் காணுமே !

ஆடல் பாடல் அழகணி, சித்திரம்,
நாடகக் கலை நல்ல கவிக்கலை,
தேட ரிய திருவருட் சோதியைக்
கூடி வாழுங் கொழுங்கலை யெங்குமே.

கண்ண னெவ்வொரு மாந்தர் கருத்திலும்;
கண்ண னெவ்வொரு கண்ணின் மணியிலும்;
கண்ணன் சக்திக் கதிர்விரி மாநகர்
மண்ணி லோங்கிய விண்மணிக் கோயிலே.

செய்வ தெல்லாந் திருவருட் சேவையே ;
மெய்யு ரைகள் விளங்குயர் மந்திரம் ;
உய்வ ருளுந் தியானம் உளமெலாம் ;
ஐயன் வேள்வியிவ் வாருயிர் வாழ்க்கையே.

இன்ன சீரமை இன்ப நகரிலே,
மன்னு பூரண யோகியெம் மாதவன்,
உன்னி யுன்னி யுலக நிலையினை
என்ன செய்வதென் றெண்ணி யிருந்தனன். 252

18. மகாபாரதப் படலம்

அந்த நாளில் அரவக் கொடியனும்
அந்த கன்மக னான சுயோதனன்,
எந்த நேரமும் இன்னலையே செய்து
சிந்தை தூயரைச் சீரழித் தானம்மா.

அத்தை குந்தி யளித்தநல் ஐவராம்
உத்த மரின் உறுதுயர் யாவையும்
பக்தனும் அக்கு ரூரன் பகர்ந்திடச்
சிந்தங் கொண்டிவை செப்பினன் கேசவன்.

தருமன் பீமன் விசயன் சகாதேவன்
அருமைத் தம்பி நகுலன் அறம் வளர்
கரும வீரர், கடமை வழுவிலார்,
ஒருமை கொண்டவென் உண்மை யடியவர்.

புண்ணியந் தரும் பாண்டவ புத்திரர்
மண்ணில் வாழ மனஞ்சகி யாமலே,
எண்ணி யின்ன லிழைத்திடுங் கௌரவர்,
மண்ணிற் பாப மலைச்சுமை யாயினர்.

தஞ்சங்கொண்ட தருமச் சுடர்களாம்,
பஞ்ச பாண்டவர் தம்மையிப் பாதகர்
வஞ்சங் கொண்டு வருத்திடக் காண்பனோ ?
நஞ்சை மிஞ்ச விடுவது நன்மையோ ? 20

இரக்க மற்ற இராக்கதக் கௌரவர்
உறக்க மற்றிந்த உத்தமர் சாகவே
அரக்கு மாளிகைத் தீமுத லாகிய
வெறுக்க மின்னல் விளைத்தனர் ஆயிரம்..

கூற்றின் மிக்க கொடுந்துரி யோதனன்
ஆற்றில் ஆழ்த்தினன் ஆற்றல்கொள் வீமனை.
நேற்று மட்டும் நினைத்த தனைத்திலும்
தோற்று மின்னுந் துயர் செயத் தோன்றினான்.

தருமர் அழைப்பு

சிந்தை செய்யுந் திருவருட் கண்ணனை
இந்திர நகரில் இசை யோங்கிய
நிந்தை யற்ற நிருபன் தருமனும்,
எந்தம் வேள்விக் கெழுகென் றழைத்தனன் :—

மன்னு மாநில மன்னர் மகிழ்ந்திட
இன்னி சையின் இராசசூ யாகமுன்
முன்னி லையின் முடிக்கக் கருதினேம் ;
அன்னையின் மிகும் அன்புக் கடவுளே..

நாடு மிக்க நலம்பெறு வேள்விகை
கூடு மின்பங் குலவுமுன் கூட்டினால் ;
ஆடு முன்னரு ளானந்தக் காட்சியே
தேடுஞ் செல்வத் திரளெமக் காகுமே. 40

வீரம் பூத்திடும், வெற்றி கனிந்திடும்,
கூர வெம்பகை கொத்துடன் வீழ்ந்திடும்.
பார மைதிப் பயனுறும் உன்னருள்
கோரி னெங்கள் குறைகள் விலகுமே.

கற்ற ஞானமும், காட்சிப் பயன்களும்
பெற்ற செல்வமும், பேரின்ப வீடதும்,
சுற்றுங் காலச் சுழலினில் உன்னையே
பற்றி நிற்கும் பரிசுத்த பக்தியே..

வருக கண்ணன் மகம்நிறை வேறிடத்
தருக மெய்த்துணை தஞ்சம் புகுந்தனம் ;
அருக ராகி யருளினில் வாழ்ந்திசை
பெருகச் செய்யெங்கள் பேரின்பத் தெய்வமே..

திவ்விய குண தீரர் அழைப்பினை
அவ்வ கையின் அருளுடன் ஏற்றுடன்
உய்வகை தரும் உத்தமக் கண்ணனும்
ஒவ்வ ரிய மகத்தினுக் குற்றனன்.

பக்குவம் பெறு பாண்டவர் ஐவரும்
தக்க பாத்திரர் சத்திய தர்மத்தின்
மிக்க சீலரென் வீரரென் றச்சுதன்
அக்கணம் எழுந்தான் அவர் காணவே...

தூண்டு மன்பு துளிர்த்திடத் துள்ளியே,
பாண்டவர் பரந் தாமனைக் கும்பிட்டே
"ஆண்டவா வர வேண்டும் அருளினி
ஈண்டும் ; வெற்றியுன் னிச்சை" யென் றேற்றனர்.

வசையுறு கௌர வர்க்கு வளரப் பொறாமை, மன்றின்
மிசையுறு முனிவர் வாழ்த்தி, வேதங்கள் ஓதி நிற்க,
திசைதிசை மன்னர் செல்வத் திரள்களைக் குவித்துப் போற்ற,
விசைபெறும் அரச வேள்வி வெற்றியைக் கண்ட தன்றே..

"கண்ணவுன் அருளி னாலே காரிய சித்தி பெற்றோம் ;
எண்ணலும் எதிரே நின்றெம் இன்னிய துணைவ னாவாய் ;
புண்ணியா நீயே யெங்கள் புக" லெனப் பாண்ட வர்கள்,
பண்ணுடன் வணங்கித் தங்கள் பத்தியை நிவேதித் தாரே.

"தன்னலஞ் சிறிது மில்லார், சத்தியம் போற்றுந் தூயர்
என்னையே பரமென் றுள்ளார் என்னுளே யிருப்பா ரென்றும் ;
இன்னலைத் தாண்டி நாளும் இன்பமே பெருகி வாழ்வார் ;
அன்னவர் ஐவர் நீ"ரென் றச்சுதன் விடைபெற் றனே.

மாயச் சூது

ஏனெனக் கேட்பா ரின்றி, இழிமன வழியே சென்று,
நானென மார்பு தட்டி, நல்லவர்க் கிடும்பை செய்து,
கோனெனப் பெருமை பேசும் பாம்புயர் கொடியோன், ஐவர்
கானகங் காக்க வேண்டிக் கடியதோர் சூழ்ச்சி செய்தான்.

தந்திரச் சகுனி மாமன் சாற்றிய படியே மிக்கச்
சொந்தமார் முகநகைத்தேன் சொட்டவே தூது பேசி,
"எந்தமா நகரில் வந்தெம் விருந்தினை ஏல்க" வென்றான்.
சிந்தையில் வஞ்ச மின்றிப் பாண்டவர் சென்ற ரம்மா !

விருந்துகள் பலமாய்ச் செய்தான்; வியன்மொழிபலவுஞ்சொல்லி
வருந்திநன் றுபச ரித்தான் ; வஞ்சகச் சகுனி கையில்,
பொருந்திட வைத்தான் ; மிக்கப் பொறைமிகு தரும னாரை
இருந்துசூ தாடச் செய்தான் இப்புறஞ் சிரித்த பாவி.

துதிமிகு தரும னாரும், சகுனியின் சூதிற் சிக்கி,
மதிமிக மயங்கி, மண்ணை மனைவியைத் தம்பி மாரைச்
சதிமிகு பகைவர் தூண்டச் சகலமும் வைத்தி ழந்தான்..
கொதிமனங் குளிர் சுயோதன் குதித்தனன் எக்க ளித்தான்..

வெற்றியின் மமதை யேறி, வெய்யவன் "வேக மாகப்
பற்றிவா பாஞ்சா லத்துப் பாவையைத் தம்பி" யென்றான்.
மற்றவன் மனை விலக்க மானமா தாவை "வாடீ
கொற்றவை"யென்றுபற்றிக்கொணர்ந்தனன்; கொடுமையந்தோ!

கண்ணிலான் பெற்ற ஞானக் கண்ணிலான் சபையின் முன்னே,
பெண்ணுல கேத்து நின்ற பெண்ணுருத் தெய்வந் தன்னைக்
கண்ணுறுங் கணவர் முன்னே, கழிசடைத் தம்பி கையால்
திண்ணெனத் துயிலுரிக்கச் செய்தனன் பாவி யந்தோ!

பாஞ்சாலி முறையீடு

ஈன ரென்னை இழிவுசெய் கின்றனர்
மானங் காக்க மனங்கொள் ஹரி ஹரி!
தீன ரக்ஷக சேவடி பற்றினேன்—
யானைக் கன்றரு ளீந்த தயாபரா!

கட்டை யென்று கருதியென் காதலன்
வட்டி லென்னையும் வைத்திழந் தானந்தோ!
கட்டிக் கொண்ட கணவருங் கையினைக்
கட்டிக் கொண்டிக் கொடுமையைக் காண்கின்றார்!

விதி விதியிது வெய்ய தலைவிதி!
பதி யெனக்கும் பகடை யுருட்டியிக்
கதி கொணர்ந்தனன்! கண்ணநின் சக்தியாற்
பதிதர் சூழ்ச்சிகள் பாழ்படச் செய்குவாய்!

கண்ணி லாத கபோதியின் பிள்ளைகள்!
பெண்ணின் மானங் கெடுத்திடும் பேடிகள்!
மண்ணுக்குச் சுமை யான மடயர்கள்!
எண்ண மண்ணுறச் செய்யென் னிறைவனே!

கண்டு கேட்டுக் கனலுகப் பீமன்வெ
குண்டெ ழுந்தனன்; கோபப் புயலுடன்;
சண்ட வேகச் சரத்தை விஜயன்கைக்
கொண்டெ ழுந்தனன் கொற்றவை யஞ்சவே!

வில்லி ருக்க விறல்பெறு தோளினுங்
கல்லி ருக்கக் கருணையி லாதிந்தப்
புல்லர் பத்தினி மானத்தைப் போக்கிடக்
கல்லைப் போலக் கணவருங் காண்பதோ?

பதை பதைக்குதென் பத்தினி மானத்தை
வதைசெய் பாதகர் மாள்க வுடனெனக்
கதை சுழற்றிக் கதங்கொளும் பீமனை
முதிய வன்முனி வாற்றி யமர்த்தினன்:—

"நில்லு நில்லு ! நியாய மிருக்கினும்
வில்லுக்கும் கதைக் கும்,விற லுக்குமே,
சொல்லுக் கும்துணி வாகிய நேரமி ஃ
தில்லை யில்லை ! இறைவன் இருக்கின்றான் !..

வருவ தெல்லாம் வருக பொறுமையாய்க்
கருமத் தின்பயன் கண்டு நுகருவோம் ;
தருமம் வெல்லும் ; அதர்மம் அழிந்திடும் ;
இரும னத்தை யறிவின் இணக்குவோம்.

அறிவ றிந்த பெரியவர் ஆத்தும
நெறி யறிந்த நிமலரிப் பாரிலே,
குறி குணங்கள் குறித்திடும் ஆடலைப்
பொறை யுடன் கண்டு புன்னகை செய்வரால்."

தரும னிம்மொழி சாற்றி யமர்ந்ததும்,
தரும தேவதை சான்ற திரௌபதை,
வருணச் சேலை வளர்ந்ததை வாரிய
திருவி லான்கை திடுக்கென் றயர்ந்ததே.

பெண்ணின் மானத்தைப் பேரவை தன்னிலே
கண்ணன் காத்துக் கருணையைக் காட்டினான் ;
வெண்ணகை செய்த வீணர் வியந்தனர் ;
பெண்ணகை செய்து பேசினள் கேண்மினோ :

பாஞ்சாலி சபதம்

கூந்தலை யிழுத்து வந்து கொடியவர் கூட்டங் கூடி,
வேந்தவை நிறுத்தி, இந்த வீரவிற் கணவர் முன்னே,
ஏந்திழைக் கின்னல் செய்தார் இரத்தத்தில் ஆட்டி யன்றிக்
கூந்தலை முடியேன் இன்று கொண்டனன் சபதங் கேளீர் !

உண்மைமேல் ஆணை ! யென்னை உய்வித்தான் பேரில்ஆணை;
பெண்மைமே லாணை! கற்பின் பெருமைமே லாணை! என்றன்
கண்மைமே லாணை ! வீரக் கணவர்மே லாணை கொண்டேன் !
புண்ணிழை யரக்கர் வீழ்ந்து, புண்ணியர் வாழக் காண்பேன்.

அவ்வகை வீம னாரும் அருச்சுன னாதி யோரும்
ஒவ்விய சபதம் செய்ய "உரிமையைத் தருக "வென்றே
செவ்விய விதுரன் சொன்னான்;செவிகொளாப் பகைவன் மீண்டும்
"வெவ்விய சூதில் வென்றால்வென்றதைத்தருவேன்"என்றான்.

மறுபடி மாயச் சூதில் வலிவுற மடக்கி வென்று,
தறுகணன் "சாது வான தருமனுந் தம்பி மாரும்,
உறுகவெங் கானம் பன்னீ ராண்டினும் உருக் கரந்தே
உறைக ஓ ராண்"டென் றோதி ஓட்டினான் ஊரி னின்றே.

வன வாசம்

கோதிலாப் பாண்டு மைந்தர் குந்திபாஞ் சாலிகூடப்
பாதக ருக்கு நாட்டைப் பறிகொடுத் தடவி சென்றே,
மாதவ ருடனு றைந்து, மாசறு கனிக ளுண்டு,
நீதற வாழ்ந்தார் ; ஆங்குந் தீயவன் கொடுமை செய்தான்.

நல்லவர் தமை யழிக்க, நல்லவர் தம்மைத் தூண்டிப்
புல்லிய வேள்வி செய்தோர் பூதத்தை யேவி விட்டான் ;
கொல்விடங் குளத்திலிட்டான் ;கொலைசெயப்பலவுஞ் செய்தான் ;
அல்லலைத் தீர்க்குங் கண்ணன் அன்பரைக் காத்தான் மாதோ !

திசைதிசை மலர்க ளெல்லாம் சிவார்ப்பணஞ் செய்யும் அன்பு
விசயனும் கைலை யூன்றி வியன்பெறுந் தவங்கள் செய்து
பசுபதி யருளி னாலே பாசுப தாத்தி ரத்தை
விசையுறப் பெற்று வந்தான் வீரப்போர் புரிய வம்மா !

பாரதப் போர்

சொன்னவா றிந்த நல்லோர், சொல்லினைக் காத்த தூயர்
பன்னிரண் டாண்டு காட்டிற் படுதுயர் பொறுத்தோ ராண்டு
மன்னுருக் கரந்து றைந்து, வந்தனர் ; மறுத்தி டாமல்
அன்னவர்க் குரிய நாட்டை அளியென விதுரன்சொன்னான். 180

பாண்டவர் தூதனாகக் கண்ணனே பரிந்து சென்று,
வேண்டிய மட்டுஞ் சொன்னான் ; வெட்கமில் லாத பொல்லோன்
"ஈண்டடி மண்ணுந் தாரேன்" என்றனன் இரக்க மின்றி ;
ஆண்டமர் தொடுக்கக்கண்ணன் அன்பரைப் பணித்தெழுந்தான்.

பூப்பொறை நீக்க வந்த புண்ணிய யோகி சொல்லை,
காப்பெனக் கொண்டெ ழுந்தான் கார்முகச் சிங்க வீரன் ;
தீப்பொரி சிந்த வீமன் சிலைபெறுந் தோள்கள் கொட்டி,
நீப்பனிந் நீதி யற்ற நிருதரை யென்றெ ழுந்தான் !

சாரதி யாகிக் கண்ணன் சண்டையில் விசய னுக்குத்
தேரினை நடத்திச் சாட்சி சேதன னாயி ருந்தே,
போரினை நடத்தி யுண்மைப் பொறுமையும் அறமும் இந்தப்
பாரினில் வெல்லு மென்று பளிச்செனக் காட்டி னானால்.

என்று மாமுனி இத்துட னிக்கதை
நின்று நாளை நிமல னருளிய
வென்றி வீரரின் வேதமாங் கீதையை
நன்றிந் நேர நவில்வனென் றேகினான். 196

19. பகவத் கீதைப் படலம்

மூண்டது கொடிய வெம்போர் முதியது ரோண ஞங்கே
ஈண்டிய சேனே தாங்கி இகலெடுத் துற்ற நாளில்,
மாண்டவர் தொகையைஎண்ணி,மாளுவோர்எவரென்றெண்ணிப்
பாண்டவ வீரன் உள்ளம் பதைத்தனன் பதறி ஞனே !

வீரன் சோர்வு

சங்கொ லித்தனன் சக்கரக் கண்ணன்...
தாவிச் சேனே சமர்செயும் வேளே...
"அங்கு நிற்பவர் என்கிளே ஆசார்...
அவரைக் கொன்றர சாள விரும்பேன்...
இங்கு லகைத் துறந்திரந் துண்பேன்..."
என்று வில்லே யெறிந்து கவலே
பொங்கு வீர விஜயனேத் தேற்றிப்
புன்னகை செய்து கண்ணன் புகல்வான்.

கண்ணன் உபதேசம்

சாடி வெஞ்சர மாரி பொழியுந்
தருமப் போரிடையே தளர் வெய்திப்
பேடி போலப் பிதற்றிடு வாயோ ......?
பெரிய வீரப் பெருமைக் கழகோ ?
கூடி நிற்குங் கொடியரைக் கொன்றே...
குவல யத்திற்செங் கோலே நிறுத்தாய்....
வாடி நிற்கும் அறமகள் வாழும்
வன்பணி யிதென் அன்பு விஜயா !

இதயத் தேரில் இருந்துரைக் கின்றேன் :
எங்கு முள்ள பரம்பொருள் யானே...
மதி மயங்கா தெழுந்துநில் வீரா....!
வாழ்வின் முக்குணப் போரினுக் கஞ்சேல்...
சதிசெய் ஆசை அகந்தையின் கூட்டம்
சாயத் தூய சுதந்தரம் வாழப்
புதிய விண்ணர சோங்கிப் பொலியப்...
போர்செய் சிங்கத்தைப் போல விஜயா !

அழிவறும் ஆன்மா

பாசத்தால் என் பணிமறுக் காதே.
பாய்ந்து போர்செய் பகைவர் நடுங்க !
வீசு வெங்கணே ! வெற்றி யுனக்கே !
வீரர் தம்வினே செய்திடக் கூசார்.
நாச மாவது நாறுடற் சட்டை ;
நன்று வாழ்வது பொன்றறும் ஆன்மா.
மாசி லாதது ; வாளுக்குந் தீக்கும்
வணங்கி டாதது வாழ்விற் குயிராம்.

உண்மைப் பொருள்

உண்மை யாவதும், உள்ள பொருளும்,
உறுதி யாவதும், ஒன்று பலவாய்
மண்ணுடல் கொண்டு வாழ்வது மிங்கே
மாசி லாத சுயம்பர மாத்மா
எண்ணி லாத பிறப்பிறப் பெல்லாம்,
இன்ப துன்ப விகற்பங்க ளெல்லாம்
கண்ணிற் காணுமிக் காயத்திற் கேயாம்.
கலங்கி டாரிதைக் கண்ட புலவர்.

சமத்துவம்

வெற்றி தோல்வி, விருப்பு வெறுப்பு,
வெம்மை தண்மை விகற்பங்க ளின்றிப்
பற்று நீங்கிப் பலன்விழை வின்றிப்
பழுதறப் பணி செய்வது யோகம் ;
முற்றும் உள்ளச் சமத்துவம் யோகம்...
மூளையைக் கலக்கும் புல னைந்தைச்
செற்றுச் சுற்று மனத்தைச் செயித்தே
சேம நல்லறஞ் செய்பவர் மேலோர்.

நிலைத்த ஞானி

ஆசை யச்சம் அகந்தையைப் போக்கி,
ஆமை போற்புலன் ஐந்தும் அடக்கிப்
பாச மோகப் படர்சினம் விட்டுப்
பகைநட் பின்றிப் பகலிர வின்றி,
மாசி லாத மனத்தெளி வுற்றோன்,
மாறி லாதமர் மாகடல் போன்றோன்.
பேச லில்லா நிலைபெறு ஞானி...
பெரிய மோனி, பிறப்பிறப் பில்லான்.

வினைசெய் ஞானி

இந்த ஞானங்கை வந்த புலவன்,
ஏது செய்யினுந் தீதுற மாட்டான் ;
சந்த தமுஞ் சமநிலை நின்றே
தன்ன றத்தினைத் தாங்கிடுந் தீரன்;
பந்த மற்ற சுதந்தர னாகப்
பாரி லேயவன் சீர்வினை செய்வான்.
அந்த மாதி யிலாதுள் ளமரும்
ஆன்ம சத்துவம் தானென் றறிவான்.

கரும யக்ஞம்

கருமம் விட்டதுங் கட்டற மாட்டாய் ;
கரும மின்றிக் கணமுந் தரியோம்.
பெரு வினைக்களன் போலு முலகே !
பிரம சக்கரம் பீடுறு வாழ்வே
விரியு ஞான வியன்சுட ரோங்கும்,
வேள்வி யாக வினைகளைச் செய்வாய் ;
பரம னுக்குயர் வேள்வியில் லாத
பாழும் வாழ்வு பழுதுறு வாழ்வே !

ஞான வேள்வி

விரதம் கல்வி, தவம், உப சாந்தம்,
விந்த டக்கம், வை ராக்கிய வீரம்,
பரம் பொருளைப் பணிவுடன் போற்றல்,
பாயு மூச்சை யடக்கி நிறுத்தல்,
பிரமத் தீயில் அனைத்தும் வழங்கிப்
பிரம மாகுஞ் சகஜ சமாதி,
அரிய வேள்விக ளாமிவை செய்தார்
அறி வொளிரும் அமைதி பெறுவார்.

பிரம்ம யக்ஞம்

வேக மான புலனை யடக்கி,
வேறு செய்யும் அவித்தையை நூறி
சோக மோகத் துயரைத் துடைத்தே,
தொந்த மற்ற பதம்பெறு ஞானி,
யோக யுக்தன், விசுத்தன், விமுக்தன்.
உள்ளத் துள்ளும், உலகிலும், எங்கும்,
ஏக மான பிரம வொளிக்கே
ஈந்து தன்னை அதுமய மாவான்.

பணி செய்

திநர குறுத்தும் சினங் காமம்,
சிறுமை லோபப் பகைகளைச் செற்றே,
யானென தெனும் ஆணவ மின்றி,
யாதுஞ் செய்வ தியற்கையென் றெண்ணி,
வானு லகம் வளர்நலம் போற்றி,
வரும் பலாபல னையெனக் கீந்தே,
நானிஞ் ஞாலம் வகிப்பதை யெண்ணி
நன்று நின்கட னாற்றிடு நண்பா !

அவதாரம்

நலியத் தியன நல்லறம் வாழ,
    *நால்வகைத் தொழிலும் நனி யோங்க,
உலகந் தெய்வ நிலைக்கெழுந் துய்ய,
    யோகத் தாலிங் கவதரிக் கின்றேன்.
அளவி லாவினை யாடல் புரிந்தும்,
    அமைதி விண்ணில் அசைவற் றமர்வேன்.
இலகு ஞானிகள் எத்தொழில் செய்தும்,
    இதயந் தென்னுடன் கூடி யிருப்பார்.

அத்யாத்ம ஞானம்

தன்னைத் தன்னால் உயர்த்தித் தழைப்பாய்
    தன்னைத் தாழ்த்திட லேதலைக் கின்னல்
தன்னைத் தன்வச மாக்கி யமர்ந்தே,
    சலன மற்ற விளக்கென் றொளிர்வாய்,
தன்னிக ரென யாவையுங் காண்பாய்,
    சங்கற்ப விகற் பங்க ளொழிப்பாய் ;
தன்னைப் பெற்றவன் பின்னெதும் வேண்டான் ;
    தானே யின்பந் தனக்கென் றறிவாய்.

யோகம்

ஆச னத்தில் அசைவற் றமர்ந்தே
    அமைதி யான மனத்தினி லூன்றி
"மாசி லாதசுத் தாத்மா நான்" என்றே
    மறுவி லாத தியானம் புரிவாய்.
ஆசை பற்றி யலையும் புலனை,
    அங்கங்கே யிழுத் துள்ளத் தடக்காய்.
பேச ரிய பெரும்பொரு ளாவாய்
    பேரின்பத் தவ யோக மிதாமே.

யோக யுக்தன்

யோக யுக்தன் உலகினுக் கஞ்சான் ;
    உள்ள டங்கி யுவந்தொளி கூடி
ஏக மாகிய பிரமநிர் வாணன்,
    எங்குந் தன்னை யினிதுறக் காண்பான்.
தாக மோகந் தவிர்த்த சமர்த்தன்,
    சமநிலை யினிற் சாந்த மடைந்தோன்,
யாக முண்ணும் இறைவனைத் தேர்ந்தோன் ;
    ஆயிரஞ் செய்தும் பற்றற நிற்பான்.

---

* நால்வகைத் தொழில் – குண கர்ம விபாகம் :
1. அந்தணர்க்கு உரிய அறிவுத் தொழில்; 2. அறங் காக்கும் வீரத்தொழில்; 3. திருவோங்கும் பயிர், பசு காத்தல், வாணிகம் கைத்தொழில்; 4. பொதுநலமான தொண்டுகள்.

எனக்கினியவன்

என்னின் அன்னியம் யாங்கிலும் இல்லை.
என்னிலே தொடுப் புற்றன வெல்லாம்.
என்னி யற்கை *யிரண்டும் உலகாய்
இன்னுயிர்க் குல மானதை யெண்ணாய்.
என்னை யன்புசெய் யும்அறி வோனே
எனக் கினியவ னவனெப் போதும்.
என்னி லேயவ னின்புற் றிருப்பான்,
என்றும் யானவ னுள்ளத் திருப்பேன்.

உய்வகை

எவ்வ கையினர் என்னைக் குறித்தே
எவ்வகை வழி பாடுகள் செய்தும்,
அவ்வ கையினர்க் கவ்வழி தோன்றி,
அன்பை யேற்றிங் கருள்பவன் யானே.
செவ்வை யாகிய சித்தம் வகித்தென்
சித்தம் செய்வகை செய்பவர் மேலோர்.
உய்வகை யிதுவே—உணர்ந் துள்ளே
ஒருமை கொண்ட கரும நிறைவே.

இறுதி எண்ணம்

எண்ணம் எவ்வகை யவ்வகை வாழ்வாம்.
இறுதி யெண்ணம் இனிவரும் வாழ்வாம்.
எண்ணி லாத பரஞ்சுட ரொன்றே
எண்ணு மன்பனுக் கின்ப மியல்பாம்.
உண்மை யுன்னத நன்னிலை யெய்வான்—
உன்னி யென்னை யுயிர்விடும் யோகி.
புண்ணியம் பிறி தில்லையெப் போதும்,
பொருந்தி யோகத் திருந்திடு வீரா...

என்னில் அடக்கம்

வானிலே யடங்கும் வளி போலே
வையம் வாழுயிர் என்னில் அடங்கும்.
யானென் மாயையால் ஆக்கி யளிப்பேன்.
யானிலா தில்லை யாங்கணு மெஃதும்.
ஈனப் பாவியும் உய்வனென் அன்பால்.
என்னைநினைந் தெனக்கே யனைத்தும் செய்
ஆணை ! அன்பன் அழிவுற மாட்டான் ;
அன்ப னின்பொறுப் பென்பொறுப் பாகும்.

---

* இயற்கை இரண்டு: பரப்ரகிருதி, அபரப்ரகிருதி.

எல்லாம் யானே

முதலிடை கடை முற்றிலும் யானே.
    மூன்று கால நிகழ்ச்சியும் யானே.
ஸதஸத் தாகிடுந் தன்மைகள் யானே
    ஸர்வ பூத மஹேசனும் யானே.
இதயந் தோறும் இருப்பவன் யானே
    இயற்கை யான பொருள்களும் யானே
அதிசயச் சிறப் பென்சிறப் பாகும்.
    அகில மெல்லாமென் அம்ஸமொன் றேயாம்.

விசுவரூப தரிசனம்

விஜயன்

யான்சுத் தான்மன் எனத்தெளி வுற்றேன் ;
    எம்பி ரானுன் அருளிது வாயின்,
வான்புவி நிறைந் தோங்கிப் பெருகும்
    வடிவைக் கண்டிடக் காட்டிடு வாயே.

கண்ணன்

ஊன்வி ழிக்கரி தாகுமென் உண்மை—
    உலக ளாவும் அகண்ட சொரூபம்.
ஞானக் கண்ணைத் திறக்கிறேன் பாராய்
    ஞால மாகுமென் கோலத்தை நன்றே !

விஜயன்

கண்கொளா வியன் காட்சி யடாடா !
    கதிர்க ளாயிரங் காந்திடுஞ் சோதி !
விண்ணு மண்ணும் விரிந்தொளிர் உன்னுள்
    விளக்குப் பூச்சிபோல் வீழ்ந்தனர் வெய்யர் !
எண்கொ ளாத்தலை, ஆயுதக் கைகள் !
    இகற் படையை நொறுக்கிடும் பற்கள் !
புண்ணியர் தொழு கின்றனர் உன்னை !
    பூமி யெங்கும் பொலியுமுன் சக்தி !

கண்டேன் ! கண்டேன் !

கண்டேன்! கண்டேன்! காசினி யெல்லாம்.
அண்டமும் அப்பா லானவை தாமும்
கண்டேன் உன்னுட் கண்ணநின் பெருமை
விண்டேன், வியந்தேன் வேதப் பொருளே...
மகுடமும் தண்டும் வலயமுந் தாங்கினை...
தேசோ ராசியாய்த் திகழ்ந்தனை யெங்கும்.
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் நீயே...

அளவிடற் கரியாய் அழிவிலாப் பொருளே.
உலகுயிர்க் கெல்லாம் உறையு ளாவாய்.
ஆதியு நடுவும் அந்தமும் ஆனாய்,
கதிர்மதிக் கண்ணா, கனலெறி முகத்தாய்
எட்டுத் திக்கும் சுட்டுப் பொசுக்கினை
சித்தரும் இயக்கருந் தேவரு, முனிவரும்,
போற்றிசெய் துன்னைப் பூங்கழல் பணிவார்.
ஆறுகள் கடலை அடைவதே யொப்ப
உன்னுட் புகுந்தனர் உலகின ரெல்லாம்.
வணக்கம், வணக்கம், வான்புவி கடந்தோய் !
ஆஹா....அரக்கரை வேகமாய்த் தின்றாய்....
உக்கிர வடிவே உரை நீ யாரென..
உன்முன் அஞ்சினேன் ஓங்குயர் பரனே.

கண்ணன்

யானே காலன் ; அழிக்கப் புகுந்தேன் !
உன்னைத் தவிர உண்பேன் அனைத்தும்.
முன்பே இவரை முடியக் கொன்றேன்...
நிமித்த காரண மாகவே நின்று...
போர்புரி யன்பா....புகழெலாம் உனக்கே

விஜயன்

சரணம் சரணம் சத்குரு மஹாத்மனே !
ஆதிப் பொருளே....அனந்த குணனே,
உலகிற் கெல்லாம் உயர்பெறு நிலையமே.
அறிவே அறிஞர் அறியும் பொருளே,
ஆயிரந் தடவை அடியேன் வணக்கம்.
முன்புறம் வணக்கம், பின்புறம் வணக்கம்.
எல்லாப் புறமும் இறைவனே வணக்கம்.
மனிதத் தோழன் என்றுனை மதித்தேன்.
அன்பி னாலும் அசட்டை யாலும்
அன்பா கண்ணா யாதவா என்றேன்.
உண்ணும் போதும், உறங்கும் போதும்,
ஆடும் போதும், அமரும் போதும்,
நண்பர் முன்பும் நாயினேன் உன்னை
விளையாட் டாக வினய மின்றிப்
பேசினேன் ; என்பெரும் பிழைகளைப் பொறுப்பாய்..
மன்னித் திடுவாய் மாதவா போற்றி !
சராசர வுலகத் தந்தை நீயே...
ஒப்புயர் வற்ற உண்மை நீயே—

நீயே வையகம் ; நீயே வானகம்.
தந்தை தனயனைப் பொறுப்பது போலே
நண்பனை நண்பன் பொறுப்பது போலே
காதலன் காந்தையைப் பொறுப்பது போலே
தேவா பொறுத்தருள் சிறியேன் பிழையை....

ஆதி யப்பவொப் பற்ற பரமா,
அடைக்கலம் என் பிழைபொறுத் தாளாய்...
போதும் இந்த உருத்திரக் காட்சி
பொறுக்கி லேன்இயல் பாகப் பொலிவாய்.

கண்ணபரமாத்மா விசுவரூபத்தை மறைத்து

வேதந் தானந் தவம் விளம் பாதாம்.
வீர பக்தி விரதத்தி னுலே....
யாதினும் பெரும் அற்புதங் கண்டாய்.
யானெ லாமென் றறிந்தனே யன்பா !

அருமை யன்பன்

கருத ரிய கடவுளைக் கண்டோன்.
கானு யிர்கள் அதுமய மென்போன்,
இருமை, அச்சம், பகைசெருக் கற்றோன்,
இன்ன லின்றி எவர்க்கும் இனியன்,
கருணை நேயன் சமநிலைச் சாந்தன்,
கலங்கிடா மனத் தூயன், விதேயன்,
அரு ளமைதி யறிவொளிர் யோகி,
அருமை யன்பன் அவனெனக் காவான்.

புருஷன், பிரகிருதி

†தத்துவம் இரு பத்தொடு நான்கும்
சார்ந்த தாகும் இயற்கைச் சடலம்.
சுத்த சாட்சி புருஷ னதனுள் ;
சுதந்தரன் அறியும் அறி வானோன்.
சித்த மூன்றுந் தியானத்தி னுலும்,
செய்ய ஞான விசாரத்தி னுலும்,
பத்தி யாலும், அருட்பணி யாலும்
பார்த்தவர் பர மானந்த ராவார்.

---

†24 தத்துவங்கள்: பூதங்கள் 5, தன்மாத்திரை 5, ஞானேந்திரியம் 5, கர்மேந்திரியம் 5, அந்தக்கரணம் 4—ஆக 24

ஞானம்

தன் னுறுதி யடக்கம், பொறுமை,
 சாது சங்கம், பெரியவர் சேவை,
இன்னுயிர்க் கருணை மனத் தூய்மை,
 இந்த்ரிய ஜயம், சித்தவை ராக்யம்,
என்ன தென்னிறு மாப்புக ளின்மை ;
 இதய சாந்தி, சமநிலை யோகம்
உன்னதப் பொருளை யுணர் விக்கும்,
 உண்மை ஞான வொளியினை நல்கும்.

பிரம நிலை

சுகம், அவா, இருள் ஆணவத் தாலே
 சூழு முக்குண மாயையைத் தாண்டி,
பகைநட் பற்ற சமப்பத மெய்தி,
 பற்றி லாது பதைப்பதில் லாது,
சகத்தி னுடலைச் சாட்சியாய்க் காண்போன்,
 சந்தத மௌனச் சிந்தையில் வைப்போன்,
அகங்கி ளம்பா தடங்கிய சாந்தன்,
 அவன் பிரம நிலைபெறு யோகி.

வாழ்க்கை

ஆதி ப்ரம்மனில் ஊன்றி விரியும்
 அரசைப் போன்றதிம் முக்குண வாழ்க்கை.
பேத புத்தி அகந்தையின் பற்றால்
 பெருகுந் துன்பமிப் பேதுறு வாழ்வில்.
நீதி மைழத்திடும் ஆசையைச் செற்றார்
 செருக்கிலார், தொந்த பந்தமில் லாதார்,
சோதி நாதனைப் பெற்றுச் சுகிப்பார்..
 சுவர்க்கம் அன்னவர் தூயநல் வாழ்வே.

புருஷோத்தமன்

வினை முதல்வன் விளம்பிடில் யானே.
 விளை பயிரை வளர்ப்பவன் யானே.
தினக ரனிற் றிகழொளி யானே.
 தின்றதைச் செரி யக்கினி யானே.
அனைத்தி னுள்ளமுங் கோயில்கொண் டுள்ளேன்.
 அற்பு தங்களென் அம்ஸமொன் றேயாம்.
எனைப் புருஷ ப்ரகிர்திக்கப் பாலாம்
 ஈடிலாப் புரு ஷோத்தம னென்பாய் !

தேவாசுர சம்பத்து

நிரம் உட்புறத் தூய்மை, அஹிம்ஸை,
திண்மை, உண்மை யறிவி னுறுதி,
சீர்மை, நேர்மை, பொறுமை, அமைதி,
தியாகம், தெய்வத்தன் மைக ளிவையாம்.
கூரம், பொய்யிறு மாப்பு, பகைமை,
கொடுமை, வெங்கோல் நாத்திகத் திறு,
கார்நரகிற் புகுத்தும் பொறாமை,
காமம் ஆசை அசுரக் குணமாம்.

சிரத்தை, தவம்

சிரத்தை யெப்படி யப்படி மாந்தர் ;
சிரத்தை முக்குணச் சீர்மை யுடைத்தாம்.
உரை, யுணவு, நடை நினை வுள்ளம்
உண்மை யான வொழுங்கொ டமைக.
பிரம சர்யம் குருவழி பாடு,
பேச்சி லுண்மைநற் கல்வி, யறிவு
பரம னன்பு, மவுனம் அடக்கம்
பழுதி லாத்தவ மாகும் இவையே.

ஓம் தத் ஸத்

சொல்வ தெல்லாம் சுருதியும் ஆகும்,
தூய நல்வினை வேள்வி துலங்கும்.
தொல்லுல கெல்லாந் தன்மயந் தோன்றும்.
சுத்த முத்தி துளிர்த்திடும் வாழ்வில்.
எல்லை யற்ற சமரஸங் காணும்
இன்னு யிர்களுக் கொற்றுமை யெய்தும்.
அல்லல் போம் பிரமநிலை யாகும்,
அறிக ஓம்தத்ஸத் ஓமெனும் உண்மை.

மறுவறு மின்பம்

வினைப்பற் றற்று, விழை மனமற்று
விரதம், வேள்வி, தியாகம் விரும்பி,
எனதி யானென் செருக்கை விலக்கி,
இறைவனை யுணர்ந் தெங்கு மெதிலும்,
இனிய நஞ்சாம் புலச்சுக மின்றி,
இன்ப மாத்ம சுகமென் றறிந்தே,
மன மயக்கினை மாசற வென்றே
வாழ்வை யோக மெனச்செய் மனிதா !

நன்னறம்

சமதமந் தவங் காத்திடும் பார்ப்பார்,
சமர்வென் றுளுஞ் சவுரிய வீரர்,
அமைவுறப் பணி செய்திடும் அன்பர்,
ஆ, பயிர், பொருள் ஆக்கும் வணிகர்
தமக் குரிய தருமத்தைப் பேணிச்
சமுக சேவைசெய் யாவரும் ஒன்றே.
சுமையுறும் அகங் காரமில் லாதே
தொண்டு செய்யென் சுதந்தர வீரா !

பரமஹம்ஸன்

முத்தூய்மை யுறுதிபெறக் காம மாதி
முக்குணதொந் தங்களெலா முடிய வீட்டிப்
புத்தியினைத் தெளிவாக்கிப் புலனை வென்று,
போதவடி வாந்தன்னுட் பொருந்தி நிற்கும்
சித்தனே பரமஹம்ஸன் சிற்சு காத்மன்,
சித்தஜயன், பரமாத்ம நிலையிற் சேர்வான்.
சுத்தனவன் எதுசெயினுந் தோஷ மில்லான்,
சுற்றுலகின் விளையாட்டிற் பற்றில்லானே.

சரண் புகுவாய்

இன்னுயிரின் இதயத்தில் இறைவன் உள்ளான்.
எல்லாந்தன் மாயையினில் இயங்கச் செய்வான்.
அன்னவனுக் காளாவாய் ; அருள்பா லிப்பான்.
அச்சமிலை, இடரில்லை, அழிவு மில்லை.....
என்மனத்தன், என்னன்பன், எனைப்பூ சிப்போன்,
என்மய னுவான் ; யானே அவனுள் வாழ்வேன்.
சொன்மனத்தைக் கடந்தசுகப் பொருளாம் என்னைத்
தூயசரண் புகுந்தின்பந் துலங்கு வாயே !

விஜயன்

மோகம் விடுமுக் குணதொந்த மறு.
வேகப் புலனைந் தையும்வென் றுசதா
யோகத் திரு....வென்றனை யுள்ளமரும்
ஏகப் பொருளே எனதாண் டவனே...

விடுவாய் அறமில்லன ; வேண்டியெனை
நடுவாய், யடைவாய் ; நலியும் கலியே....
அடுவாய் பகையென் றனைஅச் சுதனே,
விடுவேன் கணையுன் செயல்வென் றிடவே......

பண்ணும் பணியும், பயனும், பரிசும்,
எண்ணும் நினைவும் உனதே யிறைவா....
விண்ணும் புவியும் விளையா டுகிறாய்.
கண்ணே கருணைக் கடலே சரணம் !

கீறு

வேதப் பொருளே, விண்ணின் பழுதே,
சோதிச் சுடரே, சுகநற் கனியே !
ஆதிப் பொருளை யருளும் அறிவே !
கீதக் குயிலே, கிளருள் விசையே !

20. பொய்வேடப் படலம்

காப்பு

மன்னுறு பாரத சக்தி மாகதை,
என்னுயிர்ப் பாகிய இனிய மாகவி,
பொன்னெனப் பொலிந்திடப் புலவர் தெய்வமே
உன்னருட் சுடரினை யுதவி யாளுவாய் !

கலியன்

தேவரும் ஒடுங்கிடத் திறல்கொள் என்னையும்,
பூவிலே ஓர்சிறு புல்லன் வெல்வதோ !
யாவரும் வணங்கிடும் என்னை மீறியே,
கோவென ஒருவனுங் கோல் பிடிப்பதோ !

ஞானமா முனிவரை நலிக்க விறுடன்
போனவர் மீண்டிலர். போர்ப்ப டைகளைக்
கானக மெங்குமே காவல் வைத்தவன்
கோனெனப் புரக்கிறான் ; கொடுமை யென்சொல்வேன் !

மெத்தவென் சூழ்வினை விழலுக் காவதோ ?
சித்தியிற் சுத்தனுஞ் சிறந்து வாழ்வதோ ?
இத்தகை யெதிரியின் இரத்த முண்ணவென்
கத்தியுந் துடித்தது கடிய வேட்கையால்.

முனிவரைக் கொன்றிந்த மூது லகிலே,
இனியறங் கடவுளென் றெவரும் பேசிடாத்
தனியரசு சாட்சியைத் தாங்கக் கோரினேன் ;
சனியனாய் வந்தனன் சத்தி யன்மகன்.

எடுத்ததும் தோற்றனன் ; எனது காரியங்
கெடுத்தவன் வாழ்கிறான் கேடி லாமலே !
விடுத்தவெங் கணைகளென் விழியிற் பாய்ந்தவே !
தொடுத்தபோர் எனக்கொரு தொல்லை யானதே !

உய்வகை காணு தாங்கே உறுதிகெட் டழிந்து மேலுஞ்
செய்வகை நினைத் தயர்ந்த கலியனைத் தேற்ற ஆங்கே,
பொய்வலை வீசி வஞ்சப் புன்னகை குலுங்கத் தண்டை
கைவளை கலகலக்கக் காமமோ கினியும் வந்தாள்.

கலியன்

நானி லத்தை நடுக்கி யடக்கியே,
கோனெனப் புகழ் கொள்ளுங் கருத்தெலாம்
வேனிற் கால வெறுங்கன வானதே !
ஏனினும் உயி ரேந்தி யிருப்பதோ ?

மோகி

கொற்ற வீரர்கள் கொடுஞ்சமர் தன்னிலே தோல்வி
யுற்ற போதுந்தம் உறுதியை நழுவவி டாமல்,
மற்றடம் புயங் கொட்டுவார் ; மாற்றவர் நடுங்க !
வெற்றி யன்னவர்க் கேயென விளம்புவ தாமே !

கலக்க மேனினிக் கலிநகர் காவலா, உடனே
அலக்க ணற்றிடும் அதிசயச் சூழ்ச்சியொன் றுரைப்பேன்...
வலக்கை போலுனக் குதவிடும் வகையது வென்ன,
துலக்கதை யெனக் கலிஞனுந் துள்ளிஞ னுங்கே !

பகைசெய் வாளினைப் பதுக்கிநம் அகம்பரப் படைகள்,
சிகையுங் காவியும் சாம்பலுஞ் செம்மையாய்ப் புனைந்தே
மிகைசெய் தாந்திரச் சாமிகள் வேடங்கொண் டாங்கே
நகைசெய் நாடகம் நடித்திடின் ஊரெலா நமக்கே !

நம்பு லான்மது போகத்தை வெளிப்பட நடத்தி,
சம்பு பைரவி சக்திஓம் சரணனெனச் சாற்றி,
வம்பி லாதொரு மாணவக் கூட்டமும் வளைத்தே,
பின்பு நாட்டினைப் பிடித்திடப் பெரும்படை விடுவோம்.

கலிஞன்

நல்ல தந்திர மொன்று நவின்றனை
செல்வ மேயென் செருக்கினைக் காத்தனை.
கல்வி கற்ற கசட்டுக் குருடரை
வெல்லு மென்றன் விரதம் பலித்ததே.

கொஞ்சு மின்பக் குயிலிசைப் பாவையே,
நஞ்சும் வேலு நயனங்க ளாகிய
வஞ்சியே யென் மயக்கந் தவிர்த்தனை ;
நெஞ்சை யள்ளுமென் ஆசை நெருப்புநீ

வெஞ்சி னப்படை, வேகு நெருப்பெதிர்
பஞ்செ னப்படச் செய்த பகைவனை
வஞ்சந் தீர்க்கும் வகையொன் றளித்தனை
என்சுகக் கிளி யேஎன தாவியே !

கொள்ளை போன குடியென் றெனதுளம்,
கள்ளை யுற்றது ; சங்கடந் தீர்த்தனை,
அள்ளி யுன்னை அணைவதென் ஆனந்தம் !
கள்ளினுஞ் சுவை காட்டிடுங் காமமே !

மது மயக்கமும், வாய்ந்த மகிழ்வுறும்
புது மயக்கமும், போக மயக்கமாய்,
எது வரையிருந் தாரென் றறிகிலோம் ;
கதுமெனப் படை முன்கலி நின்றனன்...

மோகி சொன்ன முழுநரிச் சூழ்ச்சியை
சாக சத்துடன் சாற்றிடக் கேட்டதும்,
"ஆககா சரி யான" தென் றோர் படை
வேக மாகப்பொய் வேடம் புனைந்ததால் !

காலிக் கூட்டமுங் காவி யுடுத்திய
போலிக் கூட்டமும், புண்ணியம் பேசிடுங்
கேலிக் கூட்டமுங் கேடுறு மோகியின்
நீலிக் கூட்டமும் சென்றிட நின்றதால்.

கால தாமத மின்றிக் கயவரைக்
கோல முற்ற குறிப்பினுக் கேற்பமார்ச்
சாலஞ் செய்யத் தயாரித் தனுப்பினான்
ஞாலம் வேண்டிய நாத்திகப் பித்தனே.

தடித்த தந்திரத் தாமதச் சாமிகள்,
படித்த வித்தையின் பண்பும் பயன்களும்,
நடித்த போதினி நாமும் அறிவதே
அடுத்த நாடகத் திற்கழ காகுமே !

தூயர் போன்றிந்தத் தொல்லைசெய் தந்திரப்
பேயர் கூட்டம் பிரிந்தபின் வெங்கலி
தீய ராகித் திருவில செய்திடும்
நேய ருக்கு நிகழ்வன செப்பினான்.

கலியன்

அகம் பரனுக் கமைந்தநற் சீடர்போல்,
இகம் பரமென் றெளிதுரை பேசியே,
சக மகிழ்ந்திடுஞ் சாதுக்க ளாகியான்
அக மகிழ்ந்திடும் அல்ல லிழைமினோ !

தடையி லாதுநந் தந்திரச் சாமிகள்
அடைந்து சித்தியை ஆக்கிர மித்ததும்,
புடை யொளிந்து புனையுருக் கொண்டுளே
படை நடத்திப் பகைவரை வெட்டுவோம்.

முத்தி வேண்டிக்கண் மூடி யுறங்கிடும்
பித்தர் ஊரைப் பிடித்திட நாமின்று
சத்த மின்றிமுன் சாம்பற் புலியினை
ஒத்த வேலை உளவறிந் தாற்றுவோம். 100

இவ்வகைக் கலிஞனு மியம்பி யின்னமும்
வெவ்வகைச் சூழ்ச்சிகள் விதைக்க வூணரோ (டு)
ஒவ்விய தனியறை யுற்றபின் பிறர்
அவ்வறைச் செய்தியை அறிதற் பாலதோ ! 104

21. கார்த்திகைப் படலம்

சத்தியன் சாது சங்கம்

சாந்தமா முனிவர் கூட்டந் தவஞ்செயப் போன பின்பு,
தேர்ந்தமா முனிவ ருக்குத் திருமட மெழுப்பி யாங்கே,
தீந்தமிழ் ஆரியஞ் சேர் திருவருள் வேத மோதி,
வேந்தனுந் தனது நாட்டில் விவேகத்தை வளரச் செய்தான் !

சுத்தனுக் கரசைத் தந்து, சுதந்தரம் பெற்ற தந்தை
சத்தியன், முதிய நாளைச் சாதுக்க ளுடனே வாழ்ந்து,
முத்திநன் னெறி பயின்று, முனிவரர் தொண்டு செய்து,
சித்தத்தைச் சிவன்பால் வைத்துச் சென்மத்தின் பயனைப்
பெற்றான்.

வேதமும் உபநி ஷத்தும், வியாசசூத் திரமுங் கண்ணன்
கீதையும், குறளும் அன்பிற் கிளர்திரு முறையின் வாக்கும்,
ஆதிசங் கரரின் வாக்கும், அருட்பிர காசர் வாக்கும்,
ஓதியும் ஓது வித்தும் ஒழுகினர் உண்மை தேர்ந்தார் !

தேவர்க்கும் பெரியா ருக்குந் திருவிழா நடத்து வார்கள்.
பூவிற்கு நன்மை செய்த புண்ணியர் புகழ்கொண் டாடி
நாவிற்குஞ் செவிக்கும் இன்பம் நயந்திடு விருந்த ளிப்பார்..
யாவர்க்கும் அன்பு பேணும் இதயவி சாலங் கொண்டார்.

பாடலாற் பத்தி ஞானப் பனுவலாற் கதையாற் பேச்சால்,
வீடெலாம், வீதி யெல்லாம், வித்தியா சாலை யெல்லாம்,
நாடெலாம் தூய வுண்மை நன்னெறி பரவச் செய்தார்—
காடெலாம் பர்ண சாலை கட்டிநற் றவஞ்செய் தாரே ! 20

மன்னவன் படைக ளுக்கு மாபெரும் வீரர் செய்கை
இன்னிசைக் கருவி மீட்டி இயம்புவார் ; ஊக்க மீவார்,
புன்னெறி யரக்க ரிங்கே பூண்டுடன் அழியத் தூய
முன்னவர் செய்த வீர முயற்சியை விளக்கு வாரே !

பாரத முனிவன் வேண்டப் பரம்பொருட் கனலே யாகிச்
சூரனைக் காய்ந்த வெற்றிச் சுடர்மணி வேலனுக்கு,
வீரநும் யோக ஞான விரதநும் கார்த்தி கைநாள்,
சீரிய முறையிற் சோதி திருவிழா நடத்தி னாரே.

முருகன் வழிபாடு

முருகனென் றுரைத்தநும் ஊரு ளோரெலாம்,
உருகிய காதலால் உள்ளம் பொங்கியே,
பெருகிய நல்லணி பிறங்கச் செய்தனர்,
திருநகர் அழகொளி திகழ வெங்குமே !

சிவக்கன லாகிய செந்தில் ஆண்டவன்,
பவத்துய ரொழித்திடும் பரம பாவனன்,
அவத்தினைச் செய்திடும் அரக்கர் கூட்டத்தைத்
தவக்கன லாலின்று தகர்க்க வேண்டினர்...

வீதியிற் சிறுவரும் வேலன் வேலினாற்
காதகப் பகைவனைக் கடிதல் ஆடினர்.
மாதிர மதிர்ந்திட மல்லர் சேனைகள்,
போதரும் போரினைப் பொருது வென்றவே..

ஊறுசெய் கலியனின் ஊற்றம் யாவையும்,
கூறுபட் டொழிந்திடக் கொடிய போரிலே,
நூறுவோம் என்றனர் நுதிகொள் வேலுடன்
ஏறென நடந்தனர் எமனு மஞ்சவே !

இன்னிய நாட்கட னியற்றித் தூயராய்,
முன்னரு முனிவரும் முதுபு லவரும்,
மன்னரும் அமைச்சரும் மல்லின் வீரரும்,
பொன்னணி மந்திரம் புகுந்து நின்றனர்.

பகலினிற் பட்டினி விரதங் கொண்டவர்,
இகல்கெட வுலகெலாம் இன்ப மோங்கவே,
அகங்குவிந் திறைஞ்சினர் ; அரக்கர் காலனுங்
குகனையுள் ளன்புடன் கூட்ட மாகவே !

மாமறை முழங்கினர், மந்தி ரஞ்சொல்லிப்
பூமழை சொரிந்தனர், புண்ணி யந்தரும்
நாமங்கள் பாடினர் ; நடன மாடினர் ;
ஓமங்கள் வளர்த்தனர் "ஓம்குகா" வென்றே !

வாய்மனங் கடந்தவன், வடிவொன் றற்றவன்,
ஓய்வறத் தொழில் செய்தும் ஒட்டி லாதவன்,
ஆய்வுறு வேதமும் அறிகிலாச் சிவன்
சேயினை வணங்கினர் வேள்வித் தீயிலே !

காலத்தின் போக்கையுங் கலியின் போக்கையும்,
ஞாலத்தின் போக்கையு நவின்ற பின், வடி
வேலவன் அருட்கனல் வெற்றி நல்கெனா அச்
சீலர்கள் செப்பிய செபத்தைச் செப்புவாம் :

முருக ஜபம்

‡அருணமுகத் திருவழகா, கருணைவிழிக் குழகா !
தருணமழை போலுதவும் தயைமிகுந்த குமரா !
இருளரக்கர் குலமழியப் பொருதுசுடர் வேலா !
குருபரஓம் சிவக்கனலே ! குகனே சண் முகனே !

அன்புமண மலர்மாலை ஆர்வமுடன் சூட்டி,
என்புருக மனங்குழைந்தே எம்முகம்பார் என்றோம் !
துன்ப மிகும் பகைக்குலத்தைத் தூருடனே நூறி,
இன்பமுறும் வெற்றியருள், எம்முயிருக் குயிரே !

கண்ணற்ற காமவெறிக் காளான கலியர்
புண்ணுற்ற பொய்வினையே போற்றுகின்ற புல்லர்,
மண்ணுற்ற பாவமென மல்குமவர் ஒழியக்
கண்ணுற்றுன் பண்பாடிக் களிநடனம் புரிவோம் !

போரொடுங்கி இருமனத்தின் புகையொடுங்கித் தீதின்
வேரொடுங்கிப் பேராசை வித்தொடுங்கி, மறத்தின்
கூரொடுங்கி, அறவாழ்வே குலவியுன தருளிற்
பாரடங்கி வாழ்ந்திடவே பார்க்குமகிழ் வருளாய்.

வஞ்சனைசெய் மாயமற, வாய்மையொளி காட்டாய்,
அஞ்சவருந் தீவினையை அக்கணமே மாற்றாய்.
நெஞ்சினிலே நீண்டுணருஞ் சிவஞான நெருப்பே,
தஞ்சமுனை யன்றியிலை, சண்முகனே சரணம்.

பற்றலரின் படுமாயப் பாழ்வினைகள் சிந்திப்
பெற்றதொரு தாயினரும் பிள்ளைகளைப் போலே
ஒற்றுமையாய், உலகமெல்லாம் ஒருகுலமாய் வாழும்
பெற்றியினை யீந்தருளாய், பிரியமுள்ள முருகா !

‡*சந்தம்: தனனதன தனனதன தனதனன தனனா; இராகம் காம்போதி; ரூபக தாளம்.*

வாளுக்குக் கனலிவாய் ; வங்கணரை அழிக்கத்
தோளுக்குப் பலமீவாய் துட்டர்களை விழ்த்த,
நாளுக்கு நாளுயர்ந்தே நன்மைவளர்ந் திடவே,
ஆளெம்மை அரசேயெம் அறிவான முருகா !

கலகமிடுஞ் சினவெறியர், கட்காம வெறியர்,
நலமழிக்குங் கொலைவெறியர், நாத்திகத் தீ நாவர்
புலனடங்காப் பொய்வெறியர் பொல்லாங்கைத் தடுக்கப்
பலமருள்வாய் சூரபத்மன் பலமழித்த குமரா !

எனதுனதென் றிறுமாக்கும் ஈனவெறி யின்றி,
மனிதனுக்கு மனிதனுறு மரியாதை காட்டி,
மனமொன்றி, இனமொன்றி, மயக்கமறப் பொதுவில்,
தினமொன்றி வாழவருள் செவ்வியவேல் முருகா !

பாருண்மை வழியறிந்தே பயபந்த மின்றி,
போரின்றிப் பொய்யின்றிப் புன்பொ றுமை யின்றி,
ஒருண்மை, ஒருள்ளம், ஒருயர்ந்த கடவுள்,
ஒரரசுங் கொண்டினிதே ஓங்கவருள் புரிவாய்..

பித்துலகப் பிரிவினைசெய் பெருந்துயர்கள் தீரத்
தொத்தடிமைத் துயர்தீரச் சுதந்தரமே பெருகப்
புத்துயிரும் புதுயுகமும் புதுவாழ்வும் பொலியச்
சுத்தமக ராஜனுக்குத் துணையருளாய் முருகா !

விண்ணகத்தே நிலவுகின்ற வெண்சுடரைப் போலே
மண்ணகத்தே இருள்போக்க வந்தசுடர் மணியாம்,
எண்ணகத்தே இனிக்கின்ற எங்கள் மகாராசன்,
புண்ணியத்தால் வானரசு பூமிசையே பொலிக !

சாந்த சிவ மோனவொளி தந்ததவக் கனலே,
காந்தமெனத் தொண்டர்மனங் கவருகின்ற குருவே,
மாந்தர் பயம் ஒழித்திடவே வந்தமயில் வேலா
தீந்தமிழின் சுவையெனவே தித்திப்பதுன்றன் பெயரே !

மங்குதலில் வாழ்வென்னும் மணிவிளக்கைத் தூண்டாய் ;
சிங்கமென விறுபடை சீவசக்தி தருவாய் !
தங்கமெனப் பொலிகின்ற சத்தியவேல் முருகா !
பொங்குகநின் னருளாலே பூரணமிவ் வுலகே !

காலையிலே எழுந்திலகுங் கதிரழகுன் அழகே,
மாலையிலே பூத்தமுல்லை மலர்நகையுன் னகையே !
வேலையிலே நடமாடும் வேகமுன திசையே !
சோலையிலே மணத்தென்றல் சொல்லுவதுன் சொல்லே !

மலைமேலே மலைபோலே மாண்புடனே வசிப்பாய்,
அலைவீசும் அருவியிலே அருள்வீசி வருவாய் !
கலைவீசும் புலவருளங் கவியூற்றாய் வளர்வாய் !
வலைவீசிக் காதலரை வசஞ்செயிளங் குமரா !

வருவாயெங் கலிதீர்க்க வள்ளிமண வாளா !
தருவாயுன் ஆசியினைத் தருமவினை வெல்ல !
திருவாரும் தேவர்குலம் திகழவுல கெல்லாம்
குருவாக வருவாய்ஓம் குகனேஷண் முகனே !

ஓவடி வாகிய ஒளியிற் றோன்றிய
தீவடி வாகிய சிவத்தின் செல்வனை
நாவமு தூறிட நவின்று நன்மலர்
தூவினர் தூயவர் சுத்த ஓமெனாஅ !

அத்ததி யனைவரும் அமைதி யெய்தித்தம்
சித்தத்தைக் குவித்துளே தியானஞ் செய்தனர்.
இத்தகைக் கூட்டத்தின் இதயம் பொங்கவே
சுத்தனுஞ் சிலமொழி சொல்ல லுற்றனன் :—

சுத்தன்

கந்தனுக் கேற்ற கார்த்திகை நாளில்,
குகைக்கனல் முன்னே கூடிய பெரியீர் !
எனது செங்கோல் இனிது நடக்க
மனதுவைத் துதவும் வாய்மையன் புடையீர்,
இன்று காறும் இந்தநன் னாட்டில்,
அறம்பொரு ளின்பமும் அருளும் அமைதியும்
இறைவன் கருணையால் இலகிடக் கண்டோம் !
ஆனாற் கலியின் அதர்மப் படைகள்,
ஆயிரஞ் சூழ்ச்சிகள் பேயெனச் செய்து,
நாட்டைக் கலக்க நாளையே வரலாம்.
ஒற்றர் சொல்லும் உளவைக் கண்டால்,
ஓசையில் லாமல், ஒன்னலர் வந்து,
மோசஞ் செய்ய முனைவா ருண்மையே.
சாந்தமே நமது சத்தியக் கொள்கை ;
என்னினும் பல்லோர் இருக்கும் வீட்டில்,
பாம்பும் புலியும் பசக்கெனப் புகுந்தால்,
அவற்றை அடலே அமைதிக் கெளிதாம்.
மனிதர் கூட்டம் இனிதுவா ழாமல்,
போரும் பொறாமையும் போட்டியுங் கொண்டு
சீரழிக் குங்கலிச் சேனையை இன்று

வேருடன் அழிக்கவே வீறுகொண் டெழுந்தோம்..
தோள்வலி யுண்டு ; வாள்வலி யுண்டு ;
வேள்வலி யுண்டு வெற்றி நமக்கே...
அச்ச மில்லை, அருளும், ஆண்மையும்
நச்சரா போன்ற நாசரை நலிக்கும்.
ஆணவங் கொள்ளும் அரக்கரை யொடுக்கும்,
கதிர்வேல் சக்தி காப்பெமக் காமே..
என்னுயிர்க் குயிராம் இன்னுயிர் மக்காள்,
அறப்போர் முனையில் அருங்க ளுற்றத்
தயாரா யிருங்கள் ! சத்துருப் படைகள்
பூனைபோற் புகுந்து புலிபோற் பாயும்.
வேடம் போட்டு விஷமஞ் செய்யும்,
கண்விழித் திருங்கள், கத்தியுங் கையுமாய்த்
துணிவுகொண் டிருங்கள் ! பணிவுகொண் டொன்றித்
தலைவர் ஆணையைத் தாங்கி நடமினே !
சுத்த சக்திச் சுடர்மணி வேலன்,
வீரமும் தீரமும் வெற்றியுந் தருவான்..
வெல்லுக தருமம் விளங்குக மெய்யே.

ஜனங்கள்

வெல்லுக வேந்தன் விளங்குக சக்தி
என்று பெரியார் நின்றுவாழ்த் தெடுக்க
வேந்தனும் அமர்ந்தான் ; விரதம் முடிந்தது.
பசித்தா ரெல்லாம் பால்பழம் புசித்தார்.
உலகம் அனைத்தும் நிலவிய தன்பே.

மாதவ முனிவருக்கு மகேசுர பூசை யாங்கே
தீதற நடக்கும் போது, "சிவசிவ சிவ ஓம் சக்தி
ஆதிபை ரவிஓம் காளி ஹம்படேஸ் வாஹா" வென்றே
மாதிரம் அதிரக் கூவி வந்ததோர் சாமிக் கூட்டம்.

நீற்றினைப் பூசிக் காவி நீள்சடை தாடிமீசை
தோற்றிய புதியர் தம்மைத் துறவிக ளென்றே தூயர்,
ஏற்றனர் ; உணவளித்தார் இருப்பிடந் தந்தார் ; அன்னோர்
கூற்றெனக் கிளர்ந்த வஞ்சக்கொடுமையையறிகுவோமால் !

22. போலித் துறவிகள் படலம்

துள்ளிடும் புலனடக்கித் துறுதுறுத் திடுமனத்தை
மெள்ளவுள் ளடக்கி நானார் எனச்சதா வினவி னாங்கே,
உள்ளத்தி லுள்ள சுத்த வுண்மைநான் ஆன்மா என்றே
தெள்ளுறத் தெளிந்த பேரே திருவரு ளறிஞ ராவார்...

அத்தகை யறிஞர் சற்றும் ஆணவ மின்றிப் போலிப்
பித்தரின் வேட மின்றிப் பிறரையுந் தாமென் றெண்ணி,
இத்தலத் துயிர்க ளுக்கும் இயன்றநன் னலங்கள் செய்து,
சித்தத்தைச் சிவன்பால் வைத்துச் சிக்கற வாழு வாரே !

அன்பினுல் அருளைத் தேடி, அருளினுல் அறிவ றிந்தே,
இன்புறப் பொதுநலஞ்செய் திருவினைக் கட்டு மின்றித்
துன்புறு மாசை யின்றித் துகளுறு செருக்கு மின்றிப்
பண்புற வாழுவாரே பழுத்தநற் றுறவோ ராவார்..

அவ்வகைத் துறவோ ருக்கும், ஆளையே மாற்ற வந்தே
ஒவ்வறு நடை யினுலே ஊரினைக் கெடுக்கும் வஞ்சத்
தெவ்வகைத் துறவி னர்க்கும் வேற்றுமை தெரியவேண்டி
செவ்விய ஒற்றர் பின்னேசித்தினி பவனஞ் சேர்வாம்...

சித்தினி பவனம்

சுற்றிலுங் காவல் வைத்த சோலையி னடுவ மைந்தே
முற்றிலுங் கருங்கல் லாலே முடிந்ததப் பவனம் ; ஆங்கே
பற்றுத லுடையார் சென்று வருவதைப் பார்ப்போ மேனும்,
இற்றெனச் செயலைக் காற்றும் இயம்பிட முடியா தம்மா ?

மாடமா ளிகையின் மீது மணிவிளக் கணிகள் காண்போம்,
பாடலுங் கேட்கு மேனும் பகலிரவாக ஆங்கே
கூடியனுர் செய்யும் விந்தை இதுவெனக் குறிப்பார் யாரே !
மூடிமந் திரங்கள் ஒற்றர் முயற்சிக்கும் ஒளிப்ப தாமே !

எப்படிப் புகுந்தார் ? இங்கே எப்படி நிலைத்தார் ? எந்தச்
செப்பிடு வித்தை யாலே சனங்களின் மனங்க வர்ந்தார் ?
எப்படிப் பகலில் வாழ்ந்தார் ? எப்படி இரவில் வாழ்ந்தார் ?
இப்படிச் செய்வோர் யாரென் றியம்பிடக் கேளீ ரையா !

வெம்மனக் கொலைஞர் கொண்ட வெருவுறு முகத்தைப்போலே,
கும்மிருட் டுலகைக் கௌவுங் குளிரினைப் போர்த்த ஓர்நாள்,
செம்மனத் துறவி போலச் சீடர்கள் சூழ நால்வர்,
"பொம்மகா தேவ" வென்றே அகம்பரன் புகுந்தா னம்மா !

கோட்டையின் காவலர்க்குக் குறிசொலித் திருநீ றீந்து,
பாட்டுகள் பாடி, மிக்கப் பரவசங் காட்டிக் காலை
நாட்டினுன் உள்ளே இந்த நாடகங் கண்ட போதே
நாட்டினுக் குறுதி தெண்ணி நடுங்கிற்றந் நகர மம்மா !

வெண்ணிறப் பொடியைப் பூசி, மெய்யுள பூதமைந்தும்
உண்ணகக் காஷாயத்தை உடுத்தித்தா வடங்கள் சூடி,
கண்ணையண் ணுந்து நிட்டை காட்டிடக் கால்மடக்கி,
மண்ணையே மனதில் வைத்து வஞ்சனைசெய்தான்அன்னேன்

கண்டவர் திகைத்து நிற்கக் கரடிபோல் மூச்சி ழுத்து
மண்டிநீர்க் குளத்திற் கொக்கு மாதிரி மௌனங் காப்பான்...
பெண்டிரைக் கண்டுவிட்டால், பிரியமாய்ப் புன்ன கைப்பான்,
வெண்டிரு வாய்மலர்ந்து வேதமும் உளறித் தீர்ப்பான் !

கடபட வென்று ஞானக் கச்சந்தி பவிழ்த்துக் கொட்டி,
மடையரைப் பயமு றுத்தி, மாணவ ராகக் கொள்வோன்,
படிபுல வர்கள் வந்தாற் பசக்கென மௌனங் காத்துச்
"சடவிவ காரம் வேண்டேன் சத்துநான்" என்றி ருப்பான்.

சைவர்கள் வந்துவிட்டாற் சைவமே பெரிய தென்பான்,
வைணவர் வந்தால், ஸ்ரீநி வாசனே சரண மென்பான்,
கைவல்யச் சாமி வந்தால், கண்டது மித்தை யென்பான்,
பையவிழ் செல்வர் வந்தால் பணத்துற வியம்பு வானே !

எத்தராஞ் சீடர் தாமும் இராகமா லிகையி ழுத்துச்
சித்தரின் கடைக்கண் பேசச் சிக்கெனத் தாளங் கொட்டி,
"பக்தர்காள் கேளீர் கேளீர் ! பாக்கிய வசத்தால் ,எங்கள்
உத்தமக் குருவின் மேன்மை உரைத்திடப் பெற்றோம்"என்பார்.

குரு மகிமை

நந்திதேவர் மரபினிலே வந்த திரு மூலர்,
நாதர்கள் யாவருக்குந் தாதாவாம் இவரே !
தொந்தி முனி மச்சமுனி, சோதிமுனி முதலாய்ச்
சொக்குமுனி வரையிலிவர் சொல்லிவைத்த சீடர்.

கதிர்காமக் காட்டினிலே கடுந்தவங்கள் புரிந்தே
கந்தனருள் பெற்றுவந்தார் இந்தவுல குய்ய,
முதிர்சருகை உண்டுபர முத்திதருங் கயிலை
முடிமிசையே தவம்புரிந்து முதல்வனருள் பெற்றார்.

தாருகா வனத்தினிலே சாதனைகள் செய்தே,
தாந்திரிகச் சித்தியெல்லாம் வாய்ந்திடவே பெற்றார்.
பாருலகில் விளையாடிப் பத்தரைக்காத் திடவே,
பரமனரு ளேந்திவந்தார் பழுத்ததவ ராசர்

பிள்ளையில்லாப் பெண்களுக்குப் பிள்ளைவர மீவார்,
பேய்தீர்ப்பார், நோய் தீர்ப்பார், பெருங்கவலை தீர்ப்பார்,
அள்ளியள்ளிப் பொன்னளிப்பார் அரியரச வாதர்,
அடிபணிந்த தொண்டருக்கு முடியரசுந் தருவார்.

குருடர்பலர் செவிடர்பலர் குணமானார் இவரால்,
கொடுங்கூற்றும் நடுங்குமிவர் கோபவிழி கண்டால்.
கருடனைக்காண் பாம்பெனவே கடும்பகைவர் நலிவார்.
காலில்விழும் அடிமை களே கைலாசம் பெறுவார்.

தேவரும் ஒப்பிலர் செகத்தி லுள்ளவர்
ஏவரும் ஒப்பிலர், இவர்சி றப்பினை,
நாவினி லெப்படி நவிலு வேனையா,
சாவினை வென்றவர் என்று சாற்றினர்....

மாணவர் கதைகளை வளர்க்கக் கேட்டதும்,
காணிக்கை கொடுநிதங் கணக்கி லாதவர்,
காணிய வந்தவர் ; காலில் வீழ்ந்துதம்,
வேணவா தீர்த்திட விளம்பி நின்றனர்.

பெண்ணினை வேண்டுவர் ; பெரிய கும்பலாய்ப்
பொன்னினை வேண்டுவர், புருடர் வேண்டுவார்,
மன்னரின் அன்புடன் மதிப்பும் பட்டமும்,
ஒன்னலர் வீழ்ச்சியும் உதவ வேண்டுவார்..

எடுத்ததை முடித்திடும் ஏற்றம் வேண்டுவார்,
அடுத்தவர் வாழ்வினுக் கழிவை வேண்டுவார்,
கொடுத்தவர் மறந்திடுங் குணத்தை வேண்டுவார்,
தடுத்தவர் தடைகளைத் தகர்க்க வேண்டுவார்.

நோயினைத் தீர்த்திட நுடங்கல் போக்கிட,
ஆயிரம் பேரிவர் அடியைப் பற்றுவார் ;
பேயினைத் தீர்த்திடப் பெண்கள் கூடுவார்...
வாய் வரம் வழங்குவார் மாயச் சித்தரே !

சுற்றிலு மிவர்புகழ் சொல்லக் கேட்டவர்,
பெற்றிட வரங்களைப் பின்னுங் கூடினர் ;
மற்றவ ருடனினு மற்ற மாணவர்,
உற்றனர் பெண்டிரும் உடனுற் றுர்கொலே....

வஞ்சகக் குருவுடன் வஞ்ச மாணவர்
நெஞ்சினிற் கொண்டதை நிறைவு றுத்தவே,
அஞ்சிடும் பாமரர் அடிமை யாகவே,
எஞ்சிய சூழ்ச்சிகள் இயற்றி வென்றனர் !

காரியக் குருடராய்க் கண்பெற்றோ மென்பார்,
காரியச் செவிடராய்க் காதுற் றோமென்பார்,
காரிய ஊமராய்க் களித்துப் பேசுவார்,
காரியக் குருமணி கருணை காட்டவே !

பேயெனப் பிதற்றியோர் பெண்ணும் ஆடுவாள்,
சீயெனக் குருமணி சிறிது நீறிடப்
போயொழி வேனெனப் புகன்று பேய்செலும்..
ஆயவோ அதிசயம் என்பர் அண்டையோர் !

குப்பியிற் செப்புடன் குப்பை மேனியும்,
உப்பொடு துத்தமும் உருக்கி என்னவோ
செப்பிடு சாலங்கள் செய்து செம்பொனை
ஒப்ப உலோகத்தை ஒளிரக் காட்டுவார்.

பொன்வெறி கொண்டவர் பொருளைக் கொட்டியே
மின்னிடுந் தங்கத்தை மிரளக் காணுவார்...
அன்னவர் ஆசைகள் அவல மானபின்
உன்வினை யிதுவென உரைப்பர் சீடரே !

பலபல தந்திரம் பயிலும் சித்தரோ
மலடிக்கும் கிழவிக்கும் மகவை நல்குவார் !
பலபல மந்திரம் பலிக்கும் செய்தியும்,
கலியருக் குள்ளெனக் கண்டு கொள்ளுவாம்....

இந்த வாறுளே எண்ணறும் இகலவர் வரவே,
அந்தமாம் ஒரு தோட்டத்தில் மாளிகை யமைத்துத்
தந்திரம் பெறு தாந்திரச் சாதனம் புரிய
மந்தை கூடினர் மதுவுடன் மாதரும் வரவே !

மூல குண்டலிக் கனலினை மூட்டுவோம் எனவே,
போலிச் சாமிகள் புணர்ந்தனர் நீலிக ளுடனே !
காலபைரவன் கருணையைக் கள்ளினல் அடைந்தார்.
வாலைஓம் என வாலிபப் பெண்களை வலித்தார்.

இளங்கைம் பெண்களும், *இருமனப் பெண்களும், இந்தக்
களங்க முற்றிடுங் கள்வெறிக் கூத்தரை நம்பி,
உளங்க விழ்ந்தனர் உயிரையு மிழந்தனர் சிலபேர்,
வளர் வயிற்றுடன் கலிநகர் வந்தனர் சிலபேர் !

நல்ல நாட்களிற் கூடிடு நல்லவ ருடனிப்
புல்லர் கூட்டமும் போலிவே தாந்தங்கள் பேசி,
மெல்லத் தம்வலை விரித்திடும் விதத்தினைக் கண்டோம்,
கல்வி யாளர்கள் கூடிய கார்த்திகை நாளே !

கள்ளுங் காமமுங் களவுடன் கைத்திமிர் காட்ட
மெள்ளத் தம்முளே விறல்பெறும் படைவலி சேர்த்தே,
உள்ளி ருந்துமப் புறத்தினி லிருந்துமே ஒன்றாய்
வள்ளன் மாநகர்க் கோட்டையை வளைத்திடச் சூழ்ந்தார்..

இரவு தோறுந்தம் இரகசி யப்படை கூட்டி
மரபு பற்றிய மானிட நீதியைப் பழிப்பார் ;
பரவு நாரியர் முயக்கிலே பரவச ராஞர்
அரசு வீழவு முயற்சிகள் புரிபவ ராஞர்.

---

* விலைமாதர்

கலியி னாட்சியைக் களிப்புறு மாட்சியென் றிசைப்பார்,
நலிக மாமறை நவின்றிடுந் தேவென நவில்வார்,
பொலிக நாத்திகப் புதுமைக ளெனப்புக ழுரைப்பார்,—
புலிக ளாகவே மாறினர் பூனைபோற் புகுந்தார்.

புல்லுக் கட்டிலும் விறகிலும் ஆயுதம் புதைத்து,
மல்லர் மல்லன்மா நகரினில் வஞ்சமாய்ப் புகுந்தே,
கொல்லு வெங்கலிப் படையின்கை கொடுத்துருக் கரந்தார் ;
அல்லின் போர்வையில் அமர்க்களம் பண்ணவுந் துணிந்தார்.

ஊன் மதுக்கடை உடல்விலை யாடிடும் விடுதி,
ஞான நூல்களைத் தூற்றிடு நாத்திகச் செருக்கு,
கோனி னாட்சியைக் குமைத்திடக் கோதுறுஞ் சூழ்ச்சி
ஆன தீமைகள் யாவையும் அரசனும் அறிந்தான்...

சிந்தை தூயரை ஒற்றராய்ச் செலவிடுத் திறைவன்,
வந்த தாந்திரர் வஞ்சகப் பகைவரென் றறிந்தான்,
முந்த மைச்சவை கூட்டினன் ; முதலமைச் சோதத்
தந்தி ரர்க்கொரு தந்திரப் பொறியினைச் சமைத்தான் !

கலியன் சூழ்ச்சியைக் கடிதினிற் கண்டநல் லமைச்சன்,
வலிய சேனையால் சித்தினி பவனத்தை வளைத்தான் ;
இலிபி டித்தவர் அரசனைக் கீழ்ப்படிந் துள்ளே
புலியைப் போன்றவர் புரிந்திடும் புன்மையைப் புகன்றார்..

கள்ள வஞ்சகக் கயவரைக் கையுடன் பிடிக்க
நள்ளி ராவினில் விசயனார் நடத்திடும் வீரர்
மெள்ள மீமதி லேறியே விரைந்துளே நிறைந்து,
கொள்ளைக் கூட்டத்தைக் கொடுஞ்சிறைப் பிடித்ததென் வியப்பே!

மிகுந்த கள்ளினைப் பருகியே மிடுக்குற நடந்தே
உகந்த நீலியை யணைந்துடல் பிழிந்திடக் கூடும்,
அகம்ப ரன்றனை அப்படி யேவிலங் கிட்டு,
மிகுந்த பேர்களை வேறொரு வெஞ்சிறை யடைத்தார்.

மூலை மூலையிற் பதுங்கிய முரடரை வளைத்தே,
மேலுந் தண்டனை விதித்தனன் ; விசாரணை வைத்தே ;
போலிச் சாமியின் புரட்டெலாம் அம்பலம் புரிந்தார் ;
ாலை மன்றத்திற் சென்றவர் கதைகளைக் காண்பாம்.

23. புரட்சிப் படலம்

ஆதி நல்லறம் அன்புறத் தாங்கிடும்,
நீதி வேந்து நியமித்த மந்திரி,
தீதி ழைத்த திருடரைத் தண்டிக்கக்
கோதி லாத குரவரைக் கூட்டினன்.

சத்தி யத்தைத் தனதுயி ராக்கிய
சித்தி மானத் திருவிலி வஞ்சரின்,
மித்தை யெல்லாம் விளம்பென, ஒற்றர்கோன்
வித்த கனும் விளங்குறப் பேசினன்.

விந்தகன்

காவி யணிந்த கலிப்படை யிங்கே,
அகம்பர னுடன்செய் அழிசெயல் அறிந்தோம்.
நால்வ ருடனே நகருட் புகுந்த
போலித் துறவி பொய்ப்புகழ் பெற்றான்.
சீட ரென்றும் சேவக ரென்றும்,
"நோய்கெட வந்தோம், பேய்கெட வந்தோம்,
பெரியார் அருளைப் பெறவே" என்றும்
புறத்தி லொளிந்த பொய்யரும் புகுந்தார்.
குருடனென் றொருவன் கோல்பிடித் துறுவான்.
கபடச் சாமி கண்ணைத் தடவுவான்.
உடனே சீடன் "உற்றது பார்வை,
ஆஹா சித்தின் அதிசயம் என்னே"
என்று குதிப்பான் ; எவரும் வியப்பார்.
செவிடென மற்றொரு சீடன் வருவான் ;
காதுக் குள்ளே ஏதோ சொன்னதும்,
பெற்றேன் கேள்வி வெற்றியென் றுடுவான்.
இந்தப் படியே எண்ணிலா மக்களை
வஞ்சித் தானப் பஞ்சமா பாதகன்.
இரச வாதி யென்னும் பகட்டால்,
பலர் பொருட் குவையைப் பறித்தான் பாவி.
பிள்ளை வரமெனப் பெண்டிரைக் கெடுத்தான்.
கலியன் அனுப்பிய காரிகை யாரும்,
சாமியைக் காணத் தந்திர மாகப்
பேய்நோ யென்று பிதற்றிப் புகுந்தார்.
பெண்கள் கிடைத்ததும் பிறரையே மாற்றத்
தாந்திர யோக சாதன மென்றார்,
மாயங் கிளப்பி மங்கையர் பலரைக்
கற்பழித் தாரிக் கயவர் கூட்டம்.
சித்தினி பவனம் வைத்திவர் செய்த
சேட்டைக ளெல்லாம் செப்பினும் வாய்வேம்.
குடித்துக் களித்துக் கூடிக் குதித்தலும்,
பொய்நகை காட்டிப் பொன்னைப் பறிப்பதும்,
சித்தியைப் பிடிக்கக் கத்திதீட் டுவதும்,

அரசைக் கவிழ்க்கப் புரட்சி மூட்டலும்,
அறத்தைப் பழிப்பதும், அதரு மத்தையே
உபதே சிப்பதும் ஊரில் மெல்லக்
கலகத் தீயைக் கனலச் செய்வதும்,
புல்லும் விறகும் புதுப்புதுப் பண்டமும்,
கொணர்பவர் போலக் கொலைக்கரு விகளைக்
கொண்டு வந்து கொடியார்க் கீவதும்.
தந்திர மாகத் தானை திரட்டலும்,
இந்தப் போலிகள் இழைக்குந் தீமையே.
சித்திமான் உடனே எத்தரைப் பற்றி
இன்னது செய்தீர் ஏனெனக் கேட்டான்.

சித்திமான்

பசுவுரி போர்த்துப் பாய்புலி போன்றீர்,
அகம்பரக் கூத்தீர் அளிவிடை யாதோ ?

அகம்பரன்

மந்திரத் தலைவா, தாந்திரத் தலைவன்,
என்செய லெல்லாம் எனக்கு நியாயமே.
சொல்லிய குற்றம் புல்லிய பொய்யே.
கலிநீ திக்கே கட்டுப் பட்டோம்.
ஆகா யத்தை அண்ணுந்து பார்த்து,
சாமி பூதம் சாத்திரம் மோட்சம்,
புரோகிதம் என்னும் புரட்டுக ளின்றிக்
கண்ணுற் காண்பதே காட்சி யென்றும்,
உலகே நிலைபொருள், உடலே உண்மை,
என்றும் கண்டுநாம் வென்றுல கெல்லாம்,
ஆளுவ தற்கே ஆசைகொண் டோமே.
ஊன்மது, மாதர், உலகியற் போகம்,
இவைதரும் இன்பமே இன்பமென் றுடையோம்
தாந்திரி கத்தின் சம்மத மிதுவே...

சித்திமான்

தாந்தி ரீகமாம்! சக்திசா தனத்தை
ஞான முனிவர் நவிலுக சற்றே.

பாரத முனிவர்

இல்லறங் காக்கும் நல்லறத் தார்கள்,
ஆணும் பெண்ணும் ஆன்ம உணர்வில்,
கூடி வாழ்ந்து குலசக்தி வளர்ப்பதே
தாந்திர யோக சாதன மாமே.

கள்ளும் பிறமனைக் காமமும் தீதே.
தூய மனமும், தூய உணவும்,
தூய நடையும், தூய பழக்கமும்,
கற்பும் உண்மைக் கடவு ளன்பும்,
மாதரைத் தாயென மதிக்கும் சிந்தையும்
கொண்டவ ருக்கே குண்டலி யோகமாம்.

சித்திமான்

அகம்பர தாந்திரம் அழிசெய லாகும்,
என்பதை அறிந்தோம். எண்ணரும் இன்னல்
புரிந்தீர் உமது போலித் தனத்தால்.
ஆயிரம் மக்கள் அத்தாட்சி சொன்னார்.
உமது வாயே உள்ளதைச் சொன்னது.
உயிர்வாழ் விற்கும் உலகநன் மைக்கும்,
உங்கள் கொள்கை ஊறு விளைப்பதே ;
கொடிய தீய குற்றம் விளைத்த
அகம்பர ருக்கிங் காயுட் சிறையாம்.
சித்தினி பவனம் இத்தினந் தொட்டே,
பத்திச் சாதகர் பவன மாகுகவே.
அதிலிருந் தழிசெயல் ஆற்றிய கலியர்,
காவலி லிருந்து கடும்பணி செய்கவே,
சிறிய நியாயத் தீர்ப்பும் இதுவே.
தீர்ப்பை மீறித் தீங்கினிச் செய்தால்,
தூக்கி லிட்டுச் சுடுவோம் உடனே...
காவலர் இவர்களைக் கார்சிறை யிடுமினே !

ஒற்றன்

சித்திமான் இப்படிச் செப்பிய போதே
ஒற்ற னொருவன் ஓடோடி வந்து,
"கொடுமை கொடுமை ! கொடிய புரட்சி !....
கலியர் இங்கே கரந்தின் றெழுந்தார்.
வாளுந் துபாக்கியும் வேலுங் கொண்டு
சாது ஜனங்களைத் தாக்குகின் றுரே !"

சித்திமான்

செல்லுக சேனை ; சீறுக வாளே !
புரட்சியை யடக்கிப் புகுந்த பகைவரைப்
பற்றிச் சிறையிட, பாய்ந்து செல்மினே !
சித்திமான் ஆணை செல்லும் பொழுதே,
அரண்மனை முன்னே ஆர்த்தனர் பகைவர்..
விசயன் சேனை விரைந்தது முன்னே.

இந்தச் சமயம் இன்னொரு சேவகன்
கடிதங் கொடுத்தான்—கலியன் கடிதமே !

கலியன் கடிதம்

"சித்திக் குரிய திறம்பெறு மன்னர்
நாமே, நாமே; நமது நாட்டை
நாமே பற்றி நம்வழி யாளுவோம்.
துறவியர் மடமே சுத்தனுக் கேற்றதாம்.
உடனே செல்க.. உடன்படா விட்டால்,
கொடும்போர் மூண்டு கொலையிலே முடியும்—
என்னவ ரைச்சிறை யிட்டதே காரணம்..."
என்று படித்ததும் இதயந் துடிக்க,
இரத்த விழிகள் இகற்கனல் சிந்த,
"மூண்டது போர்வினை ! முரசுகள் கொட்டுக !
கலியை முடித்தே கத்தி யுறங்குக...
துட்டரை வெட்டுமின், சுட்டுப் பொசுக்குமின் !......."
என்று கட்டளை இட்டதும் சித்திமான்,
போர்ச்சபை கூட்டப் பொருக்கெனச் சென்றான்.
"போரோ போ" ரென வீரர் கூவி,
மின்வாள் வீசி மிண்டரை யழித்தனர்...
புரட்சிக் கலியர் புழுதியி லுருண்டார் !
பதறிச் சிதறிப் பயந்து சிலபேர்,
அடைக்கலம் புகுந்தார்......ஆயினும் கலிப்படை
கோட்டைப் புறத்திற் கொட்ட மடித்ததால்....
நாட்டைக் காக்க நமது மன்னன்
கூட்டிய போர்ச்சபை நாட்டிய தறிவமே......

24. போர்ச்சபைப் படலம்

மேதகு சுத்தனும் விரதத் தந்தையும்,
நீதறும் அமைச்சருஞ் சிற்ற ரசரும்,
காதகக் கலியனைக் கவிழ்க்கக் கூடினர்,
நீதியின் கோயிலாய் நிலவு மன்னவை .

வரமிகு தமிழனும், வலிய வங்கனும்,
உரமிகு மராடனும், உரத்த சிங்கனும்
தரமிகு கூர்ச்சரத் தலைவன், சூரனும்
முரசதிர் மன்னவை முந்தி வந்தனர்.

பாரெலாம் எதிர்க்கினும் ஒருகை பார்த்திடும்,
வீரருந் திரரும் வினைவல் லாளரும்,
போரெனக் கேட்டதும் புயங்கள் விம்மினர்,
வார்முர சதிர்ந்ததும் வாழி பாடினர் .

போர்ப் பாட்டு

காரிருட் புயல் வான் பளிச்சிடுங்
கம்பி மின்னலைப் போலவே !
போரிலே சுடர் வாளைவீசிப்
பொறுமைப் புல்லரை வெட்டுவோம்..
பாரி லேயறம் வாழ்கவே கொடும்
பாவிகள் முடி வீழ்கவே !
வீரசக்தி பவானி நங்கொடி
வெல்கவே துணை நல்கவே !

நலந்தரு சக்தியை நன்று சிந்தித்தே,
நிலந்தரு வேந்தனு நீண்ட மன்றத்தை,
அளந்ததன் காரியம் அறிந்து ணர்ந்து, தன்
உளந்தனி லுள்ளதை உரையிற் கோத்தனன்.

சுந்தன்

நன்றியிற் பெரியீர் வெற்றி நாடிய நல்லீர், உள்ளம்
ஒன்றிய நாட்டீர், நெஞ்சில் உறுதிகொள் வீரச் செல்வீர்,
வென்றிடும் உண்மை யென்ற வேதவாக் கறிந்த நீவிர்,
இன்றிடர் அறிவீர் ; நாளை இயற்றுவ தறியக் கேளீர் !

வீட்டிலே புகுந்த கள்வர் வீந்தனர் வகையில் லாதே ;
நாட்டிலே அறமழிக்க, நாத்திகத் திமிர்கொள் வாளைக்
காட்டியே யெழுந்த பொல்லாக் கலியனை யடக்க நாமுந்
தீட்டிய வீரங்கொண்டு சேனையைச் செலுத்து வோமே !

கோட்டையை வளைத்த துட்டர் குமைந்திடச் சுடுமின் இங்கே ;
*காட்டகங் குவிந்த சேனை கலிநக ரதனைத் தாக்கி
வாட்டுக பகைக்கு லத்தை ! வளைத்திரு பக்கஞ் சூழ்ந்தால்,
சேட்டைசெய் அரக்கர் நங்கை சிக்குவ துறுதி யாமே !

நம்புத லுள்ள வீரர் நாட்டிய பயிற்சி மிக்க
வெம்படை யுள்ள தாங்கே, நாயகன் ஒருவன் வேண்டும்.
அம்புடன் அறிவுஞ் சூழ்ச்சி யதனுடன் அறமுங் கொண்டு,
வம்புசெய் கலிய னுக்கு வல்விடை பகர வேண்டும் !

*பஞ்சவடிக் காடு

சத்தியன்

தனயனிவ் வாறு பேசச் சத்தியன் முன்னே நின்று,
"வனமுறு படை நடத்தி, வஞ்சரை முறிய டிப்பேன் !
எனதறம் அதுவே ; நாட்டின் இன்னலைத் தீர்க்க வேண்டி
மனதெனைத் தூண்டு தையே; மன்னவை சொல்வ தென்னே?

அரசினை மகன்கை யீந்தே, அறப்பணி செய்யச் சென்றேன் !
பரிசனந் துறந்தி ருந்தேன் ; பாவிகள் படை யெடுத்து,
முரசொலி கேட்ட பின்பென் முதுமையும் இளமை கொண்டு,
நரசமு கத்தின் சேவை நலமென நாடு தையே !

நாளையென் றில்லை ; இன்றே நல்விடை தருவீர்; வீரக்
காளைக ளுடனே அந்தக் கலிநகர் பிடிப்பேன்" என்று
தோளையு நோக்கிக் கையிற் சுறுசுறுப் பாக மின்னும்
வாளையு நோக்கி மன்னை, மன்றினை நோக்கி னனே !

சித்திமான்

முன்னவன் சொல்லைக் கேட்டு முதற்பெறும் அமைச்ச னங்கே,
மன்னவன் மனமு மற்றை மந்திரர் மனமுந் தேர்ந்து,
"தன்னல மற்ற வீரத் தந்தைநீ உறுதி கொண்டு
சொன்னது சொன்னவாறே ; தொடருக கரும" மென்றான்...

சத்தியன்

செல்கிறேன்...இங்கே நீவீர் சித்தியைக் காமின். அங்கே
வெல்கிறேன் கலியை" யென்று சத்தியன் வீட்டிற் கேகி,
செல்வனை மனைவி தன்னைத் தேற்றியே கவசம் பூண்டு
நல்விடை கொண்ட காதை அடுத்துநாம் நவிலு வோமே... 60

தருமத்தை உயிரைப் போலத் தாங்கிடும் தந்தை செய்கை,
ஒருமித்த சபையின் வீர உணர்ச்சியை எழுப்ப, வேந்து
நிருமித்த படியே, சித்தி நிலையத்தில் வெற்றி நாட்டுங்
கருமத்தைக் காக்க மேலோர் கருத்தினில் உறுதி கொண்டார் !

சூத்தன்

வருந்திடுந் தருமம் வாழ, வஞ்சகர் செருக்கு வீழத்
திருந்திய வீறு கொண்ட தீரர்காள், இனிநாம் இங்கே
இருந்திட நேரமில்லை, எழுந்திகல் நடுங்க, வாட்கு
விருந்திடச் செல்வோம் வாரீர், விசயனார் ஆணை கொண்டே !

சிற்றரசர்

கலிசெய்த கொடுமைமுன் கண்ணை மூடியே
புலிசெய்த கொடுமையைப் போன்ற தந்தகோ !
வலியவந் தடுசமர் வளர்த்த பாவிகள்,
நலிகநற் றருமமே நாளும் வாழ்கவே !

வீரர்

இருந்திடிற் சுதந்தர ரென் றிருப்பதாம்
இறந்திடின் கடமைசெய் திறந்து வாழ்வதாம்.
அறந்தவிர் வாழ்க்கையும், அடிமை வாழ்க்கையும்
மறந்தொரு கனவிலு மனத்தி லெண்ணிடோம்!

தேசம் வாழ்ந்திடச் செங்க திர்க்கொடி,
சேனு லாவப் பறந்திட
நேசர் வாழ்ந்திட, மோசஞ் செய்த
நிருதர் வெம்படை வீழ்ந்திட ! 80
காசினித் துயர் நீங்க மாதரின்
கற்பு வாழ்ந்திடப் போர்செய்வோம் !
மாசி லாத சுயேச்சை வீரர்
வருக, வெற்றி பெறுகவே !

அன்னை ஆரமு துண்ட நன்றி
அமர்க் களத்தில் விளக்குவோம்.
இன்னரே இடு தாளை நீக்கி,
உறங்கு வாளை எடுத்தனம் !
மின்னி மின்னிப் பறந்து செவ்வொளி
வீசி வீசிச் சுழலவே !
தின்னு தோள்தினை வாறப் போர்புரி
வோம் ! பராசக்தி ஓமெனுஅ !

சுந்தன்

மூந்து செல்க முதற்படை வீரர்கள் !
எந்தையை விடை ஈந்து விடுத்ததும்,
இந்தி ரையின் இளந்திரு மைந்தனும்
வந்து போர்முனை வாட்கட றுற்றுவான்.. 96

25. பகதூர் படலம்

[சத்தியன் தன் மனைவி இந்திரை யிடம் விடை பெறுகிறான். இந்திரை கலங்குகிறாள். அவளுக்குச் சிக்கிய குருவான தேஜ் பகதூர் வரலாற்றைச் சொல்லி ஆறுதல் அளித்து விடை பெறு கிறான். அச் சமயமே சுத்தராஜன் வந்து தந்தையைப்பணிகிறான்.]

அரிய காரியம் ஆயினும் ஆருயிர்க் (கு)
உரிய நாதனை ஓர்கண மாயினும்
பிரிகி லாத பெருந்தகை யிந்திரை,
எரியை அஞ்சும் இணர்க்கொடி போன்றனள் !

இந்திரை

ஆவிபோல் அறத்தைக் காக்கும், அன்புடை யரசே, இன்று
மேவிய கடமை தன்னை மெத்தவும் அறிவேன் ; என்னின்
பூவைநின் பிரிவு தாங்கேன் ! போர்முனை வீரர் தம்மை
ஏவிநீ இருப்பாய் ; இன்றேல் என்னையும் அழைத்துச் செல்வாய்!

சத்தியன்

காரிடி கலக்கும் மின்போற் கலங்கினை கண்ணே ; நாட்டின்
வேரிடி யுறுவ தேபோல், வெங்கலி போர் தொடுத்தான் !
யாரினி உண்டு றங்கி இல்லத்திற் சுகித்தி ருப்பார் ?
வீரரின் கடமை காக்க விரைகுவேன் ; விடைத ராயே !

வையக மிருக்கத் தூய வரதனிங் கரசி ருக்கத்
துய்யவர் துணையி ருக்கத் துகளறும் அமைச்சி ருக்க,
தெய்வசம் மதமி ருக்கச் சித்தியி லிருந்து தேசம்
உய்பணி செய்வாய் ; அன்புள் ளுயிரினைப் பிரிவ துண்டோ ?

இந்திரை

வில்லினைப் பிடித்த வீர வேந்தர்தங் கடமை செய்யச்
செல்லுவ துறுதி யேனுஞ் சீர்பெறுஞ் சித்திக் கோட்டை
எல்லையைத் தாண்டி இந்த முதுமையில் ஏகுஞ் செய்கை
சொல்லொணத் துன்ப மாகும்...துடிக்குதென் னுவி யந்தோ ? 20

சத்தியன்

வருவது வருவதேயாம் ; வராதது வராத தேயாம் ;
பொருவது பொருவ தேயாம் ; புண்ணிய வீர ருக்குக்
கருமமே கண்ணும். தேசக் கடமையே உயிராம். இந்தத்
தருமத்தை முன்னே காத்த தீரனின் சரிதை கேளாய் !

தேஜ்பகதூர் வரலாறு

நீங்கறு முயற்சி யாளர், நீதிசெய் காத லாளர்,
தூங்கினுங் கடமை தூங்காத் துணிவுடை கரும வீரர்,
தீங்கறு தெய்வ பக்தர், தியாகமே வாழ்க்கை யானுர் ;
ஓங்கிசை பெற்ற சீக்கர் ஓதிடுங் குருக்க ளாவார் !

துங்கசத் குருநா னக்கின் வழிவழி துலங்கும் ஆசார்,
அங்கதன், உமர்தாஸ் ராம்தாஸ்,அருச்சுனன்முதற்கோவிந்தன்
தங்கமாம் ஹரிகி ருஷ்ணன் ஆதியோர் தழைத்த பின்பு
சிங்கம்போல் எழுந்தான் ஆத்ம தீரனும் பகதூர் தேஜன்.

ஆற்றலும் அறிவு மிக்கான், ஆத்தும சக்தி மிக்கான்,
கூற்றெதிர் வரினும்அஞ்சான்,கொள்கைக்கே உயிர் கொடுப்பான்.
நாற்றிசை புகழும் அன்னோன் நல்லறத் துணைவி யாக
ஏற்றவள் கற்பு மிக்க கூர்ஜரி என்னும் பேராள் !

அறம்பொருள் இன்பம் பூத்தே அருண்மணங் கமழும் இன்னூர்
சிறந்திடும் இல்லறத்தின் செழுங்கனி யாக வந்தோன்,
துறந்தவர்ப் பெரியான் ; வீர சூரரிற் பெரியான் ; செய்ய
திறந்தனிற் பெரிய சீலன்; கோவிந்த சிங்க னென்பான் !

குருமணி யாகச் சிக்கர் குலமணி யாக, நாட்டுத்
திருமணி யாக ஞானத் திரள் மணியாகக் கண்ணின்
கருமணி போன்ற சேயைக் கருத்துடன் பயிற்றித் தன்பின்
வருமணிச் சுடரைத் தந்தை வரமென வளர்த்தான் மாதோ !

அத்ததி தில்லி சுல்தான் அவுரங்க ஜீபும், இஸ்லாம்
பத்தியைப் பரப்ப வேண்டிப் பரபரத் தெழுந்து நின்றான் ;
எத்ததி அரசர் யாவர் அவர்மதம் ஏற்ற மாதல்
இத்தலத் தியல்ப தாகும் என்பதே சரித உண்மை !

வீரமுந் தவமுந் தேச விரதமுங் கொண்ட தூய
ஆரிய ரான சிக்கர் அல்குரான் அன்ப ராகக்
கோரிய சுல்தான் அன்னோர் குருவினைக் கைது செய்து,
"சீரிய மனையைக் கண்டு, தில்லிக்கு வருக" வென்றான்.

கூர்ஜரி தேவி

மண்டல மன்னன் ஆணை மறலியின் அழைப்பே யென்று
விண்டனள் மனைவி ; சோர்ந்து விம்மினள் ; இருக்க வேண்டிக்
கொண்டனள்; கவலைக் கண்ணீர்கொட்டினள்அணைந்தமார்பில்.
பெண்டிராய்ப் பிறந்தாருக்கே பிரிதுயர் தெரியு மம்மா !

நெஞ்சடைத் துரைக்கொ ணாது, நீலக்கண் மலர்கள் வாடிப்
பஞ்சடைத் தாவி,ஊச லாடியே பதறு கின்ற
வஞ்சமில் கற்பி னாளை வாய்மைக்கே வாழு கின்ற
அஞ்சறு கணவன் ஆற்றி ஆறுதல் கூறி னானே !

பகதூர்

மெய்யறங் காப்ப தற்கே மேனியைச் சுமந்த நல்லோர்,
செய்தவப் பயனாய் வந்த செல்வியே, அல்லல் ஏனோ ?
பொய்தவிர் தியாக வேள்விப் புகையெனை யழைத்த தாங்கே,
பெய்தென தாவி யந்தப் பெருங்கனல் வளர்ப்ப தாமே !

நச்சரா சீறி னாலும், நமன் வந்து மிரட்டி னாலும்,
துச்சநெஞ் சுடைய வெய்யர் சுடுசரம் பாய்ச்சி னாலும்,
அச்சமொன் றறியாத் தீரர் அதர்மத்தை எதிர்ப்ப தன்றி,
எச்சம யத்துந் தீமைக் கிணங்கிநாம் அறிந்த துண்டோ ?

தளர்வறும் உறுதி கொண்ட சுகமணி தாங்கு நெஞ்சம்,
அளவறு சக்தி மிக்க அருச்சுனன் அமைத்த உள்ளம்,
களவுறு சூழ்ச்சி யாலே உண்மையைக் கரப்ப துண்டோ ?
இளகிய மனத்தினாய் நீ இவ்வகை நினைந்து தேறாய் !

சோகமென் பதுவே மாயை ; துயரமு மனத்தின் மாசு.
தேகமுந் தேயுஞ் சட்டை, தேகிக்குச் சாவொன் றில்லை.
ஏகனும் அகாலன் என்னை அழைக்கின்றுன் ; ஏழையே நீ
மோகத்தை விடுவாய் ; அந்த முதல்வனை நினைகு வாயே !

தடைகளைத் தகர்த்தெறிந்து, தருமமென் றறிந்த வீரக்
கடமையைக் காக்கு மென்னைக் கண்புனல் கலக்க லாமோ ?
மடமையை விடுவாய் ; ராம தாஸனின் மாண்பைப் பாராய் !
உடலினைத் தாண்டி உள்ளே உள்ளதை யறிந்து தேருய் !

கூர்ஜரி

என்றுதன் கணவர்சொல்லக் கூர்ஜரி இணக்கங் கொண்டே
"நன்று ; நம் இறைவன் உண்மை நாட்டிடச் செல்லு முன்பே,
இன்றுநம் மகனுக் கேற்ற கடமையை யியம்பும்" என்றுள்.
வன்றவக் குருவும் ஆங்கே மைந்தனைத் தழுவிச் சொன்னுன்....

இவ்வணம் பேசும் போதே இந்திரை அமைதி யாகிச்
"செய்வணஞ் செய்க, செய்யுஞ் செயல்களை" என்றுள் ; ஆங்கே
கைவணத் தாலே இன்று கலியனைக் கலக்கி ,ஞாலம்
உய்வணம் அவதரித்த உத்தமச் சுத்தன் வந்தான்...

"அன்னமே பயப்படாதே அரக்கரை வென்று வாரேன்"
என்னுநல் லுரைக ளாலே இந்திரைக் கினிது சொல்லி,
மன்னவ னுன மைந்தன் மனதினில் உணரும் வண்ணம்,
பொன்னுரை சொன்னுன் சித்தி யரசினைப் புரந்த வேந்தே !

26. சத்தியன் உறுதிப் படலம்

சுத்தன்

பேருஞ் சத்தியம் பீடுறு வாழ்க்கையின்
சீருஞ் சத்தியம், செய்கையுஞ் சத்தியம்,
யாரு னக்கிணை யாகுவர் எந்தையே ?
பாருன் பாதம் பணிந்து வணங்குமே !

வீட்டி னின்பம் விளைந்திடத் துய்த்தநீ,
நாட்டிற் கின்ப நயந்திட வேண்டியே,
காட்டி னின்று கலியினை வென்றிசை
நாட்ட வேண்டி நடக்கத் துணிந்தனை !

நெருப்பி லிட்டு நிலவிடுந் தங்கம்போல்,
உருக்கி வார்த்த உருக்கின் உறுதிபோல்,
நெருக்கி நீண்டு நிலைத்த அனுபவம்,
உருக்கப் புத்துரு வுற்றதுன் வாழ்க்கையே!

வார்த்தை யெல்லாம் செயலை வளர்த்திடும்
நேர்த்தி யான நினது மனசினைப்
பார்த்துப் பார்த்துப் பரவசங் கொண்டனன்,
சீர்த்தி யோங்கிடுஞ் சித்திக் கதிபனே !

இனைய நன்மகன் இவ்வகை செப்பிட
மனை யறத்தின் மகுடமிவ் வின்பமே,
எனநி னைந்து மகிழ்ந்திளங் காளையை
இனிது நோக்கி இசைத்தனன் சத்தியன்.

சத்தியன்

கண்மணிச் செல்வநின் கனிவு ரைகளால்
எண்ணற மகிழ்ந்தனன் இனிது வாழ்கநீ !
மண்ணியல் வாழ்க்கையை மண்ணி லத்திற்கே
புண்ணியப் பலியெனப் போக்க முன்னின்றேன் !

அருமை யான தவங்களை யாற்றிய
பெருமை தந்த பெரும்புகழ்ச் செல்வனே,
கரும வீரர்கள் காத்தபொன் னாட்டினைத்
தரும வீரந் தழைத்திடத் தாங்குவாய்.

இடை யறாமல் உலகிற் கினியன
தடை யிலாது தழைத்திடச் செய்யுமுன்
குடை நிழலிற் குளித்து மகிழ்ந்து, நீ
படை நடத்திடும் பான்மையுங் கண்டனன் !

ஆய்ந்த கொள்கையும், ஆண்மையும், வீரமும்,
வாய்ந்த நீயிவ் வலிய சமரிலே,
பாய்ந்த ஊக்கம் பலன்பெறத் தொண்டிலே
தோய்ந்த தீரர் துணைபல செய்கவே.

சுந்தன்

சூறியிலும் புயல்வந்து சூழ்ந்த போதிலும்,
பற்றறப் பளிச்சிடும் பகலைப் போலவே,
பற்றலர் கொடுமைகள் பாய்ந்து கௌவினும்,
வெற்றியின் விளக்கொளிர் வீறு நம்மதே !

வீட்டினை மறந்தனர் ; வீரர் ஆவியை
நாட்டினுக் குதவிட நடந்து, வேகமாய்க்
கோட்டையை வளைத்திடுங் கொடியர் அஞ்சிடத்
திட்டினர் ; நாட்டினர் சீர்த்தி யித்ததி.

அரசியும், அமைச்சனும், அறிஞர் மன்றமும்,
பரிசன நன்றியும், பாரின் ஒற்றுமை,
புரிதரு நன்மையும் புலவர் பாடலும்,
அரியநின் ஆசியும் அளிக்கும் வெற்றியே !

சித்திமான் முதலிய தேர்ந்த மந்திரர்,
பத்திமா னாகிய படைத் தலைவனை,
எத்திறம் பணித்தனர் ஏகி யத்திறம்,
வித்தகர் போற்றிடும் வெற்றி யாவதே !

ஈங்குள வினைகளை யியற்றி நல்லிசை
தாங்கிட யாதொரு தடையு மில்லையே !
ஆங்குநீ கலியனை அடக்கி யுன்புகழ்
ஓங்குற மீளுக உண்மை வீரனே !

சத்தியன்

கலியினை மட்டுமோ ? கலியைத் தூண்டிய
புலியரை அன்னவர் புதரிற் சாடுவேன் !
நலிவுறும் அறத்தினை நாட்டவே யெனைப்
பலியிடு மின்பமே பாரி லின்ப மாம் !

இம்முது யாக்கையின் இரத்தம் ஊற்றியே
நம்மறப் பயிரினை வளர்க்க நாடினேன் ;
வெம்மன வூணரை வீழ்த்தி னல்லது
நிம்மதி யில்லையிந் நீதி நாட்டிலே.

பூப்பொறை யாகிய பொய்ய ரக்கரை
மாப்பெரு முயற்சியால் வாட்டி னல்லது,
கோப்பெரு மைந்தநின் கொள்கை செல்லுமோ ?
நீப்பறு போர்வினை நிற்ப தாகுமோ ?

நயமுறச் செய்வன நயந்து செய்குவேன் ;
பயமுறச் செய்வன பயமற் றெய்துவேன்,
வியனுற முன்வழி விளங்கும் ; செல்கின்றேன் ;
சயமுறுஞ் சத்திய தரும மேதுணை.

சுத்தன்

இம்மையு மறுமையு மினி துணர்ந்தனை ;
மும்மையு முணர்ந்தனை முதிய தந்தையே !
எம்மையும் உணர்ந்தனை, இயற்று நற்பணி
செம்மையி னுணர்ந்தனை செய்க நின்மனம் !

எவ்விட ரெய்தினும் இறுதி மட்டிலும்,
தெவ்வரைப் பொருதுநாம் செயத்தை நாட்டுவோம்.
இவ்வையி னுள்ளதை இயற்று கின்றனம் ;
அவ்வையி னுன்பணி அளவி லாததே !

எல்லையி லுலகெலாம் இன்ப மெய்தவும்,
புல்லரின் வஞ்சனை பூண்டொ டோய்ந்தினி
நல்லறம் வாழவும் ஞான வாக்கினால்
*வெல்லற மொழிகளை விளம்பிச் செல்லுவாய் !

* காரியத்தை வெல்லும் அறமொழிகள்

சத்திரியன்

இன்றென துளமிசை யிலகு சத்தியக்
குன்றெழில் யெனவளர் குருவின் மாண்பினை
நன்றுனக் குணர்வுற நவின்று செல்லுவேன் ;
வென்றியை விளக்குமவ் வீரன் செய்கையே ! 88

27. குருகோவிந்தப் படலம்

தியாக வீரன்

தீயிடை அகிலைப் போலும், திட்டிய வயிரம் போலும்,
வேய்கடை நெருப்பைப் போலும், விளைகனி மரத்தைப் போலும்,
தாய்மனப் பாசம் போலும், தட்டிய ஏலம் போலும்,
தூயதி யாக வீரர் வாழ்க்கையுந் துணிபு மம்மா !

அத்தகைத் தியாக வீரன், அகாலியர் தந்தை யானோன் ;
சக்திஒம் சண்டி தாஸன், சத்குரு பஹதூர் மைந்தன் ;
வித்தக ஞான சீலன், விடுதலைத் தவ முயன்ற
சித்தனும் குருகோ விந்தன் சிங்கமென் றிசைபெற் றோனே !

தந்தை மொழி

ஆவியை அறத்திற் கீயத் தில்லியின் அரசன் முன்னே
மேவுமுன் அருமைத் தந்தை, "மேன்மைகொள் மைந்தநீயென்
சீவிய சிரங் கொணர்ந்து, சிரார்த்தங்கள் செய்து, பின்பு
பூவினில் அதர்மம் பொன்றப் போர்புரி"யென்று சொன்னான் !

மன்னுயிர் நலத்தைப் பேணி, மாசறு தொண்டு செய்து,
பொன்னென மானங் காத்துப் பொல்லரைப் போரில் வீழ்த்தித்
தன்னலம் விடுத்து, நாட்டுத் தருமத்தைக் காக்க வேண்டி,
என்னையுன் னுள்ளே வைத்துச் செல்கிறேன் எனது செல்வா !

தனயன் உறுதி

கலங்கறு தந்தை சொன்ன கனல்பெறும் வீரச் செஞ்சொல்
புலங்கொளப் பருகி யாங்கே, புண்ணியப் புதல்வன் சொன்னான்!
பலங்கொளு மட்டும் இந்தப் பாரத தருமம் வெற்றி
யிலங்கிட வாழ்வேன் எந்தாய் இனிதுநீ என்னில் வாழ்வாய்! 20

நன்றுநீ சொன்னாய் வாழு நாளெலாம் வார்த்து வார்த்துக்
குன்றணி விளக்கைப் போலுன் கொற்றநல் லிசையெக் காலும்,
நின்றெரிந் துலகம் போற்றி நிலவிடச் செய்வேன் உண்மை
என்றதும் ஆசி பூத்தாங் கேகினான் இறப்பை வென்றான் !

பசுமரத் தாணி போலே பண்புடை மைந்த னுள்ளும்,
விசைபெறு தந்தை செய்கை வியனுறப் பாய்ந்து பற்றி,
அசைவறும் உறுதி தூண்டி, அகாலனின் அறத்தைக் காத்தே
வசையற நாட்டைப் போற்றும் வீரமாய் வளர்ந்த தன்றே !

தியாக பலி

சகமெலாங் கோயில் ; சுத்த சத்தியம் இறைவன் என்னும்
சுகமணி பாடிக்கொண்டே, துணிவுள பகதூர் வந்தான்.
முகலவன் வியந்து நோக்கி, " முகம்மது மதத்தைச் சேர்வாய்
புகலுனக் களிப்பேன் இன்றேற் பொன்றுவ துறுதி"யென்றான்.

பகதூர்

"அரசநீ கேளா"யென்றே அன்புடன் குருவுஞ் சொல்வான் ;
"பரசம யத்தை யென்றும் பகைத்திடாச் சமதை கொண்டு,
நரசமு தாயத் தார்தம் குருவழி நடந்தால், இங்கே
விரசமாஞ் சண்டை யில்லை, வெறிகளு மில்லை யன்றோ ?

ஒருவனே பரமன் ; இந்த உலகெலாம் பரவி நிற்கும்
அருவனும் அவனே ; அன்பர்க் கன்பனும் என்னும் எங்கள்
குருமணி வகுத்த கொள்கை கூறிடின் சீக்க-முஸ்லிம்
இருவரின் கொள்கை என்னின், இகலினுக் கிடமும் உண்டோ? 40

ஆறுதல் அளிக்கும் ஸத்ஸ்ரீ அகாலனைக் கருதுஞ் சிந்தை,
மீறியிவ் வுடலுக் காக மெய்யினை மறுப்ப துண்டோ ?
கூறுசெய் தாலும் என்னைக் கொள்கையிற் பிசகேன் ஐயா ;
மாறிடேன் சமய"மென்றான் மறலியைப் புறங்கண் டானே !

இம்மியும் அஞ்சா தானை எரியெழ நோக்கிச் சுல்தான்,
ஹும்மென்றான், கொலைவாள் ஆங்கே அகாலனை நினைத்த வீரச்
செம்மலின் சிரத்தைக் கொய்து, செந்நகை புரிந்த தந்தோ !
இம்மத வெறியைக் கண்டே இரவியுந் திகைத்த தம்மா !

தந்தை தலை முன்

முன்சென்ற தந்தைக் காகு முடிவினை யறிந்து மைந்தன்
பின்சென்று கொலைக்க ளத்திற் பேரிடர் தாண்டி, மெல்ல,
தன்சுய தருமத் திற்கே பலியெனத் தந்த தந்தை
சென்னியைக்கொணர்ந்திவ்வாறுசெங்கணீர்பெருகச்சொன்னான்:

அப்பநீ அறத்திற் காவி யளித்தனை அமர னானாய் !
ஒப்பரும் உனது பீடத் தமர்ந்துநான் உறுதி சொன்னேன் !
எப்பெருங் கொள்கைக் காக உடற்பலி ஈந்தாய், எந்தாய்
அப்பெருங் கொள்கைக் கேயென் ஆவியைப் பலிசெய் வேனே !

பூவியல் வாழ்வை வீரப் புகழ்மணங் கமழ வைத்துத்
தேவியல் வாழ்வு பெற்றாய் ; சிற்றுடல் வருந்து கின்ற
சாவியல் உனக்கும் உண்டோ ? தந்தையே மைந்த னுள்ளே
ஆவியை வைத்துன் சித்தம், ஆகிட வாழ வாயே !

ஞானத்தின் எல்லை கண்ட பாரத நாட்டின் ஆத்ம
கானத்தைப் பருகி வாழ்ந்த கண்ணனின் கீதை கற்றேன் !
மானத்தைக் காக்க வேண்டி, மஹாசக்தி பெற்று, நீயும்
வானத்தி னின்று வாழ்த்த வாளினைச் சுழற்று வேனே !

அருமைத் தந்தை கடன்முறை யானதும்,
உருகும் உள்ளம் உருக்கினைக் கொண்ட சேய்
கருது காரியங் கையினிற் கூடவே
பெருகு மாதவம் பேண முனைந்தனன்.

பத்தைந் தாண்டிடைப் பண்பன் யமுனைக்கான்,
பத்தைந் தாண்டு பகலிர வின்றியே,
சத்தி சண்டி தவக்கனல் வீசவே—
சுத்த வீரச் சுடர்மணி யாயினன்.

கல்வி, செஞ்சொற் கவிதைவில், வாட்சமர்,
வல்ல வீறு வளர்தவஞ் செய்யுநாள்,
அல்லல் போக்கும் அருட்குரு நாடுற
நல்ல சீடர் நயந்து முறையிட்டார்.

சீடர்

துணிந்தெந் துன்பந் துடைக்கக் கடுந்தவம்
அணிந்து நோற்கும் அருட்குரு நாதனே,
பணிந்துன் அன்பர் பரிதபம் பார்த்துநீ
இணங்கி நாட்டிற் கெழுந்திட வேண்டினேம் !

தணிந்த சென்னியுந் தாழ்விரி கூந்தலும்,
பிணைந்த கைகளும் பேசறு துன்பமும்,
இணைந்து சோகம் எழுதிய பாவைபோல்,
உணங்கு கின்றனள் ; உண்மை ; நம் அன்னையே !

கொழுந்து வீசுங் கொடுந்தவச் செல்வனே,
அழுந் திருளை அகற்றிடுஞ் சோதியே,
எழுந்து நீயொன் றியம்பிடின் அக்கணம்,
எழுந்து நாடுன திச்சையைச் செய்யுமே !

துடி துடிக்குஞ் சுதந்தர சக்தியால்,
அடிய வருன் அருட்பணி யாற்றுவோம்;
நெடிது துன்ப நிலையினி லுன்னவர்
வடிக ணீர்துடை ; வந்தருள் வள்ளலே.

குரு கோவிந்தன்

சீல மிக்க செழுமனச் சீடர்காள்,
ஞாலந் தன்னை நலிக்குந் துயர்கெடச்
சூலந் தாங்கிச் சுதந்தரம் பெற்றிடக்
கால சக்தியின் கட்டளை வேண்டினேன் !

மன வரங்கில் மஹாசக்தி தூண்டவே
வினை யரங்கினி லேவினை யாடுவேன் !
எனது பூரணம் எய்திடு மட்டிலுந்
தனிமை செய்தவ மேயினி தாகுமே !

சின மகந்தை சிறுமைக ளின்றியே,
மன சுதந்தர மாண்புடை தீரரே,
வினை சுதந்தர வேகத்தி னுல்வரும்
சன சுதந்தரந் தந்திட வல்லவர்.

தன்னை வெல்லுஞ் சமாதியி லூன்றிநான்
என்னை வென்றுள் எனதுசு யாட்சியை,
முன்ன டைந்து, முழுமை யடைந்ததும்,
பின்னு லகிற் பெரும்பணி செய்குவேன் ....

தெருளி லாத சிறுமதிக் கூச்சல்கள்,
பொருளி லாதவர் போட்டியைப் போலவாம்.
உருளை யெல்லாம் உருவா யிருந்துமென் ?
கருவி சக்திக் கனலின்றி ஓடுமோ ?

உண்மை கண்டது வாகி யுளத்திலே
திண்மை கண்டு திருவருட் சக்தியால்,
எண்ணும் எண்ணம் இயற்றிடுங் காலத்தைக்
கண்ணுற் றன்பர் களிப்பர் உறுதியே !

வஞ்ச மின்றி மலரடி பற்றினேன் ;
தஞ்ச மீந்தனள் சண்டி பராசக்தி,
துஞ்ச லின்றித் துணைசெய் பலம் அவள் ;
அஞ்ச லஞ்சலென் அன்புள சீடர்காள்!

முற்ற யோகம் முடித்து வருகின்றேன்,
உற்ற தீங்கை உடைத்துத் தகர்க்கின்றேன்.
சுற்றும் வீரச் சுடர்க்கொழுந் தோங்கிய
வெற்றி வீரர் வினைசெயக் காண்கின்றேன் !

அன்ன வாறுள மாகெனச் சீடர்கள்
பொன்ன ணிதரப் பொங்கும் யமுனையில்
இன்ன வையெனக் கேளென வீசியே
அன்னை சண்டியை அன்புறக் கூவினன்.

சண்டி துதி

†சக்தி ஓம்ஜய சண்டி பவானி,
சங்கரீ சரணம் ஜய காளி
பக்தனை முகம் பார்பர தேவி !
பைரவீ ஜய பார்வதி தாயே !

முக்தி வேண்டி முறையிட வில்லை,
மூல குண்டலி மூண்டனல் வீசும்
சக்தி வேண்டித் தவம்புரி கின்றேன்
தருமம் வாழ்ந்திடச் சத்தியம் ஓங்க !

பொறுமை யாகப் புரிதவ யோகம்
பூர ணம்பெறப் போற்றி யருளாய் !
திறமை யெல்லாந் திருவுட னீவாய் !
தீர வீரரின் சேனையை யீவாய் !

சங்க நாதம் தழைக்க முழங்கித்
தாவித் தாவிப் பகைவரைச் சாடிச்
சிங்க நாதங்கள் செய்து முன்னேறும்
செருபடை தருவாய் ஜெய காளீ !

அலைவி லாவுள் ளமைதி தருவாய் !
ஆத்ம சக்தி அளவற நல்காய் ;
கலை வரந்தரு வாய்கவி யீவாய் !
கல்வி யாகிய செல்வந் தருவாய்.

சித்த சுத்தி திகழ்மணிக் கோயில்,
செய்ய நெஞ்சந் திருமலர்ப் பீடம்,
பத்தி யோங்கும் பணிவழி பாடாம் ;
பரிந்தென் பூசனை யேல்பர சக்தி.

பொய்ய கந்தையைச் சுட்டுப் பொசுக்கிப்
பூச லாக்கும் பொருமையை நீக்கி
வெய்ய காம விகாரத்தைப் போக்கி
வீறு பெற்ற விவேக மருளாய் :

சுத்த ஞானச் சுகோதய வாழ்வும்
சோர்வி லாத சுதந்தரத் தொண்டும்,
சித்தி யாகிடச் செய்தருள் காளீ.
தேச மாகத் திகழ்பர சக்தி !

---

† *தன்ன தானன தானன தானா. பேஹாக் ராகம்; ஆதி தாளம்*

உடலெலாம் உள்ளமாகி, உள்ளெலாம் உருகிக் கண்ணீர்
மடைதிறந் தோடக் கண்ட மஹாசக்தி முன்னே தோன்றி,
"அடலரிச் சியம் போலே ஆண்மைகொண் டெழுந்து சென்றுன்
கடமையைப் புரிவாய் வாளிற் கனலுமென் சக்தி" யென்றுன் !

வந்தனன் குருகோ விந்தன் வன்றவச் சித்தி பெற்றுச்
சிந்தையுட் களித்துச் சீடர் "செயகுரு வருக" வென்றே
வந்தனை புரிய, நாட்டை வாழ்த்திநம் ஆத்ம வீரன்,
முந்தொரு சண்டி யாகம் செய்திட முனைந்தான் மாதோ !

எண்டிசை யன்பரெல்லாம் இனமலர் தன்னை மொய்க்கும்
வண்டெனக் கூடி, வேள்வி வகையுற நடக்க வேண்டுந்
தொண்டுகள் செய்தார் ; ஓமத் தீயினைத் தூண்டி, ஆசான்
"சண்டிஓம் சக்தி" யென்று தன்கையால் அவிசொ ரிந்தான் !

மந்திர வேள்வி முற்றி, வாளினை யேந்தி, வீரச்
சுந்தரத் தேசு வீசுஞ் சுதந்தரத் தலை நிமிர்ந்தே,
"சந்ததம் தருமம் வாழச் சமர்புரி"என்று சக்தி
இந்தவாள்இலகத்திபோல்இறங்கியொன் றிசைத்தாள் என்றுள் !

இரும்பொரு காந்த மாகி, இனத்தினை ஒன்று சேர்த்துத்
தருமத்தை நாட்டவேஅ தருமத்தைத் தாக்குங் கண்டீர் ;
கருமத்தைத் தொடரு முன்பு காளியின் ஆணை செய்ய
ஒருமித்தா னந்தக் கோட்டை ஒளிபெற வாரீர் என்றுன். 180

கால்ஸா இயக்கம்

தேனுகு நாண்மலர் செறிந்த சோலைசூழ்
ஆனந்த புரத்தினில் அன்பு வீரர்கள்,
வானத்தின் மீனென வந்து கூடியே,
மோனமாய்க் குருதரு மொழியை வேண்டினர்...

திருத்தகு முடியினைத் தேசு சூழ்ந்திட
உருத்திரக் கண்கன லுகுக்க, ஓச்சிய
கரத்தினில் வீரவாள் களி துளக்கிட
உரத்தெழு மலையென உரவன் பேசினன்.

குரு

"குருதி வேண்டும் ! கொடுப்பவர் என்பின்னே
வருதிர் ஐவர் இவ் வாளில் இறங்கியே
தரும தேவதை தாகந் தவிக்கின்றுள் ;
கருமம் வெல்லக் களப்பலி வேண்டுமே !"

ஊசி வீழினும் ஓசை கணீரெனப்
பேசும் அச்சபை பேசுத லற்றதே !
ஓசை யின்றி ஒதுங்கிப் பலர் உயிர்
ஆசை பற்றி மறைந்தனர் ஆங்கனே !

உலகு வாழ உயரறம் வாழவே,
நலியு டலினை நல்க நடுங்கிடும்
அலிக ளுக்கும் அருஞ்செய லாகுமோ ?
பலி கொடுப்பன் பகவதிக் கென்னையே !

என்னின் வீரனிங் கெய்தி யுமக்கினி
மன்னு மாண்மை வழங்குக வென்றுதன்
பொன்னு டல்கிழிக் கப்புகுந் தான்குரு..
முன்னின் றோர் தயலால் முறை செய்குவான்...

"ஏழை யைப்பலி ஏற்றருள்" என்றதும்,
வாழி யென்ன மலர்ந்த முகத்துடன்,
ஆழ நோக்கி அவனைக் குருவரன்,
கோழைக் கூட்டங் குனியக்கொண் டேகினன்.

குருதி கக்குங் கொடுநகை வாளுடன்
இரு நொடியில் எழுந்தினும் "யாரென்றே
குரு வினவிடக் கொள்கென் றொருவனும்,
தருமன் என்ற தமிழனு நின்றனர் !

அடுத் திருவரும் ஆங்குற, மாபலி
கொடுத்து சக்தி குளிர்ந்தனள் யாமினி
எடுத்த காரியம் எய்திடும் வெற்றி;நீர்
அடுத்த நாளிங் கடைகென் றனுப்பினன் !

பஞ்சப்பாரா

ஐவரும் வெட்டுண் டாரென் றனைவரு நம்பிப் பின்னுள்
எய்திய போது, கண்ட தென்னென வதிச யித்தார் !
கொய்திலன் உயிரை ; வீரக் குருவரன் அவரைக் காட்டித்
"துய்யமெய் யன்பர் ஐவர் சோதனை வென்று" ரென்றான் !

பிறப்பினு லில்லை, செல்வம் பெற்றதா லில்லை ; பட்டச்
சிறப்பினு லில்லை ; கல்வித் தேர்ச்சியா லில்லை ; அச்சந்
துறப்பதால், உண்மை காக்கத் துணிவதாற் சுயந லத்தை
மறப்பதால் மனிதர் தெய்வ மாண்புறு வீர ராவார் !

குருமணி கொலுவி ருந்தே குளிர்ந்தபா னகநி ரம்பும்
இரும்புப்பாத் திரத்தை வாளால் இனிதுறக் கலக்கிச் சக்தி
தருமமு தென்று முன்னே சார்ந்த நல்லைவ ருக்கும்,
பெருந்திர ளான சீடர் குழுவிற்கும் பெட்பி னீந்தான் !

குரு

"சிலராம் ஐவர், முன்னே சேர்ந்திடக் கால்ஸா சங்கங்
கோலினேம் ; அகாலி வீரக் கூட்டத்தார் நீவி ரெல்லாம் !
காலனை அஞ்சோம், வீரக் கனல்வளர் சக்தி பெற்றேம்.
ஞாலத்தில் அறம் வளர்க்க நாடினேம்" என்று சொன்னன்.

கச்சத்தை இறுகக் கட்டிக் குடுமியிற் கங்கம் வைத்தார்.
இச்சகங் காக்க வேண்டி இரும்புக் கடாகம் பூண்டார்,
அச்சமற் றுடைவா ளேந்தி அருச்சுனர் தொகுத்த *நூலை
நிச்சலும் ஓதி ஸத்ஸ்ரீ அகாலென நினைத்த வீரர்.

மெலியரை வீர ராக்கி, வீரரைத் தருமந் தாங்க
வலியவ ராக்கிச் சிட்டுக் குருவியை வல்லூ றுக்கி,
கிலிகொளுஞ் சனத்தைப் போர்செய் கேசரி யாக்கி யன்பு
குலவிய சீட ருக்குக் குருமணி உபதே சித்தான்.

குருமணி

பூவுமாய்ப் புலன்களாய்ப் புலன்கடந்த சக்தியாய்,
யாவுமாய் அறிவுமாய் எனைத்து யிர்க்கும் ஆவியாய்,
கோவுமாய்க் குருக்களாய்க் குணங்குறி யிலாததாய்,
மேவியெம்மை யாளுகின்ற மெய்ப்பொருளைப் போற்றுவோம்!

ஏங்குகின்ற காலமேகி ஏறுபோல் உலாவுவோம்
தூங்குகின்ற பேர்களைத் துணிவுதந் தெழுப்புவோம் !
ஓங்குவோம் அகாலிவீரர் ஒன்றிநின்று முன்சென்றே
தாங்குவோந் தருமத்தைத் தணலுகின்ற சக்தியால் !

அங்கமெல்லாம் ஆண்மையாண்மை ஆண்மையென்று பேசவே
சிங்கவீர தீரர்கள் சிலைப்புயத்தைக் கொட்டுமின்
பொங்குமார்வந் தூண்டவே புயலிடியைப் போலவே
எங்குமே பகைவரை எதிர்த்துப்போர் புரிமினே !

உண்மையான உள்ளமெல்லாம் ஒன்றுசேர வாருங்கள் !
திண்மையான தோள்களின் தினவுதீரப் போர்செய்வோம் !
வண்மைகொண்ட செல்வர்கள் வழங்குமின் பணத்திரள் !
நன்மைகொண்ட நம்மறந் தழைக்க விந்த நாட்டிலே !

சீடர்

தன்னலம் பொறுமைவஞ்சத் தானவக் குணங்கள்செய்
இன்னலாம் இடர்களை எடுத்து வீசி முன்செல்வோம் !
சொன்ன சொல்லுஞ் செய்கையுந் துலங்கவே துணிந்தநாம்
பொன்ளெளிர் புதுயுகம் பொலியத் தீமை போக்குவோம் !

---

* கிரந்த சாகெபு, சுகமணி

அறத்தினைப் பகைப்பவர் அனைவரும் பகைவரே
அறத்தினை வளர்ப்பவர் அனைவரும் இனியரே !
மறத்திமிர் மடிந்திட மறச்சமர் புரிகுவோம் !
அறத்தொளி விளங்கிடநம் ஆருயிர் வழங்குவோம் !

தைரியம் பிறந்த தெங்கள் சாபமுந் தொலைந்ததே !
வைரியான தொத்தடிமை வாடி யோடி வீழவே
சௌரியஞ் செறிந்ததோள் சுதந்தரத்தைத் தாங்குமே !
பைரவி பவானிசண்டி பக்தருக்கு வெற்றியே !

போர் புரிதல்

மடலரி வீரர்கள் வாளை யேந்தியே,
படையணி சேர்ந்தனர் பயந் தவிர்ந்தனர்.
திடமுள கோட்டையிற் செறிந்து போர்வினை
தொடர்ந்தனர் துருக்கரும் போர் தொடுக்கவே.

திருவுறு கோவிந்த சிங்கன் என்றதும்,
வெருவுறும் அலிகளும் வீறு கொண்டனர்.
குருமணி யென்றதுங் குதித் தெழுந்தனர் ;
பொருபல மடைந்தனர் புதிய ராயினார்.

குண்டருங் கோளருங் குண்டு ணிகளும்,
அண்டிய ஒற்றரும் அழிபொ றாமையால்,
உண்டிரண் டாற்றிடும் உலுத்தரும், பகை
கொண்டவர் குழுவுடன் குலைந்து போயினார் !

நரியெனு நாகனு *நாள நாடனும்
பொரிசினங் கொண்டெதிர்ப் போர் புரிந்தனர் ;
திரையெழு நுரையெனத் தெய்வ வீரனின்
பரசின்முன் அவர்பகை உடைந்து பட்டதே !

ஆற்றலைக் கண்டபின் அரசர் †சிற்சிலர்
போற்றினர் குருவினைப் போர்க்க ளத்திலே.
வேற்றொரு சிவாஜியின் வேகம் இஃதென
‡நாற்றிசை வேந்தனு நடுங்கி னானரோ

---

* *இந்து மன்னன் நாகன், நாளகடத்து மன்னன் ஹரிச்சந்திரன் முதலியோர் எதிரியுடன் சேர்ந்து குருவை எதிர்த்தனர். குருவின் பரசு அவர்களை அழித்தது.*

† *கஹலூர் மன்னன் பீமசிங்கன் போன்றோர் குரு சேனைக்கு உதவினர்.*

‡ *தில்லி சுல்தான் நடுங்கி லாகூர் ஸர்ஹிந்தில் தங்கும் சுபே தார்களை ஏவிப் போர் புரிந்தான்.*

ஆனந்தக் கோட்டையை ஆழி போலவே
தானைகள் வளைத்தன ; தாக்கி யுட்புக
யானைகள் முனைந்தன ; எதிர்அ காலியர்
சேனையும் பகைவரைச் சீறிக் கொல்லவே !

அடுபகை யெரிமலை அனலைப் போலவே
சுடுசரந் தொடுக்கினுந் துணிந்த சீடர்கள்
விடுதலை வேகத்தால் வெற்றி பெற்றனர் ;
கடுகொரு சிறிதெனிற் காரம் போகுமோ ?

அலையலை யாய்ப்புயல் அடித்து மோதினும்,
குலைவறு குன்றெனக் குருவின் வீரர்கள்
மலைவற நின்றனர் ; மயங்க வெம்பகை
சிலைக்கொரு சிற்றுளி செறிந்த தென்னவே !

முரண்செயும் வஞ்சரை முண்டித் தோட்டியே
அரண்செயும் அன்பரின் ஆண்மை யூக்கியே,
மரணத்தைப் பொழிந்திடு மன்னன் சேனையைத்
திரணமென் றெதிர்த்தனன் சிங்க தீரனே !

அருகின படைகளும் ஆயு தங்களும் ;
அருகின உணவுகள் ; ஆட்கள் ஓடினர்....
அருகிலா வேசத்தோ டங்கை வாளுடன்
ஒருவனே பகைவரை ஒறுத்து நின்றனன் !

மக்களை யிழந்தனன் மனையி ழந்தனன்.
பக்கநின் றுதவிய படையி ழந்தனன் ;
துக்கங்கள் எத்தனை சூழ்ந்த போதிலும்,
பக்குவ மிழக்கிலன் பழுத்த ஞானியே.

எஞ்சிய மனைவியை இரண்டு மக்களை
அஞ்சலென் றோரிடம் அனுப்பிக் காத்தனன்
வஞ்சக ஒற்றனும் வந்தச் சேய்களை
வெஞ்சினப் பகையிடம் விற்றுச் சென்றனன் !

வீரனின் குருதியில் விளைந்த சேய்களைக்
கூரிய வாளினைக் கொடியர் காட்டியே,
ஆருயிர் வேண்டிடின் அல்கு ரான்மதம்
சேருவிர் உடனெனத் தீயி னேக்கினர்.

செம்மன ஜொரபர்பத் தேக சிங்கரும்,
"உம்மதந் தழுவியிங் குயிர்க்க வேண்டிலோம்,
எம்மத ஒழுக்கத்தில் இறக்க வேண்டினோம்,
தம்மத வாழ்க்கையே தரும" மென்றனர் !

வெங்கனல் விழிகளே வெருள நோக்கினர் ;
"உங்களை உடலுடன் உயிரை வாங்குவோம்
இங்கெனச் செங்கலே எடுத்த டுக்கியே,
சிங்கனின் சேய்களைச் சமாது செய்தனர் !

பிஞ்சிளம் பாலரும் பெரிய வீரர்போல்,
அஞ்சிலர் கெஞ்சிலர் அகால ஓமெனும்
விஞ்சையை ஓதியே விண்ண டைந்தனர் !
வஞ்சகர் வெட்கினர் வாய்மை வாழ்ந்ததால் !

சிரிய புதல்வர்கள் செய்தி யாகமும்
விரியத் துணிவுடன் விண்ண டைந்ததும்,
போரிடைக் கேட்டதுந் தந்தை பொங்கினன்
கோரிய வெற்றியுங் குலவிற் றென்னவே !

தனயரை யிழந்தான் வீரத் தளங்களை யிழந்தா னேனும்,
மனவலி யிழக்கா தின்னும் வன்சமர் கொடுக்கும் விந்தை
தனேயதி சயத்து மாற்ருன் தந்திரத் தூத னுப்பி
நினையுய ரிடத்தில் வைப்போம்.நின்மதம் விடுதி யென்ருன்.360

வாயுறச் சிரித்து வீரன், வன்பகைக் கடிமை செய்து,
நாயென வாழும் பேதை நானகன் மரபில் இல்லை..
சியம்போல் போர்பு ரிந்து செருநரைச் செற்று வாழுந்
தேயமெந் தேய மந்தத் தேயர்கோன் யானென் ருனே !

பாரெலாம் பரிசெனப் பகைவ ரீயினும்
பேர்புகழ் பட்டங்கள் பெருக நல்கினும்
காரியங் கண்ணெனக் கருதிப் போர்செயும்
வீரர்தங் கொள்கையை விடுப்ப தாகுமோ ?

மாண்டனர் முதலிரு மைந்தர் ; மற்றவர்
வேண்டிலர் போர்வினை வேற்ற வர்களும்
திண்டினர் கோட்டையைத் தீரச் சிங்கத்தைக்
கூண்டினிற் காணிலர் கொதிப்புற் றேகினர் !

எத்தகை இடரையும் எள்ளி முன்செலும்,
உத்தம வீரனும் உருக்க ரந்தினும்
சத்திய வீரரைத் தானை சேர்த்ததும்,
மொத்தினன் பகைவரை மூண்ட போரிலே !

சளைத்திலன் ; பூதிந் தாவிற் சத்குரு தானை சேர்த்து
வளைத்தனன் பகையை; முத்தி சரஸிலே வாட்டி, வீரர்
களிப்புறத் தம்தமாரிற் கடுஞ்சமர் புரிந்து வென்ருன் ;
களைப்புறு முகலோன் மீண்டுங் கனிமொழி விடுத்த ழைத்தான்!

குரு

"செல்வரைக் கொன்றீர் ; எங்கள் சித்தரைக் கொன்றீர்; ஆன்ற
நல்லறம் பற்றி வாழு நானகச் சீட ருக்குத்
தொல்லைகள் செய்தீர் ; அந்தத் துயரங்கள் அனைத்தி னுக்கும்
எல்லையைக் காண்ப தல்லால் இணங்குதல் வீர மாமோ ?

இடமகல் அரசைத் தோற்றும், இல்லொளிர் மரபைத் தோற்றும்,
படைவலி முழுதுந் தோற்றும், பாரினு தரவைத் தோற்றும்,
கடமையைத் தோலேன் ; இந்தக் கத்தியை உறையிற் போடேன்;
உடலினில் உயிர்க்கு மட்டும் உள்ளுணர் வீரம் போமோ ?

வருவது மில்லை யும்பால் ; வந்துநான் உரிமை தன்னைப்
பெறுவது மில்லை ; செஞ்சொற் பிறழ்வது மில்லை ; நீரெந்
தருமமு மதிப்ப தில்லை ; சமயமாற் றமுமிங் கில்லை ;
கருமமே கருத்தென் றின்னும் கத்தியைப் பிடித்தான் வீரன்!

மாண்டனன் அரங்க சிபு மனமுடைந் தடுக ளத்தில் ;
ஆண்டனன் பகதூர் ஷாபின் ; அவன்குரு மணியைப் போற்றி,
வேண்டிய நண்பனுகி வெறுப்பினை யொழித்தான் ; ஆங்கே
பூண்டது வீர வாகை புண்ணியக் கடமை யம்மா !

பொருசினந் தணிந்த யோகி, புதல்வர்க்குத் தந்தை போலே,
குருமணித் தவிசி ருந்து குலவிய சீட ருக்குத்
தருமமுந் தவமுந் தூய தியாகமும் சக்தி யோங்குங்
கருமமுஞ் சொல்லித் தெய்வக் கவிகளுந் தொடுத்தான் மாதோ

அளவறும் அன்பிற் போற்றும் அன்னியச் சிறுவர் ஓர்நாள்
வளர்கடா மார்பிற் பாய்ந்த கதையினை வாளாற் காட்ட,
உளங்கொதி சீட ருக்கு நன்மொழி யுரைத்து, நெஞ்சிற்
களங்கமில் குருவும் ஈசன் கழலிணை யடைந்தான் மாதோ !

இறுதி மொழி

"அன்னிய ராட்சி வீழும்; அகாலியர் பெருமை யோங்கும்.
என்னவர் ஐவர் கூடி இறைவனைத் துதிக்கு மாங்கே
மின்னென மறைந்தி ருப்பேன் விழுமிய இரந்த மாசான்
என்னநீர் மதித்துப் போற்றி இனிதுற வாழு வீரே !"

"சண்டி ஓம் சக்தி" என்றே சடலத்தை யுதறிச் சென்ற
பண்டித வீர தீர பராக்ரம குருவின் வாக்கைக்
கொண்டுயர் சீடர் கூட்டம் குவலயம் வியக்குஞ் செய்ய
தொண்டுகள் செய்து வெற்றி துலங்கிய தெந்த நாளும் !

சந்தியன்

சுத்தநீ செய்வ தாகுஞ் சுதந்தரக் கடமை தன்னில்
இத்தகைக் குருவின் வீர உணர்ச்சியே இலகக் காண்பாய் ;
உத்தம வீரர் கூட்டம் ஒற்றுமை யாகக் கூடிச்
சித்தியைக் காத்து நின்றுற் செயமுனக் கெய்வ தாமே !

சுத்தன்

உத்தமத் தந்தையேயுன் னுரைநலம் உள்ளங் கொண்டேன்,
சித்தியின் வீர ரெல்லாம் கோவிந்த சிங்க ராகிப்
பத்தியும் பணியுங் காத்துப் பகையற உரிமை நாட்டி
ஒத்தினி தோங்குவாரென் றுரேதினுன் கோதி லானே !

தந்தையு மகனு மாங்கே பிரிந்திடத் தயங்கும் போது,
தொந்தொமென் றமர்க்க ளத்திற் சுடுமுர சறைந்த தம்மா,
முந்தொரு தூதன் வந்து மொழிந்ததைக் கேட்டு மன்னன்
"எந்தையே கடமை காக்கச்செல்லுவோம் இனியென் றுனே! 420

28. படை யெழுந்த படலம்

கண்ணில மடந்தை வாழ்த்தக் கடவுண்மா முனிவர் வாழ்த்தப்
பண்ணுடன் முரசு வாழ்த்தப் பாவலர் பலரும் வாழ்த்தப்
புண்ணிய மைந்தன் வாழ்த்தப் புறப்பட்டான் சத்ய ராஜன்
எண்ணிய கருமஞ் செய்யப் பிறகதை இயம்பு வாமே !

ஒன்னலர் முரசம் இங்கே ஒலிப்பதால், வெள்ளம் போலத்
தன்னல மாயன் சேனே தணல்பெறச் சித்திக் கோட்டை
முன்னரே வந்து சுற்றி முற்றுகை யிடுவ தாலே,
பின்னரே கலியுங் காணப் பெறுவதால், வருவோ மிங்கே !

சித்திமான் சேனைகளுக்கு உரைத்தல்

கத்தி வீசுங் கடற்புய லென்னவே
சித்தி சேனே யெழுந்ததன் முன்னரே,
புத்திமான் பலவான் புக ழோங்கிய
சித்திமானிவை செப்பலுற் றுனரோ !—

போரெ ழுந்தது ! பொம்மிப் புடைத்தெழும்
கார்வ ரைப்புயங் காட்டி வருகின்ற
வீரர்காள் இன்று வெல்க கதிர்க்கொடி ;—
கோர ராக்ஷஸர் கொட்ட மடங்கவே !

பாரு யிர்கள் பயமற வாழவே
ஆருயிர்ப் பணி யாற்றிடுந் தீரர்காள் !
வேரு டன்கலி வீழ்ந்து மடியவே,
போரு டன்று புகழினே நாட்டுவீர் !

இந்த மானிட யாக்கை யெவர்க்குமே
சொந்த மில்லை. சுயநலம் விட்டதை
அந்தகன் வருமுன் அறஞ் செய்யவே
தந்தவர் புகழே தழைத் தோங்குமே !

புதுமை யாகப் பொலியும் இளமையும்,
முதுமை யாகி முகந்திரை கண்டிடும் ;
பொது நலஞ்செயும் புண்ணிய மன்றியே
எதுநம் வாழ்விற் கினிய பயனரோ ?

கொடிய மாயனும் கொல்லுங் கலியனும்
படை யெடுத்துநம் பக்கம் வருகின்றார்.
அடிமை மோகம் அலறி யொழிந்திடக்
கடமை நாட்டுங் களம்பெற வாருங்கள் !

ஒண்ட வந்த உலுத்தப் பிசாசுகள்,
உண்டு தித்துநம் ஊரை யழிப்பதோ !
அண்ட வந்தோன் அகத்தைப் பறிப்பதோ ?
கண்டு நாமிதைக் கைகட்டி நிற்பமோ ?

ஒருவ ருக்கொரு வர்உள மாறிடத்
திருகு தாளஞ்செய் திநய வஞ்சரை,
கருவ ழித்திடுங் காம வரக்கரைப்
பொருது வீழ்த்திடல் புண்ணிய மாகுமே !

புதர் நரியெனப் பாயும் புலியெனச்
சதிசெய் தானவ சேனரைச் சாடிநாம்,
பிதிருலகிற் கனுப்பிய பின்னரே
புதிய வாழ்வு பொருந்துத லாகுமே !

கரித்த மாயங் கவர்ந்துநந் தேசத்தைப்
பிரித்துச் சண்டை பெருக்கி நலத்தினை
உரித்துண் டின்ன லுறுத்துமுன் வீழ்த்தியே
சரித்தி ரத்திற் சுகப்புக ழெய்துவோம் !

ஒல்லெனப் படையணி உள்ளெ ழுந்துடன்
கொல்பகை கொல்லுமுன் கொன்று, போரினை
வெல்வடி வேல்கணை வீசு வாளுறப்
புல்லரைத் தகர்த்திடப் புடைபெ யர்ந்ததே !

கலிப்படை யிடைமிகக் கவலை பற்றியே,
கிலிப்படைந் திடமிகக் கிளர்ச்சி கொண்டுலாம்
புலிப்படை அரிப்படை போலச் சித்தியின்
சலிப்படை யாச்சமர் வீரர் சென்றனர் !

சீரிய திறமை மிக்க சித்திமான் உரைத்த வண்ணம்
போரறி விசயன் எல்லாப் புறங்களும் பாதுகாக்க,
வீரரை யணிவகுத்து, விண்ணினுக் குரைப்ப போன்று
சூரியக் கொடியு யர்த்தித் *தும்பையும் புனைந்து நின்றான்.

நீட்டிய சேனை யெல்லா நெடுந்தொலை நோக்கி யாலே
நாட்டுடை யரச னுக்கு நலமுற விசயன் சுற்றிக்
காட்டிமுக் கோண மாகக் கணக்குற வகுத்த தாலே
வாட்டமில் லாது மாற்றார் வலியினை யொடுக்கு மென்றான்.

எறிவெடி மருந்து தாங்கி எமனென வுலவும் வண்டி,
பொறிகளைச் சுமந்து பேய்போற் போந்திடும் விசையின் வண்டி,
முறிநெறிக் குதவும் வண்டி, உணவுடை வழங்கும் வண்டி,
அறைமுர சேந்தும் வண்டி யணிகளை அரசன் கண்டான்.

சாரணர் ஒற்றர் முன்னே தவழ்ந்திடும் வாக னங்கள்,
போரினில் வீழ்ந்தார் கொண்டு போகநல் வாகனங்கள்,
கார்சிறைக் கோட்டத் திற்குக் கைதிகள் செல்லும் வண்டி
நீர்சுமந் துலவும் வண்டி நெடுகிலுஞ் செல்லக் கண்டான்.

சூத்தன்

†கூட்டமும், அணி படை தானையும்,
  கொற்றமாம் செயமுடன் விசயமும்,
காட்டரண் மதிலரண் கதுமெனக்
  கண்கருத் தயர்வறக் கதுவுமின் !
வேட்டுகள் படபடத் திடுகவே !
  விசயனார் ஆணையிற் படிமினோ !
ஓட்டுதாக் கெதிர்வளை யொளிகெனு
  உரைகுறிப் புடனுடன் பணிமினோ !

ஊக்குறு, வீழ்ந்தவர்க் குறுதுணை
  உதவிடப் பெண்படை வருகவே !
காக்குமெய்க் காவலன் கோட்டையுட்
  காதகர் கும்பலைக் கடிமினே !

---

* போரறி பூக்கள்: வெட்சி—பசுக்கவர்தல், கரந்தை பசு மீட்டல்—காஞ்சி போரெடுத்தல், நாடுகாத்தல்—நொச்சி, அரண் காத்தல்—உழிஞை அரண் வளைத்தல்—தும்பை போர்புரிதல்—வாகை—வெற்றி முழக்கல்.

† 10. வீரர் ஒரு கூட்டம் 10. கூ ஒரு படை; 10. படை, ஒரு தானை; 10. தா—ஒரு செயம்; 10. செ—ஒரு விசயம்; 10,00000 வீரர்.

தாக்கினர் தம்மையே தாக்குமின்,
தழுவினர் தம்மையா தரிமினே !
வாக்கினல் மனதினற் செயலினல்,
வாய்மையுந் தருமமும் வளர்மினே !

பாலரைப் பெண்டிரைப் பசுவினைப்
பண்புடை முனிவரை, கவிஞரை
சிலரைக் கல்வியின் செல்வரை,
சேமமாய்க் காமினே சேனையீர் !

சுத்தனர் இவ்வகை சொன்னதும்,
சுறுசுறுப் பாகிய படைகளும்,
சத்தமிட் டுவகையைச் சாற்றியே
சக்திஓம் சுத்தஓம் என்றவே.

போர்வீரர் முழக்கம்

தூண்டு வீர சுதந்த ரச்சுடர்
துஞ்சி டாதினி நெஞ்சிலே !
ஈண்டு வெம்பகை தீண்டு முன்னதை
ஈட ழித்திட ஓடுவோம் !

பொன்றி டாதுயிர் நின்றி டாதுடல்,
புகழு றுஞ்சமர் புரிகுவோம் !
என்றும் வெற்றி எடுத்த காரியம்
எங்கும் வெற்றி துலங்குவோம் !

நீண்ட மாமலை போ லெழுந்து
நிருதர் சேனையை நெட்டுவோம் !
பாண்டவர்க் கருள் ஆண்டவன் எமைப்
பாது காத்திடத் தீதிலோம் !

சாவு மஞ்சிச் சலாம் வகித்திடச்
சாடுவோம் எதி ராடுவோம் !
தாவித் தாவிச் சமர் புரிந்திடுஞ்
சக்தி வீரர் சலிப்பரோ !

ஒற்றுமையுற உண்மை காத்திடும்
உத்தமப் படை வாட்கணம்
வெற்றி பெற்று விளங்கி டத்துணை
வீர சக்தி பவானியே !

வீரரின் பேரிகை விம்மு மெல்லையில்
வாரணி முரசுடன் வஞ்சி பூண்டுயர்
காரணிக் கொடியினைக் காட்டி மாயனும்
போரெனக் கதறினன் ; போரு மூண்டதே !

29. மாயன் வதைப் படலம்

[மாயன் சித்திக்கோட்டையை முற்றுகையிடுகிறுன். விஜயன் சேனை அவனைத் துரத்தி யழிக்கிறது.]

“வஞ்சரை நீறு செய்ய வாழிகள் பொழிமி” னென்று
செஞ்சின விசயன் கூறச் சித்தியின் வீர ராங்கே,
“தஞ்சம் ஓம் சக்தி” யென்றே தண்டறி கொடி, யசைத்து,
வெஞ்சின மாயன் சேனை வெருவிட முன்சென் றுரே !

துடிதடாரிகள் இடியிடிக்கவே,
தடதடவெனச் சகடை யேகவே,
படபடவெனப் புரவி பாயவே,
கொடிகுறிக்கவே படை நடந்ததே !

மடமடவென வடவை போலே
கொடிய குண்டனல் கொட்டி வீசவே !
குடல்கலங்கிடக் கடிய ராக்ஷஸர்
பொடிபடத்திசை படைகள் மோதின !

தடையளந்துறுஞ் சமரளந்துமேல்
நடையளந்துபோர்க் களநடுங்கவே,
கடலு டன்கடல் கலந்த தென்னவே
இடை நெருங்கின படையிரண்டுமே !

மாயனேடுகலி மல்லர்சேனையிறு
மாந்திரத்தவெறி யேறியே,
பேயெனக்கதறி நோயெனப்பரவிப்
பெரிய கோட்டைமதில் அனுகவே..

காய்சினப்பொறிகள் காட்டி வேட்டதிரக்
கனல னேடுசெறி கலகனும்,
தீயுமிழ்ந்துவரச் சித்திமான் படைகள்
செருநரைப் புழுதி செய்தனர் !

குண்டுபட்டவுயிர் துண்டுபட்டுவிழக்
குருதி மாரியெனக் கொட்டவே !
கண்டதுண்டமுறக் காயவாழ்க்கையினைக்
கழுகு நாய் நரிகள் கௌவுமே !

இரவிமுன் பனியெனத்,
தரும சேனை பொருதவே,
அரனெரித்த புரமேனு
நிருதர் சேனை பட்டதே.

சூற்றினர் சுற்றிவளைத்தார்
பற்றினர்ப் பற்றி மிதித்தார்
எற்றின ரெற்றி யடித்தார்
பற்றலர் சட்டினி யானார்.

சாய்ந்து சாய்ந் தரக்கருந்
தேய்ந்து தேய்ந்து வீழவே,
பாய்ந்து பாய்ந்து வீரருங்
காய்ந்து காய்ந்து மோதினார்

சடசடென்று சாடியே,
சுடுசரங்கள் சுட்டன,
படுகொலைப் பகைவரின்
குடல்குருதி கக்கவே !

தலைவன் ஆணை தாங்கியே
மலையைப் போன்ற மல்லர்கள்,
அலையலையாய் மோதினார்—
நிலைகுலைய நிருதரே !

சகடுலாந் தணற்பொறி,
முகடு கீறி முந்திமண்
அகடுகீறி அண்டமுஞ்
செவிடுறத் தெறித்ததே !

சங்கையற்ற தானவர்
அங்கபங்க மாகியே,
வெங்குருதி வெள்ளத்தில்
கும்பலாய்க் குவிந்தனர்.

இழிந்திகற் களத்திலே
வழிந்த ஊனைவாரியே
பிழிந்து பேயிருட்கணம்
குழம்பையுண்டு கூவின.

வில்லும் வாளும் வேல்களும்,
பல்படைக் கலங்களும்,
கொல்லெனக் கொதித்தெழுந்து
ஒல்லென ஒடிந்தவே !

தேரிழந்து, விறலு மிழந்து,
கார்மதக்கரி மாக்க ளிழந்து,
ஆர்முரசும் அடங்கிய மாயன்
போரிழந்து பொலிவு மிழந்தான்.

முடையுடைந் ததுவென மாப்பெரும்
படையுடன் மாயனார் பலமெலாம்
உடைபடச் சித்தியின் உத்தமர்,
இடையறு தெதிரியைப் பொருதினார்.

வெங்கனல் கக்கிடும் வெடிகளும்,
பொங்கியண் டங்களும் பொடிபட
மங்கிவாய் மூடின ; வாய்மைமுன்
பங்கமுற் றிடுபொயின் பான்மைபோல்.

பகலுடன் இரவுபோலப் பகலிர வாகப் போர்செய்
தகைபெறு விசயன் முன்னே தணல்பெற நின்ற மாயன்
அகமழிந் தாளழிந்து, படைக்கல மழிந்து, நெஞ்சந்
திகிலுற நிற்கும் போது, சிரமழிந் திறந்தா னம்மா ! 80

நச்சராப் போன்ற வெய்ய நாத்திகத் திமிர் பிடித்த
பச்சையூன் புசிக்கும் தீய பகாசுர மாய னாரை
அச்சமில் அறவோர், சித்தி அளித்தநல் வீரர் வென்றார்.
இச்செயல் இனிய தென்றே இசைத்தனர் புலவ ரெல்லாம்.

மதிலரண் முன்னே மற்றோர் தசையரண், அதனைச் சுற்றி
உதிரவா றோடிற் றம்மா ! உருத்திரக் காளி பொங்க !
துதிபெறுஞ் சித்தி வீரர் சுதந்தர முரச டித்தார்.
கதமுறு கலிஞ னின்னுங் கச்சையைக் கட்டினானே ! 88

30. பிரதாபசிங்கப் படலம்

வென்றியின் மகிழ்ந்த வீரர் வெருவிட ஒற்றர் வந்து,
"கன்றிய கனலு மிழ்ந்து கலிசினங் கக்கி நம்மைக்
கொன்றுயி ருண்ண வஞ்சர் கூட்டத்தைத் தூண்டு கின்றான்"
என்றலும் சிலபேர் நெஞ்சில் இரியல்கொண் டேங்கி னாரே !

அறந்தவிர் கலிய னாங்கே அடுகளத் தயர்ந்து, மாயன்
இறந்ததன் செய்தி தன்னை இடிவிழுந் ததுபோற் கேட்டு,
"மறந்திலேன் இதனைச் சித்தி மதிலினைத் தகர்த்துட் சென்று,
திறந்தனைக் காட்டி,வென்றோர்சிரந்தனைக்கொய்வேன்" என்றான்.

நாகமும் புலியுங் கோடி நரகநாய்க் கூட்டம் போலும்,
வேகவெங் கனலைக் கக்கும் வெவ்வெரி மலையைப் போலும்,
பூகம்பப் புயலைப் போலும், போரிடி முழக்கஞ் செய்து,
மோகங்கொள் வெறியர் தம்மை முடுக்கினான் செருக்கி னானே !

கொள்ளையுங் கொலையுந் தீயுங் கொடுமையும் கொண்டு தீய
கள்ளரின் படைகள் வெய்ய காலனின் படைகள் போலே,
துள்ளிமுன் பிணக்கா டெல்லாந் துருவிநள் ளிரவில், ஊரை
அள்ளிட விரையு மாற்றம் அறிந்தனன் சுத்த னுங்கே!...

நாயகர் புண்ணீர் சோர, நாரியர் கண்ணீர் சோரத்
தாய்மனப் பாசம் விம்மத் தந்தையர் தளர, வாடிச்
சேயினங் கதறச் செய்யுஞ் செஞ்சினப் போர்க் களத்தில்
ஓய்வற வுழன்ற வீரர் உலைந்ததை நோக்கி னானே !

சோர்வுறும் வீர ரோர்பால், சூழ்ச்சிசெய் வஞ்சர் ஓர்பால்,
நேர்மையில் அரசர் ஆங்கே நிகழ்த்திடுஞ் சதிகள் ஓர்பால்,
போர்வினை உறுதி யாகப் புரிதரப் போவ தோர்பால்
பார்நலம் பயப்ப தோர்பாற் பழுதறச் சிந்தித் தானே !

சோவுறும் இடுக்க ணெல்லாந் துரும்பெனத் துடைத்தெ றிந்து,
சாவையும் எதிர்த்து நின்று தருமப்போர் புரிந்த வீரன்,
பாவலர் புகழும் ராணு சிங்கனைப் பாடிச் சுத்தன்,
ஏவினன் படைக ளெல்லாம் இக்கதை கேட்க வென்றே !

மாசறு மன்ன னுனை மதித்தநல் வீரர் கூட்டம்,
தேசுறு பிரதாப சிங்கன் சீரிய கதை படித்துத்
தேசத்திற் குயிரை நல்கத் திறங்கொண்ட வகையை யிங்கே
பேசுவோம் பெரியார் காதை பேரின்ப மளிப்ப தாமே !

பிரதாபசிங்கன் வரலாறு

சூரியன் வழி துலங்கிய தொல்லிசை மன்னர்,
ஆரியர் புகழ் அக்கினி குலத்தவர், அரிய
போரரித் திரள் போன்றவர் புரந்தமே வாரில்
சிரு யர்ந்தசித் தூரெனும் தேசுறு நகராம் !

மின்னு பொன்மணி மாடங்கள் மேவுமிந் நகரில்,
அன்னை சக்தி பவானியின் அருள்செறிந் தோங்கும்,
சென்னகை புரி வாளினுற் செருபகை வென்ற
மன்னு பப்பனின் மரபினர் மாண்புடன் ஆண்டார்.

கற்பி னோங்கிய பத்மினி, கண்ணனுக் காளாய்,
அற்புதத் திருப் பாடல்கள் அருளிய மீரா,
சொற்ப டிச்செயல் புரிந்திடு சூரராம் ராணு
பொற்பு றும்புகழ் சூட்டிய புண்ணிய மரபே !

போரினி லிறந்த போசன் புரந்தநன் னுட்டைத் தம்பி
வீரனும் உதய சிங்கன் விதிப்படி யாண்டு வந்தான்.
பாரினை யாளும் அக்பர் படைகளை யனுப்பி யன்னேன்
ஊரினைப் பிடித்துக் கொள்ள உலைவறு போர்கள் செய்தான்.

கடலிலைப் புயலினூழி கௌவிய கடுமை போலே,
திடம்பெறும் உதய சிங்கன் தில்லியின் படையைச் சாடி,
அடம்பெறுஞ் சமர்கொ டுத்தே அயர்ந்துயிர் துடிக்கும் போது,
தடம்பெறு மார்ப ஞன தனயனை நோக்கி ஞனே !

வீரமே பெற்ற வீரன் விஜயனைப் போன்ற வில்லன்,
போரதிர் முரசங் கேட்டுப் பொம்மிடுந் திண்பு யத்தான்,
சூரிய குலத்து தித்த சுடர்மணி பிரதாப சிங்கன்
சீரிய தந்தையே நின் செருவையான் செயிப்பே னென்ருன் !

"மைந்தநீ என்வா ளேந்தி மரபுள தருமங் காத்தே
சொந்தநாட் டுரிமை பேணச் சுதந்தரச் சமர்செய்" யென்ற
தந்தைசொல் மந்தி ரத்தைத் தாங்கிய தனயன் வீரம்
கொந்தளித் திகலை நூறக் கொதித்தது கதித்த தம்மா !

உடலினை யுதறிச் சென்ற உத்தமத் தந்தைக் கான
கடன்முறை செய்த பின்பு, காளிசந் நிதியிற் கூடி,
திடமுள வீரர் வாழ்த்தித் திருமுடி சூட்டும் போது,
கடல்மடை திறந்த தென்னக் கருத்தினை யுரைத்தான் சிங்கன்;

பிரதாப சிங்கன்

ஏக லிங்க பவானி இறைவியின்
வேக நல்லருள் வெற்றி யளித்துநல்
வாகை யேந்திய வான்புகழ் போனபின்
மோக மன்றி முடிபுனைந் தென்னையே !

வீடி லாத வியன்குல வாழ்க்கையும்,
பீடி லாத பெருஞ்சொல் விளக்கமும்,
ஏடி லாஎழுத் தாணியு மென்னவே
நாடி லாமுடி நம்மை நகுவதே !

ஐயப வானி பராசக்தி யென்னவே
புயங்கள் விம்மிப் பொருகள ஞடிஞர்
உயரிசை மன முட்கிய பின்கடுந்
துயர மின்றிச் சுதந்தர முள்ளதோ ?

பங்க மாகிப் படைக ளொடுங்கியே
நங்கு லம்பெறு நாட்டினைத் தோற்றபின்,
சிங்க வீரர் கவித்த செழுமுடி
தங்க மன்று ; தணல்முடி யல்லவோ ?

வீழ்ச்சி யுற்றநம் வீர மணிக்கொடி
தாழ்ச்சி யற்றுத் தலைநிமிர்ந் தோங்கிடச்
சூழ்ச்சி செய்து சுதந்தர மாகநம்
ஆட்சி நாட்டிடின் ஆளென லாகுமே !

விர வாளுடன் வெங்கணை கொண்டநல்
ஆரி யர்களின் றச்சப் படுவரோ ?
போர்செய் வோம்புறங் காட்டி நடுங்கிடோம்,
வாருங்கள் வலி வோங்கிய மல்லர்காள் !

விரர்

தேவி சக்தி திருவருட் சந்நிதி,
மேவி யின்று விரத முரைக்கின்றோம் !
ஆவி தன்னின் அறத்தை மதித்தனம்,
பூவி லுன்புகழ் பொங்குக சிங்கமே !

புண்ணு ழன்றும் பொறுமை யிழந்திலோம்.
மண்ணி ழந்தும் மனவலி குன்றிலோம்.
விண்ணி ழக்கினும் வீர மிழந்திலோம்.
அண்ண லேயுன தாருயிர்த் தோழர்யாம் !

உரத்த திண்புயம் உண்டுவில் லுண்டுவாள் ;
அறத்தைக் காத்திடும் ஆண்மையுண் டோர்துளி
இரத்தம் எம்முள் இருந்திடு மட்டிலும்,
வருத்த மின்றிப் பொருதுவம் வாய்மைக்கே !

ஆத லாலெம தாருயி ராணையாய்க்
கிதை யுள்ளமுங் கேண்மையுங் கொண்டிங்கே,
காத லோடுன் கருமத்திற் கேயெமை
ஈத லேகட னென்றுமுன் னின்றனம் !

பிரதாபசிங்கன்

நன்று நன்றிது, நாட்டினுக் கேயுயிர்
என்று றுதி யியம்பிய வீரர்காள்,
இன்று நாமோர் விரதம்கொண் டவ்வழி
நின்று வெற்றி நிலவிட வேண்டுமே.

தலைமுடி வளர்ப்போம், தரையிலே படுப்போம்,
சமர்செயத் தானைகள் சேர்ப்போம் ;
மலைமிசை வசிப்போம், வறுமையைப் பொறுப்போம் ;
மண்மகள் அளித்ததைப் புசிப்போம்.

சிலையினை வளைப்போம், பகைவரைச் செகுப்போம்,
தேசத்தை மறுபடி செயிப்போம்,
நிலைபெறும் தரும நீதியை வளர்ப்போம்,
நிச்சயம் பவானிமுன் னுரைத்தோம் !

இன்னரிந் நாட்டின் இழிநிலை போக்கி,
இகல்செயும் கொடுமையை நீக்கி,
மன்னுயிர் கொண்ட மயக்கத்தை மாற்றி,
மாதரின் கற்பினைக் காத்து,

மின்னுவாள் வீசி விடுதலை பெற்றே,
    வீரர்நாம் வெற்றிகள் கூறி,
அன்னையின் பாலுக் காகிய நன்றி
    ஆற்றிய மனிதர்க ளாவோம்!

வஞ்சரின் வஞ்ச வலைகளைக் கிழிப்போம்!
    மாயையின் மயக்கினை ஒழிப்போம்
நஞ்சுவா ளேந்து நலிபகைக் கஞ்சோம்,
    நமனெறி பாசத்திற் கஞ்சோம்!
துஞ்சினுந் தேசச் சுதந்தர மறவோம்
    தோற்கினும் விடாதுபோர் தொடுப்போம்
நெஞ்சிலே வீர நெருப்பினை வளர்ப்போம்—
    நிறைவருள் சக்திஓம் எனவே!

வில்லினை உயர்த்தினர் வீரர் மன்னனின்
சொல்லினைச் சுதந்தர தேவி சொல்லென்றார்;
இல்லினைத் துறந்தனர் எளிமை பூண்டனர்.
அல்லலை நகைத்தனர் ஆண்மை கொண்டனர்.

அரவிலிக் காட்டினில் அன்பர் சூழவே,
உரமலி பில்லரை ஒருங்கு சேர்த்துடன்
அறமலி சிங்கனும் அன்னி யர்களைப்
பொரவலி பெருக்கினன் பொறுமை யாகவே! 140

கணவனைப் பிரிவறுங் கற்பின் செல்வியாம்
*குணவதி ஐந்துநற் குழந்தை பின்வர
மணவிருந் தருந்திய மாளிகை யொரீஇ
இணங்கினள் காட்டிடை யிருந்து வாழவே!

தெறுமனப் பகைவரைச் சினக்கும் சிந்தையான்,
பொறுமையின் கொடுமையும், புவியி ழந்துறுஞ்
சிறுமையின் கொடுமையும், சிங்க நெஞ்சுடன்
வறுமையின் கொடுமையும் வலியத் தாங்கினான்.

தன்னரு முயற்சியிற் சலித்தி டாமலே,
சொன்மனஞ் செய்கையுந் தோய்ந்த சிங்கனின்,
கன்மமும் விரதமுங் கண்ட ஒன்னலர்
கன்மனங் கரைந்தது கனல ரக்கெனாஅ.

---

*பிரதாபசிங்கன் மனைவி குணவதி; அமரன், அக்ஷயன், சுந்தரன், சம்பாவதி, சுவர்ணகுமாரி ஆகிய ஐவர் மக்கள்.

ஆணவப் புலன்களை யடக்கித் தன்னைத்தான்
காணுறத் தவஞ்செயுங் கடிய யோகிபோல்,
மாணுறு சுதந்தர வரத்தை நாடியே
ஆணரி போன்றவன் அமர்செய் தானரோ !

காட்டக மளித்திடுங் கனிகள் காயிலே
வாட்டிய பசிக்கனல் வருத்த வுண்டனன்.
ஏட்டினி லெழுதொணு இடர் சுமந்தனன்,
நாட்டினில் விடுதலே நாட்ட வேண்டியே.

பட்டமும் பதவியும் பணமும் போகமும்,
இட்டிடப் பகைவரைக் கீழ்ப்ப டிந்தவர்
கட்டியங் கூறிடுங் கால மாந்தரை
வெட்டிரு துண்டென வெட்கப் பேசினுன் :

மானசிங் சபதம்

பெருந்தகை அக்பரின் பிரியம் பெற்றவன்,
அரும்படைத் தலைமையை ஆளும் மானசிங்,
வருந்திய வீரனை வசப்ப டுத்தவே
பொருந்தினன் ஓர்பகல் புன்சி ரிப்புடன்.

வந்தமான் சிங்கனை வரவு கூறியே,
அந்தமாய் விருந்துநன் றளித்துத் தானுடன்
குந்தியவ் விருந்தினைக் கொள மறுத்தனன்,
சொந்தநல் லறத்தினைத் துணிந்து பேணுவான்.

வினயத்தை யறிந்தமான் வெட்கிச் சிங்கனைத்
தனிவிருந் திடுதலின் சழக்கைக் கேட்டனன் !
புனிதநல் வீரனும் பொறுமை யாகவே
இனியவ கேளென இடித்துப் பேசினுன்.

பிரதாபசிங்கன்

தகைபெறும் என்குல சத்தி ரீயனே,
பகைவனைப் பணிந்தனை பணியும் ஏற்றனை,
முகலவர் முறுவலின் மோக முற்றனை,
பகலவன் மரபினைப் பாழ்ப டுத்தினை.

ஆருயிர் போலத்தம் அறத்தைப் பேணிய
வீரரின் விந்தினில் விளைந்த வீரனே,
நாரியை அன்னியன் கொள்ள நல்கினை,
ஆரியன் உன்னெடும் அருந்த லாகுமோ ?

சுயநலச் சோம்பலின் சுகத்தை நாடியே
இயலறந் துறந்தநீ இயற்றுஞ் செய்கையால்,
அயலவர் ஆளுனர், ஆண்மை யுள்ளவர்
புயலிலும் பனியிலும் பொறுமை காக்கின்றுர்.

மானசிங்

சொந்த நாட்டுச் சுதந்தர நோன்பினன்,
இந்த வண்ணம் இடித்துரை கூறவே,
வெந்து வெஞ்சினம் வீசி விளம்பினன்,
வந்த மானசிங் வஞ்சப் பொருமையால்.

“ சொந்த நாடு சுகம்பெற வேண்டியே
இந்து முஸ்லிம் இணைப்பினை வேண்டினேன் ;
உந்த னுக்கும் உரைத்திட வேயிவண்
வந்த னன்னை வன்சொல் வழங்கினை.

பொறுமை கொண்டிந்தப் புண்ணிய பூமியின்
சிறுமை நீக்கத் திகழுமுன் வீரத்தைப்
பெருமை யாகப் பெரிய விடத்திலும்,
அருமை யாக உரைத்தனன் ஐயனே !

தேவர் கோனுக்குந் தெள்ளறி வாளர்க்கும்
நாவ டங்கிய நல்லுரை வேண்டுமே.
மேவி நம்பு விருந்தினை ஏசினுய்,
கூவிக் கொண்டனை கொற்றவன் போரினை.”

சிங்கன்

உன்னை யில்லை ; உன் பெண்ணை மணந்திடும்
மன்னை யில்லை ; மனிதர் மதியையே
உன்னிக் காலத்தின் ஊழலைச் செப்பினேன்
அன்ன துண்மை ; அருங்கட னுகுமே.

மானசிங்

நானை யிங்கு நடந்திடும் போரிலே,
வாளி னுலெதிர் கூறுவல் வாவெனு,
மூளு வெஞ்சின முற்றிய மானசிங்
ஆளும் அக்பர்முன் அக்கணஞ் சென்றனன்.

துணிந்த வீரன், சுதந்தர சக்தியை
அணிந்த வீரன், அரசினுக் காபத்தாம் ;
பணிந் திவன்வரப் பாருமென் றுரைதினுன்,
வணங்கி மானசிங் வஞ்சனை தீரவே !

போர்

செய்வினைப் பயன் சேர்வது போலவே,
மைவினைப் படை வந்து வளைக்கவே,
தொய்வினை யடை யாத சுதந்தரன்
வெய்ய போருக் கெழுந்தனன் வேகமாய் !

பிரதாபசிங்கன் போர் புரிதல்

நீலவேணி மீதுதாவி நீள்படை நடத்தியே,
கால தண்ட முங்கலங்கக் கைகலந்த சிங்கனும்
ஓலமிட்டு வெம்பகைவர் ஓடஓட ஓடவே !
கோல மின்னல் போலவாளைக் கொல்லெனச் சுழற்றினுன் !

பகை நிறைந்த ஒன்னலர் படைக்கடல் குமுறியே
தொகை நிறைந்து தாக்கவே, தொடர்ந்து தாக்கிப் போரரி
தகைத்தனன் வளைத்தனன், சடைத்தனன் மிதித்தனன்
துகைத்தனன், வதைத்தனன் துணிந்தபோர் அணிந்தவன் !

பண்டி லூசி பாய்வபோற் பகழிகள் விடுத்தனன்,
முண்டி முண்டி முன்னிடைந்த மூர்க்கரை முடித்தனன்.
சண்டமாரு தம்பிடுங்கி வீசிடுந் தருக்கள் போல்,
எண்டி சையும் வீரரை எடுத்தெடுத்து வீசினுன்....

கண்டகண்ட திக்கெலாங் கரமலை தலைமலை,
கண்டகண்ட கண்டகர் கலங்கி ஓடும் வேளையில்
விண்டுமார் வெடித்துச் சேது வென்னும் வீர வாசியும்,
அண்டையில் விழுந்ததால், அருமை வீரன் ஓடினுன்.

சிங்கன் தப்பிப் பிழைத்தல்

வெவ்விடங் கலந்தனர் விடாய்தணிக்கு நீரெலாம்,
உய்விடம் எனப்புகுந் துணவு கொள்ளு வேளையில்,
தெவ்வர் கூடிக் கொல்லெனச் செறிந்தனர் துரத்தினர்
அவ்விடரை வாயினுல் அறைத லென்று மாகுமோ ? 240

இல்லவள் உணவினை யிடும்பொழு திகலவர்,
கொல்லவந்து சூழுவார். கொடும்பசியைத் தாங்கியே,
பில்லரின் உதவியால் பெருந்தகைதன் வீட்டுடன்
அல்லலுற் றமைதி தேடி அங்குமிங்கு மோடுவான்—

களைத்த சிங்கத் தைமத கடங்கள் சூழு மாறுபோல்,
வளைத்தவெம் பகைவரை மறைந்து தப்பி யோடியே,
இளைத்த சிங்கன் ஓரிருட் கடத்திலே குதித்தனன்.
சளைத்தனர் பகைவரும் ; சமர்த்தனும் பிழைத்தனன்.

துயரம்

சுற்றிலுங் கரிய காடு. துயர்களுக் கெல்லை யில்லை,
பற்றிய வடவைத் தீபோற் பசிக்குப்பச் சிலையடைத்து,
பற்றெலாம் சொந்த நாட்டின் பந்தனை நீங்கி யின்பம்
பெற்றிடு நினைப்பில் வைத்தான்,பேசரும் உறுதி பூண்டான்.

கருமியின் கையும், கொல்வோன் கடுமுக நோக்கும் போல,
வெருவுறு கணவாய் தன்னில் வேங்கையும் அரியுஞ் சீறும்,
கருமணி நாகஞ் சுற்றும் ; கண்மணி மக்கள் ஊணே
வெருகுகள் கௌவிச் செல்லும் வேதனை சொல்ல வாமோ ?

வந்தனன் உருக்க ரந்து மன்னவன் அக்பர் ஓர்நாள்,
தந்துதன் உணவைச் சம்பா வதிவெறுந் தரையிற் சாய்ந்தாள்.
வந்தவன் "வறுமை தீர, வணக்கமென் றுலே போதும்,
முந்துனக் கரசுமீவான் முகலவன்" என்று சென்ருன்..

சட்டென மகளெழுந்து " தந்தையே இந்த யாக்கை
பட்டென வீழுமுன்னே பகருவேன் உண்மை ; தில்லிச்
சட்டத்திற் கிணங்கின், கொண்ட சத்திய விரதம் பாழாம் ;
விட்டதை, வீரப்போரே விரும்பி"டென் றிறந்தா ளந்தோ !

மத்துடைத் தயிரைப் போலும், மணியுடை பஞ்சைப் போலும்,
கத்துசெக் கினிலே யாடும் எள்ளையுங் கடுப்பச் சிங்கன்
இத்துயர் தாங்கிடாமல், இருகணீர் வார ஆங்கே
சத்தி பவானி தேவி சரண்புகுந் திறைஞ்சி ருனே !

சிங்கன் முறையிடு

"ஓடினேன் பசியு ழன்றேன், உள்ளுடைந் திளைத்தேன், மேனி
வாடினேன்; எனினும் இன்னும் வாழ்வினைப் பலிகொடுத்து
நாடினேன் எனது சொந்த நாட்டினை மீட்க வேண்டித்
தேடினேன் வகை ; யெனக்குத் திருவருள் புரிஓம் சக்தி !

பத்தியிற் பழுதோ ? யான்செய் பணியினிற் பழுதோ ? சித்த
சுத்தியிற் பழுதோ ? பட்ட துன்பத்திற் குறையோ சொல்லாய் ?
எத்திசை யிலுமி ருந்து கருணைசெய் இறைவியே நீ
இத்ததி புகல ளித்தென் இன்னலைத் துடைத்தி டாயோ ?

அருட்குலத் தாயே, உன்றன் அடிபிடித் திறைஞ்சு கின்றேன் ;
மருட்குல மாயஞ் செய்யும் வலியவெந் துயர்கள் போக்கி,
இருட்கண வாயி லேயின் றென்விதி முடிந்தி டாமல்,
தெருட்பெறுஞ் சோதி காட்டித் தேசத்தை உய்விப் பாயே !

வெற்றி

வெல்குறி யீந்தாள் அன்னை, விரும்பிய கருமம் கூடச்
செல்கநீ சிந்து நோக்கிச் செய்யநற் றுணையி ருலே,
வெல்கநீ அரசை யென்று மின்னென நெஞ்சி லெண்ணம்
மல்கிடச் செய்தாள் ; அந்த வழிச்சென்ருன் வீர வள்ளல் !

அன்னரே சேர்ந்தா ராங்கே அரியநல் லன்பு வீரர் ;
"தன்னலந் தவிர்த்துத் தேச தருமத்திற் குயிர்த்துக் கோடி
இன்னலைப் பொறுத்தாய்; நாட்டின் இன்பமே நினைந்தாய் வாழி
உன்னருட் பணியே எங்கள் உயர்கட" னென்றார் மாதோ !

கற்புடை யரசி, வீரக் கனல்பெறு மைந்தர், அஞ்சா
விற்படை பில்லர், போரில் வீறுடை நண்பர் சூழ,
வெற்பினின் றிறங்கும் போது மேவினன் சேவை செய்ய
மற்படை கொண்டு சித்தூர் மந்திரி விஜய சிங்கன்.

"என்னருஞ் செல்வமெல்லாம், ஏற்றமாம் படைக ளெல்லாம்
உன்னுடைச் செல்வ மாக உதவினேன் உவந்து கொள்ளாய்,
மன்னவா உன்ப ணிக்கே மகிழ்வுடன் போந்தேன்" என்றான்,
அன்னவன் அன்பை மெச்சி அரசனு முன்சென் றனே !

அடுத்தநல் வீரர் தம்மை அணிவகுத் துடனே சிங்கம்
தொடுத்தனன் பெரிய போரைத் துணிந்தநல் வெற்றிகண்டான்
பிடித்தனன் கோமல் மீரை, ஆம்பலைப் பிறநல் லூரை ;
இடைத்தது மேவா ராட்சி, கேடெலாம் விலகிற் றன்றே ! 300

இழந்தனன் மான சிங்கன் இகற்களம் ; பகையின் வெம்மை,
ஒழிந்தது; தில்லி சுல்தான் "உண்மை நீ தீரன்" என்றான்..
எழுந்தது பிரதாப சிங்கன் இசைபெறு முழக்க மெங்கும்,
தொழுந்திரு வீர னகத் துலங்கினான் உலகில் அன்னோன் !

நீக்கறுங் கால வேடன் நெஞ்சிலே யம்பு பாய்ச்சிச்
சூக்குமங் குறுகி யாவி புள்ளெனத் துடிக்கும் போது,
"யாக்கையிங் குள்ள மட்டும் யான்செய்த விரதந் தன்னைக்
காக்கவென் மைந்த" னென்று கடைசிமூச் செறிந்தான் மாதோ!

இத்தகைச் சிங்க நெஞ்சம் இருந்திடின் இகலை வென்று
சித்தியின் கொடியை விண்ணின் சிகரத்திற் பிடிப்போம்..வாரீர்
சத்தியம் வெல்லும் ஆன்ற தருமமே நிலைக்கும்; தேச
பக்தியிற் பழுது மில்லை ; பரனருள் காப்பதாமே.... 312

31. போரணிந்த படலம்

சிங்கனின் சரிதை கேட்ட சித்தியின் வீர ரெல்லாம்,
பொங்கிய வுவகை தூண்டப் போர்க்களஞ் சென்று தாவி,
வெங்கதக் கலியும் அஞ்ச வேகமாய்ச் சரங்கள் கோத்துத்
தங்கடன் புரிந்து நின்றார் தருமமு மகிழ மாதோ !

பொழிந்தனர் சித்தி வீரர் புகைத்தெரி கக்குங் குண்டு,
கொழுந்தெரி குண்டு மாரி கொட்டினர் கலிய ரக்கர்.
அழிந்தனர் இங்கும் அங்கும் ஆயிரம் அரிய வீரர்.
எழுந்தனர் தோள்பு டைத்தே எண்ணிலார் இன்னும்இன்னும்!

தடதட வென்னத் தேர்கள் சரமழை பெய்து தாவச்
சடசட வென்னக் கைகால் கழுத்திடை முறிந்து வீரர்,
படபடத் துயிர் துடிக்கப் பாரினில் விழுங் காட்சி
நடுநடுங் கிடவே சேனை நாயகன் கண்டான் மாதோ !

செறுத்து வீசினன் தீயுமிழ் சிலைகளை விசயன்,
அறுத்து வீசினன் கலிப்படை நடத்திடும் கனலன்,
ஒறுத்து வீசினன் ஊழித்தீ யுமிழ்சரம் விசயன்,
வெறுத்து வீசினன் கனலனும் விதவிதக் கணையே !

சாடு வேகத்திற் சகடைகள் மோதியே சரிந்த,
ஓடு வேகத்திற் குதிரைகள் ஒன்றொடொன் றுடன்ற
‡கோடு கோடுடன் மோதிய யானைகள் குலைந்த;
காடு மேடெலாம் கழுகிற்குங் காக்கைக்கும் விருந்தே! 20

தூர நோக்கியால் அமர்க்களத் துயரினைக் கண்ட
பாரின் வேந்தனும் சுத்தனும் பகையின்கை மிஞ்சும்
ஓர நிகுறி தெரிந்ததும் உடனொரு கணத்தே
நேர வந்தடு சமரினை நிகழ்த்திட முனைந்தான் !

ஒற்றர் அத்ததி ஓடிவந் துவப்புடன் "அரசே
வெற்றி பெற்றது தந்தையின் வீரமாப் படையே ;
செற்றனர் பல செருநரக் கலிநகர் தனையே
பற்று இன்றனன் பழையநல் லர"செனப் பகர்ந்தான்.

அரிய செய்தியென் றரசனும் ஆண்மைகொள் படையை
உரிய காலத்தில் கலிநகர் உட்புக வனுப்பிப்
பெரிய போர்க்களம் புகுமுனர் பிரிவிடை பெறவே,
உரிய கௌரிமுன் வந்துதன் உணர்வினை யுரைத்தான்.

சுத்தன்

கண்ணே அன்புக் கௌரி தேவியே,
போர்முனை செல்கிறேன் புன்னகை யாலே
என்னை ஊக்கி இன்விடை தருவாய்...
பொன்னே மணியே புண்ணிய விளக்கே !

‡ கொம்பு

கௌரி

என்னுயிர்க் குயிரே, என்கண் காணும்
வீரத் தெய்வமே, வெல்கநின் ஆண்மை !
கலிக்குன் பெயரே கிலியாம் ; உன்னைக்
கண்டதும் அச்ச முண்டவன் பதறி
வணங்குவான் ; இன்றேல் வகையறி யாமல்,
நரகத் தீயை நாற்புறங் கக்கும்
பீரங்கி களையும் கூரம் புகளையும்,
கோபத் தீயுடன் கொட்டித் தீர்ப்பான்...
எனக்கவன் செய்யும் இகல்வினை தெரியும்.
நாதா, யாதுந் தீதுவ ராமல்,
யானும் உம்முடன் இருந்துபோர்க் களத்தில்
உதவி செய்ய உவந்தே யருள்கவே !

சுத்தன்

கலியின் கொடுமையைக் கட்டுடன் ஒழிக்கும்
இக்கொடும் போரில் மிக்கவுள் ளன்புடன்
பெண்மணிப் படையைப் பீடுற நடத்தி,
வீரருக் குணவு விருப்புட னளித்தே
காயம் பட்டவர் நோய்தனை யாற்றி,
அன்னை போலே ஆறுதல் கூறும்,
அந்தநற் பணியே அரிவையர்க் கழகாம்....
இரத்த வெறியும் எமனும் ஆடும்
கடும்போர்க் களத்தைக் காண்பதுந் தீதே.
மெல்லிய பணியே மேன்மையாம் உனக்கே....

கௌரி

கட்டளைப் படியே காயமுண் டவர்க்குச்
சிகிச்சை செய்வேன். செருக்களந் தனையும்,
தொலைநோக் காடியால் துருவிக் காண்பேன்.
என்னுயிர் தன்னின் இனிய மணாளா,
அறிவுக் கதிரும், அன்புக் கதிரும்,
வீசும் இருமலர் விழியா லென்னை
மகிழச் செய்யும் மதிமுகக் கண்ணா !
மணிக்குர லெடுத்து மந்திர மொழிகள்,
அருமையாய்ப் பேசியென் அறிவைத் தூண்டும்,
ஞானச் சுடரே, நானுன் பாதி.
பிறந்தும் பிரியேன் இறந்தும் பிரியேன்;
வீட்டிலும் பிரியேன் ; காட்டிலும் பிரியேன்;

நாட்டிலும் பிரியேன் ஞாலத் துயிரே,
பத்தினி கடமை இத்தினம் புரிய,
உத்தர வருளாய் உலகிற் கொளியே !

சுந்தன்

வீரத் திருவே, போரில் எனக்குத்
தீங்கு நேர்ந்தால் ஆங்குநீ வருக !
கற்பும் வீரக் கடமை காக்கவே !
நன்பொழில் உலாவும் நல்லிளங் காலே,
ஊற்றெனத் தெளியும், உள்ளமே, உன்னால்
கூற்றையும் வெல்லும் ஆற்றலைப் பெற்றேன்.
கலியை வெல்வது கணப்பொழு தாகும்.
உன்னை உளங்கொண் டென்கடன் செய்யச்
செல்வேன் கௌரி தேவியென் ஆவியே.......

கௌரி

"வெற்றி வெற்றி, வீறு பெற்ற
சத்திய குமாரர் தருமவா ளுக்கே
வெற்றி யாகுக....வீரச் சுடரே !
பொன்னணி பூட்டிப் போரணி புன்கை,
மின்வா ளீந்து புன்னகை வீசிக்
கண்ணால் அழகைக் களிப்புறப் பருகி,
கருத்திலே உருவைக் கவின்பெறத் தீட்டி
சுத்த சக்தியைத் தொழுதுமை யனுப்பி,
எண்ணிய கடமையை இயற்றிடத் துணிவேன்..."
என்றுதன் முன்னே நின்ற மணாளனைப்
போர்க்கவ சங்கள் பூட்டிக் கவனமாய்ப்
பாசத் துடனே பரிந்தலங் கரித்து,
வாடா மல்லிகை மாலையுஞ் சூட்டி,
வெல்க நலமென வீரவா ளீந்து,
கெடுக தீதெனக் கேடயந் தந்து,
பலம்வளர் கென்று பாற்புட் டருத்தி
மார்புறத் தழுவி மகாசக்தி யளித்து,
புன்னகை யாலே புன்கணீர் துடைத்தே
சிறிது நேரம் தியானத் திருத்திப்
புகழுடன் வருகெனப் பொலிமுகங் காட்டி,
நல்வழி யனுப்பினாள் இல்லறத் திருவே !
அருமைத் தாயும் ஆசையோ டணைத்தே
"என்னுயிர் மகனே இந்திரன் போலநீ

அறமிலி யரக்கரை அழித்தறம் பொலிய
வருகென்'' றனுப்பினுள் வாழிய வென்றே....
இறைவனைத் தூயன் இறைஞ்சினுன் ஆங்கே.

குழைந்தேன் புவியின் குறைகளை யெண்ணிக் குறையிரந்தேன்;
உழைந்தேன் உளங்கரைந் தேன்சிவ னேயுன் உதவியினுல்,
விழைந்தேன் கலியினை வீழ்த்திநல் லன்பு விளைத்திடவே,
எழுந்தேன் இறைவாளன் பக்க மிருப்பாய் இகல்வெல்லவே !

வாட்டுங் கலியை வருத்திக் களத்தில் வலியொழித்தே
ஓட்டும் பொழுதும், உலகினில் அன்புடன் ஒற்றுமையை
நாட்டும் பொழுதும், பசுபதியே யெற்கு நல்லவழி
காட்டி நடத்தாய் கனகணே கண்ணின் கதிரொளியே !

தொழுவார்க் கருளுந் துரையே கருணைச் சுடரொளியே,
மழுவார் சிவனேயென் மன்றினி லாடும் வரமணியே !
வழுவாதென் உள்ளம் வழுத்தி வணங்கும் மனோதயனே !
எழுவாயென்னேடும் அரக்கரை யான்வெல்லு மிப்பணிக்கே! 120

இளகியுள் ளிரங்கி யிவ்வா றேத்திடு மன்ப னுள்ளே,
ஒளிமய மாகத் தூய ஒருவனின் கதிர் இறங்கி,
அறிவளர் சக்தி யாகி, அனல்பெறும் ஆற்ற லாகித்
தெளிவுறச் சுழலும் போது தெரிந்ததோர் தெய்வக் காட்சி.

விரிகுழலும் எரிவிழியும் வெறிநகையும்,
புலிநாவும் வெட்டு மின்னிற்
பொருவாளும் செஞ்சினமும், பொல்லாரின்
சிரமாலை பொலியு மார்பும்,
திரிசூலப் படையணியும் திகழ்காளி
மாதங்கி "தீரனேசெல் ,
புரிபோ'' ரென் றுதயதிசை புதுமையுறப்
போந்தாளப் புனிதன் முன்னே !

ஒருநொடியிற் கடமையறிந் துடனெழுந்து, களனடைந்தே ஒப்பி லாதான்,
வருசமரின்வகையறிந்துவாட்படையும்கனற்படையும்வரிசைசெய்து
பொருமுனையிற்பெரியபீரங்கிகளைப் பகையஞ்சப் பொருந்தவைத்தே
திருவருளை நினைத்தறமே செழிக்கவெனச் செய்கடனைச் செய்தான் மன்னே ! 136

32. கலி கலங்கிய படலம்

அதிதியன்னை அருள்நகை தூண்டவே,
ஆயி ரங்கதி ரான்ஒளி வீசவே !
புதனும் அக்னியும் போற்றிகள் கூறவே,
புரவி தன்னை அசுவினி ஓட்டவே,
கதிசெய் வேகம் மருத்துக்கள் காட்டவே,
கலையுஞ் செல்வியும் காப்புகள் சொல்லவே !
சதிசெய் பொய்யரைச் சாடிடத் தேவர்கோன்
தானை யூர்ந்த தவம்பெறு காட்சியோ ?

கந்தன் வீரக் கதிர்வடி வேலையும்,
கண்ணன் சக்கர முங்கதை யுந்தர,
அந்தி வண்ணன் அவுணரைச் சீறவே,
அசனி யாற்பகை ஆணவஞ் செற்றவன்,
இந்திரன் இவ னேயென மூத்தவர்,
இகலொடுக்கி எழுந்திடுஞ் சுத்தனுர்
வந்த காட்சியை வன்கலி கண்டதும்,
வார்த்தை யாடி மடக்கிட வந்தனன்.

அருணெறிக் கரசை, வாழும் ஆருயி ருலகுக் கெல்லாம்,
கருணையே செய்யும் வேந்தைக் கலினுனுங் கண்ணிற் கண்டான்;
பொருநெறி தெரிகி லாமற், போகவு மனமி லாமல்,
இருதலைக் கொள்ளி யாகி எதிர்நின்றுன் பதரன் ஞனே!

சுந்தன்

அன்புரை கேளாய் என்றன் அப்பனுக் கிளைய ஞனுய் ;
பின்புவாள் பிடிப்போம், முன்புன் பிழைகளை எண்ணிப் பாராய்!
உன்பழஞ் சீரும் பேரும் உயர்குல நலனுங் காணுய் ;
தன்பிழை கண்டு கொள்வான் சான்றவ னவா னன்றே !

சத்தியன் மரபில் வந்துந் தானவர் மோகங் கொண்டு,
புத்தியை யிழந்து, பெற்ற புண்ணியத் தாயின் மார்பிற்
கத்தியை வைத்தாய் ; உன்னைக் கண்ணெனப் பாது காத்த
சித்தியைப் பகைத்தாய் ; வெய்ய சேனையுங் கொண்டு வந்தாய் !

மறுத்தனை மரபு தன்னை, மாசறும் அறத்தின் வேரை
அறுத்தனை, உனது வாழ்வை ஆயிரம் பேய்கள் சூழ,
வெறுத்தனை நல்லோர் தம்மை ; வெறியரின் அடிமை யானுய்;
நிறுத்தியுன் பகையை ஐய நேசமாய் வாழ லாமே !

ஒருவர்பே ராசை யாலே, உலகெலாம் அணிவ குத்துச்
செருநில மாகிச் செந்நீர் சிந்திடுந் தீதைப் பாராய் !
பொருதிமிர் உள்ள தாகில், இருவரும் பொருதிப் பார்ப்போம்—
இருநில மக்கள் கோடி இன்னுயிர் பிழைக்க லாமே !

பஞ்சமா பதகி மோகிப் பகட்டிலே மதியி ழந்து,
நஞ்சினை அன்னைக் கூட்டி நலம்பெறு மைந்த னுண்டோ ?
கொஞ்சியே மூச்ச ணைக்குங் கொடியரை நம்ப லாமோ?
துஞ்சிய வீட்டிற் கொள்ளி சொருகிடும் கொடுமை செய்தாய் !
நரிபுலி ஓநாய் நாகம் உலவிடு நச்சுக் காட்டின்
விரியிருள் போன்ற வஞ்சர் வீசிய வலையிற் பட்டாய் ;
பெரியவர் மனது நோகப் பேய்மதங் கொண்டு வந்தாய் !
உரிமையை யிழந்தாய் ; நாட்டில் ஒற்றுமை குலைய வைத்தாய்!

வன்றிறல் அரக்கர் மாய வலைப்படல் எளிது ; நாட்டில்
ஒன்றிய சமுதா யத்தை உலைத்தலும் எளிது ; போரிற்
கொன்றிடல் எளிது ; கெட்டுக் குலைந்தநல் லறத்தை நாட்டி
வென்றிடல் அரிது நீயிவ் வினைவினைச் சிந்திப் பாயே !

உனதுபே ராசைக் காக உலகெலாம் பரித விக்க,
மனதடங் காத மூர்க்க வழியினில் ஓடு கின்றாய்....
சினமடங் காத மூடச் செருக்கினால் இன்றுன் சொந்த
இனமடங் கலும் வருந்தும் இகல்வினை பெருக்கி நின்றாய்.

ஊழித்தீ யுமிழ்ந்து வாட்டி உயிர்களைக் கொடுமை யாகப்
பேழைவா யடைக்கும் சண்டைப் பேயினைக் கட்ட விழ்த்தாய் ;
பாழும் பொருமை யாலே பாரத தருமத் திற்கே
சூழுனை யிடும்பை; அந்த வினையுனைச் சுடுவ தாமே !

இருக்கினும் வாய்மை யின்றி யிருத்தலே யிறத்த லாகும்.
இறக்கினும் வாய்மை பேணி யிறத்தலே யிருத்த லாகும்.
மறக்கள மாக்கிப் பூவை யாள்வதே மடிவ தாகும்;
அறக்களத் துயிர்கொ டுத்தல் ஆருயிர் பிழைத்த லாமே !

என்னைப்பார் எனது பக்கம் இருப்பவர் தன்மை யைப்பார் ;
உன்னைப்பார் உனது பக்கம் உள்ளவர் உருவைப் பாராய் ;
சின்னப்பா எனக்குன் மேலே யாதொரு சினமு மில்லை..
என்னப்பா மௌனமானாய்; இதயத்தைத் தொட்டுச் சொல்வாய் !

கலியன்

காட்சி யாளர்க்குங் கள்ளர்க்கு மேமனச்
சாட்சி மெய்யினைச் சாற்றுதல் உண்மையால்,
வாட்சி வந்த கலியன் மனத்திலும்,
மாட்சி யுற்ற மயக்கம் எழுந்ததால் !

புன்சொ லேன்புலை நாயினுங் கேடனேன்,
என்செய் தேன்?இறு மாப்பினில் மூழ்கினேன் ;
இன்சொ லாளன் இளகிய வாய்மையென்
வன்சி னத்தினை மாற்றிய தென்னையே !

விதியி னாலொரு வேசியைக் கூடினேன் ;
மதியி ழந்துமண் ணானதென் வாழ்க்கையே !
சதிசெய் தேனென் மரபினைச் சாய்க்கவே ;
கதியி ழந்தனன் கண்ணுமி ழந்தனன் !

மன்னு லகை மடித்தர சாண்டிட
மின்னு வாளை மிடுக்குட னேந்தினேன்,
முன்னு லகினில் மூட்டிய போர்க்கனல்
என்ம னத்தை எரியென வாட்டுமே.

சித்தி யைப்பகைத் தேனிலை சீரிய
சத்தி யத்தைத் தகைக்க முயன்றனன் ;
பித்தர் போன்று பெரியரைத் தூற்றினேன் ;
எத்தனைப் பிழை செய்தனன் ஏழையேன் ?

பரிந்த மேலவர் பண்புரை கேட்டிலேன்,
விரிந்த ஞான விளக்கினைத் தூண்டிலேன் !
கரிந்த வஞ்சக் கடுமனச் சூழ்ச்சியாற்
பிரிந்து வாழும் பெரும்பிழை செய்தனன் !

கள்ளும் ஊனுங் கலந்துணக் கற்றனன் ;
உள்ளம் பாம்பின் உறையுளென் றாக்கினேன்.
பிள்ளை யற்றவர் சொத்தைப் பிடுங்கினேன் ;
வெள்ளி பொன்னெனின் வேட்கைகொண் டோடினேன் !

அன்னி யர்மனைக் காசை மிகக்கொண்டேன்,
மின்னி டையை விலைப்பொரு ளாக்கினேன் !
பொன்னை மாதரைப் பூமியைப் போகத்தை,
என்ன தாக்குவ தின்பமென் றெண்ணினேன் !

கொழுத்த செல்வர் குவித்திடப் பொன்மலை—
உழைக்கும் ஏழை உணவறச் செய்தனன் ;
செழிக்கு நாட்டைத் திருடியென் னூரிலே
தழைக்கச் செய்தனன் சங்கடக் கூட்டமே

சகம் வருந்தத் தனியுண வுண்டனன் ;
மகவு வாட மடுவைப் பருகினேன் !
அகமி குந்துல காளப் புகுந்தனன் ;
புகுந்த வீட்டிற் புலியென லாயினேன் !

பஞ்சம் பட்டினி பாவம் பகைதுயர்,
வஞ்சம் பொய்கள வாகிய மாசுகள்
பஞ்ச பூத வுலகினைப் பாழ்செய
நஞ்சனேன் பெரு நாசம் புரிந்தனன்.

அங்க ரக்கர் அடக்கு முறைகளால்
இங்க நாட்டினைச் செம்மறி யாக்கினேன் !
இங்கு மென்னிறு மாப்பிற் கிடம்பெற
வெங்கு லப்படை கொண்டு விரைந்தனன்....

இன்ன வாறு கலியும் இரங்கியே
என்ன சொல்வதென் றேயறி யாமலே,
முன்னி ருக்கும் புனிதன் முகத்தினைக்
கன்னக் கையுடன் கண்டு கசிந்தனன்.

அந்த வேளையில் அதர்மனும் அரக்கனும் அடைந்தே
இந்த வாலிபன் வாயுரைக் கித்தனை யிடரேன் ?
முந்தொர் குண்டினால் முடிவுரை கூறெனத் தூண்டி
வெந்தழல் வெடி வீசினான் கலியனும் விழித்தான் !

கொல்ல லேயுனைக் கடனெனக் குதித்தெழுங் கலியை
வெல்ல லேகட னென்றுநம் வீரனும் விரைந்தே,
மல்லர் சேனையை மாகடல் அலையெனக் இளைப்பிச்
சொல்லுஞ் செய்கையு மாகிவெஞ் சுடுசரந் தொடுத்தான் !

கடலு டன்கடல் கலந்துகர் ஜிப்பதே போலப்
படையு டன்படை நெருங்கின படைக்கலங் கொதித்த ;
நடையுடன் நடை நெருங்கின ; நலிந்தன உடல்கள்,
தொடையுங் கால்களுங் கைகளுந் துண்டுபட் டனவே !

வீறு பேசிய கலியினர் வெறிபிடித் திரத்த
ஆறு செய்தனர் ; அதன்மிசை அயர்ந்துடன் மிதந்தார்,
மாறு செய்தவர் மண்ணுணிப் புழுவென மாண்டார்,
கூறு செய்தது பகைவரைக் கூற்றெனத் தருமம்.

ஆளைத் தோற்றுநல் லறிவினைத்தோற் றிகல் கொண்ட
வாளைத் தோற்றுத்தன் மானமுந் தோற்றழுங் கலியைக்
காளை போலினுங் கடுஞ்சமர் கலக்கிய தூயன்
நாளை வாளுடன் வாவென நயமுற விடுத்தான்.

குன்று குன்றெனக் குவிபிணக் குவையினைச் சற்றே
நின்று கண்டுளங் கருணையால் நெக்குநெக் குருகி
என்று போர்வெறி யின்றியிங் கமைதிசேர்ந் திடுமோ
அன்று வெற்றியென் றகன்றனன் அரசனு மாங்கே !

33. உறுதிப் படலம்

முல்லைகள் முறுவ லிக்க, முளரிகண் மூடித் தூங்க,
அல்லிகை விரித்து வாவென் றம்புலி தனைய ழைக்க,
மெல்லிய தென்றல் வந்து வீரருக் கினிது வீச,
எல்லியைப் போர்த்தி யற்கை இந்திர சாலஞ் செய்தாள் !

வென்றனம் என்று சித்தி வீரர்கள் ஆடிப் பாடி,
ஒன்றிய உவகை கூர்ந்த வுடனிளைப் பாறு கின்றார் ;
தென்றலு நிலவும் பேசுஞ் செய்தியைக் கேட்கக் காலம்
நின்றது ; சாந்த மெங்கு நிறைந்தது பரந்த ஊரில்.

ஆர்ப்புகள் அடங்கிச் சாவின் ஆட்டங்கள் அடங்கி, யானை
தேர்ப்பரி காலாட் சேனை திரிபர பரப்ப டங்கி,
போர்ப்புய லடங்கி, நெஞ்சப் பொருபொருப் படங்கி, அன்னப்
பார்ப்புகள் போன்று மாந்தர் பள்ளிகொண் டமைதி சேர்ந்தார்.

காவலர் உலவு கின்ற காலடிச் சத்த மல்லால்,
நாவொடு நடையுங் கையும் ஞானியர் சமாதி போன்று,
மேவின மோனந் தன்னில், விமலனே ஒருவன் ஆங்கே
காவியங் கண்வி ழித்துக் கத்தியிற் கனவு கண்டான் !

கௌரி வருதல்

யாழிசை குழலிசை யினிது வீக்கிடும்
ஏழிசை கேட்டனன் ; "இறைவன் வாழ்" கெனச்
சூழிசை கேட்டனன் சுத்தன் ; கௌரியின்
வாழிசை கேட்டனன் வரிசை யாகவே !

சேவகருஞ் சேடியருஞ் செய்முறைகள் செய்தே,
ஏவல்கள் முடிந்ததுவும் ஏகினர் புறத்தே.
ஆவலுடன் அன்னநடை மின்னிடையோ டாட
மேவினள் இளங்கவுரி மீனணி நிலாப்போல் ;

வன்சமரில் வாகையுற வந்தமண வாளன் ;
தன்சம ரளித்திடு தளர்ச்சியை விலக்கிப்
பொன்செய்நகை பூத்தகனி வாயமுது பொங்க,
"என்கணவன் வாழ்" கென இளங்கொடி பணிந்தாள்.

தேசுமிகு தேவிவரு கென்றுதிரு வாளன்
மாசறு மனத்துடன் மலர்தவி சிருத்தி,
வாசமிகு மாலைகள் மகிழ்ச்சியுறச் சூட்டி
நேசமிகு புன்னகை நிலாவவர வேற்றான்.

அருகருகிருவரும் அமர்ந்து, சின்மயம்
பருகினர் ; மறுவிலர் பத்தி வேகத்தால்
உருகினர் ; உயிர்மனம் ஒன்றி நின்றருள்
பெருகினர் ; யோகத்தின் பெருமை காணவே.

தெய்வநற் கனல்வளர் தியான மானதும்,
பொய்வளர் அரக்கர்செய் புண்க ளின்றியே,
வையகம் உய்திட வாய்மை யோங்கிடச்
செய்தகு செயல்களைச் சிந்தித் தோதினர்.

சுத்தன்

எனது வாழ்வின் இன்பமே, அன்பே,
பூரண யோகப் பொன்னொளிச் சுடரே,
மங்கலம் பொங்கும் மதிமுகச் செல்வியே,
விட்டர சாட்சியும், நாட்டர சாட்சியும்,
வெற்றிபெற் றோங்க விரும்பி, என்னுடன்
உள்ள மொன்றி யுழைக்கும் துணைவியே,
கற்பிற் சிறந்த கண்மணி யேநின்
அழகையென் சொல்வேன் ! அழகினு மினிய
குணத்தையென் சொல்வேன் ! குணத்திற் இனிய
அறிவையென் சொல்வேன் ! அறிவிற் இனிய
ஒழுக்கமென் சொல்வேன் ! ஒழுக்கம் பழுத்த
யோகமென் சொல்வேன் ! யோக சித்தியால்
ஊறும் சக்தி வீறென் சொல்வேன் !
குகையில் வளரும் குண்டலிக் கனலே,
கலிப்படை முழுதும் கண்ட துண்டமாய்ச்
சிதறிய தேனும், பதகரைக் கொண்டே,
உறங்கும் சித்தியைப் புறங்கண் டிடவே
தந்திரக் கலியன் வந்திடச் செய்வான்.
ஒற்றர் இந்த உண்மை யுரைத்தார் ;
அடுபோர் வென்றும் அமைதியைக் காணேன்.
மண்மிசை யிரண்டு மாயச் செருக்கர்
எனதுன தென்றே இறுமாந் துலகைப்
பங்கு போடப் பங்கம் விளைத்தே,
பொல்லாங் கறியாப் பொதுஜனங் களையே,
ஊனுங் கள்ளும் உயிர்க்கொலை வெறியும்,
ஏற்றிப் போரில் இழுத்து நிறுத்திப்
பிரங்கி வாயிற் பிணம்படச் செய்யும்
அதர்மக் கொடுமை அழியுநாள் என்றோ ?
அவரவர் உழைப்பால் அவரவர் பிழைத்தே,

அமைதியாய் வாழும் அந்தநாள் வருமோ ?
கொன்றேன் பிணங்களைக் குவித்தேன் மலைபோல்,
இன்னுமென் வாளின் இரத்தத் தாகம்
தீரா தின்றொரு போர்வினை வந்ததே.
இரக்கம் என்னை இடைமறிக் கின்றதே !
அரசும் ஆட்சியும் ஆணவத் திமிரும்,
போருந் தொல்லையும் பொய்யென விலக்கி,
ஞானங் கண்ட நன்முனி போலே
யானும் உலகை யெற்றி யெறிந்து,
மோனமாய்ச் சென்றோர் முழையிற் பதுங்கவோ ?
களத்தில் உடற்சுமை களைந்தினும் மீளா
வாழ்வை யெய்தவோ ? வகையறி யேனே !
நின்னுளஞ் சொல்லாய் என்னுயிர் அணங்கே !

கௌரி

பூமியி னுள்ளே பொங்கிடுஞ் சூடே
எரிமலை யாகப் பொரிவது போலே,
உடலுக் குள்ளே ஊறிய சூடே
காய்ச்ச லாகக் கழிவது போலே,
மனித வியல்பின் மாசுக ளெல்லாம்,
காமக் குரோதக் கசண்டுக ளெல்லாம்,
போராய்க் கிளம்பி வேருடன் போமே.
அறுத்துப் புண்ணை ஆற்றுவ தேபோல்,
வாளால் உலகின் வன்பிணி தன்னை,
பேரா சைதரும் பேய்மதக் காய்ச்சலை
ஆளைக் கெடுக்கும் அதரும நோயைக்
களத்திற் பொருதிக் களைவது கடனே !
பொறாமை யினியும் வாராது விலக்கிப்
பொய்ப்பே ராசை, புலன்கெடு காமம்,
ஆணவ மாயம் ஆகிய தீமைகள்,
அடியோ டொழிந்தே படிப்படி யாக
மாந்தர் நல்ல மாறுத லெய்தி
அன்பும் அறமும் ஆன்ம சுயேச்சையும்,
பண்புறப் பயின்றே பகைசினந் தவிர்த்தே,
ஓர்குல மாகப் பாரெலாம் வாழ்ந்தால்,
போரெனும் பேச்சே வாரா தொழியும்.
வெளிவே டங்களும் விதவித மதங்களும்,
மண்பொன் வெறியும், மனத்தின் விகாரமும்,
உள்ள மட்டிலும் உலகம் கலகமே !
மனிதர் ஐந்து வகைநிலை யுடையார்.

ஐம்புல னறிவால் அடைந்ததை நுகர்ந்து,
கல்வி யின்றிக் காட்டு விலங்குபோல்,
உண்டுடன் றுறங்கி உடற்கடன் முடித்தவர்
மானிட விலங்கென மதித்த லாகுமே.
கற்பன கற்றுக் கேட்பன கேட்டு,
மதிப்பொலி வுடனே மனைநலங் காத்துப்
பொருளைச் சேர்த்துப் பொதுநலஞ் செய்வார்
மானிட மனிதராய் மதிக்கப் பெறுவரே.
அறிவும் பலமும் திருவும் தியாகமுங்
கொண்டுல கிற்கே கொள்கையி னுதவி,
கலையும் வீரமுங் காட்டிப் புகழ்சேர்
செயற்கருஞ் செயல்கள் செய்யும் மனிதர்
வீர மனிதராய் விளங்குவர் தாமே. 1
அறிபவை யறிந்தே, அறிவிற் கறிவாம்
பொருளை யுளத்திற் பொலிவுறக் கண்டு,
அனைத்தும் அதுவென் றறிந்தன் புடனே,
அருட்சுடர் பரவும் அருந்தவ யோகிகள்—
பெரிய மனிதராய்ப் பெருமை பெறுவரே.
தீவிர யோக சித்தியி னாலே,
ஏழா தாரமும் எழிலுற மலர்த்தி,
துரிய நிலையில் சுகங்கண் டுள்ளே
பரம்பொருள் கூடிப் பண்புறப் பழுத்தே,
சச்சிதா னந்தந் தழைத்த சித்தரே
தேவ மனிதராய்ச் சிறப்புறு வாரே !
எதுதன் னுள்ளோ அதுவே பிரமம் ;
எல்லா ருள்ளும் இருப்பது பிரமம் ;
என்றறிந் தெவர்க்கும் இனிது நினைந்தே,
ஆருயிர்க் கெல்லாம் அமைதியே கோரி
நல்லது பேசி, நல்லது செய்து,
நன்மையே விளைத்து நாடும் உலகும்
தெய்வ நிலைபெறச் செந்நெறி காட்டுந்
தேவ மனிதரே பூவிற் சிறந்தோர்.
விலங்கு மனிதன் வீர மனிதனாய், 14
வீர மனிதன் வித்தக மனிதனாய்,
வித்தக மனிதன் தத்துவ மனிதனாய்த்
தத்துவ மனிதன் சுத்த சித்தியால்
மானிடத் தேவனாய் மாறிப் பிறந்தால்,
உள்ளிருந் தியற்கை உயர்ந்திறை கண்டால்,
உலகம் விண்ணென் றிலகுவ தாமே !

விலங்கு மனிதரால் விலங்குவாழ் வாகும்,
வீர மனிதரால் வீரவாழ் வாகும்,
தேவ மனிதரால், திவ்விய வாழ்வாம்.
அவ்வகை வாழ்வை ஆயிரம் யோகிகள்
நீண்ட தவத்தால் நிலைநாட்டி னுலே,
அருட்சுடர் பரவி, ஆத்தும சக்திக்
கதிரொளி விரிந்து புதுமை பெற்று
மானிடச் சாதி மாறிப் பிறக்குமே.
வானர சாட்சி மண்ணகத் தோங்குமே,
கலியின் கொடுமை நலித்துல கெல்லாம்
சத்திய யுகமே நித்திய மோங்குமே.
இப்பணிக் கேநாம் இருவரும் உரியமே.

சுந்தன்

சிறந்த உண்மையைச் செவ்வையாய்ச் சொன்னுய்.
கண்ணே ஞானக் கௌரியே, இந்தக் 160
கலியை ஒழித்துக் கடுந்தவம் புரிந்து
தேவ ஜாதியைத் திருவுற நாட்டும்
பணியே நமது பண்பும் பயனுமாம்.

கௌரி

வெய்ய கலியை வீழ்த்திடும் போரில்,
யானும் உன்னுடன் இணைபிரி யாமல்,
வாட்பணி புரிய வந்தது சமயம்.
கவசம் போலுனைக் காத்துநம் சித்தித்
துவசந் தன்னைத் தூக்கிப் பிடிப்பேன்.

சுந்தன்

கலையும் யோகமும் கற்றனை; யுனக்குத்
தெரியா வித்தை செகத்தினி லுண்டோ ?
எனினும் முன்பே இயம்பிய வாறே,
பெண்ணுக் குரிய மென்கட னுற்றிப்
போர்க்களம் புகாது பொறையுட னிருத்தலே,
உனக்கழ காகும் எனக்குநல் லுயிரே !

கௌரி

இருவர் உள்ளும் ஒருவரே என்னின்,
உன்போர் என்போர் உன்சயம் என்சயம்,
வீட்டிலும் வியன்பெறு நாட்டிலும் என்றும்
இணைபிரி யாமல் இருப்பதென் மகிழ்வே !
கடமை காக்கக் களத்திலுங் குதிப்பேன்.
பெண்ணெனப் படுபவள் பேதை யல்லள்.

உலக சரித்திரம் உரைக்கும் வீரப்
பெண்கள் கணக்கிலர் பேசிடக் கேளாய் :—
பிரிட்டனை உரோமர் பிடித்த போது,
சுதந்தரப் போர்செயத் துணிந்தவள் பொடீஸியா.
பிரான்ஸை ஆங்கிலர் பிடித்த போது,
அல்லிக் கொடியை ஆண்மையோ டேந்தி,
ஆர்லியன் போரில் அனலாய்க் கிளம்பிக்
கடுஞ்சமர் வென்ற கன்னிழாந் தார்க்கை
அறியாப் புலவர் அவனியில் உண்டோ ?
தசரதன் செய்த சம்பரப் போரில்
கைகொடுத் துதவினள் கைகசி யரசி.
பிருதிவி ராசன் பெருஞ்சமர் புரியத்
தானும் ஆணுடை தரித்துக் களத்தில்
கணவனைக் காக்கக் கடுஞ்சமர் புரிந்த
சம்யுக்தை யென்னும் சக்தியை அறிவீர்.
தாரா பாயின் சூர மறிவீர்,
திப்புசுல் தானின் சேனையை யெதிர்த்து
வென்றநல் அஞ்சிலி வீரமும் அறிவீர்.
கைக்குழந் தையுடன் களத்திற் பகைவரைப்
பொருது நலித்த புகழ்மணி இலக்குமி
காட்டிய தீரக் கதைகளை யறிவீர்.
ஆதலால் யானும் அமர்க்களம் புகுந்தே,
பக்க மிருந்து பகையை வீழ்த்தும்
ஆசையுங் கொண்டேன் ஆற்றலு முடையேன்.
எந்தை யெனக்குத் தந்த போர்க்கலை
பயன்பெற வந்தது நயமுறு வாய்ப்பே....
ஆமென ஓர்மொழி அன்புடன் வந்ததும்,
போரங்கி பூண்டு புறப்படு வேனே.

சுத்தன்

கண்ணே உனது கருத்தை நடத்தாய்.
ஆனால் கலிப்படை ஆத்திரத் துடனே
கொடுமை செய்யும். கொலைக்களந் தனிலே
எண்ணிலா உடல்களுள் என்னுயி ரான
உன்னுடல் கண்டால் உயிரெனக் குண்டோ ?

கௌரி

வரும்போம் உடலம் ; வரவுபோக் கற்றே
என்றும் உள்ளதே இருவரும் ஆவோம் ;
ஆயிரம் உடல்கள் ஆகும் அழியும் ;

ஆன்மா உண்மை ; அழிவிலாச் சக்தி.
அதுவே நானென் றறிந்தபின் எனக்குப்
பிறப்பு மில்லை இறப்பு மில்லையே.
மறப்பு மில்லை மயக்கு மில்லையே.
அட்டாங்க யோகம் அளித்த சித்தியால்,
இவ்வுடல் போயின் இன்னொ ருடலிற்
புகுந்தென் கடமை புரிந்திடு வேனே.
இச்சம ருடனே இகல் ஒடுங்காதே.
தோற்ற கலியுன் ஆற்றலை வளர்ப்பான்.
தானவத் தீவினைத் தாங்கும் அரக்கர்
மண்ணை வெல்லப் புண்ணீர் இறைப்பார்.
இந்தநாட் டிற்கும் வந்திடர் செய்வார்.
அந்தக் கதையெல்லாம் அறிந்த கதையே.
இந்தப் போரில் இவ்வுடல் போனால்,
அங்கே வாழும் அரக்கரை ஒடுக்கி
சுத்தசே வைக்கே சக்தியாய் வருவேன் ;
புத்துடல் தாங்கிப் பொலிவுற வருவேன்....
ஆதலால் என்னை அமைதியாய் ஏற்றுப்
போர்முனை செல்வீர் ஆருயிர் நீரே !

* * *

இப்படிக் கௌரி யியம்பிடும் போதே,
கேட்டது முரசம்; கோட்டையைக் கலியன்
வளைத்தான் என்று வந்தான் விசயன்...
உடனே சுத்தன் உருவிய வாளுடன்
"சென்று கலியை வென்றே வருவேன்
கண்ணே" யென்று கனிநகை பூத்துச்
சிங்கம் போலச் செருக்களங் கண்டான்.
உடனே கௌரியும் உடைகளை மாற்றி,
இளந்திரு வீரன் எனப்பிறர் நினைக்கக்
கணவனைக் காக்கக் கரந்துபின் சென்றாள்...
போரைக் காணப் போவோம் நாமுமே !

34. இறுதிப் படலம்

மண்ணு றங்கிய நிசியிலே, மல்லெனக் கேட்டுக்
கண்ணு றங்கிய வீரர்கள் கதுமென வெழுந்தே,
புண்ணு றங்கிய உடலினிற் போரணி பூண்டு
திண்ணு ரங்கொளத் தீட்டிய வாளுடன் செறிந்தார்.

காடு மேடெலாம் கனமெலாங் கார்வரை யெல்லாம்,
வீடு கொண்டுறைந் தொளிந்தனல் வீசிடும் பகையைச்
சூடு தைத்திடச் சூழலைக் குறிவைத்துச் சுட்டார் ;
ஓடி னார்சிலர் ஒல்லெனக் கிளர்ந்தனர் சிலரே !

முன்செல் சுத்தனின் மூரிவெஞ் சிலையினை யஞ்சிப்
பின்சென் றார்சிலர் ; பேயெனப் பெருங்கன லுமிழ்ந்து
வன்சமர் தொடுத் தார்சிலர்; வாய்மதங் கொண்டு,
புன்சொ லான்மனப் புண்விளைத் தார்சில புல்லோர் !

துஞ்சும் ஊரினைப் பிடித்திடத் துணிவுடன் எழுந்த
வஞ்ச கக்கலி யரக்கர்கள், வலியதோர் சேனை
வெஞ்ச மர்தொடுத் தெதிர்வெடி வீசிடக் கண்டே
அஞ்சி னார்; பிற ககந்தைகள் அரற்றிமுன் வந்தார் !

உருக்கி னால்உல காளுவோம். உயிர்பிழிந் துண்போம்.
செருக்கி னாலெமை எதிர்ப்பவர் சிரங்களைச் செகுப்போம் ;
பொருக் கெனச்சரண் புகுமினென் றிறைந்தனர் பொல்லார்.
"சருக்கு வீ"ரெனச் சிரித்ததோர் எதிரொலி தழைத்தே !

எங்க ரக்கரென் றிமைப்பறத் தேடிச்சென் றிறைவன்
அங்க ரக்கரை ஆணவ வெறிகெட அழித்தான்.
பொங்கு வெஞ்சினம் புகைந்திடப் போரெடுத் துற்றான்—
சிங்கத் தின்முனர் புலியெனச் செருமிகு கலியன் !

"அழிகவே கலி ! அறவினை வெல்கவே !" என்று
பொழியும் அம்புகள் பொய்துளை மனமெனக் கலக்க,
வழியும் வேர்வையுங் குருதியும் வசைகளு மாக
ஒழிந்தொ ளிந்தனன் ஒருமுறை ஓய்வறு கலியன் !

கேடு சூழ்ந்திடுங் கிளர்ச்சியிற் சிறந்தநங் கலியன்,
பிடி லாவழி சுத்தனைப் பிடித்திட முயன்றான்,
வாடு வேங்கைக்கும் வஞ்சக நரிக்குநள் ளிரவில்
ஓடு காலிக்கும் உளத்தினில் உறுதியொன் றுண்டோ ?

பாண்டி லுக்கிசை பதமெடுத் ததிர்நடை பயின்றே,
ஈண்டு வார்இரு புறத்திலும் எமனுடன் விதிபோல் ;
தீண்டு வார்பகைத் தியுடன் பகைவளர் தீயை ;
மூண்ட போரிடை முண்டுவார் பிண்டமாய் முடிப்பார் !

ஊனுங் கள்ளுடன் ஒருமயில் நாறிட உயிர்த்தே,
ஈன வெங்கலி இருட்படை எதிர்த்திடும் ஆங்கே ;
ஞானச் செங்கதிர் ஞாயிறு போன்றவன் கணையால்
போன திக்கறி யாமலே பொய்ப்பகை புகையும்.

இந்த வாறு நடக்கும் இகலினுல்,
வந்த காரியம் வாய்ந்திட லின்றியே,
சிந்தி ரத்தஞ் சிதறிடத் தன்படை
சிந்தை தேக்கிக் கலியுந் திகைத்தனன்...

காற்றிலே பதர் என்னக் கலியரைத்
தூற்றி முன்முன் துரத்தி வரும்படைக் (கு)
ஆற்றிலா னுடனே அமரின் முறை
மாற்றி னுெருை மாயம் புரியவே !

கற்ற திக்கணை யாவுங் கரிந்துகச்
செற்ற சித்தியின் வீர சிகாமணி,
சுற்றி நின்ற பகைவர் சுருக்கென
வற்றி ஓடி மறைவதைக் கண்டனன் !

வில்வி னையை விடுத்துக் கலியனும்,
வல்வி னையர் படையை மறைத்துத்தன்
மல்வி னையை மளக்கெனக் காட்டிப்பின்
கொல்வி னையைக் குறிக்க நினைத்தனன் !

அடு களத்தினுக் கஞ்சினர் போலவே,
தொடு கணையைச் சுருக்கி யரக்கர்கள்,
விடு விடென்று விரைந்திடக் கண்டதும்
சுடுசுடு வெனச் சுத்தன் துரத்தினுன்.... 60

தொடர்ந்து சென்ற துகளறு வீரனை
அடர்ந்த காட்டில் அரக்கர் வளைத்தனர் ;
இடர்கள் ஆயிரம் எய்தின சுற்றிலும்,
படர் துயரைப் பகழியின் மாற்றினுன்.

குழியிலே இலைப ரப்பிக் குஞ்சரம் பிடிக்குஞ் சூழ்ச்சி
வழியெலாஞ் செய்து வைத்து, மருந்துடன் கொடிப ரப்பிப்
பழிகொலைப் பதகர் தம்மைப் பதுங்கிடச் செய்த தர்மன்
அழிவுறத் தானும் ஆங்கே அடக்கமாய் மறைந்தான் மாதோ !

காட்டுடன் காடி தென்றே, காண்பசும் புதர டர்ந்த
மேட்டினிற் சுத்தன் வாசி மிதிக்கப்போம் போதோர் வீரன்,
ஓட்டிமுன் குதிரை தன்னை, "ஓவிது சூழ்ச்சி" யென்று
தீட்டிய கணைகள் விட்டுத் தியரை வெளியிட் டானே !

அக்கணங் குழியி னின்றே அதர்மனே எழுந்து நின்று,
வக்கிர தந்தங் காட்டி, வகையுடன் அம்பெ றிந்தான்..
அக்கணை தாக்கு முன்னே அருங்கலை யிளநல் வீரன்
மிக்கவெங் கணையால் அன்னேன், மேனிலைக் கேறச் செய்தான் !

அதர்மனைக் கொன்ற வீரன் அவனையே கொல்ல வேண்டிப்
புதர்மறை புல்ல ரெல்லாம், பொருகணை தொடுக்கத் தானும்,
எதிர்கணை முடிந்த மட்டும் ஏவிநம் இளைய சிங்கம்,
விதிவினை தீர்ந்த தென்று விழுந்துயிர் துடிது டித்தான் !

தனக்குறு நமனைச்செற்ற சத்திய வீரன் ஆங்கே,
தனிச்சமர் புரிந்து வீழ்ந்த தடத்தினுக் கேகிச் சுத்தன்
இனிப்பகை யரக்கர் வாரா திருபுறம் படை விரித்தே
குனிப்புற நோக்கி யந்த வீரனைக் குறித்தான் மாதோ !

ஆரந்த வீரன் என்றே அறிகுமுன் ஆவி துள்ளப்
பொரங்கி பூண்ட கௌரி புருடனை மகிழ்ந்து நோக்கி,
"தீரங்கொள் சேவை செய்து செல்கிறேன் ; வருவேன் மீண்டும்
பாரெங்கும் உனது சீர்த்தி பரப்ப"வென் றடங்கி னாளே !

பூதங்கள் அடங்கிப் பத்துப் பொறிபுல னடங்கி, நாடி
நாதங்கள் அடங்கி, அந்தக் கரணமு நனிய டங்கிப்
போதங்கொள் ஆன்மா தேக புரிவிடுத் தேகும் போது,
சோதியொன்றெழுந்து விண்ணிற் சுழன்றுடன் மறைந்ததம்மா !

ஆறுதல் கூறு முன்னே அதர்மனைக் கொன்ற கௌரி
மாறிலா நேயஞ் சொல்லி மறைந்ததைக் கண்டு நாதன்,
ஈறிலாத் துயர மெய்தி, இருகணீர் அருவி பாய்ச்சி,
மீறிய சோகத் தாலே விம்மினன் விதியை நொந்தான் !

எத்தனை அன்பு கொண்டாய் ! எத்தனை அறிவு சொன்னாய் !
எத்தனை யோக சக்தி ஈந்தெனை மகிழ வித்தாய் !...
உத்தம மனைவிக் குன்னின் உதாரண முண்டோ ? நல்ல
பத்தினித் தெய்வ மே,நான் பிழைத்திடப் பலியுமானாய்.

ஆரெனக் கானு முன்னே அபாயத்தை விலக்க வேண்டி
ஓரிளம் வீர னாக உருவினை மாற்றி வந்தே,
போர்கொடுத் ததர்மன் மார்பைப் போழ்ந்தொரு சுடுச ரத்தை
மார்பினில் ஏந்தி யிந்த மண்ணுடற் சுமையைத் தீர்த்தாய்.

என்னுர்க் குயிரே யானாய், என்விழி மணியே யானாய்,
இன்னுயிர்த் துணைவி யானாய், இறுதிமூச் செனக்கே யீந்தாய்,
மன்னுயி ருள்ள மட்டும் வானில முள்ள மட்டும்,
அன்னையின் அன்பு மிக்காய், ஆருனை மறப்பா ரீங்கே !

கண்டதுங் காதலித்தேன் ; காதலிற் கடவுள் கண்டேன்,
அண்டியுள் ளணைந்த போதுன் அருந்தவக் கனல ணைந்தேன்
விண்டநல் லுரையி லெல்லாம் விவேகத்தைப் பெற்றேன் ; சக்தி
கொண்டதோர்புனிதப் பெண்ணின் கோலமேயுன்னுட் கண்டேன்!

கன்னியர் கனியே, கற்பின் காட்சியே, கருணை வாழ்வே,
மின்னொளிச் சுடர்போல் வந்து விரத்தி யாகச் சென்றாய்..
முன்னிர வினிலே நன்று மொழிந்தவா றினிது மீண்டும்
உன்னை யான் அடைகு வேனோ வாய்திறந் துரைத்தி டாயோ ?

உயிர்க்கிளி பறந்தும், இன்னும் ஒளிதரு முகமென் பாசத்
துயர்முகம் பார்த்து, நல்ல துணிவுரை பேசு தம்மா !
பயிர்பழுத் துதிர்ந்து மீண்டும் பயிர்முளைப் பதுபோல், பானுன்
இயலுடல் இன்றொன் றேந்தி ஏகுவேன் என்கின் றாயால் !

ஆழ்ந்தநங் காதல் ஆன்மக் காதலே யன்றி, வாழ்ந்து
வீழ்ந்துமண் ணாகும் யாக்கை விளைத்திடு மோக மன்றே !
ஏழ்பிறப் பினிலும் உள்ளே இருவரும் பிரிவ துண்டோ ?
சூழ்சுக துக்க மில்லாத் தூயநல் லான்மா நாமே.

ஆதலால் அழுகை யின்றி, அகக்கண்ணீர் வார்த்துன் புண்ணில்,
போதரு கின்றேன்; பொல்லாப் புல்லரைக் குமைத்துன் சொல்லை
ஆதரிக் கின்றேன் ; வெற்றி யலங்கலைச் சூட்டு கின்றேன் ;
பூதரு மேனி யாளே பூமியில் உறங்கு கண்ணே !

காதலங் கனியை மெல்லக் கைம்மல ராலே யள்ளிக்
கோதறு மார்பிற் சேர்த்துக் குளிர்கணீ ராட்டி யாங்கே,
மாதரின் சிகிச்சை வண்டி யேற்றிநன் மனையி லுய்த்து,
மோதிய பகைக்கு லத்தை முடித்திட முனைந்தான் மன்னே!

35. வெற்றிப் படலம்

விருப்புடன் வெறுப்பும் போல விளக்குடன் இருளும் போல,
நெருப்புடன் காற்றும் போல, நினைவுடன் மறதி போலே ,
உருப்பெயர் தாங்கி நிற்கும், உள்விகா ரங்கள், ஆங்கே
செருக்களம் புகுந்து போர்கள் செய்வதைக் காணு வோமால்.

“சித்திமான் சிரத்தை வாங்கி உன்னையும் சிறைப்பி டித்துப்
பத்தியா சார மென்னும் பையித்தியம் பிடித்தார் வைகும்
சித்தியிற் கொடியை நாட்டிச் செய்கிறேன் ஆட்சி” யென்றே
பித்துறு கலிய னின்னும் பெருஞ்சமர் தொடுத்தா னம்மா !

இலங்கைப்போர், பாரதப்போர், திரிபுர மெரித்த வெம்போர்,
கலங்கறு பாணன் செய்போர், கந்தவேள் புரிந்த போர்கள்,
இலங்குசி வாஜி சிங்கன் இருவரும் செய்த போரும்
விலங்கறு குடும்பப் போரும் வெட்குமிப் போர்முன் அம்மா !

அறங்கெடு மரக்கர் சேனை யனைத்தையுங் கொண்டு வந்து,
மறங்கெழு போரி லூக்கி வாளுடன் வலையும் வீசி,
அறங்கெழு சித்தி சேனை யனைத்தையும் அழிக்க, வெய்யோன்
புறங்கொடா வீரர் மீது பொழிந்தனன் குண்டு மாரி—

குண்டிற்குக் குண்டு விட்டுக் குத்திற்குக் குத்து விட்டு,
மண்டைக்கு மண்டை பேர்த்து, வலக்கைக்கு வலக்கை வாங்கி,
சண்டைக்குச் சண்டை யிந்து சரிசம ளுக நிற்கக்
கண்டுதன் கைகள் மிஞ்சிக் கலியனுங் கனன்று வந்தான்...

விரைந்துறுந் தேர்களோடு விரைந்துறுந் தேர்கள் மோதப்
பறந்துறும் புரவி யோடு பறந்துறும் புரவி மோதக்
கரந்துறும் படைக ளோடு கரந்துறும் படைகள் மோதச்
சுரந்திடுங் குருதி நீந்தித் தூயனுங் கலியைக் கண்டான் !

ஆர்த்தனன் இடிகுரல் ; ஆத்தி ரத்தினல்,
வேர்த்தனன், விதிர்த்தனன் ; "வெட்டு வே" னெனப்
பார்த்தனன் சுத்தனைப் பதகன் வெஞ்சினந்
தீர்த்திடப் பாய்ந்தனன் திக்கனை யுடன் !

"உனதற மிலையினி உலக மெங்குமே
எனதறம் பரவு"மென் றிடிமு ழக்கினன்,
இனிதெனச் சுத்தனும் ஈட்டி கொண்டவன்
வினையுடல் அகந்தையை விண்டு வீழ்த்தினன்....

"தொகைமிகப் பெற்றுமென் ? சுடு சரங்களை
மிகமிக விட்டுமென் ? வீரங் கூறியென் ?
அகமக மென்றெழும் அதர்மம் பாழ்படும் ;
நிகழறம் வென்றிடும்" என்று செப்பினன் !

நெருங்கினர் நெட்டினர் ; நெடும் படைக்கலம்
நொருங்கிடப் பிதுங்கிட நொய்ய ஊனுடல்
சரங்களும் வெடிகளுஞ் சடசடத்திடச்
சிரங்களுங் கரங்களுஞ் சிதையப் போர்செய்தார் !

கொழுகொழு கொழுவெனக் கொழுத்த குண்டர்கள்,
புழுதியில் உருண்டிடப் புரட்டி, நாய்நரி
கழுதுகள் உண்டிடக் கலியுங் கண்டனன்..
அழுதனன் இன்னமும் அமர்தொ டுத்தனன் !

மின்றிரள் வெட்டினவோ வொளிர் வாட்கணம்
வீசி மிளிர்ந்தனவோ ?
வன்மழை மூடியதோ மத யானைகள்
மண்ணை விழுங்கினவோ ?

வெண்சுடர் மங்கியதோ வெடி யின்புகை
    விண்ணை மறைத்ததுவோ ?
கண்ணறு போர்விளைவோ, கனல் வாட்டிய
    காலன் விருந்துகளோ ?

செம்மலர் தூவியதோ துருவித்தசை
    சிந்தி விரிந்ததுவோ ?
கைம்மலை யின்றொடரோ, கறையாறு
    கனன்று செலுங் கரையோ ?
வெம்மன ரின்சிரமோ வரையின்முடி
    விண்டு குவிந்தனவோ ?
மண்மகள் மூடினளோவிழி விண்ணுறு
    மண்டமர் வாய்த் துகளோ !

மாரி பொழிந்ததுவோ சுடு வெஞ்சர
    மாரி பொழிந்ததுவோ ?
போருயிர் வெம்புகையோ நமனின்கரும்
    போர்வைகளின் சுருளோ !
கார்புயல் சாய் மரமோ சமர்வேகங்
    கவிழ்க்கும் உடற் குவையோ !
வீரர் முரசொலியோ, தருமஞ் செயும்
    வெற்றி முரசொலியோ !

செம்மலர் மேனி பூத்துச் சிதைந்துதன் படைக ளெல்லாம்
தம்மிடந் தெரியா தோடித் தட்டழிந் துலைந்த தாலே,
விம்மிய மமதை முற்றும் வெற்றுநீ ராவி யாகி,
அம்மவென் றயர்ந்து கையில் அகப்பட்டான் கலிய னங்கே !

கலி

"ஐயநின் னாற்றல் முற்றும் அறிந்துன தடிப ணிந்தேன்,
செய்யவர் உறையு மிந்தச் சித்தியின் பக்கம் வாரேன் !
உய்யநான் விடுதி" யென்றே ஓலமிட் டவனைத் தூயன்,
மெய்யுரை யிதுவென்றாலுன் விடுதலை பெறுதியென்றான்..

ஆருயிர் உலகிற் கெல்லாம் அறந்தவிர் கேடு சூழாப்
பேருயர் உறுதி வாங்கிப் பெரியமன் னிப்பைத் தந்து,
சோருயிர் தாங்கி நிற்குங் கலியனைத் தூய மன்னன்,
வேருடன் அழித்தி டாமல், விடுதலை செய்தான் மாதோ ?

வாயினால் உறுதி சொல்லி, வஞ்சத்தை நெஞ்சில் வைத்தே,
போயினன் கலியன்.இன்னும்பொருபடைகொணர்வோமென்றே!
வாயிலை யணுகும் போதே சத்தியன் வயத்தி லேதன்
கோயிலும் ஊருங் காணக் கொதித்துளம் பதைத்து நின்றான் ;

காலடி வைத்த போதே கைதிநீ என்று வீரர்
வேலோடு நடத்தி யாங்கே வெஞ்சிறை யடைத்து விட்டார் ;
வாலிழந் தநரி யிட்ட நரியென வஞ்சன், வெற்றிக்
கோலதிர் முரசங் கேட்டுக் கூகுவென் றழுது சோர்ந்தான் !

முதியநல் லிளைஞ ருள சத்தியன் அறிவின் மிக்கான்,
கதிமிகு சேனை கொண்டு, காட்டினின் றெழுந்து வந்தே,
கொதிகொளுங் கலியன் மூலக் கொடும்படை சித்தி நோக்கிக்
குதிகொளச் செல்லுமப்போ கோட்டையைவளைத்துக்கொண்டான்!

கலியனூர் வைத்த வெய்ய காவலின் படைக ளெல்லாம்
எலியனூர் போற்ப துங்கி எங்கெங்கோ சிதறி யோடப்
புலியனூர் போலச் சீறிப் புடைத்ததத மாக்கி நம்மின்
வலியனூர் என்றரக்கர் வணங்கிடச் செய்தான் மெய்யன்.

மன்னனுக் காசைப்பட்டு மனாளனை யிழந்தாள் போலே,
இன்னொரு நாட்டை வேட்டே யிருப்பதைத் தோற்ற மூடன்
கன்மன வகந்தை யின்னுங் கரைந்திலான் சாம்பற் பூத்த
வன்னெருப் பென்ன வுள்ளே வஞ்சகச் சூழ்ச்சி செய்தான்.

சிறையினின் றுடனே தப்பித் தானவஞ் செல்ல நோக்கி
மறைமுக மாகச் சூழ்ச்சி வகையுறச் செய்தோர் நாளில்,
கறையிருள் உலகை முற்றுங் கௌவிய நிசியில் ஆங்கே
உறைமன மோகி பின்னே உருக்கரந் தோடினனே !

வந்தொரு விமான மாங்கே வாரிச்சென் றிருவர் தம்மை
விந்தையாய் மறைந்த மாற்றம் ஒற்றரும் விளம்பக் கேட்டே,
முந்துதன் னிடத்தி னுக்கோர் முதியகா வலனை நாட்டி,
மைந்தனுக் கோலை விட்டு, வாய்மையன் புறப்பட் டானே !

"காவலைக் கடந்த மோகி—கலியர் விமான மேறி
நாவலந் தீவைத் தாண்டி நாத்திகத் தான வர்கள்
மேவிடுந் தீவைச் சேர விரைந்தனர் ; யானு மாங்கே
போவது கடனே; நல்ல புண்ணிய ஒளிகொண்" டென்றான்.

"பஞ்சர வுடலில் ஆன்மா பற்றற வாழு மட்டும்,
அஞ்சுவ தொன்று மில்லை, அருட்பணி நன்று செய்தே
துஞ்சுறு யாக்கைச் சட்டை துஞ்சுக மனந்து ணிந்தே
வஞ்சகர் திருந்தச் சொல்வேன் வாய்மை" யென் றெழுந்தான்
வல்லோன் !

உடலினும் உள்ளம் மேலாம் ; உளத்தினும் உயிரே மேலாம் ;
உடலுயிர் தன்னின் ஆன்மா உயர்வுல கதனின் மேலாம்,
கடவுளே உலகிற் கெல்லாம் காவல னுயின், அன்னோன்
கடமைசெய் திறமு மீவான் கவலையேன் என்றெ ழுந்தான்!

இளவலைக் கெடுத்த தீயர் இரகசி யங்க ளெல்லாம்
களவுறு சூழ்ச்சி யெல்லாங் கலிநகர்ப் பிடித்த போதே
உளவுறக் கண்டு கொண்ட உண்மையன் கப்ப லேறி
மளமள வென்று சென்று மரகதத் தீவிற் புக்கான்......

சத்தியன் செய்தி யெல்லாந் தானவ காண்டம் சொல்லும்,
சுத்தனின் செய்தி காணச் சுதந்தர மன வேகத்திற்
சித்திமா நகரஞ் செல்வோம்..செயமுர சொலியைக் கேட்போம்;
வித்தக நல்லீர் என்பின் விருப்புடன் வருகு வீரே ! 128

36. கௌரி விலாசப் படலம்

உண்மைக்கு வெற்றி, கற்பின் உறுதிக்கு வெற்றி, தூய
பெண்மைக்கு வெற்றி, மாந்தர் பிறவிக்கு வெற்றி, தெய்வத்
தன்மைக்கு வெற்றி, ஆன்ற தருமத்திற் கினிய வெற்றி,
நன்மைக்கு வெற்றி யென்றே நகரெலாம் இசைத்த தம்மா !

கன்னியர் ஆடல் பாடல், காளையர் வீர வேலை,
நன்மனை தோறு நல்கு நாவுடன் செவி விருந்து,
'மன்னவன் வாழி' யென்னு மந்திர நாத மெங்கும்—!
பொன்னகர் கலையின் போக நகரெனப் பொலிந்த தம்மா !

அத்தனை அரக்கர் சேனை நீறுபட் டழியச் செய்த
சுத்தனின் வீரந் தன்னைச் சுதந்தரக் கவிகள் சொல்வார்,
பத்தினி கௌரி தியாக பலியினைப் புகழ்வார்; ஆங்கே
சத்தியக் கிழவன் பெற்ற வெற்றியைச் சாற்று வாரே !

ஒழிந்தனன் கலியன் என்பார், ஓங்கிய தறமே யென்பார்,
அழிந்தது தீமை யென்பார் ; அரசனின் ஆண்மை யாலே
கழிந்தது கவலை யென்பார் ; கடுஞ்சமர் தீர்ந்த தென்பார்;
பொழிந்தது சாந்த மென்பார் பொன்னக ருள்ள நல்லோர் !

சத்திய சுத்தர் வென்று தருமத்தை நாட்டு நன்னாள்,
புத்துயிர் பெற்ற சாந்தப் புதியநாள், பொலிக வென்றே,
அத்திரு நகர மாக்கள் அரசனின் ஆணை யாலே,
ஒத்தொரு பந்தலின் கீழ் உவகைகொண் டாடி னரே ! 20

பத்தினி யாக்கை தன்னைப் பன்மல ரணிகள் செய்து,
சித்தியின் புறத்தே அன்னாள் தேசத்திற் குயிர் கொடுத்த
உத்தமத் தானந் தன்னில் உறுகடன் செய்து வைத்த
அத்தகு சூழ லின்று விழாவினுக் கமைந்த தம்மா !

மயனுக்கே நிகராம் சிற்பப் புலவர்கள் வகுத்து, நல்ல
நயமுறு கலை விளங்க நாட்டிய பந்த லின்கீழ்,
சயமுறு வேந்தன் ஆசான் மந்திரி சபையோர் வீரர்,
இயல்புடை இல்லறத்தார் அனைவரும் இலகி னாரே !

கலைதரு புலவர் தந்த கண்-செவி விருந்திற் கப்பால்,
மலையெனத் திண்டோள் பெற்ற மல்லரின் வேலைக் கப்பால்,
விலையிலா உயிரைத் தந்து வெற்றிக்குத் துணைபு ரிந்த
நிலைபெறு பத்தி னிக்கு நினைவுகொண் டாடி னாரே !

பத்தினி பெயரால் ஆங்கே பல்கலைக் கழகங் காணச்
சுந்தனார் முடிவு செய்யத் தொல்பெரும் அமைச்சர் மெச்ச,
உத்தமப் பணிக்கந் நாளே உரியதோர் கிரியை யோடும்
அத்திவா ரத்தை நாட்டக் கணவனே அமைந்து நின்றான்..

சுந்தன்

என்னரும் குடிகாள், வெற்றி யெய்தினோம் கலியை வீழ்த்தி
என்றும்போ தென்முன் வீரர் இரத்தமே காண்ப தாமே !
நன்னரும் உயிரைத் தந்து, தருமத்தைக் காத்த வீரர்
பொன்னெழுத் தாலே யிங்கு பொலிகநற் புகழி னோங்கி !

நாட்டினுக் குயிர் கொடுத்த நல்லிசை வீரர் வாழ்ந்த,
வீட்டினுக் குதவி செய்தோம், வியன்புகழ் பெற்று வாழும்
வாட்டமில் வீர ருக்குப் பரிசுகள் வழங்கி விட்டோம் ;
மீட்டுமோர் வீரப் பெண்ணின் அருமையை விளம்பு வோமால்..

நொடிக்கொரு மாற்ற மெய்தும் உலகிலே நூறாண் டென்பார்.
சடக்கென முறிந்து விழுங் கொம்பெனச் சாவார் கோடி,
நடுக்குறும் அரக்கர் போரில் நாதனைக் காக்க வேண்டி
இடுக்கணைத் தீர்த்தி றந்தாள் இளங்கொடி யிவளே யம்மா !

நாயகன் அன்பு மிக்காள் ; நன்மனைத் திருவே யன்னாள்,
தூயகற் பரசி ; யோக சித்தினி சுத்த கௌரி,
தேயத்தை உயர்த்த நல்ல சிந்தனை செய்து சொல்லும்
நேயத்திற் பெரியாள் ; என்னை நினைவிலும் பிரிந்தி டாதாள் !

கலகமில் லாது, நெஞ்சக் கவலையில் லாது, மாய
வலைகளில் லாது, தீய வறுமையில் லாது, வெய்ய
நோய்களில் லாது, மாந்தர் குலமொன்றாய் வாழ வேண்டி
உலகெலாம் தொண்டு செய்ய ஊக்கினாள் உயிரே யன்னாள் !

அன்றுநீள் இரவில் என்பால் அன்புடன் கொஞ்சிக் கொஞ்சி,
"இன்றுல கின்னல் மாற, மனிதரின் இதய மாற்றம்
ஒன்றுதல் வழியென் று"எவ் வுத்தமி சொன்ன தெல்லாம்,
இன்றுநான் செயலிற் காட்ட முயலுவேன் இனிது நல்லீர் !

"அவஞ்செயும் அசுர மாயம் அறிவினுற் புலன டக்கித்
தவஞ்செயும் சக்தி யாலே தகருமென் றுலக மெல்லாம்
நவஞ்செயு தெய்வ வாழ்வை நாட்டிட வேண்டு" மென்றும்
பவஞ்செயும் பந்த மில்லாப் பத்தினி யுரைத்தா ளம்மா !

ஆங்கரித் தனலை வீசி ஆவியைப் பருக நோக்கி
ஈங்கொளிந் திருந்தான் பேய்போல் அதருமன் எனும் அரக்கன்
ஆங்கவன் சூழ்ச்சி தன்னை அறிந்தவன் ஆவி யுண்டாள் ;
ஓங்கிய உயிரைத் தந்தென் னுயிரினைக் காத்தாள் எந்தாய் !

அத்தகை யன்பு காட்டி அளவறுந் தவங்க ளாற்றி
மெத்தவும் உலகுக் கெல்லாம் விரும்பிய நலமே நாடும்
உத்தமி கௌரி யாவாள் ; உணர்ந்திடா ரிதனை யுண்டோ ?
இத்தகு புனித ருக்கும் இறப்பெனு மறப்பு முண்டோ ?

நாட்டுவோம் சுத்த கௌரி நாமமெந் நாளும் வாழப்
பாட்டொடுந் தொழில்கள் ஓங்கும் பல்கலைக் கழக மிங்கே !
ஓட்டுவோம் இருளை, ஞான ஒளியினைப் பரப்பி, யெங்குங்
காட்டுவோம் பொதுஜ னங்காள், கல்வியின் பெருமை யெல்லாம்!

இத்தகு மொழிகள் பேசி இளகிநெஞ் சுருகி மன்னன்,
அத்திவா ரத்தை நாட்டும் அவ்வையின் மக்க ளெல்லாம்,
"உத்தம சுத்த-கௌரி வாழ்"கென உவகை சொன்னூர்—
மத்தளம் வீணை வேணு மங்கல நாதஞ் செய்ய !

சிந்தனை செய்து சற்றே சித்திபன் இருக்கு மெல்லை,
வந்தது தந்தை ஓலை; வரிவரி படித்த றிந்து,
மந்திரி தனைக்க லந்து, மாசபை தனிலெ ழுந்து,
முந்துரை நடந்த பின்பு முடிவுரை மைந்தன் சொன்னுன்..

சுந்தன் பேச்சு

செயங்கொண் டாடும் சித்திமா சபையீர்,
இங்கும் வெற்றி அங்கும் வெற்றியே...
மூலப லத்தை முந்தியிங் கனுப்பிக்
கலியன் சித்தியைக் கவிழ்க்கவந் ததுவும்,
அங்கே எந்தை அரியெனப் பாய்ந்து,
கலிநகர் தன்னைக் கைப்பற் றினரே.
பற்றிய நகரிற் பற்றலர் சூழ்ச்சி
முற்றிலும் அறிந்தார். மூடக் கலியை
ஆட்டி வைக்கும் அரக்கர் திறமையும்,
தந்திர மான இயந்திரக் கலையும்,
ஆயுதக் கலையும் ஆராய்ந் தறிந்தார்.
இங்கிருந் தோட்டம் எடுத்த கலியன்,

அங்கே கைதியாய் அடைபட் டானே.
காவலைத் தப்பிக் கலியனும் மோகியும்
தானவர் விமானந் தன்னிலே சென்ருர்...
சென்றுத் தானவன் தீவிலே யுள்ள
அசுரப் படைகளை அழைத்துவந் திங்கே
நாட்டைப் பிடித்து நாசஞ் செய்தலே
கலியன் கருத்தெனக் கண்டநந் தந்தை
துட்டரைத் தாமே துரத்திச் சென்ருர்...
தீயரைச் சாமளத் தீவிற் செகுப்பார்.
இன்றேல் தானவம் ஏகியாங் குறையும்
அரக்கரைத் திருத்தும் அருட்பணி பூண்பார்.
மூதிளந் தந்தை முயன்றதை முடித்தே
போதரு வாரெனப் புகல்வது சாலும் !
அருமைக் குடிகாள், அன்புச் செல்வர்காள்,
இரத்தஞ் சிந்தி இன்றுநான் பெற்ற
செயமொரு செயமிலை ; சித்திமா நகரைக்
காத்தோம், அந்தக் கடமையே வெற்றி.
கலியன் மூட்டிய கடும்பகைத் தீயும்,
நாத்திக உணர்வும் ஆத்திரப் புகையும்,
ஆங்காங் கின்னும் அணைந்தபா டில்லை.
இத்ததி தானவம் ஏகிய கலியன்
அரக்கரைத் தூண்டி அமர்க்களஞ் செய்து,
புண்ணிய நாட்டைப் புல்லிய சூதால்,
பற்றிக் கொண்டு பழிமிகச் செய்வான்.....
உலகெலாந் தானவர் உயிர்வதை செய்து,
மறக்கொடி நாட்டி மக்களை வருத்துவார்...
இந்தக் காட்சியை எண்ணும் போதே
மனந்துடிக் கின்றது ; மாதவ சக்தியே
அறமும் அமைதியும் அளிக்க வல்லதாம் ;
பாரத சக்தியாம் பாவன சக்தி—
அதனை வளரெனும் அழைப்பும் வந்ததே
அரக்கரைத் திருத்தும் அருட்சோதி சக்தியை
அடைந்து பரப்பும் அதுவே கடனும்.
அதிற்கருத் தூன்றுமுன் ஆட்சி முறையைப்
பொதுநல மோங்கப் புதுக்குவோம் யாமே.
இன்று முதலே இந்தநந் நாட்டில்
சனசம் மதமே செங்கோல் பிடிக்கும்.
எனது கருத்திதென் றியம்பியெல் லார்க்கும்
மங்கலங் கூறி மாசபை முடித்தேன்....
பாரெலாம் வாழ்க பாரத சக்தியே !

சபையோர்

நித்தியத் தருமம் வாழ்க ! நிருபனு யிருந்து காக்கும்
சுத்தனெந் தலைவன் வாழ்க ! சுதந்தர வீர சக்தி
பத்தினி கௌரி வாழ்க ! பதகரைத் திருத்தச் செல்லும்
சத்தியன் வாழ்க ! வென்றே சபையினர் எழுந்தா ரம்மா ! 140

கற்பினுக் கரசி, நாட்டைக் காத்தநல் லரசி, வீர
மற்பொரு மரசி யின்பேர் மாண்புற வேண்டி யாங்கே,
சிற்பசித் திரநற் செல்வர் தினந்தினம் உருவ மைத்தே
அற்புத மான கௌரி விலாசத்தை அமைத்தார் மாதோ !

கல்வியும் கலையும் வீரக் கனலுடன் வளர்த்தவ் வீட்டில்
எல்லையிற் பயன்கள் எய்தி இருவகுப் பாரும் கௌரி
நல்கிய உதார ணத்தை நாடியா வேசங் கொண்டு,
"தொல்லறஞ் செழிக்க வாழ்வைத் துலக்குவோம்" என்று
சொல்வார்.... 148

பாரத சக்தி,
இரண்டாவது கௌரி காண்டம்
முற்றிற்று

பாரத சக்தி மகா காவியம்

மூன்றாவது

சாதன காண்டம்

(கதைக் குறிப்பு)

சுத்தன் உலகியல்பையும், கால மாறுதலையும், வருங்காலத்தையும், மாந்தர்க்கு இன்ப வழியையும் சிந்திக்கிறான். சாந்த முனிவர் தோன்றி "துறவுக்கு நேரம் இது; செல்முன்; வழி துலங்கும்" என்று மறைகிறார். சுத்தன் இந்திரை, சித்திமான், பாரதமணி, விஜயன் முதலியோர் சேர்ந்த ஒரு சபை யமைத்து, பிரதிநிதிகளுக்கு அதிகாரமளித்து, ஒரு அரசியல் சாத்திரம் வகுத்தளித்துப் பிறகு, தான் சித்தியைத் துறக்கும் அவசியத்தை விளக்குகிறான். தாயும் சித்திமானும் தடுக்கின்றனர். சுத்தன் தவம்புரிவோருக்கே இன்பம் என்கிறான். பகைவர், சுத்தனுக்குப் பித்தும் பிடித்ததாகக் கேலி செய்கின்றனர். உற்றார் சுத்தனை ஒரு வனத்தில் அழகான பெண்களும் சுகபோகங்களும் சூழ வைத்து, ஆசை காட்டுகின்றனர். காவல் பலமாகிறது. சுத்தன் ஒருநாள் இரவில் அரசுடைகளைக் களைந்து உழவன் போல வேடம் பூண்டு தப்பிச் செல்கிறான். ஞானத்தாகங்கொண்டு சுத்தன் எல்லா மதங்களையும் புகுந்து அனுபவித்து ஆராய்கிறான். சாருவாகபுரி, சாக்தபுரி, பௌத்தபுரி, ஜைனபுரி, யூதபுரி, அக்னிபுரி, கிறிஸ்துபுரி, முஹம்மதுபுரி, வேதபுரி, சிவகிரி முதலிய இடங்களில் பல மதங்களை ஆராய்ந்து பார்த்து யோகபுரிக்கு வருகிறான். அங்கே யோகானந்தரிடம் பல சாதனங்களைச் செய்கிறான். அச்சமயம் **சாந்த முனிவர்** தோன்றி சுத்தனைத் தன்னுடன் அழைத்துச் செல்லுகிறார். இருவரும் இமாலயத்தில் ஏறிச்சென்று கைலையை வணங்கி, அகத்தியர் தவம் புரிந்த இடத்திற்கு வருகின்றனர். அதுதான் சித்திநகரிலிருந்து சென்ற சாதுக்கள் யோகம்புரியும் இடம். சாந்த முனிவர் சுத்தனைத் தம் யோக சங்கத்திற்குத் தலைவனாக்குகிறார். சுத்தன் தீவிரமான சாதனங்கள் செய்து சக்தி பெற்று, சுத்த நிலையத்தில் முதன்முதல் தனது அனுபூதி ஞானத்தைச் செயலாக்கி ஒரு **தேவ ஜாதியைச்** சிருஷ்டிக்கிறான்... இச்சமயம் பாரத முனிவர் சுத்தனைத் தேடிக்கொண்டு சில சாதுக்களுடனே வருகின்றனர். அவரிடம் சுத்தன் உலக நிலையை விரிவாக அறிகிறான். உலகை இப்போது தானவர் ஆளுவதாயும், மனிதசமுதாயம் அசுரரிடமிருந்து விடுதலைபெற முடியாது தத்தளிக்கிறதென்றும் சொல்லுகிறார்...அவர் சொன்ன கதையே **தானவ காண்டமாக** வரும்.

பாரத சக்தி மகா காவியம்

மூன்றுவது

சாதன காண்டம்

காப்பு

சீலத்தால், அறிவால், அன்புத் திறத்தினுல், பணியா லுன்னே
ஞாலத்தார் உணர்ந்து போற்றி நற்கதி யடைய வேண்டி,
காலத்தால் அழியாச் செஞ்சொற் கவிதையா யென்னுட் பேசாய்!
பாலொத்த மேனி கொண்ட பாரத சக்தி தாயே !

மேதகு சுத்த னிந்த மேதினிக் கின்ப மெய்தத்
தீதறு நல்லோர் கையிற் சித்தியை விடுத்துச் சென்று,
வேதங்கள் ஆய்ந்து நீண்ட விரதங்கள் புரிந்த, ஞான
சாதன காண்டஞ் சொல்லச் சதாசிவ சக்தி காப்பே !

1. கருணைப் படலம்

உலக ளாவிய உளத்தினன், கருணையே உருவோன்,
பலகொ டுந்துயர் விளைத்திடும் பகைசினப் போர்கள்,
விலகி மாந்தர்கள் வேறுபா டற்றொரு குலமாய்
இலகு நல்வழி யருள்கென இறைவனைத் துதித்தான் !

மன்னு மாநிலக் கோயிலின் மன்னவா போற்றி !
என்னு யிர்க்குயி ராகிடும் என்னவா போற்றி !
தன்னின் ஒப்புயர் வற்ற தயாபரா போற்றி !
உன்னையே சரண் புகுந்தனன் ஒருவனே போற்றி !

அன்ற சோகனுங் கலிங்கத்தின் அமர்க்கள முடித்துக்
கொன்ற கத்தியின் கொடுமையை முனிந்தது போலே,
இன்ற மர்க்களம் வெறுத்தனன். இரக்கமேற் கொண்டேன்...
மன்று ளாடிடும் அப்பனே, ஆனந்த மருந்தே !

சுத்த னேபரஞ் சோதியே துரியமா முடிமேல்,
வைத்த பேரின்ப மருந்தென வளர்ந்திடும் சிவமே !
ஒத்து யிர்க்குலத் தொகுதியை யாக்கையென் றுடையாய் !
சத்தி யாலுல காண்டிடுஞ் சாட்சியே போற்றி !

கள்ள மாயப்பொ ருமையுங் காமமுஞ் சூதும்,
துள்ளு மாணவ வெறிகளும் ஆசையுந் தூண்டும்,
சள்ளை யாகிய சங்கடப் போர்களைச் சகியேன் !
உள்ள வாறுயிர் உனையறிந் துய்யுமா றுளதோ ?

மன்மை யந்தனில் ஒருமய மாம்பசு பதியே,
நின்மை யானந்த வெள்ளமே, சிதம்பர ஒளியே,
உன்மை யப்பெறும் உயிர்க்குலம் உன்னருட் சுடராந்
தன்மை போங்கிடத் தயைபுரி, சத்திய வடிவே !

மணி மலர்களுந், தென்றலு, மலைநதி, வளமும்
உணவி யற்கையி னுதவிடுங் கனிமரக் காடும்,
நணிநி றைந்தநற் குரவருங் குலவிடுங் கோயில்
பிணம லைகளும் இரத்தமும் பெருகிட லாமோ ?

மண்பு ழுங்கிடும் பாரிலே பரிதபித் துயிர்கள்,
கண்க லங்கியுன் கருணைக்கே கதறுவ காணுய் !
எண்க லங்கிடும் வினைகளை இருந்தவா றியற்றும்,
விண்க திர்மணி யேமன வேதனை திராய் !

சீல மோங்கிய முனிவரர் சிறந்தநன் னுடு,
ஞால மோங்கிய ஞானத்தை நவின்றநன் னுடு,
கால மோங்கிய நயமெலாங் கண்டபொன் னுடு,
சால மோங்கிய சழக்கரால் அழிதலுந் தகவோ !

வீட்டி னின்பமும் விழுமிய பொருளுடன் அறமும்,
காட்டு மன்பதை கதிபெற நடத்திடு நாட்டில்,
வாட்டி யாருயிர் வதைத்திடுங் கலியினுக் ககந்தை
ஊட்டிப் போர்வினைத் துருமிடும் வெறியினை ஒடுக்காய் !

இரும்பு நெஞ்சினர் இழைத்திடும் இருள்வினை யொழிந்தே,
அரும்பும் அன்பருள் அறிவுடன் ஆன்மநே யத்திற்
கரும்பு டன்ரசம் போலவே கலந்துடன் வாழ,
விரும்பு நல்வரம் வேண்டினேன் ; ஆண்டவா சரணம் !

கடவுள் ஒன்றென உயிர்க்குலங் கருதிட வேண்டும்.
உடலெ லாமதன் கோயிலென் றுணர்ந்திட வேண்டும்.
இடம கல்உல கதன்மயம் என்றிட வேண்டும்.
கடமை காத்திட வேண்டுமுன் கருணையி னுலே !

அன்னை யன்புடன், ஆணவச் செருக்கிலா மதியும்,
உன்னை யுட்புறங் கலந்துயிர் வாழ்ந்திடும் உறவும்,
மன்னு யிர்களைத் தன்னுயி ரெனமதி மாண்பும்,
என்னு யிர்க்குட லாகிய உயிர்களுக் கீவாய் !

எம்ம தத்திற்குஞ் சம்மத மாகிடும் இறைவா,
அம்மை யப்பநின் ஒப்பிலாக் கருணையின் அமுதால்,
இம்மை யம்மையின் இன்பமும் எட்டுசித் திகளும்,
செம்மை யாகிய செயல்களும் செழித்திட வேண்டும்.

இறப்பின் அச்சமும், இருவினை யச்சமும், உலகிற்
பிறப்பின் அச்சமும், பிணிகளின் அச்சமும், விலகி,
மறப்பி லாதுனை மனதுற மேவியன் பினிலே
சிறப்புடன் செழித் திடுகவிச் செகத்தின ரெல்லாம் !

திர மாகிய உள்ளமும், தெளிந்தநன் மதியும்,
வீர மாகிய செயல்களும், விழுமிய நினைவும்,
சார மாகிய செஞ்சொலுஞ் சத்திய வாழ்வும்,
பாரி லோங்கிடப் பரிந்தருள் பரம்பரம் பொருளே !

சொல்லுஞ் செய்கையும் ஒன்றெனத் துலங்கிட வேண்டும்,
கொல்லுந் தீமையுங் கொலையுண வருந்தலும் ஒழிந்தே,
நல்லு ழைப்பினுல் வந்ததை நாட்டொடு நயந்தே,
இல்லையே யெனும் வறுமையற் றிருந்திட வேண்டும் !

வைய கத்திலுன் வானர சாட்சியே வருக !
ஐய வுன்னரு ளாணையிங் காளுக நாளும்.
துய்ய போகமும் யோகமுந் துலங்கியாண் பெண்ணும்,
தெய்வ ஜீவன சங்கமாய்த் திகழுக நன்றே !

தேங்கி டாதநன் முயற்சியிற் சிறந்துமுன் னேறி,
ஓங்கு கல்வியுஞ் செல்வமும் ஒருமையுங் கொண்டே
நீங்கி டாதவுன் னருள்பெற நிலவிட வேண்டும்,
ஏங்கு மென்குறை தீர்க்கநீ இரங்கிட வேண்டும் !

பாரி லேபல பகுப்புறு பகைசின மின்றி,
ஓரி றைவனும் ஒருகுல உணர்ச்சியும், அன்பும்,
ஓர ரசுடன் ஓரருட் சமயமும் ஓங்கி,
நேர்மை யாகிய சமநெறி நிலவிட வேண்டும் !

முது நலங்களும் புலவர்கள் முறைவகுத் தளிக்கும்
புது நலங்களும், பயனுறப் போற்றியன் புடனே
பொது நலஞ்செயும் புண்ணியம் பொலிவுற வேண்டும்,
அது விதுவென வேதங்கள் அறிந்திடும் அறிவே !

ஆணின் ஆண்மையும் பெண்ணினப் பெண்மையும் அழகும்,
பூணும் பொன்னும்போற் பொருந்திடும் இல்லறம் பொலிக !
வீண ணிகளும் இடம்பமும் வேறுபா டுகளும்
காணிலா நல வாழ்க்கையைக் கண்டிட வேண்டும் !

கிலி கொண் டோடிய கேடுசூழ் மோகியின் அடிமை,
கலி திரும்பவும் கரந்திடச் செய்திடா தொழிக.
வலிய தானவர் வஞ்சனை யொழிகசுத் தான்மப்
பொலிவும் பூரண யோகமும் போகமும் வளர்க !

நினைத்த யாவையு நிறைவுறத் துறவறம் பூண்டு,
தனித்த வாழ்வினைத் தவமெனச் செய்திட வேண்டும்.
இனித்த கௌரியும் இயம்பிய படிவர வேண்டும்,
அனைத்தும் இன்பமாம் அருட்பணி நலஞ்செழித் திடவே !

பொன்ன ரியணை புளித்தது ; பொதுநல வுரிமை
தன்னை நல்கியான் பூரண சாந்தத்தை நாடி,
என்னைக் கண்டுபின் இகபர சுகநெறி காண
உன்னி னேன்வழி ஒளியுடன் உதவிடு பரமா !

சாந்தன் தோன்றல்

"வழி துலங்கும் வருகவுடன் அருள்
ஒளி துலங்கும் உன் உள்ளிருந்தே" யெனத்
தெளிவுரை சொலித் திவ்விய சாந்தனும்,
களி துளங்கிடக் கண்ணெதிர் நின்றனன் !

சுத்தன்

"மின்னெ ளியென மேவிய, மாதவர்
மன்ன வா வணக்கம்" என மன்னவன்,
முன்னி கழ்ந்தன முற்றுறச் சொல்லுமுன்,
மன்னு மாமுனி வாய்மலர்ந் தோதினன் :

சாந்தன்

போரைக் கண்டனன் புல்லரை வீழ்த்திய
சீரைக் கண்டனன், சீர்த்தியைக் கண்டனன்,
பாரைக் காத்திடும் பாரத சக்தியின்
வேரைக் கண்டனன் ; வெற்றியுங் கண்டனன் !

பத்தினி கௌரியின் பலியைக் கண்டனன்,
உத்தமி யாவியங் கொளிப்பி ழம்பதாய்,
சக்திபெற் றெழுந்தது தான வத்திலே—
உத்தம நின்பணிக் குதவி யாகவே !

இகலினை யொடுக்கினை ; இனியுன் ஆட்சியைத்
தகவுடை யமைச்சரே தாங்கத் தந்துடன்,
பகலென உலகிருள் பரிந்து மாற்றிடும்,
சிகரநற் சோதியாய்ச் செழிக்க வுன்னுவாய் !

அறமிலி கலியனின் ஆண வத்திமிர்,
மறவலி யரக்கரை மற்றுங் கொண்டுறும் ;
திறமுள மந்திரி செய்தற் கானதை
மறுவறச் செய்திட வல்ல தீரனே !

இங்கினி யிருந்திடின், இடர் முளைப்பதாம்,
அங்கொரு பணியுனை யழைக்கும் ; ஆதலால்
எங்கெங்கு திருவருள் இட்டுச் செல்லுமோ
அங்கங்குன் சாதனம் அமையச் செய்குவாய்....

சென்றிடச் சென்றிடத் தெய்வச் சோதியே
உன்றுணை யாகிடும் உண்மை காணுவாய் ;
என்றுநீ இமயத்திற் கேக வேண்டுமோ
அன்றுநான் அக்கணம் அழைத்துச் செல்லுவேன் !

சுற்றிலும் உலவிடுந் தூய சித்தர்கள்
பற்றுத லுடனுனைப் பலம தங்களின்
ஒற்றுமை நாட்டிடும் உண்மை யன்பினை
முற்றிலும் விளக்கி "நீ முன்செல்" என்பரே !

செல்கமுன் செல்கமுன் ; செயமும் பின்வரும் ;
வெல்கநீ உன்னையே—போரை வென்றவா !
பல்சம யங்களைப் பார்த்துப் பூரணம்
நல்கிடும் ஒளிபெற நாடென் பீடமே !

சுத்தன்

இத்ததி நிகழ்ந்ததும் இனி நிகழ்வதும்,
பத்தினி சென்றதும், பதறி யென்மனம்,
உத்தமத் துறவினை உன்னி நின்றதும்,
சத்திய சாந்தவுன் சக்தி யாலன்றோ !

பற்றலர் பணிவதும், பார்பு கழ்வதும்,
வெற்றிகள் வருவதும் வீரர் சேர்வதும்,
முற்றிலுந் துறந்தநன் முனிவ நின்செயல் ;—
நற்றவ மினிச்செய நாடிச் செல்கிறேன் !

மனமிகு மந்திரி மன்ன வைதனில்
ஜனசமு தாயத்தின் சக்தி யாளவே,
நனியொரு பொதுச்சபை நாட்டி என்கடன்
இனிதினி முடித்திடற் கேகு வேனையா !

சாந்தன்

மன்பொறுப் பவ்வகை மக்கட் கீந்ததும்,
உன்பொறுப் பாற்றுக உலக முய்யவே";
என்பொறுப் பாற்றிடும் இனிய காலத்தில்
அன்புடன் வருவனென் றையன் சென்றனன் !

ஆவெனச் சுத்தனும் அதிச யத்துடன்
மேவிய சாந்தனை விழுந்து கும்பிட்டே,
தாவினன் சாற்றிய தரும மாற்றவே,
கூவினன் அமைச்சரைக் கூட்டங் கூட்டினன்.

2. சாசனப் படலம்

மாசறு குடிகளு, மந்தி ரர்களும்,
தேசத்தை நடத்திடத் திறமை யாக வோர்
சாசனம் பொதுஜன சபையிற் சாற்றினான்—
காசினிக் கருந்தவக் கடமை கொண்டவன்.

அன்னையு முனிவரும் அமைச்சர் சிங்கமும்,
மன்னுயிர்த் தலைவரு மற்று ளார்களும்,
என்னையிஃ தென்னவென் றிரங்கி நொந்திட,
மன்னவை திகைத்திட மன்னன் பேசினான்:—

சாசனம்

உலகக் கோயிலில் உயிர்க்குல மாக
உலவும் பரமனை ஓமெனப் பணிவாம்!
அப்பரம் பொருளின் அன்புச் சேய்காள்,
இப்பெரு நாட்டை என்முன் னோர்கள்,
விதித்த படியே வேந்தெனப் புரந்தோம்!
கலகஞ் செய்த கலியையும் வீழ்த்தி
வெற்றிக் கொடியை வியனுற நாட்டினோம்!
இன்றிடர் தவிர்த்தோம் என்னினும், அன்பீர்,
இனிவரும் உலகின் இயல்பே மாறும்.
அமைதி யின்றி அவனி யெல்லாம்,
அரசியற் சுழலில் அவதிப் படுமே!
அரக்கர் கொடுங்கோல் அல்லற் படுத்தும்—
உலகம் ஓயாக் கலகக் காடாம்!
புரட்சி யெரிமலை பொங்கிப் பொங்கி
முடியர சாட்சியைக் குடியர சாக்கும்!
தனக்கே யுலகெனுந் தன்னல வேந்தர்,
செருக்கெலாம் சுதந்தர நெருப்பிடைப் பஞ்சாம்!
உலக மெல்லாம் உலகோர் பொதுவெனும்
ஜனநா யகமே இனியுல காளும்.
சாதி சமய சாத்திர கோத்திர
வேற்றுமை யெல்லாம் போற்றுவா ரின்றித்
தாமே தேய்ந்து, சமதரு மச்சுடர்
பொதுநல வாழ்விற் பொலியக் காண்போம்!
அக்கா லத்தின் அகமுகங் கண்டே
இப்புதுச் சாசனம் இயம்புவேன் கேளீர்:
முடியர சாட்சி முடிந்தது, நண்பீர்!
குடியர சாட்சிக் கொடியை உயர்த்தினேன்!
வாழ்க, வாழ்க மானிட வுரிமை!

அச்சமும் அநீதியும் அடிமையும் ஒழிக !
தலை நிமிர்கவே சமத்துவ தருமம் !
ஒருவனே இறைவன் ஒன்றே குலமெனும்
சுத்தான்ம நேயஞ் சுடர்விட் டொளிர்க !
ஒருகுல மான உயிர்க்குல மெல்லாம்,
பொதுஜன சபையிற் பொருந்துக நன்றே !
அறிவுங் கல்வியும், அறமும், அருளும்,
பாருக் கெல்லாம் பயனுறு தொழிலும்,
அன்பும் போற்றி மன்பதை வாழ்கவே !
பெயர்வடி வாக்கும் பேதச் சமயக்
கட்டுக ளின்றிக் கடமையைக் காத்து,
மனச்சாட் சியினை மதித்து நடந்து,
பெரியார் நல்லுரை பெரிதும் பேணிக்
கால நிலையைக் கருதிமுன் னேறிச்
சனசமு தாயம் தாங்குக உலகை !
சிற்றூர், தொட்டுத் தேசம் வரையில்,
ஒற்றுமை யாக உரிமை யுடனே
தேர்ந்தநல் லோரே தேசச் சபையாய்,
அறிவுடை யமைச்சரை ஆராய்ந் தெடுத்துப்
பொதுஜன நன்மை பொலிவுறப் புரிகவே !
அதிகா ரத்திமிர் அடியுட னொழிக !
மன்னுயி ரெல்லாந் தன்னுயி ரென்ற
உணர்ச்சி மாந்தரின் உளத்தில் ஊன்றுக.
தீயதை நீக்கித் திருவுறு நலத்தை
ஆக்கலே அரசின் அருங்கட னாமே !

* * *

கல்வி யளித்தலே கடமையின் கண்ணும் !
நற்குடி யரசு நாளுஞ் செழிக்கச்
சமுதா யத்தார் தரும்வரிப் பணத்தில்,
பாதி கல்வியிற் பயன்படல் விதியே !
இளந்திருச் செல்வரே இனிவரும் உலகாம்,
என்பதை எண்ணி இருபா லார்க்கும்,
பிரம சரிய குருகுலக் கல்வி,
எல்லா வூரிலும் ஈதல் கடனே !
கல்வி யுடனே நல்ல தொழிலும்,
அவரவ ரியல்பிற் கமைவுறப் பயில்க !
அறிவுந் தொழிலும் ஆண்மையும் அன்பும்
திருவும் தேசத் திறமையும் வளர்க்கும்

கல்வியே கல்விச் செல்வம தாமே !
காலர் போற்றுங் கலைகளை யெல்லாம்,
தொழில்களை யெல்லாம் எழில்பெறப் பயில்க !
பாட்டுங் கவியும் பரதமும் அரங்கும்,
சிற்பமும் போற்றுக திருவுற நாடே !
பொல்லதை யழித்து நல்லதைக் காக்கப்
புவியோ ரெல்லாம் போர்க்கலை பயில்கவே.

* * *

ஆணும் பெண்ணும் அறிவினி லொன்றே !
பெண்மை பூரணம் பெறத்தகு கல்வியை
இல்லம் விளங்க நல்குதல் கடனே.
பிரம சரியம் பிழையறக் காத்துக்
கற்பன கற்றபின், காதலாற் கூடி
நல்லறச் செல்வர் இல்லறம் புரிகவே.
உடலின் உறுதியும் உள்ளொற் றுமையும்,
கல்விச் சிறப்பும், கசடறக் கனித்தே,
இருபா லாரும் இணைந்திட வேண்டும்.
இல்லற மின்றி இல்லையிவ் வுலகே.
மனையின் விரிவே மன்னுயி ருலகாம்.
சீரிய பெண்ணும், தீரனும் ஆணும்
செறிந்த நாடே சிறந்தநா டாமே.
நறுமண வுரிமையும், மறுமண வுரிமையும்—
பொதுநலம் புரியும் புண்ணிய வுரிமையும்,
கல்வி புரிமையும் கலைவளர் உரிமையும்,
குலம்வளர் பெண்டிர் நலம்பெற வேண்டுமே.
உவந்துறை இல்லம், ஓர்பசு, காளை,
தேவைக் கேற்ற திருக்க ளுடனே,
கவலை யற்றுக் காதலர் வாழத்
தக்க தொழிலைத் தந்திட வேண்டும்.
அருளும் பொருளும் அறிவுந் தொழிலும்
வளரும் வாழ்க்கை மங்கல மாமே.
நாட்டுப் பொருளை நற்றொழி லாக்கி,
உழைப்பும் பிழைப்பும் உதவிட வேண்டும்.
மடமை யாலும், வறுமை யாலும்,
வாடும் ஒருவரும் கூடா தினிமேல்.
செல்வம் வளர்க செல்வத் தொழிலாய்.
பூட்டி யுறங்கும் பொருள்கொடி தாமே.
உயிர்க்கும் பொருட்கும் ஒட்டம் வேண்டும்.
பலர்பசித் திருக்கப் பதுக்கும் செல்வமே

திருட்டுங் கலகமுந் தீமையுந் தூண்டும்.
நாட்டுத் தேவை நாட்டிலே விளையச்
செல்வத் திரளைச் செலவிட லாமே.
ஒவ்வொரு கையும் உழைத்திட வேண்டியே
புதுப்புதுத் தொழில்கள் பொங்கிட வேண்டும்.
தோன்றும் உலகந் தொழிலுல காமே !
பொதுநல மின்றிப் புரிதொழி லில்லை.
அன்னியப் பொருளுக் கடிமைப் படாமல்,
தன்னள விற்குத் தானுழைத் தடைகவே ;
துய்த்த மிச்சந் துறைமுகஞ் சேர்கவே !

* * *

வளர்தொழி லாலே வாணிகம் பெருக்கித்
தரையுங் கடலும் வரையறு செல்வம்
தந்திட வணிகர் முந்திட வேண்டுமே.

* * *

கொலை களவின்றிக் குடிசூ தின்றிக்
காமத் தால்வருந் தீமைக ளின்றி,
மனமொழி மெய்யில் மாசறு தூய்மை
காத்திட நல்வழி கண்டிடு வீரே.
அறவோர் கூட்டம் ஆங்காங் கேகிச்
சுத்தசன் மார்க்கந் துலங்கிடச் செய்கவே.
ஒழுக்கமே நாட்டின் உயிரென லாமே.
ஊர்ப்பொது நலத்தை ஒளியுறக் காக்கத்
தொண்டர் படையைத் தொகுப்பது கடனே.

* * *

நாட்டன் புடனே கூட்டுற விலக
ஒற்றுமை யாக ஓங்குக மக்கள்.
மனவொற் றுமையே இனவொற் றுமையாம்.

* * *

மனத்துள் மறைந்த வாய்மைச் சுடரைத்
தினமுந் தூண்டத் தியானமே வேண்டும்.
ஊர்தொறுங் கூட்டமாய் ஓர்குல உணர்வுடன்
இருபா லாரும் இதயத் திறைவனைக்
காலை மாலை, கண்மனங் குவிந்து,
தியானித் திடவே, தேசந் தழைக்குமே.
"ஓம்பர மாத்மனே உயிர்க்குயி ரான
ஒருவனே இந்த உலகினுக் கெல்லாம்
அன்பும் அருளும் இன்பமும் அறிவும்,

வாய்மை பொலியுந் தூய்மைய மருளாய்.
புண்ணிய நாட்டில் விண்ணர சோங்குக.
அருளும் பொருளும் அழகும் கலையும்
திருவும் வீரமுஞ் செல்வமுஞ் செழித்து,
நீடு வாழ்க நின்னுயிர் மக்கள்.
பகைமை பொறாமை பாழ்பட் டொழிகவே.
வெல்லுந் திறமை விறல்பெற் றொளிர்கவே..
மானிடர் அமர வாழ்வுபெற் றுயர்கவே..
எல்லாம் வல்ல இறைவனை நாளும்
எங்கணுங் கொண்டு மங்களா னந்தமே !
சுத்தமுஞ் சக்தி ஓம் சுத்த சக்திஓம்."
இவ்வகை நாளும் இறைவனை வழுத்தினல்,
எல்லா நலமும் நல்லதே விளையும்....
இக்கா லத்திற் கேற்றதைச் சொன்னேன்.
பிற்கா லத்திற் பெரும்பணி யுண்டு.
ஆண்பெண் வாழ்க்கை அத்யாத்ம வாழ்வாய்
அறிவெலாம் வெல்லாம் ஆத்தும நேயமாய்,
உலகெலாம் தேவர் இலகிடுங் கோயிலாய்ப்
போரில் லாத புதிய சாந்தம்
துலங்கும் புதுயுகந் தோன்றிட வேண்டும்...
அருட்பெரி யாரும் அரியயோ கிகளும்
காட்டிய வழியைக் கருத்துடன் பற்றி
அனுபவங் கண்டு மனுகுல முய்யும்
பொதுநெறி காணப் பொறுமையுந் தவமும்
பூண்டேன் ; இந்தப் புண்ணிய பூமி
ஈன்ற நல்லீர், இன்றுடன் அரசை
உமது கையில் உரிமையோ டளித்தேன்.
மகுடமும் கோலும் மகாஜனத் திற்கே.
பணிவுட னளித்துத் துணிவுடன் இன்றே
துறவணிந் தேகித் தூயநன் மருந்துடன்
வருவேன் என்னை வாழ்த்திடு வீரே !
புண்ணியத் துறவினைப் போற்றிடு வீரே !

* * *

இனையன மொழிந்தே புனிதனும் ஆங்கே,
கோலுடன் முடியுங் குடிகளுக் கீந்தே,
அரியணை தனையும் அக்கணந் துறந்தே,
மோனப் புன்னகை முகிழ்த்திட நின்ருன்...

வியந்தனர் பயந்தனர் விரிசன சபையார்,
"ஆண்டருள் அரசநீ அரியணை யிருந்தே !
பிரிவினை தன்னை ஒருகணந் தாங்கோம்......."
என்றன பலகுரல் மன்றெதி ரொலிக்கவே.
சுத்தன் கருணையைத் துதித்தனர் சிலபேர்,
முத்தனென் றுரைத்தனர் முற்றறி நல்லோர்,
பித்தனென் றேசினர் பின்னே சிலபேர் !
முக்குண வியற்கை மிக்கவும் பலவே !

* * *

அமைச்சரு முனிவரும் அமைதியின் ஆய்ந்தே,
இனிவருங் கால வியல்பையுங் கண்டே,
தூயனின் ஆருயிர் நேயமும் பார்த்தே,
நடப்பது நலமென நவின்றனர் ஆங்கே.

முடியர சுடனே குடியர சானதைப்
போற்றினர் சிலபேர் ; தூற்றினர் சிலபேர் !
இசைவசை இரண்டிலும் அசைவறு மனத்தான்,
உறுதியை மெச்சினர்—உலகறி சிலபேர்.
"சுத்தனுர் வாழ்"கெனச் சுருதிகள் இசைக்க,
பொதுசனங் கடலெனப் போற்றிகள் முழங்க,
தாயுளந் துடித்திடத் தூயமெய்த் துறவி
போயினன் சுதந்தரப் புன்னகை வீச,
புத்தனும் வீரனும் போலவன் மனையைத்
துறந்திடுங் காட்சியை மறந்திடு வோமோ ?

* * *

சூழுக வீர சக்தி, துலங்குக பொது நலங்கள்,
ஆழுக மடமை தீமை அச்சமாங் கார நோய்கள்,
தோழமை பூண்டு நல்ல கல்வியுந் தொழிலு மோங்கி,
வாழுக மாந்தர் தெய்வ வானருள் பொழிக மாதோ !

3. துறவுப் படலம்

துதிபெறும் அரசை முற்றத் துறந்தறந் தாங்கும் வள்ளல்,
சுதந்தர மின்ன லென்னச் சொந்தமா ளிகைக்கு வந்தே,
நிதந்தன தென்ற தெல்லாம் நீத்துடன் பந்த மற்ற
பதந்தனை யடைய வேண்டிப் பரிவுடன் முனைந்து நின்றான்...

மணியுடன் முத்தும் ,பொன்னும், வெள்ளியும், வரிசை யான
அணிகளும் குதிரை யானை தேருடன் ஆடு மாடும்,
துணிகளும், தானி யத்தின், சுமைகளும் அள்ளி யள்ளிப்
பணிவுடன் அளித்தான் அந்தப் பட்டணம் வியந்து போற்ற !

குறைவறு செல்வப் பையும், குன்றென நிவந்த வீடும்
நிறைதரும் அரசுஞ் சிருந் திகழ்மணி மகுட வாழ்வும்,
இறைவனென் றுலகம் போற்றும் இசைகளும் இனைய வெல்லாம்,
துறவறம் பூண்ட ஞானி தூசிபோ லொதுக்கி ஞனே !

எனதியான் என்ப தெல்லாம் ஈந்தபின் ஞான தீரன்,
மனைமதி லகன்று செல்ல மனதைமுன் னேவும் போது,
தனதொரு மைந்தன் செய்கை தவறெனத் தடுத்த டக்க
முனைதிருத் தாயும் ஆங்கே முன்வந்து முறையிட் டாளே !

பொன்னரி யணையை நீத்தும் புகழ்அர சாட்சி நீத்தும்,
மின்னிடை யாரை நீத்தும், வேதவா தத்தை நீத்தும்,
தன்னலப் பற்றை நீத்தும், தவளமா ளிகையை நீத்தும்,
அன்னையின் பாசந்தன்னை நீத்தவர் அரிய ரம்மா !

இந்திரை

வழிவழி யரசை யாள வந்தனை தவத்தால் ; சித்தி
செழிதரப் புரந்தாய் ; நாடு சீர்பெறத் தருமங் காத்தாய் !
பழிசெயுங் கலியை வென்றாய் ; எமதுளம் பரித விக்க
மொழியுடன் செயலும் போற்றி, முழுத்துற வேற்ற தேனோ ?

அற்புத வீரதீர பராக்ரம மனைத்தி னுக்கும்
பொற்புறு வடிவாய் வந்த பூரண மனித ரேறே,
தற்புகழ் கொண்டு நாங்கள் சாற்றிய தெய்வச் சேயே,
கற்பகக் கனியே, இன்றெங் கவலையாய் முளைத்த தேனோ ?

மரபினை விளக்க வந்த மைந்தனிப் படித்து றந்தால்,
அரசினை யாரே காப்பார் ? அறத்தினைத் தாங்கு வார்யார் ?
உரிமையை உதறிச் சென்றால், உலகுனை நகைத்தி டாதோ ?
பரிவுகொண் டிருப்பாய் பெற்ற பாசத்தாற் பேசி னேனே !

மதியிலா இரவைப் போலும், வானிலாப் பயிரைப் போலும்,
பதியிலா மனையைப் போலும், பகலிலா நாளைப் போலும்,
கதியிலாப் பிள்ளை போலுங் கண்ணிலாத் திருவைப் போலும்,
விதியுனைப் பிரித்தால், அந்த வேதனை தாங்கு வேனோ ?

போர்வினை புரிந்த தாலோ ? புண்ணிய வதியாய் வந்த
தாரத்தை யிழந்த தாலோ தலைவிதி மாற நின்றாய் ?
தேர்ந்தொரு திருவைக் கூடிச் சீர்பெற வாழ லாமே !
வீரநின் விநோதச் செய்கை விளங்கிடற் கரிய தம்மா !

சுத்தன்

அறிந்தனன் அன்னை யுள்ளம் ; அறிந்தனன் உலகின் பாசம் ;
அறிந்தனன் பிறவித் துன்பம் ; அரியபட் டினத்தார் போலே,
அறிந்தனன் காதில் ஊசி யதுவுநம் முடன்வ ராமை....
அறிந்துயிர்த் தன்மை யெல்லாம் ஆசையைத் துறந்தே னம்மா!

புண்மிகு சாவுஞ் சோவும் பொய்யி நட் போதும் வாரி
யுண்புவி யாள மாட்டேன் ; யோகத்தில் உண்மை கண்டு,
விண்புவி யின்பம் இங்கே விளங்கிடும் ஒளியைப் பெற்றே
மண்புவி தன்னைப் பொன்னாய் மாற்றிட வருவே னம்மா !

கற்பினிற் சிறந்த கௌரி காயத்தை யுதறிச் சென்றும்,
அற்புத சக்தி தேகம் அமைந்தெனக் கெய்து வாளே !
விற்புரு வங்கள் வீசும் வேல்விழிக் கடிமை யாகேன் ;
கற்பக நாடு வாழுங் கருமமென் யோக மாமே !

இந்திரை

ஆக்கமும் புகழுஞ் சீரும் அறநெறி யின்ப வாழ்வும்,
ஊக்கிடும் வலிமை நீயென் றுன்னினோம் ; செல்வ, நீயே
மோக்கமென் றிருந்தோம் ; உன்னை முழுமையு நம்பி னோரை
ஏக்கமே கொள்ளச் செய்தாய். இரக்கமுன் னிடத்தி லுண்டோ ?

பரிசனம் வருந்தச் சொந்த பந்துக்கள் வருந்த, நாட்டின்
பிரசைகள் வருந்த, உந்தை பிரிந்ததால் வருந்து நெஞ்சேன்,
அரசினைத் துறந்த கோலம் அனைத்தையும் வருந்த, நீயும்
புரிசெயல் கண்டெ னுள்ளம் புழுங்கினேன் புதல்வ ரேறே ! 60

முதுபுகழ் அரச னிங்கே முரடரைத் திருத்தச் சென்றான்
பொது சனக் கையிற் செங்கோல் பொன்முடி யனைத்து மீந்தே ;
புதுநல மைந்த னிங்கே பூமியை நீத்தான் ; என்னின்
எதுநலங் கண்டேன் சித்தி யிறைவியாய்ப் பிறந்த யானே !

சுந்தன்

எடுத்தெடுத் துரைத்திட் டாலும், எத்துணை வாதிட் டாலும்,
தடுத் தெனைநிறுத்தி னாலும், சத்திய யுகத்தைக் காண,
விடுத்ததை விரும்பிக் கொள்ளேன், விரதங்கொண் டுறுதி யாகி
அடுத்ததை அடைந்து தீர்வேன். அன்னைநீ யறிவா யின்னே !

போக மாளிகை

இவ்வகை யியம்ப மைந்தன், இந்திரை மௌன மானாள்—
செவ்விள மாதர் சூழுந் திருவுறு போக வீட்டில்,
வெவ்விய காவல் வைத்து, விரதத்தைத் தடுப்போம் என்றே
ஒவ்விய வுளத் தராகி யுறவினர் சூழ்ச்சி செய்தார்.

புத்தொளி பரவுகின்ற போகமா ளிகையி லெங்கும்,
சித்தத்தைக் கொள்ளை கொள்ளும் சித்திரப் பாவை யர்தம்,
முத்தொளிர் முறுவ லின்பம், பூசிய முகத்தி னின்பம்,
பித்தளி விறலி யர்தம் பேய்மதப் பிலுக்கு மாமே !

தேன்மலர் நறுங்கந் தங்கத் திங்கனி குலுங்கும், வேக
மான்குயில் கிளிபோ லன்ன மயிலினங் குலுங்குஞ் சோலை.
மின்னிழிக் குமரி மாரின் விருந்துடன் யாழும் பாட்டும்,
மையுறுத் கூத்துங் காம வுரைகளுங் குலுங்கு மாங்கே.

நாளகஞ் செல்லுங் காலை, கண்ணிபோட் டிழுக்கு மாதர்,
மேனியை நாடி வாரை மெல்லிடை வளைவி னாலே,
ஞானமூ னியராச் செய்து நகைத்திடு மாதர் வைகும்,
கானவெள் ளத்தி லாழுங் கனகமா ளிகையி தம்மா !

பழுதிலா ஞானி யான பண்பனைப் பெண்கள் கூடி
வழுவிலாக் கலைகள் காட்டி, மயக்கினர் ; மாய வித்தை
முழுவதுங் காட்டி னார்கள் ; முகங்களை மினுக்கி னார்கள்,
அழுதனர் தொழுதார் ; கொஞ்சி யணைந்திட நெருங்கி னாரே !

"புன்னகை புரியு மாயப் பொய்களா போமி" னென்றே
பொன்னணி மினுக்கை யெல்லாம் புறங்கண்ட புனிதச்செல்வன்
புன்னிலைப் பார்வை யின்றி முழுதுளங் குவிந்து மோனத்
தன்னிலை யிருந்தான் ; அந்தத் தனிநிலை சலிப்ப துண்டோ ?

"ஏதடா பித்த" னென்றார். இரும்புநெஞ் சிவனுக் கென்றார்,
"மாதரை வெறுக்கும் பேடி மாதவப் புரட்ட" னென்றார்,
காதலை யெல்லாங் காட்டிக் கட்டையைக் கண்டோ மென்றார்,
வாதிடும் விறலி யர்தம் வம்பினுக் கெல்லை யுண்டோ ?

ஐந்தினை யடக்கி யாங்கே தியானத்தில் ஆழ்ந்தி ருக்கும்,
மைந்தனைக் கண்டு கண்டும் வாய்மையைக் காணுத் தாயும்
நைந்துளம் சித்தி மானை நயந்தனள் ; அவனு மாங்கே
பைந்திரு மகனை நோக்கிப் பணிவுட னுரைத்தான் மாதோ:

சித்திமான்

கலைகமுந் துயருஞ் செய்யுங் கலியினும் வருவான் ; இங்கே
அலைகறும் அல்ல லாகும் என்பதை யறியார் யாரே.
உலகமுன் னருளை நோக்கி உயிர்ப்பதைக் காணுய் ; நீயும்
விலகிக்கண் மூடி நின்றால், விடுதலை கிடைப்ப தாமோ ?

ஊரெலாம் வாழ்த்து ரைக்க, உளமெலாம் போற்றி செய்யப்
பாரெலாம் புகழ் மணக்கப் பரிதியின் கொடியைக் காத்தாய் !
வீரனே, நீயும் எங்கள் விருப்பினைத் தடுத்துச் சென்றால்
போரினும் புரியும் பொல்லார் புகுந்திடல் எளிய தாமே.

அன்னையின் கண்ணீர் காணுய், அமைச்சரின் மயக்கங் காணுய்,
மன்னுயிர் வருத்தங் காணுய், வாய்மையைக் காண நின்றாய்,
மன்னநீ உபவ னத்தில் மாதவம் புரிந்தாற் போதும் ;
உன்முகங் கண்டு கொண்டே உயர்கட னுற்று வோமே !

சுந்தன்

தாய்சொலப் பரிந்து பேசுந் தந்தைக்கு நிகரே யான
வாய்மைசொல்அமைச்சர்ஏறே,மனத்தினில்அனைத்துங் கற்றோய் !
ஆய்ந்தென தறிவைத் தூண்டி ஆருல குய்ய வேண்டுந்
தூயவர் கொண்ட தூய துறவையே துணிந்து கொண்டேன்.

சொன்னநற் சாச னத்தின் சொற்படி யரசைக் காமின்,
முன்னரே செய்து கொண்ட முடிவினை முயன்றி யானும்,
பின்னரே பயனைக் காணும் பெரியநற் பணியை நாடி
என்னையான் பயிற்று கின்றேன்...இனிவிடை கொண்டுசெல்வேன்! 120

புன்னகை பூத்த டங்கிப் புனிதனு மோனி யானன் ;
அன்னையும் சித்தி மானும் அத்துடன் அகன்றார் ; ஆங்கே
முன்னுல கத்தி னுக்கு முழுநிலா வெள்ளி பூச
மின்னுநல் இரவ மைதி மேவிய தெங்கு மம்மா !

* * *

காவலர் உறங்காக் கண்கள் கலங்கின விடியற் காலை ;
ஆவலோ டலசிப் பார்த்தார் ; ஐயனை யெங்குங் காணார்....
ஓவெனக் கதறினார்கள் ; ஓம்சுத்த சக்தி யென்று
மேவிய ஓலை யன்றி வேறொன்றுங் காணி லாரே !

ஆசையை யடக்கி, மேற்கொண் டாகிடுங் கரும நோக்கிச்
சாசனப் படிக்கே அன்னை சரிவர நாட்டைக் காத்தாள் ;
காசினி விவகா ரத்தைக் கடந்துநாம் சுத்த யோகி
ஈசனின் ஆணை யாலே ஏகுழி ஏகு வோமால் ! 132

4. காமபுரிப் படலம்

முன் செல்லல்

முன்செலென் றுள்ளந் தூண்ட, முழுநிலா நிசியில் ஐயன்,
பின்செலும் பார்வை யின்றிப் பெரியபோர் வீரன் போலே,
மின்செலும் வேகங் கொண்டு வீரமாப் புரவி யேறிப்
பொன்செய்த வாழ்வை நீத்துப் போயினன்; அவன்பின்
போவோம் !

தாயினுங் கருணை மிக்கான், சகவுயிர் வருத்தந் தீரத்
தூயமெய்த் துறவ ணிந்து, துறவினர் கூட்டந் தேடி,
ஆய்வுறு மருந்தை நாடி அலைந்தலைந் தயர்ந்து, பின்னும்
போயினன் புனிதர் வாழும் புண்ணியத் தலங்கள் கண்டே !

நானெனுஞ் செருக்கை நீத்து, நவமணிச் செல்வ நீத்துத்
நானெனுந் தன்னு ளாடுஞ் சத்தியப் பொருளை நம்பி,
வானமே கூரை யாக, மண்மிசை நடந்தா னுக்குக்
கானகப் புட்க ளெல்லாங் கனிகளை உதிர்த்த மாதோ !

இயல்புறும் பசி யெடுத்தால், இயல்பினிற் கிடைத்த துண்பான்,
அயர்வுறக் கண்சு ழற்றின், அவ்விடம் அயர்வான் சற்றே ;
புயலையு மதியான், வெய்யிற் பொரியினு மதியான், காடு
வயல் வரப் பென்றும் பாரான் ; வாய்மையை நாடி னனே !

வேண்டுமென் றெதையுங் கேளான் ; வேலைசெய் துண்ணக் கூசான்,
மாண்டது பெரியார் வாழுந் தலங்களை வணங்கிச் செல்வான்.
பூண்டநல் விரதம் போற்றிப் புண்ணியர் உறவைக் கொண்டே,
ஆண்டவன் செயலை நம்பி, அந்தணன் வழிந டந்தான் !

மையிருட் காட்டி னூடும் மலைநதி கணவா யூடும்,
வெய்யிலு மழையுந் தாங்கி, விசிடும் வாடை யூடும்,
வையகம் புரந்த வேந்தன், மனிதமா மரபு முற்றும்
உய்யநன் னெறியைத் தேடி ஒருவனாய்த் திரிந்தான் மாதோ !

நல்லவர் துறவி யென்று நயமுடன் உபச ரிப்பார் ;
பொல்லவர் கேலி செய்து, போவெனத் துரத்து வார்கள்.
கல்லையும் வீசு வார்கள் ; கல்லினுங் கடுமை யான
சொல்லையும் வீசு வார்கள்—சொல்லறச் செல்வான் அன்னோன்!

நலங்கொடு தீதை வென்று, நட்பினாற் பகையை வென்று,
கலங்கிடுங் கவலை தன்னைக் கடவுளன் பறிந்து வென்று,
விலங்கிய லாரை ஆன்ம விறுடை மனத்தால் வென்று,
புலன்களை வென்ற தூயன் போயினன் காற்றைப் போலே !

மணப்பறை யடிக்கும் ஓர் பால்; வாழ்க்கையின் முடிவைக் கூறிப்
பிணப்பறை பேசு மோர்பால், பெரும்பகை தூண்டு கின்ற
சினப்பறை விறு மோர்பால், சீர்கெடு காலத் தீமை
மனப்பறை துடிக்கக் கண்டு, மறுவிலான் வழிந டந்தான் !

மிகைகுறை யின்ப துன்பம் இசைவசை மேவி ரண்டு
பகைவினை யுலகி னூடும், பாய்வள நதியைப் போன்றே,
திகைதறு மேடுபள்ளந் திகைப்பறத் தாவித் தாவி
வகையுறு வாய்மை யாழி கண்டிட வளைந்து சென்றான்.

காமபுரி

எல்லையில் வானைத் தாண்டி இரவியும் இறங்கிச் செல்ல
முல்லைச்சங் கூத வண்டு, மோகன முறுவல் வீசி,
அல்லியை அமுதத் திங்கள் அணைத்திடு மாலை வேளை,
புல்லரே வாழுங் காம புரிமருங் கெய்தி னனே !

மனையெலாம் ஊட லாட்டம், மருங்கெலாம் கள்ளி னாற்றம்,
முனையெலாம் காமக் கூத்து, முகமெலாம் போலிச் சாயம்,
நினைவெலாஞ் சூது வாது, நெறியெலாஞ் சாரு வாகம்,
தனையெலாம் புகழு மிந்தத் தரங்கெட்ட ஊரி லம்மா !

வயதினை முகச்சா யத்தால் மறைத்திடும் போலி மின்னார்,
நயமுறப் பொய்ப்பல் லேந்தி நகைத்திடு நாண மில்லார்,
பயம்பயிர்ப் பேது மின்றிப் பச்சையாய்ப் பேசும் வம்பர்,
கயவரை யாட்சி செய்யுங் காமமா புரியி தம்மா !

கண்கண்ட பொருளே உண்மை, கனகமா ளிகையே வீடு,
பெண்ணுடன் ஆண்கள் கூடிப் பெறுவதே பெரும்பே ரின்பம்.
எண்ணறு பணமே செல்வம், இந்திரி யங்க ளீயும்
மண்ணுடற் சுகமே இந்த மானிடப் பயனென் பாரே !

தன்னறி விழக்கு மட்டுந் தாமதக் கள்ளை யுண்டு,
பொன்னையும் பெய்து, மாயப் பொய்நகை வீசி யீர்க்கும்,
மின்னிடை யார்கை கோத்து, வெறியெழப் பாடி யாடி,
உன்னத மகிழ்ச்சி யிஃதென் றுளறுவார் கிளர்ச்சி கொண்டே!

வயதினை மினுக்கி னாலே வஞ்சமாய் மறைத்து, நீளக்
கயல்விழி வலைவி ரித்துக் கனிநகை மாயங் காட்டிப்
பயல்களை வசப்ப டுத்திப் பணம்பல முறிஞ்சும் பேய்கள்,
வியனுறக் கொழுத்த காம வெறியரின் ஊரி தம்மா !

காமி—வாமி

இத்தகை ஊரிற் காமி வாமியென் றிரண்டு பேய்கள்,
வைத்ததே சட்ட மென்று மாந்தரை ஆட்டி வைத்தார்...
சத்தியென் றெழுந்தாள் வாமி, சாருவா கத்தின் கொள்கை
மெத்தவு முடையாள் காமி வேறுபா டிதுவே யம்மா !

கொன்றவூ னருந்திக் கள்ளைக் குப்புறத் தள்ள மாந்தி
நன்றெனக் குறி வணங்கி நாணமு நாணி நிற்க,
மின்றவழ் மேனி யின்ப வெறியிலே வேட்கை கொண்டு
துன்றலே வாமி சீடர் துய்த்திடும் பூசை யம்மா !

சத்தியு மில்லை ; எந்தச் சவண்டியு மில்லை ; சாமி
பத்தியு மில்லை ; நன்றாய்ப் பகற்கொள்ளை யடித்துச் சேர்த்து,
மெத்தைமேல் மெத்தை கட்டி, மிடாக்குடி குடித்து, மாதர்
சித்தமே குளிரச் சேர்ந்து திரிதலே காமி நோக்காம்...

வெருவுறு வேங்கை வாயில் விழுந்தவர் பிழைத்த லாகும்,
கருமலைப் பாம்பு சுற்றிக் கடித்தவர் உயிர்த்த லாகும்,
செருவுறு குண்டி னின்றும் சேமமாய்ச் செல்ல லாகும்,
மருவுமிவ் வரக்கி மார்கை மயங்கினோர் மடிவ ரன்றே !

ஆலைவாய்க் கரும்பு போலும்,—அரசிற்புல் லுருவி போலும்,
வேலைவாய் முதலை போலும், வேங்கைவாய் ஆடு போலும்,
சேலையால் இறுக்கு மிந்தத் திமிர்கொண்ட பெண்கள் கையில்
மாலைவாய் அகப்பட் டார்கள் மறலிவா யகப்பட் டாரே !

வழுத்துகள் ஊட்டி, மிக்க வார்த்தைகள் பேசிப் பேசி,
தொழுக்கொரு குணத்தை மாற்றி, நூலிடை நெளித்து நீட்டி,
மழுத்தலம் சுவர்க்க மென்ற மயக்கினைக் காட்டி, ஆசை
நழுத்திடும் பெண்ணை நம்பி நட்டவர் கெட்டா ரன்றே !

உதைத்திடுங் காலை யள்ளி உச்சிமேல் வைத்துக் கொள்வார்,
பதைத்திடு மார்பு மார்பும் பதிந்திடப் புல்லு வார்கள்,
சதைத்திமி ருள்ள மட்டுஞ் சரசசல் லாபஞ் செய்து,
வதைத்திடுங் காம நோயால் வாழ்வினைப் பாழ்செய் வாரே !

பகலிர வின்றிக் காமப் பன்றிகள் போல வாழ்வார்,
அகமுகப் பிணியை நோக்கி, அல்லலுற் றேகும் ஐயன்—
முகமலர் நோக்கிக் காமி முன்விழி வலையை வீசி,
நகைமலர் காட்டி வாவென் றழைத்தனள் நாண மில்லாள்.

“பூரண மதி முகத்தாய், பொன்னிற மேனிச் செல்வா,
மாரனைப் பழித்த மாரா, மாதரைப் பாரா தேகுங்
காரண மென்ன ?” வென்று கைதொடும் போது, தூய
வீரனும் “பேய்போ”வென்றுவிரைந்தொருகோயில்புக்கான்! 100

பேயினைத் தப்பி மற்றோர் பிரமராட் சசியி டத்திற்
போயகப் பட்டாற் போலே, புனிதனும் அந்தக் காளி
கோயிலிற் புகவும், வாமி புன்னகை யுடனே வந்து,
“தாயெனைத் தழுவிக் கொள்ளாய் தனய” வென் றருகே வந்தாள்..

தந்திரப் பெயரி னாலே, தரங்கெடு தீயர், சக்தி
மந்திரஞ் சொல்லி நீலி வைரவி என்று மாதை
வந்தனஞ் செய்து, பூவும் சந்தமும் வாரித் தூவி,
மொந்தென விழ்ந்து மோகக் குழியிலே மூழ்கு வாரே !

பஞ்சம காரத் தாலே பராசக்தி பெறுவோ மென்னும்,
வஞ்சகக் காமக் கள்ளர் வழிபடுந் தலைவி வாமி,
அஞ்சலொன் றின்றி, நாணும் அரிவையர் தன்மை யின்றி,
மிஞ்சிய விரகத் தாலே விமலனைத் தழுவ வந்தாள்..

பித்துறு வாமி தன்னைப் பேயென வெறுத்துக் கீழே
பொத்தெனத் தள்ள வீரன், பொய்யரின் கும்பல் ஆங்கே..
“சத்தியை அவம தித்தாய், சா” வென ஆடு வெட்டுங்
கத்தியைச் சுழற்றி வந்தார் கடுஞ்சினப் புயலை வீசி...

அறவலி கொண்ட வீரன், ஆயுதந் தன்னைப் பற்றி
மறவலி காட்டித் தீயர் மமதையைப் போக்கச் செல்ல...
திறமுள படைதி ரட்டித் திடமெனக் காமி நோக்கி,
“அறிவிலி வாமி யேயென் அழகினைத் தீண்டேல்” என்றாள்

செருக்குடன் பொறுமை யேறுந் தீயுடன், மீறுங் காம
நெருப்புடன், போட்டி போடு நினைவுடன், மதும யக்கத்
தருக்குடன், சாக சஞ்செய் தந்திர முடனோர் ஆண்மகன்
அரக்கியர் இருவர் கூடின் அமர்க்களஞ் சிறிய தாமோ ?

வாமி

சக்தியாம் என்னைச் சரண்புகுந் தன்பர்,
சாதனஞ் செய்து தாந்திர யோகம்,
பயிலுங் கோயிலிற் புயலெனப் புகுந்த
திருட்டு நாயே செல்லுடன் வெளியே !

காமி

சாமியாம் சக்தியாம், சாதனக் கோயிலாம்..
கதவை யடைத்துக் கள்ளத் தனமாய்ப்
புழுதியில் விழுந்து புரளு மட்டும்,
போதை போட்டுப் புந்தி மயங்கி
உடன்பிறந் தாரையும் உளங்கொண் டனைவீர்.
இந்தப் போலி இழவுக வின்றி,
வேசி தாசர் பேசிய படியே
பூத வுடலே பொருளென நம்பி,
உடலின் பத்தைக் கடனெனப் பேணி,
உள்ள மட்டும் கள்ளமி லாது,
போகம் புசிக்கும் யோகம் எமதே.....
எம்முடன் சேரடீ வெம்மனப் பேயே !

வாமி

யாரடீ கள்ளீ எங்களைப் பழித்தாய் ?
பாரினில் ஆண்பெண் பைரவக் குலமாய்ச்
சீருடன் வாழச் சிவனுமை தனக்குச்
செப்பிய தாந்திரம் ஒப்பறு யோகம்.
மீனும் புதிய ஊனும் உண்டு,
காட்ட மான கள்ளையுங் குடித்து,
தாயெனப் பெண்ணின் சக்கரந் தொழுது,
மந்திரஞ் சொல்லி மடியினி லேற்றுத்
தியானம் செய்ததும் தீயெனக் குண்டலி
முக்கோ ணத்திற் பக்கெனப் பற்றி,

ஆறுரசக் கரத்தை விறுடன் மீறி,
உச்சிக் கேறி ஒளிமய மாகும்...
ஆணும் பெண்ணும் அமுத முண்பார்.
யாக்கை முழுதும் இன்பஞ் சிலிர்க்கும்.
அந்நகை யின்பம் அளித்திட நானே
இன்றிவ் வழகனை இச்சா சக்தியால்,
அள்ளிக் கலப்பேன் ; அமரவாழ் வளிப்பேன்.....

காமி

அவனைத் தொட்டால் அக்கணம் சாவாய்.
முன்னே கண்டு மோக முரைத்தேன்....
என்னகப் பொருளை எப்படித் தொடுவாய் ?
ஈருவா கருடன் சண்டை யிட்டு
மாறு செய்து, * மகார மைந்துடன்,
பைரவி வட்டம் பாங்குட னமைத்தே,
நாங்கள் செய்வதை நகலடிக் கின்றாய் !
"வாடா துரையே கூடா ஒழுக்கம்,
ஏனுனக் கிங்கே, நானுனக் கெல்லாம்
ஆவேன் ; இவ்வூர் அரசியான்" என்றே
தூயனைக் காமி தொடவே வாமி,

வாமி

நம்பா தேயிவ் வம்பியை ; யானே
நாத்திகர் திமிரை நலித்திடும் சக்தி ;
என்பை ரவனாய் இருப்பாய் ; உனக்குக்
குண்டலி சக்தி குளிரத் தருவேன்,
அமுதம் பொழிவேன், அமரவாழ் வளிப்பேன்,
சாகா வுடலைத் தருவேன் என்று
கையைப் பற்றக் காமியும் பாய்ந்து,
வாமியைத் தள்ளி வலியப் புடைத்தாள்....
காமியும் வாமியும் கட்குடி மயக்கால்,
கைகள் கலந்து கலகந் தொடங்கவே,
வாமப் படையும் காமப் படையும்,
"ஹா ஹா" வென்றே அமர்க்களஞ் செய்து,
கத்திக ளாலுங் கட்குடத் தாலும்,
ஊனெலும் பாலும், மீன்மல ராலும்,
தட்டுக ளாலும், தடிகளி னாலும்,
சடசட வென்றே தாக்கிப் பலமாய்
அடித்துக் கொண்டன ; கடித்துக் கொண்டன ;

*பஞ்ச மகாரம்—மச்சம், மாமிசம், மது, மாது, முத்திரை.

நாத்திகக் கூட்டம் ஆத்திரத் துடனே,
சாஸ்தா ,காளி, சண்டி, பைரவி
உருக்களை யெல்லா நொருக்கி யெறிந்து,
மண்டைகள் உடையச் சண்டை செய்யவே
கள்ளுங் காமமுந் துள்ளிய வெறிக்குச்
சொல்லே றுதெனச் சுத்தனும் அறிந்து,
விளக்கை யணைத்து, விதியிற் றுதித்துக்
கோயில் வாயிலைக் குறுக்கெனப் பூட்டி,
ஒதுக்கிடந் தேடி ஒண்டியாய்ப் படுத்தான்....

* * *

பஞ்சமா பதகப் பதர்களைத் திருத்தப்
பொய்யரை யடக்கி மெய்யறம் விளக்க,
நாத்திக ருக்கு நல்லறி வேற்ற
வழியை நினைத்து மனமுறங் காமல்,
கண்ணயர்ந் தாங்கே காலையி லெழுந்தான்....

* * *

காலைக் கடனைக் கருத்துற முடித்து,
சுத்த சக்திச் சுடரினை நினைத்தே
சஞ்சல மற்ற நெஞ்சுரங் கொண்டு,
திருவுடை நல்லார் ஒருவரைத் தேடித்
தெருத்தெரு வாகத் திரிந்தான் ; ஆங்கே
காரிர வெல்லாங் களியாட் டயர்ந்தே,
ஊரில் இன்னும் உறங்கினர் பலரே !
வகைவகை நோயால் வருந்தினர் பலரே !
வலிவெலாம் போக்கி மெலிந்தார் பலரே !
என்னசெய் வோமென் றேங்கினர் பலரே.
புத்தியைச் செருப்பாற் புடைத்தார் பலரே !
ஏன்செய் தோமென் றிரங்கினர் பலரே !
பித்துக் கொண்டு பிதற்றினர் பலரே.
வைத்திய னுக்கு வரும்படி மிகவே
செல்வ மிழந்து திகைத்தார் பலரே ;
கடனுக் கொளிந்து நடந்தார் பலரே !
அவனை இவனும் இவனை அவனும்
கெடுத்தா ரெனவம் படித்தார் பலரே !
காட்சிக ளெல்லாங் கண்டுளம் பதைத்துக்
கோயிலின் முன்பெருங் கூட்டங் கண்டான்....
பூட்டை யுடைத்துப் புகுந்துளே பார்க்க....
பயங்கரக் காட்சி, மயங்குறக் கண்டான் !
வாமிப் படையுங் காமிப் படையும்,

துற்றுயி ராகக் குடியுறக் கத்தில்,
வீழ்ந்து கிடந்ததை ஆழ்ந்து நோக்கி,
வருந்தித் தாமே திருந்துவா ரென்றே
தூயன் மெய்வழி துலக்கினு னங்கே.

சுத்தன் சன்மார்க்க முரைத்தல்

இங்கே கூடி யிருக்கும் மானிட
நண்பீர், உமக்கு நல்லதே சொல்வேன் :
கேட்டு நடப்பீர் கேடுகள் விலகும்.
இதோபா ருங்கள் ; இரவு முழுதும்,
கூடிக் குடித்துக் கூக்குர லிட்டே
ஒருவரை யொருவர் வெருவுறப் புடைத்தே
புண்பல பட்டுக் கண்ணயர்ந் துள்ளீர்....
இதுவோ மானிடர் இயற்கை வாழ்வு !
நல்லறம் விலகிய பொல்லா மனிதர்,
மனமடங் காத தினவுறு காமிகள்,
வேத மறியா விநோதப் பிராணிகள்,
தாமுங் கெட்டு, நாமும் கெடவே,
இந்த மாதிரித் தந்திரஞ் செய்தனர்.
கடவுள் பெயரால் கதைகள் கட்டி,
மனிதன் செய்யும் மயக்குக ளிவையே !
கொலையூண் கட்குடி விலைமகள் சேர்க்கை,
காமப் போட்டியாற் கைகலந் தடித்தல்,
ஆண்கள் பெண்ணுக் கடிமையாய் வாழல்,
இவற்றால் எய்தும் இன்னலைப் பாரீர்.
புத்தியைக் கெடுக்கும் போலிச் சுகத்தால்,
கண்ட பயனைக் கண்ணுறக் காணீர் !
சிந்தனை செய்மின் சிந்தனை செய்மின்,
பகுத்தறி வுள்ளோர் பாப வழியை,
விலக்கிப் புண்ணியந் துலக்கிட வாரீர் !
இச்சிற் றூரில், எங்கே பார்க்கினும்,
விருந்துச் சாலை, மருந்துச் சாலை,
கள்ளின் வாடை, காமச் சண்டை,
சூது பொறாமை, சொற்போர், மற்போர்,
பிணிதுய ரின்னல் பெருநோய் சூலம்,
அழிநோ யிவையே அரித்திடக் காண்கிறோம் !
பாப வழியாற் பணத்தைச் சேர்க்கிறீர் ;
குடிகூத் திக்கே கொட்டித் தீர்க்கிறீர்...
பெண்சிற் றின்பமே பெரிதெனக் கொண்டீர்.....
இரவைப் பகலாய்ப் பகலை இரவாய்

ஆக்கிக் காமம் அள்ளிப் புசிப்பீர்.....
எல்லாம் முடிவிற் பொல்லாப் பிணியே !
பகுத்தறி வுள்ள பயன்கெழு மாந்தர்
ஞாலத் திறைவனை நம்பிட வேண்டும்.
இறைவன் என்பவன் எதற்கெனக் கேட்பீர்....
பூதம் நான்கே பொருந்தி யுடலாம்,
சுண்ணமு மஞ்சளுந் தோற்றுஞ் செம்மைபோல்,
பூதச் சேர்க்கை பொருந்துயி ரென்பீர்,
இறக்கும் உடலுடன் இறப்பே மென்பீர் ;
இருவினைப் பயனை ஏற்கவு மாட்டீர்,
கண்ணுற் கண்டதே காட்சி யென்பீர் ;
புலனுக் கின்பமே பொழுதெலாந் தேடுவீர்.
உடலுயிர் மனத்தினும் உயர்ந்தசுத் தான்ம
சுகத்தையும் அறியீர். இகத்தையும் அறியீர்.....
பருவுடல் பெற்ற பயனையுங் காணீர்—
புலிநரி போலே புலாலை யுண்பீர் !
உருப்படும் வழியை உரைக்கிறேன் கேளீர் :
பொதுநலத் தொழிலே புரிந்துழைத் தீட்டி,
வந்ததைச் சமமாய் வகுத்துண் டுடுத்துக்
கொலையுண வின்றிக் கொடுமைக ளின்றி,
தம்போற் பிறரைத் தயவுடன் மதித்தே,
அன்பொடு நடந்தால் அஞ்சுதல் ஏனோ ?
காய்கனி தானியங் கடலை பால்தயிர்—
இவையே மனிதருக் கேற்றநல் லுணவாம்.
பசிக்கன லறிந்து புசிப்பது முறையே
மானிட மரபு வளரவே காதலாம் ;
தாதுவே உயிராம், தாதுவே உடலாம்,
அதைவீ ணாக்கின் ஆயுள் குறையும்,
உடலும் பிணியால் உளையும் கண்டீர்.
விலைமா தென்பதே இலையென் றாக்கி,
ஒருவன் ஒருத்தி யுடன்மனை யறத்தில்
ஒழுங்காய் வாழ ஊர்நல முறுமே.
அன்பீர், இன்றுடன் அழிவாழ் வொழிக !
இல்லற மாகிய நல்லற மோங்குக.....
தூய வாழ்வு துலங்குக ஊரில்....
காமவூர் மாறிச் சேமவூ ராமே !

* * *

சுத்தனிவ் வாறு சொல்லிய சொற்கள்,
பலபேர் நெஞ்சிற் பளிச்செனப் பட்டதும்,

இதுவே நலமெனப் பொதுஜன முணர்ந்து,
"நல்வழி காட்டி நடத்திட வந்த
குருவே உன்னைக் கும்பிடு கின்றோம்....."
என்றனர் அந்ததி எழுந்தனர் குடியர்...
சோம்பல் நெளித்துத் தூக்கங் கலைந்து,
கொட்டாவி விட்டுக் குறுகுறு வென்று,
வாமியைப் பார்த்துக் காமி மீண்டும்....
"என்கா தலனை எண்ணு தோழி" யெனச்
சண்டை தொடங்கச் சனங்கள் பற்றி
இரண்டு பேரையும் இருட்சிறை யிட்டுத்
தூயனுக்கே நேயரா னாரே !
புனிதனும் ஆங்கே பொதுநலப் படையால்,
ஊரைத் திருத்தினான், ஒழுக்கந் திருத்தினான்,
கட்கடை, காமக் கடைகளை யழித்தான்
மாதரை இல்லற வாழ்வில் அமைத்தான்.
உத்தம ரான புத்தர் சிலபேர்
தரும சேனனைத் தலைவனாய்க் கொண்டு
சுத்தனுக்குத் துணைநின் றுழைத்தார் ;
அறநெறி பரவ முறைமுறை முயன்றார்.
தூயனும் அவர்தருந் துணையினால் ஊரில்,
சன்மார்க்க சங்கம் தழைத்திடச் செய்தான் ;
துன்மார்க் கத்தைத் தூருடன் பெயர்த்தான்.
ஊரார் நன்றியை உரிமையாய்ப் பெற்றுத்
தொண்டால் மகிழ்ந்து, தூயவன் ஆங்கே
வந்த பிக்ஷுக்கள் வழித்துணை யாகப்
புத்த புரிக்குப் போனதைச் சொல்வோம் !

5. புத்த ஜோதிப் படலம்

தரும சேனர் தருந்தரு மச்சுதை,
பருகு நீரும் பசிக்கமு தும்எனப்
பெருக வுண்டெம் பிரானும் அவருடன்,
பொருவில் புத்த புரியை யணுகினான் !

வெள்ளொ ளியை விசாக நிறைமதி,
அள்ளி வீசும் அழகிய நாளிதே.
உள்ள மெல்லாம் உயிர்க்கரு ளேநிறை
வள்ளல் ஞான வரோதய நாளிதே

"இந்த நாளில் எமது திருநகர்
வந்த உத்தமர் வாழ்"கெனக் கூறியே,
அந்த வூரின் அறத்துறை யாளர்தம்
சிந்தை பொங்கித் திருமடத் தேற்றனர் !

ஊரில் உத்தமர் செய்யுப சாரத்தை
சீரி யர்கள் செழிப்புறக் கொண்டபின்
பூர ணம்பெறு புத்தரின் ஆலயம்,
ஆரி யர்கள் அனைவருங் கூடினர் !

பொருவில் புத்தரைப் பூசனை செய்தபின்,
இருகை கூப்பி இறைவன் சரிதையைத்
தரும சேனர் தயவுடன் சொல்கெனத்
திரும டத்தினர் செஞ்சொலின் வேண்டினர் !

"அன்னதே என் அவா" வெனச் சுத்தனும்,
தன்ன றத்திற் சிறந்த தருமனும்,
புன்ன கையுறப் புத்தரைச் சங்கத்தை,
முன்னர் வாழ்த்தி முகமலர்ந் தோதினன் :

வானுங் கேட்டது மாமதி கேட்டது,
நானி லமு நயமுறக் கேட்டது,
தேனின் இன்னிய செஞ்சொல் வரமுனி,
ஞான புத்தனை நாட்டிய காதையே !

புத்த ஜோதி

ஆருயிர் உலகுக் கெல்லாம் அன்புடன் அருளு மேவிக்
காருயர் வானம் போலக் கருணையே புரிந்த வள்ளால்,
பாருயர் இன்ப மேநின் பணிதரும் இன்ப மானுய்.
சீருயர் புத்த தேவா சேவடி பணிகின் றேனே !

இங்குல குயிர்க ளெல்லாம் இடர்பல வருந்தக் கண்டு,
பொங்கிடும் இரக்கத் தாலே போதியின் அடியில் நோற்று,
வெங்குலத் துயர மான விரியிருள் ஒழிய ஞானச்
செங்கதிர் வீசி வந்த தினகரன் சரிதை கேளீர் !

வெருக்கொளும் அரக்க மாயம் வேருடன் விழ வேண்டி
உருக்கொடு வந்த சித்தி வேந்தனை யொத்த வேந்தன்,
கருக்கொளும் போதே ஞானக் கதிருடன் கலந்த தூயன்,
அருக்கனைப் போன்ற புத்த ஜோதியின் அருமை கேளீர் !

செழுந்திரு வழகன், வீரத் திருவுறு மார்பன், இன்பக்
கொழுந்தொளிர் செல்வன், இந்தக் குவலய உயிர்க ளெல்லாம்
அழுந்திருள் ஆசை வாய்ப்பட் டழுந்துயர்க் கிரங்கி யிங்கே
எழுந்தருள் புத்த ஜோதி யிறைவனைப் போற்று வோமே !

அந்நாளைப் பூத்த தேவன், ஆரியப் பரத நாட்டில்,
உத்தர கோசலத்தில், உரோகிணி மாலை சூடிச்
சித்திர விமானம் ஓங்கும் செழுநகர் கபில வத்து
புத்தேளிர் விர வந்தான் பொலிரவி மரபு வாழ.

சாக்கிய மகனைப் பெற்ற வரமிகு தந்தை யானேன்,
சாக்கியர்க் கரசன் சுத்தோ தனனெனச் சரிதை சொல்லும் ;
பாக்கியம் பெற்ற தாயார் பத்தினி மாயா தேவி,
நோக்கினி லுயர்ந்த செல்வி, நுவலருங் கற்புத் தெய்வம்.

எல்லையிற் செல்வ மெல்லாம் எய்தினும் இந்த நல்லார்,
இல்லறஞ் செழிக்குஞ் செல்வன் இல்லதோர் குறையி னாலே,
மெல்லிய மழலை கேட்க விரும்பியே விரதங் காத்தார்.
அல்லலைத் தீர்க்க வந்தான் அருட்சுடர் அனைய மைந்தன்.

திசைதிசை புவியி னுள்ளஞ் சிலிர்த்திடப் புதுமீன் விண்ணின்
மிசையெழுந் தொளிரப் பூக்கள் விரியுலும் பினிவ னத்தில்,
பசிய அசோகில் அன்னை பச்சிலை பறிக்கும் போதே,
இசைபெறுந் துசித ஜோதி யிறைவனும்பிறந்தான் மாதோ !

களித்தனன் அரசன் ; பிள்ளைக் கவலைதீர்ந் ததுவென் றன்னை
திளைத்தனள் இன்ப வாரி. குடிகளும் உவகை கொண்டார் ;
தளிர்த்தது சுத்த போதி தருமமென் றறிந்த மேலோர்
ஒளித்திரு மைந்தன் செவ்வி யுரைத்தனர் பொருத்த மாக !

தண்கட லெழுந் தங்கக் கதிரென
மண்க ளிக்கப் பிறந்த மதலையைக்
கண்கு ளிர்ந்திடக் கண்டெழு நாளினில்
விண்பு குந்தனள் மேதகு மாயையே !

தாயி லாத தளிரிளம் பிள்ளையை,
ஏய சிற்றன்னை எண்மடங் கன்புடன்
தூய சாக்கியர் தொன்மர போங்கிடத்
தேயம் வாழத் திருத்தி வளர்த்தனள்.

ஆற்றி னேரம் அடர்வனம் போலவும்,
நாற்று நட்டுயர் நன்னிலம் போலவும்,
போற்றி மைந்தன் புதுப்புதுப் பொன்னெழில்
ஏற்று நாளும் இனிது வளர்ந்தனன் !

ஏடு நல்கும் எழுத்துக் கலையெலாம்
ஓடும் ஓட்டத்தில் ஊதி யெறிந்தனன் !
பீடு பூண்ட பெருந்திரு வுள்ளத்தே
தேடுங் கல்வி தெவிட்டறக் கற்றனன் !

உருவி லோங்கினான், உள்ளத்தி லோங்கினான்,
கருவி யாகிய கல்வியி லோங்கினான்,
திருவி லோங்கினான், செஞ்சொலில் ஓங்கினான் ;
அருளில் ஓங்கும் அதிசயப் பிள்ளையே !

அன்பு மிக்கவன் அம்பிலு மிக்கவன்,
திண்பு மிக்கவன் செம்மையின் மிக்கவன்,
என்பு ருக்கும் இரக்கத்தின் மிக்கவன்,
இன்ப மிக்க விளந்திருச் செம்மலே !

சீர்த்தி மிக்கசித் தார்த்த னெனும்பெயர்
போர்த்த வீரன், புவியின் இயல்பெல்லாம்
பார்த்த வீரன், உயிர்கள் படுந்துயர்
தீர்த்த வீரன் கருணையின் செல்வனே !

வில்லும் வாளும் விளரியும் வேலுடன்
மல்லும், தேரும், மதகரி யானையும்,
கொல்லும் போரும், கொடியினைக் காத்தலும்,
வல்லவன், அருள் வள்ளலென் றேங்கினன் !

பந்த யத்திற் பறக்கும் பரிகரி,
நொந் திளைப்பதை நோக்கி நிறுத்துவான் !
விந்தை யாகிய வேட்டை விலங்குகள்,
வந்து முந்தும் வடிகணை பாய்ச்சிடான்.

*தத்தன் சுட்ட தளிரிளம் அன்னத்தை
அத்தன் ஆற்றி அருளின் விடுத்தனன்.
குத்திக் கொல்பவர்க் கன்று குலவிசை
வைத்துக் காப்பவர் வண்மைக் குரியதே !

உலகியல் அறிதல்

பிற வுயிர்தன் பிரிய வுயிரெனும்
அறமும் அன்பும் அருளு மிகுந்தவன்,
புறவைக் காத்த சிபியினைப் போன்றவன்,
அறிவைக் கண்டுளம் அஞ்சினன் வேந்தனே !

பிள்ளையின் அருட் பித்தந் தணித்திடும்,
கொள்கை கொண்டு குளிரிளங் காலையில்,
கள்ளலர் பொழில் காட்டும் இயற்கையில்,
உள்ள மோதி யுலாவித் திரிந்தனன்.

*மைத்துனன் தேவதத்தன்

பசு வனத்தினைப் பாத கனியினை,
அசையும் ஆற்றினை, ஆன்ற மலையினை,
இசை பறவையை, இன்னியற் காட்சியை
வசையி லாத மகனுக்குக் காட்டினன் !

உலகம் இன்பம், உயிர்த்தலும் இன்பமே,
நலம் பொதிந்ததிந் ஞால வியற்கையே,
பலம் அறிவு படிப்பிசை அன்புடன்
இல கிளமையும் இன்பமென் றோதினன்.

சித்தார்த்தன்

எண்ணிப் பார்த்தனன் ; இவ்வுல கெந்தையே
உண்ண ஒன்றினை யொன்று நிதங்கொலை
பண்ணும் பாபப் படுகள மானதே !
புண்ணி லாது புலப்பட வில்லையே !

பின்னை மூத்துப் பிணியின் இறத்தலும்,
தள்ளொ ணாக்கிழ வன்சமு சாரத்தில்,
வெள்ளெ லும்பு வெதும்ப வுழைத்தலும்,
வெள்ளை யாக வுலகை விளக்குமே.

மணப்ப றையிங்கு மங்கலங் கொட்டிடும் ;
பிணப்ப றையங்கு பேயென் றலறிடும் ;
பணப் பொலிவுடன் பாழும் வறுமையும்,
இணைப் புறும்உல கெங்குந் துயரமே !

பாரி யல்பின் பலநிறக் காட்சி,கண்
ணீர் கலந்து நிலவுந் திரைப்படம் ;
போர் கலந்ததிப் பொய்யுடல் வாழ்க்கையே,
நேர்கண் கண்ட நிசமிது தந்தையே.

சுந்தோதனன்

புதன்செவ் வாயிடை போகுமிப் பூவினில்
இத மகிதம் இரண்டும் இயற்கையே.
புதிய தாகிப் பொருள்கள் வளர்ந்துபின்
முதிய தாகி உதிர்ந்து முளைக்குமே !

ஆடிக் காற்றில் அலைந்துதிர் தாவரம்,
வாடிப் பின்பு வசந்தப் புதுமையாம்.
ஓடும் ஆவி உடலை உதறினும்,
தேடி யின்னொரு தேகத் துயிர்க்குமே !

செல்வ னோயிந்தச் சிந்தனை யேனினி ?
நல்ல கல்வியு ஞானமு மெய்தினை;
செல்வ முள்ளது ; சீர்த்தியு முள்ளது ;
வில்லும் உள்ளது மேதினி யாளுவாய் !

அரசும் ஆட்சியும் ஆண்மையும் வீரமும்,
முரசு விம்மு முரண்களும் வெற்றியும்,
பரிச னங்கள் பணிந்துநின் றேத்தலும்
சரி யுனக்குத் தளிரிளஞ் செல்வனே !

இளமைக் கேற்றநல் லிந்திர போகங்கள்,
அளவி லாமல் அனுபவித் திவ்வுடல்,
உளவ ரையில் உவப்புற வாழலே,
அழகு னக்கென் அரசிளஞ் செல்வனே !

சித்தார்த்தன்

வந்திருந்து செல்லுமுயிர் வாழ்வைக் கண்டேன்,
வாழுமுயிர் வருந்துகின்ற வருத்தங் கண்டேன் !
இந்தவுல கியற்கையினை எதிரே கண்டேன்,
இருவினையின் பயனெல்லாம் எளிதே கண்டேன் ;
விந்தைபெறும் அதிசயங்கள், விரைவா யெல்லாம்
விடிந்ததுவும் வெயில்மஞ்ச ளாகக் கண்டேன் !
எந்தையெனக் குரைத்ததெலாம் ஏமாற் றத்தின்
இந்திரஜா லக்கனவென் றெதிர்சொல் வேனே !

வருந்துகின்ற வறியர்பலர் வாசலண்டை
வயிறெக்கி வாடக்கண் டிரங்க மாட்டார் ;
விருந்துண்பார் செல்வர்க்கே விருந்து வைப்பார்,
விறலியரின் மடிமேலே வீழ்ந்து, காலை
மருந்துண்பார் ; மருந்துக்கே உடலை டுத்தார்,
மயானத்தை நோக்கியவர் வளைந்து செல்வார் ;
பருந்துண்ணும் பருவுடலை நம்பேன் ஐயா,
பாரினிலே பந்தமிலாச் சுகமொன் றுண்டோ ?

தந்தையிவ் வுரைகள் கேட்டுத் தன்குலச் செழிப்பி னுக்கே,
வந்தது மோச மென்றே, மனமிகத் தளர்ந்து, நீண்ட
சிந்தனை தேக்கி, யிந்தச் சிறுவனை வசப்ப டுத்த
இந்திர போகம் போன்ற மாளிகை யெடுத்தான் மாதோ !

பிஞ்சிலே பழுத்த ஞானம் பிதற்றிடு மகனை மாற்ற,
நஞ்சுறு நயன வேலு, நாட்டியக் கலையும் பாட்டும்,
பஞ்சரக் கிளியைப் போன்ற பாகின மொழியுங் கொண்ட
வஞ்சியர் தம்மை யந்த மாயமா ளிகையில் வைத்தான்.

இயலழ கென்னே, ஆற்றின் இசையழ கென்னே, ஆடும்
மயிலழ கென்னே, பாடும் வகைவகைப் புட்க ளென்னே !
நயமுறு கனிக ளென்னே, நாண்மலர்த் தென்ற லென்னே,
கயல்விழி மாத ரென்னே.....கண்கவர் காட்சி யென்னே !

நாளெலா மின்ப மூட்டி நவமணி யழகு சொட்டும் ;
நாளெலாம் ஆடல் பாடல் நவரசங் குலுங்க வோங்கும் ;
நாளெலாம் அறுசு வைகள் நாவுக்கு விருந்த ளிக்கும் ;
நாளெலாம் தெவிட்டாப் போக சுகங்களே நல்கும் வாழ்வே !

மெய்யழ காடல் பாடல், விருந்தெலாம் உலக மாயப்
பொய்யழ கூட்டும் போலி மயக்கெனப் புறமொ துக்கி,
மையலை வளர்க்கு மாதர் வலைப்படான் ; ஞான தீரன்
வையகத் துயரை யெண்ணி மருந்தினைத் தேடி ஞனே !

ஈதெலாம் பயனிலாமல், இகத்துயர்க் கிரங்கு வானைக்
காதலாற் கட்டத் தந்தை கடிமணச் சூழ்ச்சி செய்தான் ;
மேதகு மீளைய மன்னன் பிறந்தநாள் விழா நடத்தி,
மாதரின் அழகை யெல்லாம் வாலிபன் காணச் செய்தான் !

நாட்டினில் அழகு மிக்க நல்லிளங் கன்னி மார்கள்
வாட்டடங் கண்கள் வீசி, மயில்கிளி, யன்னம் பொன்மான்
கூட்டமே போல வந்து, குமரன்சித் தார்த்த னுங்கே
நீட்டிய பரிசைப் பெற்று, நிளணி யாகச் சென்றார் ! 220

"ஆண்மகன் இவனைப் பெண்மை அடியுடன் கவரவில்லை;
வீணிந்த முயற்சி" யென்றே விசனிக்குந் தந்தை பொங்க,
வாணகை யொளிர நீண்ட மான்விழி மனதைப் பேச,
நாறுடை மின்ன லென்ன யசோதரை நங்கை வந்தாள்.

குணத்திரு வழகிக் கையன் குளிர்நகை காட்டி, நல்ல
மணித்திரு மாலை சூட்டி, மன்னவன் மகிழப் பின்னே
*அணித்தொரு பந்த யத்தில் அளவறு வீரங் காட்டி,
மணத்திரு மாலை சூட்டி மனையறம் புகுந்தான் மாதோ !

பொன்னொளிர் போகமான புதுமண வாழ்க்கை பொங்கி,
மின்கொடி பழுத்தாற் போல மிகமகிழ் † மகவை நல்க,
"இன்றொரு பந்தம்வந்தென் இன்பத்தைச்சூழ்ந்த" தென்றான்;
மன்னுயி ரிடுக்க ணெல்லாம் வரிசையாய்க் கண்ட ஞானி !

விறலியர் ஆடல் பாடல் விருந்தளி யமளி யின்பம்,
நறவினும் இனிய தூய நன்மனை வாழ்வின் இன்பம்,
மறலிகொள் இன்ப மென்றே மனத்தினில் வெறுத்து, நாளுந்
துறவியின் இன்பமேமெய் யின்பெனத் துணிந்து நின்றான் !

---

*யசோதரை தந்தை சுப்பபுத்தன் வைத்த வீரப் போட்டியில், தேவதத்தன், அர்ஜுனன் ஆகிய இருவரையும் வென்று, சித்தார்த்தன் யசோதரையை அடைந்தான்.

†மகன் இராகுலன்

துயிற்சுவை யென்னே, மாதர் தோட்சுவை யென்னே, சுற்றுஞ்
செயற்சுவை யென்னே, உண்ணத் தின்சுவை யாதாம் என்னே!
மயற்சுவை யனைத்தும், சாவின் வாய்ச்சுவை என்ன நிந்தான்
இயற்சுவை யுள்ளே கண்டார் இகச்சுவைக் கல்லை தாமோ ;
வாடிய மலரைத் தூய வாரியிற் புயலே, நாதர்,
விடிய இலையைக் கண்டே, விழியினின் றருவி பாய்ச்சி,
சேடியர் மனைவி மக்கள், திருவுடன் மீண்டும் நின்பாம்.
நாடக உலகச் சீர்போம் நமன்விடுந் திரைக்குள் என்றான்!

ஊர்க் காட்சி

அன்ன நாளினில் அரசிளங் குமரனோர் பகலில்,
என்னைச் சூழுல கியல்பினைக் காணுவே னென்று,
முன்னரே தகு முறையினில் அணிபல செய்த,
நன்னகர் வலம் வந்தனன் நவமணித் தேரில்!

பிணி யிடும்பைமூப் பிறப்புடன் பிறதுயர் எவையும்,
அணிந்தெதிர் வரல் குற்றமென் றறைபறை முழங்க,
பணிந்த சேவகர் பாதையைப் பார்த்துமுன் னடந்த
மணியு மங்கல வனப்புமே மகிழ்வுறக் கண்டான்!

ஆர வாரங்கள் அணிமணி யமளிகள் எங்கும்!
பேரின் பம்உல கென்கிற பேச்சுக ளெங்கும்!
மூர லார்திரு மங்கையர் முழங்கிசை யுடனே
ஆரி யத்திருக் கூத்துகள் ஆடினர் முன்னே!

அட்ட மங்கலம் ஏந்திடும் பாவையர் அழகும்,
வட்ட மாய்வரு மாதரின் குதிப்புறு பாட்டும்,
சட்ட மாகிய சதிர்களும், சகத்துயர் மறைக்குந்
திட்ட மாகிய திருக்களும் சென்றன முன்னே!

கிழவன் வருதல்

இசையெ ழுப்பினர் இவ்வுல கின்பமே யென்று;
நசை யெழுப்பிய நாடகக் காட்சியின் பின்னே
வசையும் உண்டென வாய்மையை விளக்கிட வேண்டி,
அசைந் தசைந்தொரு கிழவனூர் வந்தன ராங்கே!

எங்கு வந்தனை? ஏகென வேகமாய் அவரை
வெங்க தத்துடன் சேவகர் வெருட்டிடக் கண்டே,
வங்கி வாடிய நரைதிரை வடிவினை நோக்கி,
அங்கு தேரினை நிறுத்தினன் அரசிளங் குமரன்.

கண்ணுற்றான்; வயது மூத்துக் காலனை வணங்கி ஆடி,
மண்ணுற்ற வாழ்வி யல்லை வழுத்திடுங் கிழவன் சோர்ந்து,
"விண்ணுற்ற புகழோய், நீயிவ் வேடமு நாடுவாய்" என்ன,
எண்ணுற்றான் போலிப் பூவின் இருண்மருங் கறிந்தான் ஞானி.

மற்றொரு நாளிற் செற்ற பிணந்தனை வருந்திக் கண்டான்.
பிற்றொரு நாளில் ஏழை மக்களின் பிணியைக் கண்டான்.
உற்றொரு நாளில் ஆசை உலகுறு துயரங் கண்டு,
கற்றனன் கண்க ளாலே கருத்தினில் எழுதி னானே !

பூத்த பூக்கள் புழுதிமண் ணாவதும்,
மூத்தி ளமை முதுமையின் வாடலும்,
காத்த பொய்யுடல் காலனுக் காவதும்,
பார்த்துப் பார்த்துப் படித்தனன் ஞானியே.

அற்புதம் அற்புதம் எனும் யாவையும்
புற்புத மெனப் போவதைக் காண்கிறோம் !
பொற்பின் கூட்டிற் புகும்உயிர்க் கிள்ளையும்
நிற்ப தில்லை ; நிலைப்பதிங் கில்லையே !

பிறப்பி றப்பெனும் பேரிருள் வாயிலாற்
சிறைப்பு குந்து வருந்திடுஞ் சென்மத்தை
மறப்பி னோங்கிய மாயைக் கிடமின்றித்
துறப்பக் கற்றவர் துன்பமில் லார்களே.

அரவுஞ் சட்டையும், ஆடியும் பட்டமும்
சரமுந் தூணியும், சக்கையுஞ் சாறும்போல்
உருவு வாளும் உறையு மெனவினை
மருவு யாக்கையும் வாழ்க்கையு மாகுமே !

அலையும் ஆசையும், ஆணவத் துள்ளலும்,
கொலையும் போரும் கொடிய பொறாமையும்,
முலை மயக்கமும் மோக முயக்கமும்,
வலை விரித்து வதைத்திடும் வாழ்க்கையே !

பேத புத்தியி லேபிறந் தோங்கிய,
சாதி மாமதச் சண்டைகள் எத்தனை,
வீதிச் சண்டைகள் வீட்டினுட் சண்டைகள்,
வாதிச் சண்டைகள் வாழ்க்கையில் எத்தனை !

கல்வி மிக்கவர் கைநொடித் தேங்கலும்,
செல்வம் ஏழையைத் தின்று செழித்தலும்,
நல்ல வர்க்கு நலங்கெடு தீயவர்
அல்ல லாற்றலும் ஆகுமிப் பூமியே !

எங்கு நோக்கினும் இன்ன லிடர்களே !
எங்கும் வெய்ய ரிழைத்திடுந் தீமையே !
எங்கும் ஆசையின் இந்திரச் சாலமே
இங்கு வாழ்க்கையில் இன்பமுண் டாகுமோ ?

வருகிறேன் உலகே மயக்கங் கெடத்
தருகிறேன் எனைத் தாமத மின்றிநான் ;
உருகினேன் உனக்கே யென உத்தமன்
பெருவி சனம் பிடித்தழு தேங்குவான் !

புய லுழன்ற புணையினைப் போலவும்,
மய லுழன்ற மனத்தினைப் போலவும்,
துய ருழன்றவித் தொல்புவி யின்புறத்
துயிலினுந் "துறப்பேன்" எனச் சொல்லுவான் !

காலக் கிழவன்

இனைய வள்ளல் இரவினில் ஓர்தினம்,
நினைவெ லாந்துற வாகி நெடிதுறத்
தனை மறந்து துயிலுந் தருணத்திற்
கனவில் வந்தனன் காலக் கிழவனே !

விழித் தெழுந்திரு ; வீண்மயக் கின்பத்தைப்
பழித் தெழுந்திரு ; பந்த விலங்கினை
அழித் தெழுந்திரு ; ஆண்மைத் துறவறஞ்
செழித் தெழுந்திரு, செல்லத் தருணமே !

இளமை மங்கும், இருநிதி மங்கிடும்,
வளமை மங்கும், வலிவுந் தளர்ந்திடும்,
உளவை போகும், உரிமை உனக்குநீ,
இளகினுய், துற வேற்கத் தருணமே !

இறைவ னுயினும் ஏழைய னுயினும்,
பறைய னுயினும், பார்ப்பன னுயினும்,
பிறவி பெற்றவர் பேதுற் றிறப்பவர் ;
சிறை திறந்தது செல்லத் தருணமே !

அரிய வணச்சுகம் ஆண்டிட வேண்டிடின்,
உரிய நல்லிசை யோங்கியிங் கேங்குவாய் !
பெரிய பேரின்பப் பேற்றினை வேண்டிடின்
தெரிவித் தேனிது செல்லத் தருணமே !

இங்கி ருந்திடின் இப்புவி யாண்டுபின்
மங்கி மாண்டுமண் ணுகி மறைகுவாய் !
அங்கு நீயரு ளாட்சியை நாட்டியே
தங்கு வாய்துற விற்குத் தருணமே !

வருண வேற்றுமை மூட வழக்கங்கள்,
மரண வாதனை மாறத் தவஞ்செய்தே
அருண ஜோதியைப் போலறி வோங்கிடத்
தருணம் என்று கிழவனும் சாற்றினுன் !

புத்தன் துறவு

முதியன் சென்றதும், மோகத் தளைகளைக்
கதுமெனக் கழற் றிப்புறம் வீசியே
சதிசெய் தங்க மனையினைத் தாண்டிட
மதியை யூன்றி மகானும் எழுந்தனன் !

புத்தன்

விழித்தனன் எழுந்து வீரத் துறவெனும் விரதம் பூண்டேன்;
பழித்தனன் வீட்டை ; யிந்தப் பாரெலாம் உறங்கும் வேளை
அழித்தனன் ஆசை யெல்லாம் ; ஆருயிர் இரக்கம் பற்றி
இழுத்தெனை ஏகு மையே, இரும்பினைக் காந்தம் போலே !

அன்றிலைப் போலே என்னை அணைந்தசெவ் விளமென் பாவாய்,
என்றனிர் அமுதச் சேயே, எந்தையே, பந்த வாழ்வே,
வன்றவக் கான மென்னை வாவெனக் கூவுகின்றே,
சென்றுநான் மீளு கின்றேன் செகமகிழ் மருந்து கொண்டே !

சோகுறும் உலக மாயை துகளெனத் தெளிந்து, பற்றின்
மோகுறு விலங்கை யின்னே முறித்தெறிந் துயிர்கட் இன்பம்
ஈகுறும் தாகங் கொண்டேன் ; இனியநன் மருந்தை நாடிப்
போகுவேன் உறங்குங்கண்காள்புகலுமின்விடையென்றனே!

தங்கமா ளிகையோ ? வெய்ய தணலின்மா ளிகையோ ? இந்தச்
சங்கையில் களியாட் டத்தைச் சாவுபின் சிரிப்ப தாமே !
கொங்கையின் சுகமும், ஆடல் பாடலின் கூத்துங் கண்டேன் !
இங்கினிச் சாந்த மில்லை ; இதைத்துறந் தேகு வேனல் !

சிறையெனச் சுற்றி வஞ்சச் சிரிப்பினல் எனைவ ளைத்த,
உறவெலாம் உறங்கும் வேளை ! உள்ளமுந் தனிமை நாடி,
மறவெனச் சொல்லும் வேளை மருந்தொன்றை நாடி, உண்மை
அறிவெனு மலையில் ஏறி அமைதியாய்ச் செல்வே னின்றே !

எனக்கென வாழ்ந்த தெல்லாம், எனதியான் என்ற தெல்லாம்,
இனத்துடன் கலந்த தெல்லாம், இகந்தரு போக மெல்லாம்,
மனத்துடன் விடுத்தேன் ; மோக மாயத்தைத் துறந்து, தூய
வனத்தினில் வாய்மை கண்டு, பிறர்க்கென வாழு வேனே !

பொன்னெல்லாம் புவியின்மாசு பொருளெலாம் பொன்று மண்ணே;
பெண்ணெலாம் பிணியின்தூது ; பிறப்பெலாம் இறப்பி னேசன் ;
மண்ணெலாம் அகந்தை ; இந்த மாயையில் மோத லுற்றல்,
புண்ணலால் வேறென் றில்லை, போகிறேன் அடவி யென்றன் !

விடுவிடு நெஞ்சே, யிந்த வீண்மயக் குகளை யெல்லாம்
படபட வென்ற றுத்துப் பாசத்தை வெறுத்தொ துக்கி,
அடியெடு ; படுத்து றங்கும் ஆசைகொள் உலகை மீறி,
நடநட....வென்று முன்னே நடந்தனன் ஞான தீரன் !

வனஞ் செல்லல்

தொட்டனன் அக்கணந் துரிசுறுங் கதவுகள்,
விட்டதுஞ் செல்வழி, விடுதலை விடுதலை !
சட்டெனக் குதிரைமேல் தாவினுன் கானகம்.
எட்டினன் அக்கணம் எய்தினுன் விடுதலை !

பேதைச் செல்வப் பிணிப்பை யுதறினேன் ;
மாதர் ஆசை மயக்கை மறந்தனன்,
தாதைக் கென்னிலை சாற்றி யமைதிசெய்
*வாது காவென வாங்கினன் வேகமாய் !

மணியணி மயிர்முடி யறுத்து வீசினுன்.
அணிகளைந் தெறிந்தனன் அரசி ளம்பிரான்
துணிவுறத் துறந்தவித் தூய தீரனைப்
பணிவுற முனிவரர் பரிவி னேற்றனர்.

வையம் ஆளப் பிறந்த வரதனும்,
ஐய மேந்தி அரசக் கிரகத்தில்,
மெய் யொடுக்கி விரதம் பயின்றனன்,
ஐயந் தீர்ந்திலன் ஆழ்ந்தினுஞ் சிந்தித்தான்.

திட வுறுதி செறிந்த மனத்தினுன்,
அடவி தன்னில், அடம்பெறு யோகங்கள்,
உடல் வருந்த உழைத்துப் பயின்றுமே,
அடைந்தி லான்அத னுலொரு லாபமும் !

இளந்தளிர் வேனி லுள்ளம் இசைத்திடுங் குயிலைக் கேட்பான்;
கிளர்ந்துயர்மலையைக்கேட்பான் ; கெழுங்கனிமரத்தைக்கேட்பான்;
வளர்ந்திசைநதியைக் கேட்பான் ; மனத்துற விகளைக்கேட்பான்!
தளர்ந்தமன் னுயிர்கட் கின்பந் தந்திடும் மருந்தைத் தானே !

பேரருள் விழியைக் கண்டு, பெரியரும் வணங்கு வார்கள்,
கூர்நகப் புலியும் சாந்தக் குணமுகம் பணிந்து நிற்கும்,
கோரிய தளிக்குந் தங்கள் குலதெய்வ மென்று மாந்தர்,
வாரிசக் கழல்கள் போற்ற மங்கல முரைப்பான் ஐயன் !

* வாதுகன் : *கூடவந்த குதிரை வீரன்.* கண்டகன் *என்ற குதிரையிலேறி, கௌதமன் பிம்பிசாரன் ஆண்ட ராஜக்கிருகத்திற்கு அருகே யிருந்த காட்டுக் குகைக்கு வந்தான்.*

இறந்தவென் மகவை நீரே எழுப்புமென் றிறைஞ்சும்பெண்ணை
"இறந்தவ ரில்லா வீட்டில் இரந்துவா கடு"கென் றுனே;
அறந்தவ றுத தூயன் அருளிய படியே தேடிப்
பிறந்தவர் இறப்பா ரென்றே பெண்மணி யறிந்து கொண்டாள்.

உயிர்க்கொலை தடுத்தல்

வீட்டின்பம் விழைந்த *மன்னன், வேள்விக்குச் சென்ற மந்தை
ஆட்டிடை நொண்டி நொண்டி அயர்ந்ததோர் குட்டி தன்னை
வாட்டந்தீர்த் தருட்க ரத்தால் வாரித்தன் தோளில் மெல்லப்
போட்டுயிர்க் கொலை தடுக்கப் போயினன் கருணை யாலே!

ஆணவ வேட்கையை அருட்சு டருக்கே
ஊனென வழங்குதல் உண்மை வேள்வியாம்;
பேணுயிர் பிரித்தவி பெய்துண் வேள்விகள்,
வீண்கொலை யல்லது வேறென் றில்லையே!

இத்தகைக் கொலைகளை யியற்றி யின்புறும்
பித்துடைப் பார்ப்பனர் பிம்பி சாரன்பேர்
வைத்திழை வேள்வியிற் பசுவைக் காத்திடக்
கத்தியைத் தடுத்தனன் கருணை வள்ளலே!

"அந்தணர் அவிசொரிந் தாற்றும் வேள்வியில்
வந்திடைத் தடுத்திடும் வம்பன் யாரடா!
சந்ததம் பிராமண சாபம் வந்திடும்,
பிந்து செல்" என்றனர் பிழைக்கும் வேதியர்.

புத்தர்

ஆட்டை மந்திரஞ் சொல்லி யறுத்தே,
அனலில் வாட்டி அவியுண்டு மோட்ச
வீட்டைப் பார்ப்பவர் வேதியர் அல்லர்
வேதத்தை வெறும் மொந்தை யுருவாய்ப்
போட்டுக் கூவும் புலவரும் அல்லர்;
பொய்யொ ழுக்கங்கள் பூண்டவர் அல்லர்,
திட்டு திட்டெனத் திட்டுவா ரல்லர்
திட்டி தோடங்கள் செப்புவா ரல்லர்.
இன்பமே யெண்ணி இன்ப மியற்றி,
இனிமையே சொல்லி யெவ்வுயி ருக்கும்,
அன்பு பூண்டவர் அந்தணர் ஆவார்,
ஆத்ம தீரர்கள் அந்தண ராவார்.

*பிம்பிசாரன்

என்பு ருகும் இரக்கத் தினாலே
எவ்வு யிருந் தமதென் றிசைத்தே
துன்பு நீக்கிடுந் தொண்டுகள் செய்வார்
தூய வந்தணரே, தொழத் தக்கோர்.

பகுத் தறிவைப் பரிந்தருள் வேதம்,
பாரு யிர்களைத் தானெனப் பார்த்தோர்
தொகுத் தளித்த சுகவழி வேதம்,
தூய வாழ்வைத் துலக்கிடும் வேதம்.
மிகுத்த சாது விலங்கின் கழுத்தை
வெட்டச் சொல்வது வேதம தாமோ ?
புகுத்து மாடுகள் பூவுயி ரன்றோ ?
புரியு மிக்கொலை பூசுரர்க் காமோ ?

குடிக்கப் பாலுங் குளிருக்குப் போர்வையும்,
கொடுக்கும் ஊமைக் குழந்தையைக் கொல்லவோ ?
தடுக்கொ ணச்சிறு பிள்ளையை வாளினால்
மடிக்குஞ் செய்கை மனிதரின் செய்கையோ ?

இன்னு யிரை இரக்கமொ டென்றுமே
தன்னுயி ரெனத் தாங்குத லின்றியே,
மன்னு யிரை மடித்துப் பிணத்தினைத்
தின்னச் சொல்வது செம்மறை யாகுமோ ? 460

பயிரி ருக்கப் பசித்துப் புசித்திட,
உயிர்களை அறுத் துண்ணுத லாகுமோ ?
செயிரி லாதஇச் சீவனைக் கொல்லுவோர்
மயிரி ழையும் படைத்திட வல்லரோ ?

தினை விளைக்கத் தினைவிளை வேயென
வினை விதைக்க விளையும் இருவினை.
நினைவி லுங்கொலை தீது; நினைத்திடீர்....
அனைவ ருக்கும் அருளை யியற்றுவீர் !

எட்டியை எரு விட்டு வளர்க்கினும்,
கட்டி மாம்பழ மாகக் கனியுமோ ?
கட்டி யாட்டைக் கடுங்கொலை செய்திடின்,
வெட்டி னோர்க்கு விமானம் இறங்குமோ ?

கொன்று தின்று கொழுத்த கொடியரே
இன்று ஞாலம் இகற்கள மாக்கினர்;
கொன்று தின்பவர் கும்பி சுடலையே.
என்று மன்னவர்க் கில்லை யமைதியே !

அழிக போர்கள் ! அஹிம்ஸை விளங்குக !
பொழிக ! வேதப் பொருட்சுவை வாழ்விலே.
பழிகள், கோரப் பலிகள், உலகிலே
ஒழிக வேறொ டுயிர்க்கொலை யாங்குமே !

பிம்பிசாரன்

உண்மை யுண்மை உயிர்க்கொலை தீயதே,
வண்மை யால்எனைக் காத்திட வந்தனை !
அண்ண லேயுன தன்பு மொழிகளைத்
திண்ண மாகச் செயலினிற் காட்டுவேன்.

நிற்க வேள்வி ! நிணப்புகை இன்றுடன்
நிற்க ! நீளுயிர் தீங்கின்றி நீடுக !
கற்க நீவிர் கருணை புரியவே,
கற்று நிற்பது கல்விக் கழகன்றோ ?

இரக்க மென்னும் இரவி யெழுந்ததும்,
துறக்க மோகந் துணுக்கென விட்டதே'
கரைக்கு நெஞ்சக் கருணைக்கண் ணீரினால்
எரிக்கும் வேள்வி யெலாங்கரி யானதே !

ஒழிக யாகம் ! உயிர்க்கொலை யின்றுடன்
அழிக ! மாடுகள் ஆடுகள் வாழுக !
செழிக நல்லறந் தீமை விலகுக !
பொழிக பாலெனப் பொங்கின நீள்பறை.

அறமென விளங்கு மையன் அரசெனக் கண்ட வேந்தன்,
துறவறம் விட்டென் அன்புத் தோன்றலென் றினிதி ருந்தே
நறுமணம் புரிந்திந் * நாட்டை நன்முறை ஆள்க வென்றான்;
முறுவலார் வாய் திறந்து முனிவனும் உரைத்த தென்னே !

புத்தன்

தேவருக் கரிய சீருந் திருவனார் பணியும், வேந்தர்
ஏவலும் பெற்றேன் முன்பே. இவை நவை யெனவே நீத்திப்
பூவினி துய்ய யோகம் புரிகின்றேன். அறத்தி னாட்சி,
மேவிட, ஞான சித்தி வேண்டினேன் பிம்பி வேந்தே !

கடுந்தவம் ஆறாண் டாற்றிக் கண்டொரு பயனு மின்றி,
ஒடுங்கிய மேனி தாங்கி உரவெலாக் காடு சேர்ந்து,
தடம்பெறு வேதம் ஐவர் சாற்றிடக் கற்றும், இன்பம்
அடைந்திட லின்றி ஐயன் கயாவனம் அடைந்தான் மாதோ !

---

*மகத தேசம்

போதியடியில் தவம் புரிதல்

அணிமணி ஏழைக் கீந்தே அன்னவர் அணிந்த கந்தைத்
துணியணிந் துலகை நீத்த துறவறச் சிங்க மானோன்,
உணவையு மறந்து, பல்கு நதிக்கரை ஓங்குந் தூய
மணம்பெறு பெரிய போதி மரத்தடி தியானித் தானே !

கட்டிலா தெங்குஞ் செல்லுங் காற்றுடைப் பாட்டைக் கேட்பான் ;
ஒட்டிலா தொளிர்ந்து செல்லும், உதயசூ ரியனைக் காண்பான் ;
மட்டிலாக் கனிக ளீயு மரங்களின் கருணை காண்பான் ;
எட்டலாந் திசையிற் காணும் இயற்கையைச் சோதிப் பானே !

பகலிர வின்றித் தாகம், பசிதுயி லின்றி, வேண்டிற்
ககமுதிர் கனிக ளுண்டு, கனகமெய் யுலர்ந்து, போக
சுகமெலாம் படைத்த கோமான் கொழுந்தெரி கோடை தன்னில்,
முகமலர் வாடி யோர்நாள் மூர்ச்சையாய் விழுந்தா னம்மா!

பார்த்தநல் ஆய னுங்கே, பசப்பறு வாயிற் பாலை,
வார்த்தனன்; "சாமி" யென்று வணங்கினன்; மயக்கந் தன்னைத்
தீர்த்தனன் ; அவனை நோக்கித் தீர்த்தனுங் கருணை பொங்கும்
வார்த்தைகள் பேசிப் பின்பு வன்றவ முயன்று னம்மா !

பாரிருள் அடிமை யச்சப் பாசங்கள் விலகி, யெங்கும்
ஆருயிர் மக்கள் எல்லாம் அறிவறிந் தமைதி சேரும்
ஓருயர் வழியை நாடி, உள்ளத்தில் ஆழ்ந்து தேடி,
சீருயர் அன்புச் செல்வன் தியானத்தி லிருந்தா னுங்கே !

அவ்வுர வேலாக் காட்டின் அதிபனும் நந்தி பெற்ற
செவ்விய கற்புச் செல்வி, சீரிய சுஜாதை யென்பாள்,
இவ்வருந் துறவி தெய்வம் என்றுதன் குழந்தை யோடும்,
பவ்விய வணக்கஞ் செய்து பாலுண வூட்டி னாளே !

ஊட்டமு துவந்து, வாழ்த்தி "உள்ளன்பு கொண்ட தாயே,
காட்டகத் தெய்வ மல்லேன், கவலையற் றுலகம் வாழ
வேட்டர சுதறி வந்தேன்....வினைவினை யுனது சொந்த
வீட்டினில் இன்ப முண்டோ ? விளம்பிடு விரைந்"தென் றுனே.

"அன்பணி மனையில், என்றன் ஆருயிர்க் கணவன் போற்ற,
என்பணி யினிது காப்பேன் ; இயன்றநல் லறங்கள் செய்வேன்,
புன்மனப் பற்றே யின்றிப் புரிசெய லின்ப" மென்று
முன்பணிந் தவளுஞ் சென்றுள் முனிவனின் ஆசி பெற்றே!

மாரன் சோதனை

மாது சொன்ன மணிமொழி தன்னையே,
தீது நீக்குந் திருமொழி யென்றவன்,
பேது றுது, பிறகுந்தன் புத்தியைச்
சோதித் தாங்கு தொடர்ந்து வசித்தனன் !

மோன வானகம் முத்து நகை செயக்
கானப் புட்கள் களித்திசை பாடிட
ஞான மங்கள நாளெனக் கானகம்
தேன் மலர்களைச் சிந்திச் சிலிர்த்ததே !

பாரின் மாயப் பசப்பின் வெறுமையைத்
திரப் பார்த்த திறந்த துறவியை
காரி கைப்படை காட்டி மயக்கிட
மாரன் வந்து வலைகள் விரித்தனன் !

வெட்டு மின்னிடி வெம்புயல் என்னக்கை
கொட்டிக் கொங்கை குலுக்கி, மினுக்கியே,
கட்டி லாப்பெருங் காமப் பிசாசுகள்,
கிட்ட வந்தன கெஞ்சின கொஞ்சவே !

ஆசை யூட்டின ஆடின பாடின,
வீசிப் பார்த்தன வேல்விழி யம்புகள்.
பாச மோகப் படுகுழி காட்டின ;
மோசம் போயின முத்தன் உறுதியால் !

மயக்க வந்து மயங்கியம் மாரனும்,
தயக்க மின்றித் தணிந்து மறைந்தனன் ;
வியக்க வந்த வெறுமன மாயத்தை
நயப்ப தில்லை நடுநிலை ஞானியே !

சீதவெண் குடை விரித்த சித்திர வனத்தின் கீழே,
போதியே வீடு தாங்கப் புல்லதே இருக்கை தாங்கச்
சோதனை யற்ற சாந்தத் துறவொளி யுள்ளந் தாங்க,
மேதினிக் கன்பு மேவும் விமலனுந் தியானஞ் செய்தான் !

எண்ணினுன், எண்ணி யெண்ணி யெண்ணங்க ளடங்கி யாங்கே,
கண்மனங் குவிந்து, சாந்தக் கனிரசங் கருத்தி லூற,
எண்ணிலாப் பிறப்ப றிந்தான், வினையுல கியல்ப றிந்தான்,
மண்ணுயிர் மாந்தர் உய்யும் மருந்தினை யறிந்தான் மாதோ !

கானகத் தனிமை வாழ்க ! கட்டறு சாந்தம் வாழ்க,
மோனமெய் யுள்ளம் வாழ்க ! மோகமில் சிந்தை வாழ்க,
வானென விரிந்த தியான சாதன வாழ்க்கை வாழ்க,
ஞானமா ரமுதச் சோதி ஞாயிறு வாழ்க மாதோ !

திங்களோ டமைதி யாகித் தினகர னுதித்த போது,
மங்கள ஞானம் பெற்ற மகாதவ யோகி புத்தன்,
பொங்கிய கருணை வெள்ளம் புசித்துயிர் உலகம் அன்புச்
சங்கமாய் வாழத் தர்ம சாதனத் தொண்டு செய்தான் !

அரசமென் றரசை நீத்தோன், அரசுவீற் றிருந்து, ஞான
அரசனுய், அரசர் போற்றும் அரசருக் கரச ருகி,
நரசகோ தரர்க ளுய்ய நலிவறு தொண்டு செய்த
வரன், அறச் செல்வன் வாமன் மாசறு புத்தன் வாழ்க !

மாதவச் சீடர் சூழ, மகததே சத்தி லெங்கும்,
சாதிவேற் றுமைக ளின்றித் தருமசங் கங்கள் ஆக்கிப்
போதிசத் துவனும் தந்தை புரந்ததன் ஊருக் குற்ருன்....
தாதையும் சினத்தைத் திட்டித் தனயனைக் காணச் சென்ருன் !

பசிமிகும் ஒருவன் சோற்றைப் பட்சிகள் பறித்துண் டாற்போல்,
இசைமிகு குல விளக்கை இழந்துளம் பதைத்த தந்தை,
வசையறு மகனை மாற்றி, மனைச்சிறை யடைக்க மீண்டும்,
விசைபெறு சூழ்ச்சி செய்து, வீணுற்ருன் ; ஞானி வென்ருன்.

கையிலே கலய மேந்திக் காவியை யணிந்து, நல்ல
மெய்யவர் சங்கஞ் சேர, மேவிய ஞான வேந்தை,
“ ஐயநீ வாழ்க ” வென்றே அனைவரும் போற்றி செய்ய,
மொய்சினங் கொண்ட தந்தை மோகத்தைக் காட்டி ருனே !

தந்தை

சீருயர் கல்வி, சிறந்துயர் வீரம்,
பாருயர் ஆட்சி, பழுத்துயர் இன்பம்,
பேருயர் ஆன்ற பெரும்புக ழெல்லாம்,
சூரிய மைந்த துறப்பது நன்ருே ?

சிந்துரம் உந்திய சேவடி ஏனோ
வெந்துயர்க் கானகம் மேவிய தையா ?
சுந்தரப் பூண்கள் சுடர்மணி மேனி
கந்தை யுடுத்திடக் காண்விதி யென்னே !

புத்தர்

என்றருந் தந்தை இடர்க்கட லெய்த ,
வன்றவச் சோதி மகிழ்ந்துரை செய்வான் :
“ இன்றுறு நானே யிழந்திடு செல்வம்,
என்றனை விட்டதும் இன்பம டைந்தேன் !

சுற்றி மதிற்படு சோம்புடைச் செல்வம்,
பற்றின பற்றுகள் பட்டென விட்டேன் !
பெற்றனன் முற்றிய பேரறி வின்பம்,
பெற்றினி தோங்குக பெற்றவ நீயும்.

பீழை படும்புவிப் பேற்றை முனிந்தேன் ;
ஏழை படுந்துயர் என்றுயர் என்றேன் !
வாழுயிர் யாவு மகிழ்வழி கண்டேன் ;
ஊழி கடந்துன் குலப்பெய ரோங்க !

உன்னர சாள உதித்தனன் அல்லேன் ;
என்னர சாள எழுந்தொளி கண்டேன்.
தன்னர சாட்சி தழைத்திடும் இன்பம்,
பொன்னர சாட்சியின் போகமு மீமோ ?

இருளிடர் வென்றறி வின்பொளி கண்டேன்,
மருளுறு மாந்தர் மயக்க மொழித்தேன் ;
அருளர சின்பணி யாற்றிட வாராய்,
பொருளிது" வென்றனன் புண்ணிய மைந்தன்.

"மைந்தநீ பெற்ற பேறே மனிதவாழ் வடையும் பேறும்.
ஐந்தையும் அடக்கி வென்றாய், அறிவனே சரண" மென்று
தந்தையும் பணிந்தான் ஆங்கே ; தனயனே டடிப ணிந்தாள்
சுந்தரி மனைவி தானும் ; சோகமுந் தீர்ந்த தன்றே.

அகந்தையர் அடங்க, வேசை யாசையும் அடங்க, வேடர்
உகந்துயிர் வதையை நீக்க, உத்தம ராகக் கள்வர்,
முகந்துபொன் கருமி ஈய, மூர்க்கருஞ் சாந்த ராக,
தகர்ந்திடச் சாவின் அச்சம் தருமனுந் தொண்டு செய்தான் !

வீரமெய்த் துறவு பூண்டு வியனுறத் தவம் புரிந்து,
பூரண ஞானம் பூத்துப் புவிக்கெலாம் இனிதே செய்து,
பாருயிர் துயர நீங்கும் பணிநலங் காத்த புத்தன்,
கோரிய தெல்லாஞ் செய்து குசிநகர் இறுதி சேர்ந்தான்.

அன்னையின் அன்பு மிக்கான் அருட்சுட ராழி யானுன்,
அன்னவன் உபதே சத்தை அசோகனே உலக மெங்கும்,
பன்னரு மாந்த ருய்யப் பரப்பினுன் ; கதிர்வி ரிந்தே
இன்னரும் இன்னும் இன்னும் இலகுக புத்த ஜோதி !

தரும சேனன் சரித்திரஞ் சாற்றிடப்
பருகிச் சுத்தனும் புத்தரும் அன்பினுல்
உருகி யுள்ளும் உயிரும் சிலிர்த்திட
அருள ரசின் அடிபணிந் தேத்தினுர்.

அத்தா எனை ஆண்டாய் இனி வேண்டேன் அரும் பிறவி,
பித்தா கிய சகமாயையைப் பின்விட்டுனை யடைந்தேன்,
சித்தா சீவன் முத்தா, ஜின நாதா குரு தேவா !
புத்தா போதி சத்வா பரி சுத்தா சரண் இறைவா !

6. புத்த தருமப் படலம்

கருணையே வடிவ மான புத்தனின் கதைதன் காதை
உருவமே யென்று கண்டான் ஊர்பெயர் சொல்லாத் தூயன் ;
பெருகிய சிரத்தை யோடும் பிடகநூல் அனைத்துங் கற்றுத்
தருமமா சங்கஞ் சேர்ந்து சாதனஞ் செய்தான் மாதோ !

"அறிவிலுஞ் சிறந்தீர், உண்மை அறத்திலுஞ் சிறந்தீர், ஐந்து
பொறிபுலன் அடக்கி வென்றீர் போதசத் குருவாய் நல்ல
நெறியினைத் துலக்கி, நீடு நேர்வழி நடத்து" மென்றே
அறிஞர்கள் வேண்டத் தூயன் அடங்கிய பணிவு கூர்ந்தான்.

சுந்தன்

குருவென்றுஞ் சீடரென்றுங் குருவுப தேச மென்றும்,
திருமட மென்றும் என்னைச் சேவிக்க வேண்டு மென்றும்,
ஒருசிறு பொழுதும் எண்ணேன் ; உலகமென் பள்ளிக் கூடம்,
தருமசா தனமென் கல்வி ; சாதனச் சீடன் யானே !

செம்மன மூன்றி நாளும் தியானமும் பணியும் பேணித்
தம்மபா தத்தைக் கற்றேன், ததாகதர் கருத்த றிந்து,
நிம்மதி யாகச் சீவ சகவியல் நிலையா ராய்ந்தேன்.
இம்மட்டும் உதவி செய்தீர் ; இனிஅறத் தொண்டன் யானே !

பீடமும் வேண்டேன் ; அந்தப் பீடத்திற் குரிய தான
வேடமும் வேண்டேன் ; வேடம் விரும்பியே காட்டு கின்ற
ஆடம்ப ரத்தை வேண்டேன், அருளறி வாள ருக்குச்
சீடனா யிருத்த லேயென் சேமமென் றடங்கி நின்றான் !

சாட்சியாய்ச் சுற்றிலுந் தரும சங்கத்தின்
காட்சியைப் பற்றறக் காண்ப தல்லது,
மாட்சியான் எனதெனு மமதை யற்றுத்தன்
ஆட்சியை ஆண்டனன் அகமு கத்தினே !

தத்துவ வேற்றுமை, தரும வேற்றுமை,
ஒத்துழை யாதவர் *நால்வர் உட்பகை
சத்தமிட் டுருமிடுஞ் சமயந் தூயவன்
புத்தரின் அமைதியைப் பொருந்தி நிற்பனே !

பிரிவினை செய்திடும் பேச்சைக் கேட்டிலான்,
ஒருவனைப் பற்றிமற் றொருவர்க் கோதிடான்,
இருவினை யுலகுடை யியல்பைக் கண்டவன்,
அருளுடன் அறவினை யடங்கி யாற்றுவான்.

---

*சௌத்திராந்திகர், யோகசாரர், மாத்யமிகர், வைபாஷிகர்.

மூச்சினைக் காத்திட, முயற்சி வென்றிடப்
பேச்சினைச் சுருக்கியே பெரிய மோனியாய்,
நாச்சினங் காட்டுவார் தமக்கு நண்பனாய்,
ஏச்சறத் தனக்குள்ளே யிருந்து வாழுவான்....
கற்றதைக் கருத்துறக் கருதி யின்னமும்,
கற்றிடக் கற்றிடக் காதல் கொள்ளுவான்.
வெற்றுரை வீண்பொழு தெதுவும் வேண்டிலான் ;
முற்றறி முதல்வனை அடைய முன்னின்றான்.
சீலமுங் கருணையுஞ் செகத்திற் கோதிடும்
நால்வகைப் புத்தரும் நாத்த டித்தவர்
சால்பறத் தம்மையே தாக்கிச் சண்டையைக்
கோல்வரைக் கொண்டுபோய்க் கூச்ச லிட்டனர்.
சௌத்திராந் திகரும் வைபா ஷிகரும்,
மாத்திய மிகரும் யோக சாரரும்
இயல்புறு பௌத்தம் எமதே யென்று
மார்பைப் புடைத்து வார்த்தை மீறிய
வாதக் கூச்சல் காதைத் துளைத்ததே !
"முன்னும் சூனியம் பின்னும் சூனியம்,
முதலும் முடிவும் முற்றிலும் சூனியம்,
காண்பதும் சூனியம் கருத்தும் சூனியம்!
ஏகச் சூனியம்" இயம்பினா ரொருவர்.
காணுவ தெல்லாம் கணபங் குரமே,
எல்லாந் துன்பம் எவையுந் துன்பம்
என்றே துன்பம் இயம்பினார் ஒருவர்.
உள்ளது மில்லை இல்லது மில்லை
உள்ளது ஞானம் உருவரு வாகும்,
அந்தக் கந்தம் இந்தக் கந்தம்,
புறச்சமு தாயம் அகச்சமு தாயம்,
நிலந்தீ நீர்வளி நிறையணுச் சேர்க்கை,
புலனும் பொருளெலாம் இலனும் பொருளென
மற்றொரு சாரார் வாதம் பேசினர்.
துன்பம் துக்கம் சூனியம் என்றே
ஓய்ச்ச லின்றிப் பேச்சு வலுத்தே,
முடிவில் சுத்தன் முன்னிலை வந்து,
நீரெக் கட்சி நியாயம் கூறும்....
என்று நால்வரும் நின்றனர் ஆங்கே....
புத்தர் உருவைச் சுத்தன் பார்த்து,
தியானம் செய்து, மோனம் மலர்ந்து,
புன்னகை பூத்து நன்மொழி சொன்னான் :—

சூதன்

அமைதியாய்க் கேட்பீர், அறிந்ததைச் சொல்வேன்.
புத்த பகவான் புண்ணிய புருஷர்.
வேதம் ஓதியோர் விஞ்ஞான மின்றிக்
கருமகாண் டத்தையே தருமமென் றெண்ணி,
வேதப் பொருளையும் வேள்வியாய் மாற்றி,
வேள்வியில் உயிர்க்கொலை விரும்பித் திரிந்தார்.
இந்நிலை மாறிச் செந்நெறி ஞானம்
இதுவெனக் காட்டிப் பொதுநெறி கோலவே
கருணைப் பெருமான் கனிவுடன் போந்தார்.
அவர்கா லத்தில் அறமே புகன்றார்.
பிரிவினை யெல்லாம் பின்னே வந்தன.

அசோகன்

ஆதி புத்தரை அசோகன் அறிந்தான்.
கலிங்கப் போரிற் கடுங்கொலை புரிந்த
அசோகன் வாளை அப்புறம் எறிந்து,
துறவுளத் துடனே அறவர சானான் ;
உண்மையும், இரக்கமும், ஒற்றுமைத் திறனும்,
எல்லா ருக்கும் நல்லது செயலும்,
தூயநல் லறமெனத் தூண்களிற் பதித்தான்.
துறவோர் கூட்டமும் அறவோர் கூட்டமும்
திசைதிசை சென்று சீலவாழ் வுடனே
புத்தர் கொள்கையை வித்திடச் செய்தான்.
அக்கா லத்திலே இக்கா லம்போல்
வேதனை செய்யும் வாதமொன் றில்லை.
போதி யடியில் புத்த பெருமான்
ஞானம் பெற்றுத் தியானம் செய்ததை
ஐந்துசீ டர்க்கு வந்ததும் உரைத்தார்.
அதுவே சமயம் அதைக்கேட் டொழுகுமின் :—

புத்த தருமோபதேசம்

"எல்லா வுயிர்க்கும் இன்பமோங் குகவே.
கொல்லா நெறியே குலவுக வுலகில்.
கலகம் ஒழிக. கருணை பொழிக !
ஞானம் ஓங்குக, ஞானிகள் ஓங்குக.
தானம் ஓங்குக தவக்கனல் ஓங்குக.
அறமோங் குகவே, அறவோர் ஓங்குக.
அறவோர் சங்கம் அருட்பொலி வெய்துக !
அனைவருள் ளத்திலும் அன்பே வளர்க !

தன்னைப்போ லெண்ணுக தான்பிற வுயிரை.
தூய்மை யுறுகவே சொல்மனஞ் செயலில்
வாய்மை யுறுகவே வாய்நடை நினைப்பில்.
கருணை பொங்குக தருணமா மழைபோல்,
இருவிகற் பொழிகவே இரவிமுன் பனிபோல்.
ஆசை பொறாமை ஆணவம் ஒழிக.
பாசம் விலகுக பந்தனை சிந்துக.
நேச மோங்கி நிலமெலாம் வாழ்க,
தேச மெல்லாம் சீலவாழ் வோங்குக !
இருப்பு விலங்கினும் இன்னலைச் செய்யும்
விருப்பு வெறுப்பாம் வேட்கை ஒழிகவே !
பற்றின் வருவதே படுதுய ராகும்.
பற்றற் றிருத்தலே முற்றிலும் இனிதாம் ;
பொறிகளின் வழியே புத்தியை விட்டு,
நெறிகெட் டலைவார் அறிவிழந் தயர்வார்.
காமக் காட்டிற் கட்டற் றலைவார்,
ஈமக் காட்டிற் கேகுவார் விரைந்தே.
பிறப்பவ ரெல்லாம் இறப்பவ ராவார்.
துன்பப் பிறவித் தொல்லை தீர,
ஆசைத் துறவே மாசறு வழியாம்.
ஆசா நிகளமே காசினி வாழ்க்கை.
காமம் வெகுளி கட்கள வின்றித்
தாமத வுணவுந் தளர்ச்சியு மின்றி,
நாமெனுஞ் செருக்கிலா நயந்த பணிவுடன்,
அமுதினும் இன்சொல் அடக்கமாய் வழங்கி,
சமதம முடனே சாந்தம் பேணி,
அந்தக் கரணம் அடங்கலும் வென்றோர்,
தொந்தமில் லாத சுகவழி காண்பார்.
இன்னுடல் வாழ்க்கை மின்னென மறையும் ;
முன்வினைப் பயனே முடிவுறத் தொடரும்,
தானமும் சீலமும் தயையும் தியானமும்,
ஞானமும் போற்றுக நல்லற மிதுவே !

* * *

புத்தன் அன்புடன் புகன்றவை இவையே,
துறவே புத்தர் சொல்லும் பொன்மொழி
கபில வஸ்துவில் கப்பரை யேந்திய
புத்தரைக் காணப் போந்தவ ருள்ளே
யசோதரா தேவி யிலாததைக் குறிக்க,
மனைவியைக் கண்டால் மனவி காரமாம்

என்றனள் அவளும் ; வென்றார்க் கஃதிலை
என்றார் புத்தர் ; நன்றென வந்து
காலை யணைந்து கண்ணீர் விட்டு
இன்னிள மைந்தன் இராகுல னிடத்தில்
தாய பாகம் தந்தையைக் கேளெனக்
கேட்டான் மைந்தன் "கேடறு செல்வத்
துறவே அதனை மறவா தளித்தேன்"
என்றார் புத்தர் நன்றென மகனும்
தாயுடன் துறவறந் தாங்கியக் கணமே
சங்கஞ் சேர்ந்து சாதனம் பெற்றான்.
சாதி சமய பேதமே யின்றி,
அகில வுலகும் ஐக்கியப் பட்டு
வாழவே பகவான் வழியைத் துலக்கினார்.
ஒருபெருஞ் சபையில் ஒள்ளிய புத்தர்
காதைக் கொடுத்துக் காதலாய் நிற்கும்,
மக்கள் கேட்க வார்த்தைபே சாமல்,
இரண்டு கனிகளை இனிதுறக் காட்டிப்
புன்னகை புரிந்தார். அன்னதன் பொருளை
வினவின வுடனே விளம்பிய திதுவே :
"பேச்சும் வாதமும் பெரும்பய னாமோ !
மானிட வாழ்க்கை மாசில் லாத
வாய்மையும் அன்பும் வளர்கனி யாகுக ;
இல்லற மாயினுந் துறவற மென்னினும்,
அன்பும் அறமும் அழுக்கறு மெய்யும்,
ஆருயிர்ப் பணியும் அருளுடன் போற்றுக.
புத்தர் உண்மைப் புத்தராய் வாழ்ந்தால்,
எத்தகைக் கலகமும் இராவே யுலகில்
புத்தர் வாழ்க, புத்த தருமமும்,
புத்த சங்கமும் புனிதரால் வாழ்கவே !"

* * *

இந்தநல் லுரையை ஏற்றநால் வகையினர்,
சத்த மடங்கிச் சமரஸங் காத்துத்
தம்மபா தத்தைச் சரிவரப் பயின்று,
அன்பிற் பொருந்தி அருட்பணி புரிந்தார்.
மெய்வழி காட்டிய துய்யனைப் பணிந்தார்....
என்றுந் தம்முடன் இருக்கச் சொன்னார்....
ஆயினுந் தூயன் அல்லும் பகலும்,
புதுப்புது ஞானம் பொருந்திடத் துடித்தான்...
சீல வாழ்க்கையிற் சிறந்த புத்தரை

வணங்கினுன். ஆயினும் மனத்திலே இன்னும்
ஐயப் பாடுகள் அநேகம் இருந்தன :—
"துன்பமே உலகா ? இன்பமும் உளதே ?
துறவே நெறியா ? தொல்லுல கத்தில்
இல்லறங் காப்பார் அல்லலற் றின்புறும்
வழிதான் என்னே ? வல்வினைத் தளையை
உதறுவ தெப்படி ? உண்மை என்" னென
நீண்டு நினைத்த நின்மலன் மகிழ,
ஜினவரன் என்னும் ஜைன சாது,
தோன்றி யாங்கே தூயனை யறிந்து,
"வாரீர் என்னுடன் வாய்மை யறிவீர்."
என்றன் புடனே இட்டுச் சென்றுர்.
நாமும் தொடர்ந்து நடந்ததை யறிவமே.

7. மகாவீரப் படலம்

ஜினவரன்

தன்னுயி ரென்ன மற்றேர் உயிரினைத் தாங்கும் அன்பன்,
பொன்னையும் மண்பெண் போகப் பொருளையுந் துறந்த தூயன்
அன்னையின் அன்பு மிக்கான், அருகநல் லறத்தின் மிக்கான்,
இன்னியற் சொல்லான் ஞானி ஜினவரன் என்னும் பேரான் !

செல்வத்திற் பிறந்து, செல்வச் செருக்கினை ஒதுக்கித் தள்ளிக்
கல்வியிற் சிறந்து கல்விச் செருக்கொரு கடுகு மின்றி,
வல்வினை உதிர நோற்று, வணக்கமே யணிந்த சாது,
நல்லவ னென்று மேலோர் நவின்றிடுந் துறவி யன்னேன் !

உறவினர் பூட்ட நின்ற மணத்தளை யுதறித் தள்ளித்
துறவினை யணிந்து நோற்றுச் சுக்கிலத் தியானத் தாலே,
அறிவன நன்க றிந்தே அடக்கமும் பொறையும் பேணி,
அறவினை புரியும் ஆசான் ஆனந்த நண்பன் மாதோ !

உள்ளத்தில் ஊறு கின்ற உயர்ந்தநல் லெண்ண மெல்லாம்,
தெள்ளிய கேள்வி யெல்லாம், சீரிய முனிவ னுக்கு
வெள்ளையாய்ச் சுத்தன் சொல்லி, விடையெதிர் பார்க்கும் போது,
விள்ளரும் பெருமை யாளன் வீரரின் கதையைச் சொன்னுன்.

குருமகா வீரர் காதை குவலய மாந்தர் கேட்டால்,
உருகுவார் இரக்க மோங்கி உயிர்க்கிதஞ் செய்து வாழ்வார்,
தருமமென் பதனை நேரே சத்திய வடிவாய்க் காண்பார்,
அருகநீ கேளாய் என்று ஜினவரன் அருள லானுன் :

மஹாவீர சித்தி

மன்னு மாதவம் மாசறச் செய்தவன்,
இன்னு யிர்க்குலம் இன்புற வாழ்ந்தவன்,
என்னு ளத்தில் இலகும் ஒளியினன்
அன்ன வீரன் அருகன் அருள்கவே !

ஆரேனும் ஆருயிர்கட் கிரங்கியருட் பணிபுரிந்தால் அன்னோர் அன்புப்
பேரேயென் வாய்க்கினிது ; பெருந்தவத்தாற் பெறற்கரிய பேறு பெற்றே
சீராரும் அஹிம்சையறந் திகழுவித்த சினவரனைச் சிந்தை செய்தால்,
வீராதி வீரமுடன் பற்றுதறி விடுபடவோர் வீறுண் டாமே !

*ஐவரை வணங்கி நாளும், †ஐயணு விரதம் போற்றி,
வையகம் அன்பின் ஆளும், மன்னன்சித் தார்த்த னுக்கும்,
செய்யநல் அரசி யான திரிசலை தனக்கும் போந்த
துய்யநல் வீரன், வீரத் துறவினுக் கிணையும் உண்டோ ?

மன்னுயிர் வாழ்த்திட மகான்கள் வாழ்த்திடத்
தன்னுயிர், பொதுநலத் தருமங் காத்திடத்
துன்னிய தென்றுணர் தூய மன்னனும்,
அன்னவன் அரசியும் அன்புச் செல்வரே ! 40

இல்லறப் படிகளை யினிது காத்தனர்,
நல்லற விரதத்தை நாளும் போற்றினர்,
சொல்லருந் தூயவர் புகழைத் தூண்டிடத்
தொல்லற வடிவெனச் சுதனுந் தோன்றினன்.

நாதரின் குலமுடன் ஞாலம் வாழ்ந்திடத்
தீதறு திரிசலை செய்த வத்தினல்,
கோதறும் ‡அச்சுதங் குலவு நற்குணச்
சோதியும் சுடர்வடி வாகத் தோன்றினன் !

நாட்டுடைப் பாக்கியம், நமது பாக்கியம்,
வீட்டுடைப் பாக்கியம், வேந்தர் பாக்கியம்,
வாட்டமற் றறமினி வாழும்; பேரொளி
காட்டிட வந்தனன் கருணை வள்ளலே.

---

*ஐவர்: *அருகர், சித்தர், ஆசார், உபாத்தியாயர், சாதுக்கள்.*

†ஐயணு விரதம்: *அஹிம்சை, வாய்மை, திருடாமை, பிரமசரியம், அவாவின்மை.*

‡*அச்சுத கற்பலோகத்திலிருந்து*

இத்தகை மகிழ்வுட னேத்திப் பெற்றவர்,
வர்த்தமா னன்னென வழங்கி நற்பெயர்,
உத்தமச் சேயினை உயிரைப் போலவே
மெத்தவும் பேணினர் மேதை யோங்கவே.

அறிவுடன் பிறந்தவன் ஆன்ற கல்வியும்
முறைவுறப் பெற்றனன் முனிவர் போற்றிட ;
பிறவியின் பயனுறப் பிழைகள் போக்கிடும்,
அறநெறி கற்றுநின் றமைந்து வாழ்ந்தனன்.

அரவினை அடக்கிய ஆண்மைச் சேயினைக்
கரிமத மடக்கிய கனலுஞ் சிங்கத்தைப்
பிரியகா ருணிதரும் பெரிய ஞானியை
வரகுண வீரனென் றுலகு வாழ்த்துமே !

கண்டவர் வணங்கிடுங் கடவுட் சேயவன்
விண்டிடு மொழிகளே வேத வாக்கெனக்
கொண்டனர் நின்றனர் குணத்தி னேங்கியோர்
கண்டனர் ஆனந்தக் கனியி னின்பமே.

காட்சியுங் கல்வியுங் கனிந்த செஞ்சொலும்
மாட்சிமை யோங்கிய மதியு டன்மனச்
சாட்சிமெய் யிதுவெனச் சாற்று நன்னடை
ஆட்சியுங் கொண்டனன் அமர வீரனே !

வயதுற வயதுற வந்த ஞானத்தால்,
புயலுறும் ஆசையின் போலி யின்பத்தை,
மயலறு சிந்தையின் மகிழுஞ் சாந்தத்தைத்
துயரறக் கண்டனன் சுத்த வீரனே !

தடித்த காமத் தழலெழும் பேய்க்குலம்
பிடித்த மாந்தர் பெருந்துய ரெண்ணியே
துடித்து நெஞ்சந் துகளறு கண்ணினீர்
வடித்து நொந்தனன் வாய்மை யறிந்தவன் !

துயர மேமிகத் தோன்றுமிப் பூமியில்,
மயலு ழன்று மறலியின் வாய்ப்படும்,
உயிரை யெண்ணி உயிர்த்துளம் விம்முவான்,
அயர்விலா நலம் ஆற்றிடும் ஆற்றலான்.

மாத ராசையும், மண்மணி யாசையும்,
*காதி கர்மக் கசடெனப் பாவித்தான்,
கோதி லாக்குணக் குன்றனை யானிந்த
மேதி னிக்கோர் விடுதலை தேடினன் !

---

*ஞானவரணீயம், தரிசனவரணீயம், மோகனீயம், அந்தராயம்—இவை காதி கர்மங்களாம்.

அறிவ றிந்துல காட்சி யறிந்திதன்
உறவுஞ் சுற்றமும் பற்றின் உருவெனப்
பிறவி மாயம் பிறகிட வீரனுந்
துறவ ணியத் துணிந்தடி வைத்தனன் !

பிள்ளை கொண்ட பெருந்துற வெண்ணியே,
உள்ள முட்கி யுடைந்தனர் பெற்றவர் ;
விள்ள ரும்பினு மெல்லிய சேவடி
முள்வ னத்து முடுகுவ தோவென்றார்.

வேந்தர் போற்றிட வீரசி காமணி,
ஏந்து சீர்த்தியும் இந்திர போகமும்,
வாய்ந்து காண வரங்கிடந் தாருளந்
தேய்ந்து சோர்ந்ததித் தீரனின் செய்கையால்.

பெற்றோர்

"அற்புத மணியே எங்கள் அருந்தவப் பயனே நாட்டின்
கற்பகக் கனியே, கண்ணின் கருமணிக் கொளியே, எங்கள்
சொற்படி கேளாய். ஓங்கும் தொல்புவிச் செல்வம் ஆண்டே
இற்படிந் திருப்பாய் உன்னைப்பிரிந்திடின்இறப்போம்" என்றார்.

அழுதனர் கண்ணீர் பாய்ச்சி அணைத்தனர், குலத்தின் அன்புக்
கொழுந்தினைக் கொஞ்சி முத்தங் கொடுத்தனர். எங்கள் வாழ்வு
பழுதுறும் ஐயா வுன்றன் பசுமுகங் காணேல் என்றார் ;
தழுவினர் தொழுதார் வீரன் சாந்தமா யின்னுஞ் சொல்வான்.

வீரன்

குறுகிய சீரும் பேறுங் கொற்றமுஞ் சுற்ற வாழ்வும்,
வெறுவிய உலகின் இன்ப வேடமும் எனக்கு வீணும் ;
இறுகிய வினையின் கட்டை, இழுத்திடும் பாசந் தன்னை,
உறுதிகொண் டுதறித் தள்ளி உயர்தவம் புரியச் செல்வேன் !

அறந்தவிர்ந் துலகில் வாழ்வார் ஆலைவாய்க் கரும்பு போன்றே
இறந்திடப் பிழியும் ஆசை இயந்திரந் தன்னிற் பட்டார்.
பிறந்ததன் பயனை மாந்தர் பெற்றிட மருந்து தேடித்
துறந்தனன் சுயநலத்தைத் தொல்புவி நலத்தைப் பூண்டேன் !

ஆதலால் அருந்த வத்திற் கமைந்ததென் அன்பின் உள்ளம்.
ஈதலால் உரைவே றில்லேன். எடுத்தகால் எடுத்த தேயாம்.
வாதினுற் பயனென் றில்லை ; வாழ்த்துடன் விடைய ளித்தால்,
நாதரின் மரபை என்றும் வாழ்த்துமே ஞால மெல்லாம்.

பெற்றோர்

வானகம் விரும்பும் சீரும், வளங்களும் விட்டு, வெய்ய
கானகம் பிள்ளை செல்லக் காண்பரோ பெற்றோர் என்றும் ?...
வேனிலுன் மேனி வாட்டப் பொறுப்பமோ ! வீரச் செல்வா,
ஏனெமக் கவத ரித்தாய்..எரிக்குமுன் பிரிவின் வெம்மை !

வீரத்துறவு

பாசம்பின் இழுக்க முன்னே, பாய்ந்திடுஞ் சேயின் பேச்சு,
தேசுறும் அறிவைத் தூண்டத் தெளிவுறு மனமு முன்பின்
ஊசலே யாடப் பெற்றோர் உம் எனு முன்னே கால்கள்
வீசினான், விரைந்தான், ஞான வீரனோர் நொடியி லம்மா !

ஆடையா பரண மெல்லாம் அழுக்கென நீத்தான் ; பந்தப்
பீடைக ளனைத்தும் விட்டுப் பிரிந்தனன் அறிந்த தீரன்
கோடிசூ ரியனைப் போலக் குளிர்முக நகை குலுங்க,
நாடினான் கடுந்த வத்தை நானில உயிர்கள் வாழ !

வானகம் போல உள்ளே, அறிவொளி வளரு கின்ற
மோனியாய்க் காற்றைப் போல, முத்தனாய்க் கவலை யற்றுத்
தானெனு நினைவே யின்றித் தாகமும் பசியும் வென்ற
ஞானியாய் ஈரா றாண்டு நற்றவம் புரிந்தான் வீரன் !

ஆருயிர்க் கருணை யேதன் அகவடி வான நல்லோன்,
ஊரிலு மலைவ னத்தும் உலாவிடும் போது, மாந்தர்
பேரிடர் செய்தார்,ஊமை, பித்தனென் றேசிக் கல்லால்
வாரினர்வைதார்எல்லாவம்பையும்பொறுத்துச்சென்றான் ! 140

வாதமும், அகந்தை நோயும், வஞ்சமும், கோளும், பொய்யும்
பேதமும் பிடித்தார் இன்னல் பிள்ளையின் விளையாட் டென்றே,
தீதறு தீரன் ஆங்கே சிரித்துடன் மறந்து சென்றான்,
போதமெய் ஞானா னந்தர் பொறுமையை யிழப்ப தாமோ ?

தவவுறுதி

உச்சினிக் காட்டிலோர் நிசியில் ஒண்டியாய்,
நச்சர வுலவிடு நடும யானத்தில்,
பச்சையூன் உண்டிடப் பசித்த பேயின்முன்
அச்சமற் றமர்ந்தனன் அருளின் வீரனே !

அலகைகள் வெறித்தெழுந் தங்கு மிங்குமாய்,
உலவிடும், பிணங்களை உண்ணு நாய்நரி
நிலையறக் குலைத்திடு நிசியை யெண்ணினே
தலைசுழன் றிடும் ; அதைச் சார்த லொண்ணுமோ ?

மதிவலி படைத்தவன், மனதை வென்றவன்,
அதிமுத்தம் என்னுமவ் வலகைக் காட்டிலே,
சதிசெயும் புயலினிற் சத்த மின்றியே
பதிந்தனன் கலந்தனன் பதும யோகத்தே.

தடதட வென்றது தாவு மின்னிடி,
மடமட வென்றது வான மாரியும்,
படபட வென்றன பாழும் பேய்க்குலம்,
திடமுட னமர்ந்தனன் தியானக் குன்றனுன் !

பட்டெனப் பாழிருட் படல மாறவே
வெட்டுமின் போல்விழி வீசுந் தையலார்,
பொட்டெனச் சூழ்ந்தனர் புலமை காட்டினர்
கொட்டினர் கைகளைக் கொங்கை துள்ளவே !

வாழ்வினை எம்முடன் வாழ்த லின்றிநீ
பாழ்செய லேதெனப் பரிவு தோற்றினுர்.
ஆழ்தவ யோகியை அணுக வல்லரோ !
வாழ்கவென் றிறுதியில் வணங்கிச் சென்றனர் !

படையெடுத் துலகெலாம் பயமு றுத்தினும்,
கடற்புயல் மோதினுங் கனல் சினக்கினும்,
மடவர்கள் ஏளன வசைகள் கூறினும்,
திடமுள தியானத்தைச் சிதைத்த லாகுமோ ?

பார்வையுள் ளாக்கிய பதும யோகியைக்
கார்புயல் வானமுங் கரிய பேய்களும்,
மார்புடை மங்கையர் மாயம் யாவையும்,
நேர்படத் தாக்கியு நிலைபெ யர்ந்திலான் !

அடரிருட் காட்டிற் கஞ்சாய், ஆணவப் பேய்கட் கஞ்சாய்,
படமணி பாம்பிற் கஞ்சாய், பாய்சினப் புலிக்கு மஞ்சாய்,
விடவலை வீசுங் காம வேசையர் விழிக்கும் அஞ்சாய்,
அடிதொழு திடுவேன் உன்னை அதிமகா வீர போற்றி !

பொறையிலே பூமி போன்றுய், புண்ணிய விண்ணே போன்றுய்,
துறவிலே காற்றைப் போன்றுய், சுதந்தரச் சுடரே போன்றுய்,
பிறவுயிர்க் குயிரே போன்றுய் ,பெருமைசால் கருணை பூண்டாய்
அறிவினுக் காழி போன்றுய் அதிமகா வீரர் ஏறே !

உச்சிமேற் கரங்கள் கூப்பித் தானுவென் றுரைக்குந் தேவன்,
அச்சத்தால் வணங்கி இவ்வா றதிசயத் துதிகள் செய்தே,
"துச்சமாம் யானும் உன்னைச் சோதித்துத் தோற்றேன்" என்று
கொச்சையாஞ் செயல் வருந்திக் கும்பிடு போட்டுச் சென்றுன்...

இன்னல்கள் செய்தா னுக்கும் இன்னலே நினையாத் தூயன்,
புன்னகை யாசி காட்டிப் பொறுமையாய்ப் போகு மெல்லே,
மன்னன்சே டகன் புதல்வி, மகானிடம் அன்பு மிக்க,
கன்னிசந் தனைவருந்தும் கௌசாம்பி வீதி வந்தான்....

காமுகன் அள்ளிச் சென்று, காட்டில்விட் டகன்ற பெண்ணைச்
சேமகௌ சாம்பிச் செட்டி செயலுற வளர்த்தான். அன்னோன்
தாமத மனைவி அன்புத் தளிரின்மேற் பொறாமை கொண்டு
தீமைகள் செய்து, வைது, சிறையிலும் அடைத்தாள் அம்மா !

"வெஞ்சிறைப் பட்டேன் பூவில் விடுதலை யிழந்தேன்; ஆறக்
கஞ்சியே குடித்தேன், பீற்றக் கந்தையேயணிந்தேன். பொல்லார்
வஞ்சமும் வசையும் தந்த வாதனை பொறுத்தேன் ; என்னின்
அஞ்சிலேன் ; உன்னை நெஞ்சில் அகன்றிலேன் வீர தேவா!

வருகுவாய் ஒருநாள்; பட்ட வல்வினைப் பயனைத் தீர்ப்பாய்.
பருகுவாய் எனது கூழைப் பவப்பிணி தீர்ப்பாய் ; ஆசி
தருகுவாய்; அடிமை யாக்குந் தளைகளை முறிப்பாய்" என்றே
உருகிய புனித வல்லி உள்ளமே பலித்த தம்மா !

அன்புசெய் நல்லாள் வீட்டின் அருகிலே வந்தான் ஐயன்.
புண்படு பெண்ணின் வாழ்க்கை புதுமையுற் றதனைக் கண்டான்.
இன்பினுல் இதயந் துள்ளச் சந்தனை ஏற்றுப் போற்றித்
தன்பர மானந் தத்தைத் தாள்பணிந் தோதி னளே !

கனத்த மாயை காயினும் கவலை யென்னை வாட்டினும்,
சினப்பகை விலங்கிடச் சிறையிருள் வருத்தினும்,
மனப்பகை யிலாதுனை வழுத்தி இன்ப மேவினேன்
உனக்குடல் ; உனக்குயிர் ; உனக்கெனுள்ள மாகவே !

வருத்தினுர் வருந்தினுர் ; வருந்தினுர் மகிழ்ந்தனர்
வருத்தமே பொறுத்தவர் வசையிலாது வாழ்ந்தனர் ;
பெருத்தவல் வினையறப் பிறங்குகின்ற ஜோதியாம்
ஒருத்தனை நினைத்ததும் உளத்திலின்ப மூறுமே !

இவ்வகை அன்பி னலே அன்பருக் கினிதே செய்து,
ஒவ்வொரு தலமுஞ் சுற்றிச் சிரும்பிகை உபவ னத்தில்,
துவ்விய சுக்லத்யானம் தொடர்ந்து,*சா லடியில் ஊன்றி,
திவ்விய சாந்த மெய்திச் சினேந்திர ஞனன் வீரன் !

மனதினை யடக்கி வென்று மாண்† குணப் படிகள் ஏறி,
வினையினை யுதிர்த்த தூய கேவல விளக்காய் ஞானி,
அனைவரும் வணங்கி முத்தி யடைந்திடும் அருக ஞகித்
தனிநலத் தவமுடித்துப் பொதுநலத் தவமே செய்தான் !

---

* *கேவல ஞானம், முற்றறிவு.*

†*குணப்படிகள்: ஜீவன் அசுத்த நிலையிலிருந்து சுத்தாத்ம நிலை பெறுமட்டும் ஒழுகும் 14 சாதன நிலைகள்.*

மன்னுயி ரெல்லாம் அஹிம்ஸையன் பறத்தை,
　　மருவிநல் லமைதியில் வாழத்
தன்னுடை யன்பர் தருமசா தனத்தாற்
　　சாதுக்க ளாய்க்கடைத் தேற,
மன்னவர் முதலாய் மாடுகள் மட்டும்,
　　வட்டமாய் அமர்ந்துரை கேட்க,
முன்னவன் சமவ சரணமொன் றமைத்தான்
　　முத்தரை வைத்ததன் முன்னே !

மன்னவர் தூய மாதவர் புலவர் மாசிலா மாதர்கள் வணங்கப்
பொன்னரி யணையிற் பொருந்திய ஜோதி, பூமலி அசோகின்கீ
ழிருந்தே,
இன்னலில்லாதஒழுக்கமேஅறமென்றியம்பிடக்கேட்டவரெல்லாம்
உன்னதமானஅறிவினையடைந்தார்;உயர்தவயோகியின்அருளால்.

மஹாவீரன் உபதேசம்

ஆருயிர் உலகிற் கெல்லாம் அருளுடன் அன்பு செய்ம்மின்,
ஓருயி ருக்குந் தீங்கை உன்னிடா அஹிம்ஸை ஒன்றே
சீருயர் தருமம் ; அஃதே செருக்கள மின்றி யிந்தப்
பாருயர் தருமம் ; இன்பப் பயனுறுந் தரும மாமே !

பொய்கொலை களவு காமம் கட்குடி பொறுமை யான
வெய்யதீ வழியை விட்டு, விலகினுர் தூய ராவார்,
மெய்யருள் அமைதி நேர்மை மேதகு பிரமசர்யம்
உய்வழி யிதனைப் போற்றி ஒற்றுமை யாக வாழ்விர்....

உத்தமர் சமவ சரணத்தில் ஒன்றி
　　ஓங்கருட் கொடிபிடித் தருகன்,
சித்திபெற் றிசைக்கும் தேன்மொழி பருகித்
　　தெள்ளறி வாற்றலிற் செழிக்க,
தத்துவார்த் தத்தைத் தகுமுறை புகட்டிச்
　　சாதுசங் கத்தினை நிறுவி,
முத்தர்கள் போற்ற முக்குடை வேந்தன்
　　முடிவிற்பா வாபுரி யடைந்தான்.

திசைசிலம்பத் துதித்தன்பர் திருக்கூட்டந்
　　திரைகடல்போற் செறிய வாங்கே
இசைசிலம்பு மணிமொழிகள் ஆறுதினம்
　　இருந்தபடி யியம்பித் தீர்த்து,
நசையுலகின் வசைமாற நல்வழியை
　　நாட்டியதும், வினையை மாய்த்து,
விசைபெறத்தன் னொளியாகி, விண்ணோக்கி
　　வெண்சுடராய் விரைந்தான் வீரன் !

விழியுறங் கியநல் லன்பர் விழித்ததும் விழியை நம்பார் !
விழிதுலக் கியநல் ஆசான் மறைந்தவா றறியார் அந்தோ !
இழிதுயில் அதனை ஏசி, என்செய்வோம் என்று, தீர்த்தன்
மொழியறம் பரப்ப நின்று, முத்தனைத் துதிசெய் தாரே :

அருகா சரணம் அமலா சரணம்,
முருகார் திருவே முதல்வா சரணம்,
பெருமா தவனே பெரியோய் சரணம்,
உருகும் அடியார்க் கொளியே சரணம்.

அமைதிக் கடலே அறிவே, நிறைவே,
சமதைச் சுடரே, தருமக் கதிரே,
விமலா சரணம் விசயா சரணம்,
சமவச் சரணத் தரசே சரணம் !

அருளொளி வேந்தின் சீர்த்தி அடிகளிவ் வாறு சொல்லி
அருகனின் சரணம் பாடும் பொழுதினில் அன்பர் கூட்டம்,
வருகவென் றெதிர்ந்து, தாமும் வாழ்த்துகள் பாடிச் சைனத்
திருநகர் மந்தி ரத்திற் சேர்ந்தனர், சேவை செய்தார்.....

சுத்தனும் அன்பு நாதன் எனும்பெயர் துலங்க, ஆங்கே
தத்துவார்த் தங்கள் கற்றுச் சமணரிற் சமண னாக
நித்தியம் தியான பூஜை நியமமாய்ச் செய்த நாளில்,
அத்திரு வூரிற் காணும் அமர்க்களந் தன்னைச் சொல்வோம். 280

8. ஜைன தருமப் படலம்

பெருகும் அறிவுத் தாகத்தாற் பிரியமாக நூலறிவு
தருகும் ஜைன வரனிடமே தத்து வார்த்தம் முதலான
அருக சமய சாத்திரங்கள் அனைத்து மறிந்து, மதி சிறந்து,
தரும சாத னத்தினிலுந் தலைசி றந்தான் சாதகனே !

அன்பு நாத முனிவரனும் அருகபக்தர் அனைவ ருக்கும்,
இன்ப மாகும் படிநடந்தான் ; இனியமனமுஞ்சொல்லுமுளான்,
என்பு முருகுங் கருணையுடன் எல்லாவுயிருந் தன்னுயிர்போல்,
பண்பு மிக்க கவனமுடன் பார்த்து நடந்தான் பரிவாளன்.

ஞானங் கேட்கச் செவிதிறப்பான் ஞானம்பேச வாய்தி றப்பான்,
மோன மாகப் பிறசமயம் முத்திக் குரிய முயற்சியிலே,
தியானங் கூடி ஆழ்ந்திடுவான், தசதர் மங்கள் காத்திடுவான்,
தானென் றுரைக்கக் கூசிடுவான் சாது சங்கம் விரும்பிடுவான்.

அருகரே வணக்கம்! சித்தரே வணக்கம்!
ஆசிரி யப்பெரி யீரே,
திருமிகும் உபாத்தி யாயரே வணக்கம்!
செய்யசா துக்களே வணக்கம்!
மருவும்ஓங் கார மந்திரம் அளிக்கும்,
மாதவச் சித்தர்காள் வணக்கம்;
பருகியும் மறிவைப் பரசுக முத்தி
பழுத்திடப் பரிந்தருள் புரிவீர்.

என்றே பஞ்ச நமஸ்காரம் இதயங்குளிரச் செபித் திடுவான் ;
நின்றும் இருந்துங் கிடந்துமே, நிமலப் பொருளை நினைத்திடுவான்,
ஒன்றே வேளை பகலுண்பான், இரவில் ஒடுங்கித் தியானிப்பான் ;
வென்றேபுலனையடக்கியவன், விமலன் என்றார் அருகரெல்லாம்.

"நீரே தக்க குரு"வென்று நெஞ்சில் அன்பு கொண்டன்பர்,
நேரே வணங்கும் போதறிஞன் நின்று கூப்பி "யானடியேன் !
பாரே குருவென் றழைத்தாலும் பாராட் டாமற் பணிசெய்யும்
சீரே நோக்கங் கொண்டு நலம் செயலே எனது செய"லென் பான்.

ஏதுங் கைம்மா றில்லாமல் இடிவான் அமுதம் ஈவதுபோல்,
தீதை விலக்கி நலம்புகன்ற தீர்த்தங் கரரே போலநிதம்,
போத மறிந்து போதித்துப் புதிய வாழ்வை வாழ்ந்து, மனப்
பேதமின்றித்தொண்டாற்றும் பிரிய மான தொண்டனென்பான்!

பணிவாற் சொன்னபனிமொழியைப்பார்த்தபின்னும் அன்பானுர்
துணிவாய் முத்தன் சுத்தனென உள்ளே துதித்து, நல்லுரைகள்
தணிவாய்க் கேட்டுத் தெளிவார்கள், ஸப்த பங்கி சியாத்வாதம்,
கணியா நின்ற உண்மை தனைக் கனிவா யிவனுங் காட்டுவனே !

சாந்தமும் அகிம்சையுஞ் சாற்று முக்குடை
வேந்தனின் ஊரிலே வேறு மாசிலை....
மாந்தரின் முச்சிறு மாறு பாட்டினுற்
போந்தன வாயடிப் போர்கள் சுற்றுமே !

திகம்பர ஸ்வேதாம் பரர்கள் என்றும்
டுண்டிக ளென்றும் மீண்டுந் தோன்றி,
எமதே மதமெனத் தமது நடைகளைப்
புகழ்ந்து கொண்டு புயலெனக் கிளம்பி,
வாயும் கையும் வரிசையாய்க் கலந்து,
சமண புரியின் அமைதியைக் கெடுத்தார்.
வெள்ளுடை தரிக்க வேண்டும் என்பார்,
ஆடை யெதுவும் கூடா தென்பார்,

மயிரைப் பறித்தலே மனத்துற வென்பார்,
மயிரை மழித்தலே வழக்கெனச் சொல்வார்.
பெருக்கி நடத்தலே பெருமைய தென்பார்,
சமரி கொள்ளலே சால்பெனச் சொல்வார்.
உருவைத் தொழுதலே உயர்வெனச் சொல்வார்,
நிர்வாண வுருவே நிசமெனக் கொள்வார்.
நாம்உரு வணக்கம் நம்பேம் என்பார்,
வாயைக் கட்டலே மதமெனச் சொல்வார்,
பெண்கள் மோட்சம் பெறுரெனச் சொல்வார்,
பெறுவார்; மல்லி பெண்ணெனச் சொல்வர்.
அற்பவேற் றுமைகள் அகங்கரித் தெழுந்து,
நீநா னென்று நெட்டிப் பொருது
கூச்சலிட் டலுத்துப் பேச்சற ஒதுங்கி,
சாதனம் செய்யும் அன்புச் சாமியை
"அடங்கி யிருக்கும் அன்பு நாதரே
உமது முடிவையே ஒப்புவோம்" என்றுர்.
பணிவுடன் அன்பு பழுத்தநல் லறிஞன்
புன்னகை பூத்துப் பொருளை விளக்கினுன் :—

ஜைன தத்துவம்

அருகக் கடவுளின் அறநெறி பயின்றவர்,
சண்டை விரும்பார், சாந்தமே காப்பார்.
எல்லா ருக்கும் நல்லதே நினைப்பார்.
அத்தகை அருக சித்தாந் தத்தின்
உண்மை வடிவை உணர்த்துவேன் கேளீர் :
உலக மெல்லாம் உயிர்க்கொலைக் களமாய்,
இரத்தஞ் சிந்தி இழிவுறும் போது,
போரும் போட்டியும் பொறுமையுங் கூடி,
நரசீ வனத்தை நரக மாக்கின.
தவங்கள் குறைந்தன; அவங்கள் பெருகின.
கண்ணில் லாத காமப் பேய்கள்,
மண்ணுயிர் வாழ்வைப் புண்ணுறச் செய்தன.
இந்நிலை தவிர்க்கவே எழுந்தார் வீரர்.
ஆன்றசெல் வத்தை அழுக்கென நீத்துத்
துறந்த போது தூய பகவன்,
பெற்றேர்க் குரைத்த பெருமொழி கேளீர் :
"தவத்தால் என்வினைத் தளையை உதிர்ப்பேன்,
கேவல ஞானக் கிளர்ச்சியாற் பேசி,
அன்பு வழியை அமைதியாய் விளக்கி,
வையகம் ஒன்றென வாழச் செய்வேன்..."

வீரர் இதையே வீறுடன் புரிந்தார்.
அவர்கா லத்தில் அருகர் ஓர்குலம்.
சந்திர குப்தன் சமணத் துறவியாய்,
வெளிக்குள மலைமேல் விரத மிருந்து
முத்தி பெற்றான்; அத்துடன் முனிவரை
நாடெலா மனுப்பி நல்லறம் பரவத்
தொண்டுகள் செய்தான் வண்டமி ழகத்தில்
அவன்கா லத்திலும் உவந்தொரு சங்கமாய்ச்
சமணர் வாழ்ந்ததைச் சரித்திரம் கூறுமே.
பிரிவினை வந்தது பிற்கா லத்திலே.
பிரிவினை யின்றி ஒருகுல மாக
அனைவரும் உயிர்போல் அறவழி காத்தே,
உண்மை நேயராய் ஒன்றிநாம் வாழ,
அருகர் நாட்டிய தருமங் கேளீர்:—
இடபர் முதல்மகா வீரர் இறுதியாய்ச்
சுத்த முத்தி சித்தி பெற்ற
*தீர்த்தங் கரர்கள் செப்பிய மொழியின்
சார மெல்லாம் சத்திய வொழுக்கமே.
அவ்வொழுக் கத்திற் கடிப்படை அஹிம்ஸை.
அஹிம்ஸைக் கடிப்படை ஆருயிர் அறிவாம்;
அறிவிற் கடிப்படை அருளுடைக் காட்சி.
காட்சிக் கடிப்படை கசடறு வாழ்க்கை.
அவரவர் தம்மை அறிந்து நடந்தால்,
பன்மதச் சண்டைப் படுகொலை யில்லை.
உள்ளப் பொருளைத் தெள்ளத் தெளிந்தால்,
உள்ளொற் றுமையால் உலகொற் றுமையாம்.
உள்ளின் பத்தால் உயிரும் இன்புறும்.
துன்பப் பற்றினைத் துறப்பதே இன்பம்.
வினையால் வருவதே வீண்பற் றுகும்.
பற்றற் றின்பம் முற்றுறப் பெரியோர்,
படிப்படி யாகப் பாதை யமைத்தார்.
வாய்மை, பொறுமை, தூய்மை, நேர்மை,
அடக்கம், பணிவுடன், அருந்தவம், தியாகம்,
பிரம சரியம், பிழையறு நன்மை,

* 24. தீர்த்தங்கரர்கள் : ஸ்ரீ விருஷப தேவர், அஜித நாதர், சம்பவர், அபிநந்தர், சுமதி, பத்மப் பிரியர், சுபார்ஸ்வ நாதர், சந்திர நாதர், புஷ்பதந்தர், சீதள நாதர், ஸ்ரேயாம்ஸர், வாசு பூஜ்யர், விமல நாதர், அனந்த நாதர், தருமநாதர், சாந்தி நாதர், குந்து நாதர், அர நாதர், மல்லி நாதர், முனிசுவிரதர், நமி நாதர், நேமிநாதர், பார்ச்வ நாதர், மகாவீரர்.

இவையே சாதகர்க் கின்னிய பதினறும்.
அஹிம்சை சத்தியம், அபரிக் கிரகம்,
கள்ளாமை, விந்தைக் காத்திடல் ஐந்தும்
அனைவரும் பேணும் அணுவிர தங்களாம்.
உயிர்க்கொலை தவிர்த்தல், ஊன்மது விலக்கல்,
இரவுண் ணுமை......இறுத்தநீர் குடித்தல்,
பக்ஷோப வாசம், பாபந் தவிர்த்தல்,
தரிசனம் விரதம், தன்னம் பிக்கை,
†அருகர், சித்தர் ஆசார் குருமார்,
சாதுக் களையே சாந்தமாய் வணங்கல்,
இவையே சிராவகர் இன்புறும் படிகளாம்.
கல்வியும் இவற்றுடன் கற்றிட வேண்டும்.
சீவன், புற்கலம், செய்யறம் அதருமம்,
காலம் வானெனக் கருதும் ‡அறுபொருள் ,
மண்,நீர், தீ கால், வனஸ்பதி திரஸ
ஜீவரின் இயல்பைத் தெரிந்திட வேண்டும்.
அஜீவன் ஜீவன், ஆச்ரயம், பந்தம்,
சம்வரை மோக்ஷம் நிர்ஜரை யுடனே
நலந்தீ தாகிய நவபதந் தெளிந்தே
||ஐந்து காயமும், °ஐந்து கதியும்
*ஐந்து விரதமும் ஐந்து சமிதியும்
முறைப்படி போற்றி மோட்சக் கதிபெற
மதிசுதி யவதி, மனப்பரி யாயம்,
இளர்ந்து முடிவிற் கேவல ஞானம்
முதிர்ந்து, வினைகள் உதிர்ந்த சித்தனுய்,
விளங்கத் தவங்கள் விரும்பிச் செய்கவே!
**காதி †அகாதி கருமங் கழன்று
ஆணவ மோகமும், அவாவும் விடுத்து,

† அரஹந்தா, அசரீரா, ஆயிரியா, உவஜ்ஜயா முணிஞே இவற்றின் முதலெழுத் தொலிகள் சேர்ந்து ஓங்கார மாகும்.

‡ ஷட் திரவியம்.

|| ஐந்து காயம் : ஜீவ புத்கல, தர்ம, அதர்ம, ஆகாஸாஸ்தி காயம்.

° ஐங்கதி : நரக, மனுஷ்ய, தேவ, திர்யக், மோக்ஷ கதி.

* ஐந்து விரதம் : அஹிம்ஸை, சத்யம், அஸ்தேயம், பிரம சரியம், அபரிக்ரகம்.

** காத்ய கருமங்கள் — ஞானவரணீயம், தர்சன வரணீயம், அந்தராயம், மோகினீயம். இவை ஜீவனை மயக்கும்.

† அகாத்ய கர்மங்கள்—ஆயுள், நாமம், சாதி குலம், இன்ப துன்ப வேதனைகள்.

விருப்பு வெறுப்புற விடுதலை பெற்று,
மனமொழி மெய்யில் மாசறு தூயராய்,
புலனை அடக்கிப் புந்தியை நிறுத்தி,
சுத்த யோகமாம் சுக்கிலத் தியானம்,
தீவிர மாகத் தினந்தினம் பயின்று,
சுத்தான் மாவைச் சூக்குமப் பார்வையால்,
கண்டு கலந்து கசடற விளங்கும்
அருக னாகி, அருட்பணி புரிந்துச்
சித்த னாதலே செயின முத்தியாம்.
இத்தகைச் சாதனம் இயற்றியெல் லாரும்,
வினைத்தளை நீங்கி விடுதலை பெறுமின்...
அறிவுங் காட்சியும் அன்பும் ஒழுக்கமும் 160
பேணி நீவிர் மாணுற வாழ்மின்...
அருகர் வாழ்க அறவழி வாழ்கவே !

* * *

இவ்வுப தேசம் செவ்விதின் உணர்ந்தே,
பிணக்கறச் செயினர் இணக்கமாய் வாழ்ந்தே
அன்பு நாதனை அன்பு செய் தாரே !

* * *

சமண சமயம் சரிவரக் கற்றபின்,
உள்ளபொருளை உண்மையாய் அறியவும்,
உலகின் முதல்வனை இலகக் காணவும்,
முத்தியை வாழ்வில் முயன்று பார்க்கவும்,
வேறொரு வழியை விரும்பித் தேடினான்.
இந்தச் சமயம் ஏசுதாஸ் என்னும்,
உண்மைக் கிறிஸ்துவர் உபதே சகராய்
வந்தார். அவரது வாக்கும் அன்பும்,
மாசிலாப் பணியும் தேசுலாம் அறிவும்,
சுத்தனைக் கவரத் தூய தாசரும்
பக்குவம் பார்த்து மிக்க விரும்பி
வருகெனக் கிறிஸ்து புரிக்கழைத் தேகினர்.
அங்கே நிகழ்ந்ததை நன்கறி வோமே ! 178

9. கிறிஸ்து ஜோதிப் படலம்

கல்வியிற் சிறந்தவன், கற்ற ஞானத்தைச்
சொல்பவன், சொற்படி துணிந்து தொண்டுசெய்
நல்வழி நிற்பவன், ஞான மார்க்கத்திற்
செல்பவன் கிறித்துவச் செம்மல் ஏசுதாஸ்.

பைபிளை முழுமனப் பாடஞ் செய்தவன்,
செய்கையிற் சிறந்தவன், சிலுவை நேயனே.
தெய்வத்தின் பெருமையைச் செப்பும் வாயினன்,
பொய்வித்தை வெறுத்திடும் புலவன் அன்னவன்.

தனத்தினைத் தொடுதலைத் தவிர்த்துத் தன்னறி
மனத்தினைத் தொடுகின்ற வாய்மை பேசித்தன்,
இனத்தினில் இசைந்தவர் இணையச் சேர்ப்பவன்,
அனைத்துயிர் உலகிற்கும் அன்பு மேவினன்.

அன்னவன் மந்திரம் அமைத்து வாழ்ந்திடும்,
நன்னகர் ஒழுங்கினை, நல்ல தூய்மையை,
வன்னமார் மனைகளை, மாந்தர் அன்பினைப்
பொன்னணி திருவினைப் புனிதன் கண்டனன்...

ஆண்பெணும் பலகலை அறிந்து தேர்ந்தவர் ;
வீண்பொழு தின்றியே வேலை செய்பவர்.
காண்பதற் கினியவர் கையிற் பைபிளைப்
பூண்பவர் ; வேறொரு பூணு மற்றவர்.

கலகங்கள் விளைத்திடுங் கட்சி பேதமாம்
பலபல சர்ச்சுகள் பார்த்தும், பார்த்திலான்.
பொலிவுறு மலைமிசை பொருந்துந் தாஸரின்
இலகுறு மந்திரம் இருந்து கற்றனன்.

புதுமையும் பழமையும் பொருந்து பைபிளை
விதவித மதங்களின் வேறு பாட்டுடன்,
இதமுறக் கற்றனன் ஏசு தாஸரின்,
சுதந்தரச் சர்ச்சினிற் சுத்த தேவனே !

விண்ணவன் கடவுளுண்மை விண்டநம் ஏசு நாதன்,
புண்ணியத் திருநா ளாங்கே போந்தது ; மாந்த ரெல்லாம்,
வண்ணமார் உடைய ணிந்து வரிசையாய்ப் பவனி சென்றே
பண்ணுடன் சிலுவை முன்னே பரவினர் பணிந்து நின்றார்.

அத்ததி ஊரா ரெல்லாம் ஆர்வத்தைக் கூறி வேண்டச்
சுத்தனு மகிழ்ந்து தூண்டச் சுடரணி மேடை யேறி,
வித்தகன் ஏசு தாசன், விண்ணுற நோக்கித் தெய்வ
பத்தியால் ஏசு நாதர் பண்பினை யிசைத்தான் மாதோ !

ஏசுகிறிஸ்து ஜோதி

தேசு லாவுந் தியாகத் திருவினன்,
பேசுஞ் சொல்லைச் செயல்பெறப் பேணினன்,
ஏசு நாதன் இணையறு வாழ்வினை,
மாசி லாத மனமுறக் கேண்மினோ !

பூவியற் புரைகள் போகப் புண்ணியம் புரிந்த நாதன்,
தேவியற் குணத்தால், வெய்ய தீமையே தொழிலாய்ச் செய்த
பாவியர் தமக்கும் அன்பன் ; பரிவருள் கமலக் கண்ணன்,
ஆவியைப் பலிகொ டுத்தான், அறநெறி சிறக்க மன்றே !

அருந்திறல் ஆகும் ஆத்ம சக்தியால் அவத ரித்தோன்,
பெருந்தவச் சுடரே யானோன், பேரின்பப் புலவர் உள்ளம்
பொருந்திய கிழக்கிற் பூத்துப் பூவெங்கும் பரம ஞான
மருந்தெனப் பரவுந் தெய்வ மணங்கமழ் வாழ்வி னனே !

காமமுங் கொலையுங் கள்ளுங் கவருடன் கடிய வட்டித்
தீமையும் திருட்டும் பொய்யுஞ் சிறுமையுங் கொண்ட மாந்தர்,
நேமமொன் றறியா நீசர், நெஞ்சினில் அன்பே யில்லார்,
சாமியின் பெயரைச் சொல்லித் தனக்குவை சேர்த்தா ரம்மா !

பொய்யொழுக் கங்கள் மாறப் போலிகள் சேட்டை தீர,
மெய்யொளி பரவ, யூதர் விளக்கொளி யாக வந்த,
துய்யவன் ஏசு நாதன், சுடச்சுடத் துன்பந் தாங்கிச்
செய்ததோர் தியாக வேள்வி செப்புதற் கரிய தம்மா !

திருப்பிறப்பு

அணிக்கணி யான செல்வி, அகப்புறந் தூய நல்லாள்,
கணிக்கருங் கற்பின் மிக்காள், கருணையே புரியு நீராள்,
மணிக்கொடி யிடையாள் மேரி மாசறு வயிற்றில் வந்தான்,
பணிக்குட லெடுத்த நாதன் பரிசுத்த சக்தி யாலே ! 60

திருவுடை அபிர ஹாமின் சீர்பெறு மரபிற் பூத்தான்,
உருவுடை மதனன் போன்றான் ; உள்ளத்தில் அன்பு மிக்கான்;
கருவுடைக் கன்னி தன்னைக் கடிமணம் புரிந்த நல்லோன்,
அருளுடை யோசேப் என்னும் அருங்கலைத் தச்ச னம்மா !

நங்கையுங் கணவ னாரும் நாசரத் தினிலே, தூய
மங்கல மனைய றத்தில் மனமொன்றி வாழு மெல்லை,
அங்கர சாளும் ஏரோ தரசனுஞ் சனத்தை எண்ண
நுங்களூர் செல்லீ ரென்று நூதன அறிக்கை விட்டான் !

பிள்ளையைச் சுமந்தாளோடும் பிறந்தவூர் பெத்தல் ஹாமை,
நள்ளிரா வினில்யோ சேப்பு நண்ணினன் ; ஆங்கு மாந்தர்
எள்ளிடும் இடமி லாமல், எங்குமே நெருங்க வேறு
கொள்ளிடம் அற்றோர் மாட்டுத் தொழுவத்திற் குந்தி னனே !

மன்னுல இன்ப மெய்த, வானகம் புதுமீன் காட்ட,
உன்னத உணர்ச்சி யாலே உயிருளம் உவகை கொள்ள,
பன்னருங் கடவுள் வாக்கே பருவுடல் கொண்டு, மேரி
அன்னையின் அன்பு பொங்க வரதனும் அவத ரித்தான் !

பரத்தொளிர் பரமா னந்தம் பரிவுடன் கருணைத் தாயின்
கரத்தொளிர் மதியாய்ப் பொன்னின் கதிர்மணிச்சேயாய்க் காலை
சிரித்தலர் கமலம் பூத்த திருவடி வாகி, ஏசு
கிறித்தெனும் கனியாய்ப் பூவின் வரமெனக்கிடைத்ததம்மா !

இரவினைப் பகல்செய் மீனை வியந்திடும் இடையர் முன்னே,
மருவியோர் தூதன், ஞான வரதனின் வரவைக் கூறப்
பெருகிய வுவகை தூண்டப் பிள்ளையை விரைந்து கண்டுள்
உருகினர் வஞ்ச மில்லா உளத்தினர்க் கருளுண் டாமே !

கண்டனர் புதுமீன் மூன்று காட்சிசேர் முனிவர் ; உண்மை
விண்டனர், ஏரோ தின்பால் விரைந்தனர்; வேந்தே யுன்றன்
மண்டலத் துதித்த யூத மன்னனை ஈன்ற பேறு,
கொண்டநல் லூரின் பேரைக் கூறெனக் குறிப்பிட் டாரே !

மங்கலச் செய்தி யென்று மாமுனி வோர்கள் கேட்கப்
பொங்கிய பொறுமை யேறி நூல்களைப் புரட்டிப் பார்த்தே,
அங்கவன் பெத்தல் ஹாமில் வருவனென் றறிவோம் ; நீவிர்
இங்குடன் கண்டு வாரீர் என்றனன் இகலு ளானே !

மானுறு முனிவர் சென்று, வழியினில் இடையர் அன்பு
பேணுறத் தெய்வச் சேயின் பிறப்பிடம் அறிந்து வந்தே,
நாணுறு மேரி தாங்கும் ஞானமாச் சோதி தன்னைக்
காணுறு கண்ணும் உள்ளுங் களித்திடக் கண்டா ரம்மா !

"உய்யுமிவ் வுலகம். உண்மை ஒளியினைக் கண்டோம்" என்றே
செய்யமா மணியைப் போற்றிச் சேமங்கள் சொல்லிப் போந்த
துய்யமா முனிவர் தம்மைத் தூதனும் எச்ச ரிக்க,
வெய்யமா வேந்தைத் தப்பி வேறொரு வழியே போனர்.

இகம்புகழ் ஏசுக்றிஸ்து எனும்பெயர் விளங்கப் பெற்றோர்,
மகவினைக் கொஞ்சும் போது, மண்வெறி கொண்ட மன்னன்,
இகலுறு கொலைஞர் தம்மை ஏவினன் ; "எகிப்தி னுக்கே,
புகல்பெறச் செல்மின்" என்றோர் தூதனும் புகன்று னம்மா !

இளந்தளிர்ச் சேயைத் தாய்முன் இரத்தவா ளரக்கர் வந்து
பிளந்துயிர் குடிக்கு முன்பே, பெற்றவர் பிழைத்தோம் என்றே,
அளந்தடி வைத்துத் தப்பி, எகிப்தினை யடைந்தார் ; ஆங்கே
வளர்ந்தனன் ஏசு நாதன் வளர்பிறை வட்டம் போலே !

முனிவருந் திரும்ப வில்லை ; முதியவர் சொன்ன சேயின்
தனியிடந் தேடும் போதே பெத்தல்ஹாம் சவலைக் கெல்லாம்
சனிதொடர்ந் ததுவே யென்று தருமமும் நடுங்கிற் றம்மா !
கனிவுள தாய்மார் அஞ்சக் கடுங்குர லெடுத்தான் மன்னன் !

ஆற்றிலன் ; சேயை நெஞ்சில் அனலுக நினைத்தான் ; ஊழிக்
காற்றென உயிர்த்தான். கண்கள் கனற்பொறி பறக்கக் கையிற்,
சிற்றவாள் உயர்த்தி, எட்டுத் திசைகளுங் கிடுகி டுக்கக்
கூற்றினுங் கொடிய ரான கொலைஞரைக் கூவி னானே !—

ஒளிந்துளான் சேயுட் சேயாய் ஒன்னலன் ; எனது நெஞ்சங்
குளிர்ந்திடப் பெற்றோர் நெஞ்சங் கொதித்திட, வாளை வீசி,
இளந்தளிர்ச் சேய்க ளெல்லாம் இறந்திடச் செய்மின் ; உள்ளே
பிளந்தன்றே பலாவின் கெட்ட சுளையினைப் பிரித்த லாமே !

மின்னின கொடிய வாட்கள் ; வெடித்தன வெறியர் சொற்கள் ;
அன்னையர் கண்ணீர் சோக அருவிபோற் பொழிந்த தந்தோ !
இன்னிளம் சேய்கள் 'அம்மா' என்னுமுன் இரண்டு துண்டாய்ப்
பொன்னுடல் இரத்த மோடப் புழுதியிற் புரண்ட தம்மா !

பிறந்தநம் பகைவன் அந்தப் பெத்தல்ஹாம் சேய்க ளோடும்,
இறந்தனன்என்றுபொங்கும்கொடியவன்இறுமாப்பெல்லாம்,
பறந்திடக் கால வேடன் பகழியைத் தொடுத்தான் ; அச்சந்
துறந்தனர் நல்லோர் ; ஆவி துறந்தனன் ஏரோ தம்மா !

தனந்தருஞ் செருக்கும், இந்தத் தாரணி நமதே யென்னும்
மனந்தருஞ் செருக்கும், ஆசை மாதரின் செருக்கும், போற்றும்,
இனந்தருஞ் செருக்கும்,எம்மின்இல்லெனும்செருக்கும்,ஊனின்
கனந்தருஞ் செருக்கும், எல்லாங் காலன்முன் சருக்கி மண்ணும்!

நசரேன்

பொன்றி னுன்புவிப் பொறையெனப் போந்த மாபாவி,
என்று கேட்டலும், இறைவனின் செயலென மகிழ்ந்தே,
அன்றெ கிப்தினிற் கரந்துறை அருந்தவம் அனையார்,
இன்று நாசரத் தெழுந்தனர் ஏசுவைச் சுமந்தே !

தேசுலாம் இயற் காட்சியிற், செழுமனந் தோய்ந்தே,
யோசப் பாற்றிடுந் தச்சினுக் குடனிருந் துதவி,
ஏசு நாதனும் இளந்தொழி லாளியாய்ப் பயின்றான்,
மாசி லாதவன் பள்ளியின் கல்வியும் வாய்ந்தான் !

அறிஞர் போற்றிடும் உள்ளறி வமைந்தநல் லறவோன்
பெறலரும் வுயர் பெருந்தகைக் குணநலம் பெற்றோன்,
பொறையும் வாய்மையும் புண்ணிய வாழ்க்கையும் பூண்டான்,
இறைவன் மைந்தனென் றுலகெலாம் உணர்ந்திட எழுந்தோன்.

பெற்ற வர்க்குறு கடமையும் பிரியமும் உடையோன்,
உற்ற வர்தமை உபசரித் திடும்கனி வுளத்தோன்.
மற்ற வர்தமைத் தானென மதித்திடு மதியோன்,
கற்ற வர்க்கரி தாகிய கருணையின் கடலோன் !

பொங்கு யார்தன்மா நதிக்கரை போந்தவோர் பகலில்,
அங்கு வந்தனன் அருள்வர வுரைத்திடும் யோவான் !
சங்கை யற்றநற் சனத்திரள் பணிந்திடுஞ் சாந்தன்,
மங்க ளப்புன லாட்டிடு மாசறு மனத்தான்.

வருந்து மின்பிழை, வழியினைத் துலக்குமின், ஞான
விருந்து கொண்டுறுந் தெய்விக வேந்தனைப் பணிமின் ;
மருந்தவன் மணி மொழியென மந்திர கானம்,
திருந்தச் செய்திடுந் தூதன்முன் திருமகன் பணிந்தான் !

"ஞானத் திம்புனல் ஆட்டுக" என்றனு நாதன்,
"வானத் திங்கதிர் நீ" யென வணங்கியோ வானும்,
ஞானத் திம்புன லாட்டிய நற்பொழு தாங்கு
வானத் தின்பம்வந் திறங்கிற்றோர் மணிப்புரு எனவே !

நதி சிலிர்த்தது, நானிலஞ் சிலிர்த்தது, மாந்தர்
துதி சிலிர்த்தது, தூண்டிய உவகையி னலே
புதிய வாழ்க்கையின் புண்ணியஞ் சிலிர்த்தது, நாதன்
மதிசி லிர்த்தது சிலிர்த்தது வானமும் வாழ்த்தி !

திருக்கு மாரனே தேவனென் றெண்டிசை யதிர,
உருக்க மாயொரு வாணியும் உதித்தது ; யூதர்
வருக்கம் உய்ந்ததென் றருட்பெறு தூதனும் வாழ்த்தி,
அருக்கன் போலொளிர் ஏசுவை அடிபணிந் தகன்றன் !

தந்தை யாகிய தயாபரன் அருளினல், உலகில்
வந்த காரியம் யாதென வரதனும் அறிந்தே,
அந்த மெய்வினைக் கறிவொளி பெற்றிடக் கருதி,
முந்து சாதனஞ் செய்தனன் மோகத்தை முனிந்தே !

நாடி ழந்தயல் ஆட்சியில் யூதரிந் நாளில்,
பீடி ழந்துதம் பிறவியின் பயன்களை யிழந்தே,
காடி ருந்திடும் விலங்கெனக் காமத்தின் வெறியால்,
வாடி நின்றனர், மானிடத் தருமமும் வறண்டே !

கொலையும் கொள்ளையுங் குடியுடன் கூத்தியர் வீசும்
வலையு மானிடர் மனத்தையும் இனத்தையும் கெடுத்தே,
நிலைகு லைத்திடு நிலைமையை நேருறக் கண்டே,
உலகம் உய்வழி தேடினன் உட்குவிந் திருந்தே !

விரதம்

உனதுளப் படியே செய்வாய் உயர்பரம் பொருளே யென்று
தனதெலாம் கடவுட் கீந்து, தனித்தொரு பற்று மின்றி,
மனதினை யடக்கி வென்ற மாசிலாக் கிறிஸ்து நாதன்,
வினையுடல் எடுத்த நன்மை விளைந்திட விரதங் கொண்டான்.

மறவழி விலகி, மாந்தர் மாசிலாத் தூய ராகி,
அறவழி பயிலச் செய்யும் ஆற்றலைப் பெறவே, காட்டில்
உறையுநாற் பதுநாள், ஊணும் உறக்கமு மின்றி ஐயன்,
பொறைவளர் தவம்பு ரிந்து, புண்ணியப் பணியிற் புக்கான்.

அடர்வனத் தவத்தி னாலே அடங்கறு பசிகொண் டுற்ற
திடம்பெறு மனத்தி னானைத் திடீரென மடக்க வேண்டி,
விடங்கொளுந் தீய சாத்தான் விரைந்துவந் திழிவு செய்து,
கடவுளின் மைந்த னேநீ கற்களைப் புசியென் றனே.

"கற்களை வேண்டேன் ; ரொட்டி தன்னினுங் கடவுளின்பச்
சொற்களை யுண்பேன் ; மாந்தர் சோற்றுக்கே வாழ்வ தில்லை.
கற்பன கற்று நின்று, கருணையின் விளக்கங் காண்பேன்.
அற்பனே அறிதி" யென்றான் அன்புடை வள்ளல் ஆங்கே !

நீங்கறு சாத்தான் அந்த நிமலனை வாரிச் சென்றே
ஓங்குயர் கோபு ரத்தின் உச்சியில் ஏற்றி, "உன்னைத்
தாங்கிறை பேரைச் சொல்லித் தா"வெனச் சாத்தான் "ஏசு
ஈங்குட லாசை யில்லை ஏகுபின் பேயே" என்றான்.

அயர்வறு சாத்தான் மீண்டும் ஐயனை ஆசை காட்டி,
உயர்மலை முடியி லேற்றி, "உலகெலாந் தருவேன்" என்றான் !
"வியனுல காசை காட்டும் வீணவுன் சூழ்ச்சி யிங்கே
பயனிலை செல்பின் பேயே ; பயமிலை" யென்றான் யோகி !

பொன்னிலு மயங்கான்; பூவின் பொருளிலு மயங்கான்; முன்னே
புன்னகை காட்டும் பெண்ணின் பொய்யழ கிலும யங்கான்,
அன்னிய மாயம் வீசுந் தந்திர வலைக்கும் அஞ்சான்,—
தன்னைத் தான் கண்ட யோகி, சத்திய வேதந் தந்தான்.

மல்குபே ராசை காட்டி, மயக்கிடும் பேயை நோக்கிச்
"செல்கபின் செல்க" வென்றே சீரியன் வெருட்டத் தீயன்,
பல்கிய பொறாமை கொண்டு, பாரகர் மனதிற் புக்கு,
நல்கிய துயரைப் பின்பு நவின்றிடக் கேட்பீ ரன்றே !

எண்ணறு நன்மை செய்யும் இன்சொலா ரேனுந் தூய
புண்ணியப் புலவ ரேனும், பொதுநலத் தொண்ட ரேனும்,
கண்ணிய முனிவ ரேனுங் கடைக்குணக் கசட ராலே
புண்ணுறச் செய்யுந் தீய பொறாமையைப் பிழைப்ப துண்டோ ?

நசைதரு செல்வ வாழ்க்கை நாடக மெல்லாம் ஆடி,
வசைதருங் கனவு போல மறையுமென் றறிந்த ஞானி,
இசைதரும் புகழி னுக்கும் இன்னல்செய் பகைவ ருக்கும்,
அசைவுறக் கலங்கி டாமல் அருட்பணி புரிந்தான் மன்னோ !

இறைவனின் அருளார் மைந்தன், வருகையை இயம்பி னேனைச்
சிறையினில் அடைத்தும், வெய்ய சித்திர வதைகள் செய்தும்,
பறையடித் தேசு தன்னைப் பகைவர்கள் ஏசி நின்றும்,
குறைவறத் தருமத் தந்தை குறித்ததைச்செய்தான் அன்னோன்!

"வருந்துமின் பிழைகள் ! இன்ப வானர சுற்ற" தென்றே
திருந்துற மொழிந்து, நான்கு திசையிலுந்திரிந்தான் சொல்லைப்
பெருந்தகை யெளியர் கேட்டுப் பின்பற்ற முன்வந் தார்கள்.
அருந்திரு வாள ராகும் அன்பரின் பெயரைக் கேளீர் :—

பேதுரு யோவான், மத்தாய், பொர்தலோ மியன், ஜேம்ஸ்ஆந்த்ரூ
யூதசு, தாமன், பில்லிப், சீமன், தியோடி யூஸஉம்
மேதினி யாசை யெல்லாம் விட்டருட் குருவின் பின்னே,—
வாதறச் சென்றார் இந்த வஞ்சமில் வணிக ரம்மா !

நற்றவக் குருவும், தூய நன்னெறி யொழுக்கங் காட்டிச்
சுற்றிலும் அன்பு மார்க்கஞ் சொல்லுக வென்று தூண்டிப்
பற்றுத லுள்ள சீடர், பணியினை வகுத்த ளித்து,
மற்றவன் ஊரைச் சுற்றி மன்பதைக் குபதே சித்தான் !

பிணியிடர் களைந்து, மாயப் பேய்களை ஓட்டி, நல்ல
பணிகளைப் புரிந்து, மாந்தர் பதம்பெற வுதவி செய்தே,
குணமலை கலிலி மேவுங் குன்றின்மேல் விளங்கிச் சொன்ன
கனிமொழி யொன்றே வேதக் கனியெனப் போற்ற லாமே! 240

வாழிய எளியோர் வானர சாள்வார்,
மனநிறை வெய்துவார் அறவோர்.
வாழிய தூயர் இறைவனைக் காண்பார்,
வையகம் புரப்பர்சா துக்கள் ;
வாழிய வருந்துந் தியாகிகள் ; அவர்க்கே
வானர சாட்சியும் ஆகும்.
வாழிநல் லருளார் வருத்தந்தீர்ந் திருப்பார்,
வாழியுள் ளன்பரின் வாழ்வே !

புல்லியல் மாந்தர் பொறுமையாற் செய்யும்
புண்களைப் பொறுத்தவர்க் கமைதி !
அல்லியின் அழகும், பறவையின் உணவும்,
அளித்தநம் அப்பனை நினைந்தே,
தொல்லையி லாத மனத்துற வுடனே
தொண்டுகள் செய்பவர்க் கமைதி !
எல்லையில் லாத பேரின்ப வானை
இதயத்திற் கண்டவர்க் கமைதி !

விரும்பி யன்பர்கள் வித்தகன் வேதத்தைக் கேட்கக்
கரும்பை மொய்த்திடும் எறும்பெனக் காதலோ டணைந்தார் ;
அரும்ப சிக்குறும் அன்னமென் றறமொழி யுவந்தார்.
இரும்பு நெஞ்சினர் இனுமினு மிகலினை வளர்த்தார்.

குருடர்கள் செவிடர் ஊமர், குட்டர்கள், பேயர் நோயர்,
தெருவினில் ஐயன் வந்து தீண்டவும் வருத்தந் தீர்ந்தார்.
செருமிகு புயலுஞ் சாந்தஞ் சேர்ந்தடங் கியதைக் கண்டார்.
அருளுறு சக்தி மானுக் கரியதிவ் வுலகி லென்னே !

கள்ளுண்ட காமப் பித்தன், காவலன் ஏரோ தென்பான்,
கிள்ளினன் யோவான் சென்னி ; கேட்டதை வருந்தி ஏசு,
உள்ளன்ப ருடனே காட்டில் உறைந்தனன் விசனந் தீர்க்கும்
வள்ளலை யெண்ணி யெண்ணி வடித்தனன் இரக்கக் கண்ணீர் !

அத்ததி அப்பம் ஐந்தை அன்பரின் பசிநோய் தீரச்
சித்தினுற் பெருக்கி யீந்தான் ; சீடரைத் துணிவு றுத்தித்
தத்துவ மெல்லாஞ் சொல்லிச் சமரசச் சாந்த மூட்டி,
பத்தியாற் சேவை செய்யப் பணித்தனன் ஏசு நாதன் !

"ஆணவ மின்றி மண்ணின் ஆசைக ளின்றி, என்றும்
ஊனுடைக் கவலை யின்றி, உலகினை அஞ்சி டாமல்,
வீணிடம் பங்க ளின்றி, மெய்வழி நடந்து காட்டி,
மானுறு தொண்டு செய்ய மகிழ்வுடன் செய்மின்" என்றான்.

என்ற கட்டளை ஏந்திப் பலதிசை
சென்று சீடர் திருப்பணி செய்தனர்,
நன்று நாதனு நாட்டினைச் சுற்றியே,
என்று முள்ள எருசல மேகினன்.

எருசலத்தில்

ஈசன் ஆலயம் என்பதை எண்ணிலார்
காசு வட்டிக் கறிக்கடை யாக்கினர்—
மோசச் செல்வர்கள் மொய்க்கும் எருசலம்,
ஏசு நாதன் மொழியை எதிர்த்ததே !

அருளி னப்பன் அமர்ந்தநல் லாலயம்,
இருளின் பேய்கள் இழிநட மாடிடத்
திருவ ழிக்குந் திருட்டுப் பதர்களா !
கருவ ழித்திடும் காமப் பிசாசு காள் !

அடியர் கூடிடும் ஆலயம் ஆணவத்
தடியர் கூடிடுஞ் சந்தையென் றுனதே,
குடியர் கூத்தியர், குண்டர், கடுவட்டிக்
கடையர் கூடுங் கடைநில மாயதே !

வெற்று ரைகளும் வீண்மயக் காடலும்,
கற்றுங் கண்ணறு காம நடங்களும்,
சற்றுந் தாங்கிலன் ; சத்திய வீரனே.
குற்றங் குற்றமென் றேகுறித் தானரோ !

பாரகர் சீற்றம்

ஈன வெஞ்சின மேறிய வஞ்சர்கள்,
போன போக்கில் விளுக்கள் புனைந்தனர் ;
ஞான மாமணி சொல்லு நயமொழி
தேனின் மிக்கும், கசந்ததத் தீயர்க்கே !

புனித னென்றனர் புந்தி தெளிந்தவர் ;
இனிய னென்றனர் ஏசுவை நல்லவர் ;
மனித னில்லை மனிதரைக் கொள்ளைகொள்
சனிய னென்றனர் தாமதப் பாரகர் !

தூறு பேசினர் தூண்டும் பொருமையால்,
ஊறு செய்தனர், உட்பகைத் தீயெழத்
தாறு மாறெனத் தாக்கினர் ; நூக்கினர்,
கூறினர் கொடுங் கோள்கள் அரசன்பால் !

அரசன் முன்

தச்சர்குலக் கன்னி மகன் தந்தையற வந்தோன்,
மெச்சுமுனை ஏளனஞ்செய் ஏழையிவன் வேந்தே !
அச்சமற யூதர்பதி தானெனவே ஆர்த்தான் ;
சிச்சியிவன் செய்கைகளைச் செப்புவதுந் தீதே !

மனத்திறல் படைத்தவன், மறுத்தனன் உனைத் தான்,
கனத்திறல் படைத்தபுவிக் காவலனென் கின்றன் !
தனத்திறல் படைத்தவர் சருப்பமெனச் சொன்னன்,
இனித்த மொழி யாலிவன் புரட்சிக ளிழைத்தான்.

வாய்மை யெனு மாயவலை மாந்தரிடை வீசி
நாயடியர் கூட்டமொடு நாடறியச் செல்வான்.
பேயனிவன் வந்தவுடன் பேய்களு நடுங்கும்,
போயதிசை யெங்கிலும் புகைந்தது புரட்சி !

தேசு லாவுந் திருமுகச் சீருளான்,
பேசக் கன்மனம் பின்வருஞ் செஞ்சொலான்,
காசி னிக்கிதங் காட்டுமிக் கள்ளனே
ஏசு க்றிஸ்துவென் றேத்தினர் பாமரர் !

சீட ரோடவன் சேர்ந்துறைச் சூழலைத்
தேடிக் கட்டிச் சிறையிடின் அல்லது
வாடு முன்னறம், வாடுமுன் னுட்சியும்,
நாடும் போமிந்த நாடறி வேடனுல்.

சள்ளை யின்னமுஞ் சாற்றிடு முன்னவன்,
கொள்ளை கொண்டவர் கூட்டம் பெருகுமால்,
வெள்ளை யாக விளம்பினம் வேந்தனே,
கள்ளனைக் கடுங் காவலில் வைத்திடாய் !

ஆத்தி ரப்பகை யாளர் சொற் கேட்டதும்,
தித்தண லெனச் செஞ்சினங் கொண்டவன்,
"கோத்துக் கட்டிக் கொணருக" வென்றனன்,
ஏத்தி வேந்தனை ஏகினர் பாரகர் !

கொள்ளி போலக் கொதிசினப் பாரகர்,
கள்ளச் சீடன்யூ தாசின் கரத்திலே,
வெள்ளி முப்பது தந்து விமலனை,
அள்ளித் தங்கை யளித்திடச் செய்தனர் !

இறுதி யுண்டி

தறுக ணளர்செய் தந்திரச் சூழ்ச்சியை
மறுக ணந்தன் மனத்தி லறிந்தெலாம்
உறுக மண்ணி லுறுவதென் றேசுவும்
இறுதி யுண்டி யிராவினிற் கொண்டனன் !

பர பரப்புடன் பன்னிரு சீடரும்,
கரமுங் கண்ணுங் கலந்துரை பேசிட
விரைவி லுண்டி நடந்திடும் வேளையில்,
உரைசெய்தான் உரை எட்டரும் உத்தமன் !—

"பன்முறை பகை பேசிய பாரகர்,
இம்மு றைவந் தெடுத்துச்சென் றென்னையே
வெம் முறைசெய வேண்டி வருகின்றார்—
நம்முளே யொரு நாத்திகன் வஞ்சத்தால் !"

கள்ள நெஞ்சங் களுக்கென யூதசும்,
"வள்ளலே அந்த வஞ்சன்யா னே" வென
மெள்ள ஆமென வித்தகன், மாணவர்
உள்ளம் விம்மி யுகுத்தனர் புன்கணீர் !

"கோழி கூவுமுன் பேதுரு கொட்புற்றே
ஏழை யேனை மறுத்திழி வாக்குவான்,
கோழைச் சீடர் குனுக்கென ஓடுவார்,
வாழும் என்னுடன் மாசறு வாய்மையே !

தூய்மை யான துறவுடன், அன்புடன்,
வாய்மை பேசி வளர்நலஞ் செய்யினும்,
தீயர் என்னைச் சிலுவையில் ஏற்றியே
மாயக் கொல்லுவர் ; மாயம் பலிக்குமோ ?

மூன்று நாளில் எழுந்துமுன் போலவே,
ஆன்ற தந்தை யருகினிற் செல்லுவேன்,
ஊன்றும் பின்என துண்மை ; புதுயுகம்
தோன்று" மென்று தொழுதனன் யோகியே !

அன்னையின் அன்புடை அப்பனே ஒப்பிலாய்,
உன்னதென் ஆவியும் யாக்கையும் உன்னதே !
உன்னதே எண்ணமும் உன்னதே செய்கையும்,
உன்சரண் உன்சரண் உன்மன மாகவே !

என்னகம் என்புறம் என்னுயிர்ப் பானவா !
மன்னரின் மன்னவா, மாசிலாக் காதலால்
உன்னையே நம்பினேன் ; உலகையாள் ஒருவனே
என்னநீ செய்யினும் எங்களுக் கினியதே !

அன்பருக் கன்பனே அன்பிலா ருள்ளுநீ
அன்புருக் கொண்டுளாய் ; ஆருயிர்க் காவியே,
இன்பமுந் துன்பமும் ஏற்றமும் தாழ்வுமுன்
மென்பணிப் பாதையின் மேடுபள் ளங்களே !

புன்புலாற் புற்புதம் போலுமிப் பொய்யுடல்,
உன்பணிக் கேபலி யுற்றிடின் உய்குவேன் !
அன்பணிந் துன்னிடம் ஆவியாய் வாழுவேன் !
என்பரத் தந்தையுன் இச்சையே வெல்கவே !

பகைவர் கொடுமை

என்றுதி யானிக்கும் இரவில் ஒற்றர்கள்,
குன்றுறு காட்டினிற் குலவிச் சூழ்ந்தனர் ;
தன்றிருக் குருவினைத் தழுவிக் காட்டினன்
நன்றியி லாநய வஞ்ச நஞ்சனே !

குற்றமில் பசுவினைக் குறித்த வேங்கைபோற்
சுற்றினர் சாதுவைத் துன்பப் பாதகர் ;
தெற்றென வாளினைச் சீமன் வீசியே,
செற்றனன் ஒருவனைச் சிங்கம் போலவே !

ஒன்னலர் உயிரினை யுண்க யானென்றே
இன்னொரு சீடனும் எடுக்க வாளினை,
கன்மன முருகிடுங் கருணைச் செம்மலும்,
அன்னவன் கைகளை அமர்த்திக் கூறினன் :—

இறுதி மொழி

"என்றென துடலுயிர் ஈசன் ஆணையால்,
நன்றுல கின்பணி நாடி வந்ததோ !
அன்றென தனைத்தையும் அவன்கை யிந்தனன்,
இன்றிவர் இழைத்ததும் இறைவன் இச்சையே !

எந்தையின் கட்டளைக் கிரத்த மின்றுநான்
சிந்திடுஞ் செயலிலும் சிறந்த தொன்றுண்டோ ?
வந்தது வாய்மையை வாய்மை யாக்கியே,
சந்ததம் வாழ்ந்திடுந் தருணம் அன்பரே !

சாவெனப் படுவது சட்டை மாற்றமே.
தேவிய லாகிய தேகி தானென்பார்,
ஆவியை அச்சத்திற் கடிமை செய்வரோ ?
பூவெலாம் அதற்கிணை பொருத்த லாகுமோ ?

ஒன்னலர் இடும்பைகள் ஒறுக்கு மட்டுமே !
மின்னலைப் போலுடன் மிளிரு மட்டுமே !
புன்னகை யுடனதைப் பொறுத்த புண்ணியன்,
மன்னுயிர் நெஞ்சிலே மன்னி வாழ்வனே !

ஆதலால் உண்மையுள் ளறிந்த தூயவர்,
தீதறு மெய்யறந் திகழ வாழுவீர்.
மேதினிக் கன்பவி மேவு வீரெனப்
போதகன் புன்னகை பொலியப் போயினன் !

கொடியர் கொடுமை

கன்மனக் கொடியவர் கருணை யற்றவர்,
ஒன்னலர் ஐயனை யூத சற்குரு
தன்னிடந் தந்ததும், தருக்க ரீதியில்
அன்னவன் ஆயிரங் கேள்வி ஆர்த்தனன் !

சத்தியஞ் சொல்லிடுஞ் சாந்தத் தூதனைப்
பித்துறு வசைமொழி பிதற்றி வைதனர்
மொத்தினர் பிய்த்தனர், முதுகி லேயறை
வைத்தனர் பாரகர் வஞ்சந் திரவே.

பேதுரு மறுத்தான். இன்னோன் பெயரையும் அறியேனென்று,
சாதுவை விட்டுச் சீடர் சங்கமுங் கலைந்த தம்மா !
பாதகப் பணத்தை வீசி யூதசும் பதறி மாய்ந்தான்.
தீதெலாம் பொறுத்தான் ஏசு; தேசத்தார்கொடுமை யென்னே !

கட்டுண்டு காபாவிற் கல்நெஞ்சர் துப்பிடவே கடுமையாகத்
திட்டுண்டு திருடனெனச் செப்புண்டு, திருவற்ற செல்வர்கையாற்
குட்டுண்டு, பொறையுண்டு, குரைகடற்கும் அமைதியினைக்குறித்த சாந்தன்,
பட்டுண்ட பாட்டினுக்குப் பஞ்சுபடும் பாடெந்தப் பங்கே யம்மா ?

பொருளாசை வேதியரும் புலையாசைச் சதுசயரும்
புலிபோற் சூழ்ந்தே,
இருளாசை யிழிமனத்தர், இறவாத திருவோனை
இணையி லானை,
அருளாசை கொண்டவனை அரசேயுன் ஆட்சிக்குப்
பகைவன் காணீர்
பொருளாசைப் பித்தனிவன் பொன்றுவதே புகழென்னப்
பொய்கள் சொன்னர் !

வைதார்கள் வாய்வரா வார்த்தையெலாஞ் சொல்லியிவன்
வஞ்ச னென்றே,
பெய்தார்கள் சொல்லம்பு, பெரும்பொறுமைப் பெரியோனைப்
பிடித்துத் தள்ளிச்
செய்தார்கள் அவமானஞ் சிலுவையிட்டுக் கொல்லுவதே
சிறந்த தென்று,
பொய்வாயர் மெய்யவனைப் பொன்பிலாத் தின்முன்னே
புகுத்தி னரே ! 440

* போன்ஸ்பிலாத்தன் முன்

உன்னதக் கலைகள் ஓங்கும் உரோமா புரியி னின்றும்,
பொன்னிறை யுதியா தன்னைப் புரந்திடப் போந்தாய் வாழி !
இன்னருன் முன்னே நிற்கும் எம்பெரும் பகைவ னுகும்
இன்னவன் ஏசு வென்னும் ஏழை, ஓர் தச்சன் பிள்ளை...

அன்னவன் வாய்நீட் டத்தால், அரவெனப் பழித்தான் எம்மை;
உன்னர சிகழ்ந்தான் ; இந்த உலகெல்லாம் இவனே வென்று
தன்னர சாளு வானும், தருவனும் சுவர்க்க ராஜ்யம்,
என்னவோ உளறு கின்முன் இவனொரு புரட்சிக் காரன் !

நாமெனும் அகந்தை யாலே, நரருக்கு வானே ராட்சி
சேமமா யீந்து காக்கும் தெய்வகு மார னேயாம்.
பாமரர் தம்மைப் பேச்சால், பகட்டினல் மயக்கு கின்முன் ;
பூமியை ஆள வந்த புரவலன் முகத்தைப் பாரீர் !

கைபெறு வாயான், ஊரைக் கலக்கிடும் கலகச் சிங்கம்.
உய்வனேல் உயிரோ டின்னேன், உரோமரின் ஆட்சி யில்லை..
ஐயவுன் அரசு வேண்டின், அரைக்கணந் தன்னில் இந்தப்
பொய்யனைச் சிலுவை யேற்றிப் பொன்றிட மடிப்பீர் என்றுர்.

கண்ணறு பகைவ ரிந்தக் கற்பனைப் பொய்கள் சொல்லப்
புண்ணியன் முகத்தைப் பார்த்துப் பொந்தியோமலைத்துநின்றே,
கண்ணிய மனைவிக் கிந்தக் கதையினைச் சொன்னுன்; அன்னுள்,
எண்ணினுள் ஏசு நாதன் பக்கமே யியம்பி னுளே ! 460

* போன்ஸ்பிலாத்தன் ரோமருக்குக் கீழ்ப்படிந்த யுதியாவைப் புரக்கும் கவர்னர். இவன் சொற்படியே யுதியா யூதமன்னன் ஏரோது நடக்க வேண்டும்.

கண்ணினுற் கண்டேன் இந்தக் கடவுளார் குமரன் மாண்பைப்
புண்ணியன் இவனைப் பொய்யர் புரட்சியன் என்றார் ; ஐய
திண்ணிய நீதி யாளர் சிலுவையிட் டிவனைக் காணார்...
விண்ணொளி மேனியானை விடுதலை செய்க வென்றான் !

மெய்யினை யறிந்து வந்தே, வேதனை முகத்தில் ஏங்கக்
கைதவர் வாய டக்கிக் "கருணையைச் சிலுவை யேற்றேன் !
செய்வதைச் செய்வீர் ; அந்தச் செயற்பய னறியேன்" என்றே
கையினைக் கழுவிச் சென்றான் கலங்கிய கவர்ன ராங்கே !

கூகுவென் றயோக்கி யர்கள் கூகைபோற் சத்த மிட்டார் !
சாகவே சிலுவை செய்யச் சம்மதந் தாரும் என்றார் ;
ஓகோவென் றெக்க ளித்தார்; உரம்பெறக் கட்டித் தூக்கி
ஏகுவோம் ; இன்றே லுன்னை எதிர்ப்ப மென் றிரைந்துநின்றார்.

பகையினன் அல்ல னென்று பரிவுடன் கவர்னர் மீண்டும்,
வகையுறச் சொல்ல யூதர், வாயினை யடையும் ; இன்னான்
மிகைசெய்தான் மிதமாய்விட்டால்,வேந்துனை முனிவானென்றார்.
பகவனை யவர்கை யீந்தும் பாடெனக் கவர்னர் சென்றான்.

பகைவர் கொடுமை

பச்சிளஞ் சேயைச் சூழ்ந்த படுகொலைப் பேய்கள் போன்றார்,
நச்சுறு பாம்பு போன்றார் நாதனைக் கொல்கோ தாவில்
கொச்சையாய்த் திட்டிக் கொட்டிக் கோதறு குளிர்மு கத்தில்
எச்சிலை யுமிழ்ந்தார்;அந்தோ எண்ணிடின் உள்ளம் வேமே ! 480

முண்முடி சூட்டினர் மூங்கி லீந்தனர்,
புண்படு மேனியிற் புனைந்து செவ்வுடை,
எண்கடந் தேசினர் "ஏசு மன்னனே
மண்ணினை யா"ளென வம்பர் வைதனர் !

துப்பினர் திருமுகந் தூய பொன்னுடல்
அப்பமாய் வீங்கிட அடித்துத் தொக்கினர்,
தப்பிய மட்டிலுந் தப்பி, ஐயனை
அப்புறஞ் சிலுவையில் அறைய முன்னின்றார் !

சிலுவை யிடல்

கோரப் புண்ணிற் குருதி யொழுகிடப்
பாரின் பாவம் பரிந்து சுமந்தநந்
திரன் வெய்ய சிலுவையைத் தாங்கவே—
ஈர மற்றவர் ஏசி நகைத்தனர்.

சீலன், ஆண்டவன் சேயெனச் செப்பினாய்,
  சித்து காட்டிச் செகத்தை மயக்கினாய்,
ஆல யத்தை இடித்தமைப் பேனென்றாய் !
  அஞ்சிச் சாத்தா னடங்கிடச் செய்தனே,

ஞாலம் வானர சாட்சி நயந்திட
நான்வந் தேனென நல்லுரை சொல்லினை,
போலி நீயெனப் பொக்குளித் தந்தகோ !
புண்ணியனைச் சிலுவையிட் டாரம்மா !

திருக்கரங்களில் ஆணிகள், ஆணிகள் !.
திருப்ப தங்களில் ஆணிகள், ஆணிகள் !
திருப்புருவ நடுவினில் ஆணியே !
செய்ய மார்பில் அடித்தனர் ஆணியே !
இருப்பு நெஞ்சர் இளகிட வில்லையே !
இரத்த வெள்ளம் எழுந்து சிவந்துறு
நெருப்ப லைகளை வீசிடக் கண்டவர்,
நீதி யில்லை யுலகினி லென்றனர்.

நெற்றிகை காலில் ஆணி புகுத்தியே நிமலன் றன்னை
மற்றிரு கள்வர் நாப்பண் மாட்டினார் சிலுவை யேற்றி.
சிற்றறி வாளர் நக்கார் ; சிறந்தவன் "இறையே இன்னோர்
குற்றமென்றறியாச்செய்தார்குளிர்ந்துமன்னிப்பீர் என்றான் !"

பெற்றதாய் மேரி சொந்தப் பிள்ளையின் இரத்தங் கண்டாள் ;
வற்றறுந் துயரக் கண்ணீர் வடித்தனள் ; வயிறு நொந்தாள்,
இற்றென உரைக்க வொண்ணா இன்னலால் மதிமயக்கம்
உற்றனள் ; "மகனே" என்றாள் உயிர்தடு மாறி வீழ்ந்தாள் !

"கடவுளே கைவிட் டாயோ...கடுமையாய்த் தாகங் கொண்டேன் !
விடுதலை...அப்பா உன்கை விடுத்தனன் ஆவி" யென்றான்...
"கடவுளே தஞ்ச" மென்று தன்னினை வற்றுச் சோர்ந்தான்.
உடலசை யாது நின்றான் உயிரினை உலகிற் கீந்தான்.

மண்ணெலாங் கண்ணீர் வெள்ளம் ; வானெலாம் துயர வாடை
புண்ணிலே எரி புகுந்தாற் போலுளம் வேகத் தொண்டர்,
கண்ணிலாக் காட்டுச் சேய்போற் கதறினார் ; ஏசு நாதன்
புண்ணிய வுடலைப் பாறைப் பொந்தினில் அடக்கம் செய்தார்.

ஈன்ற தாயும் இனியநல் லன்பரும்,
சான்றுளோரு மகிழ்ந்திடச் சற்குரு
மூன்று நாட்கள் முடித்துயிர் பெற்றெதிர்
தோன்றி நல்லடி யார்க்கிவை சொல்லுவான் :—

"உண்மை யன்பர் உளத்தி லிருக்கிறேன் ;
எண்ணி யென்மொழி இப்புவி யெங்குமே,
நண்ணி நற்பணி நாட்டுமின்" என்றுடன்
விண்ண டைந்தனன் வித்தகச் சித்தனே !

கோதறு தாவி நின்ற குலமணிக் கொழுந்தே யென்கோ !
தீதெலாம் பொறுத்து ரத்தஞ் சிந்திய தியாகி யென்கோ !
பூதலப் பலியாய்த் தன்னைச் சிலுவைசெய் புலவ னென்கோ !
போதலத் குருவே யென்கோ ! போற்றியுன் புனித வாழ்வே !

உன்பெய ராலே வாழ்வோம், உன்மொழி ஓதி நிற்போம்,
உன்னரு ளாலே நாங்கள் உலகிற்கு நலங்கள் செய்வோம்.
உன்னுதா ரணத்தைப் பற்றி உடல்பொருள் ஆவி யெல்லாம்,
தன்னல மில்லாத் தியாக சாதனைக் களிப்போம் ஐயா !

சிறுமைகள் செய்த தீயர் செத்துமண் ணானார் ; என்றும்
பொறுமையைக் காத்த நீயே புண்ணியம் போல வாழ்ந்தாய்.
பிறவுயிர் தன்ன தென்று பேணுயர் வள்ளால், உண்மை
அறமுயர் விளக்கே உன்னை அடிபணிந் தன்புசெய்தோம்.

மானுறு நல்லாரோடு மாக்தலீன் என்னும் பெண்ணும்,
கானுற வானிற் சென்று, கருத்தனு மறைந்த போது,
பூணுயர் அன்பி னாலே புண்ணியக் கீதம் பாடிச்
சேணுயர் பரலோகத்தின் அப்பனைச் சிந்தித் தாரே !

ஆண்டவன் அருளை நம்பி, அகந்தையைச் சிலுவை யிட்டு,
மூண்டெழும் அன்பி னாலே மூதுல கெல்லாம் உய்ய
வேண்டிய பணிகள் செய்து, வித்தையும் தொழிலு நாட்டி
நீண்டிசை பெற்றார் தொண்டர் நிமலனின் பெயரி னாலே !

எத்தனை கல்வி மன்றம் ! எத்தனை தொழில கங்கள்,
எத்தனை மருந்துச் சாலை, எத்தனை திரும டங்கள்,
எத்தனை சர்ச்சி னங்கள், இரண்டுநா றுண்டின் பின்னர் !
எத்தனை தொண்டர் கூட்டம் ஏசுவின் பேரால் அம்மா !

உள்ளத்தைப் பண்ப டுத்தி, உண்மையை நட்டு, ஞான
வெள்ளத்தைப் பாய்ச்சி யன்பு விரவிடும் எருவை யிட்டுக்
கள்ளத்தைப் போக்கி நல்ல கருணையைக் காத்து, மாந்தர்
விள்ளரும் ஆத்மா னந்த விண்கனி யுண்க மாதோ !

செய்யவன் ஏசு தாசன் செப்பிய கதையைக் கேட்டு
மெய்யுணர் வெய்தித் தூயன் விவிலிய வேதந் தேர்ந்தே,
வையகந் தன்னில் வானின் வளமைகள் எய்துந் தொண்டே
செய்தகு பணியாம் என்று சிந்தித்தான் பணியுஞ் செய்தான்!

10. பைபிள் படலம்

கல்வித் தாகங் கரையறக் கொண்டவன்,
சொல்லின் செல்வன், சுகவழி கண்டிடப்
பல் வழியிற் பயின்றிடுஞ்* சாதகன் ,
தொல் கிறிஸ்துவத் தூமறை தேறினன் !

எந்தை யீசனை யேத்தி யிதயத்தில்,
இந்தப் பூமி இறைவ னுறை வென்றே,
சிந்தை செய்து திருப்பணி யாற்று வான்
பந்த மற்ற பரந்த உளத்தினன் !

இத்த கைய விமலனை ஏசுவின்
பத்தர் சீரிய பாதிரி யாக்கவே,
தத்தஞ் சர்ச்சினிற் சார்கென நித்தியம்,
நத்தி வந்து நயவுரை பேசினர்.

என்துன தெனும் ஏட்டிக்குப் போட்டியால்,
மனிதரை விலை யாடிடு மாயத்தால்
மனதி லாத வலுமத மாற்றத்தால்
புனித மற்றன போலி மதங்களே.

அறிந்து வாழ்திற னற்ற கிறித்துவர்,
பிரிந்து வாழும் பிழைகளை ஓர்தினம்,
தெரிந்த சுத்தன் சிதைவறச் செப்பினன் ;
புரிந்தி டாதினும் போர்கள் வலுத்தவே !

ஒரு மதத்தினர் ஓர்குரு மாணவர்,
ஒரு பயிபிளை ஓதிடும் சாதியார்,
இருபது வகைக் கோயில் எழுப்பியே,
பெருமை பேசிப் பெருஞ்சமர் செய்தனர்.

ஆளை யாள்அவ மானங்கள் செய்தனர்,
நீளத் தீயில் எறிந்துடல் நீற்றினர்,
வாளைத் தீட்டி வதைத்தனர் ; இன்னொரு
நாளைச் சம்பவ மெண்ணி நடுங்கினர்.

ஒருவரை யொருவர் ஒடுக்கப் பார்த்தார்,
ஒருவரை யொருவர் கெடுக்கப் பார்த்தார்.
பொறுமையும், போட்டிப் புகைச்சலும் எழுந்து,
சாந்த முரைத்த சற்குரு பெயரால்,
மதங்கள் பேசி, மதங்களி னுள்ளே

---

* *சுத்தன்*

கட்சிகள் பேசிக் கலகமிட் டாரே.
நடையுடைப் பாவனை நாறு விதமாய்,
மனிதனை மனிதன் மனிதனுய் மதியான் ;,
எனதுன தென்னும் இறுமாப் போங்கி,
தத்துவச் சண்டையும், புத்தகச் சண்டையும்,
வாயைப் பெருக்கும் கோயிற் சண்டையும்,
வளர்ந்து வளர்ந்து வாழ்வைக் கெடுத்துத்
தடிமுதல் பறக்கும் வெடிவரைக் கிளம்பி
மானிட வாழ்வை மற்களஞ் செய்த
கொடுமையை யெண்ணிக் கொதிக்கும் சுத்தன்முன்,
கிறிஸ்து புரியிற் கிளர்ந்த கட்சிகள்
விரைந்து நடுநிலை வேண்டிநின் றனவே :
"எமது சர்ச்சே யினிதெனச் சொல்லும் ;
தலையில் வைத்துத் தாங்குவோம்" என்றுர்
மேரியை வணங்கா விராத்தியன் வீழ்க !
அருவே கடவுள் ; அன்பே தொழுகை !
உருவே கடவுள்; குருவே தெய்வம்.
நீட்சி சொல்வதே ஆட்சிக் கினிதாம்.
பணத்தைத் தந்தால் பாபமன் னிப்பு.
கிண்ணுமி வைத்தால் விண்ணின்ப மெய்தும் !
உருவைத் தொழுபவன் உணர்விலா மடையன் !
புரட்டும் வேண்டாம் போலியும் வேண்டாம் !
எம்மைத் தவிர யாவரும் மடையர்,
சர்ச்சும் வேண்டோம் சர்ச்சையும் வேண்டோம்,
ஆகா யத்தை அண்ணுந்து பார்த்துக்
கண்ணை மூடிக் கடவுளே என்றுல்
எல்லாஞ் சரிதான், இன்ப முதிக்கும்....
எம்மை வைதால் எரியிட் டழிப்போம்,
பழித்தால் எம்மைப் படுகொலை செய்வோம்.
அடுவோம், சுடுவோம், படுவீர் கவனம்......"

* * * *

என்றிவ் வாறே இகல்வினை பேசி
வாயுங் கையும் வம்பு வளர்ப்பதைப்
புனிதன் கண்டு "பொறுமை பொறுமை !
ஐந்து நிமிடம் அமைதி யாக
உட்குவிந் திருமின் உண்மை உதிக்கும்..."
என்றுன் ; மௌனமாய் இருந்தனர் கலகர்.
புன்னகை நிரம்பிய பூமுகங் காட்டி,
இதுவே பைபிள் என்றிசைத்தானே.

பைபிள் விளக்கம்

ஆண்டவன் சேய்காள், அன்பையே சொன்ன
ஏசு நாதரின் வாசிலா மணிகாள் !
அடியேன் உங்கள் ஆதர வாலே,
பரம பிதாவின் பண்பையும் அறிந்தேன்.
பைபிளின் கருத்தைப் பழகிநன் றறிந்தேன்.
தியாக குருவின் திருவுள மறிந்தேன்.
அறிந்ததைச் சொல்வேன் அமைதியாய்க் கேளீர் :—

* * * *

செருக்கும் இடம்பமும் செல்வத் திமிரும்,
ஆத்திகம் போன்ற நாத்திகத் தடிப்பும், 8
கொண்ட தீயரைக் குலமுடன் மாற்றி,
அன்புப் பொறுமையால் அறிவுரை சொல்லி,
அறவழி நடத்தி "ஆண்டவன் ஒருவனே,
வணங்கத் தக்கவன் ; இணங்கி நின்றவன்
அருளைப் பெறுதலே பொருளெனச் சொல்லவே
ஏசு நாதர் இங்கெழுந் தாரே.
தன்னுண் மைக்குத் தனைப்பலி யீந்தார்.
ஆயினும் அவர்தம் அருமைப் பெயரால்,
சமய வாதம் சாற்றவே யில்லை.
யூதராய்ப் பிறந்தவர் யூதராய் இறந்தார்.
சிலுவையில் இறந்த சேசுவின் சீடரும்,
ஒருபேச் சின்றி ஓடி யொளிந்தார்.
ஏசுவென் றியம்பினும் எதிரிகள் ஒறுப்பார்.
கிறிஸ்து மதமெனக் கிளர்ந்த கதையே
வியப்பெனக் கூறுவர் வித்தக ரெல்லாம்.
பீடரும் பாலும், பிலிப்பும் ஸ்டீபனும்,
ஜேம்சும் ஆர்வத் தியுடன் எழுந்தே,
ஏசு நாதரின் தேசுறு வாழ்வை
மக்களுக் கோதினர், மந்திரம் அமைத்தார்,
முதலில் யூத முறைப்படி தொழுதனர். 10
பெருநாள் வருந்திய பிறகே அன்பர்,
கிறிஸ்துவின் பெயரால் கிறிஸ்து மதமென
நாட்டினர் ; அவரை வாட்டினர் அரசர் !
ஆதி கிறிஸ்துவர் அரசர் கொடுமையால்,
கல்லெறி பட்டும், கசையடி பட்டும்,
தூக்கி லேறியும் துண்டுதுண் டாகி,
சிங்கம் உண்ணச் சேதப் பட்டும்,

வாளுந் தீயும் வதைப்பதைப் பொறுத்தும்,
கிறிஸ்து சமயம் கிளர்ந்திடச் செய்தார்.
திலுவைக் காலம் சென்றபிற் காலமே,
ஏசுவின் கதையும் பேசிய மொழியும்
மத்தாய், லூகா, மார்குடன் யோவன்
ஆகிய சீடரால் ஆக்கப் பெற்றன.
இவையே புதிதாம் ஏற்பா டென்றனர்.
ஈபுரு கிரேக்கம் இலத்தீன் சுவடியை
உரோமப் போப்பே உரிமையாய்க் கொண்டார்.
பிறமொழிப் படுத்தியோர் பெருந்துயர்ப் பட்டார்.
தீயிலும் சிறையிலும் தீரர் வாடி
பைபிளைப் பன்மொழிப் படுத்தி யளித்தார்.
அக்கா லத்திலே இக்கா லம்போல்
பிரிந்த சர்ச்சின் பெருஞ்சம ரில்லை.
ஏசு நாதரின் இனிய மொழிகளை
எல்லா உலகும் ஏற்றுப் போற்றுக.
பைபிளின் சாரம் பகருவேன் கேளீர் :

* * *

அன்பே வடிவாம் இன்பப் பொருளே,
உன்பரஞ் சோதி உலகெலாம் பொலிக !
உன்னரு ளோங்குக ! உன்னிசை வாழ்க !
உன்னர சாட்சி உலகெலாம் பரவுக !
ஒவ்வொரு நாளும் ஊட்டி வளர்ப்போய்,
உனக்கே எங்கள் உயிரும் உடலும்
வெவ்வழி தவிர்த்தெமைச் செவ்வழி சேர்ப்பாய்.
பொறையுடன் ஒழுகுந் திறனெமக் கருளாய்.
தேவனே, உனது திருவுளப் படியே
செல்லத் துணிந்தோம் சேம மளிப்பாய்.
ஏழைக் கிரங்கும் எம்பிரான் போற்றி !
வாழியுன் கருணை வையக மெல்லாம்.
வாழி எளியார் வானர சாள்வார்.
வாழி யிரங்குவோர் வருத்தந் தணிவார் !
வாழிசா துக்கள், வையகம் புரப்பார்,
வாழி அறவோர், மனக்களிப் படைவார்.
வாழி தியாகிகள், வானர சவர்க்கே !
தூயர் வாழ்க, சுத்தனைக் காண்பார் !
நேயர் வாழ்க, நிம்மதி யடைவார்.
அமைதி நல்கிடும் அன்பர் வாழ்கவே !
அவர்களே யாவார் அருட்குல மைந்தர்.

தமைப்போற் பிறரைச் சகிப்போர் வாழ்க !
பகைக்கும் அன்புசெய் பரிவுளோர் வாழ்கவே.
பகையை வெல்லும் தகையுளோர் அவரே !
நகைக்கும் வசைக்கும் நயவுரை சொல்கவே !
கோளும் வஞ்சக் கொடுமையுந் துயரும்
வாளும் வருத்தினும் மனங்கலங் காதீர் !
புன்னகை யுடனே புண்ணைப் பொறுமினோ !
இனிமையே இன்னலை இனிதுற வெல்லும்.
எப்படி மற்றோர் இருந்திட விருப்பமோ,
அப்படி அவருடன் அன்பா யிருமினோ !
அழியா உண்மை ஆன்மா வாகும்.
அழியாச் செல்வம் அருளே யாகும்,
ஆன்மா வுக்கிணை அகிலமும் இல்லை.
அதுவே நாமும் ; அதுவே யனைத்தும்.
வானர சதனுள் வளருவ தறிவீர் !
வானர சடைந்தால் வரும்பின் அனைத்துமே !
பூரணன் போலப் பூரண ராவீர் !
பூரணத் தந்தையின் புதல்வர் நீரே !
பாரின்ப வேட்கையை வேருடன் விலக்கிப்
பேரின்ப வேட்கையே பெருகிட வளர்மினோ !
இருள்வழி நீங்கி அருள்வழி சேர்மினோ.
கருணைத் தந்தை காப்பான் உங்களை.
அஞ்சா திருமின் ; அறவழி நடமின் !
நெஞ்சினில் அன்பே நிரம்ப வளர்மின் !
குருவிக் குணவு கொடுப்பவன் யாரோ,
அல்லிக் கணிசெய் அழகன் யாரோ,
அவனுண வுடையும் அளித்துமைக் காப்பான்.
கட்டுங் கவலையுங் கசடென விலக்கீர் ;
உம்மால் ஆவ தொன்றுமே யில்லை.
தம்மால் ஆவது தந்தையின் செயலே !
உம்மைத் திருத்தி உலகிற் குதவுமின் !
தீமையை நன்மை செய்தே தீருமின் !
வருத்துவோர் தம்மையும் வாழ்த்திடு வீரே !
வெறுத்தவர் தம்மையும் வெறுத்த லொழிமினோ !
பொறுத்துக் கொண்டு புண்ணியஞ் செய்மினோ !
உற்றவர் போலே மற்றவர்க் குதவுமின் !
அற்றவர்க் கீமின் ; அகந்தையை விடுமின் !
ஒன்னலர் தம்மையு மன்னித் தொழுகுமின் !
தன்னலந் தவிர்மின் ; சத்தியங் காமின்.

ஆணை யிடாது, விணுரை யின்றி,
ஓதுமின் சுருக்கமாய் உண்டிலை யென்றே !
மலைக்குடில் போலும், வயல்விதை போலும்,
அலைவற ஊன்றுமின் ஆண்டவன் அருளில்,
முத்திற் கரசு முழுதுந் தந்த
வேந்து போலவே விண்ணர சிற்கே
பற்றெலாந் துறந்து பரசுகம் பெறுமின் !
மனதிலுங் காம நினைப்பை யகற்றுமின் ;
மனது நினைப்பதும் மருவிய தாமே.
இருளிற் சுவைக்கினும் இனிக்குமே வெல்லம் ;
இடதறி யாதே ஈக வலதுகை
அடங்கித் தருவதை ஆண்டவன் அறிவான் !
அவனடி பற்றி அனைவரும் வாழ்கவே !
சவலைச் சேயெனத் தந்தையை நாடுமின் !
கவலை தீரும். கட்டுகள் விலகும்.
தேடுக கிடைக்கும், தட்டுக திறக்கும்.
கூடுக சுவைக்கும் குணநிதி யருளே !
வானத் தந்தையை வழுத்தி வணங்குமின் :
அன்பே வடிவாம் இன்பப் பொருளே,
பரலோ கத்தின் பரஞ்சுட ரொளியே,
எம்பிழை பொறுப்பாய் ! எமக்கொளி காட்டுவாய் !
ஏழைக் கிரங்கும் எம்பிரான் போற்றி,
வாழியுன் கருணை வையக மெல்லாம் !
ஆவதும் போவதும் அனைத்துமுன் இச்சை,
தேவநின் விருப்பமே மேவுக உலகில் !
இன்று நாம் செலுத்தும் நன்றியை ஏலாய் !
என்றுமுன் னருள்வழி நின்றிடச் செய்வாய் !
இவ்வா றிறைவனை இறைஞ்சுமின் ; உய்வீர்
ஆமன், ஆமன், ஆண்டவன் அருள்கவே !

*　　　*　　　*

என்பதே பைபிள்....ஏசுவின் மார்க்கம் .
இப்பொது வாக்கை ஏற்பவ ரெல்லாம்
ஒருகுல நண்பர். இருமன மில்லார்....
பொது நலம் வாழ்வின் பொருளெனக் கொள்வார்.
உள்ளதைச் சொன்னேன் உண்மைகண் டுய்வீர்.
ஏசு தாசன் இதுநலம் என்றுன்.
சுத்தன் மொழியைத் தூயவர் உணர்ந்து
கலகந் தீர்ந்து கலந்து வாழ்ந் தனரே.

"விழியைத் திறந்த வித்தக மணியே,
என்றும் எம்மிடை யிருந்தெமை நடத்தத்
தயைசெய்" என்று தாள்பணிந் தேத்தும்,
அன்பரை நோக்கி அறிஞனு முரைத்தான் :
அறிவுப் பசியால் அலேகிறேன் இன்னும்
அறிவின் அளவை யறிவார் யாரே?
ஒவ்வொரு மகானின் உள்ளமுங் கண்டு
நல்லதைக் கொண்டு நடுநிலே காப்போம்.
தனிமதஞ் சார்தலும், தனிப்பிரி வாற்றும்,
கட்சியைச் சேர்தலும், கருத்தெனக் கில்லே.
உலக மெல்லாம் ஒருகுல மாக
வாழும் உண்மை வழியே தேடினேன்.
இன்ஞெரு மதத்தை ஏசுத லின்றி,
உள்ளந் தொட்டே உண்மையாய் நடந்தால்,
ஆண்டவன் ஒருவனே ஆருயிர் ஓர்குலம்
என்னும் உணர்வால் இவ்வுல கெல்லாம்
சேர்ந்து வாழுந் திறமையுண் டாமே.
பிரிவினே யின்றி ஒருகுல நேயராம்
பக்தரை இனிநான் பார்க்க விரும்பினேன்...
உள்ளன் புடையீர் ! உங்களே மறவேன் ;
உரியகா லத்தில் உம்மிடம் வருவேன்.
அன்பிற் கன்பை அளித்துச் செல்கிறேன்...
என்று சுத்தனும் எழுந்த நாளே,
அப்துல் லாவெனும் அந்தண் மௌல்வி
முல்லாக்க ளுடனே அல்லாவைப் போற்றி
வந்தான் சுத்தனும் வளம்பெற வினவி
இஸ்லா மியத்தின் இயல்பறிந் தானே...
மௌல்வியும் சுத்தனே மசூதி புரிக்கு,
வருந்தி யழைத்தான்.....வள்ளலும் சென்ருன்...
இனியவன் செய்யும் இஸ்லாம் ஸாதனம்
யாதென் றறியநாம் ஏகுவோம் வாரீர்.
அறிய அறிய அறிவும் பெருமே !

11. நபிநாயகப் படலம்

அன்புடை வள்ள லாகும் அப்துல்லா மௌல்வி, சுத்தன்,
பண்புடை யன்ப னென்று பழுதறத் தெரிந்து கொண்டே,
நண்புடை நண்ப ளுகி, நபிமணி வாக்கை யோதி
இன்புடைத் தீனிஸ் லாமின் இயல்பினே விளக்கி ளுனே !

அறிவிற்குப் பொருந்தும்வேதம், இயற்கைக்கும்அமைந்தவேதம்,
துறவிற்கும் இல்ல றத்தின் சுகத்திற்கும் இசைந்த கொள்கை,
இறைவற்கே வணக்க மீயும் இணையறு பக்தி மார்க்கம்,
நெறிநிற்கு மனித வாழ்வு நிறைபெறு நியம மாமே

இன்னவை கேட்ட சுத்தன் "தீனிஸ்லாம் ஈந்த தீரன்,
அன்னவன் முஹம்மத் ஸல்லம் ; அல்லமீன் சரிதை சொல்வீர்"
என்னலும் ஹஜரத் மௌல்வி ஈதுல்நோம்பிரவிற் சொல்வோம்,
முன்னர் மசூதிக் கேகித் தொழுகையை முடிப்போம் என்றான்!

திருக்குரான் ஷெரீபின் ஓசை திசையெலாந் தெதிரொ லிக்க,
உருக்கமாய் ஈமான் கொண்ட வாழ்க்கையை உலாமா ஓத,
செருக்கிலா நேயர் முன்னே சலாமிட்டுச் செல்லச் செல்வப்
பெருக்கமார் மசூதி யூரைப் பெருந்தகை யன்பர் சேர்ந்தார் !

தீனிஸ்லாம் அன்பன் என்று திருவுறு சுத்த னுரைத்
தேனினும் இனிய சொல்லான் மௌல்வியுந் தெரியச் சொல்ல,
ஞானமார் முஸ்லிம் அன்பர், நல்வர வேற்றுச் செல்வர்
தானமார் விடுதி சேர்த்துத் தகுமுறை உபச ரித்தார்.

வழுவறு கடன்க ளெல்லாம் வகையுற முடிந்த பின்னர்,
தொழுகையை நடத்தி, மௌல்வி தூயனை நடத்தி முன்னே
எழுகதிர் பொன்செய் வெண்கல் வீடுகள் எழுந்த ஊரை
முழுவதுங் காட்டி முஸ்லிம் ஊர்களின் முறையி தென்றான் !

மதவயி ராக்கியங் கொண்ட மாநகர்,
நிதந் நிதங் கூடி நிமாசு செய்நகர்,
விதவிதத் தொழில்களை விரும்பிச் செய்நகர் ;
மதுவெறி யற்றது மசூதி மாநகர்...

பற்றலர் நடுங்கிடும் பலங்கொள் வீரர்கள்,
ஒற்றுமை காத்திடும் ஒருகு லத்தவர்,
கற்றறிந் தொழுகிடுங் கலைஞர், வாயினுற்
சொற்றதைக் காத்திடும் உண்மைச் சோதரர் !

அப்பெரு மாநகர், அன்பு மேவியோர்
தப்பறு நியமத்தைத் தாங்கி ,நீங்கற
முப்பது நாட்களை முழுது நோற்றபின்,
இப்புது நாளினை ஈதுல் என்னுமே.

இந்தநன் நாட்பெரும் இன்ப நாளதில்,
சந்தமார் திருக்குரான் சாற்றித் தானங்கள்
தந்தனர், மகிழ்வுடன் சாந்த நேயராய்
வந்தனர் வரிசையாய்ப் பள்ளி வாசலில் !

புத்தணி நிறங்களின் பொலிவும், பூவுடன்
அத்தரின் வாசமும் அகிலின் வாசமும்,
சித்தத்தை மகிழ்விக்கும் திரும சூதியில்,
சுத்தமா யனைவருந் தொக்கு நின்றனர் !

அலைகடல் போலஅல் லாஹு அக்பரென்
றுலையெழும் ஆர்வங்கொள் உள்ளம் ஓதிடத்
தலையணி வணங்கிடத் தாள்ப ணிந்திட
நிலைமன மூன்றியே நிமாசு செய்தனர்.

ஒருவனே, யாதும் ஆனாய், ஒப்பற்ற கருணைக் குன்றே,
அருவனே, இல்லல்லாஹு அக்பரென் றன்பின் எண்ணி,
உருகுவோர் உள்ளக் கோயில் உள்ளவா, ஈமான் கொண்ட
திருவுளார்க் கமுதே சுத்த சின்மய விளக்கே போற்றி !

என்றெல் லாரும் இறைஞ்சிடத் தூயனும்,
நின்றி றைஞ்சி நிமாசு முடிந்தபின்,
"நன்றிந் நாளில் நபிகதை கேட்டலே"
என்று சொல்ல மவுல்வி யியம்பினான் !

இல்லல் லாஹுவென் றெண்ணறு மன்பர்கள்
பல்கு மார்வம் படர முழங்கியே
"சொல்க சொல்கநந் தூய ரசூல்கதை
வெல்க சத்தியம்" என்று விளம்பினர்....

முஹம்மது ஸல்லம்

அந்தணனும் வாணிகனும் வீரனுமாய்,
அளவற்ற கருணை மேவி,
வந்துலகில் வழிதுலக்கி மனைவாழ்வை
வாழ்வாங்கு வாழ்ந்து காட்டி,
சந்ததமும் அல்லாவைச் சரணடைந்து
சாந்தமுடன் அன்பு செய்த,
பந்தமறு யோகிமுஹம் மதுசரிதை
பத்தியுடன் பகர்வேன் கேளீர் !

அல்குரான்

மனிதர்மன மாசறுக்கும் பேரின்ப
மருந்தேநல் விருந்தேபோற்றி!
இனிதருளிற் பழுத்தொழுகும் இஸ்லாமின்
கனிரசமே என்றும் போற்றி !
புனிதநபி மணிவாக்காய்ப் பொலிகின்ற
திருமறையே போற்றி, போற்றி !
அனைவருக்கும் அமைதிசொலும் அல்குரான்—
பாசுரமே, போற்றி போற்றி !

திருப் பிறப்பு

தேசுலாங் கிழக்கே, ஞானச் சிகரமே, போற்றி போற்றி !
மோசையைத் தந்து நீதி முறையினை வகுத்தாய் போற்றி !
ஏசுவை யளித்தாய் போற்றி, இப்ரஹீம் நபியைத் தந்தாய் !
ஆசிய வுலகில் வாழும் அரபிய நாடே போற்றி !
அத்தகை நாடு தன்னை அணிசெயும் ஹஜாஸில் வாழும்,
உத்தமக் குரைஷி யர்கள், உயர்வுற வுதித்த நேயன்,
முத்தலிப் என்பா னுக்கு மூத்தவன், ஆபூ தாலி ;
பத்திமான் அப்துல் லாவே பண்புறும் இரண்டா மைந்தன் !
பெருந்தகை அப்துல் லாவும் பெண்மணி அமீனு தன்னைத்
திருந்திய மணம்பு ரிந்து, கருவுடன் விட்டுச் சென்றான் !
தெரிந்தநன் மகவைத் தந்த சிரிய தாயும் ஆங்கே
பிரிந்தனள் ஆறுண் டுள்ள பிள்ளையை யுலகிற் கிந்தே.

பிள்ளைப் பருவம்

அன்புடனே சீராட்டப் பெற்றோ ரில்லை ;
அழகான முஹம்மதெனும் அருளார் சேயை,
முன்புவளர்த் தான்பாட்டன் முத்தலிபு.
முறையாக அபுதாலி மோகங் கொண்டு,
பின்புவளர்த் தான்; அன்னோன் ஒட்ட கத்தைப்
பிள்ளைமுகம் மதுமேய்த்தார் பிரிய மாக..
தன்பணியைச் செயும்போதே இயற்கையான
தாயினிடம் தத்துவங்கள் கற்றார் மாதோ !
அல்லாவின் அருளாலே அமைந்த பிள்ளை,
அரபியரின் குருநாத ரான பிள்ளை,
கல்லாமே ஞானங்கள் கற்றுக் கொண்டார்.
கண்ணாலே கண்டதெலாங் கருதிப் பார்த்துச்
செல்லாத அனுபவத்தைச் செலுத்திப் பார்த்துச்
செகவியல்பைச் சீர்தூக்கி ஆராய்ந் தாய்ந்து,
பொல்லாத வுள்ளத்தே புகுந்து பார்த்துப்
புண்ணியராம் நண்பரிடம் புகலு வாரே.
வாலிபராம் முகம்மதுவும் வணிக ராக
வணிகருடன் ஒட்டகையில் வலியச் செல்வார் ;
நாலுதிசை நாட்டினிலும் நன்கு சுற்றி,
நல்லதுபோல் லதுகண்டு நடுவ இப்பார்.
காலத்தின் அலங்கோலங் கண்டு நோவார்.
கருத்துள்ள நண்பரிடங் கருத்தைச் சொல்வார்.
ஞாலத்தைத் திருத்திட வோர் ஞானசக்தி
நல்கெனவே அல்லாவை நாளுங் கேட்பார் !

முறையீடு

ஆண்டவனே ஆருயிரின் அப்பா, உன்னை
அருவாகப் பணிகின்றேன், குருவே போற்றி !
மூண்டவிரு ளரங்கினிலே மூடர் செய்யும்
முழுமோகக் கூத்துகளை யுரைக்கப் போமோ ?
மீண்டு மிந்த மேதினியில் அறம்விளங்க
மேலான பதிபக்தி விளக்கச் செய்வாய்.
வேண்டுகிறேன் உனதருளை விமலா போற்றி,
மெய்யடியார் கலிதீர்க்குந் துய்யா போற்றி !

அறமென்னுந் திருமதிலை அழித்தார் மாந்தர்,
"ஆபாசப் பொய்களிலே அழிந்தார் அந்தோ !
பொறையின்றிச் சினவெறியாற் புந்தி கெட்டுப்
பொறாமைப்பேய் பிடித்தலைவார் பொல்லா ரந்தோ !
பொறிவழியே சென்றுநெறி தப்பி வாழ்வார்,
போட்டியிட்டுப் போர்புரிவார் கொலைகள் செய்வார்.
அறிவிழந்த காமுகராய் அழிப்பார் கற்பை,
அல்லாவே நல்ல வழி சொல்லாய் சற்றே !

பண்ணாத படுகொலைகள் பண்ணு கின்றார்,
பகல்வேஷத் திருடர்களாய்ப் பழிசெய் கின்றார்.
பெண்ணான வாழ்வெல்லாம் புண்ணாய் நோகப்
பேய்க்காம நோய்கொண்டு பிழைசெய் கின்றார் !
எண்ணாத பொல்லாங்கை யெண்ணி நாளும்.....
இகல்செய்வார் இந்நாட்டு நிலையை, அந்தோ !
கண்ணாரக் கண்டுமனங் கலங்கு கின்றேன் ;
கடவுளே அருள்காட்டிக் கவலை தீர்ப்பாய் !

கொல்கொலைக்கும் அஞ்சாதார் கத்தி கொண்டு,
கொடுமையாய் நரபலியுங் கொடுப்பார், அந்தோ !
பல்லாயி ரந்தெய்வம் பகரு வார்கள்,
பலிபூசை யுடன் பாய்ந்தே பூசல் செய்வார்.
நல்லவழி சொன்னாலு நடக்க மாட்டார்,
நாசவழி யேசென்று நலிவா ரந்தோ !
மெல்லமெல்லத் திருந்தியிவர் மேன்மை யான
விவேகமுறச் செய்அன்பு விளக்கே போற்றி !

"ஒருபரத் தந்தை மக்கள் உள்ளன்பு கொண்டு வாழ்வீர்
அருளினை யடைவீர்" என்றே அருளிய ஏசு நாதர்
திருமொழி மறந்து, செல்வச் சிற்றின்பச் செருக்கி லாழ்ந்து,
தருமத்தைப் பழித்தார் அந்தத் தரங்கெட்ட தீய ரம்மா !

மிடியிருள் அடிமை நோயால் மேதினி படுமி டர்க்கும்
விடிபொழு துறுமோ என்றே வேதனைப் பட்டு நிற்கும்
அடியரும் சென்ற ஊரில் அறநெறி யுபதே சித்தார்...
விடுதலை வழியைச் சொன்னார், வியப்புற மாந்தர் கேட்டார் !

அருளொளிர் முகத்தார், ஓங்கும் அறிவொளிர் கமலக் கண்ணர்,
ஒருபரம் பொருளை யெண்ணி உருகிடும் பெரிய பக்தர்,
உருவிலே அழகர், உண்மை உரையிலே அழகர், வீரத்
திருவிலே அழகர் செவ்வி செப்பிடற் கரிய தாமே !

அன்னவர் அழகுஞ் சொல்லும் அருட்பெரும் அன்பும் பண்பும்,
உன்னத நினைவும் கண்டே உள்ளத்தைப் பறிகொ டுத்தாள்,
பொன்னொளிர் திருவின் மிக்காள்,புண்ணியப் புகழின் மிக்காள்,
கன்னலைப் போன்ற சொல்லாள் கதிஜையென் றினிய பேராள் !

இளமையே முதிர்ந்த மூத்தாள், இருபத்தைந் துடைய செம்மல்,
அளவறும் அன்புச் செல்வர் என்பதை அறிந்து தன்பேர்
வளமிகு வாணி கத்தை மகிழ்வுறத் தந்த நாளே
உளமுறு காதலிந்து கடிமண முவந்தாள் மாதோ !

ஒருவரை யொருவர் சொந்த உயிரென உறவு பேணி,
இருவரும் ஒருவ ராகி, இல்லறம் புகுந்த நாளே,
தருமமு மகிழ்ந்த திந்தத் தரணியு மகிழ்ந்த தான்ற
கருணையும் அருளும் வெற்றி கண்டுளங் குளிர்ந்த மாதோ !

மின்னகை குலுங்கும் வாயாள்,மென்மொழிக் குயிலே யன்னாள்;
பொன்னொளிர் திருமு கத்தாள்,புதுப்பொலி வுடையபொற்பாள்,
கன்னலும் பாலும் போலக் கலந்தவர்க் கின்ப மாவாள்,
அன்னவள் கணவ ரானோர் அன்புடை வள்ள லன்றோ ?

பரிந்துல கின்ன லெண்ணிப் பரிதவித் திடும்போ தன்னாள்
மருந்தென வருத்தந் தீர்த்து மாதயை வருகு மென்பாள்.
பரம்பொருள் உமது மூலம் பாலிக்கும் அருளிங் கென்பாள்.
வரம்பெற்ற நபியைத் தூய மணாளராக் கண்ட நல்லாள் !

இத்தகைக் காத லாளர் இல்லறக் கனியாய் வந்த
பத்திமா என்னுஞ் செல்வி, அபுதலி பயந்த நல்லோன்
பத்திமான் ஆலி தன்னைப் பண்புடன் மணம்பு ரிந்தாள்.
அத்தகை அலியும் இஸ்லாம் அன்பராய்ப் பணிசெய் தாரே !

தலைக்குட நங்கை போலுந் தடாகத்தில் ஆமை போலும்,
கழைக்குடக் கூத்தன் போலும், கலங்கறும் ஒருமை பூண்டார் ;
விழைமன உலகில் ஒட்டா விமலனுய் மனைய றத்தைப்
பழுதறக் காத்தார் சித்தம் பரம்பொரு ளிடமே வைத்தார் !

தாரத்தோ டிருக்கும் போதுங் குடும்பத்தைத் தாங்கும் போதும்,
சீர்மிகு வணிக ராக ஒட்டையிற் செல்லும் போதும்,
பாருடன் பழகும் போதும், பணத்தினை யெண்ணும் போதும்,
கார்தவழ் மின்னல் போலக் கடவுளைக் கலந்தி ருப்பார் !

நபி யாதல்

வரவர உலகின் பற்றை மாசறத் துறந்து, ஞானந்
தெரிவரத் துலக்கு கின்ற தியானசா தனங்கள் செய்ய,
ஒருவரும் அணுகா ஹீரா உயர்மலைக் குகையி னுள்ளே,
திருவரு ளிறையைத் தன்னந் தனியராய்ச் சிந்தித் தாரே !

காய்வர இதழு திர்க்குங் கடிமலர் இயற்கை போலே,
வாய்மையை ஆழ்ந்து கண்ட வரமிகு நபியும் அந்நாள்,
நோயுல காசை யின்றி, வாணிக நோக்க மின்றித்
தாயுளங் கொண்டு தீனர் தந்தைபோல் உதவி னாரே !

வறியவர் வறுமை தீர்ப்பார், வகையிலா விதவை மாரைப்
பரிவுடன் ஆத ரிப்பார், பாவையர் கற்பைக் காப்பார்,
பிரியமாய்த் திக்கி லாரைப் பேணுவார் ஊண ளித்தே,
பெரியவர் பரோப காரி எனப்புவி பேச நாளும் !

நம்புதற் குரிய நம்பி, நம்பினோர் துணைவர் என்றே
எண்புவி போற்றி, நீரே அல்லமீன் என்று சொல்லத்
தம்பெருங் கடமை யாற்றித் தயைவடி வான நல்லோர்,
என்பதும் உருக இவ்வா றீசனை வணங்கு வாரே !

என்னையான் மறந்திட் டாலும், எனக்குநல் லினிய தாரந்
தன்னையான் மறந்திட் டாலுந், தமரினை மறந்திட் டாலும்,
முன்னுள புவியின் வாழ்வை முற்றிலு மறந்திட் டாலும்,
உன்னையான் மறவேன் என்னுள் உள்ளவா, ஒருவா, போற்றி !

கதறுகிறேன் கசிந்துருகிக் கண்ணீர் விட்டுன்
காதலெனும் கற்பகத்தை வளர்க்கின் றேன்யான்.
பதறுகிறேன் சீரழியும் பாரைக் கண்டு,
பாராயோ, பாவிபடுந் துயர்தீ ராயோ ?
சிதறுகிறேன் கவலையினாற் சிறியேன் மீது
சித்தமிரங் காயோஎன் சிந்தை யுள்ளாய் !
முதிருகிறேன் வயதினிலே, உனது ஞான
மோகமதே தாகமதாய் முறையிட் டேனே !

எம்மாயத் துன்பங்கள் இடர்செய் தாலும்,
இறப்பென்னும் இருட்கணவாய் எதிர்நின் றாலும்,
இம்மாந்தர் இகலென்னை வாட்டி னாலும்,
எதிர்ப்புடனே ஏமாற்றம் எனைச்சூழ்ந் தாலும்,

வெம்மனத்தின் பாசங்கள் வெருட்டி னாலும்,
வேதனைகள் எனைவந்து சோதித் தாலும்,
உம்மனத்தின் படிநடப்ப துறுதி சொன்னேன் ;
உயர்பொருளே வழிகாட்டி உய்விப் பாயே !

மாசான மனமாய வஞ்சத் தாலே,
வலைப்பட்டுப் பாருயிர்கள் வருந்தக் காணேன் !
கூசாது காமவெறி கொண்ட தூர்த்தர்,
கோதையரைக் கற்பழிக்குங் கொடுமை காணேன் !
தேசமெலாங் கள்வெறியுங் கத்திக் குத்தும்
திருட்டுருட்டு வேலைகளுஞ் செருவுங் காணேன்.
ஈசனே, புவிக்கெல்லாம் இறைவா போற்றி !
இவ்வுலகம் உய்நெறியை இலக்கு வாயே !

எனையறிவார் உனையன்றி எவரும் இல்லை ;
ஏழைக்குன் இரக்கமலாற் புகல்வே றில்லை.
உனையன்றி வேறுயர்ந்த பொருளு மில்லை.
உலகிற்குன் கருணையலால் உய்வு மில்லை.
தனையொவ்வாத் தனிக்கருணை வள்ளால், உன்னைத்
தஞ்சமடைந் தேனைநீ தயைவைத் தாளாய் !
மனைவிரிவாம் உலகமன மாசு தீர
வாய்மையொளி காட்டிடுவாய் எல்லாம் வல்லாய் !

தாயறியாச் சூலுண்டோ ? தந்தாய் நீயென்
சங்கடத்தை யறியாயோ ? சாற்றிக் கேட்க
வாயில்லேன் ; உனையறிய வகையு மில்லேன் ;
வந்துநீ சிந்தையிலே தந்தா லன்றி,
தூயவருட் டிறமறியேன் ; சுத்த ஞானச்
சுடரொளியே, எனக்குவழி துலக்கி யாளாய் !
நீயறியா நானுண்டோ ? நின்ப ணிக்கே,
நிலவுலகில் என்னைநீ நியமித் தாயே !

உலகமெலாம் உன்பெயரை ஓத வேண்டும்,
உள்ளமெலாம் உன்கோயி லாக வேண்டும்,
சலசலத்துத் தாவிவரும் அருவி போலுன்
சக்திநதி யெம்முள்ளே தழைக்க வேண்டும்.
கலகமெலாந் தீர்ந்தனமக் கருணை கொண்டுன்
காவலிலே மாந்தரெலாம் வாழ வேண்டும்.
இலகுபரா பரனேயுன் இரக்கத் தாலே
இன்னுலகம் பொன்னுலகாய் இலகச் செய்வாய் !

பலசாதிப் பாழ்வேறு பாடு நீங்கிப்
 பகையச்சம் பழிநீங்கிப் பாபம் நீங்கி,
நலமான தொண்டுகளை நாடு செய்து
 நானென்னும் அகந்தைவெறி நாயை ஓட்டி,
உலகமெலாம் ஒருகுலமாய் வாழ வேண்டும்,
 உனைஅருவாய் உயிர்க்குலங்கள் வணங்க வேண்டும்,
நலவழியைக் காட்டியெனை நடத்த வேண்டும்,
 ஞானனந் தப்பொருளாம் வானே போற்றி !

தனை மறந்தனர், சகத்தினை மறந்தனர், அன்பு
மனை மறந்தனர், மறப்பறப் பரம்பொரு ளதையே
நினைவ தாகினர் இப்படி நீண்டநாள் வணங்கும்,
புனித ருக்கருள் பூத்தனன் புண்ணிய முதல்வன் !

ஜபுர யில்எனுந் தூதனைத் தயவுடன் அனுப்பி
ஜபதி யானத்தின் ஆழ்ந்திடுஞ் சாந்தனை எழுப்பி,
நபிகள் நாயகம் எனுந்திரு நாமமுஞ் சூட்டி,
நுபுவத் தீந்தனன் பரமனு நூதனம் புரிவான் !

தெய்வ வாசகந் திருவுறத் தீட்டிய துயிலைத்
துய்ய னாகிய தூதனுங் காட்டிட, நபியும்
ஐய யானெழுத் தறிகிலேன் எனப்பணிந் தோத
மெய்ய உன்னுளே மெய்யறி விறங்குமென் றுரைத்தான் !

வான மாதிய பூதங்கள் வரம்பறப் படைத்த
ஞான மாப்பொருள் ஒன்றையே பெரிதென நாடி,
மானிடர் தொழு தேத்திட, மாண்புறும் அல்லா
தீனிஸ் லாமுனுட் செப்புவான் எனச்சொலி மகிழ்ந்தான் !

"கண்ணெ னப்புவி காத்திடுங் கல்வியும் இல்லேன்,
எண்ணெழுத் தறி யேன்எனக் கிதுதகா" தெனவே,
"புண்ணியா, பரி பூரண பத்திசெய் புனிதா,
மண்ணின் வாழ்விற்கு வானகத் தூதனுய் வந்தோய் !

கற்ற கல்வியிற் பெரிதொரு கடவுண்மாக் கல்வி
பெற்றனை யுனுட் பரம்பொருள் பேசிடும் பேச்சை,
மற்றவர் பயன் பெற்றிட மகிழ்வுடன் உரைப்பாய்,
நற்றவக் கடன் உனக்கிது நபிமணி என்றுன்.

ஈசன் வாசகம் இயம்பிய தூதனும் செல்ல,
தேசு லாந்திரு முகத்துடன் உளஞ்சிலிர்த் திடவே,
பேசலற்றனன் பேரின்பப் பெருக்கினில் மூழ்கி,
மாசி லாதவன் மனைவிக்கு விளம்பினுன் உடனே !

மெய்சி லிர்த்திட விழிபுன லுகுத்திடக் காலுங்
கையு மின்னுறு காந்தமே றியதென நடுங்கத்
தெய்வ சேதனம் முகத்தினிற் செவ்வொளி வீசும்
ஐயன் பெற்றதை யறிந்தனள் அன்புள கதிஜா !

சித்தி பெற்றனை ; செகத்தினுக் குண்மையைப் பேசும்
சக்தி பெற்றனை ; ஆத்தும சாந்தியும் பெற்றாய்,
முத்தி பெற்றனை ; முஹம்மது நபியென முகிழ்த்தாய்,
அத்தன் ஆண்டவன் ஆணையும் பெற்றனை அறவோய் !

நன்று நன்றினி நவையறு நாயக வாக்கால்,
இன்று சூழ்ந்திடும் இருளினைத் துடைத்தறி வேற்றி,
ஒன்று சேர்ந்துநம் இனத்தினர் ஓங்கிடச் செய்வோம்,
என்று பத்தினி இயம்பிட நபிமணி யெழுந்தார் !

இஸ்லாமியப் பிரசாரம்

கதிஜாவும் உமரலியும்அபுபக்கர்,உதுமானும்,கருணை நேயன்,
அமிஜாவும்,அருள்பெற்ற நபிமணியின் அன்பினிலே ஈடுபட்டார்.
துதிமிகுந்த திருத்தொண்டர் இஸ்லாமின் சூட்சுமத்தை யறிந்து நின்றார்.
சதிமிகுந்தகாப்பிரியர் சைத்தானின் வேலைசெயச்சார்ந்தாரம்மா !

ஆண்டவன் அருளால் ஊறும் அமுதமா மொழியை அள்ளி
வேண்டிய மட்டுந் தந்த விமலனை விவேக முள்ளார்
ஈண்டினர் ஈனந் திர மாறினர் ஈமான் கொண்டார்.
தூண்டினர் பகையும் போரும் பொறுமையுந் தூர்த்த ரந்தோ !

அழகனை வெறுத்த மன்னன் அபூஜகல் நபியைக் கண்டான்.
நிழலறு பொலிவும், வாச நிமலமா வடிவுங் கண்டான்,
பிழையுறு பிண்ட மாந்தன் பெண்ணவர் மகிமை யாலே
செழிதிரு வாகக் கண்டு திகைத்தனன் பகைத்த தீயன் !

கூரையில் ஓட்டை யென்று கொண்டலைத் தடுப்பா ருண்டோ ?
சோரரின் வசவிற் கஞ்சிச் சூரியன் ஒளிவ துண்டோ ?
பாரினில் அறிவி லார்கள் படுத்திடும் பாட்டை யஞ்சித்
தீரர்தங் கருமந் தன்னிற் சிதைவுறத் திகைப்ப துண்டோ ?

ஆருயிர்த் துயரைத் தீர்க்கும் அருளுறு நபி மாணிக்கம்,
பேர்புகழ் பட்டம் செல்வப் பெருமைகள் எவையும் இன்றிப்
பாருயர் நலத்தைப் பேசிப் பகைவர்க்கும் இனிதே செய்தார் !
காருயிர் அமுதம் போன்று கருணையால் உயிரைக் காத்தார்.

பகைவர் கொடுமை

தாமத வகந்தை யாலே தடித்த குரைஷி யர்கள்,
நாமறி சிறுவ னின்று நபியென நவிலப் பெற்ருன்...
பாமர ஜனங்கள் உள்ளம் பறிகொடுத் தவன்பின் செல்லுந்
திமையைப் பழிப்போம்; அன்னுன் செம்மையைக் கெடுப்போம்
என்ருர்.

துறந்த தூயவ ரேனுந் துணிந்துநல்
அறந்த னக்குயிர் ஆனவ ரேனுந்தாம்
பிறந்த ஊரிற் பெரியரென் றேபுகழ்
சிறந்த சீலர் செகத்தில் அரியரே !

நல்ல வார்த்தை நவின்ற நபியினை,
எல்ல வர்க்கும் இனிதுரைச் சீடரைப்
பொல்லதே தொழி லாகிய புல்லர்கள்
கொல்ல நோக்கிக் கொடுமைசெய் தார்களே !

பிடித்தனர் பெரு மானின் பிரியரை
அடித்து வைதனர் ஆத்திரந் தீரவே,
இடித்த னரவர் இல்லத்தை நாத்திகந்
தடித்த பாதகர் பேயின் சகாக்களே !

அறத்தினைச் சொல்லிடும் அன்பு வள்ளலைத்
துரத்தினர் துப்பினர் தூற்றி வைதனர்,
கரத்தினில் அகப்பட்ட கல்லை வீசினர் ;
பரத்தையர் மோகத்திற் பாழ்பட் டார்களே ! 340

மெய்ம்மொழி யொன்றையே விளம்பு மெய்யனை,
துய்யநன் னெறியினைத் துலக்குந் தூயனைப்
பொய்மனப் புரட்டர்கள் பொறுமை காணென
வெய்யிலில் வெந்திட விடுத்து நீங்கினர் !

தொகைமிகும் அடியவர் தொகுத்த கூட்டத்தே
நகைமிகச் செய்குவர் ; நலிவு செய்குவார்
பகைவர்கள் செய்திடும் பாத கத்துயர்
மிகமிகப் பொறுத்தனர் விழுமி யோர்களே !

சாமியும் பலபல ; சாதியும் பல ;
நாமெனுஞ் செருக்குரை நவிலுந் தெவ்வரின்
காமமும் பலபல ; கடவுள் ஒன்றெனில்,
வேமவர் உள்ளமும் வினையும் வெய்யதே.

அல்லலைப் போக்கிநல் லறிவைத் தூண்டிடுஞ்
சொல்லினை நபிமணி சொல்லத் தீயவர்,
கல்லினை யெறிந்தனர் ; கத்தி தீட்டியே
கொல்லவுந் துணிந்தனர் கொடிய பாதகர்.

அபிஸீனியாவில்

பகைசின முற்றிடப் பார்த்து, நாயகன்
உகந்தநல் லன்பரை உடன்கொண் டேகியே
நெகிஸபி ஷீனிய நிருபன் மாளிகை.
புகலென வடைந்தனன் பொருத்த மாகவே !

கண்டனன் கேட்டனன் கருணை வள்ளலைத்
தெண்டனிட் டரசனுந் தினிஸ் லாமினைக்
கொண்டுநன் றெழுகினான் ; கொள்கை யின்படித்
தொண்டருந் தொழுதனர் தூய ராகவே !

ஈத றிந்த பகைவ ரிடர்செயப்
போத லுற்றுப் புரவலன் மாறிடக்
கோதி ழைத்திடுங் கோள்க ளியம்பியே
வாது செய்தனர் யாதும் வழியிலார் :—

"மன்ன நீயிந்த வஞ்சனை நம்பிடின்
இன்ன லாகும் ; இவன்பெருந் தப்பிலி !
முன்னவர் மொழி முற்றும் உதறினன்
தன்ன தேமத மென்றிவன் சாற்றினன் !"

பேதச் சூதர் பிதற்றிடுங் கோள்களை
நீதி கற்ற நெகுசனும் ஏற்றிடான் ;
தீதி ழைத்திடுந் தியவர் வெட்கவே
வாதி ழைத்திடும் வாயை யடக்கினன் !

"நயம றிந்த நலத்துறை யாளர்க்கே,
பயன றிந்த பதிமொழி யின்பமாம் ;
சுயந லத்திமிர் துள்ளி யிடர்செயும்
கயவ ருக்குக் கனிமொழி ஏற்குமோ ?

கொல்ல வந்த கொடிய பகைவரை
நல்ல ஞானி நபிமணி யென்குரு....
தொல்லை செய்யிற் சுடச்சுட வாங்குவீர்
எல்லை விட்டுடன் ஏகுமின்" என்றனன் !

வாய டைத்த வலிய பகைவர்கள்,
போயொ ழிந்து பொருமையைத் திட்டியே,
பேயின் வாளெனப் பேச்சை யடக்கியே
பாய வெங்கும் பதுங்கி யிருந்தனர் !

அச்சமறத் துணை நின்ற கதிஜாவும் அபுதலியும் அல்லமீனை
இச்சமயம்விட்டல்லாஇணையடியைச்சேர்ந்ததுயர்என்னே,என்னே!
பட்சமுறு நபிமணியின் பரிதாபக் கண்ணீரைப் பார்த்தி ரங்காத்
துச்சமனப் பகைவர்கள் சுதந்தரமாய்த் துயர்செய்யத் துணிந்திட்
டாரே !

தாங்கமுடி யாதுதுயர் தாயீபு சென்றவனைத் தாக்கித் தீயர்
ஓங்குநலத் திருமேனி புண்ணீரின் ஊற்றெழுகக் கல்லால் வீசி
வாங்கினரக்கல்லாதகல்மனத்தர்வசைகொடுமையின்னலெல்லாந்
தாங்கியினுந் தயவுடனே தாருலிஸ் லாமுரைத்தான் தரும
மன்னன் !

தீன்விளக் கான தூதன் செப்பிய கலிமா கேட்டுத்
தானெனு வகங்க ரித்துத் தருக்கிமிக் கிடர்கள் செய்த
ஜீன்களும் சோதனைகள் செய்துபின் ஈமான் கொண்டு
தேன்கனி மலர்கள் ஈந்து, திவ்விய நபியைச் சார்ந்தார் !

சாத்திர ஞான மெல்லாந் தன்னுளே தழைத்த ஞானி,
பாத்தியா ஓதி, ஹஜ்ஜு நாளிலே பரவ வந்த
யாத்திரீ கருக்கு, மிக்கக் கருணையோ டிறைவன் அன்பு
பூத்திட வார்த்தை சொல்லிப் புண்ணியப் பணிகள் செய்வார்.

உபதேசம்

காசினி மாந்தர் நல்ல கதிபெறக் கருணை வள்ளல்,
"ஈசனை நம்பி அன்பு செய்மினிங் கெந்த நாளும்
நேசராய்ச் சேர்ந்து சாந்த நிமலராய் வாழ்மின்" என்று
பேசினர் அருளி னாலே பேசிடக் கற்ற பேறூர் !

கடலினைக் காணீர் ; ஈசன் கருணையைக் காணீர் என்பார்,
சுடரினைக் காணீர் ; ஈசன் சோதியைக் காணீர் என்பார்,
இடமகல் வானைக் காணீர் ; இறைவனின் விரிவைக் காணீர்,
புடவியைக் காணீர் ; ஈசன் புலமையைக் காணீர் என்பார் !

வான்மழை காணீர் அல்லா வழங்கிடும் அமுதங் காணீர்.
தேன்மலர் காணீர் அல்லா திருநகை யழகைக் காணீர் !
யானெனும் அகந்தை யின்றி இறைவனே பரவி யெங்கும்,
ஊனுயிர்க் குயிராய் வாழும் உண்மையை யறிவீர் என்பார் !

இருளுறு மடமை யாலே யியற்றிடுங் கொலைகட் காம
மருளுறு செயலை நீமின், மாசறு வாய்மை போற்றி
அருளுறு மன்பும் ஐந்து தொழுகையும் அறமுஞ் செய்மின் ;
பொருளுறுதொழிலைச்செய்துபுரையறப் பொலிமின் என்றார்!

தீவிர தியானத் தாலே திருவருள் வாக்கெ ழுந்த,
ஓவறு ரம்ஜான் மாதம் பகலினில் உண்ண லின்றி,
ஆவியைத் தூய்மை யாக்கி, ஆண்டவன் அருளை எண்ணித்
தீவினை தவிர்த்து, நல்ல தருமத்தைச் செய்மின் என்பார் !

ஹிஜ்ரத்து

நடுநிலை யாள ரிந்த நல்லுரை இனிதென் றேற்றார்,
கெடுநிலை யாளர் பின்னும் கேடுசூழ்ந் திடர்கள் செய்தார்,
இடமகல் அன்புச் சோதி ஏசுவைச் சிலுவை யேற்றிப்
படுகொலை செய்த பாவிப் பதகரே மீண்டும் வந்தார் !

காமத்தின் அடிமை யாவார், கலகத்திற் குடந்தை யாவார்,
தீமைக்கு நேய ராவார் திருட்டுக்கு மச்சா னவார்,
தாமத மடைமைக் கெல்லாந் தரக்கெடு சீட ராவார்,
பூமிக்குப் பார மாகப் பொருந்திய புல்ல ரம்மா !

தூயவன் ; எல்லை யற்ற துயர்பொறுத் தினிதே செய்யுந்
தாயவன் ; வஞ்ச மற்ற தளிரிளஞ் சேயைக் கொஞ்சுஞ்
சேயவன் ; ஷைத்தா னுக்குச் சிம்மசொற் பனமே யன்னான்;
வாய்மையை யறியாப் பொய்யர் வம்புகள் செய்தா ரம்மா !

மக்கமா நகரம் அந்த மடையரின் இடர்க ளாலே
துக்கமா நரக மாகத் தூயனும் அன்பு நேயர்
மிக்கமா மதீனஞ் சேர விரும்பிநள் ளிரவில் மெல்லப்
பக்குவ மாகத் தப்பிப் பாய்ந்தனர் சீட ரோடும் ! 440

இடியிடித் திந்தச் செய்தி இப்லீசு சொல்ல வெய்யோர்,
"கடிநகர் காவல் விட்டுக் கம்பியை நீட்டி விட்டான்,
பிடிபிடி பின்சென் றந்தப் பித்துறு நபியை நொய்யப்
புடைபுடை எனக்கு ரைஷிப் புல்லருந் துரத்தி னரே !

இவ்வழிச்சென்றான் என்பார், இங்கவன் ஒளிந்தான்; என்பார்,
"எவ்வழி எங்கே சென்றும் இவனுயிர் தப்பா" னென்பார்,
"உய்வழி தருவ தாக ஊரையே மாற்றும் இந்தத்
திவ்வியப் போலி தன்னைச் செகுப்பது கடனே" யென்பார்!

தடிபிடித் தோடு வாருந் தடம்பிடித் தோடு வாரும்,
நெடுவழி குதிரை யேறி நிலமெலாந் துருவு வாரும்,
உடையுரு மாற்றி வஞ்ச ஒற்றராய்த் தேடு வாரும்,
முடிவினில் "அதோபார்" என்றே முஹம்மது நபியைக் கண்டார் :

"கொல்லடா" என்றார் கூடை கூடையாய்ச் சுமந்து வந்த
கல்லெடுத் தடித்தார் ! அந்தோ காயம்பட் டுதிர மோடி
"அல்லஹோஅல்லா" வென்றே அலறிடு நபியை நோக்கிக்
கொல்லெனச் சிரித்து மேலுங் கொட்டினர் வசையுங் கல்லும்.

விண்ணுள தந்தை வேகம் அளித்திட விரைந்து, தூதன்,
புண்ணுறச் சிவந்த மேனி பொய்யர்கை வீழ்ந்தி டாமல்,
கண்ணுறக் கண்ட தௌரி குகையினுட் கரந்து கொண்டு,
மண்ணுறு திமை யெண்ணி மனங்கசிந் திரங்கி னனே !

தௌரிக் குகையில்

கொடிய ரான குரைஷியர் வாசிமேல்,
கடிது தேடியக் காடு வன மெலாம்,
தடத டென்று தனிநபி புக்கதோர்
இடமி தென்றிரைந் தேகி வளைத்தனர்.

ஏக்க முற்றபு பக்கரும் "யாரசூல்,
மூர்க்கர் வந்தனர் முற்றுந் தனித்துளோம்,
தாக்கி யந்தத் தறுகணர் கொல்லுவார்...
காக்க யாருங் கதியிலை" என்றனன் !

நபி யுரை

ஏக்க மில்லைநா மென்றுந் தனியில்லை,
காக்க நம்மைக் கடவுள் இருக்கிறன் !
ஆக்கு வான்அழிப் பான்அவ னாற்றலைத்
தேக்க வல்ல திறமையிங் குள்ளதோ !

வைய மெல்லாம் எதிர்த்து வருத்தினும்,
ஐயன் அல்லா வுளான் அருள் பாலிப்பான்,
வெய்யர் வெம்மைகள் வெம்பி மறைந்திடும்,
தெய்வ காரியம் வென்று திகழுமே....

அன்பும் உண்மையுங் கொண்டரு ளப்பனை
நம்பி வாழு நமக்கினி அச்சமேன் ?...
எம்பி ரான்பரம் என்றிருப் போமென்றான்,
நம்பிரான் நபி நாயக மாமணி....

"சொல்லு பிஸ்மில்லா ஹிர்ரஹ்மான் இர்றஹீம் !
வெல்லு வோம் பகை" யென்று விளம்பவே
நல்ல சிடனு நம்பித் தியானித்தான் ;
பொல்ல வரும் குகைமுழை போந்தனர் !

"பாருள்" ளேயெனப் பாதகர் கூவினர்,
"யாருள்" ளே யென் றரற்றினர் அத்ததி,
பேர்சி லந்திகள் பின்னு வலைகண்டே,
காரி ருட்குகை காலியென் றேகினர் !

மூன்று நூல்வலை காத்த முழையிலே,
மூன்று நாட்கள் முழுவதும் ஒளிந்தவர்,
ஆன்ற நேயர் அனுப்பிய ஒட்டையில்,
ஏன்ற வேகத்தில் *யாத்திரைப் போகினார் !

வருந்து மன்பர் வருத்தந் துடைப்பவன்.
அருந்து ணைவன் அடியவர்க் கீசனே
தெரிந்து தன்மனந் திவ்விய சேவையிற்
பொருந்தி னார்க்குப் புகலவன் ஆவனே !

வல்ல வன்பணி வாய்த்தஉள் ளன்பர்கள்,
பொல்லர் நிந்தைப் பொறுத்துத் திருத்தவே
கல்லெ றியினுங் கான்மலர் என்னவே,
அல்ல லின்றி யருட்பணி செய்வரே !

இஸ்லாம் குடியரசு

வான்மழை சொரிந்தது, வனமலர்க் குழாம்
தேன்மழை சொரிந்தது ; திவ்ய வாணியாம்
தீன்மழை சொரிந்தது ; திருநபிப் புகழ்
ஈன்மழை சொரிந்தது மதீனம் எங்குமே !

அறந்தவிர் காபிர்கள் அளித்த புண்ணெலாம்
பறந்தன ; பழிசெயும் பதகர் தீமைகள்
இறந்தன ; புதுமைகொள் ஹிஜிரி நாட்களும்
பிறந்தன நபிஜயம் பெற்ற நாளிதே !

அன்பரும் அறிஞரும் அருளின் வேந்தனை,
“ எம்பெரு நகரினுக் கெழுந்து வாழ்கெனப்
பண்பல பொழிந்தெதிர் பாய்ந்து நல்லபே
ரின்பமே வந்த ” தென் றேற்றுப் போற்றினார்...

திண்பெறும் பொறுமையின் செவ்வி நோக்கினார்.
புண்படு மேயினின் புண்க ளாற்றினார் ;
கண்படு திசைதொறுங் காத லார்முகம்
தண்புறத் தழைத்தன ; தளிர்த்த நெஞ்சமே !

வந்தனர் மாணவர் வரிசை யாகவே ;
வந்தனர் அன்புகொள் ளறிஞர் யாவரும் ;
வந்தனர் அனாதையர் ‘ மதீன மாநகர்
தந்தது புக’ லெனச் சாற்றி வாழ்த்தினார்.

*மதீனம்

திறந்தது வெற்றியின் செய்ய வாயிலே ;
சிறந்தது நிறைந்தது தீனிஸ் லாமியம் ;
பிறந்தது பிறைக்கொடி பரந்த வானிலே ;
பிறந்தது புதுயுகம் பெரிய திரத்தால்.

திங்குறு பகைவருந் திகைத்து நின்றனர் ;
ஈங்குறு "நேயர்கள் என்றும் எங்களைத்
தாங்குக நபிதரு தருமம்" என்றுடன்
பாங்குற வமைத்தனர் பள்ளி வாசலே !

பத்தியிற் சிறந்தவர் பழுதி லாமனம்
வித்தினன் அருளெனும் வித்தை வித்தகன் ;
சுத்தமுந் தொழுகையுந் தொடர்ந்த வாழ்வினுற்
புத்துருக் கொண்டதப் புனித மாநகர்.

மடயரு மூர்க்கரு மதங்கொண் டேந்திய
தடியர சொழிந்தது ; தயையும் சாந்தமும்
இடைவிடாத் தொழுகையும் பணியும் ஏந்திய
குடியர செழுந்தது குதாவின் சக்தியால் !

உலகின் உள்ளத்தை ஊழ்கடந் தாளுவோன்,
கலக மின்றிக் கருணைக் கடவுளைத்
தலைமை கொண்டு தழைத்திட நோற்றனன்
குலவிஸ் லாமின் குடியர சோங்கவே !

உள்ள மெல்லாம் உயர்பர மானந்த
வெள்ள மான விமலனுள் ளன்பரைப்
பள்ளி வாசலிற் பாங்குறக் கூட்டியே
வள்ள லீசன் வணக்கம் வகுத்தனன் !

தூய உள்ளமுந் தொண்டுசெய் கைகளும்,
நேய மாக நினைத்தொரு தேவனை
பாய லையெனப் பண்ணுடன் அன்பிலே
தோயக் காணுந் தொழுகைநல் லின்பமே !

தொழுகும் போதுந் துகளறு தொண்டினைப்
பழகும் போதும், பரிவுடன் ஏழைகட்
கிளகும் போதும் இறையுணர் வோங்கியே
அழகு மிக்க தனிநகர் வாழ்க்கையே !

உருக்க மான உரைவளர் உத்தமன்
பெருக்க மான பிரிவறு நேயர்க்குத்
திருக்கு ரானுப தேசஞ்செய் துண்மையாம்
அருட்கு லத்தை அமைத்தனன் அன்பினால் !

இதஞ்செயும் அன்பு வள்ளல் இரக்கமே யன்னான் மீதுங்
கோதிபகை முரடர் வெய்ய கொலைவினைப் படைகள் ஏவிப்
பதுரேனும் இடத்திற் கூடிப் பண்பனைத் தாக்கு மெல்லை,
இதுஜய நாளென் றெண்ணி எழுந்தனர் முஹம்ம தாங்கே!

எளியவர்க் கெளிய னாவான் ; இகல்கொளும் பகைவர் சேனை
வலியினைத் தாக்க வேண்டி வன்பெரும் படையுங் கொண்டார்.
சலிவறு கலிமா ஓதி முஹம்மது ஸல்லம் பாய்ந்தான் ;
புலியென வந்த வெய்யர் பூனைபோல் ஒடுங்கி னாரே !

பற்றலர் மீண்டும் வந்து, மதினத்தைப் படையெ டுத்து
முற்றுகை யிட்ட போது, முகம்மதைத் தனியாய்க் கண்டே
“ பற்றினேம் ஒண்டி யாயுன் சமர்த்தினிப் பலியா ” தென்றார்…
“ ஒற்றைநான் அல்லேன்; அல்லா உடனுளான் ” என்றார் ஞானி.

சுற்றிய பகைவர் சேனை சூழ்ச்சிகள் செய்த தெல்லாம்,
சிற்றறி வாளர் செய்த செயலெனச் சிதைந்த தம்மா !
மற்றுமோர் புயலும் வந்து, மாண்டது சேனை வெள்ளம் ;
முற்றுகை முறிந்து டைந்து முடுகினர் மூர்க்க ரம்மா !

“ மார்தட்டி வருவோம் ” என்றே மக்கத்தை யடைந்த அன்னார்;
போர்முர சொலியைக் கேட்டார். புனிதனின் சேனை கண்டார்…
வார்முர சடித்து வாளை வீசிட வந்தார் ; அந்தோ
வேரினை வெட்டிச் சாய்த்த மரமென விழுந்தா ரம்மா !

தடித்தகங் காரப் பேயால், சத்திய நபியைக் கல்லால்
அடித்தவர் மண்ணா னார்கள். அறப்பயிர் தழைக்க ரத்தம்,
வடித்தவன் புகழே யின்றும் வாழ்ந்திடக் கண்டோம் ; அன்பு
துடித்திடுந் தெய்வ தூதன் வெற்றியே விளங்கிற் றம்மா !

மாண்டது பகைவர் சேனை ; மற்றவர் பணிந்தே ஈமான்
பூண்டனர் ; வெற்றி பெற்ற புண்ணிய நபியும், ஆங்கே
ஆண்டவன் செயலறிந்து நிமாசுகள் ஆற்றி, இஸ்லாம்
ஈண்டிய பெருமை சேரப் பணிகளை இன்னுஞ் செய்தார்…

பித்துறு பகைவ ருக்கும் பெருமனப் பண்பு காட்டி,
நித்தியப் பொருளைத் தூய நிமாசினால் வணங்கச் செய்து,
சத்திய வுறுதி சொல்லிச் சலாமென நேயங் கூட்டி,
உத்தம நபியிஸ் லாமின் கொடியினை உயர்த்தி னாரே !

பொய்தரும் உருவ ணக்கம் பொருளறப் பொன்றச் செய்து,
மெய்தருந் தொண்ட ரோடு வியன்பணி பலவுஞ் செய்து,
வெய்துயர் தாண்டி யின்ப விடுதலை நாட்டி, வந்த
செய்தகு காரி யங்கள் செய்தமென் றகம கிழ்ந்தார்.

மக்கத்து மாநகரில் கஸ்வா மீது,
மாண்போங்கும் அரபாத்து மைதா னத்தில்,
தொக்கெழுபத் தைந்தாயி ரம்பேர் தொண்டர்,
சுத்தமுடன் கலிமாவைச் சொல்லி நிற்கத்
திக்கொளிர ஹஜ்ஜுமதி ஈதுல் அல்லாஹ்,
தினமன்று குருபானி திருவோ டீந்தே
எக்காலும் உலகெல்லாம் ஏற்றுப் போற்றும்
இனியமணி வாக்களித்தார் இரசூல் சல்லம் !

அருளோங்கும் அன்பர்களே அமர்ந்து கேளீர் ;
அல்லாவை ஐந்துமுறை வணங்கீர் நாளும்.
ஒருவனவன் ; அவன் படைத்த உலகோர் எல்லாம்
ஓர்குலமென் றன்புடனே ஒன்றி வாழீர் !
இருளோங்கும் சைத்தானுக் கிடங்கொ டாதீர் !
எப்போதும் இனிதுள்ளம் விழித்தி ருப்பீர்.
திருவோங்குந் தொழில் செய்வீர் ; சிறந்த ஞானச்
சீரோங்க வாழ்ந்திடுவீர் இஸ்லாம் சேய்காள் !

ஒற்றுமையை உயிர்போலக் காக்க வேண்டும்.
உடன்பிறந்தார் போற்பிறரை உள்ள வேண்டும்.
மற்றவரைத் திருடாது வாழ வேண்டும்.
மாதர்களின் கற்பினைநீர் மதிக்க வேண்டும்.
குற்றமறிந் ததைத்திருத்திக் குணம்வ ளர்ப்பீர்.
குரான்ஆணை காத்திடுவீர். கொடுத்துண் டோங்கீர்.
முற்றறிவன் மந்திரத்தை மொழிவீர் ; என்று
முஹம்மதுஸல் லம்சொல்லி முடித்தா ரம்மா !

ஆண்டவன் அருள்கென விரதம் ஏந்திய
காண்டகு மன்பரைக் கருணை நோக்கினர்....
ஈண்டென தருட்பணி இனிது வெற்றியைப்
பூண்டதோ பொதுவுறப் புகலிர் என்றனர்.

"வென்றதுங் காரியம் விளைந்த தொற்றுமை,
நின்றதும் வாக்" கென நிமலர் போற்றவே,
" என்றுணை யாகிடும் இறைவன் சாட்சியாம் "
என்றுளங் களித்தனர் இறுதி நாளிலே !

பொதுப்பரம் பொருளினைப் போற்றி செய்யவும்,
புதுமறை வகுக்கவும், பொதுத்தொண் டாற்றவும்,
முதுமையைப் போக்கிய முகம தாலிக்கே
இதுவெனக் குறித்தனர் இறுதி நாளையே !

அலிமீதும் பஸல்மீதும் அருளார் சாய்ந்தே
"அன்பர்காள் அறியாது பிழைசெய் தேனே ?
சலியாது, கடனிருப்பின் சாற்றீர்" என்னச்
"சகம்புகழத் தருமநலம் செய்தீர், ஐய.
நலியாது சத்தியத்தை நாட்டி விட்டீர்,
நபிமணியே" எனச்சிடர் நவிலக் கேட்டு
மெலியாத உறுதியுடன் இறுதி யாக
வேதமொழி விளம்பிச்செல் விடைகொண் டாரே !

"விண்செருக்கை விட்டெளிமை பூணு வீரே,
வியனுலகில் அன்புமிக விளைவிப் பீரே !
மாண்புபெறச் சத்தியராய் வாழீர்" என்றே
வணக்கமுறத் தொழுகையிலே மனத்தை நாட்டி,
ஆண்டவனை அல்லாஹோ அக்ப ரென்றே,
அன்போங்கி அவனருளின் வீடு கொண்டார் !
ஈண்டன்பர் உள்ளத்தில் இருப்பார் என்றும்,
இற்றஹ்மான் ரசூல் ஸல்லம் இனிது வாழ்க !

புண்ணி யக்கதை கேட்ட புனிதனும்,
கண்ணியம் பெறு கற்றறி வாளரும்,
எண்ணி யெண்ணியிஸ் லாமிய நாதனைத்
திண்ண மான தியாகிக ளாயினர் !

12. அல்குரான் படலம்

முஸ்தபா முஹம்மத் ஸல்லம் முறைவகுத் தளித்த வேதம்
பத்தியாய்ப் படித்து நாளும் பாத்தியா ஓதித் தூயன்
அப்துல்லா மௌல்வி சீட னாகவே இஸ்லாம் யோக
சித்தியைப் பெற்று மேலும் சிந்தனை செய்கின் றனல் !

தருமத்தைத் தாங்கித் தூய சத்திய ஒளியைக் காட்டிக்
கருமத்தை உலக நன்மைக் காகிய கதியென் றாக்கி,
ஒருபரம் பொருளை நம்பி உலகதன் கோயில் என்றே
திருவுப தேசஞ் செய்யுஞ் சமயமே சிறந்த தாமே !

பல்லுயிர்க் குலத்தை யெல்லாம் பரிவுடன் மதித்துப் போற்றி,
நல்லுயிர்க் இன்ன லின்றி, பிறவுயிர் நமதென் றெண்ணிச்
சொல்லுடன் செயலும் போற்றித் தூநெறி காட்டி மற்றோர்,
செல்வழி மறித்தி டாது செல்வதே சமய மாமே !

தன்னதே சமய மென்று பிறரதைத் தாக்கி டாமல்,
தன்னலச் செருக்கி லாமல், சத்திய ஒளியைப் பற்றி,
உன்னத மான தெய்வ வாழ்வினை உயிர்க்கு நல்கும்
அன்னதே சமயம் அன்பே அதன் அடி முடியு மாமே !

இத்தகைப் பொதுமை யாகும் இலக்கணங் கொண்ட ளந்தே,
உத்தமச் சமய மெல்லாம் ஒன்றொன்றாய்ப் பயின்று பார்த்தேன்
அத்தகைச் சமயத் தேவர் அனைவரும் பெரிய நல்லார்...
சத்தமிட் டவர்பின் வந்தோர், சண்டைகள் செய்கின்றாரே !

முஸ்தபா முகம்மத் ஸல்லம் மூர்க்கரைச் சாந்த ராக்கச்
சத்திய வழியைச் சொன்னார் ; சங்கமொன் றியற்றிச் சென்றார்.
இத்தலச் சமயத் துள்ளே இனியவுள் ளொற்று மைக்குச்
சித்தமாய் அமைந்த திந்தத் திருக்குரான் சமய மம்மா !

சேர்ந்துவாழ் இதிலும் சுன்னி ஷியாமுதற் பிரிவுண் டேனும்,
கூர்ந்துளே நோக்கின் ஒன்றே குலமெனக் காண லாகும்,
பேர்ந்தநற் சமயத் தாரைப் பேதமாய்ப் பாரா தன்பு
கூர்ந்திடின் கொலைக ளின்றிக் குணநலம் சிறப்ப தாமே !

அந்தமில் வான்கு டைக்கீழ் ஆண்டிடும் ஒருவன் மக்கள்,
இந்துமுஸ் லிம்க ளென்றே இருமனப் பிரிவி னாலே,
சந்ததம் சண்டை செய்யும் சழக்கறச் சேர்ந்து வாழும்
அந்தஓர் வழியைச் சொன்னார் தமையினி அடைகு வேனே !

இத்தகை எண்ணங் கொண்டே இனிச்செலும் படியையெண்ணிச்
சுத்தனுங் கிருக்கும் போது, சுந்தர சிங்கன் என்பான்
சத்துஸ்ரீ அகாலென் றுற்று நானகர் தந்த சீக்க
தத்துவ மளிக்குந் தூய சமரஸச் சாந்த மென்றான் !

தீனிஸ்லாம் சாதனத்தைத் திருத்தமாய் உபதே சித்த
ஞானியாம் அப்து லுக்கு நன்றியைச் செலுத்தித் தூயன்,
யான்விடை கொள்வேன் என்ன, 'ஹஜ்ஜுநாளிதனில் இஸ்லாம்,
மேன்மையை உனது வாக்கால் விளம்' பென மௌல்வி
சொன்னான் !

மகிழ்வுடன் சொல்வேன் என்று மசூதியின் வழிபாடாகித்
திகழ்ஜன சங்க முன்னே செய்யவன் சலாமிட் டுன்றிப்
புகழ்பெறுந் தீனிஸ் லாமின் புதல்வர்காள்கேளீர் என்றே
துகளறு நபியின் போதம் சுருதிகொண் டுரைசெய் தானே !

அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர் !
பிஸ்மில்லாஹிர் றஹ்மா னிற்றஹீம்,
லாயி லாஹி இல்லல் லாஹு

அல்லா ஹு அக்பர் அல்லாஹு அக்பர் !
முஸ்தஃபா ரசூலாம் முஹம்மது ஸல்லம்,
அல்லா ஆணையாற் சொல்லிய நல்லுரை
சிரமேற் கொண்டு சேர்ந்து வாழும்,
இஸ்லாம் அன்பர்காள் ! சலாம் உமக்கெல்லாம் !
உண்மையைத் தேடி உலகினிற் சுற்றும்,
யாத்திரி யான யானும் மிடையே,
வாய்ந்த நாளை மறவேன் என்றும் ;
நபியின் பெருமையும் நற்குரான் உள்ளமும்,
கற்பித் தெனக்கும் கல்வி புகட்டிய
ஹஜரத் மௌல்வி அப்துல் லாவை,
நன்றி யுடனே என்றுமே நினைப்பேன் !
மசூதி நகரில் வாழுந் தோழர்
எனக்குக் காட்டிய மனத்துறு மாண்பும்,
அன்புத் தயவும் அடியேன் மறவேன் !
நன்றி, இஸ்லாம் நண்பீர் ! நன்றி !
அடியேன் வாழ்க்கை அருவியைப் போலே,
அகண்டமாம் ஒன்றை அள்ளிக் கலக்கவே
மேன்மேற் சொல்லும் விதியைக் கொண்டது.
மேற்கொண் டேகுமுன் மேதகு நண்பீர்,
எனமனங் கவரும் இஸ்லா மியத்தின்
இயற்கைத் தத்துவம் இயம்புத லாலே,
அல்லா விடமும், அல்குரா னிடமும்,
அல்லமீ னிடமும் அவர்மர பிடமும்,
அன்பைக் காட்டி இன்புறு வேனே !
கண்தலை தெரியாக் காட்டுமி ராண்டிகள்,
பெண்கற் பழித்துப் பிறரை வருத்திப்
பஞ்சமா பாதகப் பதகராய் வாழ்ந்த
நிலையை மாற்றிக் கலைபெறும் அறத்தை,
தியாகவாழ் வாகச் செய்து விளக்கி,
நாகரி கத்தை நாட்டினர் நபியே.
அவர்வழி பற்றியோர் அரும்பெரு ஞானிகள்.
அவருள் ஹஃபீஸை அறியார் யாரே.
குலிஸ்தான் ஸாதியைக் குறியார் யாரே.
உமர்ஹை யத்தை உணரார் யாரே ?
இஸ்லாம் உலகில் எழுப்பிய கலையும்,
சிற்பமும், இசையும் சிறந்த கவிதையும்,
எக்கா லத்திலும் இன்ப மளிக்குமே !
இந்தநன் னாட்டின் முந்தைய மன்னர்

மனவேற் றுமையால் இனம்வே றுகி,
கோரியின் உதவியைக் கோரிய நாளே,
இஸ்லாம் ஆட்சி எழுந்ததை யறிவீர்.
அக்பரின் பெருமையை அறியார் யாரே,
தாசு மகாலும் தான்ஸேன் பாட்டும்,
தாரா ஞானமும் சரித்திரப் புகழாம்.
குரானை எழுதியும், குல்லா முடைந்தும்
உழைத்த கையால் உலகைத் தாங்கிய
ஔரங்க ஜேபை அறியார் யாரே ?
மஸ்தான் சாஹெபை மதியார் யாரே !
உமறுப் புலவர் உரைத்த சீருப்
புராண நயத்தைப் புகலார் யாரே ?
உலகொற் றுமையை ஊக்கிய பஹாயின்
பொதுநல வாழ்வைப் புகழார் யாரே ?
இத்தகைப் பெரியார் எண்ணிலார் வந்த
தீனிஸ் லாமின் சிறப்பே சிறப்பாம்.
பாமர மக்களை ஏமாற்றி வந்த
பலவுருத் தொழுகையைப் பலமாய்த் தகர்த்தே,
ஒன்றே இறைவன், உருவிலான், எங்கும்
உள்ளவன், எல்லாம் வல்லவ னென்றே
உரைத்து மாந்தரைத் திருத்திய பெருமை
முஹம்மது நபியின் முதற்பெரும் பெருமையாம்...
பிரிந்து வாழ்ந்த பேய்மனச் சாதியைச்
சேர்ந்து வாழச் செய்தவர் அவரே.
அரபிநாட் டிற்குச் சுரபியாய் வந்த
குரான்சா ரத்தைக் குறிப்பேன் கேளீர் :—
ஆண்டவன் ஒருவன். அவனே பரம்பொருள்.
ஈண்டவ னுக்கிணை எதுவுமே யில்லை.
அவனையே தொழுமின் அல்லும் பகலும்,
அவனைக் கலத்தலே ஆத்துமா னந்தம்.
முதல்வனை யெண்ணி முழுதுந் தெளிந்த
இதய சாந்தமே இஸ்லாம் ஆகும்,
எனதியான் என்னும் இறுமாப் பொழிமின்.
எல்லாம் அல்லா இச்சையென் றுணர்மின்.
மறவா தவனை மனதி லிருத்துமின்.
குலைவற நம்புமின் குன்றும் இணங்கும் ;
மலைவறப் பணிமின் மாதே வனையே !
காற்றுங் கடலும் கதிரும் மழையும்,
ஊற்றும் பயிரும் உயிரும் உலகும்,

அவனருள் விரிவாம். அவனுயிர்க் குயிரோன்.
அவனை மறத்தலே அனைத்தினுந் தீதாம்.
அவனை நினைத்தலே அனைத்தினு மேலாம்.
அகந்தை, காமம், அச்சம், பொறாமை
சுகந்தனைத் தேய்க்குந் துயர்க்குல மாகும்.
குடியுங் களவும் கொலையும் கூத்தியும்,
சழக்கும் வழக்கும் சைத்தான் வேலையாம்.
அன்பு செய்வதே ஆண்டவன் கட்டளை.
உலகிற் கெல்லாம் பலபய னாகும்
அருட்பணி செய்பவன் அல்லா பக்தன்.
பலருக் கவனாற் பயன்மிக வாமே;
அவனை அல்லா அன்புடன் காப்பார்.
சமநோக் குடனே சனங்களை மதிமின் !
அடிமையென் றெவரையும் கொடுமைசெய் யாதீர்.
நன்மை விதைக்க நன்மை விளையும்,
தீமை விதைக்கத் தீமையே விளையும்.
தீயன வற்றை நோயென விலக்கித்
தூயன வற்றைத் துணையெனக் கொள்வீர்.
எளிமையும் பொறுமையும் ஈகையும் விரதமும்,
தூய்மையும் உண்மையும் வாய்மையும் அன்பும்,
பசிக்கொரு தொழிலும், பண்புறப் போற்றுமின்.
எவ்வுயி ருக்கும் இன்னலைத் தவிர்மின்.
புசிப்பிலும் செயலிலும் புனிதம் பேணுமின்.
ஆண்பெண் இருவரும் அறிவை வளர்மின்.
மாண்புறு கல்வியே மாந்தர் விளக்காம்.
இல்லற மாகிய நல்லறம் போற்றி,
அல்லா வுக்கே ஆளென வாழ்வீர்.
எதிரிற் காணும் எவர்க்கும் சலாமென
நல்லுரை பேசுமின் பொல்லுரை தவிர்மின்.
ஐம்பொறி புலனை அடக்கி யொழுகுமின்.
ஐம்பூத உடலை அழுக்கறக் காமின்.
பேயைத் துரத்துமின் நோயைத் தவிர்மின்.
குரானைப் பயின்று குணமுட னிருமின்.
அல்லா பெரியோன் அவனையே தொழுமின்,
எல்லாங் கூடும் இன்பம் பெருகுமே !

அன்பீர் இதுவே அல்குரான் சாரம் ;
ஆர்வமோ டிதனை அனைவரும் பயின்றால்
சமரஸ மோங்கும் சத்தியந் தழைக்கும் ;
இன்னொரு மதத்தையுந் தன்மதம் போன்றே

எண்ணி மதிக்கும் இயல்புண் டாகும்.
போதக னாகப் புகன்றே னில்லை,
சாதக னாகவே சார்ந்தேன் இங்கே ;
மாணவ னாகவே மற்றும் செல்கிறேன்.
நல்விடை தருவீர் நண்பீர் அன்பீர்,
அல்லா போற்றி அருட்சுடர் போற்றி !
இன்பக் கடலாம் இறைவனை நினைவோம்.

* * *

அப்துல் லாவின் அருமை மாணவன்,
வாயுரை கேட்ட மசூதிமா நகரார்,
பாத்தியா ஓதிப் பரிவுகள் கூறி,
வாழ்த்தி நல்வழி மகிழ்வுட னனுப்பி,
மீண்டும் வருகென விரும்பிச் சொன்னார்.
"உரிய காலத்தில் ஒன்று சேர்வோ" மெனச்
சுந்தர சிங்குடன் சுத்தன் சென்றான்.
நாமும் சென்று நடந்ததைக் கண்டு,
நானகன் மதத்தை நன்றறி வோமே !

13. குரு நானகப் படலம்

பெயரினுக் கேற்ற தேகம் பெற்றவன் ; குற்ற மில்லா
உயரமும் உரமுங் கொண்டோன் ; உயிரென உடல்வ ளர்த்தான்
துயரினைத் தூவென் றெள்ளித் தொண்டுசெய் கர்ம யோகி ;
சுயநலந் துறந்த வீரன், சுந்தர சிங்க னென்பான் !

சாதுக்குப் பரம சாது ; சண்டைக்குச் சலியா முண்டன் ;
யாதுக்கும் அஞ்சா நெஞ்சன், இறைவனுக் கேவல் செய்வோன் ;
வாதுக்குச் சலியா வாதி, வழிநடை முழுதும் பாடி,
மேதக்க குருகி ரந்தம் விளக்கிநல் விருந்த ளித்தான்.

சாதிக ளின்றி முற்றுஞ் சமரஸ வாழ்வைச் சொல்லும்,
கீதத்தைப் பருகி யுள்ளக் கிளர்ச்சியால் விரைந்து சென்று,
கோதறு நண்பர் தூய குருபுரி மருங்கில் வந்தார் ;
வீதியில், குருகி ரந்த ஊர்வலம் விளங்கக் கண்டார்...

திண்டிறல் படைத்த தீரர், தீநிறங் கொண்ட வீமர்,
எண்டிசை யெதி ரொலிக்க "ஏகஓங் கார ஸத்நாம்,
கொண்ட ஸ்ரீ அகால போற்றி ! குருமணி போற்றி !" யென்று
பண்டிசை முழக்கி, யாங்கு புத்தகப் பவனி வந்தார் !

சுந்தர சிங்க னெடு சுத்தனை யுபசரித்துச்
சந்தமார் கீத மோதும் சாதுக்க ளுடனே வைத்து,
"வந்தனம் இறைவா ! உண்மை வழிதருங் குருவே" யென்று,
முந்தினர் ; குருத்வா ரத்தின் மூலைந் நிதிக்கு வந்தார்...

ஏகஓங் காரன், சுத்தன் இன்பமெய் யறிவே யானோன்,
தாகங்கொண் டிசைத்த நல்லோர் தம்முளே நிலவுஞ் ஜோதி,
மோகசோ கங்க ளற்ற முத்தருக் கெளிய னவான்,
பாகிலத் ஸ்ரீ அகாலன் பரனருள் போற்றி போற்றி !

என்றிசை யெழுப்பி யன்பர் இடமறிந் தமர்ந்த பின்னர்,
மற்றுள பெரியார் வேண்ட, வாஹிஸத் குருவென் றன்புக்
குன்றென நிவந்து நின்று, நானக குருவின் காதை
இன்றுமக் கியம்பு கின்றேன் சுந்தர சிங்கன் என்றான் !

குரு நானக விஜயம்

குருமணி நானக் வாழ்க, கோவிந்த சிங்கன் வாழ்க
திருசுக மணிய ளித்த இராமதாஸ் தீரன் வாழ்க !
உருகியன் பூறத் திவ்ய நாமங்கள் உரைக்கும் அன்பர்,
பெருகுசு யேச்சை யெய்திப் பேரின்பம் பழுத்து வாழ்க !

தொல்லுலகில் மக்களெல்லாந் தொல்லைதரும் பேதமின்றி,
எல்லவரும் ஒருகுலமாய் இறைவனருட் குடை நிழலில்,
அல்லலற வாழ்ந்திடநல் லறம்வகுத்த குரு மகிமை
சொல்லுகிற வாயமுதச் சுனையென்றே சொல்லுவமே !

பிறப்பு 1469

பனிமலையின் பாலெனவே பஞ்சநதி பாய்ந்துவளர்,
இனியவள நாட்டினிலே இரவிநதிக் கரையினிலே,
தனமிகுந்த தால்வந்தி, சத்திரியர் குலத்தினிலே,
கனமிகுந்த கணக்கனுளான் கலியாண சந்த னென்பான்.

கருணையுள திருப்தை யெனுங் கற்பரசி யுடன்அவனும்
மருவிவளர் இல்லறத்தின் மணிவிளக்காய் அவதரித்தான் ;—
அருளுடனே நானகெனும் அற்புதமாம் சுயஞானி,
குருமணியாய்ப் பிறவிமுதற் கொள்கையுற மிகப்பொலிந்தான்.

பூவணிந்த காலையெனப் பொற்புடைய சாந்தனவன்,
நாவணிந்த நல்லுரைகள் ஞானமணி மாலைகளே ;
பாவணிந்த திங்குரலான், பரிசுத்த நெஞ்சினிலே
தேவணிந்த தியானியவன் சித்தமெலாம் பக்திமயம் !

தெய்வநிலை கண்டறிந்த தீரனுக்குத் தந்தைபணப்
பைநிரம்பும் படிப்பளிக்கப் * பண்டிதர்முன் கொண்டு சென்றான்
ஐயர் அரிவரி யதனை ஆரம்பிக்கும் போதினிலே,
பையலிந்தப் படிப்பெல்லாம் பதரென்றே மறுத்து நின்றான் !

பந்தனையைக் கரியாக்கிப் பகுத்தறிவே காகித மாய்,
சிந்தையன்பே பேனுவாய்ச் சிரத்தைமிகும் உள்ளத்தால்,
எந்தைபரா பரனொருவன் எங்குமுளான் என்றெழுதின்,
அந்தவரி பரிசுத்தம் அளிக்கு மென்றே அறிவுரைத்தான்.

வாதமிகு பண்டிதரும் வழக்கான சடங்குடனே
வேதவிதி சாதிவிதி விளம்பிடவே நானகனும்,
சாதிமதச் சடங்கறியேன் ; சத்தியமே யானறிவேன்,
பேதபுத்தி யொழிகவென்றான்; பேச்சடைத்தான் பண்டிதனும்.

கல்லினையும் கட்டையையும் கடவுளெனக் கைகுவியேன் ;
எல்லையற்ற பரம்பொருளுக் கேதுருவம் என்றுரைத்தான்.
அல்லலுற்ற தந்தையிவன் அடங்காத பித்த னென்றே,
நல்லதொரு வைத்தியன்பால் நானகனைப் பாருமென்றான் !

பைத்தியத்திற் கிம்மருந்தே பத்தியமென் றீந்தவனை,
"வைத்தியரே எமபாசம் மாறுமருந் தறிவீரோ ?
மெய்த் துணையாந் திருவருளை மேவவொரு மருந்துளதோ
உய்த்துரையீ ரென்றதுவும் உளந்திகைத்தான் மருத்துவனே.

ஞானியிவன் எனப்பணிந்து வைத்தியனும் நடந்திடவே.
கான்மலையுந் திரிந்தியற்கை, கனிந்தருளுங் கல்விகற்றே,
நானிலத்திற் பிறந்தபயன் யாதெனவே நன்கறிந்து,
கானமல ராலிறைவன் கருணையினைப் பெற்றுகந்தான் !

உபநயனஞ் செய்திடவே உவகைகொண்ட தந்தையிடம்,
சுபஞான நூலாகத் தூயமனந் திரித்த ணிந்தே,
தபமிகுந்த பிரமசரி யத்தாலே சத்தியத்தை,
உபசாந்த முடன்கூடல், உபநயனம் என்றுரைத்தான்.

காரியத்திற் குதவாத கதையவிழ்க்கும் பிள்ளையினைப்
"பாராயென் வயல்வேலை" எனத்தந்தை பணித்திடவே,
"பார்நிலத்தை யுழுவதெல்லாம் பாழ்வயிற்றின் பசி நீக்கப்
பேரின்ப விவசாயம் பேசுகிறேன்" கேளென்றான் !

"என்புடலே நிலமாக, இன்மனமாம் உழவாளி,
ஐம்புலனும் கலப்பையினால், ஆழவுழு தார்வமெனும்
பைம்புனலைப் பாய்ச்சிநல்ல பக்திவிதை நட்டுநிதம்
எம்பெருமான் அருட்கனியை எய்துவதே இன்ப மென்றான்.

* கோபாலசந்த்

"கடைவை"யென் றுரைத்திடவே, கடவுளன்பை மாந்தரெல்லாம்,
அடைந்திடவே உண்மையறி வாகுராக்கை அளந்தளிக்கும்,
கடையேயென் பரஞானக் கடையெனவே வாலிபனும்,
"அடாடமே" எனத்தந்தை அரசர்பணி செய்யென்றான்.

"அரசனைக் காண்டவனே ; அவன்பணியே என்பணி" யென்
றுரைமகனை "எப்படி நீ உருப்படுவாய் ? †சாஹூரிலே
வருசந்தைச் சரக்குகளை மலிவாக வாங்கி வந்தே,
பெருலாபம் பெற்றேனும் பிழை" யெனவே பணங்கொடுத்தான்.

ஊதியங்கொண் டுறுவனென ஓர்பரியிற் சென்ற மகன்,
பாதையிலே பக்கிரிகள் பத்தியிலே மனமிழந்து,
மாதுரிய விருந்தளித்தே, மகிழ்ச்சியுடன் வந்து "பெரும்
ஊதியம்புண் ணியமப்பா உண்டுபர லோக" மென்றான் !

கேட்டி றைந்த கிளர்சினத் தந்தைக்கும்
"ஈட்டுஞ் செல்வத்தை ஈந்திடப் புண்ணியம்,
பூட்டப் பாவம் புரிந்தது வா" மெனக்
காட்டினன் அறங் காத்திடும் வாழ்க்கையே !

தங்கை நாதனுந் தால்வந்தி மன்னனும்,
பொங்கு ஞானப் புனிதனை நேசித்தே,
துங்க மானனசு லக்ஷணை யென்கிற
நங்கையைச் சுப ‡ நன்மணங் கூட்டினர்.

---

† *சாஹூர் காரு தால்வந்தியிலிருந்து* 20 *மைல். அங்கே பெரிய சந்தை கூடும். சரக்கு வாங்க ரூபா* 20 *தந்தனுப்பினன். அப்போது நானகர் வயது* 15.

‡ *குருநானகருக்கு ஒரே தங்கை* **நாநகி.** *அவள்* **சுல்தான்பூர்** *நவாப் தௌலத்கான் லோடியின் திவானான* **ஜயராமை** *மணந்தாள். லோடி தில்லி சுல்தானுக்கு உறவு. லோடிக்கு சுல்தான் பூரில் ஏராளமான நிலமுண்டு; நல்ல விளைவு. தால்வந்தி ஜமீந்தார்* **ராய் புலாரும், ஜயராமும்** *நானகரை அறிந்து அன்பு செய்தனர். இருவரும்* **குருதாஸ்பு***ரியிலுள்ள* **படாலா** *என்னும் ஊரில் பிரமுகரான* **மூலசந்தின்** *மகள்* **சுலக்ஷணியை** *நானகருக்கு மணம்புரிவித்து, நவாப் லோடியிடம் சிபார்சுசெய்து அவனுடைய களஞ்சிய வேலையை வாங்கித்தந்தனர். நானகர் இல்லறங்காத்து* **ஸ்ரீ சந்த் 1484, லக்ஷ்மணசந்த் 1497** *என்ற இரு புதல்வரைப் பெற்றார். மூத்தவன் துறவியாகி* **உதாசிசந்யாசிகளை** *நடத்தினன். இளையவன் திருமணம் புரிந்து இரண்டு பிள்ளைகளுக்குத் தந்தையானன்.*

சடங்கு—மந்திரஞ் சாற்றிட லின்றியே,
கடவு ளைக்கவி மாலையி னேத்தியே,
திடவு றுதிகொள் ஞானி திருமணக்
கடனை யாற்றிக் களிப்புற வாழ்ந்தனன் !

இல்ல றத்தை இழுக்கறக் காத்திரு
நல்ல மைந்தரை நானகன் பெற்றபின்,
அல்ல லாக்கிடும் ஆசைத் தினவின்றி,
மெல்ல மெல்லத் துறவினை மேற்கொண்டான் !

வளமி குந்த நவாபின் வளர்பெருங்
களஞ்சி யத்திற் கணக்குறு தானியம்
அளந்து கொட்டும் அலுவல் கிடைத்ததும்,
தளர்வி லாது தழைத்தனன் இல்லறம்.

காரி யத்திற் கருத்துறு நானகன்
*தேரா வென்னிற் சிலிர்த்துளம் பூரிப்பான்.
வாரி வேந்தன் வழங்குஞ்சன் மானத்தை,
மாரி போல வழங்குவன் ஏழைக்கே.

எளிய வாழ்வும் இறைவன் அருளையே,
தெளிய வேண்டுந் தியானமுங் கானமும்,
ஒளிவி லாத்திரு ஞான வுரைகளும்,
இளகு நெஞ்சமும் இன்பம ளிக்குமே.

வான் முகிலை விரும்பும் பயிரைப்போல்,
தேன்ம லரினைத் தேடிடும் வண்டுபோல்,
ஞான வத்துவை நாடிய நானகன்
மோனப் பித்தென மூடர் நகைத்தனர்.

சிந்தை யெல்லாந் திருவருள் வேட்கையாய்ப்
பந்த வாழ்வைப் பதறென் றுதறிய
தொந்த மற்றுத் தனிமை துலங்கிடும்,
இந்த ஞானியைப் பேயென்றும் எண்ணினர் !

விரைந்திப் பேயை வெருட்டென லோடியே,
தெரிந்த னுப்பிய சித்திக் மவுல்வியும்,
புரிந்த மந்திரம், போட்ட புகையுடன்,
கரிந்த தன்றியோர் காரிய மில்லையால் !

---

* படி யளக்கும்போது தேரா (பதின்மூன்று) வரும்போது உன்னுடைமை (தேரா) நான் உன்னுடைமை என்று நானகன் கடவுளை நினைத்து உளஞ் சிலிர்ப்பான்.

"எந்தப் பேயினி ஏ" கென் றரற்றிடும்
மந்தி ரனை "மவுல்வி மாகாசய,
பந்த மற்ற பரம்பொரு ளாசைப்பேய்,
இந்தப் பேயென் றிடுநகை செய்தனன் !

ஊச லாடும் உளத்தை யடக்கியே,
பாச மெல்லாம் பரம னிடத்திலே
நேச மாக நிறுத்தி, யவனருள்
ஆசைப் பேய்பிடித் தாடிடும் அன்பன்யான் !

அரிஅல் லாவென் றழைக்கும் அவனையான்,
உரிமை கொண்டேன் உளத்திற் கலக்கவோர்
பெரிய மந்திரம் பேசென நானகன்,
உரை யெழாது மவுல்வியும் ஓடினன்...

முந்து *கோன்முன் முடுகிய மௌல்வியும்
மந்தி ரத்தில் வளைப்பறு பேயிவன்,
இந்து முஸ்லிம் இறைவரை ஒன்றென்பான்,
வந்து பாருமென் றேவசை கூறினன் !
"ஏனிப் பித்" தென் றிறைவனுங் கேட்டிட,
ஞானப் பித்தன், பயமறு நானகன்,
தீனிஸ் லாமிற்கும் சீக்கியர்க் கும்பொது
வான தேவன் வளர்த்திடும் பித்தென்றான் !

"பொதுவெ னிலெம் புனிதம சூதியில்,
முதல்வனைத் தொழு" வென்ன முஸல்மனும்,
"அதுசரி" யென் றமைந்த நிமாசிலே,
இதய வாசனை யெண்ணினன் புண்ணியன் !

எம்மைப் போல வழுத்தி யெழாததேன் ?
பொம்மை போலமர் வாய்புக லென்றுமன்,
வெம்மை யாக வினவலு நானகன்,
செம்மை யாகச் சிரிப்புரை பேசினன் !

காண்டஹார் குதிரையிற் கருத்த லைந்திட
ஈண்டுன துடலமே இசைத்தெ ழுந்ததே,
ஆண்டவ னருளையான் அமர்ந்து மோனமாய்
வேண்டினன் என்றனன் வியக்க வேந்தனே !

நானகன் போக்கை நவாபு கண்டிவன்
ஞானியென் றறிந்ததும் அன்பு நாட்டியே
ஏனினி ஊழியம் ? இனியுன் வாழ்விற்கே
கானமுந் தியானமுங் கடமை யாமென்றான்.

*லோடி

இத்ததி நானகன் இராம்ரஹிம் என
நித்தியம் அன்புசெய் நிமல ஞகிய
பத்தக பீரினைப் பார்த்துப் பேரின்பத்
தத்துவ மறிந்தவன் சரண் புகுந்தனன்.

பவபந் தத்தைப் பழுதறப் போக்கியே
சிவந்து லங்கிடச் சீரிய நானகன்,
அவனி மாந்தரின் அன்பை வளர்த்திடத்
தவம்பு ரிந்து தனித்துற வேந்தினுன் !

செருக்கி லாத செழுமன ஞானியின்
உருக்க மான உளத்துறு சாந்தியில்,
கருக்கொண் டீசன் கருணை யருளின்பம்
பெருக்க மாகப் பிறங்க வளர்ந்ததால் !

அரு ளெழுச்சி யடைந்த பெரியவன்,
இருள டர்ந்த உலகுமுன் னேறியே,
பொரு ளுணர்ந்து திருந்திடப் போதிக்கும்,
திரு வினையைச் சிரமிசை கொண்டனன்.

வேட மின்றி வெளிப்பகட் டின்றியே,
ஓடுஞ் சித்தம் ஒடுங்கித் தியானத்தில்,
கூடி நிற்கக் குலவிடும் ஈசனை
நாடு மென்று நவின்றன ருட்டிலே !

ஆசைப் பேயை அடித்துத் துரத்துமின் !
வேசை போன்ற விழைவை யடக்குமின்,
ஈச னன்பை யிசைமினென் றேதினுன்,
பாச மற்றுப் பழுத்த முனிவனே !

வசையி லாத மணிமொழி கேட்டதற்
கிசைய வந்தனர் இன்னியல் மாணவர் ;
* இசைவலார் பலன் மர்த்தனன் என்பவர்
அசைவ றுந்துணை யாயுடன் ஏகினுர் !

குருவின் பாட்டைக் குவலயங் கேட்டுளம்,
உருகப் பாடினன் உத்தம பாய்பலன்,
கருவி மீட்டிக் களிப்புறப் பாடினுன்,
மருவு மர்த்தனன் வான்குயில் என்னவே !

** பாய்பலன் நான்கர் கீதங்களைப்பாடினுன், மர்த்தனன் சாரங்கியில் வாசித்தான். மர்த்தனன் பெரிய பாடகன்.*

எளியர் அன்புடன் ஈந்திடுங் கூழினைக்
களிமி குந்து கடும்பசிக் குண்ணுவார் !
எளியர் நோக இரத்தப் பணத்திமிர்
விளை விருந்தை விரும்பியுந் தொட்டிடார்.

வியன் செயல்கள்

ஏழையின் விருந்து

ஏன்விருந் துதறி ஏழையின் பழையதைத்
தின்றதேன் என்று சினந்ததோர் செல்வனை
இலட்டு விருந்தை எடுத்துவா என்றான்...
அதனைப் பிழிந்தான் அனைத்தும் இரத்தமே.
ஏழையின் பழையதை இருகையாற் பிழிந்தான்,
பாலாய் வடிந்ததைப் பார்த்தனன் செல்வன்....
"செல்வநின் விருந்து தீனரின் இரத்தம்...
உழைக்கும் ஏழையின் உப்பும் அமுதே...."
எனவே நானகன், கனவான் உணர்ந்து
தனத்தை யெல்லாந் தானஞ் செய்து
தாஸ னாகிச் சாதனஞ் செய்தான்.

நான் சர்க்கரை

மூல்டான் சென்ற மூதறி வாளனைப் 220
பக்கிரிப் படைகள் பகடிசெய் திடவே,
கிண்ணந் ததும்ப வெண்பால் அனுப்பினர்
சர்க்கரைபோட்டுத் தந்தான் நானகன்.
"பருகும் பாலைப் பருகுக ; திருப்பித்
தருவது நன்றிலை தயாளுவே" என்று
மர்த்தனன் சொல்ல "மாணவ மணியே,
பக்கிரி நிரம்பிய பட்டணந் தனிலே,
நீயினும் எதற்கென நினைத்துக் குறிக்கவே
பாத்திரம் நிரம்பப் பாலை யனுப்பினர் ;
நீங்கள் இங்கே நிறைந்த பாலே,
ஆயினும் யானும் அந்தப் பாலில்
சர்க்கரை போலச் சார்ந்தேன்" எனவே
"குறித்தேன்" என்ற குருமணி யறிவை
அறிந்த துறவிகள் அடிபணிந் தேற்றார்.

அர்க்கியம்

பலதலஞ் சுற்றி நலவழி சொல்லி,
நானகன் கங்கை நதிக்கரை நடந்து,
அரித்துவா ரத்தை அணுகிக் குளித்தான்...

ஆங்கே காலை அந்தணர் கிழக்கே,
அருக்கனை நோக்கி அருக்கியம் விடுத்தார்....
நானகன் மேற்கே நன்னீர் இறைத்தான்....
அந்தணர் : நீயேன் மேற்கே நீரிறைப் பாயோ ?
நானகன் : நீரேன் கிழக்கே நீரிறைப் பீரோ ?
அந்தணர் : இரவிமண் டலம்புக இறைக்கிறோம் யாமே !
நானகன் : பஞ்சாப் வயல்களிற் பாயயான் இறைப்பதே.
அந்தணர் : பாஞ்சா லத்திற் பாயுமோ உன்னீர் ?
நானகன் : உந்நீர் இரவிக் கேகுவ துண்மையேல்,
என்னீர் பஞ்சாப் ஏகிடத் தடையேன் ?
அந்தணர் : தருப்பணம் செய்யும் அருக்கியம், எங்கள்
பிதுர்கள் பருகப் பெய்திடும் அன்றோ ?
நானகன் : யானிங் கிறைப்பதும் எதிரூர் ஏழை
குடிக்கக் கிடைக்குமே ; குதர்க்கம் ஏனோ ?
அந்தணர் : இங்கே விடுநீர் அங்கேன் செல்லும் ?
நானகன் : நீங்கள் விடுநீர் நீளச் சென்று
மதிக்கும் எட்டாப் பிதுருல கேகுமோ ?

* * *

வாயாடி என்று வைதனர் பலபேர்.
வாய்மை என்றே வணங்கினர் சிலரே !

மா விளக்கு

காசி கங்கையில் கணக்கறு பக்தர்,
பட்டப் பகலிற் பகல்விளக் கேற்றி,
விட்டனர் கங்கையில் விநோதமாய்க் கண்டே,
"பகல்விளக் கேனோ, பக்தர்காள் கேளீர் !
மாசறு முடலே மாவிளக் காகி,
அன்புநெய் வார்த்தே ஆர்வத் திரியில்,
அறிவொளி யேற்றின் ஆனந்த மாமே !
அவ்வொளி யிறைவன் அருளொளி யாமே !"
என்றலும், சிலபேர் எரிந்து விழுந்தனர்,
அறிந்த சிலபேர் அடிபணிந் தாரே !

பிரயாணம்

இவ்வா றேகும் இடந்தொறும் உண்மை
இலகக் காட்டி இந்தியா முழுதும்,
இமய மலைமுதல் இராமேச் சுரம்வரை
இலங்கை முதலாச் சிங்களத் தீவெலாம்,
பார்த்த பின்னொரு பாய்மரக் கப்பலில்
அரபிக் கடலை அமைதியாய்த் தாண்டி,
புண்ணியன் மெக்கா புரியடைந் தானே !

எங்குங் கடவுள்

எங்குங் கடவுள் என்னுமித் துறவி,
காபா வுக்கெதிர் காலே நீட்டிக்
கண்ணயர்ந் துறங்கக் கண்டு வெகுண்டே,
காஃஜி கானுதின், "காபிர், ஹராம்" எனக்
குருவின் காலேக் கொட்புற வுதைத்தான்....
"கனேத்துளேன் ஹஜரத், காபா இல்லாத்
திசையிற் காலேத் திருப்பிப் போடும்...."
எனவே முனிவன், எதிர்த்திசை காலே
இழுத்துப் போட்டான் என்னே வியப்பு !
கடிதினில் அத்திசை காபா கண்டான்.
மற்ருெரு திசையில் மாற்றிப் போடவே
கடிதிலத் திசையும் காபா கண்டான்...
சித்தன் இவனெனத் தேர்ந்த காஃஜியும்,
"இந்துவா முஸ்லிமா எம்மதம் சொல்" லென,
நானக குருஜீ நவின்றதைக் கேளீர் :
"இந்துவு மில்லே ; இஸ்லாமு மில்லே ;
தந்தை இறைவன் ; சகோதரர் மாந்தர்
அன்பே கொள்கை அறிவே பூசை
இந்த உண்மை எம்மத மாமோ,
அம்மத மெனக்குச் சம்மத மாமே !
இதுவே இஸ்லாம் இசைப்பது ; சலா"மெனக்
காஜியுங் குருவின் கதைக்கேட் டுவந்தான்.
இவ்வா றுலகெலாம் எம்மதத் தாரும்
ஒப்பவே உண்மையை ஒளிரக் காட்டி,
தாய்நா டேகித் தயைமிகு குருவும்
கர்த்தார் புரியிற் கடைசிநா ளிருந்தான்.
இஸ்லா மியரும் இந்து நண்பரும்,
சீட ராகித் திருநெறி பயின்ருர்.
காலே மாலே கவிபுனேந் திசைத்து,
ஜப்ஜீ படித்துத் திருப்பெய ரோதி,
இறைவனில் உள்ளம் இரண்டறக் கலந்து,
நானகன் ஒருநாள் தியான சமாதியில்
இருந்துதன் இறுதி இதுவென மொழிந்தான்....
அங்கதன் என்னும் அருமைச் சீடனேக்
குருபீ டத்திற் குலவிடச் செய்தான்.
வாஹி குருவென வாழ்த்திடு மாணவர்,
உத்தம குருவின் உடலே எப்படி
எவர்கொள் கைப்படி யிடுவதென் றருள்கென,

"நானக னுக்கு நானு மதமிலே,
அன்பே மசூதி, ஆர்வமே விரிப்பாம்,
தருமமே குரானும், தயையே காபா,
உண்மையே குருவாம், உதவியே கொள்கை,
இறைவனை நினைத்தலே எண்ணும் ஜபமாம்,
சர்வாத் மாக்களின் சமரஸம் கோயிலாம்,
பொதுநலத் தொண்டே பூஜையாம் ; ஆதலின்,
உடலின் இருபுறம் உதிர்மலர் வைத்தே
எவர்மலர் வாடா திருக்குமோ மறுநாள்,
அவர்மதப் படியே அடக்கம் செய்மின்...
எம்மத மகானையும் இறைஞ்சி நீவிர்
உள்ளன் புடனே ஒருகுல மாக
வாழ்வீர் சீடர்காள் ! வழிவழி வாழ்வீர் !...
ஸத்ஶ்ரீ அகால், ஓம் ஸத்ஶ்ரீ அகால்" என
*உடலை நீத்தான் உண்மைக் குருவே—
இருமதத் தினரும் இருபுறம் மலரை
வைத்துப் போர்த்த மறுநாட் காலை,
மலரே கண்டார் மனிதனங் கில்லை.
போர்த்த துணியைப் போட்டிரு துண்டாய்,
அவரவர் மனப்படி அடக்கஞ் செய்தே,
இருவரும் ஜப்ஜீ இனிதுற ஓதி,
ஒருமன நேயராய் ஒன்றுபட் டிருந்தே,
குருக்களைப் பணிந்து குருகுல மக்களாய்,
வீர தீரராய் விளங்கினுர் வாழி !
நோக்குயர் வீரச் சீக்கியர் வாழ்கவே !
இத்தகைப் பெரியோ னுலே இந்துமுஸ் லீம்கள் ஒன்றுய்த்
தத்துவ வுண்மை கண்டு சமரஸ ராக வாழ்ந்தார்...
சத்திய வடிவாய் வந்த சத்குரு வாழ்க வென்றே
சுத்தனுர் மகிழக் காதை சுந்தரன் முடித்தான் மாதோ !
மங்கல மலர்கள் வாஹி குருவென வாரித் தூவி,
பொங்கிய மதுர கீத மிசைத்தனர் ; புனித நூலைச்
செங்கையால் வணங்கிச் சீடர் செயசெய முழக்கஞ் செய்து,
சிங்கம்போல் வீறு பெற்றுத் திருவிழா முடிந்த தென்றுர்...

14. கிரந்த ஸாகெபுப் படலம்

சுந்தரன் சொற்படி சுத்தனுங் கிருந்தே,
சீக்கிய சாதனம் சிறப்புறச் செய்தான்.

* கி. பி. 1538—69 வயது

நானக பக்தி கானம் பருகினான்,
சுகமணி ஆத்துமச் சுகந்தரக் கண்டான்,
நானக ருக்கு நண்பரா யமைந்த
கபீரின் பாட்டைக் களிப்புறப் பாடினான்.
குருமந் திரத்திற் குவிந்த மனதுடன்
தினமிரு வேளை தியானஞ் செய்தான்.
உதாசிக ளுடனே ஓதினான் கிரந்தம்,
அகாலி களுடன் அன்புற வாடிக்
குருகோ விந்தனின் கொள்கையைக் கற்றான்.
உடலும் மனமும் உறுதிபெற் றொளிரும்,
சுத்தன் வீரமும், தூயநல் வாழ்வும்,
பத்திப் பெருக்கும் பார்த்த சீக்கியர்,
என்றுந் தம்மிடை இருந்திட வேண்டினார்....
ஆயினும் சுத்தன் அறிவின் எல்லையைக்
காணக் கருதி மாண்பெறு வேதம்
ஒப்பிய சமய உண்மையை வேட்டான்...

ஆரியமான்

அருவையும் அன்புக் குருவையும் வணங்குஞ்
சமய மனத்தையுந் தானறிந் ததன்பின்
உருவா யிறைவனை உள்ளன் புடனே
மதிக்கும் பண்டை மதங்களைக் காண
விரும்பிய நாளில், வெண்ணிறச் சோதியைக்
கதிரிலுந் தீயிலுந் துதியுடன் வணங்கும்,
ஆரிய மானெனுஞ் ஜாரதுட் டிரனைக்
கண்டான், கேட்டான், கலந்துற வாடினான்...
ஆரிய மானும் அழைத்திடத் தூயன்,
மிக்க விருப்புடன் அக்கினி புரிக்குச்
செலவுடன் பட்டுச் சீக்கிய ருக்கு
நல்லுரை சொன்னதை நவின்றிடக் கேளீர் :
ஓங்கார னென்னும் உயர்ந்த பெயரால்,
குருபுரி வந்து குலவிய சாது,
சுத்தனைச் சீக்கியர், மெத்தவும் போற்றிக்
குருத்துவா ரத்திற் கூட்டங் கூடி
அகமகிழ் வுடனே சுகமணி பாடி,
புகழுரை கூறிப் போவிடை தந்தார்....
சுத்தன் எழுந்து "ஓம் சத்திய நாம"
என்ற கீதம் இனிதுறப் பாடி,
சீக்கிய மதத்தின் சிறப்பை விளக்கி,
அரியதோர் சொற்பொழி வாற்றினான் ஆங்கே !

குரு கிரந்த சாரம்

“ஸத்ஸ்ரீ அகாலெனச் சத்தியப் பொருளை,
தியானத் தாலும் கானத் தாலும்,
வழிபட் டின்ப வாரிதி யாடும்,
பாக்கியங் கொண்ட சீக்கிய நண்பீர்,
சுந்தர ருடனே வந்தயான் உம்பால்,
ஒவ்வொரு நாளும் செவ்விதின் எய்திய
ஞானப் பயனை நவின்றிடப் போமோ ?
என்றும் உமக்கு நன்றிமிக் குடையேன்.
என்மனங் கவர்ந்த உம்மதச் சிறப்பை
உணர்ந்த படியே உரைப்பேன் கேளீர் :—

கபீர்

இந்து முஸ்லிம் இருமதத் தாரும்,
கலகமில் லாது கலந்து வாழச்
செய்த மகான்கள் செவ்விய இருவர்.
ஒருவர் கபீர்மற் றொருவர் நானகர் !
நெசவுத் தொழிலார் நீரு நிமாவெனும்,
இஸ்லாம் அன்பர் இனிது வளர்த்த
அனுதைச் சேயே அன்பர் கபீர்தாஸ்.
செந்தமிழ் வைணவச் செல்வ ரான
இராமா னந்தர் இராமோப தேசம்
செய்யக் கபீர்தாஸ் தீஞ்சுவை இந்தியால்
‘இராம் ரஹீம்’ என்னும் நாம ஜபத்தால்,
இறைவனை வழுத்தி, இன்னிசை பாடி,
இந்துமுஸ் லிம்களின் இணைப்பா யிருந்தார்.
அனைவ ருள்ளும் ஆண்டவன் உள்ளான்,
வெற்றிலைப் பச்சையில் விளங்குஞ் செம்மைபோல்,
கரந்தவ னுள்ளான் ; காதலால் வருவான் !
எல்லாம் அவனெனில் எவருன் பகைவர் ?
பகைவன் உன்மனப் பான்மையே யாகும்,
எண்ணரும் பகைவர் எதிர்த்துத் தாக்கினும்,
சித்தம் இறையிடம் வைத்தவர் அஞ்சார்.
உயிரி ரக்கமும், உள்ளத் தூய்மையும்,
அமைதியும் சேவையும், அன்புங் கொண்ட
சாது ஜனங்களைத் தாங்குவான் பரமன்.
அடையத் துடிக்கும் அன்ப ருள்ளே,
இறைவன் வருவான், குறைகளைத் தீர்ப்பான்.
இந்து வாயினும் இஸ்லா மாயினும்,

பக்தருக் கருளும் பகவான் ஒருவனே.
படித்துறை பலவெனிற் படிநீர் ஒன்றே,
இதழ்கள் பலவெனில் இனமலர் ஒன்றே.
எந்தச் சாதி எனும்பேச் சில்லை.
அந்தக் கரணம் அழுக்கற் றிருந்தால்,
ஆண்டவன் அருளை வேண்டியோர் பெறலாம்.
என்றுப தேசம் இயற்றிடும் பாடலால்,
பக்திமார்க் கத்தைப் பரப்பிய கபீர்தாஸ்,
பசிக்கு நெசவும் பரத்திலே நெஞ்சும்
வைத்து வாழ்ந்த உத்தமர் கபீர்தாஸ்,
ஒருமுறை வந்து குருநா னகரை,
அன்புறக் கண்டார் ; அடியார் இருவரும்,
இசைமல ராலே இறைவனை வணங்கினர்.
கபீரின் தெய்வக் காதலும் ஆர்வமும்,
இல்லறத் துறவும், நல்லறச் செயலும்,
நானகர் உளத்தே நன்றாய் ஊன்றவே,
இவரும் அவர்போல் இந்து முஸல்மான்,
ஒற்றுமை பெருக உளங்கனிந் தாரே.
இல்லறத் துறவியாய் இறைவனுக் காளாய்,
ஆசை யகந்தையை அறவே நீத்து,
முற்றும் உண்மையைக் கற்றுத் தன்னுள்,
ஞானமுந் தியானமும் கானமு மாக,
சாதி மதமாம் பேதமே யின்றிச்
சமரஸ நோக்குடன் சகத்திற் குதவிய
நானகர் பெருமை நவின்றிடப் போமோ ?
காசியி லில்லைமெக் காவிலு மில்லை.
கட்டுப் பட்டோர் கடத்தினி லில்லை;
அருவா யெங்கும் ஆண்டவன் இருக்கிறான்,
தருமமும் ஞானமும், கருமமு மறிந்தே
உண்மை யின்பம் உணர்ந்து நடந்தால்,
தெளிந்த மனமும் செருக்கிலா நடையும்,
வெளிப்பகட் டில்லா எளிமையும் தூய்மையும்
போற்றினால், வாழ்வு புண்ணியப் பயனும்.
ஏகஓங் காரன் இறைவனும் ; அவனை
அன்பும் தியாகமும் அடைந்திடும் வழியாம்.
அன்பைப் பெற்றார் அனைத்தையும் பெற்றார் ;
அன்பை யிழந்தார் அனைத்தையும் இழந்தார்.
தாமத புத்தியைத் தள்ளி யொதுக்கி,
நாம ஜபத்தை நாளுஞ் செய்மினே !

சேமம் அருளும் சித்தவை ராக்கியம்,
காமமோ கங்கள் கவலேப் பிணியாம்.
சாதி பேதச் சடங்குகள் வேண்டா.
நெஞ்சிற் கடவுளை நினைப்பவர் அஞ்சார்.
ஆண்டவன் அருளே அச்சந் தவிர்க்கும்.
சாது சங்கமும் சத்திய வாழ்வும்,
ஆத்தும சுத்தியும், ஐம்புல னடக்கமும்,
அருட்பெருங் குருவிடம் அன்பும் பணிவும்
தீமையைப் போக்கி நன்மையைச் செயுமே.
இப்பொரு ளடங்கும் இசைப்பாட் டாலே,
மனிதருக் கெல்லாம் இனியதே செய்து,
ஜப்ஜி என்னுந் திருநூ லளித்து,
சீக்கிய மரபை ஆக்கிய நானகன்,
என்னுளக் கோயிலில் என்றும் இருப்பனே.
அவன்பின் வந்த தவம்பெறுங் குருமார்,
அங்கதன், உமர்தாஸ், அருச்சுனன், இராமதாஸ்,
ஹரிகிருட் டினன், தேஜ் பகதூர், ஆதியோர்,
அனைவரும் தியாகிகள், ஆத்தும வீரரே.
உயிரை மதியா உண்மைத் தொண்டரே.
அவருள் இராமதாஸ் அருளிய சுகமணி,
படிக்கப் படிக்கப் பரமா னந்தமாம்.
பத்தாங் குருமணி பாரத திலகம்,
குருகோ விந்தன் உருவீந் தோங்கும்
அகாலியர் வீரமும் ஆத்தும தியாகமும்,
உலகம் புகழும் உதாரண மாமே.
இக்கா லத்திலும் இச்சமு தாயம்,
வீறு படைத்த வீரக் கூட்டமாம்.
நாட்டிற் சிறந்த நண்பரைக் கண்டேன்,
அன்பீர், உம்மை அகல மனமிலே.
என்னினும் என்பசி எல்லேயில் லாததே ;
இன்னும் இன்னும் முன்னே சென்றே
அறிவின் ஆழமும் அகலமும் அறிய
விடைபெறு கின்றேன், வீரக் குழுவீர்,
சுந்தர சிங்கரே, வந்தனம் வந்தனம் !
ஸத்ஸ்ரீ அகாலெனச் சாற்றிமெய் யன்பர்,
வழியனுப் பிடவே மாசறு தூயன்
ஆரிய மானுடன் அக்கினி நகரை
அடைந்தான் ; அங்கே அடைவோம் நாமே !

15. ஜரதுஷ்டிரப் படலம்

ஆவி நல்கும் அகரக் கடவுளை
தேவ தேவனைத் திவ்விய ஜோதியை
நாவு ரைக்க நடைதெரி யாமலே,
மேவும் ஊரிது வென்றனன் மித்திரன் !

சொக்கத் தங்கச் சுடர்விரி நன்னகர்,
மிக்கத் தூய விழுமிய தொன்னகர்,
அக்கி னிபுரி யாகும் அணிநகர்
தக்க செல்வர் தழைக்கும் அளகையே !

சுத்த மாகத் துலங்கிடும் வீதிகள்,
சுத்த மாகத் துலங்கிடும் வீடுகள்,
சுத்த மாகத் துலங்கும் அகரனின்
பத்தர் வாழும் பழம்பதி யிஃதரோ !

கல்வி கேள்வி கணக்கறி வித்தகர்,
செல்வ மோங்கிச் செழிக்குந் தொழிலினர்,
நல் குரவு நடுங்கு மிவர்உறை
எல்லைப் பக்கம் எடுத்தடி வைக்கவே !

கற்பு மிக்க கவின்பெறு மாதரார்,
பொற்பு மிக்க பொலிமுகச் செல்வியர்,
அற்பு தக்கலை ஆருயிர் பெற்றனர்,
சொற்க ரும்பரஞ் ஜோதி வணங்குவார் !

பிச்சை வாழ்வும், பிறன்மனை பார்த்திடுங்
கொச்சை வாழ்வுங் கொடும்விலை வாழ்க்கையும்,
நச்சு வாழ்வெனப் போக்கிய நன்னகர்,
மெச்சு வாழ்வை வியந்தனன் சுத்தனே !

கூர்ந்த மூக்குங் குளிர்முகப் பார்வையும்,
தேர்ந்த சொல்லுந் திருவின் பெருமையும்,
சேர்ந்த நண்பர் சிறந்த கடவுளன்
பார்ந்த சீலரை ஆர்வமோ டேற்றனர்.

வருக ஜோதி வளர்நகர் ஆர்யமான்,
வருக நண்பர், வருக நலமெனு,
இருகை யாலும் இனிதுற வேற்றனர்,
வருவி ருந்தை மதித்திடும் வண்மையர் !

[illegible] முதலியாகள்,
அக மகிழ விருந்தளித் தானதும்,
அகர மந்திரம் புக்கின் றருளினைப்
பகவன் பெற்றதோர் பண்டிகை நாளதால்,

ஊர் முழுதும் உவந்திட நங்குரு
ஜார துஷ்ட்ரன் சரித்திரஞ் சாற்றென,
ஆரி யனும் அமுத விருந்தெனச்
சீரி யன்கதை செப்பலுற் றனரோ !

இளர் பசும்பொன் கெழுமிய சோதியாய்
வளர் சுடரை வழுத்தி வணங்கியே,
ஒளி யரசனை உள்ளத் திருத்தியே
தெளி வுரைகளைச் செப்பினன் ஆர்யவான் !

ஜரதுஷ்ட்ரர் சரிதை

அழகுங் கலையும் அணைந்து பொலியும்
இரானிய நாட்டில் இருள்படிந் தொருகால்,
அறிவும் ஒழுக்கமும் அன்பும் குறுகி,
கொடுமையுஞ் சினமுங் கொலையுங் கொள்ளையும்
பேயுபா சனையும் பில்லிசூ னியமும்,
தீமையும் வளர்ந்து திருவிழந் ததுவே !
இந்த நிலைமையை எண்ணி வருந்திய
ஸ்பைதா மர்குலப் பாக்கிய மன்னுள்,
துக்தோ வாவெனுந் தூய பெயரினுள்,
அகர மத்தனை அகங்குழைந் துருகி,
நாட்டைக் காவாய் நாயக வென்றுள்.
தஞ்ச மளித்துத் தயாபர னுங்கே,
"புனிதக் கன்னியே புருஷா சுவனைத்
திருமணம் புரிவாய் ஒருமகன் வருவான் !
எனதரு ளாலவன் இப்புவி காப்பான்" !
என்றலுங் கன்னி நன்றி செலுத்தி,
அகர னன்பில் அகங்குழைந் திளகும்,
புருஷா சுவனைத் திருமணம் புரிந்தே,
இல்லற மாகிய நல்லறங் காத்தாள் !
மங்கள மனையறம் பொங்கிட வந்த
மக்கள் ஐவருள் வாய்மை யொளியாய்
வந்தவன் மூன்றும் வரம்பெறு மகனே !
பிறந்ததும் புன்னகை புரிந்தநன் மைந்தன்
பொன்னொளிர் அழகன் புண்ணியன், அவனை

ஸ்பிதாமன் என்றனர் பெற்றவர்: பின்னே,
ஜரதுஷ் டிரனெனச் சகமறிந் ததுவே !
ஜரதம் பொன்னும் உஷ்டிரம் ஒளியாம்,
பொன்னொளி வண்ணன் என்பதே பொருளாம் !
அன்னவன் பிறந்த நன்னல நாளில்,
புவியுளஞ் சிலிர்க்கப் புண்ணியந் தளிர்க்கவே,
புதுமீன் காட்டிப் பொலிந்தது வானே !
சீனத் துதித்த ஞானி லவோத்ஸன்
போல ஸ்பிதாமன், புவியின் இயல்பை,
ஐந்து வயதிலே அறிந்து மோனமாய்ச்
சிந்தனை செய்து தீமையை விலக்கி,
நல்ல தன்மையே நாளும் வளர்த்தான்.
செருக்கும் வஞ்சமும் சிறுமை பொறாமையும்,
காம வெறிகளுங் கடுஞ்சினப் போர்களும்
அழிநடம் புரியும் ஆத்திர வுலகை,
பார்த்துப் பார்த்துப் பரிதபித் துள்ளே,
மருந்தருள் என்று மஜதனைத் தொழுதான் !
புறஞ்செல் லாது புலன்களை யடக்கி,
மனத்தை வென்று மாசிலாத் துறவியாய்ப்
பதினைந் தாண்டிற் பட்டணம் விட்டு,
வீட்டை மறந்து, நாட்டையு மறந்து,
ஞானப் பசிக்கு மோனத் தனிமையில்
தியான வுணவு செழிப்புறத் தந்து,
சபாதன் மலைமிசைத் தவம்புரிந் தானே !
அதன்பிற கன்னோன் ஆரிய நாட்டின்
வித்தக ரிடத்தே வேதமுங் கற்றான்.....
வேத வழியே வீறுடன் பயின்று,
ஸ்பிதாமன் மீண்டும் பெருந்தவம் புரிந்தான்.
உயிர்க்குயி ரான ஒருவன் அகரன்,
அன்பனின் பக்குவம் அறிந்தொரு சோதியாய்,
உள்ளே கிளர்ந்து, தெள்ளிய ஞானம்,
பொழிந்துபே ரின்பப் புதுவாழ் வளித்தான்.
அந்த ஞானமே ஜெந்தவஸ் தாவெனும்
வேதமா யெழுந்து விளங்கிய தாமே !
நலந்தீ தென்னும் பலங்க ளிரண்டு
மானிட ருள்ளே வளருவ தாமே.
மாசறு நலமே வகுமான தேவதை,
அழுக்குறு தீங்கே ஆங்கிர மானன்.
ஆங்கிர மானனை அடியொடு நீக்கி,

வருமான னுக்கே மனதைக் கொடுத்து,
நல்லது சொல்லி, நல்லது செய்து,
நல்லது நினைத்து நலிவறு தூய்மை,
காத்தலே இன்பக் கதிர்வழி யாமே !
சுத்தமே நன்மை—ஆஷேம் வாஹூ
சுத்தமே இன்பம், சுத்தனும் இறைவன்
இச்சையே நீதி—யதா ஆகு வைர்யா,
இறைவன் பணியை இயற்றிடு வோர்க்கே,
நல்லன யாவும் பல்குறக் கிடைக்கும்,
எனுமந் திரங்களை என்றும் போற்றி,
காழ்ப்புறு தீமையைக் கட்டுடன் விலக்கி,
எல்லா ருக்கும் நல்லதே செய்தால்,
அகர மஜதன் அருள்பெற லாமே !
இவ்வா றோதி எழுந்த தூயனை
ஆங்கரி மானன் அடக்கிட நினைத்துச்
செல்வர் செவியைச் செவிடாக் கினனே !
சொந்தநாட் டாருந் துளியும் போற்றிலர்.
பேயை வணங்கிய பித்தனே என்றுர்.
செம்மொழி கேட்டுச் சீறி விழுந்தார்.
பன்னீ ராண்டுகள் பரிவுடன் முயன்றும்,
மைத்தோய் மாங்கன் ஒருவனே மாணவன் ;
மற்றோர் எவரும் மதியா மையினுல்,
துயர்மிகு ஜெராஸ்தர் சொந்த நாடொரீஇ,
புண்ணிய நாட்டை நண்ணிக் காசியில்
வேதமும் யோகமும் விருப்புடன் கற்றுன்,
சீனநா டேகி ஞானம் பயின்றுன்,
உன்னத மலையில் உட்குவிந் திருந்து,
சுடச்சுட நோற்றுச் சுத்த சித்தனுய்,
அகரன் அருளை மிகவும் பெற்றுன்.
அன்பும் இரக்கமும், அறிவொளி ரமைதியும்,
பொருந்திய பொன்னுர் புலவன் மீண்டும்,
இறைவன் ஆணையை நிறைவேற் றிடவே,
எழுந்தான் ; எதிரே எழுந்தாங் கிரிமான்,
"அரசும் செல்வமும் ஆட்சியுந் தருவேன்,
மாதரைத் தருவேன், வணங்கெனை" என்றுன்.
"கிட்ட வராதே ; எட்டிநில் பேயே,
சுத்தன் சொல்லாற் சுடுவேன் உன்னை;
அகர னிடத்தில் அன்புகொண் டிருப்போர்,
மாய வலையிலே மாட்டிக் கொள்வரோ?

போபோ தீய புல்லனே" என்று,
பேயை ஓட்டிப் பெருந்தகை யாளன்,
பொதுஜனங் களுக்குப் புனித நெறியை,
உபதே சிக்கவே ஊர்தொறுஞ் சென்றான்.
பொறாமை கொண்ட புத்தகப் பூச்சிகள்,
விஷ்தா சுவனெனும் வேந்தனைத் தூண்டி,
அரசே ஸ்பிதாமன் அண்டப் புளுகன்,
மாயக் காரன் மாற்றான் என்றே
கோளேற் றிடவே, கொற்றவன் வெகுண்டு,
கலங்கறு தூதனைக் கடுஞ்சிறை யிட்டான்.
உடலே சிறையில் ; உள்ளம் இறையில் ;
துயரெலாம் யோகப் பயிற்சியில் மறந்து,
மாசறு தூயன் மனதை வென்றோன்,
கட்டுற் றிருந்துங் கவலையற் றானே !
வாதத் தாலே மன்னன் குதிரை
வருந்தக் கண்டு மருந்தொன் றின்றி,
ஜார துட்டிரன் சௌக்கியப் படுத்தவே,
அதிசயித் தரசன் அடிபணிந் துடனே,
குலத்துடன் மஜதாய் நலத்தினுக் குழைத்தான்.
மந்திரி பிசோஸ்திரன் மகளைத் தந்தான்.
இறைவன் புதல்வன் இஸ்பேந் திரனும்,
சகோதர னான ஜாரி யைரியும்,
அருட்பணி புரிய விருப்புட னெழுந்தார்.
இறைவன் கட்டளை இனிது நிறைவுற
ஜாரதுட் டிரனும் சமயத் தொண்டில்
ஈடுபட் டிரானிய நாடெலாஞ் சுற்றி,
வெற்றிமேல் வெற்றி பெற்றனன் ஆங்கே.
தீயர் அடங்கினர் ; தூயர் செழித்தார் ;
சுடர்மணிக் கோயில்கள் சுற்றிலு மெழுந்தன.
ஒளிவடி வான ஒருவனை அகரனை
சுத்தத் தாலே துதித்து வணங்கி,
அருட்பெரும் இன்பம் அடைந்து சிறந்தான்;
எங்கும் அமைதி இலகுறு நாளில்,
துரானிய மன்னன் அரஜா சுவனும்,
பேய்வெறி கொண்ட பெரும்பகை யாளரும்,
ஒளிவழிச் சென்ற ஒப்பறு மன்னனும்
விஷ்தா சுவனுடன் வெஞ்சமர் தொடுத்தார்.
ஜாரதுஷ் டிரனும் தானைகள் சேர்த்து,
வாளைத் தீட்டி வன்சமர் செய்தான் ;

ஜாரி பைரி போரில் இறந்தான்.
அவன்மகன் எதிரியை அக்கணம் வீழ்த்தினுன்.
மீண்டுந் துரானிய மிண்டர் புகுந்து,
ஜாரதுட் டிரரைச் சாக மடித்து,
இரத்த வெள்ளம் பெருக்கி எங்கும்,
ஸ்பிதாமன் தொழுத பேரொளிக் கோயிலில்,
புகுந்தனர்; அந்தோ புண்ணிய மூர்த்தி,
ஆஷேம் வாஹு அகூர ஓம் என்று
ஜபஞ்செயும் போது சதிவாள் ஓச்சி,
வெட்டினுர் "சுத்தம் வெல்" கெனப் புனிதன்
ஜபமா லேயினைச் சத்துரு மீது
வீசவே அதிலோர் வியன்கன லெழுந்தது.
சத்துரு வெந்து சாம்பலா யொழிந்தான் !
இக்கணம் எழுபத் தேழாம் வயதில்,
வினையுட லுதறி விமலனு மாங்கே,
அகரன் அருளில் ஐக்கிய மானுன் !
தியாக பலிக்குத் திறமை பெருகுமே ;
மாதவத் தூதன் மாப்பினை யான
ஜாமா சுவனே ஜரதுட் டிரரின்
குருபீ டத்திற் குலவி யிருந்து,
சத்குரு வாக்கைச் சரிவரத் தொகுத்து,
ஜெந்தவஸ் தாவெனும் சிறப்புநூ லாக்கி.
உலகெலாம் அதனை ஓதிடச் செய்தான்.
சமய வளர்ச்சி சாந்தமாய் நடந்தது.
நீண்ட காலம் ஆண்டதச் சமயம்.
எனினும், இந்த இருவினை யுலகில்,
ஆக்கமும் அழிவும் தாக்குவ துறுதியே.
எண்ணறு ஞானப் புண்ணிய நூல்களை
இரேக்கரும் உரோமரும் கிளர்ந்த துருக்கரும்,
படையெடுத் தெரித்துப் பாழாக் கியபின்,
எஞ்சிய சிலதை எடுத்து மஜாதர்,
இந்தியா விற்கு வந்து வசித்தனர்.
இரானி யருக்கும் ஆரிய ருக்கும்
இனவொற் றுமையும் மனவொற் றுமையும்,
மொழியொற் றுமையும் அழியா திருந்ததால்,
ஜெந்தவஸ் தாவைச் செப்பனிட் டிங்கே,
மஜதாய் மதத்தினர் மாண்புறச் செழித்தார்—
எண்ணிற் சிறியர் திண்மையிற் பெரியார்,
கல்வியுந் தொழிலுஞ் செல்வமும் அறமும்,

பொதுநலப் பண்பும் பொருந்திய மேலோர் ;
உலகம் போற்றும் உத்தம ரான
தாதா பாயுடன் டாடா மேதா
மேஹர் பாபா விரக் காமா
முதலிய பெரியரை உதவிய சமூகம்,
பார்ஸி சமூகம் பல்லாண்டு வாழ்கவே
மாசறுஜோதி மஜதன் அருள்கவே...

* * * *

ஆர்யமான் இவ்வகை ஆர்வமாய்ப் பேசச்
சபையோர் உருகினர், சத்திய மைந்தன்,
புத்துணர் வடைந்து, மஜதாய் மதத்தைப்
பண்புறப் பயின்று பயன்பெற நாடினன்....
ஆரிய மானே சீரிய குருவாய்,
பாஹல்வி மொழியிற் சொல்லிய ஜெந்தா
அவஸ்தா வேதம் ஆழ்ந்தா ராய்ந்து,
வேதச் சமயமே ஈதெனக் கண்டான் !
ஆதிஜெந் தாவின் காதா வெல்லாம்
முடித்ததும் வேத மூல மதங்களை,
அறிய விரும்பிப் பெரியரைத் தேட
வேத புரியின் வித்தக னென
தேவ தாஸனை தேடிவந் தாங்கே,
காலத் தாலே மூல வேதங்கள்,
சிதறிய நிலையைப் பதறிச் சொல்லித்
தம்முடன் வருகெனத் தயவுறக் கேட்டான்.
வேத புரிக்கு விமலன் செல்லுமுன்
அக்கினி முன்னே அன்புரை சொன்னன் :—
நன்மையும் சுத்தமும் நயமுற நவின்ற,
ஜரதுட் டிரனின் சந்தான மணிகாள்,
உங்கள் குருவையும் உயர்ந்த மறையையும்,
அறிய வுதவிய ஆர்யமா னுக்கும்,
அருந்துணை செய்யும் அன்பர் தமக்கும்,
நன்றி, நன்றி. என்றும் மறவேன் !
அறிவுநூ லாகும் அவஸ்த ஜெந்தா,
என்மனப் பசியை இனிதுறத் தீர்த்தது.
ஒருவனே இறைவன் ஒப்பறு முதல்வன்,
உயிர்க்குயி ரானவன், உண்மைச் சோதியே.
மனமொழி மெய்யின் மாசறு தூய்மையும்,
தீதறு நன்மையுஞ் செம்மனச் சாட்சியைத்
தழுவி நடத்தலாந் தருமமும் இறைவனை

ORIENTAL INSTITUTE TIRUPATI LIBRARY 1510/2

அடையும் வழியெனத் தடையறச் சொல்லும்,
ஜெந்தவஸ் தாவின் செம்பொரு ளெல்லாம்.
ஆரிய வேதம் அருளிய பொருளாம்.
ஒளிவணக் கத்தைத் தெளிவுறச் சொல்லும்.
உங்கள் வேதம் ஓதிய பிறகு,
பாரத நாட்டுப் பழம்பெரும் வேதம்
ஆராய்ந் ததனை வேராய்க் கொண்ட
உட்சம யங்களை உணரக் கருதியே,
விடைபெறு கின்றேன் விழுமிய நண்பர்காள்,
ஆத்தும ஞானமும், ஆருயிர்ப் பணியும்,
பக்தியும் பயின்று முத்தியை நோக்கும்,
ஜரதுஷ் டிரரின் சமயம் வாழ்கவே....
அமர ஜோதியாம் ஆனந்த தேவன்,
அருளே வேண்டும் பொருளார் வாழ்கவே !

* * *

என்று நல்லுரை இயம்பித் தூயன்,
வாழ்த்துரை பெற்று மலர்ப்பொழி லூடே,
திம்பா முழங்குந் தேவதா சுடனே,
வேத புரிக்கு விரைந்தன னுங்கே. 280
நாமுஞ் சென்று நடப்பறி வோமே ! 281

16. வேதபுரிப் படலம்

மன்று ளேவளர் மாணிக்கத் திருநடத் தரசே,
நன்றிப் பாரத சக்தியை நவின்றுநான் விரைவில்,
உன்றன் மெய்யருள் உலகினில் விளங்குயர் யோகம்
வென்றி நல்கிட நடத்தெனை வித்தகா போற்றி !

ஆர ணப்பொருள் யாவையும் அறிதரு நல்லோன்,
பூர ணத்தினைத் தேடிடும் புனிதனை நடத்தி,
வீரர், வித்தகர் விளங்கிடு வேதமா புரியைத்
தீர கண்ணெனச் செப்பினன் தேவதா சனுமே !

ஓமெ னும்பர மானந்த மாகிய ஒன்றே
நாம ரூபம தாகிய ஞாலமும் விண்ணும்
ஆம தன்மயம் ஆருயிர் யாவுமென் றருளும்
தூம றையொலி துலங்கிய தொல்புரி யிதுவே !

பண்டை வேதத்தின் பயனெல்லாம் புறக்கணித் தின்று,
கண்ட கண்டவர் கண்கட்டி விட்டவா றுடிச்
சண்டை செய்திடுஞ் சாதிகள் சமயங்கள் அனந்தங்
கொண்ட வூரினைச் சுத்தனுங் குனிப்புறக் குறித்தான்.

வீதிக் கோர்மதம் வீட்டினுக் கொருவித மான
சாதி, சாதியுட் சாதிகள்; அவைசெயும் சலியா
வாதம், வாதத்தால் வந்திடும் பிரிவினை வகையாம் ;
தீதெலாம் பொது நலத்தினைத் தேய்த்திடக் கண்டான்.

அருளின் மாதவர் வாக்கினில் அரும்பிய வேதப்
பொருளு ணர்ந்திடார் ; பொட்டைப்பா டஞ்செய்த புலவர் ;
கருமி யின்பொரு ளென்னவே காத்தனர்; கருத்தால்
ஒருவ ரும்ஒரு வரியறி யாரிது உண்மை !

பெயரில் ஆரிய வேதியர் எனுஞ்சில பேரும்,
உயர்வெஞ் சாதியென் றுரைத்திறு மாப்பதை யொழிய
நியம வேதத்தை விட்டவர் வெகுதொலை நின்றார் ;
நயம தாய்வட மொழியையு நவின்றிட வறியார்.

காலை மாலையிற் கடனுக்குக் கைப்புனல் கழிய
நூலை மாட்டிய தன்றியோர் நூலையு முணரார் ;
போலி ஞானங்கள் பேசியே பொழுதினைக் கழிப்பார் ;
ஞால மாறுதல் அறிந்திடார் நாட்டையு மிழந்தார்...

அவன்கண் டுண்டிடின் அந்தண்மை போய்விடும் என்பார் ;
இவன்கை தீண்டிடின் எங்குலம் பழுதுறும் என்பார் ;
உவனெம் வேதத்தைக் கேட்டிடின் பாபமென் றுரைப்பார்
தவமி லாதவர் சாதியி லேசள சளப்பார்.

நெற்றிக் கோட்டினை நெடுக்கிலுங் குறுக்கிலும் நிமிர்த்தே,
பற்றுக் கோடறு பலபல வகுப்புகள் பகுப்பார்.
கற்றுக் கேட்டவர் கல்வியைப் பரப்பிடக் கனியார்.
வெற்றுக் கோலங்கள் போட்டவர் வெருட்டுவா ருலகை !

உலகம் யாவையுங் கோயிலென் றுடையஓர் பொருளைப்
பலவு ருக்களிற் பதித்தவர் பதித்தவப் படியே
நிலவு தெய்வமென் றெழுப்புவார் நெடும்பெரு நிலைகள்
கலக மிட்டனர் ; கல்லெறி யுண்டனர் கடிதே !

கல்லுங் காரையுங் கட்டிய கோயிலின் கடையுள்,
எல்லை யிட்டனர் இன்னொரு சாதியைத் தடுத்தார்.
பல்கு சாதிகள் பலவகைக் கோயில்கள்; பலவாம்
சொல்லு மந்திரம் தந்திரம் சொல்லவும் படுமோ ?

ஊருட் சோற்றினை உண்டொரு வேலையு மின்றிப்
பேருக் கேதுற வேற்றனர் பெருவுடற் பெரியார் ;
யாருக் கும்பய னின்றிநல் லருங்கலை யெல்லாம்,
வேருக் கேமுழு மோசமாய்ச் சிதைந்தன விரைந்தே !

ஆதி யொற்றுமை, காலத்தால் அகன்றிட அதனுல்
சாதி மாமத பேதமே தழைப்பதைக் கண்டோர்,
வேத மாமதம் வேற்றுமைக் கந்தலை விரிக்கும் !
வாத மாமதம் உருப்படா மதமென மருண்டார்.

உய்யு ஞானமொன் றறிகிலார் ; உய்விக்க வந்த
தெய்வம் யாமெனச் செருக்கினைச் சீடர்பால் திணிப்பார்.
ஐயகோ இவர் ஆண்டவன் அரியணை யடையப்
பொய் வெளிச்சங்கள் போட்டிடும் புரட்டையென் புகல்வேன் !

கண்ணன் யாமெனக் காதலின் கடைகளை விரிப்பார்.
எண்ணி லாதவர் பெண்களை இராதைக ளெனவே
பண்ணுங் கூத்துகள் பகர்ந்திடிற் பரிகசக் கதையாம் ;
உண்மை கண்டவர் உரைகளை எளிதினில் உணரார் !

கலை யுரைத்திடுங் கற்பனைக் கவிகளே கற்று,
நிலையி லாப்பசு வுடல்களை நித்திய மென்றே,
விலையி லாப்பொருட் செலவினில் விழாவணி செய்வார்...
தலைசி றந்தநற் கல்விக்குத் தருமமொன் றியற்ருர் !

கிட்ட வந்தன்பு செய்திடுங் கேண்மையும் கிடையார் ;
எட்டிச் செல்லெனத் தமரையே இழிவுசெய் கின்ருர்.
எட்டுத் திக்கிலும் உலகிவர் இயல்பினை இடித்துக்
குட்டிச் சொல்லியும் பழம்பெருங் குருடியின் குணமே.

கோயிற் சண்டையுங் குலப்பெருஞ் சண்டையு மோட்ச
வாயிற் சண்டையும், வகுப்புறு சண்டையும், மாமூல்
சாயச் சண்டையுஞ் சாப்பிடுஞ் சண்டையும் பெருகி
வாய்மை கெட்டது மாந்தரின் மனங்கெடு மதத்தால்.

இந்த வேற்றுமைக் காட்டினை இனிதுற நீவிச்
சுந்த ரம்பெறு மலர்வன மாகவே துலக்க
வந்த தேவதா சென்கிற மகானையும் இனேயோர்
பிந்தி நில்லெனப் பிரிவினைச் சேற்றிலே யுழன்ருர்.

பன்ன ருந்துயர் படிந்தவிப் பதியிடைப் புகுந்தே,
அன்னி யர்உதட் டன்பினுல் ஆதரம் பெற்றே,
பின்னெ துக்கியிப் பிரிவினைக் காரரைப் பிரித்து,
முன்முன் சென்றனர் முயற்சியின் உறுதியால் முறையே.

பரிந்து பேசியும், பணத்தினை வீசியும், பழமை
தெரிந்த தந்திரஞ் செய்துமிச் செயலிலார் சிலரை,
விரைந்து தம்மத மாக்கிட வேற்றவர் புகுந்தார்...
கரைந்த தின்னகர் சனத்தொகை கருணையின் கழிவால்...

பிறந்த நன்மதம் பிழையெனப் பிறமதம் பிடித்தோர்
மறந்து தம்மவர் மடையரஞ் ஞானிகள் எனவே,
திறந்து கூறினர் ; பகையினைத் திட்டினர் ; வேதஞ்
சிறந்த வூரினர் சீர்கெடு நிலையிவை; சிவமே !

சிறிது ஞானமும் யோகமுந் தெரிந்தவர் தமையே,
இறைவ னென்றுல கேத்திட விளம்பரஞ் செய்தே,
பிறரைத் தாழ்த்தித்தம் அவதரப் பெருமையைப் பேசிப்
பறை யறைந்திடும் பக்தரைச் சேர்ப்பதிற் புகுந்தார்.

இதயந் தோறுநல் லொளிபெறும் அறிவதா யிருந்து,
பொது நடஞ்செயும் புனிதமெய்ப் பொருளினை யுணர்ந்தே
கதிபெற் றுய்ந்திடத் தியானமாம் வழியினைக் காட்டார் ;
பதியைத் தாமெனப் பாடுவார் பாமரர் பணிய !

ஒப்பி லாப்பரம் பொருளினை மறந்திட உலகம்,
பொய்ப்பு ரட்டுகள் புனைந்திடும் அடிமைக ளுடனே
கற்பி தம்பெறுங் கதைகளைக் கவிதைசெய் தெங்கும்
அற்பு தம்புரி அவதர மெனச்சிலர் அலைந்தார்.

கண்ணன் யாமிந்தக் கலியுக வரதன்யாம் என்றும்
விண்ணின் இன்பத்தை விளைத்திடும் விஷ்ணுயாம் என்றும்
பெண்ணி னத்தினைக் கோபிகா லீலையின் பெயரால்
கண்ணி வைத்திடும் காமுகக் கண்ணரும் பலரே.

குடியுங் கூத்தியும் கொலைகளும் திருட்டுடன் சூதும்
பொடி சுருட்டுடன் புகையிலைத் துப்பலும் பொழுதைக்
கொடிய வீண்செயும் வம்பரின் குப்பைவாய்க் குசும்பும்
தடியும் சண்டையும் வழக்குமே தடித்தன ஊரில்.

ஊர் திருந்திட மாந்தரின் வேற்றுமை யுள்ளம்
சீர் திருந்திடத் தூய்மையும் வாய்மையும் சிறக்க,
நேர் முறையினிற் பணிசெயுந் தேவதாஸ் நிமலன்
சோர்வுறத் துயர் செய்தனர் சுயநலச் செருக்கர்.

வீட்டுக் கோர்குரு, வீட்டுக்கோர் வியனுருத் தொழுகை,
வீட்டுக் கோர்மதம் வீட்டுக்கோர் வியன்பெறும் சாதி
பாட்டு டன்பறை யடித்திடும் பத்தரி னிடையே
போட்டி எத்தனை....போர்க்கள மானதப் புரியே.

இனைய தீமைகள் இறைவனை மறைத்திடும் ஊரில்,
புனை புராணமும் வேடமும் கபடமும் புகுந்தே
நினைவு டன்செயல் கெடுமொழி நிலையினைக் கண்டான்
அனைவ ரும்ஒரு குலமெனும் அன்பனுந் தூயன்.

அன்ன தூயனை யணுகியோர் அரட்டரின் கும்பல்,
என்ன சாதியெம் மதங்குலங் கோத்திர மென்னே ?
என்ன கோயிலில் எவ்வகை எவ்வுருத் தொழுவாய் ?
உன்னை உய்விக்கும் குருபெயர் உரையென மொய்த்தார்.

சுத்தன்

மனிதச் சாதியான். மனிதரின் குலம்; உலகெல்லாம்;
எனது கோயிலாம், இதயத்தில் இருப்பதென் இறையாம்,
மனதை வென்றவன் மமதையைக் கொன்றவன் குருவாம்.
புனித நெஞ்சுரை போதமே வேதமென் றறிவீர்.

ஊரார்

தேவ தாசனின் சரக்கெலாந் தெரிந்துகொண் டிங்கே
ஆவ லாகச்சீர் திருத்திடும் ஆசையோ டடைந்தீர்....
பூவெ லாம்புகழ் வைகுண்டப் பொருளினைக் காணு
யாவர் நீரெனப் பையினை அழுத்தினர் இழுத்தே.

சுத்தன்

உலக வீட்டினில் உயிர்களை உடலெனத் தாங்கி
அலகி லாவினை யாடல்செய் ஆண்டவன் சக்தி
அலது வேறொரு கோயிலுங் கடவுளும் அறியேன்—
பலபெ யர்வடி வொருமையின் பன்மையென் றுரைத்தான். 140

தூய னிவ்வகை சொல்லலும் துணுக்கெனச் சிரித்தே,
மாய வார்த்தைகள் பேசினீர் வைகுண்ட மணியின்
தூய காலடித் தூசியுந் தலையிலே தூவின்
நாய ராகுவீர் எனவிரைந் திழுத்துடன் நடந்தார்.

வெண்ண கைபுரி தேவனை விழிக்குறி காட்டி,
உண்மை கண்டிட ஓடினுன் உலகறி யறிஞன்
கண்ம யக்கிடுங் காட்சிகள் கவின்பெற நிலவும்
பெண்ம யத்திரு மாளிகைப் பெருமையைக் கண்டான்.

மலர்கொய் வார்சிலர் வைகுண்ட மாலைகள் புனைவார்.
புலவர் போற்றும்வை குண்ட புராணத்தைப் பொழிவார்
பலர்நி வேதங்கள் வருவழி பார்த்துக் கண் பூத்தே
இலகு "வைகுண்டா உன்னருள் வாழி" யென் றிசைப்பார்.

பைகண்டே உப சரித்திடும் பக்குவம் அறிந்தே,
கைகண்டார் சிலர், கல்மனங் கரைந்துடன் உருக
வைகுண்டர் அவ தாரத்தின் மகிமையை அளப்பார்.
மெய்கண்டா னிந்த வெளிச்சத்திற் கப்புறம் விரைந்தான்.

வைகுண்ட புராணம்

இந்தி ராதியர் போற்றிடும் எமதுவை குண்டன்,
மந்தி ராதிநன் மறைகளுக் கெட்டிடா வரனும்
தந்தி ராதிநல் யோகங்கள் சாதனஞ் செய்தும்
வந்தி டாதவன் அருளடி புகுந்திடின் வருமே !

மூன்று லோகமும் ஆண்டிடும் எம்பெரு முதல்வன்,
மூன்று தேவரின் மூத்தவன் ; மூதுல கெல்லாம்
ஆன்ற மோட்சத்தை அடையவே அவதரித் துள்ளான் ;
ஊன்று மின்அவன் பாதுகைத் தூசிமேல் உளமே.

உள்ள தானத்தில் ஊன்றியே யோகநித் திரைசெய்,
வள்ளல் அன்னவன் வையகம் எங்குமே உள்ளான் ;
கள்ள மற்றநல் லன்புடன் காணிக்கை யாக
உள்ள யாவையும் உதவிடின் உயர்பதம் உறுமே.

கேளும் எங்களை யாண்டவன் கீர்த்தியை ; வையம்
ஆளு நாயகன் பிறந்ததும், ஆறடி நீண்டான்.
காளி, லட்சுமி, கலைமகள், கவுரியார் அந்த
நாளிலே முலைப் பாலினை நல்கினர் நயந்தே.

நான்கு வேதமு நவின்றனன் மூன்றரை வயதில் ;
தேன் குயிலெனப் பாடினன் தேவரும் திகைக்க—
பூங் குழலினை யூதியெம் புண்ணிய முதல்வன்,
ஊன் குலாவிடும் உயிர்களை அடிமைகொண் டுவந்தான்.

தேவரிற் சிலர் திருவுடை வைகுண்ட மணிபால்,
மேவு தீயபொ ருமையாற் சேட்டைகள் விளைத்தார்.
யாவ ரும்பிடி சாம்பலாய் எரிந்திட வியற்றிப்
பூவ ளர்த்தனன் இவ்விடம் புண்ணிய மூர்த்தி.

தெய்வ மில்லையென் றேசிய சிற்றற சொருவன்
ஐயநீங்கிடத் தன்னையே அரியெனக் காட்டி
மெய்வி ளக்கிய குருவரன் விஷ்ணுவே யென்று
வைய கத்தினர் அறிகுவர் மாசிலா மனதால்.

வெற்று நீரினால் ஊரெலாம் விளக்கொளி யெரிப்பார்,
பற்றுக் கொண்டநன் மலடிக்கும் பதின்மகர் அளிப்பார்,
கற்றுக் கொள்ளுதல் இன்றியே கல்வியைத் தருவார் ;
மற்று மின்னவர் அதிசயம் வழுத்திடப் போமோ ?

பண்ணு டன்புகழ் பாடுவார் பரிவினைப் படைப்பார்.
எண்ணரும் பண மீந்தவர் இகபரம் பெறுவார் ;
மண்ணி லிந்திர போகங்கள் வாய்ந்தனு பவிப்பார்,
தண்ண டியினிற் பொருளுடன் சரண்புகுந் தவரே !

கோபம் வந்திடிற் குபேரனுங் குடிகஞ்சிக் கலையச்
சாபம் வைத்திட வல்லவர், தாள்பணிந் தோரின்
பாபம் யாவையும் பாதத்தின் தூசியால் விலக்கித்
தீபம் போலுடன் புண்ணியந் திகழுறச் செய்வார்.

பத்தி செய்திடும் அடியவர் பயத்தினைப் பறிப்பார்,
செத்தவர் தமை எழுப்புவார் ; செகத்தினில் இவரே
சித்த ரென்றறிந் தேத்திய சீர்மிகு புலவர்
புத்த கங்களை வைத்திடப் போதுமோ உலகே !

அன்பு கொண்டெங்கள் அரும்பெரும் வைகுண்ட மணியை
நம்புங் கோளெனும் அடியவர் நவின்றதைக் கேட்டே,
தென்பு றத்தினிற் பார்த்தனன் சுத்தனுஞ் சிறிதே ;
பொன்பொ லிந்தது, பொலிந்ததோர் புருடனின் உருவே !

"கருணை பூண்டுனைக் காத்திட வந்தனன் ; எங்கள்
குருமணி" யெனச் சீடர்கள் கும்பிடச் சொன்னார்....
"வருக வைகுண்ட மாமணி வரந்தரும் பெருமான்
வருக" வென்றனர் அடியவர் மலரடி பணிந்தே !

கொம்மை நேர்முலை மாதர்கள் கோபிமா ராகி,
எம்மை யாளுடை இமையவர்க் கிறைவன்வாழ் கெனவே
கும்மி தட்டினர் கோலடித் தாடினர் குதித்தார் ;
தம்மை யுள்ளுறக் கண்ணனே தழுவினான் என்றார்.

பூக்கள் தூவினர் ; மாலைகள் புனைந்தலங் கரித்தார்,
பாக்கள் சூட்டினர் ; பயபக்தி யுடன்பணிந் தெழுந்தார்,
கூக்கு ரல்களை முடித்தபின், குருபரன் மதுர
வாக்கி னாலவர் அமரராய் வாழவாய் மலர்ந்தான்.

"அறந்தவிர்ந் துல கதர்மத்தால் வருந்திடக் கண்டே
இறங்கி வந்தனம் ; அன்பர்காள் எமையறிந் துய்ந்தீர்.
மறங்கிளர் அசு ரர்களை வதைத்துநம் ஆட்சி
பிறங்க நாட்டுவோம் பேசறக் காணுவீர்" என்றான்...

யாவு முன்செயல் ஐய;நின் னிச்சையின் அடியார்
ஏவுங் காரியம் செய்குவோம் அடிமைகள் என்றும் ;
தேவ தேவனே திருவுற வாழ்கெனச் செப்பி,
ஆவ லாய்வட திசையினிற் பார்த்தன ராங்கே...

நெய் மணந்திடும் வகைவகை நிவேதனம் வந்து,
தெய்வ சத்குரு திருக்கையால் உண்டதும், உருட்டி
தை யிலையினி லன்பர்க்குத் தந்தனர் அடியார்,
துய்யனும் அதைத் துய்த்தனன் சுடுபசி யறவே !

உண்டதும் பலர் மின்னென மறைந்தனர் உடனே ;
தண்ட னிட்டனர் காணிக்கை தந்தடிச் செல்வர்,
கண்ட சுத்தனுங் கருத்துறக் கனித்தெல்லாம் அறிந்தே,
தொண்ட னுக்கொரு மனக்குறை துடைத்தருள் கென்றான் !

வைகுண்டர்

மூன்று வாரங்கள் நாளுக்கோர் ஆயிர முறையே,
ஊன்று நெஞ்சுடன் எம்மடி பணிந்திடின், உடனே
தோன்று முங்குறை நீங்கிடுந் துணிவெனச் சொன்னார் ;
ஆன்ற வேதத்தில் ஆதரங் கேட்டனன் சுத்தன் !

சீடர்

யாரும் இப்படி எங்குரு நாதனைக் கேளார் ;
பாரு ளோர்களின் படிப்பவர் படித்தது மில்லை.
ஓர்பரம் பொரு ளேயுரு வாகிய உருவன்
பேரறி வின்முன் வேதமும் பேசிடப் பெறுமோ ?

சரண் புகுந்தவர் சாற்றிய பணிசெய லொன்றே
மரண முந்தவிர் வழியென மாணவர் இயம்ப,
கரண சுத்தனுங் கைகுவித் "தன்புள பெரியோய்
மரண மின்றி யெம் மானிடர் வாழ்ந்தனர் ?" என்றான் !

சுத்தன்

தாய் வயிற்றினிற் பிறந்தவர், வாழ்ந்தபின், சாவின்
வாயினிற் புக வையக மெங்குகே கண்டோம்.
நோய் நுடக்கற வாழ்வகை நுவன்றிட வல்லோம்,
மாய்வறும் வகை மானிட வியல்பினி லறியோம்...

ஒப்பு யர்வறும் ஒருமயக் கடவுளே நிலையாம்,
அப்ப ரம்பொருட் கிணைசொலும் அரும்பொருள் என்றும்,
இப் புவியிலும் விண்ணிலும் இல்லவே யில்லை ;
தப்பு நீருமை யிறையெனச் சாற்றுதல் என்றான் !

வேண்டு மோரருட் குருபரன் விசனப்பொய் மனத்தைத்
தாண்டி நிட்டையிற் சச்சிதா னந்தத்தைக் காணத்
தூண்டு மெய்வழித் துணையவன் அல்லது தானே
ஆண்ட வன்எனும் செருக்குறல் அடாத தீதாமே !

முத்தொ ழில்புரி முதல்வனுக் குலகினி லிணையோ
செத்தொ ழிந்திடுஞ் சென்மங்கள் சிற்சக்தி யிறைவன் ;
பத்த ருக்கவன் அருள்பெறச் சாதனம் பகர்வோன்
உத்த மக்குரு ; பணிவினால் உயர்ந்தவன் அவனே.

என்று ரைத்ததுஞ் சீடர்கள் எரிந்துவீழ்ந் தவன்மேல்,
உன்றன் வாய்த்துடுக் குயிரையே வாங்கிடும் உடனே,
வன்ற வக்குரு மலரடி வணங்கிஞல் உய்வாய் ;
என்று கூறிஞர் சுத்தனும் இறைவனை நினைந்தான்...

ஊனு டலினை வணங்கலின், உள்ளத்தின் உள்ளே
நானெ னும்பரம் பொருளினை நலிவற நினைந்து,
மோன மாகத் தியானஞ்செய் முறையொன்றே தூய
ஞான மாமென நவின்றனன் பயின்றநன் ஞுவான் !

வேத சாத்திர விதியுமிவ் வாறென் விளம்பத்
தீதருள் சினப் பார்வையைத் திருப்பிவை குண்டன்,
வாத சாத்திரி தனைவர வழைத்திவன் வாயைப்
போதி யாதினி யடக்கெனச் சடக்கெனப் போனுன் !

சந்தை சொல்லிநால் வேதமுஞ் சாத்திரக் கலையும்,
சிந்தை யிற்படிந் திடலற வாயுருச் செய்தோன்,
எந்தக் கட்டத்தின் அடியினை யியம்பினு நுனியை
வந்து தொட்டிடுஞ் சமர்த்தனும் வாதசாத் திரியே !

எட்டு மட்டுந்தன் குரலினை யெழுப்பியே, யெதிரி
குட்டுப் பட்டிடக் குடுகுடுப் பாண்டியி னடையிற்
கொட்டு வான்உப நிடதத்தைக் குறிதவ றிடினே
திட்டு வான்அவன் செருக்குரை கண்டவர் திகைப்பார்.... 280

இன்ன வாதியை அறிஞர்முன் எதிர்த்திடத் தூயன்
முன்னின் றுனிதைக் கேட்டனன் முதுபெருந் தாஸன்,
இன்ன ரேயென துளங்குளிர் இன்பநாள் என்றுன்....
பின்னும் பற்பல கட்சிகள் பேசின னன்றே !

இட்ட நாளினில் இந்நகர் மாசன மெல்லாம்
பட்டி மண்டபம் கூடினர் ; தருக்கத்தைப் பார்க்க ;
நெட்டை வாதியு நிமலனு மேடைமேல் வரவே
கொட்டி னுர்கரந் தொடங்குக குதர்க்கமென் றுர்த்தார் !

வாதி

வேத மாகமம் விதிப்படி பன்னிரண் டாண்டும்
ஓதி ஆரிய கேசரி யெனும்புக ழுடையேன்....
ஆதி நாரணன் அவதரித் தெம்மையாண் டிடவே
சோதி வைகுண்ட மணியெனத் துலங்கினுன் என்பேன்...

சுத்தன்

ஒருவ னாகிய பரம்பரன் ஒப்பிலாக் கடவுள்,
அருவ னுருவன் பிறப்பிறப் பற்றவன் அவனே,
இருவி னைதரும் இப்புவி தனிற்பிறந் திறத்தல்,
அருவ றுத்திடும் கருமமென் றருமறை சொலுமே.

வாதி

பிறக்க வில்லையெங் குருபரன் பிறர்களைப் போலே ;
துறக்கந் தேவர்கள் போற்றிடத் தொப்பெனக் குதித்தே ;
இறக்கு மண்ணுயிர்க் கிரங்கியே வந்தனன் அவனே ;
திறக்கு நெஞ்சினில் அறிவெனுந் தினகரன் அவனே !

தொப்பெ னக்குதித் தாரெனுஞ் சொல்லினைக் கேட்டுப்
பப்பெனச் சிரித் தார்புதுப் பகுத்தறி வாளர் !
இப்பொ ழுதுமுன் குருபரன் வானத்தி லேறித்
தொப்பெ னக்குதித் தாலுடன் தொழுவமென் றுரே.

முதுமை தந்திடு நரைதிரை முழுமையு முடையான்,
நிதமு மாதரை நினைத்தவா றனுபவித் திடுவான்.
மதுவுண் பானவன் மறலியை வென்றவன் என்னல்,
பொது சனங்களை யேய்த்திடும் புளுகினிற் புளுகாம்...

நன்று நன்றெனச் சபையினர் நவின்றுகை தட்டக்
"கொன்று போடுவேன்; வேதத்தைக்கொட்டிநான்அளப்பேன்"
என்று வாதியும் அடைமழை யெனமறை பொழிந்தான்..
ஒன்றிற் கும்உரை கேட்பவர்க் கோதிடான் அவனே !

தோற்ற னையெனத் தேவதா சுடன்பலர் துணிந்து
சாற்ற வாதியுஞ் சாற்றுநீ வேதத்தின் சாரம் ;
ஏற்றுக் கொள்ளுவோம் எங்குரு பரனரு ளிருந்தால் ;
ஆற்ற லுண்டெனில் அனைவரும் காணுவோம் என்றன்...

குருவை குண்டனுங் குலவியாங் கிருந்திடச் செய்து,
திரும றைதருந் திவ்விய வாழ்க்கையும், அதனை
அருளின் வந்தநல் லறிஞர்கள் ஆதரித் தமையும்,
உருகி நல்லவர் கேட்டிட உரைத்தனன் சுத்தன்....

அத்தகும் உரை கேட்டவர் அனைவரும் உணர்ந்தே
சுத்த னேகுரு பரனெனத் துதித்தனர் ஆங்கே...
பத்து நாட்களிற் பகர்ந்தநம் பண்பனின் உரையை
மெத்தவுந் தெளி வாகநாம் விளம்பிடு வோமே !

17. வேதசாரப் படலம்

சுத்த சமரஸ சுதந்தர மான
சின்மயந் தன்னைத் தியானம் செய்வோம் !
ஓம்எனும் அதனை ஓதிடும் வேதம்
ஒன்றே பரம்பொருள் ஒன்றே உண்மை,
ஒன்றே ஆன்மா, ஒன்றே அறவழி,
ஒன்றை நன்றாய் ஊன்றி யறிதலே,
அறிவெனச் சொல்லும் அவ்வே தத்தின்
சாகைக ளெல்லாம் சத்திய விளக்கமாம்.
தெள்ளிய ரிஷிகள் உள்ளனு பவத்தால்,
அருளின் வாக்கால் ஆர்த்ததே வேதம்...
மனந்தரு தடைகளை மாசற வென்று
மானிடச் சீவன் மாறிப் பொலிந்து,
தேவ ஜீவனம் மேவிச் சிறத்தலே,
நரவாழ் வமர ஞானவாழ் வெய்தலே,
வேதப் பொருளென விளம்புத லாமே.
வேதத் தில்வரும் தேவர்க ளெல்லாம்
பரம்பொரு ளொன்றின் பலவகைக் குணமாம்.
அதிதி என்பது அமரசிற் சக்தி,
அக்கினி சேதன சக்திக் கனலாம்,
அழகும் இளமையும் அர்யமா னாகும்.
ஒள்ளிய ஜீவரே ஓங்கிய தேவர்.
உண்மை யொளியே வெண்பசு வாகும்,
இருளற ஒளிபெறல் இயற்றும் வேள்வியாம்.
வீறுபெற் றொளிரும் விவேகமே இந்திரன்.
அன்பே மித்திரன். அறிவே சூரியன்,
இன்பமே சுபஸ்பதி, இன்னுயிர் வாயு,
இந்த வாறே எல்லாப் பெயர்களும்,
கடவுட் பெருமையைக் காட்டுவ தாமே.
இந்தத் தெய்வக் குணங்களை யெதிர்க்கும்
வஞ்சம் பொறாமை, வலிய செருக்கு,
எனதுன தென்னும் இருளிறு மாப்பு,
பஞ்சமா பாதகம்—பாணிசு, தஸ்யு,
விருத்திரன் வாளன் வெய்ய நமுசி
முதலிய அரக்கராய் மோதுங் குணங்களாம்.
உருத்திர சிவனே உயர்த்தும் கனலாம்.
தேவசே னாதிபன் செவ்வேள் கந்தன்.
பரந்தசுத் தான்மா பரம்பொரு ளெல்லாம்.

அதனருள் வாக்கே ஆசான், பிரகஸ்பதி...
அமரக் குணங்கள் அசுரக் குணங்களை,
எதிர்த்து வென்றுமே லேறிச் சென்று
சச்சிதா னந்த சத்திய சித்தி
பெறலே வேதம் பேசிடும் போராம்.
ஏழ் ஆதாரமாம் ஏழுல கங்களைப்
படிப்படி யாகப் பதமுறக் கடந்து
பூபுவர் ஸ்வர்மஹர் ஜனதவ ஸத்தெனும்
ஏழ்நிலை தாண்டி இருளை வென்று,
அசுரக் குணங்களை அஞ்ஞானத் தடிப்பை
அகம்பா வத்தை அறவே, தொலைத்து,
திவ்விய வாழ்வைச் சேர்தலே வேதம்—
விளக்கும் வேள்வியின் விரிபொரு ளாமே...
மனிதன் தெய்வப் புனிதனா கிடவே
வேத ரிஷிகள் விதவித சாதனம்
வாழ்வுடன் அமைய வகுத்தனர் கேளீர்:
பிரம சரியம் பேணிக் கற்றல்,
மாதுடன் கூடி மனையறங் காத்தல்,
மக்கள் வளர்ந்தபின் மனையின் பொறுப்பை
அவரிடம் விடுத்தே அருந்தவங் காத்தல்,
இறுதியில் அனைத்தையும் துறந்த துறவியாய்,
சுத்த யோகமும் சுயநல மற்ற
பொதுநலச் சேவையும் புரிதலே கடனாம்.
அறிவும் ஆற்றலும் பொறிபுல னடக்கமும்,
கலையுந் தொழிலும், கருத்துயர் கொள்கையும்,
வீரமும் தீரமும் வென்றுல காளும்
சக்தியும் தெய்வ பக்தியும் பொலியும்
பிரம சரியமே இருபா லார்க்கும்
வாழ்வின் வேராம் ; மனையறங் கிளையாம்.
பதினாறு முதலிரு பத்துநான் காண்டு
வரையில் மாதர் மணம்புரி வயதாம்.
இருபத் தைந்தை எட்டிய பின்னும்
நாற்பத் தாறு நடக்கு மட்டும்,
அறிவை வளர்த்தே ஆண்கள் மணக்கலாம்.
பொருத்த மான புலமையும் குணமும்
வயதும் மனமும் வடிவும் பலமும்
விருப்பமும் தெரிந்தே விவாகம் நிகழ்கவே.
ஆண்பெண் குடித்தனம் அகிலவாழ் வாகும்.
பேரறி வோங்கலே பிரம வேள்வியாம்.

பெற்றவர்ப் பேணலே பிதுர்வேள் வியதாம்.
தெய்வக் கனலைத் தியானயோ கத்தால்
சீர்பெற வளர்த்தலே தேவ வேள்வியாம்.
பூவுயிர்த் தொண்டே பூத வேள்வியாம்.
மானிடர் பணியே மனித வேள்வியாம்.
இவ்வைந்து வேள்வியும் இல்லறக் கடனும்.
உலக வாழ்வின் உயர்பய னெய்த,
வீடும் நாடும் பீடுற வேண்டி,
சுதந்தர வீறு துலங்கிட வேண்டி,
அச்சமும் அடிமையும் துச்ச நினைவும்,
ஒழிந்து, நம்புகழ் ஓங்கிட வேண்டி,
அறிவும் இன்பமும் செறிந்திட வேண்டி,
குணகர் மங்களைக் குறிக்கும் நான்கு
வகையாய் மாந்தர் வாழ்வதே வருணம்.
சாதி மதத்தின் சாயமும் அன்று;
தாழ்வுயர் வென்னுந் தனிச்செருக் கன்று,
பிறவி யன்று ; பெருமையாம் அறிவே;
அவரவர் குணமே அதனை வகுக்கும்...
தவமுங் கல்வியும் சத்திய ஒழுக்கமும்,
சுத்தமும் அந்தணர் மெத்தவும் உடையார்.
வீர தீரமும், ஆருல காட்சியும்,
போர்வலிப் பெருக்கும், பொதுநலத் திண்மையும்,
தியாகமும் போகமும் ஈகையும் கல்வியும்,
க்ஷத்ரியர் போற்றுந் தன்மைக ளாகும்.
பலவகைத் தொழிலும் பயிர்பசுக் காத்தலும்
வணிகமும் ஈகையும் வைசியர் சிறப்பாம்.
ஊருக் குழைத்தலே உயிர்க்கட னாகக்
கொண்டவர் நான்காய்க் குறித்த வருணமாம்.
அவரவர் அறிவின் அளவே வருணம்....
எவருந் தாழ்விலை ; இன்றைப் பார்ப்பான்,
ஒழுக்கம் வழுவின் ஒருபடி யிறங்குவான்.
அந்தணன் மகனே அந்தண னில்லை
அந்தண் மையனே அந்தண னுவான்.
சாதிக் கொடுமை, வீதிக் கொடுமை,
தீண்டாக் கொடுமை வேண்டா தறமே.
தன்னுயிர் போலே மன்னுயிர் ஒன்றே,
எல்லாம் ஒருமயம் என்பது வேதம்.
அறம்பொரு ளின்பம் அருளுடன் கூடி
நூறுண்டு வாழும் பேறுண்டு முடிவில்

இறைவனை யடைகென் றியம்பிடும் வேதம்.
அறச்சபை, அறிஞர் அவை,அர சவையுடன்
அறிவும் வீரமும், ஐக்கிய பலமும்,
செல்வத் தொழிலும் சேனையும் வெற்றியும்
செழிக்க நாட்டைச் சீர்பெறப் புரந்து,
பகைவரை ஒழித்துப் பழுதறு நீதியை
நாட்டிச் சிறத்தலே நாட்டார் கடமையாம்.
பிறத்தல், கற்றல், பெண்கொளல், இல்லறம்,
பெரியார் திருநாள், அரிய துறவறம்
இவைவரும் நாட்களை இறைவழி பாட்டுடன்
ஹவனம் செய்தும், அறங்கள் செய்தும்,
கொண்டா டும்பணி குலத்தினர்க் கழகாம்.
ஆண்பெண் சரிநிகர் அனைத்திலும் ஆவார்.
ஒருவர் இறந்தால் உளம்பத றுமல்,
மகப்பே றற்றார் மறுமணம் புரியலாம்.
விதவன் விதவையை விதவை விதவனை
நன்முறை கூடி நான்மகார்ப் பெறலாம்.
விபசா ரத்தை விலக்கிட வேண்டும்.
வேசி யென்பதே வேதத்தி லில்லை.
ஆசை தீரும் ஐம்பது வயதில்
வானப் பிரத்தம் வகையுறக் காக்கலாம்.
நன்னூற் பயிற்சி நல்லறி வளித்தல்,
பொதுநலம் புரிதல், பொய்யா ஒழுக்கம்,
தவசர் தனங்கள் இவருக் கேற்றதாம்.
எழுபத் தைந்தை எட்டிய பிறகு
பற்றெலாந் துறந்து பழுத்த ஞானியாய்,
முற்றுஞ் சுயநலம் அற்றுல கிற்கு
வேத ஞானம் போதித் தவரவர்
பக்குவங் கண்டு தக்க சாதனம்
சொல்லி யனைவரும் சுகம்பெறுந் தொண்டுகள்
செய்யுந் துறவியே மெய்யுணர் துறவியாம்.
மானிடர் அனைவரும், ஞானச் சுடராம்
கடவுள் ஒருவனைக் காலை மாலை
தெள்ளிய உள்ளமாந் திருக்கோ யிலிலே
தியானஞ் செய்தலே சிறந்த பூஜையாம்.
நேரே இறைவனை நெஞ்சிலே நினைமின்....
எல்லா ருள்ளும் இறைவன் இருக்கிறான்.
உயிர்க்குயி ரான ஒருவன், அருவன்,
இரண்டிலா முதல்வன் இதயசுத் தான்மன்

ஆருயிர்த் தொகுதியே அருளுட லானுன்—
அவனுக் கிணையாய் ஆருண் டுலகில் ?
கட்டையுங் கல்லும் களிம்புறு செம்பும்,
கொண்டுளி யாலே கொத்தி யமைத்த
உருவெலாம் மானிடர் உதவிய கற்பனே. 1
அவற்றைச் சுற்றிச் சுவற்றை எழுப்பி
எனது சாமி எனதே கோயில்,
எனதே சமயம் எனதே மோட்சம்
எனக்கே தட்சிணை என்னும் தரகர்
இனியிவ் வுலகில் இடம்பெற மாட்டார்.
எங்கும் நிறைந்த துங்கக் கடவுள்
அவரவ ருள்ளிருந் தனேத்தும் செய்வார்.
நம்மை யறிந்து நன்மை யளிப்பார்.
இருவினேப் பயன்களே இன்ப துன்பமாம்.
சீரிய சிந்தையும் செய்ய ஒழுக்கமும்
அறமும் பொருளும் ஆண்மையும் அறிவும்
வளர்த்தவர் வாழ்க்கை தளிர்த்திசை கனியும்.
உடுக்குங் குறியும் உளங்கை ரேகையும்,
சோதிடக் கூத்தும் சுயநலக் கூத்தே.
ஆடுமா டுகளே அதஞ்செயும் வேள்வியும்,
காளி மூளி கறுப்ப னென்றே
உருவைக் காட்டி உயிர்ப்பலி யிடுதலும்,
படுகொலேப் பாவம் விடுமினித் தீமையை !
ஈசனே யடையப் பூசாரி யில்லே.
மனத்திரை விலகிஞல் அனேத்துளும் இறைவன். 18
சித்த சுத்தியும் தியான சித்தியும்
சாதன உறுதியும் சக்தியும் பெருக
சந்தியும் ஜபமும் மந்திரத் தாலே
பொருளறிந் தாற்றிடப் பொலிவுறும் வாழ்வே!

சந்தி ஓம மந்திர சாரம்

ஓம்புவி அந்தரம் ஓம்விண் மஹஜன,
ஓம்தப ஸத்ய உலகெலாம் பரவிய
சச்சிதா னந்தா, சர்வாத்ம நாதா,
எல்லாம் வல்ல இறைவா போற்றி !
சூரிய னுள்வளர் ஜோதியே போற்றி,
உயிர்க்குயி ரான உயிரே போற்றி,
நலந்தரு மங்கள நாயகா போற்றி,
விண்புவிக் கெல்லாம் வேந்தே போற்றி,

வணங்கத் தக்க வாய்மையே போற்றி,
உள்ளிடங் கொண்ட ஒப்பிலா ஒருவா,
அன்பும் ஆர்வமும் அடக்கமும் உறுதியுங்
கொண்டு மனதுட் குவிந்துனை நினைந்தோம்
அருளால் அறிவைத் திருவுறத் தூண்டி
பேரின்ப சித்தி பெருக நடத்துவாய் ;
மடவிருள் போக்குஞ் சுடரொளி யாவாய்,
பொய்தவிர் சத்திய போகமே யாவாய்,
இருளற ஒளிக்கொளி எம்மை நடத்தாய்:
பொய்யற வாய்மைப் பொருளை யுணர்த்தாய்.
தாமத மொழியச் சத்துவ மீவாய்,
சாவறு ஞானத் தண்ணமு தாவாய்.
மானிடம் அமர வாழ்வுறச் செய்வாய்,
சுத்தா சர்வ சுதந்தரா போற்றி,
பாபம் போக்கிப் பரிசுத்த மருளாய்,
கிழக்குந் தெற்கும் வடக்கும் மேற்கும்,
மேலுங் கீழும் மேவிய பரமா,
சக்தி மயனே, சாந்த ஜோதியே,
எல்லாத் திசையிலும் எல்லா நிலையிலும்,
உளங்கொண் டுன்னை உபாசிக் கின்றேம்,
சுகநா யகனே சுபதா யகனே
சிவன்அரி அயன்குரு தேவேந் திரனெனப்
பலபெயர் கொண்ட பகவனே போற்றி !
சர்வமுந் தானும் சமத்துவக் கடவுளே,
எங்கள் வாழ்வுன் இச்சையா லியங்கி,
மனமொழி மெய்யில் மாசிலா தொழுகி,
நலமே நினைந்து நலமே பேசி
நலமே செய்து நற்கதி யடைந்து,
விஞ்ஞா னத்தவ வேள்வியாய் வளர்ந்து,
நாலாச் சிரம நன்மையும் பெற்று,
அறம்பொ ருளின்பம் அருட்கலப் பென்னும்
பேறுக ளெல்லாம் பெரிதும் அடைந்து,
துன்மார்க்க மற்ற சன்மார்க்க மாகி,
நோய்துய ரற்ற தூய பலத்துடன்,
பகைசினம் பொறாமைப் படைகளை வீழ்த்தித்
தீர சக்தியாற் செயமே ஓங்கிப்
புகழ்பெற வாழ்ந்துன் புண்ணியம் போற்றி,
உன்னொளி கலந்து தன்மய மாகி
சச்சிதா னந்தந் தழைத்திட வருளாய் !

உனது தியானமே உயிர்ப்பா குகவே,
உனது துதியே உரையா குகவே,
உனது சேவையே உழைப்பா குகவே !
பொறிபுலன் கரணம் அறிவாம் ஆன்மா,
ஆகிய தத்துவம் அனைத்துமுன் அருளால்,
தூய இன்பந் துலங்கிடச் செய்வாய்.
நலந்தருங் கனலே ஞாயிறே போற்றி.
உன்னரு ளாலே உலகெலாம் வாழ்க !
எல்லா உயிர்களும் இன்புற் றொளிர்க.
ஒருவரை யொருவர் திருடுத லின்றி
உண்மய மான உலகினர் என்றும்,
தொழில்செய் தீந்துண் டெழில்பெற வாழ்கவே.
தியாகமும் போகமும் யோகமும் வளர்க.
ஞானமுஞ் செல்வமும் தானமுந் தவமும்,
நீண்டநல் ஆயுளும் நிறைவாம் இன்பமும்,
அருள்வாய் ஓம்பரம் பொருளே வணக்கம் !
சேதனக் கனலே, திவ்வியச் சுடரே,
ஞான சக்தியே, நலந்தருங் கொழுந்தே,
ஆருயிர் உனக்கே ஆகுதி யாகுக !
ஓம்சுத்த சக்தி, ஓம்பர மாத்ம ஓம்

* * *

இந்தமந் திரமே சந்தி ஜபமாம்,
ஹவனத் திற்கும் அமைவது மாமே !
வேதமந் திரங்களின் விழுமிய சாரம்
இவையெனக் கொண்டு தவறு தியற்றுக.
ஒருமையும் அன்பும் உளங்குவிந் தியற்றும்
தியானமே பூஜை, தியானமே வேள்வியாம்.
ஆர்த்த வேதமும் கீர்த்தனுஞ் ஜலியும்
வசையறு மனதுடன் இசைத்தல் இனிதே.
என்மதம் சாதி எனும்பிரி வின்றி,
எல்லா உலகும் எல்லா உயிரும்
எல்லா ருளமும் ஏகமாய் நிறைந்த
உயர்பொருள் ஒன்றையே உள்ளார்ந் துணர்மின்.
அதைக்கலந் திருத்தலே அருந்தவ யோகமாம்—
வாழ்வெலாம் கடவுள் வேள்வியாம் யோகம்....
இதுதத் துவமே இதுசத் தியமே !

வேத முனிவர்

வேத புரியின் வித்தக நல்லீர்,
ஒற்றுமை யாக ஒருகுல நேயராய்,

வாழ்வீர் உம்மை வாழ்வித் திடவே,
வந்த மகான்களைச் சிந்தை செய்வீர்.
தற்புக ழின்றிச் சாந்த சீலராய்,
யோக தீரராய் உத்தம ரிஷிகள்
உள்ளுணர் உண்மையை உரைத்துச் சென்றனர்.
பராசர வியாசர், பாரதம் எழுதிய
மஹாகவி முனிவர், வரம்பிலா வேதச்
சுருதியை நான்கு மறைகளாய் வகுத்து,
வழிவழி சீடரால் வழங்கச் செய்தபின்
உபநிட தங்களை உருவாய் வகுத்தார்.
வேதோப நிஷத்தின் விரிந்த பொருளைப்
பிரமசூத் திரமாய்ப் பின்னும் வகுத்தார்.
"இதயப் பொருளாம் இன்பமே நீஅதைத்
தியான சமாதியால் மோனமாய்க் கலந்தால்,
உள்ளும் புறமும் உலகும் அதுவே."
என்பதே அந்நூல் இயம்பும் பொருளாம்.
வியாசருக் கப்புறம் வேற்றுமை படர்ந்து,
வேதக் கலைகள் சேத மாகவே.
சத்திய முரைக்கச் சங்கரர் வந்தார்.
சிவகுரு மைந்தராந் தவமிகு சங்கரர்,
கோவிந்த பாத குருவிடம் பயின்று
காசியி லிருந்து பாஷிய மெழுதி,
பகவத் கீதை பத்துப நிடதம்,
பிரம சூத்திரம் அருமறை ஞானம்
சொல்லும் விவேக சூடா மணியுடன்,
பஞ்ச தசி,பல பத்திப் பாடல்,
எல்லாம் இயற்றி எதிர்ப்பார் பலரை
வாதில் வீழ்த்தி, மடம்பல கண்டார்.
தக்க சீடரைப் பக்குவ மாக்கி,
தத்துவ மஸியெனும் அத்வை தத்தை,
நாடெலாம் பரப்பி ஞான ஜோதியாய்
விளங்கிய சங்கரர் வேததர் மத்தின்
அருவியால் வளர்த்தார் அறப்பயி ரெங்குமே!
சங்கரர் சுத்த சத்தியச் சுடரே.
அவருக் குப்பின் அஹம்பிர மம்எனப்
பக்குவ மில்லாப் பண்டிதர் எழுந்து,
வாய்வே தாந்த வாதமே பேசிப்
பதியை மறந்தார்....பக்தியைத் தூண்டவே
காக்குங் கடவுட் காதலில் ஆழ்ந்தே

உள்ளும் புறமும் ஒருவனைக் கலந்த
பரம சுகத்தைப் பாசுரம் பாடிய
பாணர் கோதை பராங்குசர் ஆகிய
ஆழ்வா ராதியர், அன்பே வடிவாம்
உடையவர் தேசிகர் உலோகா சாரியார்
மத்வசை தன்யர், மகான்கபீர் துகாராம்
ஆகிய பெரியார் அன்பொளி பரப்பி
அடைக்கல வழியை அருளிச் சென்றார்.....
கம்பனுந் துளஸியும் கவிதைசெய் தாரே.
ஆடிப் பாடி ஹரிஓம் எனவே,
கூவிக் கோயிலிற் கும்பிடு போடும்
காரிய மன்றிக் கருமயோ கத்தைத்
துறந்து நாட்டினர் துர்ப்பல ரானார்.

தயானந்தர்

கேலிக் கிடமாம் போலித் துறவும்
மோட்ச வணிகமும், மோசடி பலவும்,
கண்ணன் பெயரால் கார்முக ராமன்
பெயரால் எத்தர் பிழைக்கும் வஞ்சமும்,
நாடெலாம் பரவிய மூடமா மூலும்,
பொருளறி யாத புரோகிதச் சடங்கும்,
அருளறி யாத ஆடம் பரங்களும்,
பொம்மைத் தொழுகையும் புராணக் கதைகளும்
மலிந்து தேசம் மெலிந்திடக் கண்டு
வேதமார்க் கத்தை விளக்கவே வந்த
முனிதயா னந்தர் தனிச்சிறப் பறிமினே !
சிவபக் தியுடன் சிவராத் திரியில்,
கண்விழித் திருந்து, கல்லுரு வான
இலிங்கத் தின்மேல் எலிவிளை யாட்டைக்
கண்டிது கல்லென விண்டுருத் தொழுகை
பொய்யென உணர்ந்து பொருளிலாப் பூசையை
உதறித் தள்ளி உருக்குவே தத்தை
ஆராய்ந் ததன்பொருள் சீரா யறிந்து
வீட்டைத் துறந்து விரதியாய்க் கிளம்பி,
நாடெலாம் போலி நாடகங் கண்டு,
வருந்தி யலைந்து விரஜா னந்தரைக்
குருவா யடைந்து, மறைப்பொரு ளறிந்து,
வேத உண்மையை வீறுடன் பேசிப்
பொய்யர் கூத்தையும் புராணப் புரட்டையும்,
பணத்தைப் பிடுங்கும் பகல்வே டத்தையும்,

கண்டித் துண்மை காட்டினர் அவரே.....
பாரத தேசம் பண்புற வேண்டிச்
சீரிய ரோங்கும் ஆரிய சமாஜம்,
நாட்டிவே தத்தை நாடெலாம் பரப்பப்
பள்ளிகள் எழுப்பிப் படிக்கநன் னூல்களை
இந்திய பாஷையாம் இந்தியில் எழுதி,
சத்தியார்த் தப்ரகா சத்தினைத் தந்து,
வேதத் திற்கும் விரிபொரு ளுரைத்தார்.
வாளும் விடமும் கோளும் வசையும்
கொலையும் எதிர்த்தும் கொடுமையைக் குமைத்தார்.
கருணை கொண்டு கனிவுரை யாலே,
பொதுஜனத் திற்குப் பொதுவழி காட்டி,
புதிய பாரதம் பூத்திடச் செய்தார்.
பொல்லாப் பகைவர் நல்கிய நஞ்சால்,
உடலை நீத்தார் ஒப்பிலா மகானே !
இவரது மொழியே இன்றும் என்றும்,
வேதப் பொருளாம். ஓதக் கேளீர்:
ஓமெனக் கடவுளை ஓதி நினைமின்.
அவனே அரசன் அவனே ரக்ஷகன்.
யோகத் தாலும், ஒழுக்கத் தாலும்,
அறவழி யாலும் அருளைப் பெறுமின்.
கவலையை விடுமின் கடவுளைப் பணிமின்.
பொய்யை ஒதுக்கி மெய்யைப் போற்றுமின்.
செல்வ மெல்லாம் கல்வியுந் தொழிலும்,
வளரப் பொழிமின், மக்கள் இன்புற
வேத நெறியை ஓதுமி னெங்கும்.
வீர தீரராய் விளங்குமின் உலகில்
ஆருயிர்க் கெல்லாம் அமைதி வருகவே !

* * *

சுத்தன் இவ்வகை சுருதியின் சாரம்,
உரைக்கக் கேட்ட ஊரார் பலரும்,
"உண்மை யறிந்தோம் ; உம்மையே குருவாய்
வணங்குவோம் எமக்கு வழியைத் திறந்த
கடவுள் போன்றீர் கைதொழு கின்றோம்....."
என்றனர். சுத்தன் "இனியநல் லன்பீர்,
காலில் விழாதீர் ; கைதொழு காதீர்....
இறைவனுக் கிணையாய் எனைக்கரு தாதீர்.
அவனைத் தேடும் அன்பன் யானே....
வேத புரியார் வேறுபா டொழித்தே

இதயபீ டத்தில் இறைவனைப் பணிந்தே,
அன்பும் அறிவும் அருட்பணித் திறனும்
வளர்த்து நீடு வாழுமின்" என்றான்.
தீரன் அவ்வூர் திருந்திட நாட்டிய
சத்திய சங்கம் தழைத்தது நன்றே.
ஆயினும் பழைய அஞ்ஞா னிகளும்
பேயினும் பெரிய பிழைகள் செய்தார்.
வீம்புக் காகவே வேள்விக் கொலைகளும்,
பலிகளுஞ் செய்து புலிகளாய் வாழ்ந்தார்.
உயிரைக் கொடுத்தும் உத்தமச் சுத்தன்,
கொலைகளைத் தடுத்துப் புலால்மது வொழித்துப்
போலித் தொழுகையைப் போக்கியவ் வூரில்,
வேத நெறியை விளங்கச் செய்தபின்
ஞானந் தேடிப் போனான் முன்னே. 397

18. சிவகிரிப் படலம்

பற்பல மதமும் பார்த்துப் பலமதக் கொள்கை கற்றும்,
கற்பனைக் கலைகள் பேசும் கதைகளை வெறுத்துத் தள்ளித்
தற்பரம் பொருளை யெண்ணித் தவம்பல புரிந்துந் தூயன்
சிற்பர ஞான மின்றிச் சித்தத்தில் அமைதி காணான்...

"உலகினில் வழங்கு கின்ற சமயத்தின் உள்ள மெல்லாம்,
அலசினேன் எனக்கு வேண்டும் அமைதியுங் கனலுங் காணேன்,
கலகமும் "எனதே" யென்னுங் கட்சியுங் கண்டேன் ; அன்றி
நலமுறு பரமா னந்த ஞானத்தை யடைந்தி லேனே !

யாரெனக் கந்த ஞானம் ஈகுவார் அவனி தன்னில்,
யாரென தார்வங் காண்பார். யாரென தன்பு தேர்ந்து
கோரிய பொருளை நேரே குணமுடன் கொடுப்பா" ரென்றே
ஊர்தொறுந் தேடித் தேடி உண்மையை நாடிச் சென்றான்.

பொன்னகர் அரசன் பார்த்துப் புனிதனை யுபச ரித்தென்
கன்னியை மணந்து கொண்டு, கடிநகர் ஆள்வா யென்ன,
"மன்னரின் வாழ்வுங் கண்டேன்; மனையினர்வாழ்வுங்கண்டேன்,
உன்னத ஞானங் காண உவந்தனன்" என்றான் சுத்தன்...

மாயமா புரியின் சாக்தர் அழகிய மாதைக் காட்டித்
தாயிவ ளோடுகூடிச் சாதனஞ் செய்து வந்தால்,
மாய்வறும் உடலம் வாய்க்கும்; என்றனர்; வாய்மை கண்டோன்
நோயறும் உடலம் போதும் என்றுமுன் னேகிச் சென்றான். 20

ஆண்டவன் அவத ரித்தான் ; அடிமைசெய் துய்வா யென்றே
தூண்டிய தொண்டர் கூட்டந் தொந்தரை செய்யக் கண்டான்...
வேண்டிய மட்டும் இந்த வேடிக்கை பார்த்தேன் ஐயா,
காண்டகு ஞான ஜோதி காண்பனென் றேகி னானே !

இப்படிப் பலவா றுகச் சோதனை யிடையே தாண்டிச்
செப்படி வித்தை போன்ற செகப்பகல் வேடந் தாண்டி,
எப்படி யோஓர்சக்தி யியக்கிடச் சுத்த னுங்கே,
ஒப்புயர் வற்ற ஞானச் சிவகிரி உயரச் சென்றான் !

வான னாவிய தீச்சுடர் இலிங்கம் போல் வளர்ந்த
தேன னாவிய நதிவளர் சிவகிரி செறிந்த
கான னாவிய காட்சியைக் கவியெனக் கண்டே
ஊன னாவிய உடலுடன் உள்ளமும் சிலிர்த்தான்....

ஆர்வங் கொண்டுதன் ஆனந்த ஞானத்தை அனுகும்
பேரன் பர்மன மகிழ்ந்திடப் பிறங்கிய பிறங்கல்
தீர்க தாகமென் றுதவிடுந் தீஞ்சுவை யருவி
கார்வ ரையுளக் கருணையைக் கவிசெயுங் காட்சி.

பண்ணவர் தவப் பயன்பெறுஞ் சிவகிரி பணிந்து,
கண்ணியம் பெறு ஞானமா முனிவரன் கண்ட,
புண்ணியம் பெறு நிலையத்திற் புனிதனும் புகுந்தான்...
உண்மை யன்பரைக் கண்டனன் ; ஒருகுரு கண்டான் !

"வருக" வென்றனர் அன்பர்கள் ; வணக்கமாய் வந்தான்,
"வருக" வென்றனன் ஞானமே வடிவென வாய்த்தான்.
பெருக வானந்தக் கண்ணீர், "பிள்ளையான்" என்றே
உருகித் தூயனுங் குருவரன் உவந்திடப் பணிந்தான்.

சொக்கத் தங்கம்போற் சுடர்விடு மேனியன், ஞான
மிக்க சாந்தமும், சமரஸ மேன்மையும் உடையான்.
எக்கு லத்தவர் மதத்தவர் எனினுந்தன் எதிரே
ஒக்க நன்கமர்ந் திறைவனை உணர்ந்திடச் செய்வான்...

சகந்தனை யொரு சித்திரச் சுருளெனக் காண்பான்,
அகந்தை யற்றவன் ; அடக்கமே அழகென வுடையான்.
தகுந்த பக்குவம் அறிந்தவன் ; சாதனம் வகுத்து,
மிகுந்த நேசமோ டனைவர்க்கும் விவேகத்தைத் தருவோன் !

தூய வேதியர் தோன்றலாய்த் துறந்திளம் வயதில்,
பேய கந்தையைப் பெரியவி சாரத்தால் அடக்கித்
தாயுந் தந்தையுஞ் சிவனெனத் தனித்தவம் புரிந்து,
மேய ஞானத்தைச் செருக்கற மேதினிக் கீந்தோன் !

மூடு மந்திர மற்றவன், மூடரின் புகழைத்
தேடுந் தந்திர மற்றவன், சீடரை ஆள
நாடு நாடக மற்றவன் ; அனைவரு நன்றாய்க்
கூடி ஒன்றினைக் குலவிடக் கூட்டிடுங் குரவன் !

அவர வர்மன மறிந்துரை அமைதியின் பளிப்போன்,
புவி தரும்புகழ் வேண்டிலான் ; போதமெய்ப் பொருளை
எவரும் உள்ளுணர்ந் ததுமய மாகிட விளம்பித்
தவம்பு ரிந்திடுஞ் சத்திய சித்தனும் இவனே !

எனதி யானெனும் எதனையும் பற்றிடா இதயன்,
மனதை வென்றவன் ; மமதையைக் கொன்றவன் ; மனிதர்
இனமெ லாம்ஒரு திருவருட் குலமென்றே இயம்பித்
தினகரன் எனத் திவ்விய ஒளிதருந் திருவோன்.

சாதி யற்றவன், சமயமும் அற்றவன், உலகின்
பீதி யற்றவன், பெண்களைத் தாயென மதிப்பான் ;
வேத மாகமம் வேறுள விரிமறை கற்றோன்,
பேத மற்றவன் பிரிவினை யற்றவன் இவனே !

கற்ற கல்வியை அனுபவச் சித்தியாற் கண்டு,
முற்ற றிந்துணர்ந் தோன்றினை முடிவுற மொழிவான்.
பற்றி லாதவன் ; பரிவுடன் அனைவர்க்கும் உடனே
உற்ற நண்பனென் றுதவுவான் உண்மையே யுரைப்பான் !

பணத்தைக் கண்டுடை, பட்டமும் பதவியுங் கண்டு,
நிணத்தைக் கண்டுயர் தாழ்வினை நினைத்திடா நிமலன் ;
குணத்தைக் கண்டுளே, குற்றத்தை மோனமாய்த் திருத்தி,
அணைத்தெல் லாரையும் அன்புடன் கனிவிக்கும் ஆசான்...

உண்மை சத்குரு வெனவுல கொப்பிடு மேனும்,
பெண்மைநாணத்தைக்கொண்டவன்; பிறர்தன்னைப்புகழ்ந்தால்,
கண்ணை மூடியுட் கடவுளுக் கதுவென நினைப்பான்...
வண்மை மிக்கவன் அமுதென வழங்குவான் அறிவே !

குருவெ னத்தனை மாந்தர்கள் கும்பிடச் சகியான்.
அருமை யன்பருஞ் சீடரென் றுதிக்கஞ் செலுத்தான்.
கருமி போலத்தன் சக்தியைக் கரந்துளே காவான்.
வரும வர்க்கதை வகையுற வழங்கிடும் வள்ளல்.

முன்ன மர்ந்துளங் குவிந்துணர் முமுக்ஷுக்க ளுள்ளே
தன்னை வைத்தவர் உயிர்க்குயி ராகிய தன்மை
இன்ன தென்றறிந் தருட்சிவக் கனலினை யேற்றி
மன்னு தத்துவம் அறிகென வழிதரும் வரதன்.

இத்த கைக்குரு வரனைக்கண் டின்பமோங் கியநம்
சுத்த னைமுகங் கண்டதுஞ் சுடர்நகை புரிந்தே....
வைத்த ருள்விழி மௌனமாய் மனந்திறந் துள்ளே,
சத்தி யத்தினைத் தூண்டினன் சதானந்த யோகி !

உள்ளு ணர்ந்தநந் தூயனும் உவகைமேற் கொண்டு,
பள்ள நீரினிற் படிந்திடும் படிகமா நதிபோல்,
அள்ளு மன்பினுல் அடிபணிந் தருட்பெரும் உணர்வால்
வெள்ள மேயென விழிகணீர் வழிந்திடத் துதித்தான்....

குருமணிக் கண்ணி

ஆனந்த ஜோதி யருள்வெள்ளம் பாய்ச்சி யென்னுள்
ஞானப் பயிர்வளர்ப்பாய் ஞானக் குருமணியே !

பிடித்துன் மலர்ப்பாதம் பித்தாகிக் கூவும்
அடித்தொண்ட னேக்காவாய் அன்புக் குருமணியே !

நினையே நினைத்துருகி நீள்விழிநீர் பாய்ச்சும்
எனையாண்டு கொள்வதெப்போ தின்பக் குருமணியே !

அத்தா உலகில் அலைந்து பரிதவித்தேன் ;
சுத்தசன் மார்க்கச் சுடரே குருமணியே!

பல்சமயத் தத்துவத்தைப் பார்த்துப் பயின்று மின்னும்
அல்லலறு ஞானம் அறியேன் குருமணியே !

தாந்தாம் உயர்வென்று தம்பட்டம் போடுகின்ருர் ;
மாந்தர் மனமயக்கை மாற்ருய் குருமணியே !

நாட்டி லடர்ந்துவளர் நானு விகாரமதக்
காட்டைத் திருத்தக் கருதாய் குருமணியே !

பாரெல்லாந் தானும் பரமனைச் சாதனத்தால்
ஓராது கெட்டார் உலகோர் குருமணியே !

சாதிக் கொருசாமி சாமிக் கொருகோயில்
வீதிக் கொருமதமேன் ? வேதக் குருமணியே !

ஆளையாள் மீறி அடிதடியி லேயிறங்கி,
நாளைக் கொலைசெய்வார் ; நல்ல குருமணியே !

சுற்றுலகின் போக்கைச் சுயமாகக் கண்டலுத்தேன்,
நற்றவத்திற் கானகதி நல்காய் குருமணியே !

நேராக உண்மை நிலையறிந்து நின்றிடஓர்
சீராம் உபதேசம் செய்வாய் குருமணியே !

இன்றென்று நாளையென்று மேமாற்றங் கொள்ளாமல்
என்றென்று நிற்குநிலை யீவாய் குருமணியே.

வற்ருச்சி வானந்த வாரிதியே, உன்னருளைப்
பெற்ரு லினிக்குறையேன் பேசாய் குருமணியே !

கண்ணாரக் காண்பதெல்லாங் காணும் பரம்பொருளாய்
எண்ணியுணர் சாதனத்தை ஈவாய் குருமணியே !

என்னுயிருக் குள்ளே இருந்தென்னை யாட்டுகின்ற
தன்மயத்தைப் போற்றுதவந் தாராய் குருமணியே !

பூரணத்தைக் கண்டுபரி பூரணமாய் மக்களெல்லாம்
பூரணமாந் தொண்டு புரிவேன் குருமணியே !

ஆருலகை வாட்டும் அரக்கர் செருக்கழிய
ஒருயர்ந்த சக்தி யுவந்தேன் குருமணியே !

வாய்மை யுபாசாந்த வாழ்வு நலம்பெறவே
தூயதொரு ஞானந் துலக்காய் குருமணியே !

உன்னைப் பிரியாமல் உள்ளத்தி லேவைத்தேன்
என்னைப் பிரியாமல் இருப்பாய் குருமணியே. 140

இவ்வகை யுண்மை யன்பன் இறைஞ்சிட மனமிரங்கித்
திவ்விய ஞானவள்ளல், " செய்யனே உன்னைப் போலத்
துவ்விய லான்மா கேட்குந் துகளறு போதஞ் சொல்லல்
எவ்வியல் அடியா ருக்கும் ஏற்றதோர் கடமை யென்றான்.

தவமுறு சித்தர் கண்ட தத்துவப் பொருளை யேநான்
சிவமெனச் சிந்தை செய்து தெள்ளிய ஞானம் பெற்றேன்...
அவனரு ளாலே வாய்க்கும் அனுபவ முனக்குச் சொல்வேன்
கவனமாய்க் கேட்டு நீயுங் கடவுளை யடைதி " யென்றான்...

உனைப்பிரி யாத ஞான ஒளியினைத் தூண்ட வேண்டி,
எனைப்பிரி யாத சக்தி இறைவனை வேண்டிக் கொண்டே
நினைப்புயர் மேலோர் சொன்ன மெய்வழி நிலையைச்சொல்வேன்
அனைத்தையும்அறிதி யென்றேஅறிஞனுஞ்சொல்லலுற்றான். 152

19. ஞானோபதேசப் படலம்

இன்பமே தானும் இதயச் சிவனே,
நம்பும் அடியார் நலம்பெற வாழ்கவே !
அன்பநின் பக்குவம் அறிந்து மகிழ்ந்தேன்.
பரமன் என்னுட் பரிவுடன் அருளிய
பொதுமறை யான பதியறி வூட்டும்,
சிவாத்து விதத்தைச் செப்புவேன் கேளாய் !
வேதந் தெளிந்தாய், வேதத் தெளிவே
சித்தாந்த மென்ன வித்தகர் சொல்வார்.

மெய் கண்ட போதம

பதிப்பொருள் கண்ட பரஞ்சோதி முனிவர்,
கருவிலே திருவுடைக் கண்மணிப் பிள்ளை,
சுவேத வனர்க்குச் சுடர்சிவ ஞான
போத மளித்துப் பொருளு முணர்த்திப்
பொய்யறு புலவரா மெய்கண் டாரெனும்
பெயரு மளித்துப் பெருமைசெய் தாரே !
நீண்ட காலம் நிட்டையி லிருந்து,
சிவஞான போத சித்தியும் பெற்று,
சத்திய தரிசி தன்னுளே யுணர்ந்த,
ஞானத் தாலே ஞாலம் பயன்பெற,
அருணந்தி முதலிய திருவடி யார்கள்
அறியப் புகட்டி அரனடி சேர்ந்தார்....
உந்தியார், சித்தியார், உண்மை விளக்கம்,
சிவப்பிர காசம் திருவருட் பயனும்
சிவஞான பாடியம் இவையினும் பலநூல்
விளக்குசித் தாந்த விளக்கென விளங்கும்
சிவஞான போதத் தெளிவிது வாமே !

சிவஞான போதத் தெளிவு

ஆதி முதல்வன் அருட்பெருஞ் சிவனே.
அவனே பரமன், அவனே பசுபதி,
அவன் அவள் அதுவென ஆடிச் செல்லும்
பாருயி ரான பசுக்க ளெல்லாம்
அவனுடல் போலும் ; அவனே உயிர்க்குயிர்.
ஆற்றைப் பார்த்தால் ஊற்றை நினைப்போம்,—
ஊற்றுல் மழையை, உயர் வா னத்தை
நினைப்பது போலே நில்வுயிர் கண்டே
பரமனை அன்பர் பாவனை செய்வார்.
ஆருயிர் வாழும் ஆதார மான
பஞ்சபூ தங்களும் பரிதியும் மதியும்
ஆன்மா தானும் அரன்வடி வாமே.
ஒவ்வோ ருள்ளமும் உள்ள பொருளாம்,
பரமனை யன்றிப் பாருல கிலையே.
உயிரில் லாமல் உடலா காதுபோல்,
உயர்சிவ மின்றி உயிரா காதே.
காற்று, மேகம் கணக்கறு மீன்கள்
அனைத்திற் கும்வான் ஆதார மாகும்.
அவனிக் கெல்லாம் சிவனு தாரமே.

வளர்பயிர் தாங்கும் மண்ணிலம் போலே,
பரமன் இந்தப் பாருயி ரனைத்தையும்
தாங்கி எதிலுந் தாக்கற் றிருக்கிறான்.
இரவியைப் போலே இருந்தவா றிருக்கும்
சதாசிவம் தனது சக்தியி னாலே
அயர்வற உலகில் ஐந்தொழில் செய்வான்.
அவன்சந் நிதிக்கே ஐந்தொழி லாமே.
சக்தியுஞ் சிவமும் சமமாந் தத்துவம்,
கதிருடன் பிரியாக் கதிரவன் போலாம்.
யந்திர உலகின் எசமான் பரமன்.
அதன்மின் சாரமே அருட்பெரும் சக்தி.
மாறி மாறி மன்னுவ துலகே.
கடலெழு மழைநீர் கடல்கலப் பதுபோல்,
மண்ணெழும் பயிர்கள் மண்கலப் பதுபோல்,
வித்தெழு மரத்தை வித்தடக் குவதெனச்
சிவனரு ளொன்றிலே சீவன் அடங்குமே.
சீவ போதம் சிவபோத மாதலே
வாழ்வின் பயனென வகுத்தனர் மேலோர்.
ஆக்கும் பிரமன் காக்கும் திருமால்,
அழிக்கும் உருத்திரன், மறைக்கும் மகேசன்
அருளும் சதாசிவன் ஆகும் ஐவரும்,
துரியா தீத சுத்த பரமனின்
ஐந்தொழிற் சக்தியென் றறிந்தனர் மேலோர்.
ஆதியும் அவனே அந்தமும் அவனே ;
ஆதியந் தமிலாச் சோதியும் அவனே,
வினையுயிர்க் குலங்கள் விசுத்தி யடைந்து
பெத்தான் மாக்கள் சுத்தான் மாக்களாய்,
இன்புற வேதொழில் இயற்றுவான் இறைவன்.
ஆவதும் போவதும் அவனரு ளாலே.
உடலைத் தருவதும் உட்கர ணங்களைத்
தந்துல கத்தை வந்து நுகர்ந்தே,
(அழுக்கை அழுக்கால் அகற்றுவ தொப்பவே,
முள்ளை முள்ளால் விள்ளுவ தொப்பவே,)
பாசத் தாலே பாச மறுத்தே
அனுபவத் தாலே தனுகர ணங்களிற்
சிக்கிய உயிரைப் பக்குவ மாக்கி,
உருக்கி யுருக்கி உலகத் தீயில்,
அருள்மெரு கேற்றி அம்பொன் னாக்கிச்
சிவனைத் தன்மயஞ் செய்யுஞ் சிவமே !

இருவினை விளைவுங் கருணையின் விளைவே !
"இதயத் துடிப்புடன் இருக்கிறேன்" என்றுள்
உணர்த்துஞ் சிவனை உணர்வது ஞானமே.
கண்ணுங் கதிரும் காண்பா னும்போல்,
அப்பும் உப்பும் ஆழியும் போலே,
வெல்லமும் பருப்பும் விரவும் உருண்டைபோல்,
மணமும் அழகும் மலரும் போலே,
உடலுங் கரணமும் உயிரும் போலே,
பேதா பேதமாய்ப் பெரிய பரம்பொருள்,
அருளாற் கலந்துயிர் அனைத்துட னுள்ளான்.
ஆரெனில் யானெனும் அதுவே ஆன்மா !
ஆண்டா னின்றேல் ஆன்மா வில்லை.
உள்ளவன் கடவுள் ஒருவனே ; அவனே
யாக்கைக் கோயிலுள் ஈசனு யுள்ளான்.
ஒற்றுடன் உயிர்போல் உயிருடன் இறைவன் ;
இறைவனுக் கிங்கே இணையிலை யெதுவும்,
தானே தானுந் தனிமுதற் பரமன்,
நீக்கமற் றருளாய் நிறைந்தவ னுவான்.
பிறப்பிறப் பில்லான், பெயர்வடி வில்லான்,
அவத ரிப்பதும் அவசிய மில்லையே.
அருட்சக்தி யாலே அனைத்தும் புரிவான்.
உயிர்ப்பைப் போலே உட்புறஞ் செல்வான்.
சேயைக் கழுவுந் தாயைப் போலே,
சாணையிற் கத்தி சமைவது போலே,
மாதா அருளால் மாசறும் ஆன்மா !
காட்டும் அறிவே கடவு ளறிவாம்.
காணும் அறிவே நானெனும் ஆன்மா.
காந்தந் தன்னிற் கவற்சி யெதுவோ,
நீரிற் குளிரெது, நெருப்பிற் சூடெது,
கதிரில் ஒளியெது காணின் அதுவே.
மனத்தில் நினைவாய், மனத்தைக் கடந்த
புந்தியி லறிவாய்ப் பொலிவது மாமே !
தேகதத் துவத்தைச் செப்பிடக் கேளாய் :
எலும்புதோல் ஊன்மயிர் நரம்புநீர் குருதி,
விந்துமூ ளையுடன் உந்துறும் வாயு,
நாடிக ளாலே ஆடுமித் தூலம்.
பூதம் மாத்திரை, அறிசெயற் பொறிகள்,
அந்தக் கரணமோ டான்மதத் துவமாம்.
இயற்கை யுடலென் றியம்புவா ரிதையே.

காலம் நியதி கலையுடன் வித்தை,
அராகம் புருஷன் விராவு மாயை
ஏழும் வித்தியா தத்துவ மென்பரே.
சுத்த வித்தையும், சத்தி சிவமுடன்,
ஈசுரம் சதாக்கியம் இவைசிவ தத்துவம்.
தற்பரம் பொருளே தத்துவா தீதம்.
சடத்திற் சூக்கும சக்தியொன் றுண்டாம்,
ஆதா ரங்களில் அமைந்தது வாமே.
மூலா தாரம் மூண்டுறங் கதனை
மேன்மே லேற்றி விசுத்தி ஆஞ்ஞை
தாண்டித் தலைபெறு ஸஹஸ்ரா ரத்திற்
சேர்த்தால் யோக சித்திய தாமே !
ஆதார சக்தி ஆங்கே சிவனை
அணைதலே சச்சித் தானந்த மாமே !
அரவிந்த சித்தியென் றதையறி வாயே !
நாத விந்துவே ஆதிதத் துவமாம்.
ஓமென் றுள்ளே ஒலிப்ப ததுவே.
சிவோஹம் என்றதைத் தியானம் செய்கவே.
ஆதார சக்தியை அறிந்துமே லேற்றின்,
விழிப்புங் கனவும் சுழுத்தியும் துரியமுந்
துரியா தீதமும் அறிவு நிலைகளாம்.
துரியா தீதம் சுத்தா னந்தமாம்.
காமம் வெகுளி கலக்கம், இருவினை
மயக்க மாகிய மலங்கள் பொதிந்த
அந்தக் கரணம் அன்பால் உருகி,
அருள்பெற் றொளிபெற் றறிவுட னமர்ந்தால்,
சக்தியின் சாரம் பற்றுமாம் அதிலே.
சிற்றறி வுடனே பற்றறும் ஆன்மா,
பாசத் தின்வழி மாசுற லாமே.
பதிவழி பற்றிற் கதிபெற லாமே. !
ஐம்புல வேடருக் கடிமை யாகிக்
கொள்ளிவட் டம்போற் கள்ளுண் பேய்போல்,
துள்ளு மனத்தினாற் சள்ளைகள் பலவாம்....
சரியை கிரியை சதாதியான யோகம்,
அருளறி வதனால் ஆன்மா பழுத்துப்
பிரிவற வாழும் பரமனை யுணர்ந்து,
சின்மய மாகிச் சிவமய மாமே !
வினைமயக் காணவந் தனைமயக் கிடராம்.
சகலர் மூன்றுஞ் சார்ந்தவ ராவார்.

இறைவ னருளை எய்திய குருவால்,
இவர்சிவ ஞானம் எய்திட லாமே.
இருவினை ஆணவம் பிரளயா கலர்க்காம்.
பரமனே இவர்க்குக் குருவென வருவான்.
ஆணவ மாசே காணுவிஞ் ஞானரை
உள்ளிருந் திறைவன் உயர்த்திடு வானே.
பின்னிலை முன்னிலை; தன்னிலை யிருந்தே
அன்னைபோல் அன்புடன் அருள்புரிந் திறைவன்
அன்பு செய்யும் ஆன்மா முதிர்ந்தே,
இருளகன் றொளிபெற் றிருவினை மாறி,
அணுவணு வாகவே ஆணவந் தேய்ந்து,
மாயைத் திரையை மாசற விலக்கித்
தன்னை யறிந்து தலைவனை யறிந்து,
சுத்த சிவபர முத்தி பெறவே
படிப்படி யாகப் பக்குவஞ் செய்வனே ;
இறைவனே உயிரின் உறுதுணை யாவனே
அவனருள் பெற்றோன் அருளா சிரியனும்.
ஆசான் றனையே அவதார மென்பார்.
குருவழி சென்றால் உருவழி யாமே,
உருவழி பற்றின் அருவழி யாமே....
இலிங்கம் கூத்தன் இருவுரு வங்களும்,
தியானத் திற்குச் சிறந்த தாகுமே.
கரும்பின் இனிப்பை விரும்புவ தொப்பவே
உருவிற் குள்ளே அருவை நினைகவே—
படிகம் போன்ற பரிசுத் தான்மா
பாசம் பற்றிற் படுந்துயர் கோடி.
ஈசனைப் பற்றின் இன்பச் சிவமாம்.
ஓம்சிவ வணக்கமென் றோதிப் பணிந்து,
இறைவ னன்றி இல்லையா னென்னும்
சிவோஹம் பாவனை தினந்தினஞ் செய்தே
தியானம் பழுத்துச் சிவமயம் எல்லாம்
என்றனு பூதி எய்திய முத்தரே,
சுத்த சமத்துவ சுதந்தர மகான்கள்.
திருநெறித் தொண்டர் தேச விளக்குகள்,
அருட்பிர காசர் ஆனந்த ரவரே !

மாணிக்கவாசகர்

அத்தகை முத்தருள் அன்பால் உருகிப்
பெருந்துறைப் பதியிற் குருந்தடி நிழலில்,

சிவகுரு பரமன் சிவாய நமவென
உபதே சிக்க உட்பொரு ளறிந்து,
மும்மல நீங்கி, நின்மல மாகித்
தன்னைக் கொடுத்துச் சதாசிவம் பெற்றுத்
திருவா சகமெனுந் தேனுர் வேதம்
அருள்மணி வாசகர் அடிதொழு வோமே !
பாண்டிய னுக்கவர் வேண்டிய மந்திரி.
குதிரை வாங்கக் கொண்டு போன
பொற்குவை யெல்லாம் அற்புதக் கோயிற்
பணிக்கே யாக்கப் பாண்டியன் சினந்து,
சிறையிட் டொறுக்கப் பொறுமையிற் பொறுத்து,
மறவா திறைவனை மாசற நினைத்தே
புன்னகை யுடனே இன்னலைத் தாங்கி,
சவத்தை மறந்து சிவத்தைக் கலந்து,
பாரொடு விண்ணுய்ப் பரந்த பரமனின்,
அருளிற் கரைந்தார் திருவா சகரே !
நரிபரி யாக்கிப் பரிநரி யாக்கி,
வைகை விம்ம வன்னியின் பிட்டை
உண்டகூ லிக்கே உடைப்படைப் பவனுய்
ஆடிப் பிரம்படி அடைந்து மறைந்தே,
அடியார் திறத்தை அரசனுக் குணர்த்திய
சிவனை நம்பினுர் எவனுக் கஞ்சுவார்?
மதுரையை நீத்த மாணிக்க வாசகர்,
சிதம்பரக் கூத்தன் சேவடி நிழலில்,
அன்பே தானுய், அருளே உயிராய்,
பாடிப் பணிதலே பக்திசா தனமாய்,
தியானமே வாழ்வாய்ச் செய்தவம் செய்தார்.
அன்புடன் வெள்ளி யம்பலக் கிழவன்
திருவாச கத்தைத் தீட்டி மறைய,
அதன்பொரு ளிதுவென் றருள்மணி வாக்கார்,
கனக சிவச்சுடர் கலந்ததைக் காணுய்....
மணிவா சகரின் வாக்கமு துண்டால்,
அன்பாற் சிவனை அடைந்திட லாமே !

அப்பர்

அப்பரின் அன்பும் அற்புத மாமே !
உலகை யறிந்து நலம்பெறத் துறந்து,
சமணம் பயின்று சைவம் புகுந்து,
சுத்த னருளாற் சூலைநோய் தீர்ந்தே

கூற்றையும் அஞ்சாக் கொள்கையிற் சிறந்தே
அடியார்க் கெளியான் குடியாய்ப் பயின்றே
மகேந்திர னென்னும் மன்னவன் செய்த
கொடுமைக ளெல்லாம் பொறுமையாய்த் தாங்கி,
நீற்றறை குளிர, நீலநஞ் சினிக்க,
கரியும் வணங்கக் கல்லும் மிதக்க,
சிவனருள் காக்கத் தீமையை வென்று,
அரசனுஞ் சிவனடி பரவச் செய்து,
அருளை விளக்கிய திருநா வரசர்,
நெஞ்சிற் சிவத்தை நினைத்தெப் போதும்,
நாவார நாளுந் தேவாரம் பாடி,
அருட்பா லுண்ட ஆளுடைப் பிள்ளையும்,
அப்பரே யென்ன ஒப்பரு தொண்டுகள்
செய்ததை எண்ணிச் சிவஞ்சார் வோமே !
அந்தண ராகும் அப்பூதி யடிகள்,
அப்பரின் அன்பால் அரனருள் பெற்றார்.
அடியார் நேயம் அருட்சிவ நேயமாம்.
செந்தமிழ் மதுரையில் சிவக்கொடி நாட்டிய
ஞானசம் பந்தரும் நாவுக் கரசும்
அருள்வாக் காலே அற்புதஞ் செய்தார்.
முதுமையில் அப்பர் முயன்று, முயன்று,
கயிலை சேரக் கடுந்துயர்ப் பட்டார்....
சிவனரு ளாலே திருவை யாற்றிற்
கயிலைப் பரமனைக் கண்டு களித்தார்.
இறுதி நாளில் இணையிலா அப்பர்,
உள்ளம் அன்பு வெள்ளம தாகவே
பெண்பொன் மயக்கு மண்ணாய் மறையவே
பத்தியும் பணியும் சுத்த நிட்டையும்,
துதியுந் தொழிலாய்த் தூய சிவனையே
எண்ணினார் மற்றோர் எண்ணந் தவிர்த்தே
சித்திரை சதயம் சிவனடி சேர்ந்தார்....
அப்பரைப் போலே அன்பும் பணியும்
செய்யுந் தூயர் சிவம்பெறு வாரே !
பெரிய புராணமுந் திருவிளை யாடலும்
விரிவுறக் கூறும் அரனடி யாரெலாம்,
அன்பு வழியால் இன்புற் றனரே !

தாயுமானவர்

முற்றத் துறந்த பட்டினத் தாரும்,
மோனம் விரும்பிய ஞானி யான

தாயுமா ஞரும் தந்தபா சுரங்கள்
மனமா சறுக்க மருந்தா கும்மே !
பார்க்கு மிடமெலாம் பரமனைக் கண்டிட
நீக்க மில்லா நிட்டையி லிருந்தே,
சிவாத்து வைத சித்திகள் பெற்று,
என்றுநீ யன்றுநான் என்றுணர் ஞானி—
தாயுமா னவரின் தமிழ்வாக் கெல்லாம்,
உள்ளறி வீயும் உபநிஷத் தாமே.
பாச மறுத்துப் பரமனை யறியப்
பராபரக் கண்ணியே நிராமயத் துணையாம்.
இதய வெளியிலே என்றுஞ் சிவனைப்
பாவித் திறைஞ்சிப் பத்தி பழுத்துத்
திருவரு ளாலே இருவினை மலமறச்
சுத்த சித்தி துலங்கு மென்பதே
தாயு மானவரின் தத்துவ சாரமே.

வள்ளலார்

வடலூ ரிருந்த வள்ளற் பெருமான்,
சாதி சமய சாத்திர கோத்திரச்
சண்டைக ளின்றிச் சமரஸ சுத்த
சிவசன் மார்க்கம் புவிக்கெலாஞ் சொன்னர்.
அவர்தரும் அருட்பா அகில வேதமாம்....
அருட்பெருஞ் சோதி தனிப்பெருங் கருணையாம்
ஆண்டவ னுக்கே அடைக்கல மாகி,
ஆன்மநே யமுடன் அருட்பணி புரிந்தே
ஆருயி ருலகெலாம் ஓர்குல மாகி
இகத்தே பரத்தை இலக்கி வாழலாம்.....
என்றுபே ரின்ப மன்றுளே புகுந்தார்....
அருட்பா உயிருக் கருட்பா லாமே !
பெரியார் இவ்வகை பேசி யடைந்த
சுத்தசன் மார்க்கச் சுடர்நெறி நிற்கத்
தக்காய், ஒழுக்க மிக்காய், தவத்திலும்,
புக்காய், யோகம் புரிந்தாய், நீயினி
வேறு நினைவற வீற்றிங் கிருந்து,
சித்தங் குவிந்து, சிவத்தி யானமே
ஒருமா தஞ்செய் திருவரு ளுதிக்கும்....
அதனிடம் உன்னை அளித்து விட்டால்,
கவலையே யில்லை புவியிலோ விண்ணிலோ,
நடக்கவேண் டியதை நடத்தும் அதுவே !

சிவனரு ளொன்றே சீவனுக் கின்பம்,...
சிவனே இன்பம்....... சிவசிவ சிவஓம் !.......

* * *

குருவடி யமர்ந்து திருவடி யானும்,
சிவத் தியானம் செய்ததை யறிவாம்..... 314

20. தியான சித்திப் படலம்

தேனருவிச் சோலைவளர் தென்றல் கொஞ்சச்
    செந்தமிழின் இசைகொஞ்சத் திருக்கள் கொஞ்ச,
வானமுதச் சுவை வந்து வாழ்விற் கொஞ்ச,
    மனமெல்லாம் பேரின்ப வளமை கொஞ்ச,
ஞானவொளி சித்தத்தை நயந்து கொஞ்ச,
    ஞாலமெலாம் சுத்தான்ம நலமே கொஞ்ச,
ஆனந்தப் புதுவுலகில் அன்பு கொஞ்ச
    அருளான கவிக்குயிலே அகவு வாயே !

விள்ளரிய சுகானந்த வெள்ளந் தன்னில்
    விளைந்தபரங் கனியேயென் விருப்பை நாளுங்
கொள்ளைகொளும் அருட்சோதிக் குன்றே, தன்னைக்
    கொடுத்தடியார் குறைதீர்க்குங் கோவே, அன்பர்,
உள்ளத்தில் ஓங்காரச் சிலம்பொ லிக்க
    ஓங்குநடம் புரிகின்ற சிவமே, உன்னைத்
தெள்ளினிய செந்தமிழால் வழிபட் டுய்யச்
    சிறியேனுக் கருள்புரிவாய் பெரிய தேவே !

மண்ணீர்காற் றனல் வானச் சுடர்க ளாவாய் ;
    மன்னுயிருக் குயிரான மன்ன னுவாய்,
கண்ணுவாய், கண்காணுக் காட்சி யாவாய் !
    கதியாவாய் கதிக்கேற்ற மதியு மாவாய் !
பெண்ணுவாய், ஆணுவாய், பெண்ணுண் ஆவாய் ;
    பெயர்வடிவ பேதமிலாப் பெரிய னுவாய் ;
விண்ணுவாய் வியன்ஞான விரிவு மாவாய் ;
    வியக்கின்றேன் உனைவிளம்பத் திகைக்கின் றேனே !

எச்சாதி யானுலும், எவரா னுலும்,
    எச்சமய மானுலும், எங்கா னுலும்,
உச்சிமிசைக் கைகூப்பி யுனை வணங்கும்
    உண்மையடி யார்ஒன்றே குலமென் பார்கள்,

அச்சாதி அச்சமயம் அவருக் காங்கே
ஆர்வமறிந் தன்னைபோல் அருளும் அப்பா !
அச்சமிலேன், ஐயமிலேன், அயலொன் றெண்ணேன் ;
அனைத்தும்நீ யென்றறிவேன் அன்புத் தேவே !

பாரெலாம் உனது திருவினை யாடல் ;
பலவுயிர்க் குலமுன துடலாம் ;
காரெலாம் உனது கடலுண்ட கருணை ;
கதிரெலாம் உன்விழிக் கனலாம் ;
தாரிலே நார்போல் அனைத்தையும் தாங்கும்
சமரஸ சுதந்தரப் பொருளே,
சீரெலாம் பொழியும் சித்தனே சரணம்,
சிவசிதம் பரம்வளர் குருவே.

எச்சம யத்தார் எப்பெயர் வடிவில்
எவ்வகை அன்புசெய் தாலும்,
அச்சமயத் தார்க் கவ்வகை அருளும்
அம்பலக் கூத்தனே சரணம் ;
உச்சமாந் துரிய முடிமிசை யிருந்தே
உலகெலாம் ஒளிவளர் விளக்கே ;
அச்சமே போக்கி அடியனை யாளும்
அழகிய சிதம்பர குருவே !

ஆண்டவா வுன தடிமலர்த் தேனை
அள்ளி யள்ளியான் பருகிட வேண்டும் ;
வேண்டும் உன்னடி யார்திருக் கூட்டம் ;
வினையி னேன்பிறப் புய்ந்திட வேண்டும் ;
வேண்டும் உன்னருள் வேட்கையென் உள்ளம் ;
வேறு வேட்கைகள் ஆறிட வேண்டும் ;
வேண்டும் உன்புகழ் பாடிடும் இன்பம்
விமல னேயென தாருயிர் வேந்தே....

அம்மை யப்பனு நண்பனு மாவாய்
அருட்பெ ருங்குரு தேவனு மாவாய் ;
எம்ம தத்திற்கும் சம்மத மாவாய் ;
எவ்வு யிர்க்கும் உயிர்க்கன லாவாய் ;
பன்மை யாம்ஒரு பான்மையும் ஆவாய் ;
பரம னீசக சீவனும் ஆவாய் ;
இம்மை யம்மைப் பயன்களும் ஆவாய் ;
இதய நாடகனே சுடர் வேந்தே....

மறந்தி டாதுனைப் போற்றிசெய் வாக்கும்
    மாசி லாத தவம்புரி வாழ்வும்,
சிறந்த சிந்தையும் செய்கையுங் கொண்டே
    சிவபூசை செயுந்திருத் தொண்டும்,
பிறந்த நற்பயன் பெற்றிடும் பேறும்,
    பிரிவி லாதுனைக் கூடிடும் பெட்பும்,
அறந்தனை நிலை நாட்டிடும் வீறும்,
    அப்ப னேயெனக் கருள்புரி வாயே.

மலையினு மாண்பே வானினும் விரிவே,
    மழையினுங் கருணையார் அமுதே,
அலைகடல் ஆற்றை யுண்டது போலே
    அகப்புறச் சமயங்கள் உண்டு,
நிலைபெறு நிறைவே, நேயர்தந் தூய
    நெஞ்சிலே வந்துவந் தினிக்கும்
தலைபெறுஞ் சுகமே, மறைகளின் அகமே,
    சதாசிவ மாம்பரம் பொருளே !

கொங்கலர் மலர்வாய்க் குறுநகை புரிவாய் ;
    குயில்களில் இசையமு தளிப்பாய் ;
செங்கதி ராகத் திருவிழி பார்ப்பாய் ;
    தென்றலாய் வந்தெனை யணைவாய் ;
பொங்கவென் உள்ளம், பூரண மதியாய்ப்
    பொலிகுவாய், இயற்கையைப் போர்த்தே,
சங்கையில் லாத சிவராய்த் திகழும்
    சதாசிவ மாம்பரம் பொருளே.

வான்கண்ட பயிர்போல், மழைகண்ட மயில்போல்,
    வனமலர் கண்டவண் டினம்போல் ;
ஊன்கண்ட உயிரில் உன்னையே கண்டுள்
    உவந்திடும் உவப்பெனக் கருளாய் ;
தேன்கண்ட தமிழிற் செப்பியுன் புகழைச்
    செகமெலாந் திருவருள் ஆட்சி
நான் கண்டு குளிர நாடினேன் ; என்னை
    நடத்துவாய் ஞானமா விளக்கே !

வாய்மை யான வாக்க முதம் வளமை யான பொருளினிமை,
தூய்மை யான சிந்தனைகள், சுத்த மான வாழ்வின்பம்,
நோய்க ளற்ற உடலுறுதி, நுட்ப மான நல்லறிவு,
தாய் மனம்போல் அன்புறுதி, தந்தாளென்னைச் சிவகுருவே.

தித்தித் துள்ளே யள்ளூறும் தேனே ஞான வானமுதே,
எத்திக் கினிலும் உயிர்க்குயிராய் இருந்து கருணை மிகச்சுரந்து
முத்திக் கேநல் வழிதிறப்பாய் முதல்வா உனது திருவடிக்கே
பித்தாய்நின்றுபிதற்றுகின்றேன் பேதங்கடந்தபெரும்பொருளே.

உருகி யுருகி உள்ளத்தில் ஊற்றும் ஆர்வத் தடங்கண்ணீர்
பெருகிப் பெருகிப் பேச்சற்ற பெரிய மோன வாரிதியை
மருவி மருவிப் பிறநினைவை மறந்துன் அன்பு பெருகி வளர்
அருவி யாக வாழேனோ அருளானந்தப் பரம் பொருளே.

பட்டும் அரக்கும் பொருந்திடவே பற்றிக்கொண்டமின்னொளிபோல்
கட்டை தன்னைக்கடைந்தவுடன்கனுக்கென்றெழுந்தகனலைப்போல்
நட்டு வார்த்துவளர்த்தவிதை நாளுங்காட்டும் பசுமையைப்போல்,
நிட்டை கூடி நின்ஞான நெருப்பா யிருக்க நீயருளே !

ஆளில் லாத மங்கையைப் போல், அரசில் லாத குடிகளைப் போல்,
வாளில் லாத வீரனைப்போல், வரமில் லாத கவியினைப்போல்,
தோளில் லாத மாலையைப்போல்,சுடரில் லாத, விளக்கினைப்போல்,
தூளில் லாத பூவினைப் போல் சுத்தா னந்த மில்லாரே...

கள்ளார் பூவின் விருந்தாலே காடு முழுதும் பூமணமாம்
உள்ளார்ஞானமலர்விரிந்தால், உலகமெல்லாம் அருள்மணமாம்.
புள்ளார் காலை முகத்தினிலே, பூத்துப் பொங்குங் கதிரவன்போல்
தெள்ளார் சித்தஞ் சிவமானால், சீவ வுலகுஞ் சிவமயமே...120

செல்வச்சாலைச்சேவகர்போல்சேயைவளர்க்குஞ்செவிலியைப் போல்
நல்லிசைசெய் வீணையைப்போல் நாத கான முரளியைப்போல்,
எல்லை யற்ற வானகம்போல், இந்த உலகில் இருப்பவரே
தொல்லையற்ற சுகம்பெறுவார் சுத்தானந்தச் சுடரொளியே.

பெரிய கடலின் ஆவியிலே பிறந்த மழையைப் பருகியதும்,
சிறிய விதையி னின்றெழுந்தே செழிக்கும்பயிரும் உயிருமெனத்
துரியபரம சக்தியிலே தோன்றியிந்த உயிருலகம்
விரிய விரிய வினை யோங்கி வெட்டவெட்ட வளருவதே.

பிறந்தே னென்று பேசுவதும், பிறந்த தொல்லை நீங்கிடவே
துறந்தேன் என்று பேசுவதும், துன்பப் பிணிகள் பல வருந்தி
இறந்தேன் என்று பேசுவதும், இயல்பாய் இருக்கும் என்னைநான்
மறந்தேன் என்று பேசுவதே மாயாதீதப் பரம்பொருளே.

சுருதிமூட்டை பலசுமந்தே சோர்ந்துஞான மலேயேறக்
கருதிக் கருதிக் கால் சருக்கிக் கவலை யேறிக் கிடப்பேனை,
வருதி வருதி என்றருளின் பரிதியாக வழிகாட்டி
"இருதி"யென்றென் இதயத்தேஇன்பங்காட்டி யிருப்பவனே.

படங்கள் படலம் படலமாய்ப் பாடி யாடிப் பாய்ந்திடினும்,
திடங்கொள் வெள்ளித் திரையிலகுந் தீபசாட்சி யென்றிருந்தாய்.
கடங்கள் கோடி நிறைந்தாலும், கட்டில் லாத காற்றினைப்போல்,
இடங்கொள் உலக நாடகத்தை இருமை யின்றிப் பார்ப்பவனே.

கண்கள் இரண்டு மலராகக் கருத்திற் கண்டு பணிந்தேத்தி,
எண்களிறந்த நினைவுகளை எடுத்து மாலை தொடுத்தளித்தேன் ;
உண்கவென்றென்மனக்கவளம்உருட்டியுருட்டியுவந்தளித்தேன்
பண்கள்ஈந்து பாடுவித்த பரமனான கணபதியே.

அன்பான நெஞ்சிலே அருளான சாட்சியாய்
ஆனந்த நடன மிடுவாய் ;
அரகர சிவாயநம எனும்அடியர் வாக்கில், இசை
அருவியென வே பெருகுவாய்,
உன்பாத மலரன்றி வேறென்றும் அறிகிலேன் ;
ஒருமையுடன் உன் பெருமையை
உயர்வான தமிழ்பாடி உலகெலாம் புகழவே
ஓதநான் காதல் கொண்டேன்.
என்பால் இரங்கியருள் இரவுபகல் இல்லாமல்,
இதயகுகை ஒளிர் இரவியே...
எண்ணியதை 'இந்தா' எனத்தருந் தந்தையே,
எனையூட்டி வளர் அன்னையே,
இன்பான சோதியே, ஏகாந்த மோனத்தில்
இனிதுவரும் அனு பூதியே,
இதந்தரு சுதந்தர பதந்தரு திகம்பர
சிதம்பர பரம் பிரமமே...

பிறப்பிலே என்னுட் பிறந்தசிற் காந்தமே
பெரியவுல கத்தின் இயல்பைப்
பிள்ளையாம் போதிலே பேசியறி வித்தெனைப்
பிரியாக் கவிக் காந்தமே...
மறப்பிலே கண்மூடி மாயத்தில் வீழாது
மனதினைக் கவர் காந்தமே,
மாசைத் துடைத்தன்பு மதியைத் துலக்குகிற
மாதவ வொளிக் காந்தமே,

இறப்பிலாப் பேரின்பம் இதுவென உணர்த்தியுள்
எழுந்திரு வருட் காந்தமே,
இரவுபக லற்றவிடம் என்னோடி யாருகும்
எல்லை யறும் ஏகாந்தமே
சிறப்பிலே உள்ளமாம் பொதுவிலே உலகமாம்
சிற்றம் பலக் காந்தமே
சித்தாந்த வேதாந்த சிரமான பரமான
திருவான சிவ காந்தமே.

கார்கொண்ட வள்ளலே, கதிர்கொண்ட சோதியே
கடல்கொண்ட கருணை விரிவே,
கண்கொளா மின்வீசு கனிமுறுவ லேயென்
கருத்தினைக் கொண்ட கவினே,
சீர்கொண்ட மார்பே செயங்கொண்ட கையே
சிவங்கொண்ட ஞான மனமே,
சித்திகளை லாங்கொண்ட முத்தியே, சத்தியருள்
திவ்யசிற் சாந்த ஒளியே,
யார்கண்ட போதிலும் அன்புமயம் என்றுருகும்
இன்பமய மான பொருளே,
ஏர்கொண்ட உலகிலே எல்லாரும் அருளாட்சி
யெய்திடச் செயும் இரவியே,
தூர்கொண்டெம் வாழ்விலே துரியகற் பகமென்று
தோன்றிய சுகப் பெருக்கே...
சுத்தான்ம சமரஸ சுதந்தர நலம்பெருகு
சோதியே தூய சுடரே !

நீயின்றி நானில்லை, நீரின்றி வளமில்லை
நெஞ்சின்றி நினை வில்லையே ;
நிலையான சுடரின்றிக் கலையான உலகில்லை ;
நிதியின்றி யரசு மில்லை...
தாயின்றிச் சேயில்லை தனுவின்றி வடிவில்லை,
தறியின்றி யாடை யில்லை ;
சத்தியமி லாதுபொது மதமில்லை ; சன்மார்க்க
சாதன மிலாத் தவமிலை ;
பாய்திரையும் ஆழியும் இரண்டென மருண்டமதி
பதியன் பியல் பறியுமோ ?
பார்வையும் ஒளியும் பகுத்துவிழி பார்க்குமோ ?
பசுமையற மரம் வளருமோ ?
ஆய்ந்தவரின் அனுபவமெ லாந்திரண் டாராயின்
அருளுநீ பொருளு நீயே
ஆன்மபரி பூரண சுகானந்த வாரியே
அறிவான பர தெய்வமே.

தாயாகி லும்வறுமை சாற்றியிலை யென்னுவாள் ;
சகோதரர் துணை மறுப்பார்,
தந்தையும் சிந்தையிற் சங்கடப் படுவனுன்
சக்தியினை யார் தடுப்பார் ?
வாயால் அறிந்திடா வள்ளலே, வெள்ளமாய்
வாரிக் கொடுக்கும் அரசே....
மன்னுலகை மழையாய் வளர்த்திடுங் கொண்டலே,
வரம்பிலா வான் கருணையே ;
தூயா, திருத்தொண்டர் நேயா, உன் சேயனைத்
துன்பங் கெடுத் தாளுவாய்.
தொல்லுலகில் அல்லலறு துணையில்லை சுந்தரத்
தோழநின் இணையும் இல்லை.
ஆயாமல் ஓயாமல் அலறியுன் அருளினில்
அடைக்கலம் புகுந்து விட்டேன்.
அருள்பெருகும் அறிவுவள மருவுதிரு மலைவளரும்
ஆனந்த மோன வடிவே....

காமிய அழுக்கின்றி உன்கருவி யாயெனைக்
கைமலரில் அர்ப்ப ணித்தேன்.
கரணம்உட லுயிர்பொருள் கருத்தன் பனைத்தையும்
காலடியில் அர்ச்சித் தனன் ;
சேமமுற எனையாண்டு கொள்ளுவாய் சாந்தச்
சிவானந்த சிற்காந் தனே ;
சிறியனேன் பிழைகளைச் சிட்சித்தி ரட்சித்துச்
சிந்தைவைத் தாளாக் குவாய்.
நீமனது கொண்டநல் லிசையினை நிரப்புவாய்
நின்வீணை யென் வாழ்க்கையே.
நீயின்றி நினைவில்லை கலையில்லை நிலையில்லை
நெறியில்லை அறநா தனே...
ஆமென்றும் அன்றென்றும் ஒன்றுபல வென்றுநல்
அருளென்றும் ஓத நின்ருய்....
அன்பாகி, அறிவாகி, அறிவுக்குள் ஒளியாகி
ஆடல்புரி யும் பரமனே !

உலகெலாம் கோயிலாய் ஒவ்வொருவர் உள்ளமும்
உள்ளிறைவன் சந்நிதி யதாய்,
உள்ளன்பு மலராக, உண்மைமந் திரமாக
உள்ளலே பூசையாக,

பலசாதி மதமற்ற பொதுவான பரமனே
    பரிவான மூர்த்தி யாக,
பலனிலே பற்றற்ற நற்றெண்டு செய்வதே
    பழுதற்ற கிரியை யாக,
நலமான சன்மார்க்க நாதமே சங்கமாய்
    நாம ஜபமே பேரியாய்,
நானென்ற நடுவிலே நீயென்ற போதத்தை
    நாடலே யோக மாக,
இலகான்ம நேயத்தில் எல்லாரும் ஒன்ருய்
    இருத்தலே ஞான மாகும்
எண்ணரிய சாதனம் பண்ணலே இன்பமாம் ;
    இதயத்தில் உள்ள பொருளே.

ஆயிர விதழ்மலரில் அரியணை யமைத்தனன்;
    அறிவொளி விளக்கேற் றினேன் ;
ஆர்வத்தில் ஊறிவரும் அன்புப் பெருக்கால்
    அகங்குளிர நீராட்டி னேன் ;
தூயமனமே நல்ல துகிலா யுடுத்தினேன்.
    சுகுணத்தை யணியாக் கினேன்.
துரியபர நாதகண் டாமணி முழக்கினேன்.
    சுகந்த சாந்தம் பூசினேன்.
வாயார வரகவியின் மலர்மாலை சூட்டினேன்.
    வாழ்வெலாம் அர்ச்சித் தனன்.
மன்னுயிர்த் தொண்டுதரு மாசற்ற பலனையே
    மாண்புற நிவேதித் தனன்.
ஆயா உனக்கிந்த ஞானவழி பாட்டையே
    அனவரதம் ஆற்றி மகிழ்வேன்.
அதுவென்றும் அவனென்றும் அவளென்றும் அன்பர்தொழும்
    அகநாட கப்பர மனே !

சொல்லரிய விண்ணின்று ஜோவெனப் பொழிகுதே
    சோதியா னந்த மழையே !
துரியவள நாட்டரசு தோன்றுதென் னுள்ளே
    சுதந்தரப் பொற்கோ யிலாய் !
எல்லையறு முலகெலாம் இதயவிரி வானதோர்
    ஏகரச மாய்க் காணுதே.
எங்கெங்கு பார்த்தாலும் எனையாளும் உன்னையே
    எல்லா மெனக் காண்கிறேன் !
அல்லலறும் அமரநிலை என்றுநீ அன்றுநான்
    என்னுமறி வான நிலையே.

ஆடா விளக்கென ஸஹஸ்ரார மாணிமாடம்
அமைதியாய் அமரு நிலேயே.
வெல்லரிய தன்னுட்சி பெற்றநிலே, வெற்றிநிலே
வேத நிலே போத நிலேயே
வேதாந்த சித்தாந்த வேறுபா டற்றநிலே
விரவிடுந் துரிய மயமே !

ஆதி வேதஞ்சொலும் அத்யாத்ம தீரமும்,
ஆனந்த வாழ்வும் வேண்டும்.
அரியசங் கரர்சொலுந் தன்னறிவு மிகவேண்டும்.
அப்பர்சொலும் அன்பு வேண்டும்.
கீதைசொலு நிஷ்காம்ய கர்மயோ கம்வேண்டும்.
கிறிஸ்துவின் பொறுமை வேண்டும்.
கிருஷ்ணசை தன்யரின் பக்திபர வசம்வேண்டும்.
கேடிலா உறுதி வேண்டும்.
பேதமறு வள்ளலின் பெரியசம ரஸம் வேண்டும்.
பேய்மனம் அடங்க வேண்டும்.
பிரியாத சிவசக்தி போலாண்மை பெண்மையுடன்
பேரின்ப முண்ண வேண்டும்.
சாதனம தாஞ்சரியை கிரியை யோகம் ஞான
சன்மார்க்க சித்தி வேண்டும்.
தன்மயச் சின்மயப் பன்மயத் தெய்வமே,
சச்சிதா னந்த பரமே !

எளியவர்கள் வயிருர உண்ண வேண்டும்; செல்வர்
இறுமாப்பு நீங்க வேண்டும்.
இடரான சாதிமத பேதவினே யறல் வேண்டும்;
எல்லாரும் ஒருகு லம்போல்
வலியவர்கள் கொடுமையற வாழவேண் டும் ; பொய்
வழக்கினே ஒழிக்க வேண்டும்.
வறுமையிருள் அடிமையெனும் வார்த்தையே யில்லாது
வையஞ் செழிக்க வேண்டும்.
மெலியவரு பிணிதுயர் பொருமைவஞ் சத்தீமை
வேரோடு மாய வேண்டும்.
வீரமிகு கனல் வேண்டும், விடுதலேத் திறன் வேண்டும்
வினேவேள்வி வெல்ல வேண்டும்.
நலியவரும் அசுரபலம் அழிய வேண்டும் ; இந்த
நாட்டில்விண் ணரசு வேண்டும்;
நானிலமெ லாம்பரவி நானென் றுளத்திலே
ஞானநட மாடும் அரசே...

நல்லவர் திருக்கூட்டம் ஓங்கவேண்டும் ; உலகில்
ஞானவொளி வீச வேண்டும் ;
நாடெலாங் கல்விகலை செல்வத் தொழில் வளமை
நாடோறும் ஓங்க வேண்டும் ;
பொல்லாத கோள்பொய் பொருமைநோ யுடன்மதப்
போராட்டம் ஒழிய வேண்டும் ;
பூமியை இரத்தகளம் ஆக்கிடும் அரக்கர்குலம்
பூண்டோடு மாள வேண்டும் ;
எல்லாரும் சரிநிகர் சமானசன் மார்க்கராய்
இன்புற்று வாழ வேண்டும் ;
இன்சொல்லும் ஈகையும் இரக்கமுந் தூய்மையுடன்
இகவாழ்வில் ஓங்க வேண்டும் ;
வெல்லவேண்டும் வாய்மை ; வீரவிடு தலைவேண்டும் ;
விஞ்ஞானம் ஓங்க வேண்டும் ;
வேதாந்த முத்தியும் சித்தாந்த சத்தியும்
விரவவரு பரம சிவமே.....

போக்குவர வற்றபரி பூரணப் பொருளையே
பொருளென்னு மன்பர் வாழ்க !
பொய்யடிமை யில்லாத மெய்யடியர் வாழ்கவே
புண்ணியத் தொண்டர் வாழ்க !
வாக்கமுதி ஞலிறைவன் வான்புகழ் இசைக்கின்ற
வரகவி மகான்கள் வாழ்க !
வன்புலனை வென்றுமன மொன்றியித யத்திலே
வளர்தியான யோகர் வாழ்க—
நீக்கமறு சகஜநிலை நின்றஞா னிகள் வாழ்க !
நித்தியச் சித்தர் வாழ்க !
நிஜதுரிய மலையிலே நிலவுநின் மலர் வாழ்க
நிருவி கற்பர் வாழ்கவே !
தாக்கறப் பலகோடி யுலகெலாந் தாங்குந்
தயாபரன் கருணை வாழ்க !
தன்னையென் னுள்வைத்த சிவஞான குருவாழ்க !
சச்சிதா னந்தம் வாழ்க !

21. சாந்தன் வந்த படலம்

ஞானகுரு

இவ்வகை உளங்கு வித்து, தியானத்தி லிருந்த நாளில்,
திவ்விய குருக டாட்சம் சிவனரு ளுடனே கூடி,
துவ்விய ஞான ஜோதி யாகவே துலங்கி, மேலே
செவ்விதின் செய்யுஞ் செய்கை செயமுற விளங்கிற் றம்மா !

பஞ்சுளே தீயைப் போலப் பரவிய சிவக்கொ ழுந்து,
சஞ்சித கன்மந் தீரச் சதசத்தா னந்த மீந்து,
நெஞ்சுளே கோயில் கொண்ட நிமலனை விளக்கிற் றுங்கே ;
அஞ்சுளே யடக்கி வென்ற தீரனுக் கரிதொன் றுண்டோ ?

கற்பக நிழலைப் போன்ற கருணையார் குரும காளின்
பொற்புறு திருவ டிக்கீழ் பொருந்தினின் றெருமை காத்துச்
சிற்பரங் கனலைப் பெற்ற சீடனை நோக்கி யாசான்,
அற்புத மான சித்தி யடைந்தனை அருளால் என்றான்.

*அடிக்கனல் ஏறி எறி ‡அரவிந்த முடியிற் கூடி
கொடிப்பெரு மின்னைப் போலக் குலவிநீண் டொளி தெறித்து
நடுப்பெறு சுழிமு னைக்குள் ஆடியே, நாதம் பாடி,
வடித்திடும் அமுத பானம் வளமுற நுகர்ந்தாய், கண்டேன்...

பத்தியிற் பெரிய னானாய், பலபல சமயங் கண்ட
சித்தியிற் பெரிய னானாய், சிவக்கன லளிக்கும் சுத்த
சக்தியிற் பெரிய னானாய், சாந்தமாய் உள்ள டங்கி
முத்தியிற் பெரிய னானாய், முயற்சியிற் பெரிய நீயே ! 20

பூரண சித்தி பெற்றாய், புண்ணிய யோகி யானாய்,
ஆரணப் பொருளைக் கண்டாய், ஐயநீ இனிநீ வந்த
காரணங் கண்டாய், தெய்வக் கருத்தினை நடத்துங் கண்டாய் ;
தாரணிக் கினிது செய்யத் தருணமிஃ தென்றான் ஞானி !

சுத்தன்

அருட்பெருங் குருவைப் போற்றி, அன்பினை மிகவும் போற்றி,
பொருட்பெரு மோக மற்ற புண்ணிய மகானே உன்னால்
மருட்பெரு மயக்க மின்றி வாய்மையை உணர்ந்தேன் இன்றே ;
தெருட்பெறு ஞான வள்ளால், சிவசர ணென்று சொன்னான்...

என்றும் பரம்பொருளை ஏகாந்த மோனத்தில்,
ஒன்றிநின்றப் பேரின்பம் ஊட்டும் அருட்சுடரே !

சீரான தூய சிவகிரியி லேவளரும்
தாராள ஞான தருவே அருட்சுடரே !

என்னை யறியாமல், இதுஇதுவென் றேமாந்தேன்.
உன்னை யறிந்தபின்பே உய்ந்தேன் அருட்சுடரே !

எங்கெங்குஞ் சுற்றி இசையாத ஞானத்தை
இங்குபார் என்றருளி ஈந்தாய் அருட்சுடரே !

*மூலகுண்டலி
‡ஸஹஸ்ராரம்

நற்றவங்கள் கோடி நனிச்செய்து முத்தியின்பங்
கற்றடங்கி நிற்குங் கடலே அருட்சுடரே !

பரவிந்து நாதப் படியேறிப் பொன்ஞர்
அரவிந்த சித்திபெற்ருய் அன்பே அருட்சுடரே !

வெளிவேடங் காட்டாது, வீணுரைக ளின்றி
ஒளிவின்றி உண்மை யுரைத்தாய் அருட் சுடரே !

தவசக்தி யோங்கித் தழைக்குந் தியானம்
சிவசக்தி யாய்வளரச் செய்தாய் அருட்சுடரே !

தேனேங்கும் உச்சியிலே சேதனத்தை யேற்றிநிதம்
யானேங்கும் சித்திதந்தாய் ஐயா அருட்சுடரே !

இச்சைப் படிதிரிந்தே ஏமாந்த தொண்டனுக்கு
நிச்சயஞா னப்பதியாய் நின்ருய் அருட்சுடரே.

சித்திபெற்ற மெய்யன்பர் சித்தமெல்லாந் தித்திக்கும்,
சுத்தசக்தித் தேனைச் சொரிந்தாய் அருட்சுடரே !

என்னை யறிந்திடவும், என்பணிகள் வென்றிடவும்,
உன்னைக் கொடுத்தாய் ஒருவா அருட்சுடரே !

சொல்லுஞ் சமயமெலாம் சோபான பட்சமதாய்ச்
செல்லும் சிவதுரிய சித்தா அருட்சுடரே !

சுத்தான்ம ஜோதி துலங்கச் சுகமளித்த
சித்தா சிவஞான சீலா அருட்சுடரே !

தேனுடனே பால்போலச் சித்தத்தி லேகலந்து,
ஞானப் பசி தீர்த்தாய் நன்றி அருட்குருவே !

உன்னை யறிந்தென் உயிர்க்குயிரை யானறிந்து,
சின்மயமே யாகித் திளைத்தேன், அருட்சுடரே.

சாந்தமுனி வருதல்

பத்தியால் உருகி ஞானப் பரவசத் தாலே பேசும்
சுத்தனைத் தழுவிக்கொண்டு தொண்டர்க்குத் தொண்டனுன
சித்தனும் "சிவோஹ" மென்று செல்விடை தந்தபோது,
சத்திய தூத ஞன சாந்தனுந் தோன்றி ஞனே !

வருகநீ நண்ப வென்று சிவகுரு வணங்கி யேற்க,
வருகவென் வாழ்வி னுக்கு வழிதரும் பெரியோய் என்றே
இருகையுங் கூப்பிச் சுத்தன், இன்புற வணங்கி யேற்கத்
திருமுனி வரனு நன்றி செப்பி"முன் செல்க" வென்ருன்...

சாந்தனை யறிந்த ஞானி, ஞானியை யறிந்த சாந்தன்,
போந்தநற் கடன றிந்து புண்ணிய வேளை யிஃதே
வேந்தநீ புறப்ப டென்று விளம்பிடச் சித்தர் அன்புக்
காந்தத்தின் பின்னே சென்றான் கடவுளைக் கண்ட தூயன்.

"அமைத்துளோம் சுத்த சங்கம் அரியநல் லன்பர் கூடி
இமயத்தின் மீது தன்னந் தனிமையாம் இடத்தைத் தேர்ந்தே ;
சமயத்தைப் பார்த்தி ருந்தோம் ; சத்தியப் புதல்வா செல்முன்
உமைபதி காப்பான்" என்றே சாந்தனும் உரைத்துச் சென்றான்.

உலகையும் கால வேகந் தன்னையும் உள்ள றிந்த
நலமிகு ஞானி, ஏற்ற நயம்பல புரிந்த னுப்பி
நிலமுயர் அருளின் ஆட்சி நிலவிட யானுந் தொண்டு
சிலசெய் வருள்க சுத்த சிவனென உரைத்தான் மாதோ ! 80

உன்னத மான கொள்கை உருவுறச் செல்லுந் தூயன்,
முன்செலும் போதே சாந்த முனிவரன் ஆங்காங் குள்ள
சன்மய மான சாது சங்கத்தைக் காட்டி யின்னோர்
பின்வரும் பணிக்கே யின்று பெரும்பணி புரிந்தார் என்றான்... 84

22. அருண ஜோதிப் படலம்

சுத்தன்

எந்தையே சாந்த வள்ளால், இமயமா நிலையஞ் சேரு
முந்தெனக் கரிய நல்ல முனிவரின் காட்சி யெல்லாந்
தந்தனை மேலு மேலுந் தவரக சியங்கள் கற்றேன் :
வந்தனம் ; இனிநாம் காணும் வரமுனி தேவர் யாரே ?

சாந்தன்

யாரெனக் கேட்கு முன்பே யானென்றே அருணக் குன்று
கார்முடி சூழ நிற்குங் கருணையார் காட்சி காணாய் !....
யாரெனக் கேட்டு நானே இதயமென் றடங்கி நிற்கும்
பார்தொழும் அருண ஹம்ஸ பகவனைப் பார்ப்போம் வாராய் !

பதஞ்ஜலி வகுத்த ராஜ யோகத்தைப் பயின்ற சித்தர்,
கதந்தனை வென்ற நல்லார், கனிவுகொள் அடியார், ஞான
சுதந்தர தீரர், முத்தர், துரியவர் தம்மைக் கண்டோம் ;
இதந்தரும் இதய ஞானி இவரையுங் காணு வோமால்..

அழகிய பாண்டி நாட்டில் அழகுடன் அழகு பெற்றான்,
மழவிடை யேறு மண்ணல் வாழுறு மதுரை தன்னில்,
பழம்பெரும் பக்குவத்தாற் பாரினைத் துறந்து, சித்தி
வழங்கிடும் அருண ஜோதி மலைக்குகை புகுந்து நோற்றான் !

மோனமாய் நானு ரென்னு மூர்த்தியாய், மூன்று மில்லாத்
தானமே தானும் என்னுஞ் சகசநிர் வாண னாகி,
வானமே போலச் சாட்சி, வகித்துல கெல்லாம் போற்ற
ஞானமாம் அமுத தாரை நல்கிடும் பகவன் இன்னோன் !

வருபவர் யாவ ரேனு மலர்முகங் காட்டி ஏற்பான்,
குருவெனுஞ் செருக்கு மில்லான் ; குணமலை யான தூயன்
திருடர்க்குந் தீய ருக்குந் தீமையி லாத நல்லோன்,
அருள்விழிக் காந்த மொன்றே அறிவினைத் தூண்டு மம்மா !

அன்னிய மறியா ஞானி ஆ,குரங் கணில்மான் புள்ளுந்
தன்னிக ரென்றே கொள்வோன் ; சகசநிர் வாண சித்தன்,
பொன்னிற வண்ணன் ; உள்ளப் பொருளையே பொருளாய்க்
கொண்டோன்
அன்னவன் காட்சி சச்சி தானந்தக் காட்சி யாமே !

* * *

காண்பமென் றுடனே சுத்தன் கனிமல ரெடுத்துள் ளேகி
மாண்புள சாந்த னோடு வணங்கலும், " வருக " வென்றே
நாண்மலர் வாய்தி றந்து நல்வர வினிது கூறி,
ஊண்வகை யளித்தான் அந்த ஒப்பறு ஞான வள்ளல் !

வணங்குமுன் உபச ரித்த வஞ்சமில் அன்புச் சித்தன்,
குணங்களைக் கண்டு, கண்ணிற் கொட்டிடுங் கனலைக் கண்டு,
மணங்கமழ் சுற்றங் கண்டு, மலர்திரு மொழிகள் கண்டு,
பணிந்தருள் வாக்கி னாலே பாசுரம் பாடி னானே !

குருமணி மாலை

ஊனாகியென் னுளமாகியுள் ளுணர்வாகிய ஒருவன்,
நானார் என ஆராயுழி, நானாகிய முதல்வன்...
மோனானந்தப் பெருவெள்ளத்தில் மூழ்கித்திளை முனிவன்,
தேனார்பொழில் அண்ணாமலை திகழும் குரு பரமன் !

அயரா தெனுள் அமுதாய் வளர் அனலாகிய நிமலன் ;
பெயராதுதன் னன்பால் எனைப் பித்தாக்கிய பெருமான் ;
மயலார்புவித் தனை நீங்கிட மருந்தாகிய வரதன்,
இயல்பாய் முனை சிவலிங்கமென் றெழுந்தான் எனக் கெதிரே !

தனதென்றொரு பொரு ளற்றவன் ; தானேபொரு ளானோன்,
மனதென்றொரு மதிலற்றவன், வானின்விரி வானோன் !
எனதாருயிர்க் குழலின்மிசை யிசையாய்வளர் இனியன்—
அனலார்விழி யொருபார்வையின் அடியார்துயர் அறுமே!

நினைவார் நினை நினைவானவன், நினையா நிறை வானேன்.
வினையார் திரை கிளராதமர் விச்சைக்கட லானேன்
தனையன்றிவே றுலகற்றதோர் தணலாகிய பகவான் ;
அணைவாருளத் ததுநான் எனும், அருணாடகம் புரிவோன் !

கண்டார்மனக் கவலைச்சுமை கனலிற்படும் இலவாம் ;
தொண்டார்தவச் சித்தர்குழு தொழுதேத்திடுஞ் சுடரோன்
வண்டார் வன மலர்கொஞ்சிடுந் தென்றல் வளர் மலையான் ;
வெண்டாமரை பொருபுன்னகை விலகாதென துளமே !

உருகுந்திரு வடியார்தமிழ் உரையாழொலி பரவப்
பெருகாதலொ டருநான்மறை பேசித்தவழ்ந் திறைஞ்சும்
அருவித்திரள் அருகோடிடக் குருவித்திரள் பாடும்,
திருவார்நகர் அண்ணாமலை தீர்த்தன் அடி சரணே !

சகசத்தனி யிதயத்தமர் சத்தாகிய ஒருவன்,
சகசித்திர விளையாடலைச் சலனப்பட மெனவே
சுகநித்திரை தனிற்காண்பவன் சொல்லாமறை வடிவோன்—
முகபத்தும மதுவுண்டபின் முளையற்றதென் வினையே !

* * *

இருப்பிட மறிந்து தானங் கிருந்தவா றிருக்கு ஞானி,
அருட்பெரும் பார்வை யாலே, ஆனந்த முறுவ லாலே,
பொருப்பென நிலைத்த சாந்தப் போதச மாதி தந்த
நெருப்பெழு சக்தி யாலே நிமலனுட் புகுந்து நின்றான்—

கலைதரும் பேச்சு மில்லை ; கற்பனைக் கெட்டா மோன
நிலைதரும் பரமானந்த நிட்டையிற் புகுந்து சுத்தன்,
மலையெதிர் குன்றைப்போலே, மணிச்சுடர் விளக்கைப் போலே ,
அலைவிலா தடங்கி நின்றான் அமைதியின் செல்வன் முன்னே !

சாந்தனும் அந்த வாறே சகசநிட் டையினில் ஊன்றி
வாய்ந்தநல் லானந் தத்தை வழுத்திட உரையி லாமல்,
பாய்ந்தொளிர் சிற்சு கத்தைப் பருகினான் மனது முற்றுந்
தேய்ந்துதேய்ந் துள்ளத் தோன்றுந் திவ்விய நிலையி லம்மா !

மூச்சுமோர் சுமையென் றெண்ணு முப்புடி யற்ற டங்கிப்
பேச்சிலாப் பேச்சிற் பேசிப் பெரியமோ னத்தால் விண்டு,
தீச்சுடர் போன்றெ ழுந்த சிற்சுக நிலையிற் காணும்
ஆச்சரி யங்கள் யாரால் அளவிட லாகும் அம்மா ?

முன்னமர் அன்பர் உள்ளே மூழ்கிய நிலையைப் பற்றித்
தன்னறி வியல்பைப் பற்றிச் சாற்றெனக் கேள்வி கேட்க,
உன்னத ஞானா னந்த உச்சியில் ஒளிரு ஞானி
சொன்னதேஅனைவருக்குஞ்சொன்னதாம். அதனைச்சொல்வோம்.

உபதேசம்

நம்ம திடத்தே நாமுன்றி நானுபாவ மற்றிருந்தால்,
இம்மி யேனும் அச்சமில்லை. எள்ளி னளவுங் கவலையில்லை.
தம்மா லிந்தத் தாரணியிற் சகலவினையு நடக்குமப்பா,
சும்மா விருக்குஞ் சூட்சுமத்தைத் துருவித் துருவி யறிவாயே!

எதுவே யன்றி யுலகமில்லை. எந்த உயிர்க்கும் உயிர்ப்பில்லை,
எதுவே யன்றி யெண்ணரிதாம் இந்த உலகிற் செயலில்லை;
பொதுமன் றுடும் பொருளதுவே, போதானந்தக் கடலதுவே
அதுவே நானென் றறிவதுவே, அறிவிற் கறிவாம் அறிவாமே!

இல்லை யென்றும், உண்டென்றும்,
இனிய தென்றுங் கசப்பென்றும்,
நல்ல தென்றுந் தீதென்றும்,
நண்ப னென்றும், பகையென்றும்,
அல்ல தென்றும் ஆமென்றும்,
அலைக்கு மனதை வேரறுத்தால்,
எல்லை யில்லா ஒன்றினிலே
இயல்பா யிருக்க வழியாமே !

அல்ல உடலம், அல்ல மனம், அல்ல சித்தம் புத்தி யல்ல,
அல்ல உலகம் என்றெதுக்கி, ஆர்யான் பின்னே யெனவினவி,
நல்ல சுத்த சொருபத்தை நானென்றிருக்கு ஞான நிலை
வல்ல சகச நிட்டர்களே வாய்மையாக வாழ்ந்தவராம் !

சாவைநன்குய் ஆராய்ந்தாற் சாகாப்பொருளின் அறிவுதிக்கும்
யாவுமதுவென் றமர்ந்துவிடின் அன்னியத்திற் கிடமிலையே.
பூவும் பூவி னுயிர்க்குலமும், பூவைக் கடந்த பொருளுடனே
யாவுந் தேவு முன்னுள்ளே அறிவா யிலகும் அதுவாமே !

நனவினில் யாரே நடப்பவனே, நனவே யற்ற நீண்டதொரு
கனவினில் யாரே உயிர்ப்பவனே, கனவொழிந்த சுழுத்தியிலே
தனையறிந்தார் சுகிப்பவனே, சத்தாந் துரிய நிலையினிலே
அனையதானென் றறிபவன்யார் அவனே நீயென் றறிவாயே !

இளரு நினைப்பை யாரென்றே கேட்டு வெளியே ஓட்டி விட்டால்,
வளருஞ் சங்கற் பாதிகளின் வலியபாசத் தொல்லை யில்லை.
குளிரு நீரில் ஆடுமதி குடைசெய் வான மதிநிழலே,
மிளிருமுலக மென்சாயல் வேறென் றில்லை யென்பாயே.

நாமே யிருக்கு நன்னிலையே நன்குய்ஊன்றிக் கொண்டிருந்தால்
பூமேல் வண்டு போல வந்தே புந்தியாதி வாசனைகள்
தாமேவிலகும் என்ற றிந்தே ,சகசானந்த நிட்டரெல்லாம்
மாமேருமலை போலத்தாம் மலையாதுள்ளே நிலையானுர்.

எதிலே யெல்லாம்உதித்ததுவோ, எதிலேஎல்லாம்உறைவதுவோ,
எதிலே யெல்லாம் அடங்கிடுமோ எதுவே உயிருக் குயிராமோ,
அதிலே மனதைக் கரைத்ததுவே அகிலவுலகம் என்றறிந்தால்,
புதிதே யில்லை, முதியதில்லை, புறமும் உள்ளும் பூரணமே !

மாண்டு மாண்டு செல்லுவதும், மாய உலகில் உடல்கொண்டே
மீண்டுமீண்டும்வருவதுவும், மெய்ம்மையுணராதின்னுமின்னும்,
ஈண்டு வினைகள் சேர்ப்பதுவும், இடர்க்குலத்தை எளிதாகத்
தாண்ட முடியா திருப்பதுவுந் தன்னை யறியாத் தலைச்சுமையே !

தன்னையகலா திருப்பதுவே தலையாங் கரும முலகினிலே,
தன்னை யறியும் அருளறிவே தலையாமறிவா முலகினிலே,
தன்னை யன்றி வேறெண்ணுத் தவமே துறவாம் உலகினிலே,
பின்னை யென்ன பெற்றுலும் பெற்ற தொன்றும் இலையாமே !

இருக்கு மிடத்தி லிருந்துவிட்டால், இரண்டு மில்லை மூன்றுமிலை
தருக்க வாதத் தொல்லையிலை; சாத்திரத்தின் சண்டையிலை.
பெருக்கப் பேசுஞ் சாதனத்தின் பெயருமில்லை அகங்கார
வருக்க மில்லை தனையறிந்த வாய்மை யொன்றே வாழ்வாமே !

* * *

உண்மையிஃ துண்மை யென்றே ஒள்ளிய உபதே சத்தை
அண்மையி லன்ப ரோடு சுத்தனும் அமர்ந்து கேட்டுப்
புண்ணியப் பயனு லின்று பூரண குருவைக் கண்டோம்,
எண்ணிலாப் பரமானந்தம் எய்தினேம் என்று சொன்னுன். 140

முத்தனும் பரம சாந்தன் முன்னிலைச் சுட்டி லாத
தத்துவ ஞானி முன்னே தான்பனி மலையிற் கண்ட
சுத்தநன் னிலையநோக்கஞ் சொன்னதுஞ் சொல்லு முன்பே,
மெத்தநல் லரிய வேலை ; வெல்லுமென் றுவகை கூர்ந்தான்...

ஞானி

தண்மையே நீரின் றன்மை, தகிப்பதே தீயின் றன்மை,
வெண்மையே பாலின் றன்மை, வெளிச்சமே விளக்கின் றன்மை,
வண்மையே காரின் றன்மை, வாய்மையே வாயின் றன்மை,
உண்மையின் பறிவே யோக சித்தருக் குரிய தன்மை !

இடமகல் உலகுக் கெல்லாம் இன்பமே விளைய நாளுந்
திடமனத் தூய நேயர் திருவுடன் வாழுஞ் சங்கம்,
கடமையைக் காத்து, ஞானக் கதிர்களைப் பரவி யெங்குந்
தடம்பெறு வெற்றி யோங்கித் தழைத்திட வாழி யென்றுன்.

அன்பதே உள்ள மாகி, அருட்பணி யுடல மாகி,
இன்பமே யுலக மெய்தும் இயற்கையே முயற்சி யாகி,
துன்பமே யணுகாத் தெய்வ வாழ்வினைத் துலக்கி யென்றும்,
பண்புறு சுத்த சங்கம் பரிதிபோல் வாழி யென்றான்...

சாந்தன்

நின்மல வாக்கி னாலே நீதரு வாழ்த்தி னாலே,
நன்மையே யாகு;மெங்கள் சங்கத்தின் ஞான சக்தி,
இன்னலைப் போக்கி யெங்கும் இன்பமே யாக்கு மெல்லாம்
உன்னருளாலேயென்றான்உண்மையை மதிக்குஞ் சாந்தன்...

சுத்தன்

கண்ணின் கனலாற் கருத்துருக்கி யென்மனத்தை
உண்ணும் ஒருவன் உளமுள்ளான்—எண்ணமெலாம்
எண்ணும லேவெற்றி யெய்தும் அவனருளாற்,
பண்ணும் பணியே பணி.

பூக்கும்பூ வெல்லாம் புவித்தாய்க் கருச்சித்தே
ஏக்கமிலா தோங்குமர மென்னவே—காக்குமிறை
தந்த பணியுந் தருபயனுந் தந்தவற்கே
சிந்தையற்று வாழ்வோந் தினம்.

சிவசமு தாயஞ் சிவமயமென் றேயெண்ணி
ஏவும் பணியை யியல்பாக—மேவியருட்
சத்தி யியற்றத்தான் சாட்சியெனக் காண்பதுவே
முத்திநிலை யென்று முயல்.

முரணாக வந்து முளைத்த மனதைச்
சரணாகச் செல்துசிவ சக்தி—அரணாகச்
செய்புண் ணியமே சிவபூசை யாகிவிடின்
உய்யும் பணியதுவென் றோது.

கள்ளப் புலன்மனதைக் கட்டிக் கலங்காத
உள்ளத்தி லுண்மை யொளியாகி—விள்ளரிய
பேரின்பம் வாறாகப் பெய்துலகைப் போற்றுகின்ற
காரின்பம் போற்கடமை கா....

அருளாலே யெங்கும் அதுவேதா னாகும்
பொருளாலே வாழ்க்கை பொலிக—இருளாலே
துன்புற்ற மாந்தர் துகளறு ஞானத்தால்
இன்புற்று வாழ்க வினி.

வாழ்க குருபரமன் வாழ்க பரமோனம்,
வாழ்கநா ஞரென்னு மந்திரமே—வாழ்கவே
அன்புண்மை யாக வமர்ந்த சுயஞ்சோதி
இன்பமே யஃதா மியல்பு...

* * *

சித்தமாந் திரை யடங்கிச் சிறகச் செயல டங்கி,
முத்தனு யுள்ளி ருந்தே முமுக்ஷுக்கள் உய்ய ஞான
சத்தியை நல்கு மோனி சதாசிவ ஞானி, இந்த
உத்தமர் பக்குவத்தை உணர்ந்துணர்ந் துவகை கொண்டான்...

பொய்த்திடும் அபிமா னத்தைப் பொய்யென ஒதுக்கித் தள்ளி,
மெய்த்திடும் பொருள றிந்த மேதகு முனிவன் முன்னே,
வைத்தவா றிருந்து மோன சக்தியை வளர்த்து நாளுந்
துய்த்தரு ளின்ப மன்புத் தூயனும் விடைபெற் ருனே !

சவவுட லுணர்வை நீத்துச் சகசநிட் டையிலே யூன்றும்
புவிபுகழ் ஞானி யாசிப் பூரண வெற்றி யென்றே,
நவையறு சாந்தன் முன்னே நடந்தினிக் காண்போம் வாராய்
நவயுக மாக்குங் கர்ம யோகியை நாமும் என்ருன். 200

23. புதுயோகிப் படலம்

அலைகடல் ஓம்என் ருர்க்கும், அமுதவாய்ப் புட்கள் ஆர்க்கும்,
பலகலைத் தொழில்கள் ஆர்க்கும், பயனுள கல்வி ஆர்க்கும்,
அலதொரு சத்த மில்லா அமைதியில் ஓங்கு கின்ற
நிலையமே புதுவை யோகி அரவிந்த நிலைய மாமே.

மலர்கனி குலுங்கு கின்ற மலையென மாளி கைகள்,
புலமைகள் குலுங்கு கின்ற பொன்முக நல்லோர் கூட்டம்,
தலைவரே தெய்வ மென்னும் சதாகர் சங்கம் ஓங்கி,
நிலவிடும் கோயில் எங்கும் நிம்மதி காண லாமே.

வெண்பனி யாடை யன்றி வேருெரு பூணும் இன்றிப்
பெண்மையும் ஆண்மை யன்பும் பேரின்பக் கொடிபோல் ஓங்கி
உண்மையும் உழைப்புங் கொண்ட உயர்நல வாழ்வு வாழும்
தண்பொழில் இதுவே;பூமி தாங்கிடும் சுவர்க்க மம்மா !

துன்பமே யில்லை ; யிந்தத் தொல்புவி வாழ்க்கை யெல்லாம்
இன்பமே யாகு மென்றே இலக்கிட வந்து தோன்றி,
அன்பருக் கரச ஞகி, அரவிந்த வள்ளல் வாழும்
தென்பெருந் திருவை குண்டம் இதுவெனச் செப்ப லாமே.

கலைசிறந் தோங்கு கின்ற கல்கத்தா நகரில் வந்தே
அலைமுர சடிக்கும் இங்கி லாந்தினில் அமரக் கற்றே
தலைபெறும் புலவ னாகித் தனிப்பெருங் கவிஞ னாகி,
விலையிலா நூல்க ளீந்த வியன்பெறும் அறிஞன் இன்னோன்.

வெள்ளையர் கலையைத் தேர்ந்து, வேதமெய்க் கலையுந் தேர்ந்து
பள்ளியா சிரிய ராகிப் பரோடாவில் இருந்த காலை,
தெள்ளிய ஞானந் தேறத் திருவுறு யோகஞ் செய்ய
உள்ளுற உவகை கொண்டே ஒளிபெற முயன்றா னம்மா!

செஞ்சொலும் பொருளும் வேதச் சித்திரப் பொலிவுங் கொண்டு
நெஞ்சினை யள்ளு கின்ற நிகரிலாக் கவிதை செய்தோன்,
அஞ்சறு சிங்கம் போலே ஆரிய நாடு பட்ட
வெஞ்சிறைப் பூட்டு டைக்க வீறுகொண் டெழுந்தான் மன்னோ !

செல்வமார் தொழிலை விட்டுத் தேசமுன் னேற்றத் திற்கே,
கல்வியை நல்கிப் பின்பு கனல்பெறும் எழுது கோலால்,
வல்பெறுந் தியாகி, வந்தே மாதரம், கர்ம யோகி
தொல்பெருந் தருமம் என்னும் சுதந்தரப் பேரி யார்த்தான்.

கண்ணனின் கீதை காட்டும் கருமயோ கத்தைக் காத்தே,
புண்ணியப் புலவன் அல்லி புரச்சிறை காத்த போதே,
எண்ணிய யோக சித்தி யெய்தினான் ; இறையைக் கண்டான்,
விண்ணுறத் தரும பேரி முழக்கிட வெளியே வந்தான்.

உத்தம நாட்டின் சேவை யோகமாய்ப் புரிக வென்றே
நித்திய வழியைக் காட்டி நிகரிலா வள்ள லாரின்
புத்தலர் அருட்பா ஓங்கும் தமிழகப் புதுவை வந்தான் ;
சித்தனெம் பெருமான் இங்கே புதுயுகந் திகழ வைத்தான்.

புண்ணியப் புதுவை மேவும் பூரண யோகி கண்ட
விண்ணியல் அரசி னுக்கு வெற்றிசேர் திருவாய் வந்தாள்,
கண்ணிலே கருணை பொங்கும் கனியிதழ் அமுது பொங்கும்,
வெண்ணிறச் சக்தி யன்னை அவள் செயல் விளம்பப்போமோ ?

கீழ்மையை மாற்றிப் பாசங் கெழுமிய இருளை மாற்றித்,
தாழ்மையை மாற்றித் தெய்வத் தருமத்தை நாட்டி, மாந்தர்
ஆழ்ந்தவிஞ் ஞானத் தாலே அமரரின் ஆனந் தத்தில்
வாழ்ந்திட யோக சக்தி வழங்கிடும் அன்னை வாழ்க !

துயர்மிகும் கலியை மாற்றிக் கிருதயுகந் தோற்ற வேண்டி,
அயர்வுறுஞ் சடத்தி னுக்கும் அமுதத்தை ஊற்று கின்ற
உயர்பெறும் விஞ்ஞா னத்தின் உச்சியில் இருவராக
இயல்புற வாழுகின்ற வாழ்வினை இறைஞ்சு வாமே.

திறந்தநல் லுள்ளத் தாலே, தினந்தினம் ஆர்வங் கூறி
அறந்தழைத் துலகம் உய்யும் அருள்வரம் வேண்டு கின்ற
சிறந்தபக் குவத்தைக் கண்டு திவ்விய வாழ்வின் சக்தி
சுரந்தவிஞ் ஞான யோகி, சுரர்தமை யாக்கும் தீரன்.

தூய்மையும் அழகும், அன்புத் தொண்டுடன் சுறுசுறுப்பும்,
வாய்மையும் கரும யோக வளமையும், உளத்தில் ஆன்ம
நேயமும் கொண்டு, நல்ல நிமலரின் சங்கம் இந்தக்
கோயிலில் வாழ்க நீடு குருமணி யருளி னாலே.

புதுயுகச் சுடராம் எம்மான் புதுநகர் ஆக்கி யாங்கே,
புதுஅதி மனிதர் சங்கம் புதியநா கரிகம் போற்ற,
முதுபெறும் உலக மெல்லாம் ஆனந்த முரசு கொட்டித்
துதிசெயப் புகழ் சுமந்து துலங்குக நலங்க ளோங்கி!

ஒன்று மற்றிரு ளோங்கிடும் வாழ்வினை
 ஊறும் ஆனந்த ஊற்றென மாற்றினை;
கன்றி னுக்குரு கும்பசு என்ன நீ,
 கனிந்தெம் உள்ளக் கவலையைத் தீர்த்தனை.
தொன்று தொட்ட களிம்புறு மேனியைத்
 தூய தங்கச் சுடரென ஆக்கினை.
வென்றி யோங்கி அரவிந்த வேந்த நீ
 விண்ணரசைப் புவிமிசை யாளுவாய்.

கானல் ஓடும் கடுஞ்சுர வெய்யமண்,
 கண்குளிர் பசுங் காவெனச் செய்குவாய்.
வானும் பூவும் மணாளனும் பெண்ணும்போல்,
 வாழ வைத்துப் புதுமர பாக்குவாய்.
மானி டரை அமரராய் மாற்றுவாய்;
 மழையைப் போலவிஞ் ஞானம் வழங்குவாய்
தேனும் பாலுந் தெவிட்டக் கவிதரும்,
 தெய்வ ஜீவன சித்த நீ வாழ்கவே.

சிவிகை யேறி நிதித்திரள் கொண்டிங்கே
 சீர்த்தி மன்னர்உன் சேவடித் தொண்டிற்கே,
குவிகை யோடு குழுமி வருகின்றார்.
 கொண்டல் வண்ணநின் கொள்கை சிறக்கவே.
கவிதை கொண்டுன் கருணையில் வாழுவேன்,
 கலையின் பத்திற் கடவுளைக் காணுவேன்.
நவயுகக் கதிரே இந்த ஞாலத்தில்
 நானு முன்கதி ராகிட நீயருள்.

கரைகடந்து களித்ததென் உள்ளமே
கட்டு டைந்ததென் காவிய வெள்ளமே
உரை கடந்ததென் அன்பின் உருக்கமே;
உலகை ஆண்டிடும் மோனப் பெருக்கமே.
வரை கடந்த மகிமையைக் கண்டனன்;
வாழ்வை யோகம தாக்கி மகிழ்ந்தனன்.
திரை கடந்தெழு தேவர் அமுதெனத்
தித்தித் தாவி சிலிர்த்தது நாதனே!

அன்னையாய்ப் புகலளித்தென் அருங்கலைக் கனவை யெல்லாம்
பன்னரு யோக மூட்டிப் பாரத சக்தி யாக்கி,
இன்னிவ் வுலகிற் கீயும் இன்பத்தை யீந்த வள்ளல்
புன்னகை யாசி பெற்றுப் போயினர் புனித ராங்கே !

24. இமாலயப் படலம்

வள்ளலார் அறிவுமன்றம் வசித் தருட் சோதி கண்டே
உள்ளெலாம் அருட்பாவூற வுலகெலாம் புகழ்பெற் றோங்கும்
தெள்ளிய ஞான யோக நிலையத்தி லிருந்து சின்னாள்
வெள்ளிமா மலையை நோக்கி விரைந்தனர் சிறந்த தூயர்.

இமய மலை

விண்ண ளந்து விரிதொட ராலிந்த
மண்ண ளந்து நிவந்து வளர்ந்துநம்
கண்ண ளந்து கணக்கிட வாற்றிலா
வெண்ணு யர்பனி மேவும் இமாலயம்.

கலை யரசர் கவியணி செய்திட
மலை யரசென மாண்புற் றொளிர்வது ;
தலை சிறந்த தவத்திரு மன்னர்கள்
அலை மனத்தை அடக்கிப் புரப்பதாம்.

தேசு லாவுந் திருத்தலம் ஓங்கிய
மாசி லாச்சிவ மந்திர மானது,
ஆசி யாவின் அருள்மணிக் கோபுரம்.
பேச நல்ல பெரும்பனி மாமலை.

பல மதங்கள் பரவிடச் சுற்றிலும்,
பலநன் னாட்டினர் பண்புடன் போற்றவே,
இலகு மாமலை இந்திய வேதத்தை
உலகிற் கோங்கி யுரைத்திடு மோனமோ ?

துரிய மாமுடி தூங்கிய யோகிபோல்,
அரிய நிட்டை யமர்ந்திடு மாமலை,
பெரிய ஞானம் பிறக்குஞ் சமாதியைத்
தெரியக் காட்டுஞ் சிவகுரு நாதனோ ?

விளங்கு பாரதி வீற்றிருந் தாண்டிடப்
பளிங் கரியணை யாகிய பான்மையோ ?
உளங் குளிர உருகும் பனித்திரள்,
களங்க மற்ற கவிகளின் உள்ளமோ ?

தேன முதினுந் தீஞ்சுவை யாற்றினால்
மானி லம்வளர் அன்னையின் மார்பிதோ ?
மேனின் றூறி விரைந்துறுங் கங்கையின்
கான வேதங் கடவுளின் பாடலோ ?

சுத்த வேதசித் தாந்தச் சுடர்களும்,
புத்த ஜைன *கண் பூசி மதத்தரும்,
† பக்த ஏசுரசூல் பஹாய் பாரஸி
ஒத்த பல்மத மோங்கு நடுவிதோ ?

சமரஸத் திருச் சந்நிதி யானதோ,
நிமலர் மெய்த்தவஞ் செய்யு நிலையமோ ?
அமைதி நல்கும் அருள்மணி மாடமோ ?
இமைய வர்கள் இறங்கும் படியிதோ !

ஆவி யூறிடும் ஆவேச வெள்ளம்போல்
நாவி லூறிடு நற்கவி யாறுபோல்,
தாவி யானந்தத் தாண்டவஞ் செய்துறும்
பாவ னஞ்செய் பகீரத கங்கையே !

அகில ஆசியம் ஆதர சக்தியோ ?
திக ழிமயம் சிவலிங்க ஜோதியோ.
புகழுஞ் சிந்துகங் கைப்ரம்ம புத்திரா,
மகிழ மஞ்சன மாட்டி வருவதோ ?

இல கொளியும் இருட்டு மெனச்செலும்
பல வரசினைப் பார்த்துப் பரந்திடும்,
உலகின் காதையை உள்ளத் தடக்கியே
நிலவு கின்றதிந் நீடுயர் மாமலை.

---

* *கண்பூசி=கொன்புத்ஸன்*

† *அன்புமிக்க ஏசுகிறிஸ்து, முகம்மது ரசூல், அப்துல் பஹாய், பாரஸிகரான ஜாரதுஷ்டிரர் மதங்கள் சுற்றி யிலகும் மலை.*

சக்தி கௌரியுஞ் சங்கரனுந் தவ
சித்தி பெற்றுச் சிறந்த பனிவரை,
முத்தி விண்ணென முந்து முளைத்தது
சுத்தன் கண்டு துதித்தன னிவ்வகை !

சுத்தன்

வெண்ப னித்திரள் மேவியே ஒளிமிகு வெயிலாற்
கண்ப றித்திடுங் கண்கொளாக் காட்சிசேர் மலைமேல்,
தண்ப னித்திரட் காட்டிலே தவஞ்செயுந் தலைவர்
திண்பு றக்குளிர் தாங்கிடுந் திறத்தினைச் செப்பாய்.

அரிய மெய்த்துற வணிந்தநம் அன்புமா முனிவர்,
பெரிய நற்றவ மியற்றிடும் பெருமைசால் பீடம்
தெரியச் சொல்லுதி அவ்விடம் சேர்ந்திடும் செயலைப்
பரிவி னுலினும் பண்புறு காரியம் பலவும்.

காசி மாநகர் அளித்தநங் கம்பளிக் கவசம்
வீசு தண்பனி வாடையை விலக்கிட விலையே.
மாசி லாத்தவ சாதன முளதெனில் வழங்காய்;
நேச சொல்லென நின்மலன், சாந்தனு முரைத்தான்.

சாந்தன்

கேளாய் அன்பு கெழுமிய சுத்த !
இமாலயந் தவத்தினுக் கேற்றவா லயமே.
புண்ணிய நாட்டின் விண்ணுயர் புகழ்போல்,
ஆத்தும சக்தியின் அணிவளர் முடிபோல்,
நீறு பூசிய நின்மலச் சிவம்போல்,
எழுந்து விளங்கும் இந்தமா மலையே
யோகிக ளுக்குப் போக நிலமாம்....
தூயவெண் பனிமுடி துலங்குமிக் கூடம்,
கதிரவன் புன்னகை கண்டதும் பொங்கி,
வைரஞ் செய்த மகுடத் திரள்போல்,
பளிச்சிட் டொளிரும் ; பகல்விடை பெற்றதும்,
இரவிலும் வெள்ளைத் திருவுடன் இலகும்....
பளிச்சென மின்னல் பாயும் போது,
நகமெலாம் ஒருங்கே நகுவதைக் காண்போம்....
மடமடத் தோடும் மந்தா கினியும்,
சலசலத் தோடும் அலகநந் தாவும்,
உருத்திரப் பிரயாகையில் ஒன்றும் காட்சியைக்
கண்டவர் உள்ளம் கலையுள மாமே !
படபட வென்றுப் பாறைகள் உருளவே,

சடசட வென்று சரிந்திடப் பனிகள்,
திடுதிடு வென்று தேர்பரிப் படைபோல்,
மலையிலுங் கணத்திலும், அலைவிரிந் தோடித்
திவலைத் தெறிக்கத் திம்புகை படர,
வானவிற் போன்ற வண்ணந் தோன்ற,
ஆற்றுட னுறு வேற்றுமை யின்றி
மோதிக் கலந்து முத்திரைந் தாடும்
காட்சியைச் சொல்லக் கம்பன் வேண்டுமே !
அத்தகை உருத்திரத் தருகே காணும்
அகத்திய மென்னும் மகத்துவ நிலமே.
தமிழ்முனி யகத்தியர் தவஞ்செய் தாங்கே
சிவனரு ளாலே சித்திகள் பெற்றுர்.
இங்கிருந் தேயவர் இலக்கியஞ் செய்தார்.
திருமூல ரென்னும் திவ்விய சித்தரும்,
மாதவம் புரிந்து மந்திரம் பெற்றுர்.
சத்திய தரிசியித் தலத்தினி லிருந்தே,
சிவஞான போத சித்தியும் பெற்றுர்.
அதைமெய் கண்டார் அறியப் புகட்டிப்
பரஞ்ஜோதி முனிவர் வரங்கிடந் ததுவும்,
அகத்திய நிலையமென் றறிய லாகுமே.
உருத்திரப் ரயாகை ஊரி லிருந்து,
பதினொரு மைல்கள் பதமாய் நடந்தால்,
அகத்தியஞ் சேர்வார்....அதுவே நிலையம்.
சுற்றிலும் உள்ளன தூய தலங்கள்...
மந்தா கினியின் வழிகே தாரம்.
அலகநந் தாவழி யடைவர் பதரியே.
குப்த காசி குலவிடும் அருகே.
கௌரி குண்டமும் காணலாம் ஆங்கே.....
பத்ரி நாரணப் பாதையில் ஹரியும்,
கர்ண ப்ரயாகையும், கருட கங்கையும்,
வேதாந் தமதம் விளங்கச் சங்கரர்
தோற்றி வளர்த்த ஜோதிர் மடமும்,
பாண்டுகே சுரமும் பார்க்கலாம் வாராய் !
பதிரியின் மேற்பனி படர்சத பந்து;
உள்ள ததிலே உள்ளத் துறவிகள்,
முத்திக் கேதவ முயன்றுவாழ் கின்றுர்.
சங்கர பகவான் இங்கே அடங்கினர்.
ஜோதி மடத்திற் பாதை பிரிந்து,
திருக்கயி லாயம் செல்வதைக் காண்போம்,

திபேத்தினின் றருங்கே, செட்டுடன் மக்கள்
வணிகஞ் செய்து வருவதைக் காண்போம்.
நரநா ரணரின் பெருமை விளங்கும்,
தரியும் கேதார பகவன் கோயிலும்,
கயிலையும் கண்டவர் காமந் துறப்பார்.
இத்திருத் தலங்களில் இருப்பதே தவமாம்...
தவம்புரிந் திருப்போர் சக்தியென் சொல்வேன் .
அன்பனே ஈசன் அருட்பெருஞ் சேயே,
மனதை யடக்குமிப் பனிமலைச் சார்பில்,
அகத்தியத் தருகே அழகிய கானில்;
மந்தா கினியின் மருங்கே அடர்ந்த
தேவதா ருக்களின் திவ்விய நிழலில்,
நின்பெயர் கொண்ட நிலையம் பொலியும்....
மலைக்குகை களிலே மாதவர் வாழ்வார்.
பரம சுத்தனும் பரிபூ ரணனும்,
இறைவன் அருளாற் குறையொன் றில்லை.
அங்கே தங்கி ஆறிய பின்னர்,
யோகசங் கத்தை உருவாக் கியபின்,
கைலை பதரி கேதார் காண்போம்.
இதோஹரித் வாரம்....இங்கே தொடங்கி
மலைமே லேறுமுன் மாமறைக் கலைகள்
வளருங் காங்கிரி வருவோம் ; ஆங்கே,
சிரத்தா னந்தர் வைத்த குருகுலம் ;
உண்டதிற் சின்னாள் உறைந்துனக் கினிய
ஹடராஜ யோகம் அளித்த பிறகு,
குளிரை வெல்லும் குணவுட லுண்டாம்.
கிளர்ச்சியா யுடன்ரிஷி கேசஞ் செல்வமே.

* * *

சித்தப் படியே செய்கெனச் சுத்தன்
தவத்தன லான சாந்தனைத் தொடர்ந்தான்.
பிரம சாரிகள் அருங்கலை பயிலும்,
குருகுலந் தனிலோர் குடிலில் வசித்து,
பத்தா ஸனத்துடன் ப்ராணா யமம்,
பந்தம், முத்திரை பஸ்தி நௌலி,
குண்டலிக் கனலாற் குளிரைப் போக்கும்,
உபாய மெல்லாம் ஓதிசுத் தான்மத்
தியான சித்தியும் திகழுறப் பழக்கி,
நன்றி சொல்லி நண்பரைப் பிரிந்து,
சுத்தனைக் கொண்டு சுடர்முனி சென்றான்....

பதினைந்து மைல்கள் பதமுறத் தாண்டி
இருடீ கேசம் இருவரும் வந்தார்.
''வருக முனிவீர்'' வணக்கமென் றுங்கே,
செந்தமிழ் நாட்டுச் சிவானந்த முனிவர்,
வரவேற் றவர்பணி நிறைவேற் றிடவே....
வேண்டிய உதவி விருப்புடன் செய்தார்....
''பொருநைக் கரையிற் பூத்த மலரே,
மருத்துவ னாக மாண்புகழ் பெற்றாய்,
உலகியல் பறிந்தே உண்மைத் துறவியாய்ச்
சாதனஞ் செய்து தனிக்குகை வசித்துச்
சங்கர ஞானச் சிங்கமா யெழுந்து,
தேவ சங்கம் திருவுட னமைத்து
மேற்கும் கிழக்கும் வியந்து புகழ,
வேதாந்த வாழ்வை விளக்கிக் கணக்கறு
நூல்களைத் தந்தாய் நுவலரு மன்பர்,
பயன்பெற யோகம் பயிற்றினாய் வாழி !....
அன்பும் அறிவும் அருட்பணி நேயமும்,
பண்புட னிணைந்த நண்பனே போற்றி....''
என்றவன் சீர்த்தி இயம்பி இருவரும்,
குண்டலிக் கனலாற் குளிரைப் பொறுத்துக்
கம்பளி வாலா கட்டிய சத்திரம்,
தங்கித் தங்கித் தளர்வறச் சென்றே,
அகத்தியஞ் சேர்ந்தே ஆச்ரமங் கண்டார்...
அதன்வர் ணனையை அப்புறஞ் சொல்வாம் .

* * *

சாந்த முனிவர் வேந்த னுடனே
வந்ததை யறிந்த மாணவ ரெல்லாம்,
பெருமகிழ் வெய்திப் பிரியமாய் ஏற்றுப்
பணிவிடை செய்து பண்புரை பெற்றார்....
இளைப்பா றியதும் ஏகுவோம் கயிலை
என்றான் சாந்தன்; நன்றெனத் தூயனும்
துறவிகள் சிலருடன் புறப்பட் டேறி,
பதரி கேதார் பார்த்து மகிழ்ந்தபின்,
செங்குத் தான சிகரந் தாண்டிக்
குறுகிய வழிகளிற் பொறுமையாய் நடந்து,
கயிலைச் சிவனைக் கண்டு பணிந்தான்...
சுத்தநீ யிங்கே சக்தி சதாசிவன்,
அருளை நோக்கி யருந்தவம் செய்வாய்....
என்னச் சாந்தன் அன்னதே விருப்பெனத்

தியான சமாதியில் மோனமா யாழ்ந்தான்,
வெண்ணெயுந் தும்பையும் சுண்ணமும் போலே,
பனிமலர் தூவிப் பரமனை வழிபடும்,
விண்ணி லிருந்து விஞ்ஞான மழைபோல்,
சச்சிதா னந்த சதாசிவ சக்தி
சுத்தனுக் குள்ளே சுழன்று பொழிந்ததே.
சுத்தசக் தியெனச் சொல்லுமத் திறனே,
யோக சித்தியின் உன்னத விளக்கமாம்.
சாந்தனும் சுத்தனும் சாதனத் தாலே
சுத்த சக்தியாஞ் சுடர்தவக் கனலின்
ஊற்றே யாகிக் காற்றைப் போலே
சுதந்தர ராகிச் சொல்லற் கரிய
தெய்வ வாழ்வின் சிகரத் தேறி,
சுத்த முக்த சமத்துவ ஜோதியாய்,
திருக்கை லாயச் சிவனை உளத்தில்
இரண்டறக் கலந்து வரம்பெறு சித்தராய்,
சுத்தா சிரமத் தொண்டிற் கேகினர்....
சாதனம் இத்துடன் சக்தியும் முத்தியும்
பெற்றதால், இனியப் பேற்றினை நல்கி,
சுத்த சங்கத் துறவிகள் உய்ய,
புண்ணிய நாடு பொலிய, உலகம்,
கலிதா னவரின் கிலியகன் றுய்யவே
அமர சக்தியால் அருட்பணி புரியும்
சுடர்பெறு நிலையத் தூய ருடனே
சுத்தன் செய்த தொண்டுகள் கண்டு,
மலையமா ருதத்தில் அலைபுரண் டோடும்
பரவசக் கீதம், பருகுவோம் வாரீர் !

25. சுத்த நிலையப் படலம்

தளதள வெனவி யற்கை தண்முகப் பொலிவு காட்டப்
பளபள வென்ன ஆங்கே பனிமலை ஒளியை வீச,
இளவெயில் கொஞ்சக் காற்றும் ஆற்றுடன் வேதம் பாட,
உளமகிழ் வளிக்கும் சுத்த நிலையத்தில் உலகைக் காண்போம் !

நவமணித் திரள்கள் போல நாண்மலர் அழகு கொஞ்சச்
சிவமணி யோக வாழ்வுந் திருத்தொண்டும் பயிலு கின்ற,
தவமணி அன்ப ரெல்லாந் தலைவனை ஏற்க வேண்டிப்
புவியணி பிரம லோகம் போலிதை அணிசெய் தாரே !

மாங்கனிக் குயில்கள் பாட, மரகதக் கிளிகள் பேசத்
தேங்கனிப் பொழிலிற் காம தேனுக்கள் பால்சு ரக்க,
ஓங்கிய தேவ தாரு ஓமெனக் காற்றில் ஆடப்
பாங்குறு மியற்கை யெல்லாம் பசுமுகங் காட்டிற் றன்றே !

பயன்பெறு ஞானந் தந்த பழம்பெறு முனிவன் வாழ்ந்த
வியன்பெறும் அகத்தி யத்தில் விளம்பறு மமைதி மேவ,
சயம்பெறு நாளி தென்று சாதகர் கீதம் பாடச்
சுயம்பெறு யோகி யான சுத்தனுந் தோன்றி னனே !

ஒன்றிய உவகை யாலே "ஓம் குரு வணக்கம்" என்றார்,
வென்றிகள் கூறி நல்லோர் விரைமலர் தூவி யார்த்தார் ;
நன்றிகள் கூறிச் "சாந்த நாதனே ஓம் வணக்கம்
இன்றெனக் கினிய நா" ளென் றெழுந்தனன்எழிலார்யோகி!

முதிர்ந்தநற் றவத்தின் சோதி முகத்தினிற் பொலிய, உள்ளே
கதிர் பரந் தொளிரும் அன்பு கனிநகை யாக வீசப்
புதர்நரி புலியும் பாம்பும் தீவினை போக்கப் புட்கள்
சுதந்தர கீதம் பாடத் தூயனும் எழுந்தான் மாதோ !

ஆனிரை மடிசு ரக்க, அழகிய இயற்கை ஆங்கே
தேனிறை மலரைக் காற்று செயசெய வென்னத் தூவ,
யானைகள் அகர மார்க்க, இவுளிகள் உகர மார்க்கத்
தேனினம் மகர மார்க்கத் தேவனும் எழுந்தான் மாதோ !

அயற்கையை நோக்கி டாமல், ஆடையும் உணவுந் தாமே
முயற்கையால் விளைக்குஞ் சீலர் முத்தியும் பணியுங் கொண்டார்,
இயற்கையின் இன்பங் கண்டார், இறைவனைத் துதிகள் பாடிச்
செயற்கருஞ் சித்தி பெற்ற செல்வனை வாழ்த்தி னரே !

காலை வணக்கம்

(ஆரபி ராகம்—திரிபுடை தாளம்)

பொன்பரவுங் காலையிலே, பூத்தசுடர் மணி போலே,
அன்பருளத் தொளிவளரும் அற்புதனைச் சிற்பரனை,
இன்புருவம் ஆனவனை, எல்லார்க்கும் பொதுப்பொருளை,
பண்பரவி அடிதொழுது, பணிகளினால் வழிபடுவோம் !

பேரெல்லாம், வடிவெல்லாம், பெம்மானின் பேர்வடிவாம் ;
பாரெல்லாந் திருக்கோயில் ; பத்தருளம் சந்நிதியாம் ;
ஊரெல்லாம் உயிர்க்குயிராய் உலவுகின்ற பரமாத்மா,
சீரெல்லாந் தருமிறைவன் சேவடிக்கே யாளாவோம் !

நிறைவான கல்விவளம், நீங்காத செல்வவளம்,
முறையான நல்லொழுக்கம், முயற்சிதரும் முன்னேற்றம்,
பொறை,வாய்மை, மனவுறுதி பூண்டதவ யோகமெல்லாம்
இறைவனருள் அடியார்கள் எய்தியிசை யோங்குகவே !

பத்திவளர் உளத்தாலே பணிபுரியுங் கரத்தாலே,
புத்திவளர் அறிவாலே, பூரணமாந் தவத்தாலே,
ஒத்தமன உறவாலே, ஒருகுலமாய்த் திருவருளும்
சுத்தசக்தி ஆண்டவனைத் தொண்டரெலாந் தொழுதிடுவோம்...

அருளூறும் ஆன்ம நேயர் அனைவரும் அமைதியாகத்
தெருளூறு மோனம் பேணித் தியானத்தி லிருந்த பின்னர்,
இருளற நோற்ற சாந்தன், இனியமா ணவரை நோக்கிக்
"குருமணி காணீர்" என்று கொள்கையைப் பேசி னானே !

சாந்தன்

அருமை யாகிய ஆத்தும நேயர்காள், இன்றென்
பெருகு மாதவம் பெற்றது பெறற்கரும் பேறே;
உருகி யன்புசெய் உள்ளமுங் களித்தது ; சுத்தன்
வருகை நந்தவ வாழ்க்கையின் வெற்றியென் றுணர்வீர் !...

சித்தி மாநகர் நீத்தநந் திருத்தொண்ட ரெல்லாம்,
பத்தி மல்கிடும் பலதல மிருந்திடப் பணித்தே,
சுத்த மாதவம் புரிந்தபின் சுதந்தர மாக
ஒத்திங் கோர்பணி முயன்றிடத் தொகுத்ததை யுணர்வீர்... 60

இத்த லத்தில் இறைவன் பெயரினால்
உத்த மர்கள் உறைந்து தவஞ்செயுஞ்
சுத்த சங்கந் துலங்கிய செய்கையும்
அத்த னானை ; அதனை யறிகுவீர்.

இந்தச் சங்கம் எழில்பெற ஓங்கியே,
முந்து லகின்முன் னேற்றத்தை யூக்கவே,
எந்தை சக்தி சிவனை யிறைஞ்சினேன்,
அந்த ரங்கத்தில் ஆண்டவன் பாலித்தான்.

பொய்க் கலியைப் புறங்கண்ட வீரனை
மெய்க் குறுதி விளைத்திடுந் தீரனை,
ஐக்கி யந்தரும் அன்புள நேயனை,
உய்க்க நெஞ்சில் உலகமும் உய்யுமே.

ஆர ணத்தின் அரும்பொருள் கண்டவன்,
தார ணமுந் தியானமுந் தாங்கியோன்,
பார ணிந்த பலமதம் பார்த்தபின்
பூர ணத்தின் பொருளை யுணர்ந்தனன்.

சிந்தை ஓங்கிய செஞ்செயல் வல்லவன்,
பந்த மற்றவன் பக்குவ ஞானியாம்,
எந்த மாந்தர்க்கும் ஏற்ற மளிப்பவன்,
அந்தத் தீரன் அவனித் தலைவனும் !

இலகு பன்மதங் கண்டவன் இன்னவன்,
உலகிற் கொத்த ஒருவழி காணுவான்,
நிலவு சுத்த நிலையத்தி லூன்றினால்,
அலகி லாநல மாகுமென் றெண்ணினேன் !

உரிய நாளினில் உள்ளத் துறவுடன்
அரிய ணைவிட் டகன்ற குணாளனைப்
பெரிய காரியம் பேசிமுன் ஊக்கினேன் ;
அரிய சித்தன் அனுபவங் கண்டனன் !

அகத்து ஞானம் அலர்ந்த மகானிந்தச்
சகத்தி லுள்ள சமயங்கள் கண்டபின்,
மகத்து வம்பெறும் வெள்ளி மலையிலே,
இகத்தைக் காக்குந் தவமு மியற்றினான்.

வெள்ளி யங்கிரி வெற்றி யளித்ததும்,
உள்ள நாட்டமும் உந்திடத் தொண்டராந்
தெள்ளி யாரைத் திருப்பணிக் கேவிட
வள்ளல் யோகியும் வந்தனன் வாழ்கவே.

வருக தூயன் வரம்பெறு நாயகன் ;
வருக யோக வரன்அருள் வீரனே.
உருவு கொண்ட உலகொளி நாயகன்
வருக வென்றனர் வன்றவச் சீடரே !

ஐந்த டக்கி யருந்தவஞ் செய்தனை
நைந்த பூமி நலம்பெற வேண்டினை
மைந்த நீயினி மாநிலத் தொண்டிற்கே
இந்தச் சங்கம் இலக நடத்துவாய் !

சிந்தை தூய சிவானந்த வள்ளலே,
எந்த நாடும் இனிதுனைப் போற்றிட,
வந்த காரியம் வாய்ந்திடத் தெய்வமே
தந்த திவ்விய சங்கத்தைப் பேணுவாய் !

* * *

என்று சாந்தன் இயம்பி யமர்ந்ததும்,
அன்று பூத்த அணிமலர்ப் புன்னகை,
ஒன்று வீசி யுளங்குவிந் தன்புடை
நன்றி கூறினன் யோகியர் நாயகன் !

சுத்தன்

மாசிலா மணிகள் போன்ற மாணவர் தம்மைக் கூட்டித்
தேசுலாந் தவத்தி னாலே திவ்விய சுத்த சங்கம்
பேசிலா தியற்றி, என்னைப் பிரியமாய் அழைத்து வந்த
நேசனே வணக்கம், சாந்த நிமலனே வணக்கம் ஐயா !

இதந்தரு வழியில் என்னை இழுத்திழுத் தேகி நல்ல
பதம்பெறக் கொணர்ந்த சாந்தன் பதமலர் வாழ்க என்றும்,
சதம்பெறும் பொரு ளறிந்த சத்திய நேயர் வாழ்க
சுதந்தர தாகங் கொண்ட சுத்தசங் கத்தார் வாழ்க !

யான்அவ தார மல்லேன் ; இறைவனுங் குருவும் அல்லேன் ;
வான்புவி யளித்த ஞான வள்ளலின் வரத்தால் இந்த
ஊனுயிர்க் குலத்தி னுக்கே உழைத்திடுந் தொண்டர் கொண்ட
சேனையில் ஒருவன் யானே ; திவ்விய சங்கத் தீரே !

என்னையாள் சுத்த சக்தி யிறைவனின் அருளே யிந்த
மன்னுயி ருலகைக் காக்கு மாண்புடைத் திறமை யாகும்
என்னவே நம்பு மன்பன் ; இனிநனி யியற்றுஞ் செய்கை,
அன்னவன் செயலே அந்தச் செயற்பயன் அவனுக் கன்றோ ?

எனதி யானெனும் ஆசையை அடக்கி
இருவிகற் பற்றவர் யாவர்,
தனகன வாழ்வின் சாம்பலைக் கண்டே
சகவியல் பறிந்தவர் யாவர்,
மனதினை வென்ற மாசிலார் யாவர்,
மமதையை மாற்றினர் யாவர்,
எனதிரு கரத்தால், அவரடி பிடித்தே
இறைஞ்சலின் இன்பமொன் றுள்தோ ?

பிறந்தவர் யாரும் பிணிதுயர் மூப்பின்
பிடியினில் வாழ்ந்துமண் ணுகும்,
திறந்தனை யறிந்து, நித்திய மான
சிவந்தனை நாடியே அனைத்துந்
துறந்தவர் யாவர், திருவரு ளுக்கே
தொண்டுசெய் அன்பர்கள் யாவர்,
சிறந்தவர் அவரே ; அவர்திரு வருளின்
சேவையென் ஆனந்தம் ஆமே !

துங்கமா முத்தி முடிமிசை வாழுந்
துரியவா னந்தர்கள் வாழ்க !
தங்கமே யான சத்திய சுத்த
சமரஸச் சாந்தர்கள் வாழ்க !

எங்குமே தெய்வத் திருவருட் செயலை
இலக்கிய தொண்டர்கள் வாழ்க !
பொங்குயர் தெய்வ வாழ்வினைப் புகன்ற
பூரண யோகியர் வாழ்க.

எங்கெனத் தேடும் இனியநல் லன்பர்
இதயத்திற் கடவுளின் இருக்கை
இங்கெனக் காட்டி, எளியநன் முறையில்
அறிவினை யிலக்குவோர் யாவர்,
தங்களைக் கடவுள் எனத்தருக் காமல்,
சாந்தமாய்ச் சர்வவல் லவனை
எங்குமே உள்ள பரமனை வணங்கீர்
என்பவர் குருக்களென் றறிவோம்.....

சொத்துடன் சுகமுந் தோத்திரம் பலவுஞ்
சுயநல விருப்புடன் தேடார் ;
பத்தியும் பணியும் பரம்பொரு ளறிவும்
பலமதச் சமரஸப் பண்பும்,
சுத்தசன் மார்க்கச் சாதன வாழ்வுந்
துலக்கிய துங்கவர் யாவர்,
அத்தகைத் தீரர் அருள்செழித் தோங்கும்
ஆனந்த நிலையமி தாமே !

சாதிக ளென்றும் சமயங் களென்றும்
தம்மதே முத்திவீ டென்றும்,
பேதபுத் தியினாற் சடங்களை வணங்கிப்
பெரும்பரம் பொருளினை மறந்தே,
பூதல மாந்தர் போரிடு கின்றார்....
பொய்யற மெய்ப்பொது வழியைச்
சாதனஞ் செய்து, சகத்தினுக் களிக்கச்
சத்திய வுறுதிகொண் டெழுவோம்.

எம்மதந் தனக்கும் எம்மதத் தலைவர்
தமக்குமிங் கடிமையாம் இல்லோம்.
அம்மத வுள்ளம் யாதெனக் காண்போம் ;
அதனையே பொதுவுறப் பயில்வோம்.
பொம்மையும் உடலும் கண்டுநாம் மயங்கோம்
பூரண சைதன்ய மொன்றே
நம்மையாண் டருளும் சத்திய மென்று
நலமுறத் தியானத்தாற் கலப்போம் !

வேதத்தின் ஆத்ம தீரத்தைப் பயில்வோம் ;
வீரரின் மெய்த்தவம் புரிவோம்,
போதிசத் துவரின் அகத்துற வணிவோம்.
கிறித்துவின் பொறுமையைக் காப்போம்.
ஆதிசங்கரரின் ஞானத்தை மதிப்போம் ;
அருட்சுடர் வள்ளலார் அருட்பா,
ஓதிடும் ஆன்ம நேயத்தை யுறுவோம்,
உடையவர் பக்தியை உணர்வோம் !

மன்னுமிவ் வுலகில் இலகிய உண்மை
மகான்களின் மனநிலை யறிந்தே
அன்னவர் உண்மை பொதுவுறப் பயில்வோம்
ஆனந்த சுதந்தரம் அடைவோம்,
தன்னவ னுன மனதுறுஜீவ
சாட்சியே தழைவுற நடப்போம் ;
உன்னத சுத்த யோகவாழ் விதுவே :
உலகினுக் கோதுவோம் அன்பீர் !

உடலமே கோயிலாக, உள்ளத்தான் கடவு ளாகத்
திடமனம் இருக்கையாகத் தியானமே விளக்க மாகச்
சுடர்மலர் அன்பேயாக நிவேதனந் தூய வாழ்வாய்த்
தடம்புவி மகிழ வேண்டிச் சதாகால பூசை செய்வோம்.

எல்லையிலா உலகையருட் கோயி லென்போம்.
எவ்வுயிரும் எம்முயிரென் றினிதே செய்வோம்.
தொல்லைசெயுஞ் சாதிமதச் சார்பை நீப்போம்.
சுத்தான்மப் பொதுவினிலே ஒத்து வாழ்வோம்.
அல்லலிலை, கலக்கமிலை அச்ச மில்லை ;
அடிமை யிலோம் நாமார்க்கும் குடியு மல்லோம்.
நல்லதிருத் தொண்டரெலாம் வாரீர் இங்கே ;
நம்பெருமான் பணிசெய்ய நாடுவோமே !

உடலிளமை பெறநாளும் உறுதி செய்வோம்.
ஊனுறக்க முறைகாப்போம், உண்மை காப்போம்.
அடலரிய புலன்களைநாம் அடக்கி வெல்வோம்.
அறவழியைப் போற்றிடுவோம், ஆவி போலே.
திடவுறுதி கொண்டுலகஞ் சேர்ந்து வாழத்
தெள்ளியசன் மார்க்கநிலை செழிக்கச் செய்வோம்.
கடலருந்தி வான்பொழியுங் கருணை போலே
காசினியில் உண்டுதிருத் தொண்டு செய்வோம்.

பசித்திக்குச் சுசிருசியாய் உண்ண வேண்டும்,
பருகுநீர் சுத்தமா யிருக்க வேண்டும்.
புசித்ததனைச் சீரணித்தே புசிக்க வேண்டும்.
பொதுமையுறப் புவிப்பொருளைத் துய்க்க வேண்டும்.
வசிக்குமிடம் இயற்கைவளம் பொலிய வேண்டும்.
வாழ்வெல்லாந் தவயோக மாக வேண்டும்.
விசித்திரமாம் ஐம்பூதப் பஞ்சரத்தில்
விளையாடும் பைங்கிளியைக் கொஞ்ச வேண்டும்.

கடலைகனி காயரிசி பருப்பை யுண்டு,
கட்கொலையூன் காமவெறித் தீமை யின்றி,
நடலையிலா நடையுடனே நாலு பேர்க்கு
நலமாக ஞாலத்தில் வாழ வேண்டும்.
உடலையொரு கோயிலென உன்ன வேண்டும்.
உடையானை உள்ளமுற வுணர வேண்டும்.
அடலரிய புலன்களைநன் றடக்க வேண்டும்.
ஆனந்த ஊற்றினிலே அருந்து வோமே !

பிழைப்பிற்குப் பஞ்சமில்லை ; பெரிய வானம்
பெயுமட்டும் வளமுண்டு நிலமும் உண்டு.
உழைப்புதவும் பலன்களைநாம் ஒருமித் துண்போம்.
உழைக்காமல் யாருக்கும் உணவிங் கில்லை.
செழிப்புறவே பொதுநலமாந் தொழிலே நன்றும்;
தினந்தோறுந் தியானமுடன் வேலை செய்வோம்.
தழைப்பதற்கே தாளாண்மை செய்வோம் என்றுந்
தளராது வேளாண்மை செய்வோம் நாமே !

ஆர்வாழ்வும் சதமில்லை அவனி தன்னில்,
ஆருயிரோ டுள்ளவரை அன்பே யாகி
ஊர்வாழ, உயிர்வாழ, உலகு வாழ,
உற்றார்பெற் றார்வாழ உதவ வேண்டும்.
பேர்புகழின் வேடுவனாய்ப் பேது றாமல்,
பிறந்தவினை யறிந்தாற்றிச் சிறந்த வாறு
தேர்ந்துசரி யைகிரியை யோக ஞானத்
திருநெறியால் அருட்சித்தி சேர்வோம் வாரீர்.

வீணான சடங்குகளைப் பெருக்க வேண்டோம்,
வெவ்வேறு சாமிகளால் விளைபோர் வேண்டோம்
மாறாத சாதிமத மயக்கம் வேண்டோம்.
மனமலைந்து புறந்திரியும் வழக்கு வேண்டோம்.
ஆணாகிப் பெண்ணாகி யாவு மாகி,
அகிலமெலாம் ஒன்றும்சுத் தான்ம நேயம்,
பூணாது பொய்வேடம் புனைய வேண்டோம்,
பொதுவழியிற் பொதுப்பொருளைப் பொருந்து வோமே !

நன் மறைகள் சொல்லுநடுப் பொருளாம் ; வேத
நாதவிந்து கலைகடந்த சத்தாம் ; என்றும்
தன்மயமாந் தன்னிலைநின் றருளால், ஐந்து
சகத்தொழில்செய் தாக்கற்ற தனியாம் ; தன்பால்,
அன்புறுதி கொள்ளறிஞர்க் கமுதாம் ; சச்சி
தானந்தக் கனிரசமாம் அருந்து வோர்க்கே ;
இன்பவொளி காட்டியருள் இரவி யாகும்.
இதயத்தில் அகமகமென் றியங்கும் ஒன்றே !

எழுத்தாலும் வாயாலும் இயம்பொ ணுதாம்,
எள்ளைமலை யாக்கியினம் பிரிந்து போர்செய்
கொழுத்தமன மாயத்தை யொழித்த பேர்க்குக்
குளிரருவிப் பாட்டொலிக்கும் சக்திக் குன்றும்.
அழுத்தமாய்ச் சொல்லுகிறேன் யானும் நீரும்,
அகிலமெலாம் அப்பொருளி னிறைவே யாவோம்.
வழுத்தவொரு சொல்லுண்டோ ? வரைக டந்த
மனமிறந்த தியானத்தால் வாய்க்கும் அஃதே !

பாரால யத்தினிலே பரந்த தோற்றம்
பரமனரு ளாடலெனப் பார்ப்பான் ஞானி ;
தாராள மாயன்பு செய்வான் ; பெண்ஆண்
சத்திசிவ மெனக் காண்பான் ; அனைத்தி னுக்கும் 280
வேரான ஒன்றினிலே நின்று, வாழ்வின்
விரிவெல்லாம் அதன்கிளையாய் விளங்கக் காண்பான்.
சோராது பணிசெய்துந் தொந்த மில்லான்
தூயசம ரஸமுத்தி துலங்கும் யோகி !

தெளிவுடையார் சித்தத்திற் சிவம் விளங்கும்,
திருத்தொண்டர் கூட்டத்திற் சிவம் விளங்கும் ;
அளியுடையார் அன்பினிலே சிவம் விளங்கும் ;
அத்யாத்ம நேயரிடைச் சிவம் விளங்கும்.
ஒளியுடையார் உரைகளிலே சிவம் விளங்கும் ;
உயிர்க்கருணை யுடையாருட் சிவம் விளங்கும் ;
களிவளரும் கனகசபை யுலகிற் காணும்
கருத்தினிலே சிவங்கண்ட கண்ணு ளார்க்கே !

நீயலால் யானென் றில்லை, நினையலாற் செய்கை யில்லை,
தூயனே சுத்த சக்தி சொரூபனே, என்றன் ஆத்ம
நேயனே யோகத் தாலே நிதமுனைக் கலந்து நின்றுற்
காயவாழ் வனைத்து மாறிக் கடவுள்வாழ் வாகி டாதோ ?

அன்பென உன்னைக் கண்டே அன்புசெய் தொண்ட ருக்குப்
பின்பொரு மதமு முண்டோ ? பேதபுத் தியுமிங் குண்டோ ?
துன்பமுந் துயரு முண்டோ ? சோகமுந் தளர்வு முண்டோ ?
இன்பமே யாகி யுள்ளத் தினித்திடும் அமுதே போற்றி !

இவ்வுட லால யத்தில், இருமனத் திரைக ளின்றி,
வெவ்வகங் காரமின்றி, விசுத்தமுற் றிருக்கும் போது,
நவ்விள ஞாயிறுக நாதநீ யெழுந்த போதே,
திவ்விய ஜீவ னத்தைத் திருவுறச் சேர லாமே !

ஊனுடல் பெற்ற தெல்லாம் உனைக்கலந் தன்பு செய்தே
ஆன்மகோ டிகளுக் கெல்லாம் அருட்பணி புரித லாமே.
நான்பெறச் செய்த உண்மை ஞாலமும் பெறவே வேண்டும் ;
வான்பெருங் கருணை யேயிவ் வரந்தரத் தருண மிஃதே !

இதுவரைச் சொன்ன தெல்லாம் இதயத்தில் இருத்தி, நாளும்
பொதுவழி யோகஞ் செய்து பூரண சித்தி பெற்றே
புதுநலங் கண்டு தொண்டு புரிகுவோம் என்று தூயன்
மதுவுணுந் தேனீ போல மனதுளே யடங்கி னானே !

சாந்தன்

புள்ளுலவும் சோலையிலே பூமணக்குங் காற்றில்,
பொற்கனிகள் உண்டியற்கை அற்புதத்திற் கூடி
எள்ளுமொரு கவலையின்றி, எண்ணமெலாந் துறந்தே,
எல்லாமாய் நிற்குமுனை எண்ணுவதே யின்பம்.
உள்ளுருகி, உயிருருகி, ஊனுருகிச் சித்தம்
உள்ளடங்கி உயிரடங்கி உன்னுணர்வில் ஊன்றும்,
தெள்ளறிவால் எய்தும்அந்தத் திருவருட்பே ரின்பம்,
தெவிட்டாமல் எமக்கருள்வாய் சின்மயமே சரணம்.

பொய்யடிமை போயொழியப் போர்வெறிகள் ஒழியப்
புன்செயல்கள் ஒழிந்திடவே புண்ணியங்கள் பொலிய,
மெய்யறிவுத் திறம்விளங்கத் திவ்வியவாழ் வோங்க
வெருவுமதச் சண்டையெலாம் வேருடனே வீழத்
தெய்வகுலம் பூமியிலே திருவோங்கிச் செழிக்கத்
தேடரிய சித்தியெலா நாடியெமைச் சேரத்
துய்யசம ரஸவெளியிற் சோதியடி யார்கள்,
சுத்தான்ம நேயர்களாய் நித்தியமும் வாழ்வோம்...

26. சாதனப் படலம்

மலேயும் ஆறும் வனமும் வயங்கிடும்,
அலேவி லாமல் அமைதியைக் காத்திடும்,
தலேசி றந்த தபோவன மாகிய
நிலேய வாழ்வை நெடிதுறக் காணுவோம்.

இனிய காட்சி யினிய நினேவுகள்,
இனிய பேச்சுடன் இன்னிய நற்செயல்
தனிய கந்தை தவிர்ந்த சமரஸம்,
புனித வாழ்க்கை பொருந்து நிலேயமே !

வேந்த னில்லே, விதியின் விலங்கிலே,
தாந்தம தெனுந் தன்னல மொன்றில்லே ;
சாந்தச் சாதகர் சங்கஞ் சுதந்தர
மேந்து மின்பத் தொழில்வள ரில்லமே!

அச்ச மில்லே ; அடிமைத் தனமில்லே ;
துச்ச மான சுடுசொலு மில்லேயே ;
நச்சு போன்ற பொருமை நமனில்லே ;
இச்சை யொன்றி யியங்கு நிலேயமே !

பேச்சி லாது பெருஞ்செய லாக்குவார் ;
ஏச்சி லாமல் இயல்புற வாழுவார்,
மூச்சை நல்ல முயற்சியி லூக்குவார்—
ஓய்ச்ச லின்றி யுழைத்திட வல்லவர்....

மண்ட லத்தில் வறுமை மடமையால்
உண்டு வெந்துய ரென்ன வுணர்ந்தவர்,
உண்டி யாடைக்கும் ஓங்கும் அறிவிற்கும்,
திண்டி றலுக்குந் தேடுவர் வேலேயே.

திறமை கொண்டுறுந் தீயவ ரக்கரை
அறமும் ஆற்றலும் ஆண்மையும் கூடிய
பெற்றுமை கொண்டு பொருதிட வேண்டிய
அறிவும் சக்தியும் அன்பும் வளர்த்தனர் !

திடங்கொள் ராக்ஷஸர் தீய கொடுமைகள்
அடங்கி ஞாலம் அமைதி பெருகவே
இடங்கொள் யோகத்தி லெய்திடும் வீறுடன்
மடங்க லேறென மல்லும் பயின்றனர்.

மாசி லாத தவமும் வளர்த்தனர் ;
தேசம் வாழ்ந்திடுந் திரமும் போற்றினர் ;
நேச ரானவர் நித்திய சுத்தனின்
தாச ரானவர் சாத்விக வீரரே.

வீறு பெற்ற விரதமும் போற்றினர்;
ஏறு பற்றிடும் ஏற்றமு மிக்கவர் ;
*ஆறும் வெல்லும் அறிவிற் சிறந்தவர்
நூறு பேயினை நூறவும் வல்லவர் !

வேண்டும் ஆயுதம் வேலைசெய் தேற்றபின்,
வேண்டும் பூமி விரிவை யடைந்தபின்,
வேண்டு மாற்றல் விளைந்தபின், சாதகர்
பூண்ட நோக்கம் பொலிந்திடச் செய்தனர்.

காடு நீக்கிக் கரைகள் எழுப்பினர்,
மாடுங் கன்றும் பரியும் வளர்த்தனர்,
வீடு கட்டினர் வீதி யமைத்தனர்,
பாடு பட்டொரு பட்டண மாக்கினர்.

மண்சு மப்பர், மரத்தொழி லாற்றுவார்....
தண்மை யோங்கித் தழைக்கத் தரையினைப்
பண்ப டுத்திப் பயிர்கள் விளைத்தவை
உண்பர் யோகம் உழைப்பினிற் காணுவார்.

பாடிக் கொண்டே பணிகளைச் செய்குவார்,
ஆடிக் கொண்டே அருஞ்செய லாற்றுவார்,
ஓடிக் கொண்டே உளத்தை யடக்குவார்,
தேடிக் கண்டதைத் தேசத்திற் கீவரே.

நட்ட நாற்றை நலிவறத் தாங்குவார்,
சுட்ட மண்ணைச் சுடர்மனை யாக்குவார்,
சட்டி பானை சகலமுஞ் செய்குவார்,
தொட்ட தெல்லாம் அழகு துலங்கவே !

கற்கு டைந்தவர் கந்தரஞ் செய்குவார்,
விற்கள் பூட்டி வியன்பொறி காணுவார்,
புற்க ளாலும் பொருள்பல செய்குவார்,
விற்க விற்க விளைப்பர் புதுமையே !

அறிவி லந்தணர், ஆற்றலில் மன்னவர்,
செறி தொழில்வளர் செல்வ வணிகரே,
விறு விறுப்புடன் வேலைசெய் தொண்டராம் ;
துறவு கொண்டு துலங்குமித் தூயரே,

ஏடு தன்னிற் கலைகள் எழுதுவார் ;
வாடு நாற்றிற்கும் வான்புனல் பெய்குவார் ;
மாடு கன்றையு மானையு மேய்ப்பவர்
பாடு கின்ற பணியணி வீரரே !

*ஐம்புலன், மனம்.

அருவி மின்னை அருந்தொழி லாக்குவார்,
தெருவின் மண்ணிலுந் தேடிப் பயன்பெறும்
இரும்பு காந்தம் இரசப் பொருள்களைத்
துருவி நல்ல தொழில்களைச் செய்குவார்.

ஓமெ னச்சுழல் சக்கரம் ஒட்டிநூல்
காம தேனுவின் பாலெனக் கண்டுகள்
சேமித் தேதறி செய்துநெய் தாடைகள்,
நேம மாக நிதமுங் குவிப்பரே !

இங்கு சிற்சிலர் கண்டுக ளீகுவார் ;
அங்கு சிற்சிலர் ஆவலஞ் சுற்றுவார் ;
உங்கு பாவை யுலர்த்துவர் சிற்சிலர்,
தங்கு நெய்தறி தள்ளுவர் சிற்சிலர்.

நீர ருவியை நேரநல் லாடைகள்,
சேரச் சேரத் திசைதிசை விற்றினும்,
சீர்பெ றுந்தொழிற் செல்வம் வளர்ப்பரே
காரி யத்திற் கருத்துறு வீரரே !

கோதுமை கனி பாலுடன் கொட்டையும்,
போது மட்டுப் புசிப்பர் பசித்தபின்.
வாத பித்த சிலேட்டுமம் வாதியாப்
பூத நன்னிறை போற்றுவர் நாளுமே.

வெள்ளி தோறும் விரதம் இருந்தவர்,
உள்ளி யுழுத்து மனத்தை யொடுக்கியே
தெள்ள றிவுந் தியான சமாதியும்,
கொள்ளு மோனக் குறிப்பொ டிருப்பரே !

உடலு றுதிக் குழைத்த லுடனவர்
ஹட முறைப்படி ஆசனம் போடுவார் ;
குட லழுக்கற உட்குளிப் பாட்டுவார்,
நடு நரம்பில் உயிர்ப்பை நடத்துவார்.

மூச் சளவு, முயற்சி யளவுடன்,
பேச்ச ளவும், பெருந்தொழி லிற்கரம்
ஓச்ச ளவும், உறவின் அளவுடன்
பூச்ச ளவும் பொருளெனக் காப்பரே !

பரிதி மீன்மதி பட்சிகள் போலவே
உரிய காலத் துரியதைச் செய்தவர்,
வரு நலத்தை வழங்கிப் பொதுவுறப்
பெரிய ராகப் பெருகினர் நாளுமே !

சுத்த யோக சுதந்தர வாழ்வினுற்
சக்தி யோங்கிய சாதுக்கள் யாவரும்,
நித்தி யக்கட னுக நிமலன்முன்
பத்தி கானங்கள் பாடி மகிழ்ந்தனர்.

சுக்கிரன் பாட்டைக் கேட்பான்; சூரியன் தியானங் காண்பான்;
உக்கிரப் பகலோன் அன்னுர் உழைபல னுண்ணக் காண்பான் ;
சக்கிர ஓங்கா ரத்தைத் தணிந்திடுங் கதிரோன் கேட்பான்
மிக்கவர் ஞானச் செஞ்சொல் விளம்பிட மதியுங் கேட்பான்.

செந்நிற வான மன்னுர் செபதப தியானங் காணும் ;
புன்னகை மலர்கள் அன்னுர் பூசையை அணிந்து காணும்.
மின்னகை நாண்கள் அன்னுர் மேவிய சமாதி காணும்,
மன்னுளச் சாட்சி யொன்றே மனதுள மாண்பைக் காணும்.

பதரியின் வெந்நீர் ஊற்றிற் படிந்திடும் போதுங், கேதார்
பதங்குவி பனியில் நிட்டை பயின்றிடும் போதும், கங்கை
நதியினில் ஆடும் போதும், ஞாயிறு பரவு கின்ற
கதிரினிற் குளிக்கும் போதும் களிப்பன்றி வேறுண் டாமோ ?

பரிதியு மீனுங் காலங் காட்டிடப் பணிக ளெல்லாம்
சரிவரக் குறித்த நேரம் சகலரும் ஆற்று வார்கள்.
எரிவளர்த் தோமம் செய்வார் ; இயலுழைப் பேற்றும் சூட்டால்,
வருகுளிர் வாடை தாங்க வல்லவர் மனதை வென்றுர்...

வானத்தின் மீன்க ளெல்லாம் வரிசையாய் அடங்கி யாதோ
மோனத்தின் கட்ட ளேக்கு முன்பணிந் தேகுஞ் சீர்போல்,
ஞானத்தின் வரம்பு கண்ட நம்பனின் குறிப்ப றிந்தே,
கானத்தி லுறையும் யோகக் கணங்களும் வாழ்ந்த வாறே !

பார்ப்பதும் இயற்கைக் காட்சி, படிப்பதும் இயற்கை யுள்ளம்,
போர்ப்பதும் கைந்நூ லாடை, புசிப்பதும் விளைத்த சோறே.
ஆர்ப்பதும் வேத கீதம் அயர்வதும் யோகத் தூக்கம்,
சேர்ப்பதும் தெய்வ சக்தி சித்தரின் செயலி தம்மா !

குகையினில் இருப்பார் ; ஓலைக் குடில்களில் இருப்பார் ; அன்றித்
தொகைதொகை யாகத்தோப்பு வயலினில் வேலை செய்வார்;
பகைவரை யுளவு காணப் பட்டணந் தனிலி ருப்பார்,
வகை தரு நண்பர் வீட்டில் வந்தொரு பணியுஞ் சொல்வார்.

உள்ளத்தில் ஊன்றி, யோக ஒழுக்கத்திற் கிளைத்தே, பக்தி
வெள்ளத்தால் வளர்ந்து, ஞான விரிமலர் குலுங்கி, இன்பக்
கள்ளுகு தெய்வ சக்திக் கனியெனப் பழுத்துப் பாரில்
ஒள்ளிய உயிர்கட் கெல்லாம் உதவுமிப் பெரியார் வாழ்வே !

ஆயிரந் தலை, யிரட்டை ஆயிரங் கண் கை கால்கள்,
ஆயிரம் ஆற்றல் பெற்ற ஆத்தும புருஷன் அன்னார் ;
ஆயிரஞ் செயல்கள் செய்தும் அன்புளம் ஒன்றே கொண்டார்;
ஆயிர நாவி னாலே ஆண்டவன் புகழே சொல்வார்.

அறிவினிற் சிறந்த மேலோர், அன்பினிற் பெரிய தொண்டர்,
திறமைசால் வீரர் யோக சித்தர்கள் உலகி யல்பை
அறவழி மாற்ற வல்லார், அனைவரும் சுத்தன் சொன்ன
நெறிவழி பயின்ற தூயர் நேயத்திற் சிறந்த நல்லார் !

புத்துணர்வினிற் பொலிந்திடும் புதுயுக மணிகள்,
சித்து ணர்வினிற் சிறந்திடுந் தெய்விக வாழ்வார்,
ஒத்தி யற்றிடும் யோகசா தனங்களை வேண்டச்
சுத்த னும்அனு பவங்களைத் துலக்குவன் மகிழ்ந்தே.

விரத வெள்ளியில் வித்தகர் ஓமத்தீ சுற்றி
வரிசை யாயமர்ந் தைம்புலன் மனதுளே யடக்கி,
நரச கோதரர் உய்திடுஞ் சாதன நலத்தை
உரைகெனத் தலைவன் உவந் திவ்வகை யுரைத்தான்:

யோக சாதனம்

ஆருயிர்ப் பிரியா ஓர்பொரு ளுண்டாம்.
உயிரத னாலே உயிர்ப்பதும் ஆகும்.
உள்ள பொருளதை ஒன்றிக் கலத்தலே
யோகம தாமே ; யோகத் தாலே
தானும் உலகும் வானும் காற்றும்,
ஒளியும் வெளியும் உள்ளவை யெல்லாம்
ஒருபொருள் மயமெனக் கருதிட லாமே.
அந்தக் கருத்தால் ஆனந்த மாகும்,
தன்னிலை யுடனே முன்னிலை யுலகை
அறியும் அறிவை அதுவே தூண்டும்.
பற்றறு சுத்தனே பரம னாவான்,
அவனருட் சக்தியே ஆடலாய் விரியும்,
குணமெலாம் அதுவே ; குவலயம் அதுவே.
நீருந் தண்மையும், நிலமும் பயிரும்,
தீயும் சூடும், தீபமும் சுடரும்
போலொன் றாகும் பொருளைச் சுத்த
சக்தி யென்றே சந்ததந் தொழுவாம்.
அந்தச் சக்தி ஆதா ரங்களில்
விழித்தெழுந் துச்சியின் மீதே றிடவே,
வெதுவெதுப் பான சுதைபோல் உணர்ச்சி

நரம்பெலாம் பரவி வரம்பிலாச் சுகமாம்.
அதைத்தான் குண்டலி யன்னை யென்பார்,
பிரமா காரமாய்ப் பேசுவர் அறிஞர்.
ஆண்பெண் போலே அன்னை தந்தைபோல்,
சக்தியும் சுத்தமும் சந்ததம் ஒன்றாய்
வித்து—நிலமென விளைத்திடும் உலகை.
சக்தியை அறிந்தாற் சுத்த மறியலாம்,
இன்ப யாக்கையும் இன்ப வாழ்க்கையும்,
இன்ப உள்ளமும், இன்ப ஞானமும்
அருளும் அம்மையே அனந்த சக்தியாம்.
அறிவி னுக்கறிவாம் அகண்ட சக்தியை,
அவனி யாய்விளை யாடும் சக்தியை,
தோன்றும் யாவையும் தோற்றும் சக்தியின்
ஊற்றைக் காண்பதே யோகசா தனமாம்.
அடமும் மூச்சினை அடக்கி யாளலும்,
உடலொ டுக்கலும், உள்ளொ டுக்கலும்,
திடச மாதியிற் செயலற் றுழலும்,
சக்தியின் இன்பந் தழைக்க வெண்ணியே.
சித்த மொடுக்கிச் சிந்தையற் றிருக்கப்
பதஞ்ஜலி சொல்எண் படிகளும் அதற்கே.
நிச்சிந்தை யாதலே நிலைபெறு யோகம்.
உடலுயிர் மனமும் உயர்விஞ் ஞானமும்,
ஆனந்த கோசமும் அனைத்துந் தாண்டிய
சித்தும் சத்தும் தெரிந்து தெளியவே
சக்தி வேண்டும் ; சக்தியே யோக
சாதன சித்தி தந்திடுங் கனலாம்.
சுகமய மான சுதந்தரம் அதுவே.
எல்லாச் சமயமும் எல்லா யோகமும்
பார்த்தபின் பொதுப்படப் பயின்ற சாதனம்
உரைத்த படியே ஊக்கமாய்ப் புரிந்திர்.
உலகிற் கதனை ஓதவே யுரைப்பேன்....

* * *

வானக் குடைக்கீழ் வாழும் உலகின்
ஆடலை நடத்தும் அருளாண் டவனையே
சுத்த சக்தியாய்த் துதித்து நினைப்பீர்.
ஆருயிர்க் குலமெலாம் அதனுட லாமே !
உண்ணும் உணவும் உடுக்கும் உடையும்
பண்ணும் பணியும் எண்ணும் நினைவும்,
அதற்கே யர்ப்பண மாகச் செய்தலே

அதன்வழி வாழும் ஆரம்பப் படியாம்.
உள்ளும் புறமும் உரைமனஞ் செயலும்
படிகம் போலப் பரிசுத்த மாதலே
சுத்தயோ கத்தின் நித்தியச் சாதனம்.
தேகத் தூய்மை செப்புவேன் கேளீர் :
அடயோ கத்தால் உடலும் குடலும்,
நாடியும் திடமுற நாளும் செய்வோம்.
பொதுநல மான புதுப்புதுத் தொழில்களால்
வேர்க்க உழைத்து வீறு பெறுவோம்,
உழைப்பின் வேர்வை உலகின் செழிப்பாம்.
தூயநல் லுணவும், தூயநன் னீரும்
தூயநன் னினைவும், தூயநல் லுடையும்,
தூயநற் செயலும் நோயிலா வாழ்வாம்..
செங்கதிர்க் குளிப்போம், தீச்சுடர் வளர்ப்போம்.
ஒன்றுநான் கிரண்டுஓம் ஒழுங்கின் படியே
இழுத்தடக் கிவிடும் இருபத் தைந்து
பிராண யாமம் பிழையறச் செய்வோம்.
பத்துநா டிகளும் பலமாம் இதனால்.
ஓம்ஓம் என்றே உள்வெளி மூச்சைக்
கவனித் திருத்தலே கட்டும் மனதை....
உடலுயிர் மனமுந் திடமாம் இதனால்....
மனத்தூய் மையினை மறுவறக் கேளீர் :
மனதை வெல்லலே மாசிலா யோகம்.
மனமே மனிதன் ; மனமே உலகம்
மனமே துன்பம், மனமே இன்பம்.
மனத்தின் வெற்றியே வாழ்வின் வெற்றி.
தியானமே மனதைச் செயிக்கும் சாதனம்.
தியானமே யோக சித்தியின் உயிராம்.
புறத்தே திரியும் புலன்களை அடக்கி,
அலையும் சித்தம் அலையா திருத்தி,
நிம்மதி யான செம்மதி யுடனே,
உற்றெழும் நினைப்பை உதிக்கு மிடமே
ஒடுங்கச் செய்தும், உடனே யாரெனக்
கேட்டு விழிப்புடன் ஓட்டியும், உள்ளே
நானார், நானே நான வற்ற
சுத்தான் மாவெனத் துணிந்துணர்ந் திருந்தும்,
சுத்தோஹம் ஹரி சிவோஹம் என்றும்,
அவரவர்க் கிசைந்த அரியமந் திரத்தையோ
ஓங்கா ரத்தையோ உள்ளுற ஓதி

திவிர மான செபஞ்செய் திடலும்,
தியானமுஞ் செபமும் மோனமும் ஒழுக்கமும்
சுத்தயோ கத்தின் சித்தி நல்குமே.
தனித்தும் கூடியும் சங்கநே யர்கள்
தியானஞ் செயச்செயத் தெய்வந் துலங்கும்.
பஞ்ச கோசமும் பத்திந் திரியமும்,
சித்தமும் அதனல் சுத்தமுற் றெளிரும்.
நமதுயோ கத்தின் நாட்ட மறிவீர் :
அகத்திற் கிளம்பும் அரக்க ராகிய
ஆசை யாணவ மாசைத் துடைத்தே,
சொரூப மாகிய சுத்தனைக் கூடி
சுத்த சமரஸ சுதந்தர சக்தியை
கிளர்ந் தெழுந்து வளம்பெற ஊக்கி,
அதனல் அருளின் ஆற்றலைப் பெற்றே,
அருளால் உலகில் அரக்கர் பயத்தையும்
இருள்பயம் பொருமை இன்னல்கள் அனைத்தையும்,
நாட்டை நாடு நலிக்குந் தீதையும்
அடிமைத் துயரையும் அடியோ டொழித்து,
ஞால மெல்லாம் ஞானம் பரப்பி,
வானவர் வாழ்வை மாநில மாந்தர்
எய்தியிவ் வுலகம் இன்புறச் செய்தலே,
சுத்தயோ கத்தின் சூட்சுமப் பயனும்.
யோகமே உலகில் ஒற்றுமை யாக்கும்.
கரடிபோற் குகையில் கண்ணயர்ந் துறங்கும்
கொள்கையை ஒப்போம், குண்டலி சக்தியால்,
ஆதார சக்கிரம் ஆறும் மலர்ந்து,
ஸஹஸ்ரா ரத்திற் சாந்தமாய்க் கூடி,
மஹாகுண் டலியாம் வானமு தத்தை
யோக தாரையாய் உட்புறம் பரப்பி,
திவ்விய ஜீவன சித்திபெற் றனைவரும்,
பூரண ராகப் பொலிந்திட வேண்டும்.
பூரண சுத்தர் பாரினி லெங்கும்,
திசை திசை சென்று, தியானமந் திரங்கள்
எழுப்பி மாந்தரின் இதயம் மலரவே
சுத்தசா தனத்தைத் தொடங்கிட வேண்டும்.
பஜனை, மந்திரம், பக்தி, ஞானம்,
அருள்வாக் குகளைப் பொருளுடன் ஓதல்
பொதுநல மான புண்ணியம் புரிதல்
முதலிய வழியால் இதயந் தொட்டால்,

அன்பு பிறக்கும் ; அன்பை வளர்த்தால்
அதுவே வெற்றி யளிப்ப தாகுமே.
தெள்ளியர் கூடித் தியானம் செய்க :—
"ஓம்பர மாத்மா, உள்ளத் தானே,
உள்ளும் புறமும் தெள்ளிய சாந்தம்,
நிறைக ! மானிடக் குறைகள் ஒழிக !
மனந் திருந்தி, இனந் திருந்தி,
அசுர ரற்றுநாம் அமர ராகி
ஆத்தும சித்தியும் அகண்ட சித்தியும்,
தன்னுட் சியுடன் முன்னுல காட்சியும்,
உலக வாழ்வெலாம் உன்னுடன் ஒன்றும்
யோகமாய்ச் சதாசிவ போகமாய் வளரும்,
திவ்விய வரத்தைச் செவ்விதி னளிப்பாய்.
உடலம் சக்தி ஊற்றெனப் பொலிக.
உள்ளம் சுத்தன் உறைவீ டாகுக.
ஆருயிர் வாழ்க்கை அருட்பணி யாகுக.
உலகம் விண்ணுய் நிலவியோங் குகவே !
வேற்றுமை யொழிக ஒற்றுமை ஓங்குக.
ஆருயிர்க் குலங்கள் ஆன்ம நேயராய்,
ஓர்குலத் தேவராய் உதவிகொண் டோங்குக !
பலமதஞ் சாதிப் பகுப்புக ளின்றி,
சகமெலாம் சுத்த சக்திப் புதல்வராய்,
உள்ள மொன்றி ஓங்குக நாளுமே !
எல்லாம் வல்ல இறைவா, உனையே
சரண்புகுந் துள்ளோம் ; சத்திய ஜோதியே
ஓம்பர மாத்மனே உயிர்களை நடத்தாய் !
சுத்தஓம் சரணம், சக்திஓம் சரணம்"
என்றே அனைவரும் ஒன்றுய் நினைத்துத்
தியானம் நடந்தால் மோன மாகவே
இறைவ னருளால் எடுத்தது கூடும்,
மாந்தர் வாழ்க்கை மாறித் திருந்தும்.
தியானமந் திரத்தைச் செவ்வையாய் நாட்டிக்
கல்வியும் தொழிலும் கலையுந் தந்து,
மடமை வறுமை மயக்க மொழித்துக்
கவலையற் றுயிர்கள் கருணையில் வாழும்
அத்ததி தேச பக்தியைத் தூண்டி
அரக்கரை நீக்கி, அமர சுதந்தரம்
அடைத லாகும். அன்பீர், அறிவீர்.
பத்தாண் டின்னும் பண்ணும் தவத்தால்

பூரண ராகிப் பாரினைக் காண்போம்.
முன்னணி யாக்கிப் பின்னணி செய்வோம்.
உள்ளே வென்றபின் உலகை வெல்வோம்...
காலந் தன்னைக் கணக்கா யறிந்து,
வல்லார் திறனை வகையுறத் தேர்ந்து
சொல்லுமுன் செயல்வழி நில்லுமின், வெல்லுமின்...
சாந்தம் பொங்குக, சத்தியம் வெல்க,
சுத்த முத்த சத்திய சமத்துவ
சித்திபெற் றோங்குக நித்திய உலகே !

இவ்வகை அருளச் சாந்தன் இனிதினி தென்று கேட்டுத்
திவ்விய சுத்த சங்கத் திருவரு ளாள ரெல்லாம்,
செவ்விய உளங்கு விந்து, தியானத்தில் ஒருங்கி ருந்தே,
எவ்வுயிர்க் கனலு மாகும் இறைவனைத் துதித்தார் மாதோ :—

கருணைப் பெருமானே, கனகச் சுடரோனே,
அருணோ தயம்போலெம் அறிவிற் பொலிவோனே,
திருவார் குருநாதா, சிவனே யென உள்ளம்,
உருகும் பெருவாழ்க்கை உடையார் பெரியாரே !

வற்றாக் கடலானை, மலையிற் பெரியானைப்
பெற்றார் அன்பிற்கும் பேரன் புடையானைக்
கற்றார் கொண்டாடும் காட்சிக் கரியானைப்
பொற்றா மரைப்பாதம் போற்றிப் பணிவோமே !

ஞானப் பரஞ்ஜோதி, ஞாலம் படைத் தாண்டுந்
தானே தனியாகத் தாக்கற் றொளிர்வானை,
வானொத் தருள்வானை மாந்தர்க் குயிரானை,
ஊனொத் துறைவானை, உள்ளொத் துணர்வோமே !

கண்டார் மனமுண்ணும், காந்தக் கனலானை,
விண்டார் அமுதுண்ணும் மெய்யின் பறிவானை,
பண்டார் மறைகோடி பாடும் பொருளானைத்
தொண்டார் துதிபாடித் தொழுவார் மகிழ்வாரே !

அறிவன் பருளாற்றல், அறத்தால் வரும்இன்பம்,
திறலார் வினைவெற்றி, தேசத் திருத்தொண்டு,
பிறவிப் பயனெல்லாம் பெறுவார் எல்லாரும்
இறைவன் மலர்ப்பாதம் ஏத்தும் அறவோரே !

பத்தனும் சுத்தா னந்த பாரதிக் குலகை யாளும்
சுத்தனும் இறைவன் சக்தி தூண்டிய காவி யத்தில்,
இத்துடன் மூன்றாங் காண்டம் இனிதுற முடிந்த தந்த
சுத்தசா தனத்தை மாந்தர் சுருதியாய்ப் போற்றி வாழ்க !

பாரத சக்தி மகா காவியம்

நான்காவது

தானவ காண்டம்

[சுத்தன் தியானக் காட்சியில், தந்தை தானவத்திற் செய்யும் பணிகளைக் கண்டு அவருக்குத் துணையாக ஒரு சாதுக்கூட்டத்தை அனுப்ப நிற்கிறுன். விமானத்திலிருந்திறங்கி, போகர் வருகிருர். அவர் சத்தியனைத் தானவத்திற்கு அழைத்துச்சென்றதும், அங்கே கலியன் மாவலியுடன் சதிசெய்து புண்ணியபூமிக்குப் பாபச் சேனையைக் கொண்டு சென்றதும், சத்தியன் மெய்யன் என்ற பெயரால் உருமாறி, தானவாசுரர்களின் அசுரமாயம் மாறக் கலைக்கோயில் கட்டிச் சன்மார்க்கப் பணிசெய்ததும், அப் பணியில் கௌரியின் ஆவி புகப்பெற்ற சக்தி பங்கு கொண்டுழைத்ததும், மாவலியின் தம்பி சன்மார்க்கியாகி, அண்ணலைக்கண்டித்ததும், இருவருக்கும் போர்மூண்டு, கொலைக்கருவிகளால் நாடிழந்ததும் அச் சமயம் புண்ணியபூமி சுதந்தரக் கிளர்ச்சி செய்ததுஞ் சொல்லுகிருன்.]

பாரத சக்தி வணக்கம்

பேரருட் புலவர் நாவும், பெருஞ்செய லாளர் நெஞ்சும்,
வீரரின் கரத்தும், ஐந்தை வென்றுளே அமைதி கண்ட
தீரரின் யோக சித்தத் திறத்தினும் வளருகின்ற
பாரத சக்தி யென்னுட் பாமலர் பொழிக மாதோ !

கதிராகிக் கடலாகிக் காற்ருகிக் காராகிக் கண்ணி லத்தில்,
பதமான பயிராகி, உடலாகி, உயிராகிப் பரவி நாளும்,
இதமான பொதுவாகி, இரண்டாகி மூன்ருகி, எல்லாம் ஆகிப்
பதியாகி ஒப்பில்லாப் பரமாகுந் திருவருளைப் பக்தி செய்வோம் !

இனியவுல கெமதென்னும் இறுமாப்பிற்
படைதிரட்டி, இகல்வி ளைத்துத்
தனியகந்தை வடிவான தானவர்கள்
அறமழித்த தன்மை போக்கி,
மனிதமதி மயக்ககற்றித் தானவத்தின்
மறவலியைத் தகர்க்க மெய்யன்
அனைவருக்கும் அமைதிதரும் அருட்பணிகள்
ஆற்றியதை அமர்ந்து கேளீர் !

1. போகர் வரவுப் படலம்

ஆர்த்தன புள்ளி னங்கள், அருவியின் பாட்டைக் கொஞ்சி
ஆர்த்தது மலைப்பூங் காற்று, காலையின் அமைதி தன்னில்,
ஆர்த்தது சங்க நாதம், அரியநல் லான்ம நேயர்,
ஆர்த்து"சுத் தோஹம்" என்றே வட்டமாய் அமர்ந்தார் ஆங்கே!

தங்கப்புன் னகையை வீசித் தாமரை தனையே மூப்பித்
திங்களைச் செலவு கூறித் தினகரன் உதித்த வேளை,
மங்களத் தூயன் முன்னே மாதவர் ஆத்மா னந்தம்
பொங்கிடத் தியானஞ் செய்து பூரணப் பொலிவு பெற்றார் !

வள்ளலின் யோக சித்தி வழங்குநல் லமுத சக்தி
வெள்ளத்திற் குளித்த சுத்த சங்கத்தின் விமல ரெல்லாம்,
ஒள்ளிய வெண்ணெ ருப்பில் ஒளிர்பசும் பொன்னைப் போன்றார்,
தெள்ளியர் தியானா னந்தம் செப்பிட மொழியு முண்டோ ?

தீயெழப் பசித்த போது, தேவமு துண்டார் போலும்,
தாய்முலை யுண்டு வந்து தவழ்ந்திடுஞ் சேயைப் போலும்,
தேயத்தின் சுதந்த ரத்தை நாட்டிய தீரர் போலும்,
தூயசிற் சக்தி யுண்ட முனிவரர் துலங்கி னாரே !

வண்டென ஓமொ லிக்க வளர்சுக நிட்டை செய்து,
விண்டுதன் னின்பந் தூய விலமலனுள் ளாழ்ந்து, நன்று
கண்டதோர் காட்சி தன்னைக் 'கருத்துடன் கேளீர்' என்று
குண்டலி முனிவர் நெஞ்சங் குளிர்ந்திட வாய்தி றந்தான்.

சுத்தன்

முற்றிய தருந்தவம் முனிவர் சிங்கங்காள்,
பெற்றனம் பாரத சக்திப் பேற்றினை,
சுற்றுல கினியருட் சுதந்த ரம்பெற
உற்றது நங்கனல் உதவி செய்யுநாள்...

உள்ளத்தில் அடைந்தநம் ஓங்கு சித்தியைப்
பள்ளநீ ருலகமும் பகிர்ந்து பத்தியாற்
கொள்ளநாம் இனியிடங் குறித்துச் செல்லுவோம்,
வெள்ளத்தின் பயன்பயிர் விளைத்த லாகுமே !

கண்ணறும் அரக்கருங் கலியன் கூட்டமும்,
எண்ணறு தீவினை யிழைக்கின் றாரிங்கே,
தண்புனற் கொதிப்பினைத் தடுக்குஞ் சூட்சுமம்,
வெண்ணெருப் பெரிந்திடும் விறகை ஈர்த்தலே !

ஆதிநல் லறம்வினை யாடு நாட்டிலே,
தீதெனப் புகுந்தனர் தெவ்வர் தானவர்,
காதகர் வாழ்ந்திடுங் கடிய தீவிலே,
சாதகர் சென்றினித் தருக நற்றுணை !

எந்தையங் கேகியே இனிய தொண்டுகள்
முந்திநன் கியற்றினன் ; முரண்செய் தானவர்,
தந்தவெந் துயர்களைத் தாங்கிச் சாந்தமாய்
நிந்தைசெய் தீயவர் நிலையை மாற்றினான்.

அங்கொரு சக்தியும் அருளின் வாய்ந்தனள்,
உங்களுள் ஒருகுழு உடனெழுந் துறீஇ,
இங்குள நிலைசொலி எந்தை நாட்டிய
சங்கத்தின் பயன்களைத் தழைக்கச் செய்குவீர்.

இவ்வகை சுத்தனும் இயம்பத் தொண்டர்கள்,
அவ்வகை செய்குவம் அருளி னாலெனத்
துவ்விய சீலரைத் துலங்கத் தேர்ந்தனன்,
திவ்விய குருவரன் "செல்க" வென்றனன்...

போகர் வரல்

இனையன நிகழும் போதே இறங்கிய விமானம் விட்டுப்
"புனிதநீ வாழ்க!" வென்று புண்ணியப் போகன் வந்தான்...
"அனைவரும் வருக" வென்றே ஆர்த்தனர் அதிச யித்தார்...
"இனிதினி" தென்று சுத்தன் இருகையாற் றழுவி யேற்றான்...

அறிஞனை யறிஞன் உள்ளே யறிந்துசட் டென்று, வந்த
நிறைவினை முடிய வேண்டி, நிகழ்ச்சிகள் பலவுங் கூறிச்
"செறிதவப் பெரும, நானே சத்திய னுடனே சென்று,
மறவினை யரக்கர் தீவில் மறுவற வாழச் செய்தேன்"...

என்றலும் போக னுங்கே, "என்மனங் குளிர்ந்த தையா,
இன்றுநீ வந்த தேயாம் எடுத்தநல் வினையின் வெற்றி ;
வன்றவக் கதிரே, எந்தை தானவர் வாழுந் தீவில்
என்றெவ்வா றிறங்கி னானென் றியம்புதி" யென்றான் சுத்தன்.

நல்லதென் றுவகை கொண்டு, நவீனமும் பண்டுந் தேர்ந்து,
வெல்வலி மிக்க மெய்யன் விமானத்தில் அரக்கர் தீவு
செல்வகை சென்று செய்த செயல்களைப் போக னுங்கே
சொல்வகைசொன்னதெல்லாங்கவிதையாய்ச்சொல்லுவேனே!

2. சாமளப் படலம்

போகன்

யோகத்தால் உலக முய்யும் ஒள்ளிய சன்மார்க் கத்தைப்
பாகொத்த மொழிக ளாலும் பணிகளின் பயன்க ளாலும்,
தாகத்தால் விரும்பு வோர்க்குத் தந்திடுந் தூய கோளாய் !
வேகத்தால் கலியன் சென்ற விமானத்தைக் கண்டான் மன்னன்!

சீருயர் சித்தி மெய்யன் சிதைவறச் சினந்து தாக்கிப்
பேருயர் அரக்க னுன பேயனின் விமானம் ஆங்கே,
காருயர் கடலின் மூழ்கக் கண்டனன் ; கலிவி மானம்
போருயர் புயலைப் போலப் போய்மறைந் திடவுங் கண்டான் !

கூற்றென முளைத்த வூணர் கொண்டுசெல் பகைவன் எங்கோ
காற்றென மறையக் கண்டு கலங்கிய மெய்ய னுங்கே,
நாற்றிசை சுற்றிப் பார்த்து, நலிவுற விமானந் தன்னைப்
போற்றிஓம் சக்தி யென்று பூமியில் இறக்கி னுனே !

சூரனும் சத்தி சிங்கன் உருத்திரன் சுபலன், வேலன்,
வீரகே சரியு மான வீரர்கள் சூழ நிற்கும்
தீரனை "வருக எங்கள் சாமளத் தீவிற்" கென்றே
ஆரங்கள் சூட்டி ஏற்றுன் அன்புள சாந்தி மானே !

கோமளப் பசுவ ளத்தைக் கொஞ்சுபூங் குயில்கள் ஓதும்,
சாமளத் தீவ கத்தார் சாந்திமா னுடனே போற்றி,
"நாமள வற்ற பேறு நயந்தனம் அரசே யின்றெம்
பூமியும் பிழைத்த" தென்றுர் புனிதனை வாழ்த்தி னுரே !

சாந்திமான்

பொருவலி யசுரப் பேய்கள் புகலொணுத் துயரந் தந்தார்,
ஒருவநீ அவரை மோதி விமானத்தை உடைக்க நேர்ந்தாய் ;
கருகிய வாழ்வைக் காக்கக் கருணைவான் போல வந்தாய் ;
வருகநீ சுத்தன் றந்தாய் வாழ்கநீ டூழி நன்றே !

சத்தியன்

ஒருவிமா னத்தை வீழ்த்தி, ஒன்னலர் தப்பி யோட
வருவிமா னத்தை விட்டேன் ; மானத்தைக் காக்க வேண்டி,
உருளுல கனைத்துஞ் சுற்றி, ஊணரின் இருக்கை கண்டு
தருமத்தை நாட்ட வேண்டுங் கருமத்தைத் தாங்கி னேனுல் !

இருள்வழி புலன்கெட் டோடும் இகலவர் செருக்கை நூறி,
அருள்வழி பரப்பி மீண்டும் அமைதியை உலகில் நாட்டும்
தெருள்வழி யறிகி லாது திகைத்தனன், சாந்தி மானே,
சுருளலைக் கடலை வெல்லுந் துணையெனக் குதவு வாயே !

சாந்திமான்

பூமியை வலஞ்செய் துற்ற புணைபல வுடையேன் ஐய,
தாமத வூணர் வாழுந் தானவங் காண வேண்டி
நீமனங் கொண்ட வீர நெடும்படை யுடனே சென்று
சேமமாய் வருவாய் வெற்றித் திருவணிந் தமரர் கோன்போல் !

பொதிகையில் விளைந்த தேக்காற் புனைகலம் பலவும் ஈவேன் ;
முதியதண் கடலறிந்த முன்னணி மீகா ரீவேன்,
இதமுறும் பயணத் திற்கிங் கேற்றதெல் லாமும் ஈவேன்,
சுதந்தரங் காண வேண்டித் துணிந்துயிர் தனையும் ஈவேன் !

வருகநல் வேந்தே, வீரர் வருகமுன் அயர்வு தீர்க ;
பொருகடல் கலக்கப் பத்து நாட்களிற் புறப்பட் டேகி,
துருவுவோந் தானவத்தை என்றலுந் தூய சாந்தன்,
உருகிய நன்றி யன்பை யுரைத்துடன் சென்றான் மெய்யன் !

வருந்திய வருத்தந் தீர வசதிசெய் மனையில் ஏற்றுத்
திருந்திய முறையிற் செய்து தின்பதற் கெளிய தான
விருந்தளித் தாடல் பாடல் விளங்கிய கலைக ளாலே
மருந்தினும் இனிய சொல்லான் மன்னனை உபச ரித்தான் !

சித்தியில் இருந்த வாறே திருவுறு சிறப்பி னோடும்
பத்துநாள் அன்பன் செய்த பணிநல முவந்து நாளும்,
சுத்தனும் இறைவன் சக்தி துணையினை வேண்டிக் கொண்டு
சத்திய வேந்து தியானத் தவம்புரிந் திருந்தான் மன்னோ !

சத்தியன்

"ஆதியாய் அனைத்தி னுக்கும், அநாதியாய், அன்ப ருள்ளே
போதமாய்ப் பொலியுந் தூய புண்ணிய முதல்வா போற்றி !
காதலா லுன்னை என்றுங் கதியெனச் சரண டைந்தேன்.
ஆதர வளித்தென் செய்கை நலமுற அருள்செய் வாயே !

வீட்டினை நீத்தேன், அன்பு விமலனை நீத்தேன் ; சொந்த
நாட்டினை நீத்தேன் ; இந்த நானிலந் தன்னை வாளால்
ஆட்டினைப் போல றுக்கும், அரக்கரைத் தீவிற் கண்டு,
மீட்டற வழியி லுய்க்க மீதெனை நடத்து வாயே !

இன்னவா றிறைஞ்சி நாளும் இறைவனின் அருளை வேண்டும்
மன்னவன் அந்த ரங்கம் மகிழ்ந்திடத் தெய்வ சக்தி
முன்செலென் றுந்த, நல்ல முகூர்த்தமும் அமையக் கண்டு
தன்பெருங் கடமை செய்யச் சத்தியன் எழுந்தான் மாதோ !

"தலைவநின் பயணத் திற்குத் தயாரெனச் சாந்தி மானும்,
பலதிறக் கப்பல் காட்டிப் பண்டங்கள் அனைத்தும் ஏற்றி,
நலமொழி பலவுங் கூறி, நயமுற வழிந டத்த
நிலமக ளின்ப மெய்த, நிருபனும் கடல்கண் டானே !

கடற் காட்சி

தழங்குதண் முரச மார்க்கத் தரங்கத்தில் அரங்கம் ஆடி
அழைத்திடக் கலங்க ளெல்லாம், அன்பர்கள் வெற்றி கூறப்,
பழுதறு மெய்யன் சாந்தி மானுடன் சென்ற போதே,
ஏழுரவி வரவு கூறி இளநகை புரிந்தான் மன்னே !

திரட்சிகொள் இருட்கணத்தைத் தின்றிரவி வீசிடும்
அருட்சுடர்ப் பெருக்கிலே, அகண்டவான் விரிவிலே,
உருட்சிகொள் உலகிலே, உளத்திலே நிலாவிடும்
தெருட்சிகொள் பரம்பொருளைச் சிந்தைசெய்வ தின்பமே !

மாசகன்ற நீலவான் மணிமுடி தரித்தனள் ;
தேசுலாம் இருசுடர் திருக்கண்ணு யணிந்தனள் ;
வீசலை யுடுத்தனள் விளங்குயிர்க் குலங்களில்
ஆசையாய் அனவரதம் ஆடும் சக்தி யன்னையே !

என்றுமெங்கு மின்பமாய் இகபர விளக்கமாய்
ஒன்றுதான் எலாமுமாய் ஒளிர்பொருளின் உண்மையை
சென்றுசென் றெழுதியே யழித்திடுந் திரைகளின்
வென்றிவாச கத்தினை வியந்தவர் புலவரே !

விழைந்தெழுந்த சித்தம்போல் விழுந்தெழுந் திரைகளே ;
அழுந்தும் ஆழி யாழமே அமைதி யுள்ளம் போலுமே !
செழுஞ்சம நிலையிலே செழிக்கு மான்ம சித்தியை
முழங்கு கின்ற தார்கலி முரசதிர் மறையெனுஅ.

பாவு வேலை பாண்டி லாடும் பாலகரின் கூட்டமோ ?
தேவதேவ னைத்தொழுந் திருத்தொண்டர் கரங்களோ ?
யாவு மான மெய்ப்பொருள் இறைவனை இடைவிடா
நாவு கோடி கோடியால் நவிலு கின்ற வேதமோ ?

வையமுய்யத் தொண்டுசெய்யும் வாழ்வுவாழ்க வாழ்கவே !
மெய்யன்வாழ்க ! துய்யன்வாழ்க ! வென்றுசேடி மாருடன்,
கைகள்கொட்டிச் சர்ச்சரித்துக் கால்கள்வீசி வீசியே
நெய்தற்செல்வி தேசிக நிருத்தமாடுங் கோலமோ ?

ஈனமான செய்கையால் இடர்விளைத் துலாவிடுந்
தானவர் அகந்தையைத் தணித்துத்தீமை போக்கியே,
மானிலத்திற் சாந்தமே வளரச்செய்மின் வீரர்காள்
ஏனுறக்க மென்றலை யெழுந்தெழுப்பும் ஆழியே !

கப்பற் காட்சி

துந்துபி முழங்கதுவ சங்களொடு தொண்டர்,
சந்ததமும் வெல்கதரு மம்வளர்க வென்றே,
இந்திரனுக் கேற்றஇர தப்பவனி கொண்டே
முந்தொலிசெய் மூரியின்முன் மூரியென நின்றார் !

மாந்தர்களு மாதர்களு மங்கல மிசைக்கப்
போந்துபுக ழேந்திய புவிக்குரிய வேந்தன்,
தேர்ந்தகலை வாணர்கைத் திறம்பட வமைத்தே
நீந்துபுணை கண்டெதிர் நிமிர்ந்துள மகிழ்ந்தான் !

சுகக்கனி யுண்டவன் தொகுத்த தீவிதோ !
தகைமிகு தமிழர்கள் சமைத்த சேதுவோ !
திகைதரு திமிங்கிலஞ் சேர்ந்த கூட்டமோ ?
தொகைபெறு மரக்கலந் தொடர்ந்த காட்சியே.

தண்கட லுடுத்திய தரைக ளேந்திடும்
பண்புறு துறையெலாம் பரந்த ளந்தது,
எண்ணரு போர்வினை எளிதில் வென்றது ;
புண்ணிய மெனப்பெயர் போந்த கப்பலே !

செய்பொருள் விற்றருஞ் செம்பொன் ஈந்தது,
மெய்வழித் தொண்டர்க்கு வெற்றி செய்தது ;
துய்யவர் துணையெனத் துலங்கு மப்புணை
வெய்யவர் நமனென விளங்கும் வேகத்தால்.

நீண்டிடு பயணத்தை நிறைவு றுத்தவே
வேண்டிய பொருட்குவை விளங்குங் கப்பலில்,
ஈண்டிய வீரரோ டெழுந்த சத்தியன்
ஆண்டவன் அருள்கென அமர்ந்து கொண்டனன் !

அடர்திரை சிலிர்த்தெழும் ஆழிச் சிங்கத்தின்,
பிடர்தலை யேறிய பெரிய வீரனும்
இடர்களைத் தாண்டியான் எண்ணும் புண்ணியக்
கடமைகள் கூடிடக் கடவுள் காப்பென்றான் !

"ஆதி சக்தி யருந்துணை நல்குக !
தீதி லாதவுன் செய்கை விளங்குக !
போதி, போந்து வருகுதி" என்றனன்
ஈதலே யற மென்கிற சாந்திமான்.

"நன்றி நன்றி நடுநிலை மன்னவா;
சென்று மீளுதும்" என்றனன் சித்திபன் ;
"வென்றி ! வென்றி" யென் றேவிரை மாமலர்
ஒன்று சேர்ந்த உளங்கள் உதிர்த்தவே !

சத்தி துணை சத்தியஞ் சயம்எனக் குரல்கள்
ஒத்திசை முழங்கிட முரசுகள் ஒலிக்க,
முத்துபளிங் கித்தரையில் முன்னுருள்வ தேபோல்,
சத்தியன் புணைகளூந் தவழ்ந்தன விரைந்தே !

3. கடற் படலம்

வான மீன்கள் சூழநல் வழியனுப்பி வாணிலா
போனதும் பசுஞ்சுடர் புலர்ந்து பொற்கை நீட்டியே,
'தானவர் அதர்மத்தைத் தகர்த்த வேந்தன் வாழ்' கென
மோனஆசி கூறியே வழிநடத்த முன்னின்றான் !

கண்வளர் திசையெலாங் களிவளர் திரைக்குழாம்,
மின்வளர் முறுவல்வீசி விந்தைவிந்தை யாகவே,
பொன்வளர் கதிர்க்குலத்தைப் புல்லிப்புல்லி யாடிடும்
இன்பமான காட்சியும் இறைவனோடுங் காட்சியே !

கதிர் வணக்கம்

வளிநிறை வெளியிலே, வரம்பிலாத வானிலே,
அளிநிறை மழையிலே, அலைபுரள் கடலிலே,
ஒளிநிறை கதிரிலே, உயர்மலை யளித்திடுந்
தெளிநிறை நதியிலே திருநடம் புரிவதார் ?

காலவான் கருவிமா மழைதருங் கதிரவன்,
கோலமா முகத்திலே குலாவுசோதி யாகவே,
ஞாலவான் பயிரையும் உயிரையும் நடத்திடும்,
மூலசக்தி நாதனே முழுமுதற் கடவுளே !

விண்ணுமண்ணு மந்தரத்தும் வித்தகர் அறிவிலுங்
கண்ணிலுங் கருத்திலும் கனலருட் கதிரவன்,
எண்ணுமெங்கள் எண்ணத்தை இனிதுற வுயர்த்தியே
புண்ணியப் பொலிவுடன் பொருந்தியெம்முள் வாழ்கவே !

தூயநல்ல சிந்தையுந் துலங்கு ஞான சக்தியும்,
நோயிலாத யாக்கையும், நுவலரும் தியானமும்,
ஆயுளாற்றல் ஆண்மைவீரம் அன்புமின்ப வாழ்க்கையுஞ்
சேய்களுக்குத் தாயெனத் தினகரன் அருள்கவே !

உள்ளமான வானிலே ஒளிவளருஞ் சோதியே,
தெள்ளறிவைத் தூண்டியெம்மைத் தேவராக்கிப் பேரின்ப
வெள்ளமாம் அருளிலே வினையுயிர்சென் றுன்னையே
அள்ளிநன் றணைந்திடும் அரியமுத்தி நல்குவாய் !

தேய்ந்திருள் விலகிடத் திருநகை புரிந்திடும்,
சாந்தமான சோதியைத் தலைவணங்கி யிவ்வகை
வேந்தனோடு வீரர்கள் விரும்பியோது மெல்லையில்,
ஏந்து வங்கம் இந்தியக் கடல்கடந்து சென்றதே !

உலக யாத்திரை

மற்கடல் கடந்த வீரர் மன்னன் கப்பல் வந்ததும்
கற்கடத்தி ராசியின் கடற்றுறை வகிப்பவர்,
'நிற்க' வென் றுபசரித்து, 'நீடு வாழி' யென்னவே
முற்பட விடுத்தனர் 'முயற்சி வெல்' கென் றோதியே !

அடுத்தடுத்த தீவகத் தரக்கர்வந் திழைத்திடுங்
கடுத்ததொல்லை யின்கதை கணக்கிலாது கேட்டனர் ;
தடுத்திடச் செயலிலோமத் தானவர் குழுவினைப்
பிடித்தொடுக்க வல்லவர் பெரியவீரர் என்றனர்.

ஐங்கடல் உடுத்தபாரில், ஐந்துகண்ட மெங்குமே
ஐந்திணையுந் தேடியும் அரக்கர்தீ வறிந்திலார்.
ஐம்பொறி புலன்களால், அருமுயற்சி செய்துமே,
ஐம்பிழைத் தொழிலினுர் அகப்படா தொளிந்தனர் !

மோதுநீள் கடலிலே, முடிவிலா நெடுந்தொலை
போதலால் இளைத்தின்றோடு போதுமென்னும் வீரர்க்கு,
ஓதிக் [1] குக், [2] கொலம்பஸ் [3] காமர் உன்னத முயற்சியை
மீதுஞ் செல்லத் தூண்டுவான் விடாமுயற்சி கொண்டவன்....

தென்பரவைத் தீவுடன் , செழித்த சீனம் ஜப்பனைப்
பொன்பர வமெரிக்காவைப் போர்வளர் ஐரோப்பியை
தொன்மைஆப்ப ரிக்கத்தைச் சுழன்று சுற்றிப் பார்த்துமே
வன்பகை யரக்கரின் மறைவிடம் அறிந்திலான்.

சென்றசென்ற திக்கெலாஞ் சிறப்பொடேற்று மன்னனை,
வென்றி கூறுவார் அரக்கர் வெஞ்செயலுங் கூறுவார் ;
தொன்று தொட்ட சீர்மிகத் துலங்கு ரஷ்ஷி யாவிலும்,
இன்றுமிக்க சீர்த்தியோங்கும் இங்கிலாந்துங் கண்டனன் !

ஆக்கமிக்க ஜெர்மன்ப்ரான்ஸ் இதாலி நார்வே * சீடனில்
ஊக்கமிக்க மன்னவன் உறைந்துறைந்து தேடியும்,
தூக்கமற் றிடும்பைசெய்யுந் துட்டர் போரைக் கேட்டனன்,
தாக்கு கின்ற தானவத்தைத் தாரணியிற் காணிலான் !

---

1. Captain Cook 2. Columbus 3. Vas code gama *ஸ்வீடன்

எவ்வணத்தர், எக்குலத்தர், எவ்விடம் இருப்பவர்,
இவ்வணத்தர் இங்கிருப்பர் என்றுசொல்வ ரில்லையால்,
வெவ்விய கவலையுற்ற வேந்தன்சிக ரத்திலே,
தெய்வமே துணையெனத் தியானஞ்செய் திறங்கினன்.

பொங்குமாழி செஞ்சுடர் பொலியப்புன் சிரிப்புடன்,
செங்கதிர் விடைபெற்றேகித் திக்கெலாங் கறுத்ததும்,
இங்குளேனென் றின்பமான தண்கதிர் இறைத்துவெண்
திங்கள்,வான மீனெடுந் திருப்பவனி வந்தனன் !

விழிநடந்த திக்கெலாம் வினவியே அலுத்தவர்,
பழிநடந்த தானவர் பதுங்குதீவைக் காணிலார்,
வழிநடந் தயர்ந்தவர் மதிநிலாவி லாடியே
சுழிநடந்த ஆழியைத் துயருழன்று நோக்கினர் !

வீரர்

நாமறிந்த நாடெலாந் துருவி நன்றுச் சோதித்தோம்.
சேமமின்னுங் காணிலோந் திரும்பின் ஆண்மை மாசுறும் ;
பூமியின் வடமுனை பொருந்தி யின்னுங் காணுவோம்—
கோமகற் குயிரையுங் கொடுத்திடத் துணிந்தநாம்...

மன்னன்

இன்ன லுற்ற வீரர்காள், இனிநமக் குறுதுணை
அன்னை சுத்த சக்தியே ; அவள் அருளைப் பாடுவோம்,
முன்னமக் கருளிய முதல்வியின் றருள்கவே
என்னமன்னன் வீரரோடும் இவ்வகை துதித்தனன் :—

பெருத்தபா ரகத்திலே, பெயர்வடிவ பேதமாய்,
ஒருத்திநீ பராபரை உலப்பிலாடல் செய்குவாய் ;
திருத்த முற்ற தீரருக்குத் தீந்துணைசெய் யன்னையாய்
வருத்தமெல்லா நீக்கும் அன்பின் ஆழிவாழி வாழியே !

கனத்திடுங் கவலைகள் கரந்து நோக வாட்டினும்,
சினத்துடன் இயற்கையின் புயல்கள்சீறித் தாக்கினும்,
மனத்தமைதி கொண்டுனை மதித்திறைஞ்சி அன்புடன்
நினைத்தனம் ; அனைத்துநீ நினைத்ததே நடக்குமால் !

தாய்நிலம் விடுத்து நீண்ட தண்கடலைத் தாண்டினேம்,
தீயதான வர்கள்வாழுந் தீவையின்னுங் காணிலோம்,
நேயரும் அறிகிலார் ; நினைத்தவிர வேறிலோம்,
தூய சக்தி யன்னையே துணைசெய் வீர சண்டியே !

சுருளலைக் கடல்கடந்து, துட்டர் வாழுந் தீவிலே,
இருளலைப் புயல்களை இடரிலாது மாற்றியே
அருளலையை வீசநாளும் ஆசைகொண் டெழுந்தனம் ;
கருணைசக்தி யம்மையெம்மைக் காப்பதுன் கடமையே...

எண்ணி யிவ்வகை யேத்திடும் வீரர்கள்
"பெண்க ளைக்கள வாண்டிடும் பேயினர் ;
திண்ணெ னப்புடை மின்" எனச் சீகரர்,
அண்மை யில்வர யாதென் றறிந்தனர்.

தோத்திரஞ் செயுந் தொண்டரைக் கண்டபின்
ஆத்திரந் தணிந் தன்புள சீகரன்,
சீர்த்தி யோங்கிய சித்திப வாவெனப்
பூத்து வகை புரங்கொடு சென்றனன்....

4. சீகரப் படலம்

இன்ப மின்பமென் றின்னியற் சீகரன்,
முன்பி ளைப்பினை முற்றிலும் ஆற்றென
நன் மனைக்கு நடத்தி நிருபனை
அன்பு மிக்க விருந்தணி யாற்றினான்.

தென்னை வீசிடுந் தென்றல் வருடிட,
தன்னி டர்களைச் சற்று மறந்தவன்,
இன்ன மைதியில் ஆழ்ந்திளைப் பாறியே,
பொன்னைப் பூசும் புலரியைக் கண்டனன்.

பழந்த மிழெனப் பண்கள் முழங்கவே,
எழுந்த சத்தியன் இன்கட னாற்றியே,
இழந்த நெஞ்சம் இருமடங் கெய்தபின்,
தொழுது சுத்தனைத் தோத்திரஞ் செய்தனன்.

புதியநாண் மலரைப் போன்ற புன்னகைப் பொலிவு நல்காய்,
கதிரவன் போன்ற தூய கவலையில் வாழ்வை நல்காய்,
பதியறி வருளாய், நாளும் பரிந்துயிர்ப் பணிசெய் துன்னைத்
துதிபுரி சொல்லை நல்காய் சுத்தசை தன்ய னேஓம் !

புனிதன் றந்தை புகழ்பெற் றொளிர்கென
இனிய சீகரன் எய்தி யிருந்துதன்
மனது றுந்துயர் மன்னனுக் கோதியே
தனது செல்வமுந் தந்தனன் ஆங்கனே !

சீகரன்

பேயென நிசியிற் போந்து பெண்களைத் திருடு கின்றார்.
தீயுமிட் டிடும்பை செய்வார்; செல்வத்தைக் கொள்ளை கொள்வார்
ஏயெனும் பொழுதிற் கள்ளர் இயந்திர ஊர்தி யேறி,
மாயமாய் மறைவார் ; நாங்கள் மடக்கவும் இயலோம் ஐயா !

கேளென தருமை நண்பா கெடுமதி யரக்கர் என்றன்
வாள்விழி அழகி தன்னை வஞ்சமாய்க் கடத்திச் சென்றார் !
மீளருந் துயர முற்றேன் ; மிண்டரை அடக்க என்பால்
ஆளுண்டு ; தான வத்தின் அமர்திசை யறிகி லேனே !

சொல்லொணுக் கலையின் செல்வி, சுந்தரி யெனது பாவை,
வெல்லொணுத்திருக்கள்கொண்டு விளங்கினாள்; சித்தி யெல்லாம்
வல்லவன் போகன் காப்பில் வளர்ந்தவள், அவனை அந்தப்
புல்லர்கோன் அரசி யாகப் பொருந்தினான் என்றுஞ் சொல்வார்!

வட்டமா வுலக ளந்த வளமிகு போகன், ஊகன்,
அட்டமா சித்தி வல்லான், அருந்தவம் புரிந்த றிந்தே
துட்டரின் சூழல் காணச் சூத்திரப் புரவி செய்தான் ;
இட்டசித் திகளை யீவான் எனக்கொரு வாக்கும் ஈந்தான்...

அல்லலிற் கைகொ டுக்கும் அருந்தவப் போகன், "இங்கே
வல்லவன் வருவான் ; இந்த வான்பொறி அவனெ டூர்ந்தே
செல்லுதும் தானவத்தைச் சேர்குதும், அரக்கர் தம்மை
வெல்லுதும்" என்றுசொன்னான்வீரநாம்அவனைக்காண்போம்!40

சத்தியன்

அறிகுவன் யோகி போகன் அட்டமா சித்தன், அன்னோன்
புரிவிமா னத்தி லேறிப் புகன்றவா றேகி, நானும்
எரிசின அரக்கர் தீவில் இரக்கமும் அறமும் நாட்டிப்
பரிவுடன் பணிசெய் வேனுன் பாவையைக் காண்பேன் ஐயா !

* * *

இவ்வகை இரண்டு பேரும் எண்ணத்திற் கலந்து கொண்டு,
திவ்விய முனிவன் முன்னே சேவடி பணிந்து நின்றார் ;
துவ்விய போக னுங்கே "தூயனை ஈன்ற மெய்யா,
செவ்விய மன்ன, வீர தீரனே வருக" வென்றான்.....

சத்தியன்

மாதவ வந்தேன் ; மிக்க மாகடல் கடந்து நாளும்
வேதனை யடைந்தேன் ; கொண்ட வினையெனைக் கடுமையாகச்
சோதனை செய்ததைய ; துட்டரின் சூழல் கண்டு
தீதினைத் தீர்க்க வேண்டுந் திறமெனக் கருளு வாயே !

காதல்வாய்ப் புலன்கள் போலும், கடன்பட்டார் கவலை போலும்,
ஈதலில் லாது பூட்டி இரும்பினில் உறங்கு கின்ற
மேதகைச் செல்வம் போலும், வீண்சுமை யாகி வாழ்க்கை
வாதனைப் பட்டதையே வழியெனக் கருளு வாயே !

போகன்

இனிக்குறை யில்லை, யில்லை ; இறைவநல் வகையும் உண்டு ;
மனக்குறை தீராய், ஐய மாவலி யாளுந் தீவை
நினைக்குமுன் அடைவோம் ; அந்த நீள்பணி புரிய வேண்டி,
உனக்குநான் காத்தி ருந்தேன், உண்மையின் உருவ மானாய்!

பரனருட் சக்தி யாலே பாரதத் துதித்து, மாந்தர்
மரபினை வாழ வைத்த மைந்தனை யீன்ற மெய்யா,
இரவினில் இடும்பை செய்யும் இராக்கதர் தான வத்தை
ஒருவனீ வெல்ல வல்லாய் உண்டதற் கினிய சூழ்ச்சி.

சத்தியன்

அலைபுரள் காற்றைக் கேட்டேன், அந்தர மீனைக் கேட்டேன்,
நிலைதுரு வனையுங் கேட்டேன் ; நிலவுமோர் வழியுங் காணேன்,
இலையினிக் கதியென் றேங்கி, இறைவனைத் தொழுதேன்; ஐய
தலைசிறந் தோங்கு கின்ற தவத்திரு வள்ளால் போற்றி !

முன்னிலை நோக்கின், ஈங்கே முழங்கிடுங் கவலை யாழி ;
பின்னிலை சென்றால் ஆங்கே பிழையுறும் எனது மானம் !
எந்நிலை செல்வோம் என்றே, ஏங்கினேன் என்னைக் காத்தாய்,
உன்னருள் வழியே செல்வேன் உறுதியிஃ துறுதி சொன்னேன்!

போகன்

போந்தனை துணிந்து நீயே புல்லரின் வலியொ டுக்க
வேந்தரின் வேந்த, வுன்றன் வித்தகச் செல்வன் யோக
சாந்தத்திற் பரப்பு கின்ற சக்தியே வெல்லு மேனும்,
வாய்ந்தநற் பணியு னக்கும் வகுத்துள தறிகு வாயே !

சித்தியின் வீரர் தம்மைச் சீகர னிடம்வி டுத்து,
சத்திய நீயென் னோடு தானவம் வருவாய் ; முன்னே ;
நித்திய வாலி பத்தை நினக்கருள் சாத னஞ்செய் ;
இத்தகைச் சாத னத்தால் முதுமையும் இளமை யாமே !

சத்தியன்

காயத்தைப் பொன்னாய் மாற்றுங் கற்பகக் கனியும் வாய்ந்தால்
ஏயநல் லுவகை யொன்றே யெய்திடும் ; இறைவ நீசொல் ;
வாய்மைசேர் வழியைப் பற்றி வகுத்தநற் றவங்கள் செய்வேன் ;
தாயினுங் கருணை மிக்காய், தயவுசெய் தருளு வாயே !

போகன்

கனிகிழங் கிலைபால் கொத்துக் கடலையே யுண்ணல், காற்றும்
இனியவெ யிலுந்தண் ணீரும் இயல்வழி யுபயோ கித்தல்,
மனதைநிம் மதியாய்த் தியான மோனத்தின் வழிநி றுத்தி,
எனதுறு தெய்வ சக்தி ஏற்றதும் இளமை யாமே.

அத்துடன் இளம்வல் லாரை *ஓரிதழ் †அம்மான், ‡காணி
சத்துள §தண்ணீர் விட்டான் தூதுளை, மணத்தக்காளி,
சித்தர்கள் செய்யுஞ் செம்பொன் சேர்ரச குளிகை யுண்டால்,
எத்தகைத் தளர்வு மின்றி இளமையோ டிருக்க லாமே !

சுபந்தரு சுத்த சக்தி ஓமெனச் சுருதி பற்றிச்
செபதப மியற்ற லாலுந் தியானத்தி னாலும், ஈசன்
அபயத்தை யளிப்பான் ஐய ; அறமுனைக் கருளும் வெற்றி ;
சபதத்தை முடிக்க வல்லாய் சாதனம் செய்ய வாராய் !

* * *

களிமிகு மெய்ய னங்கே, கடிதினில் யோகங் கூடி,
அளிமிகு சக்தி யேறி அக்கண முதுமை மாறி,
இளவனப் பெய்திப் போகன் ஈந்திடும் அமரானந்தக்
குளிகையும் உண்டு செல்லக் குறித்தநாள் குறித்து நின்றான் ! 100

"அன்பனே, இளைய மெய்யா, அமைந்தது வேளை" யென்று
தன்பொரு வற்ற போகன் சாற்றிட வேந்த னங்கே,
'முன்செல்வாய்பின்செல்வேன்யான்முனிவர' வென்னும்போதே
நன்கமை விமானங் கொண்டு சீகர நாதன் வந்தான் !

சத்தியன்

எண்ணருந் துயர்பொ றுத்த வீரரை இனிது நோக்கிக்
"கண்ணெனுங் கடமை காத்துக் கதுமெனத் திரும்பு மட்டும்,
திண்ணென ஊணர் வந்து, சீகரத் திடர்கள் செய்யா
வண்ணநீர் காப்பீர்" என்றான் வாய்மையிற் பெரிய கோமான்.

வீரர்

காதலால் உன்ப ணிக்கே கருதியுன் னுடனே வந்தோம்,
சாதலுந் துணிந்தோம்; வேந்த, தருமத்தின் வெற்றிக் கெம்மை
ஈதலே கடமை யாகும் ; எமையிடைப் பிரிந்துச் செல்லல்
நீதியோ ? உன்னை நீத்து நிம்மதி யடைவ தாமோ ?

சத்தியன்

அருந்தவ முனிவன் சொல்லும் ஆணையே கடமை யாகப்
பெரும்பணி நோக்கிச் செல்வேன் பிரியங்கொள் வீர ரேநீர்
விரும்பிய படியே, நாங்கள் விரைவினில் வெற்றி கொண்டு
திரும்புவோம் பிறகு சேர்ந்து தேசத்தை நோக்கு வோமே.

* *ஓரிதழ்த் தாமரை* † *அம்மான் பச்சரிசி*
‡ *பொன்னாங்காணி* § *தண்ணீர் விட்டான் கிழங்கு*

வீரர்

வேந்தநின் ஆணை செய்தல் வீரரின் கடமை யாகும் ;
போந்துநீ வந்தா லன்றிப் புண்ணிய பூமி சேரோம்.
சாந்தமாய் இங்கிருந்து தானவர் இடரை நீப்போம் ;
மாந்தருக் கினிய வெற்றி வாய்ந்துநீ வருக, வாழ்க !

சத்தியன்

தாயினை மறக்கினுந் தான்பெற் றன்புறுஞ்
சேயினை மறக்கினுந் தேச நன்மைக்கே,
பாய்கடற் பணியினிற் பங்கு கொண்டமெய்ந்
நேயரை மறப்பனோ ? நீடு வாழ்கநீர் !

கொஞ்சமும் படையினைக் கொண்டு சென்றிடின்
வஞ்சகர் பீரங்கி, வஞ்சந் தீர்க்குமால் ;
அஞ்சலிர் தனியனென் றசுரர் கோடியின்
மிஞ்சிய தறமென விளங்கக் காணுவீர்.

வீரர்

தேற்றிநல் வீரரைச் சீகரன் கொணர்
காற்றினுங் கடியதாங் ககனத் தேரிலே,
வீற்றிருந் தருந்தவ வேந்த னேடுமன்
போற்றிசெய் பூமழை பொழியப் போந்தனன் !

வித்தகப் போகனும் விண் பொறியினைச்
சக்திஓம் என்றொரு விசையைத் தள்ளியே,
சித்தியால் அந்தரஞ் செலுத்தி, நீள்சிறை
ஒத்தினி தசைந்திட உம்பர் ஏறினன்.

விடயவா சனைகளை வென்று முன்செலுந்
திடமனத் துறவிபோற் சிறகு வீசியே
இடமுடன் காலமும் எதிர்த்து வென்றுவிண்
படகொரு நொடியினிற் பறந்து போனதே....

விண்ணினைத் துருவிடும் வேகக் கப்பலைக்
கண்ணெட்டு மட்டிலுங் கண்டு சீகரன்,
புண்ணியப் பணிநலம் பொலிக வென்றுளே
எண்ணிநல் வீரரோ டிருக்கை சேர்ந்தனன்.

5. தானவர் தோன்றிய படலம்

சத்தியன்

இசையுறும் படகி லேறி, இருமடங் காற்ற லூன்றி
விசையுடன் செல்லும் போது, வேந்தனு முனியை நோக்கி,
திசைதிசை பறந்து சென்று தீவினை புரிந்து வாழும்,
தசைவளர் வலி மிகுந்த தானவர் பேச்செ டுத்தான்.

விந்தையாய் விமானஞ்செய்து, விண்ணிடை எனைக்கொண் டேகுந்
தந்தையே இனியெனக்குத் தானவர் சரிதை சொல்லாய் ;
முந்தவர் முளைத்த தெங்கே மொய்வலி பெற்ற தெங்கே,
அந்தத்தி வாளும் வேந்தன் யாரவன் அருள்வாய் என்றான்...

போகன்

தக்கது கேட்டாய் வேந்த தானவர் பிறப்பைச் சொல்வேன் ;
இக்கலி யுகத்தின் பாபம் எவற்றினும் அகந்தை யாசை
மிக்கதென் றறிவாய் ; அந்த மிகையதே தான வம்வாழ்
துர்க்குணக் கூட்ட மென்ற துணிவுடன் கதையைக் கேளாய் !

எனதுமு தாதை ஆதி போகனார் இமைக்கு முன்னே
வனமலை நாடு சென்று வானிலும் உலவ வல்லார் ;
நினைசெயல் இயற்ற வல்ல நித்தியச் சித்தர் ; அன்னார்
தனியிடந் தேடி வந்தார் தானவத் தீவின் கண்ணே !

கொதித்திடுஞ் சகாரா தன்னிற் கொடுந்தவம் புரிந்த பின்னர்,
மதிப்பறுங் குளிர் வனத்தில் மாதவம் புரிய நேர்ந்தார் ;
துதிப்பினும் புல்லர் தம்மைத் தூற்றினும் இருவிகாரக்
கதிர்ப்பிலார் குளிர்வெப் பத்தைக் கலந்தனு பவிப்பா ரன்றே! 20

கொடையிலாக் கருமி போலக் குளிருலாம் வறட்டுக் காடு,
புடைநிற்கும் கடலைச் சூழ்ந்து பொருதிமிங் கில கிலத்தின்
படைநிற்கும் ; புதரில் வஞ்ச நரிகளே பதுங்கி நிற்கும் ;
கடையரின் குணத்தைப் போன்ற தானவக் காட்சி யிஃதே !

நானெனு மனம டங்கி, நாதஒங் காரம் பற்றித்
தானெனும் உணர்வு கண்டு, தன்னறி வாக நின்று,
மோனமாம் பரசாந் தத்தை முற்றிலுங் கலந்து போன
ஞானமா முனிவ னுக்குத் தனிமையே நலம தாமே !

நடுநிலைத் துடிப்ப டங்கி, நலிவறச் சமாதி சேர்ந்து,
விடுதலை யின்ப மெய்தி, வீறுகொள் போக னங்கே,
கிடுகிடுத் திடத்தி சைகள் கீழ்மன வகங்கா ரத்தின்
கெடுபிடி செய்யுஞ் சத்தங் கேட்டெழுந் ததிச யித்தான் !

இடி முழக்கம்

நடுநடுங்கி நரிகளும் ஓடிடப்
படபடப்பொடு பாதளம் ஆடிட,
கடகடத்தெழு காற்றும் பதறிட
இடி முழக்கம் எழுந்ததவ் வெல்லையே !

குன்றுகள் பொடிந்தவோ ? குமுத மிட்டலை
இன்றுல கனைத்துமுண் டேப்பம் விட்டதோ ?
கொன்றுணும் கொடியபேய்க் கூச்ச லிட்டதோ ?
அன்றெனில் ஊழியங் காந்து வீறிற்றோ ?

இருள் மாயை

யாரென தரசினில் ? எந்த நாடடா ?
பேரென ? ஊரென ? பேசி டாயெனில்,
பாருனைப் பிளந்துயிர் பருகு வேன்எனப்
பேரிடிப் புயலெனப் பேயுங் கூவிற்றே !

போகர்

மனிதன் யான் ; மனதூர் ; புவி நாடென்முன்
இனிது வந்துன் கதையை இயம்பென,
தனியன் சாற்றிடச் சத்த மடங்கியே
முனி வியந்திட மோகினி வந்தனள்.

இருள் மாயை

நிறஞ் சிவந்த நெருப்பெரி மாலையில்,
பறந்து வந்து பளிச்சிடு மின்னென,
கறங்கெனச் சுழல் கண்வலை வீசியே,
பிறந்த மேனிக் கிருந்தனள் பெண்மகள் !

கொழுகொ ழென்னக் கொழுத்த சதையினள்,
செழுசெ ழென்னத் திரண்ட முலையினள்,
வழவ ழென்னவம் பாடிடும் வாயினள்,
அழக ரக்கி அசைந்து நெருங்கினள்.

பொன்னி றத்தினைப் பூசிய பூதகி,
புன்ன கைத்தனள் போலிப்பல் காட்டியே ;
மின்னி டையை மினுக்கி வளைத்து'நீ
என்னு டன்வினை யா'டென் றியம்பினள் !

போகன்

நஞ்சுங் கூற்று நயனத் தொளித்தநீ,
வஞ்ச மோகினி மையல் வடிவமோ ?
கொஞ்சி வந்து குமரரைப் பற்றியே
பஞ்சை யாக்கிடும் பாசப் பரத்தையோ ?

இன்னல் செய்யும் இழிமனப் பேயளே,
முன்மொ ழிந்த கடுமொழி யுன்னதோ ?
என்முன் வந்த எரிமலைக் காமியே
பின்செல் உன்சொல் பிழையுறு வஞ்சமே !

உச்ச மேறிய என்னை உருட்டியே
நச்ச ராகொள் நரகத்தில் வீழ்த்திடப்
பச்சை மோகினிப் பாசத்தை வீசினுய்
சிச்சி உன்னை நினைப்பதுந் தீமையே !

இருள் மாயை

அந்தண் மாமுனிக் காத்திர மாகுமோ ?
இந்தக் கோபத்திற் கென்பிழை செய்தனன் ?
முந்தென் காதையை முற்றிலுங் கேளென
வந்த மாயை வளர்கதை பேசினுள் !

வானவரைப் பணிகொண்டு மானிடரை
மனநடுக்கி மண்ணை யாண்ட
தானவரென் முதுகுரவர் தணியாத
முடிவேந்தர் தசமு கன்போல் ;
மானமிகு தாருகனுந் தாடகையுந்
திதியும்வளர் மரபில் வந்தேன் ;
யானரசி யான் அரக்கி, யான் குமரி
என்னழகை இனிது காணுய்.

சரங்கொண்டு, நகங்கொண்டு, நயவஞ்ச நகைகொண்டு
சக்தி வேலைக்
கரங்கொண்டு கால்கொண்டு கண்கொண்டு கதங்கொண்ட
கருவங் கொண்டும்,
நரங்கொண்ட தேவர்களெம் வரங்கொண்ட நாயகரை
நலித்தார் ஐயா !
உரங்கொண்டிங் கொளிந்தவருள் உடல்கொண்ட உயிரரக்கி
ஒருத்தி யானே !

பசியாலுங் குளிராலும் பரிதவிக்கும்
பாவியெனைப் பருவப் பாசம்
விசையாகப் பிணித்தததை விரைவாக
விடுவித்தால், விருப்பா லுன்னைப்
புசியாது விடுவேனுன் புலனடக்கும்
புரட்டுகளைப் புரட்டிப் பார்ப்பேன்.
அசையாமல் இருந்தாலும் அசைப்பேனுன்
அருந்தவத்தை மாயை யானே !

போகன்

எலும்பு தசை நாரினெ டிணைந்தபுழுக் கூடே,
சிலந்திகள் இரண்டுறச் செறிந்தமட மார்பே !
பலந்தனை யுறுஞ்சிடப் பசப்புமொழி சொல்வாய்
நலந்தெரி விவேகிநர கத்தையணை வானே ?

மோகவிருள் மாயை, முனிவர்க்கெதிர் இழைக்கும்
சாகசியுன் பேய்வலையைத் தப்பினர் பிழைத்தார் ;
வேகமுறச் சிக்கிமடி வார்விரைவில் வீணர்,
போகனிடம் சூழ்ச்சிபலி யாதினிது போபோ !

இணங்கினவர் ஆயுளை இரக்கமறத் தேய்த்துப்
பிணஞ்செய்து பிசைந்துணும் பெருந்துயர நோயே !
நிணந்தனை நிணந்தர நிரப்புநர கேஉன்
வணங்கரு மனத்தினை வணக்கிநல மோங்காய்.

வெம்புலி மறைத்தொரு விகாரநகை செய்யும்
அம்புலி முகத்தில்விழி யம்பினை விடுத்தென்,
இன்பமய யோகமிழி வாகிட முயன்றாய் !
நம்பியுனை ஞானியர் நலங்கெடுவ தாமோ ?

இருள் மாயை

வன்றவம் பயின்றனை வரங்கள் பெற்றனை ;
என்றனுக் குறுதுணை யியற்றக் கூசினை,
என்றவம் பயின்றனை ஏழை மானிடா ?
ஒன்றிய உவகையை உணரும் வாழ்விலாய்.

ஐயநீ ஐங்கணைக் கஞ்சிக் கூசினை
ஐயநீ கொண்டனை அலியைப் போலவே.
மெய்யறி வின்பவே தாந்த மீறினை ;
மெய்யறி யின்பத்தை வெறுத்த வீணனே !

புண்புழு நரகெனப் பொய்ந பும்சகர்
பெண்களைப் பழித்தனர் பெண்ணின் வந்தவர் ;
கண்ணென்றுங் கனிரஸக் கட்டி யென்றுமே
விண்ணுறப் புகழ்ந்தனர் வீரச் சாதகர்.

*மகன் மணங் கெடுத்தனன் வலைச்சி காதலன் ;
†மிகமனை தவிர்த்தனன் வேசி காதலன் ;
‡பகவனை நடத்தினன் பரவை காதலன்
சகநிலை காதலின் சரிதை யாகுமே !

§அணங்கினை மறுத்தவன் அலியு மாயினன்,
||இணங்கிட மறுத்தவன் இகலை ஊக்கினன் ;
வணங்கறு தசமுகன் வாட்கண் பாவைக்கே
நிணங்கெழு போர்செய்த நிகழ்ச்சி காணுவாய் !

---

*சந்தனு—சத்தியவதி. †கோவலன்—கண்ணகி, மாதவி.
‡சுந்தரர்–பரவை நாச்சியார். §விஜயன் ஊர்வசியை மறுத்தது.
||இராமன் சூர்ப்பணகையை மறுத்ததால் இலங்கைப் போராக்கினன்.

காதைகள் பிறந்ததும், பெண்ணின் காதலால்
வாதைகள் வளர்ந்ததும் பெண் மறுப்பினுல்
தாதைகள் பிறந்ததும் தனயர் வந்ததும்
பேதைகள் என்கிற பெண்க ளாலன்ருே!

அலகிலே, அணியிலே, அரிய தொன்றிலே,
உலகிலே உயிரிலே, உடலு மில்லேயே ;
கலகிலே வெற்றியின் காட்சி யில்லேயே,
இலகுயிர் பெண்களின் இன்பம் இல்லேயேல் !

உடலுயிர் இன்பத்தை உண்மைக் காதலர்
படகெனக் கொண்டுயர் பதவி சேருவார் ;
கடமையிற் பெரியது காதற் காத்தலே ;
மடமையிற் பெரியது மாதை நீத்தலே !

காலமெய் வாழ்வினேக் கவர்ந்து செல்லுமுன்,
கோலமெய் மாதினேக் கூடி வாழ்விலே
நாலேயும் பெற்றிட நாடி டாயெனில்,
சீலமுந் தோல்வியுன் சென்மந் தோல்வியே !

அலியென மறுத்தனே அழகை ; யுன்னேயான்
புலியெனப் பற்றியென் புலமை காட்டுவேன் !
எலியென ஓடுவாய்....இனியுனேப் பெறும்
வலியெனக் குளதுநல் வாழ்வை வாழ்கிலாய் !

போகன் ஓடுதல்

ஓடினுன் மாதவன் ஓபெரும் பேயெனத்
தேடினுன் மறைவிடஞ் சென்றுசென் றெங்குமே.
ஊடரு ஊசிநூ லொப்பவே அப்பெணுங்
கூடினுள் கூற்றையுங் கூடிடக் கொஞ்சுவாள்.

அள்ளினுள் பெண்மையால் ஆண்மையை வென்றனள் ;
உள்ளமுங் கட்டவிழ்ந் தோடிட மாதவன்,
கள்ளியின் காமத்திற் கண்ணிழந் தொன்றினுன் ;
விள்வதென் ? மோகத்தால் வீழ்ந்தவர் கோடியே !

அந்தியிற் சுற்றுலாம் ஆசையி ருட்கணம்
முந்துதந் தீவினே முற்றுதற் காவலாய்,
வந்திருள் மாயையுள் வாகுறச் சேர்ந்தன ;
சந்ததம் பூவினிற் சண்டைகள் செய்யவே !

ஆப்பிழு குரங்கின் காதை யாமென உறுதி நெஞ்சின்
காப்பிழந் தரக்கி கையிற் கடுமையாய்ச் சிக்கி னுனே !
தீப்பொறி யெனக் கிளம்பித் தின்றிடுங் காமநோயை
நீப்பவர் நீத்தார் என்ற நினேவையு நினேந்தான் அன்னுன் !

கணையெனக் கண்கள் வீசிக் கடும்புய லெழுப்பி வாழ்க்கைப்
புணையினைச் சுழியி லாழ்த்திப் புந்தியைச் சீர ழித்துப்
பிணிதருங் காமா வேசப் பேய்தவக் குகையி னுள்ளுந்
துணிந்ததை யெண்ணிப் போகன் சொல்லொணாத் துன்பமுற்றான்!

நேரிலாக் கலவியாலே நிரம்பிய மாயை யாங்கு,
வீரியப் பகைவன் மைகள் விதவித வுருவந் தாங்கும்
பூரியர் தம்மை வெய்ய புதல்வராய்ப் பெற்ற பின்பு
காரிய மான தென்று கரியபே யுருவங் கொண்டாள் !

காய்சினக் காம மோகக் கடுமதக் கள்ள வஞ்சப்
பேய்களை மாயைக் கீந்த பிழையினை நொந்த போகன்,
தூயமா தவத்தி னாலே துயரினை நீக்க வேண்டிப்
போயினிப் பிழைக்க யோகம் புரிகுவன் என்று சொன்னான் !

இருள் மாயை

தானவர் தந்தை யாகி, மனப்பசி தணித்த தாலே
போனக மாக்கா துன்னைப் போவென விடைகொ டுத்தேன் ;
மானவர் குலமும், எங்கள் மரபினை முன்ன ழித்த
வானவர் குலமும் அஞ்ச வாழ்வதென் கடமை யாமே !

ஆதி போகர்

தன்றிறச் செருக்கு மிக்க தானவர் உனது மைந்தர்,
வென்றிறல் உடையா ரேனும், விழுமிய புனிதர் தம்மைக்
கொன்றிட முனைந்தா ராகிற் கொன்றிடும் அறமே, உண்மை
வென்றிடும் ; யோக சக்தி வீழ்த்திடும் அரக்கர் வாழ்வை !
தன்னலச் செருக்கி னாலே தரங்கெடுந் தானவர்கள்
இன்னல்கள் செய்து வீழ்ந்தார்; இன்னமும் இன்னல்செய்தால்,
முன்கதை முனைக்கு மென்று முடிவுறக் கூறிப் போகன்,
தென்புறந் திரும்பி வந்து சிகரஞ் சேர்ந்தான் மாதோ !
கனியுடன் பாலும் உண்டு காற்றுடன் வெயிலுந் தோய்ந்து,
தனிமையி லூன்றி மோனத் தணலினை வளர்த்து, சாந்த
மனதையும் உள்ள டக்கி மலர்ந்திடச் சக்க ரங்கள்,
முனிவரன் ஸஹஸ்ரா ரத்தில் முத்தியை மீண்டுங் கண்டான்...

உலகெலாஞ் சுற்றி வந்தே, உடலினை உதறிப் போகன்
இலகுறு விதேக முத்தி எய்திய பிறகுஞ் சீடர்
நலமுற யோக சக்தி நல்குவான் அருவ மாக,
பலரவன் அருளைப் பெற்றார் ; பண்பருள் ஒருவன் யானே !
வன்றவத் திறமை யாலே வழி வழி யாக வந்த
பொன்றறு சித்தியெல்லாம் பொருந்தினன் யானும் ஆங்கே
என்றலும் போகன், மெய்யன் "இனிதினி தினியவ் வூணர்
ஒன்றிய கூட்ட மாக ஓங்கிய கதைசொல்" என்றான் !

6. மாவலி எழுந்த படலம்

துன்மதி, வெறியன், பாசன், சூடுசரன், கொடிய காமன்,
கன்மதி, கலகன், பேயன், கவந்தன்,வஞ் சகன், புரட்டன்,
தன்னலத் தூம கேது, தந்திர நரியன், பொய்யன்,
குன்ம நோய் போன்று மாந்தர் வருந்திடக் குலவி னூரே !

வெருவுறு காம மாதி வேதனை தடித்த பொல்லார்,
பெருகினர் உலகமெங்கும் பெண்களைத் திருடி வந்தே,
கருதிய தியன்ற தென்றே, களிப்புறு மாயை ஓர்நாள்
"பொருகவிப் புவியை"யென்று போந்தனள் உடலை நீத்தே.

நிலைபெறு தருமந் தாழ, நேரிய வாய்மை சோரத்
தலைபெறு கூரன், கோளன், சங்கடன், கலகன், ஆதி
கொலைவளர் அரக்கர் வாளின் கொடிபிடித் தழிவு செய்து,
பலபலர் ஆண்ட. பின்பு, பரிவிலாச் சிங்கன் வந்தான் ;

கலிங்கத்தின் கன்னி யான கமலியைக் கூடிச் சிங்கன்,
வலிமிகு மைந்த ரான மாவலி அனலோன், மோகி
பலியிர ணியரைப் பெற்றுப் பலமுற வளர்த்தான் ; அன்னோர்
புலியினுங் கொடியர் ; சாந்தப் புண்ணிய நாட்டின் ஒன்னூர் !

அருந்தமிழ் வள்ளலார் அறிந்து தேர்ந்துரை,
குரங்கினுங் கொடுமனக் குடும்ப கோரம்போல்,
பெருந்துயர் செய்திடும் பேய்ம காரிவர்
புரிந்ததைச் சொல்லிடிற் புராண மாகுமே !

துள்ளுவர்; துயிலிளஞ் சேய்க ளைத்தொடை
கிள்ளுவர்; கிழவரைப் பாழ்கி ணற்றிலே
தள்ளுவர், எள்ளுவர் ; சண்டை மூட்டுவார் ;
கொள்ளியைக் கூரையிற் செருகிக் கூவென்பார் !

ஆரையுந் திட்டுவர் ; ஆட லாகவே
போரரங் காக்குவர் ; பொருமை பற்றிடிற்
பாரையும் மண்டையிற் பாயத் தள்ளுவார் ;
வேரொடு மரங்களைப் பிடுங்கி வீசுவார் !

மலைமுடி தாவுவர் ; மற்க டங்கள்போல் ;
அலைகடல் கலக்குவார் ஆளை ஆழ்த்துவார் ;
கொலைமதம் பிடித்தவர், கொள்ளைக் காரர்கள்,
புலைமது புசிப்பவர் புலியின் வெம்மையர் !

அறங்கெடச் சினப்பவர், ஆசை யாணவம்
பிறங்கிடச் செய்திடும் பெரிய வேங்கையர் ;
உறங்குவர் பகலினில் இரவில் ஊரெலாங்
கறங்கெனச் சுற்றுவர் காம வேகத்தால் !

மெத்தவுஞ் சொல்வதென் விஷ விருட்சத்தின்
வித்தினில் விடமுறல் விந்தை யாகுமோ ?
கொத்திடும் பாம்பினக் குணமும் போகுமோ ?
அத்தகைக் கொடியவர் அரக்கர் கூட்டமே !

இத்தகைத் தீயவர் இயந்தி ரங்களின்
சித்தியும், செருமிகச் செய்யும் ஆற்றலும்,
புத்தியும் போகமும் புவியை யாண்டிடும்,
பித்தமும் கொண்டிடிற் பேச வேண்டுமோ ?

சாத்திரப் பெரும்புலி, தந்தி ரப்புலி,
நாத்திகப் புலியெனப் புகழை நாட்டிய
தீத்தணல் போன்றகஞ் சினந்த வெள்ளியே
ஆத்திரங் கொள்குரு வாகிற் கேள்வியேன் ?

கத்தியைச் சுழற்றவுங் கனலை வீசவும்,
புத்தியை மயக்கவும் போரைத் தூண்டவும்,
வித்தைகள் பயிற்றினன் வெள்ளி மாந்தரைச்
சத்துரு வாக்கினன் தான வத்திற்கே !

எனதுடல், எனதுயிர், எனது செல்வமே,
எனதுல கெனதுவிண் எனது போகமே
எனதிசை எனதறி வெனது கட்டளை,
எனதென தெனுமவர் இழிபொ றாமையே !

மாவலி யாளல்

சிங்கனின் முகத்தில் மூப்பு சித்திரஞ் செதுக்கங் கண்டு,
“நங்குல உரிமை நானே நன்முறை வகிப்ப”னென்று,
மங்கள வாரந் தன்னில் மரணயோ கத்தைப் பார்த்துத்
தங்கமா முடித ரித்தான் மாவலி தான வேசன் !

வாளதே செங்கோலாக, வாட்கொடி பறக்க விட்டுக்
கோளர்மந் திரிக ளாகக் கொடுஞ்சமர் நீதி யாகத்
தோள்வலி சட்ட மாகத் துட்டரே துணைவ ராக
*வேளென நின்றான் மண்ணின் வெறியினாற் கொலையே
சூழ்ந்தான்.

*அரசன்

அரக்கியர் கவரி வீச வாட்படை யரக்கர் சூழச்
செருக்கொடு காமங் கோபந் தெய்வத்தின் மேலும் வன்மம்
கருக்கொளும் வெறிகள் கோடி, காட்டிமா வலி விளங்குந்
திருக்கொலு கண்டா ருள்ளந் திடுக்கிடற் கைய முண்டோ ?

வெண்ணகை வாளே, அன்னார் மீசைகள் வாளே, கையின்
வண்ணமும் வாளே, காக்கும் வரிசையும் வாளே, எண்ணும்
எண்ணமும் வாளே, ஒன்றை இயற்றலும் வாளே, ஆட்சி
பண்ணலும் வாளே, திட்டும் பகையிலும் வாளே யம்மா !

"மண்ணிலும் இணையி லாதேன் மாவலி அரக்கர் சிங்கம் ;
விண்ணிலும் இணையி லாதேன்; இரணியன் வியக்கு நெஞ்சேன்,
புண்ணியப் பகைவன் யானே புவியெலாம் எனதே" என்னும்
எண்ணத்தால் இறுமாந் தெங்கும் இகல்வினை தூண்டி னனே.

"பூவிலென் கொடியே ஆடப் பொருபடை பெருக்கி யாள்வேன்;
ஏவலைச் செய்யா ருக்கென் ஆணையே எமனும் ; என்றுந்
தேவரின் வணக்கங் கொள்வேன், இராவணச் சிங்கம் போலே
மாவலிச் சிங்க மாவேன்" என்றனன் மமதைச் சிங்கம். 80

அடங்கறு காம வெப்பம் ஆறிட வல்ல ரக்கன்
இடமகல் உலக மெல்லாம் இச்சைகொண் டலைந்து தேடி,
முடிவினிற் சிக ரத்தான் மூத்தபெண் அழகி தன்னைக்
கடிதினிற் கடத்தி வந்து, கடிமணம் புரிந்து கொண்டான் !

கலையுடன் கடவு ளன்புங் கருணையுந் தயவுங் கொண்டாள்,
இலைமறு வழியென் றெண்ணி அரக்கனுக் கிணங்கி வாழ்ந்தாள்;
மலையென மாண்பு மிக்காள் வயிற்றினிற் சக்தி யென்னும்
பொலிவுறு பெண்பி றந்தாள் புண்ணிய வடிவு கொண்டே.

செருகுல வூனர் நாப்பண் சேற்றினிற் பூவைப் போல
வருகுல மணியாம் சக்தி வாய்மையுந் தூய கற்பும்,
கருவிலே திருவுங் கொண்ட கன்னிகை யானாள் ; அன்னாள்
குருவென உய்ப்பேன் உன்னைக் கொள்கைபின் வெல்வ தாமே!

தானவர் கதையி தென்னச் சாற்றிய போக னங்கே,
வான்பட கதனைத் தாழ்த்தித் "தானவம் வந்தோம்" என்றான்;
சூனியத் தீவு முன்னே, சுந்தர மொளிரக் கண்டு,
ஞானியும் வியந்து மெய்ய, நாமுள்ளே புகுவோம் என்றான் ! 96

7. நிசாசரப் படலம்

விண்ணிலே பறந்த நாவாய் விசையினை மடக்கி யாங்கே,
மண்ணிலே புதைத்துச் சென்று, மாவலி நாட்டுக் கேற்ற
திண்ணிய வேடங் கொண்டு, சித்தெலாம் உட்க ரந்து,
புண்ணிய சிலர் உள்ளே புகுந்தனர் பூனை போலே !

இசைவலோ னாக மெய்யன், இன்குழ லோனாய்ப் போகன்
வசையறு வேடம் பூண்டு, வளநகர் காணு முன்பே
விசையினிற் சுந்த ரிக்கு விருப்பமாம் கீத மொன்றை
இசைவுற மெய்ய னுக்குப் பயிற்றினான் இருடி யாங்கே !

அழலின்முன் குளிர்காய்ந் தாங்கே அமர்ந்தவர்,இடையர்,இந்தக்
குழலிசை கேட்டு வந்து, குதூகலித் "தின்னும்" என்றார் ;
பழவுணா வளித்தார், கோரைப் பாயினில் இடங்கொ டுத்தார்.
எழுசுரக் கீத நாதம் எவரையும் இழுக்கு மன்றோ ?

தானவர் கூட்ட மான தடிமனக் குடிய ரேனும்,
கானத்தின் மயக்கத் தாலே கன்மனங் கரைந்து சொட்டுந்
தேனென நயந்து பேசித் தேசவி சாரஞ் செய்தே,
ஆனதங் கதைக ளெல்லாம் அளந்தனர் அளவி லாமே !

போகன்

ஊரெலாம் எங்கள் ஊரே, உலகெலாம் எங்கள் நாடே,
சாரமாய்க் கீதங் கேட்பார் சகோதர ராவார் ; இங்கே
வீரராம் செல்வ ருள்ளே வியனிசைக் கலை விரும்பும்
பேர்களைச் சொல்லின் எங்கும் பேசுவோம் உமது நன்றி ! 20

இடையர்

வீடெலாம் பாட்டே, எங்கள் விருந்தெலாம் பாட்டே ; இந்த
நாடெலாம் பாட்டி னுக்கு நடம்புரிந் தினிய செய்யும் ;
ஊடுவார் கூட லுக்கும் உவந்தன கள்ளும் பாட்டும் ;
பாடுவார்க் கெங்கள் வேந்தன் பரிசினை யள்ளி யீவான் !

இல்லெங்கும் இசைமு ழங்கும் இப்பெருந் தான வத்திற்,
சொல்லிசை மிக்க செல்வி சுந்தரி எமது கோவின்
வல்லபி யாயி ருந்து, தனித்தின்று வாழு கின்றாள் ;
அல்லலிற் கைகொ டுப்பாள் அவளைநீர் காணு வீரால் !

போகன்

"கேட்டுளோம் ஐயா அந்தக் கீர்த்திசேர் அழகி வீட்டைக்
காட்டுவீர்" என்னப் போகன் கனகமா வீதி சென்று
கேட்டிடின் உடனே சொல்வார் கிழக்குப்பார்த் தமைந்து,முன்னே
தோட்டங்கொள் வீடஃ தொன்றே துன்னுவீர் என்று ரன்னோர் !

"வந்தனம்" என்று போகன் மன்னனோ டுருட் சென்று,
முந்துள காவ லர்க்கு, முகமனும் விடையுங் கூறிப்
பிந்துதம் முடனே வந்த ஒற்றரைப் பிரிந்து சென்று,
விந்தையாந் தான வத்தின் விநோதங்கள் அனைத்துங் கண்டார்!

தெருவணி கண்டார் ; எங்குஞ் சித்திரக் கலைகள் கண்டார் ;
இரவினைப் பகல்செய் கின்ற விளக்கணி யிலகக் கண்டார் ;
வரையெனப் பளிங்கு மாட வரிசைகள் கண்டார் ; எங்கும்
கரையிலாப் போக வாழ்வைக் கண்டனர் கண்க ளாலே !

கள்ளுண்டு பிதற்று வாரும், காமனுர் குறிவைத் தெய்த
வில்லுண்டு பிதற்று வாரும்; வெறிகொண்ட கொடியைப் போலக்
கல்லுண்ட வூணர் தோளைக் கட்டியே பிதற்று வாரும்,
மல்லுண்டு பிதற்று வாரும், மருங்குண்ட காட்சி யம்மா!

உரையெலாம் போதை நாறும் ; ஊனெலாம் புலவு நாறும்,
தரையெலாங் குருதி நாறும், தடம்பெறு கப்ப லோடுங்
கரையெலாங் கொள்ளை நாறும், காற்றெலாம் குண்டு நாறும் ;
வரையிலாப் போக மெல்லாம் வஞ்சமே நாறு மம்மா !

நானெனுஞ் செருக்கி னுள்ளே நாத்திகங் கலந்து வீசும்,
தேனெனும் பேச்சி னுள்ளே திருட்டுணர் வொளிந்து வீசும்,
கோனெனுங் கொள்கை யுள்ளே கொடுஞ்சமர் கொளுவி வீசும்,
ஏனெனக் கேட்டால் வாளின் எரிநகை வீசு மன்றே !

பொன்னெங்கே, வெள்ளி யெங்கே, போகபோக் கியங்கள் எங்கே,
மின்னிடை மாதர் எங்கே, வெறிதரும் குடிகள் எங்கே,
தன்னனப் பாட லெங்கே தாசியர் ஆட லெங்கே,
இன்னலைச் செய்யப் போர்கள் எங்கெனத் திரிகு வாரே !

விண்ணினைத் துருவிச் செல்வார் ; வியன்பெருங் கப்ப லேறித்
தண்கடல் உழுது செல்வார் ; தானவர் பகலு றங்கித்
திண்ணெனக் கிளம்பி, இன்பந் தேடுவார் இரவில் ; அன்னுர்
மண்ணிடை யின்ப மெல்லாம் மாதரார் இன்ப மென்பார் !

ஊன்மது முட்டை மீனுண் டுதித்தவர், திமிர் பிடித்தார் ;
ஆனையும் பிடியும் அன்னுர், அனங்கமா புரமுந் தோன்ற,
மானமில் லாமல் ஆடிப் பாடித்தம் அழகை யெல்லாம்
ஈனமாய் மினுக்க ரங்கம் எக்களித் திடுமிவ் வூரே !

பொறிகளைப் பெருக்கி, ஐந்து பொறிகளாற் போர்தொ டுப்பார் ;
அறிவினைப் பெருக்கிக் கொல்லும் ஆயுதம் பெருக்கு வார்கள்.
கறியினைப் பெருக்கித் தீய காமத்தைப் பெருக்கு வார்கள் ;
வெறியினைப் பெருக்கி, மாந்தர் வேதனை பெருக்கு வாரே !

அலகறு கொடிய காட்சி அகந்துடித் திடவே கண்டு,
புலவரும், வண்டு நல்ல பூவினைத் தேடல் போலே,
இலகுசுந் தரியின் யிருக்கும் இல்லத்தைக் கண்டு முன்னே
பலமலர் மணக்குந் தோட்டப் பந்தலிற் புகுந்தா ரன்றே !

மதிமிகு நல்லா ரேனும், வாழ்வகை யறிந்தா ரேனும்,
புதியரைக் காணின், ஊணர் புல்லியல் இடும்பை செய்வார்,
அதஞ்செயும் அரக்கர் கையில் அகப்படா திவரைக் காக்கப்
பதமுறுங் குளிர்வான் ஆங்கே பனித்திரை யிட்ட தம்மா !

கறைசெறி வாளுங் குண்டுங் கரதலத் தேந்தி, நாளும்
பறையடித் திடும்பைப் போர்செய் பதகரின் பாபக் காட்சி
பொறைமிகு மெய்யன் காணிற் பொறுமையை யிழப்பான்என்றே,
உறைபனித் திரையால் வானம் உலகினைக் கவர்ந்த தம்மா !

கருக்கொளும் பதகர் காணிற் கடும்பகை தொடுப்பார் என்றோ
சுருக்கென விண்ணு மேகச் சுருளிலே மறைந்த தேயோ ?
இருட்பனி புதைத்த தீவம் எழிலிழந் தொளிந்த காட்சி,
அருட்பொலி வில்லார் நெஞ்சின் அகந்தையைப் போன்ற தம்மா!

கௌவுவெம் புலியைப் போலக் கடும்பனி வாடை வீச,
வெவ்விருட் குகையி னுள்ளே மேற்செல முடிகி லாதார்,
உய்விடம் இதுவே யென்றோர் உயர்நிலைப் படியி லேறித்
தெய்வமே யென்றி ருந்து சிறிதிளைப் பாறி னாரே !

பீரங்கிப் பவனி

இடம்விரி திண்ணையில் இளைப்பு நீங்கினார்,
அடம்புரி வாடையின் ஆக்கந் தாழ்ந்ததும்,
கடம்படம் பும்மெனக் கனை முழக்கமும்
நடம்புரி பவனியு நண்ணக் கண்டனர் !

போரங்கி பூண்டவர், போற்றுந் தெய்வமாம்
பீரங்கிக் கணி செய்து பெரிய பேயர்கள்
ஆரங்கள் சூடிவெவ் வாயு தத்துடன்
"பாரெங்கள் பாரெ"னப் பாய்ந்து வந்தனர் !

"ஊழிக்கும் அஞ்சிலோம் உம்பர்க் கஞ்சிலோம்,
ஆழிக்கும் அஞ்சிலோம் ; அவனிக் கஞ்சிலோம் ;
வாழிய மாவலி மன்னன் வாட்கொடி !
வாழிய பல"மென வலியர் கூவினார் !

"மணிமுடி மன்னரெம் மன்னன் சேவகர் ;
அணிமணிப் பாவையர் ஆசை தீர்ப்பவர் ;
பணிவுடன் பயந்தவர் பாரில் வாழலாம் ;
துணிவுறு மாந்தரைச் சுடுவம்" என்றனர்.

குடிவெறி யேறிய குண்டர் கூச்சலைக்
கடிதினி லறிமுனி "கலியன் ஏவிடும்
கொடியவர் புண்ணியக் கொடி யறுத்திடும்
இடியினைப் போன்றவர்" என்று நொந்தனன் !

தப்பிய கலியனித் தான வத்திலே
இப்பொழு திருப்பதும், இகலைத் தூண்டலும்,
அப்பதர் மோகியின் அண்ணல் பொங்கிடச்
செப்பிடும் பொய்களுஞ் செய்யன் சிந்தித்தான் !

படபடத் திடமனம் பதறச் சத்தியன்
இடரினைச் சொல்லிக்கொண் டிருக்கும் போதொரு,
சுடரொளி தெரிந்தது ; சுருதி செய்திசை,
யுடன்குழ லூதிட ஒத்தி சைத்தனன் !

பாட்டு

கார்மழை யிருட்டிலுங் கம்பி மின்னல்போல்
பாரெனப் பளிச்சிடும் பரம சக்தியே,
ஆருயிர்க் குயிர்தரும் அறிவென் றுய்ந்தபின்
யாரெவர்க் கஞ்சுதல் ? அச்ச மில்லையே !

கரியிலும் வயிரத்தைக் காட்டுஞ் சோதியே,
எரியிலும் தங்கத்தை இலக்குஞ் சோதியே,
அரியநல் லன்பருள் அறியும் ஒன்றது,
பிரிவற நிற்கையிற் பேதுற் றஞ்சலேன் ?

சாளரந் திறந்தது ; சன்ன மென்குரல்,
ஆளடை யாளத்தை அறியக் கேட்டது ;
வாள்விழி பார்த்தது ; ‘ வணக்கம் ’ என்றது
நீளறி வாளனு நிலையி தென்றனன் !

மோகன ராகத்தில் உணர்ச்சி மூண்டிடப்
பாகிளந் தமிழிசை பாய்ந்து வந்ததும்,
சீகரச் சுந்தரி தெரிந்து கொண்டனள் ;
போகனும் அறிந்தனன் ; புகலுங் கண்டனன் !

ஒற்றன்

சாடையாய் இருவருஞ் சரிதை பேசுழி,
பீடையாய் வந்தொரு பேய்க்கண் ஒற்றனும்,
வாடையின் ஒண்டிய வஞ்சங் காட்டியே,
கோடையின் இடியெனக் கூச்ச லிட்டனன் !

“ யாரிங்கே அன்னியர் யாங்குற் றீ”ரெனப்
போர்செயச் * சனியனைப் பூட்ட விழ்த்திடும்
கோரமா நிருதனைக் குறித்துப் போகனும்,
வீரமா மொழிகளை விளங்கப் பேசினன்.

*துப்பாக்கிச் சனியன்

"பாடகர் யாமிந்தப் பாரைச் சுற்றியும்
பீடுறு நாட்டினிற் பிரியங்கொண் டுற்றேம் !
ஆடலும் பாடலும் அழகும் வீரமுங்
கூடிய மன்னவன் கொலுவுங் காண்பமால் !

"அதுசரி" அன்னிய ரான நீங்களெம்
முதல்மரி யாதையை முன்பெற் றென்னுடன்
பதமுற வம்மினென் றந்தப் பாதகன்
கதமுறச் சிறையினிற் கட்டிப் பூட்டினன் !

சிகையுறு தீபத்தைத் திருப்பிக் காட்டியே,
திகையுறு மிருவரைச் செங்கைச் சாடையால்,
வகையுறு தந்திரம் வகுத்துக் காட்டியே
தகையுறு சுந்தரி தாவிச் சென்றனள்.

கறையுண்ட கையினர் காக்குங் காரிருட்
சிறையுண்ட செவ்வியர், சிறிது நொந்தபின்,
பொறைமிகு புலமையாற் புகலி தென்றனர்.
அறைகுவன் விடுதலை யான தன்மையே ! 156

8. மாவலி இசைந்த படலம்

கடுஞ்சிறை ; சுற்றிலுங் கண்ணுங் காவலும் ;
இரும்புறு கையுமாய் இருக்கும் ஊணர்கள் ;
கரும்பெனப் பேசினுங் கடுக்குஞ் சொல்லினர்—
பெருந்தகை யாரிவர் பிடியிற் பட்டனர் !

சத்தியன் வருந்தல்

மண்ணினில் அறம்வளர் மங்கலப் பெரும்
புண்ணிய நாட்டினைப் புறம்விட் டிங்குற்றேன் ;
கண்ணறு கொடியவர் கையிற் சிக்கினேன் ;
எண்ணிய தெய்திலேன் என்ன செய்குவேன் ?

திருட்டுறும் அரக்கரைத் திருத்த வந்தயான்,
இருட்டுறுஞ் சிறையினில் எய்தி வாடினேன் ;
மருட்டிடு வஞ்சர்கை மாளு முன்னிறை
அருட்டுணை தந்தெனை ஆத ரிக்குமோ ?

சதிமிகு தானவர் சண்டை தீரயான்,
மதிமிகு முனியுடன் மகிழ்ந்து வந்தனன் ;
விதியெனை யிப்படி விட்ட தே;யினிக்
கதியளித் திறைவனும் காப்ப தாகுமோ ?

இணங்கறு மவுணர்கள் இணங்கி, நல்லறம்
அணிந்திடப் பணிசெயும் ஆசை கொண்டனன் ;
துணிந்தநல் வினைக்கொரு துணையுங் காணிலேன் ;
பணிந்திடும் அடிமையாய்ப் பாரில் வாழ்வனோ ?

போரையும் விடுத்தனன் ; புனிதன் வாழ்கின்ற
ஊரையும் விடுத்தனன் ; ஊர்த்தொண் டாற்றிடும்
சீரையும் விடுத்தனன் ; சீக ரத்திலே
யாரையான் காத்திட விமானம் ஏறினேன் ?

பொல்லவர் புரியினைப் புண்ணி யத்தினால்
வெல்லவும் வாய்ப்பிலை ; வீறும் போர்முனை
கொல்லவும் வாய்ப்பிலை ; கொடியர் காவலில்
அல்லலுற் றென்னுயிர் அழுங்க லாகுமோ ?

செங்கதிர்க் கொடியுடன் சேமங் கண்டிடப்
பொங்கலை சூழ்ந்திடும் புவிகண் டிங்குற்றேன் ;
மங்கல முயற்சியும் வாட்ட முற்றதே ;
என்கவ லைக்கினி யெல்லை யுண்டரோ ?

செய்வதென் இனியெனச் சிந்தை தேக்கிடும்
மெய்யனைப் போகனு மெல்லப் பாடெனப்
பையத்தன் பூங்குழல் பண்செய் தானந்தப்
பொய்கைக்காற் றென்னக்காம் போதி ஊதினான் !

பாட்டு

மாநில மஞ்சிட வந்த மாவலி,
தானவர் காவலன் சபை சிறக்கவே
கானஞ்செய் பாடகர் கவலை கொண்டனர்
ஏனெனக் கேட்பவர் எவரு மில்லையோ ?

தோளினால் உலகினைத் தூக்க வல்லவன் ;
வாளினால் விருந்திடும் வண்மை மிக்கவன் ;
ஆளர சவையினில் அமரும் பாடகர்—
நீள்சிறை காப்பது நீதி யாகுமோ ?

மாவலி எனவரும் மகிழ்சங் கீதத்தை,
ஆவலாய்க் கேட்டனர் அரக்கர் கூட்டமாய் ;
காவலர் களித்தனர், கைகள் கொட்டினார் ;
பாவமு தினிதெனப் பருகி யாடினார் !

ஓவிதென் புதுமையென் றுற்றர் தீட்டியே,
மேவினர் வேந்திடம் விளம்பிக் காட்டினார் ;
மாவலி புகழென மகிழ்ந்து கூறினார் ;
பாவலர் மீதொரு பழியுங் கூட்டினார்.

பொய்கல வாதுரை புகல வாயிலார்—
"ஐயநீ கடவுளை அஞ்சி னுயெனப்
பையத்தம் பாட்டுடன் பாடக் கேட்டனம் ;
தெய்வத்தை உன்னினை செப்பினு" ரென்றுர்.

"மன்னகோ சிறையுறு மனிதர் பாடிய
உன்னதத் தமிழிசை ஊரை யேய்த்திடும்
தன்னலச் சூழ்ச்சியித் தான வத்திலே
அன்னியர் இன்னிசை யாகுமோ" வென்றுர்.

மாவலி

ஒற்றரின் குயுத்தியை உணரக் கேட்டபின்,
கொற்றவன் பாடலைக் குறித்து நோக்கியே,
வெற்றுரை யிலையிதில் விஷம மொன்றிலை;
கற்றவர் என்புகழ் கதைக்க லாமென்ருன்.

"கடவுளைப் பாடிடிற் கைத்துப் பாக்கியாற்
சுடுவதைத் தவிரவோர் சொல்லு மில்லையே ;
மடவுளம் பிதற்றிடு மதமொன் றில்லையே ;
அடிகளிற் பிசகிலை அறிஞர் பாட்" டென்ருன்.

இகத்தினை மெய்யெனும் எனது நீதியாம்
பகுத்தறி வேதத்தைப் பயின்ற பாவலர்,
சுகத்தினை யென்னிடந் துலங்கக் காட்டியே
முகத்துதி பாடினு முறைமை யாகுமே !

ஆயினும் எவ்வகை அவரிங் குற்றனர் ?
நேயரோ ? பகைவரோ ? நிருதர் அன்றியெத்
தேயரும் அறிகிலாத் தீவில் எங்கனம்
காய்சினக் காவலைக் கடந்துற் ருரென்ருன்.

ஒற்றர்

தாடியை வளர்த்தவர் சாது வானவர் ;
பாடிடும் வாலிபன் பசுவைப் போன்றவன்.
நாடொறுஞ் சென்றிவர் நல்ல செல்வரை
நாடியே பிழைத்திடும் பஞ்சை நாட்டினர்.

வெருட்டினும் வெருண்டிலர் மெலிந்த மானிடர்
அரட்டினு மரண்டிலர் அமைதி வேண்டினர் ;
விரட்டினும் ஓடுவர் ; வித்தை யிற்பொருள்
திரட்டினு நம்மவர் திருட்டை மீறிலார்.

தானவத் தீவிற்கித் தனிய ராகிய
மானிடப் பசுக்களால் வருவ தொன்றிலை ;
ஏனிடர் என்றலும், இணையில் ஒற்றர்கள்
கோனிடர் நீங்கிச்சுந் தரியைக் கூவினன்....

சுந்தரி வருதல்

சந்தமென் முலதைத் தணிக்கை செய்திடத்
தந்திர மாவலி தான ழைத்திடும்,
சுந்தரி வந்தொரு சுடரு மென்னகை
அந்தமா யவனுளம் அழிய விசினள்.

வாட்டத்தைப் போக்கிடும் வனப்பின் செல்வியே
பாட்டிதன் பதவுரை படித்துச் சொல்லெனக்
காட்டலும், சுந்தரி கருத்துள் இன்புற
நீட்டுரை இசையுற நிகழ்த்தி னளரோ !

சுந்தரி

இத்தலந் தோளினில் ஏந்த வல்லநின்
சத்தியைப் பண்ணுறச் சாற்றும் இக்கவி ;
கத்திகொண் டுலகினைக் கடியுந் தானவா,
உத்தமர் வாக்கிதன் உண்மை பொய்க்குமோ ?

விண்ணிலு மண்ணிலும் விளங்கு முன்புகழ்,
பண்ணினில் அமைத்தவர் பாழ்சி றையிலே,
கண்ணிலாச் சேயெனக் கலங்க லாகுமோ ?
திண்ணென விடுதலை செய்க மன்னனே.

எம்மிடம் வீணையும் இனிது சேர்ந்திடப்
பொம்மெனக் குழலுடன் புலவர் பாடுவார் ;
நம்மகள் சக்தியு நாத வித்தையைச்
செம்மையா யறிந்திடச் செய்வ தாகுமே !

மாவலி

கானத்தைக் கேட்பதிற் களிக்கும் என்னுளம் ;
வானகப் புரட்டினை வஞ்சந் தீர்க்குமால்,
தானவர் சட்டத்தைத் தழுவிப் பாடிடத்
தேன்மொழி யாய்,அவர் தெரியக் கூறுவாய்.

கடவுளுங் கிடவுளுங் கலந்தென் காதினைக்
குடைந்திடின், அவர்களைக் கொன்று போடுவேன்.
திடமிகு லூஸிஃபர் செருக்கைப் பாடினல்,
அடைகுவர் மதிப்பென அறியச் சொல்லுவாய்.

சுந்தரி

கடுத்திலை ; அன்னவர் கடவு ளோடும்போர்
தொடுத்ததைத் தானையே துணிந்து பாடுவார் ;
விடுத்தவர் சிறையினை வெளிவந் தென்னிடம்
அடுத்ததும் பிடித்ததை அவருக் கோதுவேன்.

முன்னரப் பாடகர் முறைமை யாகவே,
என்னிடங் கற்றபின், ஏற்ற நாளிலே
உன்னிடம் இசைத்திட ஒழுங்கு செய்குவேன் ;
நன்மையி தாமென நயந்து கூறுவேன்.

மாவலி

தந்தனன் விடுதலே ; சாது மானிடர்
நந்திருக் கொள்கையை நன்குக் கற்றபின்,
எந்திருச் சபையிலே யிசைக்கச் செய்குவாய் ;
சுந்தரி, என்னுடற் சுகத்தின் பாவையே !

கவிகளும் வந்தனர் ; காவல் விட்டதும் ;
தவங்கனிந் ததுவெனத் தக்க சூழ்ச்சியால்
அவம்பெறு தானவர் அதர்ம வாழ்வினைச்
சிவம்பெறத் திருத்திடத் திருவுஞ் சிந்தித்தாள்.

சுந்தரி, முனிவனைத் தூய மெய்யனை
வந்தனம் வருகென விருந்து வைத்தபின்,
அந்தரங் கத்தினை அவரி டஞ்சொலி,
விந்தைகள் செய்ததை விளம்பு வாமரோ. 136

9. அந்தரங்கப் படலம்

காரிருட் சிறையை நீத்துக் கட்டுகள் விலகச் செய்த
பேரருள் அழகி கேட்கப் *பிதாவின்சே மங்கள் சொல்லிப்
பாரத நாட்டுச் செய்தி, முற்றிலும் பகர்ந்து, போகன்
"வீரசுந் தரியுன் காதை விரிவுறக் கூ"றென் றுனே !

சுந்தரி

"கோனுடன் அருளின் வந்த குருமணி போற்றி ! இந்தத்
தானவந் திருந்த நல்ல தருமமே போல வந்தீர் ;
யானெதிர் பார்த்தி ருந்தேன் ; இன்றெனக் கின்ப" மென்றே
மான்விழி மலர நோக்கிச் சுந்தரி மற்றுஞ் சொன்னாள் :—

எந்தையே இந்த நாட்டில் இருசெவி சுவர்க்கும் உண்டு
சுந்தரி பட்ட பாட்டைச் சுருக்கமாய்ச் சொல்வேன் ; எல்லாம்
அந்தரங் கத்தில் வைத்தே, அருட்பணி செய்ய வேண்டும் ;
இந்தரா க்ஷஸரை மாற்றும் மாற்றமும் இயம்பு வேனல்.

* சிகரன்

அன்னைபோல் எனைவ ளர்த்தாய் ; அறிவுடன் கலைக ளீந்தாய் ;
என்னையே எனக்க ளித்தாய் ; இணையிலாச் சித்த ரேறே,
உன்னரும் பெயரான், ஆதி போகனால் உதித்த ஊணர் ,
இன்னலே யாறு ரிந்த உலகெலாம் இடும்பை செய்தார்...

"உண்மைகற் புயர்ந்த நீதி ஒப்புர வுயிரி ரக்கம்,
புண்ணிய மென்ப தெல்லாம் புராணிகள் புரட்டே"யென்பார் ;
எண்ணத்திற் கொடியார், ஈசன் என்னினு நாசி கொய்வார்.
மண்வெறி கொண்டி ரத்த வாள்பிடித் தலைவா ரந்தோ !

ஈயென மொய்ப்பார் ; ஈந்தால் இன்னமும் என்று நைப்பார் ;
வாயினால் இல்லை யென்றால், வயிறெரி பொறாமை கொண்டு,
நாயென விழுவார் ; நாக்கில் நரம்பின்றித் தூற்றி, ஆளைப்
பேயெனப் படுத்து வார்கள்—பிரிவினைப் பித்தர் இன்னோர் !

அஞ்சினார்க் கழிவு செய்வார் ; அடுத்தவர் வாழ வொட்டார் ;
கெஞ்சினால் மிஞ்சு வார்கள் ; எதிர்த்திடிற் கேடு சூழ்வார் ;
துஞ்சினோர் தலையிற் கல்லைத் துணிவுடன் உருட்டு வார்கள் ;
கொஞ்சியுங் கழுத்த றுப்பார் குடிலுக்குக் கொள்ளி வைப்பார் !

போகன்

மின்னணி யன்ன மேநீ வெய்யர்கைப் பட்டிங் கேகி,
அன்னவர்க் கரசி யான செய்தியை அறிவோம் ; சக்தி
உன்னரும் புதல்வி கௌரி உயிர்கலந் திலகும் பெற்றி
முன்னரே அறிவேன்; பின்பு முளைத்ததைப் பேசு வாயே.

சுந்தரி

அளவறு சித்தி வல்லாய், அரசியென் றென்னை யேற்ற
வளமைகள் யாவு, மின்று மறைந்தன ; மாவ லிக்குப்
பளபளச் சாயம் பூசிப் பல்வைத்துச் சிரிக்கு மின்னோர்
உளரவர் மோகம் பற்றி, என்னையும் உதறி னானே.

வேகமாய் எனைக்கொ ணர்ந்த வெறியனுக் கிணங்கி டாது,
மோகமாப் பிதற்ற லெல்லாம் கண்டித்து, முகந்தி ருப்பிச்
சோகமாச் சுழலி னீந்தித் தூயவென் கற்பைக் காத்தேன் ;
தேகமும் விடத்து ணிந்தேன் சேயிழை, தனியள் யானே.

சீதையைக் காவல் வைத்தும் ,செய்கையிற் சோடை போன
பேதையி ராவ ணன்போல் எண்ணினை பெண்ணே என்னை ;
ஈதென தியற்கை யென்றே இருகையால் அள்ளிக் கொண்டென்
காதலின் உறுதி யின்றிக் கற்பினைக் கெடுத்தா னையா !

கதிரொளி தாக்கி டாது, கையவிழ் கமலம் போலச்
சதிபதி நேய மின்றித் தாமதக் காமத் தாலே,
விதிமுறை யின்றி, உண்மை விருப்பின்றி அணைந்த கைகள்
மதியிலார் நிதியைப் போல மாண்பறத் தேய்ந்த தம்மா !

படங்கிளர் பாம்பைப் போலும், பசிமிகு புலியைப் போலும்,
விடங்கிளர் வெறியி லென்னை வேட்டவன் கைவிட் டின்று
குடங்களை யுண்டு போக சாலையிற் பெண்க ளோடு
நடங்களைப் புரியுந் தன்மை நாளையே காண்பீ ரையா !

மனைவியிங் கிருக்க, கண்ட மாதரைச் சேரு வானை
இனியொருக் காலுந் தீண்டேன் என்றொரு விரதம் பூண்டேன்
எனக்கிந்த மனையுந் தந்தான் ; இருமுறை உண்ணத் தந்தான்;
தனக்கினி யார்களோடு தாண்டவ மாடு கின்றான்.

என்னுடைச் செல்வி சக்தி, யியல்பையுங் கெடுக்க வேண்டித்
தன்னுடன் வைத்துக் கொண்டு தானவம் பயிற்று கின்றான் ;
அன்னவள் ஒருநாள் "யானே கௌரியென் றறிவீர்" என்றாள்;
"என்னவன் சுத்தன்"என்றாள்இனும்பலமொழிந்திட்டாளே.

மெய்யன்

சித்திபன் எனது செல்வன் கலியினைச் செகுக்குங் காலை
பத்தினி கௌரி தானும் படுசமர்க் களத்திற் பட்டாள்,
அத்தினம் அவள்சுத் தாத்மா அழகியுன் அருமைச் செல்வி
சத்தியுட் புகுந்த துண்மை; சகநலந் தழைக்க வேண்டி.

சுந்தரி

அறிகுவன் ஐய முற்றும் ; ஐயநின் புனித நாட்டில்
வெறிகொளுங் கலியன் கொண்ட வீரியத் தினவி னாலே,
பொறிகொளுஞ் சண்டை செய்து புனிதனால் வீழ்த்தப் பெற்று
நெறியிலா முயற்சி செய்ய நிருதரை யண்டி னானே.

ஆயுதப் போரில் வீழ்ந்த கலியனிங் கவுணர் கூட்டால்,
மாயங்கள் புரிந்து, மாந்தர் வாழ்வினைக் கெடுத்து னாட்டைப்
பேயெனப் பிடிக்க வேண்டிப் பெருஞ்சதி செய்துன் செல்வன்
தூயனைக் கொல்ல நாளுந் துறுதுறுத் தலைகின் றானால்...

மெய்யன்

கலியனு மோகி யுஞ்செய் காதகச் சூழ்ச்சி யெல்லாம்
உலகறிந் தவையாம் ; இங்கே ஊணரின் உதவி யாலே
கலகஞ்செய் தழிந்த பின்னர், கன்மனக் கொடுமை செய்து
நலங்களை யழிக்கப் புக்கான் மெய்யைப்பொய் நலிப்ப தாமோ ?

கள்ளிடை மயங்கிக் காமக் களிப்பெனும் புளிப்பு மிஞ்சித்
துள்ளிடுந் தான வத்தைத் தூய்மைசெய் வழியைச் சொல்லாய் ;
உள்ளிந்த ஊணர் மாறின், உலகமும் திருந்த லாகும் ;
வெள்ளிடை மலையி தென்றே மெய்யனும் விளம்பி னானே.

போகன்

கலகத்தா லில்லே ; மீண்டுங் கத்தியா லில்லே ; தக்க
புலவர்செய் கலையின் பத்தாற் புலன்களைக் கவர்ந்து, மெல்ல
நலங்களைப் பயிற்றி யிந்த, நாணமில் அவுணர் தீய
குலந்தனைத் திருத்தி ஞலே குவலயந் திருந்த லாமே...

சுந்தரி

இதுசொல நினைத்தேன்; முன்னே இயம்பினை அறிவின்மிக்காய்;
மதுவெறி மண்ணின் ஆசை மாதரின் மயக்கங் கொண்டார்
புதுநலப் பாடல் ஆடல் கூத்துகள் புரியக் காண்பார்—
முதுபெருங் கலைக ளாலே முற்றிலுந் திருந்த லாமே !

மாதரை யிழிவு செய்வார், மமதையாற் பொருமை கொண்டு,
கோதையர் கற்பைப் போட்டி போட்டவர் கொலையுஞ் செய்வார் ;
காதலைக் காம மாக்கிக் காமத்தைக் குரோத மாக்கி,
மோதுவார் சண்டை யிட்டு, மோகப்பேய் கொண்ட ஊணர்.

காரியம் ஆன பின்பு, கைவிடும் வஞ்ச நெஞ்சப்
பூரியர் மோசத்தாலே புண்பட்டு மனது வேகும்
நாரியர் என்னைப் போன்ருர் உள்ளனர் நமக்கி சைந்த
சீரிய பணிகள் செய்வார் ; திருக்கலைச் சங்கங் காண்போம்.

மாவலி தம்பி யான அனலன்ஆ ணவத்தை யாள்வான் ;
பாவலன் ; என்னை வேட்கப் பறந்துபின் புறம்போந் துள்ளான்;
நாவலர் கலைஞர் கூத்தர் நல்லிசை வாண ருக்குத்
தேவையாம் உதவி செய்வான்;திருக்கலைச்சங்கங்காண்போம். 100

அண்ணலுந் தம்பி மாரும் அடிதடி வரைக்குஞ் செல்லும்
வண்ணமாப் பொருமையாலேமமதைகொண் டொருமையற்ருர்..
புண்ணியப் புவியை யின்ஞர் பிரித்தறம் போக்க வேயின்
றெண்ணிஞர் பலனை யிங்கே இவரனு பவிப்பா ரன்றே !

ஒருவன்கொள் பெண்ணைமற்ருேர் உடன்பிறந்தானுங்கொள்ளத்
திருகுதா ளங்கள் செய்வான் ; சேயிழை மனம யங்கி
ஒருவனுக் கிணங்கின், மற்ருேன் வாளினை உருவிக் கொல்வான்;
இருவருக் கிணங்கும் வாழ்வின் இறப்பதே யின்ப மாமே !

கலையினல் ஒருமை தன்னைக் காணலாம். கண்ட பின்பு
நிலைபெறு சன்மார்க் கத்தை நேயருக் குணர்த்த லாகும் ;
கொலைகள வற்ப புத்தி, கொடுமைபொ ருமை காம,
வலைதருந் தீமை மாற்ற வல்லநற் பணிசெய் வோமே !

தினந்தினங் கற்ப ழிக்குந் தீயவர் திருந்தா ராயின்,
அனங்கனை யெரித்த தீயும், முப்புரம் அழித்த தீயும்,
சினங்கொளுந் தட்ச னுரைச் செகுத்தசெந் தீயும், என்றன்
மனங்கொளுந் தீயும் வூணர் நாட்டினை வாட்டு மன்றே !

மதிமலர் முகத்திற் செய்ய மலர்க்கர முறுத்திச் சற்றே
கதியிதென் றழகி செய்ய கண்பனிப் பெய்த நோக்கித்
துதிபெறுங் குருவே சங்கந் தொடங்கியிந் நாளைக் கேற்ற
விதியினைக் கடைப்பி டித்துவெல்லுவோம்என்றுசொன்னாள்.120

கீதத்திற் காதல் கொண்டான் கேட்பனும் பாட்டை யோர்நாள் ;
மாதரைக் கூடும் போக மாளிகை தனிலே உங்கள்
நாதநல் விருந்தை நன்கு நடத்திட வேண்டும் ; யானும்
மேதகு வீணை மீட்டி விருந்தினிற் கலந்து கொள்வேன்.

நாத்திகத் திமிர்பி டித்த மாவலி நயக்கும் பாட்டில்,
ஆத்திக வாடை கண்டால், அக்கணஞ் சினந்து கொல்வான் ;
கூத்தினுக் கேற்ற வேடங் கொள்வதே கடமை யாகும் ;
சாத்தனின் புரட்சிப் பாட்டைச் சபைக்குநாம் பாடு வோமே...

பாங்குற மில்த னோடு பைபிளும் பகரு கின்ற,
தீங்குறு சைத்தான், தேவ தேவனை எதிர்த்து, விண்ணை,
நீங்கியே நரகில் வந்து நெருப்பெழப் பேசு கின்ற
ஓங்கிய செருக்கை நாமும் உணர்வுற நடிக்க லாமே.

பாடலைச் செய்து முன்பு, பண்ணிசை யமைத்துப் பாடி,
நாடகந் தேர்ந்து நன்று நவரசங் காட்டி யிங்கே
ஆடலும் பயின்ற பின்னர், அரக்கனின் போக சாலை
நாடலாம் என்று நங்கை நவின்றிது வழியென் றுளே !

"அழகிசொல் வார்த்தை யெல்லாம் அமுதமு"தென்னமெய்யன்
குழலுடன் வீணை கொஞ்சுங் * குதியிசை யினிது பாடி,
முழவுடன் ஆடி, ஊணன் முகலமர்ந் திடச்செய் வேலை
பழகுவோம் "சரிகா ஸாபா பதநி"யென் றுரம் பித்தான் ! 140

ஆவலோ டினைய நண்பர் பயின்றிடும் ஆட்டம் பாட்டம்
காவலன் போக சாலை காணுமுன், அரச மன்று
மேவியங் குலகை வெல்ல வெவ்விய சூழ்ச்சி செய்யும்
மாவலி யரக்க னுரின் மமதைநா டகத்தைக் காண்போம் ! 144

---

* கூத்திசை

10. அசுராலோசனைப் படலம்

மாவலி கொலுவிற்றிருத்தல்

மின்னலு மின்களு மிளிரச் செம்மலை,
பொன்மலை மீதினிற் பொருந்தும் பான்மைபோல்,
கன்னகை பளிச்சிடக் கத்தி யேந்தியே
மன்னவை வகித்தனன் மாவ லாசுரன் !

வயிரங்கள் சூடிய வயிர மேனியான் ;
வயிரங்கொள் வாளினன், வயிர நெஞ்சினன் ;
வயிரத்தால் வயிரமே வளர்க்கும் சேனையான்,
வயிரப்பொன் முடியணி மன்னன் மாவலி.

வாளென மீசையும், வாள்வி ழிகளும்,
வாளென மின்னிடு வாய்மு றுவலும்,
தோளுயர் வீரத்தைச் சொல்லும் வாகையும்,
வாளுயர் வீரரும் வயங்க மேவினன்.

பற்றுறும் அமைச்சரும், படைத்த லைவரும்,
கற்றறி குருவுடன், கலியுங், காவலும்,
சுற்றிலுங் குன்றெனத் துலங்க மாவலி
பொற்றிரு மலையெனப் பொலிவு கொண்டனன்.

துன்மதி, வக்கிரன், தூம கேதராம்,
வன்மதி யமைச்சரும், வஞ்ச வெள்ளியும்,
கன்மதி நாசனுங் கலியு, மோகியும்,
தன்மனந் தழுவிடத் தானி ருந்தனன்.

காரிய தூதர்கள், கடமை காத்திடப்
போரியல் அரக்கர்கள் பொங்கி விம்மிடப்
பாரதிர் செருக்குடன், பதந்தெ றித்திட
வீரிய ராக்ஷஸன் விளம்ப லுற்றனன் :

மாவலி பேச்சு

என்னலங் கருதிடும் எனது தொண்டர்காள்,
என்மனம் புரிந்திடும் இனிய நேயர்காள்,
என்னறி வாகிடும் இன்ப வெள்ளியே,
மன்னவன் மாவலி மதிக்கும் அன்பர்காள் !

மண்ணுல கனைத்துமென் வாளி னுண்டிடும்
எண்ணமே கொண்டநம் இகல்கள் யாவையும்,
திண்ணமாய் வென்றிடுஞ் செய்தி கேட்கவே
அண்மையில் உங்களை அழைத்த தாகுமே.

பஞ்சபூ தங்களைப் பகுத்துப் பாரெலாம்
அஞ்சுறும் பொறிகளை அமைத்துப் போர்செய்தோம் ;
மஞ்சளும் பசுமையு மல்கு நாடெலாம்—
எஞ்சற நம்மிடம் இருப்ப தாகுமே !

புண்ணியப் புரட்டுகள், புராணக் கற்பனை,
கண்ணுக்குக் கண்ணெனுங் கடவுட் கற்பனை,
விண்ணகக் கற்பனை, வேதக் கற்பனை
திண்ணமா யிவைகெடச் செய்த சேவையென் ?

நீதியுந் தெய்வமு நிலவு பாரதம்,
தீதுற நம்படை சென்று தோற்றதென் ?
மாதவர் மல்கிய மாநி லத்திலே
பாதகஞ் செய்தது பயனற் றானதென் ?

தானவர் தாசனெந் *தங்கை காதலன்,
சேனையிற் சேர்ந்துநஞ் சேனை போர்செய்தும்,
ஏன்கலி தோற்றனன் ? ஏனிச் சுத்தனும்
ஞானவே தாந்தியே நம்மை வென்றனன் ?

மாதவங் கீதவம் என்று மானிடர்
போதினைப் போக்கியும் போரில் வெல்வதேன் ?
போதிய கருவியும் பொறியும் தானவர்
மேதையுந் துணைசெய்த கலியன் வீழ்ந்ததேன் ?

†அமரகம், ‡ஐரகம், §அதகம், ||ஆப்ரகம்,
எமதக மாதலில் இன்னும் ஏனிடர் ?
சமனையும் வென்றிடச் சபதம் கூறினேம் ;
நமதுவாட் கொடியினு நடுங்க வேண்மோ ?

விம்முயர் தோளிற்கும் விமானக் குண்டிற்கும்,
பொம்மெனப் பொருதிடும் போர்ம தத்திற்கும்,
வெம்மனக் கொதிப்பிற்கும் வேலை யீந்திடின்—
நம்மதே உலகென நாட்ட லாகுமே ?

பொன்மணி வளங்களும், பூவ ளங்களும்,
பெண்மணி வளங்களும், பிறவ ளங்களும்,
கண்ணினிற் காண்புவி கைக்கு வந்திடப்
பண்ணுறு வளங்களும் படைக்க வேண்டுமே.

---

* *கலி* † *அமெரிக்கா* ‡ *ஐரோப்பா* § *ஆத்திரேலியா*
|| *ஆப்பரிக்கா*

வித்தகப் பௌதிகர், வியன்ர சாயனர்,
புத்தகப் பூச்சிக ளின்றிப் போரிலே,
சித்திகள் பெற்றிடச் செய்த யந்திரம்
எத்தனை எத்தனை இருந்தும் என்பயன் ?

குண்டுகள் கண்ணிகள், கொல்லும் வெம்புகை,
அண்டமும் கிழித்திடும் அழி கருவிகள்,
பண்டிகள் சூத்திரப் படகு கள்விரி
விண்டல மளந்திடும் விமான ராசிகள்—

கரியிரும் பெண்ணெய்வெங் கனல்மின் சாரத்தால்
பெரியயந் திரங்களைப் பிழையி லாதுசெய்
அரியநற் கணக்கரும் ஆழ்ந்த சிற்பரும்,
எரிகுண்டு வீரரும் இருக்கத் தோல்வியேன் ?

பரவுல கனைத்துமெப் பாஷை தன்னிலும்
விரவிய செய்தியை விரைந்து வீட்டிலே
தரவல வானொலி சமைத்த நம்மையும்
இரவினைப் பகலென இதரர் ஏய்ப்பதோ ?

வெள்ளியுந் தங்கமும், விரிந்த போகமும்,
அள்ளிநான் உங்களுக் களித்த சீரெலாம்,
எள்ளிடுந் தோல்வியை யெய்த வேண்டியோ
கொள்ளையுங் கொடுமையுங் கொலையுங் கொண்டுளீர்.

நினைகுமின் சூழ்ச்சியை நினைந்து கூறுமின்—
அனைவரும் என்னர சடிமை யாகவே ;
புனையற மொழிந்திடப் பூமி யெங்குமே
எனைமிகப் பணிந்திடு மின்ப மெய்தவே !

துன்மதி

பஞ்ச பூதம் படைத்த உலகெலாம்,
அஞ்சும் உன்னை அரக்கரின் சிங்கமே ;
வஞ்ச மெத்தனை மானிடர் செய்யினும்,
மிஞ்சி யுன்னை வினைத்திறன் உள்ளதோ ?
விரவு மின்சக்தி யின்வினை யாட்டினால்,
இரவி னைப்பக லென்றினி தாக்கினோம் ;
பரவை வான்புவி யெங்கும் பரவியே
அரிய தாகிடும் அற்புதஞ் செய்கின்றோம்.
ஓர் நொடியினில் ஊரை யழித்திடும்
பே ரணுவெடி பெய்ய வலியுளோம் ;
யார் நமக்கிணை யிந்த உலகிலே ?
போரும் வெற்றியும் போகமு நம்மதே !

இன்று தோற்றிடின் என்ன? நம் போர்வினை
நன்று செய்தினும் நாளைவெல் வோம்ஐய
தொன்று தொட்ட சுதந்தர பாரதம்
ஒன்றி வெற்றி யடைந்த துறுதியே !

ஒற்று மையை உலைத்தங்கு தெய்வத்தின்
பற்று தலைப் பயனறச் செய்திடின்—
சற்று நம்கலி தானவ வேலையை
முற்ற வைத்திடின் முற்றுமத் தொல்லையே.

ஏனை நாட்டில், இயந்திர வேலைகள்
ஆன போதிலும், அன்பைச் சிதைத்து, விஞ்
ஞான மெல்லாம் கொலையினை நாடவே—
போன நம்புகழ் பொங்கிப் பொலியுமே !

திங்கள் வான்கதிர் சென்றொளிர் திக்கெலாம்,
தங்கம் வெள்ளி தழைபசு நாடெலாம்,
எங்க ளுக்கென் றியம்பிய பின்னரும்,
பங்கு போடுவர் பாரினில் யாவரே ?

அண்ட கோளத்தை அம்மனை யாடுவோம் !
செண்டு ருட்டுவம் சேணொளிர் மீன்களை ;
வண்டி யாக்குவம் வான்வளை பூமியை ;
உண்டு மெய்வலி ஊணர் தலைவனே !

கந்த கமும் இரும்புங் கரியுடன்
சொந்த மான சுரங்கப் பொருள்களும்,
வந்து நம்மை வலுவில் அடைந்தபின்,
எந்தக் காரியம் எய்தற் கரியதே !

சோலைச் செல்வம், சுறுசுறுப் பாந்தொழிற்
சாலைச் செல்வம், சமர்க்களச் செல்வங்கள்,
வேலைச் செல்வம் வியாபாரச் செல்வங்கள்,
ஞாலச் செல்வ மனைத்து நமக்கரோ ?

காரி லேறிக் ககன முலாவுவோம்,
நீரி னுள்ளு நிலமென் றுலாவுவோம் ;
பாரி னுள்ளம் பலவகுப் பாகியே
போரி னுள்ளம தாகப் புரிகுவோம்...

வருந்த லையநம் வாளுண்டு ; நாளுண்டு ;
பருந்து போலப் பறந்துல கெங்குமே
விரைந்து குண்டெறி வேட்டை நமக்குண்டு ;
அருந்து போகம் அளவற்றுண் டாகுமே !

மாவலி

வீரியஞ் சரிசரி, வியப்பெ லாஞ்சரி ;
காரிய வெற்றியைக் காண வேண்டுமால்,
பாரத பூமியைப் பற்றி நங்கலி
கோரிய தாற்றமுன் கூறும் ஓர்வழி !

சுத்தனும் அவன்பெருஞ் சூரனுந் தவப்
பித்தனும் பேரின்பப் பிதற்ற னும்அவன் !
சித்திப னுய்நமைச் செயித்த வெட்கத்தை
இத்தின மாற்றுதற் கேது சொல்லுவீர் !

வக்கிரன்

இத்திறம் தானவன் இயம்பக் கேட்டலும்,
குத்திரங் கோள்பொயின் குடித் தலைமகன்,
எத்திற நாட்டிலும் இகலை ஆழமாய்
வித்திடும் வக்கிரன் வெறித்துக் கூறினன் !

உக்கிர மாகிய உறுதி கொண்டுநம்
சக்கர வேகத்தைத் தடைசெய் பாரதம்,
எக்கிர மத்தினல் ஏற்றம் பெற்றது ?
வக்கிரன் அறிந்ததன் வாய்மை கேட்டியால்.

புவியெலாங் கறங்கெனப் போந்து சுற்றினேன் ;
அவரவர் இயல்பினை அளந்து திட்டினேன் ;
செவியிலும் விழியிலுந் திரட்டிச் சேர்த்ததை
அவிழ்த்துவிட் டமருவன் அரக்கர் மாசபை !

மாவலி என்றிடின் மாந்தர் மட்டுமோ,
தேவரும் அஞ்சுவர் திசைகள் எட்டுமே.
பூவினில் இதைவிடப் புகழுண் டாகுமோ ?
கூவிடுங் கூற்றுமுன் குண்டிற் கஞ்சுமே !

பிஞ்சிளஞ் சேயுமுன் பெயரைச் சொன்னதும்,
அஞ்சிடும் ; அன்னைசொல் அமையக் கேட்டுடன்
துஞ்சிடும் என்றபின், சுத்த னுட்டிலே,
நஞ்செயக் கொடியினி நாட்ட வேண்டுமோ ?

மாவலி

வக்கிர தந்தநீ வாய்மை கூறினும்,
இக்கலி மோகியர் இழந்த மானத்தை
எக்கதி யாலினி எய்த வல்லமோ
அக்கதிக் கேற்றதை அறிந்து சொல்லுவாய் !

வக்கிரன்

பொறிகளைக் கடந்தொரு புலமை கண்டிடும்,
அறிவெனக் குன்னருள் அளிக்க வில்லையால்,
சுறுசுறுப் பாகநான் சுற்றுங் கண்டதே
மறுவறச் சொல்லுவேன் மற்ற துன்மனம் !

காற்றினைப் போலவுங், கன்றைப் போலவும்,
நீற்றணி பூனையை நிகரவும், கொடுங்
கூற்றினைப் போலவுங் குலவி, நண்பரை
ஏற்றிடு நாட்டினில் இருந்து சுற்றினேன் !

கண்டவர் விரும்பிடக் கதைகள் பேசினேன் ;
சிண்டுகள் முடித்திடு நலமுந் தேடினேன் ;
பெண்டுகள் கணவரைப் பிரிய வஞ்சித்தேன் ;
சண்டைகள் மூட்டியென் சபதஞ் சாதித்தேன்.

அழிவுசெய் கலியருக் காக்கந் தேடலே
தொழிலெனப் பூண்டுநான் சுற்றி, ஐம்பெரும்
பழிசெயும் பாதைக்குப் பரம்ப டித்தனன் !
வழிசெய்தும் வந்திலர் வம்பு நாட்டினர் !

மதுவினைக் குடியெனில் மாட்டுப் பாலுண்பார் ;
பொதுமகள் சுகமெனிற் கற்பைப் போதிப்பார் ;
எதுநலம் என்றுநாம் இயம்பு வோம்அதை
இதுமிகத் தீயதென் றெள்ளி வீசுவார் !

படுகொலை செய்வதைப் பார்க்கக் கூசுவார் ;
கடவுளைப் பழித்திடிற் காதைப் பொத்துவார் ;
உடலினில் ஆத்துமா உண்டென் றேமிகத்
திடமுள தியானங்கள் செய்து சிந்திப்பார் !

வாய்செயும் வாதத்தை மறுத்துக் கூறவே,
ஆயிரம் பாடல்கள் அடுக்கு நாட்டினர் ;
தேயமுந் தெய்வமும் செறிசுத் தாத்தும
நேயமுங் கொண்டவர் நீடு வாழ்கின்றனர்....

போகத்தை நாமெலாம் பொருளென் றெண்ணுவோம்
யோகத்தை யேயவர் உயர்வென் றோதுவார் ;
தேகத்தி னுள்ளொரு திறமை கொண்டுளார் ;
ஏகத்தில் வாழ்ந்திடும் இவர்கள் சீரிதே.

இதற்குமேல் உரைப்பதொன் றில்லை ; பாரதர்
சுதந்தர சக்தியொன் றுடையர் ; சுத்தனே
அதற்கொரு நிலையமாய் அமைந்துளான் ; அதைப்
பதமுடன் ஒழித்திடிற் பரந்த வெற்றியே !

மாவலி

வக்கிரன் சொன்னது வாய்மை யாயினும்,
உக்கிர யோகத்தால் உள்ளு யிர்க்கனல்
மிக்கவர் பெற்றெனை வீழ்த்தும் பொய்க்கதை
அக்கிர மக்கதை ; அதனை நம்பிடேன் !

சுண்ணமு மஞ்சளுந் தொகுத்துச் செவ்விய
வண்ணத்தைக் காட்டிடும் வகையி லிவ்வுடல்
எண்ணுறு மூளையோ டிணைந்த தோற்றமே
நுண்ணிய மனத்தினு னுண்மை யில்லையே.

ஆத்துமப் புரட்டரின் ஆற்றல் யாவையும்
இத்தனல் பெய்யுமென் சேனை யின்முனே
பூத்தணல் கொண்டதைப் போலத் தீர்வதை
ஆத்திரந் தீரயான் அருகிற் காண்பனே !

நேசனுங் கலியிசை நிலவ நாட்டுவேன்,
ஆசையும் தீர்ப்பதற் கடுச மர்ப்படை
நாசக நடத்தென நவில மாவலி,
வேசுறக் கலியனும் விளம்பு வானரோ.

கலியன்

இரணியன், கம்ஸன் முஞ்சன், இராவணன் ஆவி யெல்லாம்,
அரணெனப் புகுந்து வாழும் அரக்கனே அமைந்து கேளாய் :
முரணிலா தோங்கு கின்ற முதுபுகழ்ச் சித்தி நாடு
மரணத்தை வென்ற ஞான மாசிலார் நாட தாமே !

காலபா சத்தைப் போலக் காசினி தன்னைக் கௌவிச்
சாலவுந் தொல்லை செய்யும் தானவர் தலைவா கேளாய் ,
தோலுடல் வலியி னாலே துப்பாக்கிபி ரங்கி யாலே
தோல்வியே கண்ட தல்லாற் சுகமொன்றுங் காண்கி லேனே !

எனக்குன தருளால் வந்த படைகளை யெல்லாம் அந்தக்
கனற்பொறிப் படைகள் வல்ல கடும்பயல் வீழ்த்தி விட்டான் ;
மனக்கிலே சத்தி னாலே மாநகர் புகுந்த போது,
தனிச் சமர் புரிந்து வென்ற சத்தியன் சிறைப்பி டித்தான் !

அப்பனும் பலவான் ; சுத்தன் அப்பனுக் கேற்ற பிள்ளை ;
ஒப்பறும் படைக ளோடும் ஒருவரும் அறியா வண்ணம்,
செப்பரும் பலமொன் றுள்ளே சேமித்து வெல்லு கின்றார் ;
இப்பெரும் வீரர் தம்மை இனிப்படை செகுப்ப தாமோ ?

களத்தினைத் தோற்றென் இன்பக் கலிநகர் தோற்று, வாழு
நிலத்தினைத் தோற்று வெய்ய நீள்சிறைப் பட்டுத் தப்பி,
நலத்தினைத் தோற்று நின்றேன், நலித்தினுங் கொல்லவந்தான்
புலத்தினும் வேக மாகச் சத்தியன் பொறியி லேறி.....

காவல்செய் விமானந் தன்னைக் கடலினில் ஆழ்த்தி விட்டான் ;
ஆவியைக் கொண்டு மோகி யளித்தநல் லுதவி யாலே
மேவினே னிங்குன் றாலே விடுதலை கண்டேன் ; ஐயா,
நோவுறு போரின் பேச்சை நுவலினும் அச்ச மாமே !

சமயத்திற் கேற்ற சூழ்ச்சி தந்திர மாகச் செய்தே,
அமைதியாய் வெடிவைத் தாளை அடியுடன் அழித்து, மேலே
எமபுரம் அனுப்ப வல்ல சத்தியன் எங்கு ளானோ ?
நமதிட மறிந்து வந்தால், நாளெலாம் நடுக்கந் தானே !

ஆதலால் இவரை வெல்லல் அரிதரி தாயு தத்தால்,
வாதிலும் தோலார் வாக்கின் வரம்பெற்ற கவிஞர் அன்னோர் ;
பூதசக் தியிலுந் தோலார் புண்ணியப் புனித வாழ்க்கை
சாதலே அவரை வென்று தானவர் தழைத்த லாமே.

மாவலி

தோள்வலி யாலே, பூமி யஞ்சிடத் தூக்கி நிற்கும்
வாள்வலி யாலே, நாளும் வரிசையாய் அனுப்பும் ஒற்றர்
கோள்வலி யாலே, வெற்றி கொண்டிட முடியா தென்னில்,
ஆள்வலி தன்னை மற்றோர் அரங்கத்திற் கனுப்ப லாமே !

பல்கிடுந் தான வர்க்குப் பாரெலாம் வீடு வேண்டும் ;
கொல்கொலை கொள்ளைகொண்ட போகத்திற் கொழுக்கவேண்டும்.
இல்லெனின் மலட்டுப் பூமி இதிற்கரி யிரும்பே யன்றி,
நல்லதோர் பொருளு மில்லை ; நாமிதை யறிந்து ளோமே ! 260

பொன்செய வேண்டும் ; பொன்னுற் பொருள் செயவேண்டும் ; அஃதால்
மின்பொறி செய்ய வேண்டும் ; வெவ்விய சேனை கூட்டி
மன்பதை பதைக்க வென்று, மாநில மாள வேண்டும் ;
என்கொடி யொன்றே வான்கீழ் இடமெங்கும் பறக்க வேண்டும்.

ஆழியின் செல்வம், சாமி ஆலயச் செல்வம், அஞ்சுங்
கோழையின் செல்வம், கைம்பெண்குவித்தசெல்வங்களெல்லாம்
சூழநஞ் செல்வ மாகத் துலங்கிட வேண்டு கின்றேன் ;
ஆழநீர் சிந்தித் தென்னை அகமகிழ் விப்பீ ரின்றே !

காதகக் கனக மேனுங் கனகமே எனது தெய்வம் ;
வீதம்வைத் ததனை வீசம் பொதுநலம் விளையத் தந்து,
மாதர்க்கும் போகத் திற்கும் மற்றொரு காலுந் தந்து ;
மீதியைக் குண்டுபோடும் விருந்தினுக் கீவ தாமே !

புண்ணிய பூமி எங்கள் பொன்வெறி திரா தாகில்
வெண்ணவர்நிலத்தி லேனும் விதைத்துநங் கொள்கையெல்லாம்,
எண்ணத்தைநிறைவு செய்வோம்;ஏற்றதோர் சூழ்ச்சிசொல்லாய்
அண்ணலே வெள்ளி யேயென் அறிவெனத் தக்காய் நீயே !

வெள்ளி

தேகமே மெய்யென் றெண்ணுந் திவுடை யரசே, புன்றன்
மோகத்தைப் புனித நாடே முற்றுவித் திடுமென் றெண்ணுய் !
ஆகம வேதசாஸ்த்ர புராணமாம் அரிய நூலால்,
யோகத்தில் உறங்கு கின்ற ஒருமைசேர் நாடு மஃதே !

உச்சநா கரிகங் கொண்ட உலகிலே பெரிய நாட்டார்,
பச்சைபொன் வளமை யோங்கும் பாரத நாட்டார், நெஞ்சில்
அச்சமொன் றறியா நாட்டார், அடிமைசெய் யாத நாட்டார்,
மெச்சிசை விளங்கு நாட்டார், விண்ணவ ரென்ன லாமே !

வண்டுகள் பாடும் சோலை, மாபலா வாழை தென்னை
கொண்டொளிர் கனிவ ளங்கள் குடைநிழல் பரப்பு நாடே !
பண்டக சாலையாகப் பாரினுக் குதவு நாட்டைக்
கண்டனு பவித்த மோகி கவியென வருணிப் பாளே :

மோகி

இளங்குயில்கள் கூடியிசை பாடமயி லாட,
விலங்குகள் பழங்களை உருட்டிவிளை யாடும் ;
இலங்குமலை யாறுவன மின்னியல் வளத்தால்
உளங்கவரு மொப்புயர்வி லாதபசு நாடே !

தேன்மலர் மணம்பருகித் தென்றலினி தாடும்,
வான்மழை மிகப்பருகி மண்பயிர்கள் ஆடும் ;
கான்கனிக ளுண்டுகளி துள்ளிவிளை யாடும்
வான்பறவை கள்வளர் வனப்புமிகு நாடே !

வித்தகரும் வீரமிகு வேந்தரும்வே தாந்தப்
பித்தர்களும் சித்தர்களும் பேசுபுகழ் நாடே ;
முத்துநவ ரத்தின முகந்துலவுங் கப்பல்
இத்தலமெ லாஞ்செலும் இசைபெருகு நாடே !

நன்றுவளர் நால்வர்மறை நாதமறை நான்கும்,
இன்றுவளர் எம்மறையும் எண்ணரிய பாட்டும்
ஒன்றிவரு காற்றிசை யுடன்கடன் முடித்த
வென்றியிசை யின்பம்விளை யாடுகிற நாடே !

மாவலி

அத்தகை நாட்டினை இனிதென் ஆட்சியில்
வைத்திட வேண்டினேன் ; வகைசொல் வெள்ளியே ;
மெத்தவு மின்பங்கள் மேவு நாட்டில்வாழ்
வித்தகர் பெருமையை விளம்பக் கேட்பனுல் :

வெள்ளி

மன்னனே கேளாய் பஞ்சு, மயிர்பட்டு நூலி முத்துச்
சன்னமாய் ஆடை நெய்வார் ; சகமெலாம் விற்றுச் செல்வார் ;
பொன்மணி யிரும்பு செம்பு, பொலிவெள்ளி மண்ம ரத்தாற்
பன்மணிப் பொருள்கள் செய்து பளிச்செனக் கடையில் வைப்பார்!

அல்லிநூ லாடை நெய்வார், அழகணிச் சிற்பஞ் செய்வார் ;
நெல்கரும் பிளைய செய்வார் ; நிலத்தினைப் பசுமை செய்வார் ;
கொல்லர்கள், குயவர், தச்சர், கொத்தர்கள், பத்தர், கூத்தர்,
மல்லர்கள் வில்லர் செல்வர் மல்கிய நாட தாமே !

மந்திரம் மணிம ருந்து வானநூல், கணிதம் வல்லார் ;
எந்திரம் இரதம், நாவாய் நம்மினும் எளிதிற் செய்வார் ;
அந்தர மளப்பர் ; மண்ணை அகழ்ந்துபொன் மணியெ டுப்பார் ;
கொந்தளி கடலில் முத்துக் குளிப்பரம் முதிய நாட்டார் !

மனைக்கொரு தரும சாலை ; மருங்கெலாம் புலவர் சங்கம் ;
முனைக்கொரு மருந்துச் சாலை ; முடுக்கெலாம் கலையின் வண்மை ;
வினைக்கொரு பயிற்சிக் கூடம், வெளியெலாம் வீர ராட்டம் ;
தனைத்துய ரணுகா நாட்டின் சரித்திர மிதுவே கேளாய் !

முன்னவர் தமிழர் இந்த முதுநிலம் பரவி வாழ்ந்தார்,
பின்னர் ஆரியர்கள் வந்தார்; பிறகுற்றுர் யவனர் சோனர்,
இன்னமும் பலரும் வந்தார் என்னினும் அவர்க ளெல்லாம்
பன்னெடுங் கால மாகப் பாரத நாட்டா ரானுர் !

கங்கையின் செல்வர் சேதுக் கரையினில் அறங்கள் செய்வார் ;
சிங்களத் தந்தஞ் செய்த சிவிகையில் கூர்க்கர் செல்வார் ;
வங்கரின் கலையைக் கொண்டு வண்டமிழ் அமுத மீவார் ;
மங்கல மருதப் பாட்டை மலைவளர் குறவர் கேட்பார் !

முகில்வினை யாடு மாடம் , முத்தமிழ் ஆடுஞ் சங்கம் ;
புகழ்வினை யாடும் வீரப் போர்பயில் மைதா னங்கள் ;
சுகம்வளர் அருட்பா டல்கள் சுதந்தர இசைகள் ஆடும்
அகங்களே எங்குங் காணும் ஆத்தும நேயர் நாடே !

போர்முர சொலிக்கக் கேட்டுப் பொக்கெனத் தாய்தன் செல்வ
ஓர்மகன் கையில் வாளை உருவித்தந் தனுப்புங் காட்சி ;
மார்பிலே அம்பு பட்ட மகனைக்கண் டுவகை யெய்தும்
வீரத்தாய் மாரின் காட்சி வியன்பெருங் காட்சி யாமே !

ஒன்றிய சங்க வாழ்வும், உயிர்க்குயிர் உணர்ந்த பண்பும்,
குன்றெனக் குவிந்த தோளும், கோபுரத் தலைநி மிர்வும்,
வன்றிறற் படைச் செருக்கும், வளர்கலை யொளியும் கொண்டு
வென்றிமேல் வெற்றி பெற்று விளங்கிடு நாட தாமே !

மாவலி

செவிவளர் காதற் பெண்ணைத் திருவிழி கண்ட தேபோல்
புவிவளர் காத லிந்தப் புண்ணிய பூமி யாலே
அவிதலில் லாத தீபோல் ஆசையால் வளர்ந்த தம்மா !
இவளவு செழித்த நாட்டை எனதுநா டென்ப தென்றே !

எனக்கெதி ராவ தெல்லாம் இருக்குமந் நாட்டி லேபோய்
எனக்கினி தாவ தெல்லாம் இடம்பெறப் பரப்பு மெல்ல ;
உனக்குநான் அரிய நண்பர் உதவியை அனுப்பு கின்றேன்
மனக்குவந் ததுசெய் என்றன் மாப்பிள்ளை கலியே கேளாய் !

பால்வளஞ் சுரக்குங் காராம் பசுவினைக் கண்ட பின்பும்,
வாலிற்கும் உதைக்கும் அஞ்சி வாயினைக் கட்டு வோமோ ?
கால்வைத்து விட்டோம்;பின்னே,கண்டிப்பாய்ச்செல்லமாட்டோம்;
சேல்விழி மோகி நாதா செல்லினி வெல்வ தாமே !

கலி

அஞ்சிலேன் செல்வேன் என்றன் அரக்கமைத் துனனே கேளாய்,
சஞ்சல வலைவி ரித்துச் சன்னமாய் ஊசி வைத்து,
வஞ்சனைப் பிரிவு செய்துன் வருந்துணை பார்த்தி ருப்பேன் ;
மிஞ்சிடின் வாள்பிடித்தென் வீரத்தைக் காட்டி வெல்வேன் ! 360

மாவலி

கொஞ்சிடு நேயம்போலக் குரல்வளை பிடிக்கக் கற்றாய்,
நஞ்சிலே வெல்லம் போட்டு மருந்தென நல்கக் கற்றாய்,
கெஞ்சிநீ புகுந்து மக்கள் குணத்தினைக் கெடுக்க வேண்டித்
துஞ்சற விழித்தி ருக்குந் துணையுனக் கனுப்பு வேனே !

திறக்கட்டும் போக சாலை ; சேல்விழி மாதர் கள்ளைச்
சுரக்கட்டும் ; ஆடல் பாடல் சுகமுற நடந்து நாளை
மறக்கட்டுங் ; கலிய-மோகி களித்துநம் முடனே யாடிப்
பறக்கட்டுங் காலை நேரம் பாரத நாட்டின் பாலே.

வருகசுந் தரியும் ஆங்கே வந்தநல் லிசைஞர் கூடத்
தருகநஞ் செவிக்கின் பத்தைத் தாண்டவ மாடும் போது ;
திருவைய ருடன்சே ருங்கள் செழித்தபோ கங்கள் உண்ண
மருவுவீர் என்றெ ழுந்தான் மாவலிச் சிங்க மாங்கே ! 372

11. போக சாலைப் படலம்

சித்தி ரக்கலை சிற்பக் கலைகளில்
எத்தனை வகை இன்ப மிருக்குமோ
அத்த னையும் அமைந்திளங் காமுகர்
சித்தங் கொள்ளைகொள் சிற்றின்பச் சாலையே !

வான வில்லணி யென்ன வருணங்கள் !
தேன்ம லரணி தேக்கும் வனப்புகள் !
மீனணி யென மின்னும் விளக்குகள் ;
தான வர்களின் தாண்டவச் சாலையே !

திரைகள் பற்பல, திந்திம் எனக்குதி
துறைகள் பற்பல, காதலர் துய்த்திடும்
அறைகள் பற்பல, ஆட்டத்தை ஊக்கிடும்
பறைகள் பற்பல பான்மை யிருக்குமே !

இந்தி ரர்க்கும் எளிதிற் கிடைத்திடாச்
சுந்த ராங்கிகள் சூடும் அணிமணி
சந்தி ரனுடன் தாரகைப் பத்திபோல்,
அந்த காரம் அழியச் சிரிக்குமே !

தட்டு தட்டாய்த் தசைவளர் உண்டிகள்,
புட்டி புட்டியாய்ப் போதைசெய் கள்ளினம்,
கட்டு கட்டாய்க் கரிய சுருட்டுகள்,
மட்டி லாத மருந்து வகைகளே !

நாண மற்ற நடனங்கள் ஓர்புறம் ;
காணக் கூசுங் களிச்சுழல் ஓர்புறம் ,
வாணம் போல வருதலும் ஓர்புறம் ;
கோண மாகக் குதித்தலும் ஓர்புறம்.

போக சாலையிற் புக்க நிசாசரர்
ஏக மாகி யினியன துய்த்த பின்,
தாகந் தீர்மது வுண்டு தலைசுழல்
வேகத் தோடு விரசமாய்ப் பாடினர்!

மட்டி லாத மதுவெறி கொண்டிளம்
பட்டி மாதரைப் பற்றி நடஞ்செய்வார் ;
கொட்டுக் கேற்ப, குதித்துக்கை கோத்தவர்
வட்டஞ் சுற்றி மனப்படி யாடுவார்.

முத்த மிட்டு முகத்தைத் தடவுவார்,
அத்த மிட்டிரு மார்பும் அணைகுவார்,
பித்த முற்றிப் பிழைபல செய்குவார் ;
சத்த முற்றிய சண்டையுங் காணுமே.

கனவிற் காணினுங் காம நெருப்பினால்,
மனவலி கெட வாள்விழி வீசிடுந்
தனமலை தருந் தாசியர் கூட்டத்தைத்
தனமலை களைத் தந்து தழுவினார் !

வெறிபி டித்த விழைமனத் தானவர்
அறிவி ழந்தனர் ; ஆண்பெண் ணியல்புறும்
நெறியி ழந்தனர் ; நேர்மை யிழந்தனர் ;
பொறியி ழந்தனர் புட்டியின் வேகத்தால் !

இன்னு மின்னு மெனக்குடித் தூணரின்
மன்னன் மாவலி மங்கையர் தோளிலே
பின்னிக் கையைப் பிறரை நடத்தினான்—
மன்ன னெவ்வழி மக்களும் அவ்வழி !

சந்தி ரன்முகங் கண்டு மனக்கடல்
கொந்த ளித்துக் குதித்திட மாவலி
சுந்த ரிக்கொரு தூதை யனுப்பியே
வந்த பாடக ரைவரச் செய்தனன் !

ஆணை பெற்றதும் அக்கணம் பாடகர் தொடர,
வீணை யேந்திய சுந்தரி வியன்மக ளுடனே
நாண மேந்திய நாட்டத்தைக் குனித்துமன் மதனார்
பாண மேந்திய சாலைக்குப் பதைபதைத் தெழுந்தாள் !

கொடியர் நாண்மலர்க் கொடியெனு மாதரைக் கூடிக்
குடி வெறியினிற் கூச்சலிட் டோடுவார் பிடிப்பார் ;
தடியர் கூத்தினிற் கலியினைச் சத்தியன் கண்டே
இடிவி ழுந்தது போலுளந் திகைத்தவ னிருந்தான்.

மாலுறு மனத்தினர் மடந்தை நாணத்தாற்
காலுற நோக்கிக்கண் கசியு மெல்லையில்,
வேலுறு விழியினள் வெறிகொள் மோகியும்
ஏலுமென் றினுமது வீந்து தூண்டினாள்.

ஊகமும் உள்ளமும் உயிரு மின்றியே
தேகமுந் தேகமும் தீண்டும் வீரிய
மோகமுந் தாகமும் முனிந்த மெய்யனிப்
போகமுங் கண்டுகண் புதைத்து நின்றனன்.

தசையலங் காரத்தைத் தழுவிப் பித்தனர்
மிசைமிசை ஈர்த்தனர் மென்ம லர்களை.
வசைகளைக் கூவினர்.....மெய்யன் வந்ததும்
இசையிசை யென்றனர் இணைந்த கையினர்.

சுந்தரீஇ எனமது சுழற்று மாவலி
தந்தகை உதறியே தாவி மேடையில்
அந்தநல் லழகியும் அகார மீட்டியே
சந்தமு மெடுத்தனள் போகன் சாடையால்.

சாத்தான் வீழ்ச்சி

வானத் தேவர மாத்துமத் தந்தை
மகனை வாழ்த்தி மகுடமும் சூட்டி
'ஏனைத் தேவர் இவனைப் பணிக'
என்று கட்டளை யிட்டனன் ஆங்கே.

ஞானத் தேவர் நயந்து பணிந்தார் ;
நல்லிசை மலர் நன்றெனத் தூவி.
நானெனப் பகை ஆசை அகந்தை
நாட்டிப் பேய்திமிர் காட்டி நடித்தான்.

அச்ச மில்லை அடிமையிங் கில்லை
ஆண்டவன் அர சாட்சியும் இல்லை.
பச்சை யாகப் பகருவன் கேளீர் :
பகவ னுக்குப் பணிந்திட மாட்டோம்;

நாமுந் தேவர் நமதிவ் வுலகே.
நமக்குச் சட்டஞ்செய் நாயகன் இல்லை.
தீமை செய்திடுஞ் செந்நகை வாளால்,
தேவதேவனை வென்றுல காள்வோம்.

நல்ல வானில் அவன்அர சாண்டால்
நரகம் உள்ளது நாமதை யாள்வோம்.
மெல்ல ஈடன் வனத்தினைப் பற்றி,
வீடு கொண்டு வினோதங்கள் செய்வோம்.

சாப மிட்டெனைத் தள்ளிய தந்தை
தந்த மாநிலம் சத்தியங் கெட்டே
பாபக் காடெனப் பண்ணிநம் ஆட்சி
பழுதி லாது பரவிடச் செய்வோம்.

வானடி மையாய் வாழ்வது சாவாம் ;
வளர் சுயேச்சை நரகமும் வாழ்வாம்.
யான ரசன் எனக்கர சாரே ?
என்னை யன்றி யிறைவனும் உண்டோ ?

அறிவை முற்றிலும் ஆயுதம் ஆக்கி,
அரசுடன்அர சாட்சி பொருத
வெறியை யூட்டி விரோதங்கள் மூட்டி,
விண்ண ரசினை வீணெனச் செய்வேன்.

மண்போன் மாதர் மயக்குள மட்டும்,
மமதை கோள்பொய் மனமுள மட்டும்,
விண்ணை மைதி விளைவதும் உண்டோ ?
வேற்று மைகள் விலகுவ துண்டோ ?

* * * * *

"நல்ல பாட்டு ! நடனத்திற் கேற்ற
நல்ல மெட்டு ! நடக்கட்டும் !" என்றே
சொல்லி மாவலி சொக்கினில் ஆழ்ந்தான்
சுந்த ரியைச் சுடர்பெற நோக்கி.

இன்னு மின்னுமென் றாணர்கள் ஊக்கி,
இடிகரம் அடித்தார் இசை யின்பால்.
இன்னல் செய்யும் இழிமனச் சாத்தான்—
இழிந்த காதை யிசைத்தனர் மேலோர்.

பாடகர்

இன்பமுள்ள ஈடன் வனம், ஏவாளுடன் ஆதாம்
இதயமொன்றி வாழ்ந்திருந்தார் இறைவனரு ளாலே.
அன்புமிக்க வாழ்வினிலே அமைதியொளி சேர
அமரரெனக் கவலையின்றி அழகினிலே திளைத்தார்.

பெண்மையுடன் ஆண்மகனும் பிறந்தபடி திரிந்தான்
பேதமன மில்லையந்தச் சோதிவன வாழ்வில்
உண்மையறி வின்பமுள்ளார் ஒருகுறையும் இல்லார்
உள்ளுருகப் பாடுகின்றார் புள்ளினத்தைப் போலே.

இருவர் வாழ்வை இழிவுசெய் யத்தன்,
இயலு ருவைக் கரந்தர வாகி
இருவி காரக் கனியினை ஏவாள்
இன்பனுக் கதை ஈந்துணச் செய்தான்.

மனவி காரத்தி னாலிந்த மண்ணில்
மமதை காம மயக்கம் பரவி,
இனிய ஈட னிழந்து மனிதர்
இன்ன லுற்றனர், ஏழைய ரானார்.

கொலை களவு பொறாமை கொடுங்கோல்,
கோப தாபங் குலவிய போரால்
அலை யுலகில் அதர்மப் பிசாசே
அரசு செய்தனன் ஆணவத் தாலே !

வஞ்சப் பேயின் வலிவை யொடுக்கி,
வானரசைப் புவிமிசை நாட்டப்
பஞ்ச பாதகம் பட்டெனத் தீரப்
பரமனின் அருட் பாலகன் வந்தான் ;

பெத்தல் ஹாமில் பிறந்த கிறிஸ்து,
பெருந் தவங்கள் இயற்றிய பின்னர்,
சித்தஞ் சோதித்த தீமனப் பேயைச்
"சீபின் போ" வென ஓட்டிச் செயித்தான்.

மடைய ராக்ஷஸன் ஆட்சி மண்ணுக,
வாய்மை யன்பு வழியில் வளரும்
கடவு ளாட்சி கதிர்விட் டொளிரக்
கண்டு லகிற் களித்திடு வோமே !

மாவலி

வெறுத்த பேச்சை விளம்பினிர் சீ சீ !
நிறுத்தும் பாட்டை நிசமறி யாதீர் !
அறத்தை ஈசனை அன்பைப் புகழ்ந்தீர்—
துரத்துவேன் சுடுவேன் உமைப் பாரீர் !

மாவ லியின் மனத்தை யறிந்தே,
காவ லன்று கதைத்த கவியைப்,
பாவ லர்களும் பாடிய பின்னர்—
போவி டுத்தனன் புண்ணிய வாளன் ! 160

விரிகலைப் புலவர் தம்மை வெறுங்கையோ டனுப்பி மீண்டும்,
பரிவிலா நெஞ்சன், போகப் பணியினில் ஈடு பட்டே
அரிவையர் நடுநடுங்கும் அக்கிர மங்கள் செய்தான் ;
இரவருள் உறக்கம் வாழி ! இல்லெனில் இன்னுந் தீதே !

காட்டுக்கூப் பாடு போட்டுக் கட்குடி வெறிக ளேறி
ஆட்டுமட் டாடி ஓடி அயர்ந்துபின், சாத்தான் பாடும்
பாட்டினை உளறிக் கொண்டான் அதன்பயன் அழகி சக்தி
வீட்டினிற் காண்போம் வாரீர் வித்தகக் கலைவல் லீரே ! 168

12. சக்தி விருப்பப் படலம்

இனைய ஊணர் இராவினிற் செய்ததீ
வினையை மெய்யன் வெறுப்புடன் எண்ணியே,
தனையு மெண்ணிக் கலியன்செய் தந்திரந்
தனையு மெண்ணி முனியிடஞ் சாற்றுவான் :

மெய்யன்

வன்ற வக்கதி ரேயிந்த மாவலி
கொன்ற ருந்திக் குடித்துக் களித்திடும்
பன்றி வாழ்வினைப் பார்த்தபின் எப்படி
நன்று செய்திட நல்லவர் வல்லரே ?

நீச ஞன நிருதக் கலியனும்
பாச மோகியும் பாரத பூமியை
நாச மாக்க நடந்தனர் காலையே ;
ஊச லாடுமென் உள்ள உறுதியே ;

பஞ்ச பாதகன் பாரத நாட்டிலே,
வஞ்ச மற்ற மனிதர் அழியவே
நஞ்ச மாகிய நாத்திக மாயத்தால்
பஞ்ச ரித்துப் பழங்கதை செய்குவான்.

மதம் பிடித்து மதுவெறி யேறிய,
அதர்ம சேனை அவனுடன் செல்வதை
கதி ரெழுந்ததுங் கண்டவென் ஆத்திரம்,
கொதி யெழுந்து குமைத்திடத் துள்ளுமே !

உலக மெங்குமிவ் வூணர் படையுடன்
நலிய நன்மை, நடந்திடத் தீமையே
கலகஞ் செய்யக் கலித்தெழு மாவலி
வலியொ டுக்க வகையுமுண் டாகுமோ ?

பாந்தள் போலப் படமெடுத் தாடிடும்,
மாந்தர் சத்துரு மாவலி ஆணவந்
தேய்ந்தித் தீவு திருந்த இருவரின்
சாந்தச் சேவையுஞ் சாதக மாகுமோ ?

ஆண்ட வனை அணுவு மதித்திலான் ;
ஈண்டு நாம்சொலும் இன்சொலைக் கேட்பனோ ?
பூண்ட நம்வினை பூத்துக் கனியுமோ ?
தாண்டிச் சென்று தருமத்தைக் காப்பதோ ?

போகன்

தனிய னென்றினிச் சஞ்சலங் கொள்வதேன் ?
இனிய சுந்தரி பக்க மிருக்கின்ருள் ;
புனித சக்தி யுனக்கெனப் போந்திங்கே
தினமும் சுத்தனைச் சிந்தித் தொழுகுவாள்.

ஆண வத்தில் அனலன் முதலியோர்
வேண துன்பம் விளைத்திட வல்லவர் ;
ஊணர் தீமையவ் வூணர் செருக்கினல்
வாண மென்ன வயங்கிக் கரியுமே !

நாட்டுவோம் சபை ; நல்லசன் மார்க்கத்தைக்
காட்டுவோம் ; இவர் கல்வி யறிவினைத்
தீட்டுவோம் ; சமர் செய்யும் வெறியினை
ஓட்டுவோம் ; மன முண்டு வழியுண்டே.

சக்தி வருதல்

முத்த னிச்சொல் மொழிந்திடும் போதிலே,
சுத்த ஓமெனச் சொல்லி யுளத்தெழும்
பத்தி கண்ணிற் பளிச்சிட, கௌரியாம்
சத்தி வந்து சரண்என நின்றனள்.

புகையறப் பொலிதீ யன்னாள் ; பூரண மதி முகத்தாள் ;
பகைசுடும் பாலைத் தீவிற் பரிவுள சோலை போன்றாள் ;
முகமலர் மூர லென்னும் முத்துதிர் அமுதச் செல்வி ;
அகமலர் அன்புத் தேறல் அளாவிய செம்பொன் வல்லி !

சுந்தரி யழகுங் கௌரி-சுத்தனின் எழிலுங் கொண்டாள் ;
பந்தெனத் துள்ளுங் காலும், பரபரப் பான கையும்,
சிந்தையிற் கருணை யூற்றும், செஞ்சொலில் வஞ்ச மற்ற
மந்திரத் திறமை கொண்ட கன்னிகை வாழி மாதோ !

யாவரும் விரும்பு கின்ற எளிமையும் தெளிவுங் கொண்டாள் ;
தேவருக் கரிய கற்புத் தெய்வம்; இத் திருவின் சேயை
மாவலி தானும் அன்பு வைத்திட மதித்தான் என்னில்,
பூவினில் யாரே யிந்தப் புனிதையை மதித்தி டாதார் ? 60

"வணக்கம் ஓம்" என்று நின்ற மலர்நகைச் செல்வி தன்னை
இணக்கமாய் மெய்யன் போகன், இருவென அருக மர்த்தி,
நுணுக்கமாய் நோக்கி நோக்கி, நுவலரு மின்ப மெய்தி,
அணுக்கமாய்ப் பேசிப்பேசி அந்தரங் கத்தைக் கண்டார்.

போகன்

செல்வமே கௌரி தன்னை எப்படித் தெரிந்து கொண்டாய் ?
எல்லையில் ஆழி தாண்டி எப்படிச் சுத்த னையுன்
அல்லிமென் விழிகள் கண்ட ; எனமுனி அவளைக் கேட்க
முல்லையின் முறுவல் காட்டி மொழிந்தனள் அமுத வாயாள்.

சக்தி

புண்ணிய பூமி யென்றுற் புத்துணர் வடையும் உள்ளம் ;
விண்ணினைக் கண்ட தோர்நாள் ; விழியயர் கனவில் வந்து,
தண்ணருட் சோதி யாகத் தவத்தணல் வீசி யென்னுள்
பெண்ணுயிர் புகுந்து, கௌரி யெனப்பெயர் பேசிற் றம்மா!

அத்தையின் கணவன் செய்யும் அதர்மப்போர் கண்டேன்; வீர
சுத்தனின் வெற்றி கண்டேன் ; சுதந்தரப் போரிற் கௌரி
பத்தினிக் கடமை காத்துப் பலிச்சென உடலை விட்டேன்
புத்திளம் உயிர் கலந்து பொலிந்திடக் கண்டேன் ஐயா.

அருணனே முகமாம் ; காலை அருமறை விழியாம் ; ஆழ்ந்த
கருணையே மனமாம் ; வீரக் கனலுறு செவ்வேள், அந்தக்
கரணத்திற் புகுந்தென் வாழ்வைக் கனிநகை யுடனே ஏற்றுன்;
இரணமும் சுடரும் போலே கெழுமிய நேயங் கொண்டோம்.

உள்ளத்திற் கோயில் கொண்ட சுத்தனின் முகத்தைக் கண்டேன்
தெள்ளிய ஒளிப்பி ழம்பாய்த் தியானத்தில் வருவான் என்று
விள்ளரும் இன்ப மூறச் சக்தியும் விளம்பும் போது,
மெள்ள 'நீ கௌரி' யென்று விளம்பினுன் மெய்ய ஞங்கே !

மீளவும் கௌரி சக்தி "விசனமேன் கலியன் பூமி
ஆளவு மாட்டான் ; தீமை அளவில செய்து வீழ்வான் ;
ஆளுநா யகனைப் பாட யாழிசை அறியச் செய்வாய் ;
நாளுமுள் ளன்பு செய்தால் வெற்றியே நல்கு" மென்றுள்.

சுந்தரி

வியப்புடன் சக்தி பேச்சை விருப்புடன் கேட்டு வந்தே,
"தயக்கமில் லாது நீவிர் தானவன் கீதம் பாடீர் ;
மயக்கமேன் ? இசையைக் கேட்க மாவலி வந்து விட்டான்—
நயக்கநான் உள்ளேன்" என்று நன்மன வழகி வந்தாள்.

(போகன், மெய்யன் பாடல்.)

பாரே ஈவீர் ! பணமே ஈவீர் ! படியிரேல்,
போரே யீவீர் ! புவியீர் உம்மைப் புறங் காண்பேன் ;
யாரே நிற்பார் என்படை முன்னென் றவுணர்கோன்
பேரோ சைசெய் பேரிகை கொட்டிப் பெயர்ந்தானே.

சுந்தரி பாட்டு மிக்கச் சொகுசென நடன மாடி
வந்தனன் அவுணர் கோனும், வாஞ்சையாய்ச் சக்தி தன்னைச்
சிந்தனை குளிரப் புல்லிச் "செல்வமே" என்ற போதே
சந்தமார் கீதங் கற்பேன் சம்மதி யென்றுள் சக்தி.

கண்டனன் அவுணர் வேந்தன் கவிகளைக் கள்ளும் ஊனும்
உண்டதன் மயக்கமின்றி, உளமுற ஊன்றிப் பார்த்தான் ;
கண்டனன் போகன் கண்ணிற் கனலுறுங் கதிரை ; இன்பங்
கொண்டனன் இவன் எமக்குக் குழலிசை யடிமை யென்றே !

வெண்ணகை முகமும் வீர விறுவிறுப் பொளிரு ஞானக்
கண்ணொளிக் கனலும், நீண்ட கைகளும் இருபு யத்தின்
திண்மையும் இளமை சொட்டுந் திருவுடன் பொலியு மெய்யன்
உண்மை நம் அடிமை யென்றே உவந்தனன் அவுணன் ஆங்கே.

மாவலி

தாண்டுதற் கரிய ஆழி தாண்டினை ; கண்ணு றங்கா
நீண்டவென் காவல் மீறி எப்படி நீயிங் குற்றாய் ?
காண்டலுக் கரிய இவ்வூர் கண்டதெவ் வாறு சொல்லாய்
ஈண்டென ஊணன் கேட்க இனியனும் இதமாய்ச் சொன்னான் :

மெய்யன்

முகைவிரி முறுவல் காந்த, மொழிமொழி கனிவு கூறத்
"தகைவிரி யவுணர் கோனே, தாரணி முழுதும் அஞ்சப்
பகைவிரி புகழோய், உன்னைப் பார்ப்பதற் கென்றே நாங்கள்
சகவிரி வெல்லாங் கண்டு தானவம் வந்து சேர்ந்தோம்.

பாட்டுடன் குழலு மூதிப் பரிவுள ரசிகர் தந்த
கூட்டுற வாலே நாங்கள் கோமளத் தீவில் வந்த
நீட்டநல் விமான மேறி நின்னரை சுற்றோம் ; எம்மை
வாட்டிய வருத்தம் இங்கே வந்ததுந் தீர்ந்த தையா ! 120

இசையின்பக் கடலென் றுன்னைப் புலவர்கள் இயம்பக் கேட்டோம்,
வசையறும் அரசி யான சுந்தரி வளமை கேட்டோம்,
திசைதிசை சுற்றி யின்றே தெரிசனங் கண்டோம் ; ஐய
அசைவறும் உன்றன் ஆணை அளித்திடின் அதுவே செய்வோம்.

மாவலி

எனதருஞ் செல்வி சக்தி இசைத்திடக் குழலும் யாழும்
இனிதுறப் பயிற்றி நாளும் என்புகழ் ஒன்றே பாட
மனதுவைத் திடவே செய்வாய் ; மானிடர் போற்றுகின்ற
புனிதமும் தேவும் ஏழாம் பொருத்தமென் கொள்கைக் காமே!

போகன்

சித்தமே சித்தம் ; இந்தச் செல்வியின் விருப்பும் அஃதே ;
வித்தகர் கண்ட காந்தம், மின்னணு, வெப்ப மான
சத்தியை இயற்கை தந்த சராசர வியப்பைப் பாட
உத்தர வுண்டோ சொல்லாய் ஒப்பிலா ஊணர் கோனே !

மாவலி

பொருளென முன்னே காட்டும் போதிவே தியரின் கொள்கை
மருளிலா உண்மை ; அந்த வாய்மையே சக்தி யென்பேன்.
அருளிறை அருவென் றோதி ஆட்களை யேய்க்குங் கொள்கை
இருளென வெறுப்பேன் ஹெக்கல் இங்கர்஼ால் நண்பன் யானே.

சக்தியைப் பயன்ப டுத்திச் சகத்தினை வெற்றி கொண்ட
வித்தகர் சரிதை, குண்டு வீரரின் சரிதை, எங்கள்
உத்தமப் பெரியா ரான தானவர் உயர்ந்த காதை
மெத்தவும் இனிய பாட்டாய் விளங்குதல் விருப்ப மாமே. 140

"அன்னதே அமைதி" யென்று மெய்யனும் அன்பு காட்டிக்
கன்னியின் முகத்தை நோக்கக் கருத்தறிந் தவளும் சென்று,
தன்னிக ரற்ற நல்ல தங்கயாழ் எடுத்து வந்தே,
மின்னகை புரிந்து மீட்டி, மெட்டினைத் தடவி னாளே.

மாவலி

பொங்கிய உவகை கொண்டு "பூமுகச் செல்வி யேநீ,
இங்குவந் திருக்கும் இந்த எளியநல் லிசைவா ணர்கள்
எங்குண மறிந்து வாழ மட்டுமென் னிசையை மீட்டாய்
மங்கல முனக்குண்" டென்று மாவலி வாழ்த்தி னானே!

சக்தி

"சரிசரி அப்பா" வென்றே சக்தியும் புன்ன கைத்துச்
சரிகம பதநி யென்று தடவிடும் போது, வெள்ளி
"அரசவை வருக" வென்றோர் அவசரச் செய்தி விட்டான் ;
பரிசனத் துடனே வூணன் பாட்டையுந் துறந்து சென்றான் 152

13. வெள்ளி நீதிப் படலம்

காற்றுடன் கதிருமே கடந்து சென்றிடாக்
கூற்றிற்கும் புகலரும் குகையில், வெள்ளியும்
ஆற்றல்சால் அமைச்சரும் அமரின் வீரனும்
வீற்றிருந் தினையன விளம்ப லுற்றனர்.

நுண்மதி

ஒற்றர்கள் கூறிய உண்மை நோக்கிடின்,
கற்றநம் இயந்திரக் கனற்ப டையினும்
பற்றலர் படைமிகப் பலமென் றுய்த்தகும் ;
வெற்றியின் முன்னொரு வேலை யுள்ளதான்.

வரையெனப் பெரும்பெரும் வங்கம் பாரதக்
கரைகரை சூழ்ந்தன கடிய காவலாய் ;
விரைபகைக் கலங்களை விழித்த வீரர்கள்
திரைக்கிரை யாக்கிடுஞ் செய்தி கேட்டனம்.

தந்திரச் சூழ்ச்சிகள் சமைந்த பின்னரே,
நந்திறப் படைகளை நடத்த வேண்டுமால்,
யந்திரக் கலைகளில் இணையில் வீரனே
கந்தகப் புகையின்முன் கனலைச் செய்வமால்.

*பொட்டிலுப் புடன்புணர் பொலிவுக் கட்டிபோல்,
பட்டென வெடிக்குதென் பாறை நெஞ்சமே !
கட்டிய †கனிக்கரி கந்த கப்புளி
அட்டிய தெனப்புகை அகத்தில் ஏறுமே !

தைரியப் புலிகளாந் தான வர்களும்,
வைரிமுன் குருவிபோல் வணங்கி நிற்பதோ ?
வைரத்தை அறுத்திட வைரம் வந்ததோ ?
‡கைரியம் வேண்டிடிற் கடுமை வேண்டுமால்.

சினப்படை மிகப்பல கொண்டு செல்லுமின் ;
வனப்புடை நாட்டினை வளைத்துப் பற்றுமின்,
தனக்குவை கொணருமின் ; தான வர்க்கதே
இனக்குறிப் பாகிடும்-இகல்வி ளைப்பதே ;

கலிமுதற் சென்றுபோர்க் கனலை மூட்டுக ;
புலியெனச் சென்றந்தப் புலியை வீழ்த்திநான்,
கிலிபிடித் திடநரர் கிடுகி டுக்கமண்
வலிமையைக் காட்டலே மதிப்ப தாகுமே !

எனையறி யாமல்என் இயற்கை யின்வலி
தனையறி யாதுநீர் சாந்த மாகிய
வினையினைச் சாற்றினீர் ; விரும்புஞ் செய்கையை
அனைவரும் அழியினும் அடைந்து தீருவேன் !

அருநிதி யளித்திடும் அந்தப் புண்ணியத்
திருவுறு நாட்டினைச் செயிக்க வேண்டினேன் ;
உருவுள சூழ்ச்சியை உடனு ரைத்திடாய்
குருவென நான்மனங் கொண்ட வெள்ளியே !

வெள்ளி நீதி

பூவுக் கிப்பெரும் புண்ணிய பூமியே,
ஆவி யாகும்; அத் யாத்தும சக்தியே
மேவு மாற்றலும் வீரமுங் கொண்டது ;
தேவர் நாடெனச் செப்பிடத் தக்கதே !

வாய்மை, யன்பு, மறுவறு நன்னடை
தூய்மை வீரத் துணிவுள ஒற்றுமை ;
நேயங் கொண்ட நிகரறு வித்தகர்
மேய நாட்டினை வெல்வது மாகுமோ ?

---

* பொடாசியம் பெர்மாங்கனேட்டும், பாஸ்பரசும் சேர்ந்தால் வெடிக்கும்.

† மாங்கனீஸ் உப்புடன் கந்தக திராவகம் சேர்ந்ததுபோல் மனம் புகைகிறது.

‡ பொன்.

சீதை வேண்டித் தசமுகன் சீர்கெட்டான் ;
மாதை வேண்டி மடிந்தனன் கீசகன் ;
ஈதல் வேண்டி மகாபலி ஈறுற்றான் ;
ஆத லால்அரக் கர்க்கழி வானதே !

||நீறு செய்தவர் நீறுபட்டார் ; மிக
ஊறு செய்தவர் ஊறுபட்டார் ; நம்மைக்
கூறு செய்திட வேடங்கள் கொண்டுநல்—
வீறு பெற்றுறு விண்டுவின் சூழ்ச்சியால்.

இல்லை யென்ற இரணியச் சிங்கத்தைக்
கொல்ல வந்த கொடும்நர சிங்கமே
தொல்லை செய்திடத் தோன்றினுந் தோன்றுவான் ;
அல்லல் கோடி அரக்கருக் காகுமே !

மாவலி

அஞ்சிலேன் அவன் அப்பன்வந் தாலுமே !
வஞ்சித் தென்குல வாழ்வைச் சிதைத்தவர்,
எஞ்சி நிற்க இதயம் பொறுக்குமோ ?
நெஞ்சில் வேகு நெருப்பும் அணையுமோ ?

வெள்ளி

உலகை ஆளும் உபாயம் கேளாய்;
பலமும் படையும் படைத்தமா வலியே !
அருள்பொருள் என்னும் இருதிறன் உலகை
ஆளும் வகையை அறிவாய் நீயும்.
பாரத சக்தியே தீரரை ஆக்கும்
ஆத்தும சக்தியாம் அருளொளி யாமே.
பொருளுறு சக்தி பௌதிக சக்தியாம்.
போதி வேதி பொருளா தாரம்,
கணிதம் யந்திரம் காட்சி யறிவாம்
அனைத்துந் தேர்ந்தே, அரும்பொரு ளாக்கிப்
போகந் துய்க்கும் வேகம தாகும்.
இரண்டும் சேர்ந்தால் இப்புவி வாழ்க்கை
யோக போகமாய் ஒளிருமெந் நாளுமே.
அருளும் பொருளும் அமைந்த பாரதம்
அசுர பலத்தையும் அடித்து வீழ்த்துமே.
இரண்டையும் பிரித்தலே இரண்டு பக்கமும்
சுரண்டி நம்மிசை துலக்கும் வழியாம்
பாரத சக்தியாம் பரமாத்ம ஞானம்

|| பஸ்மாசுரன் விஷ்ணு மோகினியால் எரிந்தான்.

உதவுந் தவமும் யோகமும் அழிந்தால்,
புண்ணிய பூமி புகலற் றுப்போம்.
இறைவன் ஆன்மா என்பது பொய்யே,
உடலே உண்மை உலகே உண்மை
என்னு முணர்ச்சி எழுந்தால், ஆங்கே
வேதக் கூச்சல் விழலுக் காகும்.
தொல்லற மெல்லாம் அல்லற மாகும்
சொல்லற மெல்லாம் மல்லற மாகும்.
நாத்திக மான நமது கொள்கையை
ஆத்திரங் கொண்டநம் அண்ணல் கலியால்,
எங்கும் விதைத்திடின், ஏளனஞ் செய்து,
நாட்டிற் குரிய நல்லறஞ் செகுத்திடின்,
இல்லறந் துறவறம் இரண்டுந் தேய்ந்து,
மக்கள் வாழ்க்கை துக்கமே யாகும் ;
அறிவொளி யவிந்தால் அகவிருள் சூழும்.
சிந்தனை யெல்லாம் பந்தனைக் குள்ளாம்.
நாத்திக வாத நாப்பறை யாலே
ஆத்திக மாகும் யாழொலி மறையும்.
உலகாய தத்தை உள்ளூற வளர்த்தால்,
கலகாஸ் பதங்கள் கணக்கறக் கிளம்பும்.
போக வாழ்விலே புலன்கள் புகுந்தால்,
யோக சித்திகள் உருப்படி யாகா.
ஆதியில் ஓர்குல மாகிய மக்களைச்
சாதிப் பித்தந் தலைக்கே றிடவே,
பிரித்து வைத்துப் பிணங்கச் செய்தால்,
அன்னிய பலத்திற் காதர வாகும்.
தத்துவ மற்ற தத்தா றிகளைப்
பத்திரி கைகளிற் பச்சை பச்சையாய்,
எழுத வைத்தலே, இரண்டுங் கெட்டுப்
பொதுசன மூளை புரட்சியின் பெயரால்,
பண்டை நலமும் இன்றைய நலமும்
அழிந்தொழிந் தடிமை யாகிட வழியாம்.
மாதவ சிலரை மடையரென் றேசி,
நவீன மான நாக ரிகமெனும்
மயக்கை யூட்டி, மாந்தரை யிழுத்தால்,
தயக்கமில் லாதறந் தட்டழிந் தொழியும்.
பிரிவினை செய்த பிறகுநும் மிடையே
ஒற்றுமை யில்லையெனும் ஓயாப் பல்லவி
பாடினுல், என்றும் பயமிலா தாளலாம்.

வகுப்பும் கட்சியும் வளர்த்தே நாட்டில்,
ஒன்றிற் கொன்று சண்டை வளர்த்தே
அச்சும் மேடையும் அதிரப் பேசி,
நாச்சி லம்பமும் பேனாச் சிலம்பமும்,
காகிதப் போரும், கண்டனப் போரும்
வளர வகைநா உளறச் செய்தால்,
வெற்றுவா தங்கள் வேதனை செய்தால்,
ஒற்றுமை முயற்சி உதவா தொழியும்.
இரண்டு கட்சிகள் இணைந்து வந்தால்,
இருபது கட்சிகள் எதிர்க்கச் செய்வோம்.
அதுவே நாட்டை ஆளும் சூழ்ச்சியாம்.
தொல்பெருஞ் சுவடிகள் செல்லரித் தொழிய,
அனுட்டா னங்கள் அலங்கோல மாக,
பிழைக்கும் வழியெனப் பெயரினை வைத்து,
வகைநூல் பரவினால் அசையா திருக்கலாம்.
கள்ளுங் கொலையும் காமமும் சூதும்,
களவும் புதிய வளமுடன் வளர்ந்தால்,
புண்ணிய மெல்லாம் கண்ணீர் சிந்தும்.
சைவ உணவே சன்மார்க்க உணவெனப்
புகலும் மாந்தர் புலாலுணச் செய்தால்,
இயற்கை யழிவார்; இகலை வளர்ப்பார்;
இரக்க மொழியும் இராக்கதம் பெருகும்;
ஆட்டை யறுத்தகை ஆனை யறுக்கும்.
கொலைமதம் பெருகிக் கொடுமை பெருகும்;
கொடும்போர் நமது கொடியினைத் தாங்குமே.
ஆத்தும ஞானமே பூத்திட லின்றி,
சுத்தசன் மார்க்கந் தூருடன் ஒழியச்
சாரு வாகமே தழைத்திடக் குறித்துக்
கல்வியை வகுத்துக் கலைகளைத் திருத்தினால்,
பொறிகள் பாழாய், அறிவும் பாழாம்;
மடமையும் வறுமையும் அடிமைத் தனமும்,
தாண்டவ மாடித் தானவர்க் கிதமாம்.
என்மதம், என்வகை, எனதே கட்சி
எனதியான் என்னும் இறுமாப் போங்கின்,
பொதுநல மென்பதும் போலித் தனமாம்,
பிரம சரியப் பேச்சே யின்றி
ஆண்பெண் காமம் அளவறப் பெருகி,
மனையறஞ் சிதைந்து, மாதர் கற்புங்
குலைந்திடின், அசுரக் குலமே தழைக்கும்.

பொன்விலை பேசிப் பொய்மணம் புரிந்து,
கன்னி யழியக் கைம்பெண் பெருக,
இளமணத் தாலே வளமெலாம் வற்றக்
களவியற் காமம் கண்கெட் டலைய,
காதல் மணமெனுங் கதையெலாம் ஒழிந்தே,
மணவினை யெல்லாம் பணவினை யாகி,
பணவினை யெல்லாம் பகட்டுக ளாகி
வீட்டறம் உண்ணும் விடுதிக ளாகி,
பலமணத் தாலே கலகம் வளர்ந்து,
வலிவிழந் தாண்மை மெலிந்தே தேயும் ;
அழகை நாமே அனுப விக்கலாம்.
ஆண்பெண் வாழ்வை அல்லற் படுத்தலே,
அசுர நீதியின் ஆரம்ப மாமே.
நாட்டின் விளைவை நாமே பறித்துச்
செய்பொரு ளாக்கிச் சிக்கென விற்றால்,
பணமெலாம் இங்கே பறந்துவந் தோங்கும்.
வறுமையே அங்கே வளர்ந்து பெருகுமே.
சகமெலாம் நமது சந்தையே யானால்,
திராசெலாம் நமது திருக்கையி லிருந்தால்,
வாணிகம் பெருகி, வளமை பெருகித்
தொழில்கள் பெருகிச் சுதந்தர மாகப்
புதுப்புதுக் கருவிகள் கதுமெனப் பெருகிச்
செல்வம் பெருகிச் செல்வாக் கோங்கிப்
பாரின் பத்தின் பயனெலாங் காண்போம் ;
பணமும் நமதாம் ; படையும் நமதாம்,
பொறாமை கொண்டு போட்டி போடுவார்,
போர்க்களத் தழியப் புதுப்பொறி காண்போம்.
மண்வெறி கொண்டார், மண்வெறி கொண்டே
நம்மை யெதிர்த்தால், இம்மெனச் சுடுவோம்.
வெம்மையே நமது வேதவே தாந்தம்.
இன்ன சூழ்ச்சியால் இவ்வுல கெல்லாம்,
தானவ மயமாய்த் தந்திரம் பயின்று,
மாந்தரைக் கெடுத்து மாவலி மதத்தை
மெல்லப் புகுத்தினால், வெல்லுந் திறமாம்.
மெலித்த பிறகு வலிமை காட்டுவோம்.
வல்லவ ராகி வல்லமை காட்டுவோம் ;
நட்பு நடித்தே நமனெனப் பாய்வோம் ;
பிரிவினை செய்தே பெருவினை தொடர்வோம் ;
வேரைப் பறித்தே போரிற் சாய்ப்போம் ;

ஒற்றுமை யழித்தே பற்றுவோம் நாட்டை ;
ஒருவரைத் தாங்கி, ஒருவரை நீங்கி,
இருவரும் நமக்கே இணங்கச் செய்வோம் ;
அவர்வலி வாலே அவர்வலி உடைப்போம்,
அவர் மெலிவாலே அவரை மெலிப்போம் ;
அவர் வாளாலே அறுவடை செய்வோம் ;
அவர்துணை யாலே அவர்புவி வெல்வோம் ;
அவர்பிரி வாலே அவரைநாம் ஆள்வோம்.
அவரவர் வேற்றுமை அவரவர் பகையாம் ;
அவரவர் மடமையே அவரவர் விலங்காம் ;
அவரவர் இருளே அவரவர் நரகமாம் ;
அவரவர் உறக்கமே அவரவர் வீழ்வாம்.
பயந்தவர் மீது படைவலி காட்டிச்
சகமெலாம் ஆள்வோம் தானவர் வேந்தே !

மாவலி

இதுவே சூழ்ச்சி இதுவே நம்வழி !
நன்றாய்ச் சொன்னாய் நானினி வெல்வேன் !
மாவலிக் கெதிரே மனிதர் நிற்பரோ !
பொன்னுரை யெல்லாம் பொருந்தக் கூறினை ;
கலியுடன் அதர்மக் கடும்படை சென்றது ;
போதா தின்னும் சாதிவேற் றுமையும்,
துன்மார்க் கங்களும் தோன்றிப் பரவக்
கால பாசன் கனத்த படையுடன்
மோகிக் குதவ முன்னே செல்கவே !
அதர்மம் வளர்க அசுரர் ஆள்க.
அரக்கத் தோழர்காள் ! அடுத்த வினைக்குத்
தந்திரப் படையைத் தயார்செய் தங்கே
சிற்றர சர்க்குட் சிதைமனப் பிரிவினை
மூட்டிப் போர்வலி காட்டிட நாடுவோம்....
வையகம் புரக்க வருவீர் தோழரே !

14. கலி வழிப் படலம்

புண்ணியப் பூமியைப் புலிகள் பற்றிடப்
பண்ணிய சூழ்ச்சியைப் பகரக் கேட்டதும்,
திண்ணெனச் சத்தியன் செருவை வேண்டியே
அண்ணலுக் கினையவை அறைகு வானரோ !

மெய்யன்

போயுடன் கலியினைப் போரில் வென்றுநான்
ஏயநற் கடமையை யியற்றுவே னிந்தப்
பேய்நிலந் திருந்திடப் பிறகு காணுவோம்,
தாய்நிலம் உயிரினுந் தக்க சீரன்றோ ?

திடமுறு வீரர்கள் சொந்தத் தேசத்தின்
இடர்களைத் தவிர்ப்பதும் இகலை வீட்டலும்,
அடிமையை யகற்றலும் ஆண்மை கொண்டுதங்
கொடியினைக் காப்பதுங் கொற்ற மாகுமே.

என்முது நாட்டினர் இன்றும் என்றுமே
அன்னியர்க் கடிமைக ளாகி வழ்வதோ ?
ஒன்னலர் தந்திரம் ஊன்று முன்னரே
என்பணி செய்குவன் ஏகிப் போகனே.

போகன்

செய்ய வீரச் சிகாமணி யேமிகத்
துய்ய வீரத் துணிவுரை சொல்லினை ;
மெய்ய, உன்னிசை மிக்கதெ னினுமே,
கையிற் கொண்ட கடமையிங் குள்ளதே.

நரிபுலிக் குழுவென நாடுந் தானவர்
எரியினைப் பொருதிடும் விட்டில் என்னவே,
அரியநல் லாற்றலும் அருளுங் கொண்டநம்
பரிவுள சுத்தன்முன் பணியக் காணுவாய்.

அங்குறு கடமையைத் தூயன் ஆற்றுவான் ;
இங்குறு கடமையை இனிது காத்திடின்,
மங்கிய தருமமு மலர்ச்சி பெற்றிடும்
பொங்கிடும் உலகினிற் புனித வாழ்க்கையே.

தடித்திடும் ஆணவத் தான வர்குலம்
பொடித்திட உலகினைப் புரியும் போர்களால்,
வடித்திடும் பூமகள் வாட்கண் ணீரெலாம்
துடைத்திட மெய்வழி துலக்கி வாழுவோம்.

உலகினைக் கெடுத்திடும் ஊணர் மாறியே,
நலவழி நின்றிட நயமி குந்திடுங்
கலைவழி புள்ளது ; கடிய தானவர்
கொலைவழி தவிர்த்திடுங் குணம தாகுமே.

அலைமனம் அடங்கிடும், அழகின் பத்தினால்,
விலையறு நன்மைகள் விளைந்து, வாழ்விலே
நிலைபெறுந் திருந்திய நேர்மை யாதலாற்
கலைவழி யிங்குநங் கடமை செய்வமே.

சுந்தரி

கலையி னல்உல கொற்றுமை காணுவோம் ;
கலையி னற்கருத் தைவிரி வாக்குவோம் ;
கலை மகளின் கவின்பெருங் கோயிலில்,
கைகள் கோத்துக் களிநட மாடுவோம்,
விலையி லாமல் விரைந்திடுங் காலத்தை
வீண்செ யாது கலைவினை வேற்றுவோம் ;
நிலையி லாநதி நேரிய வாழ்க்கையை
நீண்ட காவிய மாக்குவந் தோழரே !

இய லழகை இலக்கியம் ஆக்குவோம் ;
இயற்கை உள்ளத்தில் இன்னிசை காணுவோம் ;
இயலு ணர்வைச் சிலையில் இலக்குவோம்,
எழுது வோம்பட மாயியல் வாழ்க்கையை ;
கயல்விழி கனிவாய் மலர்க் கைகளால்,
கருதும் பாவனை காட்டி நடஞ்செய்வோம் ;
செயல்கள் ஆயிரஞ் செய்வோங் கலைகளாற்
செகத்தி னிற்புதுச் சிற்பிக ளாகுவோம்.

அழகுத் தெய்வத்தை வாழ்த்தி வணங்குவோம் ;
அழகுச் சோலையில் அன்புறக் கூடுவோம் ;
அழகின் இன்பத்தை ஆருயிர்க் கூட்டுவோம் ;
அழகை வாழ்வெனும் வீணையில் மீட்டுவோம் ;
அழகு செய்கலை அத்தனை யுங்கொண்டே
அரக்கர் தம்மை அமரர்க ளாக்குவோம் ;
பழகும் ஐம்பொறி பண்புறின், வாழ்க்கையும்
பண்பட டன்பு பழுப்பதைக் காணுவோம் !

மெய்யன்

மந்திர முனிவநின் மணிமொழி நன்றே ;
சுந்தரி யமுதச் சொல்லும் இனிதே !
கலைவழி பற்றிக் கடமை செய்து,
நிலைபெறும் பயனை நேர்மையாய்க் காண,
விரும்பினேன் அதற்கொரு வினைமுறை வகுப்போம் ;
கரும்பினும் இயிய கனிவுரை யீரே !
விரிகலை பொலிய விளங்குமே புதுமை ;
சரித்திரங் கண்ட சத்திய மிதுவே.
கான்ஸ்தாந்தி னேபிளிற் கனிந்த கலைமலர்
தேன்மணம் பரப்பித் திருந்திவெண் ணுடு
புதுவாழ் வெய்தப் பொலிந்ததை யறிவோம்;
பொதுநல மெல்லாம் புரிந்தது கலையே.

ஓமர், விர்ஜில், ஒப்பிலாத் தாந்தே,
ஷேக்ஸ்பியர் மில்தன், ஷெல்லிபோற் கவிகள் ;
வியாசர்வான் மீகி, வள்ளுவர் கம்பன்,
காளிதா ஸர்போற் கவியருள் பெரியார்,
வள்ளலார் போன்ற வரமிகு மகான்கள்,
ஆஞ்சிலோ போலும் அமரச் சிற்பிகள்,
மானிட வாழ்க்கை மறுமலர்ச் சிபெறத்
தோன்றிப் புதுமை துலக்கிய தறிவோம்.
பாட்டுங் கவிதையும் படமுஞ் சிற்பமும்,
கூத்தும் தகுமுறை குலவிய நாடுகள்
அழகின் சக்தியால் அன்புறக் கண்டோம்.
ஆதலால் அருங்கலை அனைத்துந் தேர்ந்தோய்,
செயல்முறை வகுத்துச் செய்வன செய்வமே.

போகன்

எங்கும் பசுமையுந் தங்கமும் பொலியக்
கங்குலை விழுங்கிக் கனிமுகங் காட்டும்
அருணோ தயம்போல் அருங்கலை எழுந்தே,
கருணைக் கதிர்களைக் கவின்பெற வீசவே,
கவலை யுள்ளமுங் கனிநகை புரியும்,
புவியினில் எத்தனைப் புத்திபே தங்கள்
சாதி மதநிறச் சண்டைகள் இருந்தும்,
கலைஅனை வரையுங் கட்டுப் படுத்தும் ;
சோர்ந்த நாட்டிற் சுதந்தர வீறும்,
வீழ்ந்த நாட்டில் வீரக் கனலும்,
ஆண்மையுந் தூண்டும் அழகுக் கலையே.
ஒவ்வொரு நாட்டின் உயர்நலப் புகழும்
கலைஞர் தந்த கவின்பெறு வரமாம் ;
ஆதலாற், கலையை ஆருயிர் போலப்
போற்றி வளர்த்துப் புதுமை துலக்குவோம்.
சக்தி, கௌரி சரஸ்வதி போல
யாழை மீட்டி ஏழிசை பாடுக !
நவரஸ நடனமும் நன்றுய்ப் பயில்க !
அவளைக் கொண்டே அசுரர் கோனை
இசைமகிழ் வூட்டி, இந்த நாட்டிலே,
கலைகளை வளர்க்கக் கட்டுவோம் கோயில்.
உலகெலாம் பொலியும் புலவர் மணிகளை
இங்கே கூட்டி இயல்புற நாளும்
அருங்கலைக் கோயிலை அழகு செய்து,
பெருங்கலைப் பணிகள் பிழையறச் செய்வோம் ;

காவியம், இலக்கியம், ஓவியம், சிற்பம்,
பாட்டு, நாடகம், பரத நாட்டியம்,
யாழ்குழல் மத்தளம் இனியவாத் தியங்கள்,
இவற்றால் அரக்கர் இனத்தையே ஈர்ப்போம்.
ஆடல் பாடலில் ஆண்மையும் வீரமும்
காதலுங் கற்பும், கல்வியும் ஒழுக்கமும்
அன்பும் பண்பும் அமையக் காட்டுவோம்.
பெண்களைத் திருத்திப் பெண்களைக் கொண்டே,
ஆண்களைத் திருத்தி, அழகு செய்தபின்,
பண்புள தானவ நண்பரைக் கூட்டிக்
கல்வியும் ஒழுக்கமும் பல்கிய நாடகம்,
நாட்டியம் பழக்கி ஆட்டுவோம் வாரீர்.
தானவம் ஆணவம் சார்ந்தபட் டினங்கள்
எல்லாம் கலையில் இணைந்திடச் செய்வோம்.
இம்முதற் படியை எட்டிய பிறகே,
செம்மனந் தழைக்கத் தீயது விலகச்
சுத்தன் கண்ட சுத்தசன் மார்க்க
சங்க மிங்கே தழைத்திட லாமே.
கலைப்பணி முடிந்ததுங் ககனமார்க் கத்திற்
சென்றதற் கிசைவன செய்வேன் அன்பீர்.
சன்மார்க்க சாதனம் சரிவர நடந்தால்,
தம்போற் பிறரைத் தானவர் மதித்தால்,
ஆன்ம நேயம் அன்புட னெழுந்தால்,
புலாலுண வொழிந்தே போர்வெறி தணிந்தால்,
அரக்க வியல்பிலும் இரக்கம் புகுமே.

சத்தியன்

வந்தனம் முனியே, வழியைத் துலக்கினை ;
முன்கலை வெற்றியை முழங்குக யாழே !
சக்தியின் பாட்டு சயங்கூ றுகவே !

15. யாழிசைப் படலம்

அமுதப் பொன் அலைகள் வீசி, ஆனந்த கான வெள்ளம்
குமுதமிட் டெழுந்த தொப்பக் குளிரிளந் தென்ற லொப்பத்
தமிழ்கனிந் தருளு கின்ற சன்னதப் பாட லொப்பக்
கமகங்கள் இனிது பேசுங் கனகயா ழிசைய தாமே.

மனிதரைப் போலே பாட வல்லநல் வீணை தன்னில்,
இனிதமை ஏழு தந்தி, இருபத்து நான்கு மெட்டு,
கனிவுள மேளஞ்செய்து மீட்டிடுங் கலைக ளெல்லாம்
தனித்தனி குறித்துச் சொல்லிச் சுராவளி யிசைத்தான் மெய்யன்.

எழுவகை யிசையின் ஏற்றம் இறக்கமும் காட்டிக் கையால்,
எழுவகைத் தாளங் காட்டி இயங்குநாற் காலங் காட்டிப்
பழுதறு குரலி ணைந்து பாடிடும் பான்மை காட்டி
விழுமிய மெய்யன் முன்னே வீணையை மீட்டி ஈந்தான்.

"சுத்தஓம்" என்று சக்தி தொழுதியாழ் வணங்கி, யேந்திப்
பத்தியாய் மோனஞ் செய்து, "ஸரிகம பதநி" என்றே
ஒத்திசைத் தமைதி யாக உள்ளத்தில் ஆர்வம் பொங்கத்
தத்தையுங் குயிலும் போலத் தமிழிசை மீட்டி னாளே !

பன்னிரு சுரமும், நான்கு ஸ்தாயியும், பன்னி ரண்டு
பின்னுறு செண்டை, எட்டுச் செய்யலங் காரங் கற்று,
முன்னிய கீதம் வர்ணம் முற்றிய பிறகு, சக்தி
தன்னுளங் குளிரக் கான சாதனஞ் செய்தாள் மாதோ !

பாட்டுடன் கவியுந் தேர்ந்தே பதம்பல புனைந்து நாளும்,
ஏட்டினில் எழுதி டாமல், இதயத்தில் எழுதி வைத்தே,
வாட்டமு மகிழ்வு மெய்திச் சுத்தனின் வரவு வேண்டி,
மீட்டினாள் மின்னைப்போன்று விரல்களில் வேகங் கொண்டாள்.

அருணனே அகாரங் கேட்கும் ; ஆதவன் வேதங் கேட்கும் ;
குருதிவான் மாலை ஊணர் குலந்திருந் திசைகள் கேட்கும் ;
கருமணி யிரவு தூய கடவுளைப் பாடக் கேட்கும் ;
அருமணி சக்தி வாழ்க்கை அருளிசை யான தம்மா !

சுந்தரி குரலும், போகன் சுதந்தரக் குழலும், சக்தி
தந்திடு மதுர மான யாழிசை தானும், வேந்தன்
சிந்தையில் உயர்ந்த பாட்டும், சேர்ந்துமத் தளமுங் கூடிச்
சந்தமார் அருவியாகத் தழைத்தது கலையின் வாழ்வே.

அட்டதிம் பாலுடன் அளைந்த தேனும்போல்,
ஒட்டிய உடலுடன் உயிரும் போலவே,
மெட்டுடன் சொல்லணி மிடைந்த தென்னவே,
நட்டன பத்தியு நாத வேதமும்.

உண்மையுள் ளன்புடன் ஒருமை நெஞ்சமும்,
செம்மையும் ஒழுக்கமும் சித்த சுத்தியும்,
கண்மையுங் கலைவளர் கருத்துங் கொண்டுளம்
பெண்மையும் ஆண்மையைப் பெருமை செய்ததால்.

சத்தியக் கீதமும் சக்தி வீணையும்
வித்தகக் குழலுடன் விரவிக் கோகிலம்
ஒத்திசை நாளெலாம் உயிர் சிலிர்த்திடும் ;
நித்திய வசந்தமாய் நிலவும் வாழ்க்கையே.

தேறுறு குரலுடன் விரலுந் தேர்ந்தபின்,
தானவன் மகிழ்ந்திடுஞ் சரிதைப் பாடலை,
ஞானியும் பயிற்றிட நங்கை யாழுடன்
மேனியி லுணர்ச்சியு மேவக் கற்றனர்.

அழகியின் அழகிதன் அருமைச் செல்வியின்,
பழகிய வித்தையைப் பார்க்க வேண்டியே,
விழைவுறு மாவலி "வீணை மீட்" டென்றே
நுழைந்தனன் ஒரு பகல் கேள்வி நாறுடன்.

"நமதிளஞ் செல்விக்கிந் நண்பர் போரிசை
அமைவுறப் பயிற்றினர் ; அரிய ஓமரின்
விமரிசைக் காவிய வீரக் காட்சிகள்
தமையினிக் கேளென அழகி சாற்றினள்....

*எலனைப் பாரிஸ் எடுத்துவந் தின்புற்ற
பலனைப் பாடுக பாடுக வென்னவே,
புலனில் ஆசை பொருபொருத் தேறமா
வலி விளம்ப மகளிசைத் தாளரோ !

திராய்ப் போர்

தங்க மேனி தழைத்த எலனுள்,
தளிரி ளந்திருத் தாமரைக் கண்ணி ;
அங்க மெங்கும் அழகொளி வீசும்
அரசன் மேனலன் வேட்கும் அரசி.

வீர மேனலன் ஸ்பார்ட்டர்க் கிறைவன்
விரும்பி யோர்பகல் திராயிள வரசன்
பாரிசுக்கு விருந்தளி செய்தான் ;
பாரி ஸின்விழி பாய்ந்த தெலன்மேல்!

தீபம் போன்ற வசீகரச் செல்வி,
செங்கண் மூடி யுறங்கிய வேளை,
பாபஞ் செய்திடப் பாரிஸ் எழுந்தான்,
பதறக் காலமும் தேசமும் ஆங்கே.

காரி ருளிற் கருமனப் பேயன்
கற்பின் பாவையைக் கள்ளம தாக,
வாரிச் சென்று திராய்நக ரேகி
வலிய மானங் கெடுத்தனன் அந்தோ !

---

*Helen, Paris.

கண்ட கிரேக்கரின் கண்கள் சிவந்தே
காமுகனைக் களத்தினில் வீழ்த்திப்
பெண்பெ ருமையைப் பேணிட வேண்டிப்
பெரிய சேனைகொண் டுரை வளைத்தார்.

*அச்சில், யூலிஸ், அஜாக்ஸ், அகமம்னன்
அனைய சூரர்கள் ஆயிரங் கூடி,
எச்சி லுண்ட இகலவன் ஊர்மேல்
எரிம லையென ஏவினர் பாணம் !

மாதின் இன்ப மயக்க வெறியால்,
மதியி ழந்த மடையனப் பாரிஸ்
தீதை நன்மை யெனச்செயும் தீயன்
செருக்க ளத்தினிற் சீறி யெழுந்தான்....

ஏழு வெம்புலி யின்பலங் கொண்ட
†எக்த ரென்னும் இணையறு வீரன்
வாழ்கத் ராயென வாள்பிடித் தேகி,
வலிய அச்சிலின் வாளையெ திர்த்தான்.

காற்றுந் தீயுங் கடற்புயல் வீறுங்
கலந்து மோதிய காட்சியைப் போலே,
கூற்றும் அஞ்சக் கொடுஞ்சமர் செய்தார்
கொலை யுடலங் குவிய மலைபோல் !

கணைப றந்த ; கனல்கள் பறந்த ;
கற்பு யங்கள் கதமுற முட்டி
மணி முடிகள் உருண்டன மண்ணில்,
மல்லர் இன்னுஞ் சலித்திலர் மாதோ !

உண்ட வீட்டிற் கிரண்டகஞ் செய்தும்,
உடைந்தி டாது சமர்புரி வோனைச்
சண்டை நின்றொரு தந்திரத் தாலே,
தகர்க்க ஓர்மர வாசியைச் செய்தார்.

குதிரை தன்னைத்தங் கோட்டையி னுள்ளே,
கொண்டு சென்றனர் கோதுறு மாற்றார்.
அதிசயம் ! நிசியில் அதனின்றே
ஆயு தத்துடன் வீரர் குதித்தார்.

*Achilles, Ulysse, Ajax, Agamemnon.
†Hector

குதித்த வீரர் கொடுங்கோலை செய்தே
 கூற்றைப் போலத் திராயைக் குமைத்தார்.
கதித்தெ ழுந்த திராயினர் தாமும்,
 கனலெ றிந்து கடுஞ்சமர் செய்தார்.

ஊழித் தீயெனப் போரிட யூலிஸ்,
 ஓங்கும் அச்சிலும் பைரசும் பாய,
ஆழி புண்டிடும் ஆற்றினைப் போலே
 ஆண்மை புண்ட தறத்தின் பகையை !

வீர ஏக்தர் விழுந்து மடிந்தார்,
 விம்பு செய்த திராயினர் நீத்தார் ;
பாரீஸ் வீழ்ந்தனன் ; பாழு நகரும்
 பற்றுந் தீச்சுடப் பாழ்ந்தது பின்னும்....

மேன லன்பர மானந்த மெய்த
 வெற்றி பேரிகை விம்மிட வீரர்,
மான்வி ழியினள் மானத்தைக் காத்தார் ;
 வாழ்க கற்பினை வாழ்த்திடும் வீரம்....

சேட்டைவிட் டமைதி யான சித்திரப் பாவை யாகிக்
கேட்டனன் அரக்கன் ஓமர் கிளத்திய கதையின் சாரம் ;
ஊட்டிய அமுத மென்ன உள்ளுறக் கிளர்ந்த கீதம்,
வாட்டமுஞ் சினமுந் தீர்த்து, மமதையை இளக்கிற் றம்மா !

இளமையின் காதல் பேசும் இசைமணிக் குரலோ ! சேயின்
களிபெறு நகையிற் பூத்த கனிவுறு மழலை தானோ !
ஒளிமிகு வெண்ணி லாவில் உண்டிடும் விருந்தோ ! காலை
தெளிவுறப் பொழியுங் குன்றின் அருவியோ தெவிட்டாக் கீதம்.

வெம்மையைத்தண்மையாக்கும்;வெறுமையை வளமையாக்கும்;
வன்மையை மென்மை யாக்கும் ; மமதையைச் சமதையாக்கும்;
இம்மையில் அம்மை தோற்றும்; முதுமையை இளமை யாக்கும்;
தன்மய மாக்கும் இன்பந் தழைத்திடத் தவழும் பாட்டே !

செவிவழி யமுதுண் டென்னச் செவ்விய மதுரக் கீதம்,
கவிநய முடனே மாந்திக் களித்தமா வலி "என் சேயே
நவம்பெறு நாத சக்தி நயத்தினை யின்று கண்டேன்—
இவளவு கற்றநீயுன் இச்சையொன் றியம்பாய்" என்றான்...

தானவர் வேண்டாக் கற்பின் சங்கடந் தவிரப் பாட்டில்
ஏனைய பகுதி நன்றே எலனப கரமும் சீரே ;
யானெனில் ஸ்பார்ட்டா தன்னை எலனுடன் ஆண்டி ருப்பேன்,
நானிலக் கவிகள் என்னை நவின்றிடப் பணமும் ஈவேன் !

என்சமர் முரசிற் கீடே இல்லையிங் கெனினும் வீணை,
தன்சரி கமபதாவிற் சஞ்சரித் திடலும் இன்பே ;
பொன்செயு மகிழ்ச்சி, வெய்ய போர்செயு மகிழ்ச்சிக் கப்பால்
இன்சொலார் குழலும் யாழும் இசையமு தின்ப மாமே !

சக்தி

எனதுள விருப்பங் கேட்டாய் ; இயம்புவேன் எந்தை கேளாய் :
மனதினை மகிழச் செய்யும் வளமிகு சங்கீ தத்தை,
இனமுறு கலைக ளோடும் இந்தநா டெளிதிற் கற்கக்
கனமிகு புலவர் கூடக் கலைவளர் கோயில் வேண்டும்.

பார்ப்பதற் கின்பமான பலவளஞ் சூழ, நல்ல
பேர்ப்புதுக் கல்வி கற்கப் பெரியமா ளிகை யெழுப்பி,
ஆர்த்திடுங் கீதங், கூத்து, நாடகம், அரிய சிற்பம்,
சேர்த்துநாம் பயிற்ற வேண்டுஞ் செய்கலைக் கோயி லிங்கே.

மாவலி

புலன்களுக் கின்பமான புகழ்பெறுங் கலைக ளெல்லாம்
துலங்கிட வேண்டி நாளைத் தொடங்குவேன் கலையின் கோயில்,
இலங்கிடு மலையா றேடும் இயற்கையில் அமைப்பேன் சேயே ;
நலங்கெழு பணிசெய் திந்த நாட்டையின் புறுத்தாய் நன்றே. 160

16. கலைக்கோயிற் படலம்

தன்னை யொப்பவ ரிலையெனுந் தானவன் வெட்க,
உன்னைக் காட்டிலும் உயரியற் படப்பைக்காண் எனவே,
முன்னி ருந்துல கிறைவனின் பெருமையை மொழியும்,
பொன்மலை யெனும் பொற்புறும் சிற்பமார் மலையே.

அம்ம லையினில், அருந்தவ யோகியின் அகம்போல்,
செம்மை யாய்த்தெளிந் தோமெனத் திருமறை பாடிப்
பொம்மெ னத்தவழ் பூமணி யருவியின் பொழிவால்,
எம்ம ருங்கினும் எழில்பெறும் பயிர்வள மிலகும் !

அனைய பூவணி யாற்றரு கமைந்தநற் சோலை ;
இனம லர்களுங் கனிகளும் புட்களும் இலகும்
தளிர் வனப்புறு சோலையின் தண்ணிள மார்பில்
இனிய நற்கலைக் கோயிலை யெழுப்பினன் அரக்கன்.

செய்ய புண்ணிய வினைகளைச் சிரித்திழி வுறுத்தும்,
வெய்ய நாத்திக மாவலி விமரிசை யாக
மெய்யன் வேண்டிய கோயிலை வியனுறச் செய்த
செய்கை யேகலைச் சிறப்பினைச் செப்புவ தாமே !

சத்தி யுள்ளம்போல் வெள்ளையாம் சலவைக்கல் லாலே,
நித்தி லத்தல மலையென நிலவுற வமைத்தே,
சித்தி ரங்களுஞ் சிற்பமும் கலையெழில் செப்பப்
பத்தி பத்தியாய் எழுந்தது பலகலைக் கோயில்.

பாடலுக் கொலி யடக்கமாய்ப் பரவிடுங் கூடம் ;
ஆடலுக் கணி யரங்குநல் லதிசய மான
வேடங் கள்புனைந் தபிநய விளக்கமோ டாட
நாட கத்திரை மன்றுடன் அமைந்தன நனியே !

மான மோங்கிய மானவர் மதிக்குநல் லொழுக்கம்,
ஆனவை யிவை யெனச்சொலும் அழகிய படங்கள்,
ஈன மாகிய திமையை எடுத்துரைச் சிற்பம்
தான வர்க்கொரு படிப்பினை தந்துநின் றனவே !

கொலைக்கு வேண்டிய கருவியே கொள்ளையாய்க் குவித்து,
நலிக்கு மாவலி நன்மனம் வைத்திந்த நாளில்,
கலைக்கு வேண்டிய கோயிலுங் கருவியு மளித்த
நிலைக்கு வந்ததும் பாட்டினுல் என்றனர் நிருதர்.

இந்த மாளிகை யெழுப்பிடும் போதுநம் போகன்,
சுந்த ரிக்கருந் துணையெனத் துலங்கிய கலைஞர்
இந்தி ரையறி கலைஞர்,இ ரோப்பியக் கலைஞர்,
வந்து சேர்ந்திட வகைசெய்து பாடங்கள் வகுத்தான்.

இனைய காரியம் இனிதுற இயங்கிடு மெல்லை,
தனையொத் தூணர்கை தவித்திடுந் தானவ மாதர்,
அனைவ ருந்தமி ழிசையினை அருந்திட, அழகி
மனையிற் காலையு மாலையும் வந்தனர் மகிழ்ந்தே

இனிய கிர்த்தனுஞ் ஜலியினை யிசைத்திடு மியல்பால்,
புனித வாழ்க்கையும் புன்மது ஊன்கொலை தவிர்த்த
மனிதத் தன்மையாம் இரக்கமே மல்கிய நடையும்,
சினமில் சாந்தமும் பயின்றனர் சிரிய மாதர்.

நறும ணத்தொடு நட்டது நறுமணம் பெறுமே !
அறம ணத்துடன் அன்புறப் பொருந்தியோர் வாழ்க்கை
சிறும னத்தின வின்றியே நிஞ்சுவை யேறி,
மறுவி லாதநன் மாற்றத்தை யடைந்ததென் வியப்பே !

சுத்த னன்பினிற் சுகித்திடுஞ் சுடர்மணிப் பாவை,
சத்தி கீதத்தை மடுத்தவர், தானவர்க் குரிய
பித்து மாறினர், நாத்திகப் பிதற்றல்கள் இன்றிப்
பத்தி செய்தனர் ; பரம்பொருள் ஒன்றெனப் பகர்ந்தார்.

பாடுவார் ; கதை கேட்டதன் பயன்பெற முயல்வார் ;
ஆடுவார் மகிழ்ந் தானந்தப் பொருளினை உள்ளே
தேடுவார் ; தமர் திருந்திடத் தெளிவுரை சொல்வார் ;
வீடு நன்றுற வீதியு நன்றுறு மன்றோ !

இசைப யின்றனர், இலக்கியம் பயின்றனர் இளைஞர் ;
அசைவி லாதகற் பொழுக்கமும் அருளுடன் பயின்றார் ;
வசை யொழிந்தநல் வாழ்வினைக் கணவரும் பயிலும்
விசைக ளாயினர் ; வெறியிருள் கெடுவிளக் கானார்.

ஊணைக் காமமும் கோபமும் ஊர்கெடு கொலையும்,
ஆணவத் திமி ராலவர் அறமழிப் பதுவும்,
மாண்மை யாகிய மன்னனின் மங்கலப் பாட்டால்—
வேணு கானத்தால், அரவென வெறியடங் கினவே !

கலையின் சங்கத்தைச் சேர்ந்தவர் கள்ளினை நீத்தார் ;
கொலை யுணவையு நீத்தனர் ; கொண்டொரு மனைவி
விலையின் மாதரை நீத்தனர், வீட்டறங் காத்தார்,
அலைம னத்தையும் அடக்கினர் ஆத்திகர் ஆனார்.

கண்க ருத்தினைக் கற்புறக் காத்தரு ளின்பப்
பண்க ளாலுயர் வாழ்க்கையின் பண்பினைப் பகர்ந்தே,
திண்கொள் வாய்மையும் தெள்ளிய கருணையுங் கொண்ட,
பெண்கள் ஆண்களைப் பீடுறப் பெருமைசெய் வாரே !

திருந்தி வந்தவர் யாவருந் தினந்தினம் பயின்றே
அருங்க லைகளை வளர்ப்பதில் ஆர்வங்கொண் டமைந்தார் ;
பெருங்க லைப்புல வர்களும் பிரியமாய்ச் சேர்ந்து,
வருங்க லைத்திருக் கோயிலுக் காவன வகுத்தார்.

செங்கல் செங்கலாய் உயர்ந்திடுஞ் செழுமணிக் கோயில்,
இங்கெந் நாளிலே முடியுமென் றேங்கிய கலைஞர்
தங்க மாமுடி பொலியுமித் தரளவெண் கோயில்
"நன்க மைந்தது நயனத்தின் விருந்"தென நயந்தார்.

மறப்பி லாதருங் கலைகளை வளர்த்திடும் புலவர்,
திறப்பு நாளினை நடத்திடத் திருவணி செய்தார் ;
சிறப்பெ லாம்எனக் கேயென மாவலி திறந்தே
முறுக்கி மீசையை இடிகுரல் முழக்கினு னுங்கே :—

மாவலி

மேனிலை பெற்ற தானவ மக்காள் !
ஆளப் பிறந்த வாள்வீ ரர்காள்,
போரே நமக்குப் பொருந்திய கலையாம் ;
முரசே நமக்கு முன்னணி யிசையாம்.

இரத்த களத்தில் இறங்கிய வீரரை,
சாய்க்கும் யாண்டுநாம் உவக்கும் நேரம்.
போரெலாம் வென்றபின் பொழுதினைப் போக்கவும்,
சுகபோக வாழ்விற் சொக்கவும் வேண்டியே,
யாழ்குழல் பிடிலுடன் இயங்கும் இசைகளை
நாமும் போற்ற நாடினோ மிங்கே.
எம்மகள் சக்தி இவ்விரு புலவரால்,
இசைக்கலை தேர்ந்தாள் ; இனும்பலர் கற்றார்.
அருமை மகளினும் அருங்கலை வளர்க்க
விரும்பிய தாலிவ் வியன்பெருங் கோயிலை
அழகிய காட்சியாய் அமைத்தவட் கிந்தோம்.
கோயில் என்றற் கோவாம் யாமே
அமைத்த இல்லென் றறிவீர் அவுணீர்.....
இக்கலை வீட்டில் இசையும் யாழும்
குழலும் பிடிலு முழவும் கூத்தும்,
நடமுஞ் சிற்பமும் படமும் வளர்கவே.
பயில்வோர் பயிற்றுவோர் பணிகளைச் செய்வோர்,
அனைவரும் எம்மை அண்டிய சேவகர் ;
எம்மர சிற்கும் எமதுகொள் கைக்கும்
தானவ விதிக்குந் தாறுமா றாக
நடந்தால், இதனை நாமே நலிப்போம்.
கோயிற் புலவர் கொள்கை முழுதும்
தானவ மயமாய் ஆனதன் பிறகே,
நிலைப்பிதற் குண்டெனா வெளிப்படச் சொல்வோம்.
சாமி சடங்கு, சாத்திரம் என்று
பகுத்தறி விற்குப் பற்றாச் செயல்களைக்
கண்டால் உடனே கண்டனம் செய்வோம்.
எல்லாரு மேயெம் உல்லாச வேளை
ஏவிய கலைப்பணி இயற்றுதல் கடனே....
கலைகளை யெல்லாம் விலையாக் கிடவும்,
வந்ததிற் பாதி வரியாய்க் கொள்ளவும்,
பாதி கோயிலின் பாதுகாப் பிற்கும்,
உத்தர விடுதல் உரிமை நமக்கே.
தனமிலா முயற்சி தானவர்க் கில்லை.
விலை யாகாத கலைக்கிட மில்லையே.
ஆதலால் மாணவர், ஆசிரி யர்கள்
கலைநாட கங்களைக் கனகமாக் குகவே.
இனிய மாதரும் இளந்திரு வாளரும்,
காதலும் வீரமும் கலந்தநா டகங்கள்

பழகிநா டெல்லாம் பயனுற நடித்துப்
பொருட்சுவை சேர்த்தெம் போருக் குதவினால்,
கோயிலும் எனது கொடியும் சிறக்குமே.
புலவர் இந்தப் பொன்மொழி போற்றி,
அழகுடன் பொருளும் அளிக்கும் கலைகளை
நம்மனங் களிக்க நாளும் வளர்மினே !

* * *

என்று மாவலி இயம்பி யமர்ந்ததும்,
குன்றுத் தோளான் கோபுரச் சிரத்தான்
சபை நிரம்பிய சங்கீத மெய்யன்,
போக முனிவன் பூங்குழ லூத,
இசையின் கருத்தை இசைத்தா னாங்கே !

* * *

"ஆர்வத் தியால் அன்புள் ளுருகி,
அருவி போல வருவது பாட்டாம்.
குரலும் சுருதியும் கூடிக் குழைந்து,
கமகமுந் தாளமுங் கனிவுறப் பொருந்திப்
பாட்டின் கருத்து பளிச்சென விளங்கக்
கேட்டா ருள்ளங் கிளர்ச்சி கொள்ள,
உணர்ச்சி ததும்ப உள்ளங் குழைய,
நவரஸ பாவனை நயமுறக் காட்டிப்
பரவையும் வஸந்தப் பறவையும் போலக்
கலையின் உள்ளங் கடவுளைக் காட்ட,
வீடு திருந்த, நாடு சிறக்கவே
இயல்பாய் இசைத்தல் இசையென லாமே ;
இன்பப் பொருளே இசையின் பயனாம் !"

மாவலி செல்லல்

"நவரஸ பாவனை நயமுற" என்னப்
பாடும் பொழுதே பாய்ந்து வந்தோர்
ஒற்றன் ஏதோ ஓதினான் காதில்....
உடனே மாவலி உடைவா ளுருவிக்
கோயிலி னுள்ளே குனுக்கெனச் சென்றான்....
அவையும் சற்றே அஞ்சிநின் றதுவே !
சுந்தரி உடனே முந்திநின் றுரைப்பாள் :

சுந்தரி

"கலைவளர் நண்பீர், கலக்கமொன் றில்லை ;
அரசியற் காரியம் அழைக்கும் போதே

இயல்பாய் மன்னன் ஏதும் பழக்கமே.
பாட்டு முடிந்தது ; பண்புள கலைஞர்
நந்தங் கலைத்திறன் இத்தகைத் தென்றே
காட்டிட வாரீர் கண்கா தினிக்கவே''
எனலும், பரத விநிகை நடந்ததே !

நடனம்

ஞால வாழ்க்கையே நவரஸ நடனம்,
முதலில் எழுந்த மொழியா மொழியே
அபிநயமாகும் ; அங்கஹா ரத்தால்
முகபா வத்தால், முத்திரைக் கையால்,
பாட்டுந் தாளமும் பண்புறத் தழுவி,
இன்பம், கருணை, இழிவு, சாந்தம்,
அற்புதம், கோபம், அகந்தை, குற்சிதம்,
கருணை, வீரம், காதல், சாந்தம்,
அச்சம் உவகை ஆகிய உணர்ச்சிகள்,
விளங்கக் காட்டி உளங்கொள நடிப்பதே
நடனம் என்று நன்றறிந் தாடும்
சக்தியும் ஐந்து தானவப் பெண்களும்,
தந்தநாம் தாமெனச் சதிமிதித் தாங்கே
அழகுத் தெய்வம் அணிசெயும் பாட்டைப்
பாடி நிருத்தம் ஆடித் திளைத்தார்.

கார்புயலை வெட்டு கின்ற கம்பிமின்னல் போலே,
கவலையிருள் ஓட்டி யென்னைக் கண்பார்த்து நின்ருள் ;
ஆரென்றே அதிசயித்தேன். அழகுமணித் தெய்வம்
அன்னை சக்தி வாழ்கவென்றே பொன்னடியிற் பணிந்தேன்.

காலைமலர்த் திருமுகத்திற் கருணையமு திந்தாள் ;
கத்துகுயில் ஓசையிலே பத்தியங்கள் படித்தாள் ;
சோலைவளப் பொலிவினிலே சொக்குநகை புரிந்தாள் ;
சுரும்புகளின் பாட்டினிலே சுருதியெனக் களித்தாள்.

பளபளக்கும் பச்சைவளக் கம்பளத்தின் மீது,
பாய்ந்துநட மாடுகின்ருள் பண்ணருவி பாட ;
உளமகிழத் தென்றலிலே, இளந்தமிழ்யாழ் மீட்டி,
உருக்குகின்ருள் இன்பவெறி பெருக்குகின்ருள் அன்னை...

நாடகம்

நடன மானதும் நாடகக் கலையின்
பிறப்பும் பெருமையும் பேசினுர் சற்றே.
உலக வாழ்வே ஓயா நாடகம் ;

குணதோஷந் தங்கள் குமுறும் வாழ்வில்
கதையைக் காட்டிக் கண்ணும் செவியும்
உள்ளமும் உணர்ச்சி கொள்ள நடித்து,
மனிதனைத் திருத்தலே மாசறு நாடகம்.
அத்தகை நாடகம் அளவில நடத்திப்
பொதுசனப் பணிகள் புரிவோம் எனவே
உறுதி கொண்டபின், உருவைச் செதுக்கி
அற்புதங் காட்டும் சிற்பப் புலவர்
சிவக் கலையுறச் சித்திரம் வரைவோர்,
வசீகர மாக வருணந் தீட்டுவோர்
அஜந்தா, எலோரா, அன்ன வாசல்,
மதுரை தஞ்சை மாமல்ல புரத்தில்,
இலகும் சிற்பச் செல்வங் காட்டி,
உளியும் பீலியும் அழியா உருக்களைக்
கண்கவர் வனப்புடன் கருத்துடன் அமைக்கும்
கலையின் பெருமையைக் காட்டினு ராங்கே.
போகர் முடிவிற் புன்னகை பூத்துக்
"கலையால் வாழ்வைக் கவின்பெறச் செய்து,
நலத்தைப் புகட்டி, நடையைத் திருத்தித்
தனக்கும் புவிக்குந் தருமநி யாயமாய்
நடக்கும் வழியை நயமுற வகுப்போம் :
பாட்டும் பரதமும் படமும் சிற்பமும்
கவியும் எல்லாக் கலைகளும் பொருந்திய
நாடகக் கலையே நடுநா யகமாய்,
பெரியார் வாழ்வைப் பிழையற நடித்துப்
பொதுசன சேவையாம் புண்ணியம் புரிவோம்.
தானவம் ஆணவம் ஏனைநா டுகளில்
கலைத்திறங் காட்டி நலப்பணி செய்வோம்....
கலைக்கோ யிலிலே கருத்துறும் அன்பர்
ஊன்மது விலக்குமின், ஒருமனை யாளுடன்
இல்லறங் காமின்" என்று மொழிந்து
மழலைபோ லினிய குழல்விருந் தளித்து
மங்கலப் பாட்டுடன் மகிழ்விழா முடித்து,
மன்றிற் கினிய நன்றிகள் கூறி
ஓமெனப் பாடம் ஓதத் தொடங்கி
மாணவ ருக்கு வளர்கலை யளித்தான்.
கணக்கறு மாணவர் கலைபெற் றுரே !

* * *

போதிய மட்டும் ஓதிப் பயின்ற
நன்மா ணவர்க்கு நாடகம் பயிற்றி,

மெய்யனும் போகனும், துய்ய சக்தியும்,
சுந்தரி தேவியும் சுற்றிநா டெல்லாம்,
தமது கருத்தைத் தழைவுற நிறைத்தார்.
ஆணவந் தன்னில் அனலனும் அவரை
நல்வர வேற்று நற்கலை கண்டு,
தானுங் கலைவளர் ஞானம் போற்றிக்
கோயி லெழுப்பிக் கொழுங்கலை வாணரை
மெய்யன் அனுப்ப விருப்புடன் ஏற்றுப்
பாட்டும் அரங்கும் பரதமும் சிற்பமும்
யந்திரக் கலையும் இனிது பயிற்றினான்.
மெய்யனுக் கனலன் மெய்த்துணை யானான் ;
கலையின் வெற்றி கண்டபின் மெய்யன்
செய்த நல்வினை செப்புவேன் இனிதே !

17. சங்கப் படலம்

அருவி யார்க்கும் அழகிய பாங்கரில்,
குருவி யார்க்கக் குரலுடன் இன்னிசைக்
கருவி யார்க்கக் கலைச்செய லார்த்திடத்
திருவ ளர்ந்தது திங்கலைக் கோயிலே !

மலர்கள் கொஞ்ச, மணத்தென்றல் கொஞ்சிடப்
பலநி றங்களும் பார்வையைக் கொஞ்சிடக்
கலக லென்னக் கருங்குயில் கொஞ்சிட
இலகு சோலையின் இன்பம் வளர்ந்ததே.

பாரை வெல்லும் பதற்றத்தில், மாவலி
போரை வெல்லும் புதுப்புதுச் சூழ்ச்சியால்,
நேரும் போது நினைப்பதல் லாலிங்கே
காரி யத்தினைக் காணக் கருதிலான்.

மனந் திருந்தி, மமதை திருந்தித்தம்
இனந் திருந்தி, இயற்கை திருந்தியே
சினந் திருந்தித்தம் செய்கை திருந்திடத்
தினந் திருத்தின செய்ய கலைகளே.

புண்ணி யத்தைப் புரட்டெனுந் தானவர்
பண்ணின் பத்திற் பழுத்தறஞ் செய்தனர்,
மண்ணின் பத்தை மதிக்கும் அரக்கர்கள்,
பெண்ணின் பத்தினும் பேரின்பம் உண்டென்றார்.

பன்றிக் கிட்ட பதக்க மெனச் செஞ்சொல்
ஒன்றிலும் பொருந் தாத உலுத்தர்கள்,
இன்று நற்கலை எய்திய மெய்வழி
நின்று நல்ல நினைவுட னேங்கினர்.

மெல்ல மெல்லநம் மெய்யனும் போகனும்,
அல்ல லாக்கும் அரக்கர் திருந்தவே,
நல்ல நல்ல நடந்த கதைகளாற்,
கொல்லு நெஞ்சிற் குலவருள் ஏற்றினன்.

திருந்த ரக்கர் திசை திசை கூடியே,
மருந்தி னும்இனி தாயசன் மார்க்கத்தைப்
பொருந்தி யன்பு பொலிந்திட முன்வந்தே,
பெருந்து ணையுற மெய்யனைப் பேணினர்.

யோக சக்தியி னலிணைந் துள்ளத்தில்,
வேக மாக விமலன் கருத்தினைப்
போகன் கண்டு புகல்பெறத் தானவர்
ஏக மாகச்சன் மார்க்க மியற்றினன்.

திருந்து தானவ சிலரை நாடெங்கும்,
அருந்துணை பெறுஞ் சங்கம தாக்கியே,
பொருந்து சாதன மார்க்கம் புகன்றனன்,
வருந்து ஞாலம் வசையற வாழவே. 40

சங்க விதி

உள்ளமும் உலகும் எங்கும் ஓங்கிய உண்மை யின்பம்
ஒள்ளிய கடவு ளென்போம் ; "ஓம்சுத்த சக்தி" யென்றே
தெள்ளிய உள்ளந் தன்னில் தியானிப்போம் அன்பர் கூடி ;
எள்ளருந் தூய வாழ்விற் கிதுமுதற் படியும் ஆமே !

கட்கொலை, காமஞ் சூது களவு பொய் யகந்தை நீத்து,
வெட்கிடத் தக்க மோக வெறிகளை அறவே போக்கி,
உட்கிட வரும் அதர்ம உணர்வினை உடனே மாற்றிப்
பெட்புடன் உயிர்க்கு லத்தைப் பிரியமாய்ப் பேணுவோமே.

வீரியத் தினவில் ஊறும் வேட்கைகள் அமைதி தன்னைக்
கூரிய கத்திபோலக் கொலைசெயும் கொடுமை கண்டே,
சீரிய சன்மார்க்கத்திற் சிந்தையுஞ் செயலும் ஊன்றி,
நேரிய நிமல ராக நிலத்தினில் வாழுவோமே.

ஆணவப் பேய்கள் போலே, அடுபுலி நரிகள் போலே,
கானுல கத்தைத் தீய காமத்தாற் கலக்கி வாழோம் ;
ஊனுடை உழைத்துக் காண்போம் ; ஒன்றையுங் கொள்ளை
கொள்ளோம் ;
ஆணுடன் பெண்ணும் கற்பை ஆருயிர் போலக் காப்போம்.

ஒருமனை யாளைக் கூடி, ஒருமைகொண் டின்பங் காண்போம் ;
திருவரு ளன்னை யென்றே சேயிழை யாரைக் காண்போம் ;
உருபெயர் அனைத்தும் ஒன்றன் உடலென உணர்ந்து நாளும்,
கருணையே கொண்டு தூய மனையறங் காத்து வாழ்வோம்.

மெல்லியர் தம்மைக் காம வெறியுடன் கள்ளு மேற்றிப்
புல்லியே நடன மாடும் போகசா லைக்குப் போகோம் ;
தொல்லைகள் வரினுந் தாங்கித் தொல்புவி யுயிர்க்கு லத்தைக்
கொல்லு மதர்மப் போரின் கொடுமையை எதிர்த்துவெல்வோம்!

தானவந் திருந்தி நல்ல தருமத்தைப் போற்றி, எல்லா
மானவர் குலமும் இன்ப வழியினில் அச்ச மின்றி
ஞானத்தால் ஏக வேண்டி, நாட்டிய சங்கம் இன்று
மோனத்தால் வெற்றி யோங்க முயற்சியை அடங்கிச் செய்வோம்.

இந்தச்சன் மார்க்க சங்கம் இறைவனைத் தலைமை கொண்டு,
சிந்தனை செய்து தூய செயலுடன் ஒழுக வேண்டும் ;
அந்தரங் கத்தில் ஊன்றி, அவரவர் உள்ளத் துள்ளே
முந்திது வளர்ந்து, பின்னே முளைகிளை பரவ வேண்டும்.

வெளிப்படைக் கூட்ட மில்லை, விழாவணி யெதுவும் இல்லை.
களிப்புடன் கைகோத் தாடக் ,கனவிருந் துகளும் இல்லை ;
புளிப்புடன் கட்சி யாடும் பொருமையு மில்லை ; தன்னை
அளித்தருள் வழியே சென்றிவ் வறக்குழு வாழ்வ தாமே.

பணிவதும் பகவா னுக்கே, பார்ப்பதும் பரமன் ஒன்றே.
துணிவதும் அவன றத்தைத் துலக்கிடு முயற்சி யாமே ;
அணிவதும் அருளை ; உள்ளே அறிவதும் அருளை ; பேசு
மணிமொழி யருளே, நாங்கள் வாழ்வதும் அருளி னாலே !

உலகெலாங் குலமொன் றாகி, உட்சினப் பொருமை தூண்டுங்
கலகங்க ளின்றி, ஆன்மச் சமரசங் கடைப்பி டித்து,
நிலவிடச் சாந்த மாக நினைவினை உயர்த்த வேண்டி,
இலகுமிச் சங்கம் வாழ்க இதயத்திற் கிதயந் தாவி...

கொல்லறம் ஒழிக ! ஞாலக் கோயிலில் அமைதி யாகப்
பல்லுயிர்க் குலமும் தெய்வப் பணிநலம் புரிந்து வாழ்க ;
அல்லல்கள் ஒழிக ! வெய்ய அதர்மங்கள் ஒழிக ! தூய
நல்லறம் பொலிக வென்றே நாடொறுந் தியானிப் போமே !

இவ்வகை போக ஞேத, மெய்யனும் இதைவி ளக்க,
உய்வகை யிதுவே யென்ற உத்தமச் சங்க நேயர்,
செய்வகை யறிந்து செய்து, சிந்தையில் உயர்ந்து, தத்தம்
மெய்வகை நண்ப ரோடும் வீடொறும் பயின்று வந்தார்.

துணைங்கெழு மாதர் தங்கள் கொழுநருக் கினிது சொல்லி
மணங்கெழும் அருளில் வாழும் வழியினை வாழ்ந்து காட்டி,
இணங்கிலார் இணங்க வைத்தார், ஏந்திழை யாரின் அன்பை
வணங்கியே திருந்தி னூர்கள் மாதரை மதிக்கும் ஊணர்.

கண்ணினுற் கருத்தைச் சொல்லிக் கனியித ழாலே தாங்கள்
எண்ணிய தினிது பேசி, இயம்பறு காந்தத் தாலே
உண்ணிய வந்த கூற்றும் உள்ளிரங் கிடவே வெல்லும்,
பெண்ணியல் மின்சா ரத்திற் பிடிபடா மனமும் உண்டோ ?

மெய்யறி வின்ப வாழ்வை விரும்பிய காத லர்கள்
துய்யமின் மீட்டி யுள்ளே தொகுமிரு திறமும் போன்று,
தெய்வபக் தியிலே கூடித் திருவரு ளுக்கே இந்த
வையத்தில் அறமும் அன்பும் பொருளுடன் வளர வாழ்ந்தார்.

சத்தியன் அறிவே யாகச் சவுந்தரி ஆற்ற லாக,
உத்தம சக்தி அன்பின் உள்ளமாய்ப் போகன் யோக
சித்தியே ஒளியாய், மாந்தர் சேமமே செய்கை யாகச்
சுத்தனே உயிராய்க் கொண்டு துலங்கிய தறவோர் சங்கம்.

மல்லியல் மதமே கொண்ட மாவலி யாளு நாட்டிற்
கொல்லியற் கொடுமை போக்கிக் குணமுறு சாந்த மூக்கி ;
நல்லியல் அறம்ப யிற்றி, ஞானவா சனையி னலே
அல்லியல் வாடை மாறி அருளியல் பூத்த தன்றே !

நுண்கலைக் கோயில் உள்ளே நூறுநல் லறிஞ ருக்கு
விண்கலை தெரிந்த யோகி, வியனுறு பொறிக ளாய்ந்து
கண்வெகு தொலையிற் காணக் காதுல கெல்லாங் கேட்கப்
பண்படு கருவி செய்து பாரத நிலையு ணர்ந்தான்....

தனதுநுண் கருவி யாலே தானவர் செல்லும் தேசம்,
மனதிலே நினைக்கும் எண்ணம், வாயுரை அந்த ரங்கம்,
புனிதனின் போக்கு, செய்கை பொருளுரை யனைத்துந் தேர்ந்து,
நினையுமுன் அததற் கேற்ற நிலைகளை மாற்றி னனே....

தாகசோ கங்க ளற்ற தடம்பெருந் தூய சாந்த
யோகியின் உள்ளந் தன்னை யோகிநன் றறித லாலே,
போகனும் இமயம் வாழும் பூரண சுத்த ஞான
யோகியும் உள்ளத் தாலே உலகெலாம் உணர்ந்தார் மாதோ !

கோல்கொளுங் குதிரை ஓட்டம், கொளுவுமின் சார ஓட்டம்,
வால்கொளு மின்ன லோட்டம், வானணு மின்னின் ஓட்டம்,
தால்கொளும் சொல்லி னோட்டம் தடையிலா மனத்தின் ஓட்டம்,
மேல்கொளும் ஆன்ம ஓட்ட வேகத்திற் கிணை யொன் றுமோ ?

யாவர்க்கும் அன்பு மிக்க வள்ளலாம் இனிய சுத்தன்,
மேவிய நிலையும், ஊணர் விளைத்திடுந் தீதுங் கேட்டே
காவலன் பட்ட நெஞ்சக் கவலைகள் மாறப் போகன்,
பூவினை யாடல் போதும் போக்கினை விளக்கி னானே.

சுத்தனின் யோக சக்தி சூட்சும மாக நாளும்
இத்தல மெங்கும், காறு எலக்ட்ரனின் கதிர்போற் சென்றே
உத்தமச் செயலை ஊக்கி ஊணரின் கொடுமை வீழும்
சத்தியாய்த் தழைத்த தென்று சத்தியன் அறியச் சொன்னான்.

ஒன்றுபட் டொன்றைக் கண்ட யோகியர் ஒருமை தன்னில்,
நின்றிடு மோன ளந்த நிலையிலே பரவிப் பாரில்,
இன்றியல் செயல்க ளெல்லாம் இயம்பிடற் கரிதாம் ; அன்பீர்,
நன்றெனைத் தொடர்ந்து வாரீர் நடப்பதைப் பார்க்க லாமே ! 140

தானவந் தன்னி லூன்றி ஆணவந் தன்னி லோங்கி,
மோனமாய் வளர்ந்த ரக்கர் மூலத்தை மாற்று கின்ற
ஞானமா சக்தி யாலே நற்பயன் விளைந்த தெல்லாம்
ஈனமா வலிக்குச் செய்த இடர்களைச் செப்பு வாமே ! 144

18. ஆத்திரப் படலம்

மண்ணின் ஆசைகொண் டுருவிய வாளினைப் பிடித்தோர்,
பெண்ணின் ஆசைகொண் டலைபவர், பெரும்பணத் தாசை
உண்ணுந் தியவர், அமைதியும் உறக்கமும் அறியார் ;
அண்ணா னுயினுந் தம்பியின் ஆக்கத்தைச் சகியார்.

அன்ன தன்மையின் மாவலி அவனியை ஆளத்
தின்னும் ஆசையால் சினவெறி யேறித்தன் இச்சை
முன்செ லாவண முயன்றிடுந் தம்பியை முனிந்தே
தன் பெருமையை நாட்டிடச் சதிமிகச் செய்தான்....

ஒத்த தானவத் தன்மையும், ஒப்பறு மதியும்,
ஒத்த சக்தியும், உலகினைப் புரந்திடும் உளமும்,
ஒத்த சேனையும் இயந்திர பலங்களும் உடையான் ;
எத்தி சையிலும் அண்ணலின் எதிரியாய் இருந்தான்.

எங்கு மாவலி சென்றனன், அங்கெலாஞ் சென்று,
நன்கு வாணிக முடன்பல தொழில்களை நாட்டி,
அங்குள் ளார்களைத் தந்திர முறைகளால் அடக்கிச்
செங்கு ருதியிற் சிங்கமார் கொடியினை நட்டான்....

சினமும் ஐயமுஞ் சிறுமையும் பொறாமையுஞ் செறிந்த
மனமுஞ் சேனையின் பெருக்கமும் வாய்ந்தமா வலியும்,
தனது தானெனும் ஆணவத் திமிரினால், ஒத்த
இனங்கொள் தம்பியை எதிர்த்திடச் சூழ்ச்சிகள் வகுத்தான்.

மாவலி

வானுல கெல்லாந் தானவ மாக்கப்
புகுந்த நமக்குப் போட்டியாய் வந்த
தம்பி செய்யும் வம்புக ளெல்லாம்
போருக் கிழுக்கும் பொறாமைக ளாகும்.
கலியன் ஆங்கே கலகந் தூண்டியே
புண்ணிய பூமியின் புண்ணியங் கெடுத்துத்
தருமஞ் சிதைத்துத் தானவக் கொள்கையை
நாட்டி நமக்கே நன்மை செய்கிறான்...
அதர்மப் படையும் அவனுட னிருந்து,
போக விலாச மோக மெழுப்பி,
ஞான நாடு தானவப் பான்மையாய்
எனக்கு வழியை இனிது துலக்குமே.
வணிகக் குழுவும் அணியணி யாகக்
கற்ற தொழிலைக் கடும்பொன் னாக்க
எல்லா முயற்சியும் இயற்றுத லறிவோம்.
கலியனைப் பற்றிக் கடுஞ்சிறை யிட்டுப்
போட்டியில் லாமற் புண்ணிய பூமியை
ஆயுதப் படையால் ஆளுங் காலமும்
வந்தது சுத்தன் மறைந்து விட்டதால்...
சத்தியன் கடலிற் சாய்ந்தே யிறந்ததால்...
சித்தி யரசியைச் சித்திமா னுடனே
எளிதாய் வென்றுநம் இச்சையைப் பெறலாம்.
என்றிருந் தேனே ; இன்றுநந் தம்பி,
கலியன் மனதைக் கலைக்கப் புகுந்தான்.
எதிர்ப்பைத் தூண்டி இன்னல் செய்தான்.
ஐந்துகண் டத்தும் ஆணவக் கொடியை
நாட்டச் சூழ்ச்சி நாளும் செய்தான்.
ஐரோப் பாவில், அரசியற் புரட்சியும்,
அமெரிக் காவில் அளவறு வணிகமும்,
ஆப்பிரிக் காவில் அம்பொற் குவையும்,
ஆசியா முழுதும் ஆக்கமும் பெற்றான்...
போட்டி போட்டுப் புதுப்போர்க் கருவிகள்
சேர்த்துச் சேனை திரட்டு கின்றானே.

கப்பல், பறவைக் கப்பல், விரைரதம்
நாச காரிகள், நச்சுப் புகைகள்,
பறக்கும் வெடிகள், பாயும் வெடிகள்,
ஊர்களை ஒழிக்கும் பேரணு வெடிகள்,
இளைக்கா துழைக்கும் இயந்திர மனிதர்,
இறந்தவர் பிழைக்கவும் இரத்த மருந்துகள்,
புதுவா னொலிகள், புதுத்தொலைக் கருவிகள்
செய்து குவிக்கிறான்....சேனை பணிகளைப்
பயிற்றிப் பயிற்றிப் பலதிசை யனுப்பினான்...
நாமினி உறங்கவா ? நண்பீர் உடனே
பெரும்படை திரட்டி, இரும்பும் எண்ணெயும்,
கணக்கறச் சேர்த்துக் கருவிகள் ஒட்டி,
முன்னேறு வோனை முட்டித் தள்ளி,
ஆணவந் தனையும் அடித்துப் பறித்துத்
தம்பியின் செருக்கைத் தகர்த்திடு வோமே.
துன்மதி, என்ன சொல்லு கின்றாயே !

துன்மதி

அரசே, நாமும் ஆயுத பலத்தில்,
சேனைத் திரளில், செருக்களச் செருக்கில்,
அனலினைக் காட்டிலும் அதிகமே யாவோம்.
தம்பி ஆயிரம் டன்குண் டெறிந்தால்,
அண்ணன் இருபதி னாயிரம் போடலாம்.
குண்டுச் சாலை சண்டைத் தினவுடன்
ஒருசிறு தீப்பொறி வரவைப் பார்க்குமே
அதர்மப் படைகள் அன்புக் கலியுடன்
புண்ணிய பூமியிற் புரட்சி விதைத்தபின்,
ஏணியைத் தட்டிவிட் டெதிர்செய லினிதாம்.
ஆயினும் இடர்கள் அளவில வாமே.
வக்கிரன் சொல்லும் வாய்மையைப் பார்த்தால்,
சுத்தன் ஏதோ சூழ்ச்சி யாகவே
ஒருமலை மேலே ஒளிந்திருக் கின்றான்....
சத்தியன் எங்கோ தப்பித் திரிகிறான்.
அதனினும் தீமை அருங்கலைக் கோயிலில்
பாட்டும் ஆட்டமும் பழகுவோ ரெல்லாம்,
சன்மார்க்க சங்கமாம், சாதன யோகமாம்—
ஊன்குடி தவிர்த்தலாம், ஒருமனை யாளுடன்
இல்லறங் காத்தலாம், இன்ப மளிக்கும்

போக சாலையைப் புரையென நீத்தலாம்—
தியானமாம் மோனமாம் தவமாம், ஆத்தும
ஞானமாம் இரக்கமாம் தானமாம் இன்னும்
அதானவக் கொள்கைகள் ஆயிரம் விதைத்துப்
புலிகளைப் பசுக்களாய்ப் புரட்டப் பார்க்கிறார்....
பாடகர் இருவரும் பதுங்கிப் பதுங்கி,
ஆணவ னுடனே அன்புகொண் டங்கும்
கலைப்பணி போலே கத்திப் பணிக்கும்
வழிசெய் கின்றார்....பழிசெய் கின்றார்....
எப்படியோ நம் இரகசிய மெல்லாம்
எதிரிகள் உடனே இன்னதென் றறிந்து
மாறு செய்யும் வஞ்சனை அறிகிலேன்.
சுந்தரி சக்தி தந்திர மாக
சன்மார்க் கக்கலைச் சங்கத் திற்கே
உன்பண மெல்லாம் உதவுகின் றாராம்....
ஆதலால் அரசே, அன்னியப் பாடகர்
வஞ்சனை யின்னமும் வளரா வண்ணம்,
அடக்கு முறைகள் சடக்கெனப் போட்டுச்
சிறையிட வேண்டும்.....சிறையிட் டாலே,
பகைவன் பிடியிற் பாடகர் சிக்கார்.
சன்மார்க் கத்தைச் சவுக்கடி கொடுத்தலே
நம்மார்க் கத்தை நடத்திட வழியாம்
ஆணவன் தடுப்பான் ; அக்கணம் போரில்
நாண வைப்பதே நல்வழி யாமே !

மாளவி

களிப்புற நாட்டிய கலைக்கோ யிலிலே,
எனக்குத வாத ஏட்டற மெல்லாம்,
நாட்டிய பாடகர் நலியச் செய்வேன்...
சுந்தரி சூழ்ச்சியும் வந்தது வெளியே
காண்கிறேன் அவளை.....காண்கிறேன் கோயிலை...
என்னுடன் வருக இரண்டுபீ ரங்கிகள்
ஒற்றர்முன் சென்று தெற்றென ஆங்கே
நடப்பதைக் கொணர்க ! நானுடன் வருவேன்....
என்றுமா வலியும் இறுமாந் தெழுந்து
சினப்பசிப் புலிபோற் சீறிப் பாய்ந்து
கலைக்கோ யிலிலே கடுமையாய்ப் பேசிய
கடிய விந்தையைக் காண்போம் வாரீர்.

19. தெய்வ வாதப் படலம்

“உள்ளன்பர் சங்கந் தன்னை உருப்படி யின்றி யின்றே
கிள்ளுவேன் முளையி” லென்று கிளம்பிய ஊனான் ஆங்கே,
முள்ளடர் வேலி போன்று மூர்க்கசட் டங்கள் போட்டான் ;
கள்ளரிற் கரந்து வந்துங் கலகங்கள் செய்தா னம்மா !

காவல்கள் பலமாய் வைத்தான் ; கடுவரி மிகவி தித்தான் ;
தேவனைப் பேசு வோரைச் சேவகம் விலக்கிப் பூட்டி
“மாவலி சரணம்” என்னும் வரையிலும் விளாசித் தீர்த்தான்;
மேவிடும் இடர்கள் அன்பு வீரத்தை வளர்த்த மாதோ !

அகந்தையின் உச்சிக் கேறி, ஆசையின் இரத்த வாளால்
சகந்தனை ஆள நின்ற தந்திரச் சாத்தான் அன்னோன்,
உகந்ததைச் செய்யா நல்லோர் ஒழிந்திடச் செய்த தெல்லாம்
தகர்ந்ததைக் காணக் காணத்தணலெனக் கொதித்தான்மாதோ!

கெடுமதி யரக்கர் வந்து, கேடுகள் சூழச் சூழ
விடுதலை பெற்ற நெஞ்ச வீரராம் சன்மார்க் கத்தார்,
படுதுயர் பட்டுப் பட்டுப் பளிச்சிடும் பொன்போ லின்னும்,
சுடுதுயர் பொறுத்து வெல்லச் சுத்தயோ கமும்ப யின்றார்...

காவல்செய் அரக்கர் தாமும் கருணைகொண் டுள்ளம் மாறத்
தூவியல் கொண்ட நல்லார், துகளறு நடத்தை யாலே,
மாவலி நாட்டி லோங்கி அனலலின் மனதி லோங்கித்
தேவைக ளெல்லாம் பெற்றுச் செழித்தனர் விழித்தி ருந்தார்.

பனிமலைத் தவத்தி லோங்கும் பழுதறு சுத்தன் சக்தி,
இனிதுளம் எழுந்து வீச, இயம்பறு மோனந் தன்னில்
மனமெனும் அதிக நுட்ப வானொலிப் பொறியில் ஆங்கே,
தினந்தினங் கேட்கும் ஆணை தினந்தினந் திருந்தச் செய்தார்.

சுத்தனை யறிந்தவர், சுத்த மார்க்கத்தில்
ஒத்துயர் அன்பர்கள் ஒன்று கூடியே,
இத்தினம் அரக்கர்வந் திடர்செய் வாரென்றே
சத்தியன் உரைத்திடச் சாற்றன் மேயினார்.

அன்பர்

வஞ்சருக் கஞ்சிலம்; வாளுக் கஞ்சிலோம்,
வெஞ்சிறைக் கஞ்சிலம் ; வெடிக்கும் அஞ்சிலோம்,
நஞ்சிற்கும் அஞ்சிலம் நமனுக் கஞ்சிலோம் ;
தஞ்சமென் றிறைவனைச் சரண்பு குந்தயாம்.

ஆண்களின் ஆண்மையும் பெண்கள் பெண்மையும்,
பூண்டுல காடலைப் போற்றும் புண்ணியன்,
ஆண்டவன் ஒருவனை அன்பு செய்பவர்
ஈண்டிடர்ப் படுவதும் இறைவன் இச்சையே !

எல்லையில் லாமலே இரக்க மற்றவர்
தொல்லைகள் யாவையுந் தொடர்ந்து மோதினும்,
அல்லலை நீக்கிடும் அருளி ருக்கையில்,
இல்லையோர் குறையெமக் கென்று மெங்குமே !

மெய்யன்

ஊனுடல் இருவினை உலக மாதலால்,
தேனுடன் ஈக்கடி செறிந்த தொப்பவே
மானிட முயற்சிக்கு மமதை யோடெதிர்
தானவர் இன்னலுந் தருவ தாகுமே !

இருவினை தாண்டியே இயற்கை யாகிய
திருவுறு சாந்தத்தைத் தியான யோகத்தாற்
குருவரன் அருளினாற் கொண்ட கோதிலார்
பொருவினை யுலகினைப் பொருட்ப டுத்திடார்.

ஆதலால் மெய்ந்நெறி யன்பர் யாவரும்,
ஏதமொன் றின்றியின் றிறைவன் சக்தியைப்
பேதமொன் றின்றியே பெறத் தியானத்தாற்
போதனை புரிகநம் போக யோகனே !

போகன்

அடலரிய மனக்குரங்கை அடக்கி னாலே,
அமைதிவரும் என்றெண்ணி அன்ப ரானோர்,
திடமுடனே சிவ விஷ்ணு பக்திசெய்வார் ;
தீர்த்தமுடன் மூர்த்தி தலம் சேவிப் பார்கள் ;
உடல் மடக்கிக் குடல்குலுக்கி மூச்சைக் கட்டி,
உரையடக்கி உணவடக்கி, மலைகான் ஓடி,
அடராஜ யோகங்கள் அமர்ந்து செய்வார்,
அவற்றாலே நாடிசுத்தி யாவ தாமே !

இயல்பான மூச்சினை "ஓம் சுத்த சக்தி"
என்றெண்ணிக் கவனித்தால் பிராணாயாமம்,
செயலான பலனாகும் ; சித்தம் ஊன்றும் ;
செயல்விளைவைத் தெய்வநிவே தனமே யாக்கிப்
பயனுள்ள பொதுநலங்கள் பரிந்து செய்தால்,
பார்வடிவாம் பரமனருள் பெறுத லாகும் ;
அயலெண்ணா துள்ளத்தில் அடங்கி விட்டால்,
அறிவான பரமாத்மன் அருளுவானே !

நான் நானென் றகங்கரிக்கு நச்சுப் பேயாம்,
நலந்தீதி லலைகின்ற நாசப் பேயாம்,
போனதையும் வந்ததையும் புரட்டும் பேயாம்,
பொல்லாத குரங்குமனம் போக்க டங்கி,
தானான தலைவனடி பணிந்து நின்றால்,
சகவிவகா ரங்களறச் சாந்த மான
மோனானந் தக்கடலில் மூழ்கி மூழ்கி,
முத்தான ஞானத்தை முகக்க லாமே !

பதரான நாருரித்துப் பகுத்தே ஓட்டைப்
பருப்படையும் பாங்காகப் படர்ந்த சித்தப்
புதர்நீக்கிப் பொய்யகந்தை ஓட்டை விண்டே
பொருளான தனையறிந்து பொருந்த லாமே.

அதுமயமாய் அனைத்தினையுங் காண லாயின்,
அவனியெலாந் தானென்றே அறித லாகும் ;
பொதுவினிலே யொருமித்து வாழு கின்ற
பூரணவாழ் வெய்துமிந்தப் போதத் தாலே.

பாழான பகையின்றிப் பொறாமை யின்றிப்
படுநாசப் போரின்றிப் பங்க மின்றிச்
சூழுலகம் சுத்தான்ம சித்தி பெற்றே,
சுதந்தரமாய் முன்னேறுஞ் சூட்சு மத்தை
ஆழ்ந்துள்ளே அறிந்துணரத் தியானம் ஒன்றே
அற்புதமாஞ் சாதனமாம் ; ஆத லாலே
வாழுலக நேயர்காள், மனத்தைக் கட்டி
மாசற்ற பரம்பொருளைத் தியானிப் பீரே !

எல்லாரும் தியானித்தல்

பதுமவா தனத்தில் ஊன்றிப் பங்கயக் கைகள் கோத்தே,
முதுவினை நினைவ டங்கி, முன்னிலை யுலக டங்கி,
எதுபொரு ளென்று நாடி இதயத்தி லாழ்ந்து தேடிப்
பொதுநிலை யான ஒன்றைப் புனிதருங் கூடி நின்றார்...

சக்தியின் தியானந் தன்னிற் சந்ததம் வந்தளிக்கும்,
சுத்தனின் சோதி யுள்ளே சுடரொளி பரவும் போது,
மெத்தவும் இன்ப மெய்தி விரதியர் இருக்கு மெல்லை,
சத்தமென் றெழுந்த தாங்கே தடதடத் திடியைப் போலே !

அரக்கர் புகுதல்

கதவு டைந்தது ; கட்டிட முற்றிலும்
அதிர்ந்த தாயிரம் பேய்க்குர லார்த்தன ;
முதிர்கள் விச்சமும் மூச்சை யடைத்தது,
பதற நல்லவர், பாதகர் வந்தனர் !

அரக்கர்

மண்ண டுங்கிடு மாவலி யாட்சியிற்
புண்ணி யப்பொய் புகல்பவன் யாரடா !
கண்ணிற் காணக் கடவுளைக் காட்டடா ?
பெண்ணை யன்றியோர் பேரின்பஞ் சொல்லடா !

சுட்டு லகைச் சுதந்தர மாகநாம்
கட்டி யாளக் கடவு ளெதற்கடா ?
மட்டி ஞான மடையரின் கும்பலைக்
கட்டிக் கல்லைக் கடலினில் ஆழ்த்துவோம்...

திட்டி எள்ளிச் சிரித்துத் தடிகளாற்
பொட்டுப் பொட்டெனப் போட்டுப் பகாசுரர்
அட்ட காசங்கள் ஆயிரம் செய்யக் கை
கொட்டி நன்றெனக் கொற்றவன் வந்தனன் !

மாவலி

ஒண்ட வந்தவன் ஊரைக் கலக்கினாய் !
அண்டி வாழும் அடிமைக்குக் கூட்டமேன் ?
பெண்டிர் இத்தனை பேருனக் கேனடா ?
கொண்ட கொள்கையென் கோபத்தைத் தூண்டுதே !

கொற்ற லங்கையிற் பூந்த குரங்கின்று
மற்றும் ஓர்முறை மானிடங் கொண்டதோ ?
ஒற்றைக் கிங்கிரட் டைக்கவி யுற்றிங்கே
பற்ற வைத்தன பத்திக் கனலையே !

அடநின் ஆத்தும ஞானப் புரட்டெனுட்
சுடருந் தீயினிற் சுள்ளி செருகுதே ;
இடத்ததைத் தந்த இரக்கத்தி னாலன்றோ
மடத்தைக் கொண்டனை மானிட மெய்யனே !

* * *

அந்த மான அரசியென் றுன்னை நான்
சொந்த மாகச் சுகமுற வைத்தனன் ;
சுந்த ரிக்குச் சுதந்தர மீந்ததும்
விந்தை யாகவென் வீட்டைக் கெடுத்தே !

சுந்தரி

கறந்த பாலெனக் கடுவிடக் கசடரை நம்பிப்
பறந்து வந்துநல் லன்பரின் பத்தியைச் சிதைத்தாய் ;
அறந்த விர்ந்தநின் அவலவாழ் வருள்வழிச் சென்று
சிறந்து வாழவே திருச்சபை சேர்ந்திடாய் அரசே !

ஞான வித்தகன் வாய்மையே உருவென மற்றுன்
ஊனை நாட்டுறுக் குற்றனன், உயர்நலம் புரிய ;
காணரிய சிந் தாமணி கைவந்த தனையான்,
கானவன் முகம்; உன்வெறி முகத்தையுங் காணாய் !

ஐயநீ செருக் காற்றலை அணுவெனக் காட்டத்
தெய்வ சக்திகொண் டுற்றனன் சிறந்தநல் யோகி ;
வையம் வாழவே வாழ்கின்ற மாதவ முடையான்,
வெய்ய பாலையிற் பசுநில விளைவென விளைந்தான்.

பருந்தைப் போற்குழல் விழியினுய், பகர்வதைக் கேளாய்,
வருந்தத் தக்கன பலபல வரம்பின்றிச் செய்தாய் ;
மருந்தெ னத்தகும் அறநெறி மதித்துநீ யினியுந்
திருந்தின் எம்முடன் சேர்ந்துநீ சீர்பெற லாமே

மாவலி

விற்றி றத்திலும் வீரப் படையிலுங்
கற்ற என்முன் கலைப்புல வர்களின்
சொற்றி றத்தைச் சொரிந்தனை சுந்தரி !—
மற்றி றத்தினை வார்த்தை மயக்குமோ ?

இன்ப மென்றுன் இளமையிற் கொண்டுவந்
தன்பு செய்தொரு சக்தி யளித்தனன் ;
பின்பென் ஆசை பிறரிடஞ் சென்றுமே
உன்பெண் சேயை உயிரெனப் போற்றினேன்....

அட்ட திக்கையும் ஆளும் அரக்கனின்
சட்டந் தன்னை அசட்டைசெய் தாயதேன் ?
மட்ட மான மனிதரைச் சார்ந்துநீ
கெட்டேன் செல்வ மகளைக் கெடுத்தனை...

கண்ணை மீறினை காதினை மீறினை,
பண்ணை மீறினை பாரினை மீறினை,
பெண்ணை மீறினை ஆணெனப் பேசினை,
எண்ணை மீறி யியற்றினை தீமையே !

கடவு ளென்றுங் கதியற மென்றுமென்
உடலெ ரிச்சலை ஓங்க வளர்த்தனை ;
*விட லரிய விருப்பத்தை விட்டுநீ
கடமை யென்று கலைகளைக் காத்தனை.

தேக மன்றியோர் தெய்வமுண் டென்றனை ;
போக சாலையைப் புல்லென நீத்தனை.
தாக மாகிய தானவ நெஞ்சத்தின்
மோக வேட்கை அழிய முயன்றனை.

* காமம்

மதுவை யுண்டிலர் மாமிச முண்டிலார் ;
பொது நடஞ்செயும் போகமும் உண்டிலார் ;
எதுவென் இன்பம் அதனை இகழ்ந்தனர்
புதுமை பெற்றுனைப் போற்றிய தானவர்.

தேடி வந்த தெருவிசை வாணரை,
வீடு தந்து வியன்கலைக் கோயிலில்
ஆடல் பாடல் அழகுகண் டானந்தங்
கூடி யென்னைக் குமைத்திடச் சூழ்ந்தனை....

மன்னு லகமும் மானிடர் கூட்டமும்
என்ன டிமைகள் ; என்சுக மோங்கவே
மின்ன டிமைகள் விங்கிளங் கொங்கையர்
என்னும் பேச்சை யெதிர்ப்பவன் யாரடா !

மெய்யன்

நிறுத்துன் பேச்சை நிருத நிருபனே
உறுத்து வெஞ்சொல் உளறியெம் உள்ளத்தை
ஒறுத்தனை உனக் குண்மை விளையுமோ
வறுத்த நெல்லும் வளர்பயி ராகுமோ ?

மடமை கொண்ட மமதைக் கடிமைநீ
குடமு லைக்குங் குடிக்கும் அடிமைநீ ;
படைக்க லத்திற்கும் பாழ்செயுஞ் சண்டைக்கும்
விட மனத்திற்கும் வெய்ய அடிமைநீ.

கொடிய சொற்களைக் கொட்டினைக் கோபத்தால்,
கடைய ருங்கரு தாதன செய்தனை ;
படையினும் பல மிக்கப் பகவனின்
அடியர் யார்க்கும் அடிமைக ளல்லரே

கோலைக் கேட்டுக் குதிக்குஞ் சினமிகு
வாளைக் காட்டினை ; வாளுக்கு வாளுண்டு ;
தோளும் உண்டு ; சுதந்தர வீரமெந்
நாளும் உண்டுன் செருக்கை நலிக்கவே !

மாவலி

மண்ணை யாண்டிடு மாவலிச் சிங்கமுன்
புண்ப டுஞ்சொல் புகன்றனை புல்லனே ;
கண்ணி மைக்குமுன் கண்டதுண் டஞ்செய்வேன்...
பண்ணொன் றென்குடில் பாழ்செயும் ஒற்றனே !

மகி நடுங்கிடு மாவலிச் சிங்கத்தைப்
புகலடைந்த புழுவிட நாகமாய்
அகந்தை கொள்ளுமென் ஆணவத் தம்பியின்
இகலைத் தாம்புனை இன்கலைத் திறனால்.

மெய்யன்

இல்லை யில்லை எமக்குக் கலையலாற்
சொல்லு மில்லையுன் சோதர நண்பன்பாற்
செல்லுங் காரியம் சேமக் கலையினால்
வெல்லுங் காரியம் வேறொன்று மில்லையே !

பொய்யர் சொல்லும் புளுதனிக் கோள்களை
மெய்யென் றெற்று, மிகைபடப் பேசினை ;
ஐய மாவலி அன்புடன் கூறினேன்—
மெய்யன் சொல்வதுன் மேன்மைக்கென் றெண்ணுவாய் .

நல்ல தூய நடுநிலை யாளரின்
சொல்லைக் கேட்டுச் சுருதியைக் கேட்டெல்லாம்
வல்ல தெய்வத்தை வாழ்த்தி வணங்கியே
வெல்லு மாண்மை விளைந்திட வாழுவாய்.

வேறு நாட்டை விரும்பியம் மக்களைக்
கூறு செய்திடுங் கூற்றெனப் பாய்வதேன் ?
ஊறு செய்திட உன்னலை ; நீபெற்ற
பேறு நிற்கப் பெருநலம் பேணுவாய்.

ஊர ழிய உயிர்கள் அழிந்திடப்
பார ழியப் படுகொலைப் பாவத்தாற்
சீர ழியத் திருவழியப் பெரும்
போரி ழைத்தனை பூவுல கெங்குமே.

சிரு யர்ந்தநற் சிந்தனை யாளர்கள்,
பாரு யரப் பெருநலம் பாலிப்பார்,
ஆரு யிர்களை அன்புயிர் என்பவர்,
தீரர் அன்னவ ரேசெய மன்னராம்.

தொல்லு லகிற் சுதந்தர மூச்சினை
வல்லவன் வகுத்தான் வளர் நாட்டிற்கே ;
அல்லல் செய்தத னைக்கவர்ந் தாட்களைக்
கொல்லுங் கொற்றவன் கூற்றினுங் கூற்றனே !

ஆளு நாட்டை அறவழி யாண்டு நீ
தோளைக் கொண்டு சுதந்தரந் தாங்கியே,
வாளைக் கொண்டு வரும்பகை ஓட்டியே,
நீள மைதி நிலவிட வாழுவாய்....

அருளில் லாமல், அறிவுமில் லாமலே,
தெருளி லாது திரள்படை கொண்டிங்கே,
ஒருவன் ஆசை உலகை இரத்தத்தாற்
பெருகச் செய்திடும் பேய்க்குணம் வீழ்கவே !

பலருக் கின்பப் பயனுற வாழ்வதே
இலகு நல்லவர் வாழ்வின் இயற்கையாம் ;
சில கொடியர் திமிர்கொண்டு போர்செயக்
கொலை நரகங் குவலய மானதே !

உண்ணுஞ் சோற்றில், உயிர்க்கும் உயிர்ப்பிலே,
எண்ணும் எண்ணில் இயற்றுஞ் செயலிலே,
புண்ணி யத்தைப் பொலிவிப்பர் நல்லவர் ;
கண்ண றுங்கொலை காணுவர் தீயரே.

பஞ்ச பாதகப் பாமரப் பாழ்சின
நெஞ்சை மாற்றி நினைப்பைத் திருத்திடும்
வஞ்ச மற்ற கலையை வளர்க்கவே
அஞ்ச லற்றற மாம்பணி செய்கின்றோம்...

கலையி னுலும் கலைகள் அனைத்திற்குந்
தலைசி றந்தசன் மார்க்கத்தி னுலுமே,
கொலை புலைகுடி கூத்திக் கொடுமையில்
அலை யுலகிற் கமைதியை நல்குவோம்.

தீய ரின்மனந் தீமையைக் காண்பதே ;
நேய ரின்மனம் நேர்மையைக் காணுமே ;
தூய ரின்மனந் தூய்மையைக் காணுமே ;
பேய ரின்மனம் பேய்நட மாடுமே.

துச்ச மான துடுக்குகள் பேசினை
அச்சத் தாலெமை அஞ்சி வருத்தினை ;
நச்சு வாளுக்கும், நாத்திகக் கோளுக்கும்,
உச்ச வாய்மை உளத்தினர் அஞ்சவோ ?

நாடெ லாமுனை நத்திப் பணியினும்,
ஆடெனப் பணியோம் ; அரி போலவே,
பீடு டைப்பெருந் தன்மையி னுலிங்கே
வீடு பெற்றனம் வீர வுறுதியால்...

பாடும் பாடலும் பத்தியின் பாடலே,
ஆடும் ஆட்டமும் ஆனந்த வாழ்க்கையே.
கூடுங் கூட்டமும் கொள்கை நடத்தவே
தேடுந் தேட்டந் திருவுறு நன்மையே...

வைய கத்திற்கு நன்னெறி வாழ்க்கையும்,
செய்ய சிந்தையுஞ் சீர்பெறுஞ் செய்கையும்
தெய்வ பக்தியுந் திவ்விய யோகமும்
உய்வெ னத்தரும் உண்மைக் கலைஞர்யாம்....

மாவலி

மெய்க ளென்று மினுக்குரை பேசினை
பொய்க ளத்தனை யும்;புரட் டென்னுவேன்,
வெய்ய வாள்வலி வெட்டிப் புதைக்கவே
தெய்வ மென்முன் உடன்வரச் செய்யடா ?

பின்னு முன்னும் பிதற்றி யலைகின்றாய்
முன்னி றுத்துன் முதற்பெருந் தெய்வத்தை;
அன்ன வன்சமர்த் தையென தாற்றலால்
என்ன செய்குவன் என்பதைக் காணுவாய்.

மெய்யன்

விண்வி ளக்கை வெறிப்புயல் ஊதுமோ ?
தண்க டலினைச் சங்கிலி கட்டுமோ ?
கண்க ருத்தணு காத கடவுளைத்
திண்பு யத்தின் சிறுவலி தீண்டுமோ ?

மட்டி ஆணவ மாயக் களிம்பிலே
கட்டித் தங்கக் களையும் ஒளிருமோ ?
துட்ட தானவத் துன்பப் பிறவிக்கும்
சுட்ட ரியசுயம் பொருள் தோன்றுமோ ?

ஊனுங் கள்ளும் உவட்டுறுங் காமமும்
நானெ னதெனு நாத்திக வேகமும்,
மோன சாதன முத்தர் உணர்ந்திடும்
ஞான வத்துவை நாடப் பெறுவதோ ?

பெருகுங் காமம் பிறர்மனை யாண்டிடப்
பெருகுஞ் சேனை பிறர்புவி யாண்டிடப்
பெருகும் ஆசை பிறரை யழித்திட;
உருகும் அன்புணர் ஒன்றினைக் காண்பையோ ?

செருக்கும் வஞ்சப் பொறாமைச் சிறையிலே,
இருக்கும் உன்னை இருவினைக் கட்டிலே
தருக்கும் உன்னைச் சகச சுதந்தரர்
அருட் கதிரால் அறியறி வெட்டுமோ ?

மாவலி

உலக மன்றி உயர் பொரு ளொன்றில்லை ;
கலக மன்றியோர் காரிய வீறில்லை ;
புலனை மீறிப் பொருளில்லை ; உன்னுளே
இலகு தெய்வ வியல்பினைச் சொல்லடா.

மெய்யன்

என்றெய்வம் உண்மையறி வின்பத் தெய்வம் ;
இதயவெளி யெழுந்துநடம் இயற்றுந் தெய்வம் ;
கன்றைத்தாய் காப்பதுபோற் காதலன்பர்
கடைத்தேறக் காப்பாற்றுங் கருணைத் தெய்வம் ;
ஒன்றாகி அருட்பலவாய் ஒளிருந் தெய்வம் ;
ஓதுமறை ஓமென்னும் உயர்ந்த தெய்வம் ;
என்றென்றும் எல்லார்க்கும் இனிய தெய்வம்,
இருந்தபடி யிருந்துலவும் இயற்கை யாமே.

சூரியனுக் கொளியாகச் சுடருந் தெய்வம்,
தூயவுளக் கண்ணாடி துலக்குந் தெய்வம் ;
பேர்வடிவப் பேதமிலாப் பெரிய தெய்வம்,
பெருகுமத வாதங்கள் பேசாத் தெய்வம் ;
நேராகச் சக்தியினால் நிலவுந் தெய்வம்,
நெஞ்சத்திற் கோயில்கொண்டு நிறைந்த தெய்வம்,
ஓராமல் அன்னியத்தை உணருந் தெய்வம் ;
உள்ளத்தில் உள்ளபடி உள்ள தாமே.

தானேதா னுயிருக்குந் தனித்த தெய்வம்
சர்வாத்ம வடிவான சக்தித் தெய்வம்,
நானாகி நீயாகி நடுவு மாகி,
நானுபா வங்களிலும் ஒருமை யாகித்
தேனாகிப் பாலாகித் தீஞ்சா றாகித்
தெவிட்டாது தியானத்தி லினிக்குந் தெய்வம் ;
மோனத்தில் உணர்கின்ற முழுமை யின்பம்
மூலசக்தி யாகவொளிர் முதல்வ னாமே.

மாவலி

இருக்குது தெய்வம் என்றாய் என்னிலும் வலியன் என்றாய்
உருக்கிய செம்பு போலென் உதரக்கண் உமிழு கின்ற
நெருப்பின்முன் அதனைச் சற்றே நிறுத்தவு மாட்டாய் ; வீணே
உருக்கொளாத்தெய்வ மென்றாய்உடனதைச்சோதிப்பேனே.

அடியவர் தம்மைக் காக்கும் ஆற்றல்கொள் இறைவன் என்றாய்
இடியினுங் கொடிய தாமென் பீரங்கிக் கெதிரே உன்னை
வெடிபட நுறுக்கு கின்றேன்; வேந்தன் யான்; இறைவன் உன்னை
அடிபடா தின்று காத்தால், அதிசயம் அறிகு வேனே !

மெய்யன்

புலன்களைக் கடந்த தெய்வப் பொருளொ துண்மை யென்னில்,
இலகுயிர்க் குயிர தென்னில், இரக்கமே உருவ மென்னில்,
அளவிலா விளையாட் டாலே ஐந்தொழில் புரியு மென்னில்,
விலகுக துன்ப மின்று விமலன்செய் யருளி னாலே !...

மெய்யனிவ் வகைது தித்து, மெய்ம்மறந் திருந்தான் ; போகன்
பையப்பின் சென்று, தியானம் பண்ணிமுன் பரிந்து வந்தான் ;
துய்யனை நினைத்துச் சக்தி "சுத்தஓம் சக்தி" யென்றாள்,
வெய்யவன் "சுடுக" வென்று வெய்யரை யேவி னானே !

சக்தி

தடுத்தெதிர் நின்று சக்தி "தந்தையே விந்தையான
கொடுமைசெய் திடத்து ணிந்தாய் குடிவெறி மயக்கத் தாலே ;
கெடுகநின் புன்மை ; வெம்மை ; கேடுறச் சுடுவா யென்னிற்
சுடுசுடு என்னை" யென்று துணிந்துமார் காட்டி நின்றாள்...

சுந்தரி

படபடக் கின்றாய் ; சொன்ன பகுத்தறி வனைத்தும் அன்று
கடுவனுக் கிதமு ரைத்த புட்களின் கதையே போலும் !
நடுவுள தெய்வ முண்டேல் நம்பினோர் கெடார்நீ யென்னைச்
சுடுமுனென் றங்கு நின்றாள் சுந்தரி துணிந்த நெஞ்சாள்..360

எல்லாரும்

திருந்துநல் லன்ப ரெல்லாந் "தெய்வமே துணைசெய்"யென்று,
மருந்துகெட் டித்து நிற்கும் பீரங்கி வாயின் முன்னே
வருந்துவோம்,அறத்தைக் காப்போம் வாய்மைக்கேஉயிரை நல்கி
இருந்துநற் பதவி சேர்வோம்" என்றெதிர் நின்றா ரம்மா !

போக முனிவன்

அன்பறந் தூய்மை ,வாய்மை, அருளுடன் அடைத லாகும்
இன்பமெய்க் கடவுளுண்டென் இதயத்தில் அதுவே நின்று,
துன்பமே தொழிலாய்ச் செய்யுந் துட்டரைக் கட்டு கென்றே
செம்பொரு ளறிந்த போகன் மந்திரஞ் செபித்தா னங்கே.

மாவலி

செல்வியைக் கண்டான் ; வீர சுந்தரி செய்கை கண்டான் ;
அல்லலுக் கஞ்சா நெஞ்சின் அன்பரைக் கண்டான் ; ஆங்கே
சொல்லொணாச் சக்தி யொன்று துலங்கிடஉணர்ந்தான்; ஊண
கல்லென நின்றான் ; ஆங்கோர் கதிரொளி வீசக் கண்டான்...

"சுத்தஞெம் சக்தி" யென்றே தோத்திரம் பாடி நிற்கும்,
பத்தரைக் காக்க வேண்டிப் பகவனே அருள்செய் தாரோ ?
சுத்தனின் யோகசக்தி தொண்டர்பால் வந்த தேயோ...
அத்தனை அரக்கர் தாமும் ஆற்றலற் றயர்ந்து விட்டார்....

பெய்மனப் பித்தர், கையாற் பீரங்கி தொடவே யொண்ணுர் ;
வாய்திறந் தியம்ப வொண்ணுர்; வன்கரம் உயர்த்த வொண்ணுர்
தீய்விழி காண வொண்ணுர் ; திகைத்தயர்ந் தாங்கே மண்ணில்
ஓய்ந்து வீழ்ந் துறங்கி ஞர்கள் ; ஓவிதென் வியப்பே யம்மா ! 380

சுந்தரி யந்த வேளை, சுடுகரு விகளை யெல்லாம்
தந்திர மாகத் தூக்கித் தாவிடும் ஆற்றில் ஆழ்த்தி,
அந்தவா ளரக்கர் தம்மை விசைவண்டி யதனில் ஏற்றிச்
சொந்தமா ளிகையிற் கொண்டு 'தூங்குமின்'எனவி டுத்தாள்...
384

20. மகாமுனிப் படலம்

மெய்யன்

திருந்திய ஒழுக்கமும் சிறந்த வாய்மையும்
பொருந்திய நல்லவர் பொருமைப் புல்லரால்
வருந்திய வருத்தங்கள், வலிய துன்பங்கள்
பெருந்திரு வூருள்வரப் பெரிதுந் தீருமே.

ஆயினும் அருமறை யறிந்த போகனே,
பேயினும் கொடியவர் பிறிதும் வந்துளே
தீயினை மூட்டுவர், சிறையிற் கொல்லுவார்
தாயரின் மானமுந் தவிக்கச் செய்வரே.

வெருவுறும் பகைவரை வென்றித் தீவிலே,
தருமமே தழைத்திடத் தக்க சாந்தமாம்
ஒருவழி அருளினுல் உதிக்க லாகுமோ ?
திருவிலி அரக்கருந் திருந்தி வாழ்வரோ ?

சுந்தரி

வந்தது வருக;நம் வாய்மை வெல்லுக !
முந்துல கிலகிய முதன்மை வீரரின்
சிந்தனைக் கின்னிய செய்கை செய்குவோம் ;
தந்திரம் உள்ளது ; தருமம் வாழுமே.

* * *

தீரன் மஜினியும், திண்கரி பால்டியும்
முன்னே செய்ததை இன்னே செய்வமே :
ஆத்திரி யாவின் அடிமைநா டாகிய

விண்பொரும் இதாலியா விடுதலை பெறவே,
கண்பொரும் சுதந்தரங் கதிர்விட் டொளிரவே,
எழுந்தான் மஜினி இளந்திருவுடனே.....
இளம் இதாலியா எனும்பெருங் கழகம்
கண்டான் கொள்கை கனல்பெற வமைத்தான்
ஓய்ச்சலில் லாது பேச்சும் எழுத்தும்
செயலும் சிறையும் தியாகப் பொறுமையும்
புன்னகை யுடனே பொதுநலப் பணியுமாய்
வாழ்ந்தான் வாழிய வரம்பெறு வீரனே !
நாடு கடந்து நலிந்தும் மஜினி
சொந்த நாட்டின் சுதந்தரங் காத்தான்.
கரிபால் டியெனுங் கலங்கா வீரன்,
மறைந்துங் கரந்தும் மக்களை ஊக்கிப்
படைகளைத் திரட்டிப் பகைவரைப் பொருது,
விடுதலைப் போரை வியனுறச் செய்தான்.
சேனையும் ஒற்றரும் சிறையும் இடரும்
நலித்த ரஷ்ஷிய நாட்டை ஜாரின்
கொடுங்கோலி னின்று விடுதலை செய்யவே,
மார்க்ஸின் பொதுமை வழியைக் கண்டே
ஏழைக் கிரங்கும் இலெனின் வீரன்,
செல்வர் கொடுமைச் செருக்கைத் தகர்த்து,
நாட்டு மக்களை நடுக்கிய குலத்தை
விட்டுட னொழித்து விடுதலை நாட்டி
உலகம் உலகோர் உடைமையென் றுனே !
அத்தகை வீரர்போல் அசுரக் கொடுமையை
எதிர்ப்போம், உயிரை ஈவோம் என்றே
சுந்தரி சொல்லவே, துணிந்த சக்தியும்
"உயிர்பெரி தன்றே உரிமையே பெரிதாம் ;
கோடி யிடர்கள் குறுக்கே நின்று
தடுக்கினும் அருட்பணி விடுக்கிலோம் ; எந்தை
உணர்ந்து திருந்தும் உண்மை வழியில்
இயன்ற தெல்லாம் இயற்றித் தானவர்
திமை தீரப் பூமி நலம்பெற
இரத்தம் சிந்துவோம்" என்றனள் ஆங்கே....

போக முனிவன்

போக முனிவன் பொறுமையோ டெழுந்து,
மாவலி நாட்டில் மனவலி யாலே
அறத்தை நாட்டும் ஆர்வங் கொண்டீர்,
முன்னொரு காலம் அன்னியத் தானவர்

திருமிகு சிகரத் தீவினைப் பற்றி
அசுரக் கொடுமை அளவில செய்தார்.
சிவபுண் ணியத்திற் சிறந்த நாட்டிலே
ஊனும் கள்ளும் உயிர்க்கொலைப் பழியும்
போக சாலையும் பொருட்பெண் மாயமும்
பெருகச் செய்து, பேய்க்கூத் தடித்தார்.
வளமெலாம் சுரண்டி வறுமையே வளர்த்தார்,
கடுவரி விதித்தார் கொடுவரி போலே.
சுதந்தர வீரரைக் கதம்பெறக் கொன்றார்.
தேச மெல்லாம் சிறையெனச் செய்தார்.
ஏனென் றவரை எமனிட மனுப்பினார் ;
நாடென் றவரை வாட நலித்தார்.
கையும் வாயுங் கட்டிடச் சட்டம்
விதித்து மக்களை வதைத்தனர் அரக்கர்.
வாயைத் திறக்க வகையிலை யேனும்,
உரிமைக் கனலும் உணர்ச்சிப் புயலும்
எரிமலைக் கொதிப்பும் ஏறித் துடிக்கவே
தைரியப் படுத்தும் தலைவனும் எழுந்தான்.
எழுந்தான் மகாமுனி என்னும் பெரியோன் ;
ஏழைக் குடிலில் எளியவர் ஈன்ற
திருவுடைச் செல்வன், சிறிய வயதிலே
கலையிலுங் கவியிலும் புலமை பெற்றோன்.
ஒன்பது வயதிலே யோகம் பயின்றோன்.
பதினாறு வயதிற் பழுதறத் துறந்து,
நிட்டை கூடி நிருவி கற்ப
சமாதி யெய்திச் சாட்சாத் கரித்த
பரமாத்ம ஞானம் பாடலாய் அருளி,
உலகிற் கீந்து பலபுகழ் பெற்றோன் ;
உலகெலாங் கோயிலாய் உயிர்த்தொகை கடவுளாய்
நிலவிடக் கண்டு நலம்பல செய்த
அருட்பணி வீரன் ; அஞ்சா நெஞ்சன்,
ஆத்தும சக்தியின் அன்பூற் றன்னோன்,
எண்ணிய வினையைத் திண்ணமாய் முடிப்போன் ;
சிகரந் தன்னைச் சீர்தி ருத்தவே
குருகுலம் அமைத்துக் குமரர் குமரியர்
கலையும் வீரமும் கடவு ளறிவும்,
யோக சக்தியும் ஒருங்கே யடையும்
சாதனந் தந்து, தளர்வற வுழைத்தான்....
"பிரம சரியமே பெருந்திற லளிக்கும்,

பொருந்திற லாலே பெறுவோம் விடுதலை"
என்று சிகர இளைஞரை ஊக்கிய
மகாமுனி தன்னை வஞ்சக ஒற்றர்,
"புரட்சியைத் தூண்டினை புரட்டுகள் பேசினை,
தானவர் வகுத்த சட்டம் மீறினை"
என்று தாக்கி, இழிவு படுத்திக்
திருநுதலத் திற்றுங் கொள்ளியை வைத்தார்.
வகுப்புவா தத்தை வளர்த்து நாட்டைப்
பிரித்தார் பழமறை எரித்தார் கொடியர்.
அஞ்சா மாமுனி அரக்கர் கொடுமையைப்
பலரும் அறியப் பண்புடன் பேசியும்
உருக்கமாய் எழுதியும், ஊர்விழித் தெழுந்தே
"எங்கள் சுதேசம் எமக்கே உரிமை,
தானவர் கொடுமையைத் தாங்கோம் இனிமேல்
பஞ்சமா பாதகப் படர்களை ஒழிப்போம் ;
கள்ளூன் அருந்தோம், கற்பை அழியோம்,
நாட்டுப் பொருளையே நாட்டார் கொள்வோம்,
விதேசப் பொருளை விலக்குவோம் ! எங்கள்
பொருளைக் காப்போம் அருளைக் காப்போம்....
உயிரைக் கொடுத்தும் உரிமை பெறுவோம்.....
வஞ்சக் கடைகளை மருங்கெலாம் விரித்தே
மோசடி யாகக் காசடிக் கும்பலை
வீழ்த்துவோம்"என்றே வீரன் எழுந்து,
பணிமுறை வகுத்துத் துணிவுறக் கிளர்ந்தான் ;
தொண்டரை அரக்கர் துன்பச் சிறையில்
அடைத்தார் ; தலைவனை அடக்கு முறையால்
அடக்கிட முயன்றார் ; அவலமே யானார்....
இடர்களே உரமாய்ப் படர்ந்தது நலமே.
சிகர இயக்கம் தேசந் தாண்டி
உலகெலாம் பரவி, உள்ளன் படைந்து,
தானவர் கொடுமையைத் தமுக்கடித் துரைக்கவே
உலகெலாந் தொண்டர் உதவிகள் பெற்றார் ;
மாமுனி செய்கையை மக்கள் புகழ்ந்தார் ;
சிகரர் அனைவரும் சேர்ந்தொரு குலமாய்த்
தானவர் ஊழியந் தாழ்வென விடுத்தார் ;
படையிற் சேரார் ; பயமு றுத்தினும்
அஞ்சார், யாரும் அரக்கரை வணங்கார்.
பெண்டிர் இணங்கார் ; பிரம சரியம்
கொண்டெல் லாரும் கொடுமை ஒழியவே

பொதுநலம் புரிந்தார், போகசா லைகளைப்
பொட்ட லடித்துப் புற்றரை செய்தார் ;
விலைமா தர்களைக் குலமாத ராக்கி
விடுதிக ளெல்லாம் வீடுக ளாக்கிப்
பெண்களை மிகவும் பெருமை செய்தார்.
கொலையூண் உண்பதும் கொடுப்பதும் வெறுத்தார்.
மதியை மயக்கும் மதுவை யொழித்துக்
கட்கடை பஜனை கானமந் திரமாய்த்
தெய்வ நாமமே செழிக்கச் செய்தார்.
அன்னியப் பொருள்களை அடிமைத் தனமென
ஒதுக்கித் தாமே உழைத்துப் பிழைத்தார்.
நாட்டுப் பொருளை நாட்டார் துய்த்தார்.
கோயில்க ளெல்லாம் குருகுலஞ் செய்தார்.
நாட்டிற் குரிய நற்கலைப் பண்ணை
உயிரெனப் போற்றி உண்மைக் கவிகளை,
நாடு வாழும் பாட லியற்றி
வீடு தோறும் பாடச் செய்தார்...
கலைக்கோட் டத்திற் கள்ளர் புகாது
கவிகளைத் தாமே கண்ணெனக் காத்தார்.
வழக்குமன் றங்களை விலக்கிடச் செய்தார்.
துரோகக் கும்பலைத் தூவென வெறுத்தார் ;
சுதேசியைச் சுதேசி தோழமை பூண்டு,
சுயநல மின்றிப் பொதுநலங் காக்க
ஊக்கினார் மாமுனி ஊட்டிய திறனால் !....
இனித்தம தமுல்கள் இயலா வெனவே,
தேடுவா ரற்ற திருட்டு முரடர்,
ஒன்று சேர்ந்து நின்ற நாட்டை
வணக்க முயன்று வலியிலா தொழிந்தார்...
மாமுனி நாட்டை மறுபடி பற்றிச்
சீகர நீதியைத் திறமையாய் நாட்டி,
வீரமும் கலையும் விதவிதத் தொழில்களும்
வளரச் செய்து, வஞ்சத் தானவர்
கிட்ட வராது சட்டமுஞ் செய்தான்.
அத்தகை மாமுனி ஆற்றிய பணியே
இத்ததி நாமும் இயற்றுத லாமே !

சக்தி

இதுவே நல்வழி.....இயற்றுவோம் எழுமின்
ஆடுவோர் பாடுவோர் அனைவரும் நமது

சுத்தசன் மார்க்கச் சுருதியே செய்மின் !
ஊர்தோறும் நாடோறும் உளந்தொறும் ஊறிச்
சன்மார்க்க நேயந் தழைத்திடச் செய்மின்.
போகந் தவிர்மின் ! போதை தவிர்மின்
பெண்ணும் ஆணும் பிரம சரியம்
காத்துக் காமக் கசடரைத் திருத்துமின்....
பெண்கள் ஆண்களைப் பிழையறச் செய்மின்.
அரக்கர் நம்மை அடக்கி ஒறுக்கினும்
உறுதிகொண் டின்னும் உண்மைக் குழைப்போம்...
உடலினும் உயிரினும் உண்மையே பெரிதாம்.
சிறையிடர் வருக....சிரிப்போம் இன்னலை...
பீரங்கி முன்னும் பேசுவோம் உண்மை...
சுத்த யோகி சுதந்தர மளிப்பான்...
" தைரியம் " என்று சக்திவீ றிடவே
ஆன்ம நேயர் அருட்பணிக் கெழுந்தார்...
ஊர்ஊ ராக உத்தமர் சென்றே
குறித்த பணியைக் குறித்தவா றியற்றி
வேக மாக வெற்றிகண் டாரே !
ஆணவத் தம்பியின் ஆதர வாலே
மேலும் மேலும் வெற்றியெய் தினரே !

21. குண்டலகேசிப் படலம்

காலையில் மாவலி கடுகடுத் தெழுந்தே,
சுதந்தரி யான சுந்தரி தன்னை
வெட்டிப் புதைக்க வெறியுடன் சென்றான்.
அத்ததி வெள்ளி அவனை மறித்தே,
"பழிக்குப் பழிவரும் பழங்கதை யான
குண்டல கேசிபோற் கொலை கொலையாகும்"
என்றலும் "சொல்லதை" என்னமா வலியும்
ஐம்பெருங் காப்பியம் அதனுள் ஒன்றும்
அணியழ கொளிரும் அகலக் கவியாம்
அதனை அரக்கனும் அமர்ந்து கேட்கச்
சொன்னான் இளந்தமிழ்ச் சொல்லணி யாலே :
சீர்த்தி யோங்குந் திருநக ரதிலே,
கல்வியும் வாணிகச் செல்வமுஞ் செழித்து
வாழ்ந்தான், இசைபெறு வாணிக மணியே.
அன்னவன் பெற்ற மின்னிடை யன்னம்,
மதிவளர் முகத்தாள் ; மலர்தரு விழியாள் ;

அமுதம் பொழியும் குமுத வாயாள் ;
புயலும் புகையும் போலச் சுருண்ட
கூந்தல் அழகி ; குண்டல கேசி
என்னும் *பத்திரை, பதுமினி,
சித்திரத் தெழுதொணாத் திருவுடை மாதே !
பருவ மடைந்த திருமா தொருநாள்
கொஞ்சுங் கிளிபோல் கூவுங் குயில்போல்
தோகை மயில்போல் தோழிய ருடனே
மாடத் தின்மேல் ஆடிநின் றாளே.
அத்ததி தெருவில் அரசன் காவலர்
திருட னொருவனைச் சிறைப்பிடித் தேகினர்.
பார்த்தாள் பெண்மணி ; பதைபதைப் படைந்தாள் :
"எழிலார் வாலிபன், இளந்திரு வுடையான் ;
என்மனம் விரும்பு மன்மதன் இவனே !
இவனோ கள்வன் ? இவனென் காதலன் !"
என்று திகைத்து நின்றாள் பாவை.
"காளன்" என்னும் காளையக் கள்வன் ;
அரசருக் கினிய அமைச்சன் புதல்வன் ;
புத்த சமயம் புகுந்து பயின்றும்
அடங்கா மனத்தால் அறமல செய்தான்.
சிறையிட் டிவனைச் சிரம்வாங் கிடவே
வேந்தன் பணித்தான் ; வினைப்பய னென்னே !
கோவின் காவலர் கொண்டுசென் றாரே.
காத லாலே கலங்கிய நங்கை
உடலம் வெளுத்தாள் ; உள்ளஞ் சோர்ந்தாள் ;
நுவலமாட் டாத நோய்கொண் டயர்ந்தாள்.
கண்ணைக் கவர்ந்த கள்வனைத் தவிர
வேறு நினைப்பெலாம் வீணென விடுத்தாள் ;
செல்வ வாலிபர் சொல்லையும் வெறுத்தாள் ;
காதலன் விடுதலை காண வேண்டிப்
போதி நாதனைப் பூசனை செய்தாள்.
பெற்றார் திருமணம் பேசும் போதெலாம்,
"மனத்திற் கிசைந்த மணாளன் ஒருவனே ;
அவனை யன்றி யெவனையும் பாரேன்"
என்றுதன் உள்ளம் நன்றுரைத் தாளே.
மந்திரி முயன்றான் ; மாசறு தந்தையும்
அரசனை வேண்டினான். ஆண்டவன் கருணையால்

*இதுவே அவள் இயற் பெயர்.

காளன் விடுதலை கண்டான் ; கண்டு,
கன்னி மகிழ்ந்தாள், கடிமணம் புரிந்தாள் !
செல்வம் பெருகிய செட்டி மகிழ்ந்தே
"மனையிளஞ் செல்வர் இனிதுவாழ்" கென்றே
இல்லந் தந்தான் ; செல்வந் தந்தான் ;
கவலை யற்றுக் காதலர் நாளும்
புதுப்புதுப் போகம் புசித்தனர் ஆங்கே !
உலகை மறந்தார் ; உடலுக் கினிய
சுகமே நினைந்து, சுதியுடன் இசைபோல்,
இருவரும் அன்பால் ஒருவரே யானார் ;
கணமள வேனும் இணைபிரி யாமல்
கரையிலாக் காமக் கடல்குளித் தாரே.
துய்த்துக் காமந் துடைப்போ மென்னல்
அனலை நெய்யால் அணைப்பது போலாம்.
நினைவறப் புணர்ந்ததை நிக்குவோ மென்பார்,
புனலாற் புனலின் போக்கணைப் பவரே !
வேல்விழி தாக்கத் தோல்வியுற் றிணங்கிக்
காமத் தீயில் வேமிம் மாந்தர்
எத்தனை போகம் துய்க்கினு மென்னே ?
அவர்நுக ரின்பம் அரைநொடி யின்பமே !
நில்லா யாக்கை நிகரவே, யதன்பால்
ஊறுங் காமமும் வேறுபா டுறுமே !
மாந்தர் ஆசை மண்டல மதனில்
விருப்பும் வெறுப்பும், விழைவும் சோர்வும்,
இனிப்புங் கசப்பும், எரிப்புங் குளிரும்
அலைகளைப் போலே ஆடிப் புரளும் ;
இன்றுநே சித்தவர் இன்னொரு நாளே
கொடும்பகை கொதிக்குங் கூற்றுமா வாரே.
காதலும் பொறுமையும் கலந்த நாகன்
என்னுஞ் செல்வன் இயற்றிய சூதால்
கேசியுங் காளனு நேசித் திருந்த
வாழ்விற் கலக்கம் வந்ததும் விந்தையோ ?
கூடலே யுவந்து நீடிய காதல்,
கூடல் சுருங்கி ஊடல் பெருகவே,
ஊடலி னூடே உரைகள் வளரவே,
உரைக ளுடனே குறைகள் கூறவே,
பேச்சுத் தடிக்கவே, பெண்ணணங் கொருநாள்,
"ஒழுக்க மென்னும் உயர்நல முடைய
செல்வன் அருமைச் செல்வி. யானே !

நீயோ, ஒழுக்க நிலைகெட் டலைந்து
கடுஞ்சிறை வருந்திய கள்வன்" என்றாள்.
"நானுன் கணவன், நீயென் மனைவி ;
என்னையா கள்வன் என்றனை பெண்ணே ?
பாதகி, உன்னைப் பழிவாங் குகிறேன்"
என்றுட் சினத்தால் எரிமனக் காளன்,
போலிச் சிரிப்பாற் பொழுதைப் போக்கிக்
காலம் பார்த்துக் கண்விழித் தானே.
உட்சினங் கொண்ட உறவெத் தனைநாள் ?
உதட்டு நேயமும் உட்சின முறுவலும்
புழுவுளே துளைத்த பழமெனப் போமே !
காளன் ஒருநாள், "கனியிளம் பாவாய்,
செல்வச் சீமான் செல்விநீ ; யின்றுன்
அணிமணி வரிசையாய் அணியுற வுலகின்
அரம்பைபோல் என்னுடன் அழகாய் வா வா"
என்றனன் ; சரியெனச் சென்றனள் பேதை !
காளனும், சரிகை கட்டித் தன்னை
மாரவேள் போலவள் மதித்திட நின்றான் !
குண்டல கேசியின் கோமள வனப்பைக்
கண்டு கள்ளக் களிநகை பூத்து,
"கண்ணே, அழகுக் கரும்பே, உத்தமப்
பெண்ணே, எனது பெருமட மானே,
துயர்ச்சிறை நீங்கித் தூக்கு மேடையைத்
தப்பினேன், போதி அப்பன் அருளால் !
ஆதலால், இன்றே அவனை வணங்கிப்
படையல் வைக்கப் பருவதச் சிகரம்
ஏறிச் செல்வோம், என்னுடன் வா"வெனக்
கூட்டிச் சென்றான் ; கோதைசென் றாளே !
மலைமுடி மேலே, மணாளர் சென்றதும்,
சிலைபோற் சற்றே சிந்தனை செய்து,
காதலன் முகத்திற் கடுமை காட்டி,
"கள்ளீ, நீயெனைக் கள்வன் என்றாய் !
ஆம்யான் கள்வன், அழகுச் செருக்கீ.....,
மண்டைக் கருவம் கொண்ட பேதையே !
கள்வன் இன்றுனைக் கொள்ளை யடித்துக்
கொல்வான், கொடுமனக் கசடீ" என்றான்.
தீப்பொறி பறக்கும் சினக்கண் உருட்டி
நிற்குங் கணவனைப் பொற்கொடி பார்த்தாள் ;
சற்றே கலங்கிச் சங்கடப் பட்டாள்.

பிறந்தன் னுள்ளே பேசிக் கொண்டே,
"கணவனைப் பணிதலே கற்பிற் கழகாம் ;
தேவரீர் செய்க திருவுளம் ; ஆனால்,
என்னைக் கொல்லுமுன் என்னுயிர்க் கணவரே,
தம்மை யடியாள் மும்மை சுற்றி
வணங்கி நிற்கும் வரந்தர வேண்டும்"
என்றலுங் ,கள்வன் இணங்கினன் ; அந்தக்
கள்ளியும் வலம்வரக் காட்டி, அவனைத்
தந்திர மாகத் தள்ளினள். அந்தோ......!
"புத்தா சரணம்......போதி நாதா,
வஞ்சனை செய்ய வந்தேன் ; என்னை
வஞ்ச நினைவே வதைத்தது ; செய்த
தீவினை, விளைத்தது திப்பயன் எனக்கே ;
மன்னித் துனது மலரடி சேர்ப்பாய்"
என்று காளன் இறைவனை நினைந்தே,
இருண்ட மடுவி லுருண்டு பயங்கர
மௌனப் பாழில் மறைந்தொழிந் தானே !
"தற்கொல் லியினை முற்கொன் றேன்" என
ஒருநொடி நகைத்தாள் ! மறுநொடி, "அந்தோ !
கணவனைக் கொன்ற கள்ளியா னேனே.
என்ன தீவினை யியற்றி முடித்தேன் ?
இந்த வினைப்பழி என்னை விடுமா ?
என்ன செய்வேன், எனது நாதரே ?
நானும் உம்முடன் ஏனிக் கணத்தில்
விழுந்துசா காமற் கழுந்துபோ லிருக்கிறேன் ?"
என்று கண்ணீர் இறைத்தாள் பேதை.
அந்தியில் புத்த நந்தி முனிவர்
புத்தசங் கத்திற் புகுவெனத் தூண்டினர்.
பிறகவள் உலகிற் பிறந்த பயனை,
அடைந்தே சாதல் அழகெனக் கொண்டாள்.
பிறந்தவ ரெல்லாம் இறந்து வினையாற்
பிறந்து பிறந்துயிர் துறந்துமண் ணுவார்.
சுற்றும் உலகில், சூழும் இயற்கையில்,
கற்றும் கேட்டும் கண்டும் பெற்ற
பொருளிற், செல்வ போக மதனில்,
எதுவே நிலையாம் ? எல்லாம் ஓட்டம் !
இன்றுளார் நாளை யில்லை யாவார் !
குழந்தை யிறந்து குமரி யாகிக்
குமரி யிறந்து குலமக ளாகிக்

குலமகள் தாயாய்க் குலச்சுமை தாங்கித்
தாயும் பாட்டியாய்த் தளர்ந்து தளர்ந்து,
புதைகுழிக் கிரையாய்ப் போய்மண் ணுவதே
உடலின் கதையாம் ! உயிரின் கதையோ.....
மனத்தி லடைந்த மாசுக ளெல்லாம்,
பற்றுப் பெருகிப் பந்த தொந்த
விகாரமாய் வளர்ந்து, வெவ்வினை பெருகி,
சித்தமும் புத்தியுஞ் சிதைந்து கெட்டு,
மோகங் கொண்டு மூட மதியால்
ஆவியும் விடுதலை அடைவதிங் கிலதால்,
மீண்டும் கருமம் வேண்டும் பலனை
அனுபவித் தனுபவித் தயர்வதை எண்ணின்,
ஆஆ,..........துன்பம் ; ஆஆ,.......பிறவி........!
வேதனை தப்பி விடுதலை பெறவே
உடலையும் உலகையும் உள்ளே துறந்து,
அருளார் வாழ்வை அடைந்த சிலரே
உத்தம முத்தர் ! உற்றவர் வழியில்
செல்வேன் ; இந்தச் சென்மத் தொல்லையைக்
கொல்வேன் ! என்று குண்டல கேசி
ஆரியாங் கனைகள் அருகனை வணங்கும்
தவமடஞ் சேர்ந்துபின் சத்துவ போதராம்
புத்தர் சேவடி புகலெனப் புகுந்தாள்.
புத்த பிக்குணி, புனித விரதையாய்
மாசு மறுவற மனதைக் காத்துப்
புலன்களை யடக்கிப் புத்தியை வென்று,
வாழ்வை யெல்லாம் வன்றவ மாக்கினாள்.
வெயிலுடன் மழையும், வெப்புடன் குளிரும்,
பசியும் விருந்தும், பழிப்பும் புகழும்
சமமெனத் தாங்கித் தன்னூண் சுருக்கிக்
காற்றையே நோக்குங் கப்பலைப் போலே
உயிரைச் சார்ந்த உடலைப் போலே
சுத்த சித்தனும் புத்த தேவனின்
அருளையே சார்ந்து மருளை விலக்கினாள் !
திக்காய் பவர்புகைத் திங்கு நோக்கார் ;
நோயர் மருந்தின் கசப்பை நோக்கார் ;
சுடச்சுட நோற்குந் தூயவர் அதன்பால்
வருமிடர் நோக்கார் ; வருத்தம் பாரார் ;
நல்ல தாகு நலமே நோக்கார் ;
தீய தாகுந் தீமையே நோக்கார் ;

நலந்தி தந்து பொலங்கொள் ரமதை
காக்குந் தாயர் கனவுறத் தவஞ்செய்
சங்க மெய்திய நங்கை கேசி,
வினைகெட, வினையின் விளையுளை கெடவே
ஆசா பாசம் அறுந்துக நோற்று,
மாசறு மனமும் தேசுறு ஞானமும்
பெற்றாள் ! புத்த பிரானையுங் காணப்
பெற்றாள் ! பிறப்பின் பெரும்பயன் யாவும்
பெற்றாள் !—பெரிய பிறவாப் பெருமையே !
கதையுஞ் சரியெனக் கடிந்தின மாவலி
இன்றொரு சூழ்ச்சியை எண்ணினன் மாதோ ?

22. வளையாபதிப் படலம்

கொடுமனக் கணவரின் கோபப் புயலால்
சுந்தரி யனைய தூயநன் மாதர்
வருந்திய கவலை மாறிட வேண்டியே
சங்கங் கூட்டிச் சத்திய போகர்
வளையா பதியால் வருந்திய பத்தினி
கதையைச் சொன்னார் கவிக்குயி லெனவே !
சக்தியா ழிசையுந் தமிழைப் பருகவே.

வணக்கம்

நினைவாய் மனமே, நினைவாய் மனமே,
நினைக்க நினைக்க நெஞ்சினில் அமுதாம் !
இன்பக் கடவுளை, இன்னுயிர்க் குயிராம்
அன்புக் கடவுளை ஆர்வங் கொண்டு
நினைவாய் மனமே, நித்தலும்
போற்றிப் பூசனை புரிவாய் மனமே !
புறத்தே திரியும் புலன்களைத் திருப்பி
அகத்தே யடக்கி அமைதிகாண் பெரியார்,
வானும் புவியும் வாழ்வின மெல்லாம்
"அதுமயம்" என்றே அறியும்,
பொதுநிலைப் பொருளைப் போற்றுதி மனமே !
போற்றிப் பூரணம் பொலிவாய் மனமே !
சரண்புகு மனமே, சரண்புகு மனமே,
வரந்தரு இன்ற பரம்பொருட் சக்தியைச்
செல்வச் சிறப்பு நல்குந் திருவை,
வெற்றி யளிக்கும் வீரமா காளியை,

அறிவுந் திருவும் அருளும் வாணியை,
தவக்கன லளிக்குஞ் சிவக்கன லொளியைச்
சரண்புகு மனமே, சரண்புகு மனமே !
இஃது,
தன்சரண் புகுந்த தருமபத் தினியைக்
கருணை மிக்க காளிமா தேவி
அருளுரு வான ஔவையின் மூலம்
காத்துக் கவலை தீர்த்த கதையே ;
வளையா பதியாம் வயிர வாணிகன்
வளைந்து கற்பை வணங்கிய கதையே ;
மாண்புற வழங்கி மறைந்த கதையே ;
நல்லறஞ் சொல்லுந் தொல்பெருங் கதையே !
உலகுள் ளளவும் நிலவத் தமிழர்
அமுதெனப் பருகி அகமகிழ் வெய்த
வல்லான் எழுதிய நல்லசித் திரம்போல்,
காவிய மாகிய ஓவியஞ் செய்வாய் !
தெள்ளிய நடையும், ஒள்ளிய பயனும்,
ஆழ்ந்த கருத்தும் அமைவுறப் பாடி,
உள்ளன் புடனே உன்கடன் புரிய,
கடமையில் வெற்றி கண்டு களிக்க,
வளையா பதியின் மாகதை யிதனை
இறைவியை எண்ணி எழுதுகோல் ஊன்றித்
தீட்டுவாய் மனமே, நாட்டுவாய் புகழே !
திருவருட் சார்புடன் செய்கடன்
செய்தால் வெற்றி திகழுமென் மனமே !,

காவிரிப்பூம் பட்டினம்

காவிரி வாழ்க, காவிரி வாழ்க,
காவிரி பசுமையாற் பூவளம் பெருக்கும்.
காவிரி வாழ்கவே, காவிரி வாழ்கவே !—
பொங்கும் பொன்னியின் சங்க முகத்திற்
பொலியும் செல்வப் பூம்புகார் வாழ்க !
பழம்பதி யான பட்டினம்....
புலவர் பாடிய பூம்பட் டினமே !
தென்னா டெல்லாந் தன்னா டாக்கி,
வடநாட் டாரை வணக்கி, இமயப்
பொருப்பின் பிடரிற் புலிக்கொடி பொறித்து,
நந்தமிழ் வீரரின் முந்திய பெருமையை
நாட்டிப் பகைவரை வீட்டி, நன் னீதிச்

செங்கோ லோச்சிய திருமா வளவன்
ஆக்கிய வளநகர், அருநிதி
குவிந்து கிடக்குங் குபேரபட் டினமே !
கலங்கள் வருவதும், கலங்கள் செல்வதும்,
சோனகர், யவனர், சீனர் ஆதியாம்
அன்னிய வாணிகர், ஆற்றல் படைத்த
நந்தமிழ் வாணிகர் நயக்கும் பண்டம்
ஆவலாய் வாங்கிக் காவலன் வாழ்கெனப்
பொன்னை அள்ளிப் பொழியும் காட்சியும் ;
பன்மணி முத்து பவளந் தானியம்,
உண்ணும் பண்டம், உடுக்கும் உடைகள்,
நாட்டில் விளைந்தவை, வீட்டிற் செய்தவை,
துய்த்து மிஞ்சிய தூய பொருட்குவை
மரக்கல மேற்றி வளர்பொருள் வாணிகர்
துறைதுறை சென்று நிறைநிறை செல்வம்
கொண்டு வந்து குவிக்குங் காட்சியும் ;
நெய்தற் பறையி னிளிசை விக்கிப்
பரதவர் ஆடும் பரவசக் காட்சியும் ;
வெள்ளியும் பொன்னும் வெறிநடம் புரியும்,
கடைத்தெரு விடையே கலகல வென்று
வணிகர் வருவதும், வணிகர் செல்வதும்
வண்டி வண்டியாய் வளம்பெறு பொருள்கள்
கொண்டு வருவதும், கொண்டு செல்வதும்,
பண்டமாற் றுகளின் பல்வகைக் காட்சியும் ;
நவதானி யங்கள் குவிதரு காட்சியும் ;
"இறைதுணை ஒன்றே, இரண்டு மூன்" றெனவே,
அளந்து கொட்டும் ஆணவக் காட்சியும் ;
அணியணி யாகத் துணிமணிக் காட்சியும் ;
போகப் பொருள்களின் பொலிவுறு காட்சியும் ;
வாசனைச் சரக்குகள் வீசுநன் மணத்தைத்
தென்றல் அள்ளித் திரியுங் காட்சியும் ;
கடலை வகையும் காய்கனி கிழங்கும்
பன்னிறங் காட்டும் இன்னியற் காட்சியும் ;
நவமணி வில்விடு நகையணிக் காட்சியும் ;
குழல்யாழ் மத்தளங் கொம்புகள் பறைகள்
இசைபெறு தமிழரின் இசைநலக் கருவிகள்
பளபளப் பான படைக்கல வகைகள்,
தச்சர் கொல்லர் தட்டார் சேணியர்
கன்னார் குயவர் காருகர் சிற்பிகள்

கலைச்சிறப் புடனே விலைபெறச் செய்த
நயம்பெறு பொருள்களை வியனுறக் காட்டி
விளம்பரஞ் செய்து விற்குங் காட்சியும் ;
திரைகட லோடியும் தேச தேசமாய்க்
கொண்டு விற்றும் கோப்பெரு வாணிகர்,
பாடு பட்டுப் பணத்தைச் சேர்த்து,
வீடு செழிக்க, வீட்டினும் பெரிய
நாடு செழிக்க நன்மன துடனே
அறவினை செய்யும் அன்புக் காட்சியும் ;
காலும் கலமும் கலையார் தொழில்பல
புரிந்து வணிகர் பொற்செழிப் போங்கி
வாழும் மாட மாளிகைக் காட்சியும் ;
உயிரைப் போலப் பயிரைப் போற்றிப்
பயிரைப் போலப் பழந்தமிழ் போற்றிப்
பழந்தமிழ் போலப் பழந்தமி ழீன்ற
பரமனை நாளும் பரவிப் பாடித்
தாளாண்மை மிக்க வேளாளர் தெருவில்
பத்தியும் பணியும் ஒத்தநற் காட்சியும் ;
அழகுக் கலைகளின் எழில்பெறு காட்சியும் ;
குழலும் யாழுங் குரலும் முழவும்
கூடிக் குழையக் குயிலின மென்னப்
பாடகர் பாடப் பரதநாட் டியந்தேர்
நாடக மகளிர் நறுங்கலை யின்பம்
அள்ளிப் பரப்பும் அரங்கின் காட்சியும் ;
கலைகளை மாணவர் கற்குங் காட்சியும் ;
அரியநன் னூல்களை ஆக்கிய புலவர்
படித்து விளக்கும் பண்டிதக் காட்சியும் ;
நடித்து விளக்கும் நவரசக் காட்சியும் ;
நாட்டை உயர்த்து நாடகக் காட்சியும்
இனிவரும் வீரர் இளமையி லினிதே
கல்வியுந் தொழிலும் கசடறக் கற்றுத்
தேகப் பயிற்சியுஞ் செய்யுங் காட்சியும் ;
அந்தணர் தெருவின் அமைதியாங் காட்சியும் ;
வளர் தமிழ்க் கொடிகள் வானை யளாவிச்
செருக்குடன் ஆடுந் தெருக்களின் காட்சியும் ;
முரசு கொட்டி முதுபுகழ் வீரர்,
அரசவாழ்த் துடனே, அதிர் நடை பயின்று,
பூமியை வெல்லப் புடைபெயர் காட்சியும் ;
தேர்பரி கரியினம் ஊர்திருக் காட்சியும் ;

இடம்வல மென்றே எடுத்தடி பெயர்த்துப்
படையணி வகுத்துப் பாய்ந்துபாய்ந் திளைஞர்
போலிப் போர்கள் புரியுங் காட்சியும் ;
ஆண்மை ஆண்மை ஆண்மையென் றேதும்
நிமிர்நடைச் சியர், நீண்டுயர் தோளர்
அகன்ற மார்பினர் அறங்காப் பாளர்
அரச வீதியை அணிசெய் காட்சியும் ;
முரசுடன் மேக முழக்கமு மியங்கும்
கோபுர மாளிகை நூபுர மார்க்க
அணிமணிப் பாவையர் ஆடுங் காட்சியும் ;
சோலையில் உலவியுந் தோணியிற் சென்றும்
காதலர் கூடிக் களிக்கும் காட்சியும் ;
சைவ வைணவ சமண பௌத்தக்
கோயிலில் அடியார் குழுமிய காட்சியும் ;
வீடு தோறும் விருந்தின் காட்சியும் ;
தோரணங் கட்டிய வாரண வீதியில்
தேர்வல முடனே ஊர்வலக் காட்சியும் ;
அரசவை நிகழும் அரண்மனைக் காட்சியும் ;
தாங்கி, நல்லிசை ஓங்கிய பூம்புகார்
சிறப்பென் சொல்வல் ! சேர மாகவி
இளங்கோ பாடிய வளம்பெறு நகரே !

வயிர வாணிகன்

வீரர் வாளும், வேளாண் கலப்பையும்,
வணிகர் தராசும், வளஞ்செய் புகாரை,
வெண்குடை தாங்கிப் பண்புடன் ஆண்ட
சோழ னுக்குச் சுடர்முடி சூட்டும்,
மாண்பு பெற்ற மன்னர் பின்னோர்,
நாட்டை வளர்த்த நாட்டுக் கோட்டையார்,
நகர்வள மாக்கிய நகரத் தார்கள்,
*செட்டுத் தொழிலார் செட்டி மார்கள்,
திரைகட லோடித் திரவியஞ் சேர்த்து
நல்லறஞ் செய்யுஞ் செல்வக் குபேரர்,
புகாரை அவரே பொன்னுக் கினரே !
அவருள்,
பட்டினப் பாக்கம் பரவிய புகழோன்,
செட்டிமார் நாட்டின் சிரோமணி யாவான்,

* வாணிகம்

வளையா பதியெனும் வயிரவா ணிகனே !
அன்னவன்,
கொற்கை முத்தும், கொச்சி மிளகும்,
செந்தமிழ்ப் பொதியச் சந்தனக் கட்டையும்,
மதுரைச் சேலையும், மலைவளர் ஏலமும்,
சேலம் பட்டும், கூல வகைகளும்,
தொழிலா ளரிடந் தொகைக்கு வாங்கிக்
கட்டுக் கட்டாய்க் கப்பலில் ஏற்றி,
சிங்களம் கடாரம் சிங்கபூர் மலயம்
சாவகத் தீவெலா மேவித் துறைதுறை,
குலமுறைப் படிக்குக் கொண்டுபோய் விற்றுப்
பைபை யாகப் பணக்குவை சேர்த்தான் ;
சென்றநா டெல்லாம் சிவமுந் தமிழும்
செழிக்கச் செழிக்கச் செல்வம் பொழிந்தான் ;
பெருந்தன வணிகன், வருந்திய பேர்க்குத்
தருந்தன வணிகன், தருமக் கிழவன் ;
கடவுட் கோயிலுங் கலையின் கோயிலும்
எண்ணறக் கட்டிய புண்ணியன் அவனே !
"ஒன்பது கோடிப் பொன்படை நாரணன்"
என்றும் உலகில் இசைபெற் றேனே !
இத்தகை வணிகனுக் கிருந்த ஓர் குறை
குடிவேறு செய்யும் பிடிவாத மொன்றே ;
கேட்பார் பேச்சைக் கேட்டுக் கொண்டு
தனக்குப் பட்டதைச் சாதித் தெளிதில்
வளைந்து தராத மதியுடை யானுய்,
வளையா பதியென வழங்கப்
பெற்றுன், இந்தப் பெரும்புக ழோனே !

அந்தரி

வளமிகு வயிர வாணிக னுக்கு
வாழ்க்கைத் துணைவியர் வாய்ப்புடை இருவர் ;
ஒருத்தி அந்தரி ; ஒருத்தி பத்தினி.
இருவர் குணமும் எதிரெதி ராமே !
அந்தரி என்பவள் சுந்தரி ; தந்திரி ;
செல்வச் செருக்கி ; செட்டிச் சீமான்
ஈன்ற புதல்வி ; தான்றன தென்னும்
இறுமாப் புடையாள் ; எதிரே பேசும்
நாத்தடிப் புடையாள் ; ஆத்திரக் கள்ளி ;

வளையா பதிபோல் வளையா மனையே !
அன்பனை மனப்படி ஆட்டி வைக்கும்
சாகசக் காரி ; சக்களத் தியுடன்
முன்னே நகைத்து முகமன் பேசிப்
பின்னே ஏசிப் பிரிவினை செய்யும்
வஞ்சகி ; அவளிடம் வளையாச் செட்டியும்
அச்சங் கலந்தவன் என்புகொண் டானே !

பத்தினி

அந்தரி மிக்க சுந்தரி பேறும்
பிள்ளைப் பேறு பெறாமை யாலே
பொருந்துய ரடைந்து பூம்புகார் வணிகன்,
மற்றொரு மனைவியை மணக்க விரும்பினன்.
பெருஞ்சாத் துடனே பெயர்ந்தொரு நாளில்
பாண்டி மதுரைப் பதிக்கு வந்து,
நல்வே ளாளர் நண்பன் வீட்டில்
விருந்தாய் வயிரன் இருந்தான் மாதோ !
அந்த நண்பனின் அழகிய செல்வியே
பத்தினி என்னும் பதுமினிப் பெண்ணாம் !
அவளைக் கண்டதும், அவளுங் கண்டதும்,
மலர்ந்த கடைக்கண் கலந்து பேசிக்
கருத்துங் கருத்தும் பொருந்த முறவே,
காத லாகிய கனலெழுந் ததுவே !
தமிழர், சைவர், சமரச நண்பர்
சம்மதப் படியே தம்மன மொன்றிய
காதலர் இருவருங் கடிமணம் புரிந்து,
பூம்புகார் மேவும் பொன்மா ளிகையில்
மங்கல மான மனையறங் காத்தார்.
மாசறு நல்லார் மதுரைவே ளாளர்
மனையிற் பூத்த மதிமிகு நல்லாள்,
உள்ளத் தழகே உடலிற் பொலியும்,
கற்பிற் சிறந்த பொற்புடைத் திருவே !
தலைவனைத் தன்னுயிர் நிலையென மதித்தே,
உடலுயிர் மனந்திரு வுள்ளம் வாழ்வெலாம்
பக்தி யுடனே பதிக்கே யீந்தாள் ;
ஆடல் பாடல் அழகெலாம் அவனை
மகிழ்வித் திடவே மாசறப் பயின்றாள் !
“கண்ணே மணியே கட்டிக் கரும்பே,
அழகே அணியே ஆசை அமுதே,

பாண்டிநா டீன்ற பச்சிளங் கிளியே,
செந்தமிழ் முத்தே, சிந்தா மணியே,
என்புது வாழ்வின் இன்பமே !" யென்று
கொஞ்சிக் குலாவுங் கொழுநனைப் பத்தினி,
"அன்பே, அறிவே, ஆருயிர்த் துடிப்பே,
என்னுயிர் வாழ்வே !" என்று நாளுமே
பரிந்து போற்றிப் பண்புடன் பணிந்து,
தாளாண் மைமிகு தலைவ னிடமே
தன்னை வைத்துத் தலைவிக் குரிய
கடன்முறை யெல்லாங் காத்துவந் தாளே !

கடன் முறை

வள்ளுவர் குறளை வழுவறக் கற்றுள் ;
கோழி கூவுங் குரல்கேட் டெழுந்து,
முகத்தைக் கழுவி, முதல்வ னுடனே,
ஏழிசை யோங்கும் யாழிசை கூட்டி,
இறைவனைப் பாடி, இல்லற வாழ்வில்
அருள் மணம் பரப்பி, ஆசை கொண்டு,
சேடிய ருடனே வீடு முழுதும்
கண்ணுடி போலக் கழுவி மெழுகிச்
சுத்தம் செய்து, துடைப்பன துடைத்து,
வைக்கு மிடத்தில் வைப்பன வைத்தே.
கோல மிட்டுக் கொய்மலர் நாட்டித்
தோய்த்துக் குளித்துத் துணைவ னுக்கு
வெந்நீர் வைத்து விரும்பி யழைப்பாள்,
நாயகன் ஆங்கே நன்னீர் ஆடி,
புத்துடை யணிந்து பூசனை புரிவான்.
வணக்க வொடுக்கமாய் வழிபாட் டினிலே
பத்தினித் தெய்வம் பயின்று மகிழ்வாள்.
மலர்களைத் தூவி மணந்தரு கனிகளைத்
தெய்வநி வேதனஞ் செய்தொளி காட்டிப்
பதிப்பா டல்களைப் பாடியா ழுடனே
தோத்திரஞ் செய்தபின், சுதியுடன் இசைபோல்
இணைந்து வாழும் இருவரும் சேர்ந்து
பாலுங் கனியுங் காலையில் உண்பார்.
அலுவலாய்க் கணவன் அகன்றபின் பத்தினி,
அமுதக் கையாள், அட்டிலிற் புகுந்தே
அன்புச் சுவையுடன் அறுசுவை யாக்கிக்
கணவன் வரவே கனிநகை பூத்து,

"வாரு"மென்று வரவு கூறி,
கைகால் முகத்தைக் கழுவச் செய்து,
அமுதை நிவேதனம் ஆக்கிய வுடனே
இருக்கையி லிருத்தி, யிலையைப் பரப்பி,
நன்னீர் வைத்து, நாதனை வணங்கி,
அன்புடன் அறுசுவை அமுதம் வைத்துக்
குறிப்பை யறிந்து கொடுப்பன கொடுத்து,
"மென்றுநன் றுண்பீர்" என்றிதஞ் சொல்லிச்
சுறுசுறுப் பாகச் சுவையா ரமுதம்
ஊட்டுவாள் ; கணவன் உண்டபின் அவளும்,
பசியள வறிந்து புசித்தெழுந் துடனே,
அட்டுலை மெழுகிச் சட்டிகள் கழுவி
முடித்துக் கணவன் படிப்பதைக் கேட்பாள் ;
சற்றிளைப் பாறிச் சந்தியிற் கணவன்
உரிய தொழிலில் ஊக்கங் கொள்வான்.
பாங்குள உண்மைப் பத்தினித் தெய்வம்
வீட்டிற் கான வேலைகள் செய்வாள் ;
துணைவன் அணிமணி சுத்தமாய் வைப்பாள்,
பாசி கோப்பாள்; பவளங் கோப்பாள்,
இல்லணி செய்வாள், ஏவு முறையில்
ஏவ லாளரை ஏவிக் கவனமாய்
இடிப்பன இடித்து, வடிப்பன வடித்து,
திரிப்பன திரித்துச் சேர்ப்பன சேர்த்துக்
குறைகளை யறிந்து நிறைவுறச் செய்வாள்.
*விண்மணி மறைந்ததுங் கண்மணிப் பாவை,
திருவிளக் கேற்றி, நறுமலர் சூட்டி,
"ஒளிமயக் கடவுளே ! உன்னருட் சுடரால்
எங்கள் வீடு மங்கலம் பொலி"கென
மகிழ்வுற வணங்கி மகர வீணையைத்
தடவும் போது, தன்னவன், மாலை
அனுட்டா னங்களை அமைவுற முடித்தே,
வந்து தெய்வச் சிந்தனை செய்வான்.
அகங்குழைந் திருவரும் ஆண்டவன் புகழைப்
பாடிப் பாடிப் பரவச மாகித்
தீபா ராதனை செய்ததும், பாலுடன்
சுவைதரும் உணவைச் சுருக்கமாய் முடித்து,
நவையறு புலவர் நவின்றநன் னூல்களை
அறிந்து படித்தபின், அகவிவ காரம்

* சூரியன்

பேசிக் குடும்பப் பிழைகளைத் திருத்திப்
போக்குவ போக்கி, ஊக்குவ ஊக்கி,
விட்டுக் கடமை நாட்டிய பின்னர்,
அமைதியாய் மீண்டும் அருளை வணங்கி
உள்ளங் களிக்கப் பள்ளிகொள் வாரே !
இந்த முறையே இல்லற வாழ்வின்
இன்ப மெல்லாம் அன்பா லெய்தி,
நிறைமுறை யான நேயம் பேணி
வாழ்ந்தார் பத்தினி வயிரவா ணிகரே !
"ஒத்துக் கூட முத்துக் குழந்தை"
என்னும் பழமொழி இனிதுற வாணிகன்,
மனத்திற் கொண்ட மகவுக் கவலை
தீரப் பத்தினி திங்கள் இரண்டாய்க்
கருத்தரித் துடம்புங் கலைமதி போன்றாள்.
மகிழ்ந்த செட்டியின் மனத்தைக் கலைக்கக்
கொல்லும் பொறாமை கொளுத்திய தீயால்,
அந்தரி செய்த தொந்தரை யென்னே !

உலகியல்பு

உலக மென்பது பலகுண நாடகம் ;
ஒவ்வோ ருயிரும் ஒவ்வோர் பாத்திரம்.
ஆண்பெண் ணியல்புகள் ஆயிரம் வடிவாய்,
வாழ்வின் அரங்கில் வரிசை வரிசையாய்
நவரச முணர்த்தி நடித்துச் செல்லுமே !
ஆறும் காற்றும் அலைவது போன்றே
விகார மனமும் வேறுபட் டலைந்து,
பலவினை யான பயிர்களை வளர்த்து,
நலந்தீ தென்னும் பலந்தா னுண்ணுமே !
ஆணவ நிலத்தில் ஆசைவே ரூன்றி,
எனதியா னென்னும் இருங்கிளை விரிந்து,
காமக் குரோதக் கவடுகள் விட்டுப்
பொறாமை முட்கள் பொம்மெனப் பெருகி,
அலைமன நினைவாம் இலைகள் பொதுளி,
மலர்ந்து மலர்ந்து வாடி யுதிரும்
கனவுகள் பூத்துக் கருமமாய் விரிந்துபின்
கசப்பும் இனிப்புமாம் கனிகள் மல்கி,
காலக் காற்றில் ஓலமிட் டாடிப்
பட்டுண் டிறப்பதும், வெட்டுண் டிறப்பதும்,
வினைவிதை யாலே மீண்டுந் தளிர்ப்பதும்,

வாழ்க்கை மரத்தின் வழக்க மாமே !
எத்தகை மாந்தர் நத்திய வாழ்விலும்,
இருவினைப் போர்கள் இயல்பாய் வருமே !
உத்தமி யான பத்தினி வாழ்விலும்,
சிலகால் இன்பஞ் சிறக்க நிகழ்ந்ததும்,
பலகால் துன்பம் படர்ந்ததைக் கேளிர் !

மூத்தாள் மூட்டிய தீ!

வயிரன் மூத்தாள், வைரங் கொண்ட
படுசக் களத்தி ; பத்தினி மேலே
குற்றங் காண்பதே குலத்தொழி லானாள் ;
நெருப்பு நிறத்தாள், நெருப்புக் கண்ணாள்,
அன்பு நடிப்பாள், ஆசையாய்ப் பேசுவாள்,
முதலைக் கண்ணீர் முன்னே வடிப்பாள்,
பின்னே ஆளைப் பேய்போல் அழிக்கச்
சூழ்ச்சி செய்வாள், சூதுவா தெல்லாம்
உருட்டி வார்த்த உருவே யானாள் !
கணவனும் புதிய கண்மணிப் பாவையும்
ஒன்றி நின்று நன்றே வாழும்
வெற்றியைக் கண்டு பெருமூச் செறிந்தவள்,
குட்டிக் கலகம் கோடி செய்தவள் ;
எதற்கெடுத் தாலும் இடித்துப் பேசிக்
குலகோத் திரங்களின் கொள்கை பற்றி,
நலத்தைத் தீதென நாப்பறை யடிப்பவள் ;
தனக்கு மகவிலா மனக்குறை யுள்ளாள்.
சக்களத் திக்கருத் தரித்ததை நாளும்
எண்ணி யெண்ணிப் புண்ணா னாளே.
அவளுக் கண்ணன், அழிநடைச் செல்வன்,
சாத்தன் என்னுந் தன்னலப் புலியே.
அவனைக்
கலந்து கொண்டு காரியந் தொடங்கிப்
பதியின் மதியைப் பறித்தவ மாக்கிப்
போலி வைத்தியர், போலிச் சோதிடர்,
காசாசை கொண்ட மோசக் காரர்,
சாத்தான் இனத்தார் சகலரும் கூடி,
“அந்தரிக் கின்னும் அதிட்ட முள்ளது ;
பிள்ளைப் பேறு பெறுவதும் உறுதி ;
அடுத்த தையில் ஆண்கு ழந்தை
முத்துப் போலே முன்றிலில் ஆடும் ;

அந்தக் குழந்தை ஆளுமே உலகை ;
மாண்புறு வாணிகர் மரபினில் வந்த
பொற்கொடி அந்தரி புதல்வ னுக்கே,
வழிவழி வந்த கொழுவிய செல்வம்
உரிய தாகும் ; பெரிய குடும்பம்,
இதுவரை இனத்தார் ஏகோ பித்து
வாழ்ந்த குடும்பம், மாசாத் துவரின்
செல்வக் குடும்பம், செட்டியார் குடும்பம் ;
இன்னொரு சாதி ஈன்ற மகளை
வீட்டிற் குள்ளே விடுவதே பிழையாம் ;
பிறசா தியிலே பிறந்த பெண்ணை நீ
கூடி வாழும் கொள்கையை ஒப்போம்.
உனக்கே என்றும் உரிய மனைவி
அந்தரி ஒருத்தியே ; அழைத்து வந்த
காமக் கிழத்தியைக் கட்டுடன் விலக்கி,
அவள்பெறு மகவை அவளுடன் ஒதுக்கி,
மனங்கொண் டினத்துடன் மகிழ்வுற வாழ்வாய்''
என்றுரை பேசி, ''இரண்டு நாளில்,
காரிய முடி'' யெனக் கட்டுடன் சொன்னார்.
பாச நெஞ்சம் பதறிச் சற்றே,
வாணிகன் அந்தரி வயப்பட் டானே !
தனியே கணவனைத் தன்வசப் படுத்தி,
முல்லை போல முறுவலைக் காட்டி,
கட்டி முத்தம் கணக்கறத் தந்து,
அகநட் பில்லா முகநட் பாடி,
''உயிரே !'' என்றுதன் உடலோ டணைத்துக்
கண்மதி யிழந்த காம மயக்கில்,
பெண்மதி கொண்டவன் பேதுறச் செய்தாள் ;
''ஆசைக் கணவரே ! அன்பு மணாளரே !
அமிசசக் கரமும் ஆரூ டங்களும்,
ஐயர் வாக்கும், அகத்தியம் பலிக்குமே.
பொன்போல் எனக்குப் புதல்வன் பிறப்பான்
என்று சொன்னபின், இனிக்குறை யென்னே !
மனமகிழ்ந் தென்றும் இனமுடன் ஒன்றி
இருப்பதே நமக்கு விருப்புறு நலமாம்.
அண்ணல் சாத்தன் அன்பு மிக்கவன் ;
இதமாய்ப் பேசி இனத்தார் சினத்தை
மாற்றி யிருக்கிறான். வாய்ப்புள போதே
உரியதைச் செய்தல் உமக்குங் கடனே.

பிரிய மறுளா, பேசு" மென் றுளே.
"கண்ணே ! உன்சொல் கட்டிமாம் பழமே !
உறவின் முறையார் உரைப்பதுந் தகவே ;
ஆயினும்,
பல்லோர் முன்னே நல்லோர் வாழ்த்த
மணந்த பத்தினி மங்கல மனைவி,
எனக்கே உயிர்க்கும் இனிய உத்தமி ;
அவளை எப்படி......ஆ ! அதை நினைக்கினும்
துடிக்குமென் உள்ளம் வடிக்குமே கண்ணீர் !"
என்றலும் செட்டி, "நன்று சொன்னீர் ;
அவளார் ? நாமார் ? அன்னியச் சிறுக்கி,
மாயக் காரி, மருந்துக் காரி,
முகமிக மினுக்கி, மோகினி ; உம்மை
வலைக்கண் வீசி வாகாய்ப் பிடித்து,
நல்லவள் போல நாடகம் நடித்து,
உள்ளதை ஒளித்தே கள்ளஞ் செய்து,
மரபுள செல்வம் வாரிச் செல்ல
வந்திருக் கின்றுள்—அந்தரிக் கெதிராய்,
நேர்மை யாகச் சீர்களைச் செய்து,
மாப்பிள் ளைமேல் வாஞ்சை கொண்டு
பிரிய மாகப் பெண்ணை யனுப்பிய
செல்வர் எந்தை சீவித் திருந்தால்,
இப்படி நீரும் இன்னொரு பெண்ணை
வீட்டில் வைக்க விடவே மாட்டார் ;
இத்தனை நாளும், உத்தமி நானே
பொறுத்தேன் இந்தப் பொல்லாத் தீங்கை.
கணவரே, எனது கண்ணுக் கொளியே,
என்னுயிர்த் துடிப்பே, என்வாழ் விற்கு
வாய்ந்தநல் லரசே, வஞ்சமில் லாமல்
சொல்வன சொன்னேன் ; சொல்லைக் கேட்டால்,
இல்லம் வாழும் ; இனத்தார் வாழ்த்துவர்.
தாழ்ந்து நின்றல் வாழ்ந்து நிற்போம் ;
சாதிக் கட்டை, சமூக விருப்பை
மீறினல் விதியே மாறிடும் ; பிறகு
நாளுங் கிழமை பாழுங் கிழமையாம்.
இங்கே யாரும் எட்டிப் பாரார் ;
அங்கே நம்மை அழைக்கவு மாட்டார் ;
கொண்ட கொடுத்த குடும்பத் திடையே
சண்டை வலுக்கும் ; சத்தியஞ் சொன்னேன் !"

அந்தரி இவ்வகைத் தந்திரக் கண்ணீர்
சொரிந்து சொன்ன சொற்களை நம்பியே,
"சரியென் கண்ணே ! புரிசெய லனென் ?" என,
"சாத்தன், இனத்தார் சம்மதஞ் சொல்வான் ;
அவன்சொல் லமுதம், அதன்படி செய்வீர்"
என்றாள் கள்ளி ; எழுந்தான் கணவன் ;
மறந்தான் மதுரையில் மணந்த மனைவியை.
சாத்தனைக் கண்டான் ; சண்டாளப் பாவி
நஞ்ச மனத்தில் வஞ்சப் புன்னகை
காட்டி "மாப் பிள்ளை, வீட்டினில் ஒருத்தியை,
மதுரைச் சிறுக்கியை, மனமுறக் கொணர்ந்து,
கொஞ்சிக் குலாவிக் குழந்தையும் பெற்று,
முத்துப் போன்ற மூத்த மனைவியை,
மூலையி லொதுக்கிய வேலை கொடிதே !
நாயைக் கொஞ்சினால் வாயை நக்கும் ;
இடத்தைக் கொடுத்தால் மடத்தைப் பிடுங்கும்
கண்ணே யென்றால் கைப்பொருள் பறிக்கும் ;
மாயக் கள்ளியை வந்த வழியே
செல்ல விடுத்தால், அல்ல லின்றி,
நாட்டா ருடனே கூட்டுற வாக
வாழலாம் ; வாழும் வகையைச் சொன்னேன் ;.
பிறகுன் விருப்பம் ; உறவின் முறையார்
சம்மதம் இது" வெனச் சாற்றி வெருட்டினான் ;
"செய்கிறேன்" என்றான் செட்டியு மாங்கே !

பத்தினித் துயரம்

ஆசை யுடனே அன்பு மணாளர்
வருவா ரென்று வகைவகை யாகப்
பண்டம் செய்து, பத்தினித் தெய்வம்
இன்பக் கனவுடன் எதிர்பார்த் திருக்கத்
துன்பமே வடிவாய்த் தோன்றினான் அவனே !
"வாரும் வாருமென் வாழ்வின் உயிரே !
மனையை இன்று மலரணி செய்தேன் ;
பாரும் ! இனிய பண்டம் செய்தேன் ;
சுவைத்துப் பாரும், சுருதி கூட்டி,
யாழிசை மீட்டி, ஏழிசை யின்பம்
பருகுவோம் வாரும் பதியே !" யென்ன,
வனையா பதியாம் வயிர வாணிகன்,
"எல்லாம் சரிசரி, எழுந்திரு உடனே ;

நிந்தனை நினது சொந்தனை யில்லை ;
உன்னால் எனக்கிவ் வூர்ப்பகை வந்தது ;
மதுரையில் மயங்கிய மயக்கம் விட்டது ;
உண்மை யறிந்தேன் ; உறவுடன் வாழும்
நன்மை யறிந்தேன் ; நாட்டார் தீர்ப்பைச்
செய்யத் துணிந்தேன் ; உய்வழி யதுவே.”
என்று கூச்ச லிட்டான் கணவன்.
அமைதி யாகவே, அருங்குணச் செல்வி,
“நாதா, யார்செய் சூதிது ? விளங்கச்
சொல்வீர்” என்றதும் கொல்விழி காட்டி,
“வெளியே செல்செல் ! வீட்டி லிராதே,
விளங்கச் சொன்னேன், வேறுபேச் சில்லை” யெனக்
கையை ஓங்கிக் கட்டளை யிடவே,
“என்னுயிர்க் கணவரே, எனக்கொரு புகலே !
என்பிழை செய்தேன் ? ஏழைமேற் சினமேன் ?
தாயிலாப் பெண்யான், சரண்புகுந் தும்மை
அன்புடன் பணிசெயும் அடியாள் ; உமக்கே
உள்ளங் கொடுத்த உண்மைப் பேதை ;
‘தள்ளி யிருந்தால் தங்கமே வாவா,
தழுவிக் கொண்டபின் சனியனே போபோ !’
என்ற கதையாய் இருக்குதே பேச்சு !
மூத்தாள் சூழ்ச்சி மூட்டிய தீயோ ?
சாத்தன் செய்த சதியோ ? சொல்வீர் !”
என்றதும் பாவி இருகண் சிவந்து,
“எங்குலத் தவரை இழிவாய்ப் பேசினாய்,
சாதி கெட்டுச் சாதி விரும்பி யென்
குடியைக் கெடுத்த நடியே, போபோ !
எனது சாதியே எனக்குப் பெரிது !
வேறு சாதியென் வீட்டில் ஏலேன் ;
இனப்பகை தாங்கேன்” என்றான் கொழுநன்.
சினப்பகை யில்லாச் சீரிய பத்தினி,
“சாதிப் பித்தும் சமயப் பித்தும்
இனத்தின் பித்தும் மனத்தின் பித்தமே !
நாதா கேளீர் ! நாமெலாந் தமிழர் ;
தமிழ்த்தாய் பெற்ற அமிழ்தப் புதல்வர் ;
ஒருதாய் மக்கள், ஒருகுல மாவார்.
சாதி பேசும் சூதெலாம் இடையே
வந்து புகுந்த வழக்கே யாகும்.
சங்க காலத் தமிழ ரிடையே,

வீரமுங் கலையும், வெற்றிப் பொலிவும்
நிரம்பிய ஒற்றுமை நிலவிய தாலே,
ஒருகுல உணர்ச்சி ஓங்கிய தாலே,
தமிழ்மனப் பான்மை தழைத்த தாலே,
அவரவர் தொழிலை அவரவர் செய்து,
செயலின் பயனைத் தேசம் வாழவே
ஈந்து துய்த்துச் சாந்த நேயராய்
வாழ்ந்தார் ; அந்த வாழ்வைச் சிதைத்தது
சாதி யென்னும் சங்கடச் சனியே !
சாதி சமயஞ் சாத்திர கோத்திரம்,
நிறமின மாகிய பிறவெலாங் கடந்தே,
உடலுயிர் மனமுங் கடந்தே, உள்ளே
உள்ளமா யுள்ள வள்ளலாங் கடவுள்.
அவனு லயமே, சிவனு லயமே
எல்லா வுயிர்களும் என்பதை யறிந்தால்,
சாதி யொழிந்து சமரசம் வருமே ;
சமசித் தத்துடன் சன்மார்க் கத்தில்,
தன்போற் பிறரைத் தான்மதித் தொழுகி,
உரையுஞ் செயலும் உள்ளமும் ஒன்றி,
உலகத் திற்கு நலமே நாடி,
அன்பும், அறிவும், அறமுந் தியாகமும்,
போற்றி வாழ்வதே புனித வாழ்க்கையாம்.
குறுகிய பேதங் கொண்டலை மனத்தால்,
உலகைப் பார்த்தாற் கலகமே யாகும்.
சகவாழ் வெல்லாம் சக்கர வட்டம் ;
செல்வ மெல்லாம் "செல்வோம்" என்னும் ;
தரித்திரந் தானும் "தரித்திரேம்" என்னும் ;
ஒளியும் இருளும், உருவும் நிழலும்,
இனிப்பும் கசப்பும், இன்பமுந் துன்பமும்,
வெப்பமும் குளிரும், வேனிலும் மாரியும்,
மாறி மாறி வாழ்வில் வருமே.
மனிதர் குணத்திலும் மாறுதல் ஆயிரம் :
நெருந லிருந்த நிறைபெறுங் காதல்
"கண்ணே, முத்தே, கண்ணின் மணியே,
கட்டிக் கரும்பே, கனகக் குவையே"
என்று கொஞ்சி யின்புற் றிருந்த
பிரியா நேயம், பிரிவினை செய்யும்
வஞ்சர் சூழ்ச்சியால் வாக்கை யிழந்து,
மதியை யிழந்து, மனம்பறி கொடுத்து,

வெறுப்பே யின்று விளைப்பதைப் பாரீர் ;
இதுவே உலகின் இயல்பெனக் காணீர் !"

ஐயர்: "உலகையும் கண்டேன் ! உன்னையும் கண்டேன் !
போதும் உன்றன் புத்தி மதிகள் ;
கட்டு கடையை ! காதலித் துன்னைக்
கொண்டு வந்து குடித்தனஞ் செய்த
பாவத் திற்குப் பத்து வராகன்
மாதந் தந்தொரு மனையுந் தருவேன் ;
மனமிலா விட்டால் மதுரைக் கேசெல் !
உனக்கிவ் வீட்டில் உரிமை யில்லை."
பத்தினி: "கொண்ட உடலே கூலிக் குடிலே ;
இந்த உலகிற் சொந்தம் எதுவே ?
இன்று செல்வன் ஏழை யாவதும்,
செல்வச் செருக்கிற் செழித்தவன் இளைப்பதும்,
இளைத்தவன் செழிப்பதும் இயல்பிங் காமே !
வீடும் செல்வமும் ஓடும் பொருள்கள் ;
எண்ணிப் பார்த்தால் எல்லாம் மண்ணே !
உடலும் மண்ணே, உடைமையும் மண்ணே ;
மண்ணுக் காகப் பெண்மையை உமக்குத்
தந்தே னல்லன் ; சத்தியஞ் செய்து
மனத்தைக் கொடுத்த மாண்பைக் கண்டே,
இனத்தைக் கடந்தும் இல்லிற் புகுந்தேன்.
இருவரும் ஒருவராய் இல்லறஞ் செய்தோம்.
இல்லறக் கனியும் எய்திடும் விரைவில் !
இந்த நிலையில் தந்திரப் பொருமை
சாதிச் செருக்கை ஊதிவிட் டடனே
உம்மனங் கெடுத்த வெம்மையென் சொல்வேன் !
என்வினைக் கேடே இப்படி யானது !
இருப்பினும் உம்மை இன்னொரு வார்த்தை
கேட்ட பிறகு வீட்டைத் துறப்பேன்.
ஆண்மகன் ஒருவன் அக்கினி சாட்சியாய்
மணந்து வந்து வாழ்ந்தபத் தினியை,
கருவுந் தரித்த கற்பின் பாவையை,
அநாதையாய்த் துறத்தல் அறமா ? சொல்லீர் ?
அதுவும், சாதி அகம்பா வத்தால்
தமிழ்மகள் ஒருத்தியைத் தனது கணவனே
காரண மின்றிக் கைவிடுங் கொடுமை,
என்ன நீதி ? எனது சாதியில்

என்பிழை கண்டீர் ? யான்வே ளாளர்
மரபில் வந்த மங்கலச் செல்வி ;
எண்ணரு முனிவரும், இன்னிசைத் தமிழைக்
கண்ணெனக் காத்த புண்ணியப் புலவரும்,
அறநெறி வேந்தரும், திறமிகு வீரரும்,
தோன்றிய மரபில், ஆன்ற மதுரையில்,
முத்தமி ழறிந்த முதலியார் வீட்டில்
பிறந்தேன் ; எனக்கும் பிழைசொல் பவர் யார் ?
அவர்களை இங்கே, அழையும் பார்ப்போம்.....!"
வயிரன்: "உன்சொற் கேளேன் ; உடனே செல் செல் !
  மீண்டும் பேசினல், ஆண்டுதோ றுந்தரும்
  ஆடையும் பணமும் அகப்படா தறிவாய் !"
பந்தினி: "கணவரே, இந்தக் குணக்கே டேனே ?
  வாய்மை சொன்னேன், வளைந்து கொடுப்பீர் !
வயிரன்: "வளையேன் உனக்கு ; வாய்மை தனக்கும்
  வளையேன் !
பந்தினி: "உம்பெயர் வளையாபதி யெனச்
  சொல்லக் கேட்டேன் ;
வயிரன்: செல்லடீ, செல் செல் !
இனிப்பேச் சில்லை ; என்றன் சேவகர்
வருவார், வழிப்பணம் தருவார், செல் செல் !

கொடுமையோ கொடுமை ! குலத்திரு, கண்ணீர்
பெருகச் சிந்தி, ஒருதுணை யின்றி,
கட்டிய வுடையுடன் கைவளை யுடைத்தே
உலக வெறுப்பும், உள்ளே துறவும்,
எவ்வுயி ருக்கும் இறைவ னான
ஒருவன் அன்பும் உடன்கொண் டன்றே
மனையை நீத்து வழிநடந் தனளே !
வாணிகன் சேவகர் வழங்கிய பணத்தைக்
கட்டுடன் மறுத்துச் சட்டெனச் சென்றாள்.
கருணைத் தெய்வம் காக்கு மென்றே
அருளை நம்பி இருளிலே மறைந்தாள்.
காலமும் உலகுங் கலங்கி நின்றன !
மோன மாக வானகந் திகைத்துத்
தாரகை மினுக்கித் *தாரைகாட் டியதே !

---

* வழி

அந்தரி தந்திரம்

பத்தினித் தெய்வம் பட்டெனச் சென்றதும்,
"அன்பே, அரசே, இன்பே !" யென்றுடன்
அந்தரி கணவனை அள்ளி யணைந்தாள் !
கொஞ்சிக் குலாவிக் குளிர்மொழி பேசி,
"இனிநாம் துய்ப்போம் இந்திர போகம் ;
கணக்கர் சொன்னது கணக்காய் நடக்கும்.
இரண்டு மாதம் இருந்து பின்னே
தொழிலுக் காகத் தொலைசெல லுங்கள் ;
திரும்பி வந்ததும் சேயைக் காண்பீர் !
அவன் பெயர் அழகன் ஆகுக !" வென்றாள்.
"பிள்ளை பிறந்ததும் பெயர்வைத் திடுவோம் ;
அப்பன் பெயரால் 'சுப்பன் செட்டி'
எனப்பெயர் வைப்பேன்" என்றதும் அந்தரி,
சற்றே பிணங்கித் தன்மனம் பெற்றாள்.
இருவரும் இப்படி யின்புறு நாளில்,
மருத்துவர், "அந்தரி கருத்தரித் தா"ளென
அகத்தியர் தேரையர் மிகத்தரு விருத்தம்
பொருத்தமாய்ச் சொல்லிப் பொன்மலர் பெற்றார்.
செட்டி மகிழ்ந்து, சேடியர் மருத்துவர்
உறவினர் தமக்குநல் லுத்தர விட்டு,
மங்கலங் கூறி, மனைவியைப் பிரிந்து,
கப்பலி லேறிக் கடாரம் சென்றான்.
அதுமுதற் சாத்தன் முதுபெரு மனையில்,
இட்டப் படியே கொட்ட மடித்தான்.
†வயாவெனச் சொல்லி வஞ்சக் கரவுடன்
அந்தரி புள்ளே அடங்கி யிருந்தாள்.
மருத்துவன் வந்தான், மருத்துவன் சென்றான்.
கணக்கன் வந்தான், கணக்கன் சென்றான்.
காசைக் கொத்தும் ஆசைக் கழுகுகள்,
முகத்துதி பேசி முடிச்சை யவிழ்ப்போர்,
இருந்தால் மந்தை, இன்றேல் நிந்தை ;
கண்டபோது கைகுவித் தெடுப்பர் ;
காணாத போது கல்லை யெடுப்பர் ;
சாது போலே வீதியிற் காண்பார்,
உள்ளே விட்டாற் கொள்ளை யடிப்பார் ;
நாக்கி லொன்று நடையி லொன்று

† கருப்ப வருத்தம்

கண்ணி லொன்று கருத்தி லொன்று
கொண்டவர் சாத்தன் கும்பலா னுரே !
அந்தரிக் கிவரே மந்திர ராஞர்.
பத்து மாதம் பதுங்கி யிருந்து,
இடுப்பில் எந்தக் கடுப்புமில் லாமல்,
பெருத பிள்ளை பெற்ருள் அவளே !
மலடி வயிற்றில் வந்தது மகவென,
உறவினர் வியந்தார் ! உண்மை யாதெனின்,
(மனத்தி னுள்ளே மறைவாய்க் கொள்க ;
வாயைத் திறந்தால் வருவது வசவே !)
“ஆ, குவா” என்றே அந்தரி மடியில்
தவழுங் குழந்தை சாத்தன் குழந்தையே ;
வேசை பெற்று விற்ற குழந்தையே !

அழகன்

அழகன் என்னும் அந்தச் சேயைத்
தடவித் தடவித் தாங்கித் தாங்கிச்
செல்வச் செருக்குடன் சீர்பல செய்து,
சாத்தன் வழியே தாய்வளர்த் தாளே !
வளர்த்த கொழுங்கடா மார்பிலே பாயும்
கதைபோல், அந்தக் கடாயனும் பெருத்துத்
தாயை எதிர்ப்பதுந் தந்தையை வைவதும்,
போற்றிய வீட்டைப் பொட்ட லடிப்பதும்,
தடித்தன மாகக் குடிப்பதும் அடிப்பதும்
வேசையர் சேற்றில் விழுவது மாகச்
சகுனி போன்ற சாத்தன் சீடனுய்
வளர்ந்தான் ; கதையை வளர்த்தென் பயனே ?
நிலத்திற் கேற்ற நீரைப் போலே
குலத்திற் கேற்ற குணமது மாமே !
மகன்வந் தானென மகிழ்ந்த வணிகனும்,
அழிநடை கண்டு, “நீ யார்மக” னென்றே
வாயை மீறி வார்த்தை பேசி
அந்தரி பிணக்கைச் சந்ததம் பெற்ருன்.
செல்வங் கரையச் சீர்மை கரையக்
குலப்பெயர் குறையக் குண்டுணிச் சாத்தன்
கொட்ட மடிக்கக் கோபமுந் தாபமும்,
வாழ்வைச் சித்திர வதைசெய, வாணிகன்
கவலை மோதுங் கடலில் மூழ்கி,
“வினைப்பயன் வினைப்பயன் வினைப்பயன்” என்றே

தலையி லடித்துச் சங்கடப் பட்டு,
முகமும் வாடி, அகமும் வாடி,
உடலும் வாடி, உயிர்ப்பிண மானான்.
இடையிடை பத்தினி எண்ணமும் வருமே.
ஆயினும், சாத்தன் பேயினுங் கொடியன் ;
பழிபல கூறிப் பகையைத் தூண்டி,
அந்தரி யுடனே அந்தநல் லணங்கைத்
தூற்றினான்.....அந்தத் தூயவளின் கதையென் ?

காளி கோயில்

காரிருள் சூழக் காட்டிலும் வயலிலும்,
வழியைத் தடவி, மலரடி நோவ
நடந்து நடந்து நடையுந் தளர்ந்து,
காலுங் கடுக்கக் கயல்விழி சோர,
உறைவிடந் தேடி உத்தம பத்தினி,
கண்டாள் ஒருசிறு காளி கோயிலை !
"அப்பா டா" வென் றங்கே விழுந்தாள்.
"அம்மா தேவி, அநாதைக் கருளாய் !
உலகம் என்னை உதறித் தள்ள,
உன்னிடம் வந்தேன், உலகநா யகியே !,
உன்மகள் இனிநான்....என்னைக் காப்பாய்,
கதிவே றில்லை......காளிஓம் காளி !
உடலும் தளர்ந்தேன், உள்ளம் உடைந்தேன் ;
மனமுங் கசந்தது, வாழ்வும் புளித்தது,
இனியான் இருந்தென் ? இறைவி, இறைவி !
இப்படி யேயென்னை இணையடி சேர்ப்பாய் ;
இன்றேல் உன்கை யிலகும் வாளால்,
அறுத்தெனைப் பலியாய் அளிப்பேன் உறுதி !
என்னைப் போலே இன்னொரு சீவனைப்
பெற்றென் ? அதுவும் பிறவிக் கடலில்
வீழ்ந்து வினைப்பயன் சூழ்ந்து தவிப்பதேன் ?
பிறந்தது போதும், பெற்றவள் அன்றே
இறந்தாள் ; கணவனுந் துறந்தான் ! கனவென
மறந்தேன் அனைத்தும் ; வருந்திய கண்ணீர்
சொரிந்தேன் ; உன்னடி, பிரிந்தினி வாழேன் !
அம்மா, உலகை யாளும் அருளே,
அதருமப் பகைவரை அழிக்குங் கனலே,
தரும சீலரைத் தாங்கும் புனலே !
அபயந் தந்தெனை ஆண்டுகொள் ! இன்றேல்

உபயபா தத்தில் ஊற்றுவேன் இரத்தம் ;
கருணைத் தாயே, கடைக்கண் பாராய் !"
என்று பத்தினி இறைஞ்சி யிறைஞ்சி,
சொல்லு நினைப்புஞ் சோர்ந்துகண் ணயர்ந்தாள் !
அந்தக் கரணம் அடங்கி யுறங்கும்
அமைதியில், அன்னை அவளுட் புகுந்து
கனவாய் நின்று, "காப்பேன் ! கலங்கேல் !
காலை இங்கொரு கருணைக் கிழவி
வருவாள் ; புகலைத் தருவாள் ; உனக்கினி
நலமே !" யென்று நவின்றுல கன்னை
மறைதலும், பத்தினி மலர்விழி திறந்தே
திடுக்கிட் டெழுந்தாள் ! "தெய்வத் தாயே,
உன்சரண் உன்சரண், உன்னருள் துணை" யெனக்
காளியை வணங்கிக் கடன்புரிந் தாளே !

நல்ல காலை

மந்த மாருதம் வந்தது கொஞ்சி,
மலரின் இனிய மணமும் வந்தது.
கொக்கொக் கோவெனக் கோழிகள் கூவின ;
சிவசிவ வென்று சிவ்வெனப் பறந்து,
காலைப் புட்கள் களிப்புடன் பாடின ;
கிழக்கு வெளுத்தது ; கிளர்பொன் னகையால்
அருண சுந்தரி அமைதி கூறினாள்.
நேற்று நடந்த நிகழ்ச்சி யெல்லாம்
கனவென ஒதுக்கிக் கற்புள பத்தினி,
அஞ்சாத் துணிவுடன் அகில உலகைச்
சுற்றி நோக்கிச் "சுத்தான்ம நாதன்
காலடித் தூசியிக் காசினி" யென்றாள் ;
அவனரு ளாகும் அன்னையைத் தவிர
மற்றெலா நினைப்பையு மறந்து துறந்து,
முன்னுள குளத்தில் முழுக்குப் போட்டாள்.
ஆங்கே,
குமுதங் குவிந்து, கொழுந்தீச் சுடர்போல்
கமலம் விரிந்து கனிநகை புரியக்
கண்டாள் ! காலைக் கதிர்கள் இறங்கிப்
புனிதப் புனலைப் பொன்மய மாக்கக்
கண்டாள் ; அந்தக் கனகக் காட்சியை
வெண்ணகை புரிந்தும் செந்நகை புரிந்தும்,
ஒளியைப் பருகி உள்ளங் குவிந்தும்,

அழகுடன் மணமும் அளித்தும், சுற்றிப்
பாடும் வண்டுகள் பருகுதே னீந்தும்,
வாடு மட்டும் வாழ்வாங்கு வாழும்
கவலையில் லாத கமலங் களையே
பார்த்து வாழ்வின் பயனை யறிந்தாள் !
"பூக்களிற் புன்னகை புரியும் சக்தி,
கனிகளிற் சுவையைக் காட்டும் சக்தி,
பறவைக ளாகப் பாடும் சக்தி,
உயிர்க்குயி ராக உலாவும் சக்தி,
உலகெலாங் கோயி லுடையசிற் சக்தி,
என்னையுங் காப்பாள்" என்று நினைந்து,
தேவி முன்னே தியானஞ் செய்து,
"தாயே, இனியென்னைத் தாங்குவ துன்பரம்"
என்றாள் ! ஆங்கே நின்றாள் யாரே ?

கருணைக் கிழவி

வெள்ளுடை தரித்த ஒள்ளிய உருவினள்,
இளமை பொலியு முதுமைக் கோலம்,
அறிவொளி வீசும் அருட்சுடர் விழியாள்,
பன்மலர் வனம்போற் புன்னகைச் செவ்வாய்,
கருணை பொழியுங் கனிமொழிச் செல்வி,
ஊரெலாம் போற்றும் உத்தமி,
ஔவை யென்னும் செவ்வியள் அவளே !
கண்டதும் பத்தினி, "காளி யன்னை
கனவிற் காட்டிய கருணைக் கிழவி
இவளே" யென்றவள் இணையடி பணிந்தாள் ;
"அம்மா, உன்னை அறிந்தேன் ; இனியுன்
வாட்டந் தீர்வாய் ; வாபின் பேசுவோம்"
என்றன் புடனே இட்டுச் சென்று,
"மகளே, இங்கே சுகமா யிரு"வெனத்
தன்மனைக் குள்ளே தயவுட னமர்த்தி,
பால்பழந் தந்து பசியைத் தணித்தபின்,
பத்தினி பட்ட பரிபவங் கேட்டாள்.

பத்தினி

"தெய்வத் தாயே, திக்கிலேன் என்னை
மகள்போல் ஏற்றுப் புகலருள் அன்னாய் !
மதுரைவே ளாளர் மரபி லுதித்தேன் ;
பிறந்ததுந் தாயைப் பிரிந்தேன் ; எந்தை
சிவமுந் தமிழுஞ் செழிக்கப் புகட்டி,

என்னை வளர்த்தார் ; தன்னை யறிந்த
பூம்புகார் நண்பர் பொன்மிகு செல்வர்
வயிரவா ணிகர்க்கு மனைவியா யீந்தார்.
கணவ ருடனே கருத்தொரு மித்து
வாழு நாளில், வன்பகை கொண்ட
மூத்தாள் பொறுமை மூட்டிய தீயால்,
சாதிச் செருக்கு தலைக்குமே லேறிக்
கருவுறு மென்னைக் கருணையில் கணவர்
தெருவில் விடுத்தார் ; அருளை நம்பி
உலகை வெறுத்தேன், உடலை வெறுத்தேன் ;
தனிவழி நடந்தேன் ; பனியிரு ளிரவில்
கால்கள் ஓய்ந்து காளி கோயிலிற்
களைப்பு நீங்கிக் கண்ணீர் விட்டு, "நீ
இரங்கா யாகில் இறப்பேன்" என்று
கதறிய வாறே கண்ணும் அயர்ந்தேன் ;
எந்தாய் கனவில் எனக்கருள் புரிந்தாள் ;
அவளே ஔவையாய் ஆண்டுகொண் டாளே !
என்கதை யிதுவே ; இனிதெனைக் காத்த
உங்கதை சொல்லுதிர் ! உலகில் இனியான்
வாழும் வகையும் வழுத்துதிர் ; தாயும்
அருட்பெருங் குருவும் ஆவீர் நீரே !"

ஔவை பொன்மொழி

"உன்கதை, உள்ளம் உருக்குதென் மகளே !
பட்டுப் பட்டுச் சுட்டொளி வீசும்
பொன்போ லானதென் பொறுமை வாழ்வே !
காளி குடியிது, கவின்பெருங் கிராமம் ;
சாலையுஞ் சோலையுஞ் சத்தி ரங்களும்,
மலர்கனி வனங்களும் வளம்பெற ஓங்கும்,
பொன்னிக் கரையிற் பொலியுமிவ் வூரே !
இங்கே செல்வர் ஏகப்ப ரென்னும்
உத்தமர் மகளாய் உதித்து வளர்ந்தேன்.
வயது வந்ததும் வலுக்கட் டாயமாய்
மாமன் மகனை மணம்பு ரிவித்துத்
தந்தை யிறந்தார் ; வந்த கணவன்
எனக்கோர் மகளை யீந்தான் ; பிறகு
வேசை யொருத்தியின் ஆசை பற்றி,
உடலுஞ் செல்வமும் உயிரும் இழந்தான்.
அருமைப் பெண்ணை அன்புடன் வளர்த்தேன் ;

வயது வந்ததும் வாய்த்த கணவனைக்
கூடி வாழ்ந்து குழந்தையும் பெற்றாள் ;
ஒருநாள்,
அரவு கடித்தென் ஆயிழை யிறந்தாள் ;
தாயிலாக் குழந்தையுந் தவறிய தந்தோ !
உடலும் உள்ளமும் உடைந்தன ; யானும்
செத்துப் பிழைத்தேன் ; சொத்துச் சுகமெலாம்
துறவிகட் கென்றே துறந்தேன் முற்றும்.
உலகின் இயல்பும், உடலின் இயல்பும்,
மாந்தர் இயல்பும், வாழ்வின் இயல்பும்,
அறிந்தேன் ; கண்முன் அனுபவங் கண்டேன் ;
பிறவிக் கடலிற் பெருந்துய ரடைந்தேன் ;
பிறந்தவ ரெல்லாம் இறந்துமண் ணாகும்
உண்மையு மறிந்தேன் ; உய்வழி சொல்லும்
ஞான குருவை நாடெலாந் தேடினேன் ;
பிரக்ஞான ரென்னும் பிக்குவைக் கண்டேன் ;
அவரடி பணிந்தேன் ; அன்புடன் பெரியார்,
புத்தர் துறவும், போதி சத்துவர்
அருளிய சொல்லும், அறநெறிச் சாரமும்
முறைமுறை விளக்கி, முன்னே விளைத்த
வேதனை போகச் சாதனந் தந்தார் ;
அறவண வடிகளை யடிபணிந் தாங்கே
மணிமே கலையென மாதவஞ் செய்தேன் ;
அதன்பின் காஞ்சிக் கருகே நின்ற
ஆரியாங் கனைகள் அமர்ந்த பள்ளியில்,
குந்தகுந் தரெனுங் குருவடி பற்றிக்
கொல்லா நெறியைக் கோதறப் பயின்றேன் ;
வினைகளை யுதிர்த்து விடுதலை யடையும்,
பக்குவ நல்கும் சுக்கிலத் தியானம்
செய்தேன் ; அமைதி சேர்ந்தபின் இன்னும்,
தத்துவ ஞானத் தாகந் தூண்ட
வேதாந் திகளில் மேதாவி யென்ற
பூரணா னந்தரின் பொன்னடி வணங்கி,
அகமாத்ம ஞானம் அமைவுறக் கேட்டேன் ;
அதன்பின் சிதம்பரம் அடைந்தேன் மாதே—
சிற்சபா நாதர் திருச்சந் நிதியில்
நின்ற வுடனே நிம்மதி கண்டேன் !
சித்தாந் தத்தின் சிரப்பொருள் கண்ட
சிவகுரு நாதர் சேவடி பணிந்து,

சிவஞான போதத் தெள்ளுரை கேட்டேன் ;
பொய்ம்மயக் கொழிய மெய்யறிந் துய்ந்தேன் ;
அகத்தும் புறத்தும், அறநெறி யெல்லாம்
தன்னுட் கொண்ட தனிப்பெருஞ் சைவம்,
சரியை கிரியை சாதனங் காட்டி
உள்ளங் குவியும் யோகந் தந்து,
சிவன் சுத்த சிவமய மாகும்
உண்மையின் பறிவை யுணர்த்தும் சைவம்,
பதிபசு பாசப் பான்மையை விளக்கி,
மும்மல மாயை முற்றிலு மகன்று,
தூய வுயிர்சிவ நேயங் கொண்டு,
பாழும் பிறவிப் படர்வினை நீக்கி
வாழும் வகையை வழுத்திடுஞ் சைவம்
காட்டிய வழியே கலக்கற நின்றேன் !"
இனியொரு தேட்டம் இல்லையென் கிளியே !
பத்தினி : "அறிவறிந் துண்மை யனுபவங் கண்டீர்,
கதியெனக் கீந்த கருணைத் தாயே,
உலகை உள்ளத் தறிந்து துறந்தீர் ;
சைவம் பௌத்தம் சமண மாதிய
பன்மதந் தெளிந்தீர், என்மயக் கொழிப்பீர் ;
பவநெறி தவிர்க்கச் சிவநெறி நின்றீர் ;
வேறு சமய வெறுப்புமக் குண்டோ ?
பலவாம் சமயக் கலாம்வளர் உலகில்,
கலக மின்றிக் கலந்து வாழப்
பொதுநெறி காட்டும் புண்ணியப் புலவர்
எப்படி யிருப்பார் எனக்கியம் பீரே !"
ஔவை : "உயிர்க்குயி ரான ஒருபொருள் உணர்வில்
ஊன்றி யாங்குமவ் வுண்மையே காணும்
வித்தகர் விருப்பு வெறுப்பற் றிருப்பார் ;
அவரவர் பக்குவம் அறிந்து பழகி,
எதிலும் ஒட்டா திருப்பார் அவரே ;
இசையும் உலகோர் வசையும் பொறுத்துச்
சமநிலை தாங்கித் தன்னல மின்றி,
நல்லன நினைத்து, நல்லன சொல்லி,
நல்லன செய்வார், அல்லன நீப்பார் ;
ஐந்துறுப் படக்கும் ஆமை போலே,
பொறிபுல னடக்கி அறிவா யிருந்தே
உள்ளுறைந் துலகில் உலாவிடு வாரே !
ஆவி யாகியும் ஆறுகள் பாய்ந்தும்,

குறைநிறை யற்ற திரைகடல் போல்வார் ;
பன்மணிக் கயிறெனப் பார்வகை யெல்லாம்
ஒன்றிற் கோத்து நின்றதை யறிவார் ;
அளவுடன் அருந்தி, அளவுடன் உறங்கி,
அளவுடன் பேசி, அளவுடன் ஆற்றி,
உட்புறத் தூயராய்க் கற்பனை விலக்கி
மெய்வழி வாழ்வார் மேலவர்
பொதுநிலை கண்ட புண்ணியர் தாமே !"
பத்தினி : "எம்மதத் திற்றுஞ் சம்மத மான
பொதுநிலை வாழ்க்கை இதுவெனக் கண்டேன்!
என்னிலை புணர்ந்தீர் ; எனக்கொரு வழியைக்
குறிப்பீர், தெய்வமுங் குருவுநீர் தாயே !"
ஔவை : "அறிவும் அருளும் ஆற்றலும் ஓங்கிய
செந்தமிழ்க் குலத்தில் வந்தபூங் கொடியே !
தாளாண்மை மிக்க வேளாண் மணியே,
மனைவியின் கடமையை மனமுறச் செய்தாய் ;
மாசறு மணியென மகப்பே றெய்தி,
மகனுடன் எனது மகள்போ லிருப்பாய் ;
இழந்த மகளை இன்றே பெற்றேன் ;
ஒருமக னுடனே உவந்துநீ பின்னும்
பற்றறு வாழ்வைப் பற்றா தென்றும்,
அவவழி நீங்கித் தவவழி சேர்ந்து,
சிவசிந் தனையும், சிவகா ருண்யமும்,
கல்விப் பயிற்சியுங் கற்றதன் பயனைக்
காணும் பயிற்சியும், காட்சி முனிவர்
தொண்டுங் கொண்டு துகளற வாழ்ந்தென்
கொள்கைக் கேற்ற கொள்கல மாகி
பெண்ணுல கிற்குப் பெரும்பணி செய்து,
நீடு வாழ்வாய்,*கூடலின் விளக்கே !

பத்தினி

வாழ்வினி இலையென வருந்திய வெனக்கு,
வாழ்வும், வாழும் வழியும் ஆனீர் !
தாயினும் பெரிய தயவே போற்றி !
சேயினுஞ் சிறியேன், திக்கிலேன், அநாதை,
கவலைப் புயலின் கடுமையால் இளைத்தேன் ;
என்னையுய் வித்தீர் அன்னையீர் போற்றி !
உம்மடி விட்டினி ஒருபுக லுண்டோ ?

* மதுரை

உள்ளமும் உயிரும் உயிரின் வாழ்வும்,
உமக்கே தந்தேன், உம்விருப் பாகுக !
குருவே சரணம், அருளே போற்றி !"
என்றடி பற்றி இருவிழி பனிப்ப
வணங்கிய மகளை வாரி யணைத்து,
வாழ்த்தி ஔவை மகிழ்வுடன் பேணி,
ஒவ்வொரு நாளும் திவ்விய ஞான
விருந்தினை யருத்திப் பெருந்தயை யுடனே
காத்தாள் பத்தினி, களித்தாள் மாதோ !

உத்தமன்

நிறைமா தத்திற் பொறைமிகு பத்தினி,
அரதனம் போலோர் ஆண்மக வீன்றாள் !
சான்றோன் என்று சாற்றிநம் ஔவை,
உத்தமன் எனப்பெயர் உதவியன் பிசைத்தாள் !
ஒவ்வொரு நாளும் செவ்விய னாகி,
இளமையிற் பெரியனை யிலக்கி னான்மகனே !
தாமரை முகமும் தழலெனப் பொலிவும்,
அறிவு கனலும் அகன்ற கண்ணும்,
மங்கல முறுவலும், மதுரநன் மொழியும்,
திங்களின் சாந்தமும், தினகரன் போலக்
கடமை காக்கும் கலங்கா வுறுதியும்,
சிங்கம் போன்ற திண்மன வீரமும்,
தங்க மேனியுந் தளரா வீறும்,
தீயர் அஞ்சுந் திறனுந் தூய
நேயர் விரும்பு நேர்மையும், தெய்வ
மாதவர் முன்னே வணக்கமும், பணிவும்
பொதுநல விருப்பமும் புதுப்புதுக் கலைகளைக்
கற்கு முயற்சியுங் கற்றநல் லடக்கமும்
செறிந்ததன் மகனைத் தினந்தினங் கண்டு,,
"பெரியோன்" என்று பெற்றவள் மகிழ்ந்தாள் !
"அரியோன்" என்றுநல் ஆன்றவர் போற்றினார் ;
ஊரெலாம் "உத்தமன், உத்தம" னென்றே
புகழ்ந்து பேசப் புதல்வன் வளர்ந்தான் !
ஊர்த்தோ ழருடன் உத்தமன் ஒருநாள்,
கூடி ஆடிக் குலாவும் போது,
"எந்தை இப்படி ; எந்தை இப்படி"
என்றொவ் வொருவரும் இயம்பிய பிறகு,
"தந்தை யறியாத் தனயனிவ் வுத்தமன்"

என்றொரு ஐயன் இகழ்ந்ததைக் கேட்டே
தாங்கா உத்தமன் தாயிடம் ஓடி,
"என்தாய், எந்தை எவரெங் ?" கென்றான்.
மலர்முகம் சுருங்கி, வாட்கண் கலங்கி,
விசனநீர் தெளிக்க விம்மிட ஏங்க,
பழவினை நினைத்துப் பத்தினி சொல்வாள் :
"மகனே ! உந்தை வயிர வாணிகர் ;
பூம்புகார்ச் செல்வர் ; புண்ணிய வாழ்வினர் ;
மதுரையில் என்னை மணந்து வந்து
பிரியமா யிருந்தார் ; பிரிவினை செய்ய
முனைந்தாள் அவரது மூத்த மனைவியே.
"நாங்கள் செட்டி, நீங்கள் முதலியார்"
என்று பேசி என்னையும் ஏசி,
வீட்டை விட்டு வெளியேற் றிடவே,
இங்கே வந்தேன் ; இந்தநல் லன்னையே
"மகளே" என்றென் புகலே யானார் ;
இந்த உலகில் இவரே நமக்குச்
சொந்தமுந் துணையுந் தாயநன் மகனே !"
உத்தமன்: "அநீதியைத் தாங்கேன், அம்மா விடைதா !
தந்தைக் கென்னைத் தனயனென் றோதி
சாதிப் பித்தந் தணியப் பேசி,
மாண்புடன் உன்னை மதிக்கச் செய்வேன் ;
பெற்றவ ளுக்குப் பிள்ளை செய்யும்
கடனிது தாயே, கட்டளை யிடுவாய் !
பத்தினி: "அப்பா, உன்னை அந்தரி கண்டால்,
சாபம் வைப்பாள் ; சாத்தனைத் தூண்டி
அடாதன செய்வாள் ; ஆபத் தாகும் !
அடக்கமா யிருப்போம் அருமைச் சேயே !
உத்தமன்: "அச்சத் தாலே அடக்கமா யிருத்தல்
பேடித் தனமெனப் பெரியார் சொல்வர்.
அம்மா நெஞ்சில் ஆண்மை துடித்துப்
"போபோ, நீதியைப் புகன்றுவெல்" எனுமே !
வீரனுன் மகனென விளங்கக் காட்டுவேன் !
என்னை எதிரிகள் எதிர்த்தால், அந்த
ஊரெலாங் கூட்டிப் பேரிகை யடித்துன்
உண்மையே வெல்ல உபாயஞ் செய்வேன் ;
உரிமை நாட்டுவேன் ; உடன்விடை தந்துநல்
ஆசி கூறி அன்னாய் அனுப்" பென
மார்பைத் தட்டி மைந்தன் பேசலும்,

பத்தினி ஔவையைப் பணிவுடன் கேட்டாள் ;
"சென்று வருக செயம்பெறு மைந்தன்"
என்று முதியாள் இயம்பிட, உவந்தாள் !
தாயும் ஔவையும் தந்துதம் ஆசி,
"தீரனே, சென்று செய முடன்வா"வென
வணங்கி யெழுந்து மந்திரஞ் சென்று
காளியைப் போற்றிநல் வேளையில் உத்தமன்
பூம்புகா ருக்குப் போந்தனன் மாதோ !

அந்தோ செல்வம்

இதற்கு முன்பே, எதற்கும் உதவா
வேசை மகன்செய் மோசமென் சொல்வேன் !
கப்ப லேறிக் கடலை யுழுது,
திரவியங் கொண்டு திரும்பிய வாணிகன்,
வீடெலாங் கொள்ளைக் காடெனக் கண்டான் !
அந்தரி சலுகையில் ஆதரம் பெற்ற 10
சாத்தன் வீட்டைத் தன்வசப் படுத்தி,
வேசைக் கீந்தவ் வேசை மகனுடன்
கொட்ட மடிக்கக் குறிவைத் தானே !
வேசை அல்லியும் விரைவாய் அந்தச்
செட்டி வீட்டைப் பொட்ட லடிக்க
மகனைத் தூண்டி மாயஞ் செய்தாள் ;
பாதிச் சொத்துப் பரத்தைக் கானதைக்
கண்ட செட்டி கைதலை வைத்தான் :
"பாடு பட்டுத் தேடிய செல்வம்
ஆண்டுக் கணக்காய் அலையுட னலைந்தே
துறைதுறை சென்று, சோர்வற முயன்று
வேர்க்க வேர்க்கச் சேர்த்த செல்வம்,
பட்டப் பகலிற் பாதகத் திருடர்
வாரிச் செல்ல வந்தது விதியே !
ஆக்கலு மரிதே, காக்கலு மரிதே,
நீத்தலு மரிதே நிலையிலாச் செல்வம்,
அச்சமே கலந்த துச்சமாஞ் செல்வம்,
எச்சிற் கையால் ஈயோட் டாமல்,
வாயைக் கட்டி வயிற்றைக் கட்டிச்
சேர்த்துக் கருமிகள் சிறையிடுஞ் செல்வம்,
செருக்கும் வஞ்சமும் பெருக்குஞ் செல்வம், 11
தீக்கணை தனினுந் தீயவெங் காம
நோய்க்கணைக் கிரையாய் ஆக்கிடுஞ் செல்வம் !
அந்தோ, செல்வம் அடைந்தவர் வைத்துப்

பூட்டிப் பூட்டிப் பூதங் காக்க,
இளந்தந திருடரும், இரவுத் திருடருங்
கொள்ளை யடிக்கக் கூத்தியும் வழக்கும்
வெள்ளம் போலே அள்ளிச் செல்ல,
ஆளை வெறுமை ஆக்குவ தென்னே !
தானும் வாழத் தன்னவர் வாழ,
உலகும் வாழ உள்ளார்ந் துதவிச்
சீரிய நல்லறஞ் செய்து மகிழ்வதே
பொருளைப் படைத்த பொருளா கும்மே !
இத்தனை நாளும் எத்தனை நல்லறம்
இயற்றினேன் ; இன்னும் எஞ்சிய பொருளை
அள்ளி யள்ளி அறவினை செய்திலேன் ;
புல்லிய சாத்தன் புகுந்தென் வீட்டில்
ஆசைப் பொருளை வேசைக் கீய
விட்டேன் ; எனைப்போல் விழலனும் உண்டோ ?
அயோக்கியப் பதரின் அழிவினை யாலே
அந்தரி கெட்டாள் ; அழகன் என்றுதன்
வேசை மகனை விற்று னிங்கே !
வெட்கக் கேட்டை விளம்பவும் போமோ ?"
என்று செட்டி ஏமாந் தயர்ந்தான் !
இன்னும் நடந்ததை இயம்பக் கேண்மோ :

வேசையின் மோசம்

விலைமகள் விரித்த வலைப்படு சாத்தன்
கொள்ளை யடித்துக் கொடும்பொரு ளீந்தான் ;
போக்கிட மில்லாச் சாக்கடைப் புழுப்போல்,
காமச் சேற்றிற் கண்ணிழந் துழன்று,
மெய்யு மிளைத்துக் கையு மிளைத்து
மனமு மிளைத்துத் தனமு மிளைத்துத்
தேய்ந்து தேய்ந்து தேவாங் காகி,
ஓய்ந்து போனன் !....உடனே வேசை
அந்தரி பிழைப்பை அந்தர மாக்கி,
தன்மகன் அழகனைத் தந்திர மாகக்
கூட்டி யிரவில் ஓட்ட மெடுத்தாள் !
உண்மை யறிந்தவ் வூரெலாஞ் சிரிக்க,
வாணிகன் வெட்கி வாய்விட் டலறி,
சாத்தனுஞ் செட்டியைத் தகவே யொறுத்தான்.
புத்தி வந்த பொய்மனச் சாத்தன்,
புலம்பித் தீயிற் புழுவெனத் துடித்தான் ;
"மேனி மினுக்கி ,வீதி சுற்றும்

விலைமகள், என்னைக் கொலைசெய் தாளே !
அழகுப் பேயவள், அகப்பட் டாரைக்
கசக்கிப் பிழியுங் காம வரக்கி !
கண்வலை விசிக் கருத்தைப் பிடித்துப்
புன்னகைத் தூண்டிலைப் போட்டிழுத் தழுத்தும்
வஞ்ச நெஞ்சச் சஞ்சல மோகினி !
ஆடலும் பாடலும் அழகுங் காட்டி,
ஆசை யூட்டும் வேசைப் பிசாசு !
கச்சவிழ் கொங்கையாந் துச்ச மாமிச
நச்சுக் கனியை நயமுடன் ஊட்டிப்
பொன்னால் அளந்து புணர்ச்சியைத் தந்து,
போக மென்னும் பொய்ம்மயக் கேற்றி,
ஆளைப் பித்தாய் அடித்துப் பறித்தபின்
சந்தியி லோட்டும் சாகசக் கள்ளி !
கொம்பு கொம்பாய்க் குதிக்குங் குரங்கெனச்
செல்வர் செல்வராய்த் தினந்தினந் திரியும்
வெட்கங் கெட்ட வேதனைப் பூதனை !
வேசையை நம்பி மோசமா னேனே !
வாங்குவேன் பழி"யென வருந்திய சாத்தன்,
வயிரவா ணிகனிடம் மன்னிப் பிறைஞ்சி,
அல்லியைத் தேடிக் கொல்லவே சென்றான் ;
கொன்றான் ; அவனுங் கொலையுண் டிறந்தான்.
அழகனு மறைந்தான்....அதே கதைச் சுருக்கம்.
ஆட்டு மட்டும் ஆடி லூஞ்சலாய்க்
காட்டும் வேசையைக் களிநகை பகட்டி,
வஞ்சனை நேயம் வளமுற நடித்து,
வந்ததைப் பற்றி வாழ்வைக் கெடுத்துப்
பஞ்சை யாக்கும் பரத்தையை நம்பி
யாரே வாழ்ந்தார் ? எவரே சுகித்தார் ?
மயங்கிய மனத்தை மாற்றவு மாமோ ?
உமியைக் குற்றி உண்ணலு மாமோ ?
நீர்தளும் பாத நிறைகுடம் போன்ற
நிறைமனக் கற்பும் பொறையுட னன்பும்
கொண்ட நல்ல குலமக ளுடனே,
இல்லறந் தாங்கவே நல்லற மாகும் !
எவரா யிருப்பினும் இன்னொரு மாதைக்
கனவிலே நினைத்தலுங் கலக்கந் தருமே !
ஆண்பெண் கற்பே அறத்தின் அடிப்படை ;
அதனை மீறி அழிவழி சென்ற

சாந்தன் முடிவையும், சாந்தனை நம்பிய
அந்தரி துயரையும், அந்தரி வரமாய்
உத்தமி யான பத்தினிக் கடவுளைத்
துரத்திய தந்தை துயரமும், ஊரெலாம்
பேசக் கேட்டுப் பெரிதும் வியந்து,
நேர்மை யான நிமிர்நடை கொண்ட
உத்தமன் ஆங்கே உண்மை விளக்க
வந்தனன் வீர *வயமா வெனவே!

உத்தமன் வீர உரை

அருணனைப் போன்றநல் லழகன், வீரன்,
கலை நிரம்பிய கனிமுகச் செல்வன்!
அவனைக் கண்டதும் அன்பு தளிர்த்தும்,
பகர வொண்ணாப் பாச மெழுந்தும்,
வளையா வாத முனையினு மிருப்பதால்,
"இளைஞ, யார்நீ? எய்திய காரியம்
யாதெ"னக் கேட்டான்; ஓதினன் இளைஞன்:
உத்தமன்: "வணக்கம் பெரியீர், மதுரையி லேநீர்
பத்தினி யென்னும் பதிவி ரதையை
மணந்து வந்து, மங்கல மாகக்
குடித்தனஞ் செய்தீர்; குடியைக் கெடுக்கும்
ஒருவன் சூழ்ச்சியால் ஒருத்தி தூண்டவே,
கருவுற் றிருந்த தருமபத் தினியை
விரட்டி யடித்தீர், வேளா ளர்குல
மாணிக்க மான மாதா! அவளைத்
தெய்வ சக்தி உய்வித் தருளவே,
காளி குடியில் கருணைத் தவஞ்செய்
ஔவையின் காப்பில் அமர்ந்தெனைப் பெற்றாள்.
எந்தையே, என்தாய் பத்தினி; என்னை
உத்தமன் என்றே உரைப்பாள், அறிவாய்!
தாயின் உரிமையைத் தாங்கிநன் னீதி
சொல்ல வந்த தூதன் யானே!"
வயிரன்: "என்ன சொன்னாய்? என்மக னாநீ?
வெட்கங் கெட்டு வீதியிற் சென்ற
ஒருத்தி பெற்ற ஒருவனே போ போ!
செட்டிச் சாதியிற் சேர்க்க மாட்டோம்....."
உத்தமன்: "எந்தையே! சற்றே சிந்தைசெய் திடுவீர்;
என்தாய் பத்தினி, இயல்புள உத்தமி;

* சிங்கம்

வீதியில் அவளை விரட்டிய தாரோ ?
தமிழர் அனைவரும் சரிநிகர் சமானராம்
ஒருகுலத் தவரெனும் உண்மை மறந்தீர் ;
செழியனைப் பெற்ற செய்யவே ளாளரைத்
தாழ்வு செய்தீர் ; சாத்தன் சூழ்ச்சியால்
மூத்த தாரம் மோசமாய்த் தூண்ட
பத்தினி வாழ்வைப் படக்கெனக் கெடுத்தீர்.
பாப புண்ணியம் பார்த்து நடப்பதே
மனிதத் தன்மை ; மானிட ரெல்லாம்
ஓரினம் என்பதே உயர்ந்த உணர்ச்சி !
இனம்பா ராமல் எனது பாட்டன்
பெண்ணைத் தந்த பெருமையை எண்ணீர் !
உன்மகன் யானே ஒப்புக் கொள்ளும்.....”
வயிரன் : “ஊரார் ஒப்பினால், உள்ளம் ஒப்பினால்,
தக்க சாட்சி தந்தால் பார்ப்போம் !
உனையான் அறியேன் ; உதறித் தள்ளிய
பத்தினி முகத்தையும் பாரேன், போபோ !”
உத்தமன் : “போகிறேன் ; உமது புத்தி தெளியும்
சாட்சி கொணர்வேன், சத்தியர் முன்னே
உண்மை யுரைப்பேன், உணர்வீர் நீரும் !”
வயிரன் : “கொண்டுவா சாட்சி, கூறுநின் கட்சி,
ஊர்ப்பஞ் சாயம் உரைப்பதைக் கொள்வோம்....”

அந்தரி மனமாற்றம்

போலிப் பிள்ளையாற் கேலிக் கிடமாய்
மோசம் போன முதியாள், அந்தரி,
பரிவகங் கொண்டாள் ; பத்தினி தன்னை
நினைத்தாள் ; யாதோ நெஞ்சில் வேதனை
செய்யவே உத்தமச் சிறுவனை யழைத்து,
நிகழ்ந்ததைக் கேட்டாள். அகந்தை மாறி,
“நாதா, இந்த நல்லிளஞ் செல்வன்
உமது மகனே, உண்மை அதுவே ;
வயதுகா லத்தில், வாய்த்த பிள்ளையை
ஏற்போம் ; செல்வம் ஈவோம்” என்றாள்.
வளையா பதியா வளைந்து கொடுப்பவன் ?
“அதிகம் பேசும் அந்தப் பிள்ளை
சாட்சி மூலம் சத்தியம் விளக்குக !
பிறகு நடப்பதைப் பேசுவோம் பின்னே”
என்றாலும், அந்தரி எதிர்த்துவா தாடி
வளையா பதியை வளைக்கலுற் றாளே !

அபயம்

அக்கணம் உத்தமன் அன்னையைக் கண்டான் !
வாணிகன் வம்பு வளர்ந்ததைச் சொன்னான் ;
''காளி ! நீயே கதிதர வேண்டும் ;
கற்புள பத்தினி கலங்கக் காண்பையோ ?
கணவனுக் குண்மை காட்டி யருள்வாய் !
என்று வணங்கியவ் விரவில் உறங்கலும்,
காளிகா தேவி கனவிலே வந்து,
''பயப்ப டாதே பத்தினி ! உத்தமன்
உன்மகன் என்னும் உண்மை விளங்கும் ;
ஔவை வாக்கால் ஒவ்விய நீதி
உணர்த்தியுன் கணவன் உளத்தை மாற்றுவேன்''
என்றிம் மாற்றம் இயம்பி மறைந்தாள்.
கேட்டாள் ஔவை, கிளர்ச்சிகொண் டெழுந்து,
மறுநாட் காலையே, மகளையு மகனையும்,
இட்டுக் கொண்டு பட்டினஞ் சேர்ந்து,
ஊர்ப்பெரி யார்முன் உறுதிசொன் னாளே !

வெற்றி

பட்டினப் பெரியார், பஞ்சா யத்தார்,
மன்றிற் கூடி வயிரவா ணிகனையும்,
மகனையும், பத்தினி மாதையும், அந்தரி
தன்னையுங் கேட்டு முன்னிகழ் வறிந்தபின்,
அவையோர் மதிக்கும் ஔவை யெழுந்து,
அன்புச் சொற்கள் அருளிய தென்னே !
''நீதிக் கில்லை சாதியும் வகுப்பும் ;
நீதியை உயிர்க்கு நிகரெனத் தாங்கும்
தமிழர் தமிழரைச் சாதி காட்டி
வெறுப்பதும் ஒறுப்பதும் வெவ்விய கொடுமை !
அந்தக் கொடுமையால் இந்தப் பத்தினி
பட்ட துயரைப் பார்த்தவள் யானே.
நற்குடி வேளார் பொற்கொடி இவளைப்
பாண்டி மதுரையில் வேண்டி மணந்து,
புகாரில் இல்லறம் பொலிவுற நடத்திய
வயிரவா ணிகரை, வஞ்சமில் கணவரை
இந்தப் பத்தினி ஏற்றமாய்ச் சொல்வாள்.
அவர்மனங் கெடுத்தவர் அல்லலுற் றழிந்தார்.
அழகன் எங்கே ? அழகனைப் பெற்ற

தாசி யெங்கே ? சாத்தன் எங்கே ?
காலச் சுழலிற் கலங்கி யொழிந்தார் !
ஒழிந்த தொழிக....உண்மையை அறிவோம் :
காரிருள் இரவில் கருக்கொண் டிருந்த
பத்தினி நடந்தெம் பதியி லிருந்த
காளி கோயிலைக் கதியென வடைந்தாள்.
கண்டேன் இந்தக் கற்புக் கனலை !
என்மகள் போலே என்மனை வைத்தே
எனக்குறு ஞானம் இயம்பிக் கவலையை
மாற்றினேன் ; அவளும் மகவை யீன்றதும்,
சிவகதி சேரத் தவவினை தொடர்ந்தாள்.
உத்தமன் உரைத்த உண்மை உண்மையே.....
சத்திய மாகச் சாற்றினேன், பெரியீர் !”
தவத்துறை தேர்ந்த சத்தியக் கிழவி
சொன்னது கேட்டதும், “அன்னதே உண்மை...
வயிர வாணிகன் மகனே, மனைவியை
ஏற்று நன்று போற்றுதல் வேண்டும்.
சொத்துக் குரியவன் உத்தமன் ; அவனே
செட்டி யாரின் செல்வச் சந்ததி”
என்றே பெரியார் இரண்டறச் சொன்னார்.
“நன்றே !” என்றார் நகரத் தாரும்.
வயிர வாணிகன் வைரம் விடுத்துப்
“பெரியீர், எனது பேதமை யாலே,
வம்பர் பொய்யை நம்பிய தாலே,
புத்தி மயங்கிப் புரைசெய் தழிந்தேன்.
பத்தினி எனது பாக்கிய மனைவி ;
உத்தமன் எனக்கே உரியநன் மைந்தன் !
சென்றதை மறப்போம் ; சேர்ந்ததை உகப்போம் !
அழகா புரியெனும் அழகிய கிராமம்,
பட்டினக் கடைகள், பரந்த வாணிகக்
கப்பல்கள் அனைத்தும் கண்மணிச் செல்வன்
ஆளுக நாளும் அன்பும் அறமும்
ஆற்றியென் மரபைப் போற்றிடும் அவனே !
பத்தினி இனியென் உத்தமத் துணைவியாய்
இல்லத் தரசியாய் என்றும் வாழ்கவே !”
இவ்வகை வணிகன் செவ்வுரை பேசவே,
பத்தினி யெழுந்து முத்துரை பகர்ந்தாள் :

பத்தினி வாழ்த்துரை

"வணக்கம் எனது கணவரே வணக்கம்,
வணக்கம் பெரியீர், வாய்மை வென்றது !
மாசறு கற்புந் தேசுறப் பொலிந்தது !
வளையா பதியும் விளைந்ததைக் கண்டேன்.
செல்வத் தந்தை செல்வனை ஏற்றார்.
உள்ளும் புறமும் உலகைப் பார்த்தேன் ;
மாந்தர் இயல்பை மனமுறக் கண்டேன்.
இல்லறங் கண்டேன்.....இல்லிற் பழுத்தே
துறவறம் பூண்டேன். அறம்வளர் ஔவை
எனையாட் கொண்டாள் ; இனியென் வாழ்வை
அவளுக் காக்கிச் சிவபதஞ் சேர்வேன் !
ஆதலாற் கணவரே, அன்பு மகனையே,
பிரியமாய்ப் பேணி உரியநன் மரபை
வாழையடி வாழையாய் வாழச் செய்வீர் !
இந்தச் சொற்களால் என்னை நினைப்பீர் :
உலகிற் பிறந்த உயிர்க்குலம் அனைத்தும்,
உயிர்க்குயி ரான ஒருவன் மயமாம் ;
பிறந்தவ ரெல்லாம் சிறந்தவர் தாமே !
ஒருமொழி யாளர் ஒருதாய் மக்கள் ;
தமிழர் அனைவரும் தமிழ்க்குல மாவார்.
சாதி வாதம் பேதமை யாகும்.
அன்புள காதலர் அறவழி யில்லறந்
தாங்கி இன்பம் ஓங்கி வாழ்கவே !
ஒருவருக் கொருவர் ஒருமை யுணர்வுடன்
உதவியாய் வாழ்க ! உலகிற் பிறந்தார்,
உடலிற் புகுந்தார்; ஒருவரும் இங்கே
நீண்ட காலம் நிலைப்ப தில்லை.
தொட்டிலி லிருந்து சுடுகாட் டிற்கு
நடக்கும் ஊர்வலம் நமது வாழ்வே !
இடையே நடக்கும் இந்த வாழ்வைப்
பொய்ம்மா யத்திற் போக்கிவி டாமல்,
மெய்வழி நடந்து துய்யவ ராகி,
நாணுவ நாணிப் பேணுவ பேணி
அருளே நினைந்துநல் லன்பே புரிந்து
சமயங் கடந்த சமரசப் பொருளாம்
சச்சிதா னந்த சதாசிவ குருவைச்
சரணம் புகுந்து, சரியை கிரியை

சுத்த யோக சித்தியால் ஞானச்
சுடரொளி கலந்து சுதந்தர மான
சீவன் முத்தராய்த் தேவராய் மாந்தர்
மங்கல மாக வாழிய மாதோ !"
கேட்ட சுந்தரி கிளர்ச்சி கொண்டு
செல்வோம் அரக்கரை வெல்வோம் என்று
வீரத் துணிவுடன் விளங்கினு ளாங்கே.
சங்கமும் எழுந்தது சஞ்சலந் தீர்ந்தே.
இத்ததி அரக்கர் இரத்தவா ளுடனே
கைது செய்தோம் காவலன் முன்னே
வருக வென்று வலிவுறப் பற்றி
அன்பரை விடுத்தார் அரக்கரின் முன்னே ! 1376

23. தண்டனைப் படலம்

எப்படி வீழ்ந்து சோர்ந்தோம், எப்படி உறங்கிப் போனோம் ;
எப்படி எனது மூளை உறுதியை யிழந்த தென்றே
இப்படி அரக்கன் காலை எழுந்துசிந் தித்த போதே
"அப்படி" என்றே ஒற்றர் அரசன்முன் வந்து நின்றார்....

படைக்கல மெங்கே ? என்றன் பலமெங்கே ? யாருக்கோ நான்
அடைக்கல மான தைப்போல் அகம்புற முணரு கின்றேன்.
கடைக்குணத் தம்பி யிந்தக் கலைஞரை ஏவி யென்னை
மடக்கிடச் செய்த தீய மாயமோ அறிவிப் பீரே...

ஒற்றர்

கலையெனும் பெயரி னாலே, கதவினை யடைத்துக் கொண்டு,
தலைவனும் அந்த மெய்யன் சதிசெய்துன் அரசை இன்று
நிலைதடு மாற்று கின்ற திறத்தினை நேரே கண்டோம் ;
அலைகடந் துனது தம்பி அனலனும் உதவு கின்றான்...

மாதரை வசப்ப டுத்தி, மாதரால் ஊணர் தம்மைத்
தீதற வசப்ப டுத்தித் தீவெங்குஞ் சன்மார்க் கத்தைப்
போதனை புரிந்து, நாம்செய் போகவாழ் வொழிய நாளும்
சாதனை செய்கின் றாரத் தருமமே வெற்றி யென்பார்.

மாவலி

போரிலாப் பொறுமை யாளர் புகுந்தென தரசி லின்று
நாரியர் பணிவைக் கொண்டு, நாயகர் பணியச் செய்து,
காரியஞ் சாதிக் கின்றார்....கடுஞ்சிறை யிட்டா லன்றி
நேரிலென் அரசி னுக்கே நேரல ராவா ரன்றே ! 20

கொண்டுடன் வருவீர் அந்தக் கொடுங்கலை வாணர் தம்மை ;
இன்றுடன் சிறையி லிட்டேன் இனத்தினைக் காப்பேன் என்று
குன்றுயர் தோளுயர்த்திக் குலுக்கிமார் தட்டிக் கண்ணிற்
கன்றிய சினத்தீ பொங்கக் கட்டளை யிட்டான் வெய்யோன்...

சட்டெனச் சென்று வெய்யோர் சத்தியக் கலைஞர் தம்மைக்
கட்டினர் கையுங் காலுங் காரணங் கேட்கு முன்னே
வெட்டிமின் னென்ன வேக விசைவண்டி தனிற்கொ ணர்ந்து,
விட்டனர் மன்னன் முன்னே விண்பழி விளம்பி னரே !

தீப்பொறி விழியி னனைத் திசைகெடு கெடுக்கப் பேசு
நாப்பொரி மொழியி னனை, நாத்திகத் திமிரி னனை,
நீப்பறு மமதை கொண்டு நிமிர்ந்திருந் தலையி னனைப்
பூப்பொரு நகையி னலே போகனுங் கண்டு சொன்னன்...

போகன்

சாந்தமாய்க் கலைவ ளர்க்கும் சாதுக்க ளாவார் தம்மை
வேந்தநீ ஒறுத்த லேனோ ? விளம்பிடுற் பிழையை நீப்போம்.
ஆய்ந்தநன் நீதி தேர்ந்தே ,அனைவர்க்கும் அன்பு செய்தல்
ஏந்தலென் றிருப்பார் செய்கை ; இடர்செயல் அநீதி யாமே !

வசையறு கலைஞர் கூடி, வஞ்சமில் அன்பு பேணி,
இசையினல், இனிய வாழ்வால் இறைவனைப் போற்று கின்றேம்;
தசைவளர் பலமே போற்றுந் தானவர் கோனே, இந்த
நசைவளர் அரக்கர் எம்மை நலிப்பதும் விந்தை தானே ! 40

மாவலி

அடக்கடா வாயை ; என்றன் ஆத்திரக் கொதிப்புத் தீர
மடக்குவேன் சதிக்கூட் டத்தை; வன்சிறையடைப்பேன்; பொல்லா
விடத்தினும் கொடிய துங்கள் வீணையும் கவியும் பாட்டும்
நடத்தையும் பேச்சு மென்று நவின்றனன் அரக்கர் கோமான்.

எத்தனை பெண்டிர்க் கின்பம், எத்தனை ஆண்கட் கின்பம்,
எத்தனை படைகட் கின்பம், எத்தனை உடலுக் கின்பம்
நித்திய மளித்த வூனர் நிலத்திலே கடவுளன்புப்
பித்தரைப் போலப் பேசிப் பெரும்பிழை செய்ய லானீர் !...

சக்தி

எத்தனை மாந்தர்க் கின்னல், எத்தனை மாதர்க் கின்னல்,
எத்தனை ஊர்கட் கின்னல், இழைத்தநின் மரபு, போரின்
பித்தமற் றன்பு கொண்டு, பேரருள் வழியில் உய்ய
உத்தமர் வந்தார் ; அன்னர் உதவியை மறுக்க லாமோ ?

மாவலி

உன்னையு மயக்கி, யிந்த ஊரையு மயக்கித் தம்பி
தன்னையு மயக்கி, யிந்தத் தானவந் தனைம யக்கி,
என்னவோ செய்து விட்டார் இருவரும் ; எனையே தெய்வம்
என்னவே பணிந்தால் உய்வார் ; இல்லெனில் இறப்ப தாமே.

மெய்யன்

பாரெலாம் பரவி யாளும் பரம்பொருள் ஒன்றே தெய்வம்,
பேர்வடி வான பேதப் பிறவிகள் அனைத்தும் அந்த
ஓர்பொருட் சக்தி யென்ற உண்மையை அறிந்த தூயர்,
யாரையும் பணிவ தில்லை ; இறைவனுக் கிணையும் உண்டோ?

உன்னினும் வலிய ஊணர், வரங்களை உடையார், முன்னே
இன்னலே செய்தார் ; தெய்வ சக்திமுன் இறந்து பட்டார்.
என்னுமுன் மெய்ய னுங்கே, மாவலி எரிந்து வீழ்ந்து,
தன்னவர் புகழைச் சொல்லித் தற்புகழ் பேசி னனே.

மாவலி

*கொடுத்தவன் சிரத்தி லேறிக் குள்ளனே மிதித்த காதை
படித்தபோ தெனது நெஞ்சு படபடத் திரத்தம் சூடாய்,
எடுத்தனன் வைர வாளை இரக்கத்தை விடுத்தேன் ; வாளி
தொடுத்தனன் மாய விஷ்ணு தோற்றிடக் கடும்போர் செய்வேன்.

வரங்களைப் பெற்ற வீர ராவணன் சாக வேண்டிக்
குரங்கு மூஞ்சிகளைக் கொண்டோர் கோடரிக் காம்பு சேரப்
பரம்பொருள் என்னப் பேசிப் பாமரர் வணக்கங் கொண்டு,
நரங்கெழு ராமன் செய்த நாசத்தை என்ன சொல்வேன் !

ஆசையாற் கெட்டா ரில்லை ; அறமழித் தழிந்தா ரில்லை ;
பாசத்தாற் கெட்டா ரில்லை ; படைகளாற் கெட்டா ரில்லை ;
பூசையாற் கெட்டார், வேதப் புரட்டினுற் கெட்டார், மாந்தர்
மோசத்தாற் கெட்டார் எங்கள் முன்னவர் அரக்க ரானோர்.

நகமுடன் கொம்பும் வில்லும் நயவஞ்சக் கதையுங் காட்டிப்
பகைவரெம் மரபையெல்லாம் பண்டையில் அழித்தார் ; அந்த
மிகைபெறுந் துரோகத் திற்கு வெம்பழி வாங்கவே யான்
சகமெலாம் வாளின் வென்று, தானவ மாக்கு வேனே !

உருக்கொண்டு மகளாய் வந்தாய், ஊணரின் மாண்ப ழித்தாய்;
வெருக்கொண்டுன் பக்தி கான வேடங்க ளனைத்தும் போக்கிக்
கருக்கொண்ட சினத்தினுலே கனகன்போல் இடும்பை செய்வேன்,
சருக் கென்று கடவு ளென்னும் சாகசம் விடுவாய் சேயே !

* மகாபலி

சத்தி

என்மனக் கோயிலில் எழுந்த சுத்தனை
உன்மதங் கொண்டநீ உண்மை யற்றநீ,
வன்மொழி பேசினை வரம்பி லாமலே,
தன்மனச் சாட்சியைத் தவிர்ப்ப தாகுமோ ?

திருவுடை மெய்யனித் தியர் தீவிலே
அருளுடை பின்பத்தை யாக்க வந்தனன் ;
இருளுடை நெஞ்சினாய், ஈன்ற தந்தையென்று
ஒருமொழி சொல்லுவேன் உறுதி யாகவே....

பூதத்தா லாகிய புல்லு டம்பிலே,
நாதத்தா லாகிய ஞான முள்ளதே,—
வேதத்தா லாகிய விமல வத்துவாம்
ஆதித்தன் போலொளிர் ஆன்ம ஜோதியே.

1510/2

அந்நகைச் சோதியின் அருள்வ டிவமே
சுத்தனென் றியல்புறத் தொழுவ தென்னுளம்,
இத்தகைத் தொழுகையின் இன்ப மேயெனை
உத்தம நிலையினில் உயர்த்த வந்ததே....

அந்நிலைக் குயர்த்தியென் அறிவைத் தூண்டிட,
நன்னெறிப் பெரியவர் நயந்து வந்தனர்,
இன்னவர் நமக்குநல் லியற்கை வாழ்வினைச்
சொன்னவர் ; அவரை நீ தொழுதல் வேண்டுமே !

மனத்தினை அடக்கலு மதி துலக்கலும்,
தனத்தினை ஈதலும், தருமங் காத்தலும்,
அனைத்தையுங் கடவுளென் றன்பு செய்தலும்,
தனைத்தினந் திருத்தலுந் தகைமை யாகுமே.

அவரவர்க் குரியநல் லரசைப் போற்றியே,
அவரவர் அளவினில் அமைதல் இன்பமே ;
அவரவர் உரிமையின் அதிகம் வெளவினால்
அவரவர் உரிமையும் அழிவ தாகுமே !

வஞ்சமு மமதையும், வலிய காமமும்,
வெஞ்சமர் வெறிகளும், வினைபொ றுமையும்,
நஞ்சென மாந்தரை நலித்து நாடொறும்
சஞ்சலச் சிறையிருள் சாரத் தள்ளுமே.

மீன்விழி மிளிர்ந்திட மென்ம லர்நகை
தேன்மொழி தழுவிடச் செல்வி பேசலும்,
ஊன்விழி யுருட்டினன் உதட்டைக் கௌவினான்—
கோனெனப் பெயர்பெறுங் கொடிய தந்தையே.

மாவலி

குடிகெட வந்தனை குழந்தை யல்லைநீ
கொடியவள் பெறத்தகுங் கொடிய கோதையே
இடியெனப் பேசியென் எரியை மூட்டினை—
வெடிபடச் சுட்டுனை வீழ்த்த வேண்டுமே...

சுந்தரி

நின்பிழை யுணர்த்திய நிமலச் சேயினை
என்பிழை செய்தனை, என்னை வஞ்சித்தாய் !
தன்பிழை யறிகிலாத் தன்மை கொண்டனை ;
வன்பிழை பெருக்கினை வசையு மிக்கனை.

கள்ளர்க்கும், கய்வர்க்குங், காமப் பித்தர்க்கும்,
உள்ளது சொல்லிடின் உடம்பெ ரிச்சலாம்.
வெள்ளையாய் உன்குறை விளம்பும் என்கலைக்
கிள்ளையைப் பணிந்திடிற் கீர்த்தி சேருமே....

மாவலி

அழகென உன்னைநான் அள்ளி வந்தனன் ;
பழகிடப் புளித்திடும் பாலைப் போன்றனை ;
கழகமொன் றமைத்தனை, கலையின் பேரினல்
வழியினைத் திறந்தனை தம்பி வாழவே !

இன்பமென் றுன்னைநான் எடுத்து வந்தனன் ;
அன்பையுந் தந்தனன் ஆசை யாகவே ;
பின்புனை விடுத்ததிற் பிழையும் இல்லையே
துன்பமுந் தொல்லையுந் தொகுத்த சுந்தரி ! 140

நல்லவர் என்றிரு நரரைக் கூடியே
அல்லலைச் செய்திடும் அழகுக் கொள்ளியே !
கல்வியுங் கலைகளுங் காட்டித் தானவ
மல்லரின் குணத்தினை மாற்றி விட்டனை....

தனியராய் வந்தவர் தான வத்திலே,
இனியவர் என்றுநல் லிசையும் பெற்றனர் ;
அனைவரும் அவர்வழி அன்பு செய்கின்றார் ;
எனைமறந் தெவனையோ இறைவ னென்கின்றார்..

எழுந்ததென் சினத்தீ எட்ஞ எரிமலை யெனவே பாட்டைப்
பொழிந்தவர் தமைவிலங்கு போட்டுவெஞ் சிறையில் வாடி,
அழிந்திடச் செய்வேன் என்றான் ; அரக்கரை யுடனே ஏவி
இழிந்த சொல் லியம்பிச் சென்றான் இதம்பத மறிகி லாதான் !

பித்துறும் அரக்க ராங்கே பிடித்திரு தலைவர் தம்மை,
மொத்தினர் ; விலங்கு மாட்டிச் சிறையிட்டு மூடி னார்கள் ;
"சத்தியம் வெல்லும் ஆன்ற தருமமே ஓங்கும்" என்ற
உத்தமக் குலந்த செய்த உதவியை உரைக்கக் கேளீர்.

சங்கஞ்சேர் நேய ரெல்லாஞ் சுந்தரி தலைமை தாங்கச்
சிங்கம்போ லெழுந்து தாமும் சிறைபுகக் கிளர்ச்சி செய்தார் ;
அங்கவர் முயற்சி பாலே ஆத்திரங் கொண்ட ஊணன்
பங்கமுற் றிணங்கி வந்த பண்பினைப் பகரு வோமால். 160

24. கிளர்ச்சிப் படலம்

நன்றியும் அன்புங் கொண்ட நல்லவர் நன்மை செய்ய
ஒன்றிடின் உறுதி யாக, உண்மைக்கே உயிரை நல்க
நின்றிடின், பொறுமை யாக நினைத்தவை யனைத்தும் எய்தி
வென்றிடு வார்கள் என்னும் வினையறம் பிழைப்ப துண்டோ ?

"தந்திரச் சைத்தான் போலத் தானவர் முளைத் தாரின்று ;
வந்தனை செய்யத் தக்க கடவுளை மறுப்பார், நம்மைப்
பந்தனை செய்வார் இந்தப் பகைவரை வெல்வோம்" என்று
சுந்தரி எழுந்தாள் வீர சுதந்தர பேரி கொட்டி.....

சுந்தரியின் வீர முழக்கம்

தானவ நாட்டீர் ! தானவப் பெண்டீர் !
மானங் காக்க மாண்புடன் எழுமின் !
ஈன வாழ்வை இன்றுடன் விடுமின் ,
மானிடப் பிறவி மேன்மை பெறவே,
கருதுமின் அறத்தைக் காமின் ; அதன்பால்
வருதுயர் பொறுமின் ; வஞ்சகர் செய்யும்
கொடுமையைக் குமைத்து விடுதலை பெறுவோம்.
கண்முனே காட்டுவோம், பெண்மணிக் கனலை.
மெய்யனும் போகனும் ஐயமில் லாத
துய்ய நன்னெறி துலக்கிநம் வாழ்வைத்
தெய்வக் கலையாய்ச் சிற்பஞ் செய்தார்.
பாட்டும் வீணையும், படமும் சிற்பமும்,
இலக்கிய விருந்தும் இனிதுற நல்கிக்
கலையால் வாழ்வு கவின்பெறச் செய்து,
நாத்திக வுளத்தில் ஆத்திகம் வளரக்
கடவு ளன்புங் கருணையும் புகட்டி
நம்மையீ டேற்றிய செம்மனக் குருமார்...

எந்தக் குற்றமும் இழைத்தா ரில்லை.
சிறையிட் டவரைச் சித்திர வதைசெய்
ஊணர் கொடுங்கோல் ஒழிக ஒழிகவே !
சுத்தசன் மார்க்கச் சுதந்தரத் தோழர்காள்
எழுமின் அரக்கரை எதிர்மின் இன்றே....
மனவலி யாலே வாள்வலி வெல்வோம் !
எழுகபெண் ணுலகம், எழுகபெண் சக்தி...
தானவக் காட்டைச் சமன்செய வாரீர்...
கணவரைத் திருத்தக் கங்கணங் கட்டுவீர் !
குடிகொலைப் பழிசெய் கொண்கரை அருகே
அணுக விடாதீர் ; அடிமையா காதீர்.
சமைத்துண விடாதீர் ; தாழ்ந்து கொடாதீர்.
புட்டியை உடைப்பீர், போக சாலையை
மறியல் செய்வீர், மாமிசக் கடைகள்
எடுபடப் புலாலை எவரும் தொடாதீர்....
நாத்திக வாடை நலியப் பலமாய்ச்
சுத்த சக்தி சுருதியைப் பாடுவீர்....
அரக்கரை முன்னே அழித்த பரமன்
இருக்கிறன் காப்பான் இடர்பல வரினும்,
அடினும் அரக்கர் சுடினும் அஞ்சோம்.
ஆண்மை கொண்டநல் ஆடவர் வருகவே !
ஆருயிர்க் கெல்லாம் அன்பும் அறமும்
சுதந்தர வாழ்வும் துலங்கிடச் செய்வோம்....
தானவச் சட்டம் சதையுட லத்தைச்
சிறையிடும், வெட்டும், சித்திர வதைசெயும் ;
நில்லா உடலை நல்லதிற் களிப்போம்...
தியாகத் தாலே சித்த சுத்தியாம்.
மாவலி விரும்பிய மனைவியான் இப்படிப்
பேசும் காரணம் பேசக் கேளீர் :
சீகரத் தீவிலே திருடிய தாலோ,
விரும்பிச் சிலநாள் வெறுத்த தாலோ,
விசன மில்லை, வேறு தனித்து
விரதம் பூண்டு விமலையாய் வாழ்வதே
என்பே ரின்பம், என்சின மெல்லாம்,
அசுரத் தனஞ்செய் அழிசெயல் மீதே....
பெண்களைத் திருடல் பெரும்பிழை யாகும்.
கொண்டுவந் தாரைக் குலாவிச் சிலநாள்
கைவிட் டுடனே கற்பை யழிக்கப்
பெண்களைத் தேடல் பெரும்பிழை யாகும்.

குலபத் தினியரை நலங்கெடக் கூட்டிப்
போக சாலையிற் புத்தி மயக்கும்
கள்ளுண் உண்டு, காட்டு விலங்கினும்
கேவல மான கேளிகை நடத்தல்,
யாவரும் வெறுக்கும் இழிசெய லன்றே ?
எல்லாம் வல்ல இறைவனை மறுக்கும்
நாத்திகத் திமிரும், ஆத்திகர் தம்மை
எள்ளி வருத்திக் கொள்ளை யடிக்கும்
நிமையும், அரசர் நாமெனும் செருக்கால்
உலகை யெல்லாம் கலகக் காடெனச்
அதர்மக் கொலையும், அடியோ டொழிந்து,
மாவலி திருந்தி, மாயு திருந்தி,
இவரால் உலகம் இனிவருந் தாது
சாந்தமாய் வாழவே சக்தியும் யானும்,
பணிசெயப் புகுந்தோம் பண்புள நண்பீர் !
அணியணி யாகத் துணிவுடன் வாரீர்.
சிறையிட் டாலும் சிலுவையிட் டாலும்,
வெட்டி னாலும் சுட்டெரித் தாலும்,
அஞ்சோம் அஞ்சோம், கெஞ்சோம் கெஞ்சோம்,
அதர்மம் ஒழிக சுதர்மம் வாழ்கவே......

* * *

முன்பே மெய்யன் மூட்டிய உணர்வும்,
சிறையால் எழுந்த சீரிய உணர்வும்,
சுந்தரி மூட்டிய சுதந்தர உணர்வும்,
சேர்ந்து தானவத் தினர் உளத்தில்,
வீர விந்தலை வீரத மெழுப்பத்
தளர்ச்சியில் லாது கிளர்ச்சியிற் சேர்ந்து,
நேயர் கொள்கையை நிலைநாட் டினரே.
சுந்தரி சொல்லைச் சுருதியாய்க் கொண்டு,
மாதர் கிளர்ந்தனர் ; மாதர் ஊக்கிய
தானவர் கிளர்ந்தார் ; சன்மார்க் கத்தின்
அன்பர் அனைவரும் அறப்பணிக் கெழுந்தார்.
கட்புலால் வேசைக் கடைகளை மறித்தார்,
அரக்கத் தன்மை ஆக்கம் பெறுது,
செய்யத் தகுந்த செயலெலாம் செய்தார்.
அச்சும் மேடையும் அரங்கும் அதிரப்
பாடினர் பேசினர் பணிகளைச் செய்தார்....
அல்லும் பகலும் ஆயிரங் குரல்கள்

மெய்யனை அடைத்த வெய்ய சிறைமுன்
விடுதலை யுணர்ச்சி வேகம் பரவ
இசைத்த பாடலை இயம்புகின் றேனே :

சன்மார்க்கப் பாட்டு

சுத்த சக்தி யன்பிலே துலங்கும் ஆன்ம நேயர்காள்,
சுதந்தரச் சமரிலே துணிந்த வீரத் தொண்டர்காள் !
பத்தி ஞான கர்ம யோகப் பண்ப றிந்த யோகிகாள்,
பாரில் உண்மை யின்பமே பரவ நன்மை செய்குவோம் !

ஊரொடுக்கி உலகொடுக்கி உயிரொடுக்கிப் போர்செயும்,
ஊணர்தீமை யின்றிச்செம்மையோங்கவாழுந்தொண்டர்நாம்
யாரொடுக்க வல்லரெங்கள் ஆத்ம சக்தி யித்தினம்,
எமபடர்க்கும் அஞ்சிலோம்இறப்பைவென்றுமுன்செல்வோம்.

உடலுயிர் பொருளெலாம் உலக நன்மைக் கீந்தனம் ;
ஊறுசெய்யும் தீமையை உறுதிகொண்டு தாக்குவோம்.
கடவுளைக் கருத்திலும் கடமையைக் கரத்திலும்,
கருணையை உளத்திலும் கனிந்த ணிந்து முந்துவோம் !

உயிர்களைக் கொலைசெய் துண்ணும் பாவம் ஒழிக ஒழிகவே
உள்ளநன் மதிமயக்குங் கள்ளரக்கன் ஒழிகவே.
பயிர்கனி யினங்களைப் பசித்தபோ தருந்தியே
பழரசமும் பாலுந் தேனும் நீருடன் பருகுவீர் !

மனப்பொருத்தங் கண்டொரு மனைவிகட்டி வாழுவீர்,
மாதர்கற் பழித்திடு மனமயக்கை மாற்றுவீர்.
இனச்செருக்கி லாமலே இடர்பகையி லாமலே
இன்னுயிரு மன்னுயிரும் ஏகமென்று வாழுவீர்.

வலியவர் மெலியவரை வஞ்சனைசெய் யாமலே,
வறு[illegible]ம மடமை அடிமை யச்சம் வாட்டியுண்டி டாமலே
அலையும் [illegible]சை யாணவம் அதர்மங்கள்செய் யாமலே,
அன்[illegible]ந்து கூடி வாழ்க ஆன்மநேயர் சங்கமே

ஏழை[illegible]றும் செல்வரென்றும் எவருமில்லை ஆதியில்,
[illegible]ன்றும் தீனரென்றும் எவருமில்லை பிறவியில்,
கோ[illegible]ன்றும்கொடுமைசெய்யும்கொற்றரென்றும்இல்லையே;
[illegible]கார மனதை வென்று குலமொன்றுன நேயர்காள்.

சா[illegible]ண்டையும் சமயவாதச் சண்டையும்,
[illegible]றிந்தவர்க்குச் சற்றுமில்லை யென்றுமே.
ஆ[illegible]தியின் அருமை மக்கள் யாவரும்,
[illegible]வான் குடைநிழலில் அன்புகொண்டு வாழுவோம்.

மனிதரை மனிதர் கொல்லும் வாளரக்கப் போர்களேன் ?
மனிதரை மனிதர் தேய்க்கும் வஞ்சவாணி கங்களேன் ?
மனிதரை மனிதர் வீழ்த்தும் வன்மனக் கொடுமையேன் ?
மனிதரை மனிதராய் மதித்தினிது வாழுவோம் !

ஆணும் பெண்ணும் சரிசமான மாகவாழ்க வாழ்கவே,
அடிமை செய்யும் கட்டுகள் அனைத்தும் வீழ்க வீழ்கவே
மாறுறும் சுதந்தரம் மனிதவாழ்வில் ஓங்கவே
மண்ணும் விண்ணு மன்றல்கொண்டு மங்களம் பொலிகவே..

வீரமோங்க வீரர் தொண்டில் வெற்றியோங்க நாளுமே
சாரமான ஞானமோங்க சத்தியச்சொல் லோங்கவே
தீரமான சிந்தை யோங்கத் தெய்வசக்தி யோங்கவே,
பாரிலுண்மை யோங்கவே பணிபுரிய வாருங்கள் !

எண்புகையும் சுந்தரி யிசைமுழங்கிச் செய்திடும்
தொண்டுடன் ஜனங்களின் சுதந்தரக் கிளர்ச்சியும்
கண்டுளங் கலங்கினான் கறுத்துளஞ் சினந்தனன் ;
பெண்டிலகம் பேதையல்ல பேயெனப் பிதற்றினான்.

அலகிலாத காதல்கொண்டெடன் ஆசைபெற்ற சுந்தரி,
நலமெனக்குச் செய்தலென்று நாட்டையே கிளப்பினாள் ;
கலகக்காரச் சுந்தரியைக் கைதுசெய் தடக்குமின் ;
கலகம் இன்னும் ஓங்கிடிற் கனல்வெடியை வீசுமின்...

மாவலியிவ் வாறுசொல்லி வாயைமூடப் பேயரும்
தாவி யோடிச் சுந்தரி தனித்திருந்த வேளையில்,
வாவென வளைத்தனர் தளைத்தனர் சிறைக்குளே
போவெனப் புகுத்தினர் வலுத்த பூட்டுப் பூட்டினார்.....

வீறுகொண்ட செல்விக்கோர் குறிப்பினை விளக்கியே,
நீறுகொண்ட தீயென் றன்னை நீள்சிறை யிருப்பினும்,
மாறுகொண்ட ஊணரின் வலியசேனை தாக்கினும்
மீறுகின்ற நல்ல கால வேகத்தைத் தடுக்கவோ ?

25. சக்தி யெழுந்த படலம்

தாமெனும் அகந்தை கொண்டு தன்னிலை மீறிச் செல்லும்
தாமத வரக்கர் தம்மைத் தரும தேவதை வதைக்கக்
காமமும் பொன்னு மண்ணுங் காட்டியோர் வெறியை யேற்றிப்
பூமியின் பாரந் தீர வீழ்த்திடும் பொறுமை யென்னே !

அறவழி கிளர்ச்சி செய்யும் ஆன்மநே யர்க ளொத்தன்
மறவழிப் படையி னாலும் வன்சிறை யிடுத லாலும்,
அறவழித் திடுவேன் என்னும் அரக்கனைச் சுற்றி மற்றோர்
பொறைவழிக் கிளர்ச்சி வந்து புந்தியைக் கலக்கிற் றம்மா !

ஒருவரை வாயடக்க ஊரெலாம் வாய்திறக்க,
ஒருவரைச் சிறையடைக்க ஊரெலாம் சிறைமுன் நிற்க,
ஒருவரைச் செயல டக்க ஊரெலாம் செயலெழுச்சி
பெருகிய தமுத சக்தி பேசிய திறத்தி னாலே.

படப்படத்தளிர்ப்போம்;யார்க்கும்பயமின்றியுண்மைசொல்வோம்,
அடக்கிடு முறைக ளாலே அகக்கனல் அடக்கு வாரோ ?
சுடச்சுடச் சினந்திட் டாலும், சுடச்சுட நியாயம் சொல்வோம்,
திடக்கருத் துடனே தொண்டர் தீமையை யெதிர்த்து வெல்வோம்.

செய்வகை யறிந்து செய்து, செயமுழக் கத்தி னூடே
இவ்வகை சக்தி செய்யும் இனியநற் கடமை யெல்லாம்,
உய்வகை யறியா ஊணன் உள்ளத்தை வெதுப்ப, மிக்க
வெவ்வகை யாலே தொண்டர் வேகத்தைஒடுக்கப் பாய்ந்தான். 20

கூச்சலைத்தடுத்தான்; அன்பர்கூட்டத்தைத் தடுத்தான் ; அன்னார்
பேச்சினைத் தடுத்தான்; மெய்யன்பெயரையுந் தடுத்தான்;கைகள்
வீச்சினைத் தடுத்தான்; பெண்டிர்வெளிவரத் தடுத்தான்; இந்த
ஏச்சினைப் பொறுத்தி டாதார் இனுமினுங் கிளர்ச்சி செய்தார்...

உட்சினம் பொங்கி ஊணன், உத்தமத் தொண்டர் கூடிக்
கட்கடை மறித்த போது, கட்குடிச் சட்டம் போட்டான் ;
வெட்கமி லாத போக சாலையை வெறுத்தோர் தம்மை.
உட்கிட நாணம், ஆடை உரிந்தவ மானஞ் செய்தான்.

"இடும்பைசெய் கொடுங்கோ லிங்கே ஏ"னெனக் கேட்ட நாவைத்
தடிந்தனன்; அவமானத்தைத் தடுத்தவர் கையைக்கொய்தான்
ஒடுங்கிடா தின்னும் ஊருக் குதவியோர் செல்வ மெல்லாம்
கடும்புய லென்ன வாரிக் கவந்தன்போல் விழுங்கி னானே !

தெய்வத்தைத் துதித்த நாவைத் தீயினாற் சுட்டான் ; யாரும்
சைவநல் லுணவைப் போற்றிற் சாம்பிணக் கூட்டி லிட்டான்.
துய்யகற் பொழுக்கம் பேசிற் சுரிகையை வயிற்றில் வைத்தான்.
வெய்யவன் வெம்மையாலே விளைந்தன தொல்லை யம்மா !

சக்தியின் அறிக்கை

கெடுக நீங்கெனக் கிளர்ந்தனள் சக்தி!
"தந்தையே உனது சிந்தையை மாற்றாய்.
அகில வுலகெலாம் அரக்கனென் றுன்னை

அஞ்சி வெறுக்கும் அடக்கு முறைகளும்,
சித்திர வதையும், சிறைசெய் வதையும்,
சன்மார்க் கிகள்படுஞ் சாற்ருெணுத் துயரும்,
இனியார் பொறுப்பார் ; இன்றுநீ மெய்யனே,
போகனை அன்னையைப் புனிதமெய் யன்பரைச்
சிறைவிடு வித்துக் குறைதீர் ; இன்றேல்,
மகளாய்ப் பிறந்த மாசினை வருந்தி
உண்ணு திறப்பேன் ; எண்ணுய் உறுதி.
இறந்து மீண்டும் பிறந்து, பிறந்து,
அரக்கர் கொடுங்கோல் அழியவே வாழ்வேன்....
இரக்கமில் லாமல், இன்ன லிழைப்போர்
புலியினுங் கொடிய விலங்குக ளன்றி,
மானிட ரென்று மதிக்கப் பெறுவரோ ?
நல்லது சொல்லினும் அல்லலே செய்வோய்,
உலகை வருத்தும் உன்மக ளென்றே
என்னைக் கருதேன் ; அன்னை சுந்தரி
உயிரே என்னுயிர் ; உபவா சத்தால்
உடலை விட்டுன் கடனைத் தீர்த்துப்
புண்ணியப் பிறவி நண்ணியிவ் வுலகில்
சுத்தசன் மார்க்கத் தொண்டுசெய் வேனே...."
என்றிவ் வறிக்கை ஈந்ததும், சக்தி
சிறைச்சா லைக்கெதிர் செழிவன மிருந்து,
அசுரக் கொடுமை அடங்கி யுலகில்
அறவோர் வாழவே இறைவனைத் துதித்தாள்.
தொண்டருங் கூடித் துதித்துநின் ருரே.

கண்டனன்அறிக்கைவெய்யோன்;கருணையுஞ் சினச்செருக்குங்
கொண்டனன்; மனது சற்றே குழைந்துதுன் மதியின்சொல்லால்,
"பெண்டிரின் பிடிவாதத்தைப் பேயெனத் தகர்ப்பேன்" என்றே
அண்டையி லிருந்த ஊணர் ஆயுதம் எடுக்கச் செய்தான்...

சட்டமுஞ் சாய வில்லை, தண்டனை பலிக்க வில்லை,
கொட்டமும் அடங்க வில்லை குமாரியும் அடத்தி னுலே
பட்டினி கிடந்தால், இன்னும் பரிவுடன் இளம்பு வார்கள் ;
சுட்டவர் வீழச் செய்வீர், துபாக்கியே சக்தி யென்ருன்.

மனத்தினைக் கொள்ளை கொண்டாள் ; மகளெனப் பொறுத்தி
ருந்தேன்.
இனத்தினைக் கொள்ளைகொண்டெ்ன் இலட்சியந் தனையெதிர்த்துச்
சனத்தினைக் கிளப்பி நாளும் சங்கடஞ் செய்தென் வெய்ய
சினத்தினைக் கிளப்பி விட்டாள் சேயெனக் கருத லாமோ ?

இனவலி குறைந்த தேனும், இரும்புண்டு, கனலு முண்டு
சினவலி யுண்டு சேனைத் திரளுண்டு சட்ட முண்டு ;
மனவலி படைத்த தொண்டர் மாண்பினைக் காண்போம் என்றே
கனவலி யரக்கர் தம்மைக் கடிதினில் ஏவி னானே....

சக்தியின் விரதம்

பூரண யோக சக்தி புண்ணிய ஞான சக்தி,
ஆரண நாத சக்தி, ஆத்தும நேய சக்தி,
வீரரின் விஜய சக்தி விளங்கருட் கதிர்கள் வீசும்
பாரத சக்தி யான பரிதியை நினைந்தாள் சக்தி....

இழிதரு கொடிய வாழ்க்கை யின்றியித் தானவர்கோன்
பழிதரும் பாப மின்றிப் பரிவுறத் திருந்து மட்டும்,
அழிபசிக் கன்னங் கொள்ளேன் ; அறிதிரென் றன்புச் சக்தி
செழிதரு சோலைவீட்டிற் சிறையெதிர் தவமி ருந்தாள்.

கன்னிநீ குடும்ப வாழ்விற் கால்வைக்கும் பருவந் தன்னில்,
என்னநீ செய்கின் றாயென் இணைவிழி மானே, உன்றன்
பொன்னணி வாழ்க்கை யெங்கே ? புன்னகை யின்ப மெங்கே ?
இன்னலே னென்று தந்தை இளகிய மொழியுஞ் சொன்னான்.

அன்னையை, போக மெய்யர் அன்பரை விடுவித் தெங்கள்
இன்னியற் கலைமு யற்சிக் கிடந்தர வில்லை யாயின்,
அன்னமும் வேண்டேன் உன்றன் அருமைநன் மகளா மென்றே
இன்னமும் வாழ வேண்டேன் என்றனள் உறுதி கொண்டே.

பித்தினைத் தணிப்பேன் என்றே பெரும்படை காவல் வைத்து,
மத்துறு தயிரைப் போன்று மனமலை யரக்கன் சென்றான்...
சக்தியின் விரதத் தாலே தானவன் கொடுமை கண்டு
மொய்த்தனர் மக்கள் ஆட்சி முறையினைக் குறைசொன்னாரே.

இனியநல் லன்னை பெற்ற மகளிவள் ; இனிய நல்லாள்,
கனிநகைச் செல்வி யார்க்குங் கருணையே காட்டு நீராள் ;
பனிமொழிப் பாவை தெய்வப் பாசுரம் பாடி யெம்மைத்
தினம்பர வசப்ப டுத்துந் தேவியெம் ஆவி யன்னாள்.

பதிதரின் பாப வாழ்வைப் பக்குவ மாகப் போக்கிக்
கதிதர வந்த மெய்யர் கடுஞ்சிறை தவிப்ப தாமோ ?
மதிமிகும் அழகி யிங்கே வருந்திடக் காண்ப தாமோ ?
துதிமிகு சக்தி வாட நாங்களுந் துய்ப்ப தாமோ ?

எங்களுக் காக நல்லோர் இடர்ப்படு கின்றார் ; யாங்கள்
வன்கொடு நெஞ்ச ராக மறங்கொண்டு வாழு வோமோ ?
என்கொடுந் தடைகள் வந்தும், இயற்றுவ தியற்றித் தீர்வோம்.
தங்கடன் அறிந்த தொண்டர் உயிர்தரத் தயங்கு வாரோ ?

காய்சின வரக்க ரெம்மைக் கழுத்திலே கல்லைக் கட்டிப்
பாய்திரைப் படுத்திட் டாலும், பரனருள் உண்டு ; காக்கும் ;
வாயினை யடைத்திட்டாலு மனதினை யடக்க லாமோ ?
நாயகன் பணிசெய் வாரை நாத்திகங் கெடுப்ப துண்டோ ?

சொல்வன சொல்லி யெம்மைச் சுதந்தர வாழ்வில் உய்த்த
நல்லவ ருக்கே ஆவி நல்கிடக் கடமைப் பட்டோம்
அல்லலிற் கைகொ டுக்கும் அன்பர்காள் வம்மி னென்று
கல்வியிற் பெரிய தொண்டர் கங்கணங் கட்டி வந்தார்.

சுந்தரி பெற்ற செல்வி "சுதந்தர விறு பெற்றீர்,
பந்தனை விழத் தீவின் பாபங்கள் ஒழிய வேண்டி,
நிந்தனை யற்ற தூய நெறியொன்றே பற்றி, நல்ல
சிந்தனை யுடனே சேர்ந்து செய்வன செய்வ" மென்றாள்.

வருத்திடுந் தந்தை வாழ்வின் வசைகளை மாற்ற வேண்டி,
மருத்துவன் சுரிகை போன்று வன்கடன் புரிந்து மெல்லத்
திருத்திட வேண்டித் தெய்வத் திருவரு ளிறைஞ்சு கின்றேன் ;
பொருத்தமாம் கடமை யெல்லாம் பொறையுடன் புரிகு வீரால்.

சந்ததம் அன்பர் தம்மைத் தளர்வறக் காக்கும் சக்தி,
அந்தராத் துமனாய் நம்முன் அனலென உயிர்க்கும் சக்தி,
வந்திருந் தேகுந் தேக வாழ்வினைக் கடந்த சக்தி,
முந்திருந் தாண்டு நம்மை முன்செல நடத்துங் காணீர்...

வெய்யரை வெம்மை யாலே வெதுப்பிநல் வழிக்கு மாற்றிச்
செய்யரைச் செம்மை யாலே சீர்வழி நடத்தி யென்றுங்
கையினிற் பலனை நல்கிக் காத்திடுங் கடவு ளுண்டு,
பையநந் தூய உண்மைப் பணிக்கது வெற்றி யீமே.

தெள்ளிய நல்லோர் செய்த தியாகமே உலக மாந்தர்
உள்ளினை மாச கற்றி உயர்நிலை சேர்க்கு மென்பார் ;
ஒள்ளிய தாயின் அன்புத் தியாகமே ஓங்குஞ் சேயாம் ;
வெள்ளத்தின் ஈகையேநல் விளைபயி ராவ தாமே.

கலகமில் லாது நெஞ்சக் கசப்புமில் லாது, மெய்யன்
பலமுறை சொல்லிச் செய்த பணியினைத் தொடர்ந்து செய்வீர்,
நலமுள வாய்மைத் தொண்டு நாப்பறை யின்றி யிந்த
உலகெலாம் பரவி, மாந்தர் உயர்வுற வாழ்வ தாமே !

எல்லையில் இடர்கள் வந்தும், எதிர்ப்புகள் எதிர்த்து வந்தும்,
தொல்லைகள் வளைத்து வந்துஞ் சுதந்தர வீரர் அஞ்சார் ;
சொல்லறுஞ் சுத்த சக்தி துணையென நம்பி வாழ்வார்
வெல்லுவ துறுதி யென்றாள் விரதமேற் கொண்ட தூயாள்.

இன்னவை சொன்ன பின்னர் இணையறு சக்தி யாங்கே,
புன்னகை செய்த டங்கிப் புனிதனைத் தியானம் செய்தே,
தன்னகங் கொண்ட பக்தி பரவசந் தவழ யாழில்
இன்னிசை மீட்டி "யுன்றன் இச்சையைப் புரிவா" யென்றாள்...

சுத்த கானம்

பளிங்கெனத் தெளிந்த உள்ளம் பளிச்சிடுந் திருவே போற்றி
இளங்குயில் போலென் னுள்ளே இசைத்திடு மறையே போற்றி !
வளங்கெழு வசந்தம் போலே வந்தெழில் காட்டு கின்ற
களங்கமில் லாத தூய கருணையே போற்றி போற்றி !

பலபல பான்மை யாகப் பயின்றுயிர்க் குயிராய் மேவி,
உலகியல் ஆடல் செய்யும் ஒருபரன் அருளே போற்றி,
இலகொளி விளக்கே போன்றென் இருள்கடிந் தின்ப மீந்தாய்-
விலகற நின்றுய் உன்னை விலகியான் வாழ்வ தாமோ ?

செங்கதிர் உதயம் போன்ற திருமுகப் பொலிவு கண்டேன் ;
எங்குமே வளைந்த வான்போல் இடமுறு ஞானங் கண்டேன் ;
மங்கல மலரைப் போன்ற வசனத்தை என்னு ளேநீ
தங்கமா மணியைப் போலே சாற்றிடுஞ் சமர்த்துங் கண்டேன்.

உந்தையில் உன்னைக் கண்டேன், உருகியுன் அன்பு மேவும்
சிந்தையில் உனது சிந்தை செழிப்பதை நிதமுங் கண்டேன்.
தந்தனன் உனக்கே என்னைத் தனிப்பெருங் கருணை வள்ளால்
வந்தெனை வழிந டத்தாய், வாய்மனங் கடந்த தூயா !

துன்பங்கள் கோடி யென்னைத் துண்டுதுண் டாக்கி னாலும்,
கன்மபா சங்க ளென்னைக் கட்டியே யிடர்செய் தாலும்,
பொன்பெணென் றலையும் ஊணர் போர்ப்படை எதிர்நின் றாலும்
அன்புடன் உனையே போற்றி அச்சத்தை மாற்று வேனே !

எனதியான் எனுஞ்செ ருக்கை இகல்செயுஞ் செருக்கைப் பூமி
தனதெனக் கொடுமை செய்து தருமத்தைச் செகுசெ ருக்கை,
மனதினில் அடர்ந்த மோக மாயப்பேய்ச் செருக்கை நீக்கி,
இனமொன்றய் உலகோ ரெல்லாம் இன்புற வாழச் செய்வாய்.

அண்டிய பொன்னும் வேண்டேன், அமுதினும் இனிய தாகும்
உண்டியும் வேண்டேன் ; எந்தை உவந்தளி புலகும் வேண்டேன்,
எண்டிசை யினிலும் அன்பும் இரக்கமும் தூய வாழ்வும்
பெண்டிரின் கற்பும் வெற்றி பெற்றிட விரும்பி னேனே...

பெருமிதச் செருக்கி னாலே பேயெனப் போர்தொ டுத்துத்
தருமமே வடிவ மான சத்திய நாட்டைப் பற்றித்
திருவெலாம் அழித்துத் தீமை செய்திடும் அசுரமாய
இருளினைத் தவிர்க்கச் சக்தி யிரவிபோல் எழுக தூயன் !

வெல்லுக சுத்த னிச்சை, வெல்லுக சுத்த சங்கம்,
வெல்லுக சுத்த யோகம், வெல்லுக சுத்த தர்மம்,
கொல்சம ரொழிக ! காமக் கொடுமைகள் ஒழிக ! நாளும்
பல்குக நன்மை நாளும் பரிதியின் கதிர்கள் போலே !

செவ்விய யாழுடன் சேர்ந்தி சைத்திடும்
திவ்விய கானமும் செய்ய சக்தியின்
துவ்விய சாந்தமுந் துணிவுங் கண்டவர்
வெவ்வியல் அரக்கனை வெறுத்தெ ழுந்தனர்.

கூட்டங்கள் கூடினர், கூச்ச லிட்டனர்,
தீட்டினர் அறிக்கைகள் தினமு மாவலி
போட்டிடுஞ் சட்டத்தைப் பூவென் றூதினார் ;
மாட்டிய விலங்கினை மகிழ்வொ டேற்றனர்.

கறைபெறு வாளரின் கடுமை யீதெனக்
குறைகளைக் கூறினர்; குடியுங் கூத்தியும்
புரையெனப் புகன்றனர் ; புலாலைக் கண்டித்தார் ;
சிறையிரு ளிடரிலுஞ் சிரித்து வாழ்ந்தனர்.

அரசனுக் குதவிடும் ஆட வர்களை
விரசரென் றரிவையர் விலகி நின்றனர் ;
சரிசம உரிமையைத் தருக வென்றனர்
வரிசையாய் ஊர்வலம் வந்து பாடினார் :

அடிமைசெய் ஆட்சியை அடக்கி வீழ்த்துவோம்,
கொடுமைசெய் கோலினைக் குமைத்து நாட்டிலே ;
மடமையும் வறுமையும் மறைந்து, மாந்தரின்
கடமையும் உரிமையுங் காக்க வாழுவோம்....

வீரங்கொள் அன்பரின் வேகங் கண்டனன் ;
காரங்கொள் அவுணனிக் கருணை யாளரைப்
பீரங்கி யாற்சுடப் பெரிய ராக்ஷஸப்
போரங்கிப் படைகளைப் போவி டுத்தனன்.

விடுதலை யென்கிற வீணர் கூட்டத்தைச்
சுடுமினென் றரக்கனுஞ் சுடரத் தீவிழி
இடிகுர லார்த்தனர் ; "இன்றுடன் அவர்
பொடிபடு வாரெனக்" குண்டர் போந்தனர்.

அஞ்சறு தொண்டர்கள் அஃத றிந்ததும்,
மிஞ்சிய துடலென வீறு கொண்டுளே
தஞ்சமென் றிறைவனைச் சரண்பு குந்தனர்
நெஞ்சுரங் கொண்டுமுன் னின்று பாடினார்....

"நாளுறச் சுழன்றிடு ஞால வட்டத்தை
ஆளுறும் ஆண்டவன் ஆள நின்றனம்.
கோளுறு வஞ்சமுங் கூற்றும் அஞ்சிலோம் ;
தோளுயர் வீறுடன் றொண்டு செய்வமே....

நல்லதைச் செய்திட நாடுந் தூயவர்,
அல்லல்செய் அரக்கருக் கடிமை யாவரோ ?
கொல்கணை யாலெமைக் கொடுமை செய்யினும்,
சொல்லரும் பணியினிற் சோர்வுண் டாகுமோ ?

கடக்கருந் தருமத்திற் கருத்தை வைத்தவர்,
அடக்கிடு முறைகளால் அடங்கிச் சோர்வரோ?...
திடக்கருத் துடனின்று செய்வ செய்குவோம்...
இடர்க்குலம் வருகநம் எதிரில் என்றனர்..."

"கடவுளென் றின்னமுங் கதறு மூடர்காள்
அடிபணிந் தெம்மிறை அன்பை யெய்துமின் !
படியிரேற் பீரங்கி படபடத் துமைச்
சுடு"மெனச் சுட்டனர் ஊணர் சொல்லுடன்.

அந்தகோ அந்தகோ ! அநீதி யென்றங்கே
சுந்தரி மகளொரு சுடர்மின் னென்னவே
"வந்தனள் எனைப்பலி வாங்கிப் பின்னரே
இந்தநல் லன்பரைத் தொடுவிர்" என்றனள்.... 240

வாரமைந் துணவற வாடு மேனியள்,
சீரிய சுத்தனைச் சிந்தை செய்பவள்.
பீரங்கி முன்னவள் பதும பீடத்தில்,
தீரமொ டமர்ந்துளே ஜெயசுத் தாவென்றே.

அன்பரைக் காத்திடும் அன்பு வள்ளலே,
துன்பத்தைத் துடைத்திடுந் தூய நண்பனே,
உன்பரம் உன்பரம் ! உண்மை நீயெனில்
என்பயம் இரும்பிற்கும் இடிக்கும், கூற்றிற்கும்....

சுத்தஓம் என்றெதிர் துணிந்த மர்ந்திடும்
சக்தியைக் கண்டதுந் தான வர்களும்
எத்தகைப் பாதகம் இயற்றி னோம்என
மெத்தவுந் திகைத்தனர் விலவி லத்தனர்...

சுடுவெனச் சொல்லவுந் துணிந்த சொல்லிலார்,
சுடவுங்கை வணங்கிலர் தூய சக்தியை
அடிபணிந் திடவெனில் அரக்கன் ஆணையே
இடைநிற்ப தென்பதை இன்னுஞ் சொல்வதென்?...

இத்ததி அதிசயம் என்ன சொல்லுவேன்,
பத்திடி போலிரு பறவைக் குண்டுகள்,
பொத்தென விழுந்தன புகையுந் தீயுமாய்
எத்திசை மருங்கினும் எழுந்த தம்மவோ !

விர்ரெனப் பறந்தன விமான ராசிகள்,
கிர்ரென விழுந்தன கிளர்ச்சி தூண்டுதாள்.....
பர்ரெனப் பாய்ந்ததைப் படித்த வர்தமை
உர்ரெனத் தானவர் உடன்வி லக்கினர்....

எழுந்தனர் ஆத்திரம் ஏறித் தொண்டர்கள்
அழுந்திருட் புகையினில் அடக்க மாகவே,
பழஞ்சிறை யுடைத்தனர் ; பாது காவலர்
குழம்பினர் கூவிடக் குரலும் அற்றனர்.

வாழிய சக்தி யென்றே வந்தனர் அன்ப ரெல்லாம் ;
சூழுறுஞ் சிறையைக் காணர்....சுவரிடி மண்ணே கண்டார்...
ஏழிடி போல வாங்கே இறைந்தொரு விமானம் வந்து
பாழ்படுந் தானவர்கள் பற்றுமுன் விரைந்த தம்மா !

மல்லர்காள், அனலன் சாக வான்வெடி வீசிடுங்கள் !
செல்லுங்கள் விமானந் தன்னிற் செருங்களப் பகைவர் தம்மைக்
கொல்லுங்கள் ! அழகி சக்தி மெய்யனின் கூட்டம் யாவும்
வெல்லுங்கள் ! போர்போர்'' என்றே வீறிட்டான் அரக்க னுங்கே !

மெய்யனுங் காண வில்லை, மெல்லிய சக்தி யில்லை ;
செய்யசுந் தரியு மில்லை, சீரிய போக னில்லை ;
துய்யநற் றொண்ட ரில்லை, துணிவுள சனங்க ளெல்லாம்,
"வெய்யவ உன்ற னாட்சி வீழ்'' கென வீறி னரே....

புரட்சியோ புரட்சி யென்று பொங்கினன் ஊணர் கோனும்,
திரட்சிகொள் படையுந் தன்னைத் திசைதிசை எதிர்க்கக் கண்டான்,
மருட்சிகொள் அரக்கன் முன்னே மற்றொரு நீள றிக்கை
வெருட்சிதந் திட விழுந்த விந்தையென் சொல்லுவேனே !

கண்டனன் அறிக்கை தன்னைக் கனலினுஞ் சினந்து "தம்பி
கொண்டவெம் பகையைச் சேனை கொண்டெதிர்த் துடனே யிந்த
மண்டலம் அஞ்சப் போர்செய் மனவெழுச் சியுடன் வீடு
சென்றனன் ; அமைச்சர் கூடிச் செய்முடி பறிகு வோமால்...

போர்விமா னங்கள் எங்கோ போயின ; மின்னி டித்துக்
கார்மழை பொழிந்த தன்பர் காரியக் கூட்டங் கூடி
ஊரினை யமைதி யாக்க உற்றநன் முடிவு செய்தார் ;
சீரெலாம் ஒற்றர் செல்லத் தெரிகுவோம் சபைக்கு வாரீர்...

26. இடி முழக்கப் படலம்

துன்மதி நாசன் வெள்ளி தூமகே துவுடன் கூடிக்
கன்மதி யரக்கன் போரின் காரணங் கதைக ளெல்லாம்,
பன்முறை ஆய்ந்த பின்பு பாய்புலி யெனவெ ழுந்து
தன்மதி கொண்ட தெல்லாந் தடதட வெனப்பு கன்றான்.

மாவலி பேச்சு

மந்திரி மணிகாள் வந்தது வெம்போர் !
ஆணவத் தம்பி நாணிக் குனியக்
கப்பலும் பறவையும், கடுவூர் திகளும்,
நாசகா ரிகளும், வீசு வெடிகளும்,
பறக்கும் வெடிகளும் படுகண் ணிகளும்,
கணக்கறச் செய்து களங்கண் டிடுமின்.
பதினாறு முதலறு பதுவரை ஆண்பெண்
அனைவரும் படையணி யமைந்திடச் சேர்கவே !
என்னே கொடுமை ! என்னுடன் பிறந்தான்—
போட்டி போட்டுப் போருந் தொடுத்தான்.
அறிவிப் பின்றி ஆகா யப்படை
குண்டு வீசக் குறித்தான் !....எனது
பளிங்குமா ளிகையிற் பறக்கும் வெடியைக்
கணக்கா யெறிந்த காரணம் அறிந்தேன்.
எனக்கே உலகென் றிருக்கச் சிறுவன்
தனக்கே உலகெனத் தாவிக் குதித்தான்....
மெய்யன், புண்ணியத் துய்யனைப் பெற்றேன்
என்னை வீழ்த்தவே இங்குவந் தானும்.
பாடகன் அவனும், பதகன் அவனை
வெட்டி யிருப்பேன் ; வீணை தடுத்ததே.
கலைசன் மார்க்கம் கடவுள் என்றிப்
போலிகள் அனலன் பொம்மைக ளாகி,
இங்கே நடப்பதை அங்கே சொல்லி,
நமதர சிற்கே நமராய் முளைத்தார்.
இந்தக் கயவன் இரக்கத் தாலே,
நல்லவர் வாழவே நாடுகின் றானும்.
போக மெய்யர் புண்ணிய வாளராம்,
தந்திரக் கொடியாள் சுந்தரி தன்னைச்
சிறையி லிட்டதும் செல்வியாய் வந்த
சாகசி பட்டினி சாதித் ததுமே,
பொதுஜனம் புரட்சி புரிந்தகா ரணமாம்.

ஜனவுரி மைக்கே மனமுடன் உதவப்
போர்தொடுத் தானும். பொய்யன், எனது
நாட்டிலே விடுதலை நாட்டி விடுவானும்.
திட்டிய கத்தி திப்பிடித் ததுவே !
வஞ்சந் தீர்க்கிறேன், வா வா தம்பி....
போர்பத் தாண்டுகள் புரிந்திடத் தக்க
உணவும் படையும் உரமும் உண்டாம்....

* * *

காண்போம் ! இனியேன் வீண்பேச் சிங்கே ?
தறுகண் மிக்க தானவப் புலிகாள் !
என்பெரு மைக்கே இன்னுயிர் வாழ்வீர்,
என்னையே வணங்கும் இன்னிய தொண்டர்காள்,
செல்லுமின் ! உலகெலாம் செல்வம் கொணர்மின்.
கொள்ளை யடித்துக் கொணர்மினோ பொருளை....
வாணிகக் கொள்ளை, வழிப்பறிக் கொள்ளை,
புத்தகக் கொள்ளை, புரோகிதக் கொள்ளை,
இயந்திரக் கொள்ளை இசைநடக் கொள்ளை,
நாடகக் கொள்ளை, நாரியர் கொள்ளை
பலவழிக் கொள்ளையாற் பணமும் உணவும்
கொண்டுவந் திங்கே குவிப்பீர், குவிப்பீர் !
புண்ணிய பூமியிற் பொலியும் வளமெலாம்
சுரண்டிக் கொணர்மின் ; இரண்டுநூற் றாண்டு
போர்நடந் தாலும் ஓர்துய ரில்லையே.
அமெரிக் காவின் அளவறு நிதியை
அள்ளிக் கொணர்மின், ஐரோப் பாவின்
இயந்தி ரங்களை எடுத்துக் கொணர்மின்,
ஆப்பரிக் காவின் அணிமணிப் பொன்னைக்
கப்பல் கப்பலாய்க் கரந்து வம்மினோ ?
எங்கே தம்பி ஏற்றம் பெற்றான்
அங்கே அவனை அடக்கப் பார்மினோ!...
என்று மாவலி இடிமுழக் கிடவே
அதுசரி என்றனர் அமைச்சர்க ளாங்கே.
மாவலி யமர்ந்ததும் வக்கிரன் வந்து,
“மன்னா சர”ணென வணங்கிநின் றானே !
“வருக வக்கிரன் வையச் செய்தி
தருக” வென்னத் தானவர் கோமான்,
செவிக்கொள வென்னச் செகவிவ காரம்
கொட்டி யளந்தான் கோளுக் கரசனே !

வக்கிரன்

வையக மாந்தர் "மாவலி" யென்றால்
வெய்யவன் உயிரைக் கொய்பவன் என்பார்....
எங்குமுன் கொள்கை, எங்குமுன் கொள்ளை
எங்குமுன் அச்சம் பொங்கிடக் கண்டேன்.
ஐரக மெல்லாம் அமரக மெல்லாம்,
வைர மெழுப்பிக் கைரவ மாற்றும்
தானவ ஒற்றர் தானவ வணிகர்
தானவ வீரர் மானிடர் தம்மைப்
பிரித்தவர் செல்வம், அரித்தவர் வாழ்வை
உரித்துன தரசே பெருத்திடச் செய்தார்.
அடங்காத் தம்பி இடம்பெற் றெங்கும்
தடங்கலைச் செய்யும் பிடுங்கலே பெரிதாம்.

மாவலி

பொல்லவன் செயலைச் சொல்லவன் செருக்கைக்
கொல்லுவன் அதற்கே கூடின மின்றே.

வக்கிரன்

அனலன் இழைக்கும் அக்கிர மங்கள்
மேற்கே அதிகம் கிழக்கிலும் உண்டு.
காற்றினும் வேகமாம் ககனப் பறவை
அலையுளே செல்லும் அழிவுசெய் கப்பல்,
மலையையுந் தகர்க்கும் வலிமிகு குண்டுகள்,
கூற்றினுங் கொல்லுங் கொடிய கண்ணிகள்,
காற்றினும் வேகமாம் கடுதிப் பொறிகள்,
கோட்டைபோற் செல்லும் வேட்டை விமானம்,
திரிபுரம் போன்று தீமைசெய் விமானம்,
ஒருநொடி வீச்சால் ஊர்சுடு காடாம்
யுரேனனுக் குண்டுகள்—உயிர்களை அள்ளும்
தொத்துநோய்க் குண்டுகள் பித்துப் பிடிக்கும்
பெரும்புகைக் குண்டுகள், பேய்க்குரல் வெடிகள்,
மூச்சைப் பிடிக்கும் முழுவிஷப் புகைகள்,
பாக னின்றிப் பறந்து சென்று
பகைவரை யழிக்கும் பறவைக் குண்டுகள்,
நெருப்புவைத் தூரை நீறு செய்திடும்
அக்கினிக் குண்டுகள், ஆயிரம் ஆயிரம்
தினந்தினஞ் செய்து சேர்க்கிறான் அவனே.....
வகைவகை யான வாக னங்களை
விளம்பப் போமோ ! விமானங் கோடி.....

உளவு பார்க்க, உயர்வா னளாவிப்
படம்பிடித் தேகும் படகுகள் பலவே.
எதிர்விமா னத்தை எதிர்த்துத் துரத்தி
அழிக்கும் விமானம் அளவில வாமே...
தரையை வென்று விரைபுகை வண்டி,
மின்சா ரத்தால் முன்செல் வண்டி,
எண்ணெ யாலே ஏகும் வண்டி,
காற்ருல் ஓடும் காற்றசை வண்டி,
விரைந்து சென்று விளைபயிர் அறுத்துக்
குவையாய் கொண்டுறும் கொள்ளை வண்டி,
கடலை வெல்லுங் கப்பல்கள் ஆயிரம்,
ஆயுதக் கப்பல், அணிபடைக் கப்பல்,
உணவுக் கப்பல், உதவிக் கப்பல்,
மருந்துக் கப்பல், மனத்தினும் வேகமாம்
சண்டைக் கப்பல் சலியா தாக்கிக்
கடலெலாம் பரவிடக் கண்டேன் ஐயா !
கொள்ளைக் கப்பல்செய் கொடுமையுங் கண்டேன்
வாணிகக் கப்பல் வளத்தையுங் கண்டேன்.
நாசக் கருவிகள் பாசக் கருவிகள்,
காந்தக் கருவிகள் கணக்கி லடங்கா.
இருந்த வாக்கிலே எட்டுத் திசையும்
நிகழ்வதைக் கேட்டு நிகழ்த்திட வேண்டி
வானொலிக் கருவி மனைமனை யுண்டு.
உலக நிகழ்ச்சியை உருவாய்க் காண,
தொலையுருக் கருவி தொகையற உண்டு.
கைய டக்கமாங் கருவிக ளாலே
பேச்சறி வித்துப் பெறுவான் விடையும்.
பிறஊர் நிகழ்ச்சியைப் பிடித்துக் கொணர்ந்து
வெள்ளித் திரையில் விளங்கக் காட்டி
நடித்துப் பேசும் படங்களும் பலவே.
அற்புதம் இன்னும் பற்பல உண்டாம்.
தம்பி செய்யும் வம்புகள் மிகையே.

மாவலி

நமக்கும் இந்த நாசக் கருவிகள்
எண்ணற வுண்டு கண்ணுறக் காண்பீர்.
அனலன் படையினும் அதிகப் படையும்,
படைக்க லங்களும் பதுக்கியுள் ளோமே
ஆயினும் இன்னும் அதிசய மாகக்

கொல்லும் கருவிகள் கோடி யியற்றுவோம் !
பாரீர் நானையே பௌதிக ரசாயன
பஞ்ச பூதப் பயன்களி னாலே,
இங்கே யிருந்தே அங்கே தம்பியின்
ஆணவ புரியை அழிப்பேன் குண்டால்.
அசுரபீ ரங்கிகள் ஆயிரம் வைத்துக்
கடற்கரை ஊன்றிக் கனல்களை யெறிவேன்.
காஸ்மிக் ரேயைக் கக்குவே னிங்கே.
இங்கே விசையை இப்படி அழுத்தலும்
அங்கே ஆணவம் அனல்பிடித் தெரியும்.
இந்திர சித்தும், இராவணச் சிங்கமும்,
திரிபுரா திகளும் செய்ததைச் செய்வேன்.
மேகமண் டலத்தில் வேகமாய்ச் சென்று,
குண்டுகள் பொழிவேன் ; கண்டு வியப்பீர்.
கடலடிப் படையாற் கப்பலை யுடைப்பேன்.
காந்த வெடிகளால் கப்பலை மூழ்க்கிச்
சரக்கினை அள்ளித் தருக்கென வருவேன்.
மூழ்கிய கப்பலை மூழ்கி யெடுத்தே,
புதுப்புதுக் கப்பல் பொலிவுறச் செய்வேன்,
சத்த மின்றித் தாவிடும் வண்டிகள்,
கண்கா ணாத நுண்விமா னங்கள்,
பாதா ளத்திற் பதிந்து வெடித்தே
தூருடன் எதிரியின் ஊரை யிடிக்கும்
மாவலிக் குண்டை ஆவலாய்க் காணீர்.
கடிகா ரம்போற் காணும் வானொலி
அமைத்துப் பகைவன் அந்தரங் கத்தை,
அறிவேன் ; எனக்கும் அறிவுண் டறிவான்.
போர்க்கலை வல்லீர், பொட்டென் றெழுமின்.
கொலைக்கரு விகளைக் குவிப்போம் வாரீர்....
“வாடா தம்பீ, வஞ்சப் பதரே,
மாவலி யுடனா மல்லாடு கின்றாய் !
பறந்து வந்துன் பட்டண மெல்லாம்
சுட்டுச் சுட்டுச் சுடுகா டாக்குவேன்....
இந்த உலகில் என்னைத் தவிரத்
தலைவனென் றெவரே தலை நிமிர் வாரே !
தந்துன் அரசைத் தம்பியாய் வாழ்ந்தாற்
பிழைப்பாய் இன்றேல் இழப்பாய் அனைத்தும்....
குண்டிற் கொன்பது குண்டு போடுவேன்
என்சிறை காத்த சன்மார்க் கிகளை

எடுத்துச் சென்றாய் ; கொடுத்தாற் பிழைத்தாய்.
இன்றேல் ஊருடன் எரித்துவந் துன்னையும்
அறஞ்சொலும் அவரையும் அக்கணங் கொல்லும்
மின்பொறி யேற்றிப் புன்னகை புரிவேன்.....
பாரடா வாடா பார்ப்போம் ஒருகை....
அம்பிப் பயலே அசட்டுத் திமிரால்,
வம்பு செய்தாய் ! வருந்தாய் ! வருந்தாய் !
ஆனவ நாட்டீர், அனலனை எதிர்மின்,
உங்கள் பொருளையும் உயிரையும் அழிக்க
வந்த கூற்றவன் ; வலுப்போர் செய்து
நாட்டை அழிக்க நாடினன், எதிர்மின்....
ஒருவனைக் கொன்றால் ஊரே பிழைக்கும்.
தானவம் போல நானுமைக் காப்பேன்.
எனது குடைக்கிழ் எல்லாம் சுதந்தரம்....
அதர்மப் பதராம் அனலனைச் சுடுவீர்....
சுட்டவர் என்னிடம் சுகமாய் வாழ்வீர்....
புரட்சி செய்மின் ! புரட்சி செய்மினோ......"
என்றுடன் அறிக்கை இரண்டு கோடி
அச்சிட் டுயர்ந்து, நச்செனத் தூவுமின்....
பற்றிக் கொள்ளும் பகையும் போரும்....
போரில் லாதது போலி வாழ்க்கையே...
பெண்டிலாக் கையும் குண்டிலாக் கையும்
பேடிக் கைகள் ! பேச்சினி யில்லை....
செயலைக் காணீர், செந்நதி காணீர்.....
அண்டம் வெடிக்கக் குண்டுகள் வீசி
உலகை ஆள்வேன் ஹும் ஐயபலமே !

வெள்ளி

செய்வோம் போர்கள் கொய்வோம் தலைகள்....
ஆயுதம் உண்டுநம் ஆட்படை யுண்டெனின்,
மருந்துகள் உணவுகள், மல்கிய பொருள்கள்
வேண்டும் ; அதற்கு வேக மாகவே
வளம்பெறு நாட்டை வசப்ப டுத்திக்
களம்பெறு வளமை கண்டிட வேண்டுமே....
பூவிற் செழித்தது புண்ணிய பூமியே...

மாவலி

"சொல்லுதி விரிவாய் அந்தத் தொல்வள நாட்டின் காதை,
அல்லல்செய் கலிய ருரும் அதர்மிகள் படையும் ஆங்கே,
வெல்குறி யுளதோ" வென்று வினவிய மாவ லிக்கு
மல்கிய குறிப்பி னின்று வக்கிரன் வகுத்துச் சொன்னன் !

வக்கிரன்

வினைவகை யறிந்த வெள்ளி விளம்பிய வழியே சென்று,
தனைமறைத் துருவ மாறித் தன்னலக் கலிய னும்,
அனைவரு மயங்கும் வண்ணம் அதர்மமே தரும மென்று
புனைவுரை பரப்பி, நாட்டிற் புதுமையுண் டாக்கி னனே !

மனத்தினைக் கெடுத்தான் ; பெண்டிர்
மானத்தைக் கெடுத்தான் ; செல்வர்
தனத்தினைக் கெடுத்தான் ; வீட்டுத்
தாம்பத்யங் கெடுத்தான் ; சேர்ந்த
இனத்தினைக் கெடுத்தான் ; மாந்தர்
இயல்பினைக் கெடுத்தான் ; வேத
வனத்தினைக் கெடுத்தான்—வாழும்
வரிசையைக் கெடுத்தா னந்தோ !

மாணுறு புனித நாட்டின் வளம்பெறு தொழில்கள் கற்று,
வாணிகக் கடைவி ரித்து, வரம்பிலாச் செல்வஞ் செய்தே
காணறப் பொறிகள் செய்து, கலகத்தைக் கிளப்பி, வெற்றி
பூணுறச் சிறந்தா னையா புகழ்பெறுங் கலிய னுங்கே !...

சொந்தநாட் டன்பைத் தேய்த்துச் சுதந்தரஉணர்வைத்தேய்த்துச்
சிந்தையில் ஊனுங் கள்ளுங் காமமுஞ் சேர்ந்து சுற்றப்
பந்தனை யாக்கிப் பாபப் பணிகளை யூக்கி, எங்கள்
சந்தையே யாக்கி னமைத் தருமபூச் சிகளின் ஊரை.

வித்தகர் பெருத்த நாட்டை வேற்றுமைக் கந்தை யாக்கிப்
புத்தகம் பிடித்த கைகள் புட்டியும் சுருட்டு மாக்கி,
பத்தினி மானங்கூடப் பஞ்சத்தாற் பறந்து போக
நித்தியஞ் சூழ்ச்சி செய்த நிசாசரச் சிங்கம் யானே !

பொங்குமின் சாரங் காந்தம் புனல்கொதி யாவி, வானந்
தங்கிடும் எலெக்ட்ரன் ஆன சக்திக ளாலே ஓடும்
சங்கையில் அதிச யங்கள் சாதித்த நம்மை மாந்தர்
எங்குமே எழுந்து கூப்பி எண்ணிலர் வணக்கங் கொண்டோம்.

காலமும் இடமும் வென்றேம், கடவுளின் விதியும் வெல்வோம்;
ஞாலமும் வென்றேம் ; நூல ஞானமும் வென்றேம், கற்றுச்
சீலமும் நோன்புங் கொண்ட சிலரையும் வென்றேம், கற்பின்
கோலமும் வென்றேம், சாந்த குணத்தையும்வென்றேம் ஐயா.

பலம்படை சித்தி மன்னன் பாரினைத் துறந்த பின்பு
நிலம்படை சிறிய மன்னர், நிலையினைக் கலக்கி மெல்லப்
புலன்களைக் கெடுத்துப் போரும் போட்டியுந் தூண்டி, நாமே
நலம்பெறப் புகுந்து நாட்டில் வாட்கொடி நாட்டி வந்தோம்.

படையினைத் தருவோம் என்று பகையினைத் தூண்டி, நாங்கள்
இடையினிற் புகுந்து வேந்தர் இருவரும் தோற்கச் செய்தே,
கடையினைப் பரப்பி, மெல்லக் கதையினை வளர்த்து, வாளின்
கொடியினைப் பரப்பி யுன்றன் கொற்றமே பரப்பி வந்தோம்.

சகத்திற்கு வேதந் தந்தார், சாத்திரம் பலவுந் தந்தார்,
இகத்திற்கும் பரத்தி னுக்கும் இணைப்பிலாப் புராணம் பேசி,
மகத்துவ மான தூய மறைகளை மறந்து, தேக
சுகத்தினுக் கான கல்வி துளியவர் கற்கச் செய்தோம்.

கப்பலைக் கட்டி நாளுங் கடலினைக் கலக்கி வாழும்
இப்பரின் செல்வ நாட்டில், ஏழைகள் இல்லா நாட்டில்,
செப்பருங் கைத்தொ ழில்கள் செழித்தபொன் னாட்டில், எங்கள்
கப்பலுந் தொழிலுங் கொண்டு கவலையு மெலிவு மீந்தோம்.

இவ்வகை மெல்ல நாட்டை இருதலைக் கொள்ளி யாக்கி,
உய்வகை நாமென் றோதி, உட்புகுந் தூன்றிக் கொண்டோம் ;
பொய்வளர் கலிய னுந்தன் புரியிலே முடிபு னைந்து,
நெய்வளர் நெருப்பைப் போலெம் பொறுமையை நீளச் செய்தான்..

முடிதரி கலியன் இன்று மோகியின் செருக்கி னாலே,
துடிதர ஊணர் கோபம் சுயநலக் கொடியை நட்டான்.
அடிதரத் துணிந்தான் யாங்கள் ஆத்திரங் காட்டிக் கேட்டால்,
இடிதர வேண்டும் அந்தக் கலியனுக் கின்று நீயே...

மாவலி

செவித்த மாவலி சினங்கொண் டுரைத்தான் :—
நமது கலியனே நமைக்கேட் காமல்
முடிதரித் தாண்டான்...அடிமைக் கலியன்....
சுதந்தரப் பகைவா, தூம கேதுவே,
செல்வாய் உடனே, சேனை கொண்டு ;
விண்மண் கடற்படை வேகமாய் விரைக !
கலிமோ கியரைக் கைதுசெய் துடனே.
கடுஞ்சிறை யடைத்துக் காவல்வைத் தவரை
நாட்டி லெங்குமே நாட்டென் கொடியை ;
பேச்சுநீண் டவரின் மூச்சை யடக்குவாய் !
எதிர்த்தாற் சுடுவாய் இடர்களை வீழ்த்துவாய்.
குண்டும் கொடுமையுங் கொண்டுமுன் னேறி,
நாட்டைப் பற்றி நாட்டுநம் மரசையே.
பொன்மணி தானியம் போருக் கேற்ற
பௌதிக ரசாயனப் பண்டம் உலோகம்
எல்லாம் கொண்டிங் கிறக்கிட வேண்டுமே...

நாட்டைச் சுரண்டி நமக்கிங் கனுப்புக
செல்லுடன் என்ற சொல்லுடன் பட்டுத்
தூம கேது துறுதுறுத் துரைத்தான் :

தூமகேது

மாவலி யரசே, பூவல யத்தில்,
நினக்குத் தம்மை நிகரெனச் செருக்கும்,
பதர்களை யொழிக்கவே பலவான் உள்ளேன்.
வெள்ளியும் தாமும் விளம்பிய படியே
புண்ணிய பூமியுன் புகழர சாகச்
செய்வேன் அதன்வளம் செம்மையாய்ச் சுரண்டி
வங்கத் தொடரில் இங்கே யனுப்புவேன்....
அரசே இங்கே ஆயுதப் படையால்
ஆணவம் ஆளும் வீணனை ஒழிப்பாய்.....
கலியனை உடனே காவலில் வைத்துன்
வாட்கொடி நாட்டி வரிசை வரிசையாய்ச்
செய்யுங் கடமையைச் செய்வழி செய்வேன்....
தூம கேதுவின் சூடுதிறங் காணாய்....
பிறரை அடிமைசெய் பெருமையைக் காணாய்,
கொலைத்திறம் புரியுங் கலைத்திறங் காணாய்.
வெற்றிமேல் வெற்றி விளைப்பேன் யானே.....

மாவலி

"செல்லுன் குண்டு வெல்லுமென் அருளால்....
புண்ணிய பூமியிற் பொருந்துநம் ஆட்சியும்
ஆணவப் போரும் ஆகிய கடன்களை
நமக்கே நலமுற நடத்திடு வோமே"
என்று மாவலி இயம்பி யெழுந்து
தூம கேதுவைத் துறைமுகஞ் சேர்த்தே
அரக்கப் படைகளை அணிவகுத் தானே ......

27. சங்கத்திற்கு நலமுரைத்த படலம்

தானவ—ஆணவச் சமர்

தானவன் செருக்கினைத் தகர்க்கத் தம்பியும்
தானையை மிகைபடச் சேர்த்துத் தாக்கினன் ;
யானையும் யானையும் எதிர்த்து மோதினல்,
ஏனைய முடிவினை யியம்ப வேண்டுமோ ?

மண்ணுடை யாசையும், மனசின் மாயமாம்
பெண்ணுடை யாசையும், பிரிவு செய்திடும்
பொன்னுடை யாசையும் புரட்சி செய்திடின்,
புண்ணுடை வஞ்சகப் போருக் கெல்லையோ ?

உறவுடன் சுற்றமும் ஊருந் தேசமும்
அறமுமென் றெதனையும் ஆத ரிப்பரோ—
மறவலி கொண்டமண் ணாசை மாயத்தால்,
பொறைவலி கெடநின்ற பூரி யர்களே?

அண்ணனுந் தம்பியும் அனலுங் காற்றுமாய்ப்
பண்ணிய போர்வினை பாரைப் பற்றவே,
மண்ணக நாடெங்கும் வசிக்கு ஊணரும்
திண்ணெனச் சமர்செயத் திரண்டு வந்தனர் .

புதுப்புதுச் சுடுசரம் புதுவி மானங்கள்,
புதுப்புதுக் கப்பல்கள் புதிய ஊர்திகள்,
புதுப்புதுச் சூழ்ச்சிகள் புதிய போர்களும்
புதுப்புது வடிவுடன் புவியைச் சூழ்ந்தவே !

எழுங்கதிர் முரசொலி யியம்பக் கேட்டிடும்
விழுங்கதிர் சாங்குரல் விம்மக் கேட்டிடும்,
கொழுங்கதிர் உமிழ்ந்திடுங் குண்டு பீரங்கி
விழுங்கிடுந் திசைகளைப் புகையின் வேகமே.

விதித்தனர் கடுவிதி ; விதியை மீறியே
எதிர்த்தவர் எமபுரம் ஏக வென்றுளங்
கொதித்தனர், மிதித்தனர், கொன்று மண்ணிலே
பதித்தனர் பஞ்சமா பதகர் கூட்டமே !

மட்டறு செருக்கினர், மற்றை நாட்டினர்
கட்டடி மைகளென் றிழிவு காட்டினர்,
கட்டினர் வெட்டினர் கால வேடன்போற்
சுட்டனர் சுடிகையு நடுங்கத் துன்பத்தால்.

வேவுசெய் விண்படை விளக்கிடும் நிழல்
ஓவியங் காட்டிடும் ஊரை நோக்கியே,
தாவுவர் ; சுடுசரந் தள்ளித் தீயிட்டே
பாவிகள் அனைத்தையும் பாழ்செய் வார்களே.

மெய்யன் ஆணவம் வந்த கதை

இங்கனம் இகல்செயும் இராக்க தர்புரி,
தங்கம்போல் மாசறு சத்தி யன்குழு,
பங்கஞ்செய் மாவலி படரைத் தாண்டியே
எங்கனம் வந்ததென் றியம்பு வாமரோ !

மதிமிகு போகனு மன்னன் மெய்யனும்
துதிமிகு சுந்தரி சூழ்ச்சி சொல்லவே,
கொதி மிகும் அனலனைக் கூவிப் பேசிடக்
கதிமிகு வானொலிக் கருவி யாக்கினர்.

தானெனும் ஆணவந் தழைத்த தம்பியும்,
ஊனுடன் ஒட்டிய உளப்பொ ருமையால்,
வானொலி பேசிய வாறு வானத்தே,
தானவ நகரினைத் தாக்கி னனரோ !

ஊணறு விரதத்தில் ஊன்றுஞ் சக்தியைக்
காணுறு பொதுசனங் கனன்றெ ழுந்ததும்,
சேணுறு *குடையினிற் சிலர் இறங்கினர் ;
ஆணவர் சிறைதிறந் தனலும் வீசினர்....

கூவென மூண்டிடுங் குழப்பத் தூடவர்
மாவலி யாளென மாறு வேடத்தில்,
காவலைக் கடந்துமுன் ககனக் கப்பலில்
வாவினர் ஆணவம் வந்தி றங்கினர்.

கொலைசெய மாவலிக் குண்டர் தேடியே
மலைத்தனர் ; அழகியு மகளு மன்னனும்
கலைதரு முனிவனுங் கடிதிற் சென்றதை
நலிவுறத் தெரிந்துள நடுங்கிச் சோர்ந்தனர். 60

ஒற்றர்கள் ஓடுக உடனந் நால்வரைப்
பற்றுக வென்றனன் பதறு மாவலி ;
பற்றலர் சூழ்ச்சிகள் பலிக்க வில்லையால்,
வெற்றுரை யானது வெய்யன் வெம்மையே.

பேயெனப் பெருஞ்சமர் பெருத்த நாட்டிலே,
சேயென நால்வருஞ் சேர்ந்து கூடமாய்
ஓய்வற நிருதரின் உழைப்பி னுல்வரும்
ஆயுத மனைத்தையும் ஆய்ந்து கற்றனர்.

இரக்கமற் றிரவுடன் பகலும் இன்னல்செய்
அரக்கரின் போர்முறை அறிந்தப் போரினைச்
சுருக்கிடுஞ் சூழ்ச்சியுஞ் சூட்சு மங்களும்
பொருக்கெனக் கற்றனர் பொருந்து நாளிலே.

உருக்கமோ டனலனும் உபச ரித்தனன் ;
இருக்கையும் ஈந்தனன்; எனினும் அன்னவன்
வருக்கத்திற் குரியதாம் வஞ்ச நெஞ்சினன்
கருத்தினிற் காமமுங் கரவுங் கொண்டனன்.

---

* ஆகாசக் குடையில் Parachute

முன்னரே முழுமன மோகங் கொண்டவன்,
இன்னரேன் இச்சையை எய்துவேன் எனு அ
"அன்னமே" என்றனன் அழகி முன்வந்தே ;
புன்னகை புரிந்தவள் புறமொ துங்கினுள்.

அத்ததி அவ்விடம் அறிந்து வந்தநம்
சத்தியைச் சங்கடஞ் செய்யத் தாவினுன் ;
உத்தம முனிவரன் ஓடி வந்தனன்,
மெத்தவும் அறிவுரை விளம்பிப் போக்கினுன்.

மெய்யனைச் சிறைசெய்து வேத நாட்டினைக்
கையினிற் பற்றிடக் கருத்திற் கொண்டனன்....
ஐயனும் இவையெலாம் அறிந்து போகனை
உய்வழி ஓட்டமென் றூக்கி னுனரோ.

சன்மார்க்கத்திற்கு நல்லுரை

நோக்கினிற் பெரியான், மிக்க நுண்மதி கொண்ட மெய்யன்
ஆக்கிய சன்மார்க் கத்தின் அன்பரை உடனே கூட்டி,
"வாக்குடன் மனமுந் தொண்டும் வளம்பெறும் நல்லீர் ஒன்றி
ஊக்கமோ டுழைமின் வெற்றி யுண்"டென உரைத்தான் மன்னே!

சுந்தரி, சக்தி, போகன் சுதந்தரப் பணிக்கென் றேடும்
இந்தநாள் ஏகு கின்றூர் ; ஏற்றநாள் மீண்டும் , இங்கே
வந்துமது ரிமை நாட்டி மக்களுக் கினிது செய்வோம்,
அந்தநாள் வரவை நீரும் ஆர்வமோ டெதிர்பார்ப் பீரே.

அல்லலிற் கைவிட் டோமென் றஞ்சலிர் ; அரக்க ருக்குத்
தொல்லைகள் வந்த திந்தச் சுடுசரப் போர்க ளாலே ;
மல்லுறு தம்பி யோடு, மாவலி புரியும் போரே
கொல்லுறும் ஊனருக்குக் கொடியதண் டனையென் றெண்ணீர்.

போரெனும் பேயின் கையிற் புகலடை அரக்கர் கூட்டம்,
பேரிடி முழக்கஞ் செய்து, பீரங்கிப் புகையாய்த் தங்கள்
வீரியத் திமிர்கள் சென்று, விறலிழந் தயரக் காண்பீர்,
பாரத சக்தி வந்து பரிந்துமக் குதவக் காண்பீர்.

உங்களுக் குரிய வீட்டில் ஒடுக்கமாய் அடங்கி நின்றே,
சங்கத்தை வளர்த்து, சுத்த சத்திய சன்மார்க் கத்தை
அங்கத்தி னர்க ளெல்லாம் அறிந்தவர்க் கோதி, அன்பு
பொங்கிடப் பணிகள் செய்வீர் புனிதனுல் வெற்றி யாமே.

சத்திய விரதம் பூண்டு, சத்துவ உணவைத் துய்த்து,
பத்தியும் பரிவும் பேணிப் பலர்பயன் பெறுந லஞ்செய்
உத்தமர்க் கழிவொன் றில்லை ; உலகெலாம் அவரைச் சாரும் ;
சுத்தனுந் தியானந் தன்னிற் சுடரொளி காட்டுவானே.

ஆவியில் இணைந்த நேயர் அன்புடன் அன்பு சேரிற்
பூவினில் அரிதொன் றில்லை ; புரிசெயல் வெற்றி யாமே.
தூவிய லறத்தைக் காக்கச் சுத்தனை நோக்கி நாங்கள்
போவது தரும மின்னே; புன்னகை விடையைத் தாரீர்.

நானில நிகழ்ச்சி யெல்லா நாடொறு முங்க ளுக்கு
வானொலி சொல்லக் கேட்டு வரிசையாய்ச் செய்வ செய்வீர்.
தானவ நிலையைக் கண்டு, தாவிநாம் வந்து பின்னே,
ஆனதைச்செய்வோம்;அன்பீர்ஆதலால்விடைகொள்வேனே! 120

"ஒன்றுபட் டுழைப்போம் ; இங்கே உரியகா லத்தில் வந்து,
வென்றியை முழக்க வேண்டும் ; வேந்தநீ"யென்று நல்லோர்
நன்றிகள் பலவுங் கூறி நல்விடை மாலை சூட்டச்
சென்றனர் நான்கு பேரும் சீகர விமான மேறி.... 124

28. சீகரன் மகிழ்ந்த படலம்

சொந்தவி மானத்திற் சூட்சு மங்களை
விந்தையாய் அமைத்துடன் விரைந்து, நால்வரும்
சந்தடி யின்றியே தாண்டித் தூரத்தை
வந்தனர் சீகரம் வாழ்த்தொ லிக்கவே !

இழந்தநற் செல்வத்தை இரும டங்கென
வழங்கிடப் பெற்றவன் மகிழ்ச்சி போலவே,
இளங்கிளி சுந்தரி எதிர நின்றதும்,
உளங்கிளர்ந் துவந்தனன் உரிய தந்தையே.

சக்தியை அன்புறத் தழுவி ஏற்றனன்,
சத்திய மன்னனைச் சயசபா ஷென்ருன்,
உத்தம முனிவனை உருகிப் போற்றினுன்,
மெத்தவுங் கதைகளை விரும்பிக் கேட்டனன்.

அன்னிய நாட்டினில் அரக்கர் மாயத்தில்
இன்னவர் வாழ்ந்ததும், இசைக்க லையினுல்,
இன்னல்செய் அவுணரின் இனத்தை மாற்றியே
நன்னலம் புரிந்ததும் நவிலக் கேட்டனன்.

சீகரன்

ஆவியைப் போலநான் அன்பு செய்திடும்
பூவியல் அழகியே, புதல்வி யோடினித்
தேவியல் வாழ்வுடன் சீக ரத்திலே
நாவியற் கலைகளை நாட்டிப் போற்றுவாய். 20

கற்பினுக் கரசியே, கலையின் செல்வியே,
அற்புத முனிவரன் அன்பு பொங்கவே
நற்பணி செய்தினி நாளை வேண்டிய
முற்படு வெற்றியை முயலு வாமரோ !

சுந்தரி

திடமன மறிந்ததைச் செய்யுந் தந்தையே,
இடமகல் உலகெலாம் இராக்க தர்களின்
வெடிபடு செருக்கினால் விளைந்த தீமைகள்
அடர்ந்தன ; வருந்தநல் லறங்கள் எங்குமே.

புண்ணிய பூமியைப் புலிய ரக்கர்கள்
எண்ணிய படியிடர் எய்தப் பற்றினர்.
மண்ணுல கங்கெட மல்லுங் கொள்ளையும்
புண்ணுட னிழைத்தனர் புல்லர், கள்ளரே....

அவுணரின் செருக்கினை யழித்திந் நாளிலே
புவிநலம் புரிந்திடப் புனிதன் செய்திடும்
தவநலம் பலித்திடச் சக்தி யோடுநான்
நவநலத் தொண்டுசெய் நாட்டங் கொண்டுளேன்.

சீகரன்

என்மனம் அதுவென விசைத்துச் சீகரன்
கன்மன வரக்கரைக் கடிது மாற்றிடப்
பொன்மனங் கொண்டுறும் புனிதன் சேவைக்கே
நன்மனங் கொண்டதை நன்று பேசினான்....

போகன்

உலகினைப் பங்கு போட ஒருவருக் கொருவர் போட்டி
விலகறப் போடும் ஊணர், விளைத்திடும் தொல்லை யாலே,
கலகமே பெருகி மாந்தர் கலங்கிடுங் கலக்கந் தீர
நலமுறு சுத்தன் வந்தான் ; புதுயுக நாதன் அன்னோன்.

தானவத் தீவில் யாங்கள் சாதித்த பணிக ளெல்லாம்,
தீனரைத் தாங்குஞ் சுத்த சித்தனே சாதித் துள்ளான்.
மோனமாய்த் தவத்தின் சக்தி முடிவறத் தந்து, வெற்றி
ஈனுறக் காரியத்தை இனிதவன் முடித்தான் ஐயா...

தலைவனும் அவனே எங்கள் சரிதையும் அவனே, இந்த
நிலைபெறும் உலகுக் கெல்லாம் அன்பொளிர் நிலையம் அன்னான்.
கலைகளுக் கிறைவன், யோகக் கனலினைப் பரப்பி, நாளும்
அலைகடல் உலக மெல்லாம் அதிசய நன்மை செய்வான்.

போர்செயும் அரக்கர் போகும் போக்கினை யறிந்தி ருந்தே
சீர்பெறுங் காலங் கண்டு, சீரிய சுத்தன் வாழும்
கார்வரை சென்று, நல்ல காரியந் தொடங்கும் போதென்
ஆர்வத்திற் குதவி செய்வீர் ; அனைவரும் என்றான் போகன்.

சத்தியன்

எங்குநாம் இருந்துந் தூயன் இதயத்தில் இருக்கக் காண்போம்,
இங்குநாம் அவனை யெண்ணி யியற்றுவ நன்று செய்வோம்;
அங்குதா னவர்கள் ஆட்டம் அடங்கிடில் அறவோர் கூட்டம்
செங்கதிர்க் கிரணம் போலச் செகத்தினை யழைப்ப தாமே.

அத்தகை நல்ல காலம் அழைப்பதை உள்ளே கேட்டுச்
சுத்தசே வைக்குச் செல்லச் சுதந்தர ராக நிற்போம்.
பித்தங்கொள் அவுணர் தாமும் பெருஞ்சமர் வெறியி னைத்தே
உத்தமன் அருளை நாடும் உபாயமும் செய்ய லாமே...

சக்தி

உலகெலாம் பரவுஞ் சோதி, உள்ளத்தில் இலகுஞ் சோதி,
பலவகை நன்மை யெல்லாம் பரிந்தருள் சுத்த ஜோதி,
விலகிலா தென்னுள் ஆடும் விமலமா ஜோதி யொன்றைக்
கலந்துவாழ் வாழ்வே இந்தக் கன்னியின் வாழ்க்கை யாமே...

இன்னலைத் தீர்க்கும் ஐயன், எனைவிடா தருளு மையன்,
பொன்னொளிர் புனிதன், அன்பு பூண்டெனை யாளும் கோமான்,
தன்னலந் துறந்த வள்ளல், சகத்திற்கே வாழுந் தியாகி
அன்னவன் யோக மேயென் ஆருயிர்க் கினிய தாமே...

இவ்வகை அன்பு செய்யும் இணைபிரி யாத நேயர்
நவ்விளந் திருவார் சக்தி நல்லிசை யமுதும் பேச்சும்,
செவ்விய கலையும் யோக சித்தியும் சுத்த னன்பும்
திவ்விய வாழ்வு மாகத் தினம்பல கழித்தார் மாதோ!

போகன் புறப்படுதல்

இடமகல் உலக மெல்லாம் இகல்செயும் அசுர மாயம்
அடங்கிடுங் கால மெய்த ததற்கறி குறிய தாகத்
திடமன நேயர் ஓர்நாள் தியானத்தில் ஆழ்ந்த போது,
நடம்பெறுஞ் சிலம்பொ லிக்க நாதமொன் றழைத்த தம்மா!

சக்தி

என்னவன் அழைத்தான்; ஆங்கே இசைமிகு போகன் சென்று
முன்னர்நம் சரிதையெல்லா முற்றுறச் சொல்லி, எம்மான்
என்னநாம் செய்ய வேண்டும் என்பனே அதனைச் செய்யத்
துன்னுவோம் என்றாள் சக்தி சுத்தனுக் காக வந்தாள்....

பொருத்தமென் றுரைத்துப் போகன் புனிதனுர் அழைப்பிலுள்ள
கருத்திதென் றோதி, அன்புக் கடவுளைத் தியானஞ் செய்து,
திருத்தகு நாளில் வேக விமானத்திற் சென்றான்; அன்னோன்
வரத்தகு வரவை முன்பே வாசகர்க் கோதி னேமால்.

இத்தகை நிகழ்ச்சி யெல்லாம் போகனார் இயம்பக் கேட்டே,
உத்தம நேயருக்கும் உரைத்தனன் கவிதை யாலே ;
சுத்தனு மனங்கு விந்து சூட்சும உடலி னாலே
சித்தருட் கடமை பேசித் தியானத்திற் பாடி னானே !

அன்புநிலை கண்டுலக மனைத்தும் வாழ்க !
அருளாட்சி தழைத்துயிர்கள் அமைதி சேர்க !
துன்பமெலாம் பொறுத்துலகத் தொண்டு செய்யும்
சுத்தசம ரஸத்தொண்டர் துலங்கி வாழ்க.
நண்புணர்வு பரவிடுக ! நலிக வெம்போர் !
நல்லபொது நிலையினிலே ஞான மோங்கி,
இன்பநிலை யாமிறைவன் கருணை யாலே
எல்லாரும் ஓர்குலமாய் வாழ்க மாதோ !

தருமத்தை நிலைநாட்டத் தவங்கள் செய்தோம்,
சத்தியத்தைக் கண்டிடவே தியானஞ் செய்தோம்.
கருமத்தை யோகமெனக் காக்க வேண்டிக்
கனலொன்று பெற்றின்று காத்து நின்றோம்.
மருமத்தை அறிந்தவுணர் அவுண ராலே
மதமடங்கப் போர்வந்த வகையுங் கண்டோம்.
ஒருமித்து வாய்மைக்கே உயிர்க்கும் அன்பீர்,
உலகசக்தி அழைப்புமினி யுறுவ தாமே !

"இருமிங்கு போகனாரே இனியுல குய்ய வேண்டித்
திருமிகு கடமை நம்மைத் தேடியே விரைவில் இங்கே
வரு" மெனத் தூயன் சொல்ல வரமுனி போற்றி செய்து,
உருவெனக் கண்ட ஞான ஒளியினைத் தியானித் தானே !

போகன்

சுத்தனே சரணம் ! சுத்த தருமமே சரணம் ! அன்பார்
சுத்தசங் கத்தி லுள்ள தொண்டரே சரணம் ! என்றும்
பத்தருக் கருளும் சுத்த பரமனே சரணம் ! யோக
சக்தியே சரணம் ! சித்தி தருகுரு வரனே போற்றி !

பத்தியாய்ச் சுத்தா னந்த பாரதிக் கினிய சுத்த
சக்தியின் அருளாற் பூத்த பாரத சக்தி தன்னில்,
இத்துடன் நான்காங் காண்டம் இயல்புற முடிந்த திந்தத்
தத்துவக் காதை சொல்லுந் தானவர் தன்மை தானே .

பாரத சக்தி, நான்காவது

தானவ காண்டம் முற்றிற்று

பாரத சக்தி மகா காவியம்

ஐந்தாவது

சுத்த சக்தி காண்டம்

[சுத்த நிலையம் உலகெங்கும் அருட்பணி செய்யத் தயாராக நிற்கிறது; அந்தச் சமயம் சக்தியும் சீகரனும் விமானத்தில் வந்து இறங்குகின்றனர். சுத்தன், சக்தியை "கௌரி" என்று அறிந்து தன், யோக சக்தியைத் தருகிறான். சித்தி நகரிலிருந்து பாரத முனிவர், சித்திமான் முதலிய பெரியோர் வந்து, "புண்ணிய பூமியை விடுதலை செய்ய இதுவே தருணம்" என்று வேண்டுகின்றனர். சுத்தன் அகண்ட தியானத்தில் எல்லோருக்கும் பாரத சக்தியாகிய ஆத்ம சக்தியைத் தூண்டிச் சிலகாலம் யோகத்தி லிருத்துகிறான். அந்த யோகத்தில் ஒவ்வொருவருக்கும் ஓர் உண்மை உதிக்கிறது. அப்படி உதித்த உண்மைகளை "**யோக சித்தி**" என்ற நூலாகத் தொகுத்து, அதில் உள்ள பன்னிரண்டு இயல்களையும் உலகில் பரப்பப் பன்னிரண்டு சித்தர் குழுக்களைத் தயார் செய்து, சக்தியின் தலைமையில் உலகிற்கு அனுப்புகிறான். யோக சித்தர்கள் உலகெங்கும் சென்று, சன்மார்க்கமும் தெய்வச் சுடரும் பரப்பி, மிருக பலத்தையும் அசுரத்தனத்தையும் மாற்றிப் புதிய உணர்ச்சியை உண்டுபண்ணுகிறார்கள். புண்ணிய பூமியில் தூமகேது கலியனைச் சிறையிட்டு, தான் அரசாளுகிறான். மோகியும் கலியனை மோசஞ் செய்து தூமகேதுவை மணக்கிறாள். கலியன் கண் திறக்கிறது; சுத்தனை நினைக்கிறான். வஞ்சப் பதர்களான மாவலி யரக்கரை ஒழித்து உலகில் சுத்தனின் யோக ராஜ்யத்தை நிலைநாட்ட உறுதி கொள்கிறான். இதே சமயம் சித்திமான் கலிநகரைப் படையெடுக்கிறான். கலியன் சிறை தப்பி, மோகியைக் கொன்று, புரட்சி செய்து, தூமகேதுவைச் சிறையிலடைத்து, சித்திமானுக்கு உதவிசெய்து, கலிநகரைச் சுத்த நகராக்குகிறான்.

இச் சமயம் தானவத்திற்கும் ஆணவத்திற்கும் வலுத்த குண்டுப் போர் நடக்கிறது. சத்தியனும் சுந்தரியும், சுத்தனின் சக்தியால், சாந்தப்படை சேர்த்து, சமரில் தானவர் பலர் சோராது செய்கிறார்கள். ஆணவன் மாவலியன் கொழுப்பை இறக்குகிறான். கொடுமையான கொலைக்கருவிகளால் போர்செய்து இரு நாடுகளும் களைத்துப்போகின்றன. சுத்தனின் சன்மார்க்க வேகம் எங்கும் பரவி, ஜனங்களுக்குப் போரில் வெறுப்புண்டா

கிறது. தீனர்களெல்லாம் மடமை வென்று ஒழிந்து சுகிக்கிறனர். முடிவில் ஆணவமும் மாயையும் தனிப்போர் புரிகின்றனர். மாயை ஆணவனைக் கொல்லுகிறாள். ஆறுமுகன் மாயை மகனாய்ப் பட்டுத் தளர்ந்து, புண்ணிய நாட்டை அளித்த ஞானகுருவிற்கு வருகிறான். இறைவன் சுத்தசக்தியின் திவ்ய எழுச்சியை ஏற்படுத்துகிறான். மாயைக்கு அதற்குள் இடமே முடியவில்லை. உடனே புண்ணிய பூமியை ஆக்கிரமிக்க யோகத்தில் செல்லுகிறாள். அழிவில் சிரத்தையின் ஏமாற்றம் நேர்கிறது. சிவன் புண்ணிய பூமியிற் குடியேறி சிவயோக மடத்தில் சுத்தனின் பெருமைகளையும் அவருக்கு அடங்கி நடப்பதின் நன்மையையும் விளக்குகிறான். மாயை புண்ணிய பூமிக்குப் போய் ஏமாந்து, செருக்கைச் சுத்தனை சரணடைகிறாள். சக்தி அப்போதுதான் தந்தைக்கு "யோக சித்தி"யை உபதேசித்து, வாழ்க்கையின் பயனை விளக்குகிறாள். இப்போது உலகமெல்லாம் சுத்தனை அறிகிறது. அவனுடைய யோக சாம்ராஜ்யத்தை வரவேற்கிறது. சுத்தன், சக்தி சாந்த முனிவர் சூழ்ந்த தனது யோக சங்கத்துடன் சித்தி நகருக்கு எழுந்தருளுகிறான். உலகத் தலைவர்களெல்லாம் கூடி அவனை அரியணையேற்றி முடி சூட்டுகிறார்கள். சுத்தன், தன்னை அரசன் என்று அழைக்காமல், உலகத் தொண்டன் என்று கருதி, ஆயுளெல்லாம் மனித சமுதாயம், தேவ சமுதாயமாகி முன்னேறவே பணிசெய்கிறான். புண்ணிய பூமியில் சுத்தன் யோக சாம்ராஜ்யத்தையும் தேவ நீதியையும் நிலைநாட்டுகிறான். அதன் அழகையும் அருளின்பத்தையும், அமைதியையும் கண்ட பல நாட்டார் சுத்த சக்தியின் துணையை நாடி, யோக சித்தர்களை வரவேற்றுத் தத்தமது நாடுகளிலும் தெய்வ ராஜ்யத்தை நிலைநாட்டுகின்றனர். சுந்தரி, ஆனைக் தானையம் ஆகிய இரண்டிலும் அவ்வாறே செய்கிறாள். மாயவன் புதிய மனிதனாகி, சுந்தரிக்கு உதவி செய்கிறான்; சமயன் பொதுநல ஊழியனாகிறான். சுத்தனும் சக்தியும் மனித சமுதாயத்திற்கு அருட்பணி செய்து, கோடானு கோடிப் பேர்களுக்கு யோக சக்தியை அளித்துப் புதிய உலகை நிலை நாட்டி, தவத்திலேயே உடலை உதறி, சூட்சும சரீரத்தால் எங்கும் உலவிப் பணி செய்கின்றனர். உலகமெல்லாம் ஒரே நாடு; ஒரே அரசு; உலகின் அரசர் உலகோர். உலகோரால் தேர்ந்தெடுக்கப் பெற்ற ஒரு பாரத சக்தி சபை உலகை நிர்வகிக்கிறது. சுத்தனும் சக்தியும் நீண்ட தவத்தால் வளர்த்த பாரத சக்தி, அறங்காத்து உலகை இன்பமய மாக்குகிறது.]

LIBRA

பாரத சக்தி மகா காவியம்

ஐந்தாவது

சுத்த சக்தி காண்டம்

காப்பு

மலர்களைக்கொஞ்சி மணவெறி யேற்று
வருகின்ற தென்றலைப் போலே,
கலகல வென்றே காலையிற் பாடுங்
கட்டிலாப் புள்ளினம் போலே,
சலசலத் தோடிப் பயிர்களை வளர்க்குந்
தவமலை யருவியைப் போலே,
கலைவளர் கவிதை யருளுவாய் இன்பக்
கடவுளே கருத்தினில் அமுதே !

எத்திசை யுலகும் இனிதெனக் கொள்ளும்
இயல்புறு நிலையினை விளக்கிச்
சுத்தசன் மார்க்க விளக்கினைத் தூண்டித்
தொண்டறி வன்பினைத் துலக்கிச்
சத்தியத் துடுப்பால் வாழ்வெனும் படகைச்
சதானந்த வெள்ளத்திற் செலுத்தி,
நித்திய மான பயனளித் தெனது
நிறைகவி நிலவிட வருளாய் !

ஓங்கிய தெய்வச் சுவையிலே தோய்ந்திவ்
வுலகினில் அமரவாழ் வெய்தித்
தீங்கலை வளமை திசை திசை பெருகிச்
செவ்விய நன்னடை செழிக்க,
நீங்கறு சுடராய் என்னுளே நிலவு
நிமலனே நீதரும் இந்தத்
தேங்கவி யான பாரத சக்தி
திகழுக புகழுறச் சிறந்தே !

சித்தரின் உள்ளே தியானத்தில் வந்து
தித்திக்கும் சிவமயப் பொருளே,
சுத்தசன் மார்க்கச் சுடரொளிக் குன்றே,
சுத்தனும் சக்தியுந் துலங்கி,

இத்தல மெல்லாம் அருளர சாட்சி
இலக்கிய கதையினை யிசைக்க
வித்தகர் போற்றும் வேதவாக் கருளாய்
வெற்றியை விளக்கிடும் இறைவா !

கோரிநான் கொண்ட கொள்கைகள் அனைத்தும்
குயிற்றிய குணம்பெறு மாலை,
பாரத சக்தி , மாலையைச் சூட்டிப்
பரம நின் னருளையே போற்றி !
ஊருன தூராய், உளமுன துளமாய்,
உரையுன துரை;செய லுனதாய்ப்
பாரினில் வாழ்ந்துன் பதநிழ லடையப்
பசுபதி யேயெனக் கருளாய் !

1. புதுநாட் படலம்

உலகம் வாழ்ந்திடத் தவஞ்செயும் உத்தமர் தலைவன்,
பலது றைகளிற் பயின்றொரு பொதுமுறை பணித்தோன்
இலகு சங்கமும் கொள்கையும் இரவிபோன் றிலகிப்
பொலிய வந்தது சுத்தநாள் புதியபொன் னாளே !

ஆனந் தக்கடல் மிதந்திடும் அமுதப்பொற் கலசம்
மான சூரியன் உதித்தது மறுவறு வானில்
தேனி றைந்தன நாண்மலர், இமயத்தின் சிகரம்
ஞான வெண்ணகை புரிந்தது நலங்கெழு நாளே.

மலைம கிழ்ந்தது ; வளர்நதி மகிழ்ந்தது ; கால
நிலைம கிழ்ந்தது ; நின்மல நிலையத்தின் யோகக்
கலைம கிழ்ந்தது ; பூமணக் காற்றுடன் கதிரும்,
தலைசி றந்தபே ரின்பத்தைக் குறித்தன தழைத்தே.

செண்டு மாமலர்த் தேனையுண் டோமெனத் திரியும்
வண்டு பாடிட வனப்புட்கள் பாடிடக் கங்கை
பண்டு போலவே பாடிடப் பணிநலம் புரியுந்
தொண்டர் பாடினர் புதுயுகந் தோன்றிடுந் துதியே.

செங்க திர்களை வீசியே சகமெலாந் திகழத்
தங்க மாக்கிடுஞ் சூரியன் போலவே, சாந்தம்
பொங்கு ஞானத்தைப் பூவினில் யோகத்தாற் பரப்பி,
மங்க ளப்புது யுகத்தினை வளர்குரு வாழ்க !

புதிய வாழ்க்கையும் புண்ணியத் திருக்களும் பொலிக !
முதிய நான்மறை மொழிந்திடு முதற்பொருள் பொலிக!
மதியில் ஒற்றுமை மனதினில் மங்கலம் பொலிக!
சதிசெய் பாபங்கள் ஒழிந்தருட் சாந்தமே பொலிக !

பால்வ ளங்களும், பயிர்கனி வளங்களும், வீரர்
வேல்வ ளங்களும், வித்தையின் வளங்களும், செய்ய
கோல்வ ளங்களுங் குடிகளின் வளங்களும், ஈகை
யால்வ ரும்புகழ் வளங்களும் இலகுக மிகவே !

அடிமை வாழ்க்கையும், அறிவிலி வறுமையும், அரக்கர்
கொடிய போர்களுங் குண்டடிக் கூச்சலும் ஒழிந்தே,
படியி லேயருள் பாலிக்கும் பணிகளும் பயனும்,
குடிகொண் டாளுக குலவுக தேவரின் குணமே.

ஏக மாகிய பரம்பொருள் இறைவனை யடையுந்
தாக மோங்குக ; சாதகர் யாவர்க்கும் சுத்த
யோக சித்திகள் ஓங்குக ; வுள்ளறி வொளிர்க !
வேக மாகநம் விருப்பங்கள் வெற்றிகா ணுகவே !"

ஒன்றி யுள்ளத் தொடுங்கி, மனத்தினை
வென்று, கண்ட விழுமிய உண்மையைக்
கன்றிற் கீயுங் கருணைப் பசுவென
நின்ற ளித்திடு நீள்புவித் தொண்டர்கள். 40

அறிவும், ஆற்றலும், ஆத்தும சித்தியும்,
இறைவ னுகும் உலகினுக் கென்பவர்,
துறவு கொண்ட துகளறு நேயர்கள்,
அற வடிவம தாகிடும் அன்பர்கள்.

அரும்பு போலுள் ளடங்கித் தியானித்தே
கரும்பு போன்ற கடவு ளருட்சுவை
விரும்பி யுண்டொளி கண்டு மலர்ந்தவர்,
பெரும் புனிதன் பிறந்தநன் னுளிலே,

இரு ளரக்கர் இடர்களைப் போக்கிடும்
அருளை வேண்டினர் ; ஆனந்தம் வேண்டினுர்,
பொருள றிந்த பொதுமறை யின்வழி
திரு வுலகந் திரும்பிட வேண்டினுர்.

உளங் கவரும் உயர்ந்த நிலையத்தைப்
பளிங்கு போலப் பரிசுத்த மாக்கியே,
வளம லர்கள், வனப்புறு தோரணங்
களை நிரம்பிடக் கட்டி யணிசெய்தார்.

வனப்பு மிக்க வளைவுக ளாக்கியே
நினைக்க நன்னெறி நீதி யெழுதினுர்,
அனைத்தும் வாழ்கென் றருமறை பாடினுர்,
மனத்திற் பூமியின் மங்கலம் போற்றுவார்.

கனியும் பாலுங் கடலையுங் காய்களும்,
இனிய மூலிகை யின்வகை யுங்கொண்டே
புனித நல்விருந் தாக்கிப் புசித்தனர்,
மனித தேவ மரபினர் ஒன்றியே.....

காலை யெல்லாங் கரும மியற்றினுர் ;
மாலை சுத்தன் மலர்க்குடி லின்முனே
நீல விண்மலர் நேர நெருங்கினுர்
ஞாலம் வாழ்கென நல்லிசை பாடியே....

எளியநல் லுடையுடன், இனிய வாக்குடன்,
களிவளர் நகையுடன், கருணைக் கண்ணுடன்,
அளிவளர் கையுடன், அருட் கருத்துடன்
ஒளிவளர் சுத்தனும் உற்ற மர்ந்தனன்.

முன்னுள தொண்டரை முனிவர் காவலன்,
புன்னகை குலுங்கிடப் பூங்க ணேக்கியே,
உன்னத மலையினின் றுருகி வீழ்ந்திடும்
சன்னதக் கங்கைபோற் சந்தம் பேசினுன்.

சுத்தன்

பங்கய உளத்தில் அன்புப் பரம்பொருட் சோதி யான
செங்கதிர் படிந்தே, யோக சித்தியைப் பெற்றீர், சுத்த
சங்கமின் றடைந்த நன்மை சகலரும் அடைய வேண்டித்
தங்குல கெல்லாந் தொண்டு செய்திடுந் தருண மிஃதே !

பன்மய உலக மெல்லாம் பரந்தொரு மயமாம் சுத்த
சின்மய சக்தி யாலே, சித்திகள் பலவும் பெற்றீர்,
பொன்மய உடலும், உள்ளும், பூரண வாழ்வும் பெற்றீர்,
தன்மய வுயிர்கட் கெல்லாம் பணிசெயுந் தருண மிஃதே !—

பூவினில் அசுர மாயம் புரிந்திடுந் தீதை மாற்றத்
தேவியல் கொண்ட நல்ல திருக்கலை வளர்த்த செல்வீர் !
ஓவறு சாத னத்தால் உள்ளுறப் பெற்ற சித்தி
ஏவர்க்கும் எய்த வேண்டி ஏகிடுந் தருண மிஃதே !

கள்ளத்தால், அறிவி ழந்த காமத்தால், ஆண வத்தால்,
கொள்ளைப்பே ராசை யாலே, குணங்கெடு மாந்தர் மாற,
உள்ளத்தால், உண்மையான ஒன்றினை உணர்ந்தீர், அன்பு
வெள்ளத்தால்உயிர்த்தொண்டாற்றும்விழுமிய தருணம்இஃதே!

புண்ணிய பூமி வாழப் பூதல மெல்லாம் வாழத்
திண்ணிய விரதங் கொண்ட தீரர்காள், இனிநாம் சென்றே
நண்ணுறு நலந்தீ தெல்லா நாயகன் இச்சை யென்றே
எண்ணிய கரும மாற்றும் இனியநற் றருண மிஃதே !

மக்களைப் பிடித்த லக்கு மாவலிச் சனியனுக்குத்
தக்கதோர் விடைய ளித்துத் தானவஞ் சென்று வந்த
மிக்கநல் லன்பர் சேவை விழுமிய பயன ளிக்க
ஒக்கநாம் உலக மெங்கும் உதவிசெய் தருண மிஃதே !

துன்பிருள் அடிமை யச்சந் துயர்பல மேவ நாட்டில்,
வம்புசெய் தூமகேது வகையிலா தொழிய, மாந்தர்
இன்பவா னரசை யிங்கே யெய்திடக் கரும யோகம்
அன்பினு லியற்றக் காலம் அழைத்திடுந் தருண மிஃதே !

காட்டினைத் திருத்தி, வேண்டுங் கருவிகள் உழைப்பா லெய்தி,
போட்டிபொ ருமை யற்ற புதுயுக நிலையங் கண்டீர் ;
வீட்டினை யமைத்த தேபோல், வீறுகொண் டிடரை வென்று,
நாட்டினை யமைக்க வாரீர் ; நல்லதோர் தருண மிஃதே .

எல்லையிற் பொறுமை யாலே இன்னல்கள் அனைத்தும் போக்கி,
வல்பெருந் தவங்க ளாற்றி வரம்பெற்ற சுத்த சங்கச்
செல்வர்காள், கலியொ ழிந்து, சத்திய சீலர் காலம்
ஒல்லையி னுளிர நம்மை உதவிடுந் தருண மிஃதே !

அயலவர் மாயத் தாலே, அரக்கரின் பிடிப்பி னுலே,
துயிலுறு நாடு மீண்டுஞ் சுதந்தர வுணர்ச்சி பெற்றே,
செயலுடன் எழுந்து வீரத் திருவுறு பணிகள் செய்யப்
புயவலி யுடனே தொண்டு புரிந்திடத் தருண மிஃதே.

பொன்பழுத்த பரஞ்சோதி பொழியருளி னுலே,
புதுயுகமும், புதுவாழ்வும் பூமியிலே பொலிய,
அன்புளத்தீர் வாருங்கள் அருட்பணிகள் புரிவோம் !
அசுரபயம் ஒழித்திடவே, அதிமனிதர் செல்வோம் !

பண்படுத்தி விதைவிதைத்தே, பத்திவெள்ளம் பாய்ச்சிப்
பயிரெனவே உயிர்க்குலத்தைப் பரிவுடனே போற்றி,
விண்பழுத்த பேரின்பம் வியனுலகிற் கனிய
வீறு கொண்ட வேலைதொடர் வேளையிது வாரீர்.

கல்வி கேள்வியிற் கடவுளின் அருளினிற் கனிந்த
நல்ல தொண்டர்காள், அவரவர் நாட்டினுக் கியற்ற
வல்ல தொண்டினை வகையுற நினைத்தினி வகுத்தே,
சொல்லுவீர் அதைப் புரிந்திடத் துணிகுவீர் இனிதே....

இந்த மாப்பணிக் கெழுந்திடும் அன்பர்காள், உள்ளே
அந்த ராத்மனைக் கலந்துநீர் அமைதியா யிருந்தே,
சொந்த வாழ்வையே பொதுநலத் தொண்டெனச் செய்யும்
சிந்தை யூறிய தியானத்திற் செயற்றிறம் பெறுவீர்.

சுத்த னிவ்வகை சுதந்தர வுணர்வுறப் பேசிச்
சத்தியன் செயும் பணியையுந் தகையுறச் சொல்லிச்
சித்தர் கூட்டத்தைத் தியானத்திற் சேர்ந்திட வமர்த்திச்
சக்தி யூற்றினன் ஸஹஜ சமாதியி லிருந்தே....

வான மர்ந்தது ; பூமியும் அமர்ந்தது ; மலையின்
கானமார் நதி யமர்ந்தது ; கருணையின் மன்னன்
மோனமா யமர் நிலையத்தின் முனிவரர், உள்ளே
தான மர்ந்தது—பாரத சக்தியாம் தணலே.....

ஆன்ற மாதவர் அருந்தவம் அளித்தசிற் சக்தி,
சான்ற யோகிகள் சாதனம் சாதித்த சக்தி,
ஈன்ற தாயினும் இனிதுசெய் எழில்பெறுஞ் சக்தி,
ஊன்றி யுள்வளர் ஒள்ளிய பாரத சக்தி.

இகல வர்செயும் இடர்க்குலம் ஆயிர மேனும்,
தகர் திறம்பெறத் தழைத்திடும் ஆத்தும சக்தி,
அகவி ருளையும் துயரையும் அழித்தொளி துலக்கும்
பகலெ னத்திகழ் ஞானமாம் பரிதியி தாமே

அரக்கர் தீமையை வேருடன் அழித்திடும் ; கனலைச்
சுரக்குந் திவ்விய சுதந்தரச் சுடர்பெறுஞ் சக்தி ;
இரக்க மன்பருள் ஈகைதி யாக விவேகம்,
பரக்க நல்கிடுஞ் செல்வமாம் பாரத சக்தி.

ஆணில் ஆண்மையும், பெண்ணினிற் பெண்மையு மாகிக்
காணு முக்குண உலகினிற் காட்சியாஞ் சக்தி ;
வீணுறும் பிடி வாதத்தை வீழ்த்தியன் புடனே
பேணுந் தூயரைப் பெருமைசெய் பாரத சக்தி.

சோக மோகத்தைத் துரத்திடும் தூயசிற் சக்தி ;
யோக மேதரும் உத்தம நித்திய சக்தி ;
ஏக மாகிஇவ் வுலகெலாம் இலகியா னந்த
போக மீந்திடும் புண்ணிய பாரத சக்தி.

சோர்வும் அச்சமுந் துயரமுஞ் சோம்பலுந் துடைத்தே,
வீர தீரமும் வினையுல கனைத்தையும் வெல்லும்
காரி யத்திற னுந்தருங் கைகண்ட சக்தி
பாரதத் திரு நாடுயர் செழுந்தவப் பயனே !

இத்தகைப் பெருஞ் சக்தியுள் ளிறங்கிடு மெல்லே,
சத்த மின்றிநற் சமயத்தில் சார்ந்தனர் இருவர் ;
சுத்த யோகியத் தூயரை யுடன்வர வேற்று
மெத்தவும் உப சரித்ததை விளம்புவ தென்னே !

செய்ய பாரத முனியுடன் சித்திமான், எங்கள்
ஐயன் பால்வரும் செய்தியோர் அதிசய மாமோ ?
"வையங் கூவுதுன் வரவினை வரத"வென் றவர்சொல்
மெய்யு ரையினை விரும்பிடார் நிலமிசை எவரே !

கண்டதும் பெருங் காதலோ டருட்பெருந் தூயன்,
வண்டுணு மலர் சொரிந்தவர் மலரடி பணிந்தே,
பண்டுடன் பசும் பால்,பருப் பவர்பசிக் களித்தே,
உண்டு சற்றிளைப் பாறவும் உலகியல் கேட்டான்.....

வீட்டிற் குற்றதும் வெவ்விய தூமகே துவினுல்,
நாட்டிற் குற்றது நாயகன் யோகத்தை நாடிக்
காட்டிற் குற்றபின் கண்டதும் பாரதன் கதைக்கக்
கேட்டவா றுரை செய்குவேன் கேண்மினே புலவீர்....

2. போற்றிப் படலம்

வாழ்வை முற்றிலும் வளர்தவ யோகமே யாக்கித்
தாழ்வுயர் வறச் சத்திய சமரஸ வெளியிற்
சூழ்புவியினில் ஆண்பெண்கள் சுதந்தர மாக
வாழ நல்வழி கண்டனை வரதநீ வாழ்க !

தான வர்செயும் அதர்மத்தைத் தகர்த்திட வேண்டி
மோன மாகச்சிற் சக்தியை முத்தியாற் பரப்பி,
மான வர்களை அதிமனி தரின்மர பெனவே
மேனிலைபெறச் செய்தனை ; விழுமியோய் வாழ்க !

ஆதி ஈடனும் சுவர்க்கமும் அமரநா டதுவும்,
காதை சொல்லிடும் கற்பக விண்ணுமிவ் வுலகில்,
சாதி மாமத பேதமே சார்வறச் சாந்தச்
சோதி மாதவச் சுதந்தர சக்தியாற் படைத்தாய்.

இளமை கொஞ்சிடும் இயலழ குடன்மனை யழகும்,
வளமை கொஞ்சிடும் மலர்கனிச் சோலையின் அழகும்,
தெளி புனல்களுந் தெய்விகக் கைலையைக் காணும்
உளமகிழ்வுமென் னுயிரினுக் குதவிடும் களிப்பே.

துங்க மான மந்தாகினி ஓம்எனத் துதிக்கத்
தங்க மாங்கனித் தருக்களிற் பறவைகள் பாட,
பங்க மாம்புவிப் பாசங்கள் விலகிய சுத்த
சங்க மங்கள கானங்கள் சாந்தமிந் தனவே.

வேத மெய்ப்பொருள் விளங்கிடக் கண்டுளம் விண்டே,
சாத கர்களைப் பயிற்றியிச் சகத்தினுக் கெல்லாம்
ஓதி டாதற வழியினை புணர்த்திடும், பரம
சோதி வீசிடுஞ் சுத்தசங் கத்தினைப் படைத்தாய்.

கொடிய ணைந்திடு மரங்களுங் கொழுங்கனி மலரும்,
படிய ணைந்திடும் பசுமையும், படிகவா றணையும்
முடிநி வத்திடு மலைகளு, முத்தமிட் டழகைக்
கடிக மழ்ந்திடு மூலிகைக் காற்றையு நுகர்ந்தோம்.

புண்ணி யப்புனல் படிந்தரன் புகழினைப் பாடி,
விண்ண ளாம்பனி மலைகண்டு வேகமா யிங்கே
நண்ண லும்ஒரு நவசக்தி யின்பத்தை நயந்தோம்,
எண்ணந் திண்ணிய வெற்றியென் றிதயத்திற் களித்தோம்.

பரவ சம்பெறும் பாரத முனியிவை கூறி,
வரதன் சொல்வர லாற்றையும் அறிந்துதான் வகிக்கும்
விரத பூஞ்சொலி, சித்திமான் விருப்பையுங் குறித்தே,
இரவை யோட்டிடும் இரவிநீ யெழுகென வுரைத்தான்.

சுந்தன்

இரவி இப்புது நாளினில் எழுந்தது பெரியோய்.
கரவுங் கள்ளமுங் கடுங்கொலைப் பாபமும் கடிந்தே,
சுரகு ணத்தினைத் துய்க்குமுன் சுதந்தர மற்றே,
இரவி லிப்புவி வருந்திய வகையினை யியம்பாய்.....

பாரத முனி

பத்தி மான்களின் பாவன னாகிய பகவன்,
புத்தி மான்களின் போதனை புறக்கணித் துலகம்,
எத்த கைத்துயர் வருந்திய தென்பதை, நமது
சித்தி மான்சொலக் கேளெனச் சிவமுனி குறித்தான்.

சித்திமான்

பிறந்ததும் வளர்ந்ததும் பிறர்க்கு வாழநீ
சிறந்ததும், கலியினைச் செயித்து, நீளிசை
நிறைந்ததுந் துறந்தது நிமல யோகத்தில்
உறைந்ததுங் கண்டுனை வணங்கும் உள்ளமே.

முயன்றுநின் அற்புத முயற்சி திவ்வியப்
பயன்றரு நேர்மையும், பாரில் உன்றனுல்,
இயன்றதும் அறிந்துளம் எண்ணி என்மனம்
வியந்தது ; மகிழ்ந்தது வெற்றி கூறியே !

அங்குநீ துறந்தனே ; அணிநிலா விலாக்
கங்குலைப் போலகக் கவலை மூண்டனம்,
இங்குன தருந்தவ வியல்பைக் கண்டதும்,
செங்கதிர் உதித்ததெஞ் சித்த வானிலே.

அன்னையும், அப்பனும், அரிய நண்பனும்,
பின்னுள தலைவனும், பிரானும் நீயென
உன்னையே நல்லவர் ஓது கின்றனர் ;
தன்னையே உலகுயத் தந்த தீரனே.

உலகினைத் துறந்தனே ; உலகுக் காகவே,
அலவற வருந்தினேம் ; அசுர மாயையாற்,
கலகமும் போட்டியுங் கலியும் கேதுவும்,
பலதுயர் செய்யினும் பான்மை கெட்டிலோம்.

மன்னுயிர்க் குலமெலா மகிழ நீசெயுந்
தன்னல மற்றநற் றவத்தை யெண்ணியே,
அன்னைதன் குழந்தையில் அமைதி காண்பதே
என்னநாம் உன்புக ழெண்ணி வாழ்கின்றேம்.

கெடுமதிக் கலியனுங் கீழ்க்கு ணத்தையே,
நடுவதிற் சலிப்பறு நாசத் தூமனும்,
படுதுயர் செய்தனர் ; பரிவு கொண்டுநீ
விடுதலை தந்திட வேண்டும் ஐயனே.

மூதறி முனிவனு முதிய ராணியும்,
தீதறு நண்பருஞ் செய்த சேவையால்,
யாதொரு தீமையும், இன்று நாள்வரை
ஆதவன் கொடியினை அசைக்க வில்லையே.

கருமமே கண்ணெனக் கடமை செய்யுமென்
ஒருமனத் திறனிலே ; உன்னை நல்லருட்
குருவெனப் போற்றிய கொள்கை, சித்தியின்
உருவினை இன்னமும் உலைக்க வில்லையால்.

நற்றவ முடிந்தது நாடு சேர்ந்துநீ
பற்றலர் கொடுமையைப் பங்கஞ் செய்குவாய் ;
ஒற்றுமை யாக்கிநல் லுறவை யூக்கியே,
தெற்றென நிலைமையைச் சீர்தி ருத்துவாய்

பொய்யிருள் போக்குவை ; புனித சக்தியால்
மெய்யருள் இலக்குவை ; மேன்மை யீகுவாய்,
துய்யநீ எங்களைத் துகளி லாமலே
தெய்விக வாழ்விலுஞ் சேர்க்க வல்லனே.

கண்ணனும் புத்தனுங் கந்த வேளும்போல்,
எண்ணிய தவத்தினுல், எடுத்த காரியம்
திண்ணிதின் அடைந்திடும் சுத்த சித்தனே,
உண்மையின் றடைந்ததுன் உபய பாதமே !

சுத்தன்

ஏன்செய லெதுவு மில்லை என்னையா ளுடைய சுத்தன்
அன்னைபோல் சக்திப் பாலை அளித்தெனை வளர்க்க லாகிப்
பின்னொரு பந்தமின்றிப் பேச்சறு தவத்தி லுய்த்தான் ;
அன்னவன் அருளை யன்றி யடியனுக் குருவு முண்டோ ?

அற்புத மான சுத்த சக்தியின் அருளி னாலே
சிற்பரா னந்த யோக சித்தியைக் கண்டேன் ; ஐய
கற்பினைக் காத்து நிற்கும் கன்னிபோல், உள்ள மூறும்
அற்பிறு லவனுக்கேயான் ஆசைகொண் டுயிர்ப்ப தாமே.

எனக்கொரு வணக்கம் வேண்டேன் ; எம்பிரான் சுத்த தேவன்
தனக்குநீர் சரண மாவீர் ; சமயமாஞ் சழக்கிற் சிக்கி,
மனக்கிலே சப்ப டாமல் மறுவறும் உண்மை தன்னைத்
தனிக்குரு வாகி யுள்ளே தந்தனன் சிந்தை மேவி.

நிசமுள சுத்த சக்தி நெறியினைப் பற்றிச் சென்று,
நிசியிருள் இடர் வருந்து நிலவுல கிற்குந் தெய்வப்
பசிவளர் பத்த ருக்கும், பரனருள் வழியைக் காட்டிச்
சுசியுடன் வாழச் செய்யுந் தொண்டுசெய் தொண்டன் யானே.

இந்தநல் லுலக மெல்லாம், இராக்கதக் கொடுமை மிஞ்சி,
வெந்துய ரடைந்த போது, விடுதலை தந்து காக்க,
முந்துநாள் அருளைத் தந்து, முனிவருக் கினிது செய்த
தந்தையென் முறையுங் கேட்டுத் தன்னருள் பொழிந்தா னிங்கே.

அவ்வருட் சக்திக் கேயான் அடிமைசெய் வாயி லாக,
வெவ்விய தான வர்கள் வேதனை தீர்க்க வந்தேன்.
செவ்விய பாத்தி ரங்கள் சேர்ந்தன ; இனியிக் காலம்
ஒவ்விய செய்யு முன்னே உன்கதை யுரைத்தி டாயே....

கலியனெவ் வாறு மீண்டான் ; கலங்கறு நாட்டி லின்று
புலியெனத் தூமகேது புகுந்தவா றென்னே ? அன்னூர்
நலிவுறு ததர்மத் தாலே நாட்டினை வளைத்த தென்னே !
பொலிவுறு புத்தி மானே புகலுவை புலவ ரேறே.

3. கலி மீண்ட படலம்

கோகுலக் கண்ணன் போலே கோதம புத்தன் போலே,
ஆகுலந் தீர்க்க வந்தாய் அரவிந்தக் கண்ணு கேளாய் :
போகமா நகரை நீயும் பொட்டெனத் துறந்து, முன்னே
ஏகலும் உன்சொற் போற்றி இந்திரைக் குதவி செய்தோம்.

பகவநீ துறந்த தாலே, பங்கயச் செல்வி சின்னுள்
அகமலர் வாடி வாடி ஆறுத லடைந்த டைந்து,
முகமலர்ந் தெங்க ளுக்கு முதற்பெரும் அன்னை யாகித்
தகவுடன் செங்கோ லோச்சித் தருமத்தைத் தாங்கி வந்தாள்.

ஆதவன் பிசகி னுலும், அரசவை தவற மாட்டாள் ;
வேதநன் னெறியா யுன்றன் விதிமுறை காத்து நின்ருள் ;
மாதமும் மாரி பெய்ய, மன்னுயிர் மகிழ நாட்டில்
யாதொரு குறைவு மின்றி இந்திரை யன்னை ஆண்டாள்.

அன்னநம் அரசிக் கேற்ற துணைவலி யாக யானும்,
பின்னுறும் அமைச்சர் தாமும் பெருந்தகை முனியும் சேர்ந்து,
மன்னறங் காத்து, நாட்டு மக்களை உயிர்போற் பேணி
உன்னறந் தழுவி, என்றும் உண்மையைத் தழுவி யுள்ளோம்.

இணையறும் ஆத்ம ஞானம், இனியநற் கல்வி வாழத்
துணைதருந் தொழில்கள், செல்வத் துறைதரு வாணி கங்கள்,
கணைதரு வீரக் காவல், கவிதரு புகழ்கள் எல்லாம்
தணிவறத் தழைக்க நாட்டைத் தாங்கினேம் தீங்கி லாதே !

தீரனும் புத்தன் போன்ற திருவகக் கருணை கொண்டாய்,
வீரனும் சிவாஜி போன்று கலியினை வென்ற சூரா,
ஆரண முனிவர் போன்றே அருந்தவம் புரிந்த தூயா,
பாரத நாட்டை யுன்பால் அன்பெனப் பரிவின் ஆண்டோம்.

ஒளிவளர் மணியே, எங்கள் உள்ளமுன் உள்ள மாகி,
அளிவளர் உன்றன் அன்பே ஆருயிர் நேய மாகக்
களிவளர் கருத்தி னேடுங் கடமையைக் காத்து வந்தோம் ;
தெளிவளர் உனதி யோக சக்தியுந் தினமும் தேர்ந்தோம்.

தாயென நாடு தாங்கத் தருமமே அரசைத் தாங்கத்
தூயநல் லமைச்சர் வைரத் தூணென நீதி தாங்க,
நீயெமை யிங்கி ருந்தே நீளரு ளாலே தாங்கத்
தேயத்தை அன்னை தாங்கச் சேமமாய் வாழ்ந்து வந்தோம்.

அத்ததி யுலக மெல்லாம் அலைந்தலைந் துனது தந்தை
சத்தியன் இருக்கைத் தேடிச் சலித்தநம் உள்ளம் பொங்க,
உத்தமச் சிகரன்பால் உதவிய கடித மொன்று
வித்தக மன்னன் செய்தி விளம்பிட வியந்தோம் ஐய :—

சத்தியன் கடிதம்

இளநகைச் செல்வன், சுத்தன், இந்திரை யரசி, ஞான
வளமிகு முனிவன், சித்தி மந்திரி, அனைவருக்கும்,
உளமிகும்அன்பைச்சொல்லி,"உண்மையின் அழைப்பையேற்றேன்;
எளியவன் பணிக்கி றைவன் இரங்கிநற் றுணையு மீந்தான்.

இல்லறம் இடைநின் றாலும், ஈன்றவள் எதிர்நின் றாலும்,
செல்வனின் பாசம் வந்து செல்வழி குறுக்கிட் டாலும்,
சொல்லறங் காக்குந் தூயர் துணிந்ததைத் துறப்ப துண்டோ ?
நல்விடை கொள்கிறேன் ; என் கனவினை நனவ தாக்க.

சித்தனே டசுர நாடு செல்கிறேன், கலையி னாலும்,
சுத்தசன் மார்க்கத் தாலும், சுதந்தர ஒளியைத் தூண்டி,
அத்தனின் கருணை யாலே அதர்மத்தை மாற்றிக் காமப்
பித்துடை யவுணர் போர்ப்பேய் பிறகிடத் தொண்டு செய்வேன்.

விரிவுரை யெல்லாம் சுத்தன் அறிந்திட விளம்புகின்றேன் ;
அரியதோர் கருவியாலே போகனின் அருளி னாலே,
நரசமு தாயத் திற்கு நமனென வாய்த்த ஊணர்,
தரையெங்கும் பரவி, யான்ற தருமத்தை யழிக்கின் றாரே.

மந்திரி மணியே, மீண்டும் வஞ்சகக் கலிய னுள்ளே
வந்தறந் தேயத் தீமை யிழைத்திடா வகையைச் செய்வீர் ;
கொந்தளித் தகந்தை மோதுந் தானவர் கூட்டம், உள்ளே
முந்திடா தமைதி யாக முப்புறம் விழித்தி ருப்பீர்.

இல்லறம் வழுவி டாமல், இயற்கையோ டொன்றிப் பூத்த
தொல்லறம் வழுவி டாமல், சுத்தனார் தவத்தின் வந்த
நல்லறம் வழுவி டாது, நாட்டினைக் காத்து நிற்பீர் ;
கொல்லறங் கொண்ட வூணர் குலத்தினைத் திருத்தி மீள்வேன்.

பார்க்கின்ற உலக மெல்லாம் படுகொலை யரக்கர் செய்யும்
போர்க்கடு மைக ளின்றிப் புதுயுகம் பிறக்க நன்மை
சேர்க்கிறேன் ; முதிய வாழ்வைச் சிறந்தசன் மார்க்கத் திற்கே
வார்க்கிறேன் மீண்டு மங்கே வருகிறேன் வாகை கொண்டே...

இனையன விளக்கி மெய்யன், ஏகியங் கிழைத்த தெல்லாம்
தனையறி போகன் வந்து சாற்றிடக் கேட்டு வந்தோம்...
மனையினைப் போல நாட்டை மாண்புறக் காத்து வந்தோம்,
வினையுறு பயனாற் பின்பு விளைந்ததைக் கேளாய் மன்னா...

கலி வருதல்

காற்றினில் ஆவிபோற் கரந்து வந்திடுங்
கூற்றையுங் கண்டுடன் கொய்து வீழ்த்திடும்
ஆற்றலைப் படைத்தவர் அணிகொள் சேனையை
ஏற்றநல் லிடங்களில் இருத்திக் காத்தனம்.

வீரருள் வீர, ஓர் வியன்செய் கப்பலிற்
காரிருட் போர்வையிற் கரந்தி றங்கிய,
போர்மத வரக்கரைப் புரட்டித் தள்ளினேம்
ஆர்கலி விழுங்கிய ததர்மக் கூட்டத்தை.

கரையறு கருங்கடற் கடந்து, மற்றொரு
பெரியபோர்ப் படைவரப் பெயர்த்த னுப்பினேம்,
திரை தரைப் படையினைத் திடுக்கிட் டஞ்சியே
விரைவுறத் தானவர் வீட்டை நோக்கினர்.

அரியவர் பெரியவர் அன்பு மிக்கவர்,
உரியவர் அறிவினில் உயர்ந்த வீரர்கள்,
எரிவிளக் கென்னவே எங்குந் தேசத்தின்
புரிகளை உயிரெனப் போற்றி நின்றனர்.

இவ்வள விருப்பினும் இகல்செய் மாவலிக்
கொவ்விய கலியனும் ஊணர் கூட்டமும்
எவ்வகை வந்தனர் என்று காணிலோம் ;
வெவ்வியர் பலபல வேடங் கொண்டனர்.

அணியணி யாகநீள் ஆழிச் செல்வத்தைக்
கொணர்பெருங் கப்பலிற் கூலி வேலைசெய்
பணியினர் வந்தனர் ; பதுங்கிப் பின்பல
வணிகரும் வந்தனர் வாங்கி விற்கவே.

பகைமுக மறைத்தவர் பகட்டு மன்பினால்,
நகைமுக மினுக்கினால், இந்த நாடெங்கும்,
வகையுறப் படர்ந்துபின், வலிய சந்தைகள்
மிகையுற விரித்தனர் விந்தை வாணிகர்.

துணி நிறை மூட்டையைச் சுமந்து விற்றவர்,
அணிபெறுங் கடைகளை அகல நாட்டினர் ;
தணிவினைக் காட்டியே தயவைப் பெற்றதுந்
துணிவினைக் காட்டினர் துறைமு கங்களில்.

அன்னசத் திரங்களும் அறம டங்களும்,
இன்னியற் கல்விகள் ஈயுஞ் சாலையும்,
பொன்னுறப் பொலிந்திடும் புனிதக் கோயிலும்,
உன்னத மனையிலும் உறைந்து சென்றனர்.

பத்தர் போற் சிற்சிலர் பகட்டி வந்தனர் ;
சித்தர்போற் சிற்சிலர் செகத்தை யேய்த்தனர் ;
சத்தர்போற் சிற்சிலர் தந்திரஞ் செய்தார்,
எத்தர்கள் ஊரினை யேய்க்கும் வஞ்சரே.

இமயமா மலைமுதல் இலங்கை மட்டிலும்,
சுமையுடன் சுற்றிய சூழ்ச்சிக் காரர்கள்,
அமைதியின் அமர்ந்துபின் அகங்க ரித்தவர்,
இமைவறு வரிப்புலி யென்னப் பாய்ந்தனர்.

கரும்பெனப் பேசிய கள்ளர் தம்மையும்
விரும்பிநல் விருந்தென விட்டி லேற்றுமே
அரும்பசி தீர்த்தநல் லன்பர் நெஞ்சிலே
பெருந்தின வேறிட நஞ்சு பெய்தனர்.

வாணிகஞ் செய்திட வந்து, மன்னரின்
ஆணவ நெஞ்சினில் ஆசை தூண்டியே,
வீண்சமர் இளைப்பினல் வீடி ரண்டுறக்
காணியுந் துறைகளுங் கலந்து பெற்றனர்.

நந்தொழி லாளரை நயந்து, கற்றதுந்
தந்தொழி லுக்கொரு சந்தை தேடினார்,
இந்தமா யாவிகள் இருவர், ஓர்பகல்
வந்தனர் என்னிடம் வணிக ரென்னவே.

கடையினை விரித்திடக் காணி கேட்டனர்,
உடையினுள் ஒளிந்திடும் உள்ளங் கண்டுடன்,
நடையினைக் கட்டுமென் னாட்டி லேயுமைத்
தடைசெயுஞ் சட்டமென் றழுந்தச் சாற்றினேன்.

முன்கலி வித்திய முரண்கள், இன்னமும்
தன்னலக் கும்பலின் சரிதை யாகிடத்
துன்னிய சாகசர் தூண்டி யாசையைப்
பொன்புகழ்க் கனவினைப் பொருந்த வைத்தனர்.

அங்கொரு மன்னனை ஆத ரித்தபின்,
இங்கொரு மன்னனை இழிவு செய்குவார்.
உங்களுக் கேயினி யுதவி யென்றவர்
தங்களுக் குதவியை நாடுந் தந்திரர்.

எண்ணுறு சூழ்ச்சியால் இடம்பெற் றன்னவர்
உண்ணியென் றொட்டுவர் ; ஒற்றர் வந்திடிற்
கண்ணினிற் பொடியினைத் தூவிக் காணிலார் ;
பண்ணிய தொல்லைகள் பகர வொண்ணுமோ ?

புண்ணிய நாட்டினிற் புலாலின் வாடையும்,
கண்ணினைச் சுழற்றிடுங் கள்ளின் வீச்சமும்
பெண்ணினங் கற்பழி பெரிய தீமையும்,
புண்ணுறக் கண்டதும் புரிந்து கொண்டனன்....

தானவ மாவலி தரக ளுகவே,
மானமி லாக்கலி மாறு வேடத்தில்,
ஈனரின் படையுடன் இன்னல் செய்வதை
நானறிந் துடனொரு சபையை நாட்டினேன்.

சிற்றர சர்களிற் சிலர் எதிர்த்தனர் ;
மற்றவர் வந்தனர் மதிவ லாருடன் ;
கற்றவர் முடிவுறக் கருதிச் சொன்னதைப்
பற்றினர் பற்றலர் படையொ டுங்கவே.....

சித்தியைச் சார்ந்த சிற்றர சர்காள் !
நாட்டுத் தலைவீர் நன்னெறி மக்காள்,
நமது சுத்த நரபதி யன்று,
முறியடித் தோட்டிய முரட்டுக் கலியன்
தானவஞ் சென்று தரும விரோதப்
படையுடன் மீண்டும் பதுங்கியே வந்துளான்.
விண்குடை தனிலும் விமானந் தனிலும்,
மீன்பிடிப் பவர்போல் வேடம் பூண்டு,
படகு களிலும் பாதகர் வந்தார்.
துணிகளை விற்கும் வணிகர் போலும்,
தொண்டர் போலும், துணைவர் போலும்,
கடையை விரித்துக் கனிவுரை பேசி,
மெல்ல மெல்ல விடத்தையூட் டினரே !
சிற்றர சர்களின் சித்தங் கலக்கி,
ஊன்மது காமம் ஊட்டி மயக்கி,
அறிவைக் கெடுத்தும், அறத்தைக் கெடுத்தும்,
ஒருவருக் கொருவர் ஒவ்வா தாக்கியும்,
சிண்டு முடித்தும் சண்டைக் கிழுத்தும்,
பழைய கதையைப் படிக்கத் தொடங்கினர்....
ஆதலால் அனைவரும் அறியச் சொல்வோம் :—
கலியன் அவன்படை காணில் எங்கும்
பிடித்துச் சிறையில் அடக்குமின் உடனே.
கதிர்க்கொடி முத்திரை காணின் அல்லது,
துணிமணி யெதையுந் தூக்கி விற்பவர்
கலியாட் களெனக் கடுஞ்சிறை யிடுமின்.
துறைமுகக் காவலர் கரைசேர் முன்பே
கப்பற் சோதனை கவனமாய்ச் செய்மின்.
விண்ணிலும் உங்கள் கண்ணினை ஓட்டீர் !
கீதையுங் குறளும் ஓதித் தினமும்,
அருட்பா டல்களை விருப்புடன் பாடிச்
சன்மார்க் கத்தைச் சார்ந்து வாழுமின்.

பஞ்சமா பாதகர் வஞ்ச வலைகளை
அறுத்தெறிந் துண்மை அறவழி நடமின்.
உலகம் வாழவே உறுதவம் புரியும்
புலவன், புனிதன், புண்ணியன் சுத்தன்,
கட்டளை தன்னைக் கருத்துடன் காமின்.
அதர்மப் படையுடன் அந்த ரங்கமாய்
உலவுங் கலியன் உதவியை நாடும்
அரசரைத் திருத்துமின் ; அல்லது விலக்குமின்.
காதுங் கண்ணுங் கருத்தும் வைத்துக்
கலியன் ஆட்களைக் கண்டுடன் கட்டிக்
காவலர் கேட்டுக் கடுஞ்சிறை யிடுமின்.
அதர்மத் தானவர் அடிமைக ளான
வேந்தர் நாட்டின் விரோதிக ளாவார்.
புண்ணிய நாட்டீர், புத்தனும் வீரனும்,
கண்ணனும் வந்த கண்மணி நாட்டீர்,
சிவாஜியும் பிரதாபனும் சீக்கிய குருவும்,
இராச ராசனும் இலகிய நாட்டீர் !
வீரத் தமிழர், வீர மராடியர்,
அக்கினி குலத்தினர், அகாலியர், கூர்க்கர்
வாள்வலி தாங்கும் வளமிகு நாட்டீர்,
பாபமே யறியாப் பாவன நாட்டீர்.
பஞ்சமே யறியாப் பல்வள நாட்டீர்,
கலைமிகு வங்கர்காள், காரியத் திறமிகும்
கூர்ச்சரச் செல்வர்காள், கொங்கணத் தொண்டர்காள்,
கன்னடப் புலவர்காள் கண்விழித் திருமின்.
அன்னியப் பகைவர்கை அடிமைப் பட்டால்,
ஆண்மையும் பெண்மையும் அறமும் பிசகும்.
பொருளெலாம் கொள்ளை போகுமென் றறிவீர்.
பஞ்சமும் பசியும் பந்தமும் பிணியும்,
மடமையும் நாட்டைக் கொடுமைகள் செய்யும்.
அறிவீர் ! ஆதலின் அன்னியப் பகைவரை
இடங்கொடா தடக்கி, இரவிக் கொடிக்கு
நன்றியோ டிருமின் ! வன்றவக் கதிரோன்
அரசன் சுத்தன் அருட்சக் தியுடன்
புதிய வாழ்வைப் புதிய யுகத்தைப்
பொற்புற நாட்டும் அற்புதப் பணிக்குத்
துணைசெய உங்களைத் தூய ராக்குமின் !
அருளைப் பெறவுள் ளன்பை வளர்மினோ !
தீமையை வெல்ல நன்மையை வளர்மினோ.....

இவ்வா றெங்கும் எழுத்திலும் சொல்லிலும்,
எச்சரித் தனைவரும் எழுந்திடச் செய்தேன்.
ஆயினும் அந்தப் பேயினுங் கொடியான்,
ஊட்டிய மயக்கால், உட்பகை கொண்டு,
நான்குசிற் றரசர் நாட்டைக் கெடுக்க
ஊணர் படையின் உதவியால் மீண்டும்,
கலியனைப் போற்றிக் கத்தியுந் தீட்டி,
எளிய மன்னரை எளிதாய் வென்றே
"அரசன் இங்கே ஆண்டி யானான்,
அரியணை வகிக்கும் உரிமை சத்தியன்
தம்பிக் கே"யென வம்பு தொடுத்துச்
சித்திக் கோட்டையைச் சுற்றிச் சூழ்ந்தார்....
உடனே நாங்கள் படைவலி கொண்டே,
பகைவர் சேனை பதறப் பொருது,
பாதியைக் கொன்றதும் பயந்தவர் ஓடிச்
சிலநாள் ஒளிந்து, சேனை திரட்டிப்
புதுக்கொடு வெடிகளாற் பொதுக்கொலை செய்து,
கலிய நாட்டைக் கைப்பற் றினரே.
சிற்றர சுகளிற் சிலவும் பற்றினார்.
செருக்குறு கலியன் செயமுடி சூடி
நாட்டை யாள நாள்வைத் திருந்தான்.....
அத்ததி அரக்கர் ஆகாய வழியே
பொத்தெனக் குதித்துப் போர்முர சடித்தார்.
தூமகே துவெனும் துட்டக் கொடியோன்,
கலியனைப் பற்றிக் கடுஞ்சிறை யிட்டுத்
தானே யரசெனத் தற்செருக் குடனே
முடிபுனைந் ததனை முதல்வா கேளாய்....
இடிவிழுந் ததுபோல் இருந்ததச் செயலே.....

4. தூமகேதுப் படலம்

"பொன்முடி சூடியிப் பூமி யாளுவேன்
என்னினும் பெரியவர் ஏவரே" யெனத்
தன்னகங் காரத்தைக் கலியன் சாற்றியே
மன்னவை புகுந்தனன் மமதை விம்மவே.

அத்ததி அளவறும் அன்பு பேசியே,
முத்துருள் புன்னகை முகத்திற் காட்டியே,
மெத்தவும் பரிவுடன் விநய மாகவே
எத்தனுங் கேதுவும் எய்தி னாரோ !

மாவலி யனுப்பிட மல்லர் தம்முடன்
ஆவலாய் வந்தனம் அன்பு செய்யவே,
நாவினில் அளவறு நட்பு கொண்டநம்
பூவுல காட்சியும் பொருந்து மின்பமே.

நயவுரை இவ்வகை நவின்ற கேதுவைப்
புயவரை புயவரை பொருந்தப் புல்லியே,
பயமிலை இனியெனப் பதகன் விம்மினான் ;
கயவரின் உறவினிற் கணக்குங் காணுமோ ?

நண்பகல் வெளிச்சத்தில், நட்புக் கொண்டவன்
விண்கருந் திரையிட வேறு மாறியே,
உண்களின் வேகத்தில் ஊணர் சேனைக்குக்
கண்ணடித் தொருபுறம் கலியைக் காட்டினான்.

தட்டெனக் கேதுவின் றான வர்களும்,
கட்டினர் செருக்குறு கலியை வெம்மையாய்த்
திட்டினர், கொட்டினர், சிறையி லிட்டனர்,
வெட்டினர் விடுதலை விளம்பு மாக்களை.

கலியினைச் சிறையினிற் கட்டிப் போட்டதும்,
கிலிகொளு மோகியைக் கேது பற்றியே,
நலிவுறு முகமினி நகைமல ரெனப்
பொலிகவென் றணைந்தனன் போலிக் காமுகன்.

கற்பெனிற் கைகொட்டிச் சிரித்துக் கல்லிசெய்
அற்பமாம் சுகத்தினை அவாவு மோகியும்,
புற்புதக் கனவெனக் கலியைப் போக்கியே
பொற்சுக வரக்கனைப் புல்லிக் கொண்டனள்.

ஆயிரங் கோணல்கள் அறியக் காட்டியே,
வாயிலும் உதட்டிலு மலர்கண் கோணத்தும்,
தூயரு மயங்கிடத் தொழில்செய் மாதரின்
மாயங்கள் யாவரே மதிக்க வல்லவர் ?

"கொல்லுவேன் பாதகி" என்று கோபமாய்ப்
பல்லினைக் கடித்தனன் பழங் கலியனைச்
"செல்லறுங் காசெ"னச் சிரித்துக் கண்முனே
புல்லினள் கேதுவைப் பொருமை யேறவே....

அரக்கரை வைதனன் ; அழகு மோகி யாம்
பரத்தையை வைதனன் ; பழிசெய் கேதுவை,
உரக்கநின் உயிரினை உலைப்பன் என்றனன் ;
இரக்கங்கொள் அண்ணனை எண்ணிக் கூவினுன்.

சத்தியச் செம்மலே, சாது மன்னனே,
எத்தனை பிழைகளை யியற்றிக் கெட்டனன் !....
சித்தியின் மரபினைச் செருக்கத் தீட்டிய
கத்தியென் கழுத்தினைக் கதறக் கொய்ததே.

யாதொரு தீமையும் இயற்றி லாதநின்
ஆதவன் குலத்தினை அழிக்க முந்தினேன் ;
பாதகப் பதரினைப் பரிந்து மன்னிப்பாய் ....
வேதனை தந்தது விதிவி னைப்பயன்.

ஒட்டுற வாகிய ஒருகு லத்திலே
கெட்டவன் உதித்தனன் இளைய றுக்கவே.....
பட்டனன் ! வினைப்பயன் ! பாச வெஞ்சிறை
விட்டதும் அடைக்கலம் ! விமல நாதனே !.....

ஐயனை என்னுடை யண்ணல் மைந்தனைத்
துய்யனை யடைந்தினித் தொண்டு செய்தலே
உய்வழி என்றனன் உருக்குச் சங்கிலி
கையிலுங் காலிலுங் கலக லக்கவே. 60

இச்ச மயம் இகல்செய் அரக்கர்கள்,
அச்சு றுத்தி யடித்துப் பறித்ததை
மெச்சு கேதுவின் வெற்றி விளைவென
உச்ச மாக முரசடித் தோதினர்.

காலிக் கூட்டங்கள் கட்குடித் தாடிடக்
கூலிக் கூட்டங் குரலெடுத் தோதிடப்
போலிக் கூட்டங்கள் பொன்முடி சூட்டிடக்
கேலிக் கூத்தினைக் கேட்டு வியந்தனன்.

உலகை யாளும் உயர்ந்தநல் லாட்சியாங்
கலையை எங்குங் கனக வெறியினற்
கொலைசெய் யூணக் கொடுஞ்செயல் வேந்தனும்
மலையைப் போலந்த மன்றில் எழுந்தனன்.

காகந் தன்னை வெருட்டிக் கருநிசி
கூகை தன்புகழ்க் கூச்சலிட் டாலென
ஓகை கொண்டபல் ஊணர்கள் வாழ்த்திட,
மோகி-கேது முறுவலித் தோதினன் ;

தூமகேது

மாவலி எங்கள் கோவலன் உயர்த்திய
வெட்கொடி யின்கீழ் வந்தமா னிடர்காள் !
என்னை அரசாய் ஏற்ற நண்பர்காள்,
தானவச் சட்டந் தலைக்கொண் டென்னுடன்
அரிய தொண்டுகள் ஆற்றிட நின்றீர்.
பெரிய நலஞ்செயப் பிரியங் கொண்டே
கடலைத் தாண்டிக் ககனந் தாண்டி,
உடலுக் குற்றிடும் இடர்களைத் தாண்டி,
உங்களை யாங்கள் உய்விக்க வந்தோம்.
பலமதம், பலவகை பலநிறங் கொண்டே,
கலகமிட் டழிந்த கடையரை நாங்கள்
அமைதியாய் வாழவே அடக்கி யாளுவோம்.
சாதி வேற்றுமை, சமய வேற்றுமை
சாமி வேற்றுமை சற்று மின்றியே,
எண்டிசை மாக்களைத் தொண்டராய்க் கொள்வோம்.
எனதுன தென்னும் இகலும், போட்டியும்,
இல்லை யினிமேல் எல்லாம் எமதே.
மானிட ராக மாநிலத் துள்ளார்,
தானவ ருக்குச் சமவூ ழியரே.
நாட்டிய விதிப்படி நடந்தார் மகிழ்வார்.
ஊனை வளர்க்கும் உணவு தருவோம்.
ஊக்க மளிக்கும் *ஒன்றை ஊட்டுவோம்.
இளமை விரும்பும் இன்ப மளிப்போம் ;
ஆடல் பாடலின் அருவிருந் தளிப்போம்.
தானவர் வகுத்த சட்டந் தவறினால்,
எங்களுக் கெவரும் எதிர்சிறி தாற்றினால்,
கட்டளை மீறிக் கதையை வளர்த்தால்,
கேட்டதைத் தராது கெடுவினை வைத்தால்,
துப்பாக்கி யாலே சுட்டுப் பொசுக்குவோம்.
தூக்குப் போடுவோம், துப்பாக்கி காட்டினால்,
பீரங்கி யுள்ளது ; போர்களுக் கேற்ற
விமான வெடிகளும் வெவ்விடப் புகைகளும்,
கண்ணிகள் பலவும் காத்திருக் கின்றன.
மாவலி யடியார் மடியார் என்றும் ;
மாவலிப் பகைவர் மடிவார் உறுதி.
அறிஞரும் புலவரும் அப்புறஞ் செல்க.

---

* மது

படிந்து நடக்கும் அடிமைகள் வருகவே !
அள்ளிப் பணந்தரும் புள்ளிகள் வருகவே !
எம்மையே பணியும் ஏழைகள் வருகவே !
இவரே என்னர சியக்கும் கருவிகள்.
அரசன் மாவலி ஆணவத் துடனே
கடும்போர் தொடுத்தான் ; காரணம் அறிமின் !
அனலனிந் நாட்டில் ஆட்சி பெற்றால்,
ஆளையும் பணத்தையும் அள்ளி விழுங்குவான்.
உள்ள வளமெலாம் கொள்ளை போகும்.
பஞ்சமும் பிணியும் பரவுமென் றெண்ணியே,
உங்களுக் கெல்லாம் உற்ற நண்பனும்
மாவலி யரசன் மற்போர் தொடுத்தான்.
போரினை வெல்லப் பொற்குவை தாரீர் !
நன்றிசெய் வீரே நன்றிசெய் வீரே !

* * *

இளர்ச்சியாய்த் தூம கேதுபே சிடவே,
அடிமைப் பொம்மைகள் ஆஹா என்றன !
மடையரும் செல்வரும் சடசட வென்றே
கையடித் துடனே பைகளை அவிழ்த்தார்.
மாவலி கேது வாழிய நீடெனக்
குடித்தனர், களிப்பிற் குதித்தனர்; ஆங்கே
பறைகள் கொட்டின பல்லிய முழங்கின,
அழகிளம் பாவையர் அரக்கனைப் புகழ்ந்து
பாடினுர் ஆடினுர் பரிசுகள் பெற்றுர்.
"எம்மைக் காக்கவே இத்தொலை கடந்து
கப்ப லேறிக் கருணையோ டுற்றீர்,
தெய்வமு நீரே, திருமறை நீரே,
உமக்கே நாங்கள் ஊழியர்" என்று
மானங் கெட்ட மதியிலி மன்னரும்,
வயிறே பெரிதென வாழும் மாக்களும்,
அடிமை வலையில் அகப்பட் டாரே....
கலிநகர் அரக்கர் களிநக ராகவே,
பாரத தருமம் பாழாய் மறையும்,
அநுசா ரங்களும் அக்கிர மங்களும்,
வளர்ந்து, மக்கள் வாழ்வைக் கெடுத்தன.
நாத்திகப் படிப்பும், நாத்திகத் தடிப்பும்,
தலைவரிக் கொடுமையுங் கொலைவெறிக் கொடுமையும்
அன்னியச் சரக்கும், அகத்தொழி லழிவும்,
வறுமையும், கல்லா மடமையும் வலுத்தே,
புண்ணிய பூமி கண்ணியங் கெட்டதைக்

காணக் காணக் கவலைக் கண்ணீர்
பெருகினேம் உள்ளம் உருகினேம் ஐயா..... 153

5. போராடிய படலம்

சுந்தன்

மதுபுலால் அரக்கர் வந்து, மகுடமும் பூண்ட தென்னே !
முதுபுகழ் சிறந்த நாட்டின் மொய்வலி மூய்ந்த தென்னே ?
பதியறம் விளங்கு நாட்டிற் பாபத்தின் பேரி கைகள்
அதிர்வதும் என்னே ? நம்மோர் அடிமைகள் ஆன தென்னே ?

வேல்கொண்ட வெற்றி, வேத வித்தகர் வெற்றி, செய்ய
கோல் கொண்ட வெற்றி யின்பங் குடிகொண்ட பரத நாட்டில்,
போலிகள் புகுந்த தென்னே ? புண்ணியந் தேய்ந்த தென்னே?
மால்கொடு மன்னர் இன்று மாவலிக் கிசைந்த தேனோ ?

தேசமெந் தேச மென்றே சிந்தனை செய்வோர் எங்கே ?
ஆசையாய்ப் பொது நலத்தை யணிந்திடுந் தொண்ட ரெங்கே ?
நேசமன் னர்களெங்கே ? நேர்மையும் அறமும் எங்கே ?
விசுமின் வாளு மெங்கே ? விதிவலி தான தந்தோ ?

சுதந்தரத் தணலைக் கொண்ட சூரரின் வீர நாடு,
மதந்தரு தான வர்க்கு மண்டியிட் டடிமை யான
விதந்தனை யறிகிலேன் ; பின் விளைந்ததை யறிகிறேன்;என்
இதந்தரு சித்தி யங்கே யியற்றிய கடமை யென்னே ?

தொண்டையும் அடைக்கக் கண்ணீர் துளும்பிடத் தூய னுங்கே,
பண்டைநன் னுடு போன கதியினைப் பகர்ந்த போது,
எண்டிசை திகைத்த தேங்கி, யியற்கையும் விசன மிக்கக்
கொண்டது காற்றும் புள்ளுங் குரலடைத் திருந்த மாதோ !

சித்திமான்

ஆங்குறு மோனந் தன்னை ஆண்மையாற் பிளந்த மைச்சன்,
"நீங்கறு கருணை யாலே நீளுயிர்த் துயரை யெண்ணிப்
பூங்கணீர் வடிக்கும் எங்கள் புனிதனே, நாங்க ளெல்லாம்
தூங்கினே மில்லை ; எங்கள் சூரப்போர் கேளா" யென்றான்.

தோற்க வில்லை துணிவுறு வீரர்கள் !
ஏற்க வில்லை இகலவர் ஆட்சியைப்
பார்க்கப் பார்க்கப் பதைத்துளம் பொங்கியே,
வேர்க்க வெட்கி விரைந்துடன் கூடினேம்.

வீட்டை யன்னியர் வெய்துறப் பற்றியே
நாட்ட றத்தை நலிக்குங் கொடுமையைச்
சாட்டை யென்னச் சரேலென் றுணர்ந்தனம்.
திட்டு வாளொடு செஞ்சினங் கொண்டனம்.

வங்கர் கூடினர், மாரதர் கூடினர்
சிங்கம் போன்ற செழுந்தமிழ் வீரரும்,
தங்கம் போன்ற சமர்த்தருங் கூடினர்
எங்கள் பாரதம் என்னும் உணர்ச்சியால்.

பணத்தி னுக்கும், பரத்தைக்குங், கள்ளுக்கும்
குணத்தை விற்றுக் குடிகெடுந் தாதரைப்
பிணத்தை யொப்பப் பிறகி லொதுக்கியே
கணத்தி லொற்றுமை கண்டுமு னின்றனர்.

தன்னலந் துறந்தாய் தவ சக்தியால்,
இன்னல் போக்கும் இறைவநின் அன்பையே,
உன்னி நாங்கள் உருவியெம் வாளினை
மின்னிட் டோங்கும் விரதங்கள் கொண்டனம்.

கல்லும் வேதத்தைக் காட்டிடும் பூமியில்,
வில்லும் வேலும் விரோத வரக்கரை
வெல்லும் வீறுகொள் வீரரின் பூமியில்
எல்லை மீறி இகற்கொடி யாடுமோ ?

அருந்த வத்தில் அமைந்த சமூகத்தின்,
வருந்து நோயும் வறுமை மடமையும்
தெரிந்த ரக்கர்செய் தீமையும் ஆகுமோ ?
புரிந்த நீதியும் பொய்யெனப் போகுமோ ?

வசிக்க நல்ல வளம்பெறு பூமியும்
புசிக்க நெல்லும் பொலிந்தொளிர் நாட்டிலே,
பசுக்கொ லையும் பரிவறச் செய்தெமை
நசுக்குந் தானவர் நாடக மாகுமோ ?

*நாலெட் டென்று நலம்செய் தருமங்கள்
சாலப் போற்றும் சமரஸ நாட்டிலே,
சில மற்ற திருவிலி ராக்ஷஸர்
கால சக்கரங் கைக்கொண் டிருப்பதோ ?

* பொது நலத்தை வளர்க்கும் 32 தானங்கள்: அவை. பசு, பயிர், கல்வி, கலை, தொழில், தாய்மொழி, உலகமொழி, பூத பௌதிக, ரசாயன சாத்திரங்கள், இல்லறம், மக்கள், ஒழுக்கம், வீரம், கடவுளன்பு, அரிய நூல்கள், பிரமசரியம், அஹிம்சை, உடலுறுதி, வீட்டு நலம், ஊர் நலம், தேச நலம், உலக நலம், ஆன்மநலம், ஆன்மநேயம், ஒற்றுமை, ஐம்பூதநிறை, செங்கோல், ஆண்பெண் கற்பொழுக்கம், யோகசித்தி, யோகசித்தர், திருமடம், கோயில், குளம் முதலியவற்றைக் காத்தலாம்.

புரையி லாத புலவர் அருளிய
கரையி லாத கலைவளர் நாட்டிலே,
நிறையி லாத நிருதரின் கும்பலும்
வரையி லாத வழக்கை வளர்ப்பதோ ?

கூற்றி னுக்குங் குலைந்தக மஞ்சிடார்,
ஆற்றல் பெற்றவர் †ஆரிய வீரர்கள்,
நேற்று வந்த நிருதர்முன் னேயிவர்
தோற்றனர் எனுஞ் சொல்லுமுண் டாவதோ ?

மனைய றத்தினை, மக்கள றத்தினை
அனைவ ருக்கும் அமைதி யளிக்கின்ற
தனைய றியும் சதாத்ம வறத்தினை
இனிது போற்றிடு மெங்கள் சுதேசமே !

"ஆவு, மந்தண்மை யாளரும், பெண்டிரும்,
காவலனும், கடன்முறை காட்டியே, ,
மேவு வேதமும் வாழ்"கென வித்தகர்
தூவு மாமலர் தூய்மை யிழப்பதோ ?

வாழை போன்று வழிவழி வாழ்கின்ற
தோழ மையுந் துகளறு நீதியும்,
வீழ நாட்டினில் வீணர் கொடுமையால்
ஏழை யின்விழி நீரிங் கிறைப்பதோ ! 80

குறையி லாத கொடைவளர் செல்வமும்,
சிறையி லாத திருவினர் கற்புடன்
கறையி லாத கருணை யரசுடன்
வரையி லாத வளம்பெறு நாடிதே !

முதுபெரும் புலவர் முனிவர் பலர்
துதிகள் பாடித் தொழுதநன் னாட்டிலே,
இதய மற்ற விராக்கதர் இன்றுசெய்
மதும யக்கை மறுப்பறக் காண்பமோ ?

பொன்ம ணித்திரள் பொங்கிய நாட்டிலே,
கன்ம யோகியர் காத்திடு நாட்டிலே,
வன்மங் கொண்ட வணிக நிருதர்கள்
பன்ம ணியைப் பகற்கொள்ளை கொள்வதோ ?

தாங்கு கின்ற தரும நிலத்தினைத்
தீங்கு செய்யுந் திருடர்கை விட்டுநாம்
தூங்கு வீரத் துடிப்பறப் பின்விழித்(து)
ஏங்கிக் கைபிசை யும்இழி வாகுமோ ?

† ஆரிய : நேரிய

48

ஒன்றி யாக உலகைச் செயித்திட
வன்றி றல்பெறு மாதவர் நாட்டிலே,
கொன்று யிரைக் குடிக்கும் அவுணர்கள்
வென்றி கூறி விறைத்து நடப்பதோ ?

கோல மாளிகை கோபுரக் கோயில்கள்,
சால மாநிதி சத்தியங் காத்திடுஞ்-
சீல மன்னர் திருத்திய நாட்டிலே
கால பாசர் களிநட மாகுமோ ?

ஆட்க ளுண்டுநல் லாயுத முண்டெழுந்
தோட்க ளுண்டு, சுடர்பெறு வீரரின்
வாட்க ளுண்டு மனமுண்டு, நாட்டினை
வேட்க, வீரர் வருகென வீறிட்டோம்.

பற்றலர் படைத்திறம் பார்க்க வேண்டியே
ஒற்றரை ஏவியுள் உளவு பார்த்ததும்,
வற்றறு கடலென வலிய சேனையாற்
பற்றினம் ஊணர்கள் பற்றும் ஊர்களை.

கொழுந்தெறி கனலெனக் கோபத் தானவர்
எழுந்தனர் ; அடிமைகள் இசைமு ழங்கவே ;
அழுந்தநம் படைக்குலம் அமர்செய் தோட்டவே
இழந்தனர் முதற்சமர் ; இன்னும் வந்தனர்.

எங்கிருந் தெழுந்தார் என்றே இன்னமும் அறியோம் ஐயா !
பொங்கிடுங் கடலைப் போலும், பூகம்பம் போலும், ஊணர்
சங்கையில் ஆயு தங்கள் சகடைகள் விமான ராசி,
வெங்கதப் படைக ளேந்தி சித்தியை விழுங்க வந்தார்...

அத்தனை கொடிய தாகும் ஆயுத மில்லோ மேனும்,
உத்தம வீரர் சேனை ஒன்றுபட் டிகலை வென்றோம்.
பித்தர்கள், அடிமை மன்னர், பின்னரும் வழியைக் காட்டச்
சத்துரு சேனை மீண்டுஞ் சாடிய தைய கேளாய்....

ஊழி வெள்ளமோ ஊணர் சேனையோ,
ஆழி யேழுமே ஆர்த்து வந்தவோ ?
நாழி தன்னலிந் நாடு முற்றுமே
பாழ்ப டுத்தவே பாய்ந்து வந்ததால் !

காடு மாமலை கரந்து நாங்களும்,
சாடி வேங்கைபோற் சண்டை செய்துமென் ?
வீடு காத்திட வேண்டுஞ் சோதரர்,
ஆடு காத்தலை நாயென் றாயினர்.

கடையு கப்புயற் கடலெ ழுந்திட
மடைதி றந்ததோ ! சண்ட மாருதப்
படைதி ரண்டதோ பகைதி ரண்டதோ,
இடையறுப் புகை யிருள் செறிந்ததோ !

வன்ம னத்தினர், வஞ்ச நெஞ்சினர்,
தன்மை யற்றவர், தான வர்களின்
புன்ன கைபெறப் போக வாழ்வுறப்
பொன்ம யக்கினிற் போர்தொ டுத்தனர்.

உண்மை நோக்கிலார், உரிமை நோக்கிலார்,
பெண்மை நோக்கிலார், பெருமை நோக்கிலார்,
கண்மை யற்றவர் கல்லி னெஞ்சினர்
திண்மை யுற்றசிற் றரசர் சேனையே...

ஈட்டி வாளுடன் எடுத்த போரிலை;
தோட்டி னவுறத் தொடுத்த போரிலை ;
போட்டி போட்டுபீ ரங்கி பூமென
வேட்டு டன்கொலை வீறும் போரிதே.

மண்ணி லேயெதிர் மாவ லிப்படை
மண்ண ழுந்திட மற்பு ரிந்தனம் ;
விண்ணி லேறியே வேக மாகவே
எண்ணி லூணர்கள் குண்டெ றிந்தனர்....

* * *

அந்தோ கொடுமை, அந்தோ கொடுமை,
கோட்டை கொத்தளங் கோபுரங் கோயில்,
அரண்மனை வீடுகள் அறிவுமன் றங்கள்,
மருத்துவ சாலைகள் மகளிர் இல்லம்,
எல்லாம் குண்டால் இடிந்துமண் ணாயின....
தேசச் சிற்பிகள் செய்து வியந்த
கலையின் அற்புதம் கனவெனச் சென்றதே !
பெண்டிர் மூத்தோர் பிள்ளைகள் ஆக்கள்,
அனற்குண் டுகளால் அடிபட் டிறந்த
காட்சி இரத்தக் கண்ணீர் தருமே.
தரையிலுங் கடலிலும் வருபகை யெல்லாம்
வென்றோம் ; அரக்கரைக் கொன்றோம் ; ஆயினும்
நூறு மயில்வரை ஏறிப் பறவையில்
விண்ணி லிருந்தே கண்கா ணாமல்,
நாச வெடியும் நச்சுப் புகையும்,
நோதரு வெடியும், பேயொலி வெடியும்,

வீசினர் ; எதிர்க்க வேறு வகையிலோம்,
ஒளிந்துயிர் பிழைத்தே ஓடிச் சென்று,
சித்திக் கோட்டையிற் சிந்தித் திருந்தோம் :—
எத்திசை எங்கே இராக்கதர் இருக்கை,
எப்படி யிவர்கள் இங்குவந் தார்கள்,
இத்தனை வெடிகளும் எப்படிக் கொணர்ந்தார்—
என்பதைக் காண வியலோம் ஐயா ;
இருப்பினும் முயற்சி சிறப்புறு மென்றே
அர்த்தசாத் திரமும் அதர்வ வேதமும்,
ஆயுத நூலும் ஆழ்ந்து பார்த்து,
ககனப் புரவியும் கடுங்குண் டுகளால்
அழியா வேலியும், பழிக்குப் பழிதரும்
குண்டுகள் சிலவும் குகைகளிற் செய்து,
கலிநக ரத்தைக் கலக்க வெழுந்தோம்.
வங்கர் தமிழர் மராட்டியர் சீக்கியர்,
அக்கினி குலத்தார், ஆந்திரர், முதலியோர்
பதுங்கி யிருந்த பறவைக் கப்பல்கள்
பாழ்பட் டழியப் படார்வெடி போட்டதும்,
கலியின் கோட்டையைக் கதமுறத் தாக்கினோம்.
அரக்கரும் அரக்கரின் அடிமை மாக்களும்,
திகைத்திட மீண்டும் சேனையால் வளைத்துப்
புதிய கருவியாற் போரும் புரிந்தோம்.
துரோகி யொருவன் சுதந்தர விரோதி,
ஒன்னலர்க் கெங்கள் உளவெலாம் சொல்லி,
ஆயுதக் குகைகளை அழியச் செய்தான்.
இராக்கதர் மீண்டும் எம்மைத் துரத்தி,
வந்தனர் சித்தி வாயல் வரைக்கும்.
சித்தியில் எங்கள் சிறந்த சேனைகள்
இடிமின் புயலென வெடிப்புகை கிளரப்
போர்கொடுத் தரக்கரை வேருடன் ஒழிக்க,
முயன்ற பொழுதும், பயின்ற துரோகிகள்,
நாட்டை மெல்லக் காட்டிக் கொடுத்து,
சித்திக் கோட்டையைச் சிதைக்கத் தூண்டினர்.
எங்கிருந் தென்றே இன்னும் அறியோம்
எண்ணெய் கரியாய் ஏகும் வண்டிகள் ;
பதினு லங்குலம் ப்ரும்பீ ரங்கிகள்
வந்தன மீண்டும் ; வலிமையை ஊன்றி
உயிரைத் தந்தே உயிரினும் பெரிய
மானந் தன்னை மயக்கறக் காத்தோம் ;

ஆயிரம் ஆயிரம் ஆட்பலி தந்து,
பேயரை முடிவிற் பெரும்போர்க் களத்தில்
முறியடித் தோட்டி முரசு கொட்டினேம்.
பெருஞ்சமர் புரிந்து பிழைத்தது சித்தியே.
பிழைத்தது கதிர்க்கொடி பெருமநின் னருளால்.
நாடு முழுதும் சோடை யடிமைகள்
அரக்கரை அஞ்சி அஞ்சித் தாழ்ந்தும்,
சித்தியின் பொன்னுர் சிகர ஜோதி
முன்போல் ஒளிரவே என்பணி செய்தேன்.
எத்திறச் செயல்கள் எங்களால் இயலும்,
அத்திறச் செயல்கள் அனைத்தையுஞ் செய்து,
காந்த வேலி கட்டி மேலே
குண்டையுந் தடுக்குங் கூரை யமைத்துக்
கண்க ளுறங்காக் காவலும் வைத்துச்
சித்தியை அரக்கர் தீண்டவொண் ணுது
காத்து நிற்கிறேம் கருணையி னுலே.
முன்னே கலியை முறியடித் திடவே
செய்து வென்ற செருவினும் கொடிய
போர்களைச் செய்தும், புரட்சி செய்தும்,
தூம கேதுவைத் துணிந்தெதிர் பேசக்
கூட்டம் போட்டுங் கூக்குர லிட்டும்
ஓயா தரக்கர் உள்ளே வருந்தக்
கிளர்ச்சி செய்தும் தளர்ச்சி யின்றியே
சூரியன் ஒளிரும் சுதந்தரக் கொடியைப்
பற்றிநிற் கின்றேம் பகவநின் னருளால்.
எனினும்,
ஒற்றுமை யின்றி, உள்ளன் பின்றி,
ஓரினம் என்னும் உணர்ச்சியு மின்றி,
அன்னியத் தானவர் அடிமை யாக்கிய
நம்மவர், நமக்கே வெம்மையைச் செய்யும்
தீமையி னுலே தீரர் முயற்சி
வீணாய், நாடு வீழ்ச்சி யடைந்து,
வருந்து நிலையினித் திருந்திட வேண்டி,
பூரண சித்தி பொலியத் தவஞ்செய்
பூரண யோகிநீ போந்தருட் பணிசெயும்
காலம் வந்தது ; ஞாலம் அழைத்தது,
பாரத முனிவரும் பண்புடன் கண்டே
உன்னை அழைக்கவே என்னுடன் எழுந்தார்.
ஐயநீ எமக்கினி அருள்புரி வாயே....

பாரத முனிவர்

சுடச்சுட நோற்றுத் துரியா தீத
நிலைபெற் றொளிரு நின்மல யோகியே,
சுத்தச் சுடரே, அத்தினம் உன்றாய்,
கண்ட கனவே காட்சியா னதுவே.
பஞ்ச வடியிற் பண்ணவன் சாந்தன்
பகர்ந்த தெல்லாம் பழுதறும் உண்மையே.
நாத்திகத் தானவர் நாடெலாம் பரவி,
உலகெலாம் பரவிக் கலகமே தொழிலாய்
அன்பறம் வருந்தத் துன்புறு செயலே
செய்தனர் ; அதனால் வெய்துறும் உலகும்,
புண்ணிய பூமியும், புனிதனே நின்னை
முறையிட் டழைத்தன ; குறைதவிர் வள்ளால்,
இங்கிருந் தேநீ இயற்றிய நலங்களை
நன்குநாம் அறிவோம் ; ஞாலம் போற்றிடும்
பெரியரும் அறிவார் ; அரியமெஞ் ஞானியே,
உள்ளிருந் தியற்றிய உயர்வினை பலவும்
வெளியிருந் தியற்றும் வேலையும் இதுவே.
பயிற்றிய சித்தர் படையுடன் எழுந்து,
வாராய் உன்னை வரவேற் றிடவே
சித்தி மக்கள் ஒத்துநிற் கின்றார்.....
ஊனுங் கள்ளும் உளங்கெடு நடையும்
காமமுங் கொலையுங் கல்வியில் லாத
மடமையும் வறுமையும் அடிமைப் புத்தியும்,
பஞ்சமும் பிணியும் பார்க்கச் சகியா
நோவுந் துயரும் மேவிய உலகின்
இற்றை நிலைமை இயம்புவ தென்னே....
உன்னினும் அறிந்தார் உலகினில் உண்டோ ?

சாந்தன்

முந்துநான் முதற்போர் ஆங்கே முடிந்ததும் உரைத்த காலம்
வந்தது ; தீமை யெல்லாம் வழுத்திய வாறே யின்று
வந்தன ; உலகைப் பற்றி வருத்தின ; வரத நீயும்
வந்ததைத் திருத்துங் காலம் வந்துனை அழைத்த தின்றே.

அஞ்சுபா தகத்தை மிஞ்சி ஆயிரம் பாத கங்கள்
வஞ்சரின் கோள்பொறாமை வளர்கொடுந் துயரப் போர்கள்
கஞ்சியென் றழைக்கும் ஏழை கண்ணிநீர் வடிக்குங் காட்சி,
எஞ்சிய கொடுமை யெல்லாம் ஏவரே அறிந்தி டாதார்....

தானவர் அசுர மாயந் தந்ததீ வினைக ளெல்லாம்,
வானுல கெங்குங் கண்டோம் ; வருணித்த லினியும் என்னே !
தீனரைக் காக்க வந்த திவ்விய வாழ்வின் மன்னு
நானில முய்யுந் தொண்டு நாட்டிடச் சமய மிஃதே.

சென்றநள் வார மாகச் செகம்புகழ் உனது சேவை
வென்றிடக் கௌரி மீண்டும் வியன்பெருஞ் சக்தி யாக
நின்றெதிர் பேசு கின்றாள் ; நிமலநின் பணிக்கே அன்னாள்
'இன்றுநான் வருவேன்' என்னும் இன்னிய சொல்லுங் கேட்டேன்.

ஆதலால் சுத்த சக்தி அருளினால் இனிநாம் சென்று,
மேதினிப் பணிசெய் கால மேவிய தென்று சாந்தன்
ஓதிய போதே, யாங்கே உயரஓர் விமானங் கண்டார்...
சோதிமின் போற்சு ழன்று சுழன்றது தாழக் கண்டார்.

வனத்தின் உயர்வி னின்று வையத்திற் றுவு கின்ற
வானம்பா டியினைப் போலே வந்தெதிர் குதித்த நல்வி
மானத்தி னின்றி றங்கி வருபவர் யாவர் ? அன்னார்
ஏனிவண் வந்தா ரென்றே இக்கணம் அறிகு வோமே. 296

6. சக்தி விஜயப் படலம்

எண்ணிய பணிக ளிங்கே இயற்றிட வேண்டித் தூயன்
உண்ணினை யுணர்வே போல உள்ளமும் உருவுங் கொண்டே,
விண்ணினின் றிறங்கும் தெய்வத் திருவருள் விளக்கம் போலே,
கண்ணுளங் களிக்கச் சக்தி பாட்டனின் காப்பில் வந்தாள்...

போகன்

போகனுங் கிருந்து, சக்தி புனிதன்பால் அடையச் செய்து,
"தாகமாய் உன்னை யன்பு செய்திடுந் தயைமி குந்த
சீகரன் பேர்த்தி சக்தி சீலமும் வீறுங் கொண்டாள்,
ஏகநா யகநின் கௌரி இவ்வுருக் கொண்டாள்" என்றான்.

சத்தியன், உந்தை அந்தத் தானவ ரிடையே செய்த
உத்தமப் பணிகட் கெல்லாம் உயிரென வுதவி செய்தாள்.
பித்துறும் அரக்கன் எம்மைச் சிறையினிற் பிணித்த போதிச்
சத்தியே விரதங் கொண்டுன் சத்தியாற் கிளர்ச்சி செய்தாள்.

இரவொடு பகலும் உன்னை எண்ணியன் பிசைக்கு நீராள் ;
கரவிலாத் தூய நெஞ்சள், கருணையே உருவ மானாள் ;
வரமிகு குரலும் பாட்டும் கவிதையும் வாக்கும் பெற்றாள்,
சரசுவ தியுடன் காளி தாமரைத் திருவும் போன்றாள்.

இங்குன தமர்க்க ளத்தில் உடலினை ஈந்த கௌரி,
அங்கிவ ளுட்பு குந்தே அதிசயம் புரிந்தா ளைய.....
வெங்குலத் தான வர்கள் வெறிகளற் றுனது நன்மை
பொங்குறத் திருந்த வேண்டிப் பொதுநலம் புரிந்த நங்கை.

தந்தைமா வலியின் கெட்ட தனங்களைச் சீகரத்தாய்
சுந்தரி யோடெதிர்த்துச் சுத்தசன் மார்க்க சங்க
மந்திரி யாகி,யூணர் மரபையே மாற்றி வைத்த
தந்திரக் கலையில் வல்லாள் சக்தியுன் சக்தி யன்றுள்....

இயல்புற உன்னை நட்டாள், இயல்புற உள்ளே கண்டாள்,
இயல்புற உன்னைக் கேட்டாள், இயல்புற உனக்கே வாழ்ந்தாள்,
இயல்புற வுனது தொண்டே இன்னுயிர்ப் பணிய தானுள்,
இயல்புற உன்பால் வந்தாள் இனியுனக் கின்ப மாமே !

போக னிவ்வகை புகலுமுன் புன்னகை யாலே,
ஓகை காட்டியவ் வுத்தம சக்தியைச் சுத்தன்,
வேக மாய்வர வேற்றவள் சரண்புகுந் ததுவும்,
யோக சக்தியைப் பெய்துடன் உரைசெயப் புக்கான்....

சுத்தன்

அன்று போர்க்களம் ஆவியாய் மேலெழுந் தாங்கே,
சென்றென் அன்பினைத் தியானத்திற் செறிவுட னுணர்ந்தாய்,
ஒன்றி வாழ்ந்தநம் உயிரினிப் பிரிதலும் உண்டோ ?
நன்றென் சக்தியாய் வாழ்கநீ நீடென நவின்றுன்.

வருக கௌரியே, வருகநின் வாழ்வினிப் பொலிக !
தருக நின்னையித் தரைமிசை தருமமோங் கிடவே ;
வருக சக்தியே பாரத சக்தியாய் வாழ்க !
தருக நின்னையே தானவர் குலந்திருந் திடவே....

முந்தத் தானவ நாட்டினைத் திருத்தவென் முதிய
தந்தை சென்றதுந் தியானத்திற் சக்தியாய்க் கௌரி
எந்தைக் காற்றிடும் இயல்புறுந் துணைகளுங் கண்டேன்.
சிந்தையா லிருந் தங்குநான் செய்ததை யறிவாய்....

வன்மங் கொள்செருக் கோங்கிய மாவலி திருந்திக்
கன்ம ணங்கரைந் திடவொரு காரியஞ் செய்தாய்.
நன்ம ருந்துபோல் வந்தனை பாரத நாட்டிற்
கன்ம யோகஞ்செய் ; காத்திருந் தேனெனப் புகன்றுன்.

கௌரி சக்தி

முன்னுறு பிறவி தன்னில் உனதரு முதல்வி யாகிச்
சொன்னதை நிறைவு றுத்தத் தூயநின் பணியே தாங்கி,
இன்னெரு சக்தி தேகம் ஏந்தியான் வந்து சேர்ந்தேன்.
என்னவா எம்பி ரானே என்னையா ளுடைய கோவே !

தானவ ரிடையே தோன்றித் தானவர் கொடுமை வீழ,
ஊனுட லுள்ளே கௌரி உன்சக்தி யாக வந்தாள்,
நானெனை ஒன்றும் இல்லை ; நம்பனே நீயே எல்லாம் ;
ஆனதை அறிந்துன் னன்பே ஆருயி ராகக் கொண்டேன்.

வெல்லுக நினது யோக வித்தையின் சக்தி யெங்கும்,
தொல்லுல கனைத்தும் ஓங்கித் துலங்குக அருளி னுட்சி ;
சொல்லுவ தினியென் ? ஐய தொடங்குவோம் கடமையென்றே
சொல்லறு மின்பக்கண்ணீர் சொரிந்தனள் அறிந்த நல்லாள்!

சுத்தன்

அருமை யாகிய செயல்களை யாற்றிடத் துணைசெய்
பெருமை பெற்றதோர் பெண்ணினைப் பெற்றசீ கரனே,
திருவின் மாமுனி செப்பிடத் தெரிந்தனன் அனைத்தும்,
வருக மன்னநீ எந்தையின் வலக்கரம் போன்றாய்....

உனது மாமகள் உயிர்த்தநம் சுந்தரி சக்தி,
எனது கௌரியின் இன்னுயிர் தாங்கிடும் சக்தி,
தனது வாழ்வினைப் பொதுநல வாழ்விற்கே தந்த
மனது யர்திரு மகளொரு மாசிலா விளக்கே !....

அருளைப் பெற்றநல் லணியிவள், அவனியிற் படர்ந்த
இருளைப் போக்கிடும் இனியபுன் னகைத்திரு வுடையாள் ;
தெருளு றத்தெளிந் தென்னுளே செறிந்தெழும் வாக்கைப்
பொருள றிந்திவள் போற்றியிப் புவிக்கருள் புரிவாள்.

அன்பு கொண்டிவள் ஐக்கிய சித்தியும் பெற்றாள் ;
என்ப ணிக்கிவள் எழுந்ததே இதன் குறிப் பாமே ;
நண்ப நான்கொண்ட நாளினை எப்படி யறிந்தாள் ?
இன்பத் தாயுடன் எந்தையும் என்னவா யினரோ ?

முனிவன் வந்தபின் முயன்றநன் முயற்சிக ளெல்லாம்
இனிதெ மக்குரைத் திடுகெனத் தூயனும் வினவக்
கனிமு கத்துடன் சீகரன் கைகுவித் திறைஞ்சிப்
புனித நாங்களும் புரிந்ததைக் கேளெனப் புகன்றான்.

சீகரன்

பொறிக ளின்கலை தேர்ந்தநம் போகமா முனியின்
அறிவி னுலென தரசினில் அமைத்தகூட் சுமத்தால்,
இறைவ நாங்களிவ் வுலகெலாம் இல்லத்திற் கண்டு,
நிறைவு றப்பெரு நினைவுகள், இயன்றன புரிந்தோம்.

தான வத்திலும், ஆணவந் தன்னிலும் அன்பர்
ஈனப் போர்களின் இரத்தவீண் இதுவெனக் காட்டி,
ஞான மானசன் மார்க்கத்தின் கிளர்ச்சியை நாட்டிக்
கோனை வேண்டிலர் ; குடியர செழுந்திடக் குறித்தார்.

அரக்க வேகத்தில் ஆயுதப் போர்புரிந் தனுத்தே,
பரக்கும் ஆணவம் பாழ்பட மாவலி யாங்கே
இருக்குந் தன்மையை யறிந்துநம் இணையறு மெய்யன்,
திருக்க ளோங்கிய சுந்தரி தொடர்ந்திடச் சென்முன்.

மாண நன்னெறிக் கிளர்ச்சியால் வசஞ்செய்து நாட்டை,
ஊணர் போர்வெறி உலைந்திடக் குடியர சுயர்ந்தே,
வீணர் வாழ்வினை யுன்வழி விளங்குறத் திருத்திக்
காணத் தொண்டுசெய் கருத்துடை யாரிரு வருமே.

அன்ன வாறவர் செய்தலும், நின்னருள் அடைந்த
மின்னெ ளித்திரு சக்தியும் வேகமா யெழுந்தே
உன்ன ரும்பணிக் குறுதுணை யாகிட உற்றுள்....
பொன்னின் மாமணி போன்றினிப் பொலிகநின் பொருளே!

சித்தி கண்டனம் கௌரி விலாசத்தைச் சேர்ந்தே,
பத்தி யாய்த்தொழு தோம்;அந்தப் பத்தினித் தெய்வம்,
சத்தி யாயுனை யடைந்தனள் ; சகத்தினில் இனிமேல்
சுத்த சக்தியின் சுடரொளி பரவுக தினமே.

போரி லாதவிப் புண்ணிய பூமியும், இன்று
போரி லேவளர் அரக்கரின் புரட்சியாற் சிதைந்து,
காரி ருள்படர்ந் துள்ளதைக் கண்டனம் ; ஐய,
பாரி ருள்தெறப் பரிதிபோல் எழுந்திடும் பண்பா.

எடுத்த நல்வினை இயல்புற முடித்துவெவ் வரக்கர்
கெடுத்த பூமியைக் கேடறத் திருத்திநல் லறிவைக்
கொடுத்துத் திவ்விய சீவனங் குலவிட நீசெய்
அடுத்த மெய்வினைக் காவன புரியுமென் அன்பே.

சுந்தன்

வீரத்திற் பெரியாய், இங்கே வெய்யவர் கொடுமை யாலே
போரொத்த கருவி செய்யப் புகலிலோம் ; சென்று நீயுன்
சீரொத்த தீவில் வேண்டுந் திட்டணி படையைச் சேர்ப்பாய் ;
கூரொத்த படையும் வேண்டும் ; குறிப்பறிந் தனுப்ப லாமே.

ஆற்றலை யனைத்தும் ஆற்றின் அருளிசை முரல்வ போன்றும்,
காற்றலை மேக மெல்லாங் கருணைவான் பொழிவ போன்றும்,
வேற்றலை வின்றி நாமும், விரும்பிய புண்ணி யத்தைப்
போற்றலைக் குறிப்பின் இங்கே புரிவினை புரித லாமே.

தீரமும் வேண்டும் ; உள்ளத் திண்மையும் வேண்டும் ; ஆத்ம
வீரமும் வேண்டும் ; ஊணர் வெறியெழப் படைந டத்திப்
போரினைத் தொடுத்தால், யாமும் போருக்குப் போர்கொ டுத்து,
வேரொடுந் தீமை சாய விடுதலை வழங்கு வோமே.

கத்தியின் பலத்தை நாமும் கடைசியாய் வைத்துக் கொண்டு,
புத்தியின் பலத்தி னாலே, பூரண யோகந் தந்த
சத்தியின் பலத்தி னாலே, தானவர் செருக்கைப் போக்கிச்
சத்திய யுகத்தை நாட்டச் சாந்தமாய்ப் பணிகள் செய்வோம்...

அன்னதே செய்வோம் என்று சீகரன் அன்பு கூறப்
புன்னகை புரிந்து தூயன் புனிதநா வின்று ; நீவிர்
முன்னுல குய்து சுத்த சமரஸ முத்தி சேரத்
தன்னறி வுண்மை யொன்று தருகுவீர் இராவில் என்றான்..132

7. யோக சித்தி எழுந்த படலம்

மோக மற்ற முனிவர் அருளிய
ஆக மத்தும் அருமறை யுள்ளத்தும்
ஏக மாயுணர் எவ்வகை ஞானமும்
யோக சித்தி யுணர்த்திடக் காணுவாம்.

நீண்ட மாதவஞ் செய்த நிமலர்கள்,
பூண்ட மாதவத் தின்பொருள் யாவுமே
வேண்டு சுத்தன் விரும்பத்தி யானத்தில்
ஈண்டு சித்தி யெழுந்தது கேண்மினோ !

கான மாமலர்க் காற்றுடன் கங்கையும்,
மீன வாவி மிளிர்மதி வானமும்,
மோன மாக முனிவருட் பூத்தருள்
தேன வாவிய செஞ்சொலைக் கேட்டவே.

வெண் கடலெழும் வெண்மணித் தாழிபோல்,
விண் கடலில் விளைந்தபொற் சோதிபோற்
கண் கருத்துட் கலந்த சமாதியில்,
உண்மை பொங்கி ஒலியுருக் கொண்டதே.

இயற்கை யின்பம் இலகும் இமாலயம்,
இயற்கைக் கானக மேந்திய சாந்தத்தில்
இயற்கை யொன்றி யிறைவனைக் கண்டுளே
இயற்கை யோகத் திருந்த முனிவரே ;

சுத்த ஜோதிச் சுடர்மணி யானவர்,
சுத்த சக்தி சொரூபத்தைக் கண்டவர்,
சுத்த னோம்பிய சுத்தசங் கத்தினர்
சுத்த யோகியர் ஆத்மசு தந்தரர்.

உயர் துரிய ஒளிமணி மாடத்தே
இயல்பி னின்றுறும் இன்பமெய்த் தூயவர்
பயிலும் யோகப் பயனை யளைந்தவர்,
துயர் கெடுத்தசுத் தானந்தத் துங்கரே.

புலனை வென்றவர், புந்தியி லேமனச்
சலன மின்றி நிலைத்துப சாந்தத்தால்,
இலகு தத்துவ மெய்தியஃ தாகியே
உலகை யுள்ளத் தடக்கிய உத்தமர்.

தூம னத்தினர், தூய செயலினர்
தூமொ ழியினர் தூய கருத்தினர்,
பூமி வாழப் பொழியு மழையெனச்
சேம சக்தி செழிக்கப் பொழிபவர்.

இருண டுங்கும் இனிய முறுவலாள்,
அருணத் தேவி யழகில் அரும்பிய
கிரண முத்தென உள்ளங் கிளர்ந்தெழும்
கருணை யான கனிமொழி வல்லவர்.

பொங்கு மானந்த போத சொரூபத்தை
நன்கு ணர்ந்து, நடுநிலை கண்டவர்,
இங்கு சுத்தன் இதயத்தொ டொன்றியே,
தங்கி நின்றனர் யோக சமாதியில்.

கதிரை யுண்டு விரிந்த கமலம்போல்,
மதியை யுண்டு மடல்விரி யல்லிபோல்,
இதயப் பூவிரிந் தின்பம் பருகியே
மதுவென் றின்னிய வாக்கு வழங்கினர்.

ஆழ்ந்த யோகத் தநேகம் வருடங்கள்
வாழ்ந்து கண்ட வரம்பெறும் உண்மையைச்
சூழ்ந் தெழுதித்தம் சுத்த குருபதந்
தாழ்ந்து வைத்தனர் 'சத்தியம் வெல்' கென்றே.

தூயர் தந்த சுருதி மொழிகளை
நேய ளுகிய நின்மலன் ஆய்ந்துதன்,
வாய்மை கண்ட வரகவி வாக்கினால்,
ஏய வேத மியற்றி முடித்தனன்.

ஒன்றி யுள்ளத் தொளிகண் டுரைத்தவன்
இன்று தந்தநல் லீரடி யின்னிசை
நன்று லகு நயந்து பயின்றிடும்
வென்றி செய்பொது வேதமென் றுனதே.

வாய்ந்தநல் வேதந் தன்னை வரிவரி யாக நோக்கித்
தோய்ந்ததிற் படிந்து, யோக சித்தியின் சொரூபங் கண்டு,
ஓய்ந்தது சமயச் சண்டை உலகொரு குலமாய் வாழத்
தூய்ந்தமிழ் யோக சித்தி துலங்கிய தென்றான் சுத்தன்...

பூரண யோக சங்கம் பூவெலாம் பொலிய, மாந்தர்
நாரணா ராகத் தேவ சீவன நயந்து வாழக்
காரண மாகும் யோக சித்தியைக் கருணை வள்ளல்,
சீரிய சுத்த சங்க சிலருக் கிந்து சொன்னான் :

சுத்தன்

பளிங்கு போன்றநல் லுளத்தினாற் பார்த்துசுத் தான்மா
விளங்கி யப்பர மானந்த விளக்கமே வாழ்வாய்த்
தெளிந்த மேலவர் சிந்தனைத் திரளிது காணீர் ;
குளிர்ந்த தென்னுளங் கொண்டிதை ஓதுமின் உடனே...

கடவுளும் உலகும் அறமும் அறிவன்பும்,
நடையும் இல்லமுங் குலந்தொழில் அரசுட னவின்றே
இடைய றுத்தவ யோகமும் சித்தியின் இயல்பும்,
அடைய மானிடர் அமரராம் அருளொளி தருமே.

மனிதர் தேவராம் பன்னிரு சாதன வகையை
இனிது ரைக்குமிந் நூலினை ஆரபி யிசையில்,
அனைவரும் இசைத் திடுகென அன்புடன் அளித்தே,
புனித னேதிடப் புங்கவர் சங்கமோ தியதே.... 80

சத்தி யாழுட னிசைத்திடத் தவப்பெரு முதல்வர்,
ஒத்த நெஞ்சுடன் சுத்தன்பின் ஓதிட ஒருங்கே,
சுத்த யோகத்தின் சித்தியை விளக்கிடுஞ் சுருதி—
நித்தி யானந்த ஓமென விரிந்தது நிறைந்தே....

எல்லா உயிர்க்கும் இறைவன் ஒருவனே
எல்லா உடலும் இறைவ னாலயமே
எல்லா ருக்கும் இயல்பாம் இன்பம்,
எல்லா வாழ்வும் இறைவன் யோகமே !

என்று நூலினை இனிதுறத் தொடங்கியத் தூயர்,
நன்றி சைத்தனர் ; நாதமா மறைநலங் கிளர ;
என்றும் அன்பரின் இதயத்திற் சுழலுமந் நூலை
ஒன்றி நல்லுல கோதிட வுரைப்பதெம் உவப்பே. 92

8. யோக சித்திப் படலம்

1. கடவுளியல்

1. கடவுள்

ஓங்கார மாகி யொளியா யுயிர்க்குயிராய்
நீங்காதான் இன்ப நிறைவு.

உள்ளத்தான், ஓங்கு முலகத்தான், பேரின்ப
வெள்ளத்தான் விண்ணின் விளக்கு.

எண்குணத்தான், ஏகனே, எல்லா மடங்கவுளான்
புண்ணியனும் போதப் பொருள்

காற்றைக் கனலைக் கதிரைக் கடலுலகைத்
தோற்றினு னன்பர் துணை.

எல்லா மவனுடைமை ; எல்லா மவனுணை ;
எல்லா மவன்பொதுவென் றெண்.

2. உள்ள பொருள்

பெயர்வடி வாதியவாம் பேதங் கடந்த
வுயர்பொருளொன் றுண்டென் றுணர்.

பலர்பற் பலவாகப் பாரிற் பகர்வர் ;
உளனெருவ னென்றே யுணர்.

ஐந்தரனுக் குள்ளே யரசாளு மன்னவனை
ஐந்தடங்கி யன்பா லறி.

அருளாலே யுள்ளத் தறிவா யிலங்கும்
பொருளாலே யின்பப் பொலிவு.

விழிமி னெழிமினுள்ளே விண்ணரசைக் கண்டு
செழிமின்சுத் தானந்த சித்து.

3. அருள் விளக்கம்

அறிவுச் சுடரோ னருட்கதிரா லெங்கும்
நிறையு நிறைவை நினை.

தாக்கற்று நோக்குந் தனித்தலைவன் சந்நிதிக்கே
யாக்கன்முத லைந்தொழிலு மாம்.

ஒன்றெனவுந் தோற்ற மொடுக்கமதி லேயெனவுங்
கண்டவனே காட்சிக் கிறை.

பிண்டத்தி லுள்ளான் பிரமாண்டத் திற்கோயில்
கொண்டுலவுந் தெய்வமெனக் கொள்.

நானென்ற மாயை நலிய நலியவுனைத்
தான்கொண்டு போற்றுமருட் டாய்.

4. வழிபாடு

நேசம் பதிந்துள்ளே நின்றுருகி, நெஞ்சாரப்
பேசினுற் பேசும் பிரான்.

அன்புண்மை யாக அமர்ந்த கடவுட்குன்
அன்புண்மை யால்வழிபா டாற்று.

பற்றற்றுப் பற்றிப் பணிந்துணர்வா லர்ச்சித்துத்
தொட்டுநில் ; அஃதே துதி.

எனதென தென்ன லிடராகு மென்றும்
அவனது வென்ன அருள்.

தம்மைக் கொடுத்தோர்க்குத் தன்னையே தந்தருளும்
அம்மையப்ப ருணைவழி யாற்று. 40

5. கடவுட்டன்மை

மகிழ்விற் படைத்தளித்து மாற்றும் பொருளை
அகத்தூய்மை யாலே யறி.

வாய்மை நலனேன்பு வன்றுெண் டடக்கமிவை
தூயவனைச் சேருந் துணை.

மெய்யன்பு நல்லுறுதி மேதக்க வொப்புரவாந்
துய்யவுளத் தொண்டர் துணை.

காமம் வெகுளி கலக்கமி லாதமனச்
சேமமத னுலிறையைத் தேர்.

உள்ளப் பொதுவெளியி லோங்கு மணிவிளக்கைக்
கள்ளமற வுள்ளுறவிற் காண்.

2. உலகியல்

1. உலகாலயம்

உயிர்மேனி யாக்கொண்டே யோங்குமொரு சோதி
பயிலா லயமுலகு பார்.

ஆருயிர்கட் கோருயிரா யாங்காங்கு நின்றியங்கும்
பாரால யத்தானைப் பார்.

விரிவா னுலகை விளங்கருளா லாடும்
பரமான்மா வாகவே பார்.

உலவுடலஞ் சிற்றுலகாம் ; உள்ளத்தான் கோமான் ;
நிலவியல்பே நீதி நெறி.

இயற்கையே யாக்கை ; யிறைவனே யான்மா ;
உயிர்க்குல மோர்தொடர்பென் றுன்.

2. உலகநிலை

உண்டில்லை யென்றேயாச் சண்டையேன் ? உள்ளவரை
பண்டுலகிற் பாங்குற் றிரு.

வகுக்கு மனமயக்கால் வையத்தைக் காணேல் ;
உகக்கு மொளியறிவா லுன்.

இருப்ப தொருபொருளே ; யெல்லா மதுவே ;
பிரிப்பதுபொய் மாயப் பிணி.

ஆலுக்கும் பூசனிக்கும் ஆய்ந்து கனிகொடுத்த
ஞாலத்தான் வைப்பே நலம்.

மாறித் திரிந்து வளர்மன் னுலகினிலே
மாறுத வொன்றை மதி.

3. இயற்கை

இயற்கையின் புத்தகமே யின்பாக நோக்கிற்
பயக்கு மறிவுப் பழம்.

பேசாது பேசிப் பெருநல் லறிவுணர்த்தும்
ஆசா னியற்கையே யாம்.

கதிராற் கடன்முகந்து, கார்மேக நல்கி,
யிதஞ்செய் யியற்கையென் றுய் !

ஓசைப் படாம லொருகோடி யற்புதஞ்செய்
தேசுற்றுள் சித்தாடுந் தாய்.

இயற்றுவ தெல்லா மியற்கையதைப் பற்றிப்
பயிற்றுக வாழ்வைப் பரிந்து.

4. உலகுயிர்

ஒவ்வோ ருயிரு முலகின் வினைக்கணியாய்த்
தெய்வம் படைக்குமெனத் தேர்.

வினைக்களவு தோற்றம் ; விமலனரு ளாலே
யனைத்துயிரும் வீடடைத லாம்.

போக்கு வரவற்ற பூரணனைக் கூடுதற்கே,
மீக்கூர்த்துச் செல்லுமுயிர் மேல்.

பெண்ணின்றி ஆணில்லை ; ஆணின்றிப் பெண்ணில்லை ;
எண்ணிருவர் சேர்ந்தே யிகம்.

வேறுபா டெல்லாம் விகற்ப மனமயக்காம்
ஊறுபா டென்றே ஓதுக்கு

5. உலக வாழ்வு

தன்னியல் பாந்தெய்வத் தன்மை யறியாக்கால்,
என்னபய னிப்பிறவி யே ?

ஆட்சிபெற் றுள்ளே யகில விளையாட்டைக்
காட்சிபோற் கண்டு களி.

எத்தனையோ காரியங்க ளிந்த வினையுலகில் ;
அத்தனையும் ஆடலென லாம்.

வினையுலகை யஞ்சாத வீரன்போல் வெல்க—
மனவுறுதி யாலே மகிழ்ந்து.

அகிலவாழ் வத்தனையு மான்மவிரி வாக
நிகழுவதே யுண்மை நிறைவு. 100

3. அறவியல்

1. அறம்

தானு நிறைவுற்றுத் தன்னவரு மின்புறுதற்
கானவொழுக் காறே யறம்.

மன்னு மனச்சாட்சி மன்னவன்சொல் என்னவென
வுன்னி நடத்த லுயர்வு.

'இவ்வழிச்செல்' லென்றென்றுள் ளெச்சரிக்கை செய்யுமே
அவ்வழியி லச்சமறச் செல்.

அறமென் றறிந்ததனை யஞ்சாது செய்மின் ;
இறைவனருள் காக்கு மினிது.

இறந்தபின் னெப்படியோ ; ஈங்கண் ணுலகிற்
சிறந்த திருவினையைச் செய்.

2. அறவிரிவு

யாதொன்று காலத்திற் கேற்றபொது நன்மையதை
வாதின்றி யாற்றி மகிழ்.

பழமை பழமையெனும் பல்லவியே பாடேல் ;
புதுமை புதுமையெனப் போ.

மோகமய மின்றி, முரணற்ற முன்னேற்றம்
நாகரிக மென்றே நவில்.

தொடர்ந்தார் துயரந் துடைக்காத செல்வன்
கடமை வழுவியோன் காண்.

எதுதீ தெனநோக்கி யெள்ளற்க ; நன்மை
யதுபோற்ற லாற்ற லறிவு.

3. அறத் தகுதி

போக்கும் வரவும் பொழுதுமறி யோமதனால்,
யாக்கையோ டேசெய் யறம்.

உண்ண வுடுக்க வுவந்திருக்க நன்முயற்சி
பண்ணல் அறவாழ்வின் பண்பு.

சோர்வு விடுத்துச் சுயேச்சை யடைந்துலகில்
வீரனாய் வாழ விரும்பு.

உலகோ ரருட்குலமா யொன்றியினி தோங்கு
நலமார் பொதுநிலையை நாட்டு.

உள்ளொளியிற் பூத்த வுயிர்வாழ்விற் சாதிமதச்
சள்ளையில்லை சச்சரவுந் தான்.

4. அற நெறி

விண்ணின் விரிந்த வியன்செய் யறநூலின்
உண்மை யுடுவி னுறும்.

அன்புண்மை யின்சொ லடக்கம் பொறுமையருள்
இன்பப் பொதுநெறியென் றெண்.

கொலைபுலை, கூத்தி, குடிகளவு, சூதாம்
வலிய நரக வழி.

வசைசின வஞ்ச வழக்கற்றுத் தீய
நசையற்று நாணுற்று வாழ்.

மூவழுக்கு நீங்குகவே, முத்தூய்மை யோங்கிநர
தேவர்குலம் வாழ்க செழித்து !

5. பொது நலம்

பிறர்க்கென வாழும் பெரியோரே சேர்வார்
துறக்கத்துங் காணாச் சுகம்.

எத்துணை நன்றெண்ணி யிவ்வுலகிற் கன்புசெயல்
அத்துணை யான்மவிரி வாம்.

ஈசன் அருண்மொழியை யெவ்வினத்தார் சொன்னாலும்,
ஆசையுடன் கேட்ப தறிவு.

அற்பம் பெரியதென் றெண்ணும லன்புசெயு
நுட்ப வறிவுடமை நோன்பு.

கீண்மேற் பிறரொடுதான் கேண்மைதெவ் வொன்றெனவே
காண்போன் கருணைக் கடல்.

4. அறிவியல்

1. அறிவு

அறவின்பம், வாழ்வி னழகின்ப மெல்லாம்
அறவின்ப ஊற்றி னமிழ்து.

எங்குற்றே மென்னசெய லெங்கேக லென்றறிவோன்
கங்குற் கடல்கடந்தோன் காண்.

போக்குவர வற்ற பொருளான்மா ; நானதுவென்
றேக்கமற் றின்புற் றிரு.

யானு முலகு மறிவுண்மை யின்பமயம் ;
ஏனோ வெருவ லினி.

நம்பு, நினை, முயல் ; நாடொருமை ; ஞானமாம்
இன்பம் பெருகு மினிது.

2. கல்வி

அறிவு தொழிலொழுக்க மாண்மை யழகாந்
திறமான கல்வித் திரு.

இயற்கைவளத் தோங்கி, யியற்புலனைத் தூண்டும்
இயற்கைநெறிக் கல்வி யினிது.

ஆற்றல் மிகப்பெருக்கி யாளாக்குங் கல்வியினைப்
போற்றுக வீரர் பொலிந்து.

மெய்க்கு மறிவிற்கு மேன்மை யுறுதிதராப்
பொய்க்கல்வி யாலென் புகழ் ?

ஈகையு ளீகையா மின்கல்வி ; பெற்றவனுக்
கேகுழி யெங்கு மிசை.

3. கற்ற பயன்

கற்ற வழியாற்றக் கற்றோனே கற்றோனும் ;
மற்றவன் கற்ற மடம்.

அருளற்ற நெஞ்சில் அடைத்தநூற் குப்பை
பொருளற்ற வெற்றுரையைப் போன்ம்.

புலனைவென் றோனே புலவனும் ; பாட்டாற்
கலகலப்போன் பேச்சுக் கடை.

வெள்ளத் தனைய விரிநூ லளந்தாலும்
உள்ளத் துணர்வே யுயர்வு.

கல்வியும் வாழ்வும் கவியுஞ் சுவையும்போற்
புல்லுவதே செல்வப் பொலிவு.

4. ஆசான்—சீடன்

ஆசா னருளு மழிவில் லறிவொளியே
காசினிக் காகு முளக் கண்.

வானும் விளைநிலனும் வாரிதியும் வெற்பும்போல்,
ஞானகுரு செய்யு நலம்.

நாட்டிற் பெருந்தகையா னாளைவீ ரற்கறிவை
யூட்டினான் பெற்றாரி னாங்கு.

அழகுநிறை யாசானுக் கன்புடைமை யீந்து,
பழகிடலே நல்லறிவின் பண்பு.

நாடிப் பணிந்தோதி, நற்சேர்க்கைத் தொண்டுடனே
சீடன்மெய்க் கற்றல் சிறப்பு

5. கலை வளர்ச்சி

போற்றுக தாய்மொழியைப் பொன்போற் புறநயங்கண்
டேற்றுக நாளு மெழில்.

அருளறிவி லூறி, யழகிற் றவழ்ந்து,
பொருள்செழித்த பொற்கவியைப் போற்று !

பாட்டும் பரதமும் பண்புள்ள நாடகமும்
நாட்டிற்கு நல்ல நலன்.

கண்ணைக் கருத்தையுறக் கைந்நயத்தை யின்புறுத்தும் ;
கண்போல நுண்கலையைக் கா.

மெல்லியர்க்கு மென்கலைகள் ; வீரத் திறனாண்மைக்(கு)
எல்லார்க்கும் எண்ணோ டெழுத்து. 200

5. அன்பியல்

1. அன்பு

அன்பே கடவுளா மன்பே யருஞ்சமயம்
அன்பே யறிவிற் கனி.

அன்புள் ளிருந்தால், அடவியிலு மச்சமில்லை ;
தன்போல் அகிலவுயிர் தான்.

சுமையுமெளி தாகுஞ் சுடுபகைநட் பாகும் ;
நமனும்போ மன்பை நயந்து.

பொன்புகழி னாலன்று ; பூதவுட லாலன்றே ;
அன்பினால் ஆளை அறி.

தாயன்பு காட்டித் தமர்பிறரென் றோரமிலா
நேயனுக்கு முண்டோ நிகர் ?

2. இனிமை

இன்சொல்லி னில்லை யியம்பி னிணங்காரின்
வன்சொல்லை மாற்று மருந்து.

கன்மீது கூர்செய்யுங் கத்திபோல், வன்சொல்லில்
இன்சொல்லைக் கூர்செய் யினிது.

விருப்பினிய சொல்லேயாம் வெம்பகைவன் கோப
நெருப்பை யவித்திடுநன் னீர்.

மாற்றுன்செய் துன்பமெலா மன்னித்துத் தான்மறக்கும்
சீற்றமிலான் சீரியனே தேர்.

தன்பிழையைப் போக்கிப் பிறர்செய் பிழைதாங்கி,
அன்புசெய்வான் அன்பர்க் கிறை.

3. இன்னாத செய்யாமை

இன்னாத செய்யாமை யென்னும் ஒழுக்கத்தாம்
மன்னுயிர்க் கெல்லா மறை.

'கொல்லேன், விழையேன், குடிகளவு சூதெண்ணேன்,
பொய்யே'னென் றேயுறுதி போற்று.

மனத்தி லிரக்கமிலா மக்களை மாக்கள்
இனத்தினுஞ் சேர்த்த லிழுக்கு.

கதறக்கொன் றூனுண்ணுங் காதகர்க்கே தன்பு ?
மதுவுண்பார்க் கேது மதி ?

கூற்று மிடுகாடுங் கூடிய மாக்களே
நாற்றவுட லுண்ணு நரர்.

4. நட்புரிமை

மாணப் பெரியது மன்னே, மயக்குலகில்
ஆணவமில் லன்புத் தொடர்பு !

சீரியர் கேண்மை சிறிது கிடைத்தாலும்,
ஆருயிர்க்கு நல்லமுத மாம்.

இடித்துத் திருத்து மிணக்க மினிது ;
கொடுத்தும்புன் கேண்மை கொடிது.

உடல்பொரு ளாவி யுதவியுங் கொள்க
கடவுட் பெரியார் கழல்.

உயிரைக் கொடுத்து முயிர்பிரியா துள்ளே
உயிரொன்றி நட்டார் உறவு.

5. பொறுமை

ஆற்றல் பொறையளவே யாகு மதனுலே
யேற்றம் பெறுமெங்கு மே.

வாய்மை, பகையாமை, மாட்சி, மனப்பொறுமை
காய்வானைக் காயும் படை.

பொறுமை புவிவெல்லும் புன்னகையால் ; வாணப்
பொரிபோற் சினங்கரிந்து போம்.

காந்தியைப் போன்ற கருத்துறுதி யோடு நீ
தேர்ந்த திருவினையைச் செய்.

அறந்தாங்கி வாழும் அருட்பெரியார் என்றும்
இறந்தும் இறப்ப திலர்.

6. நடை யியல்

1. ஒழுக்கம்

முகத்தில் விளங்கும் முறையான வாழ்வால்,
அகத்தொளிரு மான்ம வழகு.

தெய்வ மிகழார்க்குத் தேவரெதிர் பேசார்க்குப்
பொய்புகலார்க் காகும் புகழ்.

தன்னடை போற்றுதான் சான்றுண்மை பேசுவதின்
மின்னைக் கரிதிட்டன் மேல்.

குற்ற மிரங்கிக் குறையற் றெழுமின்கள் ;
அற்றே நடையோங்கு மாறு.

காலையி லாற்றுங் கடமை வழுவார்க்கு
மாலையி லுண்டாம் மகிழ்வு. 260

2. தீயன விலக்கல்

முரடர் துணையு முரண்பாடாஞ் சான்று
கரடியீ யோட்டுங் கதை.

பேரைக் கெடுத்துப் பிணிசேர்க்கும் வேசைவழிச்
சேராரைச் சேருந் திரு.

வேரோ டொழிக விலைவாழ்வு ; வீட்டறத்திற்
சீரோங்கு பெண்டிர் சிறந்து.

வட்டாஞ் சகுனி வலைப்பட்டு மன்னவர்கள்
கெட்டாரம் மாயம் கெடு.

நடையை மதியை நலத்தைப் புகழைக்
குடியைக் கெடுக்குங் குடி.

3. புன்மை விலக்கல்

கோள்பொய் புகன்று குளிரவோ ? வுன்னெஞ்சை
வாள்கொண் டறுக்குமனச் சான்று.

காதலரை நாயின் கதைகட்டிச் சீரழிக்கும்
பாதகரைப் பார்த்தல் பழி.

தற்பெருமைத் தம்பட்டந் தன்னுள்ளே யொன்றுமிலை ;
அற்பமதி யாணவமே யாம்.

கற்கண்டு போற்பேசிக் காறுது தீவைப்பார்
மற்கொண்ட மாற்றுரிற் கேடு.

எள்ளி யிழித்த லிரத்தல், பிறர்பொருளைக்
கொள்ளைகொளல் புல்லர் குணம்.

4. வாய்மை

தூய்மையும் வாய்மையுந் தோழ ரவர்நட்பு
வாய்பவர்வாழ் வின்ப வனம்.

'இப்பொய்யே யின்றுரைத்தோம்' என்று வருந்தியுடன்
அப்பொய்யை நீக்க லறிவு.

பயனுள கூறும், பழிபகையைப் போக்கும்—
நயனுள நாவி னலம்.

பக்குவத்திற் கேற்ற பயனுரையே பேசிடுக ;
மிக்கது, மோனம் ; விரும்பு.

புறத்தூய்மை செய்யும் புனலைப்போ லுண்மை
மனத்தூய்மை செய்யு மருந்து.

5. விந்தடக்கம்

சிந்தை யடக்கிச் சிறுபுலனைக் காத்தடக்கி,
விந்தை யடக்கிவளர் வீறு.

பிரம சரியம் பிழையின்றிப் போற்றின்
அரிய பயனெல்லா மாம்.

ஆற்றல் அறிவாயு ளாக்கைநல வாழ்வின்ப
வூற்றுகும் விந்துன் னுயிர்.

ஆண்பெண் விலக்கில்லை ; யான்மப் பொதுவுறவு
பூண்டார்க்கு நீங்கும் புரை.

வன்னியாய்க் கற்ற வலியுடையார் போற்றுகவே
நன்மனை வாழ்க்கை நயம்.

7. இல்லற வியல்

1. இல்லறம்

வீட்டின் விரிவே வியனுலக மாதலினால்,
வீட்டறத்தில் வெற்றி விளக்கு.

இல்லற மீசனரு ளெய்திய நல்லறமஃ
தில்லையெனி லில்லையுல கிங்கு.

இல்லறமே வீட்டின்பம் ; இல்லாளு நல்வாழ்வும்
புல்லித் தழைக்கும் புகழ்.

நல்லாளைக் காதலித்து நம்பி நனிவாழ்க
வள்ளுவரும் வாசுகியும் போல்.

பூணோடு பொன்போற் பொருந்தி யறிவொளிரும்
ஆணோடு பெண்சக்தி யாம்.

2. திருமணம்

காந்தமுனை மாறிக் கவர்வதைப் போலுமே
மாந்தருள் ஆண்பெண் மயக்கு.

காதல் மணமே கருத்திற் கினியமணம் ;
ஏதம் வலுமணமென் றெண்.

நல்ல குணமணியாய் நாணுடுத்த நல்லாளைக்
கொள்ளுக வாழ்வைக் குறித்து.

ஆக்கல் அழகுசெயல் அன்பறிவு மெய்யுறுதி
காக்கலிவை பெண்டிர் கடன்.

கற்புயிர் ; நாணழகு ; காரிகைக்கு நற்கணவன்
சொற்படித லாகுஞ் சுகம். 320

3. பெண்ணின் பெருமை

மென்மை யுடலின்ப மேதக்க வாழ்வெல்லாம்
பெண்மை யுவந்தளிக்கும் பேறு.

வாழ்க்கைத் துணையும், வகையும், விரிநலமும்
ஆக்கமும் பெண்சக்தி யாம்.

அறமன்பு மைங்கடனு மாற்றிலுக் காவாள்,
நிறைமனைவி யென்றே நினை.

பகட்டணிக் கொள்ளாள், பதிக்கணி யாவாள்
அகத்திற்கு வாய்த்ததிரு வாம்.

பெண்ணிற் பிறங்கும் பெருங்கனலைப் புல்லினால்,
மண்வாழ்வு மங்கலவின் னாம்.

4. ஆண்மை

ஈட்டுமனை போற்றல் இசைபெருக நல்லறங்கள்
ஆற்றலிவை யாண்மைக் கழகு.

இல்லாளோ டன்புற் றிணங்கி யறங்காக்க
வல்லான் மணவாள னும்.

மனைவியுடன் காதலாம் ; மக்களுட னன்பாம் ;
அனைவரொடுந் தண்ணருளே யாம்.

நக்க மனையிருக்கச் சார்ந்தயலிற் சீரழிவான்
கக்கலை புண்ணுங் கடை.

கண்ணிறைத்த வீட்டிற் கனதன மங்கலமே ;
மண்ணிறைத்த வான்பயிரின் வாழ்வு. 340

5. காதலின்பம்

குலமோங்குஞ் சக்திக் கொழுந்தோங்குங் காதல்
நலமோங்க நாடோங்கு நாள்.

ஈதலிற் காதற் கிணையில்லை ; தண்முகிலும்
வாதத்தான் மாறு படும்.

புண்ணுற்று மோகப் புணர்வுற்று நொந்தழியும்
கண்ணற்ற காமக் கடா.

பெண்ணைப் பழிக்காதே ; பெண்ணை யிழிக்காதே ;
பெண்ணைப் பெருமையுறப் பேணு.

காதலுல காக்குங் கனலதனை யீசன்பால்
ஈதலே யின்பமென் றெண்

8. குலவியல்

1. தாய்

எல்லார்க்கும் ஓரன்னை ஈச னருளன்னை
எல்லாரும் ஓர்குலமென் றெண்.

தாய்சக்தி வாழியநீ ! தங்கக் குழந்தைகளால்
தேயம் வளர்க்குந் திரு.

தாய்மா ரிடத்தாகுந் தன்னுட்டின் சீர்மையெலாஞ்
சேய்வடி வாகச் செறிந்து.

வீறு மகனையே யீன்றெடுத்த மெல்லியற்கு
வேறுதவ மேனோ விளம்பு ?

சோறூட்டும் போதன்பாய்ச் சொல்லிவாழ் வின்கடமை
வீரத்தா யூட்டும் விறல். 360

2. தாய்ப்பணி

சாவையும் அஞ்சாது தாயின் பணிபுரிவோம் ;
ஆவிக் குரியா ளவள் !

அன்னை யளித்தவுடல், அன்னை யளித்தவுயிர்
அன்னை யருட்பணிக்கே யாம்.

மழையின் விளைநிலமு மன்னுயிரும் வாழ்வுந்
தழைவது தாயன்பாற் றன்.

அன்போடு கொஞ்சி யமுதிட்ட பொற்கையைப்
பின்பற்றி முன்னேறல் பீடு.

தாய்சொல்லும் அம்மொழியே தம்மக்க ளுஞ்சொல்வார் ;
தாய்நன்று சொல்லத் தகும்.

3. தந்தை

தந்தை செயலே தனயன் செயலாகும் ;
தந்தைக் கொழுக்கந் தலை.

சுற்றும் புலன்வழியே தோய்ந்து மனம்பற்றும் ;
சுற்றத்தைச் சுத்தமுறச் சூழ்.

பெற்றோருங் கூடப் பிறந்தோரும் போலநீ
உற்றமனை நாடுலகு முன்.

குலனென் றணங்குங் குரிசிலும் பொன்செய்
நிலனும் விதையும் நிகர்.

அறிவுந் திருவும் அறநெறியும் அன்புத்
திறனும் பெருகுகநின் சேய். 380

4. சேய்

இன்றுசேய் நாளையே யிப்புவியின் கையாகும்
என்றுசேய் போற்ற லினிது.

இல்விளக் காகு மினிய புதல்வர்க்குக்
கல்வியறி வாற்றலாங் கண்.

நன்மக்க ளின்பெருமை நாட்டிற்கெல் லாம்பெருமை ;
வன்மக்கள் வீட்டின் வசை.

தாலாட்டிச் சீராட்டிப் பாராட்டி னூர்மேல்வை
மாறுட்ட மில்லா மனம்.

இளமையிலே பெற்றோர் இயற்றியதை மைந்தர்
முதுமையிலே செய்யன் முறை.

5. சுற்றம்

நல்ல துணைநின்று நன்றி மறவாதான்
எல்லார்க்கு மின்னுறவென் றெண்.

பாகத்தி லன்று ; பரிந்த வுதவியினில்
நேகத் துணைவனை நீ தேடு.

இனையுரிமை கொண்டாடிக் கேடுசூழ் வானுந்
தலையரிக்கும் பேனுஞ் சரி.

இன்று புரிவார் இரத்தக் கலப்பெனினும்
ஒன்று றெனவே யுணர்.

நன்னோக்கங் கொண்டுமனை நாடுய்ய வாழ்ந்திடலே
முன்னோர்க்குச் செய்யு முறை.

6. பிழைக்கும் வழி

தேவை யறிந்து, செழுமையுறப் பொன்செய்து,
பூவையறிந் தில்லம் புரி.

கடன்செய் யிடம்பம் கவலைக்குத் தூது ;
விடஞ்செய் வறுமைக்கு வித்து.

வீணணி யாடை விருந்து மணச்செலவு
காண்வறுமை காட்டி விடும்.

மடைவாய்நீர் போல வழிந்துபோம் செல்வம் ;
உடையார் தருக வுவந்து.

திருநாள், பெருநாள், கருநாட் செலவு
வருநாளைப் போற்றி வழங்கு.

7. குலநலம்

நிலநலத்தை வேண்டி, நிறைமுறையாம் வாழ்வாற்
குலநலத்தைப் போற்றக் குறி.

பசிக்குத் தொழிலும், பரமற்கு நெஞ்சும்,
இசைக்கு வியன்செயலு மெண்.

அச்ச மடிமை யகந்தை யிருள்வறுமை
யிச்சகத்தைக் கொல்லும் எமன்.

தின்றுபடுத் தீன்றெமன்வாய்ச் சென்றுபடல் வாழ்வன்றே ;
பன்றிக்கு முண்டப் பயன்.

விண்பகட்டும் வேண்டா வெறுமையு மில்லாது
மாண்புபெற வாழ்வாங்கு வாழ்.

9. தொழிலியல்

1. முயற்சி

முயல்க, முயல்க, முயல்கமேன் மேலும்
பயன்களைவைத் தீசன் பதம்.

தங்கு முயற்சியாற் சாராத தொன்றில்லை ;
கங்கை கொணர்ந்தோன் கரி.

முயற்சிக்குச் சீதேவி முன்னாகும் ; சோம்பும்
அயர்ச்சிக்கு முதேவி யாம்.

ஏதானு மொன்றை, யியற்புலமை கொண்டறிந்து,
மூதுலகம் வாழ முயல்.

அவலப் படுவினையில் ஆற்றலைப் போக்கல்
உவர்நட்டு நீர்ப்பாய்ச்ச லொப்பு.

2. வினைத்திறன்

முடிக்குந் திறனின்றேல் முந்திநா னென்னேல் ;
அடக்கத்தி னுற்ற லறிவு.

உழைத்த வுணவை யுவந்துசுவைத் துண்க ;
வழுத்தி வழிபட்டு மன்.....

மாமனிதன் தேவனெனும் வாழ்க்கைப் படிகளெலாம்
தாம்செய் வினையே தரும்.

தேவா சுரர்தாந்தாஞ் செய்யும் வினையாலே
யாவா ரிதனை யறி.

வையமெலாம் சிற்சபை;நல் வாழ்வெல்லாம் வேள்வியே ;
செய்வதெலாந் தெய்வச் செயல். 440

3. தொண்டு

நல்லவினை யேசூழ நாளு மிருப்பாயேற்
பொல்லா வினையெல்லாம் போம்.

தொண்டா லுறுமகிழ்வே தொல்புவியுஞ் செய்தோனும்,
அண்டரும் போற்று மமிழ்து.

அருட்பணி யின்ப வமுதமாம் ; பொல்லா
இருட்பணி நஞ்சா மிடர்.

நாட்டி னடிமையு நல்குரவு நீக்கிடலே
வீட்டின்ப மென்ன விரும்பு.

ஒருண்மை தேர்ந்திங் குலகுய்யத் தொண்டாற்றி
யீருலகு மெய்தி யிரு!

4. நலிவறல்

பசியு நசையுமறு பட்டாலிப் பூவே
வசையற வோங்கிடும் வான்.

இவ்வுலகைப் போற்றி யியல்பான நல்லறஞ்செய் ;
அவ்வுலகி லின்பமெலா மாம்.

இளைத்தோர்க் குணவு மியன்றோர்க் கறமும்
விளைத்து வறுமை விலக்கு.

நாட்டில் விளைபொருளந் நாட்டார் நலம்பெறவே
யீட்டு முயற்சி யினிது.

இன்மை மடமை யிரண்டும்பா பாசுரன்கை ;
நன்மைவிழுங் காது நலி. 460

5. கைத்தொழில்

கைத்தொழி லொன்றற்றுர் கையிருந்துங் கையற்றுர் ;
மெய்த்தொழிலின் வேர்வையெலாம் பொன்.

இயற்கைதருஞ் சக்திகளை யந்திரத்தில் ஊக்கிச்
செயற்கரிய நன்மையெலாஞ் செய்.

காலத்தை வெல்லுங் கருவி பலசெய்து
ஞாலத்தி லேவெற்றி நாட்டு.

ஒவ்வொரு கையும் உழைத்துப் பிழைத்தாலே
செவ்வியதாந் தேசத் திரு.

தொழிற்செல்வ மோங்கச் சுதந்தர வாழ்வாகும்
எழிற்செல்வ மோங்கும் இனிது.

6. வேளாண்மை

ஏரோசை பாருக் கிதயத் துடிப்புநூற்
போரோசை ஓங்காரம் போல்.

சொற்போரும், விற்போரும், பொற்போருஞ் சோருமே
நெற்போரொன் றில்லா நிலே.

ஒருபயி ராக்கி யுணவீவான் பாரிற்
பெருமக னென்றுநீ பேசு.

பயிர்செய்வான் வாழ்க்கையே பாங்கு; மற் றெல்லாம்
அயல்சார்ந்த சேவகமே யாம்.

உழைத்துவிளைத் துண்ண வுவந்தா லுலகம்
செழித்து வளருந் தினம். 480

7. உழைப்பு

செய்யுங் கிணறுஞ் சிறுகுடிலும் பெற்றமுங்
கையுழைப்பு மீயுங் களிப்பு.

நூற்றுத் தறிநெய்து, நூல்கற்று, மண்ணுழுது
காற்றுட வாழக் களிப்பு.

மண்ணுழு துண்ணுர், வறுமைகொடி தென்பார்க்குக்
கண்ணிருந்துங் கையிருந்து மென் ?

கட்கஞ்சாத் தீயிலைகள் காப்பி யறநீக்கி
நற்பயிர்செய் யுண்டுடுக்க நாடு.

அந்தந்த நாட்டிற் கமைந்தபயிர் செய்துண்ணல்
அந்தந்த நாட்டார்க் கழகு.

8. பிழைப்பு

பாடுபட் டோருக்குப் பாட்டின் பயனெய்தில்
நாடுவிட் டோடும் நலிவு.

விளைப்பானே நேராக விற்றுண்ணு வானேல்
உழைப்பாளிக் கோங்கும் பிழைப்பு.

தன்னியல்புக் கேற்றபடி தாளாண்மை, வேளாண்மை
பண்ணுக ; தீமை படும்.

கூலி குறைந்தாற் குலங்குறையும் ; பாட்டாளர்
ஞாலவாழ் விற்கு நரம்பு.

புவிமக ளீந்தபயன் போதிய மட்டும்
அவரவர் துய்த்த லறம். 500

9. பணம்

நல்லன மல்கி நலமோங்க நல்வழியிற்
செல்வ முயற்சிகளைச் செய்.

பணஞ்செய் படர்நீங்கிப் பண்டமாற் றோங்கின்
மணஞ்செய்யு நாட்டின் வளம்.

போதைத் தொழிலாக்கிப் பொன்னைப் பொருளாக்கி
மேதைப் புகழை விரும்பு.

பொய்வஞ்சக் கள்ளர் பொருளைக் கவராது
தெய்வப் பணிக்குத் திருப்பு.

பைதந்த செல்வம் பலருண்டு வேலைசெயக்
கைதந் திடவே கருது.

10. செய்வகை

இயற்றுக கால மிடம்வகை தேர்ந்தே ;
பயக்கும் பருவமழை போல்.

காக்கையிடம் பாட்டைக் கரக்குங் குயிலெனநீ
நாக்கடங்கி நன்முயற்சி செய்.

பின்னு வதனைப் பெரிதுங் கருதியே
முன்னோர் வினையை முயல்.

தாய்மொழியுந் தன்னறமுந் தாய்நாடுந் தண்ணருளும்
வாய்மையறி வும்பெருக வாழ்.

'ஓம்வணக்க' மென்ன வுயர்ந்தோ ரடிபணிக ;
போமகந்தை ; புண்ணியங்க ளாம். 520

11. வினை வெற்றி

சங்கடம் போன்று ஐயமாந் திருவினைகள்—
கங்குன் முதிரக் கதிர்.

சொல்லிற் குறைபோலத் தோன்றி நிறைபெறுமே
பல்லுயிர் வாழும் பணி.

மலர்மெத்தை மீதல்ல, வாண்மீது சென்றே
பலர்நன்மை செய்தார் பரிந்து.

துணிந்துமுன் செல்க ; துயர்க்குலந் தானே
பணிந்துவெற் றிக்காம் படி.

ஆருயிர்கட் கன்புற் றருள்வலியால் வெற்றிபெறும்
சீருயர்ந்த தெய்வப் பணி.

10. அருளரசியல்

1. தலைமை

பாருலக மெங்கெங்கும் பாரோர் உரிமையலால்
ஓரோர் உரிமையா மோ ?

இவனுயிரே யாகும் அவனுயிரு மென்னில்
எவனடிமை யாவதெவ னீங்கு.

குடியிற் குடியாய்க் குடியொத்துக் கோல்செய்
நடுநிலை யாட்சி நலம்.

அறங்காக்கும் வீறும், அறிவழகும் வெற்றித்
திறங்காக்கு மன்னவன் றிரு.

உண்மையே திண்மை ; யுலகி லறமோங்கு
நன்மையே நாடாள்வான் சீர். 540

2. நேர்ச்சி

குடிகளே தேர்ந்திதமாய்க் கொண்டவனே கோமான் ;
நடுநிலைசேர் நாட்டத்தி ளுன்.

தான முயரச் சமுதாய சேவைகளும்
மாணப் பெருகி வரும்.

ஆராய்ந்து போற்றி யனைவருந்தேர் சீரியரே
பாராள் சபைக்கமைதல் பண்பு.

பொதுநலமே வாழ்வாகும் புண்ணியரைத் தேர்ந்தால்,
அதுநலமாம் பூவிற் கணி.

உள்ளத் துடிப்பில் உலகந் துடிப்பவரைத்
தெள்ளத் தெரிந்துடனே தேர்.

3. நல்லாட்சி

தொத்தடிமை யின்மை, துயர்செய் முரணின்மை,
உத்தமனுள் ஊருக் கணி.

சிற்றூரிற் றேயம் தெரியும் படியாண்டு
வற்று நிறைவு வழங்கு.

பார்தழுவிப் பஞ்சம் பகையிருள்நோய் அச்சமறச்
சீர்வழியிற் செங்கோல் செலுத்து.

வறுமையற நற்றொழிலும், வாய்மை யறிவும்
முறைமையுறத் தந்துதவு முன்.

ஒளிசெய்யுங் கல்வி யுலகிலெல் லார்க்கும்
எளிதுறச் செய்த லினிது. 560

4. வரவு செலவு

கல்வி தொழில்,சுகங் காப்பு நலங்கருதி
மல்குவரி வான்போல் வழங்கு.

தேவைக்கு மேற்சேர்க்குஞ் செல்வர் திறைவாங்கித்
தேவையறத் தேசநலஞ் செய்.

எவரெவ ரெத்திறத்த ரென்றுய்ந்து போற்றி,
அவரவர்க் காந்தொழிலே யாக்கு.

மனங்கொண் டறவழியில் மாந்தர் ஒழுகின்,
கனங்கொள் படைச்செலவேன் ? காட்டு !

கூரை பிடுங்கிக் குளிர்காய் வதுபோலும்
பாரைப் பிடுங்கும் பரிசு.

5. படை

நயத்தால் அரசாள நாடாத மன்னன்,
பயத்தாலே கொள்வான் படை.

பார்மனம் பற்றிப் பரிந்துமுறை செய்நாட்டிற்
போர்வெறிகள் போக்கற்றுப் போம்.

நஞ்சப் பகைவர் நடுநடுங்கப் போர்புரியும்
அஞ்சாப் படைவலிமை யாக்கு.

வீரப் பயிற்சிமிக வேண்டிப் புலிநரிகள்
ஊரைக் கெடுக்கா தொழி.

இன்றுவாள் வென்றதனை யின்னொருவாள் வெல்லுவதே
என்றுமிம் மண்ணுள் இயல்பு.

6. வெம்மை விலக்கல்

காலைபோற் செய்யதிருக் காவலன் சீரோங்கும்;
மாலைபோ லாம்வெய்யோன் வாழ்வு.

கோதேறி னேறுங் கொற்ற நெடுஞ்செருக்கு
மீதேறும் கற்போல் விழும்.

நடுக்கி யடக்கிடவே நாளும்போ ராட்டம்;
அடுத்துத் தரவமைதி யாம்.

பாரோடு வாழான் படைச்செருக்குத் தன்னரசை
வேரோடு சாய்த்து விடும்.

ஆன்மநே யத்தாம் அருளாட்சி யாலுலகில்
வானரசை யென்றும் வளர்.

7. சட்ட திட்டம்

கட்டுக் கடங்கிக் கடமையினி தோங்கிடவே
சட்ட மியற்றத் தகும்.

அதிகாரஞ் சொற்பம் அதிகஞ் சுயேச்சை
விதிசிலவா மாட்சி விரும்பு.

வித்தக நல்லோர், விதந்தெரிந்த மேன்மக்கள்
ஒத்துழைத்த லென்று முயர்வு.

ஐந்த னணியி லவைசேர்த் தறிவன்பர்
மந்திரத்தி னாளுமுறை மாண்பு.

அறவோர், தொழிற்புலவர், அஞ்சாத வீரர்,
அறிவாளர் நாட்டிற் கணி.

8. நாட்டன்பு

வீடுகளி னீட்டம் விரிநாடா மாதலினுல்,
வீடென்றே நாட்டை விரும்பு.

வளமறிவு வீரம், வளரிசையு மாந்தர்
உளமகிழ்வு மோங்கியது நாடு.

நாந்திருந்தி மேலோங்க நாடுந் திருவோங்கும் ;
தாந்தாந் திருந்தல் தலை.

அன்னையன் புக்கனலை யாவிதொறு மூட்டிடுவோம் ;
பின்னே திருளச்சப் பேய் ?

எந்தா யருட்பணிசெய் யின்பத்தி னின்பமிலை ;
இந்திர போகமெமக் கெள்.

9. மக்கள் கடமை

ஆற்றப் பொறுத்துநல் லன்போ டறங்காத்தல்
மாற்றுனை மாற்று மருந்து.

உலகிலுன் னுட்டை யுயர்த்துகமெய் வீரப்
புலவர்மலிந் தோங்கப் புகழ்.

நல்லொழுக்கம் பற்றி நடந்து நடந்துதினம்
அல்லொழுக்கம் போக அடங்கு.

பணிந்து நடக்கை பயனீயும் ; வீரர்
துணிந்து நடக்கையினைப் போல்.

வெற்றிபெற வாழ்தலும், வீட்டுநலந் தாங்குதலுங்
கற்றறிந்த மக்கள் கடன். 620

10. ஒற்றுமை

ஒற்றுமையே பேராற்றல் ; ஒற்றுமையே வாழ்வின்பம் ;
ஒற்றுமையே வெற்றிக் குயிர்.

உள்ளொன்றி னுலே யுலகொன்று மாதலினுல்,
உள்ளத்தில் ஒற்றுமையை யூன்று.

பார்த்தால் மனத்தாற் பலவாகும் ; சுத்தான்மா
போர்த்தா டியற்கைப் புவி.

மானிடர் தெய்வத் திருக்கூட்ட வாழ்வடைவர்,
ஆன்மவொருப் பாட்டுரிமை யால்.

ஒன்றே யுயிருலகம் ; ஒன்றே யுலகிறைவன்
ஒன்றே யிறைவனுறை யுள்.

11. யோகவியல்

1. யோக சக்தி

பூரணத்தை யுட்புறமும் பூரணமா யோர்ந்திவளர் ;
பூரணமே யோகப் பொருள்.

சக்திக் கதிராற் சகமொளிர வாழ்ந்திடலே
சுத்தான்ம சித்தியெனச் சொல்.

சக்தியே முக்திபரா சக்தியே யின்பமருட்
சக்தியே சித்தியெனச் சாற்று.

"ஓம்சுத்த சக்தி"யென வுள்ளே யுயிர்த்திடுமின் ;
ஆம்சித்தி சக்தியரு ளால்.

மதிநீ ; வழிநீயே ; வாழியறத் தாயே !
கதிரின்றிக் காணுமோ கண் ? 640

2. உடலுறுதி

உடலுறுதி செய்க ; உடலையொளி செய்க ;
உடல முயிர்மனையென் றுன்.

பத்தா மிருக்கை உயிர்ப்படக்கம் ஆறுவினை
சுத்தமுட லீயுஞ் சுகம்.

ஈரெட்டு நான்களவில் ஈர்த்தடக்கி விட்டுயிர்ப்பின்
வேரெட்ட வுண்டாகும் வீறு.

அற்றுப் பசிகண் டளந்துண் டியல்வழிநில் ;
குற்றமு றுதூன் குடில்.

தூயவுண தூய்நட்புத் தூயமனத் தூயருக்குக்
காயமுங் கண்ணுடி யாம்.

3. இயற் சிகிச்சை

நியமனத் தாலுந் திருவற்ற வாழ்வானும்
நோய்பிறக்கு மென்றே நுவல்.

தூயவுடை யூணுந் துகளறுவாழ் வுங்கொளலே
நோயு மருந்துமிலா நோன்பு.

பூத வுடலுக்கைம் பூதமே நன்மருந்தாம் ;
பூதநிறை யெந்நாளும் போற்று.

உண்ணுமை மாற்றும் உடற்பிணியைக் காற்றுளிநீர்
மண்வாழ்வார்க் காகு மருந்து.

உண்ணும் பணியை யுடல்வாழ் பரமனுக்கே
பண்ணும் பணியாகப் பார். 660

4. மனவுறுதி

நிலைத்த மனமே நிலைபேறும் ; ஆசை
யலைத்த திடர்க்கடலே யாம்.

சுற்றும்பேய் நெஞ்சைச் சுருக்கிச் சுகவழியே
பற்றற்று நிற்கப் பயில்.

சினத்துடனே மண்ணைச் செயிப்பதினுந் தத்தம்
மனத்தை யடக்கிடலே மாண்பு.

நிலைக்கு நலநாடி நீளவா நீந்தி
அலைக்கு மனத்தை யடக்கு.

நினைப்பி னுருவே நிசமாகும் ; நல்ல
நினைப்பையே தேர்ந்து நினை.

5. சித்த ஜயம்

வந்ததையும் போனதையும் வாதனைப்பட் டெண்ணுவதேன் ;
சிந்தையலை யாதிருக்கச் செய்.

ஒன்றினை யொன்றலே யோகம் ; அலைமனத்தை
வென்றிடி னென்றும் விரைந்து.

தினி முயக்கினிலே செல்லாதுன் வாணாளில்
ஞான முதிர்ச்சிபெற நாடு.

இன்பத்தி லின்பம் எனைத்திலுங் கட்டின்மை ;
துன்பத்துட் டுன்பந் தொடர்பு—

பற்றற்று வாழ்ந்து, பரம சுகமெய்தக்
கற்றவனே கற்றார்க் கிறை. 680

6. மௌனம்

செவிப்படக் கேட்டவை சிந்தித்துச் சித்தங்
குவிப்பது கற்பின் குறி.

வாயடங்க நெஞ்சடங்க மௌனமே மந்திரமாம் ;
சேயடங்குந் தாயைத் தெளிந்து.

தானாகக் கூடுந் தலைவன்முன் பேச்சடங்கும்
ஆனாத மோன மது.

வாய்ப்பேச் சடக்க, மனமடங்கி, நாடியாழ்
பாய்ச்சும் பரநாதப் பண்.

இரவுபக லின்றி யெரிமுச் சுடரிற்
பரமான்ம நூலைப் படி.

7. தியானம்

நினைத்து நினைத்து நினைப்பற்று, நெஞ்சே,
நினைப்பற்றி நீயாகி நில்.

சிதையாம லெண்ணித் தெளிந்தாலுன் னுள்ளே
"அதுநா"னென் றேயுணர லாம்.

எழுந்து விழுந்தும் இடத்தமர் முன் னீர்போல்
அழுந்தியுன் னுள்ளே யடங்கு.

பொன்னூற்றிற் பொங்கிப் பொலியும்வெண் டாமரைவாழ்
அன்னமென் றுன்னை யறி.

அமைதியின் பத்தில் அறிவுச் சுடராய்ச்
சமதைபெறுந் தன்னிலையைச் சார். 700

8. ஸஹஸ்ரார சித்தி

கர்ப்பூரத் தீபவொளி காட்டும் உடலுயிரும்
சிற்கனலை யேற்றச் சிரம்.

ஆறுருவி, யேழேறி, யானந்தத் தேனுண்ணும்,
சீறியெழும் ஆதாரத் தீ.

வெண்டா மரையில் விளைதேன் அறிவருளால்
உண்டார்க்கும் உண்டோ பசி ?

ஊற்றைப்போற் பொங்கி யுலகைச் செழிப்பிக்கும் ;
ஆற்றைப்போற் பாயு மருள்.

கூற்றஞ்சி யோடுங் குலகுண் டலியுச்சிக்
கேற்றுக முக்கண் ணிடம்.

9. சாகாக் கலை

என்று மிருப்பதனி லென்று மிருப்பதுவே
என்று மிருக்கும் இருப்பு.

பிறப்பிறப் பில்லாப் பெருவாழ்வு வேண்டின்,
மறப்பறவுள் ளூன்று மனம்.

தேகாதிக் கெட்டாத சிற்சுக மெய்வாழ்வே
சாகாத சக்திக் கலை.

கூற்றையுதைத் தாடுங் கொழுந்தடியைப் பற்றினால்,
மாற்றேறும் பொன்னுடல மாம்.

எப்போது மெண்ணி யிருப்பார்க் கியலுண்மை
தப்பாது வீசுந் தணல். 720

10. கூற்றிற்கஞ்சாமை

சாதல், பழையவினைச் சட்டையறப் புத்துடலை
யீத லுயிர்க்கென் றியம்பு.

மாரடிப்பு வேண்டா ; மகிழ்மினே, யிவ்வுலகப்
போரொழிந்து சாவுவரும் போது.

வாவென்னும் ; வந்தால், மனமக்க ளைப்பிரியேன்,
போவென்னுங் கூற்றைப் புவி.

உண்மைக் குயிர்வாழும் உத்தமருக் கச்சமிலை ;
திண்மையிலார்க் கென்றுந் திகைப்பு.

என்றுந்தான், எல்லாந்தான், எங்குந்தான் சுத்தாத்மா ;
பொன்றுவது முண்டோ ? புகல் ?

12. சித்தியியல்

1. மெய்த்துறவு

மனத்தி லருண்மல்கி மானுலக முய்யுந்
தனைத்துறக்குந் தொண்டே தவம்.

கனத்த நிதிகண்டுங் கட்டின்றி வாழு
மனத்துறவே வாய்மைத் துறவு.

பத்தாறும் வென்று பழுதற்ற சுத்தான்ம
சித்தரைத் தேவரெனத் தேர்.

அடிமைத் தளையுதறி யஞ்சாத வீரம்
மடமையை மாற்றும் மருந்து.

அழகெனக் காட்டி யடிமை தருவ
முழுவதும் போக்க முயல்.

2. பற்றறுத்தல்

பற்றே துயராகும் ; பற்றறலே பேரின்பம் ;
கற்றறிந்தோர் கொண்ட கருத்து.

வெற்றெலும்பை நாய்கடிக்கும் விந்தையென மாயமனப்
பற்றுழன்று நோவார் பலர்.

அழியாப் பொருளை யழியாது பற்றின்
அழியா வமரநிலை யாம்.

கொண்டுவந்த தில்லை ; கொடுபோ வதுமில்லை ;
வண்டார் கனிமரம்போல் வாழ் !

நாளாக நாளாக நாளான மாயம்போய்,
ஆளாத லீசற்கென் றும்.

3. மன மாயம்

சிரிப்பும் அழுகையுஞ் சேர்ந்தமன மாயம்
அரிப்பும் எரிப்பும்போ லாம்.

ஆசை, பொறாமை, பகந்தையிவை, நெஞ்சத்திற்
பாசவலை வீசும் பகை.

தூசியிலா ஆடியிலே தோன்றுமுகம் போலான்மா
ஆசையிலா நெஞ்சகத்தே யாம்.

இன்பவலை வீசி யிழுக்கு மனமாயந்
துன்பவலை யாகுந் தொடர்ந்து.

ஆசையழுக் கில்லாமல் ஐம்பொறியை வென்றவனூர் ?
ஆசா னுலகிற் கவன்.

4. தெய்வ வொளி

தெய்வ வொளிதன்னையே தேடு ; பிறவெல்லாம்
கைநழுவுங் காலத்திற் காண்.

ஆர்வக் கனலுடனே யாண்டவனை வேண்டினருட்
பேரமுத வான்பொழியும் பேறு.

இருக்கிறே னிங்கென் றிதயத்தா னுன்னை
யழைக்கிறா னுங்கே யடை.

மனத்தூ டுருவி மணிமன் றொளிகாண் !
இனிக்கும் பரம்போ லிகம்.

துரியமலை மீதேறிச் சோதிநடங் காணின்,
அரிய செயலெல்லா மாம்.

5. ஆத்ம சாந்தம்

பொன்னும் பொருளும் புவியு மளித்திடுமோ,
தன்னுள்ளா மின்பந் தனை ?

உறவுந் துணையுமாம் உள்ளத்தான் ; உண்மை
யறிவின்ப மாவ னவன்.

இயல்பான வுன்னை யியல்பா யறிந்தே,
யியல்பாகி யின்புற் றிரு.

அன்னிய மின்றி யறிந்தடங்கி, யெக்காலுந்
தன்னிலையிற் றுறு யிரு.

கண்ணைத் திறந்து, கருணையொளி காட்டியருள்—
உண்மைப் பரம்பொருளே ஓம் !

6. அறவோர்

பார்வாழ்க்கை முற்றும் பரமன் வழிபாடாம்
பூரணருக் கென்றே புகல்.

அறிதற் கரிதை அறவோர் அறிந்துலகில்
அறிவொளி யாவா ரவர்.

அருட்கோயில் சுற்றி யணியணியாய் மாந்தர்
திருத்தக்க வாழ்வமையச் செய்.

அதிமனிதர் தீரர், அருட்சக்தி மைந்தர்
புதுயுக வீரர்வரப் போற்று.

அறக்கடவுள் வாழி ! யறம்வாழி ! வாழி
யறவோர் அருள்வெற்றி யாங்கு.

7. போற்றி

போற்றுகிறே னுன்னைப் புவியே யிறைவடிவென்
றுற்றுகிறேன் அன்புப் பணி !

நடமாடுங் கோயில்காள் ! ஞாலத் துயிர்காள் !
கடவுட் குலமொன்றே காண் !

வான்பழுத்த வாழ்வே மகிழ்ந்து மகிழ்ந்தின்பத்
தேன்செழித்து வாழ்க தினம் !

இறைவ னருட்குடைக்கீழ் எல்லாரு மின்ப
நிறைவெய்தி வாழ்க நிலைத்து.

விண்குடை தாங்கியருள் வேந்தனுக்கே யாளாவோம்
பண்ணும் பணியும் படைத்து. 800

8. அனைத்தும் வாழ்க !

இதயம்பூ ; மந்திர மின்சொல் லுனதன்பு
துதியாக வேயருளாய் தொண்டு.

போரற்றுப் பாரிற் பொறுமை விளங்கியுயிர்
சீருற்று வாழ்க செறிந்து !

உன்பொற் றிருமுகத்தை யுள்ளும் புறமுங்கண்
டன்புற் றிருக்க வருள்.

இத்தல வட்டமெலா மென்மனைபோற் றெண்டுசெயச்
சக்திக் கனலெனக்குத் தா.

நல்லறிஞ ரோங்க, நலமோங்கிப் பூவெங்கும்
எல்லாரும் வாழ்க வினிது ! 810

9. அகண்ட சாதனப் படலம்

மண்ணில் மாந்தர் வாழ, மன்னுயிர்க் நலங்கள் வாழப்
புண்ணிய பூமி வாழப் பூரண சுத்த யோகி,
எண்ணிய பலனை யெய்தி இருளறும் அருளி னாட்சி
நண்ணிடச் சுத்த சங்க நண்பரை அணிவ குத்தான் :—

எவரெவர் எத்தி றத்தர் எனத்தெரிந் தன்பு கொள்ளும்
அவரவர்க் கிசைந்த தாகும் அருட்பணி வகுத்துத் தொண்டை
நவையறப் புரிதற் கேற்ற ஞானமுந் திறமுந் தந்து,
புவியினில் அகண்ட யோக சாதனம் புரியச் செய்தான்.

வாழிய சுத்த யோகி, வாழிய சுத்த யோகம்
வாழிய சுத்த யோக சங்கத்தின் வளமை யென்றே
ஏழிசை யுடனே சங்கம் இனியநற் கீதம் பாடிச்
சூழவும் அமர்ந்து சுத்தச் சுடரினை நினைந்த தம்மா !

பத்தியும் பணியும் அன்பும் பலகலை யறிவுங் கொண்டு,
நித்திய யோகஞ் செய்திந் நிலையத்தில் வாழ்ந்த நல்லீர்,
சத்திய யுகத்தைக் காணச் சகமெலாம் சுத்த சங்க
சித்தியைப் பரப்பு கின்ற சேவையே சேவை யாமே.

திவ்விய சேவைக் கேற்ற திறல்பெறுஞ் சித்த ரெல்லாம்
ஒவ்விய பணியைத் தேர்ந்த உத்தமத் தொண்ட ரெல்லாம்,
செவ்வழி யறிந்து செய்யச் செய்பணி கேண்மின் என்றே
துவ்விய குருவு மாங்கே சொன்னதைச் சொல்வேன் கேளீர் :

பொதுக் கடமைகள்

பூரணம் பெற்ற புனிதமெய் யோகிகாள்,
சுத்த சமரஸ சுதந்தரச் சுடர்காள்,
பல்லாண் டுகளாய்ப் பயின்றநம் யோகம்
யோக சித்தியாய் உருவெடுத் துள்ளதே.
மலைவளர் சுத்த நிலையம் இனியிவ்
வுலகெலாம் பரவி யோக சித்தியின்
வழியே, மாந்தர் வாழச் செய்யும்
அகண்ட சாதனம் ஆற்றிட லாமே.
பூரண சாதகர் பொதுவிதி கேளீர் :
காலை யெழுந்து கடன்முறை செய்து,
கானத் தாலும் தியானத் தாலும்
சுத்த சக்திச் சுடரினை உள்ளே
கலந்து நிற்றல் கடமை யுமக்கே.

கவிகளே புதிய காலைக் குயில்களாம்.
அருட்கவி யாகும் ஆனந்த யோகி,
பாடிய பாடலைப் பஜனையாற் பரப்பி
மாந்தரை எழுப்புமின் ; மானிடப் பிறவியின்
பயனை யறியப் பாடிப் பேசுமின்.
காலை மாலை கடவுளை வணங்கல்,
எல்லா ருக்கும் இயற்பெருங் கடனும்.
சத்துவ மான சைவ உணவையே
பசித்திரு முறையே புசிப்பது நலமாம்.
யோக சித்தியை ஒருமுறை தினமும்
ஓதுதல் கேட்டவர்க் குணர்த்துதல் கடனும்.
உழைத்தே உண்ணல் பிழைத்தலின் விதியாம்.
இருளர சேகி அருளர சோங்கி,
நமது மெய்ப்பணி நலமுறு மட்டும்,
பெண்ணும் ஆணும் பிரம சரியமே
காத்துத் தவமெனக் கடமை செய்கவே.
சிறப்பாய் அவரவர் செய்கடன் அவரே
கலப்பறச் செய்து காணுக வெற்றியே.
ஒருவர் கடமையில் ஒருவர் குறுக்கிடேல்.
ஓர்பெரும் பொறியில் ஒவ்வொரு பங்கும்
அதனதன் கடமையை அமைதியாய்ச் செய்தே
ஒரேமின் சக்தியால் உயிர்ப்பது போன்றே,
உடலில் உள்ள ஒவ்வோ ருறுப்பும்
இயங்குவ தொப்பவே, இயங்குவீர் நீரும்.
சாதி மதநிறப் பேதமே யில்லை.
உலகெலாங் கோயில் உயிர்த்தொகை சாமி ;
பொதுநலம் புரிதலே பூசனை யாகும்
என்றுணர்ந் தனைவரும் ஏகுவீர் ; அவரவர்
தலைவரைப் பணிவீர் ; தகுந்த தொண்டரை
ஒவ்வொரு காலையும் செவ்விதிற் பயிற்றி
ஊர்தொறும் ஊர்தொறும் உரியன செய்வீர்.
நானூற் றைந்து நல்ல தொண்டரும்
பன்னிரு தலைவரும் பகுதி பகுதியாய்,
பாக்கம் பாக்கமாய்ப் பரவிப் பணிசெய
நோக்குவீர் புதுயுகம் ஆக்குவீர் ஆங்கே !
அருட்பணிக் கெழுவீர் அன்புள மணிகாள்,
இருளற் றுலகெலாம் இன்பமே பொலியும்
அருட்பணிக் கெழுவீர்....அகண்டசா தகர்காள் !

கடவுட் கூறு

நீண்ட தவத்தால் ஆண்டவன் அருளைப்
பெற்றுக் கற்பனை கற்றுச் சிறந்த,
ஜோதி முனிவரின் பாது காப்பிலே,
ஒள்ளிய தொண்டர் ஊரூர் சென்று,
பாட்டி னாலும் பஜனையி னாலும்,
அருட்பெரி யாரின் அற்புத வாழ்வைப்
படித்துப் பேசிப் பக்கவாத் தியங்கள்
சேரக் கதைகள் செய்வ தாலும்,
தெய்வம் உண்டு தெய்வத் திருவருள்
சூரியன் ஒளிபோல், மாரிபோல், அனைவரும்
பெறத்தகும்; கருணைப் பெரும்பரஞ் ஜோதி,
சாதி மதநிற சாத்திர கோத்திர
நாடு நகர நாறு பேதம்
இல்லை ; இறைவன் எவர்க்கும் பொதுவாம்.
உலகெலாம் இறைவன் உலாவிடுங் கோயில்.
உள்ளந் தோறும் உள்ளது கடவுள்....
நம்புமின் ; என்று நவின்று நவின்றே
ஊர்தொறும் அன்பரை ஒன்று சேர்த்துப்
பரம்பொரு ளுணர்வைப் பரவச் செய்மினோ !
நாமே தெய்வம் ; நமக்கிணை யில்லை,
என்று பேசி இறுமாப் பாலே
உண்மையை மறைத்தே, உலகை மயக்கிப்
பொருளும், புகழும் போகமுந் தேடும்
போலிக் குருமார் புரட்டுகள் ஒழிய,
ஒன்றே தெய்வம் உளந்தொறும் அதுவே,
பத்தியுந் தியானமும் பரோப காரமும்
அதனை அடையும் அன்பு வழியெனப்
புகல்வீர், திருவருள் பொதுவென விளக்கி,
நாத்திகத் தடிப்பை நச்சடி யடித்தே
சுத்த யோகத் தொண்டர் தமக்கு
வழியைத் துலக்கி மகிழ்வுறு வீரே....

உலகக் குழு

அனுபவ ஞானி ஆத்தும நேயனைத்
தலைக்கொண் டேகுக உலகக் குழுவே.
இப்போ துலகம் எண்ணிலாப் பிரிவினைச்
சந்தையாய் அகந்தைச் சண்டையா யுள்ளதே.
சாதிச் சண்டை, சமயச் சண்டை

நாட்டுச் சண்டை வீட்டுச் சண்டை,
நிறத்திமிர்ச் சண்டை நீசச் சண்டைகள்
ஆயிரம் கொள்ளிப் பேயெனக் கிளம்பி,
மனிதரை விலங்கென மாற்றுகின் றனவே.
புலவர் சொன்ன பொதுநெறி மறந்தே
தாந்தம தென்னுஞ் சமயக் கோட்டைகள்
எழுப்பி, மாந்தர் மழுப்பி மெய்யைத்
தன்னலத் தாலே தற்கொலை புரிவார்.
உலகம் பொய்யதை உதறிச் செல்வதே,
துறவெனச் சிலபேர் சொல்லைப் பெருக்கி,
ஊரின் சோற்றை உழையா துண்டு,
"நாசமாய்ப் போகும் ஞால விசாரமேன் ?
சும்மா இரு"மெனச் சொல்லித் திரிவார்.
இப்படிச் சும்மா இருப்பவ ராலே
தொண்டினை வெறுக்கும் சோம்பற் கூட்டம்
பெருத்தது ; நாட்டின் பெருமை குறைந்ததே ;
மண்ணாசை கொண்ட மாற்றார் நம்மை
அடிமை செய்தார். அந்தோ, துயரம்.....!
உலகக் குழுவினர் உணர்ச்சி ததும்பும்
சொற்பொழி வுடனே சிற்பம் சித்திரம்
பாட்டு நாடகம் பரத நாட்டியம்
நூல்கள் ஆகிய நூறு வகையால்,
வானம் வளைத்த மாநில மெல்லாம்
திருவருள் ஆடும் ஒருபெருங் கோயில் ;
உள்ள மட்டிலும் உலகம் உண்மை.
நமக்கு முன்னும் நமக்குப் பின்னும்
கற்ப கோடி கால மிருக்கும் ;
அழகுச் சோலையாம் பழகிய வுலகம்
அன்பு மலரும் அருட்கனி வளமும்
செழிக்கத் தொண்டு செய்வதே வாழ்வாம்.
என்று நன்றே இயம்பி விளக்குமின்.
மதமும் சாதியும் மனவிவ காரமே ;
அறிவிலி மனமே பிரிவினை என்றே
அழுந்தக் கூறி அகண்ட உலகில்
ஆருயிர் அனைத்தும் ஓர்குலம் எனுமின்.
உலகிற் கெல்லாம் ஒன்றே கடவுள்
உயிரெலாங் கடவுளின் உடலென லாமே,
உயிர்க்குயி ராக வுள்ளசுத் தான்மா
அதனைக் கலந்தால் அறிவொளி யதுவே.

தானே பிறராம் பிறரே தானும் ;
ஆன்ம நேயம் அன்புறக் காணினே.
அமர்க்கள மொழியும் அகந்தை யொழியுமே.
உலகோர்க் கெல்லாம் உலகம் பொதுவே.

மண்வெறி கொண்டு புன்சமர் செய்யும்
அரக்கர் செருக்கை அறுக்கும் வாளிதே—
ஆலய உலகில் ஆன்ம ஒருமை.
கொலைப்போ ரன்று, விலைவாழ் வன்று,
கொள்ளை யன்று, கொடுமைக ளன்று,
பெண்மண் பொன்வெறிப் பிழைகளு மன்றே—
கண்ணியும் வெடியும் பண்ணிக் குவித்து,
நாட்டை நாடு நலியப் போர்செய்
இரத்த வெறியிலை.....இப்புவி வாழ்வின்
குறிக்கோள் இறைவனை அறிந்து கலத்தலே.
எங்கும் பரம்பொருள் இருக்கக் காணலே,
எல்லா ருக்கும் இன்பஞ் செய்தலே ;
என்பதை நீவிர் மன்பதைக் குரைத்து,
வழியைத் துலக்கின், வரும்அறக் குழுவே....

அறவோர் குழு

எல்லா மதமும் எல்லா நூலும்,
பழமையும் புதுமையும் பண்புறப் பயின்று,
நின்று பார்த்து நிலையறி வுடைய
தரும சேனர் தலைமையிற் சென்றுநம்
அறக்குழுத் தொண்டர் அறப்பணி செய்கவே.
அறவோர் கூட்டமே அருளாட் சிக்கு
வலக்கரம் போல வாய்ந்தது வாகும்.
மறவலி யரக்கர் மண்வெறி யாலே,
இவ்வுல கத்தில் இரத்தம் வடிப்பதை
மாற்றி அமைதியைப் போற்றிடச் செல்வீர்.
ஒருவருக் கொருவர் உள்ளன் புடனே
உதவி யாக உலகில் வாழ்வதே
அறமென் றுரைப்பீர் ; ஆசை யாணவம்,
காமம் குரோதம் கடுமனச் சீற்றம்,
ஊன்மது புசித்தல், உழைக்கா துண்ணல்,
பிறரைத் திருடல், பிறர்நா டழித்தல்,
நோய்துயர் பெருக்குந் தீய பழக்கம்,
இத்தகை அதர்மப் பித்துகள் ஒழிந்தே,
தூய வாழ்வும், தூய நினைவும்,

வாய்மையும் அன்பும் வளர்ச்சி பெறவே
மேடை அச்சு, பாடல், நாடகம்,
துண்டுப் பிரசுரம், துகளறு நூல்கள்
ஆகிய வற்ருல் அரும்பணி புரிகவே.
உலகப் பெரியார் உள்ளமும் உரையும்
சீரிய வாழ்வும் செவ்விய தொண்டும்
அருட்பெரும் பாடலும் அகங்கனிந் துருகப்
படித்து விளக்கிப் படிக்கச் செய்மினே !

சுத்தசன் மார்க்க சத்தி வழியை
அரங்கிலும் அச்சிலுந் திறம்பட விளக்கி,
ஊர்தொறும் அறவோர் சீர்பெறப் பழக்கி,
அறவிளக் கேற்றி மறவிரு ளகற்றிப்
பொதுநலம் புரிக புதுயுகம் வரவே.

அறிஞர் குழு

அறிவைப் பரப்பும் அரிய தொண்டர்,
பாரத முனிவர் பண்புறப் பயிற்றிய
ஞான ஜோதி நடத்திடச் சென்றே
கல்வி பரப்புக, கலைகளைப் பரப்புக.
மேற்கும் கிழக்கும் விளங்கும் அறிஞர்
கண்ட ஞானமும் காணும் கலையும்,
புண்ணிய பூமிப் புதல்வருக் கெல்லாம்
கலாநிலை யங்கள் கண்டு புகட்டுக.
நூறுவீட் டிற்கு நூலகம் ஒன்றும்
பள்ளி யொன்றும், பாங்குடன் அமைத்துக்
கல்லா மடமை யில்லா தொழிப்போம்.
பிரம சரியம் பேணுக வாலிபர் ;
கன்னியர் குருகுலங் கண்டுபெண் மணிகள்
கற்றறி வோங்குங் கடமை புரிகவே
எண்ணெழுத் திலக்கியம், மண்விண் ணறிவு,
பௌதிகம் ரசாயனம் பொறிக ளமைத்தல்,
பயிர்த்தொழில் நெசவு பயனுறு கைத்தொழில்
இவற்றையும் புலவர் பயிற்றுக நன்றே.
உழைத்துண் டுடுத்துப் பிழைக்கவும், கற்கவும்
எல்லா ருக்கும் எளிதி னியல்கவே.
திண்ணிய உடலும் நுண்ணிய அறிவும்,
எண்ணிய நல்வினை இயற்றும் திட்பமும்,
வீர தீரமும், வெல்லுந் திறனும்,
செறிந்த வாலிபர் தேசப் பணிசெய

முந்துறச் செய்க முதறி வாளர்.
ஆற்றல் மிகுந்த அரியமா னவரை
அமரகம் ஈரகம் அனுப்பியாங் கறிஞர்
செய்யும் வியன்கலைச் செய்திறன் பெற்று
நமது நாட்டிலே நாட்டுதி வோமே.
தொழிற்கரு விகளும் எழிற்கரு விகளும்,
போர்க்கரு விகளும் வார்த்திவண் செய்ய
வாலிபர் பயின்று ஞாலம் வெல்கவே !
கல்விக் கடலின் எல்லையார் காண்பார் ?
பொதுக்கல் வியுடன் புலமைக் கேற்ற
சிறந்த தொழிலும் திறம்படக் கற்று,
வீடும் நாடும் விளங்கிட நன்றே,
மடமையும் பொல்லா வறுமையும் ஒழியவே,
அன்னியச் சார்பிலா தவரவர் பிழைக்கவே
வேண்டிய கல்வி ஈண்டுநல் குகவே....

அன்புக் குழு

அறமும் அறிவும் அருளும் திருவும்
அன்புடன் விளங்கும் இன்புறு தொண்டர்
அன்புச் சாமியின் அரிய தலைமையில்,
ஊர்ஊர் சென்றே ஒற்றுமை, நேயம்,
உயிர்களுக் கிரக்கம், ஊனுண் ணாமை,
இன்சொல் லாடல் இணக்கம் வணக்கம்,
பரோப காரம், பரிவு முதலிய
அன்பொழுக் கங்களை அடங்கிப் பயிற்றுவீர் !
பசிக்குத் தானியம் பழம்பால் உண்ண,
உலகைப் பயிற்றி ஊன்உண ஒழிப்பீர்.
ஊனுண வொழிந்தால் உயிர்க்கொலை யொழியும் ;
உயிர்கொன் றுண்ணும் ஒருபிழை யொழிந்தால்,
மனிதரை மனிதர் மடிக்கும் போர்வெறி
ஒழிந்து, கருணை பொழிந்து பொலியுமே,
கருணையி னாலே கடவுட் டன்மைகள்
வளரும் ; அதனால் வன்மனங் கொண்ட
அசுரக் குணங்கள் அற்றரு ளோங்குமே.
அருளால் அறிவும், அறிவால் ஒளியும்
உண்மை யின்பமும் ஓங்குத லாமே.
உழைப்புக ளாலே பிழைப்பருள் சாலை,
உயர்தொழிற் சாலை உணவுடை நல்கும்
கைத்தொழிற் சாலை, கால்நடைச் சாலை,

சிவகா ருண்யச் செயல்கள் இனும்பல
நாட்டி யன்பைக் காட்டுக நல்லோர்.

நன்னடைக் குழு

நன்னடைத் தொண்டர் ஞாலந் திருந்த
உத்தம சாதுவின் உயர்வழி பற்றியே
பொதுஜன சமூகம் புண்ணிய வழியில்
இயல்பாய் நடக்கவும், இழிநடை ஒழியவும்,
கலைக ளாலும் கட்டுப் பாடுடன்
வாழ்த லாலும் வாழ்வகை விளக்குமின்.
வீறும் பலமும் மேதையும் வளர்க்கும்
பிரம சரியம் பிழையறக் காக்கும்
வகையைச் சொல்லி, வாலிபர் தமையும்
இல்லறத் தாரையும் நல்லறத் துய்மின்.
ஆசை காட்டி ஆளைக் கெடுக்கும்
வேசைத் தொழிலை வேரோ டொழிமின்.
கற்பொழுக் கத்தைக் காத்தில் லறத்தில்
ஆண்பெண் இருவரும் மாண்புற வாழ
வற்பு றுத்தி வழியைக் காட்டுமின்.
காலை மாலை கடன்முறை செய்யவும்,
உடல்மன மொழியில் உண்மையுந் தூய்மையும்
கடமையிற் கருத்தும் காத்திடச் செய்மின்.
மதியை மயக்கும் மதுவை விலக்கிச்
சூதும் தீதும் வாதும் வழக்கும்
வஞ்சமும் இன்றி நெஞ்சத் துடிப்பை
மதித்து நடக்க மாந்தரைப் பயிற்றுமின்!
காலம் போற்றும் சீலத் துடனே,
நாணுவ நாணிப் பேணுவ பேணி,
கனிந்த மொழியும் கண்ணோட்ட முடன்
பிறர்வருந் தாத பிரியமாம் செயலுடன்
நாக ரிகமாய் நடந்துல கத்தில்,
முரட்டுத் தானவர் வறட்டுச் செருக்கை
ஒழித்துத் திருத்த உயர்நடை காண்மின்....
நடையைப் போன்றே நாடா கும்மே.

இல்லறக் குழு

இல்லற வாழ்வே இப்புவி வாழ்வாம்.
எப்படி இல்லறம் அப்படி நாடாம்.
திவ்விய தாந்திர சித்திகள் பெற்ற
இல்லற யோகிகள் எனப்புகழ் சிறந்த

சிவமங் களரின் சீரிய சொற்படி
இல்லறத் தொண்டர் இருபா லாரும்
இல்லந் தோறும் நல்லறங் காமின்.
பிரம சரியம் பிழையறக் காத்த
கன்னியும் காளையும் காதலித் தொன்றி
உழைத்துப் பிழைக்க ஒருதொழில் போற்றிக்
கற்பைக் காத்தும் காமவே கத்தை
அடக்கி யாண்டு திடக்கருத் துடனே,
மக்களைக் கருதியே மனைவியைக் கூடி
மற்றைக் காலம் மாசற ஒழுகி,
அகமும் புறமும் சுகமுறத் தக்க
தியானமும் நல்ல தேகப் பயிற்சியும்
சிஷ்டா சாரமும் சிறந்த விரதமும்
வள்ளுவர் அறப்பால் வகுத்த வழியே
இழுக்கற் றொழுகும் இயலறு மேன்மையும்
விளக்குமின் ; மனத்தின் விகார மொழிமின்.
பெண்டிர் வாழ்வைப் பேயெனப் படுத்தும்,
அடிமைத் தனமும், கொடிய கைம்மையும்,
வரதட் சிணையும் வழக்கற் றொழிகவே.
நல்ல கல்வி நல்ல கைத்தொழில்,
நல்ல காதல் நல்லுழைப் புடனே
இருவரும் உள்ளே ஒருவராய் விரும்பி,
இல்லம் விளங்க நல்ல மக்களைப்
பெற்றுப் பெருகிச் சுற்றந் தழுவி
வாழும் வகையை வாழ்ந்துகாட் டுமினே....

குலக் குழு

குலத்தை வளர்க்கும் கலையிற் சிறந்த
மணிமா ணிக்கரின் மாண்புறு தலைமையில்,
தாளாண் மையுடன் வேளாண் மையுமுறக்
குலநலங் காக்குங் கொள்கை பயிற்றுவீர்.
தாயுந் தந்தையுந் தனயருஞ் சுற்றமும்
நண்பரும் விருந்தும் அன்புடன் ஒழுகி,
அவரவர் கடமையை அமைவுறச் செய்யவும்,
வீட்டுப் பணிகளை மின்னிடை யாரும்,
வெளிவே லைகளை வீறுகொள் ஆண்களும்,
சரிவரச் செய்து சரிநிக ராக
மனையோர் வாழ்க மங்கலம் பொங்கவே.
அறிவும் செல்வமும் அகமகிழ் வுடனே

அழகுங் கலையும் அன்புந் துலங்க
உடலைப் போற்றும் உயிரென வீட்டை
இன்புறப் போற்றும் இயற்கை யான
நடை முறைகளை நன்றெடுத் தோதுமின்.
தாய்மா ருக்குத் தக்க கல்வியும்,
குழந்தைக் கலையும் அளந்து பயிற்றுமின்.
குழந்தை களுக்குக் குடிக்கப் பாலும்,
எட்டாண்டு வரையில் இனிய கல்வியும்
ஆடலும் பாடலும் அளிக்க வேண்டிய
பாலர் சாலையும் பசுநிலை யங்களும்,
ஊர்தொறும் காண்மின். உழைத்துப் புசிக்க
வேண்டிய தொழில்களை வித்தகர் பயிற்றுமின்.
ஒழுக்கமும் கல்வியும் ஓங்கிச் செழிக்க
கலைக்கோ யில்கள் கட்டி ஊர்தொறும்,
ஐந்துபு லன்களும் இன்புறச் செய்யும்,
பயனுள நாடகம், பரதம், பாட்டு,
கதை புராணம், கவிதை, சிற்பம்,
சித்திரம் ஆகிய சிறந்த கலைகளை
இருபா லார்க்கும் இயல்புறப் பயிற்றுமின்.
தலந்தொறுங் குலநலச் சங்கம் நிறுவி
உலகமுன் னேற்றம், உலகம் போற்ற
நமது முன்னேற்றம், நாடு பயன்பெற
வேண்டிய திருத்தம் ; விவாகம், சடங்கு,
திருநாள் பெருநாள் கருநாள் செய்வகை
பொதுச்சுகா தாரம் பொதுநலத் தொண்டுகள்
போற்றும் வகையெலாம் ஆற்றவும் பயிற்றி
உலகம் வாழக் குலநலங் காமினே !

தொழிற் குழு

கலையுந் தொழிலுங் கணக்கும் அறிந்த
புலவன், உழைப்பிற் சலியாத் திண்மையன்
வீரகர் மாவின் விருப்பப் படியே
தொழிற்குழு செய்க தொண்டுகள் பலவே.
வறுமையே மாந்தரைச் சிறுமை செய்யும்
பெரும்பே யாகும், பேரிட ராகும்.
ஒவ்வொரு கையும் உழைத்துப் புசித்தால்,
செவ்விய தொழில்கள் செயமுற வளர்ந்தால்,
நாட்டுப் பொருளை நாட்டார் துய்த்தால்,
பசும்பொருள் இங்கே பண்டமாய் உதவினால்,

கப்பலும் வணிகமும் கைத்தொழில் வளமும்,
நாடு செழிக்கவே நங்கையி லிருந்தால்,
பணம்புதை யாது பலதொழில் வளர்த்தால்,
தொழிற்பயன் பொதுவுறத் துய்த்தால், உலகில்
வறுமை யிராது வறியரும் எவரே ?
ஜனோப கார சங்கம் நாட்டி
ஊர்தொறும் பிழைப்புற உழைப்பை வகுப்பீர்.
உண்ண வுடுக்க உரிய தொழிலெலாம்
பலர்பய னடையும் பான்மை யுள்ள
கைத்தொழி லாகவே கணித்தல் அழகே....
கஞ்சி வார்ப்பது கைத்தொழி லாகுமே.
கையாற் செய்யக் கட்டி வராத
ஆவிக் கப்பல் ஆகாயக் கப்பல்
ஆயுதம் வாகனம் அச்சுப் பொறிகள்
இவற்றை இயந்திரம் இயற்றலே முறையாம்.
பலர்கை யுறங்கிப் பசிவாட் டாது,
கைத்தொழில் எளிதாய்க் காணுறத் தக்க
இயந்திரங் காணல் இனிதா கும்மே
போட்டியில் லாது பொதுநல வுணர்வுடன்
ஒருவர் இருவர் ஓட்டிப் பலரும்
பழகிப் பயன்பெறும் அழகிய கருவிகள்
மனைதொறும் பயில்க மக்கள் பிழைக்கவே
தையல் யந்திரம், தானியச் சக்கி,
இரும்புக் கலப்பை, இயந்திர ராட்டை,
விசைபெறுந் தறிகள் வீட்டிற் குதவும்
இத்தகைப் பொறிகள் இயற்றலே நலமாம்.
ஆக்கந் தேய்க்கும் அன்னியப் பொருளை
நீக்குக ; சுயத்தொழில் ஊக்குக மாந்தர்.
பணஞ்செய் மாயப் பிணியும் செருக்கும்
பண்ட மாற்றின் பயனால் விலகும்.
நூற்றவர் நூலை மாற்றுக நெல்லாய்.
கள்ளபின் கஞ்சா, காப்பி புகையிலை,
புலாலைப் போன்ற பொல்லாத் தொழில்களைக்
கட்டோ டொழிமின் கருணை வேண்டுவீர்.
உண்டுடுத் திருந்துநன் றூருக் குதவியாய்
வாழ வேண்டிய மங்கலத் தொழில்களைத்
தெருதொறும் வளர்க்கத் திருப்பணி செய்மினோ !
தகுதிக் கேற்ற பகுதியில் உழைத்தே
அனைவரும் உண்ண மனைசெழித் தோங்க

உழைப்பைத் தருதல் உங்கட னுமே !

அரசியற் குழு

ஆண்மையும் வீரமும் அஞ்சா நெஞ்சும்,
வாக்கும், உயர்ந்த நோக்கும் செயலும்,
வீரமும் காரிய வெற்றியும் செறிந்த
பொதுஜன நண்பன் புண்ணிய வீரன்
தருமகேசரி தலைமை தாங்கவே
சித்திமான் வகுத்த திட்டப் படியே,
அரசியற் குழுவார் ஆற்றுக பணியே.
ஒவ்வோர் ஊரும் உலக மாகவே
அரசியற் பணிகள் அமைந்து பொலிகவே !
இசைக்கவி யோகிகள் எழுந்துமுன் சென்றே
பழங்கதைப் பாட்டும் புதுக்கதைப் பாட்டும்,
சரித்திரப் பாட்டும் சமத்துவ சுதந்தர
வீரப் பாட்டும் வீதியி லிசைத்தே
புண்ணிய பூமியின் புகழும் பெருமையும்
இற்றை நிலையும் தெற்றென விளக்கி,
நாட்டன் போங்க நற்பணி புரிகவே
அடுத்தொரு கூட்டம் ஆண்மையும் வீரமும்
உரிமை யுணர்ச்சியும் ஓங்கப் பேசியே,
செய்தித் தாட்கள் செவ்வனே நடத்தித்
தூண்டுக வீரச் சுடரொளித் தொண்டே
மற்றொரு சாரார் மாதரைப் பயிற்றுக.
கல்வியுந் தொழிலும் வல்ல புலவரால்
சுதேசப் பொருளைத் தொண்டெனப் புரிந்து
தேசச் செல்வஞ் செழிப்புறச் செய்கவே.
ஆக்க மழிக்கும் அன்னியர் பொருளை
நீக்கி வாழ ஊக்குக நாட்டை.
அரக்கர்க் கிடந்தரும் அழிசெயல் அனைத்தும்
அன்னிய மோகமும் அடிமைப் புத்தியும்
அறவே யொழியத் திறம்பெறு தீரர்
மற்றக் குழுவுடன் ஒற்றுமை கொண்டே
தேச மெல்லாந் தேவை யளவு
பெற்று வாழப் பெரும்பணி புரிமினே.
வேலை தந்து கூலி யுதவியே
பிச்சை யேந்தும் பிழையைத் தீர்மின்.
சுயமன வுறுதியும் சுயநம் பிக்கையும்,
சுயநல மற்ற பொதுநலத் தொண்டும்,
தியாகமும் ஆத்தும தீரமுங் கொண்டால்,

பிரிவினைக் கட்சிப் பேதமே யின்றி
உரிமை வேண்டி ஒற்றுமை யுற்றால்,
ஆட்சிச் சபைகளை ஆண்மையோ டாண்டால்,
மெல்ல மெல்ல வெல்லுந் திறனும்
விடுதலை யின்பமும் விளங்குத லாமே.
புண்ணிய நாட்டார் புலமையைத் தூண்டி
மேதினி போற்ற மேதா விகளை,
உண்டு பண்ணி உலகெலாம் அனுப்பி,
நாட்டின் மதிப்பை நட்புடன் உயர்த்தினல்,
நமது சொல்லை ஞாலம் மதிக்குமே.
புலவரைப் போற்றிப் புகழ்பெற வாழ்வோம்.
அமைதியாய் இவ்வகை அரும்பணி செய்மினே !
புத்திமா னாகிய சித்திமான் பயிற்றும்
வீரர் செய்வார் விடுதலைக் கிளர்ச்சியே ;
சிகரத் திவிற் சேனைக் கேற்ற
புதுப்புதுக் கருவிகள் போரெனத் துடிக்கும்....
அதனிடை யேநாம் ஆயுத மின்றியே
தியாக வேள்வியின் வேகத் தாலே,
அறத்தை நாட்டி அதர்ம விதிகளைப்
புறக்க ணிப்போம். பொய்மை யெதிர்ப்போம்,
குடிபடை சேர்த்துக் கொடுமையைக் குமைப்போம்.
நடுங்கா நெஞ்சுடன் கடுஞ்சிறை காத்தும்,
துப்பாக்கி முனையிலுந் துணிந்துமெய் புரைத்தும்,
அடிமைப் பான்மை அடியுடன் சாய்ந்து
சுதந்தர வீரராய்ச் சோர்வற நின்று,
ஒத்த விடத்தில் ஒத்துழைப் பீந்தும்
ஒவ்வா விடத்தில் ஒத்துழை யாதும்,
நல்லதைப் போற்றிப் பொல்லதை வீழ்த்தியும்,
வீரத் தியாகிகள் விடுதலை கொணர்வார்.
அசுர பலங்கள் ஆயுதம் எடுத்துச்
சாது சனங்களைச் சண்டைக் கிழுத்துக்
குண்டுக ளெறிந்து கொலைசெயப் புகுந்தால்,
அவர்களை அடக்கநாம் ஆயுத வீரரைப்
பயிற்றிட வேண்டும். பாரினில் இன்று
வாணிகத் தொழிலுடன் இராணுவ பலமும்
ஐக்கிய பலமும் அறிவுத் திறனும்
வளர்க்க வேண்டும். வலிய ராக்ஷஸர்
சாந்தக் கிளர்ச்சியால், சமதரு மத்தை
அறிந்திட ரின்றி அடங்கிப் போனல்,

இரத்தப் போரிலே ; இருவரும் அன்புடன்
குலவி நல்ல குடியர சாக்குவோம் ....
இவ்வா றனைத்திலும் இகலே வென்று,
சுதந்தரம் பொலிய நிதந்திருத் தொண்டர்
சுறுசுறுப்பாகத் தொண்டுகள் செய்கவே.

யோகக் குழு

எல்லாச் செயல்களும் எல்லாப் பயன்களும்.
யோக சக்தியால் ஒருங்கே தழைக்குமே;
ஆருயிர் வாழ்வெலாம் அகண்டசுத் தான்ம
யோகமாக் குதலே உயர்கட னமே.
அதற்கே நாமும் அருந்தவஞ் செய்தோம்.
அதற்கே சித்தர்கள் ஆயிரந் தேர்ந்தோம்.
யோக தீரன் உம்மை நடத்தச்
செல்வீர் முன்னே சேமம் பெருகவே.
அன்பாம் ஆன்மா இன்ப மயமாம் ;
உள்ளும் உலகும் தெள்ளிதின் அதனை
உணர்ந்து வாழ்லே யோக சித்தியாம்.
சித்தி நல்கும் சக்தியி னலே,
உலகான்ம நேய ஒருமையி லோங்கும்,
அஷ்டாங் கத்தால் அறிவும் உருவும்,
அருளும் ஆற்றலும் ஆனந்த மாமே.
குண்டலிக் கனலை மண்டையி லேற்றி,
வெண்டா மரையில் வீற்றிருந் தாலே,
சுத்தா னந்தச் சுடராம் உயிரே ;
சிற்சக்தி யென்னும் தேன்செழிக் கும்மே.
யோக சித்தியின் உள்ளுரை கண்டு,
சாதனஞ் செய்து, சகலரும் வாழ்வைச்
சுத்தான்ம யோகச் சுடரொளி யாக்கினல்,
மனித சமூகமே மாறுதல் பெறுமே.
பூரணம் பெற்ற புனிதன் ஒருவனல்,
கணக்கிலர் ஆன்மக் கனல்பெறு வாரே.
மனத்தை யடக்கி மாசிலாத் தியான
சாதனத் தாலே சக்தி பெறலாம்.
அத்தகைச் சக்தி யடைந்த நல்லோர்
எங்குந் தம்மையே இயல்புறக் காண்பார்.
அன்பும் நேயமும் அவரால் ஆமே.
அமைதியும் இன்பமும் அவரால் வருமே.
மனேமய மான மானிடம் மாறி,

விஞ்ஞா னத்தில் வியவொளி கண்டே,
ஆனந் தத்தில் அமுதம் பருகியே,
துரியந் தன்னிற் பரசிவ போகம்
புசித்துச் சிவமயம் பொலிந்திடும் போகம்
சந்தி யளிக்கும் சுத்த யோகமே.
அத்தகை யோக சித்தர்காள், இனிநீர்
தேசந் தேசமாய்த் திரிந்துல கிற்குச்
சன்மார்க் கமுடன் சாதன வாழ்வும்,
சொல்லிப் பயிற்றிச் சுத்தான்ம ஒளியைத்
தூண்டுமின் ; எங்கும் சுத்தசங் கத்தை
நாட்டிநல் லோரைக் கூட்டித் தினமும்,
உடலூறு திக்கே ஹடசா தனமும்,
உள்ளூறு திக்கே தெள்ளிய தியானமும்,
சித்தசுத் திக்குப் பத்திவை ராக்யமும்,
இந்திரிய மடங்க இராச யோகமும்,
உபசாந் தந்தரும் ஓம்சுத்த சக்தி
ஓபசா தனமும் தத்வோப தேசமும்
சுத்த முக்த சமத்துவ வாழ்வும்,
அருட்பணி யாகிய கரும யோகமும்,
பாரத சக்தி பரவும் கலேயும்
பக்குவ மறிந்து பயிற்றுக நன்றே....
எல்லா நலமும் வல்லது யோகம்.
மூச்சைப் போலவே முதுநில மாந்தர்,
யோகத் திறைவனை உட்கலந் துயிர்க்க
வேண்டும் பணிகளை, விஞ்ஞா னத்தால்,
ஆண்டவன் அருளால், அமைதியாய்ச் செய்மின்,
அவனரு ளாலே புவிநல மாமே.....

சித்தர் குழு

சுத்த சங்கம் துலக்கிய கொள்கையைச்
சித்தர் உருச்செய் திறனைக் கேளீர் :—
ஊர்தொறும் ஊர்தொறும் யோகிகள் கூடிச்
சுத்த சங்கம் வைத்து வளர்ப்பார்.
அன்பர் நாட்டும் அருளால யத்தைச்
சுற்றிலும் சங்கம் வெற்றியோ டமையும்.
அருளால யத்தில் ஆண்டவன் ஒருவனை
தியானத் தாலும் திருப்பாட் டாலும்,
அன்பர் அனைவரும் இன்புறக் கலப்பார்.
அருட்பேச் சருட்பாட் டருட்சா தனமே
அருட்கோ யிலிலே அருளுற நடக்கும்.

வாய்மனங் கடந்த தூயவ னுக்கே
தியானப் பூசனை தினந்தின மாமே.
சக்தி பொழியும் சுத்த நிலையம்
இதுவே ; சித்தர் பொதுவீ டாகும்.
கோயிலைச் சுற்றிக் கொழுங்கனிச் சோலையாம் ;
கனிகளை யுண்டு கடுந்தவம் புரியும்
மாதவர் வாழும் வீதியங் காகும்.
சக்தி யளித்தலும் சாத்திரங் கோத்தலும்,
யோகம் பயிற்றலும் உயர்பொரு ளுரையும்
மாதவர் செய்யும் மாப்பெருங் கடமையாம்.
பொழிலைச் சூழ்ந்து புலவர் வாழும்
கலைநிலை யங்களும் கல்விச் சாலையும்
அறநிலை யங்களும், அணியுறக் காணுமே.
அனைத்தையு நடத்துவோர் அறவோர் ஆவ
கல்வி, கைத்தொழில், கமத்தொழில் நெசவு,
வைத்தியம் முதலிய வகைவகைப் பணிகளை
அணி வகுப்பவர் ஐம்பதாம் அறவோர்.
அச்சுக் கூடமும், அருங்கலை யிதழும்
நடத்தி அறிவை நாட்டிற் பரப்புவார்.
இருபா லார்க்கும் குருகுலக் கல்வியும்
அறிஞர் குழுவால் அளிப்பவர் இவரே.
பிரம சரியம் பேணிய வாலிபர்
தக்க கல்வியும் சக்தியும் பெற்றபின்,
விரவிய தொழிலும் வீரப் பயிற்சியும்
பெற்றிரண் டாண்டுகள் பிரியமாய்ப் பழகி
இல்லறக் குழுவிலும் இன்குலக் குழுவிலும்
தொண்டு செய்தபின் சுத்த சித்தரின்
ஆசி யுடனே மாசிலா மனையறம்
காப்பார் ; ஆண்பெண் கலந்து வாழ்வதும்
நற்பணி செய்யும் நாற்கரம் போலுமே.
நான்கு மக்களை நலமுறப் பெற்றதும்
உடன்பிறந் தார்போல் உள்ளன் புடனே
பிரம சரிய விரதம் பூண்டு
பொதுநலம் புரிந்து புகழுற வாழ்வரே.
இல்லற வீதியின் எல்லையைத் தாண்டிச்
சங்கம் வேண்டும் சகல தொழில்களும்
கலைமன் றங்களும் நிலைபெற் றோங்குமே ;
தொழில்வட் டத்தைத் துருவிச் சென்றபின்,
ஊர்ச்சுகா தாரம் ஊங்குறக் காக்கும்

ஊழியர் வட்டம் ; மேழிச் செல்வர்
உயிரைக் காக்கும் பயிரைக் காத்து
வாழும் விதிகள் வளப்புறக் காணுமே.
சித்தர் மாதவர் சிலர் அறவோர்,
புலவர் தொண்டர் நிலவும் அனைவரும்
ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
என்ற உணர்ச்சியில் ஏக ரசமாய்,
அருளா லயத்தில் அன்புசெய் வாரே.
சுத்த சங்கச் சூரியக் கதிரே
அனைவரும் ஆவர். அருளும் கலையும்
தொண்டுந் துறவும் கொண்டு செழிக்கும்
சுத்தசங் கத்தைத் துலக்கிப் பணிசெயும்
சித்தர் முதலிற் சித்தி நகரிலே
சங்கம் நாட்டிச் சாதனம் வளர்ப்பார்.
அதன்செய லாளன் அமர சித்தனே.
அதன்கிளை யாகவே அமைதியாய்ப் பலவூர்
சுத்த நிலையமாம் தொண்டுகள் வளரும்....
பன்னிரு வகையாய்ப் பகுத்த பணிக்கும்
அறிவுந் தொழிலும் பெருகிப் பரவவும்,
சாத்திரஞ் செய்து தகுமுறை தரவும்,
தொண்டினுக் கேற்ற தொண்டரைப் பயிற்றவும்,
பொருள் வளம் பெருக்கவும் பொதுநல மூக்கவும்,
காலம் பார்த்துக் கட்டளை யிடவும்
நாட்டிற் சங்கம் நாட்டி யுழைக்கவும்,
உலகிற் கெல்லாம் உண்மையை விளக்கவும்,
நாட்டிற் கேற்ற நலமுறு தொண்டரைப்
பயிற்றி யுலகெலாம் பணிசெய் விக்கவும்,
சக்தியும் யானும், முத்தி முனிவரும்
சிரிய தாயும், சித்தி மானும்
அயரா துழைப்போம்....ஆண்டவன் அருளால்.
பன்னிரு வகையிலும் பயின்ற தொண்டர்
சீகர னுடனே செல்க சிலபேர்.
எந்தைக் குதவியாய் ஏகுக சிலபேர்.
தானவம் வளரும் சன்மார்க்க சங்கம்,
அரக்கரை அடக்கி அருளாட்சி நாட்டவே
ஆனந்த விஜயனும் அறவோர் நூறும்
செல்க சத்தியம் வெல்கநா மின்று
தியானத் தாழ்ந்து திருவருள் பெற்று,
சுபகீ தமுடன் சுறுசுறுப் பாகப்

பாரத முனியும் பழம்பெரு சாந்தனும்,
சித்தி மானும், திருமிகு போகனும்
முன்னே தொண்டுகள் முயன்ற பெரியார்
வரலா றுகளை வளம்பெறக் காட்டி
ஊக்கிடச் செல்வோம் உலகப் பணிக்கே !
எல்லாருக்கும் இன்பமோங் குகவே....
சுத்த னிவ்வகை சொன்னதும் சங்கம்—
பன்னிரு வகைப்பணி பணிவுறச் செய்தே
யோகத் தாலும் தியாகத் தாலும்,
அருளாட் சியினை அடியார் நாட்டுவோம்...
சுத்தனும் சங்கமும் சுத்த தருமமும்
போற்றி ! யென்று புகுந்தனர் உளமே !

10. மஹாத்ம விஜயப் படலம்

திருவருள் பொலிய ஓங்கும் திவ்விய சுத்த சங்கம்,
குருவருள் குறித்த சேவை கொள்கையின் இயற்ற வேண்டிப்
பெருமகிழ் வுடனே நிற்கப் பெரியவன் பரத யோகி
பொருளுடன் ஆசி கூறிப் புகன்றனன் புனித வாயான்.

பரத முனி

"அகவிருள் போக்கி, ஆத்ம சக்தியின் ஆக்கத் தாலே
சகவிருள் போக்கச் செல்லும் சமரஸ வீரச் செல்வீர்,
பகலொளி போன்ற தூயன் பண்புள பணியைச் செய்யத்
தகவுறு காந்தி போலச் சத்தியக் கனலைத் தாங்கீர்.

ஒவ்விய மனத்தராகி, ஒவ்விய செயலைத் தேர்ந்து,
செவ்விய பயிற்சி யாலே திறம்பல பெற்ற நல்லீர்,
துவ்விய காந்தி போலத் தொண்டுகள் பரவி, யிந்தத்
திவ்வியப் புண்ய பூமி விழித்தெழச் செய்வீர்" என்றான்.

தொண்டர்

நீடுறு தவத்தி னாலே நிலவுறு பரதன் சொல்லைப்
பீடுறு தொண்டர் கேட்டுப் பெரியவ, பெரிய சான்றோன்,
ஈடறுங் காந்தி காதை எங்களுக் கியம்பக் கேட்டால்,
நாடுறு வினைக்கு நல்ல ஊக்கத்தை நல்கு மன்றே.

புண்ணியத் தொண்டர் சொல்லப் புனிதனும் ஆமோதிக்கப்
பண்ணவன் பரதன் ஆங்கே பழுதறு தமிழி னாலே,
கண்ணெலாங் கருணையாகக் கையெல்லாம் சேவை யாக
மண்ணெலாம்போற்றவாழுமஹாத்மனின்சரிதைசொன்னான்.

மஹாத்மா விஜயம்

சத்தியம் உள்ள மட்டும், தருமமே வெல்லு மட்டும்,
உத்தமர் பொறுமை யாலே உயிர் நலம் உயரு மட்டும்,
வித்தக பரத நாட்டின் புண்ணியம் விளங்கு மட்டும்,
இத்தலம் உள்ள மட்டும் இலகுக மஹாத்மா காந்தி.

சாந்தமே கனிந்த வீரன், சத்தியாக் கிரக தீரன்,
காந்தமே போல மாந்தர் கருத்தினைக் கவர்ந்த நல்லோன்,
மாந்தரை வாய்மை யாலே மாசறச் செய்த வள்ளல்,
காந்தியென் றுலகு போற்றுங் கருணையங் கண்ணன் றானே.

திறங்கொண்ட ராம நாம ஜெபத்துடன் சேவை செய்யும்
அறங்கொண்ட தியாக மூர்த்தி அஹிம்ஸையே விரத மாக
மறங்கொண்ட மிருக சக்தி வலிவிழந் தொடுங்கத் தீதைப்
புறங்கண்ட மெய்யன், செய்யன், பொறுமையிற் பூமி போன்றான்.

அன்னிய மாயத்தாலும் அஞ்சிடு மடமை யாலும்,
தன்னலச் சூழ்ச்சி யாலும், சாதிம தாபி மானம்
பின்னிய வலைக ளாலும், பிறபல தீமை யாலும்,
மன்னுலக கடைந்த துன்பம் மாறிட வழிசெய் தானே.

இத்தகைக் காந்தி, எங்கள் இந்தியா செய்த வத்தால்,
கத்திய வார்போர் பந்தர் கரமசந் திரனா ருக்கும்
புத்திரி பாய்க்கும் செல்வப் புதல்வனாய் வந்து, நல்ல
பத்தியும் கருணை யன்பும் பழுத்திட வளர்ந்தா னம்மா ! 40

மன்னவன் சலுகை வேண்டா மந்திரி தந்தை நல்லோன்,
பொன்னணி மினுக்குவேண்டான்போட்டிசெய்புகழும்வேண்டான்
அன்னதா னங்கள் செய்வான், ஹரிபக்தி என்றும் செய்வான்
அன்னவன் மகனைக் கண்டால் அவனைநாம் காண லாமே.

சீரிய கற்புத் தேவி, சீவகா ருண்ய சீலை,
சூரிய விரதங் காக்குந் தூயநல் லன்புச் செல்வி,
காரியத் திறமை மிக்காள், கருணைசெய் யறத்தின் மிக்காள்,
ஆரிய தருமத் திற்கே அணிகல மாகும் அன்னை....

வையக வியல்ப றிந்து வாழ்வகை வாழும் இன்னோர்
செய்தவப் பயனோ, அன்றிச் செகஞ் செய்த தவத்தின் பேறோ,
பொய்யிருள் ஒழிய வந்த புண்ணியச் சுடரைப் போலே,
மெய்யருள் வீசி வந்தான் மேதகு சந்த்ர காந்தி.

பள்ளியிற் படித்த போதும், பகவனை மனதில் வைப்பான்,
உள்ளநெக் குருகி ராம கதைகளை ஓதக் கேட்பான் ;
கள்ளமில் லாத காந்தி, கருணையே யான காந்தி,
பிள்ளையா யிருந்த போதே, பெரியனைக் காட்டி னானே.

"ஆருயிர்க் கருணை பேணி, அஹிம்ஸையே விரத மாகி,
நேரிய வாய்மை காத்து, நெஞ்சினில் உனைநி னைந்து,
பாரினில் அஞ்சி டாமல், என்கடன் பணிந்து செய்து
சீரிய தீர னாகச் செய்பரம் பரனே போற்றி."

தாயுடன் இந்த வாறு சாமியை வணங்கி நாளும்,
தூயநன் மலர் சொரிந்து தொண்டுடன் அன்பு செய்வான்.
வாய்மையும் பரிவும், பெற்றோர் மதிமிகு சொல்லும் போற்றித்
தேயமும் அறமும் வாழச் சிறந்தனன் பிறந்த ஊரில்.

புல்லியர் சேர்க்கையாலே புசித்தொரு தடவை யூனை,
அல்லலுற் றழுங்கி யன்றே அஹிம்ஸையின் விரதம் பூண்டான்;
நல்லரிச் சந்த்ரன் போன்ற நாடகம் கண்டும், அன்பர்
சொல்லிசை கேட்டும் வாழ்வைத்தூயநன் னெறியில்உய்த்தான்.

கற்றறி வோங்கு முன்பே, காதலை யறியு முன்பே,
பெற்றவர் பாசங் கொண்டு பிள்ளைக்குப் பதின்மூன் றாண்டில்,
சிற்றில்செய் தாடு கின்ற சிறுமிகஸ் தூரி தன்னை
நற்றினம் வதுவை செய்தார் நன்மனை யின்ப மோங்க.

பொன்னுடன் மணியைப் போலப் பொருந்திய கற்புச் செல்வி
புன்னகை பொழியும் வாயாள் பொறுமையே வடிவ மானாள்.
அன்னமென்னடையாள், அன்பே அணியென வுடையாள், காந்தி
சொன்னதே வேதம் என்று துணிந்துடன் சென்ற தூயை.

கண்ணுடன் மணியைப் போலக் கருத்துடன் சொல்லும் போல,
விண்ணுடன் காற்றும் போல, மின்சக்தி யிரண்டு போலப்,
பண்ணுடன் பதமும் போலப் பரிசுத்த காந்தி, கொண்ட
பெண்ணுடன்வாழ்ந்தான்வாழ்வின்பேறெலாம்பெற்றநல்லோன்.

ஆங்கிலம் பத்தாண் டிங்கே அமைவுறப் பயின்ற காந்தி,
ஓங்கிய சட்டங் கற்க—உறவினர் தடுத்துங் கேளான்—
வீங்கிய புதிய போக வியன்பல விளங்கு லண்டன்
பாங்குறச் சென்றான் ஆங்கே பாரிஸ்டர் பரிட்சை தேற.

மாசறு மகனைப் பார்த்து"வைணவ ஒழுக்கம் பூண்டாய்
வேசை, கள், ஊனை என்றும் விலக்கிவாழ்; உறுதி சொல்"லென்
றாசையாய்க் கேட்டாள்; சேயும் "அன்னையுன் ஆணை காப்பேன்
தேசமே பெருமை கூறத் திரும்புவேன்" என்று சென்றான்.

பாரிஸ்டர் காந்தி

ஊனும் விஸ்கியும் உவந்திடும் சீமையில் உறைந்தும்,
தேனின் இன்னிய காய்கனி தீஞ்சுவைப் பாலும்,
தான மருந்தியோர் தாவரச் சங்கமும் நாட்டி
தீன ரட்சகன் ஜீவரட் சகனெனத் திகழ்ந்தான்.

ஏசு நாதரும் கண்ணனும் புத்தரும் இயம்பும்
மாசிலாவுப தேசத்தை வாழ்வகை வாழ்ந்தான்.
தேசு லாவிடும் எளிமையின் சிகரத்தில் இருந்தே,
காசி னிக்குமெய் வழியினைக் காட்டிய கதிரோன் !

இருவி காரத்தை அடக்கிய இருடியைப் போன்றான்,
ஒருமை கொண்டுதன் படிப்பிலே உள்ளத்தை யூன்றி,
பெருமை யாகவே பாரிஸ்டர் பட்டமும் பெற்றே,
அருமைத் தாயகம் அடைந்தனன் அலைகடல் கடந்தான்.

பணைந்செ ழித்தபம் பாயினில் பகட்டின்றி வாழ்ந்தே,
இணங்கு தன்றொழில் இயற்றினன் எளியவர் மகிழ ;
பிணங்கு செல்வியின் வக்கிரப் பிலுக்கையும் பொறுத்தான் ;
உணங்கிலான் உயர் உள்ளமும் உழைப்புடன் உகந்தே.

அழி வழக்குகள் ஆடிடான் ஆயிரம் கொடுத்தும் ;
பழியை நாணுவான் ; அசத்தியம் கனவிலும் பகரான் ;
உழையும் ஏழைகட் குறுதுணை யாகநின் றுதவித்
தொழிலைக் காட்டிலுந் தருமமே சுகமெனத் தொடர்ந்தான்.

கல்வி கற்றதுங் கடல்கடந் துற்றதுந் தனக்கே
செல்வந் தேடுதற் கன்றுசு தேசத்தின் சேமம்
பல்கவே ஒரு பணிதனக் குளதெனப் பகர்ந்தான் ;
மெல்ல மெல்லமுன் செலுத்திய விதிவழி விரைந்தான்.

அன்னி யக்கொடுங் கோலுக்கே அடிமையாய் நாடு
பொன்னி ழந்துநற் புகலின்றிப் பொலிவிழந் தழுங்கி,
தன்ன தூனுக்குந் தவித்திடக் கண்டுளந் தளர்ந்தான் ;
மன்னு யிர்களின் இன்னலை மாற்றிட வந்தோன்.

தீர ராகிய திலகர்தா தாமுதற் சிறந்தோர்—
பார தச்சபை நடத்திடும் பண்பையும் பார்த்தான்.
ஈர நெஞ்சினன் இந்திய வேள்விக்கே தன்னைத்
தாரை வார்த்திடுந் தருணமும் வருமெனத் தழைத்தான்.

அம்பொன் மல்குதென் னுப்பரிக் காவிலோர் முஸல்மான்,
தன்பெ ரும்வழக் காடிடத் தயவுசெய் கெனவே—
அன்பு வள்ளலுந் தருமமே யழைத்திடச் சென்றான்—
துன்ப முற்றிடுஞ் சுதந்தரத் திருவழி துலக்க.

தென்னுப்பரிக்காவில் காந்தி

வந்த வேலையை டர்பன்மா வழக்குமன் றத்தில்
முந்து நன்முறை முடித்துத் தன் முயற்சியி னாலே
சொந்த மாந்தொழில் செழித்திடத் தொடர்ந்திடும் எல்லை,
இந்தியர் படும் இன்னலை எதிரிலே கண்டான்...

சட்டை தொப்பிகள் அற்றவர் தம்மையே
மட்டம் என்று மதித்திடும் வெள்ளையர்,
சட்ட மிட்டனர் தன்தலைப் பாகைக்கும் ;
வட்ட மிட்டனர் வாழு மிடத்திற்கும்.

வண்டி யேறவும் வம்புத் தடைபல ;
உண்டி கொள்ளவும், ஊரில் நடக்கவும்,
கண்டிப் பான கறுப்புத் தடைகளைக்
கண்டு கண்டு கடிந்தனன் காந்தியே.

தீரன் ஓர்பகல் திரான்சுவால் ஏகுழி,
பேர கந்தையிற் பேசியோர் வெள்ளையன்
"யார டாகறுப் பன்"எனத் தூற்றியே
கோர மாகக்கை கொண்டு புடைத்தனன்.

வெவ்வ நீதிகள் வீதியிற் கண்டெங்கும்
திவ்வி யப்பொறை தேறிய காந்தியும்,
ஒவ்வ றுங்கொடுஞ் சட்டம் உடைக்கவே
செவ்வை யாகக் கிளர்ச்சிகள் செய்தனன்.

தனி யகந்தையும் தன்னலச் சூழ்ச்சியும்
எனது சாதி யினமெனும் வாதமும்
மனிதனை மனிதன் மதி யாதுசெய்
சினமும் வெய்ய செருக்கும் வெறுத்தனன்.

இங்கு வெள்ளை யினத்தவர் மேவியே,
பொங்கு செல்வம் பொலியும் பொழுதெல்லாம்
தங்க வைரச் சுரங்கத்தில் தன்னவர்
மங்கி வாடி மடிவதைக் காட்டினன்.

பசையுண் டென்று பலநயம் பேசியே,
வசஞ்செய் திந்திய மக்களை வாட்டிய
கசையடியுங் கடுந்துயர் வேலையும்,
பசி முகமும் பரிவுடன் கண்டனன்.

நெற்றி வேர்வை நிலத்தினிற் சொட்டவே,
உற்று வேலைசெய் ஒப்பந்தக் கூலியைக்
கற்ற றிந்துங் கருணையில் லாதவர்
வற்ற டித்துயிர் வாட்டிடக் கண்டனன்.

புழுதி மேவிய பொட்டலை வேர்த்திட
உழுது நட்டுரம் இட்டுழைத் தோங்கவே
செழுமை செய்த திருத்தொழி லாளரும்
அழுத கண்ணீர் அகநெகக் கண்டனன்.

இடை முறிந்திடும் இன்னலைத் தாங்கியே
கடமை செய்யும் கதியறும் ஏழையைத்
தடைகள் ஆயிரந் தாழ்த்தி மிதித்திடும்
கொடுமை கண்டு கொடியரைக் கண்டித்தான்.

பால் கறந்தும் பசுவைப் புசிப்பவர்,
தோல் கறுப்பெனத் தூற்றிநம் ஆட்களை
கூலி மக்கள் உழைப்பிற் கொழுத்திடும்
கேலி செய்திடும் கேட்டினைக் கண்டித்தான்.

உதிரம் ஈந்துழை ஏழைகள் 'உம்' என்றால்
அதிருஞ் சாட்டை ! அடிமை விலங்கினை
எதிர் முறுக்கின் எமபுர மேகதி ;
கதியி லார்கதி கண்டு கலங்கினன்—

ஏடு கற்கவும் ஏழைக் கிடமில்லை;
வீடு கட்டவும் வீதித் தடைகளே.
ஆடு மாடெனவே யடை பட்டிடும்
பாடு பட்டவர் பங்கமென் சொல்லுவோம் ...!

ஈங்குன் சேரியென் றெல்லையை நாட்டுவார் ;
தாங்கொ ணாத தலைவரி வாங்குவார் ;
ஆங் கெழுத்தடை யாளமும் வாங்குவார் ;
ஏங்க மானம் இழிவுசெய் வார்களே.

திரு மணத்திற்கும் திட்டமும் சட்டமும்
வருகை போகைக்கும் வன்மைக் கெடுபிடி ;
ஒருவ ருக்கும் உரிமையாய் வாழ்ந்திடும்
பெருமை யில்லை அடிமைப் பிடிப்பிலே.

கடி யரவினும் காட்டுப் புலியினும்
கொடிய நோயினுங் கொள்ளைப் படையினும்,
அடிமைத் தாதராய், அன்னியர் இன்னலிற்
படிதல் ஆன்மப் படுகொலை யாகுமே.

ஆடு மாடினும் ஆறறி மக்களைக்
கேடு செய்திடுங் கேவலச் சட்டத்தைக்
கூடி நின்று குமைத்திடக் காந்தியும்
மேடை யச்சில் விளம்பரஞ் செய்தனன்.

உழைத்திந் நாட்டை உருப்படி யாக்கியே
செழிக்க வைத்த செழுந்தொழி லாளரை
அழிக்கும் பேயெனும் ஆசியச் சட்டத்தைப்
பழிக்கு மெந்தப் பழுதுறு நாடுமே.

வேலை செய்து விதைப் படிதரும்
கூலி வாங்கிக் குடித்தனஞ் செய்குவார் ;
ஓல மிட்டழ, வாழும் உரிமையைக்
கோலும் சட்டமுங் கொண்டு பறிப்பதோ ?

பட்டி மாடெனப் பாடு படுத்திடும்
கெட்ட சட்டங் கெடக்கிளர்ந் தன்பர்கள்
"எட்டுத் திக்கும் எதிர்த்துநிற்போ" மென்றுன் ;
சுட்டி டினுஞ் சுதந்தரஞ் சாகுமோ ?

வாய்மை சொல்லி வருந்துயர் தாங்குவான் ;
தீமை வீழ்ந்திடத் தீங்கறு போர்செய்தான் ;
சீமை சென்றுந் தெளிவுறப் பேசினன் ;
பூமி யெங்கும் புகழ்பணி போற்றினன் .

காந்தி சொல்லைக் கருத்துறக் கேட்டதும்,
சாந்த மாகிய சத்திய வீரர்கள்,
மாந்தர் மாண்பை மதித்து விளக்கிடக்
போந்தனர் பொறு மைச்சமர் போற்றியே.

"நாடு விட்டு, நலம்புரி மக்களின்
வீடு விட்டிந்த வேகு நிலத்திலே,
காடு வெட்டிக் கரும்பு விளைத்தவர்
பாடு பட்ட பலனிக் கொடுமையோ ? 220

துலங்கும் ஆன்ம சுதந்தர மானிடர்
விலங்கு போல, மிடியிருள் அச்சத்திற்
கலங்கி யிங்குக் கவலைப் படுவதோ,
நலங் கிளர்ந்திட நாங்கள் கிளர்ந்தனம்.

அரிய மானிடர் அன்பினில் வாழ்ந்திடும்
உரிமை நாட்டிநல் உண்மையை நாட்டுவோம் ;
எரி வெடியும் சிறையும் இடும்பையும்
வரினும் எங்கள் உறுதியை மாய்க்குமோ ?"

என்று கூறி எழுந்தனர் ஆசியர்,
வன்ற வத்தலை வன்சொல் வணங்கியே,
ஒன்று பட்டுத்தம் உண்மை யுரிமையை
வென்று நாட்ட விரைந்து கிளர்ந்தனர்.

"கறுத்த கூலிகள் காந்திக் கிணங்கியே,
மறுத்தெஞ் சட்டத்தை வாயுந் திறப்பதோ ?
வெறுத்த கூலி விநோதப் படைகளை
ஒறுத்த டக்கிடு வோ"மென வெள்ளையர்,

குறைசொல் வாரைக் கொடுமைசெய் தேயி நட்
சிறையி லிட்டனர் ; சீறிப் புடைத்தனர் ;
மறை படுத்திடும் பாரெங்கும் இச்செயல்
நிறச் செருக்கினை நிலை யுரைத்ததால்.

மூலர் இன்னவன் என்று முனிந்தெதிர்
கூலி வேந்தைக் கொடுஞ்சிறை யிட்டனர்.
சால வுங்கடுஞ் சங்க மாகிய
வேலை தந்து வெறுப்புடன் வாட்டுனர்.

தொண்டர் சூழத் துணிந்த மகாத்துமன்,
எண்டி சையும் எதிர்ப்பினைத் தாண்டியே,
கண்ட னத்தைக் கனலுறச் செய்தனன் ;
தண்ட னைகளைத் தாங்கினன் சாந்தமாய்.

அடுத்த யுத்தங் கலையிலை யாகப்போர்
தொடுத்த சாந்த சுதந்தர வீரரை,
அடைத் தடைத்துவிட் டேயலுத் தச்சமர்
முடித்தி டவும் முனைந்தனர் வெள்ளையர்.

கட்டி ரும்பும், கடுஞ்சிறை வாசமும்,
சுட்டு வீழ்த்தும் துபாக்கியும் அஞ்சிலார்.
வெட்டு வாளையும் விஞ்சிய வீரரை
எட்டுத் திக்கும் இசைத்தன போற்றியே.

விடப் பொறுமைகொள் வெய்ய பகைவரோ
நடப்ப தற்கும் தடைகளை நாட்டினர் ;
சுடப்ப டினும் சுதந்தரச் சாவென்றே
திடப் பொறுமைகொள் தீரன் எதிர்த்தனன்.

கத்தி யின்றிக் கடுஞ்சொலு மின்றியே,
சுத்த வீரத் துணிவொ டநீதியை
எத்தி சையும் எதிர்த்திடச் சாந்தமாய்ச்
சத்தி யாக்கிர கந்தனைச் சாதித்தான்.

உண்மை யான உறுதிகொள் உள்ளமும்
திண்மை யான தியாகப் பொறுமையும்,
கண்மை யான கருணையுங் கொண்டவர்,
ஒண்மை யான உரிமை பெறுவரே.

கொலையினுங் கொடிதாம் அடிமைசெய் கொடுமை,
    கோபமாம் கொள்ளியின் கொடுமை,
தலைவரிக் கொடுமை, தனிநிறச் செருக்காம்
    சட்டதிட் டங்களின் கொடுமை,

விலைசெயுங் கொடுமை, வேற்றுமைக் கொடுமை
விநோதமாங் கொடுமைகள் பலவும்
அலைகடல் கடந்தும் உலகினுக் குரைத்தான்
ஆத்மசஞ் சீவியை அறிந்தான்.

தொடங்கிய பணியைத் தொடர்ந்திட மீண்டுந்
துணிந்துதன் மனைமக்க ளுடனே
திடந்தரு காந்தி திரைகடல் கடந்தே
திரும்பிய செய்தியைக் கேட்டே,
அடிமிதி கொல்லென் றன்னியப் பகைவர்
ஆத்திரக் கூச்சலிட் டணுகித்
தடதட வென்று கற்களை யெறிந்து,
தடியினைச் சுழற்றியும் புடைத்தார்.

அந்தகோ நன்மை யதனையே கருதும்
அஞ்சறும் அன்பருட் பெருமான்,
சிந்திய குருதி சிலுவையில் கிறிஸ்து
சிந்திய குருதியே போலும் ;
வந்தது வரட்டும் வாய்மையே வெல்லும்
வாழுவேன் அதற்கெனக் காந்தி
சிந்தனை செய்து தீயவர் செயலைச்
சினத்தலு மின்றியாங் கிருந்தான்.

அத்ததி யாங்கே அந்நகர் காப்பான்
அலெக்கிசாந் திரன்அரு மனைவி,
உத்தமன் காந்திக் குய்வினை யளித்தாள்
உருமறைத் தவனைக்கைக் குடையால்,
பத்திர மாகத் தன்மனை சேர்த்துப்
பதியிடம் பாதுகாப் பீந்தாள்.
வித்தகன் அவனும் வேடத்தை மாற்றி
விமலனை வீடுசேர்த் தானே.

வன்மனப் பகைவர் வாளினைச் சுழற்றி
வந்தனர் பேய்க்குர லெடுத்தே
அன்னவர் மீது வழக்கினைத் தொடர்வீர்
அக்கணம் எனஅலெக் சாந்தர் ;
"இன்னலுக் கின்னல் இயற்றிடக் கருதேன்,
என்னவர் அன்னவர்" என்றே
புன்னகை புரிந்தான் பொறுமையி னாலே
பூமியிற் பெரியனாய்ப் பொலிந்தான்.

வந்தது கொடிய பேயெனப் போயர்
வன்சமர் குண்டுகள் வீசி ;
அந்நவெம் போரில் அடிபட்டார்க் கெல்லாம்,
ஆபத்தில் அன்னைபோல் உதவி,
இந்தியச் சிங்கம் எனும் பட்டம் பெற்றான்,
இந்தியக் கருத்தெனும் இதழால்,
சொந்தநாட் டாரின் சுதந்தரத் திற்கே
சோர்வறத் தொண்டுகள் தொடர்ந்தான்.

தன்னுடல் பொருளும் ஆவியும் உலகின்
சத்தியப் பணிக்கெனத் தந்தோன்,
தன்மனை தனையும் சகோதரி யாகக்
கருதியே தன்புலன் அடக்கி,
உன்னத பிரம சரியமே பூண்டான்
உண்மை வாழ் வகையினை விளக்க
இன்னிய நூறு ஏகரா வாங்கி
எழுப்பினன் எழில்பெறு நிலையம்.

உத்தமர் டால்ஸ்டாய் ரஸ்கின் உரைகளைப் பருகி நின்று,
சத்திய தியாக வாழ்வைத் தன்மனச் சாட்சி யொப்ப
நித்தியம் பயின்ற காந்தி, நேயரும் பயில வேண்டிப்
புத்தொளி வீசு இன்ற போனிக்ஸா சிரமங் கண்டான்.

பழிசெயும் பேத புத்தி பாழ்பட ஒருமை யோங்கி,
இழிவுசெய் நிறச் செருக்கும் இடர்களும் ஒழிய வேண்டி,
மொழிகளாற் சொன்ன தெல்லாம் செயல்களான் முயன்றுகாட்டி
வழியினைத் துலக்கி, காந்தி வாழ்வகை வாழ்ந்தான் மாதோ.

எளிமையின் சிகர ஜோதி இடம்பத்தை வெறுத்தான், தேவை
யளவறிந்துழைத்தேயுண்டான்,ஆசையாய்க் குவிக்கும்பொன்னைக்
களவென நினைத்தான், கையாற் கதரினை நூற்று நெய்தான்,
உளத்தொடு நடந்தான் என்றும் உலகுக்கே வாழு இன்றான்.

சத்தியச் சோதனைக்கே வாழ்வினைத் தந்த காந்தி,
ஒத்துவாழ்ஒருமைகண்டோன்,ஒழுக்கமேஉயிராய்க்கொண்டோன்,
பத்தியும் பணியும் செய்யும் பண்புடன் பணிவு மிக்கான்,
தொத்துநோய் தீர்ப்பான்; குப்பைத்துடைப்பமும்பிடிப்பானம்மா!

பெட்டக மூளை கொண்ட பெரும்புலி போன்ற மாற்றார்,
வெட்டெனப் பேசி யின்னும் வேதனை செய்ய வெய்ய
சட்டங்கள் விதித்த தெல்லாம் தடையெல்லாந் தகர்க்க வேண்டி
கட்டங்கள் பொறுத்துச் சாந்தக் கனலுடன் எழுந்தான் மாதோ !

நடையுயர் மஹாத்மா காந்தி நல்லநெஞ் சுறுதி கொண்ட
படையுடன் சத்தியப்போர் பயமின்றித் தொடுத்துச் சர்க்கார்
தடைகளை மீறிச் சென்றான், சத்தியாக் கிரக வேகம்
சுடச்சுடத் தியாக தீரஞ் சுடர்விடக் கண்டா னம்மா !

கொதிபகை சுட்ட போதும் கொடுஞ்சிறை யிட்ட போதும்,
விதியையும் எதிர்த்து நின்ற வீரவள் ளியின்பேர் வாழ்க !
துதிமிகு தமிழர் வாழ்க ! துணிந்தநா கப்பன் வாழ்க
அதர்மத்தை எதிர்த்து வெல்லும் அறநெறி யுறவோர் வாழ்க !

ஆந்துரு கோகலே யனைய நல்லவர்
போந்தனர் நிலையினைப் புகுந்து பார்த்தனர் ;
காந்தியின் சக்தியைக் கண்டு போற்றினர்
நேர்ந்ததை விளம்பினர் நீதி யோங்கவே.

வெற்றி

இடுப்பொடிந் திடவு ழைத்தும் ஈச்ச வளாரினாலே,
வடுப்பட வருந்தி நாட்டை வளஞ்செய்த கூலிமக்கள்,
படுதுயர் தனதென் றெண்ணிப் பாரெலாம் அதிச யிக்கக்
கொடுந்துயர்ச் சிறைபொறுத்த குணநிதி காந்தி வாழ்க ! 360

பொல்லது செய்தோ ருக்கும் புன்னகைப் பொறுமை யன்றிச்
சொல்லினுந் தீமை யற்ற சுடர்பெறுஞ் சாந்த தீரன்,
பல்லினை யுடைத்தா னுக்கும் பரிவினைக் காட்டுங் காந்தி
தொல்லுல குள்ள மட்டுந் துலங்குக நலங்க ளோங்க !

மதிமிகு காந்தி செய்த வாய்மைப்போர் தன்னை மெச்சி,
இதமுற ஸ்மட்சின் மூலம் இணங்கிவெண் ணாட்சி யாளர்,
சதிசெயுங் கொடிய சட்டத் தளைகளைத் தளர்த்தி, வெய்ய
விதிகளை மாற்றி யன்றே விடுதலை தந்ததா ரம்மா !

இந்தியாவில்

தன்பணி முடிந்த பின்னர் இந்தியத் தாய் வருந்தும்
துன்பத்தைத் தீர்த்து நல்ல சுதந்தரம் அளிக்க வேண்டி,
அன்பினால் அறப்போர் செய்யும் ஆற்றலைக் கொண்டு வந்தான்;
இன்பமெய் யுரிமை வாழ இன்னலைப் பொறுத்த வீரன் !

பகைவரைப் பகைத்தி டாது பகையினைத் திருத்தும் வள்ளல்,
மிகையினைத் தகையால் வென்று, மேன்மையே செய்யுமேலோன்,
தொகை மிகு படையும் ஆத்ம சக்திமுன் தோற்றொ டுங்கும்
வகையினைக் கண்ட வீர மகாத்துமன் வாழி மாதோ !

இந்திய நிலை

வங்கத்தால் உலகை வென்ற மகாகவி தாகூர் வாழ்த்தச்
சிங்கத்தைப் போன்ற தீரத் திலகமா முனிவர் வாழ்த்த,
தங்கக்கிளி போற் பேசுங் கோகலே சபையில் வாழ்த்த,
மங்கரு புகழை யேந்தி, மகாத்துமன் விளங்கி னானே !

திலகர், லால், பால், கோஷ் செய்த தீவிரக் கிளர்ச்சி யாலே,
தலைநிமிர்ந் தெழுந்த தேசம், தணல்குறைந் துறங்கி, மீண்டும்
நிலைதளர்ந் தினியென் செய்வோம் என்றுள நெக வருந்தி,
மலைவொடு நிற்கக் கண்டு மகாத்மனும் வருந்தி னானே.

தொண்டுசெய் கடமை யொன்றே தொழிலெனக் கொண்ட காந்தி,
வண்டுபோல் நாட்டைச் சுற்றி வாய்மையும், பொறையெ திர்ப்புங்
கொண்டுதி யாகத் தாலே குறையறச் சுதந்த ரத்தைக்
கண்டுநாம் களிப்போம் என்று கலக்கத்தை நீக்கி னானே.

சம்பரான், கைரா சேவை

சம்பரான் குடிகள் வெய்ய சட்டத்தால், வரியால், அந்தோ !
வெம்பினர் அவரைக் காக்கத் தாயென விரைந்து சென்றான் ;
வன்பிணி பஞ்சத் தாலே வருந்திய கைரா மக்கள்
தம்பிணி தீர்த்தான், இந்தத் தயைமிகு சாந்த வள்ளல்.

வறுமையைத் தீர்க்க ராட்டை வழங்கினன் ; மடமை போக
அறநெறிக் கல்வி யீந்தான் ; அருட்பணித் திறனை யூக்கிச்
சிறுமனச் சுயந லத்தைச் சிதறிடச் செய்தான் ; காந்தி
பொறுமையாற் பகையை வென்ற புண்ணிய வீர னானான்.

சபர்மதி

சத்தியாக் கிரகத் தொண்டர் சாதனஞ் செய்ய வேண்டி,
நித்திய சாந்த மோங்குஞ் சபர்மதி நிலையங் கண்டே
உத்தமர் தம்மைக் கூட்டி ஒருகுல மாக்கி ஆத்ம
சக்தியை வளர்த்துத் தேசத் தாய்ப்பணி புரியச் செய்தான்.

சத்தியம் பேசிப் பிரம்ம சரியத்தைப் பேணி, அன்பே
மெத்தவும் வளர்த்தஹிம்ஸை விரதத்தைப் போற்றிச் சொந்தச்
சொத்துரி மையை விடுத்துப் பிறர்பொருள் சுரண்டி டாது,
நித்தியம் தொழில்பு ரிந்து நியமமாய் வாழச் செய்தான்.

அதர்மத்தை அஞ்சி டாமல், அறத்தினால், உண்மை தன்னால்,
எதிர்த்ததை வெல்ல வேண்டும் ; இடம்பத்தை நீக்க வேண்டும்;
கதிர் சுற்றி நூற்று நெய்யும் கதரையே கட்ட வேண்டும் ;
பொதுஜனத் தொண்டு செய்யும் புண்ணிய வாழ்வே வேண்டும்.

சாதிமா மதபே தங்கள் சங்கட மென்ன நீத்துச்
சோதிப ராத்ம நாதன் ஒருவனைத் தொழுதெல் லாரும்,
மேதினிக் குழைக்க வேண்டும் ; விடுதலைக் கிளர்ச்சி வேண்டும் ;
ஓதலின் ஒழுக்கம் வேண்டும் என்றனன் உண்மை யாளன்.

அவ்வழிப் பயின்ற தொண்டர், அன்புடன் தேச மெங்கும்
செவ்வழித் தொண்டு செய்து,செனங்களின் வாழ்த்தைப்பெற்றார்;
ஒவ்வருந் தீர னான உத்தம காந்தி, நாளும்
திவ்விய சேவை செய்து தேசத்தை நடத்தி னானே....

அதிசய சக்தி மேவும் அனிபெசண் டம்மை செய்த
மதிமிகு சுயாட்சிப் போரில், மராட்டிய திலகன் செய்த
சுதந்தரப் போரில், காந்தி தொண்டுகள் செய்தான் ; அன்னான்
இதந்தரும் ஆத்ம சக்தி எழுந்ததோர் நிகழ்ச்சி யாலே.

கெடுதலைக் குமைத்திடக் கிளர்ந்து சாந்தமாய்,
நடுநிலை யறத்தினை நாட்டி, மாந்தர்க்கு
விடுதலை யளித்திட விரதங் கொண்டவன்
படுகொலை யொன்றினைப் பதறக் கேட்டனன் !

விடுதலைக் கிளர்ச்சியின் விதையை மாய்க்கவும்,
அடிமையின் சங்கிலி அழுத்த மாகவும்,
இடியென ரவலட்டுச் சட்டம் எங்குமே
கொடியன செய்திடக் குதித்தெ ழுந்ததால்.

வரிகளைத் தாருங்கள் வாயை மூடுங்கள்.
தெருவினி லைந்துபேர் சேர்ந்து பேசவும்
உரிமையொன் றில்லையென் றுரைக்குந் தீவிதி
பெரியதோர் பேயெனப் பிறந்தெ ழுந்ததே.

கசையடி யடித்துயிர் கலங்கத் தீமைசெய்
வசைமிகுஞ் சட்டத்தை மறுத்துக் காந்தியும்,
இசைமிகு திலகரும் இந்தியா வெங்குந்
திசைதிசை கண்டனஞ் செய்து சுற்றினார்.

சத்தியாக்கிரகம்

முழுச்சு தந்தர மூச்சை, முயற்சியை
அழுத்தி வாயை யடக்குமிச் சட்டத்தை
குழுக்கு ழுவாகக் கூடி யெதிர்த்திட
வழுத்தி னான்ஒரு மங்கல நாளிலே.

கதர ணிந்துகை ராட்டை சுழற்றியே
மதுவி லக்கித்தீண் டாமையை மாற்றுமின் ;
மதம் வகுப்பு வளர்த்திடும் வாதமேன் ?
பொது நலத்தைப் புரிந்திடச் சேர்மினே.

அல்ல லின்றி, அமைதியாய்க் கூடியே
வல்ல வீரர் வழுத்து மறுப்பினைத்
தொல்லை யென்று சுதந்தர காந்தியை
*எல்லை மீறலென் றேயக மிட்டனர்.

புயலினை யடக்கினும் பொங்கும் ஆழியைக்
கயத்தினில் அடக்கினுங் கருத்தின் வேகங்கொள்
சுயசன சுதந்தரந் தூண்டுந் தாகத்தை
அயலவர் அடக்குதல் ஆசை வார்த்தையே.

கேடுறு சட்டத்தைக் கிளர்ந்தெ திர்க்கவே,
நாடுற எழுந்தது, நலிவை நீக்கிட,
வீடொறுஞ் சத்திய விரதம் பூண்டனர் ;
ஈடிலாத் தலைவர்கள் எழுந்து முன்வந்தே.

அச்சமொன் றறியா வீர அகாலியர், பாஞ்சா லத்தில்,
உச்சமாம் உணர்ச்சி கொண்டே ஒற்றுமை யாயெ ழுந்து,
நச்சுறு சட்டந் தன்னை நலித்திடச் சாந்த மாக
மெச்சுறு காந்தி வாக்கை விளம்பியூர் வலங்கள் வந்தார். 460

நாடுகொண் டாடும் ராம நவமியில் அமைதி யாகப்
பாடி 'ஓம் ஹரிராம்' என்றே பக்தர்கள் எழுந்து மாலை,
கூடியே ஜலியன் வாலா தோட்டத்திற் கொள்கை பற்றி,
நீடிய பஜனை யன்று நிகழ்த்தினர் உருக நெஞ்சம்.

"இறைவனே, உலகிற் கெல்லாம் ஏகனே, எம்மைக் காவாய் ;
அறமுயர் நாட்டைக் காவாய் ; அடிமைநோய் தீராய் ; எங்கும்
நிறைபரம் பொருளே, உண்மை நீதியே எமைவ ருத்துங்
குறைதவிர் நிறைவே ! எம்முட் கோயில்கொள் அரசே போற்றி!"

தொண்டரிவ் வாறு கூடித் தோத்திரஞ் செய்யும் போதே ;
அண்டகோ ளங்க ளெல்லாம் அதிர்ந்தன, புகையில் மூடி
விண்டல மிரண்டு, வேக விமானங்கள் 'டாம் டாம்' என்றே
குண்டுகள் பொழிந்த ! கோரக் கொடுமையென் சொல்லுவோமே.

தந்திரச் சூழ்ச்சி யென்னே ! சட்டத்தின் கடுமை யென்னே !
அந்தகோ அந்தகோ இவ் வநீதிக்குச் சொல்லும் உண்டோ !
பந்தத்திற் பரித விக்கும் பட்டினி மக்கள் மீது,
சிந்திய கொடிய குண்டு செய்தவெங் கொலைக ளென்னே !

நீதியே எங்கொ ளிந்தாய் ! நீயுமிக் குண்டிற் கஞ்சிப்
போதியோ அடிமை நாட்டின் புகலிது தானோ ! பஞ்சாப்
வீதிகள் சுடுகா டாக வீடெலாஞ் சிறைக ளாக,
மாதரின் கற்பு மஞ்ச வளர்ந்தது கொடுங்கோ லாட்சி ! 480

---

* பம்பாயை விட்டு வெளி வராமல் அடைத்தனர்

சுடுசுடு வென்றே குண்டு சுடும்வரை சுட்டுத் தீர்த்தார் ;
சுடவினுங் குண்டிங் கில்லை என்றுளஞ் சுருங்கிச் சென்றார் ;
விடுதலை கேட்டார், தேக விடுதலை யாய்விண் சென்றார் ;
படுகொலைக் களத்தைக் காணப் பரிதவித் திரவி சென்றான்.

கைபட்டார், கால்பட் டாரும், கண்பட்டார், புண்பட் டாரும்
மெய்பட்டார் மிதிபட் டாரும், மேனிவிட் டேகி னாரும்,
நைபட்டார் நரம்பற் றாரும், நாளமுங் குடலுங் கக்கிக்
கொய்பட்டார் மானபங்கம் பட்டவர் கொஞ்ச மேயோ ?

பிறந்தநாட் டுரிமை கேட்டுப் பிழையொரு சிறிது மின்றி,
அறந்தனக் காவி யீந்தார் ஆறுநூற் றவரே யாக
உறங்கறு மிராணு வத்தால் உலைந்தழிந் தொடுங்கி னார்எண்
இறந்தவர் இன்ன லுற்றார் ; இரத்தக் கண்ணீரே எங்கும் ! !

குற்றத்தை மூட மூடக் கொலைப்பழி வீறிட் டோதிச்
சுற்றிலும் பரவி இந்த உலகையே சூழ்ந்த தம்மா !
குற்றமில் லாரை ஏனோ குண்டெறிந் திந்தச் சர்க்கார்,
செற்றனர் என்று தூற்றிச் செகமெலாம் எழுந்ததம்மா !

சுட்டுயிர் துடித்த பேர்க்குத் தொண்டுசெய் அன்பர் தம்மைக்
"இட்டவ ராதீர்" என்றார் ; கிளைகளைத் துரத்திச் செற்றார் ;
பட்டவர் தாகத் திற்குப் பச்சைத்தண் ணீருந் தாரார் ;
எட்டிநில் என்றார், காயம் கட்டுதற் கிசைந்த பேரை. 500

இல்லினிற் புகுந்தார் ; எங்கும் இராணுவச் சட்ட மிட்டார்.
தொல்லைகள் செய்தார் ; அந்தோ தோகையர் துகிலு ரித்தார் ;
செல்வரை யிழந்த கண்ணீர் வற்றுமுன், செய்ய பெற்றார்
எல்லையில் இடர்க் கண்ணீரை இருபுறங் கொட்டி னாரே.

மற்குல மலைகள் சாய, மார்பினால் ஊர்ந்து செல்ல
*வற்புறு மாந்தர் நோக, மானமும் பதைப தைக்கச்
சொற்கருந் துயரக் கண்ணீர் சொரிந்தொரு புகலு மின்றி,
இற்குலப் பெண்கள் வாடச் செய்தனர் ஈர மில்லார்.

திரிபுரர், காலர், நீலர், கீசகர் திரும்பி வந்தே,
எரியெழக் கொலைசெய் தாங்கே இருந்தனர் என்று மேலோர்,
பரிவுடன் பதறி நொந்து, பாரெலாம் அறியச் சொல்லி,
உரியநன் னீதி செய்ய உத்தர வாதங் கேட்டார்.

அசைவன அசையா வெல்லாம் அநீதியோ அநீதி யென்னத்
திசைதிசை வான்பி ளக்கத் தீக்கொலைக் கொடுமை பேசி,
வசையுறும் அடிமை வாழ்வை நரகென வாய்விட் டோதித்
தசைதுடித் தெழுந்த தீய தணலெரி தாக்கு மாபோல்.

* *வற்புறுத்தப்பட்ட*

நாட்டடி யார்கள், காந்தி நற்றவத் தலைமை யேந்திக்
கேட்டினுக் கெல்லை தேடக் கிளம்பினர் ஒருங்கு சேர்ந்தே ;
கூட்டங்கள் போட்டார் ; தங்கள் குறைகளை விறிட்டோதி,
நாட்டங்கள் சிவக்க நல்லோர் நாணமும் விறுங் கொண்டார்.

நாடெலாம் பதற வந்து நரர்களைத் துரத்திக் கொன்ற
வேடரை, டயரை, மன்றில் விசாரித்த போது, சற்றும்
வாடுத லின்றிக் "கையிற் குண்டுள வரையிற் சுட்டேன்
நீடுறச் சுட்டேன் சுட்டேன்" என்றனர் நீதி யில்லார்...

நல்லதென் றியம்பிச் சர்க்கார் நரவுடல் வேடருக்குப்
பல்வகைப் பரிசும் வைர வாளுடன் பணமுந் தந்து,
கொல்கொலைக் குற்ற மெல்லாம் குணமென மறைத்தத் தீதைச்
சொல்லலுங் குற்ற மென்றே சுடுவிதி விதித்தா ரம்மா !

சத்தியப் போர்

மாணுறு நாட்டைப் பற்றி மக்களை யடிமை செய்து,
வாணிகச் சந்தை யாக்கி, வளமெலாம் உறிஞ்சிக் கொண்டு
நாணறு சட்டத் தாலே நலித்திடத் துணிந்தார் ஆட்சி
பேணிலோம் என்று தேச பக்தர்கள் பேசி னரே....

சட்டத்தால் அடக்கி வைத்த சாகசச் சருக்கார் ஈந்த
பட்டத்தை எடுத்தெ றிந்து, பாழ்செயும் அடிமை வாழ்வை
நட்டமெத் தனைவந் தாலு நலிப்பதே கடமை யென்று
திட்டமிட் டெழுந்து காந்தி செல்வழி சென்றார் மேலோர்.

நடுநிலை யாளன் காந்தி நல்லதே நினைக்குங் காந்தி,
கடுமொழி சொல்லாக் காந்தி, கங்கணங் கட்டிக் கொண்டே
கெடுதலையொழிப்போம்உண்மைக்கிளர்ச்சியால்மனிதர்க்கெல்லாம்
விடுதலை யளிப்போம் என்றே வீறுடன் முன்வந் தானே.

பாரத சபையை அந்தப் படுகொலைக் களத்தே கூட்டி,
ஆருயிர்க் கநீதி செய்யும் அதர்மத்தைக் கண்டித் தாங்கே,
வீரத்தூண் ஒன்று நாட்டி, விடுதலைக் குறுதி பூண்ட
தீரரைச் சேனை சேர்த்துத் தேசத்தொண் டாற்றி னானே.

காந்தி

சுதேசம் விடுபடத் துடித்திடும் அன்பீர்
ஒத்துழை யாமைத் தத்துவங் கேண்மின் !
பகைசின மின்றிப் பகைவரைத் திருத்தும்
திண்மன வுறுதியும், தியாகமும் துணிவும்,
உண்மை யகிம்சையும் ஒற்றுமைத் திறனும்
இருந்தால், விடுதலை எய்திட லாமே !

அருந்துணை செய்வீர் அமைதியாய்க் கேளீர் !
எண்ணெய் பிரிந்தால் எரிவிளக் கென்னும் ?
தண்ணீ ரின்றித் தாவர மென்னும் ?
மன்னுயிர் பணிய மன்னன் மன்னும் ;
மன்னுயிர் பிணங்கின் மன்னவ னுண்டோ !
நம்மவர் துணையே நாயகர் ஆட்சி ;
நம்மவர் துணைதரச் சம்மத மின்றேல்
அன்னியர் செய்யும் ஆட்சியு மாமோ ?
உலகைப் பகைத்தவன் ஓங்குவ தில்லை.
தன்னுத வியுடன் சாந்த எதிர்ப்பும்
இன்னலைப் பொறுக்கும் இதய சக்தியும்,
அழியா தென்றும் ஆத்ம சக்தியைப்
பொழியும் கடவுள்பாற் பொருந்திய நேயமும்,
கடமையிற் கண்ணுங் கருத்தும் இருந்தால்,
விடுதலை யெய்தும் ; விளங்குற லாமே.
இந்திய நாட்டைச் சொந்தங் காட்டிச்
சந்தை யாக்கும் விந்தை வணிகர்—
இறக்கும் விதேசச் சரக்குகள் வேண்டோம் ;
கறக்கும் பசுவினும் கற்பகத் தருவினும்,
கைராட் டினமே கவலைதீர் மருந் தாம்.
பொன்னினும் சுதேசப் பொருளையே மதிமின்.
பஞ்சை மக்களின் பசியைத் தீர்க்கும்.
வஞ்ச மின்றி வாழ்வகை யாமே.
தேவை யளவே செலவிட் டெஞ்சிய
யாவையுந் தேச சேவைக் கீவீர்.
குடியைக் கெடுக்கும் குடியை ஒழிப்பீர் ;
மறியல் செய்து மதுக்கடை யொழிப்பீர்.
இந்து முஸல்மான் இரானியர் கிறிஸ்துவர்
எந்த வகுப்பின ரேனும் ஓர்குலம்—
பாரதத் தாயின் சீரிய மக்களே,
என்றே கருதி ஒன்றுபட் டோங்குமின்.
ஹரிஜனர் உம்முடன் சரிசம னாக
வாழும் உரிமை வழங்குமின் உடனே
சமரஸம் பேணி அமைதியாய்க் கூடி,
தேசப் பணிக்கே தியாகம் செய்மினோ !
சுதேசத் தொழில்கள், சுதேசக் கல்வி,
சுதேசப் பொருள்கள் சுதேசக் கலைகள்
சுதேச பாஷை, சுதேச உணர்ச்சி
சுதேச உணவுடை சுகமுறப் போற்றுமின்.

அதிகார வர்க்கம் அடிக்கினும் சிறையில்
அடைத்து வருத்தினும் அல்லலே யெல்லாம்
தவமெனத் தாங்கித் தளரா திருமினே !
அணுவெடி தாக்கினும் அழியா தான்மா
சத்தியம் ஆத்தும சக்தி அஹிம்ஸை
இவையே நலமாம் ! இன்றே பயில்வீர்.....
வந்தே மாதரம் வந்தே மாதரம் !
என்று மகாத்மன் இயம்பிடக் கேட்டார்
ஒன்று சேர்ந்தார் ; உடன்முன் சென்றார்.....
தமிழகந் தனிலிச் சத்தியாக் கிரகம்
உருவாய், நாடெலாம் உலாவிய தறிவாம்.
செல்வத் தியாகி சித்த ரஞ்சனர்,
மோதிலால், ஜவஹர், முதியலா லாஜி,
இராஜன் பாபு இராஜா ஜீயுடன்,
முகம்ம தாலி சௌகத் தாலி,
அன்சா ரியுடன் அபுல்கலாம் அஸாது,
பட்டாபி யுடன்கோ பாலகிருஷ்ணர்,
ஐயர் பிரகாசம் அருமை வீரர்கள்
சட்ட மறுப்பும் சத்தியாக் கிரகமும்
செய்தனர் பன்முறை சிறையுங் காத்தனர் ;
அடக்க அடக்க அடங்கா தெழுந்தே
விடுதலை இயக்கம் வீறிட் டதுவே !
இயந்திரத் துணிகளை எரித்தனர் எங்கும் ;
இராட்டையின் பிரணவப் பாட்டொலி செய்தார்.
கைத்தறி நெய்த கதரே யணிந்தார்.
கட்டுப் பாட்டாற் கட்குடி நீத்தார்,
பட்டம் விட்டார் பதவிகள் விட்டார்.
அதிகா ரத்தை ஆட்டும் சக்கரம்
திகைத்து நிற்கத் தேசத் தொண்டர்,
காந்திக் கொள்கை சாந்தமாய்ப் பரப்பி
உலகெலாம் போற்ற நலம்புரிந் தாரே.

ஆலைகள் நின்ற ; மல்கும் அன்னியப் பொருள்கள் நின்ற ;
வேலைகள் நின்ற ; பள்ளி வித்தைகள் நின்ற, நீதிச்
சாலைகள் நின்ற, சட்ட சபைகளு நின்ற ; மாற்றார்
காலமும் நின்ற தென்றே கணித்தனர் கணக்க றிந்தார்.
வாயினைப் பூட்டுஞ் சட்டம் வாய்களைத் தடுக்க வில்லை ;
பாய்புலிச் சினமும் இந்தச் சாந்தன்முன் பலிக்க வில்லை ;
தூயவன் முன்னே குண்டு துப்பாக்கியும் வெட்கக் கண்டார்
தாயெனும் அன்பின் முன்னே தயங்கினர் சேனை கொண்டோர்.

"இளம்இந்தி யா"வென் கின்ற இதழொன்றி ஞலே காந்தி
தெளிந்திடத் தனது கொள்கை தேசத்தை ஊக்கி நின்ருன் ;
அளந்தவன் எழுதிச் சொல்லும் அமுதுரை புதிய வாழ்வை
உளந்தொறும் பொழிந்து நாட்டை, உலகினைத் திருத்திற்றம்மா!

காந்தியின் வாழ்வே வாழ்வு, காந்தியின் எழுத்தே வேதம்,
காந்தியின் உரையே யிந்தக் காசினிக் கினிய நன்மை ;
காந்தியின் செயலே மாந்தர் கதிபெறும் சேவை யென்று
தேர்ந்தநல் லறிஞரெல்லாம் திசை திசைபுகழ்ந்து சொன்னர்.

சிறைவாசம்

உலகெலாம் புகழ்ந்தும் என்னே ; உறங்கிய நாடு செய்யுங்
கலகமிக் காந்தி செய்யுங் கலகமென் றதிகா ரத்தார்,
பலபல குற்றஞ் சாட்டிப் பட்டெனக் கைது செய்து,
விலகறுஞ் சட்டத் தின்முன் விசாரணை செய்து சொன்னர் : 640

நீதிபதி

உன்னைப்போற் பெரியோன் இந்த உலகினில் இல்லை, இல்லை ;
என்னைப்போல் ஏழை யில்லை ; என்னினும் அரசச் சட்டம்
தன்னையே பற்றி என்னைத் தாங்கிடுங் கடமை செய்வேன் ;
அன்னையின் அன்பு மிக்காய், அமைதியாய்ச் சிறைசெல் வாயே !

முன்னருன் போலெழுந்த திலகரை முனிந்த சட்டம்
உன்னையும் ஆருண்டிற்குக் காவலில் உய்ப்ப தாமே ;
என்னினும் இடையில் உன்றன் இருஞ்சிறைத் தனைவிட் டுற்ருல்
என்னினும் மகிழ்வார் யாரே, இமாலயம் போன்ருய் நீயே !

திருமுகங் காண, உன்றன் செவ்விய வாழ்வைக் காண,
அருட்பெரும் வாக்கைக் காண, அகந்தையில் எளிமை காண,
உருகுதென் உள்ளம் என்னின் உத்தியோ கத்திற் கான
பெருங்கடன் புரிதல் வேண்டும்; பெருமையாய்ச் சிறைசெல்வாயே!

காந்தி

தன்னிக ரற்ற சாந்தத் தவநிதி அருளி னேக்கிப்
புன்னகை பொங்கி மிக்கப் பொலிமுக மகிழ்வு காட்டி,
உன்னத மனித னென்றே உலகெலாம் புகழுங் காந்தி
சன்னத வாக்கி ஞலே சரியெனச் சாற்றி ஞனே :

வந்தனம் அரிய நீதி மானுன தின்சொலுக்கு,
வந்தனம் ; உனதி டத்திற் குரியநல் வாய்மை சொன்னய் ;
உந்தமைப் போன்றேர் எம்மை உடன்சிறை யிடலே நீதி ;
எந்தமைப் போன்றேர் தீதை யெதிர்ப்பதே நீதி யாமே. 660

இத்தினம் எனது தேசம் இந்தமண் ணுலகின் மீதே
எத்தகை மனித ருக்கும் இயல்புறும் உரிமை நாட்ட,
ஒத்துழை யாமை யென்னும் ஒருவழி கொண்ட தந்தச்
சத்திய வெற்றிக்கே நான் சாகவுந் துணிகின் றேனே !

என்மனச் சாட்சி சொல்லும் உண்மையை யியற்றி நின்றேன் ;
உன்மனச் சாட்சிக் கேற்ற உரைகளை நீயுஞ் சொன்னாய் ;
வன்மன அநீதி தன்னை வாய்மையால் எதிர்ப்போ னுக்கு
மென்மையே ஆருண்டென்றுவிளம்பினன்பொறையின்வேந்தே.

எமதுநா டிந்தி யாவே இதன்சுதந் தரமெம் மூச்சே ;
தமதுநாட் டன்பு மூச்சைத் தடுப்பவர் உலகில் யாரே ?
உமதுநா டெம்மைப் போலே அன்னியர்க் குரிமை யானால்,
அமைதியாய் இருக்க மாட்டீர் என்பதை அறிகு வீரே !

கத்திதுப் பாக்கி யாலே கலகஞ்செய் யிரத்த வீரர்
எத்திசை தனிலும், உங்கள் இங்கிலாந் தினிலும் வெய்ய
யுத்தங்கள் செய்தே தேசம் உய்ந்திட முயன்றார் ; இங்கே
சத்தியங் கொண்டே நாங்கள் சாந்தமாய்க் கடமை காப்போம்.

சுடுதிற லற்றோம், ஐய துபாக்கியைப் பிடித்து நாங்கள்
படுகொலை செய்து வாழும் பாபமும் பழியும் வேண்டோம் ;
கெடுதலை அஹிம்சை யாலே கெடுத்திடர் பொறுத்தே, நாங்கள்
விடுதலை நாட்டும்உண்மைவிரதங் கொண்டெழுந்தோம்ஐயா. 680

படைகளும் இல்லோம், கொல்லும் படைக்கல மில்லோம்; நாட்டை
உடையவர் நாங்கள் ; ஆள உற்றவர் நீங்கள் ; இந்தப்
புடவியில் மிக்க வெய்ய போர்ப்படை யுடையீர் ; ஐயா—
இடர்பொறுத் துரிமை காப்ப தின்றியோர் வழியுங் காணோம்.

சாவதே இயற்கை யான சடலத்திற் கஞ்சோம் ; எம்மை
ஆவலாய்ப் பிடித்த டக்கும் அடக்கிடு முறைக்கும் அஞ்சோம் ;
ஏவலாய் அடிமை செய்யோம்; இனியநல் லுரிமை கொள்வோம்.
காவலாய், அறிதி நெஞ்சக் கடவுளின் சொல்லி தாமே...

அனைவர்க்கும் அப்ப னாகும் ஆண்டவன் ஒருவன் பெற்ற
தனயர்கள் உலகோர் எல்லாம், சாதிவேற் றுமைக ளின்றி
இனிதொரு குலமாய் வாழும் இன்பநாள் வருவதற்கே
அனவர தமும் யான் வேண்டி அருந்தவம் புரிகின்றேனே...

"போதுமிவ்வுரை என்மனச் சான்றினைப் புகன்றேன்.
வாதனைபல வருத்தினும் வாய்மையைத் தவறேன்—
ஆதலால் எனைச்சிறையினுக் கனுப்பியுன் அரச
நீதி செய்குவாய்" என்றனன் நிகரிலாப் பெரியோன்.

வாயி லான்சொல மனமிலான், வழுவிலான் இவனே ;
நேய னென்றுளே நினைத்தந்த நீதிபன் இரங்கித்
தாயி னுந்தயை மிகுந்தவச் சத்திய நிதியைப்
"போயமர்" எனச் சிறையினுட் பூட்டினான் உடனே.

கதர ணிந்துநற் கடமையைக் காமினென் றோதி
இதமுடன் எர வாடியிற் சிறைகொண்ட எம்மான்,
பதமுடன் வெளியேபணி செய்ததைப் பார்க்கின்
சுதந்த ரச்சுடர் சுருண்டெழத் தூண்டினான் காணீர்.

ஆக்க வேலைகள்

சாந்த மூர்த்தியெம் சத்திய மூர்த்தி மஹாத்மா
காந்தியோ சிறைக் கதவின்பின் கடுந்தவம் புரிவான் ;
மாந்தர் யாவரும் அவன்சொலை மனவுறு தியுடன்
ஏந்தி நற்பணி செய்குவோம் என்றனர் வீரர்.

சிற்று ருவினிற் செகத்தினும் பெரியவ னாக
உற்ற காந்தியின் உடலையே சிறையிடும் சட்டம்.
மற்றவன் உளம், ஆத்தும சக்தி எம் மனதில்
உற்ற ருட்பணி தூண்டிடும் ; உழைப்பமென் றுரைத்தார்.

நல்ல வன்;பெரி யானிவன் அமைதியை நாட்ட
வல்ல வன்;சிறை காத்திட வாய்த்தவன் என்றும்
அல்லவன் ; அவனைத் தெறல் அநீதியென் றுலகம்,
சொல்லச் சொல்லத்தம் செய்கையிற் சுறுசுறுப் பானார்.

உடுத்துக் காந்தியின் கதரினை உண்மையைக் காத்துப்
படித்துக் காந்தியின் வாழ்க்கையைப் பணிகளைப் புரிந்தே,
விடுத்து வேற்றுமை நாடெலாம் வியனுறச் சேர்ந்தே,
முடித்த தன்னவன் முற்றறி மொழிகளைப் புரிந்தே.

நூற்று நாளெலா நுவல்கடன் அன்பர்கள் செய்தே,
வேற்று மையறக் காந்தியின் விடுதலை வேண்டி
நோற்று நின்றனர் ; நூதனத் தலைவனை அந்தோ !
கூற்றெ னுங்குடற் பிணிவந்து குடைந்ததைக் கேட்டார்.

"கடவு ளேயெங்கள் காந்தியைக் கா"வென நாட்டார்
திடம னத்துறும் அன்பினாற் றெய்வத்தைத் தொழுதார் ;
குடலி நோயினை வைத்தியர் குணஞ்செய்த வுடனே,
விடுத லைதரக் காந்தியும் வெளிவந்து நின்றான்...

இருள்கி ழித்தெழு மின்னெனத் திருநகை யிலக,
அருள் செழித்தெழும் அற்புத வாழ்வினை யுடையான்,
உருவி னுக்குறும் பிணிதுயர் ஒன்றையுங் கருதான்
மருவு நாட்டினில் மறுபடி பலபணி தொடர்ந்தான்.

பல் பணிகள்

கதர்மல்கக் கைராட்டை சுழலச் செய்தான்
கல்வியுடன் கைத்தொழில்கள் வளரச் செய்தான்.
மதுவிலக்கி ஏழைகளின் வாழ்த்தைப் பெற்றான்
மக்களிடை ஒற்றுமையை மதிக்கச் செய்தான்.
பொதுவுரிமை யுணர்ச்சியினைப் பொலியத் தூண்டிப்
பொல்லாத தீண்டாமை போகச் செய்தான்.
அதஞ்செய் மடமை வறுமை அடிமை நோய்கள்
அழியச்சிற் றூர்தோறும் அறிவைப் பெய்தான்.

சட்டசபை மோகத்தார் சர்க்கார் சிங்கக்
குகையினிலே சமர்த்தெல்லாங் காட்டச் செய்தான் ;
பட்டமிலாப் பதவியுடன் காங்ரஸ் வீரர்,
பாராள வுஞ்செய்து பார்த்தான் காந்தி ;
இட்டமுடன் உப்புவரி யெதிர்த்து வென்றான் ;
இங்கிலாந்து சென்றுரிமை இனிது கேட்டான் ;
வட்டமகா நாட்டினிலே வாய்மை சொன்னான்
மஹாத்மாகாந் தியின்பெருமை வழுத்தப் போமோ ?

இருபதுநாள் பலதரம்பட் டினி யிருந்தே,
இந்துமுஸ்லீம் ஒற்றுமையை யியற்றி நின்றான் ;
ஹரிஜனரின் உரிமையினை அமையக் காத்தான் ;
அநியாயச் சட்டங்கள் அழியச் செய்தான் ;

கருஞ்சிறையும் கடுஞ்சரமுங் கருதா திந்தக்
காந்திமுதியோன் செய்த காரியங்கள்
வருஞ்சமுதா யத்திற்கு வழியைக் காட்டும் ;
வாழ்கமகா காந்திஎன்றும் வாழ்க மாதோ !

உலகப் போர்

இன்னும் கேளீர் இம்முது வாலிபன்
இரண்டாம் புவிப்போர் இராக்ஷஸ வெறியுடன்
எழுந்ததும் அதனை எதிர்த்துநல் லமைதி
உலக மெல்லாம் நிலவ வேண்டி
அறிக்கை யிட்டான்; அரக்க இட்லரும்
உயிர்கொலைப் பழியை உணர்ந்து திருந்தவே....
மகான்சொல் கேளார் மண்வெறி யாளரே !
ஜர்மன் இதாலி ஜபானியர் கூடி
ஐரோப் பாவையும் ஆசி யாவையும்
ஆப்பரிக் காவையும் அமர்க்கள மாக்கி,

விதவித மான விமானக் குண்டால்
ஊர் ஊராக வேருடன் அழித்தார்.
எட்டுத் திசையும் இட்லருக் கஞ்சி
உலகெலாம் இரத்த ஊழியைக் கண்டு
கலங்கித் தவித்துக் கண்ணீர் வடித்ததே.
தனியாய் ஆங்கிலர் சண்டைப் பேயைக்
குண்டுக்குக் குண்டு கொடுத்துப் பொருதினும்,
கோடிக் கோடியாய்க் கொடும்பலி கொடுத்தும்,
பைபை யாகப் பணஞ்செல விட்டும்,
மலைமலை யாக மற்பிணங் குவித்தும்,
இட்லரின் வேகம் இறங்கவே யில்லை.
முத்துத் துறையில் முதற்குண் டடித்த
ஜபானிய மறவர் சைகோன் மலாயா,
ஜாவா பர்மா சகலமும் பற்றி,
கோகினு டாவிலும் குண்டுகள் போட்டுக்
கீழ்வங் காளம் கிடுகிடுத் திடவே
மணிபுரி கடந்து வந்துகொண் டிருந்தார்....
இம்பால் முனையில் இந்திய விதியும்
துடித்து நெஞ்சம் வெடித்துநின் றதுவே.
இந்திய வீரன், இணையிலாத் தலைவன்,
நாட்டன் பொன்றே நாடித் துடிப்பாய்க்
கொண்ட சுபாஷ்போஸ் கொள்கையை முடிக்க,
கல்கத் தாவின் காவலைத் தாண்டி,
பக்கிரி போலப் பதுங்கிச் சென்று,
கைபர் காபூல் காண்டஹார் தாண்டி,
தைரியத் தாலே தடைகளைக் கடந்தே,
துயர்பல வருந்தித் தூதர் துணையால்,
பெர்லின் சேர்ந்து பெரும்புகழ் பெற்றே,
இட்லரின் உறவால் இந்திய முதல்வனாய்,
நீர்மூழ் கியிலே நீள்கடல் கடந்து,
தோகியோ சேர்ந்து சுதந்தர இந்தியா
நாட்டிடச் சேனை கூட்டிட முனைந்தான்,
வீரப் புலிரஸ விஹாரி வேண்டவே,
சிங்கப் பூரில் சிங்கப் படைகளைக்
கூட்டி வகுத்து, நாட்டு விடுதலை
உடனே பெறவே கடமை தொடர்ந்து,
ஜேஹிந் தெனவே ஜெயகோ ஷமுடன்
தில்லி சலோ வெனும் சிங்கநா தமுடன்
செங்கோட் டையிலே தேசக் கொடியை
ஏற்றப் பாய்ந்தான் ஏறுபோல் சுபாஷே !

இந்திய சுதந்தரம்

இத்தகை நிலையில் இந்தியா இன்றே
சுதந்தரம் பெறுகெனத் துணிந்துநம் காந்தி,
பம்பாய் தன்னில் பணிகளை வகுத்தான்.
ஜவஹர் சரோஜினி சத்திய மூர்த்தி,
அருணா சுசேதா கிருபாளனி தேசாய்
கஸ்தூரி முதலிய கண்ணியத் தலைவர்
இறுதிப் போரை உறுதியாய்த் தொடங்கவே
அத்தனை பேரையும் அதிகார வர்க்கம்
கொத்துடன் சிறையிற் வைத்தது காணீர் !
அகாகான் மாளிகை அருஞ்சிறை யாகி
காந்தி மகாத்மன் காவலில் இருந்தான்.
விடுதலைக் காக வீறிடு நாட்டில்
எரிமலை போலே எழுந்தது புரட்சியே.
ஆயுத மின்றியே ஆத்திரக் கொதிப்பால்,
தந்தியும் ரயிலும் தம்பித் திடவே,
சர்க்கார் நிலையம் தரையிற் சாயவே,
புரட்சி வீரர் புரிந்தனர் போரே.
கரந்து பலபேர் கலகந் தூண்டினர்...
மறைந்து பலபேர் வன்பணி புரிந்தார்.
மறைந்த வானொலி வழியைக் குறிக்க
மறைந்த படைக்கலம் வந்துகை வலுக்க
மறைந்த போர்கள் மல்கியிந் நாட்டில்
அரசாங்க வேரும் ஆடிய தென்னே !

* * *

அமெரிக் காவின் அருந்துணை யாலும்,
ஸ்டாலின் ரூஸ்வெல்ட் சர்ச்சில், ஷியாங்கே,
ஆகிய தலைவரின் ஆற்றலி னாலும்
இட்லர் முஸோலினி இறந்துபட் டாங்கே,
வெண்ணாட் டமர்க்களம் வெற்றி கண்டபின்,
யுரேனிய குண்டால் இரோஷிமா அழியவே
அணுவெடிக் கஞ்சிப் பணிந்தது ஜப்பான்....
இரண்டாம் போரை இப்படி வென்றபின்
ஆசியா முழுதும் தேசிய உணர்ச்சி
பொங்கித் ததும்பிப் பூரண சுதந்தர
கர்ஜனை செய்யக் கண்டு கலங்கியே
இனிநம தாட்சி யியலா தென்றே,
இங்கிலாந் திறங்கி இந்தியா விற்கு

விடுதலை தந்ததை வியப்பென லாமோ ?
காந்தி மகானின் சாந்த சக்தியால்,
தியாகிகள் காட்டிய தீரச் செயல்களால்,
பொதுஜனத் துடிப்பின் புயல்வே கத்தினால்,
பாரத சக்தியின் பரிதிக் கனலால்
உலகுயிர் எங்கும் நலம்பெறக் கருதியே
தனித்தவம் புரியும் தணல்பெறு யோகிகள்
பரமாத்ம சக்தியைப் பரப்பிய பயனால்,
மஹாத்மா காந்தியின் வாய்மைக் கிளர்ச்சி
வென்றது நாடு விடுதலை பெறவே !....
விடுதலை பெற்ற வியன்பெறு நாடு
இந்து முஸ்லிம் எனப்போ ராடி,
இரண்டு துண்டாய் இரத்த வெறியுடன்,
வாளுந் தீயும் கோளும் வசையும்,
குண்டர் ஊழிக் கூத்துமாய் வருந்தும்
அந்த நாளில், அமைதிக் காகவும்
ஒற்றுமைக் காகவும் உள்ளம் மாறி
பிரிவினை நீங்கிப் பெரியநன் றோடு
சேர்ந்துல கிற்குச் சீரிய தொண்டுகள்
செய்துமா னிடரின் உய்திக் கான
தெய்வச் சுடரைத் திசையெலாம் பரப்பவும்,
ஆயிரம் ஆயிரம் அன்பரைக் கூட்டி
பஜனை பிரார்த்தனை பண்புறச் செய்தே
சுத்தசக் திக்குத் துலக்கினான் வழியே....
ஜவஹர் நேருவும் சக்கர வர்த்தியும்,
படேல்ரா ஜேந்த்ரரும் பண்புளார் பலரும்
அசோக சக்கரம் அமைந்தமு வர்ணக்
கொடியைப் பிடித்துக் குடியர சாளவே,
சமவுரி மைச்சுடர் அமைதியாய்ப் பொலியவே
கண்டு களித்துக் கடவுளின் அருளையே
தாரக மாகத் தவமுடன் கருதி
உலகிற் கேதன் உயிர்வாழ் வுதவி
உலகுள மட்டும் இலகினான் போற்றி....
எல்லா நாடும் இசைத்திட நன்றே....
வாழிய மஹாத்மா ! வாழ்கசத் தியமே !

தந்தை தாய் காட்டிடாத தனிப்பெருங் கருணை தாங்கி
வந்தனை, தியாகத் தீயில் வருந்தினை, அஹிம்ஸையாலே
இந்திய நாட்டினுக்குச் சுதந்தரம் ஈந்த காந்தி
எந்தமைப் பிரிந்த செய்தி எப்படி நம்புவோமே......

நடுநிலை கொண்ட காந்தி நல்லதே சொல்லும் காந்தி
கடுமொழி யில்லா தென்றும் கனிமுகக் கருணை காட்டி
விடுதலை தந்த காந்தி, விரதத்தால் மெலிந்த காந்தி,
படுகொலை செய்யப் பட்டார் பதைக்குதே நெஞ்சம் ஐயோ !

துடிக்குதெம் ஆவி அந்தோ துயர்மனம் இரத்தக் கண்ணீர்
வடிக்குதெம் உளம்வெதும்பி வாடுதுன் பிரிவை எண்ணி...
இடிக்கும்வெம் புயலி னுக்கும் இடர்ப்படா தெம்வி லங்கை
ஒடிக்குநல் லன்பு வீர உனக்குமோர் சாவும் உண்டோ ?

இடமகல் உலகம் எல்லாம் இனிதுறச் சேர்ந்து வாழ,
மடவிருள் அகலத் தீய வறுமை நோய் தீர வேண்டி......
சுடச்சுட நோற்று நாட்டிற் சுதந்தரக் கொடியை நட்டாய் !
சுடச்சுட உயிரை நீத்தாய் சோகநா டகமிவ் வாழ்வே... !

முனிவ னிவ்வகை காந்தியின் சரிதையை முடிக்கக்
கனிவுடன் அதைக் கருத்துற மாந்திய தொண்டர்
அனைய வாழ்க்கையும் அருட்பணி விரதமுங் காக்க,
மனது கொண்டனர்; சுத்தனும் வாழ்த்துரை மலர்ந்தான்....

சுத்தன்

மெல்லிய உடலுக் குள்ளே மேதினி முழுதுங் கொண்டோன்
சொல்லிய சொல்லின் வாய்மை துலங்கிடத் தொண்டுசெய்வோன்;
வல்லியற் படையும் வெட்கி வணங்கிடும் அஹிம்சை வீரன். 900
எல்லையிற் கருணை யாழி ; எளியர்கோன் வாழ்க மாதோ !

விதவித வேடங்கொண்டு, வெம்மைசெய் அடிமை நோயும்,
அதஞ்செயும் வறுமை நோயும், அடங்கொண்ட மடமை நோயும்
கதங்கொண்ட பொறுமை நோயும் கதிர்கொண்ட பனிபோலேகிச்
சுதந்தரம் பொலிய நாடு சுடச்சுட நோற்றான் காந்தி.

மன்னுயி ரெல்லாம் வாழ மறவலிக் கொடுமை வீழத்
தன்னுயிர் கொடுத்தான் ; புத்த தருமமே உருவெ டுத்தான்.
கன்னத்தில் அடித்த வர்க்குங் கருணைசெய் கிறிஸ்து போன்றான்;
மன்னுல கெல்லாம் போற்ற வாழிய மகாத்மா காந்தி...

அந்தம கானைப் போன்றே அருட்பணி செய்ய, நல்லீர்
முந்துமின் என்னச் சுத்தன், "மொழிந்ததைப்புரிவோம்" என்று
வந்தனஞ் செய்து தொண்டர் வாய்ந்தநற் கடமை தாங்கிச்
சிந்தனை யுறுதி யாகிச் சென்றனர் தம்மை வென்றார். 913

11. திருத் தொண்டர் படலம்

பொன்ன முதப் பொலிநகை வீசிப்
　　பூத்த தின்பப் புதுயுகக் காலை ;
மன்னுலகை மணந்தது வானம் ;
　　மானிடந் தெய்வ மாறுத லெய்தி,
இன்ன லின்றிப் பிரிவினை யின்றி,
　　இனமொன் றாக மனமொன்றி வாழத்
தன்னுறுதி தழைத் தற மோங்கச்
　　சக்தி தொண்டர் தவப்பணி செய்தார்.

தூய்ய சுத்தன் சுதந்தரச் சொல்லைச்
　　சொன்ன வாறு துணிந்து புரிந்தே,
மெய்யறிவும் விழுமிய வாழ்வும்,
　　மேன்மை யான நினைப்புந் தொழிலும்,
பொய்யி லாத புனிதமெய் வாக்கும்,
　　பொருந்தி ஞாலந் திருந்திடத் தொண்டர்,
தெய்வ சக்தி திருவரு ளாலே
　　செய்த சேவை சிறப்புற வாழ்க !

சிலை வடித்திடுஞ் சிற்பியைப் போலும்,
　　செகத்தை யாக்கிடுஞ் செங்கதிர் போலும்,
கலை வளர்க்கும் கருத்தினைப் போலும்,
　　கவியின் உள்ளூறுங் காட்சியைப் போலும்,
நிலைபெ றுந்தவ யோகியைப் போலும்,
　　நிலவி யற்கை நெறியினைப் போலும்,
தலைசி றந்த சமரஸத் தொண்டர்
　　சகச மாகச் சகப்பணி செய்தார்.

சுத்தன் யோகச் சுடர்வழி காட்ட,
　　சுருதி மாமுனி வர் துணை கூட்ட,
சக்தி சாதகர் கூட்டத்தை ஊக்கித்
　　தளர்வி லாது சயம்பெறச் செய்ய,
பத்தி ஞான கருமப் பயனும்
　　பாடல் ஆனந்தப் பாணனும் பாட,
உத்தமர் உல கெங்குங்கொண் டாட
　　உண்மைத் தொண்டர் உழைத்தனர் நாளும்.

கீதங்கள்

வாழ்க சுத்த சுதந்தர ஜோதி
　　வாழ்க சத்திய சன்மார்க்க நீதி.
வாழ்க மானிடத் தேவர் மரபு
　　வாழ்க யோக வளம்பெறு வாழ்வே.

வீழ்க ராக்ஷஸப் போரின் வெறிகள்
 விண்ண ரசு விளங்குக பூவில்.
சூழ்க நல்லன தொல்லுல கெல்லாம்
 சுத்த சக்தி துலங்குக மாதோ !

உலகெ லாம்ஒரு நாடென வாழ்க !
 உனதெ னதெனும் சண்டைகள் ஒய்க !
பல மதங்களின் பந்தனை தீர்க !
 பரமன் ஒன்றெனும் பண்பு வளர்க !
கலக மின்றியிக் கட்டுக ளின்றிக்
 கருணை யான கடவுளை யன்பால்
விலகறக் கலந் தின்பம் விளைந்தே
 வீறு பெற்ற விழுமிய ராவோம்.

இருளை யோட்டும் இரவி யெழுக !
 இன்ன லோட்டிடும் இன்பம் வருக !
பொருளி லாப்பழம் பொய்வினை போக்கிப்
 புதிய ஞானம் பொலிக, பொலிக.
திருவி லாதன தீயன மாறித்
 தெய்வ நல்லழ கெங்குந் திகழ்க !
அருளு ணர்ச்சி, அருள்வழி வாழ்க்கை,
 அருள ரசுடன் ஆகுக நன்றே !

சாதி யில்லை ; சமயங்க ளில்லை ;
 சாத்தி ரந்தரும் சண்டைக ளில்லை.
ஆதி சக்தி யிறைவ னருளில்
 அகில மெல்லாம் அமைந்து வளர்வோம்.
நீதி லாத திருவுறு நன்மை,
 தியான சாதனந் தீவிர பக்தி,
ஜோதி பூசனை தோத்திர மென்னுந்
 தூய வேதச் சுடர்வழி செல்வோம்...

மட்டி லாத மகிழ்வுட னிங்கே
 மனிதர் ஒரினத் தேவர்க ளாகத்
தட்டி லாத தவசக்தி கொண்டே,
 தாயு ளத்துடன் சத்திய சேவை
எட்டுத் திக்கிலும் செய்திடும் இன்பம்
 இம்மை யம்மைக் கினிய நலமாம்—
அட்ட சித்தியி னும்அரி தாகும்.
 அவனி வாழும் அருட்பணி யென்போம்.

நாட்டில் ஒற்றுமை நாட்டிட வேண்டி,
ஞாலக் கோயில் நலம்பெற வேண்டி,
வீட்டில் ஆண்பெண் அறம்பொரு ளின்பம்,
மேவி வாழ்க்கை விரிவுற வேண்டி,
சேட்டை செய்திடுந் தீய பகைவர்
தீமுன் விட்டிலாய்த் தேய்ந்திட வேண்டி,
தேட்ட மற்ற சுதந்தரம் வேண்டித்
தீர ராகத் திருப்பணி செய்வோம்.

ஆற்றலும் அறிவும் வளர்ப் போமே,
ஆண்மை ஆண்மையென் றேமுன்செல் வோமே.
சீற்ற முற்றெதிர் தீய பகையும்
திருந்தச் செவ்விய வீறுகொண் டோமே,
ஏற்ற மான சுயேச்சை யிலங்க
எம்மு யிரையும் ஈந்துழைப் போமே,
போற்றி சக்தி புதுயுகத் தேவி
பொங்கு மங்களந் தந்தருள் வாளே.

இன்ன ழகும், இனிய வளமும்,
எங்கு நோக்கினும் தங்கக் கனியும்,
புன்ன கைசெயும் புண்ணிய பூமி,
புனிதர் போற்றிடும் பூரண பூமி,
முன்னு லகின் முதுநலப் பூமி,
முத்தி நல்கிடும் தத்துவப் பூமி,
உன்னத நிலை யோங்கிட வேண்டி
உயிரை யீந்தும் உழைத்திடு வோமே.

சேர்ந்து வாழுந் திறமறி வோமே,
தீர ராகத் தலைநிமிர் வோமே.
சோர்ந்தி டாது துணிந்துநிற் போமே.
சொல்லுஞ் செய்கையும் ஒன்றுசெய் வோமே.
கூர்ந்த நன்மதி கொண்டுயர் வோமே.
கொண்ட கொள்கைக் குயிர்தரு வோமே.
நேர்ந்த போதறத் தொண்டுசெய் வோமே.
நேரத்தைப் பொன்னென் றேநினைப் போமே.

தன்ன லத்தைத் தவிர்த்திடு வோமே.
தாய் நலஞ்செய் தவம்புரி வோமே.
அன்னி யர்வலை யையறுப் போமே.
ஆண்மை தன்னை மிகவளர்ப் போமே.

மன்னன் எம்மனச் சாட்சியென் போமே.
மாநி லம்பொது வாய்மதிப் போமே.
இன்னமும் இருளில் மடி யாமல்
இரவி போன்று விழித்தெழு வோமே.

சிறுமை யின்றிச் சிறந்திடு வோமே,
தேச சேவைத் தவம்புரி வோமே.
வெறுமை யச்சம் பொறுமை மடமை
விடமெனத் தள்ளி வீறுகொள் வோமே.
வறுமை நோயை வராதடிப் போமே,
வாழ்விற் காவிய வான்வளர்ப் போமே.
பொறுமை யாகப் புவிநலம் ஓங்கும்
புது யுகத்தைப் பொலியவைப் போமே.

மனித னுக்கு மனிதன் அடிமையோ
வாழு மாந்தர் அவரவர் மன்னவர்,
கனி மரத்திற்குக் காய்க்கும் உரிமைபோல்,
கதிரி னுக்கொளி காந்தும் உரிமை போல்,
மனதி னுக்கு நினைக்கும் உரிமைபோல்,
மண் ணுயிர்க்கு வளரும் உரிமையாம் ;
தனிய கந்தைகொண் டேபிறர் தாழ்வுறத்
தாக்குந் தீமையைத் தாக்கி நிமிருவோம்.

காணு லகம் பராசக்தி காணியாம் ;
கார்வ ளத்தாற் பசுவளங் காணுமே ;
ஊனு டைக்கிவ் வுலகினிற் பஞ்சமோ
ஒருவரை யொருவர் திருடா துண்டால் ?
மாணு றும்உழைப் பால்வந்த செல்வத்தை
மாந்த ரெல்லாம் பகுத்துண்ண வல்லரேல்,
சாண் வயிற்றுச் சடங்கெளி தாகிடும் ;
சத்தியம் இதென் றேபறை சாற்று வோம்....

(பூபாளம்—சாபு)

அருந்தவ முனிவர்கள் ஆசிகள் கூறி
ஆனந்த கானங்கள் ; ஆர்த்தனர் தொண்டர்,
திருந்திய நற்பணி செய்தனர் நாளும்,
தேசமெந் தெய்வம் எனச்சிரங் கொண்டே ;
வருந்திய மக்களின் வாட்டந் தவிர்த்தே,
மனதிலும் வாழ்விலும் மங்கள வளமை
பொருந்திடப் பொதுநலம் புரிந்திடும் அன்பர்,
புண்ணியம் பொங்குக கண்ணுல கெங்கும்.

ஆர்த்தன பறவைகள், ஆர்த்தன குயில்கள்,
ஆடின மயிலினம், ஆடின மான்கள்,
ஆர்த்தன வேதங்கள் ஆர்த்தன கீதம்,
ஆர்த்தன சுத்த பராசக்தி யென்றே.
ஆர்த்தபல் லாயிரம் ஆனந்தக் குரல்கள்,
அன்பர்கள் பாட்டுடன் அருட்பணி செய்தே
ஆர்த்தனர் யாவர்க்கும் அமர நிலையை
அளித்திடும் அன்புள்ள அன்னையைப் போற்றி...

('பேஹாக்—ஆதி)

புண்ணிய நாடே பூரணர் நாடே
புகழ்மிகு பாரத நாடே
விண்ணொளிர் நாடே வித்தகர் நாடே
விதவித நலந்தரு நாடே.

மாரதர் பலமும், வங்கரின் கலையும்
மங்கலத் தமிழிசை யமுதும்,
சீரிய சிங்கரின் வீறுடன் கூர்ச்சரர்
செல்வமு மல்கிய நாடே.

புத்தரின் சாந்தப் புன்னகை யொளியும்
பூரண யோகியர் கனலும்,
சித்தரின் அறிவும், பக்தரின் அன்பும்
தீரரின் வீரமும் பொலியும்—

எம்முளந் துடித்திடும் இன்னுயிர் நாடே ;
எம்விழிக் கொளிதரு நாடே ;
எம்மனம் நிம்மதி யெய்துநன் னாடே
எங்களை யீன்றபொன் னாடே ;

முனிவரர் போற்றிய முதுபுகழ் நாடே,
மோகனக் கண்ணனின் நாடே
மனதினுக் கினிதுறு வரம்பெறு நாடே,
மலர்கனி வளமிகு நாடே....

பண்டுயர் தருமங் கொண்டுயர் நாடே,
பாருயர் சீருயர் நாடே,
கண்டதும் பெரியார் கைதொழு நாடே
கடவுளைக் காட்டிடு நாடே.

மறுமையை இம்மையில் வழங்கிடு நாடே,
மட்டவிருள் போக்கிடு நாடே,
பொறுமையும் வீரமும் பொய்யறு புகழும்
பொங்கிய சிங்கரின் நாடே....

ஓரினம் ஓர்குலம் ஓர்நிகர் ; உலகம்
ஒன்றெனும் உத்தம நாடே,
பேரிகை கொட்டி யிதன்புக ழிசைத்தே
பேரின்ப மெய்திடு வோமே.....

பாடி யிவ்வகை பாட்டுட னேபணி
சூடி ஞானச் சுடர்பெறு தாய்நிலம்
வாடி நிற்கும் வருத்தந் தணித்திட
நாடித் தொண்டர் நலம்புரிந் தோங்கினர்.

சுத்தன் ஆணையும் தூய தவந்தரும்
சித்தியும் அருட் செய்கையும் ஏந்தியே
சத்தி சாதக சங்கக் கிளைகளை
பத்தி கொண்டு பணிபெறத் தூண்டினள்.

ஆணும் பெண்ணும் அனைத்திலும் ஒன்றெனப்
பேணும் தொண்டர் பெருகிய கூட்டத்தைக்
காணும் சுத்த சிவசக்திக் காட்சியாய்
மாணு லகு மதித்திடச் செய்தனள்.

யாது செய்யினும் எங்கிருந் தாற்றினும்,
சாதுக் கூட்டம் சமரசப் பான்மையெப்
போதுங் கொண்டு புனிதனின் பொன்மொழி
ஓதுந் தொண்டொ டுயிர்த்தது நாளுமே. 200

நித்தி யத்தை நிரம்பிடக் கண்டவர்,
சத்தி யத்தைச் சரண்புகு சாந்தர்கள்,
சுத்த சக்தி யுபாசகத் தொண்டர்கள்,
சத்த மின்றிச் சகப்பணி செய்தனர்.

ஞாலங் கண்டவர் ஞானத்தைக் கண்டவர்,
கோலங் கண்டவர் கோலத்தி னுள்ளுறும்
கால சக்தியின் காட்சியைக் கண்டவர்
நீல வானென நெஞ்சம் படைத்தவர்.

உண்மை யானவர், உன்னத மானவர்,
கண்மை யுள்ள கருணைத் திருவினர்,
வண்மை கொண்ட வளம்பெறுங் கையினர்,
தண்மை யான தடம்பெறு வாக்கினர்.

சித்தி மானும், திறல்பெறு சக்தியும்,
தத்த மக்குத் தகுமுறை தந்ததைச்
சித்த மூன்றித் திருவுறச் செய்திடும்
பத்தர் கூட்டமிப் பாவனக் கூட்டமே....

பயிற்சி பெற்ற பலகலைச் சாதகர்
அயர்ச்சி யற்றனர் ; அல்லும் பகலுமே
முயற்சி யேயுயிர் மூச்செனக் கொண்டனர்—
உயர்ச்சி யுற்றதை ஓதவும் வேண்டுமோ !

கோட்டை கொத்தளங் கோயில்கள் கோபுரம்
நாட்டி லுள்ள நகரச் சுவர்தொறும்
தீட்டி வைத்தனர் சுத்தனின் செம்மொழி
காட்டி மக்கள் கடமை யறியவே.

யோக சித்தி யுளங்கொண்டு வாழ்ந்தனர்
யோக சித்தி யுரைத்தனர் ஊர்தொறும்,
யோக சித்தி யுரைத்த பணிகளை
யோக சித்தி யொளிரப் புரிந்தனர்.

சக்தியின் பெரும்பணி

பாலுந் தேனும் பழமுங் கலந்தெனச்
சீல வாழ்க்கையுஞ் செவ்விய சிந்தையும்
கால மேற்குங் கலைகளும் வல்லவள்
ஞால சேவை நடத்தினள் சக்தியே.

அண்ணல் சுத்தனுக் கன்பை யளித்தவள்,
கண்ணு லகை அவனெனக் காண்பவள் ;
உண்ணுஞ் சோறும் அவனென் றுணர்பவள்
எண்ணும் எண்ணமெ லாமவ னெண்ணமே.

உண்மை யான உளத்தினைக் கோயிலாய்ப்
பெண்மை யான பெருமையைத் தீபமாய்,
வண்மை யான வரதனை மூர்த்தியாய்த்
திண்மை யான தியானஞ்செய் சீரியள்.

கண்க டந்த கடலுறு தீவிலே,
தண்க டலையுந் தாண்டிவந் தாட்கொண்டான்.
எண்க டந்த பெருமையன் என்மனப்
பண்க டந்த பனுவலை ஏற்றனன்.

எல்லை யற்ற கருணையன், எம்பிரான்,
தொல்லு லகிருள் போக்கிடும் சூரியன்,
சொல்ல ரிய சுகமெனக் கீந்தனன்,
அல்லி யுள்ளம் அலர்மதி யன்னவன்.

மின்ன லென்னவென் மெல்லிய நெஞ்சிலே,
தன்னொ ளியினைத் தந்து கலந்தவன்
என்னு யிரும் எனதுயிர்க் காவியும்
அன்ன வன்பணி யாவதென் வாழ்வென்றாள்.

அனவ ரதமும் அன்பை நிவேதித்தே,
கனவி லோங்குங் கவியுரு வென்னவே
நினைவி லோங்கிய நின்மலன் சேவைக்கே
மனமும் வாக்கும் வழங்கிய தூயவள்.

பருகும் ஆர்வமும் பண்புள காதலும்
உருகு நெஞ்சினில் ஊறிடும் பண்களும்,
அருவி போலிசை யாழும் அமுதச்செந்
திருவு மோங்கிய திவ்விய வாழ்வினள்.

மற்றை யாசைகள் யாவு மறந்தவள்,
வெற்றி யாக விமலன் விரதத்தை
முற்று விக்க முயன்றுமுன் சென்றிடும்
ஒற்றை யாசை யுளமெனக் கொண்டவள்.

ஓவி யத்திற்கும், உண்மைப் புலவரின்
காவி யத்திற்குங் காணரும் பொற்பினள்.
"ஆவி யின்புறும் ஆனந்த யோகியாந்
தேவன் சேவையென் சென்மப் பய"னென்றாள்.

முருகன் ராமன் முரளி மனோகரன்
அருகன் புத்தன் அனைவரும் கூடிய
உருவன் உள்ளத்தை யள்ளிய உத்தமக்
குருவவ னுக்கென் குவலய வாழ்க்கையே.

என்று நெஞ்சினில் ஏத்திப் பணிந்துளம்
ஒன்று சக்தியின் உட்கனல் ஓங்கவே
நன்று தூண்டினன் பூரண நாயகன்—
வென்றி நல்கும் வியன்பணி செய்யவே.

செங்கை கோத்த தியானத் திறமையால்,
அங்க முற்றும் அருட்கனல் பாய்ந்தொளிர்
தங்க மாகத் தளிரிள மேனியும்
பொங்கு பூரண யோகம் புரிவித்தான்.

ஆறு சக்கரம் தாண்டி யருட்கனல்
ஏறும் உச்சிவெண் டாமரை ஏகமாய்,
ஊறும் இன்ப ஒளிசிவ சக்தியாய்
வீறும் தன்மை விளம்பிட ஒண்ணுமோ ?

தாயுந் தந்தையும் தானும் உலகமும்
தூய னென்று துணிந்து பணிந்திடும்
நேய மிக்க நிமலையைச் சாதகர்
சேயு ளத்துடன் சிந்தித்தன் பாற்றினர்.

தன்னை யீந்த தகவுறு சக்திக்கே
தன்னை யீந்த தயவுறு சுத்தனும்
முன்னி ருக்கு முயற்சித் தலைவியாய்
அன்ன வளை யனுப்பி மகிழ்ந்தனன்.

மருவு கால வழக்கை நடத்திடும்
இருசு டரென் றிருவரும், புண்ணியம்
பெருக மெய்யொளி எங்கும் பிறங்கிடத்
திருவு றும்பணி செய்தனர் நாளுமே.

துய்ய வீர சுதந்தர நாதனின்
தெய்வ வீறுறத் திவ்விய சக்தியும்
வைய மெங்கும் வரதனின் வாசகம்
உய்ய மாந்தர் உருகிடப் பேசினள்.

மாசிலா யோக சித்தன், மறுவிலாக் கேள்வி யாளன்,
வாசநாண் மலரைப் போல மகிழ்வுறு காட்சி யாளன்,
பேசநா வூறுந் தெய்வப் பெருமையான், உலகுக் கெல்லாம்
தேசிகன் சத்ய சுத்த தேவனை யறிகு வீரே.....

கனியுடன் பாகுந் தேனுங் கற்கண்டுங் குழைத்த தன்ன
இனிமையில் வளர்ந்த சொல்லான், இரக்கமே இதய மானன்,
எனதுயிர்க் கின்ப மானேன், எவ்வுல குயிரி னுக்குந்
தனதுயிர் போல நல்ல தயவுடைத் தந்தை யன்னன்,

ஓங்கிய தவத்தின் மிக்கான், ஒள்ளிய நடையின் மிக்கான்,
ஏங்கிய மனதை யாற்றும் இதயசஞ் சீவி போல்வான் ;
தீங்கனி ரசத்தைப் போலத் தெவிட்டறு வாக்கி னாலே,
தூங்கிய நாட்டை வீரத் துணிவுடன் எழுப்பி னானே.

அஞ்சறு மனத்தான் பூவை யழித்திடும் அசுரர் செய்யும்
வஞ்சனைப் பழியை வெல்ல, யோகத்தின் வலிமை பெற்றான் ;
வெஞ்சின வெறிகொள் வாரை விழிதருங் கருணையாலே
கொஞ்சிள மதலை போலக் குலவிடச் செய்ய வல்லான்.

கொடியதோர் எமபா சத்திற் கொடியதாய் வாழ்வைத்தேய்க்கும்
அடிமைநோய் தீர்க்க வேண்டி ஆத்தும சக்தி கொண்டான்.
மிடிபிணி யிருளி லாது மேதினி மாந்தர் வாழும்
படிநலம் புரியும் வள்ளல் பரிதியுங் கடலும் அன்னன்.

மக்கத்து வள்ளல் போன்றும் வஞ்சமில் கிறிஸ்து போன்றும்,
பக்குவ ஞானி யான பாலரு வாயர் போன்றும்,
மிக்குயர் அப்பர் போன்றும் விழுமிய மூலர் போன்றும்,
சிக்கனக் காந்தி போன்றுந் திவ்விய புருடன் அன்னேன்...

எந்தநன் மதமும் போற்றும் இயல்புறு வாய்மை தன்னைச்
சொந்தநன் மதமாய்க் கொண்டு தூய்மையே போற்றிவாழ்வான்;
இந்தநா டுடனே பூவும் இன்புற மாந்தர்க் கெல்லாம்
வந்தருள் அன்பிற் பூத்த வாசகஞ் சொல்வேன் கேளீர்.

சக்தி நாதம்

தலை சிறந்த தலைவனைப் போற்றுமின் ;
நிலை சிறந்த நினைவுடன் செய்யன
கலைசி றந்த கருத்துடன் ஆற்றுமின் ;
மலையின் மாண்புடன் வாழ்வகை வாழுமின்.

அரிய தாகிய மானிட வினையைக்
கரிய சேற்றிற் கவிழ்த்திட லாகுமோ ?
பெரிய நல்லிசை பேசிட மீட்டுமின்—
உரிமை யென்னும் உணர்வுறு பாட்டினுல்.

பேத புத்தியின் பேதமை நீங்கிடின்
சாதி யில்லை, சமயங்க ளில்லையே,
மேதி னியில் விளங்குயர் மானிடர்
நீதி யொன்று நெறியுமொன் றுவரே.

நன்றி யின்றி நடுநிலை யின்றியுள்
ஒன்ற லின்றி, உயிர்க்கரு ளின்றியே
கொன்று கூடிக் குடித்துத ரச்சுவை
தின்று கெட்டதித் தீனி யுலகமே !

வெம்மை யின்றி வெறிக்களி யாட்டின்றிச்
செம்மை போற்றித் திருவுற வாழ்ந்திடின்
நன்மை கண்டு நடந்திடின், வாழ்விலே
இம்மை யம்மையின் இன்பந் தழைக்குமே.

அழிந்த நெஞ்சினர் ஆருயிர் வாழ்வினைப்
பிழிந்துண் பேயர் பெருங்கொலைப் பாதகர்,
பொழிந்ததைப் பொடிக்கும் பொறி போன்றவர்
இழிந்த தீமையால் வந்ததிங் கின்னலே.

ஞால சக்தியின் நாடக மாகவே
கால மான கயிற்றி னியங்கிடும்
தூல வாழ்வெனும் சூத்திரப் பாவையைச்
சீல வாழ்வெனச் செய்திட நேர்மினே.

பயங்கொள் குண்டுப் படைகளைக் கண்டுநீர்
மயங்கி யஞ்சி மனந்தடு மாறலேன் ?
புயங்கொள் சக்தியினும் புனி தாத்தும
நயங்கொள் சக்தி நலந்தரும் வெற்றியே.

தம்ம தேபெரி தென்னுந் தனிமதம்
இம்மி கூட இனிப்பய னில்லையால்,
எம்ம தமும் இனிதெனப் போற்றியே
சம்ம திக்கும் சமரசங் காணுவாம்.

இலகு நெஞ்சில் இருக்கும் பரமனை,
விலகி டாது விரும்பிக் கலந்ததும்
உலகில் அந்த உணர்வுடன் வாழ்வதே,
நிலவ மைதி நெறியென லாகுமே.

தினமு மன்புத் தியானஞ்செய் மாந்தர்கள்,
மனமொன் றுகி மதவகுப் பின்றியே
இனமொன் றுகி இனிதுற வாழுவார்,
தினக ரனிற் செறிகதிர் போலவே.

சமதை யுள்ளமும் சத்திய நேர்மையும்
இமயத் தோளில் எழுந்தொளிர் வீரமும்,
எமனும் அஞ்சும் இதயவிஞ் ஞானமும்
அமர வாழ்க்கை யளித்திடும் அன்பர்காள்.

அருமை யானசுத் தாத்தும சக்தியும்,
தரும வீரமுந் தன்மை யுணர்ச்சியும்,
ஒருமை யாகிய ஒற்றுமை நேயமும்
பெருமை செய்யும் பிறப்பின் உரிமைக்கே.

அவ மிகுந்த அவுணரை வெல்லுவோம்,
சிவமி குந்த திருவுற வாழுவோம்,
தவமி குந்தருள் சக்திப் பெருக்கினுல்,
புவிமி குந்த புதுப்பொலி வெய்தவே.

பஞ்ச பூதஞ்செய் பஞ்சர மேனியிற்
கிஞ்சு கமெனக் கேடற வாழுயிர்
அஞ்சி லாத சுதந்தர மானது ;
நெஞ்சி லந்த நிலையை நினைமினே.

மன்னு யிரின் மனத்தைக் கெடுத்திடும்
தன்ன லங்களுந் தாமதப் பேய்களும்,
உன்ன தம்பெறும் ஓர்மய உண்மையை
முன்ன றிந்து முயன்றிடின் வீழுமே.

சிறுமை யில்லை, செகத்தை வருத்திடும்
வறுமை யில்லை, மடமை யிருளிலை,
வெறுமை யில்லை, விலங்கிலை தீதிலை,
பொறுமை யுள்ளம் பொலிபொருள் காணினே.

சாமி யென்பது சத்திய சுத்தமே,
பூமி ஆன்மப் பொதுவளர் சோலேயே,
நாமி தென்பது நம்முயி ருக்குயிர் ;
சேம மென்பது சேதன வாழ்க்கையே.

எங்கு மாந்தர் இதயத்தில் ஒன்றியே,
சிங்கம் போலச் சிரநிமிர்ந் தோங்குவார்,
எங்கெல் லாரும் இறைவ னருட்குடை
தங்கி வேறு சழக்கற வாழ்வரோ,

எங்கு நான்என தின்றிப் பொதுமையில்
மங்கலம் பெற வாழ்வு சிறக்குமோ,
பொங்கு யோகமும் போகமும் போதமும்
துங்க மாகத் துலங்குமந் நாட்டிலே.

அயர்வி லாத முயற்சியும் ஆண்மையும்,
துயரை யோட்டுந் துணிவுறு வீரமும்,
மயர்வி லாத மனத்தில் உறுதியும்
உயர்நி லேதரும் உண்மை யறிகுவீர்.

கடமை கண்டு கருத்துடன் காமினோ !
மடமை யச்ச மயக்கம் ஒழிமினோ !
திட மனத்துடன் சேர்ந்தினி வாழ்மினோ !
அடிமைப் பேயும் அடங்கி யொழியுமே.

அரியின் குட்டிவெள் ளாட்டிடை வாழ்ந்தபின்
நரியின் குட்டியைக் கண்டு நடுங்கல்போல்,
உரிமை தன்னே உணர்ந்துகொள் ளாமலே,
பிரிவு செய்யும் பிறரைப் பணிவதோ ?

ஞான பாரத நாட்டினர், வீட்டினர்
ஈன மான அடிமையென் றுவதோ ?
வான ளாவிய வாகைப் புகழினர்
தீன ராகித் தியங்குவ தாகுமோ ?

பொங்கு வீரப் புகழ்சிறந் தோங்கிடும்
சிங்க வீரச் சிகாமணி நாட்டினர்,
தங்க மான தருமப் புலவர்கள்
மங்கி யின்று மடிவது நீதியோ ?

ஏங்கி டாமல், இழிநிலே தன்னிலே
தூங்கி டாமற் சுறுசுறுப் பாகநீர்
தீங்கை வென்று திருக்கொடி நாட்டவே,
ஓங்கி ஓம்சுத்த சக்தியென் றேதுமின் !

எரி நெருப்பில் இருப்பதைக் காட்டிலும்,
வரிப்பு லிக்குகை வாழ்வதைக் காட்டிலும்,
பரிவி லார்கை பகட்டிடும் பாவையாய்
உரிமை யின்றி யுயிர்ப்பது சாவரோ !

ஏழை யில்லை இழிந்தவ ரில்லையே
தோழர் யாருஞ் சுதந்தர வீரரே ;
ஊழி யஞ்ச உழைப்பினில் ஓங்கியே
வாழி தெய்வ வரம்பெறு நாட்டினர். 440

தொண்டர்க ளுடனே சக்தி சுத்தவா சகத்தை யோதி,
வண்டெனச் சுறுசு றுப்பாய் மானில மெங்குஞ் சென்றாள்.
பண்டுசீர் அறிந்து மக்கள் பாரதப் பான்மை நெஞ்சிற்
கொண்டெழுந் துணர்ச்சி வெள்ளங் குமுறிடப் பணிசெய் தாரே.

மடமையை அறிவாற் போக்கி, வறுமையைத் தொழிலாற் போக்கி,
அடிமைசெய் மாயம் போக்கி ; ஆத்தும தீர ராகக்
கடமையைக் காத்து வெற்றி காட்டிய சுத்த சங்கம்
இடமகல் உலக மெங்கும் இயல்புற நிலவிற் றன்றே..... 448

12. விழித் தெழுந்த படலம்

வீரநல் லுரைக ளாலும் வீறுகொள் பணிக ளாலும்,
பாரத சக்தி யாலும் பழம்புது நடைக ளாலும்,
ஓரின உணர்ச்சி யாலும், உண்மையை அறிந்த தாலும்,
பூரணன் அருளி னாலும் புண்ணியம் எழுந்த தன்றே....

அருளினை யடைந்த தொண்டர், அயர்வறும் பணிக ளாலே
இருளினை யடைந்த நாடும், இடமகல் உலகும், எங்கும்,
தெருளினை யடைந்து மாந்தர் திசைதிசை சுத்த சக்திப்
பொருளினை யறிந்து ஞானப் பொலிவுற விழித்தெ ழுந்தார்.

கங்குலைக் கடிந்து நீண்ட கதிர்களைப் பரப்பி, மண்ணைத்
தங்கமே யாக்கி, மோனத் தணல்பெறும் இரவிச் செல்வன்,
இங்குல குயிரின் வாழ்வை எழிலுறச் சமைப்ப தேபோல்,
பொங்குயர் சுத்த சக்தி புதுயுகஞ் சமைத்த தன்றே.

சதம் பெறுஞ் செயல்க ளாலே, சத்திய வாழ்க்கை யோங்க
நிதந் திரு வளர, மாந்தர் நினைவுகள் புதுமை யாகக்
கதந்தரு மரக்க மாயங் கலங்கிடக் கதிர்கள் வீசிச்
சுதந்தர சக்தி யென்னும் சூரியன் எழுந்த தன்றே.

கார்பெறும் அரக்க ருக்குக் கைகட்டி யஞ்சி யிங்கே
சோர்வுற வாழ்ந்த வாழ்வைத் தூவென உதறித் தள்ளிச்
சீர்பெறும் பரத நாட்டுத் தீரர்கள் விழித் தெழுந்து,
நேர்பெறத் தலை நிமிர்ந்து நின்றனர் சிங்கம் போலே.

நாட்டு நிலைமை

ஆருயிர் நலத்தைத் தாங்கும் அறமெனுங் கற்பகத்தின்
வேருடன் கிளையு மாகி, விண்கனி பழுத்த நாடு,
பேருடன் புகழு மோங்கிப் பெருஞ்செயல் புரிந்த நாடு,
நீருலர் கமலம் போல வாடிய நிலையைக் கண்டார்.

தாமதப் பகையை நூறித் தணல்பெறுஞ் சாந்த மெய்தி,
நேமமும் பிரம ஞான நிட்டையுஞ் சபமும் காத்துப்
பூமிநல் லின்ப மெய்தும் பொதுநலம் புரிந்து வாழ்ந்த
தூமறை யாளர் தங்கத் தூசியின் அடிய ரானார்....

கிழக்கொளி எழுந்த போதும், கிளர்பக லுலகைப் போற்றி
வழக்கமாய் அந்தி மாலை வந்தது மறையும் போதும்,
வழுக்கறச் சந்தி செய்து "மன்னுயிர் வாழ்க" வென்று
தொழுக்கடன் புரிந்த சீலர் தோற்கிடங் காள ரானார்.

மனதுறு மாண்பி னாலே மாதவ வாழ்க்கை பூண்டு,
வனநடு விருந்து கல்வி வழங்கிய குருமா ரெல்லாம்,
கனதன சுகத்தைத் தேடிக் கைகட்டி வாய்பு தைத்துச்
சினமிகு செருக்கர் சேவை செய்திடப் புகுந்தா ரம்மா.

அந்தணர் வணிக ரானார், ஆயுதம் பிடித்த வீரர்,
சந்தையில் விறகு விற்றார், சாத்திரச் செல்வர் தாமுந்
தொந்தியை நிரப்ப வேண்டித் தொத்தடி யார்க ளானார்,
பந்தனை வலையிற் பட்டுப் பதமிழந் தார்க ளம்மா.

தவம்பெரி தாற்றி நின்ற சத்திய சித்தர் தாமும்,
சிவம்பெரி தென்பார் ; மாலே சிறந்தவ னென்பார் ; மற்றோர்
எவர்பெரி யாரென் றேச்சும் பேச்சுமாய் இகல் வளர்ப்பார் ;
அவம்பெரி தாகி யின்னும் ஆயிரஞ் சாதி செய்வார்.

பொங்கிய தொழில்கள் செய்து, புவியெலாங் கப்ப லூர்ந்து,
தங்கமு மணியுங் கொண்டு தாயகங் குவிந்த நல்லார்,
சிங்கனின் மரபார் ஊணர் தேசத்துச் சரக்கை வாங்கித்
தங்கடன் மறந்து நின்ற சங்கடந் தனையுங் கண்டார்.

கலையென்பார் புதுமை யென்பார் கைகட்டிச் சேவகஞ்செய்
நிலையினி லுள்ள தாதர், நெஞ்சினில் உரமே யின்றி,
விலையிலாக் காலந் தன்னை வீண்கதை பேசித் தீர்ப்பார்
மலைமலை யாகக் குப்பை மலிந்திடத் தினத்தா ளெல்லாம்.

முனிவர்செய் யிலக்க ணத்தை முனிந்தெரி மூட்டு வார்கள்,
கனிமொழி யென்றுற் சந்தைக் கடைமொழி யென்று சொல்வார்.
மனதினில் வந்த வாறு வசவுநூ லெழுதி விற்பார்
இனிய பண் டிலக்கி யத்தைத் தலைவலி யென்று நோவார்.

அணியிசை யாப்புமுற்றும்.அமைந்தநன் னூலை யோதி
மணி மொழி பேசுகின்ற மாபெரும் புலவர் தம்மை,
உணவுடன் உடைக்கு மின்றி உலர்ந்திட விடுப்பார் ; ஈசன்
பணிநலம் புரிவார் ஒன்றும் பசலியென் றிகழு வாரே.

தம்பெருங் குறைகள் எண்ணூர் ; தகுமுறை கற்றுந் தேருர்,
கம்பனுங் குறளும் ஆன்றோர் கவிகளும் காலம் வேண்டா
வம்புகள் என்பார் ; வாக்கை மாற்றுவார் ; உண்மை தன்னை
அன்புடன் சொன்னுற் செள்ளென் ருத்திரங் கொண்டு பாய்வார்.

செய்தித் தாள் பேறு நாட்டத் தெரிந்ததும், அகங்க ரித்து
வையத்தைத் திருந்த நாமே வந்தனம் என்பார் ; நல்ல
மெய்யுரை யாளர் தம்மை விதவித மாக வைவார்,
பொய்யெலாம் புனைந்து காட்டிப் பொழுதினைக் கொலைசெய் வாரே.

தம்மையே புகழ்வார், தம்மைப் புகழ்ந்தவர் தமைப்பு கழ்வார்
செம்மையாய்க் கற்ற டங்கிச் செய்வன செய்வார் தம்மை
இம்மியு மதிக்க மாட்டார் ; ஏளனஞ் செய்வார், செல்வர்
பொம்மையாய்த் திரிகி விட்ட போக்கினிற் போவா ரன்றே.

மதிப்புறு காவி யத்தை மன்றினில் விலக்கி வைத்துக்
கொதிப்புரை பேசி நாசக் குரங்கின்கை மாலை செய்வார்.
துதித்ததம் அடியார் தம்மைத் துதித்துக்கொண் டேயி ருப்பார்-
எதிர்த்திது நீதி யென்றுல் இடிபுய லாவா ரன்றே...

புன்னகை புரிந்து முன்னே புகழுரை பலவுஞ் சொல்லித்
தன்னலப் பயனைக் கொள்வார் ; தந்ததும் நன்றி கொல்வார்,
பின்னிருந் திழிவு செய்து பேய்நகை யாடு வார்கள்
அன்னிய ரிடங்கோட் சொல்லி அஃதொரு பிழைப்பு மானூர்.

கொல்கொலைக் கஞ்சி டார்கள் ; கோள்பொய் பொருமை யாலே
நல்லவர் தம்மைத் தூற்றி நலித்திடச் சூழ்ச்சி செய்வார்.
கல்வியிற் பெரியர் பேரால் காசடி வேலைசெய் வார்,
பல்வகைத் திருடர் பட்டப் பகலினில் வலுத்தா ரம்மா.

எதிர்மனை வாழக் காணூர் ; வழக்கினில் இழுத்து விட்டுச்
சதிசெய்து பொட்ட லாக்கச் சாட்சிசோ டித்து நிற்பார்.
கதிர்விடு மணியும் பொன்னுங் கடுஞ்சிறை யடைத்து வைப்பார்.
மதியினை மயக்கும் வேசை மனங்கொளத் தந்து தீர்ப்பார்.

ஆயிரம் திருட்டுச் சொத்தில் அரைப்பணந் தருமஞ் செய்வார்.
கோயிலைக் கொள்ளை கொண்டு கோபுரங் கட்டு வார்கள்.
தாயையு நம்ப மாட்டார், தம்படிக் கணக்குப் பார்ப்பார் ;
தேயத்தின் பெயரைச் சொல்லித் தின்றுடை மினுக்கு வாரே.

மன்னனை முகமன் கூறி மந்திரி யாகப் பார்ப்பார்,
இன்னொரு தக்கார் எய்தின், எதிர்த்தொரு கட்சி சேர்ப்பார்.
அன்னவன் அழியப் பிள்ளை யாருக்குத் தேங்காய் போட்டுத்
தன்னலஞ் சாதித் தோங்கச் சாமிக்கி லஞ்ச மீவார்.

பொன்னுடன் பெண்கி டைத்தால்,பொருளுடன்புகழும் வந்தால்
மன்மதக் குழந்தை வாய்த்தால், மற்றொரு லாபம் வந்தால்
"இன்னதற் கிதுகா ணிக்கை" என்றுகைக் கூலி யீவார்.
அன்னவர் ஆசைதோற்றால் "ஆண்டவன் இல்லை"யென்பார்.

எளியவர் பசியைக் கண்டும் எச்சிற்கை யுதற மாட்டார் ;
தெளிமிகு புலவர் வந்தாற் செவிட்டுடன் ஊம ராவார்.
களிமது வுண்டு வேசை காலினிற் பொன்னைப் பெய்வார் ;
வெளிமயக் கிடம்பா சார விருந்தணி செய்வா ரன்றே.

குணநலம் பாரார் ; நல்ல குலநலம் பாரார் ; கல்வி
மணநலம் பாரார் ; அன்பு மனநலந் தானு மில்லார்.
பணநல மொன்றே கண்டு பாதகம் பலவுஞ் செய்வார்.
கணமொரு கவலை யாகக் காசினைச் சுமக்கும் கஞ்சர்.

பிறப்பெனப் பெற்றார் யாரும் பெருகிழைத் தயர்ந்து நாளை
இறப்பெனும் புலிவாய் சேரு முன்னரே எய்துஞ் செல்வம்
அறப்பணிக் கீந்து, நாட்டில் அறிவுடன் தொழில் வளர்க்க
மறப்பரேல் அவர்செய் செல்வம் மண்ணினும் வறிய தாமே.

காதகர் ஒருபால், செல்வக் கருமிகள் ஒருபால், பஞ்ச
பாதகர் ஒருபால், வாடும் பஞ்சைகள் எங்கு மம்மா !
ஓதியும் உணரார் ஓர்பால் ஓரெழுத் தறியார் ஓர்பால் ;
சாதிகள் பேசு கின்ற சாத்திரக் காரர் ஓர்பால்.

உட்புல னுணரா மாக்கள், உண்மையை யுணரா மாக்கள்,
கட்புல வருந்து மாக்கள், களிநடம் புரியு மாக்கள்,
நட்புற வென்று வந்து நாகரி கங்கள் காட்டி
மட்புல மயக்க மீந்து வாழ்வினைக் கெடுப்பா ரம்மா.

வீங்கிய செருக்கி னாலே, வென்றவ ரென்னும் பட்டம்
வாங்கிய செருக்கி னாலே, வலிபெறுந் தூம கேது
தாங்கிய கொடுங்கோ லுக்குத் தாதராய், அரக்கர் பின்னே
வேங்கைபின் நாயைப் போலே விரைகுவர் வெட்கங் கெட்டார்.

ஒருமையும் அன்புங் கொண்டே உயர்புக ழுடைந்த நாட்டில்,
இருமனப் பெண்டிர் போலே இராக்கத வஞ்சர் புக்கு
ஒருவரை யொருவர் தூற்றி உட்சினங் கொண்டு மோதத்
திருவிளை யாடல் செய்த தீமையை யென்சொல் வோமே !

தந்திர நரியைப் போலே சமயம்பார்த் தின்னல் செய்ய,
மந்திரக் கிழவர் போலே, வாணிகர் போலே நாட்டில்
வந்திருந் தறங்கெ டுத்து, மனதினைக் கெடுத்து நாட்டைத்
தந்திரு வரசு செய்த தானவர் கால மிஃதே.

சுத்த சங்கத்தார் தொண்டு

கோசலர், வங்கர், சிந்தர், கூர்ச்சரர், சிவாஜி நாட்டார்,
மாசிலாத் தமிழர், கூடி மாதவத் தொண்டர் தொண்டு
காசினிக் கினிதே செய்து, காலசக் கரத்தை மாற்ற,
நேசமோ டுதவி தந்து நிறைகடன் புரிந்தா ரம்மா.

மின்சக்தி கொண்ட வர்க்கு விண்சக்தி காட்டி வென்றார் ;
பொன்சக்தி கொண்ட வர்க்குப் பொருட்சக்தி காட்டி வென்றார் ;
மன்சக்தி கொண்ட வர்க்கு, மாவலிக் கும்ப லுக்குத்
தன்சம னற்ற சுத்த சக்தியை விளக்கி னாரே.....

பொறிகளை யடக்கி வென்ற புலவர்கள் அறிவி னாலே
பொறிபல படைத்த ரக்கர் பொறிவலி தன்னை வென்றார்.
வெறிகொளும் தூம கேது வியந்திடத் தூயர் சுத்த
நெறிதரும் அன்பர், அஞ்சா நிமிர்நடை நடந்தா ரம்மா.

அடிமையின் இழிவைக் காட்டி அரக்கர்கள் உலகிற் செய்யும்
கொடுமையை உணரக் காட்டிக் குடிகளை விழிப்பு றுத்தி,
மடமையை விலக்கி, வீர வளமையை ஊக்கித் தொண்டர்
கடமையை எழுதிப் பேசிச் செயலிலுங் காட்டி னாரே.

அச்சிலு மேடை மீதும் அளவறும் இதழ்க ளாலும்
அச்சமில் லாது தொண்டர் அறத்தினை யுணர்த்தி, நாளுந்
துச்சமாம் புன்மை போக்கித் துயர்செயும் அடிமை வாழ்வை
எச்சிலென் றொதுக்கி மாந்தர் ஏறுபோல் நடக்கச் செய்தார்.

சோலையைப் பள்ளி யாக்கிச் சுதந்தரக் கல்வி தந்து,
வேலைசெய் துண்ட ரக்கர் வேலையை விலகி வாழக்
காலையு மாலைப் போதுங் கைத்தொழி லளிக்குங் கர்ம
சாலைகள் வைத்துக் காசுங் கஞ்சியும் வார்த்தா ரன்றே.

புண்ணிய பூமி நல்கும் பூரண ஞானத் தோடு
மண்ணினிற் புலவர் கண்ட மாண்புதுக் கலையுங் கூட்டி,
உண்ணவும், உடுத்தி ருந்தே உழைக்கவும், தேச சேவை
பண்ணவு மேற்ற கல்வி பயிற்றினர் பரிவி னாலே.

வீணுறு சடங்கு மின்றி, வெளியுறு வேட மின்றி,
மாணுறு நடையி னாலும், மன்னுயிர்த் தொண்டி னாலும்,
பூணுறு விரதத் தாலும் புனிதநி யானத் தாலும்,
காணுறு கலையி னாலுங் கடவுளை யுணர்த்தி னாரே..

பத்தியும் பாட்டும் தொண்டர் பணிகளும், இனிய சொல்லும்,
ஒத்தநல் உளமும், ஆன்ம ஒருமையும், அன்பும், சித்த
சுத்தமும், செருக்கி லாத தெய்விக நடையுங் கண்டு,
சத்குரு பக்கத் தாருஞ் சகோதரர் ஆகி வந்தார்.

நன்றியும் தெளிவும் அன்பும், நடுநிலை யான பேச்சும்,
வன்றவக் கதிருங் கொண்ட வாய்மையின் வடிவ மானார் ;
ஒன்றிது நலமென் றேதின், உணர்ந்ததை உள்ளத் துள்ளே
கொன்றுணும் கூற்றன் னாருங் கொடுமையை விடுத்தா ரம்மா.

பொய்யினைப்பொய்யென் றார்கள்; பொழுதினைக்கொலைசெய்யாது,
மெய்யருள் வாக்கைக் கற்றார் ; மேதினி தன்னை யாளுந்
தெய்வமும் உண்டென் றார்கள் ; தேகத்தைக் கடந்த தேகி
துய்யது ; சுத்த சக்திச் சுகமொன்றே சுகமாம் என்றார்.

ஆத்திரப் பொறாமைச் சண்டை அமைதியைக் கெடுப்ப தென்றார்;
நாத்திகச் செருக்கி னாலே நரகமே வாழ்க்கை யென்றார் ;
சாத்திர ஒழுக்க மெல்லாந் தருவன சுகமே என்றார் ;
தீத்தணல் போன்ற தீரர் திருந்திய திருவி னாரே.... 180

தூலதே கத்தின் மோகத் தோலழ கதனைக் காட்டிப்
போலிச்சா மியங்கள் பூசிப் புருடரைக் கெடுத்த மின்னார்,
சாலமு மாறி இல்லத் தருமத்திற் பற்றுக் கொண்டார் ;
காலமு மாறி யந்தக் கரணமு மாற நன்றே.

மட்டிலா அடிமை வாழ்வால் வலிமையை யிழந்து, நான்கு
சட்டையுள் எலும்புக் கூடாய்த் தம்முயிர் தாங்கும் மாந்தர்
திட்டமாய்ச் சுத்த யோக தியானத்தின் பயன தாகக்
கட்டுடன் கனமு மெய்திக் காளைபோல் வீர ரானார்.

செப்பறுங் கவலை பற்றிச் சென்மத்தைச் சலித்துக் கொண்டு,
தப்பிட வழியைப் பார்க்குந் தானவ தாச ரெல்லாம்,
அப்பரும் கனகன் சேயும் அருட்சுடர் வள்ள லாரும்
செப்பிய நெறிய றிந்து தீரராய்த் தலைநி மிர்ந்தார்.

அன்னிய வணிகக் கூட்டம் அடிபகற் கொள்ளை கண்டு,
முன்னலை கடல்க லக்கி முதுபொருள் செய்த நாட்டார்,
பன்னருங் கவிதை பெற்ற பாரத வணிகர், சுத்தன்
சொன்னதைச் செய்து நாட்டுத் தொழில்களை ஊக்கி னாரே.

கூட்டுநெஞ் சாளர், நெஞ்சக் கவலையாற் குழிந்த கண்ணார்,
வாட்டிய பசியால் வாழ்வை வஞ்சருக் கடிமை செய்தார்,
பூட்டிய மனந்தி றந்து புந்தியில் உறுதி கொண்டு,
நாட்டினுக் கேதம் வாழ்வை நல்கிட நலங்கண் டாரே !

வெற்றுரை விடுத்தார் ; நாட்டு விடுதலை நாட்டிக் காண
ஒற்றுமை யாக நின்றார் ; உயிரையுந் துரும்பென் றெண்ணிப்
பற்றலர் குற்றங் குற்றம் என்றவர் பகர்ந்து, தம்மை
முற்றிலுஞ் சுத்த சங்க முயற்சிக்கே அர்ப்ப ணித்தார்.

வெறுக்கிறோம் அடிமை செய்யும் விநோதநா கரிக வாழ்வைப்
பொறுக்கிலோம்;அயலார்வைத்த பொறியிலே சிக்கி நொந்தோம்.
அறுக்கிறோம் பந்தம் என்றே ஆண்மைகொண் டெழுந்திருந்தார்
மறுக்கிலாச் சுத்த சங்க சக்தியை மதித்த வீரர்.

விருந்துடன் அரக்கர் செய்த வினைவிளை யாட்டிற் சிக்கி
மருந்திற்கும் அன்பி லாத மாயக்கள் ளுண்ட மாந்தர்,
அருந்தவ சுத்த சக்தி யடியரைக் கண்ட போதே,
திருந்தினர் கண்வி ழித்துத் தேசமெந் தெய்வ மென்றார்.

பிறர்குறை பிதற்று வாருந் தங்குறை பெரிதுங் கண்டு,
நிறைவுறத் தியான யோக நிம்மதி பெற முயன்றார் ;
குறியுடன் நாவுந் தொந்திக் குரம்பையும் வளர்ப்ப தேதம்
அறமென நினைத்த பேரும் ஆத்தும வுணர்ச்சி பெற்றார்.

பித்தராய், அரக்கர் ஆளும் பிள்ளையாய் இருந்த பேரும்,
சித்திமான் முதலோர் செய்த சேவையால் உணர்ச்சி பெற்றுச்
"சுத்தனே போற்றி ! சங்க சுத்தரே போற்றி ! யோக
சித்தியே போற்றி" யென்று தீவிரத் தொண்டு செய்தார்.

தருமத்தை யிழந்து, தீய தானவர்க் கடிமை யானோர்,
அருமையாம் ஏடி ழந்தே அலமருங் கவிஞன் மீண்டும்
ஒரு மலர் வெளியிட் டிந்த, உலகதைப் புகழக் கண்டு
பெருமகிழ் வெய்த தேபோல் பிறந்தநாட் டுரிமை தேர்ந்தார்.

நச்செனும் அடிமை மாய வலையினைப் பிளக்க வேண்டி,
அச்சமற் றெழுந்த வீரர், அடக்கமாய் உபச ரித்தே
மெச்சினர் ; சுத்த சங்க விரதத்தைத் தாமுங் கொண்டார் ;
உச்சமாங் கதிர்கள் ஊற்றும் ஒளியினைத் தடுப்பார் யாரே.

தெய்வநற் கனிபி ழிந்து, தீந்தமி ழமுது கூட்டி,
மொய்மலர்த் தேனைச் சேர்த்து முருகிளம் உருவதாக்கி,
செய்யயா ழிசையுங் கூட்டித் திருவுறப் பொலியு மின்னார்
உய்வருள் சக்தி யென்றே உணர்ந்தனர் புதுமை வீரர்.

பேதையள், அபலை, காமப் பிணிதந்து பிணியைத் தீர்க்கும்
போதை ; ஓர் போக வத்து, புருடரின் அடிமை, யென்றும்
மாதர்கள் மாயை யென்றும் வழங்கிய பிழைக ளின்றி
ஆதியாம் சுத்த சக்தி யன்னையென் றறிந்தா ரம்மா.

அன்னிய மாயத் தாலே, நாட்டினை அசட்டை செய்து,
தன்னலப் போகந் தேடித் தானவர் அடிமை யானார்,
இன்னிய சுத்த சங்கம் இசைத்திடும் பாடல் கேட்டு,
முன்னற நாட்டைக் காக்கு முயற்சியின் முன்னின் றாரே! 240

சிலர்புகழ் ஓங்க வேண்டிச் செல்வமும் அழுலுஞ் செய்யப்
பலர்நலம் அழிக்குங் காலம் பயனிலா தொழிய, மாந்தர்
தலைதலைப் பொறுப்பு ணர்ந்து, தருமத்தை நடையிற் காக்க
நிலமெலாம் உரிமை பெற்று நிலவிடத் தொண்டு செய்தார்.

இவ்வகை யோக சித்தி இயம்பிய படியே நாளும்,
செவ்வியர் செய்த சேவை செகமெலாம் புதும லர்ச்சி
ஒவ்விய படிகி ளர்த்தி ஓசையில் லாது வீச,
வெவ்விய தானவர்கள் வியப்புடன் அஞ்சி னாரே. 248

13. தூமகேது திகைத்த படலம்

வந்தது மோச மென்று மறுக்கமுற் றரக்க ராரும்
சிந்தனை நடுந டுங்கி ; சினப்புய லெழுந்து மீறித்
தந்திர ஒற்றர் தாதர் சரியெனத் தலையை ஆட்டும்
மந்திரி மார்கள் கூட மன்னவை நடத்தி னாரே.

கோபுரந் தாங்கும் பொம்மைக் கொலுவென வீற்றி ருக்கும்
பாபமே உருவன் னார்கள் பாரத தேசத் தாரின்
சாபமே யனைய தாதர், சத்தியத் திருவி லார்கள்
"நீபரம் பொருளே" யென்று நிருதனைப் பாடி னாரே.

அடிமைகள் சுற்றி நின்றே அரகர அரக்க வென்னத்
துடிதரு சினத்தீ பொங்குந் தூமகே துவு மெழுந்தே,
கொடியசெங் கண்ணி னாலே கொற்றவை முழுது நோக்கி,
இடிகுர லெடுத்தான் கார்செய் இயற்கையும் திகைக்க வம்மா !

பொழிதரு மேகஞ் சூழப் புயலதை மின்னல் வாளாற்
கிழிதறப் பூகம் பங்கள் கிளர்ந்துல கத்தை யெல்லாம்
அழிதறக் குமுறி அட்ட காசங்கள் செய்வதே போல்
பழிதரும் தூம கேது படபடத் துரைக்கின் றனே :—

தூமகேது

மாவலி வாழிய ! மன்னர் மன்னவன்
ஏவலைப் புரிந்திடும் இறைவன் யானிங்கே
காவலா யிருந்திரு கண்ணி மையென
ஓவற உழைத்தனன் உறக்க மின்றியே.

ஊழ்வலி பெரிதென ஊனை யிட்டிடும்
பாழ்படு சாதிக்குப் பகுத்த றிவினை
வாழ்வுறத் தூண்டினேன் ; மதமுந் தெய்வமும்
தாழ்வுறச் செய்தனன் சமதை பேசியே.

மறையென மறையவர் மறைத்து மாயஞ்செய்
குறைகளைப் பழம்பெருங் குப்பைக் கொள்கையை
முறையுற மாற்றிட முயற்சி செய்தனன்
சிறையுறக் கடவுளைச் செப்பு மூடரே.

ஓரின மெனில் இவர் ஒன்றி நம்முடன்
போரிடு வாரெனப் பொருந்தும் ஐக்கிய
வேரினிற் கோடரி வைத்து வெட்டியே
பேரினப் பகைவராய்ப் பிரித்த டக்கினேன்.

வாள்வலி பெருத்தவர் வலிமை நோக்கியே,
கோள்வலி பெருத்தநங் கொள்கை மேவியே
நாள்தரும் வேலையை நச்சிப் போர்செயுந்
தோள்வலி, கலப்பையைச் சுமக்கச் செய்தனன்.

அற்புதப் பொய்க்கதை அளக்கும் வீணர்கள்
பற்பல புதுக்கலை பயின்று நம்வழி
நிற்பதே நலமென நினைக்கச் செய்தனன்
தற்பெரு மைகளைத் தகர்த்திந் நாட்டிலே.

ஊகத்தை வளர்த்தனன் ; ஊணர் போற்றிடும்
நாகரி கத்தினை நன்கு நாட்டினேன்.
மோகியின் கொள்கையில் மோகங் கொண்டிட
வேகமாய்ப் பெண்களின் விருப்பை மாற்றினேன்.

சதிபதி கற்பெனச் சாற்று நாட்டிலே
விதி விதி யெனத்துயர் விளைந்த நாட்டிலே
துதிபெறுந் தானவச் சுதந்தரச் சுக
மதியினை ஊக்கினன் மதுவை யூக்கினேன்.

பண்டறம் பரமெனப் பகரு நாட்டிலே,
கண்டது நிசமெனக் கருதச் செய்தனன்.
உண்டொரு தெய்வமென் றுளறு நாட்டிலே
திண்டிறல் மாவலி தெய்வ மென்றனன்.

யானைபோல் வீரர்கள் இருந்த நாட்டினைப்
பூனைபோல் அடங்கிடப் புரிந்து தானவ
சேனையிற் சேர்த்தனன் சிறந்த வீரரை ;
ஏனைய நன்மைகள் எண்ண லாகுமோ ?

தமதென நாட்டினைத் தருக்கி டாமலே
நமதெனக் கண்டவர் நயந்து தாழவே,
இம—முனை வரையிலும் எமது சேனையால்
அமைதியை நாட்டினேன் அடிமை நாட்டிலே.

ஒன்றிய நாட்டினை உருக்கு லைந்துநாம்
வென்றனம் வாளினால் வெருவ ஆளுவோம்.
என்றுமிங் கிறையவர் என்றி ருந்தனம்
இன்றுநம் ஆட்சியை எதிர்த்த தேனிவர் ?

பல்வகைச் சமயத்திற் பட்ட ழிந்தவர்,
கொல்படை காட்டிநங் கொடியை ஆட்டினாற்
சொல்லினைக் கேட்பவர், சுதந்தரம் எனத்
தொல்லைசெய் யாரெனத் தூங்கி நின்றனன்.

படிந்தனர் அடிமைகள் என்னப் பாவித்தேன் ;
இடிந்ததென் எண்ணமும் ; இன்று மீண்டிவர்
"விடிந்தது விழித்தனம் விடுதலை யெனக்"
கடிந்தனர் நம்பெறுங் கட்டுங் காவலும்.

பாரத மாக்கிய பார்த்த சாரதி
தீரரை யூக்கிடத் திரும்புங் கூத்திதோ !
சீரிய துருவனே தேசம் பெற்றிடக்
கோரிய தவசித்தி கொண்டுற் றான்கொலோ ?

அரசரின் கூட்டத்தை அழிக்க வேண்டியே
பரசுரா ராமனே வந்த பண்பிதோ ?
இரணியன் உடலினை இருதுண் டாக்கிய
நரசிங்க தேவன்செய் நாடகம் மிதோ.

தன்மமும் வீரமும் தவத்தின் ஓங்கிய
கன்மமும் கடவுளுங் கருணை யாடலும்
சன்மசா பல்யமுஞ் சாற்றும் பேதையர்
என்மனம் ஏங்கிடற் கெழுந்த செய்கையே.

நன்றியை மறந்தனர் ; நமது நன்மையைக்
கொன்றிடத் துணிந்தனர் கொடுசு தந்தரம்
என்றிடத் துணிந்தனர் ; எனது சோற்றையே
தின்றிரண் டகஞ்செயுந் திருவி லார்களே.

சுத்தனுஞ் சங்கமாம் சுத்த சக்தியாம்,
இத்தினம் உலகெங்கும் எழுந்து வீறிடும்,
அத்தகைக் கும்பலை அடக்க மாவலி
ஒத்தொரு வழியையும் உரைத்து விட்டனன்.

புயலுறு நெருப்பெனப் பொங்கித் தூமனும்
மயிலணை வகித்திவை மன்றிற் கூறியே
செயலெது நலமெனச் செப்பு வீரென்றான்
அயலுறும் அடிமைகள் அணிந்து கூறினார்.

அடிமைத் தாதன்

கடலும் விண்ணுங் கடந்து கருணையால்
உடலும் உள்ளமும் ஒய்வற் றுழைத்துமே
அடல ரியவிந் நாட்டை யடக்கியே
நடல ரியவும் வாட்கொடி நட்டநீர்.

அத்த தியுமை ஆத்திரங் கொண்டெதிர்
சித்தி யிந்திரை மந்திரி யாகிய
சித்தி மான்செயும் செய்கைய லால்இவை
சுத்தனார் செயுந் தொண்டுகள் அல்லவே.

கண்ணை மூடியக் காட்டிலொரு புறம்
எண்ணத் தின்சுழல் இன்றித் தவஞ்செயும்
மண்ணி ழந்தவம் மன்னன் இக் காரியம்
பண்ணு வானெனல் பைத்திய மாகுமே.

ஆண்டி சுத்தன் அரும்பெயர் தன்னையே
பூண்ட சிற்சிலர் புண்ணிய போதமே
யாண்டும் செய்தனர் என்ப தறிகுவோம்—
வேண்டும் சித்தியை வேருடன் வெட்டவே.

சாது சங்கம் சன்மார்க்க மிவற்றினால்,
யாதுந் தீதில்லை என்ப துறுதியே.
வாது செய்திடும் வன்மனச் சித்திமான்
கோது செய்தனன் கோக்களைத் தூண்டியே.

தூமகேது

காரணம் அறிகிலேன் கதிய றிகிலேன்
ஆரண நாட்டினர் அதிர்ந்தெ ழுந்தனர்.
பூரண சுதந்தரம் புகலு கின்றனர்.
பாரணங் கொற்றுமை பகரு கின்றனர்.

தானவர் திருந்திடத் தக்க சூழ்ச்சிகள்
மானவர் வகுப்பராம் ; மனதை வென்றவர்
ஈனமில் லாதினி எங்கும் ஆருயிர்
மேனல முற்றிட வேலை செய்வராம்....

சொப்பிடி வித்தையிற் சொரிந்த பொன்னைப் போல்,
எப்படி யெழுந்தன இந்தக் கொள்கைகள் ?
இப்படி யாரெங்கும் இயம்பு கின்றனர் ?
செப்புக ஒற்றரே நன்கு சிந்தித்தே...

ஒற்றர்

கலிநகர் காக்கும் புலியே, தூம
கேதுவே வணக்கம், கீர்த்தியிற் சிறந்த
மாவலிக் கேற்ற மாணவ வணக்கம்.
உன்கடுங் காவல் ஓங்கிய நாட்டில்
ஈராண் டாகவே இனந்தெரி யாமல்,
பொதுசனத் துடனே பொதுசன மாக,
உழைப்பா ருடனே உழைப்பா ராக
பண்டித ருடனே பண்டித ராகப்
பாமர ருடனே பாமர ராகவே
திறமை கொண்டவர் தினமுங் கலந்து
பொதுக்கடன் செய்வது போலே காட்டி,
மக்களை எழுப்பி மனதைத் திறந்து,
நிமிர்ந்து நடக்க நிகழ்த்தினர் எங்குமே.
யாரவர் என்பதை இன்னுங் காணிலோம்.
சித்திமா னில்லை ; சுத்த சங்கத்
துறவிக ளில்லை ; சுதந்தர நாதம்
எப்படிப் பரவிய தென்பதை யறியோம்....
காற்றும் காலைக் கதிரும் போலே
புதிய சக்தி பூத்துப் பரவி
உலகெலாம் உணர உள்விழித் ததுவே....
தானவர் செயலெலாம் தடைப்படு கின்றன.
"எல்லா நாடும் எல்லா வீடும்,
எல்லா வனமும், எல்லா வாக்கும்
ஆன்ம ஒருமை, ஆன்ம சுதந்தரம்
உலகக் கோயில், கலகமில் லாத
சமத்துவ சாதனம், சாந்த நிலையம்,
சுதந்தர சக்தி சுத்த நிலையம்"
என்னும் பல்லவி இசைத்திடக் கேட்டோம்.
இந்த நாட்டை இனிது புரந்தே
துறந்த துறவி சுத்தனு வானே...

உலக வாழ்வை உதறிய ஞானி
இமாலய மீதே யிருக்கிறுன் உறுதி.
அவனிடம் பயிலும் அருந்தவ யோகிகள்,
உலக மெங்கும் உலாவுகின் றுரே.
ஆயினும் அவரிடம் அரசியற் பேச்சிலே.
ஞானமும் யோகமும் நவிலுகின் றுர்கள்.
ஐந்து மாதமாய் ஐயநாங் கண்டது
மாவலி மன்னன் மகளாம் சக்தி
சுத்த சமத்துவ சுதந்தர வாழ்வை
வாழ்ந்து காட்டி வழுந்துவ தொன்றே.
மேட்டிமை யான மேடைப் பேச்சிலே.
இரகசிய சங்கமும் இருப்பதை யறியோம்.
உள்ளமும் உள்ளமும் உறுவது போலே,
மனமும் மனமும் வைத்தது போலே,
யாங்கும் அவள்கருத் தேகிடக் கண்டோம்.
கருத்திற் கிசைந்த காரிய மெங்கும்
இயல்பாய்த் தொண்டர் இயற்றிடக் கண்டோம்.
குற்றங் காணுக் குணவான் கூட்டமே
கிராமந் தோறும் கிளர்ந்திடக் கண்டோம்.
அரசகப் பேச்சே அறிந்தோ மில்லே.
மூச்சைப் போலே மூலே முடுக்கெலாம்
பேச்சே யின்றிப் பெரியகா ரியங்கள்
நடப்பதை யறிந்தோம், நடத்துந் தலேவரை
யாரெங் கெவரெனப் பேரு ரறியோம்.
சாம்பற் பூத்த தணலென மாந்தர்
நெஞ்சுக் குள்ளே நெருப்பு வளர்ப்பதை
உணர்கிரேம் ; ஆயினும் உட்புகுந் தறியோம்.
பம்பரம் ஆடும் பரபரப் பறிந்தோம் ;
சாட்டை கட்டிய சக்தியைக் காணும்....
மாவலி மகளின் மனதறி யோமே !

தூமகேது

மாவலி பெற்ற மகளேயான் அறிவேன்,
அவளேத் தந்தை அடக்கிட வேண்டினுன்.
சக்தி யிங்கே சுத்தயோ கியிடம்
ஏதோ கற்றுள். இவ்வுல கெல்லாம்
ஆன்ம வொருமையில் அன்புடன் வாழவே
பேசுவ தாகப் பெரிதும் அறிந்தேன்.
ஆயினும் நாமும் அறியா வண்ணம்

தொண்டரைத் தூண்டிச் சுதந்தர முயற்சி
செய்கின் றாளோ ? செய்யவும் வல்லாள்.
ஆம், ஆம் அவளே, அவளே காரணம்...
சுந்தரி மகளிவள், சுதந்தரப் பித்தி,
புண்ணிய பூமியின் கண்ணியத் தோழி,
ஆதலால் இவளை அடக்கிட வேண்டும்...
தானவக் கொடியைத் தாக்கிப் பேசினால்,
புண்ணிய பூமியைப் புகழ்ந்து பேசினால்,
அரக்கர் தீயரென் றுரக்கப் பேசினால்,
ஊன்மது போகம் உண்பதைக் கெடுத்தால்,
தெய்வம் பெரிதெனத் திருவாய் மலர்ந்தால்,
நமது கலிநகர் நலியப் பேசினால்,
தூம கேது துட்டனென் றாலோ,
ஒற்றர் அவளைப் பற்றிச் சென்று
தானவ வீரர் தம்மிடந் தந்து,
கட்டிக் கொணர்மின் கடுஞ்சிறை யிடவே !
மகளை ஒறுக்க மாவலி யாணை
வந்ததன் பிறகே வகுத்தேன் இம்முறை.
சக்தியைத் தவிரச் சனங்களில் யாரும்
தானவர் ஆட்சியைத் தாக்கிடின் உடனே
வாய்ப்பூட் டிடுமின் ; வன்சிறை யடைமின்.
கையை ஓங்கினால் கையை வெட்டுமின்.
துப்பாக்கி காட்டினால் சுட்டுத் தள்ளுமின்.
நமது வாணிகம், நமது கொள்கை,
நமதுநா கரிகம், நமது நியதி
பிசகெனப் பேசும் வசவினைத் தாங்கோம்,
வாட்கொடிக் கெதிர்செயும் வஞ்சரை உடனே
ஒழிப்பதே கடனாம்....ஒற்றர் எழுமினோ !
இரத்தத் தாலே இரத்தவாட் கொடியைக்
காப்போம் உலகக் காவலர் யாமே !
மானிடப் பூச்சிகள் தானவர்க் கிணையோ ?
வாழ்க மாவலி வாழ்கநம் வாளே !”
என்று தூமன் எழுந்து நின்றே
மன்றுடன் ஒருவாய் மதுவைக் குடித்துப்
பாண்டு முழங்கப் பரத்தையர் ஆட
அரக்கர் வாளுடன் உறக்கப் பாடி
மாவலி—கேது வாழிய வென்ன,
மோகிமோ கத்தால் முகம்வெறி காட்ட
வேகமாய்ச் சென்றான் போகமா ளிகையே.

14. மோகி யிறுதிப் படலம்

புயலைப் போலப் பொழிந்து கொடுமொழி
செயலைத் தூண்டித் திரும்பிய தூமனும்,
மயல்கொள் மோகி மருங்கினிற்கள் ளுண்டதுந்
துயிலிற் சொக்கிச் சுயேச்சை யிழந்தனன்.

சஞ்ச லத்திற் சலிப்பறு மோகியும்
நஞ்ச முகை நகையுடன் காட்டியே,
கெஞ்சு வாளெனக் கேள்வன் கரத்தினைக்
கொஞ்சிக் காம வெறிகொடுத் தோதுவாள்...

மோகி

நல்ல கேது, நயமுள்ள கேதுவே,
செல்லக் கேதுவென் சிந்தனை யின்புற
வல்ல கேதுவென் மன்மதக் கேதுவென்
சொல்லைக் கேட்டுச் சுகம்பெறும் கேதுவே....

தூமகேது

அன்பு மோகினி ஆசைப் பசுங்கிளி,
என்பு ருகி இளகிடக் காதல்கொள்
இன்ப மோகினி இட்டது சட்டமே—
நம்பு மோகி நவில்க நயமொழி.

மோகி

புவியில் ஊனர் புகழினிச் சாய்ந்திடுங்
கவலை யுற்றனை ; காரணங் காணிலை ;
அவலை விட்டுமி அள்ளிப் புசித்தனை
திவலை யென்சொலைச் செய்து பயனுறுய்.

தூமகேது

தனையொவ் வாத்திருத் தானவ சோதரீ,
உனைத் தவிர உயிரெனக் கில்லையே.
எனை யெதிர்க்கும் இடர்களை எற்றிட
மனம் வகித்தனை வந்தனம், வந்தனம்....

சொல்லு சொல்லெனக் கொஞ்சிடத் தூமனும்
"கொல்லு கொல்லுடன் கோபக் கலியனை
அல்ல லெல்லாம் அவன்செயும் சூழ்ச்சியே
தொல்லை யில்லை தொலை, தொலை !" என்றனள்.

மோகி சொன்னதும் மோக வெறியனும்
வேக மாக விரைந்து மறைந்ததுந்
தாக மான தனிநிசி தன்னிலோர்
சோக நாடகந் துள்ளி யெழுந்ததால்...

உள்ளத் தாழிட் டுறங்கிட மோகினி
கள்ளுண் காமக் கனல்வெறிக் கண்களை,
மெள்ள மூடினள் ; வேற்றுருக் கொண்டொரு
கள்ளன் வந்தவள் கட்டிலைத் தொட்டனன்.

ஆசை நாயக வாவென் றணைந்திட
வேசை மோகி விழியைத் திறந்துகை
கூசி டாது கொடுத்தனள் அவ்வையின்
வீசு வாள் முலை மார்பினை விண்டதால்...

ஐயை யோவென் றலறிய மோகியின்
நாவையும் அறுத்து " நலங்கெடு வேசையே
கட்டிய கணவனைக் கைவிட் டின்னொரு
மட்டியைக் கூடிய பட்டியே பதரே !
போரை வளர்க்கும் பொறுமைப் பூதமே,
நல்லவர்க் கெல்லாம் அல்ல லிழைக்கும்
அகந்தைப் பேயே, ஆணவ நெருப்பே !
கட்டுக் கடங்காக் காமரா க்ஷஸியே,
அடுத்தவர் தம்மைக் கெடுத்திடும் பீடையே,
உள்ளதைச் சொன்னால் உடம்பெரி கொண்டு
கொள்ளிப் பேய்போற் கொலையைத் தூண்டும்,
கொடுமனப் புலியே கெடுமனப் பாம்பே,
நேர்மை கெட்ட நீலிநீ யிருக்கும்
வீடும் வேசை விடுதியா வதுவே,
பள்ளியும் வெறிதருங் கள்ளுக் கடையே,
புசிக்கு மிடமும் புலாற்கடை நாற்றமே,
வசிக்கு மிடமெலாம் வஞ்சச் சூழ்ச்சியே,
கலியைக் கெடுத்த கசட்டு மதியே
தூமனைக் கூடிய காமப்பி சாசே,
அழிவைத் தூண்டும் அழகுப் பிணமே,
எனக்கு நிகரிலை என்றுவாய் நீளும்,
தனச் செருக்கியே தானவர் பதரே,
மோசஞ் செய்த மோகினிப் பேயே,
உனக்குத் தண்டனை உயிர்க்கொலை......சாசா,
சாகுமுன் என்னைச் சற்றே பாரடீ...
பொய்ச்சாக் கடையிற் புரளும் புழுவே
புண்ணிய பூமியிற் புகுந்த பாபமே !"

கலியா ஐயோ கொலைபா தகனே..
ஊணரே வாரீர்....உடனே ஐயோ...
கொல்லுமின் கொல்லுமின் கொல்லுமின் என்று
மோகி சாய்ந்து முய்ந்தனள் அம்மா !...

* * *

இரத்தச் சிரிப்புடன் இகல்பெறு கலியும்
மின்னென மறைந்தான்...மிடுக்குடன் கேது
கடுஞ்சிறை தனிலே கலியைக் காணேன்...
அந்தோ வென்றே அலறித் திரும்பி
இரத்தப் பெருக்கில் இறந்து கிடந்த
மோகினியைக் கண்டு சோகமே லிட்டு,
யார்செய் கொலையிது ? பேரறி யேனே..
அந்தோ....கவலை ! அந்தோ துயரம் !
அந்தோ மோகினி ! அழகுத் திருவே...
என்று சோர்ந்துபின் எழுந்து நன்றே,
இனிநான் சக்தியை இனிதே கூடி
ஊணர் மரபை உயர்த்துவேன் எனவே
பெருமை கூறிப் பிதற்றிடும் போதே
ஐயோ கலகம்...ஐயோ செத்தோம்...
என்றூ ரெங்கும் எழுந்தன குரலே !
தூம கேது துடிதுடித் தோடினன்...
பிடிபிடி யென்றே பேரிடி முழக்குடன்
அவனைப் பிடித்ததோர் ஆண்மைக் கையே...
"தானவ சேனை தகர்மின் பகைவரை...
போரோ போரெ"னப் புலிபோல் உருமிய
தூமனை வீரர் சூழ்ந்துபின் கட்டிக்
கலியை அடைத்த கடுஞ்சிறை தனிலே
காவல் வைத்துக் கைதட் டினரே !....
தானவர் ஆயிரர் தங்களால் இயன்ற
திசையெலாஞ் சுட்டுத் தசைமலை குவித்தும்
பயனிலை ; தாமே பயிற்றிய படையெலாம்,
தூம கேது தொகுத்த தாதரும்
எதிர்த்து நின்றனர் ; என்னே வியப்பு ...
கொல்கொல் லென்று கூவினர் அரக்கர்.
வெல்வெல் லென்றே வீறிய தூரே !
அந்தச் சமயம் அரண்மனைக் குள்ளே
காவலை வீழ்த்திக் கலியன் புகுந்து,
சபையைக் கூட்டிச் சாற்றிய தென்னே !

15. கலி பணிந்த படலம்

போனதுயர் போனதினிப் புதுயுகத்தைக் கண்டு விட்டோம்.
ஈனவிருள் ஒழிந்ததடா இனியெம்மை இடர்ப்ப டுத்துந்
தானவருக் கிடமில்லை, தருமமெனும் கதிர் வீசி
ஞானரவி யெழுந்ததென்றே ஞாலமக்கள் ஓலமிட்டார்.

ஆவியினும் அரியநலம் ஆகியதன் னுரிமையினைப்
பாவமெனும் பஞ்சிறையிற் பந்தனைசெய் கலியவனும்
சீவனிலே சுத்தவொளி புகுந்திடவே திருந்தி வந்தான் ;
ஏவரெமை யினியடிமை யென்றடக்க வல்லவரே.

சிக்கியநற் பைங்கிளியைச் சிறகரிந்து கூண்டடைத்தே
அக்கவெனப் பயிற்றிவைக்கும் ஆசையுள்ள மாந்தரைப்போல்,
மிக்கவுயர் கலையோங்கி, மேன்மைபெற்ற நாட்டினிலே
புக்கடிமைக் கல்வியெமைப் பொய்யடிமை யாக்கியதே.

மோகிவலைப் பட்டிருந்த மூடமனக் கலிகொணர,
தேகபல மிகுமரக்கர், தீமைவடி வானவர்கள்,
சோகமுறச் சுதந்தரத்தைச் சொல்லிறந்தே பரிதவிக்கும்
மூகையெனச் செய்ததெல்லாம் மூய்ந்ததிடர் ஒய்ந்ததுவே !

வாயிருந்தும் பேசாது, வலிவிருந்தும் கைகட்டித்
தாயிருந்தும் பசிதவிக்கும் தனயரெனத் தாழ்ந்துவிட்டோம்
பேயிருந்த சுடுகாடாய்ப் பிறர்கொள்ளை யடித்திடவே
தேயமக்கள் பார்த்திருந்த தீநாட்கள் ஒழிந்தனவே.... 20

சத்தியசுத் தர்தருமந் தாங்கியபுண் ணியபூமி,
சித்தர்களுஞ், சிங்கம்போல் செருவெல்லும் வீரர்களும்,
ஒத்துவளர் உயர்பூமி, ஊணர்களின் ஆணவப்பேய்
கத்துதலுக் கஞ்சுகின்ற காலமலை யேறியதே.

சிங்கமிருந் தாண்டுவந்த சித்திவளர் நாட்டினிலே,
பங்கயத்தி லேயமர்ந்த பாம்பெனவே, தானவத்தின்
வெங்கொடுங்கோல் வீற்றிருக்க விடுவோமோ...விடுதலையோ ?..
எங்கள்வள நாடெமதே யாமதற்கு மன்னரென்போம்.

ஆத்துமஞா னமும்,அன்பும், அருட்பணியும், அருளரசுந்
தோத்திரமும், சுதந்தரமுந் துலங்குகின்ற வளநாட்டில்,
ஆத்திரமும் அசுரர்களின் ஆணவமும், கொடுங்கோலும்,
நாத்திகமும், வந்தொழிந்தே நாடுநம தானதுவே.

சேர்ந்தவரைப் பிரித்திடுவார் ; தேசவுணர் வழித்திடுவார் ;
நேர்ந்தவரை அடிமைசெய்வார் , நேர்மையில்லா ஒற்றர்களால்
தேர்ந்த நலத் தொண்டர்களைத் தும்மிடினுஞ் சிறையிடுவார் ;
சோர்ந்தவரைத் தொக்குகின்ற தூமாசுரர் வீழ்ந்தனரே.

சாற்றையெல்லாம் பிழிந்துண்டு சக்கையினைத் தந்துந் தம்மைப்
போற்றிமிகத் தற்புகழும் புன்மதியர், உள்ளமில்லார்,
ஆற்றலெலாந் தீமையலால், அணுவேனு நன்மையிலார்—
காற்றினிலே தூசியெனக் காலவெள்ளத் தேமறைந்தார்.

தாமுலகைப் பிடித்தாட்டும் தறுகண்மை மிகவுடையார்,
நாமுவக்கும் வழியடைப்பார், நரிபுலிஒ நாய்மனத்தார்,
பாமரரை மயக்கிடுவார், பண்டிதரை அடக்கிடுவார்
பூமியிலே இவர்கொடுமை பூண்டோடே பொன்றியதே...

வீடுநலம் பெருகிடவே, வீதிநலம் பெருகிடவே,
நாடுநலம் பெருகிடவே ஞாலநலம் பெருகிடவே
தேடுநலம் கைக்குவந்து சேர்ந்ததெனத் தீரர்களா
பாடுகமே சுத்தசக்தி ஓம்எனவே பாடுகமே !

பழம்பெரும் பான்மை கண்டு புதுப்பெரும் பண்பு ணர்ந்து,
செழுந்திருப் புனித னன்பர் செயசெய சுத்த வென்றே,
எழுந்தனர் இருபா லாரும் கதிர்க்கொடி ஏந்தி நாட்டில்
அழுந்திருள் அகல, வெற்றி யருளொளி துலங்க மாதோ !

மலருடன் மணமும் போல, வாழ்வுடன் யோகம் போல,
நலமுறக் கற்ற நாட்டார் நயவஞ்சப் பிரிவி னைகள்
இலையெனச் செய்தார், அச்சம் இரவுடன் அடிமை நோயும்
வலைவிரி வஞ்சச் சூதும் வாய்ப்பற மறையச் செய்தார்.

கோழைக ளில்லை நாட்டிற் கோட்சொலும் புல்ல ரில்லை ;
ஏழைக ளில்லை ; கல்வி தொழிலறி யாதா ரில்லை ;
பீழைக ளில்லை தெய்வப் பெருமையை விளக்கி வாழும்
தோழர்க ளாக மாந்தர் சுதந்தர முழக்கஞ் செய்தார்.

ஒருபெருங் கடவுள் ஆடும், ஒருபுவி யால யத்தில்
ஒருகுல ஆன்ம நேயர் ஒருமன மொன்றி வாழ்வோம்,
ஒருபொது மொழியுந் தந்தந் தாய்மொழி யுடனே கற்போம்,
ஒருதிரு வருளின் வாழ்வோம் என்றனர் உண்மை நல்லார்.

சத்தியக் கடவுளுக்குச் சாதியு மதமு மில்லை ;
எத்தகை யாரும் உள்ளே எண்ணிடின் அடைவா ரென்னுந்
தத்துவம் பரவித் தூய சமத்துவம் பரவி, மாந்தர்
ஒத்துழைத் துரிமை காக்கும் உறுதியைப் பூண்டெ ழுந்தார்.

மதச்செருக் கின்றித் தேச மமதையு மின்றிச் செல்வ
முதற்செருக் கின்றித் தத்தம் மொழிச்செருக் கின்றி, எல்லாம்
பொதுச்சிறப் புணர்ச்சி கொண்டு புவிநலம் புரிந்து வீர
சுதந்தர ராக வாழத் துணிந்தநல் லுறுதி கொண்டார்.

சுத்தமே கடவுள், ஆத்ம சுத்தமே சுகசன் மார்க்கம்,
சுத்தமே சக்தி, சுத்த சங்கமே தொகுத்த மாந்தர்,
சுத்தமே கொள்கை, சுத்த சேவையே சுருதி—வாழ்க்கை ;
சுத்த ஓம் சக்தி யென்னும் மந்திரஞ் சொல்லு வோமே....

எந்தமா மதமு மின்றி இயற்கையோ டிணைந்து வாழ்வோம்,
சொந்தமென் றென்று மில்லோம் ; சுதந்தரப் பொதுவில் வாழ்வோம்,
பந்தமொன் றில்லோம் அன்பும் பணியுடன் அறிவும் போற்றி
இந்தமா நிலத்தில் எல்லாம் இன்புற வாழு வோமே. 80

தனிச்செருக் கின்றி, ஏறுந் தனச்செருக் கின்றி, பேத
மனச்செருக் கின்றி, நாடு மதநிறச் செருக்கு மின்றி,
இனச்செருக் கின்றி, இங்கே இறைவனின் மக்க ளெல்லாம்
எனச்சம ரசத்தி லொன்றி ஏகமாய் வாழு வோமே.

உலகெலாம் விரிநா டாகும் ; உள்ளெலாம் கோவி லாகும்,
பலமத வாத மற்ற பண்புள சுத்த சக்தி
நிலவிடும் தியான கான நிட்டையே சமய மாகும் ;
கலகமில் லாது வாழக் கற்றனம் கருணை யாலே.

நாட்டினை நாடு பற்றி நலிப்பதை நலிக்க நின்றேம்.
சேட்டைசெய் அசுர மாயத் தீவினை தீர நின்றேம்,
வேட்டைகொள் அநீதி தன்னை, வெருவுறும் அடிமைக்கோட்டைப்
பூட்டினை யுடைத்து வாய்மைச் சுதந்தரம் பொலிய வாழ்வோம்.

உண்மையை உண்மையாக உயர்த்திட உழைப்போம் ; பூவில்
பெண்மையின் பெருமை காப்போம் ; ஆண்மையை வளர்த்து நெஞ்சத்
திண்மைகொண் டெதிர்த்து நிற்குந் தீமையைத் தகர்ப்போம் ; என்றும்
வண்மையே புரியச் செல்வ வளமையைப் பெருக்கு வோமே!

புன்மையை வெறுப்போம் ; கோள்பொய் பொறுமையை மிக வெறுப்போம்,
நன்மையை உகப்போம் ; தீமை நலியவே தொண்டு செய்வோம்;
பன்மையில்ஒருமைகாண்போம்;பாரினிற் பொதுமைகாண்போம் ;
தன்மையில் உலகங் காண்போம்—சத்திய சுத்த நேயர். 100

எமனெதிர் வந்த போதும் இறைவனை மறக்க மாட்டோம் ;
நமதுநா மென்னும் பித்தர் நம்மையே மாற்றப் பாரோம்.
சமரஸப் பான்மை யோடு தருமமே கரும மாகி,
அமரசுத் தான்ம நேயர் அமைதியாய் வாழு வோமே.

வாழிய சுத்த மூர்த்தி, வாழிய சுத்த தர்மம்
வாழிய சுத்த சங்கம் வளர்பிறை போல நாளும் !
வாழிய யோகபோக வளம்பெறுந் தெய்வ ஜாதி ;
வாழிய உலக மெல்லாம் வானருள் அரசு வாழ்க !

இவ்வகை நாட்டில் எழுந்திரு மக்கள்,
ஏறுபோற் பீடுடை நடையார்,
உய்வகை கண்ட உத்தமன் கொள்கை
உலகெலாம் அறிந்திட ஓதிச்
செய்வகை யறிந்து செய்வன செய்து,
தேசத்தின் சேமத்தை நினைந்து,
தெய்வத்தைப் போற்றிக் கலிநக ருள்ளே
திடுதிடு வெனப்புகுந் தாரே....

கதிரினிற் குளித்துக் கங்கையில் ஆடிக்
கங்கணங் கட்டியின் றெழுந்தே,
புதியச காப்தம் தோற்றிட வேண்டிப்
புண்ணியப் புனிதசங் கத்தார்
அதிசயமான தவவொளி பரப்பி,
அகங்களைக் காந்தம்போற் கவர்ந்தே
துதியுடன் புகுந்தார் சுடர்மணிக் கணம்போல்
சுதந்தர பேரிகை முழங்க...

வாதெலாம் வம்பு வழக்கெலாம், சும்மா
வாயடைத் தெதிர்வந்து வணங்கத்
தீதெலாம் அஞ்சித் தினகரன் முன்னே
திரள்பனித் துளியென மறையத்
தாதரு மாறித் தம்மவ ராகத்
தரங்கெட்ட ஒற்றருந் திருந்தப்
பாதக வூணர் படைகளுந் திகைக்கப்
பரமன்பேர் பாடினர் புனிதர்.

ஊரெலாந் திரளாய் ஓம்சுத்த சக்தி
ஓமென நல்வர வுரைக்கப்
பாரெலாம் அறிந்த சுத்தசன் மார்க்கப்
பண்பினர் வருகநன் றெனவே,

நேரலா தாரும் நேர்மைகொண் டுரைக்க
நிஞயர் கதிர்க்கொடி நிலவத்
தாரெலாஞ் சூட்டித் தமர்வர வேற்கத்
தமிழ்க்கடல் முழங்கிட வந்தார்....

தீதினை விலக்கித் திருவுறு நன்மை
தினந்தினஞ் செய்திட லொன்றே
காதலாய்க் கொண்ட கண்ணனார் வருக !
கடமைக்குக் கருத்தினை யளித்துச்
சாதலுந் துணிந்து சத்தியத் தொண்டைச்
சரியையும் யோகமும் எனவே
நீதியாய்ச் செய்த நின்மலர் வருக
நித்தியா னந்தர்கள் வருக !

எத்தனை மொழியார், எத்தனை மதத்தார்
எத்தனை நாட்டினர் உண்டோ,
அத்தனை பேரும் அகம்புற மொன்றி
அன்புடன் வருகவென் றார்த்தார்—
உத்தமத் தமிழர் கன்னடர் தெலுங்கர்
உரமிகு கேரளர் வங்கர்
மெத்த மராடர் கூர்ச்சரர் சிந்தர்
விதவிதப் பண்களை யிசைத்தார்.

தூக்கமும் அடிமைத் தொண்டுமே யாகத்
துருப்பிடித் திருந்தவர் தம்மை
ஊக்கமாய்த் தேசப் பணிநலம் புரிந்தே
உயிர்த்திட நடத்திய உரவோர்,
ஆக்கவே லையிலே அற்புத வெற்றி
யடைந்தவர், அரக்கரை யெங்குந்
தீக்கதிர் முன்னே யிருளெனச் செய்த
திவ்விய யோகிகள் வாழ்க...

கொடியவெம் பாசம் வீசியே நம்மைக்
குலங்கெடக் கொன்றிடும் அரக்கர்,
அடிமைவி லங்கை ஆத்மசக் தியினால்
அறுத்தெறிந் தருளிய முனிவர்,
மிடிபிணி மடமை யிருளினைப் போக்கி
மேன்மையாம் அறிவுடன் தொழிலும்,
ஒடிமனம் உறுதி யடைந்திட யோக
சக்தியும் உதவியோர் வாழ்க.

புண்ணிய பூமி விழித்தெழச் செய்தார்,
பூமியிற் கிழக்கிலும் மேற்கும்,
கண்ணிய முள்ள நாடெலாஞ் சென்றே
கடவுளன் பறிவினை விதைத்தார்.
பண்ணிய தவத்தாற் பரிதியின் கதிர்போற்
பாவன சக்தியைப் பரப்பி,
எண்ணிய தியற்றும் எழிலுடைப் பெரியார்
எழுகென ஏற்றதந் நகரே....

சுத்தனின் ஆணை தாங்கிய புலவோன்
சுதந்தர வீரரின் சிங்கம்
சித்தியின் அமைச்சன் சித்திமான் சேனை
செறிதரக் கலிநகர் புகுந்தே,
சத்துரு யாரும் எதிர்த்திடா தெல்லாம்
சாந்தமா யிருந்திடக் கண்டே
மெத்தவு மகிழ்ந்து, வினவுமுன் கலியன்
வேகமாய் விரைந்தெதிர் கொண்டான்.

நல்வர வாகுக ! சித்தி நாயகன்,
வெல்கநங் கதிர்க்கொடி வீறுற் றேங்குக,
புல்லிய லரக்கரின் பொருமை வீழுக,
செல்வமார் புண்ணிய தேசம் வாழ்கவே !

சித்திமான் வருகெனத் திருந்து நங்கலி
பத்திமா னாகிய பணிவொ டேற்றதும்,
புத்திமான் உலகிது புனித னாகிய
சக்திமான் செயலெனச் சாற்றி நின்றதால்.

கொதிப்புடன் போர்களைக் கொடுத்த தீயவன்,
சதிப்படை யடங்கிடத் தரும தூதனைய்
எதிர்ப்பறப் பணிந்ததும், இளகு நெஞ்சினுல்
மதிப்புற வேற்றதும் வரதன் செய்கையே.

கிலிபிடித் துலகமே கிடுகி டுத்திட
நலிவறு சமர்செயு நாச நாயகன்
கலியுளங் கருணையுங் கண்ட காரியம்
புலிபசு வாகிய புதுமை போன்றதே.

எம்புவி, எம்மதம், எமது நாத்திகம்,
எம்புகழ், எம்பெருஞ் செல்வம், என்றெலாம்
வம்புரை யகந்தையு மாறி, ஈசனை
நம்புத லானது நாதன் சக்தியால்.

அரக்கரின் மாயத்தை யறிந்த நங்கலி,
செருக்கினை நீத்தருட் செம்மல் சுத்தனின்
திருக்கரு ணைதனைச் சிந்தித் தன்பினால்
உருக்கிய நெஞ்சுடன் உரைபு கானரோ !

கலியன்

சுத்தனின் பதமலர் துதித்து நாயினேன்
சித்தமுந் திருந்தினன், செய்கை சீருற்றேன் ;
அத்தகு குருபணிக் காசை கொண்டினும்
இத்தகு மானிடம் ஏந்தி நிற்கின்றேன்.

கேளுங்கள் சித்திமான், கேள்வர், நற்சனம்,
கேளுங்கள் என்மதி கெட்டு மீண்டதைக்
கேளுங்கள் என்னுளங் கிளர்ந்த மாற்றத்தை—
வாளுடன் வாழ்ந்தவன் வணங்கக் கற்றனன்.

மதர்த்த மோகி மதியை மயக்கிடப்
பதைத்திப் பாரைப் பறித்திசை யாளவே
சிதைத்த னன்பெருஞ் சித்தி மரபினை
வதைத்த னன்மர போங்கிய வாய்மையை.

இதந்தரும் என தண்ணல் இயம்பிய
பதந்த ரும்உரை யைப்பதர் என்றனர்,
கதந்தரும் அரக்கர் கையின் பாவையாய்ச்
சுதந்தரம் இழந்தேன் சுகங் கெட்டனன்.

புள்ளி மானைப் புலியு நரிகளுங்
கள்ளருந் துயர் செய்திடக் காட்டினேன் ;
கள்ள ரக்க ருடன்களித் தாடினேன் ;
உள்ளம் வேகுமச் செய்கையை உள்ளினால்.

சொந்த நாட்டிற் சுதந்தர மூச்சினை
முந்த விக்க முரடன் முயன்றனன் ;
பந்த னைசெய் பகைவரை நத்தினேன்—
அந்தப் பாவமென் ஆணவப் பாவமே !

கூழைக் கும்பிடு போட்டிடுங் குள்ளரைக்
கோழைத் தாதரைக் குண்டுணிச் சுப்பரை
பாழ ரக்கரைப் பற்றியிப் பாரினைச்
சூழும் வென்று சுகம்பெற நாடினேன்.

சடத்தைக் கொண்டு சகத்தினை யாண்டிட
மடத்து ணிவுடன் மாசறு தீரரைச்
சுடத்து ணிந்திரு தோல்வி யடைந்துமே
கெடத்து ணிந்தனன் கெட்டவர் கேண்மையால்.

தன்னறம் விடுத்தனன் ; சத்தி யன்சொலும்
மன்னறம் விடுத்தனன் ; மரபின் வேருக்கே
இன்னல்செய் கோடரி யெனமு ளைத்தனன்,
என்னினும் பாதகர் இருக்க வல்லரோ ?

அண்ணலை யெண்ணிலன் ; அறத்தை யெண்ணிலேன்.
புண்ணிய பூமியின் புகழை யெண்ணிலேன் ;
கண்ணிலன் உலகுயிர் கண்க லங்கவே
பண்ணினன் பலதரம் பாபப் போர்வினை.

தீரரும் மனசினைச் செயித்த வீரரும்,
ஆருயிர் போலவே அருளிற் காத்திடும்
பாரத தருமத்தின் பண்ப றிந்திலேன்,
ஊரினை ஊணருக் குணவென் றுக்கினேன்.

உத்தமக் குணமெலாம் ஒருங்கு சேர்ந்தவன்,
இத்திரு வுலகெலாம் இறைமை தாங்குவோன்,
சுத்தனென் அண்ணலின் சுடர்வி ளக்கினை,
எத்தனை அகந்தைகொண் டின்னல் செய்தனன் !

கூற்றென நாட்டினைக் குலைக்கப் போர்செய்து,
தோற்றனன் இனுமினுந் தொடர்ந்து மோகியே
சாற்றிய சூழ்ச்சியாற் சதிசெய் தானவர்
போற்றிய சூழ்ச்சியிற் புகுந்து கெட்டனன்.

பைகட்டிக் குவித்திடப் பாரை யேய்த்திடப்
பொய்கட்டி வாணிகம் புரிந்து, மக்களைக்
கைகட்டி வாய்கட்டிக் கடுமை யாகவே
மெய்கட்டி யடிமைசெய் வீண ராக்கினேன்.

தாயினைச் சிறையிடத் தனயர் கையுடன்
வாயினை யடக்கிட, மதிகெ டுத்திட,
நாயடி மையென நடக்கச் சட்டங்கள்—
பேயென விதித்தனன் பெரிய நாட்டிலே.

தூயரும் அழிந்திடச் சூது கட்புலால்
வாய்நகை வேசியின் வலைவி ரித்தனன் ;
நோயினுங் கொடியவர் நூறு நூறுபேர்
ஆயபுல் லரக்கரை அழைத்து வந்தனன்.

தந்திர நாத்திகத் தான வர்படை
தந்திட நானிந்தத் தரும நாட்டிற்கே
பந்தனைத் துயர்செய்த பாபம் யாவையும்
வந்தெனைச் சூழ்ந்தன மாய மேகம்போல்.

வஞ்சனேன் பாவங்கள் வரம்பி லாதன
நஞ்சனேன் கொடுமையை நாளும் எண்ணியே
அஞ்சினேன் சுத்தனின் அருட்க ருணையால்
நெஞ்சகந் தெளிந்துமை நிமிர்ந்து காண்கின்றேன்.

உறங்கிய உலகினை யோக சித்தியால்
அறந்தர எழுப்பிய ஐயன் என்னையும்,
மறந்திலன் மாயையின் மறைப்பு நீக்கியே
திறங்கொள எழுப்பினன் சிறையி ருட்டிலே.

எவரையென் னுயிர்த்துணை யெனம யங்கினேன்,
அவரெனைச் சிறையினில் அடைத்த பின்னரே,
துவரிதழ் மோகியைத் துறந்த பின்னரே,
புவியியல் அறிந்தனன் புழுத்த நாயனேன்.

சிறையினிற் பிழைகளைச் சிந்தித் தையன்பாற்
குறைகளை முறையிட்டுக் கொண்டி ருந்தநாள்,
இறைவனென் இதயத்தில் இனித் திருந்தியான்
நிறைவுறும் தன்மையை நிலவக் காட்டினன்.

தூயவன் ஏவிய தொண்டர் கூட்டமும்,
தேயமெ லாந்திரு செழிக்க வாழுநாள்,
தீயரின் கலிநகர் திருந்த வேண்டியும்
தாயருள் பூத்திடத் தயவு செய்தனர்.

என்மன மாற்றத்தை இயம்பக் கேட்டவர்
நன்மனத் தொண்டரை நாட்டிக் காவலில்,
வன்மனத் தானவர் வஞ்சம் தோற்கவே,
பொன்மனக் கருணையாற் புகல ளித்தனர்.

வன்சிறை தப்பவும், வாய்மை காக்கவும்,
என்னர செய்தவும், இகலை வீழ்த்தவும்,
தன்னிக ரற்றவன் சமர்த்தன் சித்திமான்
*துன்சகோ தரனெனத் துணையு மீந்தனன்.

நல்ல நேயர் நடத்திடத் தப்பிநான்
கல்ல றையைக் கடந்தெழும் ஆவிபோல்
புல்ல ரக்கர் புரியிற் புகுந்ததும்
கொல்லுந் தூமன் கொடுமை யறிந்தனன்.

நிலையி லாது நினைத்ததைச் செய்திடுங்
கலை சிறந்த கடுமன மோகியின்
வலையில் வீழ்ந்து மயங்கிய ‡வாலன்போல்
கொலை மறைத்துருக் கொண்டு புகுந்தனன்.

---

* *துன் :துன்னிய, எய்திய ‡ மோகியின் : ஆசைநாயகன்*

என்னைக் கொன்றிடக் கேதுவை யேவினாள்,
இன்ன லுக்குத் தலைவி, இரக்கமில்
அன்ன மோகியை ஆவி குடித்தனன் ;
பின்ன ரேபிற விப்பய னெய்தினேன்.

பழி மிகுந்த பதகனை, எம்பிரான்
அழிவி னின்றும் அருளுக் குயர்த்தினான் ;
விழி திறந்திட நன்மை விளக்கினான் ;
வழிதி றந்தது வாய்மை திறந்ததே.

தூக்க மற்றவன், சுத்த னருளினால்
ஏக்க மற்றனன் ; என்னை யினியவன்
ஆக்க வேலைக் கடைக்கல மாக்கலே—
நோக்கம் ; வேறொரு நோக்கமு மில்லையே.

நாத்தி கக்கலி நாட்டின தீநகர்
ஆத்தி கக்கரு ணைநக ராகுக.
ஏத்து சித்திக் கினிய துரிமையாம் ;
பாத்தி யம்எனக் கன்புப் பணியொன்றே.

மன்னித் தென்னை மறந்திடு வீரினி
என்னன் பாகும் இறையைச் சரண்புக
இன்ன ரேகுவன் இந்திரை மந்திரி
மன்னு மாட்சி புரிந்தினி வாழ்கவே.

ஒப்ப ரிய உயர்குணச் செம்மலைச்
செப்பி நற்பணி செய்தினி வாழுவேன்.
எப்பொ ருளும் இனியெனக் கில்லெனத்
தப்பி னான்கலி சத்திய சீலனாய்...

சித்திமான்

புலியென வாழ்ந்து புரைமிகச் செய்து
புனிதனின் அருளினால் உய்த
கலியனைக் கேட்டுக் கருணையன் "இனிநீ
கடவுளின் அடியவன், மலைமேல்
இலகிடும் சுத்தன் இனிதுனை ஏற்பான் ;
ஏகெனச்" சித்திமா னாங்கே
நிலவிடுந் தொண்டர் நெடுந்துணை செய்ய
நிமலன்பாற் செலவிடுத் தானே.

வாட்சின வெறிகள் அடங்கிட, நாட்டில்
வளர்ந்திட வாய்மையும் அன்பும்,
கோட்சின வஞ்சங் குறுகிட வரக்கர்
கொலைப்பழி நீங்கிட உடனே,

ஆட்சியிற் சிறந்த சித்திநல் லமைச்சன்,
அருளர சியலினை வகுத்து,
மாட்சியிற் சிறந்த மக்கள்பால் விடுத்து,
மகிழ்ந்தனன் புகழ்சுமந் தனனே....

தானவர் முயற்சி தட்டழிந் திடவுந்
தருமமே நிலையுயர்ந் திடவும்,
மானவர் மரபு மாசிலாத் தெய்வ
மரபென வளஞ்சிறந் திடவும்,
ஆனகா ரியங்கள் ஆற்றிடும் சுத்தன்
அன்பரை நாடெலாம் அனுப்பி,
ஞானமும் கரும விரமும் செழிக்க
நாடினுன் சித்திமந் திரியே.

16. புது மலர்ச்சிப் படலம்

அதிகஞ் சொல்லுவ தென்னினி ஆருல கெல்லாம்
புதிய நல்விழிப் படைந்தது பூரணன் அருளால்,
சதிசெய் ஆணவ தானவப் படைகளுந் திகைக்க—
மதிமி குந்தநந் தொண்டர்கள் வாழிய மாதோ !

ஐந்து கண்டத்தும், அமர்பல நாடுகள் எல்லாம்,
"உய்ந்த னம்"என ஊர்தொறும் ஊர்தொறும் அழைத்தே,
வந்த னத்துடன் வாய்மையைக் கண்டுகேட் டுவந்து,
சிந்தை செய்கையுந் துகளறத் திருந்தின பரிந்தே.

தன்ன லங்களைத் தவிர்த்தனர் ; பொதுநலந் தழைக்கப்
பன்ன லங்களைப் புரிந்தனர் ; பாருயிர் செழிக்கப்
பொன்ன லங்களைத் தொழில்வளர் புண்ணியஞ் செய்தார் ;
உன்ன தக்கருத் தோங்கிய உலகினில் வாழ்வார்.

கையு ழைத்தன ; கருத்துகள் கடவுளை நினைத்த ;
மெய்யு ழைத்தன ; வாய்மலர் மெலிந்தவர்க் குதவப்
பைய விழ்த்தன பணமிகு மனங்களும் ; பாரில்
ஐயன் ஏவிய தொண்டரின் அருட்பணிச் சிறப்பால்.

அன்பு கொண்டவர் ஆருயிர் யாவிற்கும்
இன்ப நல்லறம் செய்யும் இயல்பினர்
துன்ப மற்ற சுதந்தரத் தொண்டரை
நம்பி மாந்தர் நடந்து சிறந்தனர்.

தனிய கந்தையும், சாதி யகந்தையும்,
எனதுல கென் றிகல்செய் யகந்தையும்,
இனவ கந்தையும் இன்றி, மனிதரை
மனித ராக மதித்தனர் மாந்தரே.

இந்து முஸ்லீம் கிறிஸ்து வெனுரினி
அந்தண் ஆரியர் திராவிடர் என்றிலார்,
எந்தத் தோல்வீவ காரமும் எண்ணிடார்
சிந்தை யொன்றிய மானிடத் தேவரே.

தீட்டு தீட்டென் றெதுங்கிடச் செய்வதும்,
பூட்டி வைத்துப் பொருள் சிறை காப்பதும்,
வீட்டில் ஓர்மதம் வீதியி லோர்மதம்
காட்டும் வேடமும் கட்டுடன் விட்டனர்.

மொட்டை தாடி குடுமி முகத்துரு
பொட்டு நாமம்வி பூதி பலவகைச்
சட்டை கண்டிடுஞ் சண்டைகள் யாவையும்
விட்டொ ழித்தனர் உள்ளதை விண்டவர்.

தற்பெரு மைகளுஞ் சாதி மாமதக்
கற்பனை வேடமுங் காட்டி, நாட்டிலே
சிற்சிலர் எதிர்த்தனர் ; சிரித்து, வைதனர் ;
அற்புதம் இவர்களும் அடங்கிப் போயினர்.

பட்டமும் பதவியும் பந்தனை செயும்
சட்டமும் கொடுமையின் சம்ப மோங்கிடுந்
திட்டமும், அரக்கரின் செருவும் போக்கிடக்
கட்டங்கள் பொறுத்தருங் கடமை காத்தனர்.

வன்ப டையின் வலிமையைக் காட்டிலும்,
பொன்ப டைத்த புகழினைக் காட்டிலும்,
அன்பொ டொற்றுமை யாகும் அருட்பணி
இன்ப மென்றனர் எண்ணம் உயர்ந்தவர்.

ஞான சூனிய ரான நடலையர்,
ஈனச் சேவக மேற்கும் அடிமைகள்,
மானி டர்கள் மயங்கிடு மட்டுமே
தான வரின் சமர்த்தும் பலிக்குமே.

நந்து னைகொடு நம்மை நலிப்பவர்,
நந்து யர்களைக் கண்டு நகைப்பவர்,
நந்துணை மறுத் தாலொரு நாடிலார் ;
வந்த தானவர் மர்ம மிதுவென்றுர்.

இரும்பும் ஈயமும் எண்ணெயும் செம்புடன்,
கரும்பு கைக்கரி கந்தகம் மாங்கனம்
பெரும்ப கைச்சமர்ப் பேய்ச்சரக் கென்னவே,
தருங்க ளிகளைத் தப்பறக் காத்தனர்.

சண்டை தூண்டும் சரக்குகள் யாவையும்,
அண்டை நாட்டி லகப்படா வாறவர்,
எண்டி சையிலும் உண்மை யியம்பியே
தொண்டர் போர்வெறி போக்கினர் சூழ்ச்சியால்.

யோக சித்தி புறுப்புறு தொண்டர்கள்
சீக ரத்திலு சிறிய தேசத்தும்,
வேக மான வியன்பணி மேன்மையால்
ஏக மான உணர்ச்சி யெழுப்பினர்.

சத்தி யன்னவர் தம்பணி சீர்பெறச்
சுத்த யோகச் சுடரைப் பரப்பியே
சத்தியயுகத் தத்துவஞ் சாற்றியே
புத்து ணர்வைப் பொலிவுறத் தூண்டினள்.

வானரசு மண்மீது வந்த தன்பீர்,
மாயவிருட் சங்கடங்கள் மறைந்த தன்பீர்—
மோனத்தின் முடியினிலே முளைத்த சோதி,
முத்திநதி பாய்மூல சக்திச் சோதி,
ஞானத்தண் கதிர்வீசு நாத ஜோதி,
ஞாலத்தைப் பொன்னாக்க நயந்த ஜோதி,
தேனொத்த பேரின்பந் திளைத்த ஜோதி—
சித்தாந்தச் சிரம் விளங்கும் சுத்த ஜோதி....

அத்தகைய ஜோதியரு ளார்வங் கொண்டே
அன்புசெயும் திருத்தொண்டர் அகில மெல்லாம்
சத்தியமும் சாதிமத பேத மில்லாச்
சன்மார்க்க ஒற்றுமையும் தழைக்க வேண்டிப்
பத்திமையும் அருட்பணியும் பதிஞானத்தின்
பண்புடனே திண்விரதம் பலிக்க வேண்டிப்
புத்துருவும் புதுவாழ்வும் புதிய சீரும்,
பொலிந்திடவே பொதுநலங்கள் போற்றி னரே.

பொல்லாங்கும் பொய்யுரையும் பொறாமை நோயும்,
புறங்கூற்றும் போலிநடை யுடையும் போக,
அல்லலுறும் அசுரபயம் அற்றுப் போக,
ஆத்மபலம் யோகத்தாற் பூத்துப் பொங்க,

வெல்லாண்மை வீறுபெறச் சோர்வு நீங்க,
வேறுசெயும் பேதமனம் வேரோ டேகி,
எல்லாரும் ஓர்குலமாய் இனிது வாழ,
இன்பமெனும் இரவியெழுந் திலகக் காணீர்.

கருவினையை மாற்றுகின்ற கருணை வள்ளல்,
காசினிக்குப் புதுவழியைக் காட்டும் வள்ளல்,
இருவினையின் பற்றின்றி இயற்றும் செய்கை
இறைவனுக்கு வழிபாடாய் இயற்றச் செய்யும்
குருமணியென் குறைதீர்த்த கோமான், தெய்வக்
குலமணியின் அன்பினிலே குலவி வாழ்வீர்,
ஒருபரமன் உயிர்க்குயிராய் உள்ளத் துள்ள
ஒளிமணியைத் தியானத்தால் ஒன்று வீரே.

தேனோங்குங் கலைச்சோலை யாக வாழ்க்கை
திருவோங்கத் தெய்வவொளி செழிப்புற் றோங்க,
வானோங்கும் பேரின்பம் வளம்பெற் றோங்க
வரமோங்குங் கவிவாக்கு மலர்க ளோங்க,
ஊனோங்கும் உயிர்க்குலத்தின் உளஞ்சி லிர்க்க,
உண்மையறி வோங்கவுயர் பெண்மை யோங்க,
மானோங்கு பாகனரு ளாலே யென்றும்
மங்களமோங் கிடநல்லோர் வருகு வீரே....

ஆண்டானைத் தலைக்கொள்வோம் ; அவனுக் கேயாம்
அருச்சனையாய் அருட்பணிகள் ஆற்று வோமே ;
நீண்டமுடி கவித்தாலும் நீண்டு போகோம் ;
நிந்தனைகள் வந்தாலும் நெஞ்சங் குன்றோம் ;
தூண்டுசுடர் ஞானவெளி துலங்க, நல்ல
தொண்டுகளே செய்திடுவோம் தூய நேயர் ;
வேண்டோமிப் புவிப்புகழும் ; வீறுகொண்ட
வேதாந்தப் பொதுவினிலே விளங்கு வோமே.

புகழுக்கோ கம்பாழ்வார் கவிபு னைந்தார் ?
புகழுக்கோ இலியாதை ஓமர் செய்தார் ?
புகழுக்கோ திருக்காட்சி யிசைத்தார் தாந்தே ?
புகழுக்கோ ஷேக்ஸ்பியர்நா டகங்கள் செய்தார் ?
புகழுக்கோ தேவாரம் இசைத்தார் மூவர் ?
புகழுக்கோ வள்ளுவனார் பொதுநூல் செய்தார் ?
புகழ்வேட்டை யாடாது பூசை யாகப்
பொய்யில்லா மெய்த்தொண்டு புரிகு வோமே !

எவருக்குந் திங்கின்றி இடும்பை யின்றி,
எள்ளளவும் இழிவான பொறுமை யின்றி,
அவரவரின் ஆற்றலுக்கே ஏற்ற தாகும்,
அருட்பணியை அன்புக்கே ஆற்று வோமே;
எவருக்கும் அஞ்சாமல் இதயந் தன்னில்
இறைவனுடன் இரண்டறவே ஏக மாகி,
நவயுகத்து நாதனிடம் பணிகள் செய்வீர்;
நரநாரா யணராக நன்று வாழ்வீர்.

மானிடரின் அரசியலை மாற்ற வேண்டி
வால்தேரும், ரூஸ்ஸோவும், மார்க்சும் வந்தார்;
தீனர்துயர் தீர்க்க லெனின் ஸ்டாலின் வந்தார்,
செல்வமுடன் செய்தொழிலும் பொதுமை செய்தார்.
கோனாட்சி குடியாட்சி யாகச் செய்தார்,
கொலையாலே கொடுங்கோல்கள் குமையச் செய்தார்;
ஆனபொழு தும்அசுரப் போர்கள் இன்னும்
அழிநாட கஞ்செய்வ தறிகு வோமே.

துன்பத்தைத் தொழிலாகத் தொடரும் ஊணர்,
துறுதுறுத்துத் திரிகின்ற துட்ட ஊணர்,
மன்பதையைக் கொசுப்போல மதிக்கும் ஊணர்,
மாடாடு மதுவுண்டு மதங்கொள் ஊணர்,
அன்புவழி யறியாமல் அவனி யெல்லாம்
அதர்மப்போர் ஆக்குகின்ற அரக்கர் தம்மை
நம்பியடி மைப்பட்டார் ஞாலத் திற்கே
நமன்போல நலிவினைகள் செய்வா ரம்மா!

ஆசையுடன் ஆணவமும் அளைந்த தீவில்,
அசுரபலம் கொண்டுலவும் அரக்கர் கோடி,
காசினியைக் கம்ஸதுரி யோதனுதிக்
காடென்னச் செய்தார்கள் கத்தி தீட்டி,
வேசைமது ஊன்சூது கொலைவே கத்தை
வீரமிலாத் தந்திரத்தாற் போர்வே கத்தை
மோசமுறத் தூண்டியிவர் முப்பால் வாழ்வை
மோகவலை யாக்கிடவே முளைத்தா ரம்மா!

தினமுதிக்கும் தினகரனைத் தேட மாட்டார்,
சிறுதீபச் சுடர் வணக்கம் செய்வார் மாந்தர்,
மனமுதிக்கும் சாட்சிமொழி மதிக்க மாட்டார்;
வாய்வாதக் குப்பைகளை வாங்கி நிற்பார்.

மனைவளரும் பத்தினியை மதிக்க மாட்டார்
மதிமயக்கும் விலைமாதை மடியில் வைப்பார்,
வனமுதிக்கும் மணமலரைக் கசக்கிப் போட்டு—
வருணக்கா கிதமலரில் மயங்கு வாரே.

யானைகுதி ரைமரியா தைகள் வேண்டார் ;
இசைவிரும்பார் இயல்பாக உள்ளத்துள்ளே
மோனையெது கைநயங்கள் முற்றத் தேர்ந்தே,
முன்னுலகும் பின்னுலகும் முழுதுங் கண்டே,
தேனருவி போலூறும் தெய்வ வாக்கைத்
தெவிட்டாத நல்லமுதைச் செகத்திற் கீந்தார் ;
மானவர்கள் அவர் வாக்கை மதிக்க மாட்டார் ;
மாசுற்ற காமவழி மயங்கு வாரே.

தன்புதல்வர் தமைக்காக்குந் தாயைப் போலே,
தயவுடனே சுத்தபிரான் தந்த வாக்கை
அன்புடனே கற்றறிந்து நடப்பீர் ; அன்றே
ஆனந்தக் காவியமாம் அவனி வாழ்க்கை.
துன்பமில்லை, அச்சமில்லை, துயர மாகும்
தொத்தடிமைத் தொல்லையில்லை சொன்னேன் கேளீர் ;
இன்புறுவோம், இடர்களைவோம்; எல்லா ருக்கும்
இனியவையே மனதறியச் செய்வோம் வாரீர் !

வானிலத்தில் ஒளியுண்டு ; மழையும் உண்டு,
மண்ணினிலே பயிருண்டு ; வளமை யுண்டு ;
தேனொத்த கரும்புண்டு செந்நெ லுண்டு,
தேசமெலாம் உண்டுடுக்கச் செழிப்பு முண்டு,
மானொத்த விழியுண்டு ; மக்க ளுண்டு ;
மனையுண்டு ; வள்ளுவனார் மறையு முண்டு,
ஊனொத்த உயிர்க்குயிராம் ஒருவ னுண்டே,
உண்மைவழி வாழ்ந்தாலிங் கொண்மை யுண்டே.

உலகினிலே அநியாயம் ஒழிய வேண்டி,
உள்ளத்தில் உள்ளன்பு பொலிய வேண்டி,
கலகஞ்செய் பேராசை கவிழ வேண்டிக்
காதலுடன் கற்பொழுக்கங் காணவேண்டிப்
பலருணவைப் பறித்துண்ணும் பதகர் கூட்டம்,
பாட்டாளர் உழைப்பிற்குப் பணிய வேண்டி,
நலமெண்ணி, நலம்பேசி, நலமே செய்யும்
நல்லோரை ஞாலத்தார் மதிப்ப தென்றோ !

சத்தியஞ்சொல் மனச்சாட்சி தன்னைப் போற்றிச்
சாந்தமாய்த் தருமவழித் தொழில்க ளாற்றி,
உத்தமராய் உயர்வான சிந்தை யோங்கி,
உலகிற்கு நலஞ்செய்யும் உறுதி கொண்டே,
பித்தான பேராசைப் பேயைத் தப்பிப்
பிசகான துன்மார்க்கப் பிழைக ளின்றி
சித்திரைக்குச் சித்திரைமுன் னேற்றம் பெற்றே
சிராக மாந்தர்குலம் செழித்து வாழ்க !

மூலையிலே விதியென்று முக்கா டிட்டே
முனங்காதிர். நன்மையுற முயற்சி செய்வீர்,
காலையிலே கனிநகைசெய் மலரைப் பாரீர்,
கள்ளுண்டு வண்டிசைக்குங் கருத்தைக் காணீர்.
சோலையிலே சோடிப்புள் கூடு கட்டிச்
சுதந்தரமாய் விளையாடுஞ் சுகத்தைப் பாரீர்.
வேலையிலே கதிராவி மொண்டு மேகம்
விளைவித்து மழைபெய்யும் வியப்பைக் காணீர்.

தேகத்திற் பலம் வேண்டும் ; தெம்பு வேண்டும் ;
தீரராய்ச் செய்தொழிலைச் செய்ய வேண்டும் ;
சோகத்தைச் சோம்பலினைத் துரத்த வேண்டும் ;
சொல்லுடனே செயல்வேகந் தொடர வேண்டும்.
மோகமயக் கறச்சீவன் முத்த ராகி
முன்னுலகக் கோயில், பணி முயலவேண்டும்,
ஏகமாய் அநேகத்தை இயக்கி நிற்கும்
இறைவனருள் இன்பத்தில் ஆடுவோமே !

அந்தமதம் இந்தமதம் என்னு தீர்கள் ;
அச்சாதி யிச்சாதி என்னு தீர்கள் ;
விந்தையுறும் புதுமதங்கள் விளைக்கா தீர்கள் ;
வேற்றுமைசெய் விதிகளையே வளர்க்கா தீர்கள்,
வந்திருந்து செல்வாழ்வின் அரங்கந் தன்னில்,
வாழ்வாங்கு வாழ்ந்திடுவோம் இயல்பாய் நாளும் ;
சந்ததமும் சுத்தசுதந் தரச மத்வம்
தருகின்ற சத்தியசன் மார்க்கம் ஒன்றே.

மனிதகுல மொன்றேநங் குலம தாகும்,
மாசற்ற மனச்சாட்சி சுருதி யாகும்,
தனியகந்தை யற்றசரி சமான ராகச்
சன்மார்க்கப் பொதுவெளியிற் சார்ந்தெல் லாரும்,

கனிகுலுங்குங் கற்பகம்போற் கருணை தாங்கிக்
காசினிக்கு நலஞ்செய்யுங் கடமை காப்போம்,
அனவரதம் தியானத்தால் அன்பே யாகி
ஆருயிரைக் கடவுளுக்கே அருச்சிப் போமே !

மங்களச் செல்வி சக்தி மண்புவி நாட்டி லெல்லாம்,
பொங்கிடும் புனிதன் வாக்கைப் பூமொழி யிசைக ளாலே,
சிங்கநா தத்தைப் போலும் தென்றலுங் குயிலும் போலும்,
திங்களி னமுதம் போலுந் தெவிட்டறப் பொழிந்தாள் மாதோ !

தீக்கொழுந் தேறும் வீர தீரரின் புகழைப் போலும்,
பாக்கியம் பழுத்த நல்ல பத்தினி யழகைப் போலும்,
பூக்களின் பொலிவைப் போலும், பொய்யறு புலவர் உள்ளம்
ஆக்கிய கவிதை போலும் அருண்மொழி துலங்கிற் றம்மா !

மிடியிருள் அச்சந் தீர, விடுதலைத் திறமை யோங்கக்
கொடியரின் கொடுமை வீழக் குமுறிடும் வீரத் தாலே
அடிமைநோய் அலறி யோடி, ஆண்மையும் பெண்மை யன்பும்
கொடியுடன் மலரும் போலக் குலுங்கிடத் துலங்கிற் றம்மா !

நமனையும் அஞ்சா வீறு நல்கியெந் நாளும், வாழ்வில்
அமைதியும் சுறுசுறுப்பும் ஆற்றலுஞ் செழிக்கக் கன்னித்
தமிழிசை யமுத மென்னச் சமரஸ நேய மோங்க,
விமரிசை யான சுத்த வேதவாக் கோங்கிற் றம்மா !

முல்லையைத் தென்றல் வந்து முத்தமிட் டணைந்து கொஞ்ச,
எல்லையிற் கடலின் உள்ளம் எழுமுழு மதியுங் கொஞ்ச
நல்லியற் காதலுள்ளங் காதலை நாடிக் கொஞ்சப்
பல்கலைக் கவிதை கொஞ்சும் பான்மைபோற் பரவிற் றம்மா!

அவரவர் தியானத் தாலே அழகுற மனந்தி ருந்தி,
நவயுக சக்தி யேற்றி, நலந்தரும் பணியி லுய்த்தே
சிவசுப சாந்த மெய்த் திவ்விய வாழ்வை வாழ்ந்து,
புவியினிற் புனிதன் கொள்கை பொலிவுற நடந்தார் மாதோ !

ஆண்டவன் அருளே தங்கள் ஆற்றலென் றன்ப ரெல்லாம்,
பூண்டனர் உலக மெல்லாம் புதுயுகம் பூக்குந் தொண்டே.
வேண்டிய கல்வி வேலை விரிதருங் கலைகள் ஓங்கக்
காண்டலுக் கினிய தான ஒற்றுமை காட்டி னரே.

வாய்மையில் வளரும் வாக்கும் வண்மையில் வளருங் கையும்,
தூய்மையில் வளரு நெஞ்சும், சுத்தனில் வளரும் உள்ளும்,
தாய்மையில் வளரும் அன்புந் தருமத்தில் வளரும் வாழ்வும்,
நோய்மையில் லாத தூல நுண்ணுடற் பொலிவும் பெற்றார்.

மோனத்தில் வளரும் முத்தனின் அருளால்
　　முனிவரின் யோகசக் தியினல்,
ஞானத்தில் வளரும் பக்தியுஞ் சங்க
　　சாதன நன்மையுங் கண்டார்,
தானத்தி லோங்குந் தண்முகில் போலே
　　தருமமுங் கருமமுங் கண்டார்,
வானத்தி னரசைப் புவியிலே வளர்க்கும்
　　வாய்மையுந் தூய்மையும் அணிந்தார்.

தீரர்க ளெல்லாந் தியானத்தில் ஒன்றித்
　　திரள்திர ளாகஊர் தோறும்,
பாரத சக்தி யாகிய சுத்த
　　யோகத்தின் பயனுறும் அமுத
தாரையை யிறங்கப் பெற்றனர் ; சாந்தந்
　　தணலுமின் சாரத்தைப் பெற்றர் ;
வீரமும் வெற்றித் திறமையும் பெற்று
　　வீக்கினர் புதுயுகப் பாட்டே !

ஒன்று பட்ட நெஞ்சமும், உலக மெல்லாங் கோயிலே
என்று காணுங் காட்சியும், இலகுயிர் நலங்களே
நன்று செய்யும் ஆற்றலும் நலிவிலாத் தருமமும்,
வென்றியும் அளித்தருள் விரிந்த பூமி நாதனே !

சஞ்சலையற்ற சாந்தமும், சலிப்பி லாத சக்தியும்,
கொள்ளையற்ற செல்வமும் கொடுமை யற்ற நீதியும்,
எள்ளலற்ற சீர்த்தியும், எதிர்ப்பை வெல்லும் வீரமும்,
கள்ளமற்ற வாய்மையும் கடவுளே யருளுவாய்.

வறுமையற்ற வாழ்க்கையும் வரம்பிலாத ஈகையும்,
சிறுமையற்ற சிந்தையும் சிறந்த தேச சேவையும்,
பொறுமையுற்ற வீறுடன் பொறாமை யற்ற நேயமும்
திறமை யுற்ற சொல்லுடன் சிறந்து வாழ்க மானிடர்.

சூதிலாத் தொழில்களும் சுரண்ட லற்ற வணிகம்,
கோதிலாக் குணங்களும், குறையிலா வளங்களும்,
தீதிலாப் பொறிகளும், திருமிகுங் கலைகளும்,
வாதிலாச் சன்மார்க்கமும், வளர்க மாந்தர் வாழ்கவே !

17. மாவலி வீழ்ச்சிப் படலம்

சுத்தவா சகத்தைக் கேட்டுச் சொல்லொணு வுவகை கொண்டு
இத்தல மாந்தர் எல்லாம், இயல்வழி இயற்றிக் காட்டி,
சத்திய வழியே சென்று, சாந்தமா யிருக்கு மெல்லை,
பித்துறுந் தானவத்திற் பெருஞ்சமர் பெருகிற் றம்மா.

கவலையுந் துயருங் காமக் கள்வெறிச் சினமும் போரும்
புவியிகழ்ச் சிகளும் சூதும், பொறுமையும்,வாழ்க்கையெல்லாம்
உவர்நட்ட பதருக் கென்றே ஊற்றிய நீரைப் போன்ற
அவலமும் ஆயின் அஞ்சி யரக்கனுங் கலங்கி டானே ?

அங்குதன் மகள்கொண் டோங்கும் அறத்துறை வெற்றி யாலும்
இங்கிளந் தம்பி கொண்ட மறத்துறை யிசையி னாலும்,
எங்குந்தன் அரக்க மாயம் இழிவுறும் வசையி னாலும்,
பொங்கிய மாவலிக்குப் பொறுமைத்தீ கொதித்த தம்மா.

கொலைகொலை யாகச் செய்து குவிக்கினும், ஆண வத்தின்
கலைபெறுங் கொலைக்குத் தப்பக் கருவிகள் பலவும் இல்லை.
அலைகடந் தாயு தங்கள் போர்ப்பொருள் அடைவ தில்லை,
நிலையறி செய்தி யில்லை நிருதனுந் திகைத்தான் மாதோ !

புண்ணிய பூமிச் செய்தி புகுவதேயில்லை யிங்கு ;
மண்ணக மெங்குந் தன்சீர் மண்ணுற்ற செய்தி யில்லை ;
எண்ணிய எண்ணத் திற்கும் எதிரதே யாகத் தம்பி
பண்ணிய சூழ்ச்சி யென்று பதறினன் பதர னானே ! 20

அறிவினிற் சிறந்த தம்பி, ஆற்றலிற் பெரிய தம்பி,
பொறியினிற் கொடிய னாகிப் போரினை வெல்லு கின்றான் ;
வெறியினிற் பெரிய மாலி விடுவனோ ! பாரென் றின்னும்
குறியினிற் கொடிய வாணக் குண்டுகள் குவித்தெ ழுந்தான்.

பயிற்சியின் சிறப்பி னாலே, பலசன மதிப்பி னாலே,
உயர்ச்சியைப் பெற்ற நெப்போ லியனைப்போல், உலகை வெல்ல
அயர்ச்சியில் லாது *வீடு குண்டுகள் அடித்த இட்லர்
முயற்சியைப் போலே இந்த மூர்க்கனும் முனைந்து சென்றான்.

குளிர்மிகு மாஸ்கோ தன்னைக் குமைத்திடச் சென்றான் போலும்,
களிமிகு ஸ்டாலின்க்ராடைக் கைப்பற்ற முனைந்தான்போலும்
ஒளிமிகும் இந்தியாவில் ஒளிந்துற்ற குள்ளர் போலும்,
தெளிவறும் அரக்கன் ஆண வத்தினைத் தீண்டப் போனான்.

"நாளையே ஆண வத்தை நாசமுஞ் செய்து, தம்பி
வாளையு முறியக் கொன்று தலையுடன் வருவேன்" என்று
நீளுறு மீசை தன்னை நினைப்புறத் திரிகி விட்டு,
மாளுறத் தாக்குங் குண்டு மழையுறப் புறப்பட் டானே.

ஒற்றரால் அறிந்த தம்பி, ஊழிமாப் புயலைப் போலும்,
எற்றிநாற் றிசையும் தீயை எறியெரி மலையைப் போலும்,
உற்றெழும் பூகம் பத்தின் உலுக்கலைப் போலும், கோபம்
பெற்றெழுந் தனலைப் பெய்தான் பேரிடி முழங்க மாதோ!

முன்னமே அரக்கர் போரின் முடிவறு வெறியுங் கேடுந்
சொன்னதை நினைத்துக் கொள்வீர் ; சுருக்கமே போது மிங்கே.
தன்னது தானென் றெண்ணித் தலைதடு மாறும் ஊனான்
என்னது யானென் றெண்ணும் ஊனனை எதிர்த்து நின்றான்.

கொல்லெனப் பறைகள் கொட்டக் கும்மெனப் புகைகள் சூழக்
கல்லென வெடிகள் விழக் கடக்கென ஊர்கள் சாயச்
சொல்லரும் அரக்கர் நாடு சுடுபிணக் காடாய் வேக,
அல்லுடன் பகலும் போரின் அலறலே மிச்ச மம்மா !

ஆயிரங் கப்பல் செல்லும், ஆயிரங் கப்பல் வீழும்,
ஆயிரம் படைகள் ஏகும் ஆயிரம் படைகள் சாகும்,
ஆயிரம் பொறிகள் முட்டும் ஆயிரம் பொறிகள் வெட்டும்,
ஆயிரம் ஆயுதங்கள் அனற்பட்ட பஞ்சு மாமே...

போமென முன்னே சேனை போக்குவான் அரக்கன் ; ஆங்கே
டாம்எனக் கேட்ட போதே டபதட வென்னச் சாயும்,
டோமென வெடி பறக்கும் செந்தசை துருவிச் செல்லும்,
வேம்பல ஊர்கள் பற்றி வேதி நூல் வினையி னாலே.

பன்னெடு நாட்கள் செய்த படைநிறைக் கப்ப லொன்று
சின்னதோர் காந்தக் கண்ணி தீண்டிடச் சிதறி மூழ்கும் ;
முன்னுறு டாங்கைட் டாங்கு முடித்திடும் ; கண்ணி தீண்டி
இன்னொரு நாச காரி எரிவிற கென்னப் போகும்.

கொலையினில் வலது கையாய்க் கொள்ளையில் இடது கையாய்,
அலையினில் ஆகாயத்தில், அடுகளப் போரில் எங்கும்
நிலையறச் சுழலக் கண்ணும், நெஞ்சத்தை மண்ணுக் காக்கி,
உலைவறப் போர்கள் செய்யும் ஊனருக் கோய்வும் உண்டோ ?

படையினைப் படைநொ றுக்கப் பகைவனைப் பகைநொ றுக்கத்
தடையினைத் தடைநொறுக்கத் தம்பியை அண்ணன் கொல்லப்
புடைத்தெழுந் தோளை நோக்கிப் பொம்மெனக் குண்டு பாயத்
தடித்தினுஞ் செருக்கி னாலே தானவன் போர்செய் தானே.

மாரிபோற் பொன்பொழிந்து மாரிபோற் புண்ணீர் பெய்து,
மாரிபோற் கண்ணீர் பெய்ய மரணத்தின் விருந்தே யாகக்
காரிருட் புகையைக் கீண்டு கனலினை யணைந்து கோடிப்
பேரிடிக் குண்டு தாக்கப் பிணமலை குவிந்த தம்மா !

இயற்கையின் சீற்றந் தானே, தருமத்தின் இரக்கந் தானே,
புயற்குலச் சீற்றந் தானே, போரிடி முழக்கந் தானே,
துயர்க்குலச் சேனை தானே, துட்டரை யழிக்கும் சக்தி
வியக்கருஞ் செய்கை தானே வெடித் தெழும் சமர மம்மா ?

பீரங்கிக் கொலையும் குண்டு பெய்பெருங் கொலையும் தீயிற்
கூரம்புக் கொலையும் ஊரைக் கொள்ளித்தீ சூழ்ந்து கொண்டு
காரம்பு வீசிக் கொல்லுங் கடுங்கொடுங் கொலையும், தோன்று
நீரம்புக் கொலையும் கண்ணிக் கொலைகளு நினைக்கப் போமோ?

ஆண்டுகள் அமைத்த ஊர்கள் அணுவெடி தாக்கி மண்ணும்,
ஆண்டுகள் அமைத்த கோயில் அறிகுறி யற்றே போகும்,
ஆண்டுகள் தொகுத்த சேனை அடுபுகை யாகப் போகும்,
ஆண்டுகள் செய்த செய்கை ஆழிவாய் உப்பைப் போலாம்.

தசமுகன், மேக நாதன், தரகா சுரன், சிக்கந்தர்,
விசைபெறும் அனிபால் நெப்போ லியன் கெய்சர் வியப்புமேவும்
வசைமிகு பொறிக ளாலே இட்லர்செய் வன்போ ரெல்லாம்
நசைபெறுந் தானவன்செய் நாசப்போர்க் கிணைய தாமோ ?

செருவலித் திமிர் மிகுந்த மாவலி கொழுப்ப டக்கப்
பெருவலி யேவி யேவி ஆணவன் பெரும்போர் செய்தான் ;
உருமறைப் புகைக ளிட்டும் ஊழிபோற் கனலு மிழ்ந்தும்,
இருநிரு தர்செய் போருக் கிலக்கியப் போரும் என்னும் !

அறிவினை வளர்த்தே, கொல்லும் ஆயுத மாகச் செய்து
பொறியினைக் கொண்டி ரத்தப் போர்செயும் வீர ஊணர்
அறவினை மறந்த தீயர், அழிவினை தேர்ந்தார் செய்த
மறவினைப் பயன்க ளெல்லாம் மண்டையில் விடிந்த தன்றே !

தடிந்தனர் தம்மைத் தாமே தம்பியும் அண்ண னும்
ஒடிந்திட ஒருவர் கையை ஒருவர்வெட் டிடவே பாய்ந்தார்,
கடிந்தனர் உடல மெல்லாங் காயமாய் இரத்தங் கொட்ட
மடித்தனன் சிரமிழந்து மாவலிக் கேற்ற தம்பி...

வென்றனன் ; கொடிய தம்பி வீழ்ந்தனன் மண்ணைக் கவ்வி ;
வென்றனன் ஆண வத்தை வீறுக பேரி கைகள்
என்றுமா வலிசெருக்கால் ஏறிய மகிழ்ச்சி பொங்கி,
நின்றபோ தவனை நோக்கி நெருப்புக்குண் டுருமிற் றம்மா !

"ஆள்வனிவ் வர்ண வத்தை அவுணன்யான்" என நிமிர்ந்த
நீள்சிரந் தன்னைச் சுட்டு நிலத்தினில் ஒடியத் தள்ள
ஊள்ளென ஊழைப் போலே உற்றதோர் அணுக்குண் டந்தோ!
மாள்வனென் றஞ்சி யாங்கே மாவலி ஓடினனே...

ஒப்பிலாத் தம்பி தன்னை ஒழித்ததே பெரிய வெற்றி
அப்பவோ போதும் போதும் ஆணவப் போர்க ளென்றே
முப்புறம் பகைவர் குண்டு முழங்குமக் களத்தை விட்டுத்
தப்பினேன் பிழைத்தே னென்று தானவன் ஓடினானே !

வேகவி மான மேறித் தானவம் விரைந்த ஊணன்
சோகமே வடிவ மாகத் துறையினில் இறங்கும் போதே,
சிகரப் படைகள் சூழ்ந்து சிறைப்பிடித் திடுமென் றஞ்சித்
தேகமு நடுநடுங்கத் திக்குவே றின்றி நின்றான்....

புலியினைப் போலப் பின்னே ஆணவப் போர்து ரத்த
நலிசிறை யடைக்க முன்னே நற்குடி யாட்சி நிற்க,
வலியதன் செருக்கே தன்னை வம்புறக் கேலி செய்ய
பலிக்கடா போல ஊணன் பதறினான் கதறினானே !...

நாம்செய்த பொறிகள் வெந்து நம்மையே நலித்த வென்று
தீமையின் பயனை யெண்ணித் திகைத்தமா வலியை, வெள்ளி,
தூமகே துவிடம் செல்வோம் துரிதமாய் என்று கொண்டு
மீமிசைப் பறந்தான் கண்ணீர் நிலமிசை விழுந்து சோர..

எல்லை யற்ற பொருட்குவை ஏந்திய
வல்ல மைபெறு மாவலி ராக்ஷஸன்,
கொல் லமரிற் கொலைத்தொழி லேசெய்து
தொல்லை யுற்றுத் துடித்துயிர் சென்றனன்.

கற்ப காலங் கனகங் குவித்திந்த
அற்ப மண்ணினை ஆளச் சமர்செய்தே
சொற்ப காலத்திற் சுற்றமுந் தோற்றவன்—
புற்பு தமெனப் போயினன் ஆசையால்.

வாடி மன்னுயிர் மாளச் சமர்செய்த
கோடி கோடி யரக்கர் கொலை யுண்டார்.
தேடினும் அவர் திக்கினைக் கண்டிலோம் ;
ஆடி யோய்ந்த தரக்கரின் மாயையே.

வெறிகொண் டேசெய் விமானங்கள் போர்மதப்
பொறிக ளெல்லாம் பொரிந்துமண் ணாயின.
அறிவைக் கொண்டு கொலைசெய் யரக்கரின்
குறி யெதிர்த்துத் தமைக்குறி வைத்ததே.

தூர நாட்டைச் சுரண்டிச் சுரண்டியே
சேரப் பொன்மலை ஆயுதஞ் செய்தனர்,
நேரப் போர்வினை நீண்ட செருக்கெலாம்
தூரில் வெந்து துணையற வீழ்ந்தனர்.

அரக்க மாவலி யப்புறஞ் சென்றதும்
உரக்கச் சத்தியன் உள்ளம் எழுந்ததும்,
இரக்க மென்னும் இதயக் கடவுளே
பறக்க விட்ட பகற்கொடி காட்டுமே ! 148

18. சத்தியன் வென்ற படலம்

நீதியு மன்பும் போற்றி நின்மலன் தந்தை மெய்யன்,
தீதிழைத் தான வத்தர் திருந்திட வேண்டி நல்ல
போதனை செய்யும் போகன் புகன்றவா றழகி யோடும்
மாதவத் தொண்டர் சூழ மாவலி நகரம்—சேர்ந்தான்.

முன்னமே விரிவாய் அங்கே முயன்றநற் பணிக ளெல்லாம்
இன்னமும் வெற்றி யோங்கி யிலகிடத் தொண்ட ரெல்லாம்
பன்னரும் பயன டைந்து, பதிநலம் பலவுஞ் செய்து,
*மன்னனும் காணு வண்ணம் மறைந்திருந் தானை காத்தார்.

பூவினிற் சிறந்த தான புண்ணிய பூமி தன்னில்,
மாவலி யரக்க ஞரின் ஆணவம் மறைய வேண்டித்
தேவசங் கத்தை நாட்டித் திருத்தொண்டு பரவு கின்ற
பாவனச் சித்த ஞன சுத்தனைப் பணிந்த சிலர்,

அஞ்சறு செயலின் மிக்க சீகரன் அனுப்ப வந்து,
செஞ்சொலாம் யோக சித்தி செப்பிய தொண்டு செய்தே,
நெஞ்சினைத் திறந்து தூய நெறியினைத் தூண்டி யன்பர்
வஞ்சமில் லாது ழைத்து வாய்மையை நாட்டி ஞரே.

வெறுத்தனர் அவுணர் செய்த வேதனை பலவும் அன்பர்
பொறுத்தனர்; அவுணர் தம்மின் பொய்யொழுக் கத்தை வேரோ
டறுத்தனர் ; அடக்க மாக அரக்கரும் ஒருநாள் போரை
மறுத்தனர், அமைதி நாட்ட மனதுடன் பாடு பட்டார்.

படுகொலைப் பழிகள் செய்யும் பாபப்போர்க் களத்தி னின்றும்,
விடுதலை செய்து, நாட்டில் அமைதியை விளைப்ப தல்லால்,
சுடுதொழி லெதையுஞ் செய்யோம்; ஆயுதந் தூக்க மாட்டோம் ;
கெடுகமண் ணுசை யென்று கிளர்ந்தனர் உணர்ந்த ஊணர்.

சத்திய வாழ்வை நாட்டிச் சகலர்க்கும் உதவும் யோக
சித்தியைக் கற்று ரெல்லாம் தியானமும் திருத்தொண் டாற்றும்
பத்தியுங் கொண்டு, தூய பரனருள் பணிந்து, சுத்த
சத்தியும் இறங்கப் பெற்றுத் தழைத்தனர் சாந்த மாக.

*மாவலி

திருக்கதை பலவுஞ் செப்பித் தினந்தினம் சுத்த சங்கம்
உருக்கிய நெஞ்சத் தாலே உள்விழி திறந்த ஊணர்
மருக்கொளு நாத்தி கத்தை மமதையென் றுதறித் தள்ளி,
இருக்கிறுன் கடவு ளென்னும் உறுதியை இயம்பி னரே.

நயமெனத் தோன்று கின்ற நஞ்சுறுஞ் சிற்றின் பத்தில்,
மயங்கிட வசந்த மாவார், கலங்கிட மாரி யாவார்,
முயங்கிட மோகங்கொள்வார் முடிவினில் ஏக்கங் கொள்வார்—
பயனுறக் கற்பொ ழுக்கம் பற்றியின் புற்றார் மன்னே !

கள்ளமே யுள்ள மாகக் கரவொழுக் கங்கள் செய்வார்,
பொள்ளெனச் சினந்து மற்றோர் பொறுமையைச் சோதிப்பார்கள்,
எள்ளுவார் பிறரை யெல்லாம் ஏத்துவார் தம்மைத் தாமே,
கள்ளிலே நீந்தும் ஊணர் கண்விழித் துண்மை கண்டார்.

துறவினைக் கேலி செய்வார், தொண்டரைக் கண்டிப் பார்கள்,
அறவினை அசடென் பார்கள், அறிவினைக் கருவி செய்து,
மறவினை தொடுப்பார்; ஓர்நாள் வானையும் பிளப்போம் என்பார்,
இறைவனை நம்பி வாழும் இயல்பினைப் பெற்று ரம்மா !

இருளினை விரும்பு கின்ற திருடர்கள், இன்னல் செய்து
பொருளினைப் பறித்துத் தாமே போகங்கள் புசிக்கும் ஊணர்,
பருவமங் கையரை யள்ள நரகிலும் பாயும் தீயர்—
அருளினைப் பொருந்தி வாழும் அடியவ ரானார் மாதோ !

நிலமிசை நமக்கு நாமே நேரெனச் செருக்கு மிஞ்சிப்
பலபழி புரிந்த பஞ்ச பாதகர் தமது தீதால்
உலகெலாம் வருந்தி நோகும் உண்மையை யறிந்து கண்டு
மலமல வென்னக் கண்ணீர் வாரிடத் திருந்தி னரே.

அரியநல் லறிஞன் சீலன் அன்புரு வான மெய்யன்
பெரியவன் பெருமை யாளன், பேயையுந் தூய தாக்க
உரியவன் சுத்தசக்தி யுடையவன், எம்மு ளத்தின்
அரியணைக் கரசன் என்றே அன்பர்கள் போற்றி னரே.

தொட்டிலிற் பழகுந் தீமை சுடுவன மட்டு மாறுக்
கட்டையர், விலங்கைக்கொன்று கடித்துண்டு தடித்த ஊணர்—
மட்டறும் உயிர்க்கு லத்தை வயிற்றினிற் புதைத்த தெண்ணிச்
சட்டென ஊனை நீத்துச் சைவர்க ளானா ரம்மா !

பெருநிலப் போரி னாலே பிழைப்பிற்குப் பஞ்ச மாகி,
ஒருபிடி யுணவு மின்றி ஒருவரை யொருவர் உண்ண
வருநிலை கொண்ட ஊணர், மனத்தினில் இரக்கங் கொண்டு
சருகையும் உண்பா ரன்றிச் சவங்களை யுண்ணா ரம்மா !

சீரிய மெய்யன் சொல்லும் சீவகா ருண்யம் போற்றிப்
போரினை வெறுத்த நல்லார், பொறுத்திலோம் கொலைவாழ்
வென்றே,
கூரிய கணையுங் குண்டுங் கொண்டடு களத்திற் கேகார் ;
பாரினில் அமைதி நாட்டும் பணிகளைத் தொடர்ந்து செய்தார்.

பறையிலாப் பேச்சும், வீணர் பகட்டிலாத் தொண்டும், செந்நீர்க்
கறையிலாச் செயலும், சீவ காருண்ய நெறியுங் கொண்டு,
குறையிலாத் தூய நேயர் கொள்கையிற் சிறந்த போது,
நிறைவிலா நிருதர் கோனும் நெட்டுயிர்த் தெழுந்தான் மாதோ!

மாவலி

"எழுந்தனள் அழகி மீண்டும் எழுந்தனன் அறிந்த மெய்யன்
எழுந்தது சுத்த சங்கம், எழுந்தது கடவு ளன்பே
எழுந்தது கருணை யுள்ளம்" என்று மாவலியும் கோபங்
கொழுந்துவிட் டெரிய ஒற்றர், கொலைஞரைக் கூவினனே.

அரக்கரின் சமர வாழ்வை அவமதி சைவ ரானர்,
இரக்கமென் றுளறுங் கோழை யிதயத்தை வளர்த்தார், மந்தி
வருக்கமென் றான்வெ றுத்தார்; வன்சமர் செய்ய மாட்டார்—
இருக்கவா போக வாநான் இத்தகை யாள ராலே.

மதந்திகழ் களிறு போன்ற மல்லர்கள் ஊண ரானோர்,
நிதமெனக் கடிமை செய்யும் நிலையின்று மாறி, என்முன்
சுதந்தரம் பேசு கின்றார் ; சுத்தனைப் போற்று கின்றார்.
இதன்பொருள் அறிகி லேனே..என்னவர் எதிர்ப்பென் றுமோ ?

பொன் மொழி பேசி மெய்யன் புண்ணியக் கதைகள் சொல்லி,
அன்புடன் மயக்கி ஊணர் அறிவினைக் கெடுத்து விட்டான்,
துன்பத்தை அஞ்சு கின்றார், சுத்தனின் ஆணை யாலே
இன்பத்தை அடைவோம் என்பார் எப்படி யடக்கு வேனே ?

மூச்சிலும் என்னை யன்றி முதல்வனென் றில்லை யென்பார்,
பேச்சிலும் எழுத்திலும் ஓர் பேரின்பப் பொருளுண் டென்பார்,
தீச்சொலைக் கொண்டென் செய்கை தீதெனத் தாக்கு கின்றார்,
ஏச்சினி யுண்டோ ? நானும் இராக்கதச் சிங்கந் தானே ?

ஆணவத் தம்பி செய்யும் ஆயுதப் போர்கள் கோடி
காணரும் புண்ய பூமிக் கலியன்செய் இடர்கள் கோடி ;
மாணுறும் உலகம் என்னை மறுத்திடும் வகைகள் கோடி,
நாணுதென் உள்ளம் ; இந்த நரத்துயர் காணுவேனே !

மனைவியிங் கெதிர்செய் கின்றாள்; மகளுமங்கெதிர்செய்கின்றாள் ;
எனையடுத் தாண்மைத் தம்பி எங்குமே இடர்செய் கின்றான்,
முனையினுக் கேகவோ யான் முரண்களைத் தீர்ப்பதோயான்
அனைவர்க்கும் பொல்ல னானேன் காரணம் அறிகி லேனே.

ஒற்றரால் இன்னும் இன்னும் உளவறிந் துள்ளம் வேகும்
கொற்றவன் கொலைவாள் இன்னுங் கொதித்திடச்சினத்தினாலே,
பற்றுள மனைவி யான சுந்தரி பண்ப றிந்து,
நற்றிருக் கடிதம் விட்டு நயந்ததை அறிகு வோமே.

சுந்தரி கடிதம்

காவல னாகிய மாவலி மன்ன,
பூவல யத்திற் போர்வினை யேசெய்
அரக்கர் கோவே, அழகியுன் மனைவி,
இரக்கங் கொண்டிதை உரைக்கப் புகுந்தேன்.
மனங்கொண் டொழுகின் மயக்கந் தீர்வாய்,
இனந்திருந் திடவே இப்பணி செய்தேன்.
உனது நலமே எனது கருத்தாம்,
எனது மனத்தை உனதாய்க் கொள்வாய்.
ஐயநீ நாட்டில் அமைதியை வேண்டின்,
மெய்யன் மெய்ம்மொழி மேலெனக் கொள்வாய்,
மனித ராயினும் மாவலி யாயினும்
பூத யாக்கையிற் பொருந்திய உயிரே.
உன்னுயிர் வேறிலை மன்னுயிர் வேறிலை.
உயிர்க்குயி ராகிய ஒருபொருள் உண்டு,
பரம்பொருள் அதுவே பாருக் கிறையாம்,
அப்பொருள் பற்றி ஆருயிர் உலகிற்
கட்டற வாழுங் கருணை வழியை
எப்பெரி யாரும் எடுத்துரைக் கின்றார்.
அன்பும் அருளும் அறிவுயர் செயலும்
பண்புங் கொண்டு பலகலை கற்றுப்
பாரில் அழகாய்ப் பதமாய் வாழ
வழிதிறந் துள்ளது, விழிதிறந் துள்ளது,
நில்லா உடலும் நில்லா வாழ்வும்,
நில்லாப் பொருளும் நிலையென நம்பிப்
பொல்லாப் போர்செய் கொல்கொலை யரக்கர்,
உலகை அழித்தலே நலமெனக் கொண்டார்.
உயிரடித் துண்ணலே உணவெனக் கொண்டார்,
கொலையால் வளர்ந்து கொலையே தேடும்
பொறாமைப் போர்வெறி பொருந்திய உன்னால்
ஆணவந் தன்னிலே அழுந்துமுன் தம்பியால்,
நாடெலாம் படுசுடு காடென லானதே,
இயந்திரப் போர்செய் இரத்த வெள்ளம்
முக்கால் நாட்டை முடித்து விட்டதே
இருவர் பகையால் இறப்பது கோடி,

அண்ணனுந் தம்பியும் அகப்பகை கொண்டால்
இருவரும் கட்டிப் பொருதிப் பார்க்கலாம்,
நாட்டையும் உலகையும் வாட்டிப் போர்முனை
பலிதரல் பெரிய பாதக மாமே.
போரினித் தாங்கோம், பொறுமை யிழந்தோம்.
வரிச்சுமை யாலே வருந்தினோம் ; இன்னும்
வரிச்சுமை யேற்றினாய்....வளம்பெறு செல்வரைக்
கொள்ளையுங் கொண்டாய் ; கொடுமை யாக
ஊணரைப் போர்ப்பேய் உண்டிடச் செய்தாய்.
குண்டினாற் பிணமலை குவிந்தது ; நாட்டில்
மாளிகை எத்தனை மண்ணா யினவே !
பஞ்சம் வந்து பட்டினி மக்களைக்
கொன்ற கொடுமை, கொடுமை, கொடுமை !
வயிற்றிற் கேசிலர் மானம் விற்றனர்,
ஆடை யின்றி அவமா னங்கொள்,
மானிகள் உயிரை மாய்த்துக் கொண்டனர்,
தெருவெலாம் பிணங்கள் ; செருக்களம் பிணங்கள் ;
வீடெலாம் தற்கொலை விளைத்த பிணங்கள்....
நாடெலாம் இரத்தம் ; காடெலாம் இரத்தம்,
காணச் சகியோம் ; கருணை யுள்ளம்
வெறுப்புறு துன்பால் வெடிக்குதென் ஐயா!
ஆதலால் உலகிலித் தீதெலாம் ஒழிய,
அரக்கப் பான்மையை அடியோ டொழித்தே,
சீவகா ருண்யமே சிரமெனக் கொண்டோம்.
தெய்வப் பான்மை திருவுற விளங்க,
சுத்த சங்கத் தொண்டர்கள் கூடி,
அருட்குடி யரசை அமைத்தனம் இன்றே,
உடனே போரை உதறித் தள்ளி
அரசை எம்மிடம் அடைக்கலம் வைத்தே
எம்முடன் நீயும் இனிதிருந் துலகில்
எதுபொது நலமோ அதையே புரிவாய்.
அதனால் உனக்கே அழியாப் புகழாம்.
இன்றேல் என்றும் இகழ்ச்சி யாமே.
போதும் கொலைவெறி புதுவாழ் வடைவாய்.

சொல்லுக்குச் சொல்வி நோதச் சூதுறு பொருளை ஒற்றர்
சொல்லிட ஊணன், அந்தோ "சுந்தரி எமனே உன்னைக்
கொல்லுவேன்" என்று தாவிக் குதித்தனன் வாளை ஓங்கிப்
பல்லினைக் கடித்தான் மீசை படபடத் திடத் துடித்தான்.

பசிகொண்ட புலியைப் போலும், படமுயர் பாம்பைப் போலும்,
விசைகொண்டகணையைப்போலும்,வெவ்வியநெருப்பைப்போலும்
தசைகொண்டு திமிர்பி டித்த தானவ வெறியன் நாவில்,
வசைகொண்ட மட்டும் வைது வாளரை ஏவி னானே.

"கட்டுங்கள் சுத்த சங்கக் கள்ளரை, அழகி தன்னைப்
பட்டெனச் சிறையி டுங்கள் ; பதிலொன்று மூச்சுவிட்டால்,
வெட்டுங்கள் சிரத்தை ; வெட்டு விழாதவர் தடுத்தால், மார்பிற்
சுட்டுடன் புதைத்தி டுங்கள் சுதந்தரக் கிளியும் சாக.

கடுவரி விதித்து சாதுக் கயவரை வருத்தி டுங்கள்,
விடுதலை பேசு வோரை விண்ணெனக் கொடுத்தி டுங்கள்,
கொடுவரிக் கூட்டம் போலே கொள்ளையும் வாளுங் கொண்டு
படுகொலை செய்தி டுங்கள் பாவத்திற் கஞ்சா நெஞ்சீர்....

இறைவன்யான் எனக்குமேலேஇறைவனென்றிருப்பான்என்னிற்
சிறைகளை நிரப்பி டுங்கள், சிந்தையும் புகுந்து பார்த்துக்
குறைசொலு வோரை நன்றாய்க் குட்டுங்கள்" என்றி ரத்தக்
கறைநகை வாளை யோச்சிக் காவலன் கதறி னானே.

* * *

இன்னவை சொல்லி ஊணன்இரத்தக்கண்கொதிக்கும் போதே,
மன்னவை மதிம யங்க வானவி மானக் குண்டு
தின்னுறும் ஊழிப்பேய்போற் சிடுசிடு திடுதி டென்று
பன்னரு திசையி னின்றும் பாய்ந்ததைக் கண்டான் பாவி....

வேந்தநின் தம்பி செய்யும் வேலையிச் சேட்டை யென்றே
ஒந்திக்கண் ஒற்றன் சொல்ல, ஊழிபோற் குமுறும் ஊணன்,
காந்தக்கண் ணிகளுங் குண்டுங் கடுமையாய்ப் பொழிந்து தம்பி
தீர்ந்தபின் சிரத்தைக் கொண்டே திரும்புவேன் என்று
சென்றான்.

அப்புறம் அரக்க னேகி, ஆணவப் போரில் மூழ்க,
இப்புறம் பொதுச னங்கள் 'இம்'என எழுந்தி ருந்தே,
கப்பெனச் சத்த மின்றிக் காவலைக் கவர்ந்து கொண்டு,
முப்புறம் ஊரைச் சூழ்ந்து சுதந்தர முழக்கஞ் செய்தார்.

ஒன்றிய திறமை யோடும் உலகியல் நலமே செய்யும்
வன்றவ உறுதி யோடும் சத்தியன் வழி நடத்தச்
சென்றுளே "அரக்கன் ஆட்சி தீர்ந்தது ; பொதுநல் லாட்சி
இன்றுடன் வந்த" தென்றே இயம்பினர் இரக்கங் கொண்டார்.

மதியுள நல்லோர், மெய்யன் வகுத்தநன் முறையைப் பற்றி,
விதிகளை யியற்றி, அன்பே விளங்கிடும் அருளி னாட்சி,
துதிபெற நிலவச் செய்து, சுந்தரி தலைமை தாங்கப்
"புதியசு காப்தம் இன்று புலர்ந்த"தென் றுவகை கொண்டார்.

பெருந்திரள் அரக்க ராங்கே பிரியமாய் ஒத்து ழைத்தார் ;
திருந்திய ஊணர் ஆண வத்துடன் சேர்ந்தந் நாளே
வருந்திடும் உலகு வாழ மாப்பெரும் போர்நி றுத்தி,
அருந்துணை யன்ப ராக ஆணவர் அமையச் செய்தார்.

* * *

ஆணவன் இறந்த செய்தி, அண்ணனும் பறந்த செய்தி
காணுற வறிந்த மெய்யன் சுந்தரி கனிவு கூற,
நாணறு நடத்தை விட்டு மாவலி நன்மை சேரச்
சேணுறச் சென்று மாற்றச் சீகரஞ் சேர்ந்தான் மன்னே !

வெள்ளிமா வலிகள்செல்லும் விமானத்தை மறித்துக் கொண்டு
வள்ளிமான் அழகி தந்தை, "மாப்பிள்ளை வருக" வென்றே
தெள்ளிய நதிகள் பாடும் சீகரந் தனிலி றக்கி,
உள்ளூற மாற வேண்டி உபாயங்கள் பலவுஞ் செய்தான்...

புண்ணிய பூமி தன்னிற் புதுயுகம் பிறந்த தோதி,
மண்ணில முய்ய வந்த சுத்தனின் மகிமை சொல்லிக்
கண்ணிய மான சங்கக் கருணையை விளக்கி ஊணன்
உண்ணெகிழ்ந் துருகச் செய்தே உயர்நல வாழ்வை யீந்தான்.

"சென்றது செல்க; நானுந் திருந்தினேன்,அறிந்தேன்உண்மை;
நன்றிது நானும் சுத்த நாயகன் சேவை செய்வேன்"
என்றகங் கார மின்றி, மாவலி இயம்பும் போது
"நன்றென" மெய்யன் முன்னே நல்லுரை சொல்லி வந்தான்..

புண்ணிய பூமி யாண்ட சத்தியன், புலவன், மெய்யன்
விண்ணிலே பறந்தி றங்கி வெய்யதா னவர்கள் உய்யப்
பண்ணிய பணிக ளெல்லாம் சீகரன் பகரக் கேட்டுத்
திண்ணென வணங்கித் "தங்கள் சேவகன்" என்றான் ஊணன்.

நாமறி கதைக ளெல்லாம் நன்கறிந் தவுணர் கோனுந்
தூமனின் விதியுங் கேட்டுச் சுத்தனைப் பணிய வேண்டித்
தாமத மின்றிச் சென்றான் சத்திய னுடனே !....வாரீர்
நாமினிச் சுத்த சங்க நிலையத்தை நாடு வோமே...

19. சுத்த மங்களப் படலம்

ஆசிரிய விருத்தம் பண் பழம்பஞ்சுரம்—சங்கராபரணம்
(ரூபக தாளம்)

வான்சி லிர்த்தது; மண்சி லிர்த்தது; வாழி பாடின புள்ளினம்;
தேன்மலர் வனம் புன்சிரித்தது; தெய்வக் காலை சிலிர்த்தது;
மீன்க ணங்கள் பவனி வந்து மிளிர்கிழக்கிற் புகுந்தன ;
ஊன்சிலிர்க்க உயிர்சி லிர்க்க உலகமெல்லாஞ் சிலிர்க்கவே.

அருண ஜோதிப்பொற் கிரண வீசி அமுதப் புன்னகை செய்ததே;
பொரு ளுணர்ந்த இயற்கை யுள்ளம் புளகித் தின்பம்சிலிர்த்ததே
இருள கன்றது ; புத்துலகின் இரவி நல்லொளி வீசியே,
கருணை கொண்ட கடவுளின் அருட் காட்சி காட்டி யெழுந்ததே.

இன்னி சைக்குழல் வீணை மத்தளம் இன்ப கானம் முழங்கின ;
மன்னு மாதவர் ஆசி கூறினர் ; மங்கலப்புது நாளிலே,
பன்ம தத்தினர் எட்டுத் திக்கும் பரந்த மாந்தர் விரைந்தனர் ;
பொன்முகத் திருப் புன்னகையொளிர் புனிதனைத்தினம் போற்றவே.

சைவர் வைணவர் சாக்தர் புத்தர்சமணர் கிறிஸ்து இஸ் லாமியர்,
உய்வகை உணர்ந் தோமென்றொற்றுமை கொண்டெழுந்தனர் மானிடர் ;
தெய்வ நன்னிலை யெய்தினர் தவ சித்திசாதனம் செய்ததும் ;
ஐவகை நில மக்களும் பர மானந்தப்பண் முழங்கினர்.

கோயி லான உலகிலே, ஒரு கொற்றவன்பர மாத்துமா.
தாயுந் தந்தையுந் தக்க நண்பனுந் தாரகமும் அவனென்றே ;
வாயுஞ்செய்கையும்நெஞ்சுமொன்றிவணங்குவோம்சுத்தசக்தியோம்
தூய மந்திர நாதமெங்கும் துலங்க வெற்றி யிலங்கவே.

போற்றி இன்பப் புதுயுக வொளி, போற்றி திவ்விய ஜீவனம்,
போற்றிசச்சிதா னந்தசுத்த சுயம்பிரகாசம் போற்றியே.
போற்றி சாந்த சிவானந்த சுப மங்களப்பொருள் போற்றியே,
போற்றியே பதிபுண்ணியத்தினிற் பொங்குவாழ்க்கைபொலிகவே.

குயிலினோசையும்,கிளியின்ஓசையும்,யாழ்குழலுடன்கொஞ்சவே,
மயிலின் ஆடலும் மந்த மாருத மலரின் ஆடலும் கூடவே,
செயலில் வென்றநம் சித்த ராடினர் யோகசித்தியைப் பாடியே,
தெய்வ பாரத சக்தி காவியத் தேனிசை யிசை யோங்கவே.

தொத்த டிமைத் துயரொழிந்தது ; துள்ளரக்கரின் மாயமாம்
பித்தொ ழிந்தது ; ஆசையாணவப் பேயொ ழிந்தது ; தாயகம்
இத்த லத்துடன் இன்னலற்றநல் லின்ப மெய்தி மகிழ்ந்தது,
சுத்தமுத்த சமத்துவச் சுடர் தொல்லுலகில் விரிந்ததே.

கோரராக்ஷஸர்கொண்டபூமியைக்கொண்டனர்திருத்தொண்டரே,
வீரதீரர் விஞ் ஞானசித்தர் விளங்கு பொன்யுகம் பூத்ததே,
போரிலையினிச் சாந்த மாகப் பொருந்தி வாழுவர் மானிடர் ;
ஓரருட் குலம், ஓரருட்பரன், ஓரருள் அர சோங்கவே....

மாற்றி மாற்றி மனிதச் சன்மத்தை மாசி லாதபொன் னாக்கிடும்,
ஆற்றலார் சுத்த சக்தியின்பரி ணாமகாரியம் ஆயிற்றே.
வேற்றுமைச்சண்டை யில்லைசாதி விரோதங்கள் இனி இல்லையே
ஊற்றி மெய்யறி வின்பப் பாலை உலகி நம்மை வளர்த்தனள்.

கற்ற றிந்தவர் கல்வியின் பயன் கடவு ளென்பதைக் கண்டனர்,
உற்ற றிந்தநல் யோக மாதவர் உலகந் தாமென விண்டனர்,
பற்ற றிந்தவர் தெய்வசக்தியைப் பற்றினுர் பசு பாசத்தை
முற்ற றிந்தவர் முதல்வன் அன்பினைப் பெற்றறிந்தனர்பாரிலே.

நாடு வாழ்ந்திடக் கல்வியுந்தொழிற் செல்வமும் நல்ல வீரமும்,
வீடு வாழ்ந்திட முப்பொருளையும் மேவி யன்பினில் வாழுவோம்,
ஓடு வாழ்வினில்ஊறிஉள்ளத்தின்இன்பஊற்றினைக்காணுவோம்,
பாடுவோம்பதிப் பாடல் பண்ணுடன் பணிநலங்களும் பூணுவோம்.

காசினியிற் பிறந்த மானிடர், கருத்தொன் ருகிக் கலந்தவர்,
தேசபாஷை நிறச் செருக்கறத் தெய்வசக்தியில் வாழுவோம்,
மாசிலாத மனத்திலே வளர் மன்னனை நிதம் உன்னுவோம்
தேசு லாவிடுந் தெய்வ ஜீவனம் எய்துவோம் திரு வோங்கவே.

ஆக்கிக் காத்தளித் தாருயிர்களை அருளினுல் வினை யாடிடும்,
நீக்க மற்று நிறைந்த சுத்தனைநெஞ்சிலேநினைந்தொன்றுவோம்.
போக்குடன்வர வாகும் பூமியின் போக நாடகந் தன்னிலே,
ஊக்க மாக உளத்தில்மன்னும் ஒளியைக் கூடி மகிழுவோம்.

அன்பர்கள் கூடி யிவ்வா ருனந்தக் கீதம் பாடிப்
பண்புடன் எடுத்த செய்கை பழுத்தது, வெற்றி யென்றே
நண்புற நினைத்துத் தங்கள் நற்பணிப் பயன்க ளெல்லாம்
இன்பமாம் இறைவ னுக்கே ஈந்தனர் சாந்த வீரர். 60

அரியநற் பணிக ளாற்றி, அடக்கமாய்ப் புன்ன கைத்துத்
துரியமா யோக நிட்டை துலங்கிடும் சுத்த னுரைப்
பிரியமாய்த் தூய ஞானை பேணிய சக்தி தன்னை,
உரியநல் லிசையி னுலே உற்றவர் போற்றி னுரே.

பாரத முனிவன் சாந்தன், பலகலைப் போகன், இந்தப்
பாரினை யோகத் தாலே உய்வித்த பண்பை மெச்சிச்
சீரிய வாக்கி னுலே தோத்திரம் செய்யக் கேட்டு
"ஓரருட் சக்தி செய்கை" என்றனன் ஒப்பி லானே.

அரக்கமா வலியும் அன்பன் ஆகிய கலியும், ஆங்கே
"இரக்கமே வடிவ மாகும் எம்பிரான் சரணம்" என்றே
உரக்கத்தம் பிழைகள் கூறி, உள்ளுணர்ந் தழுது வீழ்ந்தார் ;
சிரக்கம்பம் செய்து சுத்தன் தியானத்தில் ஆழ்ந்து சொன்னுன்!

கதிருடன் இரவும் வாழ்வின் கதையினை வளர்த்து நாளும்,
எதிரெதிர் தொடர்வ தேபோல் இப்புவி விதியில் ஊணர்,
கதிபெறும் மிருக சக்தி காட்டினர் உலகம் அஞ்சத்
துதிபெறும் சுத்த சக்தி துலங்கிடத் தோற்று வீழ்ந்தார்.

உலப்பறும் உடுக்க ணத்தில் உலகொரு தூசி போலும்,
அளப்பற விரிந்த விண்ணின் அந்தரத் தாடும் தூசி,
கலப்புறு பூத யாக்கை முக்குணக் கயிறு கட்டி
உளப்பொது சக்தி யாட்டும் ஓய்வறும் பாவை யம்மா.

அத்தகை நாடகத்தில், ஆருல கரங்கு வாழப்
புத்துயிர் ஒளிர, நல்ல புதுயுகம் பூக்க வேண்டி,
இத்தகை விளையாட் டொன்றை யியற்றினள் சுத்த சக்தி ;
அத்தகை யாடல் வெல்ல எளியனும் ஆடி னேனே.

என்னுடை அருமைக் கௌரி எனக்குயிர் ஈந்து சென்று
தன்னுடை யாவி தன்னைச் சக்தியுள் வைத்து வந்து,
மன்னுல கத்தில் மோன மணியினை ஒலித்துக் காட்டி,
உன்னதத் தொண்டு செய்த உண்மையும் அருளின் ஆடல்.

கலியினை முறியடித்துக் கடல்கடந் தோடச் செய்து,
புலியினும் கொடியர் தம்மைப் புகலடைந் திங்கு வந்து,
நலிதரும் சூழ்ச்சி யாலே நாட்டினை அவர்கை யீந்து,
இலிகொளுஞ் சிறைவ ருந்திக் கிளர்ந்ததும் அருளின் ஆடல்.

நாட்டினை யடிமை செய்ய நாடிய கலியை ஊணர்
மாட்டிடச் சிறையில், அன்னோன் மதிதெளிந்தெதிர்த்து,மீண்டும்
போட்டியைச் சிறையி லிட்டுப் புத்திவந் திங்கு பத்தி
காட்டிய செயலும் அன்புக் கடவுளின் செய்கை தானே.

இழந்ததை மீட்டுச் சித்தி மான் முதல் அன்ப ரெல்லாம்
தழும்புறத் தொண்டு செய்து, தானவப் பகையை வீழ்த்தி,
எழும்புது யுகத்திற் கான செயல்களை யியற்றி, நாட்டின்
பழம்புகழ் இலகச் செய்த பரிசுமென் பகவன் ஆடல்.

ஏந்திய வீரத் தோடுந் தானவம் ஏகி எந்தை,
வாய்ந்தசுந் தரியைக் கண்டு சக்திக்கு வகையுஞ் சொல்லி,
தேர்ந்தநற் போக னாலே திருத்தொண்டு கலையாற் செய்து,
காந்தம்போல் அரக்கர் தம்மைக் கவர்ந்ததுங் கடவுள் ஆணை.

அரசினைச் சுற்றி ஐந்தால் அடவியற் சாந்த னான
வரமுனி வாக்கைக் கேட்டு, வாளினாற் கலியை வென்று,
சிரமணி போன்ற கௌரி என்னுடன் சேர்ந்து வாழப்
பரம்பொரு ளிச்சை செய்த பாக்கிய மறிகு வீரே...

தானவர் எழுந்து, வீழ்ந்து, சரண்புகுந் ததுவும், பாரில்
மானவர் இன்ன லின்று மறைந்ததும், அமைதி சேர்ந்து,
நானிலம் இன்ப முற்ற நன்மையும், உயிரின் உள்ளே
தானென நடன மாடும் தற்பரம் பொருளி னாலே.

ஆதலால் அன்ப ரெல்லாம் அருட்பெரும் சுத்த சக்தி
சோதியை வணங்கி நிற்போம் என்றலும், தொண்ட ரெல்லாம்
நாதத்தால் வணங்கிப் பின்பு நயனத்தை மூடி த்யான
போதத்தால் வணங்கும்போது சித்திமான் புகுந்து சொன்னன்;

சித்திமான்

சுத்தனே வணக்கம்! சுத்த சங்கமே வணக்கம்! யோக
சித்தியே வணக்கம்! அங்கே சிந்தித்த பணிக ளெல்லாம்
உத்தம வெற்றி யோங்கி, ஒளிர்ந்தன உலக மெல்லாம்
சித்திமா நகரிற் கூடித் திருவிழாச் செய்வ தாமே. 120

பண்ணிய யோக மெல்லாம் பலித்தது ; பண்ப நீயும்
புண்ணியத் தொண்டர் சூழப் பொருந்திநன் னகரில், இந்தக்
கண்ணியத் தலைவ ருக்குக் கருத்துற உபதே சித்தெம்
எண்ணமும் இலக வெற்றி அரியணை இருப்பாய் வேந்தே...

அன்னதே கடமை யென்றுங் கந்தண்மா முனிவர் சொல்லத்
தன்னிக ரற்ற சுத்தன், சங்கத்தோ டெழுந்து, விண்ணில்
மின்னலைப் போலப் புஷ்ப விமானத்திற் சென்று, சித்தி
மன்னக ரடைந்து வெற்றி மகாசபை நடத்தி னனே... 128

20. சுத்த விஜயப் படலம்

விண்ணுயர்ந்த மாடமும் விளக்கு யர்ந்த தூபியும்
பண்ணுயர்ந்த தென்றலிற் பகற்கொடியின் ஆட்டமும்,
கண்ணுயர்ந்த காட்சியும் கவினுயர் அணிகளும்,
எண்ணுயர்ந்த சீர்த்தியும் இலங்கு சித்தி மாநகர்.

எங்குமே புதுமைகள், புதுநகை, புதுவியன்,
எங்குமே புதுயுகம் புதுமலர்ச்சி வேகமே ;
எங்குமே புதுமை பெற்ற பூர்ணயோக வாழ்க்கையே ;
மங்கலப் பழநகர் மறுவசந்தச் சோலையே.

பத்திமான்கள் யோகத்திற் பழுத்த திவ்ய ஞானிகள்,
புத்திமான்கள் பல்கலைப் புலவர், மன்னர், வீரர்கள்,
சித்திமான்கள் சேமமோங்குஞ் சித்திமா நகரிலே
"சுத்தசக்தி ஓ"மெனச் சுருதி பாடிக் கூடினர்.

முன்னர் வாழ்வி லேபடர்ந்த முக்குண விகாரமாம்
பன்மதங்கள் சாதிபேத நாடு வர்ணப் பண்புகள்
இன்னர் சூழும் அன்பிலே இணைந்தெலாம் ஒருமயப்
புன்னகைப் புதுநலப் பொலிவுறப் பொருந்தின.

அழுந்திருள் விலகியே அருணன்பூத் தழகொளிர்
செழுந்திரு வசந்தக்காலை சித்திகௌரி மாளிகை,
உழுந்திட இடமிலாமல் ஓங்குகற்ப கத்திலே
கொழுங்கனித் திரளெனக் குலாவினார் வழுவிலார்.

வீரதீரர் வித்தகர், வியன்பெரும் புலவர்கள்,
ஈரமுள்ள செல்வர்கள், இசைமிகுந்த பாடகர்,
பாரிலோங்கு மன்னர்கள், பழுத்ததூய ஞானிகள்,
ஆரியர் திராவிடர் அனைவரும் குழுவினார்.

பயிர்செழிக்கும் வானெனப் பயன்மிகும் பணிகளால்,
உயிர்செழிக்க உள்செழிக்க உலகறம் செழிக்கவே,
துயர்கெடப் பயங்கெடத் துணிந்துதொண்டு செய்தவர்,
அயர்வறும் தொழிற் புலவர் அன்புகொண்டு வந்தனர்.

உலகு கண்ட சீரியர் உருவொளிர் திருச்சபை,
இலகருட் பெரியவர் இருந்திலங்கு சிற்சபை,
புலவரின் பலகலைப் புகழ் மணக்கும் பொற்சபை,
நிலவு நாட்டு வீரர்கள் நிரல்பட விளங்கினார்.

மாப்பெரிய ஆசியா அமெரிக்கா வளம்பெறும்
வாய்ப்பு மிக்க ரஷ்ஷியா வணிகர்வாழ் ஐரோப்பியா,
ஆப்பரிக்கம் ஆஸ்திரேலி யம்அனையு நாடுகள்
பூப்புகழ் சிறந்தசித்தி மாநகர் பொலிந்தவே.

ஆங்கிலம் பிரெஞ்சு ஜெர்மன் ஆரியம் உருசியம்,
தீங்கனித் தமிழ்தெலுங்கு சீனமிந்தி வங்கமாம்
பாங்குறும் மொழிபல பயின்றநற் சபையிலே
நீங்கிலா தொருமை மிக்க நெஞ்சளாவி நின்றதே,

முன்னர்சாத னத்திலே முயன்றவர் பயின்றவர்,
பன்மதப் பெரியவர் பழகிய புலவர்கள்,
மன்னர்வீரர் மாதவர் மனமொருங்கு கூடியே
அன்னையன் பளாவுமக்கள் என்னவாங் கிருந்தனர்.

திருந்திய கலியனும் வலியனும் திருச்சபை
பொருந்தினர் புலிகள்மாறிப் பூனையான வாறுபோல்.
அருந்திறல் அருளொன்றால் அனைவரும் சமரஸ
விருந்தருந்தி ஓரின வுணர்விலே விளங்கினார்.

திருமிகச் செதுக்கிய உயிர்ச் சிலைகள் போலவே
கருமவீரர், ஞானவீரர், கருணைவீரர் கூடியே
உருமிகப் பொலிவுகூற யோகசித்தி உள்ளமாய்,
ஒருகுலம் ஒருநிகர் ஒருமைகொண் டிருந்தனர்.

புனைவுறும் சமயதேசப் பொய்ப்பிரிவை நீத்தவர்,
அனைவரும் ஒருவனை அகத்திலே நினைத்தனர்.
நினைதொறும் நினைதொறும் நெகிழ்ந்துநெஞ் சுருகியே,
தனையொவாத் தலைவ சுத்த சக்தியோகிஓம் என்றார்.

உள்ளெலாம் ஒருவனே ; உணர்வெலாம் ஒருவனே ;
தெள்ளறிவி லேயொளிர் தினகரன் ஒருவனே ;
வெள்ளமாக் கருணையன்பு மேவு சுத்தன் வாழ்கென
துள்ளுமார்வங் கொண்டிசை துலக்கி நின்ற போதிலே,

சிந்தனை குளிரயோக சித்திகேட்டுப் பூரித்தார் ;
சந்தமார் மதுரகீர்த்த னாஞ்ஜலி தழைத்ததே ;
அந்தமார் விமானத்தில் அருளழகு வீசியே,
வந்திறங்கி னார்கள் சுத்த சக்திமா முனிவரே.

சுந்த ரத்தவப் பொலிவுடன் சுடர்நகை வீசி,
வந்த மன்னனை வாழிபல் லாண்டென வழுத்தி,
மந்தி ரத்தமி ழிசைகளை மாரிபோல் வழங்கி,
இந்தி ரையுடன் ஏற்றனர் இனமலர் சொரிந்தே.

இந்திரை, "மகனே" யென இருகையால் அளாவிச்
சிந்தை யானந்தஞ் சிலிர்த்திடச் செல்வனை யேற்றாள்.
தந்தை தாயினைத் தகுமுறை முறைமுறை வணங்கி,
முந்து நின்றனன் முத்தியின் பிழம்பென முதல்வன்.

வீர மூதிளஞ் சத்தியன் விமலனைத் தழுவிப்
பாரெ லாம்ஒளி பரவிய திருவருட் சுடரே,
சூரி யக்கொடி யுலகெலாந் துலங்கிடச் செய்த
தீர வாழ்கெனச் சென்னியை முகந்துமுத் திட்டான்.

"இனிய தந்தைநீ இன்றெனக் காயினை" என்று
பனி மலருடன் சக்திமா வலியினைப் பணிந்தாள்,
இனிய சத்திய குருவினை, இந்திரை தன்னை
நனி வணங்கிநல் லாசியை நயந்தனள் ஆங்கே.

யாழின் ஓசையும் குழல்களின் மழலையும் எழுந்த ;
வாழி பாடினர் மாசபை வயங்கிய பெரியார்.
ஆழி போல்இசை யார்த்திடும் அப்பெரு மன்றில்,
சூழ யோகிகள் விளங்கினன் சுடர்மணிப் பெருமான்.

மங்கல மறைமு ழங்க மாதவர் மலரைத் தூவ,
திங்களும் இரவி யும்போற் சித்தியின் சக்தி சுத்தர்,
தங்கமாந் தவிசி ருக்க ஜயசுத்த சக்தி யென்றே
பொங்கிய தன்ப ருள்ளம் புன்னகை முகங்கள் பூத்தே.

சித்திமான், சாந்தன் போகன், சிகரன் பரத யோகி
பத்தியோ டாசி கூறப் பரவசா னந்தந் தூண்ட,
சத்தியன் அரசி யோடு தாங்கிப்பொன் முடியை, "வாழ்க
சுத்த ஓம் சக்தி" யென்று சுபமுறச் சூட்டி னனே!

சுத்தசக்தி சுத்தசக்தி சுத்தசக்தி ஓமென
சத்திய னுடன்சபை சயமுழக்கஞ் செய்யவே,
அத்தர்வாசச் சந்தனம் அருமலர் பொழியவே,
சித்தர்போற்றி சைக்கவே சிலிர்த்ததன்பர் உள்ளமே.

கலையெலா மறிந்தனை கணக்கெலா மறிந்தனை
நிலையெலாந் தெளிந்துநின்று, நீதிகாத்த வள்ளலே !
உலகெலாம் ஒருமைசேர யோகசித்தி தந்தனை ;
நலமெலாம் தவமென நயந்தசுத்த நாதனே.

மடமையும் அடிமைநோயும் வறுமையும் மாற வேண்டி,
விடமனத் தானவர்கள் வெம்மையைப் போக்க வேண்டிக்
கடமையைக் காக்கவேண்டிக் கலியினைத் திருத்த வேண்டி,
இடையறு யோக சக்தி இரவிபோல் ஈந்தாய் வாழ்க !

பல்வகைச் சமயசாரம் பார்த்துப்பார்த்துப் பாரிலே
அல்லலற்று மானிடர் அமைதியாக வாழவே,
கொல்லும்ஊணர் வீழவே கொழுங்கருணை சூழவே
வெல்லும்யோக சக்தியை விளக்கினை விமலனே....

கூற்றென வந்த தீமை, குளிர்மலர் கொஞ்சு கின்ற
காற்றெனச் செய்தாய் வாழி ! கலியினை அன்ப னாக
மாற்றினை வாழி ! தான வத்தினை மெய்யன் வெல்லச்
சாற்றினை வழியை யோக சாதன குருவே வாழி !

போற்றி போற்றி புதுயுகச் செங்கதிர்
போற்றி சுத்த சுதந்தர சக்தியே
ஆற்ற லாயுள் அறந்திரு வின்பொளி
போற்றி மானிடர் பூரணம் பொங்கவே....

மன்னன் சுத்தனிம் மன்னுயிர்க் கின்னுயிர்
என்ன வாழி இகத்திற் பரசுகம்
துன்னு யோகச் சுடர்மணி வாழியே
அன்னவன் பணி யானந்த மாகுமே....

இந்தவா றிசைத்து நல்லார் இசைமலர் வாரித் தூவ,
சிந்தையுட் குவிந்து சுத்தன் சிற்சக்திக் கதிர் பரப்பி
முந்துளோர் உள்ளந் தன்னுள் தன்னுளம் முந்து ளோருள்
சந்ததந் துடிக்க நாட்டிச் சாற்றினன் அமுத வாக்கே....

21. சுத்த வாணிப் படலம்

உள்ளப் பெருமான் உலவுங் கோயில்காள் !
என்னுயிர் அனைய இன்னுயிர் மக்காள் !
உங்கள் முன்னே ஊழிய னாகி,
என்னுள் இன்பம் இவ்வுல கிற்கும்
எய்த வேண்டி எழுந்தேன் இத்தினம் ;
சுத்த நிலைய சித்திக ளெல்லாம்
எல்லா ருக்கும் எளிதிற் கிடைத்தே
மானிட ரெல்லாம் மங்கள மான
பூரண வாழ்க்கை பொருந்திட வேண்டியே,
சக்தி பரப்புதல் நித்தியக் கடனே.
அரசிய லுக்கும் ஆத்மசா தனமே
அடிப்படை யாகும் அறவழி வகுத்தேன்.
எம்மத மாயினும், எக்குல மாயினும்,
ஆண்பெண் அடங்கலும் அரைமணி தினமும்
சித்தங் குவிந்து தியானம் செய்மினோ !
பொன்னிளங் காலை புலரும் போதும்,
மாலைச் செங்கதிர் மறையும் போதும்,
அன்பறி வோங்கி யனைத்தும் வாழ்கென
ஊரூர் மக்கள் உறுதியாய்க் கருதினால்,
உயிரும் உலகும் ஒற்றுமை யாமே.
மனதின் வெற்றியே வாழ்வின் வெற்றியாம் !
உள்ள மிருந்தான் உலகும் இன்பமாம்.
நல்ல கல்வியும் நல்ல சிந்தையும்
பலகலை யறிவும் பல தொழின் முயற்சியும்,
நன்னெறி யொழுக்கமும் நாளும் பயின்று,
உடலுயிர் மனமும் உள்ளமுஞ் செயலும்,
உறுதி யாகி, உலகப் பணிக்கே
பயனுற வேண்டும் பதியன் புடனே.
யோகமுந் தொண்டும் ஒன்றாக வாழ்வில்.
பிரம சரியம் பேணிக் கற்றபின்,
வீரப் பயிற்சியும் பாரினில் வாழத்
தொழிற் பயிற்சியும் துலங்குக நாட்டில்.
பிறகே தகுதி பெற்ற வாலிபர்—
ஒத்த காதலர் உலகம் வளர—
இல்லற மாகிய நல்லறந் தாங்குக.
மக்களுக் குரிய மாநிலந் தன்னைச்
சரிசம னாகப் பிரித்துக் கொடுத்தே
உழைப்பால் உண்ண ஒவ்வொரு வர்க்கும்

உரிமை யுண்டென உலகினில் நாட்டுவோம்
மனிதப் புரட்சி வயிற்றின் புரட்சியே.
ஒவ்வொரு கையும் உழைத்தே புசித்தால்,
எல்லாக் கைகளும் இயற்றிட வேண்டி
பொதுநலத் தொழில்களைப் பொருத்தமாய் வகுத்தால்,
பஞ்சப் பேயை பாரினின் றோட்டினால்,
போருமில்லை ; புரட்சியு மில்லையே!
அஞ்ஞா னத்தை அறிவால் விலக்கி,
தொழிலால் வறுமையைத் தூர விலக்கி,
யோகத் தாலே ஒழுக்கம் பேணி,
உள்ளன் பாலே ஒற்றுமை நாட்டி,
ஒருவரை யொருவர் உயிரென மதித்தே,
வீடும் விரிந்த நாடும் வாழ
அருளர சாட்சி தருவதென் கடனே.
அரியணை யிருந்தே அணிமுடி தாங்கி,
மனப்படி யாளும் மன்னன்யா னல்லேன்.
பரம்பொருள் ஒருவனே பாரின் அரசனும் ;
ஆருயி ரெல்லாம் அவன்உட லாமே.
என்னுள் எவனோ அவனே உலகில் ;
அரசிய லென்பதும் ஆருயிர்ப் பணியே.
தாய்மொழிப் படிக்கே தரணியைப் பிரித்து
வாய்மையன் புறவே வளம்பெறச் செய்வேன்.
உலகப் பொதுமொழி யுடனே அவரவர்
தாய்மொழி போற்றுக தனிச்சிறப் பெய்தவே.
உலக மக்கள் ஒரேசமு தாயம் ;
நாட்டை நாடு நன்கு மதித்து,
போட்டி பொறாமை போர்மத மின்றி,
இயற்கை விளைவை இயல்புறத் துய்த்தே,
திறமைப் படியே செய்தொழில் வகுத்தே,
இல்லாப் பொருளை இருப்பவர் நல்கி,
பண்ட மாற்றினாற் பயனுற வாழ்ந்தால்,
உலகில் அமைதி உலாவக் காண்போம்.
பொறாமைச் சண்டை பூண்டோ டொழிக.
கொடிய பயிர்களை அடியோ டொழித்து,
ஊனுடைக் காகவே உழவினைச் செய்தால்,
உணவுப் பஞ்சம் உடனே ஒழியும்.
உழைத்துப் பலபேர் உண்ணத் தக்க
யந்திரத் தொழிலை ஏற்பதுங் கடனே.
வீட்டைக் காக்கவும், நாட்டைக் காக்கவும்,

குண்டரைக் குமைக்கவும் தொண்டுசெய் வீரர்
எல்லா ருக்கும் இராணுவப் பயிற்சி
தகுமுறை தருவோம், தருமம் வாழவே.
பாதகர் ஒழியப் படைவலி வேண்டும்.
நாட்டை நாடு வேட்டையா டாமல்,
குண்டைக் குவித்துச் சண்டைபோ டாமல்,
பாதுகாப் பிற்கே படையணி யாமே.
பாருக் கோர்பொதுப் படையணி வேண்டும்
ஒவ்வொரு நாடும் உத்தம வீரரைத்
தேர்ந்தப் படையிற் சேர்த்திட வேண்டும் ;
ஐக்கியப் படையே அதன்பெய ராமே.
ஆண்டுக் கோரிடம் அப்படை யூன்றி,
அநீதியைத் தாக்கும் அறத்தையே காக்கும் ;
உலகில் அமைதி ஒளிரச் செய்யுமே ;
எந்தநா டாயினும் இன்னொரு நாட்டை
அதருமப் போரில் அழித்திடப் பார்த்தால்,
கொடுமை யாகக் கொள்ளை யடித்தால்,
அந்த நாட்டை ஐக்கியப் படையே
அடக்கி அறவழி அமைப்பது கடனே.
மனிதனுள் விலங்குகள் வாழுறு மட்டுமே,
காவற் படைகள் கண்விழித் திருக்கும்.
தலைவர் இருவர் சண்டைக் கெழுந்தால்
பொதுஜன வாழ்வைப் போராக் காமல்
அவரவர் திறமையை ஐக்கியப் படைமுன்
பண்புடன் காட்டிப் பலன்பெற லாமே.
ஒருவன் செருக்கால் உலக மாந்தர்
குண்டு பட்டுக் கொலையுண் டிறப்பதை
இனிநாம் உலகில் என்றுங் காணோம்.
ஆசையா ணவத்தால் அழிந்த மனமே
வீரியத் தினவால் வெம்போர் புரியும்.
மனப்போர் வளர்ந்தே இனப்போ ராகும்.
படையும் வெடியும் பாழும் போரும்,
உள்ளே கிளம்பியே உலகைத் தாக்கும்.
உள்ளப் பயிற்சியே உலகமை திக்குச்
சாதன மாகும் தன்மை யறிவீர்.
உள்ளந் திருந்தின் உலகம் திருந்துமே.
யோகத் தாலே உள்ளம் திருந்துமே.
சுத்த சமத்துவ சுதந்தர யோகம்
பூமிக் கெல்லாம் பொதுவாய் விளங்கினல்,

எல்லா ருக்கும் இதயந் திறந்தே
தெய்வத் தன்மை தெளிவுற லாமே.
ஆசை யாணவம் அடியோ டொழியும் ;
அன்பும் அருளும் ஆத்ம சக்தியும்
வாழ்வுக் இயல்பாய் வளம்பெற லாமே.
பொய்யும் வஞ்சமும் பூண்டுடன் அழிந்தே,
அரக்கத் தன்மை அன்பினால் மாறி
அமரத் தன்மையே ஆருயிர் மூச்சாம்.
மனிதக் குறைகள் மாறி மாறியே
நரரும் அமரராய் நலமுற விளங்கி
தேவ ஜாதியும் தேவஜீ வனமும்
எல்லா ருக்கும் இயல்புற லாமே.
சித்தி நகரிலே தேவ ஜாதியை
நாட்டிய பிறகு ஞால மெல்லாம்
பாரத சக்தியைப் பரப்பிப் பரப்பியே
யோகமே வாழ்வாய் உருக்கொளச் செய்வோம்.
ஊர்தொறும் ஊர்தொறும் யோகசங் கங்கள்
புதுயுக வாழ்வைப் பொலிவுறச் செய்கவே.
யோகமே வாழ்க்கை வாழ்க்கையே யோகம்.
அனைவரும் வணங்கும் அருட்பெருங் கோயிலே
திருவுறச் செய்த தியானமந் திரமாம் ;
அதனைச் சுற்றி அறவோர் வாழ்வார்
அவரைச் சுற்றி அறிவுச் சாலைகள் ;
அவற்றைச் சுற்றி அருங்கலைப் புலவர் ;
அவரைச் சுற்றி அருந்தொழி லாளர்கள்,
அவரைச் சுற்றி அரும்பணி யாளர்கள்,
அவரைச் சுற்றி அருந் தொழிற் பண்ணைகள்,
சாதனம் செய்து சாந்தமாய் வாழவே
புதுயுக மாந்தர் புதுநகர் அமைப்போம்.
சித்தியை அப்படித் திருவுறச் செய்தே,
நாடெலாம் அவ்வகை நலமுறச் செய்து,
அருட் கோயில் சுற்றி அணியணி யாகப்
பொதுநல வாழ்க்கை பூத்திடச் செய்வோம்.
மண்புவி தியான மந்திர மானால்,
வாழ்வே யோகமாய் வளர்ந்து விளங்கினால்,
அழகும் சிவமும் அமைதியும் சக்தியும்,
அமரத் தன்மையும் ஆற்றலும் பெருகி,
எல்லா வுயிர்களும் இன்புற லாமே.
இந்தக் கடமை இனிது நடக்கத்

தொண்டராய்ச் சேர்ந்து துணை புரிவீரே.
உலகத் தொண்டே உயிர்ப்பெனக் காமே.
ஒருல கத்தில் ஓர்குல மாந்தரை
யோக வுணர்வில் ஒளிபெற நாட்டியே
யானும் சக்தியும் இமாலயஞ் சென்று 1
யோகத் தாலே ஊன்சுமை நீத்து
நுண்ணுட லாலே எண்ணிய நலங்கள்
யாங்கும் புரிந்து நீங்காத் தூய
ஒருமையும் தெய்வ வுரிமையும் நாட்டி,
சுத்தா னந்த முத்திசேர் வோமே!

வெற்றுரைகள் பேசாமல், வீண்பொழுது போக்காமல்,
வீறு கொண்டு,
கற்றறிவுங் காணறிவுங் கலையறிவுந் தொழிலறிவும்
கருதித் தேர்மின்.
ஒற்றுமையும் உள்ளன்பும் உண்மையறி வின்பத்தில்
ஒன்றும் யோகப்
பற்றுதலும் பயின்றிடுமின் ; பாரால யத்தினிலே
பரவி வாழ்வீர்.

எனதுனதென் றிறுமாக்கும் இருமனதை யடக்கிடுமின் ;
ஏழை யின்றி
இனிதறிவு தொழிலெய்தி எல்லாரும் உழைத்துண்மின்
இயற்கை யாக
மனிதசக்தி தெய்வசக்தி யாய்வளர மேன்மேலும்
வாழ்க்கை தன்னைப்
புனிதமுறத் திருத்திடுமின்! அருள்பெற்ற பூரணராய்ப் 18
பொலிமின் அன்பீர் !...

என்று சுத்தன் இயம்பிய நன்மொழி
மன்று கேட்டு மகிழ்ந்தது ; ஞாலமும்
நன்று கேட்டு நலஞ்செய நாடியே
நின்று தூய நிருபனைப் போற்றுமே.

தானொ லித்த தகைமணி வாசகம்
வானொ லித்திட வையக மெங்குமே,
தேனொ டொத்த திருவருள் வாக்கென்றே
ஊனொ டொத்த உயிரி லுணர்ந்ததால்.

ஊணை நாட்டின் ஒழுங்கமை சுந்தரி,
மாண நல்ல வழியென வாழ்த்தினாள் ;
ஆண வத்திலும் அன்பர் புகழ்ந்தனர் ;
வேண தொண்டுசெய் வேட்கை விளம்பினார்.

புதிய மாவலிக் கன்பு புகன்றினிச்
சதிபதி யெனச் சம்மதங் கூறினாள்.
துதிசெய் மாவலி சுந்தரி சொன்னதே
மதி யெனக்கென மாறிப் பிறந்தனன்.

சீக ரத்திற் செழுந்திருத் தொண்டர்கள்,
ஏக மாக விரிநில மெங்குமே,
வேக மாகவிண் ணாட்சி விளங்கிட
யோக சித்தி யொளியைப் பரப்பினார்.

சித்தி முற்றிய யோக சிகாமணி,
சுத்த பாரத சக்தியைத் தூண்டியே
ஒத்த மானிடர் ஓர்குலத் தேவராய்
எத்தி சையும் இலங்கத்தொண் டாற்றினான்.

புண்ணியப் பெரும் பூமி நடுவதாய்,
விண் பறவை வியன்பெரு வானொலி
*கண்வை யான கருவிக ளாலிந்த
மண்ண கத்தின் மனத்தில் விளங்கினான்.

நாடு நாடு நலங்களை நாடிட,
வீடு வீடு விளங்கிட மங்களம்—
பீடு மிக்க பெரும்பணி யாற்றியே
நீடு நீடு நிலவி மகிழ்ந்தனன்.

பேச்செ லாம்அருள் பெற்ற மணிமொழி ;
மூச்செ லாம்அருள் அன்பின் முதிர்பணி.
ஓய்ச்ச லின்றித்தன் யோக வொளியினைப்
பாய்ச்சி னான்புது வாழ்வு பழுக்கவே.

அறிவும் ஆற்றலும் ஆயுளும் ஓங்கிடத்
துறவுந் தொண்டுந் துகளறு நன்மனை
யறமுடன் அரு ளாட்சியும் ஓங்கிட,
நிறைய வாழ்ந்து நிறைவிற் கலந்தனன்.

* Television (தொலைக்காட்சி)

பரனருள் எனும் பாரத சக்தியின்
வரன ருளும் வரம்பெறு நன்மையால்,
அரிய யோகத்தில் வாழ்அதி மானிட
மரபெ ழுந்தது ; மன்புவி வாழவே.

இம்மை யம்மை இருமைப் பயன்களும்,
செம்மை யாகச் செழித்திட வாழ்விலே
அம்மை யப்பன் அருள்வழி காட்டிட
இம்ம காகவி என்னுள் உதித்ததே.

இந்தக் காவியம் ஏத்திடும் சுத்தனென்
சிந்தை யிற்குடி கொண்டொளிர் சித்தனே ;
அந்த ராத்ம குருவென லாம்;அவன்
தந்த வேதமிப் பாரத சக்தியே.

என்னு ளேஎன தாவி நலம்பெறத்
தன்னை வைத்துத் தழைத்தனன் செய்யுளாய் ;
பன்னு காவியம் பாரத சக்தியை,
என்ன வர்க்கும் எழுத்தி னுதவினேன்.

எத்தி றத்தினர் ஏற்றமும் பேணியே,
தத்து வப்பெயர் தந்த பெருங்கதை,
ஒத்து லகம் உயர்நிலை வாய்ந்திட 240
வைத்த மாநிதி யென்ன வழங்குமே.

ஊனு டலம் உயிரைப் பிரியினும்
யானு ளேனிவ் வரகவி யென்னவே.
பானு போற்றி வளர்த்திடும் பாரிலே
ஏனு ளேனென் றியம்புமிக் காப்பியம்.

அணைந்தி டாதுள் அமரக் கனலெனத்
துணைதந் தோங்கிடுஞ் சுத்த பராசக்தி ;
இணையி லாத கருணையை யென்றுமே
இணைந்தி ருக்குமென் இன்னுயிர் வாழ்க்கையே.

கோவி லான குவலய வாழ்விற்கே,
ஆவி யாகும் அருட்பெருஞ் சோதியே—
தேவ மானிடச் சித்திர மாகுமிப்
பாவி லேவளர் பாரத சக்தியே.

வாழ்க பாரத சக்தி வளம்பெற ;
வாழ்க பாரத நாட்டு வளமையே.
ஏழ்க டலுல கெங்குநல் லின்பமே
சூழ்க நல்லரு ளாட்சி துலங்கவே ! 257

கவியோகி சுத்தானந்த பாரதியாரின்,

பாரத சக்தி மகா காவியம்

ஐந்தாவது சுத்த சக்தி காண்டம் முற்றிற்று

ஓம் சுத்த சக்தி